ஸ்ரீமதே ராமாநுஜாயநம.

ஸ்ரீமத் கம்பராமாயணம்.

ஆரணியகாண்டம்

மூலமும்

சேற்றூர் சமஸ்தான வித்துவான

மா-ா-ஸ்ரீ, இராமசாமிக்கவிராய ரவர்களது

கனிஷ்ட குமாரர்

உடுமலைப்பேட்டை

எம். ஆா. கந்தசாமிக்கவிராய ரவர்களும்,

ஷை ஷூ

எஸ் வெங்கடராயலு நாயுடுகாரும்

இயற்றிய

உரையும்.

இவை

சேற்றூர் சமஸ்தான வித்துவான

மு. ரா. அருணாசலக்கவிராயரால்

பரிசோதிக்கப்பெற்று

சென்னை.

அலபினியன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

1900.

Copy right Registered.

இதன் விலை, ரூ 3—8—0.

உ

குமரனருணை.

முகவுரை.

அகத்திய முனிவர்க் கருந்தமி ழருளிய
மகத்துவ விமலன் மலர்ப்பதம் பணிவாம்

நண்பர்காள்!

கல்வியிற் பெரியன் கம்பனென்ன ஆன்றோராலெடுத்துக் கூறப்பட்ட மகாகவியென்று வழங்கும் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் அருளிச்செய்த இதிகாசமென்னும் பெருங்காப்பியமான இராமாயணம்-சொன்னலம், பொருணலம், அணிநலம், சந்தவின்பம், கற்பனைசாரம் முதலிய எவ்விதத்தானுஞ் சிறந்து கற்பவர்மனத்தைக் கவர்தற்கேற்றது என்பது தமிழ்வல்லோர் யாவர்க்கு மொப்பமுடிந்ததே. இத்துணைச் சிறப்புவாய்ந்த பெருங்காப்பியம் கற்றோரேயன்றி மற்றோரும் பொருளுணர்ந்து உள்ளங்களிக்குமாறு, உரையுடன் வெளிவருதல் இன்றியமையாததென்க. பாலகாண்டம், சுந்தரகாண்டம் என்னும், இரண்டிற்கும் பதவுரையும், அயோத்தியா காண்டத்திற்கு ஒழிபுப் பொழிப்புரையும் முன்னரே வெளிப்படுத்துள்ளன. ஏனைய காண்டங்களும் [illegible] வெளிப்படு[illegible] பெரும் விருப்பு[illegible] [illegible] [illegible]ருமாகிய பிரமஸ்ரீ இராமச்சந்திர ஐயர் அவர்கள் தாமாகவே இராமாயணத் [illegible] உரையில்லாத காண்டங்கட்கு உரைவரைந்து வெளிப்படுத்தல் வேண் [illegible], தம்மாலியன்றவரை வேண்டிய சகாயமெல்லாஞ் செய்யப்படு [illegible] அன்பால உரைத்தார்கள். பின்னுட் சென்றபின் பழ [illegible] அருங்கலை விநோதரும் எனது நட்பாளருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, சா[illegible]வர்களும் அதை வற்புறுத்திக் கூறினார்கள். பின்னர் ஷெ[illegible] ஐயர் அவர்கள் என்னைக் காணுந்தோறும் "உரை வரையத் தொ[illegible]ற்? எத்துணையாயிற்று?" என்று, பலவாறு உற்சாகப்படுத்திவ[illegible]றைப்பட்ட கேள்வியையுடைய அடிப்பட்ட சான்றோர்கள[illegible]யா இதற்குச் சிறிதும் உரையெழுத அருகரல்லர் என்பது தெ[illegible]ங்தோற்ற தாசையே வென்றதம்மா" என்றவண்ணம் ஆசையே[illegible] மேற்குறித்த இரண்டு நண்பர்கள் உரையை மறுக்க முடியாமை[illegible]க்த ஆரணியகாண்டத்துக்கு உரை வரையத் தொடங்கினேன்; [illegible]ர" எனக் கூறினமையால் என் றுடன் பல

லாண்டு பழகிய நண்பரும் கல்வித்திறத்திற் சிறந்தவரும் உடுமலையிற்றானே என்னோடுறைபவருமாகிய கனம் எஸ். வெங்கடராயலுநாயுடுவையுந் துணைக்கொண்டு, தொடங்கிய பணியை முற்றுவித்தேன். இடையிடையே சில கவிகளில் ஐயப்பாடெய்துழி இராமநாதபுரம் சமஸ்தான வித்வான் ஸ்ரீமத் ரா. ராகவய்யங்கார் அவர்கள் முதலிய சில வித்துவான்கள் உரைதந்தார்கள். அன்னோர் செய்த நன்றியை என்று மறவேன். முற்றக்கற்ற வல்லுநர் நிறைவேற்றற்குரிய இப்பணியைச் சிற்றறிவுடையேன் செய்து முடித்தமையானே ஆங்காங்குச் சிற்சில வழுக்கள் பொதிந்து கிடக்குமாயினும் நீரைப்பிரித்துப் பாலைக்கொள்ளும் அன்னத்தையொத்த நன்னெஞ்சக் கவிஞர்கள், குற்றத்தை நீக்கிக் குணத்தைக்கொண்டு மகிழ்வார்களென்று நம்புகின்றேன். அசூயைக் கோட்பாடுடையார் கூற்றுங் கிடக்க; அன்னோர் வாய்வல்லபம் இறகுப்பற்றி யெழுதப் புகுந்தாலன்றே வெளிப்படும்.

சிற்சில கவிகளில் உள்ளபொருள் காண்டற்குப் பட்டபாடு மிகவும் பெரிதென்பதைக் கல்விமான்கள் அறியாமற்போகார்கள். ஆயிரத்துக்கு மேற்பட்ட கவிகள் உரையெழுதப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஏதேனுந் தவறுளதாயின் அதனையே பெரிதும் பாராட்டி மற்றவற்றின் வியப்பை மறந்து வாளா கழிப்பார் பலர். "குற்றமே தெரிவார் குறுமாமுனி, சொற்றபாவினு மோர்குறை சொல்வரால்" என்பர் ஆகலின் அன்னோர் யாண்டுந் தவறு கூறுதல் பெரிதன்றே.

இக்காண்டத்துள் முதல் 4-படலங்கட்குச் சென்னை ஸ்ரீமான் வை. மு. சடகோப ராமாநுஜாசார்யரவர்கள், ஸ்ரீமான் கோபாலாசாரியரவர்கள் முதலானவர்களால் வரையப்பட்ட உரைகள் கிடைத்தன; அவற்றை நோக்கி எனது சிற்றறிவிற்கேற்ப மாற்றுவன மாற்றி நானும், நண்பர் வெ. நாயுடுகாருமாக எழுதிவைத்த வுரையை இப்போது மன்னார்குடி காலேஜ் தமிழ்ப்பண்டிதராயிருக்கிற ம-ள-ள-ஸ்ரீ, கிருஷ்ணமாசாரியரவர்கள் அச்சாபீசு [illegible] என்னுடனிருந்து எழுதி யுதவிபுரிந்தார்கள். இதன்முன் பெரிதாகக் கருதப்பாராவிடினும் அதன்பின்னர் 300-கவிகளின் உரையைப் பிரதியெழுதியனுப்புவதாகச் சொல்லிக்கொண்டுபோய் 4-மாதவரையில் அனுப்பாதிருந்ததன்றி எழுதிய கடிதங்கட்கும் பதில் வரையாதிருந்தனர். இதனால் அச்சுவேலை 4-மாதம் தடைபட்டு நின்றது. அப்பால் மன்னார்கோவிற்கு நேரே யானே சென்று வாங்கிவந்து பிரதியெழுதியனுப்பினேன். இவ்வாறு காலநீட்டஞ் செய்வித்ததால் நேர்ந்த வருத்தம் இன்னும் என்மனத்தைவிட்டுப் போயி[illegible] இல்லை,

நடுநிலைகுன்றா நட்புடைமை மாட்சியார் இவ்வுரையிலுள்ள குற்றங்களையேனும் வேறு விசேடவுரைகளையேனும் அன்புடன் எனக்குத் தெரிவிப்பார்களாயின் அவர்கட்கு நன்றிகூறிப் பிழையைத் திருத்தி விசேடவுரை

யை விளக்கி அடுத்த பதிப்பில் வெளியிடுதலுடன் அப்பேருபகாரிகட்கு ஒவ்வோர் புஸ்தகமும் அனுப்புவேன்.

இதனை அச்சிடுதற்குத் திரவிய சகாயத்தை விரும்பிப் பல இடங்கட்கும் யான் சென்றபோது எனக்குப் பெரிதும் உதவியாயிருந்து ஆதரித்த கல்விச் செல்வக் கனவான்களின் பெயராதியவற்றை அடியில் வருமாறு விவரித்திருக்கிறேன். அவையாவன —

1. திருநெல்வேலி அனவரததானகாரர் கோயில்பரம்பரை விசயகுலதிலகரும் எனது குலாபிமானப் பண்பருமாகிய ம-௱-௱-ஸ்ரீ, நெல்லையப்பன் கவிராஜரவர்கள்.

2. ஷை ம-௱-௱-ஸ்ரீ, ஈசுரமூர்த்திக் கவிராஜரவர்கள்.

3. ஷையூர் வாசியும் வித்வகுலசேகரராகிய ஸ்ரீமான் ஆறுமுக நாவலரவர்கள் மாணாக்கரும் வித்வசிகாமணியுமாகிய ம-௱-௱-ஸ்ரீ, அம்பலவாண நாவலரவர்கள்.

4. திருநெல்வேலியில் தமிழை விருத்திசெய்தற்காகவே மிகவும் உழைத்துச் சரஸ்வதிவிலாசம் என்னும் புஸ்தகசாலை ஸ்தாபித்து நடாத்திவருபவரும் சித்தாந்த சாஸ்திரப் பயிற்சியிற் சிறந்தவருமாகிய ம-௱-௱-ஸ்ரீ, பாலவண்ணமுதலியாரவர்கள்.

5. மேலகரம் குற்றாலநாதர் கோயில் பரம்பரை விசயகுலதிலகரும் எனது தந்தைப் பில பரம்பரை நட்பாளருமாகிய ம-௱-௱-ஸ்ரீ, திரிகூடராஜப்பன் கவிராயரவர்கள்.

6. ஷையார் சகோதரர் புத்திரசிகாமணியும் எனது சகபாடியுமாகிய சுப்பிரமணியக் கவிராயரவர்கள்.

7. மதுரை சேதுபதி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் சித்திரகவி வல்லுநரும் ஆகிய ம-௱-௱-ஸ்ரீ, சண்முகம்பிள்ளை யவர்கள்.

8. முறையூர் சப்டிவிஷன் ஜமீன்தார் ம-௱-௱-ஸ்ரீ, பழ. சி. சண்முகஞ்செட்டியார் அவர்கள் சமுக வித்துவானும், கொட்டாம்பட்டி வாசியும், கலம்பகம் திரிபு யமக அந்தாதி முதலிய பன்னூல் இயற்றியவருமான ம-௱-௱-ஸ்ரீ, எம். கருப்பையாப் பாவலர் அவர்கள்.

9. காரைக்குடி வித்துவானும் தலைமைப்பாடுள்ள புராணங்களுள் ஒன்றாகக் கருதப்படும் வண்ணம் திருப்புத்தூர்த் தலபுராணமும் வேறு பன்னூல்களும் இயற்றியவரும் சைவாபிமானியுமாகிய ம-௱-௱-ஸ்ரீ, ராம. கு. சொக்கலிங்கச் செட்டியார்.

இந்த நவமணிகளும் எனக்குச்செய்த அருமையும் பெருமையும் என் மனத்தில் என்றும் நின்று நிலாவுமென்பது திண்ணம்.

இங்ஙனம் பல்லோர் துணைக்கொண்டு பல இடத்தும் அலைந்து சிறிது சிறிதாகப் பொருளீட்டியபின் சென்னைக்குச்சென்று அச்சிடப்புகும்படி எனது சேஷ்டசகோதரரும் சிவரகசியம் முதலிய பன்னூல்களை யச்சிட்

முகவுரை.

...ாகிய ம-ா-ா-ஸ்ரீ, அருணாசலக் கவிராயரவர்களைப் பிரார்த்தித்
...க்கொண்டேன், அவர்களும் சிறியேன் விண்ணப்பத்துக்கிண
...ஙளசென்று பன்னாளிருந்து அச்சிட்டு உதவிபுரிந்தார்கள் இவ்வு
...ம மறக்கற்பாற்றன்று.

...ன்கோட்டைக்கொண்டுத்துப் புஸ்தகம் வெளிப்படும்படி உதவிபுரிந்த

கனவான்களின் பெயர் முதலிய,

...து குலகுருவாகிய திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீ
...த்தானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகசுவாமிகள்

...பணந்தாள் ஆதீனகர்த்தர் ஸ்ரீமத் காசிவாசி சோமசுந்தரசுவாமிகள்

...வாடுதுறை ஆதீனம் தம்பிரான் காறுபாறு ஸ்ரீமத் வயித்திலிங்க

...ஜில்லா பேரையூர் சமஸ்தானகர்த்தரும் சேற்றூர் சமஸ்தான
...ம ஆகிய ம-ா-ா-ஸ்ரீ, நாகையசாமி பாண்டியமகாராஜா அவர்கள்

...குலபோஷகரும் சேற்றூர் சமஸ்தானகர்த்தருமாகிய ம-ா-ா-ஸ்ரீ,
...டியரவர்கள்

...நெல்வேலி ஜில்லா உரூர் சிரேஸ்தார் ம-ா-ா-ஸ்ரீ, வி சேஷையரவர்கள்

...ா டி கோ வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ, சடகோபபிள்ளையவர்கள் (இவர்கள்
...முக்கியகாரணமாக இருந்தது)

...ா சப்ஜட்ஜ் ம-ா-ா-ஸ்ரீ, துரைசாமி ஐயங்கார் அவர்கள்

...ஞாபேட்டை ம-ா-ா-ஸ்ரீ, பி ஏ பி எல். ...ன ஏ வி சோமசுந்
...ர்கள்

...ா ஒற்றைப்பாலம் முன்சீப் ம-ா-ா-ஸ்ரீ, இராமகிருஷ்ணையரவர்கள்

...நெல்வேலி கல்லத்தி முடுக்குத் தெரு ம-ா-ா-ஸ்ரீ ஏ. சோணாசல...

...ண போலீஸ் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ எம ராஜகோபாலாசாரிய

...னக்குடி மிட்டாதார் ம-ா-ா-ஸ்ரீ எஸ் வெங்கடாசலப் பெருமாள்

...ட்டுக்கோட்டை ம-ா-ா ஸ்ரீ ராம. வெ வயிரவன் செட்டியார் அ...

...ா-ஸ்ரீ, என் துரைசாமி பிள்ளையவர்கள், பி ஏ

...ற்றூர் சமஸ்தானம் மானேஜர் ம-ா-ா-ஸ்ரீ இராகவப்ப பிள்ளையவர்கள்

... சமஸ்தானம் தானாபதி ம-ா-ா-ஸ்ரீ பழனியாண்டி கவிராயர

...னம் ம-ா-ா-ஸ்ரீ முத்தைய பாகவதரவர்கள்.

19. விருதுபட்டி பஞ்சாபீஸ் புரோகர் ம-ா-ா-ஸ்ரீ அ, க. கந்தசாமிபிள்ளை
வர்கள்.

20 ஸ்ரீ வைகுண்டம் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ முத்தைகனகசபெருமாள் பிள்ளையவர்கள்.

21 மதுரை வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ பி. எஸ் சுப்பிரமணி[illegible]ள்.

22. ஷை யூர் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ பி. நாரணையரவர்கள்.

23. ஷை யூர் ம-ா-ா-ஸ்ரீ பாஷியாசாரியார் அவர்கள்.

24 முறையூர் சபடிவிஷன் ஜமீன்தாரும் செழுந்தமி[illegible] செல்வரு மாகிய கனம் ம-ா-ா-ஸ்ரீ பழ சி சண்முகஞ் செட்டியாரவர்கள் ([illegible] செய்த அருமை மிகவும் பெரிது).

25 காரைக்குடி வாசியும் யாணியறிய பவாகிப [illegible] அச்சிடு வித்த பேருபகாரியும் ஆகிய ம-ா-ா-ஸ்ரீ தி அ ரு அ ரா[illegible] செட்டியாரவர்கள்

26 ஷை யூர் ம-ா-ா-ஸ்ரீ கா. லெ கா நாராயண செட்[illegible]ர்கள்.

27 ஷை யூர் ம-ா-ா-ஸ்ரீ அ. முத்துக்கருப்பன் செட்டி[illegible]

28 ஷை யூர் ம-ா-ா-ஸ்ரீ சா கா அ கா. அருணசலஞ் செ[illegible]

29 ஷை யூர் ம-ா-ா-ஸ்ரீ பெரி. கா கா நாராயண செ[illegible]ள்.

30 தேவகோட்டை ம-ா-ா-ஸ்ரீ சத்திரம் அருணசல[illegible]யார் அவர்கள் குமாரரும் திருவாடானை கும்பாபிஷேகம் நடாத்திய சிவ[illegible]ல்வருமாகிய ம-ா-ா-ஸ்ரீ ராம - அரு - அரு - சோமசுந்தரஞ் செட்டியார் அவ[illegible]

31 ஷை யூர் சபடிவிஷன் ஜமீன்தாரும் காளையார் கோவி[illegible]பாபிஷேகம் நடாத்திய தனவானுமாகிய ம-ா-ா-ஸ்ரீ, அள அரு. ராம. அருணசல[illegible] செட்டியார் அவர்கள்

32 ஷை யூர் ம-ா-ா-ஸ்ரீ, அ பெரி அருணசலஞ் செட்டியார் அவர்கள்.

33 ஷை யூர் ம-ா-ா-ஸ்ரீ, அ ராம அண்ணாமலை செட்டியா[illegible]

34 ஷை யூர் ம-ா-ா-ஸ்ரீ, மெ அரு அ சாமிநாத செட்டியா[illegible]ள்

35 தஞ்சாவூர் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ, சீநிவாச பிள்ளையவர்கள்

36 கொழும்பு அட்வகேட் ஜனரல் ம-ா-ா-ஸ்ரீ, ஆனரபில் ராமநாத பி[illegible] யாரவர்கள்

37 நாத்தக்குடி ம-ா-ா-ஸ்ரீ, வி கண பிள்ளை யவர்கள்

38 ஷை யூர் ம-ா-ா-ஸ்ரீ, குப்புசாமி நாயுடுகாரு

39 சேலம் சில்லா காட்டுப்பாளையம் மிட்டா ஜமீன்தாரும் முன்பு [illegible] யம் அச்சிடுதற்குப் பேருதவி செய்தவரும் எனது நெடுநாட் சிநேகரும் ஆகிய ம-ா-ா-ஸ்ரீ, கே ராஜாக கவுண்டரவர்கள்

40 ஷை யூர் மாணத்தி வகையரா மிட்டா ஜமீன்தார் ம-ா-ா-ஸ்ரீ, என. ராஜாக்கவுண்டரவர்கள்

41 சித்தளந்தூர் மிட்டா ஜமீன்தாரும் முன்பு சிவாகசிபத்துக் குதவிபுரிந்த வருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, எம சுப்பராயக கவுண்டரவர்கள்

42 உடுமலைப்பேட்டை வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ, வி எஸ். இராமசாமியையரவர்கள்.

43 ஷை யூர் போர்டு ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ம-ா-ா ஸ்ரீ, பி எஸ் இராம சாமியையரவர்கள்,

44 ஷை ஊர் டி பி டபிள்யு ஓவர்சியர் ம-ா-ா-ஸ்ரீ, இராமசந்திரையரவர்கள்
45 ஷை ஊர் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ, எம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள்.
46 ஷை ஊர் ம-ா-ா-ஸ்ரீ, நா கந்தசாமி செட்டியாரவர்கள்
47 ஷை ஊர் ம-ா-ா-ஸ்ரீ, நா. ஆ சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள்
48 ஷை ஊர் ம-ா-ா-ஸ்ரீ, அ சண்முகவேலு நாடாரவர்கள்.

இக்கனவான்கள் செய்த பேருதவிக்கு அவர்களை இடைவிடாது வாழ்த்துதலன்றி வேறு யாது கைம்மாறு செய்வேன், இனி யச்சிடும் அடுத்தகாண்ட வுரையையும் வெளிப்படுத்தற்கு உதவிபுரிந்து புகழ் பெறுவார்களென்று நம்புகிறேன்

புஸ்தக விலையை முன்பணமாகக் கொடுத்த கனவான்கள்.

1 ம-ா-ா-ஸ்ரீ திருநெல்வேலி முனிசிபல் சேர்மென் பி. எம் கயிலாசம்பிள்ளையவர்கள்
2 ,, ,, தேவஸ்தான கமிட்டியார் என் பிரமநாயகம் பிள்ளையவர்கள்
3 ,, , வக்கீல் ஜி எஸ் சுப்பிரமணிய பிள்ளையவர்கள்
4 ,, , ,, டி எஸ் சுப்பிரமணிய பிள்ளையவர்கள்
5 , , கொல்லம் டோர்மில் ஏஜண்டு பழநிக்குமாரபிள்ளையவர்கள்
6 , , சிந்தாமணி அச்சியந்திரசாலை என். எஸ் சங்கரநாராயண பிள்ளையவர்கள்
7 ,, மேடைதளவாய் திருமலையப்ப முதலியார் அவர்கள்.
8 , டி எஸ் முத்தைய பிள்ளையவர்கள்
9 ,, , வக்கீல் எ வி ராமசாமி பிள்ளையவர்கள்
10 ,, , புதூர் ஜமீன்தார் பி வி எல் ரெகுநாதராயரவர்கள்.
11 , , மாறனேரி மிட்டாதார் டி எ சிவசுப்பிரமணிய பிள்ளையவர்கள்
12 , , நா பெ நா மு முத்துராமன் செட்டியார் அவர்கள்
13 , வீரராகவபுரம் வக்கீல் சுந்தர சாஸ்திரிகள்
14 ,, கலெக்டர் ஆபீஸ் ஹெட்கிளார்க்கு ஐயர் அவர்கள்.
15 , வண்ணார்பேட்டை அதிகாரி சங்கரவடிவேல் பிள்ளையவர்கள்
16 ,, சேரைகுளம் பண்ணையார் அம்பலவாண பிள்ளையவர்கள்
17 ,, வெள்ளூர் வீரவாகு பிள்ளையவர்கள்
18 ,, வாசுதேவநல்லூர் சிவநல்ல கண்ணுப்பிள்ளையவர்கள்
19 , ஆத்தங்குடி வக்கீல் சின்னசாமியையரவர்கள்.
20 , , ,, அண்ணாசாமியையரவர்கள்
21 ,, ,, குருநாதையரவர்கள்
22 ,, , ,, முத்துசாமி பிள்ளையவர்கள்
23 , , காஷ்கீப்பா ஷேணமாசாரியாரவர்கள்

24 ம-ா-ா-ஸ்ரீ, ஆத்தங்குடி புரோகர் சீதாராமையரவர்கள்
25 ,, ,, கோரல்மில் கிளார்க்கு எம் லக்ஷ்மணப்பிள்ளையவர்கள்
26 ,, ,, வேயின்ற முத்துப்பிள்ளையவர்கள்
27 ,, ,, போஸ்டு மாஸ்டர் அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள்
28 , ஸ்ரீ வைகுண்டம் மைனர் இரிகேஷன் ஓவர்சியர் டி. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்
29 ,, ,, வக்கீல் சுப்பராய முதலியார் அவர்கள்
30 ,, ,, சப்மேஜிஸ்திரேட் தாமரங்கராஜு அவர்கள்
31 ,, ,, வக்கீல் முத்துசாமி பிள்ளையவர்கள்
32 ,, குலசேகரபட்டினம் சப்மேஜிஸ்திரேட் பி. எம். சுப்பிரமணிய ஐயரவர்கள்,
33 ,, , எஸ். சிதம்பரம் பிள்ளையவர்கள்
34 , ,, அ. மு மணிய பிள்ளையவர்கள்
35 , அம்பாசமுத்திரம் வக்கீல் டி. எஸ். சேஷையரவர்கள்
36 ,, ,, ,, பாலகிருஷ்ணையரவர்கள்
37 , கடையம் சாவடி நாராயணசாமி பிள்ளையவர்கள்
38 ,, ,, காசிநாத பிள்ளையவர்கள்.
39 , ,, வி. எஸ். சங்கரராமசாமி பிள்ளையவர்கள்
40 ,, ,, சே. சிவசுப்பிரமணிய பிள்ளையவர்கள்
41 ,, தென்காசி சப்மேஜிஸ்திரேட் காளத்தியப்ப முதலியார் அவர்கள்
42 ,, வக்கீல் ஆர். தம்பா பிள்ளையவர்கள்
43 , ,, மிராசுதார் சிதம்பர குமாரசாமி முதலியாரவர்கள்
44 ,, , சப்ரிஜிஸ்தரார் ஜி. ராஜகோபால கிருஷ்ணையரவர்கள்
45 ,, சாத்தூர் தாசில்தார் மகாராஜ பிள்ளையவர்கள்
46 , , டி. முன்சீப் ஆதிநாராயணையரவர்கள்
47 ,, ,, வக்கீல் செல்லம் பிள்ளையவர்கள்
48 , ,, ,, எஸ். சுப்பிரமணிய நயினார் அவர்கள்
49 ,, ,, பகவந்தராய அவர்கள்
50 ,, ,, , ராமசேஷ சாஸ்திரிகள்
51 , புரோகர் எஸ். அப்பாசாமி பிள்ளையவர்கள்
52 ,, ,, செகநாதையரவர்கள்
53 முன்சீப் கோர்ட்டு எட் கிளார்க்கு அவர்கள்
54 ,, விருதுபட்டி ஜி. சுந்தரமையரவர்கள்
55 , மதுரை உத்தம பாளையம் சுப்பிரமணிய முதலியாரவர்கள்
56 ,, , கோவிந்த செட்டியாரவர்கள்
57 ,, ,, ஆதப்ப செட்டியாரவர்கள்
58 , காரைக்குடி அ. ரு. அ. வே. அவர்கள்
59 ,, ,, கொழும்புராம சரவணப்பெருமாளையரவர்கள்
60 ,, ,, சுப்பிரிங்கோர்ட்டு சுந்தரம் பிள்ளையவர்கள்
61 , மரப்பரை மிட்டா ஜமீன்தார் எஸ். சுப்பராயக்கவுண்டரவர்கள்
62 ,, சோமணம்பட்டி செங்கோட்டு வேலக்கவுண்டரவர்கள்
63 ,, உடுமலைப்பேட்டை வர்த்தகம் கருப்புசாமி செட்டியார் அவர்கள்
64 ,, ,, கண்டிராக்ட் சபாபதி பிள்ளையவர்கள்

65 ம-௱-௱-ஸ்ரீ, 565 செ கானிஸ்டேபில் முகமமதுகாஸிம்கான சாயபு அவாகள்
66 ,, பொனனாசசி முதது ஷணமுகக காலிஙகராயகவுணடாவாகள
67 ,, உடுமலைப்பேடடை முததுககவுணடா குமாரா பெரியணகவுணடரவ ாகள
68 ,, முருஙகபபடடி மு. கெ. வெஙகடசுப்பு நாயகரவாகள
69 ,, உடுமலைபபேடடை ஆ. சுலதான அகமது ராவுததரவாகள.
70 ,, ,, ஆ திருமூாததி கவுணடரவாகள
71 ,, ,, சொ மு அ. அருணாசலஞ செட்டியாரவாகள.
72 ,, ,, அ சொ. மு ராமன செடடியாரவாகள.
73 ,, அஙகலககுறிசசி மலையாககவுணடரவாகள
74 ,, ,, சினன செலலபப கவுணடரவாகள.
75 ,, ,, குழநதைய கவுணடரவாகள
76 ,, மாணுபபடடி ஆ. வி. மே இராமசாமிக கவுணடரவாகள
77 ,, கீரனூா மகிமை சேலகாதா ராவுததரவாகள.
78 ,, பூளமேடு மூததுநாயுடு குமாரா பொனனிநாயுடு அவாகள
79 ,, கணககமபாளையம கணககு ஆா ராமசாமிமுதலியாா அவாகள.
80 ,, உடுமலைபபேட்டை வ. சுபபிரமணிய நாடாரவாகள
81 ,, ,, வ திருமூாததி நாடாரவாகள
82 ,, ,, சையததிவான அசனசாயபு அவாகள

இநதக கனவானகள இதுபோலவே அடுததகாணட வுரையையும ஆதரவு செயவாாகளெனறு நமபுகிறேன நீடூழிவாழக சுபம

எம் ஆர் கநதசாமிக் கவிராயன்,

உடுமலைப்பேட்டை

ஓம்.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் கம்பராமாயணம்.

ஆரணிய காண்டம்

மூலமும் உரையும்

முதலாவது: விராதன் வதைப்படலம்.

கடவுள் வாழ்த்து.

கலி விருத்தம்

பேதியாது நிமிர் பேதவுருவம் பிறழ்கிலா
வோதியோதி யுணருந்தோறு முணர்ச்சி யுதவும்
வேதம்வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா
வாதி தேவரவ ரெம்மறிவி னுக்கறிவரோ.

இ-ள். பேதியாது - (தத்தந்தன்மை) வேறுபடாமல், நிமிர்பேத உருவம் - தோன்றி வளர்கின்ற பல வேறுவகையினவாகிய வடிவங்களினின்றும், பிறழ்கிலா வேறாகாமலும் [அவற்றுடன் கலந்து நின்றும்], ஓதி ஓதி - பலமுறை பாராயணஞ் செய்து, உணருந்தோறும் - (ஆசார்யோபதேசத்தாலே உளங்கொண்ட பொருள்களைச்) சிந்தித்துத் தெளியும்பொழுதெல்லாம், உணர்ச்சி உதவும் - மெய்யுணர்வை மேலுமேலுங் கொடுக்கின்ற, வேதம் - வேதங்களாலும், வேதியர் - அவ்வேதங்களை யுணர்ந்த அந்தணர்களாலும், விரிஞ்சன் முதலோர் - பிரமன் முதலானோர்களாலும் தெரிகிலா - ஆராய்ந்தறியப்படாமலும் நின்ற, ஆதிதேவர் அவர் - (எல்லாப்பொருள் கட்கும்) ஆதிபகவானாகிய ஸ்ரீராமபிரானே, எம் அறிவினுக்கு அறிவு - எமது அறிவுக்கு அறியப்படுபொருள்,

கருத்து,—'அயர்வறு மமரர்க ளதிபதி' யாய்ப் 'பையர வின்னணைப் பாற்கடலுட் பள்ளிகொள்கின்ற பரமூர்த்தி' யாய் நின்ற எம்பெருமானே, 'கொதிகொள் வேலரக்கர்தங் கொடுமை' கூறிய விண்ணவர் முனிவர் மகிழ 'வருந்தல் வஞ்சகர் தந்தலை யறுத்திடர் தணிப்பென்' எனக் கூறிக் 'கசரத துரகமாக் கடல்கொள் காவ

லன் தசரதன் மதலையாய்த் தரணியில் ஸ்ரீராமனாகத் திருவவதரித்து வந்தமையி னானே தன்னிகரில்லா அத்தனிநாயகன் விஷயமாகத் தெய்வப்புலமைக் கம்ப நாட்டாழ்வார் செய்யப்புகுந்த இப்பெருங்காப்பிய மினிது முடிதற்கு, கவி, தான் வழிபடு கடவுளும் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளுமாகிய அவனை யே வாழ்த்தல் வேண்டுமாதலின், காண்டந்தோறும் அவன் விஷயமாகவே கடவுள் வாழ்த்துக் கூறப்புகுந்து, பாலகாண்டத்தில் "உலகம் யாவையும்" என்னுங் கவி யால் ஸ்வரூப நிலைமையையும், "சிற்குணத்தர்" என்னுங் கவியால் பரத்துவமறி யும் உபாயமும், "ஆதியந்தம்" என்னுங் கவியால் புருஷார்த்தமும், அயோத்தியா காண்டத்தில் "வானின்றிழிந்து" என்னுங் கவியால் சர்வேஸ்வரனாகிய அவன் ஜகச் சரீரகனென்பதுங் கூறி, இக்கவியில் அவனை வேதங்களானும் பிரமன் முத லோர்களானும் உணர்ந்தறிதற்கரிய பரவஸ்துவென்று கூறுகிறார் இவ்வாழ்த்தி னால் எடுத்த கருமம் இனிது முடியுமென்பதாம்.

இவ்வாழ்த்து, புறப்பொருட் பாடாண் படலத்துக் கடவுள்வாழ்த்து என்னுந் துறைப்பாற்படும் இதனை, "காவல் கணிணிய கழலோன் கைதொழு, மூவரி லொரு வனை யெடுத்துரைத் தன்று" எனவும், "வைய மகளை யடிப்படுத்தாய் வையகத்தா, ருய்ய வுருவம் வெளிப்படுத்தாய்—வெய்ய, வடுந்திற லாழி யரவணையா யென்று, நெடுந்தகை நின்னையே யாம்" எனவும் போதரும் புறப்பொருள் வெண்பாமாலை யிற் காண்க.

குறிப்பு —பேதியாது 'பேதம்' என்னும் ஆரியச்சொற் பெயரடியாகப் பிறந்த எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சம். இது, 'நிமிர்' என்பதைக்கொண்டு முடிகின் றது 'நிமிர்' என்னுங் காலங்கரந்த பெயரெச்சம் 'உருவம்' என்னும் பெயர்கொண்டு முடிகின்றது நிமிர் உருவம் வினைத்தொகை, "காலங்கரந்த பெயரெச்சம் வினைத் தொகை." இவ்வினைத்தொகைக் கிடையில் "பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன" என்றவாறு 'பேதம்' என்னுஞ் சொல் இடைப்பிறவரலாய் நின்று 'உரு வம்' என்பதைத் தழுவி நிற்கின்றது

நிமிர்பேதம் அல்வழித் தழாத்தொடர் இத்தொடர் "யரழ முன்னர்க் கசதப வல்வழி யியல்பு மிகலு மாகும்" என்றபடி வலிமிகாது இயல்பாயிற்று பேதம் உருவம் என்பது "மவ்வீறொற்றழிந் துயிரீறொப்ப" 'பேதவுருவம்' என நின்றது பேதியாது நிமிர்தலாவது தீயின் வெம்மையும் நீரின் தண்மையும்போல அவ்வப் பொருள்களின் தன்மை அவ்வவற்றினின்றும் வேறுபடாதிருத்தலாம் பேதவுரு வம் என்றது தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்று சொல்லப்பட்ட சராசர ரூபமாயிருக்கிற என்பத்துநான்குலக்ஷம் யோனிபேதங் களை உருவம் ரூபமென்னும் வடசொல்லின் திரிபு, இது, சாதியொருமைப் பெயர் 'பிறழ்கிலர்,' 'தெரிகிலர்' என்னும் ஈறுகெட்ட வெதிர்மறைப் பெயரெச்சங் களிரண்டும் 'ஆதிதேவர்' என்னும் வினைமுதற் பெயர்கொண்டன உருவம் பிறழ் கிலாமையாவது எல்லாப் பொருள்களுள்ளும் உடலுக்குள் உயிர்போல, உயிருள் ளும் உயிராய அந்தர்யாமியாயிருக்குந் தன்மையாம்.

"திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசைப்
படர்பொருண் முழுவது மாயவை யவைதொறு
முடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியு ளிவையுண்ட சுரனே."

என்றார் பெரியாரும். ஓதி ஓதி என்னும் அடுக்கு மிகுதிப் பொருளின்கண் வந்தது. வேதம் எழுதப்படாமலே ஒருவர்பாலொருவர் கேட்டுக் கற்றுப் பிறர்க்குக் கற்பித்து இவ்விதமாகவே அன்னமாயெம்பிரான் அருமறைகளுரைத்த நாண்முதலாக நீடித்துப் பாராயணஞ்செய்யப்பட்டு வருவதென்பதும், படிக்கப்படிக்கப் புதிது புதிதாக ஞானமுண்டாக்க வல்லதென்பதும், அதனை, ஸ்வரலய பேதங்களும் உச்சரிப்புத் தவறுகளுமில்லாது கற்பதற்குப் பலதரமோதித் தெளியவேண்டுமென்பதும் விளக்க 'ஓதியோதி யுணருந்தொறு முணர்ச்சியுதவும், வேதம்' என்றார் 'தொறும்' பன்மைப்பொருளைக் காட்டுமோர் இடைச்சொல் உணர்ச்சி மெய்ஞ்ஞானம், அஃதாவது, பிறப்புவினைகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களானன்றி உண்மையானுணர்தல், இதனை வடநூலார் தத்துவஞானமென்பர். உணர்ச்சிதரும் என்னாது 'உணர்ச்சியுதவும்' என்றது பகவானது நிலைமையை வேதங்களே நன்கு விளக்கவல்லனவையல்லனவாயின் அவ்வேதங்களைத் துணையாகக்கொண்டு அறிவதெங்ஙனமென்பது விளங்கற்கு, இதுபற்றியே 'வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலர்' என்றார். மேல்வருஞ் சரபங்கர் பிறப்பு நீங்கு படலத்தும் பகவானது மகிமைகளைப் பிரமன் முதலோராலும் அறிவதருமையென்பது விளங்க "நாழி நவைதீருலகெலா மாக்கனின்றது நீத்த நான்முகனார் தாமே, யூழிபலபலவு நின்றளந்தா லொன்று முலவாப் பெருங்குணத்த வத்தமனே" என்கின்றார் 'வேத'மென்பதற்குச் செய்யவேண்டிய விதிகளையும் விலக்கவேண்டிய விலக்குகளையும் அறிவிப்பதென்பது பொருள் வேதங்களாவன தைத்திரியம், பௌடியம், தலவகாரம், சாமம் என்பன, இனி, வேதவியாசரால் வரையறைப்படுத்திய காலத்து ஓதுகின்ற இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்குமாம் வேதியர் என்பவர் வேதங்களைக் கற்றுக் கற்றபடி அவை விதிக்கின்ற நெறிக்கண்ணே ஒழுகுவோர் அவ்வேதங்களைப் பகவானையே ஆசாரியனாகக்கொண்டு முதலிற் கற்றுணர்ந்தோராகலின் விரிஞ்சனை முதலாகக் கூறினார் ஆதிதேவர் ஆதியாகிய தேவரென விரிதலால் இருபெயரொட்டுப் பண்புத்தொகை, இது வடநூன் முடிபாதலின் வலிமிகாதாயிற்று, "ஆதிபகவன்" என்பதுபோல ஆதிதேவரவர் என்றது திரிமூர்த்திகளுண் முதன் மூர்த்தியாகிய ஸ்ரீமந்நாராயணனது சபதாவதாரமாகிய ஸ்ரீராமபிரானை "முதலாவார் மூவரே யம்மூவருள்ளும், முதலாவான் மூரிநீர் வண்ணன்—முதலாய, நல்லான்" என்றார் பெரியாரும் 'எம்' என்றது தனித்தன்மைப் பன்மை, கவிஞர் இங்ஙனங் கூறுதல் மரபு இனி, உலகினரையுந் தம்மொடு கூட்டியுரைத்தாரெனினும் அமையும் எம்மறிவினுக்கறி வென்றது "பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக்கரிய, வித்தகன்" என்று திருக்குருகைப்பிரான் கூறியாங்கு பத்தராகிய எமக்கு அறியப்படுமவன் என்றபடி அறியப்படுபொருளை 'அறிவு' என்றது தொழிலாகுபெயர் அரோ அசை இனி, பேதியாது - (தாம்) வேறுபடாதிருந்துகொண்டே, நிமிர் - நெருங்கிய, பேதவுருவம் - வேற்றுமைப்பட்ட வுருவங்கட்டோறும், பிறழ்கிலா - வேறுபடாத, என்றும் பொருள்கோடலாம், இப்பொருளில், தான் பலவகையாகிய சேதநா சேதநங்களோடு கலந்திருக்கையில் அவற்றின் தன்மை தன்னிடத்தே தட்டித் தன் தன்மை வேறுபடாதிருப்போன் என்பது போதருங்கருத்து இக்கருத்துப்பற்றியே "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற சுடர்" எனச் சரபங்கர் பிறப்பு நீங்குபடலத்திற் கூறினார் "யாவையு மெவருந் தானா யவரவர் சமயந்தோறுந், தோய்விலன் புலனைந் துக்குஞ் சொலப்படா னுணர்வின் மூர்த்தி, யாவிசே ருயிரி னுள்ளால் யாதுமோர் பற்றிலாத, பாவனை யதனைக் கூடி லவனையுங் கூடலாமே" என்னும் திருவாய்மொழிப்பாசுரத்தின் விசேஷார்த்தங்களை இங்கே விசாரித்தறிக, இனி

'ஓதியோதி யுணருந் தொறுமுணர்ச்சியுதவும்' என்பதனை 'ஆதிதேவர்' என்பதோடு கூட்டிமுடித்துத் தமது திருநாமங்களைப் பன்முறை யுச்சரித்துத் தியானஞ் செய்யும்போதெல்லாம் மெய்யுணர்வினை அளித்தருள்கின்ற (ஆதிதேவர்) என்றுமாம். இனி, 'வேதவேதியர்' என்னும் பாடத்திற்கு வேதங்களால் அறியப்படுபவரும் ஆதிதேவருமாகிய அவர் எனக் கூட்டிப் பொருள்காண்க. 'அறிவரோ' என்பதற்கு வேதம்வேதியர் விரிஞ்சன் முதலோராலும் அறிதற்கரிய ஆதிதேவர் சிற்றறிவுடையேமாகிய எமதறிவுக்கு அறியப்படுவரோ? படார், என, அறிவர் ஓ எனக் கண்ணழித்து ஓகாரத்தை எதிர்மறையாகக்கொண்டு பொருள்கூறுதலு மியலும்.

நூல்.

"நூலெனப்படுவது நுவலுங் காலை, நுதலிய பொருளைமுதலிற் கூறி, முதனடு விறுதி மாறுகோளின்றித், தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி, யுண்ணின் றமைந்த வுரையொடு பொருந்தி, நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே" என்றதனால் நூலினிலக்கணத்தையும், "பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச் செஞ்சொற் புலவனே சேயிழையா—வெஞ்சாத், கையே வாயாகக் கதிரே மதியாக, மையிலா நூன்முடியு மாறு," "உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப், புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின், கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர், மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு" என்றதனால் நூற்பெயர்க் காரணத்தையு முணர்க. இனியாசிரியர் நக்கீரதேவர் 'நூலென்றசொற்குப் பொருளுரைக்கப்படும் நூல்போறலின் நூலெனப், பாவைபோல்வாளைப் பாவையென்றதுபோல நூல்போற லென்பது—நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவன் மகடூஉத் தன்னது செய்றகை நலந்தோன்ற ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூனூற்ற லென்பது, அவ்வாறு சுகிர்ந்து பரந்த சொற்பரவைகளாற் பெரும்புலவன் தனது உணர்வுமாட்சியிற் பிண்டம் படலம் ஓத்துச் சூத்திர மென்னும் யாப்பு நடைபடக் கோத்தலாயிற்று நூல் செய்தலாவது அவ்வகை நூற்கப்படுதலின் நூலெனப்பட்டது. இனியொரு சாரார் நூல்போலச் செப்பஞ்செய்தலின் நூலென்ப. இனித் தந்திரமென்னும் வடமொழிப்பொருளை நூலென வழங்குதல் தமிழ்வழக்கெனக் கொள்க இது நூலென்ற சொற்குப்பொருள்" என இறையனாரகப் பொருளுரையின்கட் கூறுதலுங்காண்க.

முத்திருத்தி யவ்விருந்தனைய மொய்ந்நகையொடுஞ்
சித்திரக்குனி சிலைக்குமரர் சென்ற ணுகினா
ரத்திரிப்பெய ரருந்தவ னிருந்த வமைதிப்
பத்திரப்பழு மரப்பொழி லுவன்றப் பழுவம்.

இ-ள். சித்திரம் - அழகுபொருந்திய, குனிசிலை - வளைந்த வில்லினையுடைய, குமரர் - ஸ்ரீராமலக்குமணர்கள், முத்து - முத்துக்களை, இருத்தி - (ஒழுங்காயப்) பதித்துவைக்க, அவ் - அம்முத்துக்கள், இருந்தனைய - இருந்தாற்போன்ற, மொய்ந்நகையொடும் - நெருங்கிய பற்களையுடைய சீதாபிராட்டியுடனே, அத்திரிப்பெயர் - அத்திரியென்னுந் திருநாமத்தினையுடைய, அருந்தவன் - அரியதவத்தினையுடைய மகாமுனிவர், இருந்த - (எழுந்தருளி) யிருந்த, அமைதி - இடமாகிய, பத்திரம் பழுமரம் பொழிலுவன்ற - இலைகளையுடைய பழுத்தமரங்களையுடைய சோலைகள் நெருங்கிய, பழுவம் - வனத்தினை [ஆச்சிரமத்தினை], சென்று அணுகினர் - போய்க் கிட்டினார்கள்.

குறிப்பு — முத்து முக்தா என்னும் வடமொழிச்சிதைவு, இப்பியினின்றும் விடுபட்டதென்னும் பொருளினதென்ப. இருத்தி — இருக்க வென்னுஞ் செயவெனெச்சத்தின் விகாரம். அவ — சுட்டடியாகப்பிறந்த அஃறிணைப் பன்மைப்பெயர். இருந்தனைய — 'இருந்தால் அனைய' எனவும், 'இருந்தது அனைய' எனவும் இருவகையாக விரிக்கப்படும். முற்றுகட்கூறி யாங்கு வினையெச்ச வுவமமாக விரித்தலே யாசிரியர் நச்சினார்க்கினியர் தங்கருத்தாதல் 'பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்கு" என்னுந் திருமுருகாற்றுப்படையி னுரையிற் காண்க. இனி, 'இருத்தியவிருந்தனைய' என்னும் பாடத்திற்கு — பதித்தனவாகிய முத்துக்கள் பதிந்திருந்தாற் போன்ற வென்றுவது, முத்துக்களை, இருத்தி - தாழ்வடையச்செய்து, அவிரும் - (அவற்றினுஞ் சிறந்தனவாய்) விளங்குகின்ற, தனைய - (தந்த விலக்கணத்திற்கூறிய) அளவினையுடைய என்றவாறு, பொருள்கூறுக. மொய்ந்நகை — வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை, குறில்வழி யகரத்துமுன் மெலிமிகுந்தது. நகை — பற்களையுணர்த்துதலின் தொழிலாகுபெயர். ஈடு மெடுப்புமில்லாத தமது தலைவராகிய சக்கரவர்த்தி திருமகனாரோடு திருவயோத்தி துறந்து போந்தமைக்கு இரங்காமையேயன்றி வனத்திற்கட் சேறலினும் பிராட்டி மனமகிழ்ச்சி யுடையாளென்பார் 'முத்திருத்தியவவிருந்தனைய மொய்ந்நகை' என்றார். யாவராலுமியற்றற்பாலல்லனவாய வினோத விறற்றொழிலுடைமை விளங்கச் சிலைக்குச் 'சித்திரம்' என்ற அடைமொழிதந்தார். அவ்விறற்றொழிலழகு — "வைதவையின மராமர மேழு தொளையெய்த" எனவும், "உற்பத்தியயனை யொக்குமோடும்போதரியே யொக்கும்" எனவும் 'குடக்கதோ குணக்கதோ கோணத்தின்பாலதோ, தடத்த பேருலகத்ததோ விசும்பதோ வெங்குந்தானோ, வடக்கதோ தெற்கதோவென் றுணர்ந்திலன் மனிதன் வல்வில், இடத்ததோ வலத்ததோ வென்றுணர்ந்திலன்" எனவும் பின்னர்ப்போதருஞ்செய்யுண் முகத்துவருகையறிக. "இமைப்பளவில் மூன்றுலகங் கொள்ளவென்னக்கையில், அக்கைத்தனுவுஞ்சந்தமையுங் கண்டாய்" என்னும் பாரதச்செய்யுளையும் அதன் உரையையுங் காண்க. குனிசிலை — வினைத்தொகை, இதனை இறந்தகாலத்துவிரித்துப், பெண்டிரொடு வனத்திற்கட் செல்வுழிவ ளந்த வில்லொடுஞ் செல்ல வியலுமென்க. குமார் — குமாரர் என்பதின் குறுக்கல், இதற்கு, மன்மதனையுங் குறச்சிதருபமாக்குபவரென மிக்க அழகினையுடையவரென்பது பொருள். சிலவலாளரேயாயினும் வழிநடக்கலாற்றாராய்ப் பூப்பட்டாற்கொப்புளிக்குந் தமது திருவடிகளான் மெள்ளமெள்ளச்சென்று சோர்ந்தாரென்பார் அவர்களது சௌகுமார்யந் தோன்றச் 'சென்றணுகினார்' என்றார், "சுகுமாரௌ மஹாபலௌ" என்றார் முனிவரும், "மைவாய்க்களிற்றொழிந்து தேரொழிந்துமாவொழிந்து வனமேமேவி, நெய்வாய வேனெடுங்கணேரிழையுமிளவலோவும் பின்புபோக, எவ்வாறு நடந்தனை..." என்றும், "வேலன்றிபோற் பரற்பாயமெல்லடிகள் குருதிசோர விரும்பாத கானிரும்பி...போகின்றாய்" என்றும் ஈடுபடுவர் கோழியர் கோன். அருந்தவமாவது — மனம் பொறிவழிப்போகாது நிற்றற்பொருட்டு விரதங்களா னுண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயினிலைநிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலைநிற்றலு முதலியசெயல்களை மேற்கொண்டு அவற்றான் தம்முயிர்க்குவருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களையோம்புதல், "ஓவாதிரண்டுவவுமட்டமியும் பட்டினிவிட்டொழுக்கங்காத்த, ருவாத்தவம்" என்றார் சிந்தாமணியினும். 'அத்திரிப்பெயரருந்தவன்' என்பதனை, அத்திரி+பெயரரும்+தவன் எனப்பிரித்து, அத்திரியாகிய பெயர்தலில்லாத [அழிவில்லாத] தவத்தினையுடையானென்று பொருள்கொள்ளலு மமையும். இங்கே, அருமை இன்மைகுறித்து நின்றது, "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற்ற லரிது" என்பதிற்போல நல்வினையானது பயனையுய்ப்,

பிறந்துப் பிறவியைத் தந்து தான் அழியுமாறுபோல் அழியாதென்பார் 'பெயரருந்தவம்' என்றார். இனி, 'பெயரரும்' என்பதனை முனிவர்க்கே அடைமொழியாக்கிக் காமவெகுளிகளான இடையே தவத்தைப் பெயர்த்தல்செய்யாத முனிவரென்னுமாம். இதனைப் பின்வரும் 'இருந்த' என்னுஞ் சொல் மிகுதியும் வற்புறுத்துகின்றது. 'இருந்தவமைதி' என்பதில், அமைதி —தொழிற்பெயர், இஃது இடமாந்திரையாய் நின்றது. "ஆழாழி, புனைகழல்வெங்கரி" என்பப் பயின்றுவருதல் காண்க. 'பத்திரப்பழுமம்' என்றுகூறிய சொல்லாற்றலாற் கடவுள் வழிபாட்டினர்க்கு அருச்சனைக்கு உபயோகப்படுவனவாகிய பத்திரங்களும், நைவேத்தியத்திற்கேற்ற கனிகளுமே தரத்தக்க மரவகைகளாதல் காண்க. இங்கே மலர்தரு மரங்களையு முபலக்கணத்தாற்பெறற்கும், "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்பது சூத்திரம். பழுமரம் - ஆலமரமுமாம். (௪)

திக்குறுஞ்செறி பரந்தெரிய நின்ற திரள்பொற்
கைக்குறுங்கண் மலை போற்குமரர் காமமுதலா
முக்குற்றம்புற வெறிந்த வினைவால் முனிவனைப்
புக்கிறைஞ்சினர் அருந்தவனுவந்து புகலும்

இ - ள். குமரர் - ஸ்ரீராமலக்குமணர்கள், திக்கு உறும் - திசைகளிற்பொருந்திய, செறிபரம் - (அத்திக்குகளின்) மிகுந்த பாரத்தை, தெரிய - (இவ்வளவினதென்று) அறியும்படி, நின்ற - (அவற்றைத்தாங்கி) நின்ற, திரள்பொற்கை - திரண்ட அழகிய துதிக்கையையும், குறுங்கண் - சிறியகண்களையுமுடைய, மலைபோல் - யானைகளைப்போல், புக்கு - (அவ்வாச்சிரமத்தினுட்) புகுந்து, காமமுதல் ஆம் முக்குற்றம் (உம்) - காமமுதலாகிய மூன்றுகுற்றங்களையும், அற - முற்றும் நீங்கும்படி, எறிந்த - விலக்கிய, வினை - (தவத்) தொழிலினைக்கொண்ட, வால்முனிவனை - பரிசுத்தம்பொருந்திய அகத்தியராமுனிவனை, இறைஞ்சினர் - வணங்கினார்கள், (வணங்கவும்), அருந்தவன் - அம்முனிவர், உவந்து - மனமகிழ்ந்து, புகலும் சொல்லுவார்.

குறிப்பு —'கைக்குறுங்கண்மலை' எனவே யானையாயிற்று. மலையென்னுஞ் சொல் இயற்பெயர்ப்பொருளை யுணர்த்துவதோ' அன்றி, ஆகுபெயர்ப்பொருளை யுணர்த்துவதோ' என்று மயங்கவையாது 'கைக்குறுங்கண்' என்றுஞ் சிறப்படைகொடுத்தார். மலை —வளப்பத்தினையுடையதெனவும், யாவருங்காணும் மலையத்தக்கதெனவும் இருவகையாகப் பொருள்படுவதாய், முதற்கட்கூறிய பொருளில் (மல + ஐ) ஐ, என்னும் வினைமுதற்பொருள் விகுதிபுணர்ந்தது, பின்னையதில் முதனிலைத் தொழிலாகுபெயராம். 'போல்' என்னும் உவமவுருபிடைச்சொல் நண்ணப் போலவென்னும் வினையெச்சப்பொருள்பட்டுப் 'புக்கு' என்பதனைக்கொண்டு முடிந்தது. மலர்தலையுலகந்தாங்கு மாலையாகத் தடந்தோள் மன்னர் மகனின் இக்குமாரர்கட்குத் திக்கயங்களை யுவமித்தார். பரந்தெரிந்துநின்ற வென்றது 'பரந்தெரிய நின்ற' என்று போக்கிய சொற்சாதுரியத்தால், புவியினைத்தாங்கிப் புரக்கக்கூற இவர், கைகேசி சூழ்வினையான அப்பூபாரத்தையொழித்து வந்தமை விளங்குதலாராய்க் காண்க. இனி, திக்கு உறும் - (வேதம் வேதியர்விரிஞ்சன் முதலோருந் தெரியகில்லாது) தடுமாறுகின்ற, செறிபரம் - எங்கும் நிறைந்தபரம் பொருள், தெரிய - (இவர் தாமெனப்பதை முனிவர்) அறிந்து உவக்கும்படி நின்றதிரள் பொன் - (விசேடித்துக்கூறும்படி) நின்ற அழகெல்லாவற்றையும், கைக்குறும்-தன்னிடத்தேகொண்டி

ருக்கிற, கண - பெருமையையுடைய, மலைபோல் - மலைபோலக் குமராபுகசென்று பொருள்கோடலுஞ் சிறக்கும், இங்கே, மலையை யுவமைகூறியது:—அணுவினுக்கு மணுவாய்க்காண்டற்கரியனாய் நின்ற வெம்பெருமான் மலையிலக்காகவந்து சேவை சாதித்தான் என அடியார்க்கு எளியனாந்தன்மை விளங்கற்கு எனக. முக்குற்றம்பு — காமம் வெகுளி மயக்கமென்பன அநாதியாய அவிச்சையும் அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிது வேண்டுமென்னும் அவாவும் அது பற்றி அப்பொருட்கட்செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கட் செல்லுங் கோபமுமென வடநூலார் குற்றம் ஐந்தென்பர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கணணும் அவாவுதல் ஆசைக்கணணும் அடங்குதலான் மூன்றென்றார் "காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற, னாமங் கெடக்கெடு நோய்" என்றார் நாயனாரும் குற்றம்பு' என்றமையாற் காமமுதலாகிய அரணகளை யென்பப் பொருள் கோடலுஞ் சிறக்கும் குற்றம்பும் என்பதின்கண் உம்மை விகாரத்தாற்றொக்கது இடையறாத ஞானயோகங்களின் முன்னர் அக்காமமுதலிய குற்றங்களனைத்தும், காட்டுத்தீ முன்னர்ப் பஞ்சுத்துய்போல அழிவுறுமாதலின் அறவெறிந்த' என்றார் 'முக்குற்றம் டற வெறிந்த வினைவான முனிவன்' என்றதினால், அத்திரியென்னுஞ் சொற்பொருள் யுயத்துணரவைத்தார், (அ+திரி- மூன்றின்மை) 'வானமுனிவன்' என்பதற்கு —கடவுட்டன்மைபொருந்திய முனிவரெனவும், சிறந்த முனிவரெனவும், மேகம்போன்ற முனிவரெனவும் பொருள்கொள்ளுதல் இழுக்காது உலகிற்கு அறமுதற்பொருள்களை யுள்ளவாறுணர்த்தி யுயவிக்கும் அருளுடையாராகலின் ஈண்டு அவர்போன்று, உலகமுயதற்கும், அதற்குறுதியாகிய அறம்பொருளின்பங்கள் நடத்தற்கும் ஏதுவாகிய மேகம் முனிவர்க்கு உவமைகூறப்பட்டது 'முனிவன்' என்பதற்கு —பகவத்தியான முடையவனென்றும், தத்துவஞான முடையவனென்றும், திரிகாலஞான முடையவனென்றும் பொருள் இனி, அகப்பற்றையும் புறப்பற்றையும் முனிந்தகாரணத்தான் முனிவனெனப்பாகக்கு இது வடசொல்லல்லாறு மறுக்க 'அருந்தவன்' என்பது அவனென்னுஞ்சுட்டு மாத்திரையாய்நின்றது "பல்லோர் படர்க்கைமுன்னிலை தன்மை, யவ்வயின்மூன்று நிகழுங்காலத்துச், செய்யுமென்னுங் கிளவியொடு கொள்ளா" என்பவாகலின் ஒழிந்த ஆண்பாலில் 'புகலும்' என்வந்தது

"செய்யுமென்னும் பெயரெஞ்சுகிளவிக்கு, மெய்யொடுங்கெடுமே யிறுதிமிசையுகரம், மவ்விட னறிக வென்மனார்புலவர்" என்னும் தொல்காப்பியச்சூத்திரவிதிப்படி 'ஆம்' என உயிருமெய்யுங் கெட்டுவந்தது வினைத்தொகையாமெனின் அது பொருந்தாது என்னை? "முந்நிலைக்காலமுந் தோன்று மியற்கை, யெம்முறைச் சொல்லு நிகழுங்காலத்து, மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல்வேண்டும்" என்னுஞ் சூத்திரத்தாற்பெற்ற 'செய்யும்' என்னுஞ்சொல்லின் மகரமகிறதலானென்க ()

நமராதீரிய னடைந்தநகவு கொள்கை யெளிதோ
வமரா யாவரொடு மெவ்வுலகும் வந்தவளவே
யெமரின் யார்தவ முயன்றவர்க ளென்றுருகினன்
றமரெலாம் வரவுகந்தனைய தன்மை முனிவன்.

இ - ள தமரெலாமவர - சுற்றத்தார் யாவரும் (தம்பால்) வந்துசேர, அதனால்), உகந்தனைய தன்மை முனிவன் - மகிழ்ந்தாற் போன்ற தன்மையையுடைய (அம்) முனிவர், (ஸ்ரீராமலக்குமணர்களைநோக்கி) குமரா - சக்கரவர்த்தி திருமகா

கள்' நீர் - நீங்கள், இவண் - இவ்விடத்தே, அடைந்து உதவுகொள்கை - வந்து காட்சிகொடுத்தனமை, எளித்தோ - (கிடைப்பதற்) கெளியதோ? (எளிதல்ல) அமரர் யாவரொடும் - எல்லாத்தேவர்களுடனும், எவ்வுலகும் எல்லாவுலகங்களும், வந்த அளவே - வந்தத்தன்மையேயாகும், எமரின் - எங்களில், தவம்முயன்றவர்கள் - (நீங்கள் இங்குவருதற்குத்தக்க) தவத்தைச்செய்தவர்கள் யார் - எவரோ? என்று - என்றுகூறி, உருகினன் - மனமுருகினான்.

குறிப்பு — குமரர் அண்மைவிளி, சேய்மையாயின் 'ஆருமருவுமீரொடு இவணும்" என்னும் விதிப்படிக 'குமரீர்' என வரும் இயல்பாயிற்று இனி குமரராகிய நீர் என வரைப்பாருமுளர் அங்ஙனம் முன்னிலையும் படர்க்கையும் மயங்கின் இடவழுவமைதியெனக் "ஒருமைப்பன்மையும் பன்மையொருமையும், ஓரிடம் பிறவிடந் தழுவலுமுளவே" என்றலாகலின் உதவுகொள்கை வினைத்தொகை எளித்தோ, ஓகாரம்—எதிர்மறை பிரமன் முதலிய கடவுளர்களாலுங் காண்டற்கரிய திருவடிகள் நிலந்தோய, நீவிர் எழுந்தருளியது என்னே! என்பார் 'இவணடைந்துதவு கொள்கைப்பெற்றோ' என்றார் இங்கே எளித்தோ' என்பதற்கு, ஓகாரத்தைச் சாரியையாக்கொண்டு எளித்து எளியதாயிருந்ததென்றிருக்கின்றேன் "எத்திறமுனிவரேனுமடிகளைநிரந்தமேயங்கிய வெளிய" என்னும் அருளிச்செயலையொத்துப் பொருள்கொள்ளுதலுமுண்டாம் அமரர் மரணமில்லாதவர் சகல சேதனாசேதனங்களும் நீரேயென்பார் 'அமரர் யாவரொடும் எவ்வுலகும் வந்தவளவே' என்றார் "பண்டைநான்மறையும் வேள்வியுங் கேள்விப் பதங்களும் பதங்களின் பொருளும், பிண்டமாய் விரிந்த பிறங்கொளி யனலும் பெருகிய புனலொடு நிலனும்- கொண்டல்மாருதமுங் குரைகடலேழும் ஏழுமாமலைகளும் விசும்பும், அண்டமுந் தானாய் நின்றவெம்பெருமான் அரங்கமா நகரமர்ந்தானே" என்னுந் திருமொழிப்பாசுரத்தால் எம்பெருமானே யெல்லாமாதல் காண்க 'எமரின்' இதில் 'இன்' என்பதனை ஏழாம்வேற்றுமைப் பொருளதாகவும், ஐந்தாம்வேற்றுமை எல்லைப்பொருளினதாகவுங்கொண்டு முறையே எம்மைச்சார்ந்தாருள்ளும் என்றும், எம்மைப்போலவென்றும் பொருள்கொள்ளலாம் வேதவேத்தியராகிய நீவிர் இங்கெழுந்தருளும்படிக்கான நல்வினை ஒருசிறிதுமில்லையே! யான்செய்த நல்வினையன்றி அசேதனப்பொருள் தவமாற்றவல்லதன்றே! யாருமுள்ளே அவதரித்தீர்கள் செய்தவப்பேறென்னினன்றோ மேற்றவர்களன்றே சேவைசாதித்தருளவேண்டும்! உபதேசித்தாரின் எங்கள் அநுகூலியராவார்கள் ஆற்றிய தவப்பயனன்றோ எம்மட்டிலும் வந்து பொருந்தியுயவித்தது, என்று வைத்தியநாதையர் சொன்னவராகிய தவமுயன்றவர்கள் என்றார் "நிலஞ்செய்த தவமென்றுணர்ந்தனனன்றே நடையோவென, நலஞ்செய் வினையுடைத்தன்றோ மன்று நகரேயாம் எவ்வுயிர் வண்டுக் வெளிவந்த வித்தும் தென, குலஞ்செய் தவமென வீற்றிருக்கும் முனிக்கூட்டம்" என்னுஞ் செய்யுளை ஈண்டு நோக்குக எல்லாமென்றது இடைக்குறையாய் நின்றது வர இச்செய்வெனச் சவ காரணப்பொருளோடு 'தானருளின்வண்' என்ற பாடத்திற்குத் தத்துவஞானப் பொருளை நல்கு முனிவரென "ஞானமுணர் வண்மை வறுமை யமைந்துடைமை, பண்பினைத் தந்த பெருஞ்செல்வம்" எனத் தத்துவஞானத்தைப் பொருளென்றுபசரித்தார் நாயனார். (ரு)

அன்ன மாமுனிவரொடு மன்றுவின்றுறைந்தவனரும்
பன்னிகள் பின்தொடரப் பணிப்பாதனி செல்லன
முன்னுதூசியொடு சந்திவை சுமந்த தனகன
பொன்னெடுமதில் புயா தனாடக வல்லபுகுதலும்.

இ - ள் அன்ன மா முனியொடு - அத்தகைய பெருமை பொருந்திய அத்திரி மகாமுனிவருடன், அன்று அவண் உறைந்து - அற்றைநாள் அவ்விடத்தில் வசித்து, அவன் - அம்முனிவரது, அரும் பன்னி - அருமைவாய்ந்த பத்தினியாகிய, கற்பின் அநசூயை - கற்புநிலையினையுடைய அநசூயை யென்பவளது, பணியால் - கட்டளையினால், அணிகலன் - அழகிய ஆபரணங்களும், துன்னு தூசொடு - (மேலானதாய்) விளங்குகின்ற வஸ்திரத்துடன், சந்து - சந்தனமுமாகிய, இவை - இவற்றை, சுமந்த - (அணிந்து) தாங்கிய, சனகன் பொன்னொடு - சானகிப் பிராட்டியுடனே, ஏகி - (மற்றைநாள் அவ்வாச்சிரமத்தினின்றும் புறப்பட்டுச்) சென்று, உயர் தண்டகவனம் புகுதலும் - சிறந்த தண்டகாரணியத்துட் பிரவேசித்த வளவில்.

குறிப்பு—அன்ன 'அன்' என்னும் உவம விடைச்சொல் லடியாகப் பிறந்த பெயரெச்சம், இஃதீண்டுச் சுட்டளவாய் நின்றதெனினு மேற்கும். பன்னி—பத்நீ யென்னும் ஆரிய மொழிச்சிதைவு. கற்பு—பதிவிரதாதர்மம், அஃதாவது—தன்னு மணாளனையே தெய்வமென்றுணர்வதோர் மேற்கோள், "அதுகொண்டானிற் சிறந்த தெய்வமின்றெனவும், அவனை யின்னவாறே வழிபடுகவெனவும், அவற்கின்னவாறே குற்றேவல் செய்தொழுக வெனவும் இருமுது குரவரும் அங்கியங்கடவுள் அறிகரியாக மந்திரவகையாற் கற்பித்தலானும், அந்தணர் திறத்துஞ் சான்றோர்தேஎத்தும் ஐயர்பாங்கினும் அமரர்ச்சுட்டியும் ஒழுகுமொழுக்கந், தலைமகன் கற்பித்தலானுங் கற்பாயிற்று" இது தொல்காப்பியப் பொருளதிகார வுரையிற்கண்டது இக்கற்பினைப்பற்றி "சாமெனிற் சாதலேதுந் நோவன நொந்த காலைப், பூமனும் புனைந்து வின்றிய பொற்புடன் புலம்ப வைகிக், காமனைப் பெண்பாற் சொல்லார் கணவற்கை தொழுது வாழ்வார், தேமலர்த் திருவோ டொப்பார் சேர்ந்தவன் செல்வ நீப்பார்" என்பர் திருத்தக்கதேவர் 'கற்பினநசூயை' என்றதனால், பிராட்டிக்கு அநசூயை கற்பிலக்கண முபதேசித்ததாக வான்மீகத்திற் கூறிய விருத்தாந்தங் குறிப்பிக்கப் பட்டது அநசூயை—அசூயையில்லாதவள், அசூயை - அழுக்காறு கலன்—ஏற்றுப்போலி. சந்து—சந்தனமென்னும் வடசொற்சிதைவு 'இவை' என்றதனாற் புஷ்ப முதலியனகொள்க கலன் பூணுதலும், தூசுடுத்தலும், சந்தனம் பூசலும் மற்றும் அடங்கச் 'சுமந்த' வென்னும் பொதுவினையாற் கூறினார் பிராட்டியினது திருமேனியின் சௌந்தரியத்தைத் தோன்றுதபடி மறைத்தலன்றி, அவை சுமந்த காரணமாக அழகுமுன்னினுஞ் சிறந்ததாகாமையின், அவைபாரமேயாயிற் றென்பார் 'சுமந்த' என்றார் "அகிலாற் சாந்தணியாள் பூச்சாரச்செல்லாள்" எனச் சிந்தாமணியிற் கூறியவாறு பிராட்டியின் மெல்லியலுக்கு அவை பெரும்பொறை யென்று சொல்ல வேண்டாவாறே. 'சனகன் பொன்'—ஜனகமகாராஜன் பொன்னாகிய மகள், பொன் - இலக்குமி பெருமாள் ஸ்ரீராமபிரானுக்குத் திருவவதாரஞ் செய்தருளியபொழுது பிராட்டி சீதையாகத் திருவவதரித்தமைபற்றி, 'பொன்' என்றார். சீரைசுற்றிவந்த திருமகட்கு அப்பொழுது ருஷிபத்நியாற் சமர்ப்பிக்கப் பட்ட திருக்கோலம் பாணிக்கிரகண மஹோற்சவ காலத்து ஜனகமகாராஜனால் "இயம்சீதாமமசுதா" எனச் சொலலப்பெற்று விளங்கிய திருக்கோலத்தோ டொத்திருந்த தென்பார் 'சனகன் பொன்' என்றார்.

தண்டகவனம்—இக்ஷ்வாகுவினது கடைப்புத்திரனான தண்டகனென்பவனுடைவருகையிற், சுக்கிரசாபத்தினாற் காடான இடம் (௪)

எட்டொ டெட்டுமத மாகரி யிரட்டியரிமா

வட்ட வெங்கணவரை யாளிபதி னறுவகையிற

கிட்ட விட்டிடைகிடந்தன செறிந்த வொருகைத்
தொட்ட முத்தலை யயிற்றொகை மிடற்கழுவொடே

இ - ள். எட்டொடு எட்டுமா மதம் கரி - பதினாறு பெரிய மதயானைகளுக்கும், இரட்டி அரிமா - (அவ்யானைகளிலும்) இருமடங்காகிய (முப்பத்திரண்டு) சிங்கங்களும், வரை - மலையின்கண்ணுள்ள, வட்டம் வெங்கண் - வட்டவடிவாகிய கொடியகண்களையுடைய, பதினாறுயாளி - பதினாறு யாளிகளும், வகையின் - ஒழுங்காக, கிட்ட இட்டு - நெருங்கக் கோக்கப்பட்டு, இடைகிடந்தன செறிந்த - இடையேகிடந்தனவாகி (இடைவெளியில்லாது) நெருங்கியிருக்கப்பெற்ற, அயில்தொகை முத்தலை - மிக்க கூர்மையுள்ள மூன்றுதலைகளையுடையதும், மிடல் - வலிமையையுடையதுமாகிய, ஒருகைதொட்ட கழுவொடு - ஒருகரத்திற்பிடித்த சூலாயுதத்தொடும்.

குறிப்பு—எட்டொடு, ஒடு—எண்ணுப்பொருளது. கரி—கரத்தினையுடையது, கரிய நிறமுடைத்தாதல்பற்றிக் கரியென்னும் பெயர்த்தோ? எனின், இந்திரனது வெண்ணிறத்த அயிராவதமுங் கரியென நூலுட் பயின்றுவருதலுடைமையான் அங்ஙனங் கோடலியையாதெனக். இரட்டி—இரட்டியது, 'இரட்டு' பகுதி 'இ' வினைமுதற் பொருள்விகுதி. அரி—யானை முதலிய பெரிய மிருகங்களையும் அரிக்குந்திறனுடைமைபற்றி அரியெனச் சிங்கத்துக்குப்பெயர். [அரித்தல்—கொல்லுதல்], முதனிலைத்தொழிலாகுபெயர். அரிமா—அரியாகிய மா வென விரித்தலின் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வரை—கணு, இது அதனையுடைய மூங்கிலுக்குச் சினையாகுபெயராய்ப் பின் தானியாகுபெயராய் மலைக்குவருதலின் இருமடியாகுபெயர். யாளி—துதிக்கையுடைமையால் யானைபோல்வதும், யானையைக் கொல்லவல்ல கூரிய நகமுதலியன வுடைமையாற் சிங்கம்போல்வதுமாகிய ஒருமிருகம், இஃது இப்பெற்றித்தாதலை "கொல் சினையானைபாய்க்குங் கூருகிர்த்தறுகணாளி" என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளானறிக. கிடந்தன—முற்றெச்சம். 'தொட்ட' வென்னுஞ் சொல்லாற்றலான் மிக அலட்சியமாக வெளிதிற் பிடித்துக்கொண்டுவந்தானென்பது போதரும். ஏ—ஈற்றசை.

கருத்து—யானைகளொருபுறமும் யாளிகளொருபுறமும் நடுவே சிங்கங்களுமாகக் கோக்கப்பட்ட திரிசூலமொன்றைக் கையிலேந்திக்கொண்டு (விராதன் எதிரே வந்தான்) என்பதாம். (௫)

செஞ்சுடர்ச்செறி மயிர்ச்சுருள் செறிந்த சென்னிய
னஞ்சு வெற்புருவு பெற்றிடை நடந்ததெனமா
மஞ்சுசுற்றிய வயங்கு கிரிபாத விசையிற்
பஞ்சுபட்டது படப்படியின் மேன்முடுகியே

இ - ள். செஞ்சுடர் - சிவந்த ஒளியையுடைய, செறிசுருள்மயிர் - மிகுந்த சுருட்டையுடைமயிர்கள், செறிந்த - நெருங்கியிருக்கப்பெற்ற, சென்னியன் - தலையையுடைய அரக்கன், நஞ்சு - விஷமானது, வெற்பு உருவுபெற்று - மலைபோன்ற வடிவத்தையடைந்து, இடைநடந்தது என - (வனத்தின்) இடையே நடந்துவந்ததென்னும்படி, மா - கரிய, மஞ்சு - மேகங்கள், சுற்றிய - சூழ்ந்து தங்கப்பெற்ற, வயங்கு கிரி - விளங்குகின்ற மலைகள், பாதம் விசையின் - கால்களின் நடைவேகத்தால் (உண்டான காற்றினால்), பஞ்சுபட்டதுபட - பஞ்சுபட்டபாட்டினையடைய, படியின்மேல் - பூமியின்மேல், முடுகி - விரைந்துநடந்து.

குறிப்பு—அரக்கரெல்லாம் செம்பட்டமயிர்த்தலையினராகவே யாண்டும் வருணிக்கப்படுதலை யுணர்க. அரக்கியரும் செம்பட்டமயிர்த்தலையினரே. "வெந்தழல்போற் கூந்தலாளை" என்ற திருமங்கைமன்னன் பணித்ததுகாண்க. செறிவு—மிகுதியும் நெருக்கமுமாம். சென்னியன—சென்னியனென்ன இடை குறைந்துநின்றது. அரக்கனது கரிய நிறமும், கொடுமையும் பருத்தவுருவும் விளங்க, 'நஞ்சுவெற்புருவு' என்றார். 'நஞ்சுதட்டுருவு' என்னும் பாடபேதத்திற்கு, விஷமானது வலியதொருவடிவத்தைக்கொண்டு என்பு பொருளுரைத்துக்கொள்க. மா - கருமையாதலை "மாக்கடனிவந்தெழுதருஞ்-செஞ்ஞாயிறு," "மாக்கழிமலர்ந்தநெய்தல்," என்னும் புறப்பாட்டினைக்கண்டு தெளிக, "மஞ்சென்றதிரண்ட கோலமேனிய" "மஞ்சொக்குமளகவோதி" எனப் பயின்றுவருதலுங் காண்க. மா - பெருமையெனக்கொண்டு. மஞ்சு (செல்வதற்கு நோவழியின்றிச்) சுற்ற (மேகமண்டலத்திற்கு மேற்பட்டவளர்ந்து) விளங்குகின்ற கிரியென்பப் பொருள்கோடலுமொன்று. பஞ்சுபட்டதுபடல் அஃதாவது பொடிப்பொடியாய் இலவம்பஞ்சு காற்றிற்பறந்துபோவதுபோற்போதல்படி—இறைவனுற்றபடிப வமைக்கப்பட்டது, எனவே காரணக்குறியாயிற்று. வைப்பு என வழங்கலு மிதுபற்றியே. (௬)

புண்டுளங்கியன கண்கள் கனல்பொங்க மழைசூழ்
விண்டுளங்கிட விலங்கல்கள் குலுங்க வெயிலும்
கண்டுளங்கதிர் குறைந்திட நெடுங்கடல் சுலாம்
மண்டுளங்கவய வந்தகன் மனந் தளரவே

இ-ள். புண் துளங்கியன - புண்கள் விளங்குவனபோலச் (சிவந்து) ஒளிசெய்கின்றனவாகிய, கண்கள் கனல்பொங்க - (தன்) கண்களினின்றும் அக்கினிப்பொறிகள் பறக்க, (அதனால்), மழைசூழ்விண் துளங்கிட - மேகங்கள் சூழ்ந்துள்ள வானம் நடுங்கவும், விலங்கல்கள் குலுங்க - மலைகள் அசையவும், வெயிலும் - சூரியனும், கண்டு - பார்த்து, உளம் கதிர் குறைந்திட - (தனது) மனங் குறைதலோடு ஒளிகுறையவும், நெடுங்கடல் சுலாம் - பெரியகடல் சூழ்ந்த, மண் துளங்க - பூமி நடுங்கவும், வய அந்தகன் மனம் தளர - வலிமையுடைய யமனும் மனத்தளர்ச்சியடையவும்.

குறிப்பு—புண் பால்பகாவஃறிணைப்பெயர். துளங்கியன—லகரளகரப்போலி பற்றியும், எதுகைபற்றியும் 'துளங்கியன' எனத்திரிந்து நின்றது. மழை—மேகத்திற்கு ஆகுபெயர். விலங்கல் (ஊருக்கு ஒருபுறத்தே) விலகி நிற்பதென்ற காரணம்பற்றிய பெயரென்பர், இடையிதன்றி ஒருபுடையதாதல் மலைக்குவாய்ப்பென்று பரிமேலழகியார் உரையாலுந் தெரிகின்றது, 'அல்' கருத்தாப் பொருள் விகுதியென்றாவது, தொழிலாகு பெயரென்றாவது இலக்கணங் காண்க. வெயில்—வெம்மையென்னும் பண்படியாகப் பிறந்த பெயர், அஃதீண்டுப் பண்பாகுபெயராய்ச் சூரியனை யுணர்த்திற்று. உள்கதிர்—உள்ளுங் கதிருமென வும்மைத்தொகை. கடல்—கள்+தல், தோண்டப்பட்டது என்பது அவயவப்பொருள் கடத்தற்கருமையிற் கடலென்பாருமுளர் முற்றேல், "செய்யுமென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு, மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசையுகரம், அவ்விடனறிதலென்மனார் புலவர்" என்னுந் தொல்காப்பியச் சூத்திர விதிபற்றிச் 'சுலாம்' என நின்றது. வய—வலி, "வயவலியாகும்" என்பது சூத்திரம். இனி, வயம் அந்தகன் எனப்பிரித்து, வெற்றியையுடைய அந்தகனென்னலுமாம். அந்தகன்.—எல்லாப் பிராணிகளுக்கும் முடி

பிழைசெய்வோனென்பது உறப்புப்பொருள் 'அந்தகன் மனந்தளர' — இதிலுள்ள 'அந்தகன்மனம்' என்னும் இரண்டு எழுவாய் "உயர்திணை தொடர்ந்தபொருண் முதலாறு, மதனொடு சார்த்தினத்திணை முடிபின" என்னும் நன்னூற் பொதுவியற்சூத்திர விதிபற்றித் 'தளர' என்பதனொடு முடிந்தது. (௭)

புக்கு வாளரி முழங்கு செவியின் பொறிபுறப்
பக்கமின்னு மணிமேரு சிகரங் குழைபடச்
செக்கர்வான மழைநிகர்த்த வெதிருற்ற செருவத்
துக்கவீர ருதிரத்தி னொளிர் செச்சையினொடே.

இ-ள். வாள் அரி - ஒளியுள்ள சிங்கங்கள், புக்கு - புகுந்து, முழங்கு - பேரொலிசெய்கின்ற, செவியின் பொறி - (குகைபோன்ற) செவிப்பொறியினிடத்தே, பக்கம் உற மின்னும் - எல்லாப்பக்கங்களிலும் (ஒளி) பொருந்த விளங்குகின்ற, மணிமேருசிகரம் - அழகிய மகாமேருமலையினது கொடுமுடிகள், குழைபட - குண்டலங்களாகித் திகழவும், செக்கர் வான மழை நிகர்த்த - செவ்வானத்தையும் மேகத்தையும் ஒத்த, எதிர் உற்ற செருவத்து - எதிர்த்துப்பொருத போரினிடத்தே, உக்கவீரர் - இறந்துபட்ட வீரர்களது, உதிரத்தின் ஒளிர் - இரத்தத்தினால் விளங்குகின்ற, செச்சையினொடு - செஞ்சந்தனக் குழம்புப் பூச்சோடும்.

குறிப்பு — விராதனது விஷம்போன்ற கரிய உடலின்கண்ணே பூசிய இரத்தப்பூச்சு கரிய ஆகாயத்தினிடத்தே தோன்றும் செவ்வானத்தினை யொக்குமாறும், அப்பூச்சினின்றும் அவன் முழுகியெழுந்தோறும் உதிரத்துளிகள் மழையெனப் பெய்யுமாறும் ஆராய்ந்தறிக. செருவத்து, அத்து — சாரியை. (௮)

படையொ டாடவர்கள் பாய்புரவி மாகளிறுதேர்
நடைய வாளரிகள் கோளுழுவை நண்ணியவெலா
மடைய வாரிபர வாலசை யநேகவிதவந்
தொடையல் மாலைதுயல் வந்துலவு தோள்பொலியவே.

இ-ள். படையொடு ஆடவர்கள் - ஆயுதங்களோடு கூடிய வீரர்களையும், பாய் புரவி - தாவிச்செல்கின்ற குதிரைகளையும், மா களிறு - பெரியயானைகளையும், தேர் - இரதங்களையும், நடைய - (கம்பீரமான) நடையினையுடைய, வாள் அரிகள் - ஒளியுள்ள சிங்கங்களையும், கோள் - கொலைத்தொழிலையுடைய, உழுவை - புலிகளையும், நண்ணிய எலாம் - (மற்றும்) அகப்பட்ட எல்லாவற்றையும், அடைய வாரி - முழுவதும் வாரிக்கொண்டுவந்து, (அவற்றை), அரவால் - (மலைப்) பாம்புகளால், அசை - கட்டப்பட்ட, அநேகவிதம் - பலவகையாகிய, அம்தொடையல்மாலை - அழகிய தொடுக்கப்பட்ட மாலைகள், துயல்வந்து - (தொங்கி) அசைந்து, உலவு தோள் - (வீசிநடப்பதால்) அசைகின்ற தோள்களினிடத்தே, பொலிய - விளங்கவும்.

குறிப்பு — படை படுக்கவல்லது எனவே ஆயுதமாம், 'ஐ' வினை முதற்பொருள் விகுதி. மா - மதம் மயக்கமெனவுமாம். களிறு — களிப்பினையுடையது, ஆண்யானை இதன் பெண்பால் பிடியென்பது. பெருமிதமுடையானுக்குச் சிங்கம் நடையா லுவமைகூறப்படுதலின் 'நடையவாளரி' என்றார், இதனை "மாகமடங்கலு மால்விடையும் பொன்னாகமு நாகமு நாண நடந்தான்" என்னும் பால்காண்டச்

செய்யுளானறிக "சிங்கடப்பதுபோற் சோர்ந்து" என்றார் சிந்தாமணியிலும், இனி, நடு+ஐய, எனப்பிரித்து, இடையழகினையுடைய என்ப் பொருள் கூறுவாருமுளர், "முற்றுமற்றொரோவழி" என்பவாகலின் 'நடு' என்பதன் கண்ணுள்ள உகரங்கெட்டது. ஐய - உரிச்சொல் ஈறுதிரிந்ததெனினுமாம் "வாளெயிற்றைய வரிமான்" என்றவிடத்து 'ஐய உரிச்சொல், ஈறுதிரிந்தது.' என்றார் ஆசிரியர் நச்சினார்க்கினியரும். பெண்களினது நுண்ணிய இடைபோன்று அழகிய இடையை யுடைத்தாதல்பற்றி 'நடையவாளரிகள்' என்று விசேடிக்கப்பட்டது. "இந்தக் கன்னி மதிமுழுநோக்கெய்திச் செவ்வாய் வலியடைந்து, சந்தச் சிங்கந் தனையடுத்துத் தக்க வரவின் வலிசார்ந்து, முந்தைக் கொடிமீனத்தலைவன் முனிவராகும் பகைவெல்லக், கற்பப் பகழி பலவேழக் கருப்புச் சிலையிற் றொடுத்தனளால்" என்னும் பிரபுலிங்க லீலைச் செய்யுளில் மாதரிடைக்குச் சிங்கத்தினிடையை யுவமைகூறியது காண்க. தோள் - வலிமையுமாம். அநேகப —ஒன்றல்லாதது. கோத்தமாலையை நீக்கத் 'தொடையலமாலை' என்றார், ஒருபொருட் பன்மொழியுமாம். துயல்வந்து, 'வா' —துணைவினை. தோள் —'தோஸ்' என்னும் வடசொற் சிதைவென்ப. (௯)

துன்றுகுன்றின வென்னக் குமுறு கோப மதமா
வொன்றினொன் றிடையடுக்கின தடக்கை யுதவப்
பின்றுகின்ற பிலனிற் பெரியவாயி னொருபான்
மென்றுநின்று விளியாது விரியும் பசியோடே.

இ-ள் துன்றினகுன்று என - நெருங்கின மலைகள், இடை அடுக்கின - (தன் சூலப்படையி)னிடையே யடுக்கிவைக்கப்பட்டனவாகிய, குமுறு கோபம் மதம் மா - பிளிறுகின்ற சினத்தினையுடைய மதயானைகளை, ஒன்றின் ஒன்று - ஒன்றின்மேலொன்றாக, தட கை உதவ -(எடுத்துப்) பெரியகைகள் கொடுத்துக்கொண்டுவர, பின்றுகின்ற பிலனின் பெரியவாயின் - (செல்லச்செல்லப்) பின்னிடுகின்ற குகைபோன்ற பெரியவாயின்கண், ஒருபால் மென்று நின்று - ஒருபக்கத்தில் மென்றுநின்றுகொண்டிருந்தும், விளியாது விரியும் பசியொடு - அடங்காயல் (மேன்மேலும்) மிகுகின்ற பசியோடும்.

குறிப்பு — மதமா - மதத்தையுடைய மாவென்வே யானையாயிற்று. தட - உரிச்சொல், "தடவுங்கயவு நளியும்பெருமை" என்பது தொல்காப்பியம். பிலனின் இதில் 'இன்' ஒப்புப்பொருளது. நின்றும் என்பதன்கண்ணுள்ள உம்மை விகாரத்தாற் றொக்கது (௪௰)

பன்னகாதிபர் பணாமணி பறித்து வைபகுத்
தென்ன விண்ணவர் விமானமிடையிட் டரவிடைத்
துன்னு கோளினொடு தாரகைதொடுத்த சூழணிச்-
சன்ன வீரமிடை மின்னுதட மார்பினொடுமே.

இ-ள் பன்னகாதிபர் - பாம்புகளுக்குத் தலைவர் (ஆகிய அஷ்டநாகங்)களினுடைய, பணா மணிபறித்து - படங்களிலுள்ள இரத்தினங்களைப் பிடுங்கிக்கொண்டுவந்து, அவை பகுத்தென்ன - அவ்விரத்தினங்களைப் பிரித்துப் பதித்தாற்போல, (அவ்விரத்தினங்களொடு), விண்ணவர் விமானம் - (திக்குப்பாலகராகிய) தேவர்களது விமானங்களை, அரவு இடை - (ராகுகேதுவென்னும்) பாம்பினுடலில், (தொ

கொக்கப்பட்டு), துன்னு - விளங்குகின்ற, கோளினொடு - (மற்றையேழு) கிரகங்களொடு, (கூடிய) தாரகை - நட்சத்திரங்களுக்கு, இடை - இடையே நடுவே அமைந்த, தொடுத்த - கட்டப்பட்ட, தழனி சன்னவீரம் - ஒலியினையுடைய வெற்றிமாலை, இடைமின்னு - (அணியப்பெற்று) நடுவேவிளங்குகின்ற, தடமார்பினொடும் - பரந்த மார்பினொடும்

குறிப்பு—பன்னகம் பத்+ந+கம், கால்களால் நடவாதது என்பது உறுப்புப்பொருள். எண்பெ பன்னகாதிபர் என்றது வாசுகி, அனந்தன், தக்ஷன், சங்கபாலன், குளிகன், பதுமன், மஹாபதுமன், கார்க்கோடகனென்னும் அஷ்டநாகங்களை, இவற்றைக் கடவுட்பாம்பெனவுஞ் சொல்லுப. இவை முறையே கிழக்கு முதல் எண்டிக்கில் பூமியைத் தாங்குவதன்றியே நடுவே சேஷனென்னும் நாகம் பூமியைத் தாங்குகின்றதும், இந்தவநாகமும் காசிபப்பிரமாவுக்கும் அவன் மனைவிகள் பதின்மூவருட் கத்துருவைக்கும் பிறந்தன. விண்ணவர் திக்குப்பாலகர், அவர் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானனென்ன இவர். விமானம் தேவரூர்தி. கோள் என்றது ஈண்டு கேதுவொழிந்த மற்றை எட்டுக்கிரகங்களை, அவையாவன, ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிருகற்பதி, சுக்கிரன், சனி, ராகு என்னுமிவை. தாரகையென்றது ஈண்டு அசுவினிமுதலிய இருபானேழு நக்ஷத்திரங்களை. விராதன் தனது வெற்றிவிளங்க அஷ்டநாகங்களை வென்று அவற்றின் மணிகளையும், திக்குப்பாலகர்களை வென்று, அதற்கறிகுறியாக அவர்கள் விமானங்களையும், கோளும் நாளும் தத்தநிலையிற் சரித்துத் தனக்கோர் எதமும்விளைக்கும் வலியும் அல்லவென்பதற்கறிகுறியாகக் கோள்களையும் அக்கோள்களொடுகூடிய நக்ஷத்திரங்களையும் கேதுவென்னும் பாம்பினுடலில் தொடுத்து மாலையாக அணிந்துகொண்டு வந்தானென்பது கருத்து. அரவு என்பதற்கு மலைப்பாம்பென்ப பொருள்கூறுவாருமுளர். அப்பாம்பிற்குக் கோள்முதலாயவற்றைத் தொடுத்தற்குத் தக்க உரம் இல்லையாகலான் அது பொருந்தாதெனக். இனி இக்கவிக்குப் பலபலவாப் பொருள்கூறுவர் அவையெல்லாம் இதிற் சிறவாமையுயத்துணர்க (கக)

பம்பு செக்கரெரி யொக்குமயிர் பக்கமெரியக்
கும்ப முற்றவுயர் நெற்றியின் விசித்த தொளிகுலா
மும்பருக்கரசன் மால்கரியி னோடை யெயிற்றின்
கிம்புரிப் பெரிய தோள்வளையொடுங் கிளரவே.

இ-ள். பம்பு - பரவிய, செக்கர் எரி - செவ்வானம் நெருப்பு, (என்னும் இவற்றை) ஒக்கும் - நிகர்க்கின்ற, மயிர் - (அவனது செம்பட்ட) மயிர்கள், பக்கம் எரிய - பக்கங்களில் விளங்காநிற்பவும், கும்பம் உற்ற - பானையையொத்த, உயர்நெற்றியின் - (தனது) உயர்ந்த நெற்றியிலே, விசித்து - கட்டப்பட்டு, ஒளிகுலாம் - ஒளிவீசுகின்ற, உம்பருக்கு அரசன் - தேவேந்திரனது, மால் - பெரிய, கரியின் ஓடை - (ஐராவதம் என்னும்) யானையினது நெற்றிப்பட்டமானது, எயிற்றின் - (அவ்யானையினது) தந்தங்களிற் கட்டிய, கிம்புரி - பூண்களாகிய, பெரிய தோள்வளையொடும் - பெரிய வாகு வலயங்களுடன், கிளர - விளங்காநிற்கவும்.

குறிப்பு—செக்கர் எரி செவ்வெண். இது உம்மைத்தொகையன்றாதலை "உம்மையெண்ணி னுருபுதொகல் வரையார்" என்னுந் தொல்காப்பியவிடையியற்

சூத்திரத்தின்கீழ் 'குன்றி கோபங் கொடிவிடுபவளம், ஒண்செங்காந்தளொக்கு நின்னிறம்' என்புழி வண்ணினங்கண் உருபுதொக்கதாலெனின்,—அற்றன்று செவ்வெண் தொகையின்றி நில்லாமையின் அவற்றை யென ஒருசொல் விரிக்கப்படும், விரிக்கவே, குன்றி முதலாயின எழுவாயாய் நின்றனவாமென்பது" என ஆசிரியர் சேனாவரையர் கூறுமாற்றானறிக. "உற்று—உவமவாசகம் 'செப்புற்ற கொங்கை' என்றார் பிறரும்" என "நாளுற்றநம்பி" என்னும் சிந்தாமணிப்பதிகச் செய்யுளின்கீழ் உரைகூறிப் போந்தார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். உம்பர்-இடவாகுபெயரென்பர். ஓடை யானை நெற்றிப்பட்டம், "பொன்னோடைப் புகரணிநுதல்" "ஒன்னார் 'யானையோடைப் பொன்கொண்டு", "நோன்பகட்டொளிதிகழோடைபொலிய" என்பன புறநானூற்றில், வருதல்காண்க. "தூர்வட்டவெண்டிசைகளைத் தனித்தனி சுமக்கும், பார வெட்டிணை டிரண்டினி னொன்று பாப்புரக்கப் பேர விட்டவ னுதலணியோடையிற் பிறழும், வீரபட்டிகைப்பட்டன விண்ணவா வெருவ" என வருஞ் செய்யுளானும் 'ஓடை' நெற்றிப்பட்டமேயாதலை யுணர்க, இதனையறியாதார் ஓடை முகபடாமென மயங்குவர். எயிற்றின "நெடுவேலோ டெயிற்றொடர்" என்னுஞ் சூத்திரத்து 'மிகவே' என்றதனான் வேற்றுமையின்கண் இரட்டாது வந்தது, சச்சவினைப்போக்கியுமாம் "கறைமிடறணியலு மணிந்தன் றக்கறை" என்பது புறநானூற்றிலும் வருதல்காண்க. வளை தொழிலாகுபெயர், வளையலென விகுதி புணர்ந்தும்வரும். (கஉ)

தங்கு திண்கரிய காளிமை தழைந்துதவழப்
பொங்கு வெங்கொடுமை யென்பது புழுங்கியெழமா
மங்கு பாதகம்விடங்கனல் வயங்கி நிமிரக்
கங்குல் பூசிவரு கின்றகலி காலமெனவே

இ—ள். தங்கு - (விராதன் உடலில்) பொருந்திய, திண் - வலிய, கரியகாளிமை - கறுப்புநிறமானது, தழைந்து தவழ - செழிப்பினையடைந்து விளங்கவும், (ஒளிவிட்டது), பொங்குவெங் கொடுமையென்பது - மிகுகின்ற வெவ்விய கொடுமையென்கிற தீக்குணமானது, புழுங்கி எழ - கொதித்துக் கிளம்புதலானும், மா மங்குபாதகம் - செல்வம் மங்கிப்போதற்குக் காரணமாகிய கொடிய பாவமானது, விடம் கனல் (இவை) வயங்கி நிமிர - விஷம் நெருப்பென்னும் இவற்றைப் போல் விளங்கி யோங்கும்படி, கங்குல்பூசிவருகின்ற - (தாமதகுணமாகிய) இருளைப் பூசிக்கொண்டு வருகின்ற, கலிகாலம் என - கலிகாலம் (ஆம் இவனது உருவம்) என்று சொல்லவும்.

குறிப்பு— காளிமை கறுப்பு. கரிய காளிமை சிறப்பினின் வந்தது, "ஒருபொருட் பன்மொழிசிறப்பினின் வழா" என்பது சூத்திரம், சிறப்பு - செவிக்குச் சொல்லின்பந்தோன்ற நிற்றல். இனி, சிறப்பென்றதற்குப் பொருளைச் சிறப்பித்தலென்பது பொருள் கூறுவாருமுளர் அச்சொற்கு அப்பொருளியையாமையானும் அக்காரணத்தால் வந்தனவேல் ஈண்டு ஒருபொருட் பன்மொழியாய் வரும் பெயர்கள் ஒருபொருட் பலபெயருள்அடங்குமாதலானும் 'மீமிசை' என்றல் மேலென்றே பொருளன்றி விசேடித்தற்கோர் சிறப்பின்மையானும், உண்டேல் அஃதிஃதென விதந்துகூறுவாராதலானும், "ஒருபொருளிருசொற் பிரிவிலவரையார்" என்னுந் தொல்காப்பிய வெச்சவியற் சூத்திரத்திற்குப் 'பொருள் வேறுபாடின்றி ஒருபொருண்மேல் வரும், இரண்டுசொற் பிரிவின்றித் தொடர்ந்துவரின், அவற்றைக் கடி

யார்' என வுரைகூறி 'சிவந்தோங்குபெருமலை.' எனவும், 'துறுகண்மீமிசையுறுகண்' எனவும் ஆசிரியர் சேனாவரையர் உதாரணங்காட்டினா ராதலானும் அது பொருளன்றென மறுக்க 'மாமங்கு' என்பதனைக் கலிகாலத்துக்கு அடையாக்கிப், பெருமைகுறைந்தவென்பப் பொருள்கோடலுமாம். மங்கு மங்குலென்பதன் விகாரம். தாமதகுணமேலிட்டிருத்தலின் 'மங்குபூசிவருகின்ற' என்றார். கலிகாலத்தின் நிறத்தைக் கருமையாகக்கூறுதல் கவிமரபாத லுய்த்துணர்க. கரியநிறமுந் தீய செய்கையுமுடைய இவ்வரக்கனுக்கு, அஞ்ஞானமும் கொடியபாவமும் மேலிட்டிருக்கிற கலிகாலத்தை உவமித்தார். 'காளிமை தவழ, மங்குபூசி' எனக்கிடந்த சொல்லாற்றலான் இராக்கதரூபமும் கலிதோஷமும், கந்தருவனுக்குங் காலத்துக்கும் இடையே வந்துற்றவெனவும், இவை எம்பெருமான் திருவவதாரத்தில் நிவிர்த்தியடைய முன்னைய நிலைமைக்கூடுமெனவும் பொருள்கொள்ள நிற்குமாற்றிக ()

செற்ற வாளுழுவை வன்செறியதட் டிருக்குறச்
சுற்றி வாரண வுரித்தொகுதி நீவிதொடரக்
கொற்ற மேவுதிசை யானையின் மணிக்குலமுடைக்
கற்றை மாசுணம் விரித்துவரி கச்சொளிரவே

இ - ள். செற்ற - (தான்) கொன்ற, வாள் உழுவை - வாள்போலும் வரிகளையுடைய புலிகளினது, வல்செறிஅதள் - வலிய நெருங்கியதோல்கள், திருக்கு உற - அரையின்கண் ஆடையாக வளைந்திருக்குமாறும், (செற்ற) வாரணம் உரி தொகுதி நீவி தொடர சுற்றி - தான்கொன்றயானைகளினது தோலின்கூட்டத்தை அங்கவஸ்திரமாகப் பொருந்துமாறும் உடுத்துக்கொண்டு, கொற்றம் மேவு திசையானையின் மணி குலம் உடை - வெற்றிபொருந்திய திக்கயங்களின் மணிக்கூட்டத்தைச் சதங்கைக்கொன்றும் உறுப்பாகக்கொண்ட, மாசுணம் கற்றைவிரித்து வரிகச்சு ஒளிர - மலைப்பாம்புகள் பலவற்றினைப் பிணித்தகயிற்றினை, விரித்துக்கட்டிய இடைக்கச்சு விளங்கவும்

குறிப்பு — 'செற்ற' என்பது வாரணத்தொடுங் கூட்டியுரைக்கப்பட்டது. செற்றம் கோபமுமாம். வாள் உழுவை - வாள்போலும் வரியினையுடைய உழுவை. வாள் - உவமவாகுபெயர், "வாளரிவேங்கை" யென்றார் பிறரும். இனி, 'செற்ற வாள் உழுவை' யென்பதற்கு மற்றைப்பிராணிகளைக்கொன்ற நகங்களாகிய வாளினையுடைய உழுவையுமாம். "குறில்செறியா லள" என்னும் சூத்திரவிதிப்பற்றி 'அதட்டிருக்குற' என்றுகூறற்பாலது 'அகட்டிருக்குற' என நின்றது சந்தவின்பநோக்கியெனக். உரி முதனிலைத்தொழிலாகுபெயர், செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்டதெனினுமாம். இவ்வரக்கன் புலித்தோலையரைக்கசைத்தும், யானைத்தோலை மேற்போர்த்தும், பாம்பைக்கச்சாகவீக்கியும், நிணமுண்ட சூலமேந்தியும் காலருத்திரன்போல விளங்கினனென்பதாம். (௧௪)

செங்க ணங்கவர வின்பொருவில் செம்மணிவிராய்
வெங்க ணங்கவல யங்களும் விலங்கவிரவிச்
சங்க ணங்கிய சலஞ்சல மலம்புதவளக்
சங்க ணங்களு மிலங்கியகரம் பிறழவே.

இ - ள். செங்கண் அங்கம் அரவின் - சிவந்தகண்களையும் (நீண்ட) உடலினையுமுடைய பாம்புகளின், பொருவு இல் - ஒப்பில்லாத, செம்மணிவிராய் -

வெந்த மாணிக்கங்கள் இடையிடையேவைத்துப் பதிக்கப்பட்டு, வெங்கண் அங்க வலயங்களும் விலங்க - வெவ்விய இடங்களையுடைய அங்கத்திலே அணியப்படுகின்ற வளைகளும் (ஒளியினை) வீசாநிற்பவும், சங்கு - கூட்டமாகிய, அணங்கிய சலஞ்சலம் - அழகிய வலம்புரியாயிரஞ்சூழ்ந்த சலஞ்சலமென்னுஞ் சங்குகள், விரவி அலம்பு - (ஒன்றுடனொன்று) தாக்கி ஒலிசெய்கின்ற, தவளம் கங்கணங்களும் இலங்கிய கரம் - வெண்மைபொருந்திய கடகங்களும் விளங்குகின்ற கைகள், பிறழ - (வீசுந்தோறும்) ஒளிசெய்யாநிற்பவும்

குறிப்பு — அரவுக்குச் செவியும் பாதமும் நிரலே கண்ணும் அங்கமுமாக இருத்தலின் 'செங்கண்ணங்கவரவு' என்று விசேடித்துக் கூறினார், கட்செவி, பன்னகம் என்பனகண்டு தெளிக. 'விலங்க' என்பதற்கு விளங்கவென்று பொருள்கூறுமிடத்து, லகர ளகரப் போலியென்றுரைக்க. இனி, 'சங்கு அணங்கிய' என்பதற்கு வலம்புரிச்சங்குகள் வருந்தப்பெற்ற, என்னலுமாம். (கரு)

மூன்று வெள்ளிமலை பொன்னின்மலை யொடுமுரணப்
பந்து மூந்துகழல் பாடுபட வூடுபடர்வோன்
வந்து மண்ணிலிடை யோனெனினும் வானினிமையோர்
சிந்தை யுள்ளும்விழி யுள்ளுமுள னென்றதிறலோன்.

இ-ள். மூன்று வெள்ளிமலை பொன்னின்மலையோடு முரண - (மலைகளுள்) முற்படுகின்ற கைலையும் மகாமேருவும் ஒன்றோடொன்று மலைந்து மோதும்படி, (அவற்றை), பந்து மூந்து கழல் - பந்துகளாக முன்னே தள்ளவல்ல கால்கள், பாடுபட - பெருமையை யடைய, ஊடு படர்வோன் - (அவற்றின்) இடையே செல்பவன், வந்து மண்ணிடையோன் எனினும் - பூமியில் வந்து சஞ்சரிப்பவனாயினும், வானின் இமையோர் - தேவலோகத்திலிருக்கிற தேவர்களது, சிந்தையுள்ளும் - மனத்தினிடத்தும், விழியுள்ளும் - கண்களினிடத்தும், உளன் என்ற திறலோன் - உள்ளவனென்று சொல்லப்படுகிற வலிமையையுடையவன்.

குறிப்பு — சிவபிரான் இருக்குமிடமாதலால் 'மூன்று வெள்ளிமலை' என்றார். 'பொன்னின்மலை' என்னுமிடத்து 'இன்' என்பது தவிர் வழிவந்த சாரியை இது வேண்டாவழிச்சாரியை யென்றும், அல்வழிச் சாரியை யென்றும் பெயர்பெறும். 'கழல்'—தானியாகுபெயர், இனி, வெள்ளிமலையும் பொன்மலையும் (மாறுபட்டு ஆடப்பெறும்) பந்து கழற்காய் இவற்றின் தன்மையை யடையவென்று கூறினும் பொருந்தும். இமையோர் இமையையுடையவர், இஃது இமைத்தலில்லாத தேவரை எதிர்மறையிலக்கணையாற் குறித்தது, அழுக்காறு, நல்குரவு என்பதுபோல. இனி, எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்டதெனினும் பொருந்தும். இவ்வரக்கனிடத்தேயுள்ள அச்சத்தால் தேவர்கள் இவனை எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பதாலும், அவர்கள் கண்களுக்கு முன்னர் அவ்வச்சத்தால் அவன் உருவங்காணப்படுதலாலும் 'இமையோர் சிந்தையுள்ளும் விழியுள்ளுமுளன்' என்றார். (கசு)

பூதமத்தனையு மோர்வடிவு கொண்டுபுதிதென்
றோத வொத்தவுரு வத்தனுரு மொத்தகுரலன்
காதலித்தயனளித்தகடை யிட்டகணிதப்
பாதலக்கமத வெற்பிடை படைத்தவலியான்.

இ-ள். பூதம் ஐந்தனையும் - பஞ்சபூதங்களையும், ஓர் வடிவு கொண்டு - ஒரே உருவத்தையெடுத்து, புதிது என்று - (இவ்வுருவம்) புதுமையது என்று, ஓத - சொல்லுதற்கு, ஒத்த - பொருந்திய, உருவத்தன் - வடிவத்தையுடையவன், உரும் ஒத்த குரலன் - இடியையொத்த குரலினையுடையவன், அயன் - பிரமதேவன், காதலித்து - (தான்செய்த தவத்திறத்தால்) மகிழ்ந்து, அளித்த - கொடுத்த, பாதம் கணிதம் - கால் என்னுங் கணக்கை, கடை இட்ட - கடைசியிலுவைத்த, லக்ஷம் மதவெற்பு - லக்ஷம் மதயானைகளை, இடைபடைத்த - தம்மிடத்தே கொண்ட, வலியான் - வலிமையையுடையவன்.

குறிப்பு—பஞ்சபூதமாவன நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பனவாம். இவற்றை வடநூலார் முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்பர். 'ஐந்தனையும்' உம்மை முற்றும்மை. 'ஆனன்' என்னும் வடசொல் அயன் எனச் சிதைந்துவந்தது, ஸ்ரீமகாவிஷ்ணுவினிடத்தினின்றுந் தோன்றியவனென்பது உற்பப்பொருள். கடையிட்டகணிதப் பாதலக்ஷமெனவே ஒன்றேகால் லக்ஷம் அஃதாவது நூற்றிருபத்தையாயிரம், "அரையிட்ட முக்கோடி" யென்பாரேனும் 'மதவெற்பு' எனவே யானையாயிற்று உவமவாகுபெயர். (கஎ)

சார வந்தயல் விலங்கின மரங்கடரையிற்
பேர வன்கிரி பிளந்துக வளர்ந்திகல்பெற்ற
வீர வெஞ்சிலையி னேறினர் விராதனென்னுமக்
கோர வெங்கணோ ருருமெனக் கொடுந்தொழிலினான்

இ-ள். விராதன் என்னும் - விராதனென்கின்ற, அ - அந்த, கோரம் - அச்சத்தையுண்டாக்குகின்ற, வெங்கண் - கொடிய கண்களையுடைய, உருமெனும் - இடிபோன்ற, கொடுந்தொழிலினான் - கொடிய செய்கையையுடையவன், சாரவந்து - கிட்டவந்து, மரங்கள் - விருக்ஷங்கள், அயல் விலங்கின - பக்கத்தே விலகினவாகி, தரையில்பேர - பூமியினின்றும் பெயர்ந்துபோகவும், வன்கிரி - வலியமலைகள், பிளந்து உக - பிளவுபட்டுப் பொடியாகவும், வளர்ந்து - வளர்ச்சியையுடையனாகி, இகல்பெற்ற - போரைப்பெற்ற, வீரம் - வீரத்தன்மை வாய்ந்த, வெஞ்சிலையினேறிரை - வெவ்விய வில்லினையுடைய ஸ்ரீராமலக்குமணர்களொடு முனைந்தான்.

குறிப்பு - விலங்கின முற்றெச்சம். இனி, இனவிலங்கும், இனமரங்களுந் தரையிற் பேரக் கிரிபிளந்துக என்றுமாம். 'விலங்கினம்' என்னும் பாடத்திற்குக் கொடுந்தொழிலினை சாரவந்து அயல் விலங்கினமெனக் கூட்டிமுடிக்க. தரை எல்லாப்பொருள்களையுந் தாங்குதல், ஆதாரமைதானமாயிற்று. பேர பெயரவென்பதன் மரூஉ. உகவென்னும் செயவெனெச்சம் காரியப்பொருட்டாகலின் எதிர்காலம். 'இகல்பெற்ற'—"இயல்பின் விகாரமுடை" என்னும் சூத்திரவிதிப்படி இயல்பாய் நின்றமையால் எதிர்த்துப் போர்செய்தற்கேற்ற வீரர்களின்மையின் 'இகல்பெற்ற வீரவெஞ்சிலையினேறினர்' என்றும், 'சேனையினைத் தினனுகின்ற சோமபீனைந் துடைக்கப்பட்டனரென" என்பாரேனும் வெஞ்சிலை விருப்பத்தக்க வில்லென்றுமாம். "வெம்மை வேண்டல்"—இது தொல்காப்பியம். "வாகைசூடிய சிலையிராமன்" என்பதற்குத் திருவிடமருதூர் பாடிய கர்த்தராகிய சிவஞானயோகிகள் செய்த வுரையை இவ்விடத்து விசாரித்தறியத்தக்கது. (கஅ)

நிலைநின்றுமென வந்தவோர் முண்டநெடுவெண்
பலனும் வல்லெயிறு மின்னுபகு வாயமுழைத்திறந்

அல்லி புல்லுமல ரன்னமனை யாளையொருகைச்
சொல்லு மெல்லையின் முகந்துயர் விசும்புதொடர.

இ - ள். நிணம் உண்ட - மாமிசத்தைப்புசித்த, நெடுவெண்பல்லும் - நீண்ட வெள்ளியபற்களும், வல்லெயிறும் - வலிய வக்கிரதந்தங்களும், மின்னு - விளங்குகின்ற முழைப்பகுவாய் - மலைக்குகைபோன்ற பிளந்தவாயினை, திறந்து - அங்காந்து, நில்லும் நில்லும் என வந்து - (ஸ்ரீராமலக்ஷ்மணரைநோக்கி) நில்லுங்கள் நில்லுங்கள் என்று சொல்லிக்கொண்டேவந்து, அல்லிபுல்லும் மலர் அன்னம் அனையாளை - அகவிதழ்கள் செறிந்த தாமரைப்பூவில் வீற்றிருக்கும் அன்னப்பேடைபோன்ற சீதாபிராட்டியை, சொல்லும் எல்லையில் - ஒருவார்த்தை சொல்லுமளவில், ஒருகை - ஒருகையினாலே, முகந்து - வாரியெடுத்துக்கொண்டு, உயர்விசும்புதொடர - உயர்ந்த ஆகாயவழியாய்ச் செல்லுதலும்,

குறிப்பு — நில்லும் நில்லும் - உம்மீற்று ஏவற்பன்மை வினைமுற்று, இவ்வடுக்கு வெகுளிப்பொருளது தேவருந் தன்பெயர்கேட்டுத் திகிலடைந்து நிற்கவும், இம்மானிடர்கள் சற்றும் பயமில்லாமற் செல்கின்றனரே என்பதுபற்றி உண்டான வெகுளியாம் 'நிணமுண்ட நெடுவெண்பல்லு' மெனக்கூறிப்பின்னரும் 'வல்லெயிறு' மெனக்கூறியது, வலிய வக்கிரதந்தங்களைப் பெற்றவைத்தற்கென வறிக. 'மின்னு பகுவாய்' வினைத்தொகை, "மூன்றுருபெண் வினைத்தொகை" என்னும் விதிப்பற்றி யியல்பாயிற்று அல்லி - அகவிதழ் புல்லி - புறவிதழ் எல்லாமலர்களினுஞ் சிறப்புடைத்தாதல்பற்றித் தாமரையே ஈண்டுக்கொள்ளப்பட்டது. "பூவிற்குத் தாமரையே," "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே," "பூவினிற் கமலம்போலும்," என்பன காண்க. நடையும், மென்மையும் அழகும், குற்றத்தைநீக்கிக் குணத்தைக் கோடலு முதலிய சாமானியதர்மங்களால் அன்னம் பிராட்டிக் குவமைகூறப்பட்டது இனி, 'அல்லிபுல்லு மலரன்னமனையாள்' என்பதற்கு இருணிறத்திராமபிரான் றழுவும் மெல்லியதன்மையிற் றாமரையைப்போத்த மனைவியாகிய சீதாபிராட்டியை என்ப பொருள்கோடலுமொன்று 'அல்லி' என்பதில் இகரம் ஆண்பாற் படர்க்கைவிகுதி, வில்லி, மாணி என்பதிற்போல (௧௩)

காளை மைந்தரது கண்டுகதம் வந்துகதுவத்
தோளின் வெய்யவிலை யிடங்கொடு தொடர்ந்துசுடர்வாய்
வாளி தங்கிய வலங்கையவர் வஞ்சனையடா
மீளு கெங்கக றியென்பது விளம்பவவனும்

இ - ள் காளைமைந்தர் - இளவெருதுபோன்ற ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், அது கண்டு - அங்ஙனம் அவன் பிராட்டியைத் தூக்கிச் செல்லாநிற்பதைப்பார்த்து, கதம் வந்து கதுவ - கோபம்பிறந்துவளர, தோளின் வெய்யவில் - தோளின்மேல்தரித்திருந்த வெவ்வியவில்லை, இடங்கொடு - இடதுகையிற் பிடித்துக்கொண்டு, சுடர்வாய் - தீயுமிழும் வாயினையுடைய, வாளிதங்கிய - பாணந்தங்கப்பெற்ற, வலங்கையவர் - வலக்கையையுடையவராகி, தொடர்ந்து - அவ்வரக்கனைப் பின்றொடர்ந்து, [யுத்தசன்னத்தராய்], வஞ்சனையடா! - வஞ்சகத்தன்மையையுடைய அடா பேதையே! எங்கு அகறி - (நீ) எங்கே செல்கின்றாய்? மீளுக - திரும்புவாயாக, என்பது - என்கிறவார்த்தையை, விளம்ப - சொல்ல, அவனும் - அந்த இராக்கதனும்

குறிப்பு — அழகு, கம்பீரம், வன்மை, நடைமுதலிய குணவிசேடங்களுடைமையால் காளைமைந்தர்க்கு உவமையாயிற்று மைந்து இளமை, அழகு, வன்மை

களைக் குறிப்பதோர் பண்பு. இடம் - இடத்தைக்கு ஆகுபெயர். கொடு கொண்டு என்பதின் விகாரம். "மெல்லெழுத்துறழு மொழியுமாருளவே" என்னும் தொல்காப்பியப் புள்ளிமயங்கியற் சூத்திரவிதிப்படி 'வலங்கையவா' என்நின்றது. "செல்வழியறிதல் வழக்கத்தான" என்று கூறினமையிற் சண்பகங்கோட்டென முடித்ததூஉம் பிறவும் பொதுவிதியன்றிச் சிறப்பின்றென உணர்க. அடா இழிவு கண்ணிய ஆண்பாலவிளி 'மீளுக' என்பதின்கரம் விகாரத்தாற் றொக்கது (௨௦)

ஆதிநான்முகன் வரத்தினென்ற னாவியகலே
னேதி யாவதுவு மின்றியுல கியாவுமிகலிற்
சாதி யாதனவு மில்லையுயிர் தந்தனனடா
போதிர் மாதிவளை யுந்தியினி தென்றுபுகல்

இ - ள் ஆதி நான்முகன் வரத்தின் - முதன்மையாகிய பிரமதேவன் கொடுத்த வரத்தினாலே, எனது ஆவி அகலேன் - என்னுயிர் நீங்கப்பெறேன், உலகு யாவும் - எல்லாவுலகத்தவரும், இகலின் உம் - எதிர்த்துப்போர்செய்தாலும், ஏதியாவதுவும் இன்றி - ஆயுத மொன்றுமில்லாமலே, சாதியாதன இல்லை - வெல்லக்கூடாதன (எவையும்) இல்லை, அடா—'உயிர் தந்தனனே - (யான் உங்களுக்கு) உயிர்ப்பிச்சை கொடுத்தேன், மாது இவளை உந்தி - இப்பெண்மணியை (என்னிடத்தில்) விட்டு விட்டு, இனிது போதிர் என்று புகல் - சுகமாய்ப்போய்ச் சேருமின் என்று சொல்.

குறிப்பு—நான்முகன் நான்கு முகங்களையுடையவன், என்றாவி ஆறனுருபு உடைமையும் உடையதும் வேறாகாத ஒற்றுமைக் கிழமைப்பொருளில் வந்தது. யாது என்றபாலது 'யாவது' என விரித்தல் விகாரம்பெற்றது 'யாவதும்' என்னின்றது, "உயிர்வரினுக் குறள்மெய்விட் டோடும்" என்னுஞ் சூத்திரத்துக் கெடுமென்னாது ஓடும் என்ற இலேசானென்க. உலகு இடவாகுபெயர். உம்மை இகலின் என்பதொடு கூட்டியுரைத்தாம். 'தந்தனன்' இதில் 'அன்' என்னுந் தன்மையொருமைவிகுதி புதியன்புகுதல். 'அடா போதிர்' என்பது ஒருமைப் பன்மைமயக்கம் அல்லதூஉம், திரிகரணத்திலும் விகாரமுடையானென்பார் காயவிகாரத்தையும் மனோவிகாரத்தையு முற்கூறி வாக்குவிகாரத்தையும் அடைவே கூறுவான் இன்னணங் கூறினானென்னலுமாம். ஆசைப் பொருண்மையுணர்த்தும் மாதர் என்னும் உரிச்சொல் ஈண்டு அர்விகுதிகுன்றி ஆகுபெயராய்ப் பெண்ணினை உணர்த்திற்று.

இனி, இச்செய்யுளுக்கு, ஏதியா- ஆயுதபாணியே! ஆதி நான்முகன் வரத்தின் பிரமதேவன் கொடுத்தவரத்தினாலே, எனது ஆவி அகலேன் - எனது உயிர் நீங்கப்பெறேன், (நீ), வதுவும் - மனைவியும், உலகு யாவும்-உலகவின்பமெதுவும், இன்றி - இல்லாமல், இகலின் சாதியா - யுத்தத்திற் சாகவாபோகிறாய்? தனம் - அற்பமாகிய, உம் - உங்களுடைய, இல்லை உயிர் - (என்னைக்கண்டாலும்) இல்லையென்றன உயிரை, தந்தனன் - கொடுத்தேன், அடா—, மாது இவளை உந்தி இனிது போதிர் என்றுபுகல்-இப்பெண்மணியை (என்னிடத்தில்) விட்டுவிட்டுச் சுகமாய்ப்போய்ச் சேருமின் என்று சொல், என்பப் பொருள்கோடலுமாம்.

குறிப்பு—மானிடனாகிய நீ ஆதியங்கடவுளாலே அழிவிலா ஆயுட்பெற்ற என்னோடு போர்செய்யவல்லான்போல ஆயுதமுங் கைப்பிடித்தனையே என்பான் அவ்விகழ்ச்சிதோன்ற 'ஏதியா' என்றான். உலகம் இன்பத்துக்கு ஆகுபெயர். "அருளில

லாக் கவ்வுலகமில்லை பொருளில்லாக் கிவ்வுலகமில்லாகியாங்கு" என்புழிப்போல. தன்னம் அற்பம், இங்ஙனே, இடைக்குறையாய்த் 'தனம்' என்னின்றது மாத்ரக்குமணு ளனுக்கலானுந் தலைவனுக்கலானும் ஸ்ரீராமபிரானை முன்னர்க்கூறிப் பின் இளையபெருமாளையுஞ் சேர்க்கூறலின், ஒருமையும் பன்மையும் விரவிவந்தன. ஸ்திரீரத்தினத்தைக் கொடுத்திராகலின் உங்களைக் கொன்றிலேன் என்பான் 'உயிர்தந்தனன்' எனவும், 'இனிதுபோதிர்' எனவுங் கூறினன். "பதவிய மனிதரேனும் பைந்தொடி நின்னைத் தந்த, வுதவியை யுணர் நோக்கி னுயிர்க்கொலைக் குரிய ரல்லர்" எனப் பின்னுமோர் செய்யுளில் விராதன் கூறியது காண்க.

இனியோரர்த்தம் — ஆதி - முதல்வனே! நான் - யான், முன்னம் - (உங்களுக்கு) முன்னே, வரத்தின் - வருதலினாலே, என்து ஆவி அகலேன் - என்து உயிர் நீடித்திருக்கப் பெற்றேன், உலகு யாவும் - யாவரிடத்தும், ஏதுயாவதுவும் இன்றி - காரணமொன்று மில்லாமல், இக்கலின் சாதியாதனவும் இல்லை - பகைத்திறங்கொண்டு செய்யாத அக்கிருத்தியங்களேயில்லை, அடா - (இவைகள் எனக்கு) அடாதனவேயாம், உயிர் தந்தனன் - (என்) உயிரைக் கொடுத்து விடுகின்றேன், (என் உயிரை வாங்கிப் பின்பு), மாது இவளை உந்தி இனிது போதிர் என்று புகல - இப்பெண்மணியை அழைத்துக்கொண்டு சுகமாய்ப் போய்ச் சேருமின் என்றுகூற.

குறிப்பு — ஆதி அண்மைவிளி. எம்பெருமானை அடுத்திருந்து வாழவேண்டுவான் ஆதியின் அடியில் தன்னை வைத்து ஆதி நான் என்றான் "அஹம்பிரம்மாஸ்மி" என்னும் மாவாக்கியப் பொருள்கொண்டு 'ஆதி நான்' என்றுமென்னலுமாம், இப்பொருளில் 'ஆதி' ஆகின்றவனே என்த் தொழிற்பெயராம். இங்ஙனம் ஞானபரமாகப் பொருள்செய்யுங்கால் 'என்தாவியகலேன்' என்பதற்கு, என்து என்கிற புறப்பற்றும், ஆவி என்கிற அகப்பற்றும் நீடித்திருக்கப் பெற்றேன் எனவும், 'உயிர்தந்தனன் அடா' என்பதற்கு, ஆத்ம சமர்ப்பணஞ் செய்துவிட்டேன் (ஆகலின் காரணமின்றி யாவர்மாட்டும் நினைந்து செய்த தீயசெய்கைகள் இனி என்னைவந்து) சாரா வெனவும் பொருள்கொள்க. இனி, வரத்தின் என்தாவி அகலேன் எனக் கண்ணழித்து, வருதலின் என்னபயன் கடந்து அப்புறஞ் செல்லகில்லேன் என்றும், இடையிரண்டடிக்கட்குச் சருவலோகங்களையும் ஆயுதமின்றியே யுத்தத்தில் வென்றவனாயிருந்தும் (இப்போது என்) னுயிரை உங்களுக்குக் கொடுக்கின்றேன் (தீயசெய்கைகள் செய்வார்க்கு வெற்றியென்றும் வந்து) சேரா என்றும் பொருள்கொள்ளலுமாம், இங்ஙனே, "ஈசல்குலனுடையார் கண்ணேயுள்" என் புழிப்போல அடா என்று பன்மை வினைகொண்டது. முன்னம், முன்னமென்பதின் போலி, துணிபுபற்றி 'உயிர்தந்தனன்' என இறந்தகாலத்தாற் கூறினனென்க. பின்னும் பலவாறு பொருளுரைக்கப்படுமே விரிவஞ்சி விடுத்தாம். (உக)

வீரனுஞ் சிறிது வெண்முறுவல் வெண்ணிலவுகப்
போர் திறந்தில னிவனறன் பொறைபுமாறனுங்
தீருமென்றெஞ்சியென் னெஞ்சினுறு சிந்தைதெரியாப்
பார வெஞ்சிலையி னொன்னொலி படைத்தபொழுதே.

இ - ள். வீரனும் - ஸ்ரீராமசந்திரனும், வெண்முறுவல் வெண்ணிலவு - (தனது) வெண்மையாகிய பற்களால் வெள்ளிய நிலவினை, சிறிது உக - சிறிது வீசும்படி புன்னகைபுரிந்து, போர் அறிந்திலன் - (இவன்) போர் செய்முறை அறிந்தவன் அல்லன், இவன் தனது பொறைபும் மாறனும் - இவனுடைய பொலிவும் வலிமையும், எஞ்சி தீரும் என - குறைவுபட்டழிந்துவிடுமே என்று, நெஞ்சின் உறு சிந்தை தெரியா-

(தன்) மனத்தினிடத்தே பொருந்திய ஆலோசனையினால் அறிந்து, பாரம் வெஞ்சிலையின் - கனத்த வெவ்விய (கோதண்டமென்னும்) வில்லினது, நாண் ஒலிபடைத்த பொழுதே - நாணோசையை விளைத்த அக்கணத்திலேயே.

குறிப்பு — புன்னகை புரியும்பொழுது வெளியே தோன்றும் பற்களின் ஒளி நிலவுபோலிருத்தலின் 'எறித்த வெண்ணிலவுக' என்றார். 'வெண்ணிலவுக' என்றமையால் நிகழ்ந்த உருவகத்தினைப் பூர்த்திசெய்ய வீரனை ஸ்ரீராமசந்திரனென்று கூறினும் (௨௨)

இலைகொள் வேலட லிராமனெழு மேகவுருவன்
சிலைகொ ணாணெடிய கோதையொலி யேறுதிரைநீர்
மலைக ணீடுதல நாகபில வானமுதலா
முலக மேழுமுரு மேறென வொலித்துறவே

இ-ள். எழுமேகம் உருவன் - (கருக்கொண்டு) எழுகின்ற மேகநிறமுடையனாகிய, இலைகொள்வேல் - அரசிலைபோலுந் தலைவடிவுகொண்ட வேலினையும், அடல் - வலிமையையுமுடைய, இராமன் - ஸ்ரீராமபிரானது, சிலைகொள் - கோதண்டத்தினைக் கண் ஏறிட்ட, நாண்நெடியகோதை ஒலி ஏறு - நாணாகிய நீண்ட கயிற்றினது பேரொலியானது, திரை நீர்மலைகள் நீடுதலம் - அலைகளையுடைய சமுத்திரம் புடைசூழ்ந்ததும் மலைகள் உயர்ந்திருக்கப்பெற்றதுமாகிய பூலோகமும், நாகபிலம் வானம் முதல் ஆம் உலகம் ஏழும் - சர்ப்பசாதியார் வசிக்குமிடமாகிய பாதாளலோகமும் சுவர்க்கலோகமும் முதலாகிய ஏழுலகங்களிலும், உருமேறு என - இடியேறுபோல, ஒலித்து உற - ஒலிசெய்து முழங்காநிற்ப.

குறிப்பு — இலை வெற்றிலையுமாம். வேல் வெல்வது, இது முதனிலை நீண்டு கருவிப்பொருள் விகுதிபுணர்ந்து கெட்டுநின்ற தொழிலாகுபெயராய்க் காரணக்குறியாய் நின்றது. "வென்றவாளின் மண்ணோடேயா" என்றார் பிறரும், "மாற்றார் சுட்டிய வாண்மங்கலமும்" என்று பாடாண்டிணையினுங் கூறியவாளின் வாகைத்திணையிற் கூறாது "பெரும்பகை தாங்கும் வேலினானும்" என்று வேலிற்கே வாகைகூறியது, காற்றொழில் பூண்டமாயோன் ஐம்படையும் போலாது அழித்தற்றொழிலோகத்தே யுரித்தாய முக்கட்கடவுள் முருகனுங் கூற்றுமேந்தி வெற்றிபெறுதற்குச் சிறந்ததென்பது பற்றியென்பர் இனையுட கூறினமையால் ஈண்டும் 'இலைகொள் வேலட விராமன்' என்றார். அடல் தொழிலாகுபெயர். இராமன் - யாவர் மனத்தையும் ரமிப்பிக்கச்செய்பவன் [இன்பமெய்தும்படி செய்பவன்] என்பது பொருள். மேகம் மழைபொழிதல்போலச் சரமழை பொழியும் ஆற்றலுடையான் என்பது விளங்க, 'எழுமேகவுருவன்' என்றார். இனி, எழுமேக உரு வல்சிலை எனப் பிரித்துச் சப்தமேகங்களினுருவினைக்கொண்ட வலியசிலை என்றுமாம். "சுற்றணிகொடுஞ்சிலை மேகந் தாவிய" எனச் சிந்தாமணியிலும் சிலையை மேகமென்பது புனைந்துரைத்தது காண்க. அருகு நாணோசையின் 'நாணெடியகோதை' என்றார். இலக்கணை வழக்குப்பற்றி 'உருமேறு' என்றாற்போல 'ஒலியேறு' என்றார். இனி, 'ஏறுதிரை' எனக்கொண்டு எறிகின்ற அலைகளென்றுமாம். 'நாகர்' என்பதை வானத்தோடுங் கூட்டி அதற்குத்தேவர் என்று பொருள் கூறுதலுமியையும். 'தலம் நாக பிலம் வானம்' என்னும் மூவுலகங்களையுங் கூறி மற்றையுலகங்களை 'முதலாம்' என்ற சொல்லாற்பெறவைத்தார். உலக மேழாவன, பூலோகம், புவலோகம், சுவலோகம், ஜனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்னும் மேலுலகேழும், அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளமென்னுங் கீழுலகேழுமாம். (௨௩)

வஞ்சக் கொடிய பூசைநெடு வாயின்மறுகும்
பஞ்சரக் கிளியெ னக்கதறு பாவையைவிடா
நெஞ்சு நெக்கின னெனச்சிறிது நின்றுநினையா
அஞ்ச னக்கிரிய னானெதி ரரக்கனழலா.

இ-ள். அரக்கன் - அவ்விராதன், வஞ்சக்கொடியபூசை நெடுவாயின் மறுகும் - வஞ்சனைத்தன்மையையுடைய கொடியபூனையினது பெரிய வாயின்கண்ணே (அகப்பட்டு) மனங்கலங்குகின்ற, பஞ்சரக்கிளி எனக் கதறுபாவையை விடா - கூட்டின்கண் இருந்த கிளியைப்போல வாய்விட்டுக் கதறியழுகின்ற சீதாபிராட்டியைத் (தரையின்கண்) விடுத்து, நெஞ்சு நெக்கினன் என - மனம் நெகிழ்ந்தவனைப்போல, சிறிது நின்று நினையா - சற்றே நின்று ஆலோசனைசெய்து, அஞ்சனம் கிரி அனான் எதிர் அழலா - மைம்மலைபோன்ற ஸ்ரீராமபிரானுக்கு முன்னே (வந்துநின்று) கோபித்து.

குறிப்பு — பூனை பிறர்பிடியாவாறு பதுங்கியிருந்து சமையங்கண்டு கிளியைக் கவர்ந்துகொண்டு செல்லுதல்போல விராதனும் பிராட்டியைக் கள்ளத்தனமாகக் கவர்ந்துகொண்டு ஆகாயமார்க்கமாகச் செல்லத் தலைப்பட்டானென்று உவமையை விரித்துப் பொருள்கூறுக. அருமைபெருமை பாராட்டிப் பாலூட்டி இன்மொழிபயிற்றிக் கூட்டிலடைத்து ஆதரித்து வளர்க்கப்பட்டுவரும் கிளி தன்னினத்தைநாடாது ஆதரிப்போனை மகிழ்வித்துத் தானும் மகிழ்வுடன் அவன்மாட்டே யிருத்தலேவிழையு மாதலின் அதுபோன்று பிராட்டியும் தன் சுற்றத்தாரை முற்றும் மறந்து தன்நாயகனில்லத்தின்கண் வாழ்க்கைப்பட்டிருந்து தன் நாயகனுடைய அன்புடன் ஆதரிக்கப்பெற்றுத் தன் நாயகனை மகிழ்வித்துத் தானும் மகிழ்ந்து தன் நாயகனைப் பிரியாதிருந்து வாழ்பவள் என்பது விளங்கப் பிராட்டிக்குப் பஞ்சரக்கிளியை உவமைகூறினார். பாவை, சித்திரப்பதுமை, அப்போது மையலுற்றுச் சத்தியற்று நிற்றலும், கம்பீரத் தோற்றமும், வலிமையும்பற்றி 'அஞ்சனக்கிரி' ஸ்ரீராமபிரானுக்கு உவமையாயிற்று. அஞ்சனமென்னும் மைம்மலை பூமியிலின்மையால் அஃது இல்பொருளுவமை. 'அனான்' என்பதில் 'அன்ன' என் இடைக்குறைப்பாயின்றது. அஞ்சனம் சிறிதுகொண்டவளவில் உலகின் மறைந்துகிடக்கும் நிதியெல்லாந் தெரியுமென்னின் அஞ்சனமே திருவுருவான எம்பெருமானுக்குத் தெரியாததென வொன்றைக் கூறற்பாற்றன்றென்பார் 'அஞ்சனக்கிரியனான்' என்றார். சர்வஞ்ஞனென்றபடி. 'அரக்கன்' ராக்ஷஸ் என்னும் வடமொழிச்சிதைவென்பார். (உ௪)

பேய்முகப் பிணியறப் பகைஞர் பெட்பின்றிரத்
தோய்முகத் ததுக னத்தது சுடர்க்குதிரையின்
வாய்முகத் திடை நிமிர்ந்துவட வேலைபருகுந்
தீமுகத் திரிசிகைப்படை திரித்தெறியவே

இ-ள். பேய்முகம் பிணி அற - பேய்களிடத்தேயுள்ள (பசியாகிய) நோய் நீங்குமாறு, பகைஞர் உதிரம் பெட்பின் தோய்முகத்தது - விரோதிகளினது அரத்தத்திலே விருப்பத்தொடு தோய்ந்த நுதியினையுடையதும், கனத்தது - பாரமுடையதும், சுடர்க்குதிரையின் - வடவையென்னும் பெண்குதிரையினது, வாய்முகத்திடை நிமிர்ந்து - வாயினிடையே தோன்றி வளர்ந்து, வடம் வேலைபருகும் - வட்டமாகிய கடல்நீரைக் குடிக்கின்ற, தீமுகம் திரிசிகைப்படை - நெருப்புப்போன்ற

நெருப்பினைத் தன்கட்கொண்டிருக்கிற மூன்றுதலைகளையுடையதுமாகிய சூலப்படையை, திரித்து எறிய - சுழற்றி (ஸ்ரீராமபிரான்மீது) விசையுடன் விடுக்க

குறிப்பு — பகைஞர்களைக் குத்தி அவர்களுடைய கவந்தங்களைப் பேய்கள் தின்று இரத்தவெள்ளத்தைக் குடித்துப் பசிநோய் தணியும்படி கொடுத்தலால் உதிரந்தோய்ந்த வேலெனக். பிணி-பீடித்தல்செய்வது 'வலி' என்பதும் இப்பொருட்டே. 'அற' என்னும் செயவென்எச்சம் காரியப்பொருட்டாகலின் எதிர்கால முணர்த்தும். 'பகைஞர்' பிரிவினையுடையார், 'ஞ்' பெயரிடைநிலை. பகை - பகு + ஐ பிரிவினையென்பது பொருள். பகையெனவே விரோதிகளாயின் அங்குத் தொழிலாகுபெயரெனக். பகைவரைக்கோறலில் அரக்கனுக்கிருக்கும் விருப்பை அவன் படைமேலேற்றி, 'பெட்பினுதிரந்தோய முகத்தது' என்றார். 'சினக்கதிர் வேல்' 'குருதி கொப்புளிக்கும்வேல்' என்பன பிறண்டும்வருதல்காண்க. 'முகத்தது, கனத்தது' இவற்றைக் குறிப்பு முற்றெச்சமாகக் கூறுவாருமுளர். வடவையென்னும் பெண்குதிரையின் முகத்தினின்றும் வெளிப்படுந் தீ கடனீரை மழைமுதலிய வற்றால் மிகாது வற்றச்செய்கின்றது என்பது நூற்கொள்கை. இனி வடவைக்குதிரையின்வாய முகத்திடை நிமிர்ந்து வேலைப்பருகுந்தீ, எனக்கொண்டு கூட்டியுரைப்பாருமுளர். அங்கு 'படவா' என்னும் வடசொற்சிதைவாகிய 'வடவை' என்பது கடைகுறைந்து 'வட' என்று மாற்றிரையாய் நின்றதெனக். (உ௫)

திசையும் வானவரு நின்றதிசை மாவுமுலகும்
அசையு மாலமென வன்னயிலின் மின்னிவரவும்
வசையின் மேருமுதன் மால்வரைக ளேழினவலிசால்
விசைய வார்சிலை யிராமனொரு வாளிவிடவே.

இ - ள். அன்ன அயில் - அத்தகைய சூலப்படையானது, திசையும் - எட்டுத் திசைகளும், வானவரும் - (அவ்வத்திசைகளிலுள்ள) அஷ்டதிக்குப் பாலகர்களும், திசைநின்றமாவும் - அவ்வத்திசைகளிலேநின்ற அஷ்டகஜங்களும், உலகும் - பல்லாவுலகங்களும், அசையும் - நடுக்கத்தைக்குக் காரணமாகிய, ஆலம் என - ஆலாகலமென்னும் விடத்தினைப்போல, மின்னிவரலும் - மின்னிக்கொண்டுவந்த வளவில், இராமன் - ஸ்ரீராமபிரான், வசையில் - குற்றமில்லாத, மேரு (இன்) — மாமேருமலையைப்போலவும், முதல்மால்வரைகள் ஏழின் - சிறப்புவாய்ந்த சப்தகுலபர்வதங்களைப் போலவும், வலிசால் - வலிமைமிகுந்த, விசையவார்சிலை - வெற்றியைத்தருகின்ற நீண்ட கோதண்டத்தின் ஒருவாளிவிட - ஒரு ஒப்பற்ற கணையைத் தொடுத்துவிட்டவுடனே

குறிப்பு — திசை கிழக்குமுதல் வடகிழக்கிறுதியாக வுள்ள அஷ்டதிக்குப் பாலகராவாரிவரென்பதைப் 'பன்னகாதிபர்' என்னும் கஉ-ம் செய்யுளிலுரைக்கக் கூறினும் அஷ்டதிக்கயங்களும் அவற்றின் பிடிகளும், ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம், என்பனவும், அப்பிரமை, கபிலை, பிங்கலை, அநுபமை, தாமிரபருணி, சுப்பிரதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி என்பனவுமாம் முன்னும் பின்னும் 'திசையும்' 'திசையுமாவும்' என்க் கூறியதனால், அவற்றிற்கேற்ப, நடுநின்ற 'வானவர்' என்பதற்கும் திசைக்காவலரென்றுரைக்கப்பட்டது இனி, 'திசைநின்ற' என்பதனை இடைநிலைத் தீவகமாகக் கொண்டு 'வானவ' ரோடுங் கூட்டியுரைத்தலுமாம் அசையும் என்னும் காரியப்பொருளினின்றபெயரெச்சம் 'ஆலம்' என்னுங் காரணப்பெயர்கொண்டது. ஆலம் 'ஹலா

ஹாலம்' என்னும் வடசொற்சிதைவு. அது, திருப்பாற்கடல் கடைந்தகாலத்தில் அதிலிருந்து தோன்றியது, பயங்கரமாகக் கடுகியெழுந்த ஹாலா ஹாலம் சிவபிரானால் உண்ணப்பட்டடங்கியதுபோல மிக்கொடிய விராதனது முத்தலைச் சூலமும் இராமபாணத்தால் எதிர்ப்புண்டொடுங்குமெனக். அன்ன வயின் எனப்பிரித்து அவ்விடத்தில் என்ப பொருள்கொண்டு 'அசகூலம்' என வருவித்துரைத்தலும் பொருந்தும். மால்வரைகள் ஏழாவன கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம் என்பனவாம். விஜயம் என்னும் வடசொல் விசயமென்றதிரிந்து, விசையம் என மொழியிடைப் போலிபெற்று நின்றது. (உக)

இற்ற தின்றொடி வரக்கர்குல மென்று பகலே
வெற்ற விண்ணினிடை நின்றுநெடு மீன்விழுவபோற்
சுற்ற மைந்தசுட ரெஃக மிரண்டு துணியா
வற்ற கண்டமவை யாசையி னந்தமுறவே

இ - ள். இ அரக்கர் குலம் - இந்த இராக்கதக்கூட்டம், இன்றொடு - இற்றைநாள் முடிவோடு, இற்றது - முடிந்தது, என்று - என்று குறிப்பித்து, பகலே - பகற்காலத்திலே, வெற்ற - வெறுமையாகிய, விண்ணினிடைநின்று - ஆகாயத்தினிடத்தினின்றும், நெடுமீன் - பெரிய நக்ஷத்திரங்கள், விழுவதுபோல - விழுவன போல, சுற்று அமைந்த சுடரெஃகம் - சுற்றிலும் பொருந்திய ஒளியினையுடைய அந்தச் சூலமானது, இரண்டு துணியா - துண்டு துண்டாக, அற்ற கண்டமவை - அறுந்து விழுந்த துண்டங்கள், ஆசையினது அந்தம் - திக்குகளின் எல்லையை, உற - அடைய.

குறிப்பு — 'இற்றது' என இறந்தகாலத்தாற் கூறியது விரைவினாற் றெளிவினாலும் வந்தகால வழுவமைதி. பகற்போதில் நக்ஷத்திரங்கள் வீழக்காணல், பின்னர் நிகழுங்கேட்டை முன்னர்த்தெரிவிக்கும் அபசகுனமாகிய உற்பாதம். மீன் மின்னுதலையுடையதெனக் காரணப்பெயர்; கருத்தாப் பொருள்விகுதி புணர்ந்து கெட்டது. எஃகு அசறலாகிய சூலத்தைக் கருவியாகுபெயரா லுணர்த்திற்று. எஃகம் இதில் அம் சாரியை. அது, அவை இவ்விரண்டும் பகுதிப்பொருள் விகுதிகள். துணி துணிக்கப்பட்டது, செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்ட தொழிலடியாகப்பிறந்த பெயர், முதனிலைத் தொழிலாகுபெயருமாம். ஆசையினந்தமுறுதல் - வலப்புறமும் இடப்புறமுமாகிய இருபுறத்திலும் வேகத்தோடு நெடுந்தூரம் போய் விழுதல். (உஎ)

சூரோ டுங்கயிற் றுணிந்திறுதல் கண்டுசிறிதும்
போரோ டுங்கிலன் மறங்கொடு புழுங்கிநிருதன்
பாரோ டுங்குறு கரங்கொடு பருப்பதமெலாம்
வேரோ டுங்கடி தெடுத்தெதிர் விசைத்துவிடலும்.

இ - ள். நிருதன் - அவ்வரக்கன், சூர் ஒடுங்கு அயில் - தேவர்களும் அடங்குதற்குக் காரணமான தனது சூலாயுதம், துணிந்து இறுதல் - துணிபட்டுவிழுந்ததனை, கண்டு - பார்த்தும், போர்சிறிதும் ஒடுங்கிலன் - போர்செய்தலிற் சற்றும் தளர்ச்சியில்லாதவனாய், மறம்கொடு புழுங்கி - அஞ்சாமை மேற்கொண்டு கோபித்து, பார் ஒடுங்குறு கரம் கொடு - பூமியும் ஒடுக்கமடையத்தக்க (நீண்ட தனது) கைகளால், பருப்பதமெலாம் - மலைகள் பலவற்றையும், வேரொடும் - வேரோடு, கடிது எடுத்து-

விரைவாய்ப் பிடுங்கியெடுத்து, எதிர் - ஸ்ரீராமபிரானுக்கெதிரே, விசைத்து விடலும்- வேகமாய் எறிந்தவளவில.

குறிப்பு —கூர் ஒடுங்கயில் என்பதில் சிறப்பும்மையை வருவித்துத் தேவர்களும் ஒடுங்குதற்குக் காரணமான தனது சூலம் என்க கொள்ளினும் சிறப்புடைத்தே. கண்டுமெ என்பதன் உம்மைவிகாரத்தாற் றொக்கது மறம் வீரம், மறு - பகுதி, அமவிகுதி தனக்குமேற்பட்டானை மறுத்துரைப்பவனிடத்தில அஞ்சாமையும் வீரமுடைமைபற்றி வந்தது நிருதன 'நைருதன்' என்னும் ஆரியமொழிச் சிதைவு நிருதியென்னுந் திக்குப்பாலகனது மரபிற் றோன்றியவனென்பது பொருள் பார பருமையையுடையது, பண்பாகுபெயர் பாரக்கப்படுவதுமாம் 'பாரொடுங் குறுகரம்' இந்நிலவுலகிலுள்ளவர் ஒடுங்குதற்குக் காரணமான கரம் என்று மொன்றும் பருப்பதம் 'பாவதம்' என்னும் வடமொழித்திரிவு, 'பாவதி' யென்னுந் தத்திதாந்தப் பெயருக்குப் 'பாப்பதி'யென வருதலுங் காண்க. எலாம் இடைக்குறை விடலும் உம்மீற்று வினையெச்சம். (உ௭)

> வட்ட மிட்டகிரி யற்றுக வப்பங்குவயிரக்
> கட்ட மைந்தகதிர் வாளியெதிரேகட வலான்
> விட்ட விட்டமலை மீளவவன் மெய்யின்விசையாற்
> பட்ட பட்டவிட மெங்குமுட லூறுபடலும்

இ - ள் (ஸ்ரீராமபிரான்), வட்டமிட்ட - (விராதனாலெறியப்பட்டுத் தன்னைச்) சூழ்ந்துவருகிற, கிரி அற்று உக-பர்வதங்கள் பிளவுண்டு விழும்படி, வயங்கு வயிரம் கட்டு அமைந்த-விளங்குகின்ற உறுதியாகிய கட்டுப்பொருந்திய, கதிர் வாளி- கூர்மையையுடைய பாணங்களை, எதிர்கடவலான் - (அப்பர்வதங்களுக்கு) எதிராக எய்ததனால், விட்ட விட்டமலை - அவன் ஓயாமல் விட்டமலைகளெல்லாம், மீள - திரும்பி, அவன் மெய்யில அவனுடம்பிலே, விசையால் பட்ட பட்ட இடமெங்கும் - வேகத்தோடு பட்ட பட்ட இடங்களிலெல்லாம், உடல் ஊறுபடலும் - உடம்பு காயப்பட்டவளவில்.

குறிப்பு —வயிரக்கட்டு வச்சிரத்தாலாகிய கட்டென்றுமாம் கட்டு புங்கம் கதிர். ஒளியுமாம் நிலையின்மைபற்றிப் பொய்யாகிய இவ்யாக்கையை மெய்யென்னல் மங்கலமென்னுந் தகுதி வழக்குப்பற்றியென்க அசத்திரமாகிய மெய்யைக் காயமென்னும் இக்கருத்தானேயாமெனக ஊறு உறுவது முதனிலை நீண்டதொழிலாகுபெயர் (உகூ)

> ஓம ராமனை யொருங்கு முணர்வோ ருணர்வுறும்
> நாம ராமவரை நல்லற நிறுத்த நனுநித்
> தாம ராவணை துறந்து தரைநின்ற வரையோர்
> மாம ராமர மிறுத்ததுகொ டெற்றவரலும்

இ - ள். (பின்னுமவ்விராதன்) ஓர் மராமரம் - ஓர் பெரிய மராமரத்தை, இறுத்து - பிடுங்கி, அதுகொடு - அதனால், ஒருங்கும் உணர்வோர் - முற்றுமறிந்த தத்துவஞானிகள், உணர்வு உறும் - அறிந்து தியானிக்கின்ற, நாமர் ஆம் அவரை - திருநாமங்களையுடையவரும், நல் அறம் நிறுத்த - நல்ல தருமத்தை நிலைநிறுத்துவதற்காக, அரா அணை துறந்து - சேஷசயனத்தைவிட்டு, தரை நணுகின்றவரை - பூமியிலவந்து திருவவதாரஞ் செய்தருளியவருமாகிய, ஓம ராமனை - பிரணவ மந்திரத்தின் பொருளாகிய ஸ்ரீராமனை, எற்றவரலும் - மோதவந்தவளவில்.

குறிப்பு:—ஓமம் என்பதனை 'ஹோமம்' என்னும் வடமொழி திரிந்தபெயரெனக் கொண்டு, யாகத்தின் சொரூபமாகிய ஸ்ரீராமர் எனப் பொருள்கோடலுமாம். "வேள்வியுந் தானாய் நின்ற வெம்பெருமான்" எனப் பெரியார் பணித்ததுங் காண்க. ஒருங்குணர்வோர் ஓதாதுணர்ந்த சாமுசித்தர், திரிகாலஞானிகள். "முப்பொழுது தாயஞான முனிவர்தந் நாயகமாய—எப்பொழுதுங்கோயில் விடங் கொண்டான் போய்" என்பார் பாரதம் பாடிய பெருந்தேவனாரும். 'உணர்வுறாஉம்' என இன்னிசை யளபெடுத்த பாட்டுமுண்டு. மராமரம் ஆச்சாமரம் கொடு மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. "கருவியிட்டாற்றவர்" என 'இட்டு' என்பதும் அவ்வேற்றுமையுருபாக வரும். (உ0)

ஏறு சேவக னிரண்டினொ டிரண்டுகணை யால்
வேறு வேறுதுணி செய்தது விழுத்தவிசை யான்
மாறு மாறுதிமிர் தோளிடையு மார்பினிடையு
மாறு மாறுமயில் வெங்கணை யழுத்தவனும்.

இ - ள். ஏறுசேவகன் - உயர்ந்த (மகா) வீரனாகிய ஸ்ரீராமபிரான், இரண்டினொடு இரண்டுகணையால் நான்கு பாணங்களால், அது வேறு வேறுதுணிசெய்து - அம்மராமரத்தினை வெவ்வேறாகத் துணிபடச்செய்து, விழுத்து - தள்ளிவிட்டு, திமிர் தோளிடையும் - (அவனது) திமிர்ந்த தோள்களினிடத்திலும், மார்பினிடையும் - மார்பிலும், மாறுமாறு விசையான் ஆறும் ஆறும் அயில் வெங்கணையழுத்த - மாறி மாறி வேகத்தோடும் அவ்வாறாகக் கூறிய கூரிய வெவ்விய அம்புகளை, அழுத்த - அழுந்தச்செய்ய, அவனும் - அவ்விராதனும்.

குறிப்பு—இனி, 'ஏறு சேவகன்' என்பதனை, சேவக ஏறு என மாற்றிச் சேவகருக்கு ஏறுபோன்றவன் என்றுரைப்பினும் பொருந்தும். நடை, வீரம், கம்பீர முதலியவற்றால் சிங்கவேற்றினைப்போன்றவன் எனவும், இதுகாறும் நடந்தபோரில் கையேற்றமுடையவனெனவும் பொருள்கோடலும் ஏற்றமே. தோளினிடத்தில் ஆறுகணையும் மார்பினிடத்தில் ஆறுகணையுமென மாற்றிமாற்றிப்போயாது எய்தான் என்பதாம். அயில் ஈண்டு இதனை வினைத்தொகையிலைத் தொடராகக்கொண்டு உயிருண்ணுங் கொடிய கணையென்றுரைப்பினு மமையும். (உக)

மொய்த்த முட்டன் னுடற்றலை தொளைப்ப முடுகிக்
கைத்த லத்திணிமி ரக்கழ னுகன்றிவிசிறா
மெய்த்த மெய்ப்பெரிய கேழலென வெங்குமவிசையிற்
றைத்த வங்கணை தெறிப்பமெய் சிலிர்த் துதறவே

இ - ள். மொய்த்தமுள் - மிகவும் அடர்ந்துள்ள முள்ளுகள், உடலத்தலை தொளைப்ப - உடலினைக் (தினவுண்டாக்கி) வருத்துதலான், கைத்தலத்தின் - முன்னங்கால்களினால், (அவற்றை) முடுகி - விரைந்து, திமிர - எடுக்கமுயன்று, கழன்றகன்றி - (அவை தைத்துவிடலான்) மிகவும் வருந்தி, விசிறும் - வீசி யுதறுகின்ற, எய்த்த மெய் பெரிய சேழல் என - ஓடியிளைத்த உடலினையுடைய பெரிய (முள்ளம்) பன்றிபோல, தைத்த அக்கணைகள் - (தன்னுடலினைக்கண்) தைத்த அவ்வம்புகள், நெருங்கும் தெறிப்ப - எப்பக்கங்களிலுஞ் சிதறிவிழுமாறு, மெய்சிலிர்த்து உதற - (தனது) உடலினை மிக்க வேகத்தினோடுஞ் சிலிர்த்து உதறுதலும்

குறிப்பு—ஓடியிளைத்த முள்ளம்பன்றி யொன்று தனது உடம்பில் முட்கள் நெருங்கித் தினவுண்டாக்கி வருத்த அம்முட்களை முன்னங்கால்களால் எடுக்கத்

தலைப்பட்டு அவ்வசுரன் அம்முன்னங்கால்களிலும் தைத்துக்கொண்டதலால் எடுக்க முடியாமல் கடைசியாய் மெய்யையுதறி அம்முட்களைச் சிதறுமாபோல, இவ்வரக்கனும் தன்னுடலில் தைத்துக் கிடக்கின்ற ஸ்ரீ இராமனது பாணங்களைக் கைகளால் எடுக்க முயன்று, அப்பாணங்கள் கைகளிலும் தைத்துவிடுதலால் அங்ஙனம் கைகளால் எடுக்க முடியாமல் கடைசியாய் மெய்யைச்சிலிர்த்து உதறினானென்க. தலை ஏழனுருபு கைத்தலம் கையினது தலம், எனவே உள்ளங்கை, பின்றியின் கைத்தலம் முன்னங்கால்களின் உட்புறமாம். (கஉ)

எரியின வாளிகளை யிராமன்விட வெங்குநிலையா
துருவி யோடமற மோடுதல்செயா வுணர்விலா
னருவி பாயுமவரை போற்குருதி யாறுபெருகிச்
சொரிய வேகவலி கெட்டுணர்வு சோர்வுறுதலும்.

இ - ள். இராமன் எரியின வாளிகளைவிட - ஸ்ரீராமபிரான் நெருப்புப்போன்ற கொடிய பாணங்களைப் பிரயோகித்தலும், (அஃது) எங்கும் நிலையாது - எங்குந்தடைப்பட்டு நில்லாமல், உருவி ஓட - ஊடுருவிச் செல்லாநிற்பவும், மறம் ஓடுதல்செயா உணர்விலான் - கொடுந்தன்மை நீங்குதலில்லாத அவ்வரக்கன், வரைபாயும் அருவி போல - மலையினின்றும் இழிந்துபாய்கின்ற நீரருவிபோல, குருதி ஆறு - இரத்த நதி, பெருகிச்சொரிய - (தன்னுடலினின்றும்) பெருகிவழியாநிற்கவும், வேகவலி கெட்டு - உக்கிரமான பலமழிந்து, உணர்வு சோர்வு உறுதலும் - அறிவழிந்துபோன அளவில்

குறிப்பு — எரியினவாளிகளை அக்கினியஸ்திரமுமாம். செய்யா வென்பது இடைக்குறைந்து செயா என நின்றது. வேகவலி - வேகமும் வலியுமென உம்மைத் தொகையுமாம். உணர்வு, சோர்வு என்பவற்றில் 'வு' தொழிற்பெயர் விகுதி 'உ' விகுதியெனில் 'வ்' எழுத்துப்பேறெனக் கொள்க. (கங)

மெய்வரத்தினன் மிடற்படை விடப்படுகிலன்
செய்புமற்றுமிக லென்றுசின வாளுருவிவான்
கைதுணித்து நமெனமுந்துகடுகிப் படர்புயத்
தெய்வின் மற்பொருவு தோளிருவ ரேறினிருந்தனர்

இ - ள். எய்வு இல் - பிறரால் பாணமெய்யப்படுதலில்லாத, மற்பொருவு - மற்போர்செய்வதில் வல்ல, தோள் இருவர் - தோளினையுடைய அவ்விராமலக்ஷ்மணர் இருவரும், (இவ்வரக்கன்) மெய்வரத்தினன் - பொய்த்தலில்லாத வரம்பெற்றவன், மிடல் படை விட - வலிமைதங்கிய ஆயுதங்களைப் பிரயோகிப்பதினால், படுகிலன் - இறப்பானல்லன், மற்றும் இகல்செய்யும் - மீளவும் போர்செய்வான், என்று-என்று சிந்தித்து, 'சின்ம வாள் உருவி பல கை துணித்தும் என - (பகைஞர்மாட்டுக்) கோபத்தினையுடைய வாளினை உறையினின்றுமெடுத்து (இவனது) வலியகரங்களை வெட்டித்தள்ளுவாம்' என்று சொல்லி, முந்துகடுகி - மிகவும்விரைந்து, படர்புயத்து-பெரிய (அவனது) தோள்களில், ஏற—, இருந்தனர் - அவ்வரக்கன்.

குறிப்பு -- வரத்திற்கு மெய்ம்மையாவது தவறுது பலித்தலாம். உடையவன் குணத்தினை உடைமைமேலேற்றிச் 'சினவாள்' என்றார். இகல் - தொழிலாகுபெயர் முந்துகடுகி - முற்பட்டு விரைந்தென்றுமாம். எய்வு, தொழிற்பெயர். இனி, 'எய்வில்' என்பதனை வினைத்தொகை நிலைத்தொடராகக்கொண்டு பாணங்களை எய்

ன்றவில்லென்த் தோளொடு கூட்டலுமாம். 'இருவர்' என்புழி உம்மை விகாரத் தாற் றொக்கது. (கச)

உண்டெழுந்தவுணர் வவ்வயி னுணர்ந்துமுடுகித்
தண்டெழுந்தனைய தோள்கொடு சுமந்துதழுவிப்
பண்டெழுந்தனது வன்கதி பதிற்றின்முடுகிக்
கொண்டெழுந்தனன் விழுந்தழி கொழுங்குருதியான்.

இ-ள். விழுந்து அழி கொழுங்குருதியான் - பெருகி வழிகின்ற மிக்க அரத்தத்தினையுடைய அவ்வரக்கன், அவ்வயின் - அந்த இடத்து, உண்டு எழுந்த உணர்வு உணர்ந்து - மீண்டும் உளதாகித் தோன்றிய அறிவினால் (ஸ்ரீ இராமலக்ஷ்மணர்கள் தன்னைத் தீண்டினவரென்று) அறிந்து, முடுகி - மனம் விரைந்து, தண்டு எழுந்தனைய தோள் கொடு - உயர்ந்த தண்டாயுதத்தைப்போன்ற தோள்களால், தழுவி சுமந்துகொண்டு - சேர்த்துப்பிடித்துத் தாங்கிக்கொண்டு, பண்டு எழும் - முன்னேயுள்ள, தனது வன்கதி பதிற்றின் முடுகி எழுந்தனன் - தனது வலியநடை முன்னையினும்பதின் மடங்கு அதிகமாக விரைந்து எழுந்தவனாகி. (கரு)

குறிப்பு — தண்டு தண்டமென்னும் வடசொற்சிதைவு.

முந்து வானுறக் கடுகடிந்து முட்டி முடுகிச்
சிந்து சோரியொடு சாரிகை திரிந்தனனரோ
வந்து மேருவினை நாடொறும் வலஞ்செய்துழல்வோ
ரிந்து சூரியரை யொத்திரு வரும்பொலியவே

இ-ள். மேருவினை நாடோறும் வந்து வலம்செய்து உழல்வோர் இந்து சூரியரை யொத்து - மாமேரு மலையினைத் தினந்தோறும் போந்து பிரதக்ஷிணஞ் செய்து திரிபவர்களாகிய சந்திர சூரியர்களைப்போன்று, இருவரும்பொலிய - ஸ்ரீ ராமலக்ஷ்மணர்கள் இருவரும் (இருதோள்களிலும்) விளங்கும்படி, முந்துவானுறக் கடுற - உயர்ந்த வானத்தின் உச்சியை அளாவும்படி, முட்டி - முட்டி, சிந்துசோரியொடு - வழிகின்ற இரத்தத்துடனே, கடிது முடுகி - மிகவும் விரைந்து, சாரிகை திரிந்தனன் - வட்டமாய்ச் சுற்றினன்.

குறிப்பு — சிந்துசோரியொடுதிரிகின்ற அரக்கன் மேருமலைக்கும், ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் சந்திர சூரியர்களுக்கும் உவமை. கலைநிறைவினாலும், தண்ணளியினாலும், பெயராற்றலினாலும் சந்திரனை இராமபிரானுக்குவமையாகவும், பொன்னிறத்தினாலும் பிரதாபத்தினாலும் பிராணினும் மிக்க வெகுளியுடைமையாகிய வெம்மையினாலும் சூரியனை இலக்குமணனுக்குவமையாகவும் கூறினரெனக. சாரிகை மண்டலாகாரமாக வலப்புறமேனும் இடப்புறமேனும் சுழன்றுவருதல். வந்து - உரையசையுமாம். "உயர்திணை மருங்கினும்மைத் தொகையே பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்" என்பவாதலின் 'இந்து சூரியர்' என்றார். (கசு)

சுவண வண்ணனொடு கண்ணனுறை தோளனவிசைதோ
யவண விண்ணிடை நிமிர்ந்துபடர் கின்றவனறஞ்
சிவண தன்னசிறை முன்னவரோ டேகுசெலவத்
துவண னென்னுநெடு மன்னவனு மொத்தனனரோ.

இ-ள். சுவண வண்ணனொடு - பொன்போன்ற நிறத்தையுடைய லக்ஷ்மணனுடன், கண்ணன் - ஸ்ரீராமன், உறை - எழுந்தருளியிருக்கப்பெற்ற, தோளன் -

தோள்களையுடையவனும், விசைதோய் - வேகம்பொருந்தி, அவண் விண்ணிடை நிமிர்ந்து - அவ்விடத்தினின்றும் ஆகாயத்தினிடத்து எழும்பி, படர்கின்றவன் - செல்கின்ற அவ்விராதனை, அறம் சிவணும் அன்ன - தருமம் வடிவெடுத்ததனையொத்த, சிறை - (தன்) சிறகுகளில், முன்னவரோடு - தமையன்மாராகிய கேது ராகுகளோடு, ஏகுசெல்வத்து - செல்லுகின்ற வேகத்தினையுடைய, உவணன் என்னும் - கருடன் என்கின்ற, நெடுமன்னவனும் ஒத்தான் - பெரியபக்ஷி ராஜனையும் ஒத்தனன்.

குறிப்பு —சுவணவண்ணன் - ஸ்வர்ணவர்ணனென்னும் அதன்றிரிபு. 'சொன்னவண்ணன்' என வருதலுமுடைத்து இளையபெருமாளது நிறம் பொன்னிறமாதலை "வில்லேந்தமெனிற் செம்பொற், பருவரையும் நெடுவெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள், இருவர்" எனவரும் பாலகாண்டச் செய்யுளானறிக. கரியோனென்னும் பொருளினதாகிய 'கிருஷ்ணன்' என்னும் வடசொற் பிராகிருதமாய்ச் சிதைந்து 'கண்ணன்' என வந்தது "கண்டனினறன்ன கண்ணன்" என்றார் இரண்டு நீங்குபடலத்திலும், ஈண்டுத் திருமாலினவதாரப்பெயரன் றென்பதுணர்க. 'தோய்ந்து' என்றிருக்கற்பாலது 'தோய' எனப் பகுதியளவாய 'வரிப்புனைபந்து' என்பதிற்போல நின்றது அகரம் உலகறிசுட்டாகக் கொண்டுரைத்தலுமாம் கருடபகவான் தாம்சொரூபி என்பார் 'அறஞ்சிவண் தன்னசிறை' என்றார் வினதையும், கத்துருவும் ஐராவதத்தின் வாணிறம் காரணமாகத் தம்முண் மாறுபட்டுத் 'தோற்றரும் தோற்றாதம் மக்களுடன் சயித்தார்க்கும் அவர்தம் மக்களுக்கும் குற்றேவல் செய்யவேண்டும்' எனச் சபதஞ்செய்து ஒப்பிய விஷயத்தில், தோற்றுப்போன வினதையும் அவளது மக்களும், கத்துருவிற்கும், அவளது மக்களாகிய பாம்புகளுக்குங் குற்றேவல் செய்துவந்தனர். அப்போது வைனதேயன் தனது தமையன்மார்களாகிய இராகு கேதுக்களைச் சுமந்து திரிந்தானுகலின் அதுபற்றி ஈண்டு உவமை கூறப்பட்டது. செல்வத்து அதன்கணுள்ள 'அத்து' சாரியை உவணன், ஸுபர்ணன் என்னும் வடமொழிச்சிதைவு அழகிய சிறகுகளையுடையவனென்பது பொருள். புள்ளரசாதல்பற்றி 'மன்னவ' னென்றார் (௩எ)

மாத யாவுடைய தன்கணவன் வஞ்சனவினையிற்
போத லோடுமல மந்தனள் புலர்ந்துபொடியிற்
கோதை யோடும்ஒசி கொம்பென விழுந்தனள்குலச்
சீதை சேவல்பிடி யுண்டசிறை யன்னமனையாள்.

இ - ள். குலச்சீதை -உயர்குலத்திற் றோன்றிய சீதாபிராட்டியானவள், மாதயாவுடைய தன் கணவன் - மிக்க அருளினையுடைய தனது நாயகனாகிய ஸ்ரீராமன், வஞ்சன் - வஞ்சகனாகிய விராதனது, வினையின்-கொடிய தொழிலால், போதலோடும் - (கணமாகக்கமாயத் தன்னைப்பிரிந்து) செல்லுகின்றவளவில், அலமந்தனள் - மனங்கலங்கினவளாகி, புலர்ந்து - வாட்டமடைந்து, சேவல் பிடியுண்ட சிறையன்னமனையாள் - (தனது) ஆண்அன்னம் (பிறரால்) பிடிக்கப்பட்டு வருந்தும் சிறகுகளையுடைய அன்னப்பேட்டினை யொத்தவளாகி, ஒசிகொம்பெனக் கோதையோடும் பொடியில் விழுந்தனள் - துவண்டு விழுகின்ற பூங்கொம்புபோலத் தன் கூந்தலுடனே மட்புழுதியில் விழுந்தாள்

குறிப்பு.—தயா - வடசொல். தன்னிமித்தம் விராதனுடன் போர்தொடுத்தமையால் 'மாதயாவுடைய தன்கணவன்' என்றாள். கணவன்: யுக்ததேயிருப்ப

வன். தன் கண்ணுள் வைத்துப் போற்றப்படுபவன் என்னுமாம்; அலமந்தனள், அலமரல் - பகுதி: அலமரல் - மனஞ்சுழலுதல். "அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி." என்பது தொல்காப்பியம். ஸ்ரீராமன் பிரியவே கொழுகொம்பில்லாத பூங்கொம்புபோலப் பொடியில் விழுந்தாளென்பதாம். குலச்சீதை - சிறந்த சீதையுமாம். குலம் சக்கரவர்த்தியின் குலம் ஆசார சீலையென்பார் 'குலச்சீதை' யென்றாரென்றுமாம். இனி, குலம் என்பதற்கு மனையென்பொருள்கொண்டு 'தனக் [illegible] வன்' என்றதற்கேற்ப அவன் மனைவியாகிய சீதையென்பொருள்கோடலும் நயமாம். சனகமகாராசன் யாகசாலை வகுப்பான் ஏரூட்டி யுழுதவிடத்து அங்குப் படைச்சாலில் அகப்பட்டதனால் 'சீதை' யென்ற திருநாமம் பெற்றனளென்ப. சீதை - உழுபடைச்சாலென்னும் பொருளினதாகிய 'ஸீதா' என்னும் வடமொழித் திரிபு. ஒரு தாயில்லாப்பெண் இங்ஙனம் அலமந்து புலர்ந்துவிழுந்தாள் என்பார் 'சீதை' என்னும் திருநாமத்தை ஈண்டுப் பிரயோகித்தார் அம்மா! என்று நிலத்தில் விழுந்தனள் என்பதுமாம். கொம்பொசிவதற்கு ஓர் அளகபாரமுமுண்டென்பார் 'கோதையொடு மொசிகொம்பு' என்றார். "தானுங் குழலுந் தனிவீழ்ந்தாள்" என்றார் புகழேந்திப்புலவரும். சேவல் ஆணன்னமாதலால் "சேவற்பெயர்க்கொடை சிறகொடு சிவணும் மாயிருந்தூவி மயிலலங் கடையே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானுணர்க. அன்பாலுள்ளதாகிய மென்மையால், பெருமானையும் பிராட்டியையும் 'சேவல்,' 'அன்னம்' எனக் கூறினார். "ஆதரம் பெருகுகின்ற அன்பினு லன்ன மொத்தும்" என்றார் சிந்தாமணியினும். (௧௮)

பின்னை யேயெழுந் துதவுந்துணை பெறாளுரைபெறாள்
மின்னை யேயிடை நுடங்கிட விரைந்துதொடர்வா
ளன்னை யேயனைய வன்பின்ற வோர்கடமைவிட்
டென்னை யேநுகர்தி யென்றன ளெழுந்துவிழுவாள்.

இ - ள் (அங்ஙனம் கீழேவிழுந்தபிராட்டி), எழுந்து - (திரும்பவும்) எழுந்திருந்து, உதவுந்துணை - (தன் துன்பத்தைத் தீர்க்க) உதவிசெய்கின்றதுணை, பின்னை ஏதும்பெறாள் - மற்றெதுவும் பெறாதவளாய், உரைபெறாள் - ஒன்றுஞ்சொல்லப் பெறாதவளாகி, மின்னேய இடைநுடங்கிட - மின்னலையொத்த இடையானது துவளும்படி, விரைந்துதொடர்வாள் - விரைவாக அவ்வரக்கனைப் பின்றொடர்ந்து (அவனை விளித்து), 'அன்னையேயனைய அறவோர்கள்தமைவிட்டு - (உலகுக்கெல்லாம்) தாயையேபோன்ற அன்பினையுடைய தாமசொரூபிகளாகிய சக்கரவர்த்தித் திருமகார்களைவிட்டு, என்னையேநுகர்தி என்றனள் விழுவாள் - என்னையே யுண்பாய் என்றுகூறி மீட்டும் விழுவாளாயினள்.

குறிப்பு —இனி, 'பின்னை' என்பதனுக்கு இலக்குமியாகிய சீதையென்பொருள்கொண்டு எழுவாய் வருவியா துரைத்தலுமொன்று. 'உரைபெறாள்' என்பதற்கு ஒருவார்த்தை சொல்லவும் நாவெழாதவளாய் என்றாவது, தன்னைத் தேற்றுதல் செய்யும் வார்த்தையைச் சொல்லப்பெறாளென்றாவது பொருளுரைத்துக்கொள்க. "உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினு-மிழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே" என்பவாகலின் ஈண்டுச் சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாகியும் பன்மை யொருமையாகவும் 'அன்னையேயனைய' என வந்தது. "தாதாய் மூவே ழுலகுக்குந் தாயே" என்றார் மணிவாசகப்பிரபுவும். 'நுகர்தி' என்னுஞ்சொற்கு அநுபவிப்பாய் என விபரீதப்பொருள்கூறி அபசாரப்படுதற் கேதுவாயிருத்தலின் "என்

னையே யுணவுகொள்கென வெழுந்துவிழுவாள்" எனச் சிலபிரதிகளிற் காணப்படுகின்ற பாடமே சிறப்புடைத்தெனக. (௩௯)

அழுது வாய்குழறி யாருயி ரழுங்கியலையா
வெழுது பாவையனை யாணிலை யுணர்ந்திளையவன்
றொழுது தேவிதுயர் கூரவிளை யாடறொழிலோ
பழுது வாழியென வூழிமுதல் வன்பகர்வுறும்.

இ-ள். அழுது வாய்குழறி - அழுது வாய்குழறப்பெற்று, ஆர் உயிர் அழுங்கி - அரிய உயிர்கெட்டு, அலையா - வருந்தி, எழுது பாவையனையாள் - எழுதிய சித்திரப்பதுமையைப்போன்று அசையாது வீழ்ந்துகிடக்கின்ற சீதாபிராட்டியினது, நிலை உணர்ந்து - நிலைமையினையறிந்து, இளையவன் தொழுது - இளையபெருமாளாகிய இலட்சுமணன் (ஸ்ரீராமபிரானை) அஞ்சலிசெய்து, தேவி துயர்கூர - பிராட்டி மிக்க துன்பமடையாநிற்ப, விளையாடல் - திருவிளையாடல்செய்வது, தொழிலோ - செய்யத்தக்க காரியமோ? பழுது - குற்றமுடைத்தாம், என ஊழிமுதல்வன் பகர்வுறும் - என்று விண்ணப்பஞ்செய்தலும் ஊழிக்காலத்துக்கும் முதல்வனாகிய ஸ்ரீராமபிரான் சொல்லுவான்.

குறிப்பு — வாய்குழறுதல் மொழிதடுமாறுதல். ஈண்டுவாய் கருவியாகுபெயராய் மொழியினையுணர்த்திற்று. அழுங்கல் - கெடுதல்; "அழுங்கலிரக்கமுங் கேடுமாகும்" என்பது தொல்காப்பியம். மனத்திருத்தியுண்டாகும்வரை அழித்தழித் தெழுதப்படுகின்ற சித்திரப்பாவைபோல அழகுடையாள் என்பார் 'எழுதுபாவை' என்றார். இனி, 'எழுது' என்பதற்குத் தரை துழாவுகின்ற என்று பொருள்கூறுத லுங் கூடுமெனக. அங்ஙனமாகுங்கால் 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகிய 'அலையா' என்பதனை எழுது என்பதனொடு முடிபுசெய்க. எழுது என்பதற்குத் தரைதுழாவுகின்ற என்று பொருள்கோடல் செய்யுங்கால், 'பாவை' என்பதற்கு 'மணியாடுபாவை' என்று பொருள்கூறினும் மேற்கும். 'அனையாணிலை' என்பதனை அனை, ஆள், நிலை எனப் பிரித்துப் பாவைபோல்பவளாகிய தன்றாயாய தக்க சீதாதேவியின் முழுக்குதலையறிந்து எனக் கொள்ளினுமமையும். இளையபெருமாளுக்குச் சீதை தாய்முறையாதல் "ஜ்யேஷ்ட ப்ராதா பிதா சமான:" என்னுஞ் சுருதியுண்மையானறிக. 'மாகாத லிராமனம் மன்னவன் வையமீந்தும், போகாவுயிர்த்தாயர் நம்பூங்குழற்சீதையென்றே—யேகாய்' என இளையபெருமானை நோக்கிச் சுமித்திராதேவி கூறியிருத்தலையுங் காண்க. "கூப்புங் கழிவுமுள்ளது சிறக்கும்" என்னுந் தொல்காப்பியவுரியியற் சூத்திரம்பற்றி, 'துயர்கூர' என்பதற்கு 'மிக்க துன்பமடைய' என்று பொருள்கூறினும். 'தொழுது' என்பதனானே இளையபெருமாளுக்கு ஸ்ரீராமபிரானிடத்திலுள்ள பக்தியும், அடிமைத்திறமும் நன்குவிளக்கப்பட்டதுடன், மூத்தோனிடத்தில் இளையவன் விண்ணப்பஞ்செய்யவேண்டிய முறைமையையும் விளக்கினாராயிற்று. வாழி முன்னிலையசை. மியா இக முதலாகிய அசைநிலை ஒருபொருளுணர்த்தாவாயினும் முன்னிலைக்கணல்லது வாராமையான் அவ்விடமுணர்விக்குமாறுபோல, 'வாழி' என்பதூஉம் ஒருபொருளுணர்த்தா தாயினும் ஒன்றனைக்கேட்பிக்குமிடத்தல்லது வாராமையான் அப்பொருள் விளக்குமென்பதறிக. (௪௦)

ஏக நின்றநெறி யெவ்வுலகிடை தேறியினிதிற
போக னன்றென நினைந்தனனிவன்பொருவிலோய

சாக வின்றுபொரு ளன்றென நகுந்தகைமையோன்
வேக வெங்கழலி னுந்தலும் விராதனவிழவே

இ - ள். பொருவு இலோய் - ஒப்பில்லாதவனே! ஏகின்ற நெறியெல்லை - நாம் போகவேண்டியவழி யினது எல்லையை, கடிது இனிது ஏறிப்போகல் - விரைவாகவும் இனிமையாகவும் இவன்மேலேறிச் செல்லுதல், நன்று என - நல்லதென்று, நினைந்தனன் - எண்ணினேன், இன்று இவன்சாகல் - இப்பொழுது இவனிறப்பது பொருளன்று - ஒரு பெரிய காரியமன்று, என்று - என்றருளிச்செய்து, நகுந்தகைமையோன் - இளநகைபுரிந்த தன்மையையுடையோனும், வேகம் வெங்கழலினுந்தலும் - மிக்கவேகத்தோடு தனதுவலிய திருவடிகளால் உதைத்துத் தள்ளினவளவிலே, விராதனவிழ - விராதனென்னும் அவ்வரக்கன் கீழேவிழாநிற்க

குறிப்பு —இனி -'ஏகின்றநெறி .... நினைந்தனன்' என்பதற்கு இவ்விராதன் செல்லவேண்டிய பரகதியில் நன்மையுறப் போதல்வேண்டுமெனத் திருவுளம்பற்றினேன், என்வோர் பொருள்தோன்றுதலுங்காண்க. பொருவிலோய் என்பதற்குப் போர்செய்கின்ற வில்வினையுடையாய் எனப்பொருள் கோடலுமமையும். வெம்கழல் என்பதற்கு அடியார்களால் விரும்பப்படும் சீபாதங்களென்றுமாம். கழலென்றது திருவடிகளைத் தானியாகுபெயரா யுணர்த்திற்று (௩௧)

தோளி ரண்டுமெவடி வாளொடு துணிந்துவிசையான
மீளி மொய்ம்பினர் குதித்தலும் வெகுண்டுபுருவத்
தேளி ரண்டுநெறி யச்சினவு செங்கணரவக்
கோளி ரண்டுசுட ருந்தொடர் வதிற்குறுகலும்.

இ - ள் மீளி மொய்ம்பினர் - வலிய புயங்களையுடைய ஸ்ரீராமலக்குமணர்கள், விசையால் - வேகத்தோடு, வெகுண்டு - கோபித்து, வடிவாளொடு தோள் இரண்டுமே துணிந்து - கூரிய வாளாயுதத்தால் இரண்டு தோள்களையும் அறுத்துத் தள்ளி, குதித்தலும் - கீழே குதித்தவளவில், (அவ்விராதன்) புருவம் தேள் இரண்டு மெரிய - தேளின்வடிவம் போலுமுள்ள தனது இரண்டு புருவங்களும் நெரியும்படி, (வெகுண்டு), சினவு செங்கண் அரவம் கோள் -கோபிக்கின்ற சிவந்த கண்களையுடைய பாம்பாகிய ராகுவென்னும் கிரகம், இரண்டு சுடரும் தொடர்வதிற் குறுகலும் – சூரியசந்திரராகிய இருவரையும் (ஒரேகாலத்தில் பிடித்தற்பொருட்டு) பின் தொடர்ந்து வருதல்போல (அவ்விராமலக்குமணர்களைத் தொடர்ந்து) வந்தவளவில

குறிப்பு —'அரவக்கோள் எனப் பொதுப்படக் கூறினாரேனும் விராதனோடு ஒப்புமை குறித்தமையான் கருநிறமுடைய இராகுவென்னுங் கோளையே தழுவிக் கருதிக்கொண்டுரைத்தாம். ஓரரவக்கோள் இருசுடரையும் ஒரேகாலத்தில் தொடர்ந்து பற்றல் யாண்டும் இன்மையின் இஃது இல்பொருளுவமை. (௩௨)

புண்ணணி டைப்பொழி யுமிரப்புனல் பொலிந்துவரவும்
விண்ணணி டப்படாதல விட்டெழு விகற்பநினையா
'வெண்ணனு டைக்குரிசி லெண்ணணியிளை யோயிலனையிம்
மண்ணணி டைக்கடிது பொத்துதல் வழக்கெனலுமே.

இ-ள். புண்ணிடை - விரணங்களினின்றும், பொழிபுனல் - வழிகின்ற ரத்தநீரானது, பொலிதர வரவும் - மேன்மேல் மிகுதிப் பெருகி வழிந்துகொண்டிருக்கவும், (அவ்வரக்கன்), உயிர் விண்ணிடைப் படாதலவிட்டு - உயிரானது மேலுலகத்திற்குப் போகாமல் [இறவாமல்], எழு - எழுகின்ற, விகற்பம் நினையா - மாறுபாட்டை நினைத்து, எண் உடை குரிசில் - யாவர்மனத்திலும் எழுந்தருளியிருத்தலையுடைய ஸ்ரீராமன், எண்ணி - (அவன் சாகாத தன்மையை) ஆலோசித்து, இளையோய்—'தம்பி!' இவனை இ மண்ணிடைக் கடிதுபொத்துதல் - இவ்விராதனை இப்பூமியில் விரைவாகப் புதைத்தல், வழக்கு - முறைமை', என்னும் - என்று சொன்னவனாயினன்.

குறிப்பு -இனி, உயிர்ப்புனல் என்பதற்கு அரத்தமென நேரே பொருளுரைத்துக்கோடலுமாகும் 'உடைய' என்னுங் குறிப்புப்பெயரெச்சம் ஈறுதொக்கது. குரிசில் - பெருமையிற் சிறந்தோன், ஆண்பாற் சிறப்புப்பெயர், குருஸ்ரீ என்பதன் திரிபென்பர். (௪௧)

மதநல யானையனை யானிலம வகிாநதகுழிவாய்
நதமு லாவுநளி நீாவயி னழுநதநவைதீ
ரதவ மாயநறுநெ யுணடுலகி லனபாகருதிற
றுதவுசேவடியி னுலமல னுநதுதலுமே

இ-ள மதநல யானை அனையான் -- சிறந்த மதயானையை ஒத்த லக்ஷ்மணன், நிலம வகிாநத குழிவாய - பூமியில வெட்டியெடுதத குழியினிடததில, நதம உலாவும நளி நீா வயின - ஆறறினது ஓடுகினற மிகக நீரினகண, அழுநத - அழுநதுமபடி, அமலன -அநாதிமலமுதததனாகிய ஸ்ரீராமபிரான, நவைதீா- குறறமநீஙகிய, அதவம ஆய - சுருவை எனனும நெயததுபபாய, நறுநெய உணடு - நலல (பசுவின) நெயயையபருகி, உலகிலனபாகருதிறறு உதவு - உலகததிலுளள பததாகளவிஎண்ணியவரஙகளைக கொடுககினற, சேவடியினால உநதுதலும - (தனது) சிவந்த திருவடிகளால (அவவரககனைத) தளளினவனாயின.

குறிப்பு —வாய, வயின என்பவை ஏழனுருபு நதம' மேறகுமுகநோக்கிச செலலும்யாறு நதி கிழககுநோககிசசெலவது நளி உரிசசொல "தடவுங கயவு நளியும் பெருமை."எனபது தொல்காப்பியம் 'நளிநீா' எனபது பாடமாயின குளிாநதநீரென்றுரைததுககொளக. அதவம-யாகாககினியில நெயயைசசொரியம அததிககட்டையை யாற்செய்த அகபபை நெருபபெழககடையும கட்டைககு 'அரணி'யென்று பெயா. அதம அதத, அம-சாரியை கருதிறறு சாதியொருமை சாதியொருமையாவது ஒரு சொல் ஒருமை யீறுதோனற நினறுமதோனறாது நினறும் பின ஒருமைபனமை வினையீறாக மேலவநதமுடிககுஞ சொறகளுமினறித தானே பனமைபபொருளுணாததுவது, இதனை வடநூலாா ஜாதயேகவசனமெனபா. "ஈறுதோனறிய சாதியொருமையு மீறுதோன்றாத சாதியொருமையு மெனவிருதிணைப்படு மிருதிணையொருமையு மீறுதோன்றாத சாதியொருமையு மெனவிருதிணைப்படு" "அஞசுவதஞசாமை பேதைமை" என்புழிப்போல நிற்றலின ஈண்டுக் கருதிற்று எனபது ஈறுதோனறியசாதி யொருமையாம ஒருபொருளில் நாட்டமுற்றிருப்பாாககு அசனிநூஞசிறந்த வேறொருபொருள் கைகூடின முன்னையதில் அவருக்கு விருபபஞ் செலலாதாகலின 'கருதிற்றுதவுசேவடி' என்றார்."வேண்டுவார் வேண்டியதே ஈகானகணடாய" "மனததிருநத கருததறிநது முடிப்பாயநீயே" என இவையெல்லாம இக்கருததே பற்றிவந்தன வென்க. (௪௨)

பட்ட தன்மையு முணர்ந்துபடர் சாபமிட்டமுனை
கட்ட வன்பிறவி தந்தகடை யானவுடலுன்
விட்டு விண்ணிடை விளங்கினன் விரிஞ்சனெனவோர்
முட்டை தந்ததனில் வந்தமுதன் முன்னவனினே

இ - ள். விரிஞ்சன் என - பிரமதேவனது உருவமாகி, ஓர் முட்டைதந்து-ஒப்பற்ற அண்டத்தைப்படைத்து, அதனில்வந்த - அவ்வண்டத்தினிடத்தே (காத்தற் பொருட்டு) திருவவதரித்த, முதல் முன்னவனின் - தேவாதிதேவனாகிய ஸ்ரீராமபிரானால், (அவ்வரக்கன்), முன்படர்சாபமிட்ட - முன்னே (குபேரன்) பெரியசாபத்தைக் கொடுத்ததனால்,(வந்த),வல் பிறவி கட்டம் தந்த கடையான உடல்விட்டு-வலியபிறவித்துன்பங்களைக்கொடுத்த இழிவான ராக்ஷஸசரீரம் நீங்கப்பெற்று, பட்ட தன்மையும் உணர்ந்து-முன்னே நடந்ததன்மையையு முணர்ந்து, விண் இடைவிளங்கினன் - ஆகாயத்தினிடத்தே (முன்னுள்ள கந்தருவசரீரத்தோடு) பிரகாசித்தான்.

குறிப்பு — பட்டதன்மையுணர்தல் - பூர்வஜன்மஞானம். பிறவித்துன்பங்களாவன - தன்னைப்பற்றிவருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமாம் இவைமுறையே ஆதியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் எனப்படும். முதல் முன்னவன் - யாவர்களுக்கும் முதல்வராகிய திரிமூர்த்திகளுள்ளும் முதன்மையான சர்வேசுரன். "உலகளந்த மூர்த்தியுருவே முதல்." எனவும் "முதலாவார் மூவரே அம்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர்வண்ணன்." எனவும் பெரியோர் பணித்ததுகாண்க. (௩௫)

பொறியி னொன்றியயல் சென்றுதிரி புந்தியுணரா
னெறியி னொன்றிநிலை நின்றநினை வுண்டதனினும்
பிறிவி லன்புதனி பண்டுடைய பெற்றிதனினு
மறிவு வந்துதவ நம்பனை யறிந்துபகர்வான்.

இ - ள். (அவன்), பொறியின் ஒன்றி - அயல்சென்று திரிபுந்தி உணரான் - பஞ்சேந்திரியங்களுக்கு வசப்பட்டு விஷயாந்தரங்களிலேபோய் அலைகின்ற புத்தியை உடைத்தாகாதவனாகி, நெறியின் ஒன்றி - நல்வழிப்பட்டு, நிலைநின்ற நினைவு உண்டதனினும்-நிலைபெற்று நின்ற எண்ணம் உண்டாகியதனாலும், பிறிவு இல் - நீங்குதலில்லாத, தனி அன்பு பண்டு உடைய பெற்றிதனினும் - ஒப்பற்ற அன்பு பழமையாய் உடைத்தானதன்மையினாலும், அறிவு வந்து உதவ - தத்துவஞானம் வந்துகூட, (அதனால்), நம்பனை - ஸ்ரீராம நம்பியை, அறிந்து பகர்வான் - (ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்சமென்று) தெரிந்து துதிப்பான்.

குறிப்பு — பொறி மெய், வாய், கண், மூக்கு, செவி. அயல் - அயற்புலன்களுக்கு ஆகுபெயர் "பிறந்தேன் பெற்றமக்கள்" என ஆழ்வாரும், "பிறியார் பிறிவேதென்னும்" என அயோத்தியாகாண்டத்தில் இந்நூலாசிரியர் தாமும் கூறியிருத்தலால் 'பிறி' என்பதோர் வினையுமுளதாகக் கொள்ளக்கிடக்கின்றது. எது வைநோக்கித் திரிந்ததெனினு மிழுக்காது. அன்பாவது - நமக்கினியவொன்று துணியப்படுவார் மேலுளதாகியகாதல். "என்னிலாரு மெனக்கினி யாரில்லை - யென்னிலும்மினி யானொருவனுளன்" என்ற தேவாரத்தால் நம்மினும் நமக்கினியார் கட்புலனே யாதலையறிக. அறியார் அன்பும் பத்தியும் ஒருபொருட் கிளவியென்பர்,

அன்பும் பத்தியும் தமமுன் வேறுதலை "பாட்டுக்கோ வன்பினுக்கோ பட்டிட்ட வன்பாதங்க, ணீட்டுக்கெல் லாங்குறுகி நின்றாய் பராபரமே" என்னும் செய்யுளறிக. (௨௪)

வேதங்க ளறைகின்ற வுலகெங்கும் விரிந்தனவுன
பாதங்க ளிவையென்னிற் படிவங்க ளெப்படியோ
வோதங்கொள் கடலன்றி யொன்றினோ டொன்றொவ்வாப
பூதங்க டொறுமுறைந்தா லவையுன்னைப் பொறுக்குமோ.

இ-ள். வேதங்கள் அறைகின்ற - சகல வேதங்களுந் துதியாநின்ற, உன் பாதங்கள் இவை - உன்னுடைய இப்பாதங்கள், உலகு எங்கும் விரிந்தன எனின். உலகங்களெல்லாம் பரந்தனவென்றால், படிவங்கள் - மற்றைத் திருவவயவங்கள், எப்படியோ - எத்தன்மையனவோ? ஓதங்கொள் கடல் அன்றி - குளிர்ச்சியைக் கொண்ட கடலில் மாத்திரமே யல்லாமல், ஒன்றினோடு ஒன்று ஒவ்வா - ஒன்றனோடொன்றொத்திராத, பூதங்கள் தொறும் உறைந்தால் - பஞ்சபூதங்களினும் தங்கினால், அவை உன்னைப் பொறுக்குமோ - அவை உன்னைத் தாங்குமோ?

குறிப்பு—வேதம் இதற்கு (தத்துவங்களை) அறிவது அல்லது அறிவிப்பது என்பது அவயப்பொருள். வேதங்களிற் கூறப்படுவனவெல்லாம் எம்பெருமானது திருவடிகளின் மகிமையேயாதலால் "வேதங்களறைகின்ற" என்றான் அறைகின்ற பாதங்களென விகுதியும் - இனி, 'வேதங்களறைகின்றவென்பதனை' உலகிற்கும் 'உன்' என்பதற்கும் விசேடணமாக்கிக் கூறுதலுமொன்று இவ்விராதன் எம்பெருமானுடைய முடிவிலாற்றலுடைமையை அறியகில்லாது உருவின் சிறுமைகண்டெள்ளிப்பொருது வீழ்ந்துபட்டானாகலின் தன்னைப்போலவே யுருவின் சிறுமை கண்டெள்ளி வீழ்ந்துபட்ட மாவலி யெனனுமரக்கன் வரலாறு கூறுவான் "உலகெங்கும் விரிந்தன வுன்பாதங்களிவையென்னில்" என்றான் இப்போது யான் சேவிக்கும் இவ்வரிய சிறியதிருவடிகளே முன்னம் உலகெங்கும் பரந்தனவென்னின், ஏனைய பெரிய திருவடிவங்களென்கொண் டென்செய்தனவோ? என்பான், "பாதங்களிவையென்னிற் படிவங்க ளெப்படியோவென்றான்" அணுவாகி மேருவாகி யப்பாலு மப்பாலுமாகி விளங்கும் எம்பெருமானைப் பிறராறிவாரென்றான் என்பதாம் "பிரானுன் பெருமை பிறரா ரறிவார், உரா அ யுலகளந்த ஞான்று வராகத், தெயிற்றளவு போதாவா றென்கொலோ வெந்தை, அடிக்களவு போந்த படி" என்னும் அருளிச்செயலையீண்டு நோக்குக ஒதம் வெள்ளமும் அலையுமாம். ஓதங்கொள் கடலினுறைதல் - திருப்பாற்கடலில் யோகநித்திரை செய்தலையும், பிரளய சமுத்திரத்தில் ஆலிலையிற் கண்வளர்தலையுங் குறித்தது சமுத்திரம் உன்னைத் தாங்கி நிற்பதோ எனின், அதுவும் உன் சாமாத்திய சக்தியால் தாங்கி நிற்பதாகக் காணப்படும் என்பான் 'ஓதங்கொள் கடலன்றி' என்றான். "பாலன் றனதுருவா யேழுலகுண் டாலிலையின், மேலன்று நீதுயின்றாய் மெய்யென்பர்—ஆலன்று, வேலை நீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ, சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்."என்னும் பாசுரத்தையுங்காண்க. பூதங்கள்-பிருதிவி, அப்பு, வாயு, ஆகாயம் என்பன. இவையொன்றினோடொன்றொவ்வாமையாவது - பிருதிவி, நிலையாயிருத்தலும் வாசனையுடையதாதலும்; அப்பு பாய்ந்தோடுதலும் குளிர்ந்த பரிசமுடையதாதலும்; தேயுமேனோக்கியெரிதலும் உஷ்ண ஸ்பரிசமுடையதாதலும், வாயு எல்லாத்திசையிலும் வீசுதலும் உருவின்றிப் பரிசமுடையதாதலும்; ஆகாயம் எங்கும் பரவியிருத்தலும்

ப்தகுணமுடையதாதலும் ஆகிய அவ்வவற்றின் பிரகிருதி சுபாவங்களென்க. "மண்கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமாம், ஒண்கனல்சுட் டொன்றுவிக்கு ஓவாமல்—வண்கால், பரந்துசலித் துத்திரட்டும் பாரகிலா காய, நிரந்தரமாய் நிற்கு நிறைந்து" என்னும் வெண்பாவினாலும் "மண்டிணிந்த நிலனும், நிலனேந்திய விசும்பும், விசும்புதைவரு வளியும், வளித்தலைஇய தீயும், தீமுரணிய நீரும் - என்றாங், கைம்பெரும்பூதத் தியற்கைபோல" என்னும் புறப்பாட்டினாலு மிதனையுணர்க. ஸர்வலோகங்களையும் பரமசக்தியாற் றாங்கும் ஸ்வசக்தனான உன்னைப் பூதங்கள் தாங்கவல்லன அல்லவென்பான் 'பூதங்க டொறுமுறைந்தா லவையுன்னைப் பொறுக்குமோ' என்றான். எம்பெருமான் பூதங்க டொறுமுறைதலை "திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசைப், படர்பொருண் முழுவது மாயவை யவைதொறு, முடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன், சுடர்மிகு சுருதியு ளிவையுண்ட சுரனே" என் மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார் திருவிருத்தத்தானுணர்க. 'பூதம்' என்கிற சொல்லாற்றலால், விநோதமாகக் காட்டப்படுமே சடைப்பூதங்களினுட்புகுந்த மனிதனை அவற்றைத் தாங்கிச் செலுத்துதல்போல, ஐம்பெரும்பூதங்களினுள் ளுறைகின்ற நீயே யவற்றைத் தாங்குகின்றாயென்பது தோன்றுமாறு ணக தொறும் எஞ்சாமைப் பொருளுணர் நின்று ஏழாம்வேற்றுமையிற் பயின்றுவருவதோர் இடைச்சொல். ஆக, 'வேதங்களறைகின்ற' எனவே சகல வேதமான பொருளாவன் என்பதும், 'உலகெங்கும் விரிந்தன' எனவே சர்வ வியாபியானவன் என்பதுவும், 'பாதங்களிவை' யெனவே, பத்துடை யடியவர்க் கெளியன் என்பதும், 'படிவங்களெப்படியோ' எனவே, சிந்தையு மனமுஞ்செல்லாப் பரம்பொருள் என்பதும், 'ஓங்கொளி கடலன்றி' யெனவே, வியூக நிலையும், 'பூதங்க டொறுமுறைந்தால்' எனவே, அந்தர்யாமி நிலையும், 'அவை யுன்னைப் பொறுக்குமோ' எனவே சர்வசக்தித்வமும் ஸர்வாதாரத்துவமும் ஆகிய இத்திவ்ய குணங்க ளனைத்தையுமுடையவன் ஸ்ரீராமனேயென்பதும் அவனே பரத்துவமென்பதும் பெறப்பட்டமையறிக. இப்பாட்டால் "அரியபுல னைந்தடக்கி யாயமலர்கொண் டார்வம், புரிய பரிசினாற் புலக்கல்—பெரியனாய், மாற்றாது வீற்றிருந்த மாவலிபால் வண்கைநீர், ஏற்றானைக் காண்பதெளிது" என்று பெரியார் பணித்தபடி, ஸர்வ வியாபியாகிய எம்பெருமானை 'பொறியி னுணர்வியல சென்றுதிரி புந்தியுணரான், நெறியி னுணர்நிலை நின்றநினைவு' உடையானே கண்டு சேவிக்கலாமென்பது பெறப்பட்டது. (௪௭)

கடுத்தகராங் கதுவநிமிர் கையெடுத்து மெய்கலங்கி
யுடுத்ததிசை யனைத்தினுஞ்சென் றொலிகொள்ள வுறுதுயரா
லடுத்தபெருந் தனிமூலத் தருமபரமே பரமேயென்
றெடுத்தொருவா ரணமழைப்ப நீயோவன் றேனென்றாய்.

இ - ள். கடுத்த கராம் கதுவ - கோபித்த முதலை காலைக்கௌவ, உறுதுயரால் - (அதனால்) உண்டான துன்பத்தால், ஒருவாரணம் - ஒப்பற்ற (கஜேந்திரனென்னும்) யானையானது, நிமிர்கை எடுத்து - நீண்ட தனது துதிக்கையை மேலெடுத்து, மெய்கலங்கி - உடல்தளர்ந்து, உடுத்ததிசை அனைத்தினும் - சூழ்ந்ததிக்குகளிலெல்லாம், ஒலிசென்று கொள்ள - ஒலிபோய்ப் பரவும்படி, அடுத்த - ஆபத்தில் (ரக்ஷகமாகப்) பொருந்திய, பெருந் தனிமூலத்து - பெரிய ஒப்பற்ற ஆதிகாரணமான, அரு பரமே பரமேயென்று - 'அரிய பரம்பொருளே! பரம்பொருளே!' என்று, எடுத்து அழைப்ப - குரலெடுத்துக் கூவியழைக்க, நீயோ அன்று ஏன் என்றாய் - நீயன்றோ அப்பொழுது ஏனென்று ஓடிப்போய் அதன் துன்பத்தைப்போக்கினாய்.

குறிப்பு:—தன்னிடமாகிய மலையைக் கலக்கியதனால் 'கடைந்தகரம்' என்றார் கரம் - ஆண்முதலை 'கடைந்த' என்னும் செய்வெனெச்சம் இங்கே காரணப்பொருட்டாய இறந்தகால முணர்த்தியது. உறுதுயர் - மிக்க துயரென்றுமாம். ஆயிரமயாண்டு முதலைவாயிலகப்பட்டு ஆகாராதிகளில்லாமையால் மிகுந்த துன்பம் என்பார் 'உறுதுயர்' என்றார். 'பரமே பரமே' அன்பு மிகுதிபற்றிவந்த அடுக்கு பரம் எல்லாவற்றிலுஞ் சிறந்தபொருள் யானையான பிறப்பிலும் விஷ்ணுபக்தி மாறாதிருந்தமைபற்றி 'ஒருவாரணம்' என்றார். "விரைசொல்லடுக்கே மூன்றுவரம்பாகும்" என்பவாகலின், விரைவுப்பொருள்பட மூன்றுதரம் 'பரமே பரமே பரமே' என்றழைக்கு முன்னரே 'ஏன்' என்றது, சொல்லி யோயுமுன்னரே அஞ்சலென முன்வந்துகாத்தளித்த விரைவுதோன்றற்கு (சஅ)

புறங்காண வகங்காணப் பொதுமுகத்தி னருணோக்க
மிறங்காத தாமரைக்க ணெம்பெருமா னியம்புதியா
லறங்காத்தற் குனக்கொருவ ராருமொரு துணையின்றிக்
கறங்காகு மெனத்திரிய நீயேயோ கடவாய்தான்

இ - ள். புறம்காண - புறத்தவர்கள்காணவும், அகம்காண - அகத்தவர்கள்காணவும், (இவ்விருதிறத்தவர்பக்கலிலும்), பொதுமுகத்தின் - பொதுத்தன்மையையுடைய, அருள்நோக்கம் - அருட்பார்வை, இறங்காத - நீங்காத, தாமரை கண் எம்பெருமான் - செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடைய எங்கள் தலைவனே! நீயேயோ - நீதானோ, அறம் காத்தற்கு, தருமத்தைக் காப்பதற்கு, உனக்கு ஒருவர் ஆரும் ஒரு துணை இன்றி - உனக்கு எவரொருவருஞ் சிறிதுந் துணையில்லாமல், கறங்கு என திரிய கடவாய் - காற்றாடி என்னும்படி அலையக் கடமையுடையவனாயிருக்கின்றாய்? இயம்புதி - சொல்வாயாக

குறிப்பு—இனி, 'புறங்காண அகங்காண' என்பதற்கு, புறக்கண்ணாற் காணவும் அகக்கண்ணாற் காணவும் எனவும் புறத்தவராகிய நிலம் முதலிய உலகத்தவர் காணவும் அகத்தவராகிய பரமபதத்தவர் காணவும் எனவும் பொருள்கொள்ளலுமையும் ஏண்டுப்புறம், அகம்-ஆகுபெயர்கள். எம்பெருமானது திருவருள் யாவர்மாட்டும் பக்ஷபாதமின்றி ஒருதன்மையதாய் நிகழ்தலிற் 'பொதுமுகத்தின் அருணோக்க' மெனப்பட்டது. அருளாவது, ஒன்றின் துயர்கண்டாற் காரணமின்றித் தோன்றும் இரக்கம் நோக்கம் ஈங்குத் தொழிற்பெயர் அத்திருவருள் தானும் இடையொருகால் தட்டின்றி எப்போதும் இடையறாது நிகழ்தலின் 'இறங்காத' என்றார். இனி, இறங்காத என்பதனைச் சிலேடையாக்கிப் புறத்தவர்களிடத்தே அருணோக்கம் பொருந்தாத எனவும், அகத்தவர்களிடத்தே அருணோக்கம் நீங்காத எனவும் கருத்துக்கொள்ளலாகும். தாமரைக்கண் எம்பெருமான் - புண்டரீகாக்ஷன் என்றபடி. தாமரை - முதலாகுபெயராய் மலரினை யுணர்த்திற்று தண்மை, மென்மை, கண்டோரை மகிழ்வித்தலாகிய இக்குணங்களிற் கண்ணுக்குத் தாமரை உவமம். எம்பெருமான் - அளபெடை விளியுருபு "அளபெடைப்பெயரே யளபெடையியல" என்பது தொல்காப்பியம் அளபெடை மூன்றுமாத்திரையின் நீண்டிசைத்தலாகிய விகாரமுடைமையான "ஆனென்னிறுதி யியற்கையாகும்" என்புழியடங்காமை யறிக. (சக)

துறப்பதே தொழிலாகத் தோன்றினோ தோன்றியக்கான்
மறப்பரோ தம்மையுது வன்றுகின் மற்றவர்போற

பிறப்பரோ வெவர்க்குந்தாம் பெற்றபதம் பெறலரிதோ
விறப்பதே பிறப்பதே யெனும்விளையாட டினிதுவந்தோய்.

இ - ள். இறப்பதே பிறப்பதே எனும் - இறத்தலும் பிறத்தலுமென்கின்ற, விளையாட்டு இனிது உவந்தோய் - விளையாட்டை இனிமையாக (திருவுள்ளம்) உவந்து செய்பவனே! துறப்பதேதொழிலாகத் தோன்றினோர் - துறத்தலையேதொழிலாகக்கொண்டு தோன்றி முற்றத்துறந்த முனிவர்கள், தோன்றியகால - பிறந்தால், மறப்பரோ - தமது முன் நிலையை மறப்பாரோ? [மறவார்]; அது அன்று ஆகில் - அதுவுமன்றி, மற்றவர்போல பிறப்பரோ - துறவாத ஏனைச் சாமானியர்போலப் பிறப்பாரோ? [பிறவார்,] எவர்க்கும் தாம்பெற்றபதம் பெறலரிதோ - எவர்க்கும் தாம் அடைந்துள்ள உயர்பதவியை அடைதல் அரியதோ? [இல்லை].

குறிப்பு — விடாதுதொடர்ந்துபற்றுகின்ற பூர்வகன்மமுண்மையிற் பிறக்கநேரினும், உலகில் துறவிகளாக வெளிப்படுவார் தமது முன்னைய நிலைமையை மறவாதொழிதும், மெய்யுணர்வில்லாத ஏனைமாக்களைப்போன்று பிறந்து வருந்தாரென்பதும், இத்தகைய மெய்ஞ்ஞானியர்கட்கு முன்னர்த் தாம்பெற்ற அவ்வுயர்பதவியை மீண்டும் பெறுதல் அரிதன்றி எளிதாமென்பதும் இதனாற்கூறப்பட்டது. இது புனைந்துரை புகழ்ச்சியென்னு மணியாகும் வஞ்சப்புகழ்ச்சியணியிற் சிறிது பேதப்பட்டுவது இதன் இலக்கணமாம்; ஒன்றென்றே சாதிப்பாருமுளர். "சாதகம் இவனையென்றி மற்றை யாரையும் யாசிப்பதில்லை". எனவும் "தன்முலையார் வந்தடிக்கடிபார்க்கி லாயக்குமபொய்தானும் சொல்லாய, அவர் செருக் குறைகேடிலாய விருப்பாலவரிடம்போ யலையாய் நலல, தெனவருமைம புலமுரிய போதத்தில் துயிலுறுகா லெல்லாந் தூங்கித், தினமகிழ்கின் றுயிர்தறகே யெத்தவமெய்ந் தந்திருந்து செய்தாய் மானே!" என விவற்றை முறையே இவ்விரண்டணிகட்கு உதாரணமாகக் காட்டினர் இவை தம்முட் பேதமாமாறுயத்துக்கொண்டுணர்தற்பாற்று. ஈண்டு விரிப்பிற்பெருகும். இங்ஙனம் பிரஸ்துதமல்லாத பிறிதொன்றின் சமஸையைக் கூறியதனானே ஸ்ரீராமன் துறவிபோலத் தோன்றினும் ஸ்ரீமந்நாராயணனே யாவானென்பதும், இத்திருவவதாரம் கர்மத்தாற் பிணிப்புண்ட மற்றையோரது பிறப்பைப்போலன்றி, உலகப் பாதுகாப்பின்பொருட்டே கொண்டருளப் பெற்றதென்பதும் லோகஸம்ரக்ஷணார்த்தமாக இங்ஙனந் திருவவதரித்தலை ஒருலீலையாகக்கொண் டிருக்கின்றானென்பதும் பிறவும் நன்குவிளக்கப்பட்டமை யறிக. தோன்றியகால - கால்ீற்றெதிர் காலவினையெச்சம் ... ஊமத்தாற்பிறந்து மீராவுபடுகிற என்து பிறவிபோலன்றி என்னையும் என்போன்ற பல்லுயிர்களையும் பவப்பெருங்குழியினின்று கரையேற்ற, "பகுதாவி ஜாயதே" என்னும் சுருதியின்படி பிறக்கும் உன்னுடைய பிறவிகள் அனந்தமும் நின் இச்சைவழிப்பட்டனவுமாமென்பான் "இறப்பதே பிறப்பதே யெனும் விளையாட்டினிதுவந்தோய்" என்றான். "உலப்பில்லன எங்கின்ற யோனியுமாயப் பிறந்தா யிமையோர்தலைவா" என்றார் திருவாய்மொழியினும். "அஃதன்று" எனவும் பாடம். (௰)

பனிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் படிபற்றி
நனிநின்ற சமயத்தோ ரெல்லாரு நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின் றகைமூர்த்தி நீயாகி
னினிநின்ற முதற்றேவ ரென்கொண்டென் செய்வாரே.

இ - ள். பணி நின்ற - அச்சந்தரும்படி நின்ற, பிறவிப்பெருங் கடல் - பிறப்பாகிய பெரிய கடலை, கடக்கும்படி - (நீந்தி) தாண்டும்படி, பற்றி - புணையாகக்கொண்டு, தனிநின்ற சமயத்தோர் எல்லாரும் - (சமயக்கோட்பாட்டில்) மிகுதியாகப் பற்றி நின்ற எல்லாச் சமயத்தாரும், நன்று என்ன - (உய்வதற்கு) நல்ல உபாயமென்று சொல்லும்படி, தனிநின்ற - ஒப்பற்று நின்ற, தத்துவத்தின் தகைமூர்த்தி நீ ஆகின் - பெரிய தத்துவ ஸ்வரூபி நீ ஆனால், இனி நின்ற முதல்தேவர் - பின்பு அவ்வச் சமயங்களுக்குத் தலைவராய் நின்ற தேவர்கள்; என்கொண்டு என் செய்வாரே - என்ன பெருமையைக்கொண்டு என்ன காரியங்களைச் செய்வார்கள்.

குறிப்பு—பணி - நடுக்கமும் வருத்தமுமாம். இனி, 'பணி' என்பதற்குக் குளிர்ச்சிபொருந்திய எனக்கொண்டு கடலோடு கூட்டியுரைத்தலுமொன்று. "பிறவிப் பெருங்கடல் நீந்துவர்" என்னுந் திருக்குறளையும், "காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலால் பிறவிக்கடலென்றார்" என்று ஆசிரியர் பரிமேலழகியார் வகுத்த அதன் உரையையுங் காண்க. சமயம் - மதம். 'ஆகின்' என்னும் எதிர்கால வினையெச்சம் இங்குத் துணிவுகுறித்துநின்றது. பல்பல சமயத்தோரும் தாம் தாம் பற்றிநின்ற கடவுளே நன்றெனக்கொண்டு போற்றும் வழிபாடுகளை நீயே பெற்றுக்கொண்டு அவரவர்கட்குத் தக்கவாறு பலனளிக்கின்றாய் என்றான் என்பதாம். "நம்பின கவிகொண்டு நம்முமிட்ட தெய்வமேத்தினும் - செம்மின திருமுடியென் திருமாலுக்குச் சேருமே" என்று குருகூர்ச் சடகோபர் பணித்ததுகாண்க. தத்துவம் - மூலப்பிரகிருதி, மஹத், அகங்காரம், மனம், கர்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, தன்மாத்திரைகள் ஐந்து, பூதம் ஐந்து, ஆக இருபத்துநான்கு மென்பர்; இவற்றோடு ஜீவனையும் ஈசுவரனையுங் கூட்டித் தத்துவங்கள் இருபத்தாறெனவும், பின்னாக காலத்தையுங்கூட்டி இருபத்தேழெனவுங் கூறுகிறபா, இவ்விருபத்துநான்கு தத்துவங்களும் தோன்றுமுறைமையை "நிகழ்பரந் தாம மாகிச் சின்மய மாக நீல - முகிலெனத் திகழ்ந்து தோன்று முழுமுதல் பாகக மூலப் - பகுதியின் மகானுண்டாகும் பகாதரு மகானினின்று, தகைமைசால் குணங்கள் மூன்றுந் தழுவகங்காரந் தோன்றும," "தலைமைசால் சிறப்பு வாய்ந்த தாமத வகங்காரத்தின், ஒலியெழு மொலியிற் றோன்று மோங்குவா னவானிற் றோன்று, மலியுமூ றூறிற் றோன்றும் வளியெறி வளியிற் றோன்று, நிலவொளி வொளியினின்று, நிமிர்சுடர்க் கனலி தோன்றும்," "சுடர்விடு கனலி தன்னிற் சுவையெழுஞ் சுவையினின்றும், படுபுனல் வந்து தோன்றும் பாய்திரைப் புனலினின்று, மொடிவிலா நாற்ற முண்டா மோங்கிய நாற்றந் தன்னின், நெடுநிலந் தோன்று மென்று நிகழ்த்து நான்மறையு மின்றே," "விண்ணொலி தழுவுங் காற்று மேவுறு மொலியு மூறு, நண்ணுமா லொலியு மூறு, நலந்திகழுருவுஞ்செந்தீ - தண்ணற லொலியு மூறு முருவமுஞ் சுவையுஞ் சாரு, மண்ணினை நான்கனோடு மணத்தையும் புணர்ந்து மன்னும," "ஒதரி" ராசதகுணத்தோடொன்றிய வகங்காரத்தின், பத்தெனு மிந்திரியங்கள் படமனந் தன்னோடும்மா, சத்துவகுணத்தினோடு தழுவகங் காரத் துண்டா மதத்தை யிந்திரியங்கட்டமைத்திட்டான் தெய்வம்" என்னும் பாகவதச் செய்யுளானறிக. 'என்ன' என்னும் வினாவினைக்குறிப்பு 'என்' என விகாரப்பட்டுவந்தது. (௯)

ஓயாத மலரயனே முதலாக வுளராகி
மாயாத வானவர்க்கு மற்றொழிந்த மன்னுயிர்க்கும்
நீயாகின் முதற்றாதை தெரிமுறையா லீன்றெடுத்த
தாயாவார் யாவரே தருமத்தின் றனித்தாயே.

இ - ள் தனி - ஒப்பற்ற, தருமத்தின்மூர்த்தி - தருமஸ்வரூபியானவனே! [ஒழி]யாத - ஒழிவில்லாத, மலர் அயனே முதல் ஆக - (திருமாலின்நாபிக்) கமலத்திற் [தோ]ன்றிய பிரமன் முதலாக, உள்ள ஆகி - உள்ளவர்களாகி, மாயாத - அழியாத, [வா]னவர்க்கும் - தேவர்களுக்கும், ஒழிந்த - (அந்தத்தேவர்கள்) நீங்கலான, மற்று மன் [னு]யிர்க்கும் - மற்றைய நிலைபெற்றுடைய உயிர்களுக்கும், முதல் தாதை நீ ஆகின் - [மு]தலான தந்தை நீ ஆனால், நெறிமுறையால் ஈன்று எடுத்த - உலகவழக்கப்படி (அவ்வுயிர்களைப்) பெற்றுவளர்த்த, தாய் ஆவார் யாவரே - (முதல்) தாயாகுவோர் [வே]று எவர்?

குறிப்பு — கற்பங்கடோறும் படைக்கப்படுகின்ற பிரமாக்களையு முள்ளிட்டு [ஒழி]யாத மலரயனே முதலாக' என்றார் இனி, 'ஓயாசமலரயன்' என்பதற்குப் படைப்புத்தொழிலில் சிறிது மொழிவில்லாத வென்றுமாம் மற்றாவிஷ்ணுவினது நாபிக்கமலத்தினிடத்தில் உதித்தவனாதலால், 'மலரயன்' என்றார் 'மலரயனே முதலாக' என்றதனால் அவனே முதலிலுண்டானவனென்பதும், மற்றையுயிர்க்கும் அவனே காரணனென்பதும் பெற்றாம் மாயாத வானவர் அமரர் தேவர்களுக்கும் மரணமுண்டாயினும் மக்களைப்போலன்றி நெடுங்கால வாழ்வுடையராதலின் அவரை [மற்றை]மைவிளங்க 'மாயாத' என்னுஞ் சிறப்படைதந்தார் உயிர்கள் தத்தம் கருமபலத்திற்கேற்பச் சரீரம் எடுத்தாலும் அழியாது நிற்றலின், 'மன்னுயிர்' என்றார் பிதா[வா]கிய பிரமனையும் படைத்தவனாதலால் 'முதற்றந்தை' என்றார். இனி உலகுக்[கு மு]தலாந் தான் ஆதிகாரணமாய்த் தனக்கொரு காரணம் வேண்டாதிருத்தலா[லு]ம், மற்றைப் பிதாக்களைப் போலன்றி ஆன்மாக்களை நன்னெறியில் ஒழு[கு]வித்துச் சிறப்புத்தருங் காத்தருளும் தந்தையாதலாலும் 'முதற்றந்தை' [என்]றாரெனினு மொன்று 'முதல்' என்பதனைத் தாய் என்பதனோடுங் கூட்ட[லா]கும். 'தாயாவார் யாவரே' என்றது ஒருவருமில்லை நீயே யென்றபடி, மேல் "உல[கீன்ற] தாய்" என்பதுங் காண்க. (௩௨)

நீயாதி பராபரமு நின்னவே யுலகங்க
ளாயாத சமயமுநின் னடியவே யயலில்லை
தீயாரி னொளித்தியால் வெளிநின்றாற் றீங்குண்டோ
வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ

இ - ள் ஆதிபராபரமும் நீ - முதன்மையான பராபரவஸ்துவும் நீயே, உலகங்கள் நின்னவே - சர்வலோகங்களும் உன்னுடைமையானவைகளே, ஆயாத சமயமும் - ஆய்ந்தறிதற்கொண்ணாத பலபல மதங்களும், நின் அடியவே - உன்றன் திருவடிகளைப்பற்றியனவே, அயல் இல்லை - வேறு இல்லை, (இங்ஙனமாகவும்), தீயாரின் ஒளித்தி - வஞ்சகர்போல (நீ யுன்றன் ஸ்வரூபத்தை) ஒளித்திருக்கின்றாய், வெளிநின்றால் - (அவ்வாறு ஒளியாது) வெளிப்பட்டு நின்றால், தீங்கு உண்டோ - (உனக்குத்) தீமையுண்டோ? வீயாத - அழியாத, பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ - பெரிய மாயையாகிய திருவிளையாடலும் (உனக்கு) வேண்டுமோ?

குறிப்பு — ஆதி முன்னிலை வினைமுற்றுமாம், ஆகின்றாயென்பது பொருள் [நின்]னவே' என்பதனைப் பலவின்முற்றாகக்கொண்டு, உலகங்களை நின்னை முதலா[யு]டையனவென்று உரைத்தலுமொன்று காணப்பட்ட உலகினைக்கொண்டு காணப்படாத எம்பெருமானை யறியவேண்டியிருத்தலின் இங்ஙனம் உலகின்மேல்வைத்[துக்] கூறினானென்க, "ஆதிபகவன் முதற்றேயுலகு" என்பதுபோல. உலகிற்கேய்

கின்ற நீரெல்லாம் முடிவிற் கடலிலே கலக்குமாபோல் எல்லாத்தேவர்களை உத்தேசித்துஞ் செய்கின்ற வந்தனோபசாரங்கள் யாவும் சர்வேச்சுரனையே சேருதலால் 'ஆயாத சமயமும் நின்னடியவே' என்றான். இனி, 'தீயாரின் ஒளித்தி' என்பதற்குத் தீயவர்க்கு ஒளிக்கின்றாய் எனவும் பொருள்கொள்ளலாகும். (௫௩)

தாய்தன்னை யறியாத கன்றில்லை தன்கன்றை
யாயுமறி யுமம்நப்போ லுலகின்றா யாகினைய
நீயறிதி யெப்பொருளு மவையுன்னை நிலையறியா
மாயையிது வென்கொலோ வாராதே வரவல்லாய்.

இ-ள். ஐய - தலைவனே!, வாராதே வரவல்லாய் - (அடியவர்க்கு) வருதற்கரியானபோ லிருந்து மிக்க எளிமையாய் வரத்தக்க வல்லமையுடையானே, (உலகத்தில்), தாய்தன்னை அறியாதகன்று இல்லை - தன்னைப்பெற்ற தாயையறிந்து கொள்ளாத கன்றில்லை, (அவ்வாறே), தன் கன்றை ஆயும் அறியும் - தன் கன்றைத் தாயுமறிந்துகொள்ளும், (அங்ஙனமாக), உலகின் தாய் ஆகின் - நீ எவ்வுலகத்திற்குந் தாய் ஆனால், நீ எப்பொருளும் அறிதி - நீ எல்லாப்பொருளையு மறிகின்றாய், அவை உன்னை நிலை அறியா - அப்பொருள்களெல்லாம் உன்னை இந்நிலையினென்ன அறியமாட்டா, மாயை இது என் கொல் - இம்மாயையாதோ?

குறிப்பு—'கன்று' எனக் கூறினமையால் பசுவையே 'தாய்' என்றது என்க. அன்பு மிகுதியும் உடைமையான பசுவைக் கூறலுற்றான். "பல்லாவுட்புகுத்து விடினுங் குழக்கன்று - வல்லதாந் தாய்நாடிக்கோடலை" என்றார் நாலடியாரிலும். உலகு இன்தாய் எனக் கண்ணழித்து உலகத்திற்கு இனியதாய் என்றுமாம். ஆகின் துணிவுப்பொருளது. பூஜ்யவாசகமாகிய 'ஆர்ய' என்னும் வடமொழி, பாகதமாய்ப் பின் 'ஐய' எனத் தமிழில் வந்தது. "வந்தாய்போல் வாராதாய் வாராதாய்போல் வருவானே" என்றார் பெரியாரும். (௫௪)

பன்னலா மென்றுலகம் பலபலவு நினையுமா
லுன்னலாற் பெருந்தெய்வ முயர்ந்தோ ரொழுக்கன்றே
யன்னவூர் திமுதலா மந்தணர்மாட் டருந்தெய்வ
நின்னலா லில்லாமை தெரிகின்றார் நினையாரோ.

இ-ள். உலகம் - உலகத்திலுள்ள ஜனங்கள், பன்னலாம் என்று - துதிக்கலாம் என்று, பலபலவும் நினையும் - பலபல தெய்வங்களையு நினைக்கும், (என்றாலும்) உன் அல்லால் பெருந்தெய்வம் - உன்னையல்லாமல் வேறொரு சிறந்ததெய்வம் (உண்டென்றல்), உயர்ந்தோர் ஒழுக்கு அன்றே - உயர்ந்தோர்களது ஒழுக்கமன்று, அன்னம் ஊர்தியை முதலாம் - பிரமனை முதலாகவுடைய, அந்தணர் மாட்டு - மேலோர்களால் ஆராதிக்கத்தக்க, அருந்தெய்வம் - அரியகடவுள், நின் அல்லால் இல்லாமை - நின்னையல்லாமல் இல்லாமையை, தெரிகின்றார் நினையாரோ - சாஸ்திரமார்க்கத்தில் நிற்பவரான அம்மேலோர் ஆராய்ந்தறியாரோ? [அறிவர்]

குறிப்பு—'உண்டென்றல்' என்பது சொல்லெச்சம். "காலமுலக முயிரே யுடம்பே, பால்வரை தெய்வம் வினையே பூதம், ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉ, மாயீரைந்தொடு பிறவுமன்ன, ஆவயின் வரூஉங் கிளவியெல்லாம், பால்பிரிந்திசையா வுயர்திணைமேன" என்பவாகலின் 'நினையும்' என வினைகொண்டது 'உலகம்'

ஈண்டு ஆகுபெயரன்று வடநூலுள் உலகமென்பது இருதிணைக்கு முரித்தாக ஓதப்பட்டமையின், மக்கட்டொகுதியை யுணர்த்துமவழியு முரிய பெயரேயாமென்பது. ஊர்தி - ஊரப்படுவது, தெய்வம் - தைவம் என்னும் வடசொல். ஒழுக்கு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். அன்னம் - ஹம்ஸம் என்னும் வடசொற் சிதைவு. 'அஞ்சம்' என்பப் பயின்று வருதலுமுடைத்து அந்தணர் - அழகிய தட்பத்தினையுடையார், அந்தத்தை அணுவுவோரென வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பவருமாம் உன்னையல்லாமல் வேறு பெருந்தெய்வத்தைக் கண்டறியலாமென உலகம் பலவுமறிவினையு நினைக்கும் அது உயர்ந்துளோர் ஒழுக்கு அன்றெனவுமாம் இத்துணை சாமானிய ஜனங்கள் நின்பால் அன்புசெலுத்த நீ "என்பால் அன்பு செலுத்துவோரது விதத்தை அறிகின்றேன்" என்பதற்கிணங்க அவர்களது துன்பத்துக்குக் காரணமாகிய செல்வம் முதலியனவற்றைக் கவர்தல் கண்டு வேறு முதலிருமாற்றலில்லாத காமத்துக்கே விட்ட தெய்வங்களைப் பலித்தந்து பேணியுறலவாரெனவும் வேதாந்த விசாரிகளாகிய மேலோர்கள் நின் அருட்பிரபாவத்தையறிந்து நின்னையே வணங்குவார் எனவும் கூறிற்றென்க. (௫௫)

பொருவரிய சமயங்கள் புகலுகின்ற புத்தேளி
ரிருவினையு முடையார்போ லருந்தவமின் றியற்றுவார்
திருவுறையு மணிமார்ப நினக்கென்னை செய்பால
தொருவினையு மில்லார்போ லுறங்குதியா லுறங்காதாய்.

இ-ள் திரு உறையும் அணிமார்ப - திருமகள் வீற்றிருக்கின்ற அழகியமார்பினையுடையவனே! உறங்காதாய் - தூங்காதவனே! பொருவு அரியசமயங்கள் புகலுகின்ற புத்தேளிர் - பலமதங்களிலுள்ளவர்களும் (தத்தம்தெய்வமென்று சிறப்பித்துச்) சொல்லுகின்ற தேவர்கள், இருவினையும் உடையார்போல - நல்வினை தீவினையென்னும் இரண்டுவினைகளையும் உடையவர்களைப்போல, அருந்தவம் இன்று இயற்றுவார் - அரியதவத்தினைச் செய்துநிற்பார்கள், நினக்கு செய்பால என்னை - உன்றனக்குச் செய்யப்வேண்டியகாரியங்கள் என்ன இருக்கின்றன, [ஒன்றுமில்லை] (ஆகையால்,) ஒருவினையும் இல்லார்போல - வினையொன்று மில்லாதவரைப்போல, உறங்குதி - நித்திரைசெய்தருளுகின்றாய்.

'பு-சமய ஆகுபெயர் புத்தேளிர் 'புத்தலிகா' அல்லது 'புத்தலிகா' என்னும் வடசொற்சிதைவென்க, இதனைப், புதுமை + இளமையென்னும் பண்படிகளாகப்பிறந்த பெயரென்பாருமுளர், இவற்றிறந்து விக்கிரகரூபமாய் விளங்குவோரெனவும், இளமைமாறா திருப்போரெனவும் பொருள் இருவினை புண்ணியபாபங்கள், நல்வினையுந் தீவினைபோலப் பிறப்புக்குக் காரணமாகலான், 'இருவினையுமுடையார்போல' என்றான் மெய்ஞ்ஞானத்தைக்கொடுத்துப் பந்தப்படுத்துதலின், புண்ணியபாபகருமங்கள் தம்முள் வாசிபெற்றிருத்தலாய ஒருவனுக்குப் பொன்விலங்கும் இருப்புவிலங்கும்போல எண்ணத்தக்கனவாமென்க. "இருள்சேரிருவினையுஞ் சேரா" என்றார் செந்நாப்போதாரும் இருவினையும், உம்மை "இனைத்தென்றறிந்த சினைமுதற்கிளவி வினைப்படுதொகுதியின்" வந்தது தேவர்கள் இருவினைகாரணமாகப் பயன்கருதித் தவஞ்செய்தல்போல உனக்கு வேண்டற்பால பயன் யாதும் இன்மையின் நீ தவவேடங்கொண்டிருப்பது எதன்பொருட்டு என்பான் 'நினக்கென்னை செய்பால' என்றான் போல ஒப்பில் போலிகளாம். 'மணிமார்பு' கவுத்துவமணிபொருந்திய மார்புமாம். நினக்கு: குவ்வுருபு ஈண்டு வினைமுதற்

பொருட்கண்வந்தது, "ஒன்று மூன்றுகான காறெனு முருபொடு,வருமே வினைமுத லென்வகுத் தனரே" என்பது சூத்திரம், 'உறங்காதாய்' என்பதற்கு மற்றையோர்களைப்போலத் தூங்காது அறிதுயில் அமர்பவனே யென்றும், அழியாதவனே என்றும் பொருள்கொள்க (௫௬)

அரவாகிச் சுமத்தியா லயிலெயிற்றி னேந்துதியா
லொருவாயின் விழுங்குதியா லோரடியா லொளித்தியாற்
றிருவான நிலமகளை யிஃதறிந்தாற் சீறாளோ
மருவாருந் துழாயலங்கன் மணிமார்பின் வைகுவாள்.

இ - ள் திரு ஆன நிலமகளை - அழகுபொருந்திய பூமிப் பிராட்டியை, அரவு ஆகி சுமத்தி - ஆதிசேஷனாக (நீகீழிருந்து) தாங்குகின்றாய், அயில் எயிற்றின் ஏந்துதி - கூர்மையாகிய கோட்டினால் எடுக்கின்றாய், ஒருவாயின் விழுங்குதி - ஒருவாயில் விழுங்குகின்றாய், ஓர் அடியால் ஒளித்தி - ஒரு திருவடியால் அளந்து மறைக்கின்றாய், இஃது - இவ்வாறு அவளிடத்தே அன்பு பாராட்டுதலை, மரு ஆரும் துழாய் அலங்கல் - வாசனைபொருந்திய திருத்துழாய் மாலையணிந்த, மணிமார்பின் வைகுவாள் - அழகிய திருமார்பில் இருக்கின்ற திருமகள், அறிந்தால் சீறாளோ - அறிந்தால் கோபிக்கமாட்டாளோ, [ஊடல் கொள்ளாளோ?]

குறிப்பு—எயிற்று நுனியினேந்துதல் - வராக அவதாரத்திலும், வாயின் விழுங்குதல் - பிரளயகாலத்திலும், அடியிலொளித்தல் - திருவிக்கிரமாவதாரத்திலுமென வறிக. அரவாகிச் சுமத்தல் "நாகங்களில் அனந்தனாகின்றேனயானே" எனக் கீதையிற் கண்ணன் கூறியவாற்றானு முணர்க. "அனந்தரூபச் சுமந்தம்" என்றார் பாகவதத்திலும் பெரிது பெரிது என்று பாராட்டப்படுகின்ற இவ்வுலகம் "புவியோ அரவுக்கோர் தலைப்பாரம்" என்றபடி ஆதிசேஷரூபச் சுமக்குங் காலத்துநினக்கொரு தலையின்பாரமு மாகாதென்பதும், "ஒருகோட்டின் மேற்கிடந்ததன்றே" என்றபடி வராகப் புக்கிடந்த காலத்து ஓர் எயிற்றிற்கு மீதாதென்பதும், "ஒரு துற்றுக்காற்றாவால்" என்றபடி உண்ணுங்காலத்து ஒருகவளமுமாகாதென்பதும், "அரியுமபடி கடப்ப" என்றபடி அளக்குங்காலத்து ஓரடிக்கும் பற்றாதென்பதுங் கூறி எம்பெருமானது வரம்பிலாற்றலுடைமையைத் துதித்தான் எனக. திருமகள் அறியாதிருக்கும்படி வெவ்வேறு வடிவுகொண்டு பூமிவியைக்கொண்டாடுகின்றாய், அத்திருமகள்தானும் பக்கத்தினளோ? நினைவு கூடி வாசலத்துணளாகவன்றோ விருக்கின்றாள் அவளறியக்கிலலாது செய்கின்ற இம்மாமாயம் ஒருசமயம் ஸ்ரீதேவி அறியக்கிடப்பின் சோகங்கொள்ளாளோ என்றபடி "இது நீ படைத்திடந் துண்டுமிழ்ந்தபார்" என்றார் பெரியாரும் 'திருவான' என்பதற்குச் செல்வம்பொருந்திய எனப்பொருள்கொண்டு 'வஸுந்தரா' என்பதோடொப்பிக்கவுமாம். அலங்கல்-மாலைக்குத் தொழிலாகுபெயர் துழாய் - 'துளஸி' என்பதன் சிதைவு (௫௭)

மெய்யைத்தான் சிறிதுணராது நீவிதித்த மன்னுயிர்கள்
ஐயத்தா லுகாதோ வுனக்கென்ன குறையுண்டோ
வையத்தார் வானத்தார் மழுவாளிக் கன்றளித்த
வையத்தாற் சிறிதையந் தவிர்ந்தாரு முளரையா.

இ - ள். ஐயா-தலைவனே! நீவிதித்தமன்உயிர்கள்-நீபடைத்த நிலைபேறுடைய உயிர்கள், மெய்யைச் சிறிது உணராது - (நீயே பரத்துவமென்னும்) உண்மையைச்

கொஞ்சமாயினுந் தெரிந்து உய்யத்தான் ஆகாதோ - உஜ்ஜீவிக்கலாகாதோ! உனக்கு என்ன குறையுண்டோ - (அங்ஙனம் உஜ்ஜீவிப்பதால்) உனக்கு ஏதேனும் குறை வந்துசேருமோ? மழுவாளிக்கு - பரமசிவனுக்கு, அன்று அளித்த ஐயத்தால் - (பிரம கபாலத்தையேந்திப் பிச்சையேற்றுத்திரிந்த) அந்தக்காலத்தில் கொடுத்தருளிய பிச்சையினால், சிறிது ஐயம் தவிர்ந்தாரும் - சிறிபசந்தேகமும் நீங்கப்பெற்றவர்கள், வையத்தார் வானத்தார் உளர் - பூவுலகத்தவருள்ளும் வானுலகத்தவருள்ளும் உண்டு.

குறிப்பு.—இனி, 'மெய்யைத்தான் சிறிதுணர்ந்து' என்பதற்கு "தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்ன,தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைக்கண்டாருமஃதே, வாள்கொண்டகண்ணார் யாரே வடிவினை முடியக்கண்டார்" என்றபடி உன்னுடைய திருமேனியின் அழகை முற்றுங்காணவியலாவிடினும் சிறிதாயினுமுணர்ந்து எனவும், 'உய்த்தானாகாதோ' என்பதற்கு அங்ஙன முணர்ந்தவளவில் இச்சுந்தரபுருஷனே உய்ப்பிக்கவல்லனென்று கொண்டு உய்யலாகாதோ எனவும், 'உனக்கென்னகுறையுண்டு' என்பதற்கு நீ செவிக்கின்னாத செய்கையாது உடையனாய் இருக்கின்றாய் எனவும் பொருள்கொண்டு "காணிலும் முருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார், பேணிலும் வரந்தரு மிடுக்கிலாத தேவரை, ஆணமென்றடைந்துவாழு மாதர்காளெம் மாதிபால், பேணினும் பிறப்பெனும் பிணக்கறுக்க கிற்றிரே" என்னும் பாசுரத்தோடு ஒப்பித்தலுமாம் 'நீவிதித்த மன்னுயிர்கள் உய்யத்தான் ஆகாதோ உனக்கென்ன குறையுண்டோ' என்பதற்கு "சாமிக்குவிட்ட ஆடு அடி" என்று சொல்லுமாபோல நீபடைத்தவையும் உன்னுடைய சொத்துக்களுமாயிருக்கின்ற இவ்வுயிர்கள் உஜ்ஜீவிக்குமவிஷயத்தில் எமக்கென்னகவலை நீயன்றோ கவலையுடையவனாக்வேண்டும் அங்ஙனம் உய்விக்க ஒண்ணாதபடி குறையையுடையவனுமல்லையே! (ஐயமிட்டுக்காத்ததை உலகறியுமே) என்று ஆக்கத்தானென்பப் பொருள் கோடலுமாம் ஐயமாவது - இதுவோ அதுவோவென்று ஒன்றிலுந் துணிவுபெறாதிற்றல். ஐயம் - பிச்சை "தாழ்த்துச் சங்கரனிரப்ப, முடைத்தலை தவிர்த்தோர் முளரிமாமலர்" என்றார். இவ்வியக்கவி பிள்ளைப் பெருமாளையங்காரும் (௩௮)

அன்னமா யருமறைக ளறைந்தாயநீ யவையுன்னை
முன்னமா ரோதுவித்தா ரெல்லாரு முடிந்தாரோ
பின்னமா யொன்றுதல் பிரிந்தேயோ பிரியாதோ
வென்னமா மாயமிவை யேனமாய மண்ணிடந்தாய.

இ - ள் ஏனமாய மண் இடந்தாய - வராகரூபியாய்ப் பூமியைக் கோட்டாற் குத்தி எடுத்தருளினவனே! நீ அன்னமாய அருமறைகள் அறைந்தாய - நீ ஹம்ஸரூபங்கொண்டு அறிதற்கரிய வேதங்களை (பிரமனுக்கு) உபதேசித்தருளினாய், அவை முன்னம் உன்னை ஓதுவித்தார் யார் - அவ்வேதங்களை முன்னம் உனக்குக் கற்பித்தவர் யாவர்? எல்லாரும் முடிந்தாரோ - (அவர்கள்) அனைவரும் (இப்பொழுது) இறந்துபோனார்களோ? பின்னம் ஆய ஒன்று ஆதல் - (ஜீவான்மாக்களினின்றும்) வேறாகியு மொன்றாகியுமிருத்தல், பிரிந்தேயோ - (அவற்றைப்) பிரிந்துநின்றோ? பிரியாதோ - பிரியாமலிருந்தோ? இவை - (இவ்வாறு வேறும் ஒன்றுமாயிருக்கிற) இச்செயல்கள், என்னமாமாயம் - என்ன பெரியமாயை?

குறிப்பு.—அபௌருஷேயமான வேதத்தை அன்ன வுருக்கொண்டு பிரமாவுக்கு உபதேசித்தலால் 'அன்னமாய அருமறைகள் அறைந்தாய' என்றான். ஸ்திரி ஞுதிரா

கள் ஓதலாகாதென்ற மறுக்கப்பட்டமையான 'மறை' என்னும் பெயர்த்து. இதில் ஐ' செயப்படுபொருள் விகுதி. மறைவான பொருளை யுடைகொண்டிருத்தலின் 'மறை' என்பாருமுளர். யார் என்பதன் விகாரமாகிய ஆர் என்பது ஈண்டு இன்மை குறித்துநின்றது. பின்னமாய் ஒன்றுதல் - விசிஷ்டாத்துவைதம். (௫௯)

ஒப்பிறையும் பெறலரிய வொருவாமுன் னுவந்துறையு
மப்புறையு டுறந்தடியே னருந்தவத்தா லணுகுதலா
லிப்பிறவிக் கடல்கடந்தே னினிப்பிறவே னிருவினையுந்
துப்புறழு நீத்தச்சுடரார் திருவடியாற் றுடைத்தாய்நீ.

இ - ள். இறையும் ஒப்பு பெறல் அரிய - சிறிதும் உவமைபெறுதற்கரிய, ஒருவா - ஒருவனே! நீ முன் உவந்து உறையும் - நீ முன்னார் திருவுள்ளமுவந்து பள்ளிகொண்டருள்கின்ற, அப்பு உறையுள் துறந்து - திருப்பாற்கடலாகிய இருப்பிடத்தைவிட்டு, அடியேன் அரும் தவத்தால் - அடியேனது அரிய தவத்தின் பயனால், அணுகுதலால் - இங்கே எழுந்தருளியதனால், இ பிறவி கடல் கடந்தேன் - இந்த ஜன்மமாகிய கடலைத் தாண்டினேன், இனி பிறவேன் - இனிமேற் கருவுயிர்க்கப்படேன், இருவினையும் - (பிறப்புக்குக் காரணமாகிய) இரண்டு வினைகளையும், துப்பு உறழும் நீத்த சுடர் ஆர் திருவடியால் - பவளத்தினை ஒத்த தன்மையினையுடைய ஒளி பொருந்திய அழகிய (உன்) பாதங்களால், துடைத்தாய் - போக்கியருளினாய்.

குறிப்பு — சமத்துவமின்மை கூறியவதனானே அதிக மின்மையையும் பெற வைத்தார். இறை - உயர்வெனக்கொண்டு ஒப்பு முயர்வுமில்லாத எனினுமாம். இறை - உயர்வாதலை "எந்து கொடியிறைப் புரிசை" என்ற புறநானூற்றிற் பயின்றுவருதலானுணர்க. 'தம் பெரும்பெருமிலீசன்' "ஒத்தார் மிக்காரையிலாருயமாயார்" என்ப பெரியாரும், "தனக்குவமையில்லாதான்" என் நாயனாரும் கூறியபோந்தமை யுணர்க. உறையுள் தொழிலாகுபெயர், வினைத்தொகையென் றுரைக்கின்ற இடமுமாம். 'துப்புறழும்' என்பதற்கு வலிமைபொருந்திய எனவும் பரிசுத்தம் பொருந்திய எனவும் பொருள்கொள்ளலமையும். பிறவிப்பிணிக்கு மருந்தாகலின் திருவடியைத் 'துப்புறழு நீத்த சுடர்த்திருவடி' என்பப் புனைந்து கூறினார் எனக். (௬௦)

வேறு

இற்றெ லாமி யம்பினு
னிற்ற லோடு நீயிவர்
முற்ற வாறு ணர்த்தெனு
வெற்றி யானவி ளம்பினன்.

இ - ள். இற்று எலாம் இயம்பினன் நிற்றலோடும் - (அத்தேவசரீரமடைந்த விராதன்) இவ்விதவார்த்தைகளினால் துதி செய்து நின்றவளவில், வெற்றியான் - வெற்றியினையுடைய ஸ்ரீராமபிரான், (அவனைப்பார்த்து) நீ இ ஆறு உற்ற ஆறு உணர்த்து என்று - நீ இங்ஙனமாக வந்த வரலாற்றைச் சொல்லென்று, விளம்பினன் - சொன்னான்.

குறிப்பு — இற்றெலாம் - கீழ்ச்சொல்லியவும் அவைபோல்வன பிறவுமென்றபடி. ஒருமையிற் பன்மைவந்த வழுவமைதி இயம்பினன். முற்றெச்சம். 'உற்றவாறு' என்றது நீ இங்ஙனம் இராக்ஷஸஜன்மமடையும்படியாய் யாதுபிழைத்தாய்

எனப் பூர்வவிருத்தாந்தத்தைக்குறித்து நின்றது. வெற்றி - விராதவதஞ்செய்த வெற்றியெனக.

இதுமுதற் படல முடிவாகவுள்ள செய்யுட்கள் மாச்சீரும் விளச்சீரும் பயின்று வந்த சிந்தடி வஞ்சிவிருத்தங்கள் இதுபோலவருவனவற்றை ஆசிரியர் நச்சினார்க்கினியர் "நெய்யொடு நீயொக்கச, செய்யானைச் சேர்வார்க்கும், பொய்யாதவுள்ளமே, மெய்யாதல்வேண்டுமே" என்னுஞ் செய்யுளை யுவமைகாட்டி யாப்பின்வேறுபடுக் குறளடிநான்காய்வந்த கொச்சக வொருபோகு என்பர்　　(சக)

கள்ள மாய வாழ்வெலாம்
விள்ள ஞானம் வீசுதாள்
வள்ளல் வாழி கேளென்று
உள்ள வாறு ணர்த்தினான்

இ - ள். கள்ளம் ஆய வாழ்வு எலாம் விள்ள - பொய்யாகிய (இவ்வுலக) வாழ்க்கை முற்றும் ஒழியும்படி, ஞானம் வீசுதாள்வள்ளல் - தத்துவஞானத்தை யளிக்கவல்ல திருவடிகளையுடைய ஔதாரியமுடையவனே! கேள் என்று -(என்துவினைப்பத்தைக்) கேட்பாயாகவென்று, உள்ள ஆறு உணர்த்தினான் - நடந்த செய்தியைத் தெரிவித்தான்.

குறிப்பு — இவ்வுலக வாழ்க்கை அநித்தியமானதாதலின் 'கள்ளமாயவாழ்வு' என்றான் "கண்ட கனவின் பொருள்போல யாவும்பொய்" "வாழ்வாவது மாயம்" எனப் பெரியாருரைத்தனவுங் காண்க வள்ளல் அண்மைவிளி அண்மைச்சொல்லே யியற்கையாகும்" என்பது தொல்காப்பியம் சேய்மையாயின் "ளஃகிய விரண்டினிறுதிப்பெயரே - நின்ற வீற்றயலீட்டம்வேண்டும்" என்னும் விதிப்படி 'வள்ளால்' என வழங்குதலுடைத்து. வாழி முன்னிலையசை வாழ்க்கடவாய் என வாழ்த்தினானென்றுமாம் வீசுதல் - வழங்குதல் இதனை "ஈதாகொடுவெனக் கிளக்கு மூன்றும் - இரவின் கிளவியாகிட னுடைய" என்னுஞ்சூத்திரத்து ஆசிரியர் சேனாவரையரியற்றிய வுரையின்கீழ்க் 'விள்ள' எனவும் 'வீசுதாள்' எனவும் சொற்கிடந்த மாத்திரியால், மெய்ப்பொருளைக் காணமாட்டாது பிரதிபந்தமாய்ச் சூழ்ந்துள்ள மாயாவிருளைத் துமிந்து கெடச்செய்து ஞானப்பிரகாசத்தைப் பரப்புகின்ற கிரணங்களையுடைய வள்ளலாகிய இராமசந்திரனே என்ப பொருள்பெறலாம் படியிருத்தலறிக. இப்பொருளில் 'தாள்' கிரணமாம் "தூயரறு சுடரடி" யாதலின் 'விள்ள ஞானம் வீசுதாள்' என்றான். இனி, தாள் - முயற்சியெனக் கொண்டு அஞ்ஞானம் மேலிடாதபடி மட்டிட்டுத் தொலையச்செய்து ஞானத்தை உதவும் முயற்சியையேயுடைய வள்ளாலென்றுமாம் "வேண்டுதல் வேண்டாமையிலான்" எனவும், "தனக்கென வொன்றுயினும் வேண்டாதவனே பெருங்கருணைச்சத்தன்" எனவும் கூறியபடி விருப்பு வெறுப்பில்லாத சர்வேசுரன் இங்ஙனம் யுகந்தோறும் திருவவதரித்தல் ஆத்மரக்ஷணத்தின் பொருட்டேயாகலான் இவ்வாறு கூறினானுமெனக் 'தாளிற்றந்து,' "மதனுடைநோன்றாள்," தாளிற் கொள்ளலும்," எனப் புறப்பாட்டிலும் "தாளினுணையியராகி" எனச் சிந்தாமணியிலும் பயின்று வருதலால் 'தாள்' முயற்சியாதல் தெளிந்து பகவத்விஷய வீகாரம் பிறந்தபடியாற் கீழ்நின்ற இழிந்த நிலையை அநுஸந்திப்பதில் சிறிதும் நாணமுற்றிலன் என்பார் 'உள்ளவாறுணர்த்தினானென்றார்'. வள்ளல் — வரையாதுகொடுப்போன்.　　(சஉ)

இம்ப ருற்றி தெய்தினேன்
வெம்பு விறகை வீரபோத

தும்புருத் தன்றன்சூ
ழம்ப ரத்துளேனரோ.

இ - ள். வெம்பு வில் கைவீர - உக்கிரமான வில்லினையேந்திய கையினையுடைய வீரனே? தும்புரு போ - தும்புரு என்னும் பெயரினையுடையவனும் தன்றன் சூழ் அம்பரத்து உளேன் - குபேரன் ஆண்டுவரும் அளகாபுரியில் உள்ளவனுமாகிய நான், இம்பர் உற்று இது எய்தினேன் - இவ்வுலகத்து வந்து இந்நிலையை யடைந

குறிப்பு — வில் - கோதண்டம், வெம்மையை நேரேகண்டு அனுபவித்தானாக லின் 'வெம்புவிற்கைவீர' என்றான் தன்றன் சம்பத்தையுடையவன் என்பது பொருள் பெயர் - பேரென மரூஉ ஆயிற்று. அம்பரம்-ஆகாயம், இங்கே அளகையைக் குறித்து நின்றது. (௬௩)

ஆட ரம்பை நீடரங்
கூடு நின்று பாடலா
லூடு வந்து கூடவிக்
கூடு வந்து கூடினேன்

இ - ள். ஆடு அரம்பை - நிர்த்தனஞ்செய்யும் அரம்பையென்னுந் தெய்வப் பெண், நீடு அரங்கு ஊடு - நீண்ட நடனசபையில், நின்று பாடலால் - நின்றுபாடு தலினாலே, (ஆனந்தபரவசனாய்), ஊடு உவந்து கூட - ஊடலைவிரும்பி (அவளைப்) புணர்ந்ததனால், இக்கூடுவந்து கூடினேன் - இவ்விராக்கதசரீரத்தில் வந்து சேர்ந் தனன்.

குறிப்பு — 'ஆடரம்பைபாடலால்' என்றதனால், ஆட்டத்தோடுகூடிய பாட்டுப் பாடினாளெனக் ஊடுதல் கூடுதலுக்கு அங்கமாய அதனைச் சிறப்பித்தலின் ஊடுவந் துகூட என்பபட்டது ஊடு முதனிலைத்தொழிற்பெயர் முன்னைய 'ஊடு' ஏழனுருபு. "ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம், கூடி முயங்கப்பெறின்" என்றார் நாயனாரும் கூடு - இது பறவைகள்வந்து கூடுகின்ற கூட்டைக் குறித்த தொழிலாகுபெ யராய்ப் பின் அதுபோன்ற மக்களுடம்பை உவமையாகுபெயரா யுணர்த்திற்று. "கூடுவிட்டிங், காவிதான் போயினபின் யாரே யநுபவிப்பார்", என்றார் ஔவை யாரும். (௬௪)

கரக்க வந்த காமநோய்
துரக்க வந்த தோமினா
லிரக்க மின்றி யேவினா
னரக்கன் மைந்த னாயினேன்.

இ - ள். கரக்கவந்த காமநோய் - (நல்லறிவை) மறைக்கும்படி உண்டான காமப்பிணியானது, துரக்க - தொடர்ந்ததனால், வந்த தோமினால் - வந்த குற்றத் தினாலே, (அக்குபேரன்), இரக்கம் இன்றி - (சிறிதும்) கருணையில்லாமல், ஏவி னான் - (என்னை அரக்கனாகும்படி) சபித்தான், (அச்சாபத்தினால்), அரக்கன் மைந் தன் ஆயினேன் - இராக்கத மகனாகப்பிறந்தேன்.

குறிப்பு — கரக்க, துரக்க என்னும் செயவெனெச்சங்கள் முறையே காரியப் பொருளிலும் காரணப் பொருளிலும் வந்தன. தான்சோர்ந்த விடத்தே மிக்க வருத் தத்தை யுண்டாக்குதலால் காமத்தை நோய் என்றான். தோம் - குற்றம். (௬௫)

அன்ன யக்க னாதியா
யின்ன றீரு மீகையா
னின்ன தாளி னீங்குமென
றுன்னு மெற்கு ணர்த்தினன்.

இ - ள். ஆதியாய - முதன்மையானவனே! இன்னல் தீரும் ஈகையான — (வறுமைத்) துன்பந்தீருதற்குக் காரணமான கொடையினையுடையவனாகிய, அன்ன யக்கன் - அந்த யக்ஷன் [குபேரன்], உன்னும் எற்கு - இச்சாபம் எவ்வாறு நீங்குமென்று நினைத்து வருந்துகின்ற எனக்கு, நின்ன தாளின் நீங்கும் என்று - உனது திருவடிகளின் பரிசத்தால் நீங்கிவிடும் என்று, உணர்த்தினன் — தெரியப்படுத்தினன்.

குறிப்பு — யக்கன் - யக்ஷன் என்னும் வடசொற்றிரிபு. நின்ன - ஆறாம்வேற்றுமை பலவின்பாற் பெயருமாம் 'குவ்வின்அவ்வரும்' என்னும் விதிப்படி 'எனக்கு' என நிற்கற்பாலது சாரியை பெற்று 'எற்கு' என நின்றது. (௬௬)

வலஞ்செய் திந்த வானெலா
நலிஞ்சு தின்ன நாமவேல
பொலிஞ்ச வென்றி பூணுமக்
கிலிஞ்சன் மைந்த னாயினேன்.

இ - ள். இந்தவான் எலாம் - இந்த வானுலகங்களெல்லாம், வலஞ்செய்து - சுற்றிவந்து, நலிஞ்சு தின்ன - (பல்லுயிர்களையும்) வருத்தித் தின்னும்படி, நாமவேல் பொலிஞ்ச - அச்சத்தைச் செய்கின்ற வேலாயுதம் விளங்கிய, வென்றிபூணும் - வெற்றியைக்கொண்ட, அக்கிலிஞ்சன் மைந்தன் ஆயினேன் - அப்படிப்பட்ட கிலிஞ்சன் என்னும் பெயரினையுடைய இராக்கதனுக்கு மகனாகப் பிறந்தேன்.

குறிப்பு —இனி, 'வானெலாம்' வலஞ்செய்து என்பதற்கு வானுலகத்தாரை யெல்லாம் வலாற்காரஞ்செய்து எனவும் பொருள்கூறலாம். சாபம் நீங்குமாறு கூறிய அக்குபேரனை 'வலஞ்செய்து' என்றலும் பொருந்தும். வான் - தேவராயின ஆகுபெயரெனக. நாம - உரிச்சொல்லடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம், அகரம் சாரியை யாகவுமாம் "பேநாமுருமென வரூஉங்கிளவி யாமுறை மூன்று மச்சப்பொருள." என்னும் தொல்காப்பிய வுரியியற் சூத்திரத்தால் 'நாம' அச்சப்பொருள் பயந்துவருதலையறிக. நாமம், வேல் எனக் கண்ணழிவுசெய்து பெருமைபொருந்திய வேல் என்றுரைத்தலுமாம். நலிஞ்ச, பொலிஞ்ச நலிந்த, பொலிந்த என்பவற்றின் போலிகள். (௬௭)

அன்று மூல மாதியா
யின்று காறு மேழையே
னன்று தீது நாடலேன்
றின்று தீய தேடினேன்.

இ - ஆதியாய் - முதல்வனே! ஏழையேன்-அறிவில்லாத யான், அன்று மூலம்- அந்நாள் முதலாக, இன்றுகாறும் - இந்நாள்வரையிலும், நன்றுதீது நாடலேன் - நன்மைதீமைகளை ஆராயாதவனாய், தின்று - (அகப்பட்ட பிராணிகளையெல்லாம் கொன்று) தின்று, தீய தேடினேன் - தீவினைகளையே சம்பாதித்துக்கொண்டேன்.

குறிப்பு — ஏழைமை - இங்கு அறியாமை "யாமுரைவழங்குமென்ப ரேழைமைப் பாலதனரோ" என்றார் பின்னும். அறிவாம் நல்லுமாகிய செல்வத்தை யிழந்தானாதலின் தன்னை 'ஏழை' என்றான். ஏழை என்றதற்கேற்பத் தேடினேன் என்றதும் ஓர்நயம். (கூஅ)

தூண்ட நின்ற தொன்மைதான
வேண்ட நின்ற வேதநூல
பூண்ட நின்பொ லங்கொடா
டீண்ட வின்று தேறினேன.

இ - ள் தூண்டநின்ற - (என்னை) நன்னெறிச் செலுத்தநின்ற, தொன்மை - (எனது) பழைமையான நல்வினையால், வேண்ட - (யான் உன்னைத்) துதிக்கும்படி, நின்ற - (என் முன்னேவந்து) நின்ற, வேதநூல்பூண்ட நின் பொலம் கொள் தாள் - வேதசாஸ்திரங்களை யணியாகக்கொண்ட நினது அழகிய திருவடிகளை, ஈண்ட - அடைந்து துய்யும்படி, இன்று தேறினேன் - இப்பொழுது அறிந்தேன்.

குறிப்பு — இனி 'தூண்டநின்ற தொன்மைதான, வேண்டநின்ற' என்பதற்கு, தன்னை ஓதியுணர்ந்தவர்க்கு நல்லறிவைத் தூண்டும்படி நின்றனவும், பழமையாகத்தான் எல்லாராலும் வேண்டப்பட்டு இன்றியமையாது நின்றனவுமாகிய வேதங்கள் எனவும், 'ஈண்ட' என்பதனோடியைய முன்னே செய்துநின்ற பழமையாகிய எனது நல்வினைதான் தூண்டியதனால் எனவும் பொருள்கோடல் ஏற்குமெனக். வேதநூல - வேதமாகிய நூல் என்ப பண்புத்தொகையாகவேனும், வேதமும் நூலும் என உம்மைத்தொகையாகவேனும் கொள்ளலாம். பொன் இங்கே அதனாலாகிய கழலுக்கு ஆகுபெயர். பொலிவைக் கொண்டதாள் எனினு மமையும். தொன்மை - ஆகுபெயர். (கூக)

தெறுத்து வந்த தீதெலா
மறுத்த வுன்னை யாதனே
னொறுத்த தன்மை யூழியாய
பொறுத்தி யென்று போயினான.

இ - ள் ஊழியாய - முதல்வனே! தெறுத்துவந்த - (உயிர்களை) அழித்து வந்த, தீது எலாம் - (என்னுடைய) பாவமனைத்தும், அறுத்த உன்னை - நீக்கியருளிய உன்னை, ஆதனேன் - அறிவிலியாகிய யான், ஒறுத்த தன்மை - வருத்திய அபராதத்தை, பொறுத்தி என்று - பொறுத்தருள்வாயென்று பிரார்த்தித்து, போயினான் - (தன் உலகுக்கு) சென்றான்.

குறிப்பு — என்னை யழித்து என்பால் வந்த தீமையைப் போக்கிய வுன்னையென்றும் கொள்ளலாம். தீதெலாம் - ஒருமைப் பன்மைமயக்கம். (௪0)

தேவு காதல சீரியோ
னாவி போயி னன்னபின்
பூவு லாவு பூவையோ
டேவ லாரு மேகினார.

இ - ள். தேவுகாதல் சீரியோன் - தேவர்களை வருத்துதலையே மேன்மையாகக் கொண்ட விராதராக்ஷசன், ஆவிபோயினன் என்று - உயிர் நீங்கினன் என்று, பூ உலாவு பூவையோடு - அழகுபொருந்திய சீதாபிராட்டியோடு, வல்லாரும் - அம்பெய்வதில் வல்லவர்களாகிய ஸ்ரீராமலக்குமணரும், ஏகினார் - (அப்பால்) சென்றார்கள்.

குறிப்பு — தேவு - 'தேவன்' என்னும் வடசொற்றிரிபு. 'தேவுகாதல் சீரியோன்' என்பதற்குத் தெய்வப்பகை சிறந்தவனாகிய அவ்வியக்கன் எனவுங் கொள்ளலாம். 'பூவுலாவு பூவை' என்பதற்குத் தாமரைமலரில் வசிக்கின்ற பிராட்டி எனவும், மலரையொத்த மென்மையினையுடைய பிராட்டி எனவும், பூமியி லுலாவுகின்ற கிளி (அன்றி நாகணவாய்ப்பறவை) எனவும் கூறுதல் கொள்ளத்தக்கதே. வல்லார்: மிக்க வலியுடையாருமாம். வலிய விராதனையுங் கொன்றமையால் இங்ஙனம் கூறினாரென்க. ஏ-மிகுதி "ஏ பெற்றாகும்" என்பது தொல்காப்பியம். "உரிச்சொன் மருங்கினு முரியவையுரிய" என்பவாகலின் 'ஏ' என்னு முரிச்சொல் ஒன்றனை விசேடித்தல்லது வாராமை யறிக. இனி, தங்கைதாயர் வல்லைக்கொண்டவரெனவும், சகலலோகங்களையும் வல்லகொண்டவரெனவும் பொருள்கொள்ளலுங் கூடும். வருத்துதல் என்னும் பொருளில் 'காதல்' தொழிற்பெயர். (௭௧)

கைகொள் கால வேலினார்
மெய்கொள் வேத மெய்யர்வாழ்
மொய்கொள் சோலை முன்னினார்
வைகற் றானும் வைகினார்.

இ - ள். கைகொள் - கையிலேந்திய, காலவேலினார் - (பகைவர்க்கு) யமனைப் போன்ற வேலாயுதத்தையுடையவராகிய ஸ்ரீராமலக்குமணர்கள், மெய்கொள் வேதம் மெய்யர் - மெய்ம்மையாகிய வேதங்களையே வடிவாகவுடைய முனிவர்கள், வாழ் - வசிக்கின்ற, மொய்கொள்சோலை - நெருங்கியசோலையை, முன்னினார் - அடைந்தவர்களாகி, வைகல்தானும் - பகல்முழுவதும், வைகினார் - (அங்கே) தங்கினார்கள்.

குறிப்பு — "கைகண்டமருந்து" என்பதுபோல வெற்றிகருதிக் 'கைகொள் காலவேல்' என்றார். காலன்வாய்ப் பட்டார் மீளாவாறுபோல வேலன்வாய்ப்பட்டாரும் மீளார் என்பது கருத்து. காலன் - காலக்கடவுள். (௭௨)

முதலாவது: விராதன் வதைப்படலம்

முற்றிற்று

இரண்டாவது : சரபங்கர் பிறப்புநீங்கு படலம்.

குரவங்குவி கோங்கலர் கொம்பினொடும்
மிரவங்க ணுறும்பொழு தேகினரால்
சரவங்க னிருந்து தவங்கருதும்
மரவங்கிளர் கோங்கொளிர் வாசவனம்.

இ - ள் இரவு - அன்றையிராத்திரியானது, உறும்பொழுது - வருங்காலத்தில், (ஸ்ரீராமலக்ஷ்மணர்கள்), குரவம் - குராவரும்பும், குவிகோங்கு - குவிந்த கோங்கரும்பும், அலர்கொம்பினொடும் - (சூடி) மலரப்பெற்ற பூங்கொம்புபோன்ற சீதாபிராட்டியுடனே, அங்கண் - அவ்விடத்தினின்றும், சரவங்கன் இருந்து தவம் கருதும் - சரவங்கரென்னு மஹா முனிவர் (நெடுங்காலமாக) இருந்து தவத்தைச் செய்கின்ற, மரவம் கிளர் கோங்கு ஒளிர் வாசவனம் - குங்குமமரங்களும் உயர்ந்து வளர்ந்திருக்கிற கோங்குமரங்களும் (நிறைந்து) விளங்குகின்ற வாசனையையுடைய ஆச்சிரமத்திற்கு, ஏகினர் - சென்றார்கள்.

குறிப்பு —குரவம், கோங்கு - முதலாகுபெயர்கள் குரவம் குருக்கத்தியும் கோங்கு மந்தாரையுமாம் சரவங்கன் - சரபங்கனென்பது. "கூற்றங் குதித்தலுங் கைகூடும்" என்பவாகலின் இருந்து என்பதற்கு நெடுநாளாக இருந்து என்பொருள் கோடலமையுமாறு "என் அருந்தவமோ கற்பம் பல சென்றது" என்ப பின்னுங் கூறுமாற்றா னிஃதேற்புடைத்தே. புலன்களைத் தபிக்கச்செய்யும் முயற்சியாதலின் 'தவம்' என்பது இது தபஸ் என்னும் வடசொல். வாசவனம் - வசிப்பதற்கு யோக்கியமானவனமுமாம். (க)

செவ்வேலவர் சென்றனர் சேரலுறும்
அவ்வேலையி லெய்தின னாயிரமாந்
தவ்வாதிர வும்பொலி தாமரையின்
வெவ்வேறலர் கண்ணினன் விண்ணவர்கோன்

இ - ள். செவ்வேலவர் - சிறந்த வேலினையுடைய ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், சென்றனர் சேரல் உறும் - (அம்முனிவர் ஆச்சிரமத்திற்குச்) சென்று சேர்கின்ற, அவ்வேலையின் - அந்தச் சமயத்தில், இரவும் தவ்வாது பொலி தாமரையின் - இராப்போதிலுங் குவியாது மலர்ந்து விளங்குகின்ற செந்தாமரை மலர்களைப்போல, வெவ்வேறு அலர் - தனித்தனியே விளங்குகின்ற, ஆயிரம் ஆம் கண்ணினன் - ஆயிரங்கண்களையுடையவனாகிய, விண்ணவர் கோன் - தேவேந்திரன், எய்தினன் - (அங்கே) வந்திருந்தான்.

குறிப்பு —பகைவரது அரத்தந்தோய்ந்த வேலென்பார் செவ்வேலென்றார். செம்மை - கூர்மையுமாம். சென்றனர் - முற்றெச்சம் இந்திரன் சரீரத்திலுள்ள ஆயிரங்கண்களும் ஆயிரந் தாமரைபோல விளங்குதலின் 'தாமரையின் வெவ்வேறலர் கண்ணினன்' என்றார். தாமரையின் - இன் உவமப்பொருள். இமையாத கண்களாதலால் குவியாத தாமரை உவமை கூறப்பட்டது. 'இரவும்பொலி தாமரையின்' என்றது இல்பொருளுவமை. (உ)

அன்னச்செலவிற் படிமே லயல்சூழ
பொன்னிறப்பொலி வாரணி பூணொளிமேன்
மின்னிறச்செறி கற்றை விரிந்தனபோற்
பின்னிச்சுடரும் பிறழ்பே ரொளியான்.

இ-ள். படிமேல் அயல்சூழ - பூமியின் மேற்பக்கத்திற் சூழ்ந்த, அன்னம் செலவின் - அன்னத்தின் நடையினையுடைய பொன்னின் பொலிவார் அணி - திருமகள்போல் விளங்குகின்ற தெய்வப்பெண்கள் அணிந்துள்ள, பூண் ஒளி - ஆபரணகாந்திகள், மேல் மின்னின் செறிகற்றை - ஆகாயத்தில் மின்னல்களின் நெருங்கிய கூட்டமானவை, விரிந்தனபோல் - பரவியனபோல், பின்னிச்சுடரும் - கலந்துவிளங்குகின்ற, பிறழ்பேர் ஒளியான் - மிகுந்த சிறந்த தேககாந்தியையுடையவன்.

குறிப்பு — மேகத்தைச்சூழ்ந்து மின்னல்கள் விளங்குவனபோலத் தன்னைச் சூழ்ந்து பெண்களின் ஆபரணகாந்திவீச இந்திரன் விளங்கினான் என்க. இனி, தெய்வப்பெண்கள் தன்மீது அணிந்த ஆபரணகாந்தியினும் மின்னலின்கூட்டம் பரவியதுபோலக் கலந்து விளங்குகின்ற தேககாந்தியையுடையவன் என வேறுவகையானு முறைக்கப்படும். மேகம் இந்திரனுக்கும் மின்னல் பூணொளிக்கும் உவமை. பூண்-பூணப்படுவது செயப்படுபொருண்மையுணர்த்தும் விகுதிபுணர்ந்துகெட்டது. ஆபரணத்திற்குக் காரணக்குறி. (௧)

வானிறப்பொலி தோகையர் கண்மலர்வண்
கானிறப்படர் கட்களி வண்டொடுகார்
மேனித்திரு நாரதன் வீணையிசைத்
தேனிற்பொலி யுஞ்செவி வண்டுடையான்.

இ-ள். கார்மேனி - தனது கரிய உடம்பிலே, வானின்பொலிதோகையர் - தெய்வலோகத்துப்பொருந்தி விளங்குகின்ற தெய்வமகளிரது, கண்மலர் வண்கானில் - கண்களாகிய வளப்பம்பொருந்திய புஷ்பக்காட்டில், படர் - சூழ்ந்துமொய்க்கின்ற, கட்களிவண்டொடு - (தன்) கண்களாகிய களிக்கின்ற வண்டுகளுடனே, திருநாரதன் வீணை இசை தேனின் - ஸ்ரீ நாரதமாமுனிவரது யாழின்பாட்டாகிய தேனைப்பருகியதனால், பொலியும் செவிவண்டு உடையான் - விளங்குகின்ற செவிகளாகிய வண்டுகளையும் உடையவன்,

குறிப்பு — தோகை மயிலின்வால், அது மயிலுக்குச்சினையாகுபெயராய்ப் பின் பெண்களுக்கு உவமையாகுபெயராயிற்று. மயில் - பெண்களுக்குச் சாயலில் உவமம். மலர்த்தொகுதியை மலர்க்கான் என்றார். மலர் - தாமரையும் குவளையுமாம் "பூங்குவளைக்காட் டிடையேபோயினான்" என்றார் புகழேந்திப்புலவரும். கார் ஆகுபெயரெனின் மேகம்போன்ற மேனியென்க. நாரதன் என்பதற்கு ஆன்மஞானத்தைக் கொடுப்பவரெனவும், நரர்களுக்குள் ஒற்றுமையைக் கொடுப்பவர் எனவும், நரஸம்பந்தமான ஞானத்தைப் போக்குபவரெனவும் பலவகையாகப் பொருளுரைக்கப்படும். நாரதரது வீணை மஹதி என்பது. ஓடு எண்ணுப்பொருளது. வண்டுகள் மலர்வனத்தின் மொய்த்தல்போலத் தன்னைச் சூழ்ந்துவருகின்ற பெண்களின் கண்களைத் தன்கண்களாற்பார்த்துக் களித்தும், வண்டுகள் தேனைப்பருகிக் களித்தல்போல ஸ்ரீநாரதரது வீணையிசையைக் காதாற்கேட்டு இன்பமுற்றும் இந்திரன் வந்தான் என்பதாம். (௨)

அனையின்றுறை யையம்பதொ டைம்பதுநூல
வினையினறொகை வேளவிநி ரமபியமா
முனைவனமுது தேவரின மூவரலாா
புனையுமமுடி துனறுபொ லங்கழலான.

இ - ள். அனையின துறை - அக்கினியினிடத்தே செய்யப்படுகின்ற, நூல் - சாஸ்திரத்திற கூறப்பட்ட, வினையின தொகை - தொழில வகைகளையுடைய, ஐம்பதொடு ஐம்பதுவேளவி - நூறு (அசுவமேத) யாகங்களை, நிரமபிய மாமுனைவன - குறைவற முடித்த பெரியமுனைவன, முதுதேவரின மூவா அலலா - பழைய தேவாகளில திரிமூாததிகளலலாத மறறைத தேவாகள, புனையுமமுடி - தரித்துககொளளாநினற கிரீடங்கள, துனறு பொலம கழலான - நெருங்குகினற பொனனாலாகிய வீரககழலையுடையவன

குறிப்பு —அனல எனபது, எதுகைநோககி 'அனை' யெனததிரிநது நினறது. "அனைவரு கானகத தமுதளாவிய - புனைவர வுயிாவரு மூலமைப போலகினறா" எனபா மேலும், துறை - எழுனூருபுமாம நூறு அசுவமேதயாகஞ் செய்தவன இந்திரபதம பெறுகினறானெனபது கொளகையாதலின 'ஐம்பதொடைம்பது வேளவி நிரமபிய முனைவன' எனறாா இதனை 'சதகருது' 'சதமகயு' 'சதமகன' என வழங்கும பெயாகளானறிக. நூல - உவமவாகுபெயா வினையின தொகையாவது - யாகததுககு அங்கமான ஸோமபானம, பிரவாககியம, அவபிருதம, முதலிய கிரியாபேதங்கள யாகததில காாஹபதயம, ஆகவநீயம, தக்ஷிணாககினீயம, எனும மூவகை அககினியும உணமையான 'அனையின துறை' எனபதறகு அககியின வகைகள எனவும பொருள்கொளளலாம முனைவன - முனனவன இங்ஙனம வருதலை "வினையினீங்கி விளங்கிய வறிவின - முனைவன கணடது முதனூலாகும்" எனனுமிடததுங் காணக மூவா - பிரமவிஷ்ணு ருத்திராகள, இது தொகைககுறிப்பு. (௫)

செமமாமல ராணிகா தேவியொடும
மும்மாமத வெணணிற முனனுயாதாள
வெமமாமிசை யானவிரி வெளளிவிளங்
கமமாமலை யணணலையே யனையான.

இ - ள். செமமாமலராள னிகா - சிவந்த பெரியதாமரை மலரில் வீறறிருக்கினற திருமகளைபபோனற, தேவியொடும - தனது மனைவியாகிய சசிதேவியுடன, மும்மாமதம - மிகுநத மூனறுமதங்களையும, வெணநிறம - வெளளைநிறததையும, முன உயாதாள - முனனேயுயாநத முனனங்காலகளையும், வெம - வெபபததையுமுடைய, மாமிசையான - ஐராவதததினமேல எறிவருகினறவன, (அவ்யானையின மீதிருககையில) விரி - ஒளிவீசாநினற, வெளளிவிளங்கு - வெளளிமயமாயப் பிரகாசிககினற, அ மாமலை -அநதப பெரிய (கைலாய) மலைமேல, அணணலையே - (உமாதேவியோடு வீறறிருககினற) சிவபிரானையே, அனையான - ஒததிருப்பவனுமினன.

குறிப்பு —அழகின மிகுதி குறிககத திருமகளை உவமங்கூறினா. "உயர்திணையிடதது விரிநதுந தொககும்" எனனும விதியால் 'மலராள' எனபதனகண 'ஐ' யுருபு தொககது மும்மதமாவன - காணமதம, கபோலமதம, பீஜமதம எனபன. யானைமதங் கொணடிருககுமபோது அதன உடல வெப்பமாயிருககுமாதலால 'வெமமா' என்றாா. இனி, வெமமை - கொடுமையும, அழகுமாம. அணணல பெருமையிற் சிறநதோன. (௬)

தானின்றய னின்றொளிர தணகதிரோன்
யானினறதெ னென்றொளி யெஞசிடமா
வானின்ற பெருமபதம வநதுருவாய
மேனினறென நின்றொளிர வெணகுடையான்.

இ - ள் அயலநினறு ஒளிர - வெளியிடஙகளிற சென்று விளஙகுகினற, தணகதிரோன - சீதகிரணனுன சநதிரன, யான இனறு நினறது என என்று - யான இப்பொழுது (இவவுலகிறபிரகாசிததுத) நிறபதனுல (பயன) யாது என்று, ஒளி எஞசிட - ஒளிமழுஙகிபபோமபடி, மாவான நினற பெரும பதம உருவாய வநது - பெரிய ஆகாயததினகணுள்ள சுவாககநதானே குடையின வடிவமெடுததுவநது, மேலநினறென - தனமேற கவிநதுநின்றுறபோல, நினறு ஒளிர வெண குடை யான - பொருநதி விளஙகுகினற வெள்ளைககுடையையுடையவன

குறிப்பு —சநதிரனது தணமையினும ஒளியினும இநதிரனது குடையின தன்மையும ஒளியும மிககனவாதலின 'தணகதிரோன ஒளி எஞசிட' என்றுர பதம - பதவி வெணகுடை: இயைபுநீககிய விசேடணம. வடநூலார் அயோகவயவசசேதமெனபர. (எ)

திசைகட்டிய மாலகரி தெட்டமதப
பசைகட்டின கிட்டின பறபலபோர
விசைகட்டழி தானவர விட்டவரபே
ரிசைகட்டிய வொததிவர சாமரையான.

இ - ள. திசைகட்டிய - திககுகளிற் கட்டப்பட்ட, மால்கரி - பெரியயானைகளின, தெட்ட மதம பசைகட்டின - தெளிவான மதபபசையாற கட்டபபட்டனவாய, கிட்டின - ஒன்றையொன்று நெருஙகினவாய, பலபலபோர - பலபலயுததஙகளில, விசைகட்டு அழி - (தததம) வனமையும உறுதியும அழிநது, விட்டவர தானவர - (தததம குடை கொடி கீரததி முதலியவறறைப) போகவிட்டுப போனவாகளான அசுரரது, பேர இசை கட்டிய ஒதது - மிகக கீரததியைபபிடிததுச சோததுக் கட்டியவற்றைப்போன்று, இவர சாமரையான - விளஙகுகினற சாமரையையுடையவன

குறிபபு —கீரததியை வெணமைநிறமுடையதாகக் கூறுதல மரபாதலின போரில தோறறுபபோன அசுரரது கீரததியைப பிடிததுக கட்டியதையொததுத தோனறின வெணசாமரைகளென்றுர. தானவர் தநு எனபவள வயிறறுபபிறநதவர. சாமரை - சாமரமெனனும மானினவாலின மயிரால கட்டபபட்டதொரு இராஜசிநநம. "தொடர விறுதி தமமுற றுமவரின, லகரம றகரவொற றுகலு முரிததே" எனபதனுற பறபலபோர என்றுர, (அ)

தீரவிறறிரி செஙகதிர தஙகுவதோ
ரூருறற தெனபபொலி யொணமுடியான
போரவிததக னேமி பொறுததவனமா
மாவிற்றிரு விறபொலி மாலையினுன.

இ - ள். ஓர ஊர உறறது - ஒப்பறற ஊரகோளை யுடையதான, தீரவு இல் திரி செங்கதிர் - ஒழிவில்லாது திரிகினற சிவநத கிரணஙகளையுடைய சூரியன்,

தங்குவது என - வந்து தங்கியதுபோல, பொலி - விளங்குகின்ற, ஒண்முடியான் - ஒளிய கிரீடத்தையுடையவன்; போர்வித்தகன் - யுத்தத்தில் மிக்க வல்லமையுடையவன், நேமிபொறுத்தவன் - திருவாழியேந்தியருளிய திருமாலினது, மார்வில் - விசாலமான திருமார்பில் வீற்றிருக்கின்ற, திருவின் - திருமகளைப்போல, பொலி - விளங்குகின்ற, மாலையினன் - இரத்தின ஆபரணத்தையுடையவன்.

குறிப்பு — கதிர் ஆகுபெயர். செங்கதிர் - பண்புத்தொகை, அன்மொழியென்பது மொன்று. எப்பொழுதும் திரிந்துகொண்டிருப்பதனால் 'தீர்விற்றிரி செங்கதிர்' என்றார். போர்வித்தகனாகிய நேமிபொறுத்தவன் என்றலுமொன்று. இனி, 'செங்கதிர் தங்குவதோர் ஊர்' என்பதற்கு, செங்கதிர் தங்குவதாகிய ஓர் ஊரென, சூரியலோகமுமாம். நேமி - சுதரிசனம். மார்விற் றிருவிற்பொலிமாலையினன் என்பதற்கு மார்பிலே திருவோடு விளங்குகின்ற வனமாலைபோன்ற பாரிஜாத மாலையையுடையானெனினுமமையும். (௯)

செற்றிக்கதி ரிற்பொலி செம்மணியின்
கற்றைச்சுடர் விட்டெறி கஞ்சுகியான்
வெற்றித்திரு வின்குளிர் வெண்ணகைபோற்
சுற்றிக்கிள ருஞ்சுடர் தோள்வளையான்.

இ-ள். செற்றி - பதிக்கப்பட்டு, கதிரின்பொலி - சூரியன்போல விளங்குகின்ற, செம்மணியின் சுடர் கற்றை - சிவந்த இரத்தினங்களினது ஒளியின் கூட்டம், விட்டு எறி - விட்டு விளங்குகின்ற, கஞ்சுகியான் - கவசத்தையுடையவன், வெற்றித் திருவின் - ஜயலக்ஷ்மியினது, குளிர்வெண்ணகைபோல - குளிர்ந்த வெள்ளிய புன்சிரிப்புப்போல, சுற்றி கிளரும் - சூழ்ந்து விளங்குகின்ற, சுடர்தோள் வளையான் - பிரகாசிக்கின்ற வாகுவலயத்தையுடையவன்.

குறிப்பு — செற்றி - செயப்பாட்டுவினை செய்வினைபோல வந்தது. 'கஞ்சுகம்' என்னும் வடசொல் கஞ்சுகி எனத் திரிந்தது, புவனம் - புவனி என்பதுபோல. கஞ்சுகி - வீரர்மெய்க்குக் காவலாக அணியும் கவசம். மேல், 'திசைகட்டிய' என்னுங் கவியால் புகழை விளக்கியவர் அடைவே வெற்றியையும் விளக்குவான் இக்கவியில் ஜயத்தின் நிறமாகிய செம்மையைக் கூறினார். ஜயலக்ஷ்மி தங்கியிருக்குமிடம் வீரரது புயமாகலின் அங்குள்ள வளையின் சுடருக்கு வெற்றித்திருவின் நகை யுவமிக்கப்பட்டது. வளை - வினைமுதற்பொருள் விகுதி புணர்ந்துகெட்ட பெயர். (௧௦)

பல்லாயிர மாமணி பாடுறுந
தொல்லாரணி கால்சுட ரின்றொகைதா
மெல்லாமுட னாயெழ லானயலே
வில்லாலொளிர் மேக மெனப்பொலிவான்

இ-ள். பல ஆயிரம் மாமணி பாடம் உறும் - அநேகவாயிரம் சிறந்த இரத்தினங்கள் ஜொலிக்கின்ற, தொல் ஆர் அணி கால் சுடரின் தொகை எல்லாம் - பழமையாகவுள்ள ஆபரணங்கள் வீசுகின்ற காந்தியின் கூட்டம் எல்லாம், உடன் ஆய் அயலே எழலான் - ஒன்றுசேர்ந்து வெளியே பிரகாசித்தலான், வில்லால் ஒளிர் மேகம் என பொலிவான் - இந்திரவில்லொடு விளங்காநின்ற காளமேகம்போல விளங்குபவன்.

குறிப்பு:—கரிய நிறமுடையவனாதலால் இந்திரனுக்கு மேகமும், நவமணிக ளிழைத்துப் பலநிறங்களு முடைமையால் ஆபரணங்களுக்கு இந்திரதநுவும் உவமைகூறப்பட்டது "தகடுபடுசெம்பொ னவமணிகுயின்ற தொடியணியணிந்து கக னவில்லி நீலவெற்பொத்திருந்தனன்" என்றார் பிறரும். 'பாடமுறுந் தொல்லாரணி' என்றதனால் மணிகள் தாமொளி விடுதற்குரிய காலமாகிய மாலை ஈண்டுக் குறிப்பா னுணர்த்தப்பட்டது. வில்லாலொளிர் என்பதில் 'ஆல்' உருபு உடனிகழ்ச்சிப் பொருளது. (௪௪)

மாறுவுல கந்தனின் மன்றல்பொருந்
தேனாறு நலஞ்செறி தொங்கலினான்
மீனோடு கடுத்துயர் வென்றியவாம்
வானாடியர் கண்ணெனும் வாளுடையான்.

இ - ள். மாறு உலகம் தனில் - (ஒன்றோடொன்று) ஒத்திராத (எல்லா) வுலகங்களிலும் (செல்லும்படி), மன்றல் பொரும் - வாசனைவீசுகின்ற, தேனாறு - தேன் பெருகுகின்ற, நலம் செறி தொங்கலினான் - அழகுமிகுந்த பூமாலையையுடையவன், மீனோடு கடுத்து - (கெண்டையென்னும்) மீனையொத்து, உயர்வென்றிய ஆம் - மிக்க ஜயத்தையுடையனவாகிய, வானாடியர் கண் எனும் - தேவலோகத்து மகளிரது கண்களென்று கூறுகின்ற, வாள் உடையான் - வாளாயுதத்தையுடையவன்.

குறிப்பு—மாறு உலகம் - தன்கோரொப்பிலாத வுலகமுமாம். தொங்கல் - தொங்குவது, தொழிலாகுபெயர். 'மீனோடு கடுத்து' என்பதற்கு மீனோடுசினந்து என்றுரைப்பினு மமையும் பிறரைத்தம் வலைக்கட்படுப்பதன்றித்தா மொருவர் வலைக் கட்படாமையால், அங்ஙனம் வலைப்படும் மீனோடு சினந்து எனக் கூறினரெனக். வென்றி - இலக்காணுரைத் தமவயப்படுத்துதல் வென்றி + அவாம் எனப்பிரித்து வெற்றியையே கருதுகின்ற என வாளோடுகூட்டலுமாம். வானாடியர் - வானாடர் என்பதன் பெண்பால் தெய்வமகளிரனைவரும் இந்திரன் பேரழகையே பார்த்துக்கொண்டிருத்தலால் 'வானாடியர் கண்ணெனும் வாளுடையான்' என்றார். இனி வானாடியர் கண்ணென்ன உவமைகூறத்தக்க உடைவாளைத் தன்னிடையி லுடையா னெனினும் பொருந்தும். (௪௫)

வெல்வானசை யால்விசை யால்விடுநா
ளெல்வான்சுடர் மாலை யிராவணன்மே
லெள்வாலு மறாத நிறம்பிறழா
வல்வாய்மடி யாவயி ரப்படையான்

இ - ள். எல் வான் சுடர்மாலை இராவணன்மேல் - சூரியனையொத்த மிக்க ஒளியையுடைய மாலையணிந்த இராவணன்மேல், வெல்வான் நசையால் (அவனை) வெல்லவேண்டுமென்னும் விருப்பத்தால், விசையால் விடுநாள் - வேகத்தோடு பிரயோகித்தபொழுதும், எள்வாலும் அறாத - எள்ளின் நுனியளவாயினும் ஒடியாத, நிறம் பிறழா - ஒளிமாறாத, வல்வாய் மடியா - (தனது) வலிய நுனியும் மடங்காத, வயிரப்படையான் - வச்சிராயுதத்தையுடையவன்.

குறிப்பு:—வெல்வான் - வானீற்றுவினையெச்சம். இதனை ஆசிரியர் சேனாவரையர் ஆனீற்று வினையெச்சமென்பர். தொழிற்பெயரெனினுமாம். 'வெல்வானசை

யால்' என்றமையால் வெல்லக்கூடாமை விளங்குகிறது. இராவணன் என்பது கதறுகின்றவனென்னவுங் கதறச்செய்கின்றவனென்னவும் பொருள்படும் 'ரவதி' 'ராவயதி' என்பன இவற்றின் பகுதிகள், இராவணன் என்பது 'வைச்ரவணன்' என்பதன் திரிபென்பர் மகாகாவிய வுரையாசிரியராகிய மல்லிநாதஸூரி "ஸுநிவிஷ்டம் ஹிதம் வாக்யம் உக்தவந்தம் விபீஷணம், அப்ரவீத்பருஷம் வாக்யம் ராவண: காலசோதித:"||. என்னும் யுத்தகாண்ட சுலோகத்தில் 'ராவண: காலசோதித:' என்பதற்குப் பெரியவாச்சான்பிள்ளை செய்தருளிய வியாக்கியானத்தைக் கண்டறிக 'வெல்வால்'—ஒரு சிறியவளவுக்கு வந்தது. அறுத பிறழாத மடியாத படையென்க கூட்டுக (கங)

நின்றனெதிர் நின்ற நெடுந்தவனுஞ்
சென்றனெதிர் கொண்டு சிறப்பமையா
வென்றினிவ ணெய்திய வாறெனலும்
பொன்றாத பொலங்கழ லோன்புகலும்

இ - ள். (இத்தகையதேவேந்திரன்), எதிர் நின்றான் - (சரபங்கராசிரமங்குறுகி அவர்) எதிரேநின்றவனை, நின்ற நெடுந்தவனும் - (அங்கு) நின்ற மிக்க தவத்தினையுடைய அச்சரபங்கரும், (இந்திரனைக்கண்டு), எதிர்கொண்டு சென்றனன் - (அவனை) எதிர்கொண்டுபோய், சிறப்பு அமையா - சிறப்பான மரியாதைகளைச்செய்து, இவண் எய்திய ஆறு - (நீ) இங்குவந்ததன் காரணம், என் - என்னை? எனலும் - என்று வினவிய வளவில், பொன்றாத பொலங்கழலோன் - அழியாத பொற்கழலையுடைய அவ்விந்திரன், புகலும் - சொல்வானாயினான்

குறிப்பு—நின்ற தவம் என இடையறாது முடிந்ததவமெனலுமாம் தவமன்றோடு நின்றுவிட்டதாகலானும், பின்னும் செய்து பெறும்பேறுவேறொன்றின்றாகலானும் இவ்வாறு கூறினரென்க. சென்றனன் - முற்றெச்சம், இனி, மையா! இவண் சிறப்ப எய்தியவாறென்னென்னலும் என மாட்டியுரைத்து - மேகவாகனா! இவ்வாசிரமஞ் சிறக்கும்படியாய் வந்த காரணமென்னவென்னுமென வுரைத்தலுமாகும், பொன்றாதவென்பது இந்திரற்கே விசேடமுமாம் தான் - அசை. (கச)

நின்னாலிய னீதி நெடுந்தவமின்
றென்னாலும் விளம்பரி தென்றுணர்வா
னந்நான்முக னின்னை யழைத்தனனாற்
பொன்னார்சடை மாதவ போதுதியால்

இ - ள். பொன் ஆர் சடை மாதவ - பொன்னிறமவாய்ந்த சடையையுடைய சிறந்த தவத்தினையுடையவரே! நின்னால் இயல் நீதி நெடுந்தவம் - நும்மாற் செய்யப்பட்ட நீதிதவறாத சிறந்ததவமானது, இன்று - இப்பொழுது, என்னாலும் விளம்பு அரிது - என்னாலும் சொல்லற்கருமையானது, என்று உணர்வான் அந்நான்முகன் - என்று அறிபவனாகிய அந்தப் பிரமதேவன், நின்னை அழைத்தனன் - நும்மைத் (தன்னுலகத்துக்கு வரும்படி) கட்டளையிட்டான், ஆல் - ஆதலால், போதுதி - (நீர்) வருவீராக.

சதுர்வேதங்களையு மோதியுணர்ந்த அச்சதுர்முகப்பிரமனுஞ் சொல்லுதற்கரிதென்பதாம் என்னாலும்—எவ்வளவுமெனவு முரைக்கலாம் "என்னானு மொன்றுதங் கையுறப்பெற்றக்கால்" என்றார் நாலடியாரினும். இனி, (இந்திரன்) என்னாலும் புகழ்தற்கரிதென்று சொல்லி முக்காலத்தையு முணர்ந்த அந்நான்முகனென வுரைத்தலு

ம்மையும். வியாகரணத்திறமுன் வல்லவனுயிருந்தும் உரைப்பரிது என்றான் எனக். "இந்திரற்கும் புகழ்வரிதே" என்றார் சிந்தாமணியிலும். விளம்பரிது: வினையெச்ச வீற்றகரந்தொக்கது விளம்பு அரிது எனப்பிரித்து விளம்புதற்கரிது என முதனிலைத்தொழிற்பெயராகக் கோடலுமாம். ஆல் இரண்டனுள் முன்னையது ஆதலால் என்பதன் விகாரம் பின்னையது ஈற்றசை (௧௫)

எந்தாயுல கியாவையு மெவ்வுயிருந்
தந்தானுறை யுந்நெறி தந்தனனா
லந்தாத பெருந்தவ நாடந்நீ
வந்தாயெனி னின்னெதி ரேவருவான்.

இ-ள். எந்தாய் - பெரியவரே! நந்தாத பெருந்தவ - கெடாத மிக்க தவத்தினையுடையவரே! உலகு யாவையும் எவ்வுயிரும் தந்தான் - உலகங்களனைத்தையும் உயிரனைத்தையும் படைத்தவனாகிய பிரமதேவன், உறையும் நெறி - வசிக்கின்ற (தன்) உலகத்தை [பிரமலோகத்தை], தந்தனன் - (உமக்குக்) கொடுத்தான், ஆல் - ஆகையால், நாடு அந்து - அந்நாட்டிற்கு, நீ வந்தாய் எனின் - நீர் வந்தீராயின், (அவன்) நின் எதிரே வருவான் - (நும்மை அழைத்தற்கு) எதிர்கொண்டு வருவான்.

குறிப்பு —இந்திரன் முனிவரை 'எந்தாய்' என்றது சிறப்பினால்வந்த வழுவமைதி. நாடந்து அந்து பகுதிப்பொருள்விகுதி. பெருந்தவநாடு - பெரிய தவத்தாலடையப்படு நாடு எனலுமாம். வந்தாய் இயல்பினால்வந்த காலவழுவமைதி (௧௬)

எல்லாவுல கிற்கு முயர்ந்தமையான்
சொல்லாவகை நீயுணர் தொன்மையையா
னல்லாயுடனே நடநீ யெனலு
மல்லேனென வாலறிவா னறைவான்.

இ-ள். நல்லாய் - சிறந்த தவத்தையுடையவரே! (அப்பிரமலோகம்), எல்லா உலகிற்கும் உயர்ந்தமை - எல்லாவுலகங்களினும் சிறந்திருத்தலை, யான் சொல்லாவகை - யான் சொல்லாமலே, நீ - நீர், உணர் தொன்மையை - அறிகின்ற பழமையுடையராயிருக்கின்றீர், ஆல் - ஆதலால், நீ உடனே நட - நீர் உடனே வருவீராக, எனலும் - என்று (இந்திரன்) சொன்னவளவில், வால் அறிவான் - சிறந்த தத்துவஞானமுடைய அச்சரபங்கர், அல்லேன் என - (யான்) அங்குவரேன் என்று, அறைவான் - சொல்லுவார்.

குறிப்பு —இனி, இச்செய்யுளின் முதலிரண்டடிகளுக்கு (அப்பிரமனுலகம்) எல்லாவுலகத்தினும் மேம்பட்டு விளங்குகின்றதனாலும், நீர் பிறருணர்த்தாமலே முற்றக்கற்ற பெரியவராயிருக்கின்றதனாலு மெனப்பொருள் செய்யலாம். 'நல்லாளுடனே' என்னும் பாடத்திற்கு நலமுடைய நின் மனைவியுடனே எனப்பொருளுரைத்துக்கொள்க. வால் - தூய்மை. வாலறிவான் - தூய அறிவுகொண்டு எனவுரைத்துச் சரபங்கர் என வருவித்துக் கோடலுமாகும். "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை-வெல்லுஞ்சொ லின்மையறிந்து" என்றபடி ஆய்ந்து உரைத்தாரென்பார் 'வாலறிவானறைவான்' என்றார். பரமபதத்தை விரும்பியமுனிவர், பிரமபதத்தை விரும்பியுரைத்திலரென்பார் 'வாலறிவானறைவான்' என்றாரெனலுமாம். (௧௭)

சொறபொங்கு பெருமபுக ழோய்தொழின்மாய்
சிறபஙகளின வீவன சோருவெனே
யறபஙகரு தேனெ னருநதவமோ
கறபமபல சென்றது காணுதியால.

இ - ள். சொல பொங்கு - சொல மிகுதறகு காரணமாக [சொலலசசொல்ல வளாகினற], பெருமபுகழோய - மிகக புகழினையுடையவனே! தொழிலமாய சிறபஙகளின - செயலறற சிததிரஙகளைபபோல, வீவன - அழியுநதனமையன வாய உலகஙகளை, சோருவெனோ - (யான) அடைவேனோ? அறபம கருதேன - அறபமான பதவிகளை (யான மனததினும) நினையேன, என அருநதவமோ - என னுடைய அரியதவமோ, கறபமபல சென்றது - பல கறபகாலஙகள கழியபபெறறன, காணுதி - (நீ இதனை) அறிவாயாக

குறிபபு — சொறபொஙகு பெரும்புகழ் - சொலலுககடஙகாத புகழெனவுஞ சொலவள மிகுநத புகழினேய எனவுமாம சிததிரஙகள நாளடைவில உருககுலைந தழியுமாறுபோல அழியுமியல்பின தெனபார 'சிறபஙகளின' வீவன என்றார அநேக கறபஙகளாகத தவஞசெயதுகொணடிருககிற யான கறபஙகடோறு மழிந திடுகின்ற உலகஙகளை மனததாலு நினையேன என்றார எனக அறபம - ஆகுபெயா, ஓ - உயாவுசிறபபு சிறபம - கறபம - அறபம வடசொறகள கறபம - யுகவெனபாருமுளா (கஅ)

சொறறுநதா மன்றிது சூழகழலாய
பெறறுமபெறு கிலலதொா பெறறியதே
மறறெனபல சொலலிவண வநதுதவ
முறறுமபக ருனு முதடிதனனுல

இ - ள. சூழகழலாய - கடடிய கழலையுடையவனே! இது - இவவாாததை, சொறறும தரம அனறு-(எனனிடததில) சொலலததககதனறு, (அபபிரமலோகம), பெறறும பெறுகிலலது ஓா பெறறிய து-அடைநதாலும அடையாததை யொததத தன மையுடையது, (ஆதலால), மறறு பல சொல என - வேறு பல வாாததை சொலலி ப்பயனெனனை? இவண வநது - (யான) இஙகு வநது, தவம முறறும பகல தானும - தவம முடியும [நிறைவேறும] காலததையும, முடிததனன - முடிததேன

குறிப்பு — பிரமலோகம புககவாககும மீணடுமபிறபபுணடாதலால 'பெற்றும பெறுகிலலதொா பெறறியது' என்றா இனி, 'இவண வநது உதவ' எனககொணடு ஸ்ரீராமன யானுள்ள இடததைத தேடிவநது மோக்ஷததைத தநதருளுமபடிக் கான தவததை முடிநதனனெனக கூறுதலுமாம. முறறும பகருனும் - அநேககால மாக எனறலுமொனறு (கக)

சிறுகாலை யிலாகிலை யோதிரியா
குறுகா நெடுகா குணமவேறுபடா
வுறுகாலகிளா பூத மெலாமுகினும்
மறுகாநெறி யெயதுவெண வானுடையாய.

இ - ள். வான் உடையாய் - தேவலோகத்தையுடைய இந்திரனே! சிறுகாலை இலா - சிறியகாலவரையறையில்லாமலும், நிலையோ திரியா - நிலைமை மாறுபடாமலும், குறுகா - குறைதலில்லாமலும், நெடுகா - வளர்தலில்லாமலும், குணம் வேறுபடா - குணம் வேறுபடாமலும், உறுகால் - (ஊழிக்காலத்தில்) உண்டாகின்ற காற்றினாலே, கிளர்பூதம் எலாம் உகினும் - விளங்குகின்ற பூதங்களெல்லாம் அழிந்தாலும், (அக்காலத்தினும்), மறுகா நெறி - அழியாதோங்கும் பதவியை [பரமபதத்தை], எய்துவென் - (யான்) அடைவேன்.

குறிப்பு — வைகுண்டபதவியானது காலம், நிமிஷம், காஷ்டை, கலை, நாழிகை, முகூர்த்தம், நாள், பக்ஷம், மாதம், இருது, வருடம் முதலிய காலவரையறையில்லாது அகண்டமாயிருத்தலின் 'சிறுகாலையிலா' என்றார். நிலை திரியாதிருத்தல் — இளமை முதுமை யடையாதிருத்தல். முக்குணங்களும் மாறிமாறி வராமல் என்றும் சத்துவ குணமே தலைக்கொண்டிருப்பதால் 'குணம் வேறுபடா' என்றார். 'உறுகால் கிளர் பூதமெலாமுகினும்' என்பதற்கு, பெரியகாற்றுமுதலாக விளங்குகின்ற பூதமெலாம் அழியினும் என்று பொருள்செய்தலுங் கூடும். உகுதல் - அவ்வவை தோன்றியவிடத்தே ஒடுங்குதல். இனி, கால் என்பது வழியெனக்கொண்டு பலவழிப்பட்ட பூதங்களென்றுரைத்தலுமாம். பூதமெல்லாம் அழிந்தொடுங்குங்காலத்தும் அழிவில்லாது நித்தியமாக இருத்தலின் மோக்ஷம் 'மறுகாநெறி,' எனப்பட்டது. (௨௦)

என்றின்ன விளம்பிடு மெல்லையின்வாய்
வன்றிண்சிலை வீரரும் வந்தணுகா
வொன்றுங்கிள ரோதையி னுணர்வார்
நின்றென்னைகொ லின்ன தெனுநினைவார்.

இ - ள். என்று இன்ன விளம்பிடும் எல்லையின் வாய் - என்று இப்படிப்பட்ட வார்த்தைகளைச் (சரபங்கமுனிவர்) சொல்லிமுடித்தபொழுது, வல் திண் சிலை வீரரும் - வலிய வில்லினையேந்திய ஸ்ரீராம லக்ஷ்மணரும், வந்து அணுகா - (அவ்வாச்சிரமத்தை) வந்துகிட்டி, ஒன்றும் - (அவ்விடத்துப்) பொருந்திய, கிளர் ஓதையினால் - பேரிரைச்சலினால், உணர்வார் - (அதன் காரணத்தை) அறிபவர்களாய், நின்று - (அவண் சற்றே) நின்று, இன்னது என்னை கொல் - இஃதென்னவென்று, நினைவார் - ஆலோசிப்பாராயினார்.

குறிப்பு — வன்றிண் - ஒருபொருட்பன்மொழி, இனி, அடைவே சிலையோடும் வீரரோடுங்கூட்டி வலிய சிலையையுடைய திண்ணிய வீரர் என்றுரைத்தலுமாம். தனித்தனியே ஒவ்வொருவருமுரைத்த வொலியெல்லா மொன்றாயத்திரண்டு பேரொலியாய் உருத்தெரியா வண்ணமெழுதலின் 'ஒன்றுங் கிளரோதை' என்றார். நின்று நினைவாரென நிதானித்து யோஜித்தாரெனலுமாம். (௨௧)

கொம்பொத்தன நாலொளிர் கோளவயிரக்
கம்பக்கரி நின்றது கண்டனமா
லிம்பாத்தலை மாதவர் பாலிவணு
மும்பாக்கர் செய்தின னென்றுணரா.

இ - ள். ஒளிர் - பிரகாசிக்கின்ற, கோள - வலிமையுடைய, வயிர - வயிரமிழைத்த பூணினையுடைய, ஒத்த நால் கொம்பு - (ஒன்றினையொன்று தம்மில்) ஒத்துள்ளனவாகிய நான்கு கொம்புகளையுடைய, கம்பம் கரி - கம்பத்திற் கட்டப்

படுகின்ற (ஐராவதமென்னும்) யானையானது, நின்றது கண்டனம் - நிற்கின்றதைப் பார்த்தோம், ஆல் - ஆதலால், உம்பர்க்கு அரசு இவன் - இத்தேவேந்திரன், இம் பாத்தலை - இவ்வுலகத்திலுள்ள, மாதவர்பால் - சரபங்கரிடத்து, எய்தினன் ஆம் என்று உணரா - வந்தான்போலும் என்றறிந்து.

குறிப்பு — தம்முட் சிறிதும் பெரிதுமாதலின்றி ஓரே அளவாயிருத்தலின் 'ஒத்த கொம்பு' என்றார்; ஒருகொம்பு போலவே மற்றொன்றுமிருந்ததெனவுணர்க. இதுபற்றியன்றே "ஓராவிற் கிருகோடு தோன்றினாற்போலத் தம்முள் ஒத்த அன்பினராய்" என்றார் திருக்கோவையார் உரையினும் "ககனம் ககனாகாரம்" என்றபடி தமக்குத் தாமே யிணையான கொம்புகளென்றுமாம். இந்திரனுடைய யானையாகிய ஐராவதத்திற்கு நான்கு கொம்புகளுண்மையை "ஈரிரு மருப்புடைய வாரணமுகத்தே யிந்திரனெதிர்ந்தவரை வென்றுவருமோ" என்ற கலிங்கத்துப்பரணிக் கவியினுமுணர்க. வயிரம் - கிம்புரிக்குக் கருவியாகுபெயர். கம்பகரி என்றதற்கு அசைந்தாடுகின்ற யானையென்றாவது, காண்போர்க்கு நடுக்கத்தைச் செய்கின்ற யானையென்றாவது பொருளுரைத்துக் கொள்க. இனி, வயிரம் என்பதனைக் கம்பத்தோடு கூட்டி யுரைத்தலுமாம். தலை மாதவர் - மற்றை முனிவர்கட்கெல்லாம் தலைவராகிய மாதவரெனலுமமையும். மாதவர் - உயர்வினால் ஒருவரைக்கூறும் பன்மை. ஈண்டு ஒருமைச்சொல் பன்மைச்சொல்லோடு மயங்குதலின்மையின் "ஒருமை சுட்டிய பெயர்நிலைக்கிளவி - பன்மைக்காகு மிடனுமாருண்டே" என்புழி யடங்காமையறிக. மற்றை முனிவரையுங் கூட்டி 'மாதவர்' என்றாரெனினுமிழுக்காது. அருகிருத்தல்பற்றி இவனெனச் சுட்டினார். (௨௨)

மானேயனை யாளொடு மைந்தனையும்
பூநேர்பொழி லின்புற மேநிறுவா
வானேறென வாளரி யேறிதெனத்
தானேயவ் வகன்பொழில் சாருதலும்.

இ - ள். (அப்பொழுது ஸ்ரீராமபிரான்), மானே அனையாளொடு - மான்போன்ற பார்வையையுடைய சீதாபிராட்டியுடன், மைந்தனையும் - இளையபெருமாளையும், பூ நேர் பொழிலின்புறமே நிறுவா - பூக்கள்நிறைந்த அச்சோலைக்கு வெளியே நிறுத்திவிட்டு, ஆன் ஏறு என - இடபம்போலவும், ஆள் அரி ஏறு இது என - மிருகராசனாகிய ஆண்சிங்கம்போலவும், தானே - தான்மாத்திரமே, அ அகன் பொழில் - விசாலமான அந்தச்சோலையை, சாருதலும் - அடைந்தவளவில்

குறிப்பு — ஆன், ஆளரி, மிக்கு நடை முதலியவற்றிற் குவமை. வானேறு என்பதற்கு இடியேறெனவும் பொருள்கொள்ளலாம், "அசனியேறனான்" என்றார் பிறரும். ஆளரி - நரமடங்கலுமாம். தண்ணியதாய அழகுவாய்ந்து உலகுய்யக் காரணமாகிய மேகத்தினிடத்தேயே தீயதாய உலகை அழிக்கும் இடியும், குடிவாழ்க்கைக்கு ஏற்றதாய் தாங்கிக்கொண்டிருந்த கம்பத்திடத்தேயே குடியழிவுக்கு ஏற்றதாகிய சிங்கமும் காந்துவைத்ததுபோல ஸ்ரீராமபிரானிடத்திலும் வணங்கினார்க்குக் காமனாய்த்தோன்றுங் கருணையும் பிணங்கினார்க்கு எமனாய்த் தோன்றுந் தறுகண்மையும் காணப்படுமென்பார் இங்ஙனங் கூறினாரென்க. பார்த்தாற் பசுவும் பாய்ந்தாற் சிங்கமும்போலவான் என்பார் 'ஆனேறென ஆளரியேறிதென' என்றார். வானேறு சிறந்த இடபமுமாம். இங்ஙனங்கொள்ளின் மோனை நயமழியாவிதம் வாளரியேறெனக்கொண்டு ஒள்ளிய சிங்கமெனப் பொருள்காண்க

கண்டா மவை யாயிர முங்கதுவக்
கண்டா மரை போற்கரு ஞாயிறெனக்
கண்டா னிமை யோரிறை காசினியின்
கண்டா னருநான் மறை யின்கனியை.

இ - ள். இமையோர் இறை - தேவராஜனாகிய இந்திரன், காசினியின்கண் - இப்பூமியினிடத்து, அரு நான்மறையின் கனியை - அறிதற்கரிய நான்குவேதங்களின் பலமாயுள்ள ஸ்ரீராமபிரானை, கருஞாயிறு என - கரிய சூரியனைப் (பார்த்தாற்) போல, கண் அவை ஆயிரமும் - (இந்திரன் தன்னுடைய) ஆயிரங்கண்களும் கண் தாமரைபோல் கதுவ - மதிப்பினையுடைய தாமரைமலர்களைப்போலப் (பொருந்தி) மலர, கண்டான் - பார்த்தான்.

குறிப்பு — "கருவரைபோல் நின்றானை" என்றத் திருவாலிநாடரும், "காகுத்தா கரியகோவே", "கண்புரத்தென் கருமணியே" என உறைந்தைத் திருநாடரும், "மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ" என இந்நூலாசிரியரும் ஈடுகண்டபடி எம்பெருமானது திருமேனியின் நிறம் கருமையாதலின் "கருஞாயிறென" என்பப் புணர்ந்து கூறினரெனக் "என்றுகொலோ கண்குளிரக் காணுநாளே" என்றபடி இந்திரன் கண்குளிரக்கண்டானென்பதாம். இரவும்பொலி தாமரையான் என முன்னாகக் கூறியதற்கிணங்க இங்கு அத்தாமரை மலர்தற்குக் காரணமாக 'கருஞாயிறு' எனக் கூறினர். சகல வேதங்களாலும் புகழப்பட்டுப் போக்கியமான கனிபோல நுகரப்படுதலின் 'நான்மறையின்கனியை' என்றார். இன்கனி இனிய கனியுமாம். சாகையிற்பழுத்தபழம் (சாகை - வேதமும் கொம்புமாம்) இனியதெனச் சொல்லவும் வேண்டுமோ? "கருமபினைக்கனியைச் சென்று நாடி" "ஐயச்சுவைத்தேற லெங்கோ கனியென்கோ பாலெனகேனோ" "கட்டியைத் தேனை யமுதைநன் பாலைக் கனியினைக் கரும்புதனை" என்றார் பெரியாரும். காசினி காஸ்யபீ என்னும் வடசொற்சிதைவு. மூவேழுதலைமுறை க்ஷத்திரியவதஞ் செய்த பரசுராமரால் காசிபருக்கு யஜ்ஞதக்ஷிணையாகக் கொடுக்கப்பட்டதாகலின் பூமிக்கு இப்பெயர் வரன்முறை. தாம், தான் - அசைகள். இது யமகவணி. (௨௪)

காணும் மனம் நொந்து கவன்றனனால்
ஆணுந்தனை யந்தணர் நாயகனை
நாணாளும் வணங்கிய நன்முடியால்
தூணாகிய தோள்கொ டுவற்றொழுவான்.

இ - ள். (இந்திரன்), காணு - (ஸ்ரீராமபிரானையிவ்வாறு) தரிசித்து, மனம் நொந்து - மனம் வருந்தி, கவன்றனன் - கவலைப்பட்டவனாய், ஆணாதனை - புருஷோத்தமனும், அந்தணர் நாயகனை - பிராமணர்கட்குத் தலைவனுமாகிய ஸ்ரீமந்நாராயணனை, நாள்நாளும் வணங்கிய நல்முடியால் - தினந்தோறும் வணங்கி வராநின்ற (தனது) சிறந்த தலையாலும், தூண் ஆகிய தோள்கொடு - தூண்களுக்கொப்பாகிய தோள்களாலும், அவன் - (அந்நாராயணனது திருவவதாரமாகிய) ஸ்ரீராமபிரானை தொழுவான் - வணங்கி அஞ்சலி செய்வானாயினன்.

குறிப்பு — தங்களைக் காப்பதனிமித்தம் அரசனை துறந்துபோந்து காயசருக்கின்று கல்லணைதுயின்று பொற்கலையரையின் வற்கலைதரித்துப் பங்கயச்சீறடி பரல்மிசை நடந்து கோவக்கானகத்து வந்தானே என்று வருந்தினனாகலின் 'காணுமனம் நொந்து கவன்றனன்' என்றார். அன்றியும், இத்தகைய ஸ்ரீராமனைக்கண்டு தரி

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

சித்து வைகுந்தம் பெறக்கருதிய முனிவரைப் பிரமனுலகத்துக்கு அழைத்தோமே யென்று கவன்றன்ன என்னனுமாம். தான் குறையிரப்ப நோந்து தம்பியாகத் திருவவதரித்துக் காத்தமையால் 'ஆணாதனே' என்றார். ஆள்+நாதனே எனப் பிரித்துரைத்தலுமமையும். சாதிவேதியனாகலின் 'அந்தணர் நாயகனே' என்றார். அவற்றொழுவான் உயர்திணையில் 'ஐ' உருபு தொக்கது "பொதுப்பெயருயர் திணைப் பெயர்" என்னுஞ் சூத்திரவிதிபற்றி யியல்பாகாது "இயல்பின் விகாரமும்" என்னும் விதிபற்றி விகாரமாயிற்று (௨௫)

வேறு

துவசமார் தொல்லமருட் டொன்னாரைச் செற்றுஞ்
சுருதிப் பெருங்கடலின் சொற்பொருள்கற் பித்துந்
திவசமா நல்லறத்தின் செந்நெறியி னுய்த்துந்
திருவளித்தும் வீடளித்துஞ் சிங்காமைத் தங்கள்
கவசமா யாருயிராய்த் தவமாய்க் கண்ணாய்க்
கடையிலா ஞானமாய்க் காப்பானைக் கண்ணு
றவசமாய்ச் சிந்தையழிந் தயலே நின்று
றறியாதான் போல வறிந்தவெல்லாஞ் சொல்வான்.

இ - ள் துவசம் ஆர் - வெற்றிக்கொடிகள் நிறைந்த, தொல் அமருள் - பழமையான [முன்னடந்த] யுத்தங்களில், தொன்னாரை - பகைவரை, செற்றும் - கொன்றும், சுருதி பெருங்கடலின் - பெரிய கடல்போன்ற வேதங்களின், சொல் பொருள் - பதங்களையும் அருத்தங்களையும், கற்பித்தும் - உபதேசித்தும், திவசம் - தினந்தோறும், மா நல் அறத்தின் - சிறந்த தருமத்தின், செந்நெறியில் - நல்வழியில், உய்த்தும் - செலுத்தியும், திரு அளித்தும் - சம்பத்தைக்கொடுத்தும், வீடு அளித்தும் - பரமபதத்தைக் கொடுத்தருளியும், சிங்காமை - அழியாதபடி, தங்கள் தங்கட்கு, கவசமாம் - மெய்க்காவற்கருவியாயும், ஆர் உயிராய் - அரிய உயிராகியும், தவமாய் - தவமாகியும், கண்ணாய் - கண்ணாகியும், கடையிலா ஞானமாய் - முடிவில்லாத தத்துவஞானமாகியும், காப்பானை - காக்கின்ற ஸ்ரீராமபிரானை, கண்ணுற்று - (இந்திரன்) கண்டு, அவசமாய் - மெய்ம்மறந்தவனாய், சிந்தை அழிந்து - மனமுருகி, அயலே நின்றான் - (அவனது) பக்கத்தில் நின்று, அறியாதான்போல - (அவனது மேன்மைகளைத்) தெரியாதவன்போலவே, அறிந்த எலாம் - (தான்) அறிந்த (அவனது) திருக்கல்யாணகுணங்களை யெல்லாம், சொல்வான் - கூறித் துதிசெய்வானாயினன்.

குறிப்பு -- துவசம் த்வஜமென்னும் வடசொல்லின் விகாரம். தேவாசுரயுத்தங்களிற் பலமுறையுஞ் சென்று அசுரரைவென்று அமரரைக்காத்தமையான் 'துவசமார் தொல்லமருட்டொன்னாரைச் செற்றும்' என்றார். 'சுருதி' என்றது, கேட்கப்பட்டு வருவதென்னும் பொருளினது, வேதம் 'எழுதாக்கிளவி' எனப்படுதலுமிதுபற்றியே. ஆதியில் ஹம்ஸரூபியாய் வேதங்களையும் அவற்றின் பொருள்களையும் பிரமதேவனுக்குக் கற்பித்தமையான் 'சுருதிப்பெருங்கடலின் சொற்பொருள்கற்பித்தும்' என்றார். வேதங்களனந்தமாகலின் அவற்றிற்குப் பெருங்கடலை யுவமையாக்கினார். "அறங்காத்தற் குனக்கொருவ ரருமொரு துணையின்றிக், கறங்காகு மெனத்திரிய நீயேயோ கடவாய்தான்" என்றும், "தருமத்தின் றனிமூர்த்தி" என்றும் விராதன் வதைப்படலத்திற் கூறியாங்கு தருமந்தவறி யுலகங் கெட்டழியுங்காலத்தில் அப்

பொழுதைக்கு இப்பொழுது அநேக திருவவதாரங்கள் செய்து தருமத்தை நிலைநிற்கும்படி செய்தலால் 'திவசமா நல்லறத்தின் செந்நெறியினுய்த்து' என்றார். இம்மை மறுமை வீடென்னும் மூன்றினும் அளவில்லாத இன்பங்களைத் தன் திருவடியடைந்தோர் அனுபவிக்கும்படி திருவருள் புரிதலால் (திருவளித்தும் வீடளித்தும்) என்றார், "சாய்கொண்ட விம்மையுஞ் சாதித்து வானவர்நாட்டையு, நீ கண்டுகொள்ளென்று வீழ்ந்தரு ளின்று நின்றே" என்றார் பெரியாரும், வீடு முதனிலை திரிந்த தொழிற்பெயர், ஸம்ஸார பந்தங்களினின்று விடுபடுவது என்பது இதன்பொருள், முத்தியென்பதற்கும் இதுவே பொருள் திரு செல்வம் சிங்காமை வினையெச்சக் கிளவி மஹா பிரளயகாலத்தில் உலகங்கள் எல்லாவற்றையும் தன் வயிற்றுள் அழியாதபடி வைத்துக்காத்தலால் 'சிங்காமைத் தங்கள் கவசமாய்' என்றார் அருமை என்னும்பண்பு திரிந்து ஆர் என நின்றது எல்லாப்பொருள்களிலும் அந்தர்யாமியா யிருத்தல்பற்றி 'ஆருயிராய்' என்றார். எம்பெருமானது திருவடி நீழலின் கண்ணே ஜனனவிடாய் தீர்ந்துய்தற்குத் தத்துவஞானமும் அத்தத்துவஞானம் பெறுதற்கு விவேகமும், அதற்குத்தவமும் முறையே ஒன்றுக்கொன்று இன்றியமையாதனவாயுள்ளவாதலால் அவையனைத்தும் எம்பிரானது ஸ்வரூபமேயென்பது விளங்க 'தவமாய்க் கண்ணுய்க்க கடையிலா ஞானமாய்' என்றார். காப்புடைக் கடவுளாதலின், 'காப்பானை' என்றார் அவசம் - சுவாதீனமின்மை, இதுவும் சிந்தையழிதலும், பக்தி மிகுதியாலுண்டான மெய்ப்பாடுகள் (உசு)

தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற
　　சுடரே தொடக்கறுத்தோர் சுற்றமே பற்றி
நீந்த வரிய நெடுங்கருணைக் கெல்லா
　　நிலயமே வேத நெறிமுறையி னேடி
யாய்ந்த வுணர்வி னுணர்வே பகையா
　　லலைப்புண் டடியே மடிபோற்ற வந்நா
ளீந்த வரமுதவ வெய்தினையே யெந்தா
　　யிருநிலத்த வோநின் னிணையடித் தாமரைதாம்.

இ - ள். பொருள் அனைத்தும் - எல்லாப்பொருள்களிலும், தோய்ந்தும் - (உள்ளும் புறம்புமா) கலந்திருந்தும், தோயாது நின்ற – (அவற்றின் குணதோஷங்களிலேதான்) சம்பந்தப்படாமலே நின்ற, சுடரே - சோதியுருவமே! தொடக்கு அறுத்தோர் – அகப்பற்றுப் புறப்பற்றுக்களை முற்றுந்துறந்த முனிவர்கட்கு, சுற்றமே - உறவானவனே! பற்றி நீந்த அரிய - (ஒன்றைப்) புணையாகக்கொண்டு கடப்பதற்கரியதாகிய, நெடுங் கருணைக்கெல்லாம் நிலயமே - மிகுந்த அருளுக்கெல்லாம் இருப்பிடமானவனே! வேத நெறிமுறையின் - வேதங்களிற்கூறிய வழிகளின் முறைமையால், ஆய்ந்த - ஆராய்ந்தறிந்த, உணர்வின் - தத்துவஞானத்திற்கு, உணர்வே - அறியப்படும் பொருளே! எந்தாய் - எமக்குத் தாயும் தந்தையுமானவனே! அடியேம் - அடியவர்களாகிய யாம், பகையால் - (அரக்கர்முதலிய) பகைவர்களால், அலைப்புண்டு - துன்புறுத்தப்பட்டு, அடிபோற்ற - (உமது) திருவடிகளைத் துதிக்க, அந்நாள் - அப்பொழுது, ஈந்த - கொடுத்தருளிய, வரம் - வரத்தின்படி, உதவ எய்தினையே - உதவிபுரிதற்கு (இங்கு) வந்தருளினையே! நின் இணை அடித் தாமரை - உன்னுடைய இரண்டு திருவடித்தாமரைகள், இருநிலத்தவோ - இப்பெரிய பூமியிற் பொருந்தத்தக்கனவோ?

குறிப்பு —'தோய்த்தும் பொருளனைத்தும் தோயாது நின்ற' என்றதின் விசேஷார்த்தத்தை 'பேதியாது நிமிர் பேதவுருவம் பிறழ்கிலா' எனக் கீழ் உரைத்த காப்புச் செய்யுளின் விசேடவுரையிற் கண்டுகொள்க. மனத்தினது அஞ்ஞான இருளை யொழித்து ஞானவொளியைத் தருதலின் 'சுடரே' என்றார். முனிவர்களைக் காத்தற்பொருட்டு மானிடராய்த் திருவவதாரஞ்செய்தருளி யனேகோபாற சோந்ததனால் 'தொடக்கறுத்தோர் சுற்றமே' என்றார். 'சுற்றமே' என்றது: விசிஷ்டாத்துவிதக் கொள்கை, "தண்டுழாய் மாலைமார்பன் றமர்களாய்" என்றார் பெரியாரும். நினது கருணை யிவ்வளவினதென்று அளவிடுதற்கு வேதசாஸ்திரமுதலிய ஆதாரங்களைக் கொண்டேனும் மற்றெவ்விதத்தாலும் யாவராலுமியலாது என்பார் 'பற்றிநீந்தவரிய நெடுங்கருணைக் கெல்லா நிலையமே' என்றார். ஈண்டு 'நீந்த' என்னும் சொல்லாற்றலான், கருணை கடலுக்குவமிக்கப் பட்டமைபெறலாம். பெறவே, பெரியோர் காண்பது எங்ஙனும் கருணைவெள்ளமே யாகலானும், அஃதின்புருவினதாகலானும், அவ்வின்பும் கண்டமாத்திரையின் மேற்செல்லவொட்டாது வேண்டிய வேண்டியாங்களிக்குந் தன்மையதாகலானும் அதனைக்கடத்தல் இயல்பிலேயே கூடாதாயிற்று. நீந்த முயன்றோரு மவ்வெள்ளத்துக் கொழுகொம்பு பெறாது அதனூடேயாழ்ந்து தோய்ந்து மயங்குவர் என்பது 'பற்றி' யென்பதனாற் குறிக்கப்பட்டது. வேதங்களிற் கூறிய வழிகளின் முறைமையால் ஆராய்ந்தறியப்படுகின்ற மெய்ப்பொருள் எம்பிரானேயாகலின் 'வேத நெறிமுறையினேடி யாய்ந்த வுணர்வினுணர்வே' என்றார். பகை பண்பாகுபெயர். பிரமதேவன் முதலிய தேவரையும் உளப்படுத்தி 'அடியேம்' என்றார். 'அந்நாள்' என்றது அமரர்கள் மகாமேருவின் மேலிருந்து பாலாழியிற் பள்ளிகொள்ளும் பரமனைப் பிரார்த்தித்தகாலத்தினை. ஈந்த வரம் பாலகாண்டத்து "வருந்தலவஞ்சகா" என்பது முதலாகக் கூறப்பட்ட திருவவதாரப் படலச் செய்யுட்களில் வருதல் அறிக. எந்தாய் இரட்டுறமொழிதல். (௨௭)

மேவாதா ரில்லை மேவினரு மில்லை
வெளியோ டிருளில்லை மேல்கீழு மில்லை
மூவாமை யில்லை மூத்தமையு மில்லை
முதலிடையோ டீறில்லை முன்னொடுபின் னில்லை
தேவாவிங் கிவ்வோநீ சென்றநிலை யென்றால்
சிலையேந்தி வந்தெம்மைச் சேவடிக ணோவக்
காவா தொழியிற் பழிபெரிதோ வன்றேற்
கருங்கடலிற் கண்வளராய் கைம்மாறு முண்டோ

இ - ள். தேவா - தேவனே! கருங்கடலில் - கருநிறமடைந்த திருப்பாற்கடலினிடத்தே, கண்வளராய் - திருக்கண்வளர்ந்தருளுகின்ற ஸ்ரீமந்நாராயணனே! (உனக்கு), மேவாதார் இல்லை - பகைவர்களில்லை, மேவினரும் இல்லை - நண்பர்களும் இல்லை, வெளியோடு இருள் இல்லை - ஒளியும் இருளும் இல்லை, மேல் கீழும் இல்லை - மேலுங்கீழும் இல்லை, மூவாமை இல்லை - இளமையில்லை, மூத்தமையும் இல்லை - முதுமையும் இல்லை, முதல் இடையோடு ஈறு இல்லை - ஆதியும் மத்தியமும் அந்தமும் இல்லை, முன்னொடுபின் இல்லை - முன்னும் பின்னும் இல்லை, நீ சென்ற நிலை - நீ யடைந்துள்ள நிலைமை, இங்கு இவ்வோ என்றால் - இங்கு (உரைத்த) இவைகளே என்றால், சிலை ஏந்தி - கோதண்டத்தைக் கையிலேந்திக்கொண்டு, சேவடிகள் நோவ வந்து - சிவந்த (நினது) திருவடிகள் நோக

ம்படி (இக்காட்டில் நடந்து) வந்து, காவாது ஒழியின் - (எம்மைக்) காவாமற்போனால், பழிபெரிதோ - பெரும்பழி யுண்டாமோ? அன்றேல்-அதுவன்றாயின், கைம்மாறும் உண்டோ - (எங்களாற் செய்யப்படும்) பிரதியுபகாரமும் உளதோ?

கருத்து —பகை நட்பு முதலியன இல்லாதாய்! நீ, நின்னிலையறியாது இவ்வுலகில் மனிதனாகத் திருவவதரித்துச் சிலையேந்தி யிக்காட்டையடைந்து அடியேங்களைக் காவாதொழியின் நினக்குப் பெரும்பழியுண்டாமோ? அன்றி, நீ செய்யும் உதவிக்குப் பிரதியுபகார மேதேனுமுண்டோ? இவ்விரண்டனு ளொன்றுமில்லை; ஆதலின், சரணாகதி யடைந்தோர்க்கு அபயம் அளித்தலே நின்திருவருளினியல்பு என்பதாம்.

குறிப்பு —மேவாதார் விரும்பிச் சேர்தவர் மேவினர் விரும்பிச் சேர்ந்தவர் ஏல் என்னிலென்பதன் மரூஉ. திருப்பாற்கடல் வெண்ணிறத்ததாயினும் எம்பிரானது திருமேனியின் நிழல் கதுவலாலே கரியநிறம் பெறுதலின், 'கருங்கடல்' என்றான், "நீலக்கடல் கடைந்தாய்" "நீலக்கடலுள் நெடுங்காலங் கண்வளர்ந்தான்" "கருந்தண்மாக் கடற்கண் டுயின்றவன்" என்றார் பெரியாரும் இனி, "கருமையே பெருமையாகுங் கறுப்பொடு வலியுமாமே" என்பவாகலின், 'கருங்கடல்' பெரிய கடலென்றுமாம் வள்ளாய் செய்யுளாய் மறையாகாது வழக்காய உடன்பாடுணர்த்திற்று, இது "வேண்டுவனம்பி" என்னுஞ் சிந்தாமணி நாமகளிலம்பகச் செய்யுளில் "வல்லான்" என்பதற்கு உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரைத்த உரையான் விளங்கும் இனி, எதிர்மறையாகவேகொண்டு கடலிற் பள்ளிகொள்ளுதலை விடுத்து இவண் திருவவதரித்து வந்தோனே என்றுங் கூறலாம் 'சேவடிகள் நோவ' என்பதூஉம் மேற்கவியில் தாமரைக்கை நோவ என்பதூஉம் பத்திமிகுதியை விளக்காநின்றன (உஅ)

நாழி நவைதீ ருலகெலா மாக
    நளினத்து நீதந்த நான்முகனார் தாமே
ஊழி பலபல்வு நின்றளந்தா லொன்று
    முலவாப் பெருங்குணத்த வுத்தமனே மேனாட்
டாழி தரையாகத் தண்டயிர் நீராகத்
    தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
வாழி கடைந்தமுத மெங்களுக்கே யீந்தா
    யவுணர்கட்டா நின்னடிமை யல்லாமை யுண்டோ.

இ - ள் நளினத்து - (உன்னுடைய) நாபிக்கமலத்து, நீ தந்த - நீ பிறப்பித்த, நான்முகனார்தாமே - நான்கு முகங்களையுடைய பிரமதேவரே, நவை தீர் உலகு எல்லாம் - குற்றமற்ற உலகங்களெல்லாவற்றையும், நாழியாக - நாழியென்னும் அளவுகருவியாகக்கொண்டு, ஊழி பல பல்வும் நின்று அநேக கற்பகாலமும் (ஓயாமல்) நின்று, அளந்தால் - (உனது திருக்கல்யாண குணங்களைத் தானிய ராசியாக்கொண்டு) அளவிட்டாலும், ஒன்றும் உலவா - (அவற்றுள்) சிறிதும் முடியாத, பெருங்குணத்த உத்தமனே - மிகுந்த குணங்களையுடைய உத்தமனே! (நீ), மேல் நாள்-முற்காலத்தில், தரை தாழி ஆக - பூமி (தயிர்ப்) பானையாகவும், நீர் தண் தயிர் ஆக - பாற்கடனீர் குளிர்ந்த தயிராகவும், தடவரையே மத்து ஆக - பெரிய மந்தரமலையே (தயிர்கடையும்) மத்தாகவுங்கொண்டு, தாமரை கை நோவ - (உனது) தா

மரை மலருக்கொப்பான திருக்கைகள் நோகும்படி, ஆழி கடைந்து - அத்திருப்பாற்கடலைக் கடைந்து, அமுதம் - (அதினின்றுமெடுத்த) அமிர்தத்தை, எங்களுக்கே - (தேவர்களாகிய) எங்களுக்கு மாத்திரமே, ஈந்தாய் - கொடுத்தருளினாய், அவுணர்கள் - (கடலைக் கடைதற்கு எங்களோடு பாடுபட்ட) அசுரர்கள், நின் அடிமை அல்லாமை - உனக்கடியராகாமை, உண்டோ - உளதோ?

குறிப்பு — எம்பிரானது அளவிடற்கரிய அனந்த கலியாண குணங்களைத் தானியமாகவும், அத்தானியத்தை அளப்பதற்குச் சகலாண்டங்களையும் நாழியென்னும் சிறிய அளவு கருவியாகவும், எம்பிரானது நாபியிற்றோன்றி அவனால் அருமறைகளை யுபதேசிக்கப்பெற்று மற்றை எல்லோரினுஞ் சிறந்தே தெளிவினை யடைந்திருக்கின்ற பிரமதேவனே அக்கலியாண குணங்களை யளத்தற் கருகனென்பதுபற்றி அவனை அளவுகாரனாகவும் உருவகப்படுத்தினன். உலகை நாழியாக உருவகப்படுத்தியதற்கேற்பக் குணங்களைத் தானியமெனக் கூறாது விடுத்தமையின் இஃது ஏகதேச வுருவகவணி. 'நாழி' முகத்தலளவை யாகுபெயர். உலகங்களெல்லாம் அக்கலியாண குணங்களில் ஈடுபட்டு உய்தலால் 'நவைதீருலகு' என்றான். மகா பிரளயந்தோறும் பிரமதேவன் இறந்து பிறக்குந் தொழிலினை யொழிந்து நின்று மகாபிரளயகாலம் இத்தனையென்று கணித்தறியலாகாத பெருங்காலத்தைச் சிறிது நேரமாகக் கொண்டு அளக்கினும் அளவிடமுடியாத நின் அனந்த கலியாண குணங்கள் எம்மனோரால் சிறிதேனும் அறியத்தக்கனவோ என்பது விளங்க 'ஊழி பல பலவு நின்று அளந்தாலொன்று, முலவாப் பெருங்குணத்து வுத்தமனே' என்றான். 'அளந்தால்' என்புழி உயர்வு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. 'தாழி தரையாக' என்பது முதலியன உருவகங்கள். 'நீர்' என்றதற்குச் சந்தர்ப்பநோக்கிப் பாலெனப்பொருள் கூறினும் 'ஆழி' ஆழ்ந்திருப்பது, இ - வினைமுதற் பொருண்மை விகுதி. அமுதம் - அம்ருதம்' என்பதன் சிதைவு, இஃது அமிழ்து அமிர்தம், அமுது எனவும் திரியும். எங்களுக்கே, ஏகாரம் - பிரிநிலை. அடிமை - பண்பாகுபெயர். உண்டோ, ஓகாரம் - எதிர்மறை. பாற்கடல் கடைந்த விவரம் வெளிப்படை. (௨௧)

ஒன்றாகி மூலத் துருவம் பலவாகி
யுணர்வு முயிரும் பிறிதாகி யூழி
சென்றா சறுங்காலத் தந்நிலைய தாகித்
திறத்துலகந் தானாகிச் செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே யெங்க
ணவைதீர்க்கு நாயகமே நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி யயற் பேரைக் காய்தி
நிலையில்லாத் தீவினையு நீத்தத் தன்றே

இ - ள். மூலத்து - ஆதிகாலத்தில், ஒன்று ஆகி - ஒன்றேயாயிருந்து, (பின்னர்), உருவம் பல ஆகி - (வெவ்வேறுவகைப்பட்ட) பல உருவங்களாய், உணர்வும் உயிரும் பிறிது (உம்) ஆகி - அறிவும் உயிரும் மற்றை உடலும் ஆகி, ஊழிசென்று ஆசறும் காலத்து - மகாபிரளயமுண்டாகி முடியுங்காலத்தில், அந்நிலையது ஆகி - அப்பொழுதுள்ள தன்மையாகி [எல்லாம் லயித்துத் தான் மாத்திரமே சேஷித்திருக்குந் தன்மையாகி], திறத்து உலகம் ஆகி - (மீண்டும் படைக்கும்பொழுது) பலவகைப்பட்ட உலகங்களுமாய், செஞ்செவே நின்ற - செவ்வையாய் நின்ற, நன

று ஆயஞானம் - நல்ல தத்துவஞானத்தினது, தனி கொழுந்தே - ஒப்பற்ற கொழுந்தே! எங்கள் நவைதீர்க்கும் நாயகமே - எங்களுடைய குறைகளைப் போக்கியருளுகின்ற தலைமைப்பொருளே! (நீ) நல்வினையே நோக்கி நின்றாரை காத்தி - புண்ணியத்தையே கருதி(த் தருமநெறியில்) நிற்பவர்களைக் காக்கின்றாய்; அயல்பேரை - (பாபத்தையே கருதித் தீயநெறியில் நிற்பவராகிய) மற்றவர்களை, காய்தி - கோபிக்கின்றாய், நிலை இல்லாத தீவினையும் - நிலையில்லாத அப்பாவமும், நீ தந்தது அன்றே - நீ யுண்டாக்கியதன்றோ?

குறிப்பு—ஆசறுதல் முடிதல் செஞ்செவே செம்மை யென்பதன் மரூஉ, இது 'செக்கச்செவேல்' எனவும் வழங்கும் 'ஞானக் கொழுந்தே' என்பது ஞானங்கட்கெல்லாம் தோன்றுமிடமாயிருப்பவனே என்றபடி 'நாங்கள்' எனவும் பாடம் நல்வினை தீவினைகள் நிலையின்றிமாறி வருதலின் 'நிலையில்லாத தீவினை' என்றான் தீவினையுந் தான்தந்ததே யாயினும் அவரவர் கருமங்களுக்குத் தக்கபடி பலனளிப்பது ஈசனது இயற்கையென்பது ஏற்றடியாற் போதரும் கருத்து. (௯௦)

வல்லை வரம்பில்லாத மாயவினைதன்னான்
மயங்கினரோடெய்தி மதிமயங்கி மேனா
ளல்லை யிறைவனீ யாதியெனப் பேதுற்
றலமருவே முன்னை யறப்பய னுண்டாக
வெல்லை வலயங்க ணின்னுழையென் றந்நா
ளெரியோனைத் தீண்டி யெழுவரென நின்ற
தொல்லை முதன்முனிவர் சூளுற்ற போதே
தொகைநின்ற வையந் துடைத்திலையோ வெந்தாய்

இ - ள் எந்தாய்—! எங்களுக்கெல்லாம் பிதாவே மேல் நாள் - முற்காலத்தில், வரம்பு இல்லாத - எல்லையில்லாத, மாயைவினைதன்னால் - மாயையின் சூழ்ச்சியினால், நீ இறைவன் அல்லை (என்) - நீ பரத்துவமா? என்றும், (நீ இறைவன்) ஆதி என - நீயே பரத்துவமாகிறாயென்றும், பேதுற்று - பேதப்பட்டு, மயங்கினரோடு - மதிமயங்கிக்கிடந்த தேவர்களுடனும், எய்தி - (உண்மையுணராது) சோர்ந்து, மதி மயங்கி - புத்திமயங்கி, அலமருவேம் முன்னை - தடுமாறுகின்றவர்களாகிய எங்கட்கெதிரில், அந்நாள் - அப்பொழுது, அறம் பயன் உண்டாக - (முன்செய்த) நல்வினையின்பலன் கைகூட (அதனால்) வல்லை – விரைவாக, எழுவர் என நின்ற தொல்லை முதல் முனிவர்-எழுபேர் என நின்ற பழமையான சிறந்த முனிவர்கள், எரியோனை - அக்கினியினுக் கத்தாக்கத் மூர்த்தியாகிய உருத்திரனை, தீண்டி - அடைந்து, வலயங்கள் எல்லை - உலகங்களினெல்லையும், நின்னுழை - உன்னிடத்தே தோன்றி வளர்ந்துவருபவை [நீயே பரத்துவம்], என்று சூளுற்றபோதே - என்று சித்தாந்தஞ்செய்தகாலத்தே, தொகைநின்ற ஐயம் - மிகுதியாகநின்ற சந்தேகத்தை, துடைத்திலையோ - (நீ) நீக்கினாய் அல்லையோ?

குறிப்பு—வல்லை காலவிரைவையுணர்த்து மோரிடைச்சொல், இனி, "வல்லைகான விரைவுமைந்தாம்" என்பவாகலின், வலிமையெனப் பொருள்கொண்டு மாயவினையோடு கூட்டலுமொன்று. மாயவினை: ராஜஸதாமஸபுராணங்களை யாராயாது பரனல்லாதாரைப் பரனென்றுகூறுமோர் பொய்க்கொள்கை. 'இறைவன்'

'நீ' என்னும் இவ்விரண்டும் மத்திமதீபம். அல்லை, ஆதி என்பன; முன்னிலை ஒருமைவினைமுற்றுகள். இனி, நீ ஆதி இறைவன் அல்லை எனப் பாகுபாடுசெய்து, நீ ஆதியாகிய கடவுள் அல்லையென்பப் பொருள்கோடலுமாம். பேது, பேதமென்பதன் விகாரம். 'ஆக'—இச்செயவெனெச்சம் காரணப்பொருட்டாய் இறந்தகாலமுணர்த்திற்று. வலயம் வட்டம், இது ஆகுபெயராய் உலகங்களையுணர்த்தியது. தீப்போலும் நிறத்தையுடையானாதலால், 'எரியோன்' எனலுமாம். "தழனிறவண்ணன்" என்றார் பெரியாரும் இனி, நெருப்புவடிவமான மழுவுடையோன் என்றலுமாம் 'எரியோனைத்தீண்டி' எனவே உபலக்கணத்தால் பிரமதேவனைத்தீண்டியென்பதும் பெறப்படும். எழுவர் முனிவர் ஸப்தருஷிகள், அத்ரி, பிருகு, குத்ஸர், வஸிஷ்டர், கௌதமர், காசிபர், ஆங்கிரஸர் போல்வார் என்பதன் மரூஉ. ()

வேறு

இன்னன பலநினைந் தேத்தினன் இயம்பாத்
துன்னுதல் இடையுள தென்நனி துணிவான்
தன்னிகர் முனிவனைத் தரவிடை யென்னுப்
பொன்னொளிர் நெடுமுடிப் புரந்தரன் போனான்.

இ - ள் பொன்னொளிர் நெடுமுடி புரந்தரன் - பொன்மயமாகி விளங்குகின்ற நீண்ட கிரீடத்தைத்தரித்த இந்திரன், இன்னன பலநினைந்து - இத்தன்மையனவான (வார்த்தைகளை) மனத்தில் தியானித்து, இயம்பா ஏத்தினன்-(அவற்றை வாயினால்) சொல்லித் துதிப்பவனாய், இடை துன்னுதல் உளது என - இடையிலே பொருந்தியிருக்கின்ற விசேடமொன்றிருக்கின்றதென்று, நனி துணிவான் - நன்றாய் நிச்சயிப்பவனாய் தன்னிகர் முனிவனை விடைதர என்னு - தனக்குத்தானே யொப்பாகிய அச்சரபங்க முனிவரை நோக்கி (யான் போவதற்கு) விடைதந்தருளுவீராக என்று கேட்டு, (பின்) போனான் - (தன்னுலகம்) போய்ச் சேர்ந்தான்

குறிப்பு —துன்னுதல் - தொழிலாகுபெயர் தர - அகரவீற்று வியங்கோள். புரந்தரன் - (சத்துருக்களது) பட்டணங்களை அழிப்பவன் என்னுங் காரணக்குறி. ()

போனவ னகநிலை புலமையி னுணர்வான்
வானவர் தலைவனை வரவெதிர் கொண்டா
னானவ னடிதொழ வருள்வர வழுதான்
றானட விடவகை தழுவின னுழைவான்

இ - ள். (பின் சரபங்கமுனிவர்) போனவன் அகநிலை-(தம்மிடத்து விடைபெற்றுச்) சென்றவனாகிய இந்திரனது மனநிலையை, புலமையின் உணர்வான் - (தமது) ஞானக்கண்ணால் அறிபவராகி, வானவர் தலைவனை - நித்திய சூரிகளுக்குத் தலைவனான ஸ்ரீராமபிரானை, வர எதிர்கொண்டான் - எழுந்தருளும்போது எதிர்கொண்டு சென்றார், (அப்பொழுது), ஆனவன் - அந்த ஸ்ரீராமன், அடிதொழ (முனிவரது) திருவடிகளில் வீழ்ந்து வணங்க, தான் நடவிடவகை - தாம் பரமபதமடைவதற்குத் தக்கபடி, உழைவான் - (இங்கிருக்க) வருந்துகின்ற அம்முனிவர், அருள்வர - அன்பு மேன்மேலும் பெருகுதலால், அழுதான் - அழுதார்.

குறிப்பு:—வானவர் - தலைவன் தேவர்கட்குத் தலைவன் எனலுமாம். அழுகை - சந்தோஷத்தின் மிகுதியாலுண்டாயது. நடவிட - இடு, துணைவினை. (௬௯)

ஏழையு மிளவலும வருகென வினிதா
வாழிய வவரொடும வநதனன் மகிழ்வா
னூழியின முதனமுனி யுறையுளை யணுகா
வாழியில விழிதுயி லவனென மகிழ்வான.

இ - ள். (பின சரபஙகமுனிவா ஸ்ரீராமனைநோககி நீ) இனிதாவாழிய-சுகமாய் வாழ்வாயாக, ஏழையும இளவலும வருக-சீதையும இலக்குமணனும இஙகு வருவா ாகளாக, என - எனறுசொலல, (ஸ்ரீராமன) அவரொடும வநதனன ஸீதாலக்ஷமண ரோடு வநது, மகிழ்வால - சநதோஷமாக, ஊழியின முதலமுனி உறையுளை - கற பநதொடஙகியுள்ள அமமுனிவரதாசசிரமததை, அணுகா - அடைநது, ஆழியில விழிதுயிலவனென - திருபபாறகடலில திருககண வளாநதருளுகினறவனபோல, மகிழ்வான - களிபபாருயினன.

குறிபபு —ஏழை - மடமைககுணமுடையவள பணபாகுபெயா இளவல் - அல பெயாவிகுதி குணவாகுபெயருமாம இனி, "அணுக" எனனும பாடததிறகு, ஸ்ரீராமன எழுநதருள (அமமுனிவா ஸ்ரீராமனை), ஆழியில துயிலகினற எமபெருமா னென எணணி மகிழ்நதனரெனக உறையுள - வீடடிறகுத தொழிலாகுபெயா, உள தொழிறபெயா விகுதி, இஙகு இடபபொருளுணாததியது (௬௪)

அவவயி னழகனும வைகின னறிஞன
செவவிய வறவுறை செவியயி னுதவ
நவவியின விழியவ ளொடுநெனி யிருளைக
கவவிய நிசியொரு கடையுறு மளவின.

இ - ள அழகனும் - ஸ்ரீராமனும, நவவியின் விழியவளொடு - பெண்மானி ன கணபோனற கணணையுடைய சீதையுடன, அவவயின - அவவிடதது, அறி ஞன செவ்விய அற உரை செவியயின உதவ - ததுவஞான முடைய அசசரபங கமுனிவா நலல தருமோபதேசஙகளை (தனனுடைய) காதிறசொல்ல (கேட்டு) நனி இருளை கவவிய நிசி - மிகக இருளையுடைய இராததிரியானது, ஒருகடையுறும அளவின - ஒரு முடிவை யடையுமவரையும (இரவு நீஙகுமளவும) வைகினன - தஙகியிருநதான

குறிப்பு —மிக்க ஹிதபரமான வாககியஙகளானுலும வகதா அறியாதவனுயின் ...வவுணமைபபொருளில கேடபோனுககு நமபிககை பிறவாதாகையால அதைநீகக அறிஞன' எனறும, வகதா எவவளவு சமாததனுயினும சொல்லும விஷயம தீதா யின அதில கேடபோன மனமபறறுதாகையால அதை நீககச 'செவவிய அற வு ரை யென்றும, வகதாவும விஷயமும சிறநதிருநதும "கேடடாாபபிணிககுந் தகை யவாயககேளாரும - வேடப மொழிவதாம சொல" எனறபடி சொல் வனமையின றெனிற் பயனபடாதாகையால் அதை நீகக 'செவியினுதவ' எனறுஙகூறினா. உதவ எனறதனுனே பகதிசிரததையோடு கேளாரெனனக கொணடமை வெளிப் படை. "அழகனும் அவளும துஞச" எனமேறகூறிப் போநதவா ஈணடு பிராட்டியை 'நவ்வியின விழியவள' என வாணிததது எம பெருமானினும பிராட்டி கண்ணழ கிற் சிறந்தமையை விளக்குதற்கெனக. முனிவாரும இவ்வாறே கூறினா. (௬௫)

விலகிடு நிழலினன் வெயில்விரி யயிலவா
ளிலகிடு சுடரவ னிசையன திசைதோ
யலகிட லரியத னவிர்கர நிரையா
லுலகிடு நிறையிரு ளுறையினை யுரிவான்.

இ - ள் விலகிடு - பரவுகின்ற, நிழலினன் - ஒளியையுடையவனும், இலகிடு சுடரவன் - விளங்குகின்ற காந்தியையுடையவனுமாகிய சூரியன், இசையன - ஒன்றோடொன்று சேர்ந்து நிறபனவான, திசைதோய - திக்குகளை தோறும் பொருந்தியுள்ள, அலகிடல அரிய-அளவிடக்கூடாத, அவிர தன் கரம நிரையால - விளங்குகின்ற தனது கிரணங்களாகிய கைகளின் கூட்டத்தால், விரிவெயில-பரவிய வெயிலாகிய, அயிலவாள - கூர்மையான வாளைக்கொண்டு, உலகு இடுகின்ற இருள உறையினை - உலகின்கணுள்ள இருளாகிய போர்வையை, உரிவான-கழற்றுவானாயினன்

குறிப்பு —நிழலினன - ஒளியையுடைய (இன்ன) சூரியன எனப பிரித்துரைத்தலுமாம. இசையன என்றிருக்குமிடத்தில ஸ்ரீராமனது புகழையொத்த எனப் பொருள கோடலுமியையும. இனி, இசசெயயுளுக்கு வெயிலாகிய வாளையேந்திய சூரியனாகிய தலைவன தனது தலைவியாகிய பூமியினது ஊடலைத் தணிக்கக் கருதி அவளது மேற்போர்வையை லீலையாக உரிவானாயினன என்ப பொருளகொள்ளலாம படியிருத்தலுமறிக. (௬௬)

ஆயிடை யறிஞனு மவனெதி ரழுவத
தீயினை நுழைவதொர தெளிவினை யுடையா
னீவிடை தருகென நிறுவின னெறியாற
காயெரி வரன்முறை கடிதினி லிடுவான

இ - ள. ஆயிடை - அப்பொழுது, அறிஞனும - தத்துவஞானியாகிய சரபங்கரும, அவன எதிர-ஸ்ரீராமனுக்குமுன்னே, அழுவம தீயினை - மிகுந்த அக்கினியில நுழைவது ஓர தெளிவினையுடையான - பிரவேசிப்பதாகிய ஒப்பற்ற துணிவையுடையராய, காய எரி - எரிகின்ற நெருப்பை, வரன்முறைநெறியால - சாஸ்திரவிதியின் முறைமைப்படி, கடிதின - சீக்கிரத்தில, இடுவான - வளர்ப்பவராய, நீ விடை தருக என - நீ விடைதருவாயாக என்று கேட்டு, நிறுவினன - (ஸ்ரீராமனிடத்தில) மனத்தை நிறுத்தினர்

குறிப்பு —"தூக்கிற்சுட்டு, நீளின்யகரமுந் தோன்றுதனெறியே." என்றதனால அ+இடை என்பது ஆயிடையெனப் புணர்ந்தது. இடுவான - இடும்பொருட்டு எனவான்ீறறு வினையெச்சமாகவுங் கொள்ளலாம. மூன்றுமடியில 'நீவிடை' என்பது இனவெதுகையாக வந்தது. (௬௭)

வரிசிலை யுழவனு மறையுழ வனைநீ
புரிதொழி லெனையது புகலுதி யெனலுந
திருமக டலைவசெய் திருவினை யுறயா
னெரிபுக நினைகுவெ னருளென விறைவன்.

இ - ள். வரிசிலை யுழவனும - கட்டமைந்த வில்லில் (வல்ல) ஸ்ரீராமனும், மறை உழவனை - வேதங்கள் வல்ல சரபங்கரை (நோக்கி) நீ புரிதொழில் எனையது-

நீர் செய்யக்கருதிய காரியம் எத்தன்மையது? புகலுதியென்றலும் - சொல்லுக என்று கேட்டவுடன் (அம்முனிவர்), திருமகள் தலைவ - லக்ஷ்மிகாந்தனே! யான்செய் திருவினை உற - யான் செம்மையான மோக்ஷ சாம்ராஜ்யபதத்தையடையும்படி, எரிபுக நினைகுவென்-அக்கினிப்பிரவேசம் செய்யக் கருதுகின்றேன், அருள்க என்-கிருபை செய்க என்றுவேண்ட, இறைவன் - ஸ்ரீராமன்.

குறிப்பு—ஸ்ரீராமனைச் சிலையுழவன் என்றதற்சேற்ப முனிவரை மறையுழவன் என்று சிலையை ஏராகவுடையவன் மறையை ஏராகவுடையவன் என்பபொருள் காணக. உழவன் - உரைப்பவன் "வில்லேருழவர் பகைகொளினுங் கொள்ளற்க - சொல்லேருழவர் பகை" என்றார் நாயனாரும். திருமகள் தலைவன் - ஸ்ரீயபதி. அந்தமில்பேரின்பத் தருநற்செல்வ மாதலின் செய்திரு எனப்பட்டது 'உள்ளை யாற, செய்தவத்தே யாகுந்திரு" என்று பிறரும். (ருஉ)

யாவரு மமைதியி னிதுசெய லெவனோ
மானவரு தனியுரி மார்பினை யெனாலும்
மீனவரு கொடியவனை விறலடு மறவோன்
ஊனவரு முவகையி னுரைசொரி புரிவான்

இ - ள் மான் வரு-மானினிடத்திலிருந்து உரிக்கப்பட்ட, தனி உரிமார்பினை-ஒப்பற்ற தோலைத் தரித்த முனிவரே!, யாவரும் அமைதியின் - நான் வந்த சமயத்தில், இது செயல் எவன் என்னும் - இக்காரியஞ்செய்வது ஏனோ? என்று கேட்டலும், மீனவரு கொடியவனை - மீனின் உருவம் எழுதப்பட்ட கொடியையுடைய மன்மதனது, விறல் அடும் அறவோன் - ஜயத்தைக்கெடுத்த உறுதியையுடைய அம்முனிவர், ஊன்வரும் - உடம்பு பூரிக்கும்படியான, தனி உவகையின் மிக்க மகிழ்ச்சியினால், உரைபுரிவான் - சொல்லுவானாயினான்.

குறிப்பு—மான் உரி - கிருஷ்ணாஜினம் மகாத்துவசன் ஆதலின் மீனவரு கொடியவன் என்றார் அவனது 'விறலடுமறவோன்' என்றே ஜிதேந்திரியர் என்பதாயிற்று. இதனால் 'சரபங்கர்' என்னும் பெயர்க்காரணத்தை விளக்கவைத்தமையறிக ஊன், ஊகாரம் - சாரியை ஊன்வரு முவகை யென்பதற்கு - உடல் நீங்குவதனாலுண்டாகு மகிழ்ப்பு எனலுமாம். (ருங)

ஆயிர முகமுள தவமயர் குவென்
நீயிவண் வருதியென் றொருநிலை யுடையேன்
போயின விருவினை புகலுறு விதியால்
மேயினை யினியொரு வினையிலை விறலோய்.

இ - ள் விறலோய் - வெற்றியையுடையோய், நான் - நான், ஆயிரம் முகம் உள - ஆயிரம்வகையான, தவம் அயர்குவென் - தவஞ்செய்துவருகின்றேன், நீ இவண் வருதி எனும் நிலை உடையேன்- நீ இங்கே எழுந்தருள்வாய் என்னுந் துணிவுடையேனாய் இருக்கின்றேன், புகல் உறுவிதியால் மேயினை-சமபவிக்கவேண்டிய முறைப்படி (நீ) எழுந்தருளினாய், (ஆதலால்), இருவினைபோயின - நல்வினை தீவினையாகிய இரண்டும் நீங்கின, இனி ஒருவினை இலை - இனி (இங்கேசெய்யவேண்டிய) காரியம் ஒன்றுமில்லை.

குறிப்பு—ஆயிரம் - மிகுதிகுறித்துநின்றது. இனி, ஆயிரம் உகம் உள்தவம் எனக்கொண்டு அநேகயுகமாகிய தவம் எனக் கோடலுமாம். விதி-முறை இப்பொருட்டாதலை 'ஊழ்' என்னும் அதிகாரமுகத்து ஆசிரியர் பரிமேலழகியார் கூறிய அவதாரிகையான் உணர்க. புகலுறுவிதி-சிறப்பித்துக் கூறப்படுமே விதியுமாம். (௪௦)

இந்திர னருளின னிறுதிசெய் பகலா
வந்தனன் மருவுதி மலரய னுலகந்
தந்தன னெனவது சாரலெ னுரவோ
யந்தமி லுயர்பத மடைதலை முயல்வேன்

இ - ள் உரவோய் - வலிமையை யுடையவனே! இறுதிசெய்பகலா - (நேற்று) மாலைப்பொழுதில், இந்திரன் வந்தனன் - இந்திரன்வந்து, மலர் அயன் - தாமரையிலே தோன்றிய பிரமன், அருளினன் - அருளையுடையவனாகி, உலகம் தந்தனன்-(தனது) சத்தியலோகத்தை (உனக்குக்) கொடுத்தான்-மருவுதி என்னும்-எழுந்தருளாய் என்று சொல்லவும், அந்தம் இல் உயர்பதம் அடைதலைமுயல்வேன் - அழிவில்லாத பரமபதத்தை அடைவதற்கு முயற்சிசெய்பவனாகிய யான் அது சாரலென்-(அப்பதவியை) அடைந்தேனில்லை

குறிப்பு—இறுதி செய்பகல் - முடிவைச்செய்த பகல் எனவே பகலின் முடிவாகிய மாலையாயிற்று அருளினன் - என்பதனை இந்திரனோடு கூட்டி அருளையுடையான் மாலைப்போதில் வந்து என் ஆறனுருபுவிரிக்கிற பொருள்கோடலுமாம் இனி, இந்திரன் வந்தனன் இந்திரன்வந்து, மலரயன் உலகந்தந்தனன் - பிரமன் தன் உலோகத்தை யுனக்குக்கொடுத்தான், இறுதிசெய்பகலா மருவுதி என அருளினன்-உலகமழியுங்காலம் வரையும் அங்குவந்து தங்குவாயாக என்று என அந்வயித்துப் பொருள்செய்வாருமுளர் "தாவென்கிளவி யொப்பபோன் கூற்றே" என்பவாகலின் 'வந்தனன்' என்றான் உரவோய் - அறிவுடையோனே? என்னுமாம் (௪௧)

ஆதலி னிதுபெற வருளென வுரையாக்
காதலி யவளொடு கதழெரி மூழ்கிப்
போதலை மருவின னொருநெறி புகலா
வேதமு மறிவரு மிகுபொரு ளுணர்வோன்

இ - ள் புகலா - எவராலுஞ் சொல்லப்படாத, வேதமும் அறிவு அரு - வேதங்களு மறிதற்கரிய, மிகுபொருள்-பரத்துவத்தை, உணர்வோன் - அறிபவராகிய சரபங்கமுனிவர், ஆதலின் - ஆகையால், இதுபெற-இந்த மோக்ஷசாம்ராஜ்யத்தை அடையும்படி, அருள் என - அருள்செய்யென்று, உரையா - சொல்லி, (உடனே) காதலியவளொடு - தம்மனைவியுடன், கதழ் எரி மூழ்கி - கொடிய அக்கினியிற் பிரவேசித்து, ஒரு நெறி - ஒப்பற்ற பரமபதத்தை, போதலை மருவினன் - போய்ச்சேர்ந்தார்

குறிப்பு—ஸ்ரீராமனது கிருபை பயன்கருதாததாகலானும் இதுவரையிலுங் கூறிப் போந்தது அதுவாகலானும் 'இது' எனச்சுட்டினார் 'அது' என்றும் பாடம். வேதம் அபௌருஷேயமாய் நித்தியமாயிருப்பதாதலின் 'புகலாவேதம்' எனச் சிறப்பித்தார். மிகுபொருள் - சிந்தையுமனமுஞ் செல்லற்கரிய பரம்பொருள். (௪௨)

தேவரு முனிவரு முறுவது தெரிவோர
மாவரு நறுவிரை மலரயன முதலோ
ரேவரு மறிவினி லிருவினை யொருவிப
போவது கருதுமவ வருநெறி புககான.

இ - ள். உறுவது தெரிவோர - (பின்னே) வருவதை (முன்னே) அறிபவர்களாகிய, மாவரு - வண்டுகள் வருவதற்கேதுவாகிய, நறுவிரை - நல்லவாசனையையுடைய, மலர - தாமரை மலரிலுள்ள, அயன முதலோர - பிரமனை முதலாகவுடைய, தேவரும - தேவர்களும, முனிவர்களும - மகரிஷிகளும, ஏவரும - மற்றையெல்லோரும, அறிவினில - அறிவினால, இருவினை - இரண்டு வினைகளையும, ஒருவி - நீக்கி, போவது கருதும - போய்ச்சேர எப்பொழுதும விருமபிக்கொண்டிருக்கும மார்க்கத்தை எண்ணும்படியான, அ அருநெறி - பெறுதற்கரிய அப்பரமபதத்தை, புககான - போய்ச் சேர்ந்தான.

குறிப்பு:—'உறுவது தெரிவோர' என்பதை பிரமன முதலிய ஒவ்வொருவருக்கும அடையாக்குக. உறுவது தெரிவோர-வருங்கால முணரவல்லவர். உறுவது ஒருமை இது பூர்வஞானத்துக்கும உபலக்கணம, திரிகால ஞானியர்கள் என்றபடி. மாவரு என்பதற்கு அழகுபொருந்திய, பெருமை பொருந்திய என்று பொருள்கூறினுமமையும். (௬௩)

அண்டமு மகிலமு மறிவரு நெறியா
லுண்டவ னொருபெய ருணர்குந ருறுபே
றெண்டவ நெடிதெனி லிறுதியி லவனைக
கண்டவ ருறுபொருள கருதுவ தெளிதோ.

இ - ள். அண்டமும - எல்லா அண்டங்களையும், அகிலமும - (அவற்றிற்கு உட்பட்ட) எல்லாச சராசரங்களையும், அறிவு அருநெறியால - அறிதற்கரிய வழியால, உண்டவன - (பிரளயகாலத்தில) வயிற்றில வைத்து அடக்கிய ஸ்ரீராமபிரானது, ஒருபெயர - (ஆயிரநாமங்களுள) ஒரு நாமத்தை, உணர்குநர-அறிபவர, உறுபேறு - அடையும பெருமபாக்கியம, எண் - நினைப்பிற்கும, தவநெடிது - எட்டாது மிகவும பெரிது, என்னின் என்றால, இறுதியில - முடிவுகாலத்தில (பிராணன நீங்குகையில), அவனைக்கண்டவர - அந்த எமபெருமானைக (கண்ணுக்கெதிராகச) சேவித்தவர, உறுபொருள - அடையுமபதவி, கருதுவது எளிதோ- (மனத்தால) நினைப்பதற்கு எளிதோ ?

குறிப்பு —மனத்தால நினைப்பதற்கருமை கூறவே வாயினால கூறலினது அருமை கூறவேண்டாதாயிற்று. தவ-உரிச்சொல. ஏகாரம எதிர்மறை. (௬௪)

இரண்டாவது சரபங்கர் பிறப்புநீங்கு படலம்

முற்றிற்று.

ஆகப்படலம ௨-க்கு விருத்தம் ௧௧௬.

மூன்றாவது அகத்தியப்படலம்.

அனையவ னிறுதியி னமைவு நோக்கலி
னினியவ ரின்னலி னிரங்கு நெஞ்சினர்
குனிவரு திண்சிலைக் குமரர் கொம்பொடும்
புனிதன துறையுணின் றரிதிற் போயினார்

இ-ள். அனையவன் - அச்சரபங்க முனிவரது, இறுதியின் அமைவு - முடிவுகாலத்தின் தன்மையை, நோக்கலின் - பார்த்ததனால், இனியவர் - (யாவர்க்கும்) இனிமையை யளிக்கின்றவர்களும், இன்னலின் - (அச்சரபங்கர் ஹோமாக்கினியிற் பிரவேசித்ததைப் பார்த்ததனால் உண்டான) துன்பத்தினால், இரங்கும் நெஞ்சினர் - கரைகின்ற மனமுடையவர்களுமாகிய, குனிவரு திண் சிலை குமரர் - வளைந்த வலிய வில்லினையுடைய ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், கொம்பொடும் - சீதாபிராட்டியோடும், புனிதனது உறையுள் நின்று - பரிசுத்தராகிய அச்சரபங்கரது ஆச்சிரமத்தினின்றும், அரிதில் போயினார் - அருமையாகப் போனார்கள்.

குறிப்பு — அனையவன் சுட்டிடைச்சொல்லடியாகப்பிறந்த பெயர். நோக்கலின், இன் ஏதுப்பொருட்டு, இது 'இரங்கு' என்னும் வினைகொண்டது. குனிவளைந்தற்கரிய (வலிய வில்) என்னலுமாம். கொம்பு உவமையாகுபெயர். ஸ்ரீராமபிரானைத் தரிசித்து அந்தமிலின்பத்தழிவில் வீட்டை யடைந்தமையான அச்சரபங்க முனிவரைப் 'புனிதன்' என்றார். உறையுள், உள் தொழிற்பெயர் விகுதி, 'செய்யுள்' என்பதுபோலத் தொழிலாகுபெயர். அம்முனிவரது பிரிவாற்றாமையால் திரும்பிப்போதற்கு மனமில்லாராயினும், வருத்தத்தோடு சென்றார் என்பார் 'அரிதிற்போயினார்' என்றார். (௧)

மலைகளு மரங்களு மணிக்கற் பாறையு
மலைபுன னதிகளு மருவிச் சாரலு
மிலைசெறி பழுவமு மினிய சூழலு
நிலைமிகு தடங்களு மினிது நீங்கினார்.

இ-ள். மலைகளும் - மலைகளையும், மரங்களும் - விருக்ஷங்களையும், மணிக்கல் பாறையும் - அழகிய கற்பாறைகளையும், அலைபுனல் - அலைகின்ற நீரினையுடைய, நதிகளும் - யாறுகளையும், அருவி சாரலும் - அருவிகள் பாய்கின்ற மலைப்பக்கங்களையும், இலை செறி பழுவமும் - இலைகள் அடர்ந்த சோலைகளையும், இனிய சூழலும் - (கண்ணுக்கு) இனிமை பயக்கத்தக்க (மறைச) சுற்றுப் புறங்களையும், நிலைமிகு தடங்களும் - கண்ணகன்ற தடாகங்களையும், இனிது - இனிமையாக, நீங்கினார் - கடந்து சென்றார்கள்.

குறிப்பு — அருவி மலையினிழியாறு. சாரல் மலைப்பக்கத்துக்குத் தொழிலாகுபெயர். நிலை பரப்பு, இனி, நீர் நிலைத்துள்ள மிக்க தடாகமென்னலுமாம். ஆழ மெனினு மிழுக்காது. (௨)

பண்டயன் பயந்தருள் பால கில்லரு
முண்டரு மோனரு முதலி னோர்கள்தந்
தண்டக வனத்துறை தவத்து ளோர்கள்தாங்
கண்டன ரிராமனைக் களிக்குஞ் சிந்தையார்.

இ-ள். பண்டு அயன் பயந்து அருள் - முன்பு பிரமதேவன் பெற்றருளிய, பால கில்லரும் - வாலகில்யர் என்னும் மகருஷிகளும், முண்டரும் - மழித்த தலையுடையவர்களும், மோனரும் - மௌனவிரதமுடையவர்களும், (ஆன இவர்களை) முதலினோர்கள் - முதலாகவுடையவர்களாகிய, அத் தண்டகவனத்து உறை - அந்தத் தண்டகாரணியத்து வசிக்கின்ற, தவத்துளோர்கள் - தவநெறியிலுள்ளவர்கள், களிக்கும் சிந்தையார் - சந்தோஷிக்கும் மனமுடையாராகி, இராமனை - ஸ்ரீராமபிரானை, கண்டனர் - பார்த்தார்கள்.

குறிப்பு—'பண்டையவயன்றரு' என்வும் பாடம். பாலகில்லர், மோனர் வடசொற்றிரிபு. வாலகில்யர் இவர் அங்குஷ்டப்பிரமாணமுடையவர்களாயப் பகவானது மயிரினின்று தோன்றியவர். 'முண்டர்' என்றது சந்நியாசிகளை. இராமனை யெழுகூழியாங்கு யாவரையும் ரக்ஷிப்பிக்கின்றவராதலின், அவனைக் கண்டதும் ஏற்றெனவே களித்தனரென்றேனும், இனி அவ்விராமனால் தம்பகைவராய அரக்கர்களிறந்து படுவரென்னுந் துணிபுபற்றிக் களித்தனர் என்றேனும் பொருள்கொள்ளுமாறு 'கண்டனரிராமனைக் களிக்குஞ்சிந்தையார்' என்றார். (௫)

கனைவரு கடுஞ்சினத் தரக்கர் காயவோர்
வினைபிறி தின்மையின் வெதும்பு கின்றனர்
அனைவரு கானகத் தமுத ளாவிய
புனைவர வுயிர்வரு முலவை போல்கின்றார்.

இ-ள். கனைவரு - மிக்கு வளர்கின்ற, கடுஞ் சினத்து - கொடிய கோபத்தையுடைய, அரக்கர் - இராக்கதர், காய - கோபிப்பதனால், ஓர் வினை பிறிது இன்மையின் - (அவர்களை அழிக்கத்தக்க) முயற்சி வேறொன்றும் இல்லாமையால், வெதும்புகின்றனர் - வாடுகின்ற அம்முனிவர்கள், அனைவரு கானகத்து - தீப்பற்றி யெரிகின்ற காட்டில், அமுது அளாவிய புனை - அமுதத்தின் தன்மைபொருந்திய ஜலப்பிரவாகம், வர - வருதலால், உயிர்வரும் - (அழியாமல்) பிழைத்துச் செழிக்கின்ற, உலவைபோல்கின்றார் - உலர்ந்த மரங்களை யொக்கின்றவரானார்கள்.

குறிப்பு—கனை செறிவு. இனி, "கனைசெறிவொலியாமெனப்" என்பவாதலின், ஆரவாரஞ்செய்கின்ற என்றுமாம், இப்பொருள் கொள்ளுங்கால் 'கடுமையை' மிகுதி எனக். 'அனல்,' 'புனல்' என்பன எதுகைநோக்கி 'அனை' 'புனை' என நின்றன. இனி, 'புனைவர'—அலங்காரமடைய வென்றுமாம், இப்பொருளுரைப்புழி 'அளாவிய' என்றதைச் செய்யிய வென்னும் வினையெச்சமாக்குக. உலவை தொழிற்பெயர், உல-பகுதி. ஐ-விகுதி. இஃது உலர்ந்தமரத்தினைக் குறித்தலின், தொழிலாகுபெயர். போல்கின்றார்,—போலுதல் என்னும் வினையடியாகப்பிறந்த முற்று. தாபதர்கட்கு உலர்ந்தமரங்களையும், இராக்கதர்கட்கு அனலையும், அவ்விராக்கதரது காய்வுக்கு அனலின் வெப்பத்தையும், ஸ்ரீராமபிரானது வருகைக்கு அமுதப்பிரவாகத்தின் வரவையும், அத்தாபதர் மகிழ்வுக்கு உயிர்வருமுலவையையும் உவமையாக்கினார்.

ஆய்வரு பெருவலி யரக்கர் நாமமே
வாய்வெரீஇ யலமரு மறுக்க நீங்கினார்
தீவரு வனத்திடை யிட்டுத் தீர்ந்ததோர்
தாய்வர நோக்கிய கன்றின் றன்மையார்

இ - ள். ஆய்வு அரு - ஆராய்தற்கரிய, பெருவலி அரக்கர் நாமமே - மிக்க பலத்தினையுடைய இராக்கதர்களது பெயர்களையே, வாய்வெரீஇ - வாய் தடுமாறச் சொல்லி, அலமரும் மறுக்கம் நீங்கினார் - வருந்துகின்ற மனக்குழப்பம் நீங்கப்பெற்ற அம்முனிவர்கள், தீவரு வனத்திடை - நெருப்புப் பற்றியெரியுங் காட்டில், இட்டுத் தீர்ந்தது - விட்டு நீங்கியதாகிய, ஓர் தாய் வரல் - ஒரு தாய்ப் பசுவானது மீண்டுவருதலை, நோக்கிய - கண்ட, கன்றின் தன்மையார் - கன்றினது தன்மையையுடையவரானார்கள்.

குறிப்பு — அரக்கரோடு எதிர்வரப் போர்புரிந்து அவர் ஆற்றலறிவதருமையென்பார் 'ஆய்வரு பெருவலியரக்கர்' என்றார். இனி, அரக்கர்தாம் எடுத்த காரியமனைத்தும் முடித்துவர வல்லுநராதலின், ஆய்வருகின்ற [கைகூடிவருகின்ற] பெருவலியரக்கரென்றுமாம், இங்கே, 'ஆய்' வினையெச்சம். மற்று, பெருவலி ஆய்வரு எனப் பிரித்துக் கூட்டிப்பொருளுரைத்தலுமாம். முனிவர் வேதமந்திரங்களை யுச்சரிக்குந் தமது நல்வாயினால் தீயராகிய அரக்கரது பெயர்களையேயெடுத்துச்சொல்லி அங்கலாய்க்கும்படி நேர்ந்ததேயென்பார் 'அரக்கர் நாமமே வாய்வெரீஇ யலமரு' என்றார். இங்ஙனம் முனிவர் அஞ்சுவானேன் அவர்க்குத் தவவலியின்றோ' எனின், "வேண்டின் வேண்டினர்க்கு" என்னுங் கவியிற் கூறியபடி தம் பெரும் பொறையான வெகுளியை நீக்கி அரக்கரால் அலைப்புண்டாரெனக் கொள்க. வெரீஇ வெருவி, சொல்லிசை யளபெடை. அலமரு அலமர் - பகுதி இஃது இறந்தகாலத்து 'அலமந்த' என வரும். மறுக்கம், மறுகு பகுதி இனவெதுகையாய 'தீவரு' என நின்றது இனி, 'ஓர் தாய்'—கருதுகின்ற தாய் [அன்புள்ள தாய்] என்றுமாம் பிரிந்த தாய்ப்பசு மீண்டுவருதலைக் கண்ட கன்று எங்ஙன் மகிழுமோ அங்ஙன் மகிழ்வுதுய்த்தார் என்பது ஏற்றடியாற் போதரும் கருத்து. வனம் அரக்கருக்கும், தீ அவரது கொடிய செய்கைகட்கும், தாய் ஸ்ரீராமபிரானுக்கும், கன்று தாபதருக்கும் உவமை (ரு)

கரக்கருங் கடுந்தொழி லரக்கர் காய்தலிற்
பொரற்கிட மின்மையிற் புழுங்கிச் சோர்ந்தன
ரரக்கரென் கடலிடை யாழ்கின் றாரொரு
மரக்கலம் பெற்றென மறுக்க நீங்கினார்

இ - ள் கரக்க அரும் கடுந்தொழில்-ஒளித்தலில்லாத [வெளிப்படையான] செய்கைகளையுடைய, அரக்கர் காய்தலின் - இராக்கதர்கள் வருத்துவதனால், பொரற்கு இடம் இன்மையின் - (அவர்களோடு போர்புரிதற்கு உபாயம் (இதுகாறும்) இல்லாமையால், புழுங்கி சோர்ந்தார் - (மனம்) நொந்துவாடுகின்ற அம்முனிவர்கள், அரக்கர் என்கடல் இடை ஆழ்கின்றார் - ராக்ஷஸர்களென்கிற கடலினிடையே அமிழ்கின்றவர்கள், ஒரு மரக்கலம்பெற்றென - (கரைசேர்தற்கு) ஒரு கப்பலைப் பெற்றாற்போல, மறுக்கம் நீங்கினார் - மனக்கலக்கம் நீங்கப்பெற்றார்கள்.

குறிப்பு—'கரக்கரு' அகரம்—தொகுத்தல். அரக்கர் தமக்கு ஆபத்து நேருமுன்னர் தமது மாயப்போரைக் கையாடாரென்பதும் அங்ஙனம் மாயப்போர் புரிதற்

குத் தக்கபோர் நேரிடவில்லை யென்பதும் விளங்க 'கரக்கருங் கடுந்தொழில்' என்றார். இனி, அரக்கரது மாயப்போர் மிகவுங் கொடியதாதலின் அதனை மங்கலவழக்காக வெளிப்படையான் போரெனக் கூறினாரென்னலுமொன்று. அன்றியும், விஷத்தினது பெரிய கொடிய செய்கையினையுடைய அரக்கரென்னலுமாம், இப்பொருளில் கரம் - விஷம், கருமை-பெருமை, இதனை 'அரக்கரெனுங்கடல்' என்னும் சொல் மிகவும் வற்புறுத்துகின்றது. சேருநர் இதனகரம் பெயரிடைநிலை. இது நிகழ்காலங் காட்டுமென்பர் த்ராவிடசப்தத்துவமுடையார். அரக்கரதுமிகுதியும், கரிய நிறமும், அவரிடத்தகப்பட்டோர் மீளலருமையும் விளங்க அவ்வரக்கர்கட்குக் கடலையும், அவ்வரக்கரா லகப்பட்டு மீளவகையறியாது வருந்துந் தாபதர்கட்கு ஆழ்கின்ற செயலையும், அங்ஙனம் ஆழ்கின்றாரை அக்கடலினின்றுங் கரையேற்றி ஆதரிப்பான் வந்தானாகலின் ஸ்ரீராமபிரானுக்கு மரக்கலத்தையும் உவமைகூறினார். (சு)

> தெரிஞ்சுற நோக்கினார் செய்த செய்தவ
> மருஞ்சிறப் புதவநல் லறிவு கைதர
> விரிஞ்சுறப் பற்றிய பிறவி வெந்துயர்ப்
> பெருஞ்சிறை விடுபெறற் றனைய பெற்றியார்.

இ - ள். தெரிஞ்சு - (ஸ்ரீராமபிரானை ஆதிமூலப்பொருள் என்று), அறிந்து உற நோக்கினார் - (தம்மனத்தினிடத்தே யன்பு) பொருந்தும்படி தரிசித்தவர்களாய், செய்த செய்தவம் - (தாம்) செய்த சிறந்த தவமானது, அருஞ்சிறப்பு உதவ - அடைதற்கரிய சிறப்பினை யளித்தலானும், நல் அறிவு கைதர - (தாம்பெற்ற) தத்துவஞானமானது (தமக்குத்) துணைசெய்வதனானும், விரிஞ்சு உற பற்றிய - மிகுதியாய (அடிக்கடி தாம்) அடையும்படி தொடர்ந்துவந்த, வெம் - கொடிய, பிறவி துயர் - பிறவித் துன்பங்களாகிய, பெருஞ்சிறை - பெரியசிறைச்சாலையினின்றும், வீடு பெற்றனைய - விடுதலையடைந்து மோக்ஷம் பெற்றாற்போன்ற, பெற்றியார் - தன்மையுடையாரானார்கள்.

குறிப்பு—'தெரிஞ்சு' 'விரிஞ்சு' என்பன தெரிந்து, விரிந்து என்பவற்றின் போலிகள். பத்துடை யடியவர்க் கெளியனாய உயர்வற வுயர்நலமுடைய எம்பிரான் சேவை சாதித்தருளலும் அவனைச் சாமான்ய மானுஷ்யஸ்வரூபியென் றுணராது இவனே சர்வலோக சரண்ய பராத்பரன் என அறிந்து தரிசித்த முனிவர்களின் மகிமையை யாவராற்சொல்லி முடியும் அவர்செய்த தவமே தவமென்பார் 'செய்தவமருஞ் சிறப்புதவ' என்றார். அத்தவத்துக் கின்றியமையாத தத்துவஞானம் 'தெரிஞ்சுறநோக்கினார்' எனச் செய்ததோடு, அரக்கர் ஊறுமிடுக்கண்மட்டு மொழித்தற்கு வேண்டுவாராய அபாக்ய அசேதனராகாமே வீடுபெறுதலும் வேண்டினமை குறிக்க 'நல்லறிவு கைதர' என்றார். இப்பொருளை மூன்றாங்காண்டமடிகள் மிகவும் வற்புறுத்தல் காண்க. சிறை காவல். (எ)

> வேண்டின வேண்டினர்க் களிக்கு மெய்த்தவம்
> பூண்டுள ராயினும் பொறையி னாற்றலான்
> மூண்டெழு வெகுளியை முதலி னீக்கினு
> ராண்டுறை யரக்கரா னலைப்புண் டாரரோ.

இ - ள். (அம்முனிவர்கள்), வேண்டினார்க்கு - விரும்பிச் செய் தவர்களுக்கு வேண்டின - (அவர்) வேண்டிய பயன்களை, அளிக்கும் - (வேண்டியவாறே பெற

மபடி) கொடுக்கின்ற, மெய்த்தவம் - உண்மையான தவத்தை, பூண்டுளர் ஆயினும் - மேற்கொண்டிருக்கின்றனராயினும், பொறையின் ஆற்றலால் - பொறுமையினது வலியால், மூண்டு எழுவெகுளியை - பற்றிக் கிளம்புகின்ற கோபத்தை, முதலின் நீக்கினோர் - வேரோடு களைந்தார்கள், (ஆதலின்), ஆண்டு உறை - அவ்வனத்திலே வசிக்கின்ற - அரக்கரான - இராக்கதர்களால், அலைப்புண்டார் - வருத்தமடைந்தார்கள்.

குறிப்பு.—வேண்டின் இறந்தகால வினையாலணையும்பெயர், "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம் ஈண்டு முயலப் படும்" என்றார் நாயனாரும். கூடாவொழுக்கத்தாலெய்தும் பொய்த்தவத்தினின்றும் நீக்குதற்கு 'மெய்த்தவம்' என்றார் 'பொறை'யாவது காரணம்பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தமக்குத் தீங்குசெய்தவழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தல் "அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை, யிகழ்வார்ப் பொறுத்த றலை" தவம்பூண்டோர்க்குப் பொறுமை யின்றியமையாதாகலின் 'பொறையினாற்றலான்' என்றார் நிறைமொழி மாந்தர்க்கு வரக்கோபம் வரின் அக்கோபத்தீயை அவிப்பதரிது என்பார் 'மூண்டெழு வெகுளியை' என்றார் "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்த லரிது" என்றார் நாயனாரும் "மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய, பிறத்த லதனால் வரும்" என்பவாகலானும் தவங்கெடுமென்றஞ்சியும் வெகுளியை 'முதலினீக்கினோர்' ஆகி, 'அரக்கரானலைப்புண்டார்' ஆயினார் (அ)

எழுந்தன ரெய்தின ரிருண்ட மேகத்தின்
கொழுந்தென நின்றவக் குரிசில் வீரனைப்
பொழிந்தெழு காதலிற் பொருந்தி னாரவன்
றொழுந்தொறுந் தொழுந்தொறு மாசி சொல்லுவார்.

இ - ள். (ஸ்ரீராமபிரான் வரவைக் கேள்வியுற்ற சில முனிவர்), எழுந்தனர் - (தமதாச்சிரமத்தினின்றும்) எழுந்திருந்து, எய்தினர் - வந்து, இருண்ட மேகத்தின் கொழுந்து என நின்ற - கறுத்தமேகத்தின் கொழுந்து என நின்ற, அக் குரிசில் வீரனை - பெருமையிற் சிறந்த வீரனாகிய அந்த ஸ்ரீராமபிரானை, பொழிந்து எழு காதலின் - பொங்கியெழுகின்ற அன்பினால், பொருந்தினார் - அடைந்தார்கள், (அப்பொழுது), அவன் - அந்த ஸ்ரீராமபிரான், தொழுந்தொறும் தொழுந்தொறும் (தம்மைத்) தனித்தனி வணங்குந்தோறும், ஆசி சொல்லுவார் - ஆசீர்வதிப்பாராயினார்.

குறிப்பு.—எழுந்தனர், எய்தினர் என்பன - முற்றெச்சங்கள் விரைவாய்வந்தனர் என்பதுதோன்ற 'எழுந்தனர் எய்தினர்' என்றார் அரக்கர் சினம் என்னும் வெப்பத்தாலுலர்ந்துவாடும் தாபதராகிய பயிர் செழிப்புறவும் அவ்வெப்பந் தணியவும் இனிமேல் அம்புகளென்னும் மழைபொழிதற்பொருட்டுப் பாற்கடலினின்றும் வந்த கரியமேகமென்பது தோன்ற 'இருண்ட மேகத்தின்கொழுந்து' என்றார். இக்கருத்துக்கிணங்கப் 'பொழிந்து' என்றதைக் காரியப்பொருட்டுச் செயவெனெச்சத் திரிபாகக்கொண்டு அம்மேகக்கொழுந்தை மழைபொழியும்படி (செய்ய) எழுகாதலிற் பொருந்தினார்கள் என்று முடிக்க குரிசில் 'குருஸ்ரீ' என்னும் வடசொற்றிரிபென்பர். அடுக்கு மிகுதிகுறித்தது ஆசி ஆசீஸ் என்னும் வடசொற் றிரிபென்பர். அயர்வறு மமரர்களதிபதியாகிய எம்பெருமான் இப்போது தான்கொண்ட மானுஷ்யாவதாரத்துக் கிணங்க, தன்னை வணங்குதற்குரிய முனிவரைத் தான்வணங்கினனென்க. (கூ)

இனியதோா சாலைகொண் டேகி யிவவயி
னனியுறை கெனறவற் கமைய நலகிததாங
தனியிட ஞ சார்நதனா தஙகி மாதவ
ரனைவரு மெயதின ரலலல் சொலலுவான,

இ - ள். (பிறகு), மாதவர் அனைவரும - அமமுனிவாகளெலலாரும, இனியது ஓா சாலை - வசிததறகினியதாகிய ஒரு பன்னசாலையில, கொணடு ஏகி -(ஸ்ரீராமபிரானை) அழைததுககொணடுசெனறு, இ வயின நனி உறைக எனறு இவவிடததில சுகமாகத தஙகுவாயாகவெனறு சொலலி, அவறகு - அவவிராமபிரானுககு அமைய நலகி - ஒரு சிறநத இடததை மனககளிபபோடு பொருநதககொடுதது, தாம - தாஙகள, தனி இடம சாாநதனா - வேறிடததைச சோநதவாகளாய, தஙகி - தஙகியிருநது, (பினபு), அலலல சொலலுவான - (அரககாகளால தஙகளுககு நோநத) துனபஙகளைச சொலலுமபொருட்டு, எயதினா - மீணடும (ஸ்ரீராமபிரானிருககும இடததை) அடைநதாாகள

குறிப்பு —நனி உறைக - பலநாள வாசஞ்செயக எனனலுமாம. 'நனி யுறை' எனபதூஉம பாடம். சாாநதனா முறறெசசம சொலலுவான வானீறறு எதிாகாலவினையெசசம (௪0)

எயதிய முனிவரை யிறைஞசி யேததுவந
தையனு மிருநதன னருளெ னெனறலும
வையகங காவலன மதலை வநததோா
வெய்யவெங் கொடுநதொழில விளைவு கேளெனு

இ - ள ஐயனும - ஸ்ரீராமபிரானும, எயதிய முனிவரை - (தனனிடதது) வநத முனிவாகளை, இறைஞசி - வணஙகி, எததுவநது - (அவாகளைத தனவாயில துதிககுந) துதிவநது, [துதிதது], இருநதனன - (அம்முனிவரிருநதபின தானுமோபால) இருநதுகொணடு, அருள என எனறலும - (எனககுக) கடடளையிடுதல யாது எனறு கேடடவளவில, (அமமுனிவாகள), வையகங காவலன மதலை - உலகததிறகு அரசனுகிய தசரதசசககரவாததியின குழநதாய! வநதது - (எஙகளுககு) நேரிடடதாகிய, ஓா - ஒரு, வெயய வெஙகொடுநதொழில - கொடியசெயகையின விளைவு - பெருககததை, கேள எனு - (நீ) கேடபாயாக எனறு,

குறிபபு —எததூ முதனிலைததொழிறபெயா. 'எதநி' என்னுது 'எததுவநது' என்றமையான, தனனை இறைஞசி யேததததககவரைத தான மாநுஷயாவதாரததுககேறப இறைஞசியேததுநதனமை புதிதாகவநததெனபதாம. இனி, எததுவந்த ஐயன் எனப்பிரிதது, (சமயநதோறுந தததநதெயவமெனறு வெவவேறுபெயரிடடுத துதிக்கினற) துதிகள (எல்லாந தனனதாக) அடைநத ஐயன எனலுமாம, ஈணடு அகரம் - தொகுததல், "தொல்லையினொனறேயாகித துறைதொறும பாந்தசூழ்ச்சிப, பலபெருஞசமயஞ சொலலும்பொருள" எனனும் பாலகாணடச செயயுளை இஙகே நோககுக. எதது உவநது எனப்பிரிதது, முனிவாகள வாழ்ததுதலினுன மனம கிழ்ந்து எனப் பொருள்கோடலு மியையும். இருந்தனன முறறெசசம். 'அருள என்': பெரியோரிடத்துக கூறும மரியாதைசசொல். மதலை அணமைவிளி. ''மைநத' என்பதூஉம பாடம். 'வெய்யவெங் கொடுநதொழில'—ஒருபொருட்பனமொழி; மனத்துக்குச் சஞ்சலமும் வாககுககுத் தடுமாற்றமும் விளைதத கொடிய செய்கை

கள் என்பது குறிக்க 'வெய்யவெங்கொடுமை' என மூன்றுசொல்லடுக்கினாரென்னுமாம். விளைவு கொடுந்தொழிலின் மிகுதிகுறிக்க நின்றது, இனி, கொடுந்தொழில் வினைப்பயன் (துன்பம்) என்னுமாம் (௧௧)

இரக்கமென் றொருபொரு ளிலாத நெஞ்சின
ரரக்கரென் றுளர்சில ரறத்தி னீங்கினார்
நெருக்கவும் யாம்படா நெறிய லாநெறி
துரக்கவு மருந்தவத் துறையு ணீங்கினேம்.

இ - ள். இரக்கம் என்ற ஒருபொருள் - (மன்னுயிர்களிடத்தே) இரங்குதல் என்று சொல்லப்பட்ட ஒருபொருள், இலாத - இல்லாத, நெஞ்சினர் - மனமுடையவர்களாகிய, அரக்கர் என்று - இராக்கதர் என்னப்பட்டு, சிலர் உளர் - சிலரிருக்கின்றார்கள்; அறத்தின் நீங்கினார் - தர்மமார்க்கத்தினின்றும் நீங்கின அவ்வரக்கர்கள், நெருக்கவும் - (எங்களை) வருத்தப்படுத்துவதனாலும், யாம் படாநெறி அலா - நாங்களொழுகுதற்குரிய நல்லொழுக்கமல்லாத, நெறி - தீயொழுக்கத்தில், துரக்கவும் - செலுத்துவதனாலும், அருந்தவம் துறையுள் நீங்கினேம் - அரிய தவத்தினது வழியினின்றும் விலகினோம்.

குறிப்பு — என்றொரு, அகரம் - தொகுத்தல். "சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு" என நாயனார் சினத்தைப் பொருளென்றதற்குப் பரிமேலழகியார், "வைசேடிகர் பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என்பனவற்றை யறுவகைப் பொருளென்றாற்போல, ஈண்டுக் குணம் பொருளெனப்பட்டது" என்று கூறினர். அதுபோல ஈண்டு இரக்கமென்னுந் தொழில் பொருளென்னப்பட்டது. அறத்தினீங்கினார் என்னும்பெயர் சொல்லுவார் குறிப்பான் அவரென்னுஞ் சுட்டுப்பெயர் மாத்திரையாயிற்று; "நாணி நின்றோணிலை கண்டி யானும், பேணினே னல்லனோ மகிழ்ந வானத், தணங்கருங் கடவு ளன்னோணின், மகன்றா யாதல் புரைவதா லெனவே" என்னும் அகப்பாட்டில், "நாணிநின்றோள்" என்றும், "அணங்கருங் கடவுளன்னோள்" என்றுங் கூறினாற்போல இது "பொருளொடு புணராச் சுட்டுப்பெயராயினும், பொருள் வேறுபடா தொன்றாகும்மே" என்னுஞ் சூத்திரவிதி. துறையுள், உள் - ஏழனுருபு இது ஐந்தனுருபு நீக்கப் பொருளில் மயங்கிவந்தது. (௧௨)

வல்லியம் பலதிரி வனத்து மானென
வெல்லியும் பகலுநொந் திரங்கி யாற்றலேஞ்
சொல்லிய வறநெறித் துறையு நீங்கினேம்
வில்லியன் மொய்ம்பினாய் வீடு காண்குமோ

இ - ள். வில் இயல் மொய்ம்பினாய் - கோதண்டம்பொருந்திய புயத்தையுடையாய்! பல வல்லியம் திரி வனத்து - அநேகம்புலிகள் சஞ்சரிக்கின்ற காட்டில், மான் என - (வருந்துகின்ற) மான்போல, எல்லியும் பகலும் - இரவும் பகலும், நொந்து இரங்கி - மனநொந்து வருந்தி, ஆற்றலேம் - (அவ்வரக்கர்செய்யுங் கொடுமைகளைப்) பொறுக்கமாட்டாதவர்களாய், சொல்லிய - (நூல்களிற்) சொல்லப்பட்ட, அறம் நெறி துறையும் - தர்மமார்க்கத்தின் வகைகளினின்றும், நீங்கினேம் - வழுவினோம், (ஆதலின்), வீடுகாண்குமோ - மோக்ஷம் அடைவேமோ?

குறிப்பு.—வல்லியம் அரக்கர்க்கும், மான் முனிவர்க்கும் உவமை. என உவமவிடைச்சொல். ஆற்றலேம் உளப்பாட்டுத்தன்மைப் பன்மை யெதிர்மறை வினைமுற்று. தமது இடுக்கண் ஒழியுமென்னுந் துணிபுபற்றி 'வல்லியன் மொய்ம்பினுய்' என விளித்தார். அறநெறித்துறையினின்றும் நீங்கினமையால், மோக்ஷம் கிட்டுமோவென்னும் அச்சத்தால் 'வீடுகாண்குமோ' என்றார். இனி, 'வீடுகாண்குமோ' என்றற்கு இத்துன்பத்தினின்றும் விடுதலையடைவோமோ என்னலுமாம். காண்கும், கும் தன்மைப்பன்மை யெதிர்காலமுற்று விகுதி. (௧௩)

மாதவத் தொழுக்கிலேம் மறைகள் யாவையு
மோதலே மோதுவார்க் குதவ லாற்றலேம்
மூதெரி வளர்க்கிலேம் முறையி னீங்கினேம்
மாதலி னந்தண ரேயு மாகிலேம்.

இ-ள். மாதவத்து ஒழுக்கிலேம் - பெருமைபொருந்திய தவநெறியில் நடக்கின்றோமில்லை, மறைகள் யாவையும் ஓதலேம் - வேதங்களெல்லாவற்றையும் ஓதுகின்றோம் இல்லை, ஓதுவார்க்கு உதவல் ஆற்றலேம் - ஓதுகின்றவர்களுக்கு உதவிசெய்கின்றோமில்லை [ஓதுவிக்கின்றோமில்லை], மூது எரி வளர்க்கிலேம் - பழமையாகிய யாகாக்கினியை வளர்க்கின்றோமில்லை [யாகஞ்செய்கின்றோமில்லை], முறையின் நீங்கினேம் - (அந்தணர்க்குரிய) முறைமையினின்றுந் தவறினோம், ஆதலின்—, அந்தணரேயும் ஆகிலேம் - பிராமணராயு மாகின்றோமில்லை.

குறிப்பு.—அரக்கரால் நேர்ந்த இடையூறுகளால், அந்தணர்க்குரிய தொழில்களான ஓதல், ஓதுவித்தல் முதலியவற்றைத் தவறினமையின் இங்ஙனங் கூறினார்கள். 'மறைகள் யாவையும்' என்றது வேதங்களோடு அவற்றின் அங்கங்களும் உபாங்கங்களும் அடங்குதற்கு. எரி - காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினியம் என்பவை. "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" என நாயனார் கூறியபடி வேதமோதாமை அந்தணராகாமைக்குரிய காரணங்களுளொன்றாயினும் "அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுக லான்" என்று வரையறுத்திருத்தலால், ஈண்டு அந்தணரென்றது முனிவரை. (௧௪)

இந்திர னெனினவ னரக்க ரேயின
சிந்தையிற் சென்னியிற் கொள்ளுஞ் செய்கையா
னெந்தைமற் றியாருள ரிடுக்க ணீக்குவார்
வந்தனை யாஞ்செய்த தவத்தின் மாட்சியான்.

இ-ள். இந்திரன் எனின் - இந்திரனோவென்றால், அவன்—, அரக்கர் ஏயின - ராக்ஷஸர் கட்டளையிட்ட தொழில்களை, சிந்தையின் சென்னியின் கொள்ளும் செய்கையான் - மனத்தினும் சிரசினும் கொள்ளுகின்ற தொழிலினையுடையனாயிருக்கின்றான், (ஆகையால்), எந்தை - எங்கட்கிறைவனே! இடுக்கண் நீக்குவார் - (எங்கள்) துன்பத்தைப் போக்குபவர், மற்று யார் உளர் - (உன்னையன்றி) வேறு எவரிருக்கின்றனர், [ஒருவருமில்லை], யாம் செய்த தவத்தின் மாட்சியான் - யாங்கள் முன்பு செய்த தவத்தின் மகிமையால், வந்தனை - (நீ யெங்களைக் காத்தற்கு இங்கே) எழுந்தருளினாய்.

குறிப்பு.—இந்திரன் திரிலோகாதிபதியாயிருந்தும் அடுத்துக் கூறுமாறு அவனால் யாதும் பயனில்லை யென்பதுபற்றி அவனையீண்டுச் சுட்டிக் கூறினார்கள். எயினர் - எவினர் என்பதன்றிரிபு, பலவின்பாற் பெயர். சிந்தையிற் கொள்ளுதலாவது அரக்கரிட்ட வேலையைச் செய்துமுடித்தப் பின்னர் அவர்பால் முடிவைப் புக்லச் சந்தாப்பம் வாயாவிட்டது வினவும் போழ்து தெரிவித்தற்கு மறவாதிருத்தற்பொருட்டு அதே தியானமாக விருத்தல். சென்னியிற் கொள்ளுதலாவது கீழான வேலையையும் மேலாக நினைத்துச் செய்தல். எதுகை அணைமைவிளி. 'யார்' என்னும் வினா இன்மை குறித்தது (௧௫)

உருளுடை நேமியா லுலகை யோம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ போக்கிலா
விருளுடை வைகலே மிரவி தோன்றினை
யருளுடை வீரநின் னபயம் யாமென்றார்.

இ-ள் உருள் உடை நேமியால் - உருண்டு செல்லுதலையுடைய (ஆஞ்ஞா) சக்கரத்தினால், உலகை ஓம்பிய - உலகமுழுவதையுங் காத்த, பொருள் உடை - செல்வங்களையுடைய, மன்னவன் புதல்வ-சக்கரவர்த்தி திருமகனே! போக்கு இலா - ஒழிவில்லாத, இருள் உடை - (துன்பமாகிய) இருளையுடைய, வைகலேம் - நாளையுடையரா யிருக்கின்றேம், இரவி தோன்றினை - (அவ்விருளைப்போக்குதற்குச்) சூரியன்போல (நீ இங்கே) எழுந்தருளினை, அருள் உடை வீர - கருணையையுடைய வீரனே! யாம் நின் அபயம் என்றார் - யாங்கள் நினக்கு அடைக்கலமென்று வேண்டினார்கள்.

குறிப்பு —உருள் முதனிலைத்தொழிற்பெயர். ஆஞ்ஞையைச் சக்கரமென்றல் செய்யுள்வழக்கு 'உலகையோம்பிய மன்னவன்புதல்வ' என்னும் சுவாபிப்பிராய விசேஷணத்தால், எங்களைக் காத்தருளுதல் உனது கடமையென்பது குறிப்பிக்கப்பட்டது. இது பரிசராலங்காரம் சரணமடைந்தாரைக் கைநெகிழவிடாது காத்தருளும் புத்திரனைப் பெற்றமையின் "தம்பொருளென்ப தம்மக்கள்" என்றபடி 'பொருளுடைமன்னவன்' என விசேடித்தார் 'அருளுடைவீர' என்றதனால் சிஷ்டரைக் காத்தற்கண் வேண்டும் அருளுடைமையும், துஷ்டரை யொறுத்தற்கண் வேண்டும் வீரமும் கூறப்பட்டன அபயம் - பயப்படாதே யென்றுசொல்லிக் காக்கத்தக்கபொருள். (௧௬)

புகல்புகுந் திலரேற் புறத்த தண்டத்தி
னகல்வ ரேனுமென் னம்பொடும் வீழ்வரா
றகவி றுன்பந் தவிருதி நீரெனப்
பகல வன்குல மைந்தன் பணிக்கின்றான்

இ-ள். பகலவன் குலம் மைந்தன் - சூரியகுலத்தில் தோன்றிய ஸ்ரீராமபிரான், (அம்முனிவர்களது விண்ணப்பத்தைக்கேட்டு), புகல் புகுந்திலரேல் - (அவ்வரக்கர் இனிக் கொடுமைபுரிவதில்லையென்று) சரணமடையாமற்போனால், புறத்து அண்டத்தின் அகல்வரேனும் - (இவ்வண்டத்தைவிட்டு) அப்பாலுள்ள வேறு அண்டங்களில் ஓடிப்போவாரானாலும், என் அம்பொடும் - (யான் பிரயோகிக்கும்) பாணத்தோடே, வீழ்வர் - (இறந்து கீழே) விழுவார்கள், ஆல் - ஆதையா

வ, நீர் - நீங்கள், தகவு இல் துன்பம் - தகுதியில்லாத இத்துன்பத்தை, தவிருதிர் - விட்டு விடுங்கள், என்று - என்று, பணிக்கின்றான் - சொல்லுகின்றான்.

குறிப்பு —'அம்போமே வீழவர்' என்னுமிடத்து முன்னே நிகழும் அம்பின் வீழ்ச்சியாகிய காரணமும், பின்னே நிகழும் அரக்கர்களின் வீழ்ச்சியாகிய காரியமும், சமகாலத்தில் நிகழ்வதாக முறைபிறழவைத்தமையின் இது முறையிலுயர்வு நவிற்சியணி, இதனை வடநூலார் அக்கிரமாதிசயோக்தியென்பார் இது காரிய விரைவைத் தெரிவிப்பது. இனி, "ஊசியொடு குயினற நூசும்படமே" என்புழிப் போல ஒடு உருபைக் கருவிப்பொருளினதாகிய ஆல் உருபாகக்கொண்டு அம்பினால் வீழவரெனினுமாம். பகலவன - தினங்களை யுண்டாக்குபவன் என்பதுபொருள் புகுந்திலரேல் அகலவரேனும் எல், எனும் வினையெச்ச விகுதிகள் (கஎ)

வேந்தன் வீயவும் யாயவர மேவவு
மேந்த லெம்பி வருந்தவு மென்னகா
மாந்தா வளலுயா கூரவும் யானவனம
போந்த தென்னுடைப புண்ணியத் தாலென்றான.

இ - ள் வேந்தன் வீயவும்-(தசரத)சக்கரவாத்தி யிறக்கவும், யாயவரம் மேவவும் - (கைகேயி என்னும்) தாய் வரங்களை விரும்பிக்கேட்கவும், ஏந்தல் எம்பிவருந்தவும் - பெருமையையுடையோனாகிய என் தம்பி பரதன் துன்பமடையவும், என் நகாமாந்தா வலதுயா கூரவும் - எனது நகரத்தில் [அயோத்தியில்] உள்ள ஜனங்கள் வலியதுன்பத்தை மிகுதியாக அடையவும், யானவனம் போந்தது - நான் காட்டிற்குப் புறப்பட்டுவந்தது, என்னுடைப் புண்ணியத்தால் என்றான் - எனது நலவினையாலாகும் என்றான்.

குறிப்பு:—வேந்தன்வீதல் - புத்திரசோகத்தால். வரங்கள் - பரதனுக்கு நாடளித்தலும் இராமனுக்குக் காடளித்தலுமாம் பரதன் வருந்துதல் - தனது பிரிவாற்றாமையாலும், இராச்சியபாரம் பொறுத்தற்கருமையாலும் மூத்தமகனாகிய தனக்கேயுரியதாதலால் 'என்னகா' என்றான். தம்பிபுரியு மரசுரிமையை வேற்றுமையின்றித் தானபுரிவதாகக் கொண்டிருத்தலின் 'என்னகா' என்றான் எனினுமாம். யானவனம் எய்தாவிடின் முனிவர்க்குற்ற இடர்நீக்க நேரிடாதென்னும் அருமைதோன்ற 'யான் போந்த தென்னுடைப் புண்ணியத்தான்' என்றான். (கஅ)

அறந்த வாநெறி யந்தணா தன்மையை
மறந்த புலலா வலிதொலை யேனெனி
னிறந்து போகினு நன்றிது வலலது
பிறந்தி யானபெறும பேறென்ப தியாவதோ.

இ - ள் அறம் தவாநெறி - தருமத்தினின்றும் நீங்காத நல்லொழுக்கத்தினையுடைய, அந்தணா தன்மையை - முனிவர்களது பெருமையை, மறந்த - (அம்முனிவர்களுக்குத் துன்பத்தைச் செய்தலான்) மறந்துபோன, புல்லா - அற்பர்களாகிய அவ்வரக்கர்களது, வலிதொலையேன் எனின் - வல்லமையை அழியேனாயின், இறந்துபோகினும் - (அவ்வரக்கர்களாலேயான்) இறந்துபோனாலும், நன்று - நல்லதே; இது அல்லது - இதனையல்லாமல், பிறந்து - (மானிட ஜநமத்தில்) தோன்றி, பெறு

ம்பேறு என்பது யாவதோ? - அடைகின்ற பாக்கியமென்று சொல்லப்படுவதுவேறு எதுவோ.

குறிப்பு — ஒன்றுமில்லை யென்பதாம். என்பது - முதல்வேற்றுமைச் சொல்லுருபு. ஒ - எதிர்மறை 'இதுவல்லது' என்பதூஉம் பாடம் நான்காமடியின்கணுள்ள குற்றியலுகரங்களிரண்டனுள் முன்னது அலகுபெற்றும் பின்னது அலகுபெறாதும் வந்தமைகாண்க. (கக)

நிவந்த வேதியர் நீவிருந் தீயவர்
கவந்த பந்தக் களிநடங் கண்டிட
வமைந்த வில்லு மருங்கணைத் தூணியுஞ்
சுமந்த தோளும் பொறைத்துயர் தீருமால்.

இ - ள். நிவந்தவேதியர் - உயர்ந்த அந்தணர்களாகிய, நீவிரும் - நீங்களும், தீயவர் - துஷ்டர்களாகிய அவ்வரக்கர்களது, கவந்தபந்தம் - உடற்குறைத்திரைகளினது, களிநடம் கண்டிட - பிறர் களிக்குமாறு குதிக்குங்கூத்தினைக் காணும்படியாக, அமைந்தவில்லும் - (வலியகட்டுக்கள்) பொருந்திய வில்லையும், அரும் கணைத் தூணியும் - தடுத்தற்கரிய அம்புகளையுடைய தூணீரங்களையும், சுமந்ததோளும் - தாங்கிக்கொண்டிருக்கின்ற (எனது) தோள்களும், பொறைத்துயர் - அவற்றைச் சுமப்பதாலாகிய துன்பத்தை, தீரும் - நீங்கப்பெறும்,

குறிப்பு — நீவிரும் என்ற உம்மை மற்றை யாவரையுந் தழுவியது. உம் தீயவர் என்று பிரித்து உம்மைக்குத் தீமையைச் செய்கின்றவரென்னுமாம். கவந்தம் - கபந்தம், உடற்குறை. கணைத்தூணி அம்புப்புட்டில். தோள்கள் வில்லுந்தூணியும் தாங்குதற்குப்பயன் போரிற் பகைவரைவெல்லுதலே யாதலால், தோளும் பகைத்துயர்தீருமென்றார். தோளும் என்ற உம்மை, பூமியும் பாரநீங்கும், நீவிருந்துன்ப நீங்குவிரெனக் குறிப்பித்தது. இனி, நீவிரும் தோளும் களிநடங் கண்டிடலால் பொறையினுள்ளதாகிய துயர் தீருமென வுரைத்தலுமாம், ஈண்டு, பொறைத்துயர் என்பது சிலேடைவகையால் வேதியர் மேலேறும் போது அவர்தம்பொறுமையான் விளைந்ததுயரெனவும், தோண்மேலேறும்போது சுமைப்பாரத்தாலாவந்த துயரெனவு முரைகாண்க. முற்கூறிய பொருளில் நீவிர் என்பது கண்டிட என்னும் வினையடி கொண்டது (உ0)

ஆவுக் காயினு மந்தணர்க் காயினும்
யாவர்க் கேனு மெளியவர்க் காயினுஞ்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழுந் தேவர்க ளாகுவார்.

இ - ள். ஆவுக்கு ஆயினும் - பசுக்களை இரக்ஷிக்கும் பொருட்டானும், அந்தணர்க்கு ஆயினும் - அந்தணர்களை இரக்ஷிக்கும் பொருட்டானும், எளியவர்க்கு ஆயினும் - ஏழைகளை இரக்ஷிக்கும் பொருட்டானும், யாவர்க்கு எனும் - இன்னும் எவர்களைக் காக்கும்பொருட்டானும், சாவப்பெற்றவரே - (உதவிசெய்து) இறக்கப் பெற்றவர்களே, தகைவான் உறை - தகைமைபொருந்திய சுவர்க்கலோகத்தில் வசிக்கின்ற, தேவர்க்கும் - தேவர்களாலும், தொழும் தேவர்கள் ஆகுவார் - வணங்கத்தக்க தேவர்களாவார்கள்.

குறிப்பு—எளியவர் - தேகவலியும், பொருள்வலியும் மானுஷ வலியுமில்லாத வர் தேவர்க்கும் - இது வேற்றுமைப் பொருண்மயக்கம் தேவருள்ளும் சிறந்த தேவரென்றபடி (௨௧)

சூர றுத்தவ னுஞ்சுடர் நேமியு
மூர றுத்த வொருவனு மோமபினு
மார றத்தினொ டன்றினின் றாரவர்
வேர றுப்பென வெருவன்மி னீரென்றான்

இ - ள். சூர் அறுத்தவனும் - சூரபதுமனென்னும் அசுரனை அழித்த குமாரக் கடவுளும், சுடர்நேமியும் - பிரகாசிக்கின்ற சக்கராயுதத்தையுடைய திருமாலும், ஊர் அறுத்த ஒருவனும் - திரிபுரங்களை எரித்தழித்த பரமசிவனும், ஓமபினும் - (உதவிசெய்து) காக்கினும்,— ஆர் அறத்தினொடு அன்றி நின்றார் அவர் - எவ்வரக்கர்கள் தருமத்தோடு பொருந்தாமல் அதருமத்தோடு பொருந்தினின்றார்களோ? அவர்களை, வேர் அறுப்பன் - வேரோடுகளைவேன், நீர் வெருவன்மின் - நீங்கள் அஞ்சாதேயுங்கள், என்றான் - என்று கூறினான்.

குறிப்பு—திரிமூர்த்திகளுள்ளும் பிரமன் அந்தணனாகி வைதிகநிஷ்டையிலிருப்பவனாதலாலும், தவஞ்செய்தோர்க்குதவுதலேயன்றி லோககண்டகர்களை நிக்கிரகஞ்செய்யாதவனாதலாலும் அவனை நீக்கிப் போரில்வல்லவனாந் தேவசேநாதிபதியுமாகிய குமாரக்கடவுளைக்கூட்டி யுரைத்தனனென்க சூர் - வடசொற்சிதைவு நேமி - சக்கரபாணிக்கு ஆகுபெயர், சுடர்நேமி - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையுமாம் 'ஓமபினும்' என்ற உம்மை எதிர்மறையாய் அவர் காவாமையைக்குறித்தது. அபயப்பிரதானஞ்செய்தான் என்பதாம் (௨௨)

உரைத்த வாசகங் கேட்டுவந் தோங்கிட
விரைத்த காதல ரேகிய வின்னலர்
திரித்த கோலினர் தேமறை பாடினர்
நிருத்த மாடினர் நின்று விளம்புவார்.

இ - ள். உரைத்தவாசகம் - (அவ்வாறு ஸ்ரீராமபிரான்) சொன்ன வார்த்தையை, கேட்டு - (முனிவர்கள் கேட்டு) உவந்து - மகிழ்ந்து, ஓங்கிட இரைத்தகாதலர் - அதிகமாகப் பொங்கியெழுந்த அன்பினையுடையவர்களும், ஏகிய இன்னலர் - நீங்கிய துன்பமுடையவர்களும், திரித்த கோலினர் - (கையால்) திரித்த தண்டத்தையுடையவர்களும், தேமறைபாடினர் - இனிமையான வேதங்களை யுச்சரித்தவர்களும், நிருத்தம் ஆடினர் - (ஆநந்தத்தால்) கூத்தாடினவர்களுமாகி, நின்று விளம்புவார் - நின்று சொல்லுவார்கள்.

குறிப்பு—உவந்தோங்கினர்-மகிழ்ந்து துள்ளிக்குதித்தனரென்னலுமாம் 'இரைத்தகாதலர்,' 'ஏகிய இன்னலர்,' 'திரித்தகோலினர்' இவையனைத்தும் 'செய்தவேலையன்' என்புழிப்போல வடநூன்முடிபுகள், திரிதண்டமும் ஏகதண்டமு மடங்குதற்குக் 'கோல்' எனப் பொதுப்படக்கூறினார் தேமறை என்பதற்குத் தெய்வத்தன்மையுள்ள வேதமெனினுமாம். நிருத்தம்—நருத்தம். கோல்திரித்தல் முதலிய மூன்று மானந்தக்குறிப்பு (௨௩)

தோன்ற னீமுனி யிறபுவ னததொகை
மூனறு போலவன முபபது கோடிவந
தேனற போது மெதிரல வெனறலிற
சானறு வேதந தவமபெரு ஞானமே

இ - ள. தோனறல - தலைவனே ! நீ முனியின - நீ கோபிபபாயே யானல, மூனறுபோலவன - திரிலோகததை ஒப்பனவாகிய, முபபதுகோடி புவனததொகை- முபபதுகோடி லோகஙகளினகூடடம, வநது - (ஒரேகாலததில ஒருஙகே சோநது) வநது, எனறபோதும - எதிாததாலும, (அவை), எதிா அல-(உனககு) நிகா அலல , எனறலின - எனறதனமையில, வேதம - வேதஙகளும, தவம - தவஙகளும, பெருஞானம - விசேடமான தததுவ ஞானமும, சானறு - சாடசியாகும்.

குறிப்பு—தோனறல் எப்பொருடகுந தலைவன, "இறையே சாரணனியவு டோனற-லதிபன றலைவற கபிதானமமே" இது பிஙகலம , அணமைவிளி நீ சினநதாலே யழியுந தனைய வுலகஙகளோடு போாபுரிதலும வேணடுமா ? எனபாா 'முனியின' எனறூா. இவவரககா உனககொருபொருடடா ? எனபாா 'புவனத தொகை மூனறு போலவன முபபதுகோடி வநதேனறபோது மெதிரல' எனறூா. 'மூனறுபோலவன முபபதுகோடி' எனறூா போா புரிய வருபவரின மிகுதியைக குறிததறகு. புவனம இடவாகுபெயா எனற, எல - பகுதி எமபிரானது பெருமையையே வேதஙகள ஓதுவதுபறறியும, அஙஙனம ஓதாநினற வேதஙகளையே தமககுப பறறுககோடாககொணடு புரிகினற தவவலிமையினுலும, அததவததா லுணடாகினற தததுவஞானததாலும ஈஸவரனைத தாம அறிநதிருப்பது பறறியம 'சானறு வேதந தவம பெருஞானமே' எனறூா (௨௪)

அனன தாகலி னேயின வாணடெலா
மினனல காததிங கினிதுறை வாயெனச
சொனன மாதவா பாதந தொழுதுயா
மனனா மனனவன மைநதனும வைகினுன

இ - ள. அனனது ஆகலின - (நினமகிமை) அததனமையதாதலால, எயின ஆணடு எலாம - (நீ வனததிலிருககுமபடி நினதாய) கடடளையிட்ட வருடஙகளெல லாம, இனனலகாதது - (எஙகளுககுத) துனபமவராதபடி காததுககொணடு, இஙகு இனிது உறைவாய என - இவவிடததே இனிதாக வாசஞசெயவாயெனறு, சொன ன மாதவா - சொலலிய பெருமைபொருநதிய முனிவாகளது, பாதம தொழுது - அடிகளைவணஙகி, உயா மனனா மனனவன - சிறநத அரசாககரசனுகிய தசாத சககரவாததியின, மைநதனும - பதலவனுகிய ஸ்ரீராமபிரானும, வைகினுன - (அத றகு உடமபடடுத) தஙகியிருநதான,

குறிப்பு—எயின - பொருநதியவெனினுமாம். "குறறமேகாகக பொருளா க," "அருமபணபினுற றீமைகாகக." என்பனவறறிறபோல, இன்னல்காதது என்பதற்கு இனனல்வாராமற காதது எனப பொருளகொளக. உயா எனபதனை மன்னர்க்காதல், மனனவறகாதல், மைநதறகாதல கூட்டுக. மனனர் மனனவன - ராஜாதிராஜன். (௨௫)

ஐந்து மைந்து மமைதியி னாண்டவண்
மைந்தர் தீதிலர் வைகினர் மாதவர்
சிந்தை யெண்ணி யகத்தியற் சேர்கென
இந்து நன்னுத லாளொடு மேகினார்.

இ-ள் மைந்தர் - ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், அவண் - அவ்விடத்தில், ஐந்தும் ஐந்தும் ஆண்டு - பத்துவருஷகாலம், அமைதியின் வைகினர் - சுகமாகத் தங்கியிருந்தார்கள், (பின்) மாதவர் - அம்முனிவர்கள், சிந்தை எண்ணி - மனத்தினகண் ஆலோசித்து, அகத்தியன் சேர்க என - அகத்திய முனிவரைச் சேர்வீராக என்று சொல்ல, (அவ்வாறே) இந்து நல் நுதலாளொடும் - பிறைச் சந்திரன்போன்ற அழகிய நெற்றியையுடைய சீதாபிராட்டியுடனே, ஏகினார் - சென்றார்கள்

குறிப்பு — திரிகால ஞானிகளாகிய முனிவர்கள் மேல் இராவண வதம் நடக்க வேண்டியிருத்தலை, அறிந்திருத்தலிற் ‘சிந்தையெண்ணி’ யென்றும், அதற்கு அகஸ்தியரிடத்துத் தநுசுபெறவேண்டியிருத்தலின் ‘அகத்தியற் சேர்கென’ என்றும் கூறினர் (௨௬)

விடரகங்களும் வேய்செறி கானமும்
படருஞ் சின்னெறி பைப்பைய நீங்கினார்
சுடரு மேனிச் சுதீக்கண னென்னுமவ்
விடரி லானுறை சோலைசென் றெய்தினார்

இ-ள் விடர் அகங்களும் - பூமியில் வெடிப்புள்ள இடங்களிலும், வேய் செறி கானமும் - மூங்கில்கள் நிறைந்த காடுகளிலும், படர் - செல்லுகின்ற, சில் நெறி - சிறியவழியை, பைப்பைய - மெல்லமெல்ல, நீங்கினார் - கடந்தவர்களாய், சுடரும் மேனி - விளங்குகின்ற மேனியையுடைய, சுதீக்கணன் என்னும் - சுதீக்ஷ்ணன் என்னும் பெயரினையுடைய, அ இடர் இலான் - துன்பமில்லாத அம்முனிவர், உறை - வாசஞ்செய்கின்ற, சோலைசென்று எய்தினார் - சோலையிற்போய்ச் சேர்ந்தார்கள்

குறிப்பு —வேய் - மறைந்து முண்டாங்களுக்கு முப்பலக்ஷணம் சின்னெறி - சிறியநெறி, பண்புத்தொகை, ஓரெழுத்தடிபயாமதை பையப்பைய என்னுமடுக்குப் பைப்பைய என விகாரப்பட்டது “பைப்பைய வீழ்ந்தனரே” என்றார் சிந்தாமணியிலும் பிரம தேஜஸ் விளங்கப்பெற்ற சரீரத்தை யுடையார் என்பார் ‘சுடரும் மேனி’ என்றார் சுதீக்ஷ்ணர் - சுதீக்கணர், உக்ரமான தவமுடையவரென்பது பொருள் இடர் - பிறவித்துன்பம். ஐம்புலன்களாலாகுந் துன்பமுமாம் (௨௭)

அருக்க னன்ன முனிவனை யவ்வழிச்
செருக்கில் சிந்தையர் சேவடி தாழ்தலும்
இருக்க வீண்டென் றினியன கூறினன்
மருக்கொள் சோலையின் மைந்தரும் வைகினார்.

இ-ள். செருக்கு இல் சிந்தையர் - கர்வமில்லாத சிந்தையையுடைய ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், அவ்வழி - அந்த இடத்தில் [ஆச்சிரமத்தில்] அருக்கன் அன்ன -

சூரியனையொதத, முனிவனை - சுதீக்ஷ்ணமுனிவரை, சேவடிதாழ்தலும் - சிவநத திருவடிகளில விழுநது வணஙகினவளவில், (அமமுனிவா) ஈணடு இருக்க எனறு - இவவிடததில தஙகுகவெனறு, இனியன கூறினன் - இனிய உபசாரவாாததைகளைச சொனனா, (சொலல) மைநதரும - அககுமாரகளும, மரு கொள சோலையில - (மிகக வாசனையைககொணட அசசோலையில, வைகினா - தஙகினாகள

குறிபபு — அஞஞானமாகிய விருளைககெடுதது விளஙகுதலின 'அருககனனை முனிவன' எனறா யாம இறைமககளாய வீராகளாயிருககினறோமே எனபதுபற றித தருககுறுமையிற 'செருககில சிநதையா' எனறா (௨௮)

வைகும வைகலின மாதவன மைநதனபாற
செயகை யாவையுஞ செயதிவட செலவநீ
யெயத யானசெயத தெததவ மெனறன
னைய னுமமவற கனபினன கூறுவான.

இ - ள வைகும வைகலின - (அவவாறு) தஙகியிருககும்போது, மாதவன - அமமுனிவா, மைநதனபால - ஸ்ரீராமபிரானிடததில, செயகையாவும - செயயவேணடிய உபசாரஙகளெலலாவறறையும, செயது - நடததி, செலவ - அருமைககுழநதாய! நீ இவண எயத - நீ இவவிடததில எழுநதருளுமபடி, யான செயதது எதத வம - யான பணணியது எநத மேலான தவமோ? எனறனன - எனறு சொனனா, (அதறகு) ஐயனும - ஸ்ரீராமபிரானும, அவறகு - அமமுனிவருககு, அனபினன - அனபையுடையவனாகி, கூறுவான - சொலலுவான.

குறிபபு — வைகல - பொழுதும நாளுமாம, செலவன - இமமை மறுமை வீடுகளில அடையும பாககியஙகளைத தன அடியாாககுத தருபவன ஆகலின இவவாறு விளிததாரெனினுமாம அவறகு வேறறுமையுருபு மயககம (௨௯)

சொனன நானமுகன றனவழித தோனறினா
முனனை யோருளுயா தவ முறறினா
ருனனின யாருளா ருனனருளெயதிய
வெனனின யாருளா ரிறபிறந தாரெனறா.

இ - ள. சொனன - யாவராலும புகழநது சொலலபபடுகினற, நானமுகன தன - பிரமதேவனது, வழி - வமிசததில, தோனறினா - பிறநதவாகளாகிய, முனனையோரின - முதனமையான முனிவாகளுள, உயாதவமுறறினா - உயாநத தவததை முறறசசெயதவாகள, உனனின யாா உளா - உனனைபபோல யாா இருககினறாகள? [ஒருவருமிலா], உன அருள எயதிய - உனனுடைய கிருபையையடைநத, எனனின - எனனைபபோல, இல் பிறநதா - உயாகுடியிற பிறநதவாகள, யாா உளா - யாவரிருககினறாகள?

குறிபபு - பிரம வமசததிற பிறநதவாகளுள உனனைப்போல் தவஞசெய்தவரிலலை, சூரிய வமிசததிற பிறநதவருள எனனைபபோல நினனருளைப்பெறறவரில்லையெனபதாம பிராமணரெனபதன பொருளபறறி, 'நானமுகன றனவழிததோனறினா' என்றார். இனி, இறபிறநதாரெனபதறகு இலவாழ்க்கையை யுடையவரென்றும, உனனின எனபதறகு ஆராயுமிடதது எனறும கூறலாம. (௩0)

உவமை நீங்கிய தோன்ற லுரைக்கெதிர்
நவமை நீங்கிய நற்றவன் சொல்லுவா
னவமி லாவிருந் தாகியென் னாலமை
தவமெ லாங்கொள்க தக்கிணை யாவென்றான்.

இ-ள். உவமைநீங்கிய - சமானமில்லாத, தோன்றல் உரைக்கு - ஸ்ரீராமபிரானது வார்த்தைக்கு, எதிர் - உத்தரமாக, நவமைநீங்கிய - புதுமையில்லாத [பழைய], நற்றவன் - சிறந்ததவத்தையுடைய முனிவர், சொல்லுவான் - சொல்லுவார், அவம் இலாவிருந்து ஆகி - பழுது இல்லாத விருந்தாக நீ இருந்து, என்னால் அமை- என்றுசெய்யப்பட்ட, தவம் எலாம் - தவங்களையெல்லாம், தக்கிணை ஆ - தக்ஷிணையாக, கொள்க - பெற்றுக்கொள்வாயாக, என்றான் - என்று சொன்னான்.

குறிப்பு — நவமை - வடசொல்லடியாகப்பிறந்த பண்புப்பெயர். நவம் - பூமி, மை - குற்றம் எனவே பூமிசம்பந்தமாகிய குற்றங்களெனலுமாம். அவமிலாவிருந்து - தகுதியானவிருந்து. விருந்து - ஆகுபெயர். தக்ஷிணை - தக்கிணை, காணிக்கை. (௯௧)

மறைவ லானெதிர் வள்ள லுங்கூறுவா
னிறைவ நின்னரு ளெத்தவத் திற்கெளி
தறைவ தீண்டொன் றகத்தியற் காண்பதோர்
குறைகி டந்த தினியெனக் கூறினான்

இ-ள். வள்ளலும் - ஸ்ரீராமபிரானும், மறைவலான் எதிர் - வேதத்தில் வல்லவரான சுதீக்ஷண முனிவருக்கு எதிரில், கூறுவான் - சொல்லுவான், இறைவ - மேலோனே! நின் அருள் - உன் கருணை, எத்தவத்திற்கு - எந்தத்தவத்திற்கு, எளிது - எளிமையானது? (என்றுகூறி அவரளித்த தவத்தினையெல்லாம் ஏற்றுக்கொண்ட பின்பு) ஈண்டு - இப்பொழுது, அறைவது - சொல்லவேண்டுவது, ஒன்று - ஒன்றுளது, (அது என்னவென்றால்) இனி அகத்தியன் காண்பது - இனி அகஸ்திய முனிவரைக்காணவேண்டுவதாகிய, ஓர் குறைகிடந்தது - ஒரு குறைவு (என்மனத்தில்) உள்ளது, என கூறினான் - என்று சொன்னான்.

குறிப்பு — முனிவர் தலைவனாதலால் இறைவ என்றார். நின்னருளே எல்லாத் தவத்திற்கும் உயர்ந்ததென்பதாம். குறை - இன்றியமையாப் பொருளுமாம். இப்பொருட்டாதலை "வினைக்குறை தீர்ந்தாரிற் றீர்ந்தன்றுலகு" என்னும் குறளினானும், "பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே" என்னும் புறப்பாட்டினானுமுணர்க. ()

நல்ல தேநினைந் தாயது நானுமுன்
சொல்லு வான்றுணி கின்றது தோன்றனீ
செல்லு காண்டவற் சேருதி சோர்ந்தபின்
னில்லை நின்வயி னெய்தலில் லாதவே

இ-ள். தோன்றல் - தலைவனே! நீ நல்லதே நினைந்தாய் - நீ நல்லகாரியத்தையேயெண்ணினாய், அது - அக்கருமத்தை, நானும் முன் சொல்லுவான் துணிகின்றது - நானும் முன்னமே சொல்லும்படி நிச்சயித்தது, ஆண்டுசெல்லுக அவண் சேருதி - அவ்விடத்திற்கு விரைவிற்போய் அவ்வகஸ்தியரை யடைவாய், சோர்ந்த

பின் - (அம்முனிவரை) யடைந்தபிறகு, நின்வயின் - உன்னிடத்தில், எய்தல் இல்லாத இல்லை - அடையாத பேறுகள் ஒன்றுமில்லை.

குறிப்பு — சொல்லுவான் - வான்ஈற்று எதிர்காலவினையெச்சம். 'முன்றுணிகின்றது' இயல்பினால் இறந்தகாலம் நிகழ்காலத்தில் வந்தவழுவமைதி. உனக்குச் சகல பாக்கியமும் உண்டாகுமென்பதாம். (௯௩)

அன்றி யுந்நின் வரவினை யாதரித்
தின்று காறுநின் றேமுறு மால்வற
சென்று சேருதி சேர்தல் செவ்வியோய்
நன்று தேவர்க்கும் யாவர்க்கு நன்றென்றான்

இ - ள் அன்றியும் - அதுவல்லாமலும், (அம்முனிவர்) நின்வரவினை - உன் வருகையை, ஆதரித்து - இச்சித்து, இன்றுகாறும் நின்று - இந்நாள்வரையில் (எதிர்பார்த்து) நின்று, ஏமுறும் - களிப்புற்றிருப்பர், ஆல் - ஆகையால், செவ்வியோய் - செம்மையுடையோனே! அவண் சென்று சேருதி - அம்முனிவரைப்போய்ச் சேர்வாயாக, சேர்தல் - அவ்வாறுபோயடைதல், தேவர்க்கும் நன்று - தேவர்களுக்கும் நல்லது, யாவர்க்கும் நன்று - மற்றையெல்லோருக்கும் நல்லது, என்றான் - என்று.

குறிப்பு — ஏமுறுதல் - ஏமமுறுதலென்பதன் விகாரம், ஏமம் - இன்பம். முதலடியில் 'அன்றியும்' என்புழி மகரவொற்றுக் கெடாது யாப்பழியாமைப் பொருட்டு விரித்தல் விகாரமாய்நின்று, "நுந்தம் எம்நம் ஈறாம்வவ்வருநவ்வே" என்ற நன்னூல் விதியி னுபலக்கணத்தால் நகரமாய்த் திரிந்து நின்றது. மேல், இராவணசங்காரஞ் செய்து, திரிலோகத்துக்கும் நன்மைசெய்யவேண்டியிருத்தலின், "தேவர்க்கு நன்று யாவர்க்கு நன்று" என்றார் தேவர்களது பிரார்த்தனையால் திருவவதரித்தமையறிந்து, தேவரை முன்னர்க்கூறினார் (௯௪)

வழியுங் கூறி வரம்பக லாசிகள்
மொழியு மாதவன் மொய்ம்மலர்த் தாடொழூஉப்
பிழியுந் தேனிற் பிறங்கரு வித்திரள்
பொழியுஞ் சோலை விரைவிற் போயினார்

இ - ள் வழியும் கூறி - (அவ்வாசிரமத்திற்குப்போகும்) மார்க்கத்தையும் சொல்லி, வரம்பு அகல் ஆசிகள் - அளவில்லாத ஆசீர்வாதங்களை, மொழியும் - சொல்லுகின்ற, மாதவன் - பெரிய தவத்தையுடைய சுதீக்கண முனிவரது, மொய்ம்மலர் தாள் - நெருங்கிய தாமரை மலர்போன்ற பாதங்களை, தொழா - (ஸ்ரீராம லக்ஷ்மணர்கள்) வணங்கி, (பின்பு) பிழியும் தேனின் பிறங்கு - வடிகின்ற தேனினது விளங்குகின்ற, அருவித்திரள் பொழியும் சோலை விரைவின் போயினர் - கூட்டமாகிய அருவிகளைச் சொரிகின்ற (அகஸ்தியமுனிவர் இருக்கும்) சோலைக்குச் சீக்கிரமாகப் போயினார்.

குறிப்பு — வழியுமென்பதன் உம்மை இறந்தது தழீஇயிற்று. வரம்பகலாசிகள் முனிவரது உவகைமேலீட்டையும் இராமனது பெருமையையும் குறித்தன. மொய்ம்மலர்: முனிவரனைருளை இராமனேயன்றிப் பல உத்தம புருஷர்களும் வணங்குதற்குரியார் என்னும் பொருள்படுமாறு 'மொய்' என்னுஞ் சொற்பெய்யப்பட்

டது. என்னை? மலரிட்டத்து வண்டுகள் பலமொய்த்தலுண்மையான் தொழா - செய்யாவென்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகால வினையெச்சம் தேனின் இன் ஐந்தனுருபாகக்கொண்டு தேனமானும் திவவியர்ரைப் பொழிதரு மருவித்திரள்கள் எனினுமொக்கும். இப்பொருள்கொள்ளுங்கால் தேன் பிழிவதிற் பிறங்கு மருவித்திரள் எனமாறி யுரைத்தலே யமைவுடைத்து. அருவியென்னவாளர் கூறுது அருவித்திரள் என்றமை கல்யாணிதீர்த்தம், பாணதீர்த்தம், பழைய பாவநாசதீர்த்தம் எனப்பல அருவித்துறைகள் அகத்தியவரையிற் றிகழ்தலபற்றியெனக்கொள்க. சோலைபோயினா எனபுழி நான்காவது அன்றி ஏழாவது தொக்கதாகக்கொள்க ()

வேறு.

ஆண்டகைய ரவ்வயி னடைந்தமை யறிந்தா
னீண்டுவகை வேலைதுணை யேழுலக மெய்த
மாண்டவர் தன்சரண் வழங்கவெதிர் வந்தா
னீண்டதமி ழாலுலகை நேமியி னளந்தான்

இ-ள் நீண்ட தமிழால் - பெரிய திராவிடபாஷையால், உலகை - உலகத்தை, நேமியின் அளந்தான் - திருமால்போல அளந்தவரான அகஸ்திய முனிவர், ஆண்தகையர் - வீரராகிய ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், அவ்வயின் - அவ்விடத்தில் [அப்பொழுது], அடைந்தமை - சேர்ந்ததனை, அறிந்தான் - தெரிந்துகொண்டவராகி, ஈண்டு உவகைவேலை - மேன்மேலெழுகின்ற சந்தோஷமாகிய கடல், துணை ஏழு உலகம் எய்த-ஏழேழு லோகங்களையும் அடையும்படி, மாண்டவர்தன் - மாட்சிமைப்பட்டவர்களைக் கொடுத்தருளுகின்ற ஸ்ரீராமபிரானுக்கு, சரண்வழங்க - (ராக்ஷஸ வதத்திற்காகத்) திருவடிகளை யருளுமாறு, எதிர்வந்தான் - எதிரில் வந்தார்.

குறிப்பு —தகை - தகுதி, சற்குணம் இது தொழிலடியாகப் பிறந்ததாயினும் பொருளாற் பண்புப்பெயர் ஈண்டுவகை - வினைத்தொகை உவகை அளவுகடந்து மேன்மேல் அதிகரித்தலால் 'உவகைவேலை' என உருவகஞ் செய்தார் பலருந் தேடிச்சென்று காணுதற்குரிய ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் தம்மைத் தேடிவருகின்றமையின் அத்தலையிலுண்டான அன்பிற்கும் தமது பாக்கியத்திற்கும் வியந்து பெருமகிழ்ச்சி கொண்டாரெனக் திராவிட மென்பது, தமிழெனத் திரிந்தது, தனிமைப்பொருள் குறித்த 'தமி' என்னும் வினையடியாகப் பிறந்து, வினைமுதற் பொருண்மையுணர்த்திய விகுதி குன்றித் தனக்கு இணையில்லாப்பாஷையெனப் பொருள் பயப்பதென்பாரும் செவிக்கினிமைபயத்தலான் மதுரமென்னும் பொருட்பேறுடையதாகித் 'தமிழ்' என வழங்கிய தென்பாரும் உளர் "இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப - விருமொழியும் வகைப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்ப, விருமொழியு மான்றோரே தழீஇயினா ரென்றாலிவ்- விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ" வடமொழிக்[illegible] ரணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத், தொடர்புடைய தென்மொழியை [illegible] மலாந் தொ[illegible] தேத்தக் குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்[illegible] [illegible] னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்" [illegible]று ஆதியிற் சிவபிரான் அகத்தியமுனிவர்க்கு [illegible] [illegible]பாழிமையபோல இது தெந்கின் நின்றோங்கிப் பரந்ததனாலும், இன்றலன குணங்களை யெடுத்துப் புகழ்ந்த பெரியோர்களால் ஆதரிக்கப் பெற்றமையாலும், நிரம்பிய இலக்கிய இலக்கணங்களையுடைமையினாலும் 'நீண்ட தமிழ்' என்றார் தமிழால் உலகையளத்தல் — தமி

மூப்பாலஷயை உலகமுழுமையும் பரவசசெய்தல். சேமியின் - இன உவமப்பொருள்.
உலக மளந்தறகுத திருமாலுவமை (௯௬)

பண்டவுணர் மூழ்கினர் படர்களென வானோ
ரெண்டவ வெமக்கருள் கெனக்குறை யிரந்தார்
கண்டொருகை வாரினன் முகந்துகட லெல்லா
முண்டவர்கள் பின்னுமிழ்க வென்றலு முமிழ்ந்தான்.

இ - ள் வானோர் - தேவர்கள், பண்டு - முன்னொருகாலத்தில், அவுணர் - அசுரர்கள், மூழ்கினர் (கடலில்) ஒளிந்துகொண்டார்கள், படர்கள் என - இனியிறவார்கள் என்றெண்ணி, (அகஸ்திய முனிவரை யடைந்து) எண்தவ - (யாவரும்) மதிக்கத்தக்க தவத்தையுடையீரே! எமக்கு அருள்க என - எங்களுக்கு அருள்பாலிப்பீராகவென்று, குறை இரந்தார் - (தமது) குறையைச் (சொல்லி) இரந்தவர்களாக, கண்டு - (அவர்கள் குறையை) அறிந்து, கடல் எலாம் - சமுத்திர நீர்முழுவதையும், ஒரு கை முகந்து வாரினன் - ஒரு கையால்வாரி மொண்டெடுத்து, உண்டு - குடித்து, பின் அவர்கள் உமிழ்க என்றலும் உமிழ்ந்தான் - மீண்டும் அவர்கள் உமிழ்ந்தருளுக என்வேண்டவே (அதனை) உமிழ்ந்தவர்

குறிப்பு — இரந்தார்க்கண்டு என்னும் பாடத்திற்கு இரந்தவர்களைக்கண்டு என்று பொருள்கொள்க. ஒருகாலத்தில் இந்திராதி தேவரோடு போரியற்றிய விருத்திராசுரன் பல அசுரரோடு கடலில் ஒளிந்துகொண்டது கண்ட தேவர்களது வேண்டுகோட்கிரங்கி அகத்தியமாமுனிவர் அக்கடலினீரைத் தமது ஒருகையான் முகந்து முற்றும் பருகியருளி அவ்வசுரரை வெளிப்படுத்த இந்திரன் கொன்றபின், அவர்கள் வேண்டுகோளின்படி மீண்டும் உமிழ்ந்தனர் (௯௭)

தூயகடனீரடிசி லுண்டது துரந்தா
னாயவத லாலமரு மெய்யுடைய வன்னான்
மாயவினை வாளவுணன் மாயவவன் வன்மைக்
காயமினி துண்டலகி னூரிடர் களைந்தான்.

இ - ள். அமருமெய் உடைய அன்னான் - குறுகிக்கிடக்கின்ற சரீரத்தையுடைய அவ்வகத்தியமுனிவர், தூய கடல்நீர் அடிசில் உண்டு - பரிசுத்தமான கடனீரை புணவாகப்பருகி, அது துரந்தான் - அதனை மீண்டும் உமிழ்ந்தவர், ஆய அது அலலால - (அவ்வண்ணம்) செய்த அக்காரியமாத்திரமேயன்றி, மாயம்வினை - வஞ்சகமான [illegible]கையையுடைய, வாள் அவுணன் - வாள்போலுங்கொடிய (வாதாபியென்னு [illegible] அழிந்துபோம்படி, அவன் வன்மை காயம் - அவ [illegible] மையாகப்புசித்து, உலகின் அரு இட [illegible] துன்பத்தைப் போக்கினவர்

[illegible] ணடுச் சுருக்கிக்கூறியது, அவர்பெ [illegible] மையை னகுவி [illegible] னைக. "மக்கண்மெய் தீண்டலுடற் மாணி [illegible] வண்டி [illegible] றபுழி, [illegible] செவிக்கு" என்றுகூறிப் பின் "குழலினிதி யாழினிதென்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்." என்று நாயனாரும் கூறியிருக்கின்றது? என்லும். பரமசிவன் ஆங்கவினை, துரத்தல் - வெளிப்படுத்துதல். குறுமு

னிவன் என்பதன் பொருள்விளக்கம். 'அமருமெய்யுடையவனுனை' எனப்பட்டது. வாள்போலவயிற்றைக்கிழித்துவரும் செயலினனாதலின் வாதாபியை 'வாளவுணன்' என்றார். வாதாபிமாய்த்த விபரம் —வில்வலன் வாதாபி என்னும் சகோதரராகிய இருவரில் வில்வலன் பிராமணவடிவங்கொண்டு சிராத்தமென்னும் ஒருவ்யாஜ்த்தை மேற்கொண்டு, தம்பியாகிய வாதாபியை யுணவாகச்சமைத்துப் பிராமணரையுண்பித்து, அவர் உண்டபின் 'வாதாபிவெளிப்படு' என அழைத்தலும் இறந்து பிழைக்கும் வன்மை பெற்றவனான அவன் அவருடைய வயிற்றைக்கிழித்துக்கொண்டு வெளிப்பட, அவ்விருவரும் இறந்தவரது மாமிசத்தை யுண்டுவந்தனர் இங்ஙனம் பலமுனிவரைக்கொன்று வாராநிற்க, பலரும் அகத்தியமுனிவரையடைந்து அவரை வேண்டலும் அவர் அவ்விருவரையுண்டு வில்வலன் வாதாபியை 'வெளியே' வென்றழைப்பதன்முன் அவர் வாதாபி! ஜீரணமாகுக என அவனை மாய்த்துக்கண்டு வில்வலன் அவரைக்கொல்லும்படி முயல அவர் அவனையும் தீவிழித்தெரித்தார் என்றது. (௧௮)

போகமுற்று பெருயிர்கள் டாமுலை வுறும்
லேகுநெறி யாதென மிதித்தடியி னேறி
மேகநெடு மாலைதவழ் விந்தையெனும் விண்டோய
நாகமது நாகமுற நாகமென நின்றான்

இ - ள் யோகம் உற்று — யோகமுயற்சியையுடைய, பெரு உயிர்கள் தாம் உலைவுறும் அல் - மகாத்மாக்களாகிய முனிவர்கள் துன்படையாதபடி, ஏகும்நெறி -(சூரிய சந்திராதி கிரகங்களும் நக்ஷத்திரங்களும்) செல்லுகின்றவழி, யாது என - எதுவென்று சொல்லி வேண்ட, அடியின் மிதித்து ஏறி - (தமது) காலான் மிதித்து மேலேறி, மேகம் நெடுமாலை தவழ்-மேகங்களினது பெரிய வரிசை தவழப்பெற்ற, விந்தையெனும் விண்தோய நாகம் அது- விந்தியமென்னும் ஆகாயத்தை அளாவி வளர்ந்த மலையானது, நாகம் உற - பாதாளத்தையடைந்து குறுகும்படி, நாகம் என - யானைபோல, நின்றான் - (கம்பீரமாக) நின்றவர்

குறிப்பு — விந்தை - வடசொற்சிதைவு, 'விந்தம்' என்றும் பாடமுண்டு. நாகம் - வடசொல், அது மலையும் பாம்பும் யானையுமாதலால் "நாகம் விண் குரங்கு புன்னை நற்றாக மலை பாம்பி யானை" என்பதனாலறிக 'நாகமுற' என்பதில் நாகம் -அவை வசிக்கின்ற லோகத்துக்கு ஆகுபெயர்- விந்தியமலை குறுகிய விபரம் - ஒருகாலத்தில் விந்தியமலை மற்றை மலைகளினும் தான் உயரவேண்டுமென்று கருதி வானையளாவி வளர்ந்து சூரிய சந்திராதியர் செல்லவொண்ணாதபடி மறைத்து நிற்க, தேவர் முனிவர் யாவரும் அகத்தியரைவேண்டலும், அவர் அதன் முன்செல்ல அம்மலை அவரை வணங்கக் குனிந்தபோது அவர் தாம் வடதிசையினின்று தென்றிசை சென்று மீண்டு வருமளவும், அங்ஙனமே குறுகிக் கிடக்கும்படி ஆ[illegible] கட்டளையிட்டு அதன்மேலேறி அப்பால் நடந்தார் ஏன்பது [illegible] (௧௯)

மூசரவு சூடுமுத லே[illegible]
மாசிறவு வேகென வட[illegible] கரெனிற்,
ணீச[illegible] கந்தீசிப்புரான
வீசனிக ராயுலகு சீர்பெற விரு[illegible]

[illegible] உரைக்குதவும் - [illegible]

இ - ள் மேல் நான் -முன் ஒருகாலத்தில் [illegible] - உரைக்கப்படும் வேண்டு த்திருத்த தாழ்வையுடைய, (அதனைநோக்கி), பொருள் கொள்ளலுமொன்று. ()

கிய சர்ப்பங்களைத் தரித்த சிவபிரான், மூவா - கெடாத, மாசு இல் தவ - குற்றமில்லாத தவத்தையுடையோனே! எகு என - (தென்றிசைக்குச்) செல்வாயாக என்றுகிய மிக்க, உரையின் - அவர் மொழிப்படி, வானின் நெடு - ஆகாயத்தை அளாவி உயர்ந்த, மாமலயம் - பெரிய பொதியமலையை, நேரா - அடைந்து ஈசன் நிகராய - சிவபெருமானுக்கு ஒப்பாக, உலகு சீர்பெற இருந்தான் - உலகம் சமநிலை பெறும்படி அதனகட்டங்கி இருந்தவர்.

குறிப்பு —நாகாபரணனாதலால் 'மூசரவுசூடு' என்றும், மும்மூர்த்திகளுள் முதன் மூர்த்தியாதலால் 'முதலோன்' என்றும் கூறினார் "செய்யாயென்னு முன்னிலை வினைச்சொல் செய்யென கிளவியாகிடனுடைத்தே" என்னும் தொல்காப்பியச் சூத்திர விதிப்படி 'எகு' என நின்றது வடாது - வடக்குள்ளது மருஉ. நீசம் - இழிவு ஆதலின், 'வடாதுதிசை நீசமுற' என்றதனால், தென்றிசை கைலாசத்தின்கட் சிவபிரானோடொப்பப் பொதியமலையில் வீற்றிருந்ததனாலும், அவரோடொத்த பெருந்தன்மை யுடைமையாலும் 'ஈசனிகராய' என்றார். (சo)

உழக்குமறை நாவினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவியி னுமமரபி னாடி
இழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்.

இ - ள் நிழல்பொலிக்கணிச்சி - ஒளி விளங்குகின்ற மழுவாயுதத்தையும்; மணிநெற்றி உமிழ்செங்கண் - அழகியநெற்றியிலே (தழல்) உமிழ்கின்ற சிவந்த கண்ணையுமுடைய, தழல்புரை - நெருப்பைப்போக்கின்ற, சுடர்க்கடவுள் தந்ததமிழ் - ஜோதிஸ்வரூபியான சிவபெருமான் அளித்தருளிய தமிழை, உழக்கும் மறைநாவினும் உயர்ந்து - வருந்திப் பழகுகின்ற நான்குவேதங்களினும் மேன்மைபெற்று, உலகம் ஓதும் வழக்கினும் - நல்லாசிரியர் கூறுகின்ற வழக்கைக்கொண்டும், கவியினும் - செய்யுள்வழக்கைக்கொண்டும், மதி - (தமது அறிவினால்) மரபின் நாடி - முறைப்படி யாராய்ந்து, தந்தான் - உலகுக்குக் கொடுத்தருளினவர்

குறிப்பு —கனம்ஜடை முதலியவாக உருச்செபித்து ஸ்வரமதவறாமல் வேதம் கற்பதில் வருத்தம் மிகுதியுமுள்ளதாகலின் 'உழக்குமறை' யெனவும் அவ்வேதத்தினும் தமிழ் எளிதிற்கற்கலாம்படி யிருத்தலானும் பல பெரியோர்கள் தமிழ்மொழி மாலையிட்டே கடவுளைத் துதித்திருத்தலானு மித்தமிழ் வடமொழியினும் சிறந்ததென்பார் 'உயர்ந்து' எனவும் கூறினார் மரபினாடுதல்—அவ்விலட்சணங்களையெல்லாம் ஆராய்ந்து பலபிணிச சிற்றறிவினோர்க்கு அறியலாகுமாறமைத்தல். சிவபெருமானிடத்து அகத்தியர் தமிழுபதேசம்பெற்று உலகைவாழ்வித்த விவரத்தை "ஆதியிற் றமிழ்நூ லகத்[illegible]யொரு பாகனை வழுத்துதும், போதமெய ஞ்ஞான நலம்பெற[illegible] வரையாது கூறுரூனணாக. பூர்வம் காசிமாநகரில் முனிவர்பலரும் கூடி வடமொழியை அபிவிருத்திசெய்யுங்கருத்தாற் சங்கமொன்று தாபித்து நடத்தினர்; அச்சங்கத்துள் ஒருவராகிய அகத்தியனார் வனையரோடு ஓயாது வாதிட்டுப் பிரிந்து, அவர்களிறுமாப்பை யொழிப்பானசிவபெருமானிடஞ்சென்று வேண்டிநிற்புழி, அங்குத் திவ்வியதோர் பரிமளங்கமழ அதுவந்த வாற்றை யறியாராய் பரமசிவனைநோக்கிச் சுவாமீ! இப்புதுமணம் எங்கிருந்துபோதருகின்றது? என்னும், பரமசிவன் ஆங்கோர்மூலையிற் குவியுண்டுகிடந்த சிலபத்திர

ங்களைக்காண்பிக்க, அவற்றைக்கண்டதும் 'தமிழ் தமிழ்' என்னும் இன்பமான பெயரைச்சொல்ல, உடனே பரமசிவன் அப்பாஷைக்கு ஆதாரவிதிகளை 'இவ்வேட்டுப்பிரதிகளிலுள்ளன'வென்று எடுத்துக்கொடுத்து உபதேசிக்கத்தெளிந்து, தக்கணமே தக்கணத்துள்ள பொதியமலைக்குச்சென்று அங்கேயே வாசஞ்செய்துகொண்டு, பேரகத்தியம் சிற்றகத்தியம் என்னும் இலக்கணநூல்களைச்செய்து அவற்றைத் தம்மாணாக்கர் பன்னிருவர்க்கும் கற்பித்துத் தமிழ்மொழியைத் தழைத்தோங்கச்செய்தா ரென்பது வரலாறு. (௪௧)

விண்ணினி னிலத்தினில் விகற்பவுல கிற்பே
ரெண்ணினி லிருக்கினி லிருக்குமென யாரு
முண்ணினைக் கருத்தினை யுறப்பெறுவ னென்னா
கண்ணினி லெனக்கொடு களிப்புறு மனத்தான்.

இ - ள். விண்ணினில் - தேவலோகத்திலும், நிலத்தினில் - பூவுலகத்திலும், விகற்ப உலகில் - மற்றும் பல உலகங்களிலும், பேர் எண்ணினில் - (அவ்வுலகங்களிலுள்ளவர்களுடைய) பெரிய உள்ளத்திலும், இருக்கினில் - வேதத்திலும், இருக்கும் என யாரும் - (எப்பொழுதும்) உள்ளதாகுமென்று யாவரும், உள் நினைக் கருத்தினை - உள்ளத்தில் நினைக்கின்ற தியான வஸ்துவை, [ஸ்ரீராமபிரானை] என் கண்ணினில் உறப் பெறுவன் - என் கண்ணிற் காணப்பெறுவேன், என்னாக் கொடு - என்றெண்ணி, களிப்பு உறும் மனத்தான் - மகிழ்ச்சியடைய நின்ற மனத்தையுடையவர்.

குறிப்பு - விகல்பம் - விகற்பம், வேறு என்பது பொருள். விகற்ப உலகென்றது அதலம் முதலியவற்றை. முதலிரண்டடிகளிற் கூறியவை சர்வாந்தர்யாமி என்னும் சொல்லின் பொருள். 'கருத்தினை' யென்னும் [illegible]கு எல்லாவற்றிற்கும் கருத்தாவாகியவனை யென்க. (௪௨)

இரைத்தமறை நான்கினொ டியைந்தபிற யாவு
நிரைத்தநெடு ஞானமிகு கல்வியினொ டுநாளிட்
டுரைத்துமய னாலுமறி யாதபொரு ளோர்நின்
றுரைக்குதவு மாலெனு முணர்ச்சியி னுவப்பான்.

இ - ள். இரைத்த - (இறைவன் குணங்களை) உத்கோஷித்துப் புகழுகின்ற மறை நான்கினொடு - வேதங்கள் நான்கோடும், இயைந்த பிற யாவும் - நிரை [illegible] -சேர்ந்த மற்றைச் சாஸ்திரங்கள் எல்லாவற்றையும், [illegible]கிரமப்படக்கற்ற, மிகு ஞானம் கல்வியில் - சிறந்த அறிவாகிய கல்வியில், நெடுநாள் இட்டு உரைத்தும் - பலநாள் வைத்து ஆராய்ந்து பார்த்தாலும், அயனாலும் - பிரமதேவனாலும், அறியாத - அறியப்படாத, பொருள் - பரம்பொருள் [ஸ்ரீராமபிரான்], (இன்று) நேர்நின்று - எதிரில் நின்று, உரைக்க உதவும் - பேசும்படி அருளும், எனும் உணர்ச்சியினாலும் - அறிவால், உவப்பான் - மகிழ்வார்.

குறிப்பு — இயைந்த பிறயாவும் [illegible]களின் பொருளை அறிதற்குக் கருவியாகிய மீமாஞ்சை, [illegible], தருமசாஸ்திரம் முதலியவற்றை. அயனாலும் - உம்மை மற்றைத்தேவர்களையும் உளப்படுத்தி நின்றது. அறியாத - அறியப்படாத என்னும் செயப்பாட்டுவினை. உரைக்குதவும் - அகரம் தொகுத்தல். இனி உரைக்கு நேர்நின்று உதவும் எனப்பிரித்து - உரைக்கப்படும் வேண்டுகோளுக்கு நேர்நின்று உதவிசெய்பவன் எனவும் பொருள் கொள்ளலுமொன்று. ()

உயர்ந்தன ரிமைப்பில ருயிர்த்தனர் தவத்தோ
ரந்தண ரறத்தினெறி நின்றனர்க ளாறு
வெந்திற லரக்கர்விட வேர்முத லறுப்பான்
வந்தன்ன மருந்துவ னெனத்தனி வலிப்பான்.

இ - ள். ஆறு வெந்திறல் - கெடாத கொடியவன்மையை யுடைய அரக்கர் விடம் - இராக்கதராகிய விஷத்தினது, வேர்முதல் அறுப்பான் - வேரை அடிமுதலோடு அறுப்பதற்கு, மருந்துவன் வந்தனன் - வைத்தியன் [ஸ்ரீராமபிரான்] வந்தான், (ஆதலால்) இமைப்பு இலர் - தேவர்கள், உயர்ந்தனர் - பிழைத்தார்கள், தவத்தோர் - முனிவர்கள், உயிர்த்தனர் - உயிர்பெற்றார்கள், அந்தணர் - பிராமணர்கள், அறத்தின் நெறிநின்றனர் - தருமவழியில் நின்றார்கள், என தனிவலிப்பான் - என்று மிகுதியும் துணிபவர்.

குறிப்பு -- உயர்ந்தனர் முதலிய வினைகளை இறந்தகாலத்தாற் கூறியதும், பயனிலைகளை முன் நிறுத்தியதும், காரியத்தை முன்னே வைத்துக் காரணத்தைப் பின்னே வைத்ததும் துணிவு குறித்தற்கென்க. இமைப்பிலர் - இமைத்தலில்லாதவர், இது, அநிமிஷர் என்பதன் மொழிபெயர்ப்பு. தவத்தோர் - துறவறத்தவர். அந்தணர் - இல்லறத்தவர். நின்றனர்கள் - கள் விகுதிமேல் விகுதி. 'வேரறுப்பான்' என்பதற்கேற்ப விஷத்தை நச்சுமரமாக உருவகஞ் செய்து கொள்ளலுமாம். மருந்துவன் - மருந்தின் தன்மையறிந்து கொடுப்பவன். (௪௪)

ஏனையுயி ராமுதல யாவுமிடை வேவித்
[illegible] மைச்சுடு சினத்தீ
[illegible] தவிர்த்த[illegible]ப்பான்
[illegible] மனத்தான்

இ - ள். [illegible] ஆம் யாவும் - மற்றையுயிர்கள் முதலான எல்லாப் பொருள்களையும், [illegible] இடைவிடாமல் வேகும்படிசெய்து, ஊன் நுகர் - (அவற்றின்) [illegible] அரக்கர்களது, உருமைச்சுடு - இடியையும் சுடத்த[illegible] கோபமாகிய பெரியநெருப்பை, கடிது அவித்து - [illegible] - பிராணிகளைக் காப்பதற்கு, வானம் மழை[illegible] போன்ற மேகம் [ஸ்ரீராமபிரான்] வந்தது என்று, [illegible] (தன்னிலும் விரைந்து) முற்படுகின்ற, மனத்தான்.

குறிப்பு [illegible] முதலயாவ்' என்னவே, உயர்திணையே யன்றி அ[illegible] அவ்வப்பிராணிகளை அந்தியகாலம் வருவ[illegible] வேவித்து' என்றார், ஊன் - ஆகுபெயர். சி[illegible] மச்சுடுசினத்தினனவல' என்றார், இனி, உரு[illegible] திய அரக்கராகிய வனலையெனக் கூட்டலுமாம். [illegible] றற்றலால் பரமபதத்திற்குத் தலைவனும் நீரு[illegible] பொலிவை யுடையவனுமான ஸ்ரீராமன் என்பது குறிப்பால் விளங்கிற்று. (௪௫)

கண்டன னிராமனை வரக்கருணை கூர்ப்
புண்டரிக வாணயன நீர்பொழிய நின்றா
னெண்டிசையு மேழுலகு மெவ்வுயிரு முய்யக்
குண்டிகையி னிற்பொருவில் காவிரி கொணர்ந்தான்

இ - ள். எண்டிசையும் - எட்டுத்திக்குக்களும், ஏழ் உலகும் - ஏழுலகங்களும், எவ்வுயிரும் - (அவற்றிலுள்ள) எல்லாவுயிர்களும், உய்ய - நற்கதியடையும்படி, குண்டிகையில் - (தமது) கமண்டலத்தில், பொருவு இல் காவிரி கொணர்ந்தான் - ஒப்பில்லாத காவிரிநதியைக்கொண்டுவந்த அவ்வகஸ்தியமுனிவர், இராமனை வரக்கண்டனன் - ஸ்ரீராமன்வரக்கண்டு, கருணைகூர - அவனிடத்து அன்புமேலிடுதலால், புண்டரிகம் வாள்நயனம் - தாமரைமலர்போன்ற ஒளியினையுடைய கண்கள், நீர்பொழிய நின்றான் - ஆநந்தபாஷ்பம் பெருக்கநின்றார்.

குறிப்பு.—புண்டரிகமென்னும்பெயர் வெண்டாமரைக்கே வழங்குவதாயினும் இங்குக் கண்களுக்கொப்பிட்டமையால், செந்தாமரைக்குக் கொள்ளத்தக்கது. கண்களுக்குத் தாமரையை யொப்பிட்டதற்கேற்ப, அவினின்றும் பெருகுகின்ற கண்ணீருக்குத் தாமரையினின்றும் பெருகுகின்ற தேனையொப்பிடுக. காவிரி, காவேரியென்பதன் மரூஉ, கவேரமென்னும் மலையினின்றும் பிறந்ததென்றும், கவேரனென்னும் அரசனுக்கு மகளென்றும் பொருள்படும். அகஸ்தியர் கங்காஜலத்தைக் கமண்டலத்திற்கொண்டு பொதியமலைக்குச் செல்பவர் கவேரபருவதத்தினருகே வருகையில் விநாயகக்கடவுள் காக்கையுருக்கொண்டுவந்து அதனைக் கவிழ்த்துவிட அது காவிரியாறாய்ப் பெருகிற்று என்பதும், அகத்தியர் கங்கையாருழைச்சென்று காவிரியைக் கமண்டலத்திற்கொண்டு குடகுமலைச்சாரலில் வைத்துவிட்டுச் சலகாரியத்துக்குச் செல்லாநிற்க, ஆங்கொருகாகம்வந்து அதனை உருட்டிவிட, அதுவே பெருநதியாய்ப் பெருகிற்றென்பதும் வரலாறு. (௪௮)

நின்றவனை வந்தநெடி யோனடி பணிந்தா
னன்றவனு மன்பொடு தழீஇயழுத கண்ணா
னன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தா
னென்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான்.

இ - ள். நின்றவனை - (அங்ஙனம்) எதிரில்வந்துநின்ற அகஸ்தியரை, வந்த நெடியோன் - (அங்கே) வந்த ஸ்ரீராமபிரான், அடிபணிந்தான் - திருவடிகளில் விழுந்து வணங்கினன், அன்று - அப்பொழுது, என்றும் உள தென்தமிழ் இயம்பி - எப்பொழுதும் உளதாகிய இனியதமிழைச் சொல்லி, இசைகொண்டான் - கீர்த்தியையடைந்தவராகிய, அவனும் - அம்முனிவரும், அன்பொடு தழீஇ - அன்போடு அவனைத் தழுவிக்கொண்டு, அழுத கண்ணன் - (ஆனந்த)பாஷ்பம்பெருக, அழுகின்ற கண்ணினையுடையவராய், வரவு நன்று என்று - (நீ) இங்கு வரவு நல்லதாகக் கடவது என்று, பல நல உரை பகர்ந்தான் - பல இனிய உபசாரவார்த்தைகளைச் சொற்றனர்.

குறிப்பு.—திரிவிக்கிரமனாய் உலகளந்த திருமாலே இப்பொழுது சக்கரவர்த்தி திருமகனாய்த் திருவவதரித்திருக்கின்றானென்பது தோன்ற 'வந்த நெடியோன்' என்றார். திருக்கலியாண குணங்களால் யாவரினு முயர்ந்தோனென்றலுமாம். தென்றமிழ் - தெற்கின்கண் மிகுதியாக வழங்குந் தமிழென்று கூறினுமமையும். ஏனை பாஷைகள் போலாது ஸம்ஸ்கிருதம்போல நித்தியமானதாதலால் 'என்று

முளதென்றமிழ்' என்றார். தமிழியம்பியது - சிவபிரானிடத் துபதேசம் பெற்ற தமிழ்மொழியை உலகிற் பிரவசனஞ் செய்ததமை. (சஎ)

வேதியர்கள் வேதமொழி வேறுபல கூறிக்
காதலமிக நின்றெழில கமண்டலுவி னன்னீர்
மாதவர்கள் வீசிநெடு மாமலர்க டூவப்
போதுமண நாறுகுளிர் சோலைகொடு புக்கான்

இ - ள் மாதவர்கள் - மிக்க தவத்தையுடையோராகிய, வேதியர்கள், பிராமணர்கள், காதலமிக நின்று - (அன்பு மிகுதலால்) ஸ்ரீராமபிரானைச் சூழ்ந்துநின்று, வேறு பல வேதமொழி கூறி - பல வேறுவகைப்பட்ட வேதவாக்கியங்களைச்சொல்லி, எழில்கமண்டலுவின் நல்நீர் - (தமது) அழகிய கமண்டலங்களிலுள்ள நல்ல நீரை, வீசி - தெளித்து, நெடுமாமலர்கள் - மிக்க அழகிய புஷ்பங்களை, தூவ - மேலே சிந்தாநிற்க, (அகத்தியர் ஸ்ரீராமனை), போதுமணம் நாறு - மலர்களின் வாசனைவீசுகின்ற, குளிர்சோலை - குளிர்ந்த (தமது) சோலையினுள்ளே, கொடுபுக்கான் - அழைத்துக்கொண்டு சென்றார்.

குறிப்பு — கமண்டலு வடசொல், தீர்த்தபாத்திரம். புண்ணிய தீர்த்த மாதலின் நன்னீரெனப்பட்டது. மாதவர்கள் - இது 'வேதியர்கள்' என்பதனொடு பண்புத்தொகையாகக் காட்டப்பட்டது போது - காலவாகுபெயர். கொடு - 'கொண்டு' என்பதன் தொகுத்தல் கமண்டலுவின் நன்னீர் வீசுதல் - பூரண கும்பங்களிற் புண்ணிய தீர்த்தங் கொணர்ந்து ப்ரோக்ஷித்தல். மலர்தூவுதல் - புஷ்ப வர்ஷம் இவை உபசார வகைகளிற் சேர்ந்தன (சஅ)

பொருந்தவம லன்பொழி லகத்தினிது புக்கான்
விருந்தவ னமைத்தபின் விரும்பினன் விரும்பி
யிருந்தவ மிழைத்தவென திலலிடையின் வந்தென
னருந்தவ முடித்தனை யருட்கரச வென்றான்.

இ - ள் அமலன் - ஸ்ரீராமன், பொழிலகத்து - அகத்தியருடைய சோலையினுள், பொருந்த - பொருத்தமாக, இனிதுபுக்கான் - இனிமையாய்ப் பிரவேசித்தவனாய், அவன் விருந்து அமைத்தபின் - அம்முனிவர் விருந்துசெய்து உபசரித்தபின்பு, விரும்பினன் - மகிழ்ந்திருந்தான், (அப்பொழுது அம்முனிவர்), விரும்பி - மகிழ்ந்து (ஸ்ரீராமனைநோக்கி) அருட்கு அரச - அருளுக்குத் தலைவனே! இருந்தவம் இழைத்த எனது இல் இடையின் வந்து - பெரியதவத்தைச்செய்த எனது ஆச்சிரமத்திற்கெழுந்தருளி, என் அருந்தவம் முடித்தனை என்றான் - எனது அரியதவத்தினை நிறைவேற்றினை என்று சொன்னான்.

குறிப்பு — அமலன் ...மிலலாதவன். இனி, விரும்பினனாகிப் புக்கானென்றலுமாம். விருந்து - ...; இங்கே புதிதாய்வந்தவர்க்குச் செய்யும் உபசாரத்திற்கு இருமடியாகுபெயர் ஸ்ரீராமபிரா... ...ந்தருளப்பெற்றமையால் இலலினை 'இருந்தவமிழைத்தஇல்' என்றார். கருதிநீ - ...ந்ததற்கு "என்ன மாதவஞ் செய்ததிச் சிறு குடிலென்றான்" என்னும் பாரதச்செய்யுளையுங் காண்க (சகூ)

என்றமுனி யைத்தொழு திராமனிமை யோரு
நின்றதவ முற்றுநெடி யோரினெடி யோரு

முன்றனருள் பெற்றிலாக ளுனனருள் சுமந்தேன்
வென்றன னனைத்துலகு மேலினிதெ னென்றான்.

இ-ள். என்ற முனியை இராமன் தொழுது - என்று இவ்வாறு கூறிய முனிவரை ஸ்ரீராமன் வணங்கி, இமையோரும் - தேவர்களும், நின்றதவம் - (தாம் செய்யத்தக்கதாய்) நின்றதவத்தை, முற்றும் நெடியோரின் - முடியச்செய்த பெரியோர்களுள்ளும், நெடியோரும் - பெரியோர்களாகிய மகாமுனிவர்களும், உன்தன் அருள் - உன்னுடைய கருணை, பெற்றிலர்கள் - (எளிதிற்) பெற்றார்களில்லை; உன்னருள் சுமந்தேன் - உனது கிருபையை யடியேன் பெற்றேன், (ஆதலின்), அனைத்து உலகும் வென்றனன் - எல்லா வுலகங்களையுஞ் செயித்தேன், மேல் இனிது என - இதன்மேல் (அடையத்தக்க) நன்மையாது? என்றான் - என்று சொன்னான்.

குறிப்பு —'சுமந்தேன்' என்றதனால் மிகுதியாகப் பெற்றேன் என்பதாயிற்று. அகத்தியரிடத்து அம்பு முதலியவைபெற்று மேல் இராவணவதஞ் செய்ய நிற்பதைக் கருதி,' வென்றனனனைத்துலகும் மேலினிதென' என்றான் என்பது குறிப்பினுணரப்படுமாற்றிக (௫௦)

தண்டக வனத்துறைதி யென்றுரை தரக்கொண்
டுண்டுவர வித்திசை யெனப்பெரி துவந்தே
னெண்டகு குணத்தினை யெனக்கொடியா சென்னி
துண்டமதி வைத்தவனை யொத்தமுனி சொல்லும்

இ-ள் உயர் சென்னி-உயர்ந்த சிரசினிடத்தே, துண்டம் மதி - பிறைச்சந்திரனை, கொடுவைத்தவனை - கொண்டுவைத்தருளிய சிவபிரானை, ஒத்த - போன்ற, முனி - அவ்வகத்தியமகாமுனிவர், (ஸ்ரீராமபிரானைப்பார்த்து), எண்தகு குணத்தினை -)யாவராலும்) தியானிக்கப்படுகின்ற திருக்கல்யாண குணங்களையுடையாய்! தண்டகவனத்து உறைதி என்று உரைதரக்கொண்டு - நீ தண்டகாரண்யத்தில் வசிக்கின்றாயென்று சொல்லக்கேட்டு, இ திசைவரவு உண்டு என - இந்த இடத்திற்கு (நீ து) வருகை உள்ளதாமென்றெண்ணி, பெரிது உவந்தேன் - மிகவும் மகிழ்ந்திருந்தேன், என - என்றுசொல்லி, சொல்லும் - (பின்னும்) சொல்லுவார்.

குறிப்பு —என்னெண்ணப்படி நீ யிங்குவந்தருளினை யென்பது குறிப்பெச்சம், இனி எண்தகு குணத்தினை என்பதற்குச் சிறந்த எட்டுக்குணங்களை யுடையவனே எனவுங் கூறலாம் எண்குணங்களாவன அபஹதபாப்மத்வம், விஜரத்வம், விம்ருத்யுத்வம், விசோகத்வம், விஜிகத்ஸத்வம், அபிபாஸத்வம், ஸத்யகாமத்வம், ஸத்யஸங்கல்பத்வம் என்பவை. (௫௧)

ஈண்டுறைதி யையவினி யிவ்வயி னிருந்தால்
வேண்டியன மாதவம் விரும்பின முடிப்பாய்.
தூண்டுசின வாளிருதர் தோன்றியுள ரென்றுன்
மாண்டுக மலைந்தெமர் மனத்துயர் துடைப்பாய.

இ-ள். ஐய - ஐயனே! இனி ஈண்டு உறைதி - இனி (நீ) இங்கெழுந்தருளிருப்பாயாக, இ வயின் இருந்தால்-இவ்விடத்திலிருப்பாயானால், வேண்டியன மாதவம் - (நாங்கள்) வேண்டிச்செய்வனவான பெருந்தவத்தையும், விரும்பின - (நீ) விரும்பினவற்றையும், முடிப்பாய் - நிறைவேற்றுவாய், தூண்டு சினம் - வளர்கின

றவேபத்தினையுடைய, வாள் நிருதர் - கொடிய அரக்கர், தோன்றி உளர் என்றால் வருவார்களாயின், (அவர்கள்), மாண்டு உக - இறந்து அழியும்படி, மலைந்து - போர்செய்து, எமர் - எங்களது, மனத்துயர் - மனத்திலுள்ள கிலேசத்தை, துடைப்பாய்-போக்குவாய்.

குறிப்பு—இனி, வேண்டியன விரும்பியன மாதவம் முடிப்பாய் எனக்கொண்டு, (எமக்கு) இன்றியமையாதனவும், (யாங்கள்) விரும்பிச் செய்வனவுமாகிய மாதவத்தை நிறைவேற்றுவாய் எனலுமாம், எமர் - மற்றை முனிவரையுங் கூட்டிக் கூறிய உளப்பாட்டுப் பன்மை. (௫௨)

வாழ்மறை வாழ்மனு நீதியறம் வாழ்ந்
தாழ்மிமை யோருயர்வர் தானவர்க டாழ்வர்
ராழியுழ வண்புதல்வ வையமிலை மெய்யே
யேழுலகும் வாழ்மினி யிங்குறைதி யென்றான்.

ஆழி உழவன் புதல்வ - ஆஞ்ஞாசக்கரத்தையுடைய சக்கரவர்த்தி திருமகனே! இனி மறைவாழும்-இனிவேதங்கள் வாழ்வடையும், மனுநீதிவாழும் - மநுநீதி வாழ்வடையும், அறம்வாழும் - தருமங்கள் வாழ்வடையும், தாழும் இமையோர் உயர்வர் - (அரக்கரால்) தாழ்வடைகின்ற தேவர்கள் மேன்மையடைவார்கள் தானவர்கள் தாழ்வார் - (உயர்வடைகின்ற) அசுரர்கள் தாழ்வடைவார்கள், (அதனால்) ஏழ் உலகும் வாழும் - ஏழுலகங்களும் வாழ்வுபெறும், ஐயம் இலை - (சிறிதும்) சந்தேகமில்லை, மெய்யே - (இது) சத்தியமே, (ஆதலால்), இங்கு உறைதி என்றான் - இங்குத் தங்கியிருக்கக்கடவாய் என்றார்.

குறிப்பு—'தாழுமிமையோர்' என்றதற்கேற்ப உயர்வடைகின்ற தானவர் எனப்பட்டது - தானவர்க்கும் அரக்கர்க்கும் வேற்றுமையுளதாயினும் இமையோர்க்குப் பகைஞராகிய பொதுமைபற்றி அபேதமாகக் கூறினர். ஆழிபுழவன், ஆஞ்ஞாசக்கரமாகிய ஏரால் உலகமுழுதையும் உழுபவன் (௫௩)

செருக்கடையரக்கர்புரி தீமைசிதை வெய்தித
தருக்கழி தரக்கடிது கொல்வதுறு சமைந்தேன்
வருக்கமறை யோயவர் வருந்திசையின் முந்துற
றிருக்கைநல மிறக்கருளெ னென்றன னிராமன்.

இ-ள் (அப்பொழுது), இராமன் - ஸ்ரீராமபிரான், (முனிவரை நோக்கி), வருக்கம் மறையோய - கூட்டமாகிய வேதங்களில் வல்லவரே! செருக்கு அடை அரக்கர் - கருவத்தையடைந்தராக்ஷதர்கள், புரி - செய்கின்ற, தீமை சிதைவு எய்தி - தீங்குகளெல்லாம் நாசத்தையடைந்து, தருக்கு அழிதர - (அவர்கள்) களிப்புத்தொலைந்துபோக, கடிது கொல்வது சமைந்தேன் - (அவர்களை) விரைவிற்கொல்வதற்குச் சித்தமாக இருக்கின்றேன், (ஆகையால்) அவர் வரும் திசையின் - அவ்வரக்கர்கள் வருகின்ற (தெற்குத்) திக்கில், முந்து உற்று இருக்கை - முன்னமே போயிருத்தல், நலம் - நன்மை, (என்று எண்ணுகிறேன்), நிறக்கு அருள் என என்றனன் - உமக்கு விருப்பமென்னவென்று சொன்னான்.

குறிப்பு—இனி, 'செருக்கடை' என்றதை, செரு - கடை எனக் கண்ணழித்துக் கடையை ஏழனுருபாகக்கொண்டு, யுத்தகளத்திலென்றும், போர்த்தொழிலையுடைய (கடை-இழிவு) இழிவினையுடைய அரக்கரென்றும் பொருள் கோடலுமாம்.

மறைகள் அநேகமானதால் 'வருக்கமறை' என்றார். இராவணனுக்கு ராஜதானியாகிய இலங்கையும், கரன்முதலியோருள்ள ஜநஸ்தாநமும் தெற்கிலுள்ளவாதலால் அரக்கர் வருந்திசையைத் தென்றிசையென்று கூறினார் கிறகு—உருபு மயக்கமாய் நின்று அனுமதி என்னவென்றலுமாம். (ருச)

விழுமியது சொற்றனையிவ் வில்லிது வண் மேனாள்
முழுமுதல்வன் வைத்துளது மூவுலகும் யானும்
வழிபட விருப்பது தன்னைவடி வாளிக்
குழுவழுவில் புட்டிலொடு கோடியென நல்கி.

இ-ள் (அதனைக்கேட்ட அகத்தியமகாமுனிவர்), விழுமியது சொற்றனை - சிறந்தவார்த்தையைச் செப்பினாய், இவண் - இங்குள்ள, இ வில் இது - இந்தவில், மேல்நாள் - முற்காலத்தில், முழுமுதல்வன் வைத்து உளது - ஸ்ரீமகாவிஷ்ணு வைத்துக்கொண்டிருந்தது, மூவுலகும் - திரிலோகத்தாரும், யானும் - நானும், வழிபட இருப்பது - வணங்கிப் பூசைசெய்யும்படி இருப்பது, இது தன்னை - இவ்வில்லை, வடிவாளிகுழு - கூர்மையான அம்புகளின் கூட்டம், வழுவு இல் - குறைவுபடாத, புட்டிலொடு - தூணீரத்தோடு, கோடி என கொள்வாய் என்றுசொல்லி, நல்கி - (அவற்றைக்) கொடுத்து,

குறிப்பு—'விழுமியது' விழுமமென்னும் உரிச்சொல்லடியாகத் தோன்றிய பெயர் வாளிக்குழு வழுவில்புட்டில்: அம்பறாத்தூணி ஆதியில் விசுவகருமாவினால் நிருமிக்கப்பட்டு ஸ்ரீமகாவிஷ்ணுவிடத்தில் இருந்தவில் பரசுராமனுக்குக் கிடைத்தது அவ்வில்லைப் பரசுராமனிடத்திலிருந்து ஸ்ரீராமபிரான்வாங்கி வருணனிடங்கொடுக்க வருணன் அதனை அகத்தியரிடம் கொடுத்துவைத்திருந்தனன் அவ்வில்லை அகத்தியர் ஸ்ரீராமபிரானுக்கு ராக்ஷஸவதஞ் செய்யும்பொருட்டுக் கொடுத்தார் என்றறிக

இப்புவன முற்றுமொரு தட்டினிடை யிட்டா
லொப்புவர விற்றென வுரைப்பரிய வாளும்
வெப்புருவு பெற்றவரன் மேருவரை வில்லா
முப்புர மெரித்ததனி மொய்கணையு நல்கா.

இ-ள் இ புவனம் முற்றும் - இவ்வுலகமுழுவதையும், ஒரு தட்டினிடை இட்டால் - ஒரு தராசுத் தட்டிலேவைத்து நிறுத்தாலும், ஒப்பு வரவிற்று என 'சமானமாமென்று' உரைப்பரிய - சொல்லவொண்ணாத, வாளும் - வாளையும், வெப்பு உருவுபெற்ற அரன் - அனற்பிழம்பின் உருவத்தைப்பெற்ற சிவபெருமான், மேருவரை - மகாமேருமலையை, வில் ஆ - வில்லாகக் (கொண்டு), முப்புரம் எரித்த - திரிபுரங்களைத் தகனஞ்செய்த, தனி - ஒப்பில்லாத, மொய்கணையும் - வலிபொருந்திய அம்பையும், நல்கா - கொடுத்து

குறிப்பு—இட்டால் உம்மை விகாரத்தாற்றொக்கது வெம்மைக்குணம் அதனையுடைய அங்கியினுக்காகுபெயர். உருவுபெற்ற அரன் என்றமை அடியார்கள் விரும்பிய வுருவெடுத்துப் போதருதலேயன்றி யவனுக்கென்று ஓருருவுமில்லானென்னலை யுணர்த்தி நின்றது. (ருரு)

ஓங்குமரா ஞெங்கிமலை யோங்கிமண லோங்கிப்
பூங்குலை குலாவுகுளிர் சோலைபுடை விம்மித்
தூங்குதிரை யாறுதவழ் சூழலதொர் குன்றின்
பாங்கருள தாலுறையுள் பஞ்சவடி வஞ்ச.

இ-ள். மஞ்ச - இளையோய்! ஓங்குமரன் ஓங்கி - உயர்ந்த மரங்கள் வளரப் பெற்றும், மலை ஓங்கி - மலைகள் உயரப்பெற்றும், மணல் ஓங்கி - மணற்குன்றுகள் உயரப்பெற்றும், பூ குலை குலாவு-மலர்த்தொகுதிகள் விளங்காநின்ற, குளிர்சோலை-குளிர்ந்த சோலைகள், புடைவிம்மி - பக்கங்களில் விளங்கப்பெற்றும், தூங்குதிரை-அசைகின்ற அலைகளையுடைய, யாறுதவழ் - ஆறுகள் பாயப்பெற்றுமுள்ள, சூழல் து - சுற்றிடங்களையுடையதாகிய, ஓர் குன்றின் பாங்கர் - ஒருமலையினருகில், பஞ்சவடி - பஞ்சவடி என்கிற, உறையுள் உளது -வாசஸ்தானமொன்று இருக்கின்றது.

குறிப்பு —பஞ்சவடி ஐந்து ஆலமரங்களின் கூட்டம், அதனையுடைய இடத்திற்கு ஆகுபெயர், அது கோதாவிரிக் கரையில் நாஸிகாத்திரியம்பகத்துக்குச் சமீபத்திலுள்ளது, மஞ்ச மைந்த என்பதன்போலி (கள)

கன்னியிள வாழைகனி யீவகதிர் வாலின
செந்நெலுள தேனொழுகு போதுமுள தெய்வப
பொன்னியென லாயபுன லாறுமுள போதர்
வன்னமுள பொன்னிவளோ டன்பின் விளையாட.

இ-ள். (ஆங்கு), கனிஈவ -பழங்களைத் தருவனவாகிய, கன்னி இளவாழை-இளமையான வாழைகளும், கதிர்வாலின செந்நெல்- கதிர்களையும் வாலையுமுடைய செந்நெற்பயிர்களும், உள உள்ளன, தேன் ஒழுகுபோதும் உள - தேன் வழிகின்ற மலர்களுமுள்ளன, தெய்வம் -தெய்வத்தன்மை பொருந்திய, பொன்னி என்ல் ஆய - காவேரியென்று சொல்லத்தக்க, புனல் ஆறும் உள - நீரையுடைய நதிகளுமுள்ளன, பொன் இவளோடு - இச்சீதையுடன், அன்பின்விளையாட - அன்போடு விளையாடுதற்கு, போதர் -நாரைகளும், அன்னம் - ஹம்ஸங்களும், உள - உள்ளன.

குறிப்பு —கன்னியிள ஒருபொருட் பன்மொழி. பொன் இலக்குமிப் பிராட்டியாகிய இப்பெண் எனலுமாம். அன்பின் - வேற்றுமை மயக்கம் (கஅ)

ஏகியினி யவ்வயி னிருந்துறைமி னென்றுன
மேகநிற வண்ணனும வணங்கிவிடை கொண்டான
பாகனைய சொல்லியொடு தம்பிபரி விற்பின
போகமுனி சிந்தைதொட ரக்கடிது போனான.

இ-ள் இனி —, ஏகி - சென்று, அவ்வயின் இருந்து உறைமின் என்றுன - அவ்விடத்து தங்கி வசியுங்கள் என்று (அகத்தியர்) சொன்னார், மேகம் நிறம் வண்ணனும் -மேகத்தின் நிறம்போன்ற நிறத்தினையுடைய ஸ்ரீராமபிரானும், (அம்முனிவரை), வணங்கி - தொழுது, விடைகொண்டான் - உத்தரவுபெற்று, பாகு அனைய சொல்லியொடு - வெல்லப்பாகை யொத்த மொழியினையுடைய சீதாபிராட்டியும், தம்பி - இளையபெருமாளும், பரிவின்பின்போக - அன்போடு பின்னேசெல்லவும், முனிசிந்தை தொடர - அகத்திய மகாமுனிவரது மனது பின் தொடர்ந்து செல்லவும், கடிதுபோனான் - விரைவாக (அப்பால்) சென்றான்.

குறிப்பு.—சொல்லி, இகரவீற்றுப் பெண்பாற்பெயர். ஒடு எண்ணும்மைப்பொருள் பயந்து நின்றது. சிந்தைதொடர இராமபிரானைப் போகவிடுத்த முனிவர் அவன் க்ஷேமமாய்ப் போய்ச்சேர வேண்டுமென்று விரும்புவர் என்பது குறித்தது.

மூன்றாவது அகத்தியப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் ௩-க்கு விருத்தம் கஎ௫.

நான்காவது: சடாயுகாண் படலம்.

நடந்தனர் காவதம் பலவு நன்னதி
கிடந்தன நின்றன கிரிகள் கேண்மையிற்
றொடர்ந்தன துவன்றின சூழல் யாவையுங்
கடந்தனர் கண்டனர் கழுகின் வேந்தையே.

இ-ள். (இராமலக்ஷ்மணர்கள்) பலகாவதமும் - அநேக காதவழிகளையும், நடந்தனர் - நடந்து, நல் நதி - நல்ல நதிகளையும், கிடந்தன - ஒன்றையொன்று பற்றிக்) கிடந்தனவும், நின்றன - (தனித்தனி) நிலையாகநின்றவைகளும், (ஆகிய) கிரிகள் - மலைகளையும், கேண்மையின் - நட்புற்றாற்போல, தொடர்ந்தன - ஒன்றையொன்று தொடர்ந்தனவும், துவன்றின - நெருங்கியனவுமாகிய, சூழல் யாவையும் - (மற்றும் வசிப்பதற்கு யோக்கியமான) இடங்கள் யாவற்றையும், கடந்தனர் - தாண்டினவர்களாய், கழுகின்வேந்தை - கழுகுகளுக்கரசாகிய சடாயுவை, கண்டனர் - பார்த்தார்கள்.

குறிப்பு:—காவதம் - விகாரம். ஏழரைநாழிகைவழித்தூரம். பாவங்களை நீக்குதலால் 'நன்னதி' யென்றார். கிடந்தன்கிரிகள், நின்றனகிரிகள் எனக், இனிக் கிடந்தனநன்னதி என மாற்றி அவ்விடங்களிற் கிடந்தனவாகிய நன்னதிகளையும் என்று கூறினுமாம். கேண்மையிற்கிடந்தனர் என்றதனையித்து முறைமையால் தாண்டிச்சென்று என்றும் பொருள்கூறலாம். (க)

உருக்கிய சுவணமொத் துதயத் துச்சிசே
ரருக்கனிவ் வகலிடத் தலங்கு திக்கெலாந்
தெரிப்புறு செறிசுடர்ச் சிகையி னாற்சிறை
விரித்திருந் தனனென விளங்கு வானையே.

இ-ள். உருக்கிய சுவணம் - உருக்கிய பொன்னை, ஒத்து - போன்று, உதயத்து உச்சி - உதயகிரியினுச் சிகரத்தை, சேர் அருக்கன் - சேர்ந்த [உதித்த] சூரியன், இ அகல் இடத்து - இந்த அகன்ற பூமியில், அலங்கு திக்கு எலாம் - விளங்குகின்ற எல்லாத் திசைகளையும், தெரிப்புறு - தெரிவிக்கின்ற, செறிசுடர் - நெருங்கிய (தனது) கிரணங்களின், சிகையினால் - ஒளியினால், சிறை - சிறகுகளை, விரித்து இருந்தனன் என - விரித்துக்கொண்டிருந்தான்போல, விளங்குவானை - விளங்குபவரை.

குறிப்பு:—உதயம் - உதயகிரியினை ஆகுபெயரானுணர்த்திற்று. அருக்கன் - அர்க்கன். உதயகிரியின்கண் விளங்கும் சூரியன் எனவே, சடாயு என்பவரும் அங்கோர் மலையினுச்சியில் விளங்கினார் என்பது பெறப்பட்டது. இதனை மேல்வருங் கவிகளானுமுணர்க. சடாயுவுக்குப் பாலசூரியனும், சிறகிற்குக் கிரணங்களும், சடாயுவிருக்கும் மலைக்கு உதயகிரியு முவமை. சிகை - கிரணங்களின் கொழுந்து, எனவே பிரகாசமெனப் பட்டது. (உ)

முந்தொரு கருமலை முகட்டு முன்றிலின்
சந்திர னொளியொடு தழுவச் சாத்திய
அந்தமில் கனைகட லமரர் நாட்டிய
மந்தர கிரியென வயங்கு வான்றனை

இ - ள். முந்து - முற்காலத்தில், ஒரு கரு மலை - ஒரு பெரியமலையினது, முகட்டு முன்றிலின் - உச்சியிடத்திலே, அமரர் - தேவர்கள், அந்தம் இல் - அளவில்லாத, கனைகடல் - ஒலிக்கின்ற திருப்பாற்கடலில், சந்திரன் ஒளி ஒடு - சந்திரனது பிரகாசத்தோடு, தழுவ - பொருந்தும்படி, சாத்தியநாட்டிய - சேர்த்துநிறுத்திய, மந்தர கிரியென - மந்தரபர்வதத்தைப்போல, வயங்குவான் தனை - விளங்குகின்றவனை

குறிப்பு — கருமலை - மந்தரமலையைத் தாங்குதற்காகக் கருநிறம்பொருந்திய திருமால் வடிவெடுத்த ஆமைக்கும், சடாயுவினது தேககாந்தியோடுகூடிய மந்தரமலைக்கும் உவமை. அமரரு மசுரரு மமுதமெழப் பாற்கடலைக் கடைந்தகாலத்துச் சந்திரனை அடை தூணாகக்கொண்டதனால், 'சந்திரனொளியொடுதழுவச் சாத்திய -மந்தரம்' எனப்பட்டது, "மத்து மந்தரம் வாசுகி கடைகயி றடைதூண், மெத்து சந்திரன்." "மலைபிடித்தனர் வாசுகி பிணித்தனர் மதியம், நிலைபெறும்படி நட்டனர்" என்றவற்றானு மறிக. முன்றில் - இல்லுக்குமுன்னாகிய இடம், இலக்கணப்போலி இஃது இங்கே முன்னிடமென்னு மாத்திரையாயிற்று (௧)

மானிற விசும்பெழின் மறையத் தன்மணிக்
கானிறச் சேயொளி கதுவக் கண்ணகன்
னீனிற வரையினிற் பவள நீள்கொடி
போனிறம் பொலிந்தெனப் பொலிகின் றான்றனை.

இ - ள். மால் நிறம் - கருநிறத்தையுடைய, விசும்பு எழில் - ஆகாயத்தினது நிறம், மறைய - மறையும்படி, தன்மணிகால் - தனது அழகிய கால்களின், நிறம் சேய் ஒளி - நிறத்தினது சிவந்த ஒளியானது, கதுவ - (நாற்புறத்தும்) பொருந்த, கண் அகல் - இடமகன்ற, நீலம் நிறம் வரையினில் - நீல நிறத்தையுடைய அம்மலைமேலே, பவள நீள்கொடி - நீண்ட பவளக்கொடி, போல நிறம்பொலிந்தென - (தனது) அழகிய நிறத்தோடு விளங்கினாற்போல, பொலிகின்றான்தனை - விளங்குகின்றவனை

குறிப்பு — "நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன் - பூணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப - மாணிறத்தான் - முன்னைப்புட் டோன்று முளரித் தலைவைகு - மன்னப்புட் டோன்றிற்றே யாங்கு" என்றார் புகழேந்திப் புலவரும். விசும்பெழில் மறையும்படி கால் நிறத்தின் சேயொளிகதுவ எனக் கூட்டுக. செம்மை என்னும் பண்புப்பெயர் ஈறுகெட்டு ஆதி நீண்டு முன்னின்ற மெய்திரிந்து 'சேய்' என நின்றது. நீல் - கடைக்குறை. பவளம் - பரவாளம் என்னும் வடமொழி திரிந்ததென்பர். பொன் - போன் என எதுகைநோக்கி நீண்டது, "போனிறப் புத்திசேனன்" என்றார் சிந்தாமணியினும். இனி, இச்செய்யுளுக்கு விசும்பெழின் மறையும்படி அவ்விசும்பில் கால் நிறச்சேயொளி கதுவலால் நீல நிறத்தையுடைய மலையிற் பவளக்கொடி படர்ந்தாற்போல நிறம்பொலிந்த தென்னும்படி விளங்குகின்றவனையென்று கூறினுமாம். (௨)

தூய்மைய னிருங்கலை துணிந்த கேள்விய்ன்
வாய்மையன் மறுவிலன் மதியின் கூர்மைய
னாய்மையின் மந்திரத் தறிஞ னாமெனச்
சேய்மையி னோக்குறு சிறுக ணானறனை

இ - ள் தூய்மையன் - பரிசுத்தமுடையவரும், இருங்கலை துணிந்தகேள்வியன் - மிக்க கல்வியுந் தெளிந்தகேள்வியு முடையவரும், வாய்மையன் - சத்தியத்தையுடையவரும், மறு இலன் - குற்றங்களில்லாதவரும், மதியின் கூர்மையன் - புத்திநுட்பமுடையவரும், ஆய்மையின் - ஆராய்வதில், மந்திரத்து - மந்திராலோசனைக்குரிய, அறிஞன் - அறிவையுடையவரும், ஆம் என - ஆவாரென்று, (கண்டோர் யாவரும் மதிக்க) சேய்மையின் நோக்குறு - மிக்க தூரத்திலுள்ளவற்றையுங் காணகின்ற, சிறுகண்ணனதனை - சிறிய கண்களையுடையவருமானவரை.

குறிப்பு — தூய்மை - மனத்தூய்மை. கல்வியாவது தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல், அவை அறநூல் நீதிநூல் முதலியன. கேட்டலாவது - கேட்கத்தகுந்த நூல்களைக் கற்றறிந்தவர் சொல்லக்கேட்குதல், கற்றவிடத்தே அதனாலாயவறிவைத் திடப்படுத்தலானும், கல்லாவிடத்தும் அதனை யுண்டாக்குதலானும் 'இருங்கலை துணிந்தகேள்வியன்' எனக் கல்வியை முன்னேகூறினார். வாய்மையென்பது மெய்யின் தன்மை. மறு - காமம் முதலிய ஆறுகுற்றங்கள். மதியென்பது கல்விகேள்வியானாய அறிவோடு தன்னுண்மையறிவு. ' நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன் னுண்மை யறிவே மிகும்" என்று நாயனார் கூறியபடி யுண்மையறிவில்லாக்கால் கல்வி பின்னிரங்குதற்கே பயனாவதன்றி, முன்வந்து உதவாதாகலான். சேய்மையினோக்குதல் - வெகுதூரத்தில் நோக்குதல் அன்றி வெகுகாலங்கண்ட சிறியகண் எனினுமாம். 'ஆம்' என்பதனை அசையாகக்கொண்டுரைத்தலுங் கூடும். (௫)

வீட்டிவா ளவுணரை விருந்து கூற்றினை
யூட்டிவீழ் மிச்சிலு ளுண்டு நாடொறுந்
தீட்டிமே லிந்திரன் சிறுகண் யானையின்
றோட்டிபோற் றேய்ந்தொளிர் துண்டத் தானறனை.

இ - ள் நாள்தொறும் - தினந்தோறும், மேல் இந்திரன் - மேலுலகிலுள்ள இந்திரனது, சிறுகண் யானையின் - சிறிய கண்களையுடைய ஐராவத மென்னும் யானையினது, தோட்டிபோல் - அங்குசத்தைப்போல, வாள் அவுணரை - கொடிய அசுரர்களை, வீட்டி - (உடலும் உயிரும் வெவ்வேறாக) விடுவித்து [கொன்று], கூற்றினை - யமனை, விருந்து ஊட்டி - (அவருயிரை) விருந்திட்டு உண்பித்து, வீழ் மிச்சில் - கீழே விழுந்த மிகுதியான உடலை, தான் உண்டு - தான் புசித்து, தீட்டி தேய்ந்து ஒளிர் - தீட்டப்பட்டுத் தேய்ந்து விளங்குகின்ற, துண்டத்தானதனை - மூக்கையுடையவரை.

குறிப்பு — உயிரையும் உடலையும் வேறுபடுத்தி உயிரை யமனுக்களித்து மிகுந்த உடலைத் தான் புசித்தலின் 'மிச்சில்' என்றார். மிச்சில் - மிகுந்தது. தோட்டி: அங்குசம், "யானையின் குடாரி யங்குசந் தோட்டி - கோணமியானை வணங்கியுங் கூறும்" என்பது பிங்கலந்தை. துண்டம் - பறவைமூக்கு. மேல்-ஆகுபெயர். தீட்டித் தேய்ந்தொளிர் துண்டமெனக. (௬)

கோளிரு நான்கினோ டொன்று கூடின
வாளுறு கிரிபோ லாரத் தான்றனை
நீளுறு மேருவி னெற்றி முற்றிய
வாளிர வியிற்பொலி மௌலி யான்றனை

இ - ள். இருநான்கினோடு ஒன்று கூடின கோள் - நவக்கிரகங்களையும், ஆள் உறு கிரிபோல - ஆளுகின்ற துருவசக்கரம்போன்ற, ஆரத்தான்தன்னை - நவமணிகள் பதித்த மாலையையுடையவனை, நீள் உறு - நீட்சியுடைய, மேருவின் - மகாமேரு மலையினது, நெற்றி முற்றிய - உச்சியிற் பொருந்திய, வாள் இரவியின் - ஒளிபொருந்திய சூரியனைப்போல, பொலி - விளங்குகின்ற, மௌலியான்தன்னை - கிரீடத்தையுடையவனை

குறிப்பு—ஆளுறுங் கிரியென்றது துருவ சக்கரத்தை. துருவன் இடையே சுழன்றுகொண்டு வாயுவடிவான கயிற்றால் வலிக்கப்பட்ட நவக்கிரகங்களையும் சுற்றித் திருப்பும் சக்கரம். ஆரத்திற்குத் துருவ சக்கரமும், அவ்வாரத்திலுள்ள நவமணிகளுக்கு நவக்கிரகங்களுமுவமை. கழுகின் வேந்தனாதலால் ஆரமும் முடியுங் கூறினார். (எ)

சொற்பங்க முற்றிமி ரிசையின் சும்மையை
யற்பங்க முறவரு மருணன் செம்மலைச்
சிற்பங்கொள் பகலெனக் கழிந்து சென்றநீர்க்
கற்பங்க ளனைப்பல கண்டு ளான்றனை

இ - ள். சொல் பங்கம் உற - (புகழ்ந்துசொல்லும்) சொல் தோல்வியடையும்படி, திமிர் - (அச்சொல்லுக்கு மேம்பட்டு) வளர்கின்ற, இசையின் சும்மையை - கீர்த்தியின்சுமைபோல்பவனை [கீர்த்தி வடிவெடுத்தாற்போன்றவனை], அல்பங்கம் உற - இருள் அழியும்படி, வரும் அருணன் செம்மலை - உதிக்கின்ற அருணனது புத்திரனை, கற்பங்கள் எனைப்பல - அநேககற்பகாலங்களை, கழிந்துசென்றநீர் - விரைவிற் சென்று கழிகின்ற, சிற்பம் கொள் பகல் என - சிறுமையைக்கொண்ட நாள்களைப்போல, கண்டு உளான் தன்னை - கண்டிருப்பவனை,

குறிப்பு—சொல்லமுடியாத கீர்த்தியென்பார் 'சொற்பங்கமுறத் திமிரிசை' யென்றார். "இளைப்பலிவணேசுரைப்பின்" என்றார் சிந்தாமணியினும். அருணன் சூரியன் சாரதி. (அ)

ஓங்குயர் நெடுவரை யொன்றி னின்றது
தாங்கல திருநிலந் தாழ்ந்து தாழ்வுற
வீங்கிய வலியினி லிருந்த வீரனை
யாங்கவ ரணுகின ரயிர்க்குஞ் சிந்தையார்.

இ - ள். ஓங்கு உயர் நெடுவரை ஒன்றில் - உயர்ந்த மலையொன்றில், நின்று - தங்கி, அது தாங்கலது - அம்மலை (தம்மைத்) தாங்கமாட்டாமல், இருநிலம் தாழ்ந்து - பெரிய பூமிக்குள்ளே புதைந்து, தாழ்வு உற - தாழ்ந்திருக்கும்படி, வீங்கிய, வலிமையின் - அதிகரித்த பலத்தோடு, இருந்த - அதிலிருந்த, வீரனை - வீரத்தன்

மையுடையவரை, ஆங்கு - அவ்விடத்தில், அவர் - அவ்விராமலக்ஷ்மணர்கள், அயி ர்க்கும் சிந்தையார் - சந்தேகிக்கும் மனமுடையவர்களாகி, அனுங்கினார் - சோர்ந்தார் கள்.

குறிப்பு —ஒங்குயா ரெடு - ஒருபொருட் பன்மொழி. ஆங்கு - "ஒரு" என நதனுற சுடடு நீணடது அயிர்க்கும் சிந்தையார் - முற்றெச்சம் அனுங்கினுரெ னபதை முற்றெச்சமாக்கி யுரைப்பினும் கூடும் (௬)

இறுதியைத் தனவயி னியறற வெய்தினு
னறிவிலி யரக்கனு மலல னுமெனி
னெறுழ்வலிக் கலுழனே யெனன வுனனியச
செறிகழல் வீரருஞ் செயிர்த்து நோக்கினார்

இ - ள் செறிகழல் வீரரும் - நெருங்கிய வீரக்கழலையணிந்த அவ்விராமலக்ஷ் மணர்களும், (சடாயுவைநோக்கி) இறுதியை - முடிவை, தனவயின் இயற்ற - தன னிடத்திலேயே செய்துகொள்ள, எய்தினன் - வந்தவனுகிய இவன், அறிவு இலி - அறிவில்லாதவனுகிய, அரக்கன் ஆம - (படசியுருக்கொண்டுவந்த) இராக்கதனுவா ன, அல்லன் ஆம் எனின - அவ்வாறல்லாமற்போனுல், எறுழ்வலிக் கலுழனே (ஆம) மிக்க வலியினையுடைய கருடனேயாவான, என்ன உன்னி — என்று எண்ணி, செயி ரத்துநோக்கினார் - கோபித்துப்பார்த்தார்கள்.

குறிப்பு —அரக்கனுயின் தனக்குத்தானே முடிவைத்தேடிக்கொண்டா னென பார் 'இறுதியைத் தனவயினியற்ற வெய்தினன்' என்றார் தனக்குத்தாமே தீங்கு தேடிக்கொள்ளவிருத்தலின் 'அறிவிலி' என்றார் எறுழ் - உரிச்சொல் ' எறுழ்வலி யாகும்" எனபது சூத்திரம். எறுழ்வலி ஒருபொருட்பன்மொழி கருடன் எனனும் வடமொழி கலுழன் எனச் சிதைந்து நின்றது. (௧௦)

வனைகழல் வரிசிலை மதுகை மைந்தரை
யனையவன் றுனுங்கண் டயிர்த்து நோக்கினன
வினையறு நோன்பின ரல்லர் விலலினா
புனைசடை முடியினா புலவ ரோவெனு.

இ - ள். வனைகழல் - தரித்த வீரக்கழலையும், வரிசிலை - கட்டமைந்தவில்லை யும், மதுகை - வலிமையையுமுடைய, மைந்தரை - இராமலக்ஷ்மணர்களை அனையவன் கண்டு - அச்சடாயுபார்த்து, புனைசடை முடியினர் - தரித்த ஜடையாகிய முடி யினையுடைய இவர்கள், வினை அறு நோன்பினர் - இருவினையும் அறுதற்குக் கார ணமான தவத்தினையுடைய முனிவர்களென்றாலோ, விலலினா - விலலையுடைய வர்களாதலால், அல்லர்—, புலவரோ என்று - தேவர்களோ? என்று, அயிர்த்து - சந் தேகித்து, நோக்கினன் - பார்த்தார்

குறிப்பு —புலவர் - அறிவினையுடையவர், புலம் - அறிவு "புலமையாவது பல வேறுவகைப்பட்ட நூலுணர்ச்சியினை யெல்லாம் ஒருங்கேகொண்ட பேரறிவுடைமை யாம்" என்பர் சாவணப்பெருமானையர். விபுதரெனனும் வடமொழியின் மொழி பெயர்ப்பு. (௧௧)

புரந்தரன் முதலிய புலவர் யாரையு
நிரந்தர நோக்குவெ னேமி யானுமவ

வரந்தரு மிறைவனு மழுவ லாளனுங்
கரந்தில ரென்னையா னென்றுங் காண்பெனால்

இ-ள். புரந்தரன் முதலிய - இந்திரன் முதலான, புலவர் யாரையும் - தேவர்கள் எல்லோரையும், நிரந்தரம் - எப்போதும், நோக்குவென் - பார்ப்பேன், நேமியானும் - சக்கராயுதத்தையுடைய விஷ்ணுவும், அ வரம் தரு இறைவனும் - (வேண்டிய) வரங்களைத் தருகின்ற அப்பிரமதேவனும், மழுவலாளனும் - மழுவாயுதத்தையுடைய சிவபிரானும், என்னை-எனக்கு, கரந்திலர் - ஒளிக்கமாட்டார்கள், (என்னின் அவர்களை), என்றும் காண்பென் - எப்பொழுதும் பார்ப்பேன்

குறிப்பு — நிரந்தரம் - வடமொழி. என்னையே - வேற்றுமை யுருபு மயக்கம். பிரம விஷ்ணு ருத்திரரென்பதே முறையாயினும் ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழ வைத்தார். (௪௨)

காமனென் பவனையுங் கண்ணி னோக்கினேன்
றாமரைச் செங்கணித் தடக்கை வீரர்கள்
பூமரு பொலன்கழற் பொடியி னோடுமொப்
பாமென வறிகிலே னார்கொ லாமிவர்

இ-ள். காமன் என்பவனையும் - (அழகின்மேம்பட்ட) மன்மதனையும், கண்ணின் நோக்கினேன் - கண்களாற் பார்த்துள்ளேன், (அக்காமன்) தாமரை செங்கண் - தாமரைமலர்போலுஞ் சிவந்த கண்களையுடைய, இ தடக்கைவீரர்கள் - விசாலம்பொருந்திய கைகளையுடைய இவ்வீரர்களது, பூமருவு பொலம் கழல் - தாமரைமலர்போன்ற அழகியபாதங்களது, பொடியினோடும் - தூளியினோடும், ஒப்பு ஆம் என - ஒப்பாவானென்று, அறிகிலேன் - துணியவல்லேனல்லேன், (ஆதலின்), இவர் ஆர்கொலாம் - இவர்கள் யாவரேயோ?

குறிப்பு — நோக்கினேன் என்பதே அமைவதாக, கண்ணின் என்ன வேண்டாது கூறியது அநங்கனாகிய அவனைக்காணற் கருமைவிளக்குதற்கு என்க. அன்றி, சிவபிரான் நெற்றிக்கண்ணழற்கிலக்காகி அநங்கனாவதற்குமுன்னின்ற காமனை நோக்கினேன் என்பது கூறுவார் இங்ஙனம் கூறினாரெனினுமமைவதேயாம். இவை இரண்டுபாட்டினும் புலவரல்லரெனத் தெளிந்தமை கூறப்பட்டது (௪௩)

உலகொரு மூன்றுந்தம் முடைமை யாக்குறு
மலகறு மிலக்கண மமைந்த மெய்யினர்
மலர்மகட் குவமையா ளோடும் வந்தவிச்
சிலைவலி வீரரைத் தெரிகி லேனென்று.

இ-ள். உலகு ஒரு மூன்றும் - ஒரு மூன்றுலோகத்தையும், தம் - தமக்கு, உடைமை ஆக்குறும் - உரிமையாகச் செய்துகொள்ளும், அலகு அறும் இலக்கணம் - அளவில்லாத உத்தம இலக்கணங்கள், அமைந்த மெய்யினர் - பொருந்திய மேனியை யுடையவர்களாய், மலர்மகட்குவமையாளோடும் - தாமரைமலரில் தோன்றிய திருமகளுக்கும் உபமானமாகச் சொல்லத்தக்க ஒரு பெண்ணுடனே, வந்த (இங்கு) வந்த, சிலைவலிவீரரை - வில்லில் வல்லமையுடைய இந்த வீரர்களை, தெரிகிலேன் - (இன்னாரென்று) யான் தெரிகிலேன், என்று - என்று.

குறிப்பு—உலகொரு மூன்று - சுவர்க்கம், மத்தியம், பாதாளம். சக்கரவர்த்திக்குரிய இலக்கணங்கள் யாவுமமைந்திருத்தலின் உலகொரு மூன்றுந் தமமுடைமையாக்குறு மலக்குறியிலக்கணம் என்றார். அலக்கு - குற்றமற்ற வென்றலுமாம். இலக்கணம் - லக்ஷணமென்னும் பொருளில் வடமொழிச்சிதைவு. மலாமகட்கு என்புழி உவமை தொக்கது. எல்லாப் பெண்களுக்கும் முதன்மையாகச் சொல்லத்தக்க சிறப்பினையுடைய திருமகளுக்கும் உவமானமாகச் சொல்லத்தக்கவனெனவே, ஒப்புயர்விலாதவ னென்பதாயிற்று. (கச)

கருமலை செம்மலை யனைய காட்சியார்
திருமகிழ் மார்பினார் செங்கண் வீரர்தாம்
மருமைசெய் குணத்தினென் றுணைவ னாழியா
னொருவனை யிருவரு மொத்து ளாரரோ.

இ - ள். கருமலை செம்மலை அனைய - கரியமலையையும் சிவந்த மலையையும் ஒத்த, காட்சியார் - தோற்றத்தை யுடையவரும், திருமகிழ் மார்பினார் - இலக்குமி விரும்பித் தங்குகின்ற மார்பினையுடையவரும் ஆகிய, செம் கண் வீரர் இருவரும் - சிவந்த கண்களையுடைய இவ்விரண்டு வீரர்களும், அருமைசெய் - அருமையாகச் செய்கின்ற, குணத்தின் - நற்குணங்களையுடைய, என் துணைவன் - எனது நண்பனாகிய, ஆழியான் ஒருவனை - தசரத சக்கரவர்த்தியொருவனையே, ஒத்துளார் - ஒத்திருக்கின்றார்கள்.

குறிப்பு—ஸ்ரீராமபிரானுக்குக் கருமலையையும், இளையபெருமாளுக்குச் செம்மலையையும் நிறம்பற்றி உவமை கூறினார். திரு - ஜயலக்ஷ்மி. (கரு)

எனப்பல நினைப்பினன் மனத்து ளெண்ணுவான்
சினப்படை வீரர்மேற் செல்லு மன்பினன்
கனப்படை வரிசிலைக் காளை நீவிர்யார்
மனப்பட வெனக்குரை வழங்கு வீரென்றான்.

இ - ள். என - என்று, பல - பலவாகிய, நினைப்பின - எண்ணங்களை, மனத்துள் எண்ணுவான் - மனத்தில் நினைப்பவராய், சினம் படை வீரர்மேல் - கோபத்தை யுடைய ஆயுதங்களையுடைய இவ்வீரர்களிடத்தில், செல்லும் அன்பினன் - செல்லுகின்ற அன்பினையுடையவராய், (அவர்களை நோக்கி), கனம் - பெருமையுள்ள, வரிசிலை படை - கட்டமைந்த விற்படையையுடைய, காளை நீவிர் - காளைபோன்ற நீங்கள், யார் - யாவிர்? மனம் பட எனக்கு உரைவழங்குவீர் - மனத்திற்படும்படி எனக்கு உத்தரஞ்சொல்லுங்கள்; என்றனன் - என்று சடாயு வானவர் சொன்னார்.

குறிப்பு—காளை அண்மைவிளியுமாம். 'நீங்கள்', 'மீங்கள்' எனவும் பாடம். 'மனப்பட' என்றமையின் உண்மைகூறவேண்டு மென்பது கருத்து. (கசு)

வினவிய காலையின் மெய்ம்மை யல்லது
புனைமலாத் தாரவர் புகலகி லாமையாற்
கனைகட னெடுநிலங் காவ லாழியான்
வனைகழற் றயரதன் மைந்தர் யாமென்றார்.

இ - ள். வினவிய காலையில் - (என்று சடாயு) கேட்டகாலத்தில், புனைமலர் தாரவர் - அணிந்த மலர்மாலையையுடைய இராமலக்ஷ்மணர்கள், மெய்ம்மை அல்லது - உண்மை யல்லாமல், புகலிலாமையான் - (வேறொன்றைச்) சொல்லுதலில்லாமையான், யாம்-நாங்கள், கனைகடல் நெடுநிலம் காவல்-ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட பெரிய உலக முழுவதையுங் காத்தலையுடைய, ஆழியான் - ஆஞ்ஞாசக்கரத்தை யுடையவராகிய, வனைகழல் தயரதன் - தரித்த வீரக்கழலையுடைய தசரத சக்கரவர்த்தியினது, மைந்தர் என்றார் - புத்திரர்க ளென்றார்கள்.

குறிப்பு —சடாயுவை இன்னாரென்று அறிந்திலராயினும் உண்மையே கூறியது. 'மெய்ம்மை யல்லது புகலிலாமை யா'லென்பது விளக்குமாறறிக. தாரவர் பெயரடியாகப் பிறந்த குறிப்புப் பெயர். (௧௭)

உரைத்தலும் பொங்கிய வுவகை வேலையன்
றரைத்தலை யிழிந்தவர்த் தழுவுங் காதலன்
விரைத்தடந் தாரினீர் வேந்தர் வேந்தன்றன்
வரைத்தடந் தோளிணை வலிய வோவென்றான்.

இ - ள். உரைத்தலும் - (இவ்வாறு அவர்கள்) சொல்லலும், பொங்கிய - (மேலெழுந்த) பொங்கிய, உவகைவேலையன் - சந்தோஷ சமுத்திரத்தையுடையவராய், தரைத்தலை - பூமியில், இழிந்து-(மலையினுச்சியினின்றும்) இறங்கிவந்து, அவர் தழுவும் காதலன் - அவர்களைத் தழுவுகின்ற ஆசையை யுடையவராய், (அவர்களை நோக்கி), விரைத்தடந்தாரினீர் - வாசனையையுடைய பெரிய மாலையையுடையவர்களே! வேந்தர் வேந்தன் தன் - அரசர்க்கரசனாகிய தசரத சக்கரவர்த்தியினது, வரைத்தடந்தோள் இணை-மலைபோன்ற விசாலமான இரண்டு புயங்களும், வலியவோ - வலியுள்ளனவாயிருக்கின்றனவோ [க்ஷேமமா]? என்றான் - என்று சொன்னார்.

குறிப்பு —'வேலையன்,' 'காதலன்' என்பன முற்றெச்சங்கள். தரைத்தலை, தலை. ஏழனுருபு. சக்கரவர்த்தியின் க்ஷேமம் வினவுவார் ஒன்றானோர் ஒறுத்து உலகைப் பொறுத்துக் காப்பது தோளாகலின் வரைத்தடந் தோளிணை வலியவோ? என்றார் (௧௮)

மறக்கமுற் றுதன் வாய்மை காத்தவன்
றுறக்கமுற் றனனென முன்னஞ் சொல்லலு
மிறக்கமுற் றனனென வேக்க மெய்தினன்
றுறக்கமுற் றனனென வுணர்வு நீங்கினன்

இ - ள். (அதற்கு இராமலக்ஷ்மணர்கள்) அவன் - அச்சக்கரவர்த்தி, மறக்கமுற்றுதன் - மறக்க முடியாதவையாகிய, வாய்மை காத்து - சத்தியத்தைப் பாதுகாத்து, துறக்கம் உற்றனன் என - சுவர்க்கத்தை யடைந்தார் என்று, முன்னம் சொல்லலும் - (சடாயு என்பவருக்கு) எதிரில் சொன்னவுடன், (கேட்ட அவர்) இறக்கம் உற்றனன் என - (தனது உயிர் நண்பன்) மரணமடைந்தானென்னலுங் காரணத்தால், ஏக்கம் எய்தினன் - துன்பமடைந்தவராய், உறக்கம் உற்றனன் என - தூக்கமடைந்தவன்போல, உணர்வு நீங்கினன் - அறிவு நீங்கப்பெற்றார் [மூர்ச்சித்து விழுந்தார்].

குறிப்பு.—சத்திய வந்தர்களும் மறவியால் உண்மையிற் பிறழ்தல் உண்டாயினும், இவர்க்கு அம்மறவியுமில்லையென்பார் 'மறக்க முற்றுதன் வா[illegible]'

என்றார். முற்றுத்தன வென்ப பன்மையாற் கூறினார் வாக்க விரண்டாதனோக்கி. இனி, இறக்கம் உற்றானென்ன உறக்கமுற்றானென்ன ஏக்க மெய்தினான் உணர்வு நீங்கினான் என்று அந்வயித்து, இறந்தநிலையடைந்தான் போலவும், தூக்கமடைந்தான்போலவும், ஏக்கமெய்தி உணர்வு நீங்கினான் என்று பொருள்கொள்ளினுமாம். (கக)

தழுவின ரெடுத்தனர் தடக்கை யான்முகங்
கழுவின ரிருவருங் கண்ணி னீரினால்
வழுவின வின்னுயிர் வந்த மன்னனு
மழிவுறு நெஞ்சின னரற்றி னானரோ.

இ - ள் இருவரும் - ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் இருவரும், தடக் கையால் - தங்களுடைய பெரியகைகளால், தழுவினர் எடுத்தனர் - மூர்ச்சித்துக் கீழேவிழுந்த சடாயுவை அணைத்தெடுத்து, கண்ணின் நீரினால் - தங்கள் கண்களினின்றும் பெருகுகின்ற ஜலத்தினாலே, முகம் கழுவினர் - அவர் முகத்தைக் கழுவினார்கள், (அப்போது) வழுவிய - நீங்கிய, இன் உயிர் - இனிய உயிர், வந்த மன்னனும் - வரப்பெற்ற ஜடாயு ராஜனும், அழிவுறு நெஞ்சினன் - அழிவையடைந்த மனமுடையவராய், அரற்றினன் - புலம்புவாராயினர்.

குறிப்பு —அடைந்த மூர்ச்சை தெளிதலின், வழுவிய வின்னுயிர்வந்த மன்னன், என்றார் மன்னனிறந்தமை பற்றியும் அவரிடத்துள்ள அன்புபற்றியும் தாங்களும் சோகத்தாற் கண்ணீர் பெருக்கினர். தழுவினர், எடுத்தனர் முற்றெச்சங்கள் (உ0)

வேறு

பரவலருங் கொடைக்கு நின்றன் பனிக்குடைக்கும் பொறைக்குநெடும் பண்
காவலருங் கற்பகமு முடுபதியுங் கடலிடமுங் களித்து வாழப் [புதோற்ற
புரவலர்தம் புரவலனே பொய்ப்பகையே மெய்க்கணியே புகழின் வாழ்வே
யிரவலரு நல்லறமும் யானுமினி யென்படநீ தேகி னாயே

இ - ள் புரவலர்தம் புரவலனே - அரசர்க்கரசனே! பொய்ப் பகையே - பொய்மைக்குப் பகைவனே! மெய்க்கு அணியே - சத்தியத்திற்கு ஆபரணமாயிருப்பவனே! புகழின் வாழ்வே - கீர்த்தி வாழ்தற்கிடமானவனே! நின்தன் - உன்னுடைய, பரவல் அரும் - துதிப்பதற்கு அரிய, கொடைக்கும் - தானத்திற்கும், பனி குடைக்கும் - குளிர்ச்சிபொருந்திய வெண்கொற்றக்குடைக்கும், பொறைக்கும் - பொறுமைக்கும், நெடும்பண்புதோற்ற - மிகுந்த குணம் தோல்வியுற்ற, காவல் அரும் - ஒளித்தல் இல்லாத, கற்பகமும் - கற்பகவிருக்ஷமும், உடுபதியும் - சந்திரனும், கடல் இடமும் - சமுத்திரஞ்சூழ்ந்த பூமியும், களித்துவாழ - சந்தோஷித்துவாழும்படி, இரவலரும் - யாசகர்களும், நல் அறமும் - நல்லதருமமும், யானும் நானும், இனி—, என்பட - என்னதுக்கத்தையனுபவிக்க, நீத்து - (எங்களை) விட்டு, ஏகினாயே - (நீ) போயினாயே?

குறிப்பு.—கொடைக்குத்தோற்ற கற்பகமும், குடைக்குத்தோற்ற சந்திரனும், பொறைக்குத்தோற்ற பூமியும் என நிரலேகூட்டுக. தோற்றல்—உவமைசொல்லப் பெறுமை. பிரதிப்பிரயோஜனத்தை யெதிர்பாராது ஈதலே கருதி வேண்டிய வேண்டியபடி நல்கும் தன்மையால் கொடைக்குக் கற்பகதருவும், விருத்தமாயும்,

சீதளமாயும், வெண்மையாயும் விளங்குந்தன்மையால் குடைக்கு உவமதியும், தொடுகருவிகொண் டகழ்ந்தும் எச்சில் நீர்பெய்தும் தீயனசெய்வாரையும் வீழாமற் சுமப்பதுபோலத் தம்மை யிகழ்வாரையும் பொறுத்தலால் க்ஷமைக்குப் பூமியும் உவமை. புண்ணியபலத்தால் தம்மையடைந்து ஏறவாகுமாத்திரஞ் சிறிது நல்க லானும், தமது காவலனாகிய இந்திரனையும் "தமதிருக்கை யிழந்து போந்து-நின்றளிக் குந் தனிக்குடைக்கீ ழிருந்தஞ்சிக் குறையிரந்து நிற்கப்" பார்த்திருந்தத னானும் தாமும் தசரதன் உடைமையாயபின் இந்திரற் களிக்கப்பட்டமையானும், பலவான் களான் நிலைபெயர்ந்து சிறைவைக்கப்பட்டமையானும் பஞ்சமென்னு மென்னும் பெயரை வறுமைப்பொருள்தரும் பெயராகக்கொண்ட தருக்கள், அடைந்தவர் யாவ ராயினும் விரும்பியவளவினும் மிகுதியாய் வெறுப்பவீசிந் தன்னையடைந்தாரைக் கைநெகிழவிடாது உலகமுழுவதுந் தன்னடிப்படுத்திவாழும் தசரதசக்கரவர்த்தியி னது கொடைக்கும், நந்துதலும், முயற்கறையும், பகலி லொளிவிளங்காமையும், அரவத்தாலுண்டுமிழ்தலும் பெற்று நிலைநில்லாது திரிகின்றமையால் சந்திரன் - தேய்தலும் வளர்தலுமின்றி என்றும் ஒருபடித்தாயக் களங்கமற்றுப் பகலினுமொளி கொன்று பிறரால் கொள்ளப்படாத்தாய நிலையாய் நின்றளிக்கு மவனது குடைக்கும், தீங்கிழைத்தாரையுந் தாங்கும் புவனம்-தன்னையும் தாங்கும் அவனது பொறுமைக் கும் தோற்றனவெனக் "ஈந்தே கடந்தா னிரப்போர் கடல்" "மண்ணிடை யுயிர் தொறும் வளர்ந்து தேய்வின்றித் - தண்ணிழல் பரப்பவு மிருளைத் தள்ளவும்-அண் ணறன் குடைமதி யமையு மாதலான்-விண்ணிடை மதியினை மிகையி தென்பவே" என்று பாலகாண்டத்துக் கூறியவாற்றானுமுணர்க. உடுபதி - நக்ஷத்திரங்களுக்குத் தலைவன். களித்து வாழ்தல் - இனித் நம்மை வெல்வாரின்மையின். வாழ் எகி னுய என் வினைமுடிபு காண்க. சக்கரவர்த்தியென்பார் - 'புரவலர் தம்புரவலனே' யென்றார். பொய் சொல்லற்காற்றாது உயிரைவிட்டு மெய்யை நாட்டலின் 'பொ யப்பகையே மெய்க்கணியே' என்றார். 'நெறிதிறம்பாத் தன்மெய்யை நிறுப்பதாகக்- இறந்தான்' என்றார் அயோத்தியாகாண்டத்தும். கொடை, குடை பொறை என முன்னாகக் கூறியதனுக்கேற்ப இரவலரும், நல்லறமும், யானும் என்றார். கொடையி னால் வாழ்ந்த இரவலரும், குடையினால் நிலைத்த நல்லறமும், பொறையினால் நட் புக்கொண்ட யானும், என்பட நீத்தேகினையே என்றதனால், இரவலரையும் நல்ல றத்தையும் என்னையும் பரிபாலிப்பார் யாவரென்றபடி. ஏகினைய - மங்கலவழக்கு, செத்தாரைத் துஞ்சினாரென்பதுபோல. ஏகாரம் - இரக்கம். (௨௧)

அலங்கார மெனவுலகுக் கமுதளிக்குந் தனிக்குடையா யாழி சூழ்ந்த நிலங்காவ லதுகிடக்க நிலையாத நிலையுடையே னேய நெஞ்சி னலங்காண நடந்தனையோ நாயகனே தீவினையே னன்பி னின்றும் விலங்காதே னுதவினால் விலங்கினே னின்னுமுயிர் விட்டி லேனால்

இ - ள். அலங்காரம் என - அலங்காரம் என்று சொல்லும்படி (இருந்து) உலகிற்கு - உலகங்களுக்கு, அமுது அளிக்கும் - அமிர்தத்தைக் கொடுக்கின்ற, தனி குடையாய் - ஒப்பற்ற வெண்கொற்றக் குடையையுடையவனே! ஆழி சூழ்ந்த - சமுத்திரஞ் சூழ்ந்த, நிலம் காவல் அது - பூமியைக் காத்தலாகிய அது, கிட க்க - நிற்க, நாயகனே! - உலகத்திற்குத் தலைவனே! நிலையாத - நிலைத்தலில் லாத, நிலையுடையேன் - தன்மையையுடைய எனது, நேயநெஞ்சின் - அன்பினை யுடைய மனத்தின், நலம் காண - (நட்பின்) நலத்தைக் காணும்பொருட்டு, நடந் தனையோ - (இவ்வுலகம்) விட்டுப்) போயினையோ? தீவினையேன் - பாவத்தொழில்

களையுடைய நான், விலங்கானேன் - விலங்காயிருக்கின்றேன், ஆதலினால் - ஆகை யால், நண்பினின்றும் - சிநேக தருமத்தினின்றும், விலங்கினேன் - தவறினவனாகி, இன்னும் - இன்னமும், [உன் மரணத்தைக் கேட்டறிந்தபின்னும்], உயிர்விட்டி லேன் - உயிரை நீத்தேனில்லை.

குறிப்பு—அலங்காரம் - என்பது உலகிற்குக் இன்பஞ்செய்யுந்தோற்றக் கீழ்க் கவியில் சந்திரனை இவரது குடைக்கு ஒப்பிட்டமையால் அதற்கேற்ப, 'அமுத ளிக்கும் தனிக்குடை' என்றார் அமுதளித்தலாவது அருள்வைத்துக்காத்தல் இனி, அமுதளிக்கும் என்பதற்கு அமுதம் போலும் என்றலுமாம். தனிக்குடை - ஏகசத்தி ரமுமாம். என் மனநிலையைச் சோதிக்கும்பொருட்டு உலகளித்தலையும் விட்டேகி னுயென்பார் 'நிலங்காவல் லதுவிட்டக நிலையாத நிலையுடையே னைய நெஞ்சி - னலங்காண நடந்தனையோ' என்றார் நெஞ்சின் நேயநலம் என்மாற்றிப் பொ ருள் கோடலுமமையும். விட்டகவென்னு மெச்சம நடந்தனையோ என்பதனைக் கொண்டுமுடியும் நிலையாத நிலை - ஸ்திரமில்லாத மன நிலையும், இருந்த விட த்தி லிராது எப்போதும் சஞ்சரித்துக்கொண்டேயிருக்கின்ற சரீர நிலையுமாம். நடந்தனை - மங்கல வழக்கு தீவினை - இன்னுயிர்த்தோழனை இழக்கவுற்ற பாபம். விலங்கு - குறுக்காக நடப்பதென்னும் பொருளினதாகிய 'திர்யக்' என்னும் வட சொல்லின் மொழிபெயர்ப்பு விலங்கு - குறுக்கு "விலங்கக னெடுமொழி" என்றார் புறநானூற்றிலும், விலங்கல்லேனுயி னிதற்குள் உயிரை விட்டிருப்பேனென்பார் 'இன்னு முயிர்விட்டிலேனால்' என்றார் (உஉ)

தயிருடைக்கு மத்தென்ன வுலகைநலி சம்பரனைத் தடிந்த வந்நா
ளயிர்கிடக்குங் கடல்வலயத் தயலறிய நீயுடனு னாவி யென்று
செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய் செப்பினைய திறம்பா நின்சொ
லுயிர்கிடக்க வுடலைவிசும் பேற்றினு ருணர்விறந்த கூற்றி னுரே.

இ - ள் செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய் - குற்றந் தங்குதல் சிறி துமில்லாத சுத்தமான மனமுடையவனே! [களங்கமற்ற வுள்ளத்தாய்], தயிர் உ டைக்கும் மத்து என்ன - தயிர்க் கட்டியை யுடைத்துச் சிதற அடிக்கின்ற மத்துப் போல், உலகை நலிசம்பரனை - உலகங்களை வருத்திச் சிதற அடிக்கின்ற சம்பரா சுரனை, தடிந்த அந்நாள் - வென்ற அக்காலத்தில், அயிர்கிடக்கும் கடல்வலயத்து- நுண்மணல் கிடக்கின்ற சமுத்திரஞ்சூழ்ந்த பூமியில், அயல் அறிய - அயலவர் அ றியும்படி, நீ உடல் நான் ஆவி என்று - நீ உடல் நான் உயிரென்று, செப்பினை- சொன்னாய், நின்சொல் திறம்பா - (அப்படிச்சொல்லிய) நினது வார்த்தைகள் தவ றுவாம (அப்படியிருக்கவும்) உணர்வு இறந்த - பகுத்தறிவில்லாத, கூற்றினார் - யமனார், உயிர்கிடக்க - உயிர் (இப்பூமியில்) இருக்க, உடலை - சரீரத்தை, விசும்பு ஏற்றினாரே - சுவர்க்கத்திற் கொண்டுபோயினாரே

குறிப்பு—உலகத்துக்குத் தயிரும், சம்பரனுக்கு மத்தும் உவமை "பாயு மாரி போற் பகழி சிந்தினார்,ராயா மத்தெறி தயிரினாயினார்" எனச் சிந்தாமணியிலுங்காண்க "மத்துறு தண்டயி ரிற்புலன் நீக்கது வக்கலங்கி-வித்துறு வேனை விடுதிகண் டாய்." என்றார் ஆளுடைய வடிகளும் தடிதல் - அறுத்தல், "கடிதறடிதல் பரிதல் கண்டித் தல் - சேதித்தல் கொய்த லறுத்தலாகும்" என்பது நிகண்டு அயிர் - நுண்மணல் "அதரு மயிரு மெக்கரு நுண்மணல்." வலயம் - வட்டம்; 'கடல் வலயம்' என்றத னூற் பூமியாயிற்று, அயல் - ஆகுபெயர். 'நீயுடல் நானாவி' என்றது சடாயு: நீ என்

பது சக்கரவர்த்தியென்றும் நான் என்பது ஜடாயுவென்றுங் கொள்க. சம்பராசர யுத்தத்தில் துணையிருந்து செய்த வுதவியைக் கருதி 'உயிர்' என்றது. உடலை வைத்து உயிரைக் கொண்டுபோகும் வழக்கிற்கு மாறாக உடலை எடுத்து உயிரை வைத்துப் போனான் என்னும் புன்மைகருதி 'உணர்விறந்த கூற்றினார்' என்றார். கூற்றினார் என்பது இகழ்ச்சியின்ற பன்மைப் பொருளில் வந்தது. இனி, கூற்றாகிய இயமனார் எனப்பிரித் துரைத்தலுமாம். (உக)

எழுவதோ ரிசைபெறுக விப்பொழுதே யொப்பரிய வெரியுந் தீயின்
விழுவதே நிற்கமட மெல்லியலார் தம்மைப்போ னிலத்தின் மேல்வீழ்ந்
தழுவதே யானென்னா வறிவுற்றா னெனவெழுந்தாங் கவரை நோக்கி
முழுவதே ழுலகுடைய மைந்தன்மீர் கேண்மினென முறையிற் சொல்வான்.

இ - ள். யான் —, எழுவது - (பரவிக்) கிளம்புவதாகிய, ஓர் இசைபெறுக - ஒப்பற்ற கீர்த்தி அதிகரிக்கும்படி, இப்பொழுதே - இவ்வேளையிலே, ஒப்பு அரிய - ஒப்பில்லாத, எரியும் தீயில் - எரிகின்ற நெருப்பில், விழுவதே நிற்க - விழவேண்டியதேயன்றி, மடம் - அறியாமையையுடைய, மெல்லியலார் தம்மைப்போல - பெண்களைப்போல, நிலத்தில் வீழ்ந்து அழுவதே - பூமியில் விழுந்து அழலாமோ? என்னா - என்று நினைத்து, அறிவு உற்றான் என - அறிந்தவன்போல, எழுந்து - எழுந்திருந்து ஆங்கு - அப்பொழுது, அவரைநோக்கி - அவ்விராம லக்ஷ்மணர்களைநோக்கி, முழுவது ஏழ் உலகுடைய - ஏழுலகங்களை முழுவதையும் உரியபொருளாகவுடைய, மைந்தன்மீர் - குமாரர்களே! கேண்மின் - கேளுங்கள், என - என்று, முறையின் - முறைமையாக, சொல்வான் - சொல்லுவாராயினார்.

குறிப்பு — "பசைந்தாரிற் றீர்தலிற் றீப்புகு தன்னன்று" என்றதற்கிசைய நண்பன் இறந்ததற்கு நானும் அக்கினிப் பிரவேசஞ்செய்து பிராணனை விட்டுப் புகழை நிறுத்தாது இரங்கியழுவதோ என்பார் அவ்வாறு கூறினார். துன்பம் நேர்ந்தவிடத்து அவசமாய்ப் பூமியின் வீழ்ந்து புரண்டு புலம்பல் பூவையர் இயற்கை, "புனையிழை மகளிர்போலப் புலம்பல்" என்றார் சிந்தாமணியிலும். மைந்தன்மார் என்பது மைந்தன்மீர் என விளியேற்றது. மார் - பலர்பாற் படர்க்கைப்பெயர் விகுதி. சக்கரவர்த்தி திருமகார்களாதலால் 'முழுவதேழுலகுடைய மைந்தன்மீர்' என்றார். 'உலகுடையான் மைந்தன்மீர்' என்றும் பாடம். (உஉ)

தக்கன்னனி வயிற்றுதித்தா ரைம்பதின்மர் தடங்கொங்கைத் தையலாருட்
டொக்கபதின் மூவரையக் காசிபனும் புணர்ந்தனனத் தோகை மாருண்
மிக்கவதி திப்பெயராண் முப்பத்து முக்கோடி விண்ணோ ரீந்தாண்
மைக்கருங்கட் டிதியென்பா ளதினிரட்டி யசுரர்தமை வயிறு வாய்த்தாள்.

இ - ள். தக்கன் வயிற்று - தக்ஷப்பிரஜாபதியினது வயிற்றில், நனி உதித்தார் - மிகுதியாகத் தோன்றியவர்களாகிய, ஐம்பதின்மர் - ஐம்பது பேராகிய, தடம் கொங்கை தையலாருள் - பெரியதனங்களையுடைய மகளிர்களுள், தொக்க - ஒருவகுப்பாகச் சேர்ந்த, பதின்மூவரை - பதின்மூன்று பெண்களை, அக் காசிபனும் - அந்தக் காசிபப் பிரஜாபதியும், புணர்ந்தனன் - மணந்து கூடினார், அத் தோகைமாருள் - அந்தப் பெண்களுள், மிக்க - (புத்தியிற்) சிறந்த, அதிதிப் பெயராள் - அதிதிப்பெயருடையவள். முப்பத்து முக்கோடி விண்ணோர் ஈந்தாள் - முப்பத்து மூன்றுகோடி

தேவர்களைப் பெற்றாள், மை கரு கண்-மையெழுதிய கரிய கண்களையுடைய, திதி எனபாள - திதி எனனும பேருடையவள, அதின இரட்டி அசுரா்தமை - அததொகையின இரட்டிபபாகிய [அறுபததாறுகோடி] அசுரா்களை, வயிறுவாயததாள - பெறறாள.

குறிபபு —தக்ஷன - தககன, இவன பிரமனறன புதலவன, தககன மனைவி மக்களைப பெறினும அவன வயிற்றிற பிறநததாகச சொனனது, உலக வழககு நோககியும, இரணடு மாதமவரை ஆடவா வயிற்றிற்றங்கிப பின காபபம ஸதிரீக ளிடததில தஙகுமெனற நூலவழககு நோககியு மெனக இவவிருவகையுமபறறியே "பததிரு மாதவ கருவயினூறிய பாழுடமபை' எனறு மறைஞைசயந்தாதியிலுங கூறினா நவப பிரமாகளில காசிபரு மொருவராதலால அககாசிபா எனறு சுட்டிக கூறினூா. தையல-அழகு, இஙகுப பெணகளுககு ஆகுபெயா அசுரா-எனபதறகு அமிாதம புசியாதவரெனறும சுரா்களுககுப பகைவரெனறும, பகைவ ருபிலாக கவருபவரெனறும பொருளகொளளததகும. வயிறு வாயததல - காபபமாதல ஈணடு மகப பேறறை யுணாததியது (௨௫)

தானவரே முதலோரைத தனுபபயநதாண மதியெனபாண மனிதா தமமூ
டானவரு ணஙகளவ யவததடைவே பயநதனளாற சுரபி யெனபா
டேனுவுடன கநதருவ மறறுளள பிறபயநதா டெரிககுங காலை [ள.
மானமுடைக குரோதவசை கழுதைமரை யொட்டைபிற வயிறு வாயததா

இ - ள தனு எனபாள-தனு எனபவள, தானவரே முதலோரை-தானவா முதலியவாகளை, பயநதாள - பெறறாள, மதி எனபாள - மதியெனபவள், மனிதா தமமூடு ஆன - மனிதாகளிடததுப பொருநதிய, வருணஙகள - ஜாதிகளை, அவயவதது - தன உறுப்பினினறும, அடைவே - முறையாக, பயநதனள - பெறறாள, சுரபி எனபாள - சுரபியெனறு சொலலபபட்டவள, தேனுவுடன - காமதேனுவோடு, கநதருவம - குதிரைகளையும, மறறுளள - வேறுமுளள, பிற - பிறவறறையும, பயநதாள - பெறறாள, தெரியும காலை -ஆராயுமிடதது, மானம உடை - பெருமையுடைய, குரோதவசை - குரோதவசையெனபவள, கழுதை மரை ஒட்டை -கழுதைகளையும கணடீரவஙகளையும ஒட்டகஙகளையும, பிற - மறறவைகளையும், வயிறுவாயததாள - பெறறாள.

குறிபபு —தானவா - தேவசாதியினோா வகுபபு வருணஙக ளவயவததடைவே பயநதனள எனறது - முகததிற பிராமணாகளையும, தோளில க்ஷததிரியாகளையும, தொடையில வைசியாகளையும, பாதததிற சூததிராகளையும பெறறாளெனறபடி. தேனு எனறது காமதேனு முதலிய பசுககளை கநதருவம -குதிரைமுகததோடு கூடியதோா கநதருவஜாதி. மானம - பெருமையும நாணமுமாம. இது மறறைப பெணகளுககு முபலக்ஷணம. குரோதவசை - கோபததுககு வசபபட்டவள. உஷ்டரம - ஒட்டையெனத திரிநதது, (௨௬)

மழைபுரையூங குழலவிநதை வானிடிமி னருணனுடன வயிந தேயன
றழைபுரையுஞ சிறைககூகை பாறுமுதற பெருமபறவை தமமை யீனறா
ளிழைபுரையுந தாமபிரையூாக குருவிசிவல காடைபல பிறவுமீனறாள[லாம.
கழையெனுமக் கொடியயந்தாள கொடியுடனே செடிமுதலாக கணடவெல்

இ - ள். மழைபுரை - மேகத்தையொத்த, பூ குழல் வினதை - அழகிய கூந்தலையுடைய வினதை யென்பவள், வான் - மேகத்திற் றோன்றுகின்ற, இடிமின் - இடியும் மின்னலும், அருணனுடன் வயினதேயன் - அருணனும் கருடனும், தழைபுரையும் சிறை - தழைகளையொத்த சிறகுகளையுடைய, கூகை பாறு முதல - கோட்டானும் பருந்தும் முதலாகிய, பெரு பறவை தம்மை - பெரிய பறவைகளை, ஈன்றாள் - பெற்றாள்; இழைபுரையும் - மகளிர்க்கு ஆபரணத்தை யொக்கின்ற [மகளிர்க்குச் சிறந்த], தாமிரை - தாமிரை யென்பவள், ஊர்க்குருவி - ஊர்க்குருவிகளையும், சிவல் - கௌதாரிகளையும், காடை - காடைகளையும், பலபிறவும் - மற்றும் பலவற்றையும் ஈன்றாள் - பெற்றாள், கழையெனும் அக்கொடி - கழையென்னும் பெயரையுடைய பூங்கொடி போன்றவள், கொடியுடனே செடிமுதலா - கொடியும் செடியும் முதலாக, கண்ட எல்லாம் - காணப்படுகின்றவற்றை யெல்லாம், பயந்தாள் - பெற்றாள்

குறிப்பு — வைநதேயன் - தத்திதாந்தம், விநதையின் குமாரன் என்பது பொருள். கூகை - கூகம் என்னும் வடமொழிச்சிதைவென்பர். கூவென்றொலிக்கின்றமையான் வந்தபெயராகலின் தமிழே யெனலுங்கூடும். தாமிரை - வடமொழிச்சிதைவு. கொடி - வஞ்சிக்கொடியும் மின்னற்கொடியுமாம். இங்குப் பெண்ணுக்கு உவமவாகுபெயர். விநதை - ஆகாரம் ஐகாரமாயிற்று. (௨௭)

வெருட்டியெழுங் கண்பணப்பை வியாளமெலாங் கத்துருவா மின்னு மீன
மருட்டிகழு மொருதலைய புயங்கமெலாஞ் சுதையெனு மாது தந்தா[றுண
ளருட்டையெனும் வலவிதந்தா ளோந்தியுடும் பணிலகண்முத லான வெல
தெருட்டிடுமோ திளையீந்தாள் செலசரமா கியபலவுந் தெரிக்குங் காலை. [லாந

இ - ள். கத்துருவாம் - கத்துரு என்பவளாகிய, மின்னும் - மின்னல்போன்றவளும், வெருட்டி எழும் - (பிறரை) அச்சமுறுத்தியெழுகின்ற, கண் பணம் பை - கூட்டமாகிய பணம் என்னும் பெயரையுடைய படங்களையுடைய, வியாளம் எலாம் - சர்ப்பங்களையெல்லாம், ஈன்றாள் - பெற்றாள், சுதை எனும் மாது - சுதையென்னும் பெயரையுடைய பெண், மருள் திகழும் - அச்சஞ்செய்து விளங்குகின்ற, ஒரு தலைய - ஒற்றைத் தலையையுடைய, புயங்கம் எலாம் - நாகங்களெல்லாவற்றையும், தந்தாள் - பெற்றாள், அருட்டையெனும் வலவி - அரிஷ்டையென்னும் பெயரையுடைய பெண், ஓந்தி உடும்பு அணில் முதலாய - ஓணான் உடும்பு அணில் முதலாகிய, எல்லாம் - எல்லாவற்றையும், தந்தாள் - பெற்றாள், இளை - இளையென்னும் பெயரையுடைய, தெருட்டிடுமோ மாது - (யாவரையுந்) தேற்றுகின்ற பெண், செலசரம் ஆகிய பலவும் - ஜலத்திற் சஞ்சரிப்பனவாகிய மீன் முதலிய பலவற்றையும், ஈந்தாள் - பெற்றாள், தெரிக்கும் காலை - ஆராய்ந்து சொல்லுமிடத்து

குறிப்பு — இருதலை, ஐந்தலை, எழுதலை, ஒன்பதுதலை, ஆயிரந்தலை முதலிய தெய்வத்தன்மை பொருந்திய சாப்பங்களென்பார் 'கணபணப்பை வியாளம்' என்றார். புயங்கம் புஜங்கம், வக்கிரமாகச் செல்வது, அன்றியும், மார்பினால் நகர்வது என்பது பொருள். (௨௮)

அதிதிதிதி தனுவருட்டை சுதைகழையே சுரபியணி வினதை யான்ற
மதியிளைக்கத் துருவுடனே குரோதவசை தாமிரையா மடநலார்கள்

விதிமுறையே யிவையனைத்தும பய[illegible]தசுத னருணனை மென
புதுமதிசோ நுதலரமபைய தனைபபுணர[illegible]வனிமீதே [றோட

இ-ள். அதிதி - அதிதியும, திதி - திதியும[illegible] அருட்டை
அருடடையும, சுசை - சுசையும, கழை - கழையும, சு[illegible]விநதை -
அழகிய விநதையும, ஆனறமதி - சிறநத மதியும, இளை - இ[illegible]
ருவும, ஆகிய இவாகளுடனே குரோதவசை-குரோதவசையும, [illegible]
ரையும, ஆம - ஆகிய, மடநலாாகள - இளமையும நலமுஞ சானற
முறையே-(முறகூறிய) விதிமுறையினபடி [கிரமபபடி], இவையனைத்து
கௌவலாவறறையும, பயநதனாகள - பெறறாாகள, (அவாகளுள) விநதை
விநதையின புதலவனுகிய, அருணன, மெல தோள - மெலலிய தோளகளை,
புதுமதிசோ - புதியபிறைச சநதிரனை யொககினற, நுதல - நெறறியையுமுடைய,
அரமபைதனை புணா-அரமபையைச சோதலான, புவனிமீது - இவவுலகததிலே,
யாம உதிததனம - யாஙகள பிறநதோம

குறிப்பு—கருடனையும, தநதையாகிய அருணனையும பெறற சிறபபு நோககி 'அணிவிநதை' எனறூா. நாறபாற குலதது மனிதாகளைப் பெறறமையின் 'ஆன றமதி' எனபபடடாள புதுமதி - அடடமிசசநதிரன மூனறும பிறையெனினு நுதலைப புருவமெனககொளக. 'யாம' சமபாதியையு முளபபடுததியது. (உக)

அருணனறன புதல்வனியா னவனபடரு முலகெலாம படாவே னூழி
யிருணமொயமபு கெடததுரநத தயாதறகின னுயிாததுணைவ னிமையோா
வருணங[illegible] வநதுதிததேன் கழுகினமனனன[ரோடுமே
றரு[illegible]பாதி பினனாவரு சடாயு வெனறான

இ[illegible]மையககொணட, பெரு ஒளியா - மிகக
ஒளியையு[illegible]அருணன தன புதலவன-அருணனுககுப் புதல
[illegible]லாம - அ[illegible]ருணன செலலுகினற வுலகஙகளி
லெலலாம, படாவேன - செலலுவேன, ஊழி - ஊழிககாலததால், இருள மொய
மபுகெட - (பகைவாகளாகிய) இருளின வலிமை கெடுமபடி, துரநத - (அபபகை
வரைத) தடிநத, தயாதறகு - தசரத சககரவாததிககு, இன உயிாததுணைவன-இ[illegible]
ய பிராணசிநேகிதன, இமையோரோடும - தேவாகளுடனே, வருணஙகள - ம
சசாதிகளையும, வகுததிடட காலததே - வகைபபடுததிய காலததிலே, வந
தேன - வநது தோனறியவன, கழுகின மனனன - கழுகுகளுககு அரசன[illegible]
பினனாவரு - சமபாதியெனபவரது பினனே தோனறிய, சடாயு - சடா[illegible]
ம பெயருடையேன், எனறான - எனறுசொனனான.

குறிப்பு—புதலவனியான - தனனொழி மெய்ம்முன யவவா[illegible]றி
யது. இ[illegible]கலியிருளுமாம தருணம, பேரொளி யிவறறையுஙக[illegible]ன வும
மைத[illegible]கி யுரைததலு மொனறு. சமபாதி -எனறுயப பறந[illegible]ழுபவன.

அ[illegible]றைசெய்ப வஞசலிதத மலர்க்கையா ரனபினனொடு [ரார
[illegible]நு துணபததான முறைமுறையி னிறைமலாககண மொயதத நீ
[illegible]ரும புகழ்நிறுவித தயபொருட்டான் மேலுலகம புகக தாதை
[illegible]னவந தானவனைக கணடனரே யொததனரவ விலஙகற றோளார்.

இ-ள். ஆண்டு - அப்பொழுது, அவன் ஈது உரைசெய்ய - அச்சடாயு இவ்வார்த்தையைச்சொல்ல, விலங்கல் தோளார் - மலையையொத்த தோள்களையுடைய அவ்விராம லக்ஷ்மணர்கள், அஞ்சலித்த - அஞ்சலிசெய்த, மலர் கையார் - தாமரைமலர்போலுங் கைகளையுடையவராய், அன்பினோடும் - பிரியத்துடனே, மூண்ட பெரும் துன்பத்தால் - மூளுகின்ற மிகுந்த துன்பத்தினால், முறை முறையின் - முறைமுறையாக [அடிக்கடி], மலர் கண் - தாமரை மலர்போன்ற கண்களில், மொய்த்து நின்ற நீரார் - நிறைந்த கண்ணீரையுடையவர்களாய், பூண்ட பெரும்புகழ் நிறுவி - மேற்கொண்ட மிக்க கீர்த்தியை (இவ்வுலகத்தில்) நிலைநிறுத்தி, தம்பொருட்டால் - தமக்காக, மேல் உலகம் - தேவலோகத்தை, புக்க தாதை - அடைந்த (தமது) தந்தையாகிய தசரதன், மீண்டனன் வந்தான் அவனை - திரும்பிவந்தவனை, கண்டனரே ஒத்தனர் - பார்த்தவர்களையே யொத்தார்கள், [தந்தையைக் கண்டவர்கள்போலானார்கள்]

குறிப்பு—ஈது இது, சுட்டு நீண்டது. அஞ்சலித்தல் கூப்புதல். தாதை - தாத என்னும் வடசொல்லின் விகாரம். (௬௧)

மருவினிய குணத்தவரை யிருசிறகா லுறத்தழுவி மக்கா ணீரே
யுரியகடன் வினையேற்கு முதவுவீ ருடலிரண்டுக் குயிரொன் றென்னப்
பிரியவுந்தான் பிரியாதே யினிதிருக்கு முடற்பொறையாம் பீழை பாரா
தெரியதனி னின்றேபுக் கிறவேனே லித்துயர மறவே னென்றான்

இ-ள். (பிறகு சடாயு) மருவு - பொருந்திய, இனிய குணத்தவரை - இனிமையான நற்குணங்களையுடைய ஸ்ரீராம லக்ஷ்மணர்களை, இருசிறகால் - இரண்டு சிறகுகளாலும், உற தழுவி - நன்றாய் அணைத்துக்கொண்டு, மக்காள் - பிள்ளைகளே! வினையேற்கும் - தீவினையையுடைய எனக்கும், உரியகடன் - (இறந்தபின்) செய்தற்குரிய கடமைகளை, நீரே உதவுவீர் - நீங்களே செய்யுங்கள், உடல் இரண்டுக்கு - இரண்டு உடம்புக்கும், உயிர் ஒன்று என்ன - ஓருயிரையுடையவனான தசரதன், பிரியவும் - பிரிந்துபோகவும், தான் பிரியாதே - தான் நீங்காமல், இனிது இருக்கும் - இனிமையாயிருக்கின்ற, உடல் பொறை ஆம் - தேகபாரமாகிய, பீழை பாராது - துன்பந் தருவதனைப் பாராமல், எரி அதனின் - அக்கினியில், இன்றே புக்கு இறவேனேல் - இன்றுதானே பிரவேசித்து இறவாமற்போவேனானால், இத்துயரம் மறவேன் - இத்துன்பத்தினை மறக்கமாட்டேன், என்றான் - என்று சொன்னான்.

குறிப்பு—உரியகடன் - சரமக்கிரியை. வினையேற்கும், உம்மை - இறந்தது தழுவியது. பீழை - 'பீடா' வென்னும் வடமொழிச்சிதைவு. (௬௨)

வேறு

என்றுரைத்த வெருவை யரசனைத்
துன்று தாரவர் நோக்கித் தொழுதுகண்
ணொன்று முத்த முறைமுறை யாயுக
நின்று மற்றினன் நீர்மை நிகழ்த்தினார்.

இ-ள். என்று உரைத்த - என்று சொன்ன, எருவை அரசனை - கழுகரசனாகிய சடாயுவை, நோக்கி - பார்த்து, துன்று தாரவர் - நெருங்கிய மலர் மாலைகளையுடைய ஸ்ரீராம லக்ஷ்மணர்கள், தொழுது - வணங்கி, கண் - கண்களில், ஒன்று

த்தம் முறை முறையாய் உக - பொருந்திய முத்துப்போன்ற நீர் மேன்மேலுஞ் சிந்தும்படி, நின்று - (சடாயுவின் எதிரில்) நின்றுகொண்டு, இன்ன - இத்தன்மையான வார்த்தைகளை, நீர்மை - முறைமையோடு, நிகழ்த்தினார் - சொன்னார்கள்.

குறிப்பு —முத்தம் - உவம வாகுபெயர் மற்று - அசை. (கக)

உய்வி டத்துத வற்குரி யானுந்தன்
மெய்வி டக்கரு தாதுவிண் ணேறினு
னிவ்வி டத்தினி லெம்பெரு மானெமைக்
கைவி டிற்பின்னை யார்களை கண்ணுளார்

இ - ள் உய்விடத்து - பிழைக்க வேண்டும்பொழுது [துன்பம் நேருங்காலத்தில்], உதவற்கு உரியானும் - உதவிசெய்தற்குரியவராகிய சக்கரவர்த்தியும், தன் மெய்விட கருதாது - தனக்குரிய சத்தியத்தைக் கைவிட எண்ணாமல், விண் ஏறினன் - சுவர்க்கம் சென்றார், எம்பெருமான் - எமது பெருமானே! இவ்விடத்து - இந்தவிடத்தில் [இந்தவேளையில்] எமை கைவிடில் - (நீயும்) எங்களைக் கைசோரவிட்டால், பின்னை களைகண் உளார் - பின்பு (எங்களுக்குப்) பற்றுக்கோடாகவுள்ளவர், யார் - (வேறு) யாவர்? [ஒருவருமில்லை]

குறிப்பு —உய்விடத்து, வகரமெய் - உடம்படு மெய்யல்லாத மெய், இதனை மெய்யீறுடம்படு மெய்யென்பர் நச்சினார்க்கினியர், உதவற்கு - குவ்வீற்றுவினையெச்சம். எம்பெருமான், அண்மைவிளி - விளியுருபு. (கச)

தாயி னீங்கருந் தந்தையிற் றண்ணகர்
வாயி னீங்கி வனம்புகுந் தெய்திய
நோயி னீங்கினெ நுன்னினெ னெங்களை
நீயு நீங்குதி யோநெறி நீங்கலாய்

இ - ள். நெறி நீங்கலாய் - நன்மார்க்கத்தினின்றும் நீங்காதவனே! நீங்க அரும் - பிரிதற்கு அருமையான, தாயின் தந்தையின் - தாயினின்றும் தந்தையினின்றும், தண் நகர் வாயின் - குளிர்ந்த பட்டணத்தினின்றும், நீங்கி - பிரிந்து, வனம்புகுந்து - காட்டைச்சேர்ந்து, எய்திய - அடைந்த, நோயின் - வருத்தத்தினின்றும், நுன்னின் - உன்னால், நீங்கினெம் - தீர்ந்தோம், எங்களை - (துன்பம் நீங்கப்பெற்ற) எங்களைவிட்டு, நீயும் நீங்குதியோ - (துன்பத்தை யாற்றிய) நீயும் பிரிவாயோ? என - என்ன

குறிப்பு —'நீங்கரும்' என்பதனை, தாய், தந்தை, நகரம் இம்மூன்றனோடுங் கூட்டுக, இது இடைநிலைத் தீவகம். நீ என்பது 'நுன்' என்றாயிற்று, "நுன்பழம் பகைதவ நூறு வாயென" [நாமகளிலம்பகம் 295], "நுன்சீரடி நோவ நடந்து செலேல" [கேமசரியாரிலம்பகம் 109] என்னுஞ் சிந்தாமணியிற்போல, இதனை ஆசிரியர் நச்சினார்க்கினியர் திசைச்சொல் என்பர். (கரு)

என்ற சொல்ல ரிரந்தழி நெஞ்சினர்
நின்ற வீரரை நோக்கி நினைந்தவ

னன்ற தெனனி னயோததிபி னையன்மீா
சென்ற பினனவற சேர்குவெள யானென்ருன்.

இ - ள் எனற சொலலா - எனறு சொல்லிய வாாதனதயை யுடையவராய், இரநது - (தனனே யிறவாதபடி) யாசிதது, அழிகெஞசினா - வருநதுகினற மனத தையுடையவாகளாய, நினற வீரரை - நினற ஸ்ரீராம லக்ஷ்மணாகளே, (அசசடாயு) நினைநது - (அவாகள இரககததைபபறறி) ஆலோசிதது, ஐயனமீா - பிளளைகளே! அனறு அது எனனின - இபபொழுது யான இறபபது (உஙகளுககு) உடனபாட னருகுமாயின, அயோததியின செனறபின - அயோததியாபுரிககு (நீஙகள) செனறபிறகு, யான அவன சோகுவென - யான அசசககரவாததியை யடைவேன [இறப்பேன], எனருன - எனறு சொனனுா

குறிபபு — அயோததி - அயோததியா எனனும வடசொல்லின திரிபு, ஒருவ ராலும யுததம செயதறகுக கூடாதது எனபது பொருள இதனுல அவவயோத தியா நகரைப பரிபாலிததுவநத சககரவாததிகளது பராககிரமம விளஙகுகினறது.

வேநதன விணணடைந தானெனின வீராநீ
ரேநது ஞால மினிதளி யாதிவட
போநத தெனனே புகுநதவென புநதிபோயக
காநது கினறது கடடுரை யீரெனருன.

இ - ள் வேநதன - சககரவாததி, விண அடைநதான எனின - சுவாககம புகுநதானுயின, வீராநீா - வீராகளாகிய நீஙகள, எநதுஞாலம - தாஙகததககுரிய பூமியை, இனிது அளியாது - இனிமையாகக காவலசெயயாமல, இவண - இவவிடத தில [வனததில], போநதது எனனே - வநதது எனன? புகுநத என - நடநத விஷயஙகள எனன? புநதிபோய - புததிசெனறு, காநதுகினறது - வருநதுகினறது, கடடுரையீா எனருன - உறுதியாகச சொலலுஙக ளெனருா.

குறிபபு — புநதி - 'புதநி' எனனும வடசொலலின விகாரம புகுநத—வினையாலணையும பெயா (கூஎ)

தேவா தானவா திணடிற ருகாவே
றேவ ராக விடாிழைத தாரெனிற
பூவ ராவு பொலஙகறை வேலினீா
சாவ ராககித தருவெ னரசெனருன.

இ - ள். பூ - இலைபோனற, அராவு - கூர்மைசெயயப்பபடட, பொலம் கறை வேலினீா - அழகிய இரததககறையுள்ள வேலாயுததததையுடையவாகளே! தேவா (ஆக) தேவாகளாயிருநதாலும, தானவா (ஆக) அசுராகளாயிருநதாலும, நாகா (ஆக) பாதாளலோகவாசிகளாயிருநதாலும, வேறு எவா ஆக - வேறு எவாகளாயிருநதாலும, இடா இழைததாா எனின - (உஙகளுககுத) துனபததைசசெயதிருபபாா ஆனுல, சாவா ஆககி - (அவாகளை) இறநதவாகளாககசசெய்து, அரசதருவென - இராசசியத்தை (உஙகளுககுக) கொடுபபேன, எனருன் - என்றுசொனனுா.

குறிப்பு —'திணிடிறல்' என்பதனை, தேவர்முதலியவர்க்கு விசேடணமாக்கி யுரைப்பினும் பொருந்தும். 'ஆக' என்பதனை, தேவர், தானவர், நாகர் என்னுமிடத்துக் கூட்டி யுரைக்கப்பட்டது (௫௮)

தாதை கூறலுந் தம்பியை நோக்கினான்
சீதை கேள்வ னவனுந்தன் சிற்றவை
மாத ரால்வந்த செய்கை வரம்பிலா
வோத வேலை யொழிவின் றுணர்த்தினான்.

இ - ள். தாதைகூறலும் - சடாயு (இவ்விதம்) சொல்லலும், சீதைகேள்வனும்-ஸீதாபதியாகிய ஸ்ரீராமபிரான், தம்பியைநோக்கினான் - இலக்ஷ்மணரை(ச் சொல்லு மபடி குறிப்பாய்ப்) பார்த்தருளினான், அவனும் - அவ்விலக்ஷ்மணனும், தன் சிற்றவைமாதரால் - தன் சிறியதாயாகிய கைகேயியால், வந்தசெய்கை - நேர்ந்தசங்கதிகளாகிய, வரம்பு இலா - முடிவில்லாத, ஓதவேலை ஒழிவின்று உணர்த்தினான் - பெரியகடலைச் சிறிதும் தவிர்தலில்லாமல் சொன்னான்.

குறிப்பு —தசரதனுக்கு இன்னுயிர்த் தோழரானமைபற்றிச் சடாயுவைத் தாதைமுறையாகக் கூறினார். (௫௯)

உந்தை யுண்மைய னாக்கியுன் சிற்றவை
தந்த சொல்லைத் தலைக்கொண்டு தாரணி
வந்த தம்பிக் குதவிய வள்ளலே
யெந்தை வல்லது யாவர்வல் லாரென்றான்.

இ - ள் (அதுகேட்ட ஜடாயு ஸ்ரீராமபிரானைநோக்கி), உந்தை - உன் தந்தையாகிய தசரதசக்ரவர்த்தியை, உண்மையன் ஆக்கி - சத்தியத்தையுடையவராகச் செய்து, உன் சிற்றவைதந்த சொல்லை - உன் சிறியதாய் சொன்னவார்த்தையை, தலைக்கொண்டு - சிரசில்வகித்து, தாரணி - பூமியை, வந்ததம்பிக்கு - உடன்பிறந்த தம்பிக்கு, உதவியவள்ளலே - கொடுத்த உதாரகுணமுடையவனே! எந்தை - என்னப்பனாகிய நீ, வல்லது - செய்யவல்லகாரியத்தை, வல்லார் - செய்யவல்லவர், யாவர் என்று - வேறுயாவர் என்று சொல்லி,

குறிப்பு —தாரணி - தரணியென்பதின் விகாரம். எந்தை - மரபுவழுவமைதி, முன்னிலைப்படர்க்கை. (௬0)

அல்லித் தாமரைக் கண்ணனை யன்புறப்
புல்லி மோந்து பொழிந்தகண் ணீரினன்
வல்லை மைந்தவம் மன்னையு மென்னையு
மெல்லை யில்புக ழெய்துவித் தாயென்றான்.

இ - ள். அல்லி தாமரை - இதழ்களையுடைய செந்தாமரைமலர்போன்ற, கண்ணனை - கண்களையுடைய ஸ்ரீராமபிரானை, அன்பு உற புல்லி - மிக்க அன்பினால் தழுவிக்கொண்டு, மோந்து - உச்சிமோந்து, பொழிந்தகண் ணீரினன் - சிந்திய கண்ணீரையுடையவராய், வல்லை - சாமர்த்தியமுடையாய்! மைந்த - மைந்தனே! (தீ)

அ மன்னையும் - அச்சக்கரவர்த்தியையும், என்னையும் - என்னையும், எல்லை இல்புகழ்- அளவில்லாதபுகழை, எய்துவித்தாய் - சேர்ப்பித்தாய், என்றான் - என்றுசொன்னான்

குறிப்பு:—வல்லை - விரைவிலே யென்றுரைப்பினுமாம் மன் - பெருமை, ஈங்கு ஆகுபெயராய் அதனையுடைய அரசனையுணர்த்திற்று பிதாவாகவியபரிபாலன முதலியவற்றால் இவன் தந்தை இவனைப்பெறுதற்கு என்னதவஞ்செய்தானோ என னுஞ் சொல்லை யெய்துவித்தலான், 'அம்மன்னனையு மென்னையு மெல்லையில் புக ழெய்துவித்தாய்' என்றார், "மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை, யென்னோற் றான் கொல்லெனுஞ் சொல்" என்றார் செந்நாப்போதாரும்.* (௪௧)

பின்ன ருமம்ப பெரியவன் பெய்வளை
யன்ன மன்ன வணங்கினை நோக்கினன்
மன்னர் மன்னவன் மைந்தவிவ் வாணுத
லின்ன ளென்ன வியம்புதி யாலென்றான்

இ - ள். அ பெரியவன் - அந்தப்பெரியவராகிய சடாயு, பின்னரும் - பின்னு ம், பெய்வளை - அணிந்த வளையல்களையுடைய, அன்னம் அன்ன - அன்னப்பேடை யையொத்த, அணங்கினை - சீதாபிராட்டியை, நோக்கினன் - பார்த்து, மன்னர் ம ன்னவன்மைந்த - சக்கரவர்த்தி திருமகனே! இ வாள் நுதல் - ஒளிபொருந்திய நெ ற்றியையுடைய இப்பெண், இன்னள் என்ன - இன்னவளென்று, இயம்புதி என்றான்- (எனக்கறியச்) சொல் என்றான்

குறிப்பு:—பெய்வளை - வினைத்தொகை நோக்கினன் - முற்றெச்சம். வாணு தல் - அன்மொழித்தொகை (௪௨)

அல்லி றுத்தன் தாடகை யாதியா
வில்லி றுத்த திடையென மேலநாட
புல்லி றுத்ததி யாவும புகன்றுதன
சொல்லி றுத்தனன் றோன்றலபின் றோன்றினன்

இ - ள். தோன்றலபின் தோன்றினன் - ஸ்ரீராமனுக்குப்பின்னே திருவவதரி த்த இளையபெருமாள், அல் இறுத்தது அன - இருள் ஒருவடிவமெடுத்தது தங்கினாற் போன்ற, தாடகை ஆதியா - தாடகையைக் (கொன்றது) ஆதியாக, வில் இறுத்த து இடை என - (மிதிலாபுரியிற் பிராட்டிகாரணமாக) ஹரதனுவைப் பங்கஞ்செய் தது இடையாக, புல் இறுத்ததுயாவும் - வனத்தையடைந்தது முதலியாவற்றை யும், புகன்று - சொல்லி, தன்சொல் இறுத்தனன் - தன்வார்த்தையை முடித்தார்.

குறிப்பு.—கொன்று என ஒருசொல்வருவிக்க தாடகை - மலைகளிற் றிரிபவள் இனி, 'புலவிறுத்தது' என்பதற்கு சக்கரவாத்திக்குச் சரமகைங்கரியஞ்செய்ததென் று உரைப்பினும் அமையும். (௪௩)

கேட்டு வந்தனன் கேழகிளா மௌலியான்
றேட்ட லங்கலி னீர்துறந் தீரவள
நாட்டி னீவிரு நன்னுத றானுமிக
காட்டில வைகுதிர் காக்குவென் யானென்றான்.

இ - ள். கேழ்கிளா மௌலியான் - ஒளிவிளங்குகின்ற கிரீடத்தையுடைய சடாயு, கேட்டு - (லக்ஷ்மணன்கூறியவற்றைக்) கேட்டு, உவந்தனன் - மகிழ்ந்தவராய், தோடு அலங்கலினீர் - பூவிதழையுடைய மாலையையுடையவர்களே! வளம் நாட்டின் - வளப்பத்தையுடைய நாட்டினின்றும், துறந்தீர் - விட்டுநீங்கிவந்தவர்களாகிய, நீவிரும் - நீங்களும், நல நுதல் தானும் - நல்ல நெற்றியையுடைய சீதையும், இ காட்டில் வைகுதிர் - இந்தக்காட்டிற்றானே இருங்கள், யான் காக்குவென் - நான் பாதுகாப்பேன், என்றான் - என்றுசொன்னார்.

குறிப்பு — உவந்தனன் - முற்றெச்சம். நன்னுதல்: பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. (சச)

இறைவ வெண்ணி யகத்திய னீந்துள
தறையு நன்மணி யாற்றி னகன்கரைத்
துறையு ளுண்டொரு சூழலச் சூழல்புக்
குறைது மென்றன னுள்ளத் துறைகுவான்.

இ - ள். உள்ளத்து உறைகுவான் - (எல்லாருடைய) இதய கமலத்திலும் தங்கியிருப்பவனாகிய ஸ்ரீராமபிரான், (சடாயுவை நோக்கி) இறைவ - இறைவனே! அகத்தியன் - அகத்தியமாமுனிவர், எண்ணி - (வாசத்திற்கு யோக்கியமானது என்று) ஆலோசித்து, ஈந்து உளது - (வசிக்கும்படி) சொல்லியருளியதாகிய, அறையும் நல மணி யாற்றின் - ஒலிக்கின்ற நல்ல இரத்தினங்களையுடைய கோதாவரி யாற்றினது, அகன் கரை துறையுள் - அகன்ற கரையிடத்துள்ளதும் துறையைத் தன்னகத்துக் கொண்டதுமாகிய, ஓர் சூழல் - ஓர் இடம், உண்டு - உளது, அ சூழல் - அவ்விடத்தில், புக்கு உறைதும் என்றனன் - போய் வசிக்கின்றோம் என்று சொன்னான்.

குறிப்பு — ஸ்ரீராமபிரான் சடாயுவை 'இறைவ' என்றது கழுகுகளுக்கு அரசா யிருத்தலையும், தனக்குப் பிதா முறையாதலையும் நோக்கியென்க. 'அறையு நன் மணியாறு' — சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற நல்ல முத்துப் போலத் தெளிந்த நீருள்ள ஆறு என்றலுமாம் (சரு)

பெரிது நன்றப் பெருந்துறை வைகிநீர்
புரிதிர் மாதவம் போதுமின் யானது
தெரிவு றுத்துவெ னென்றவர் திண்சிறை
விரியு நீழலிற் செலவிண் சென்றனன்

இ - ள். (பின்பு சடாயு) பெரிதும் நன்று - மிகவும் நல்லதாயிற்று, அ பெரும் துறை - அந்தப் பெருமைபொருந்திய இடத்தில், வைகிமாதவம்புரிதிர் - தங்கிச் சிறந்த/தவத்தைச்செய்யுங்கள், யான் - நான், அது தெரிவுறுத்துவென் - அவ்விடத்தை (உங்களுக்குக்) காண்பிப்பேன், போதுமின் என்று - வாருங்கள் என்றுசொல்லி, அவர் - அவ்விராமலக்ஷ்மணர்கள், திண் சிறை - (தனது) வலியசிறகுகளின், விரியும் நீழலில் - பரந்தநிழலில், செலல் - வரும்படி, விண் - ஆகாயமார்க்கத்தே, சென்றனன் - பறந்துபோனார்.

குறிப்பு — சடாயு ஸ்ரீராமலக்ஷ்மணர்களுக்கு நிழலைத்தந்து ஆகாயத்திற்செல்ல அந்நிழலில் இவர்கள் சென்றனர் என்பதாம். அப்பெருந்துறைபெரிது நன்று எனமாற்றிப் பொருள்கூறினுமாம். நிழல் - நீழல், நீட்டல் விகாரம். (சசு)

ஆய சூழ லறியவு ணாததியத்
தூய சிநதைய தோமில குணததிஞன
போய பினனைப பொருசிலை வீரரு
மேய சோலை யினிதுசென றெய்திஞா.

இ-ள் தூய சிநதைய - பரிசுததமான மனததையுடைய, அ தோம் இல் குண ததிஞன - குறற மறற குணஙகளையுடைய அசசடாயு, ஆய சூழல - எதிரபபட்ட தாகிய பஞசவடியை, அறிய - (அவாகள) அறியுமபடி, உணாததி போயபினனை - காட்டிபபோன பினபு, பொருசிலை வீரரும - போாசெயகினற விலலையுடைய அவ வீராகளுமம, எய - பொருநதிய, சோலை இனிது சென று எயதிஞா - அசசோலையில இனிமையாகப போயச சோநதாாகள.

குறிபபு — நடநது செல்லும வழிதொலையக குறுகியதாதலின 'ஆயசூழல' என ரூா இனி, இவா வநது வசிததறகும அதனுல சிறபபடைதறகுமே உறபததியா கிய சூழலெனறலுமாம, சிநதைய குறிபபுபெயரெசசம இனி, 'எயசோலை' அக ஸதிய மகா முனிவரால எவபபடட சோலை யெனறலுமாம. (௪௭)

வாாபபொற கொஙகை மருகியை மககளை
யேறபச சிநதனை யிட்டவ் வரககாதகு
சீாபபைச சிககறத தேறினன் சேககையிற
பாாபபைப பாாககும பறவையிற பாாககினருன.

இ-ள அ அரக்காதம - அவவிடததுளள இராகூதாகளுடைய, சீாபபை சிக கு அற - சிறபபை ஐயமிலலாமல, தேறினன - நனருய அறிநதசடாயு, வாா பொ ன கொஙகை - கசசணிநத அழகியதனஙகளையுடைய, மருகியை - (தன) மருமகளா கிய சீதையையும, மககளை - குமாராகளாகிய ஸ்ரீராமலக்ஷமணாகளையும, எறப சிநத னை இட்டு - தககபடி சிநதனைசெயது, சேககையில பாாபபை - கூட்டிலுளள (தமது) குஞசுகளை, பாாககும - (அடிககடி) வநது பாாககினற, பறவையின - பறவைபோ ல, பாாககினருன - பாதுகாததுககொணடு வருவாராயினா.

குறிபபு — பொறகொஙகை - தேமலபரநத கொஙகையுமாம, பொன - அது போனற தேமலுககு ஆகுபெயா. பாாபபு பறபபவறறிளமை, "பாாப்பும பிளளை யும பறபபவற றிளமை" எனபது தோல்காப்பியம் சேககை படுககபபடுவது, சே பகுதி, கு சாரியை, ககரததோறறும உகரககேடும சநதி, ஐ செயபபடு பொருள விகுதி. (௪௮)

நான்காவது: சடாயுகாண் படலம்.

முறறிறறு.

ஆகப்படலம் ௪-க்கு விருத்தம் ௨௨௯.

ஐந்தாவது சூர்ப்பநகைப் படலம்.

புவியினுக் கணியா யானற பொருடநது புலததிற ருகி
யவியகத துறைக டாஙகி யைநதிணை நெறிய ளாவிச
சவியுறத தெளிநது தணணென றொழுககமுந தழுவிச சானறோா
கவியெனக கிடநத கோதா வரியினை வீரா கணடாா.

இ—ள். வீரா - ஸ்ரீராம லக்ஷமணாகள, புவியினுககு அணியாய - பூமிககு அலஙகாரமாய, ஆனற பொருள தநது - மிகுநத வஸதுககளைககொடுதது, புலததிறறு ஆகி - பககததே விளை நிலஙகளையுடையதாகி, அவி அகம துறைகள தாஙகி - அவிநதபாவஙகளையுடைய நீாததுறைகளைககொணடு, ஐநதிணை நெறி அளாவி - ஐவகை நிலததின வழிககலநது, சவி உற தெளிநது - கணணொளி யூடு செலலு மாறு தெளிவினையடைநது, தணணெனறு - குளிாநது, ஒழுககமும தழுவி - ஒழு குதலையும பொருநதி, சானறோா கவி என - அறிஞாகளாற செயயபபடட கவி களைபபோல, கிடநத - இருநத, கோதாவரியினை - கோதாவரியெனனும நதியினை, கணடாா - பாாததாாகள

குறிபபு—"நீாினறமையாதுலகு" எனறபடி யுலகிலுள்ள சராசரபபொருளக ளெலலாம உயதறகுககாரணமாகியும, தூயமைசெயவதாகியு மிருததல பறறி 'புவி யினுககணியாய' எனறாா "ஆறிலலா வூருக கழகுபாழ" என எதிாமறைமுகததான ஔவையார் கூறியதுஙகாணக 'ஆனறபொருள' எனறது மணியும பொனனுமாரமு மகிலுமுதலிய பொருளகளை, தானே நினறு உணவாதலனறியும உணவாம பிற பொருளையுநதரவலல தெனபாா 'புலததிறறாகி' எனறாா இநநதிபுணணிய தீாதத மாகலின 'அவியகததுறைகடாஙகி' எனபபடடது "வீாராகன" - (போயின ஆசை யினன) எனறாறபோல, 'அவியகம' எனநினறது, ஈணடு அவிதல - கெடுதல, "ஒருமூனறவிததோன" எனபுழி அவிததோன கெடுததோன எனறாா அடியார்க்கு நல்லார். அகம அவி யெனமாறறி இரணடன றொகையெனககோடலும பொரு நதும இபபொருளில அவி வினைததொகை இனி, அவிபபாகததைததருகினற யாக சாலைகளையுடைய துறைகளைததாஙகி யெனறும, (வெபபததைத) தணிககினற மப சசெறிவினையுடைய துறைகளைததாஙகி யெனறும, பொருள கூறுதலுமேறகும. ஐநதிணையாவன—குறிஞசி, முலலை, பாலை, மருதம, நெயதலெனபன "மாயோ ன மேய காடுறை யுலகமுஞ, சேயோனமேய மைவரை யுலகமும, வேநதன மேய தீமபுன லுலகமும, வருணன மேய பெருமண லுலகமு, முலலை குறிஞசி மருதம நெ யதலெனச, சொலலிய முறையாற சொலலவும படுமே" எனனுஞ சூததிரததில் 'சொலலிய முறையாற சொலலவும படும' எனபதனாற சொலலாத முறையாற சொலலவும படுமென அருததாபததிகோடலானும, "நடுவுநிலைத திணையே நணபக, ல வேனிலொடு, முடிவுநிலைமருஙகின முனனிய நெறிததே" எனறும "நடுவ ணை நதிணை நடுவண தொழியப் - படுதிரை வையம பாததிய பணபே" எனறும ஆசிரி யா தோல்காப்பியனாா அருளிசசெயதமையானும "முலலையுங குறிஞசியு முறை மையிற றிரிநது, நலலியலபிறழநது நடுஙகுதுய ருறுததுப், பாலை யெனபதோா படிவங கொளளும" எனனுஞ சிலப்பதிகாரத்தானும போநத இப்பெற்றிததபதூஉம, த்திணையினையுநதழுவித திணை ஐநதெனறாா. "வான மூர்நத வயஙகொளிமிசையெனவு

ல், நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட், டிலையில மலர்ந்த முகையி லிலவம்” என்னும் அகநானூற்றுச்செய்யுளானும், “சீறருங் கணிச்சியோன் சினவலி னவ்வெயில், லேறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந் தியங்குநர், ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை.” என்னும் கலித்தொகைச் செய்யுளானும் முறையே முல்லை முறைமை திரிந்து பாலையாயினவாறும் குறிஞ்சிமுறைமை திரிந்து பாலையாயினவாறுங் காண்க. திணை - ஒழுக்கம். இது ஒழுக்கம் நிகழும் இடத்திற்காயிற்று. “குலமு நிலமு மொழுக்கமுந் திணையே” என்பது பிங்கலந்தை. நீர்ப்பெருக்கான தன்மையிலும் அடியிற் கிடந்த நுண்சிறுபொருளும் கண்ணுக்குத்தோற்றமாம்படி தெளிவுற்றமையின் ‘சவி யுறத்தெளிந்து’ என்றார், “சவிமணிக் கோவை செவ்வி சாற்றிய வனப்புக் காந்தி” யாகலின் ஈண்டுச்சவி ஒளியென்னும் பொருளினது. இங்ஙனம், இந்நதி அணி, பொருள், துறை, திணைமுதலியன தழுவி நடத்தலின் இந்நீர்மைத்தாகிய சான்றோர் கவியையுவமை கூறினர் “கோதாவிரி' யென்னும் பாடம்பிழையுடைத்து. என்னை? பிங்கலந்தையினும் சூடாமணி நிகண்டினும் வடமொழி அமரத்தினும் கோதாவரி யென்றே வழங்கலான்

சான்றோர் கவிக்குச்சிலேடைப் பொருள்வருமாறு —புவியினுக்கு அணியாய - புவியிலுள்ளவர்களுக்கு அலங்காரமாகி, ஆன்றபொருள் தந்து - அமைந்த சதுர்வித புருஷார்த்தங்களை யளித்து, புலத்திற்றாகி - அறிவினதாகி, அவி அகத்துறைகள் தாங்கி - தேவருணவினையொத்த அகப்பொருட்டுறைகளைக் கொண்டு, ஐந்திணை நெறி அளாவி - ஐவகை நிலத்தின் மாக்கட்திணைக்கலந்து, சவி உறத் தெளிந்து - (மனம்) ஒளிபெறத்தெளிந்து, தண் என்று - தண்ணளி பூண்டு, ஒழுக்கமும் தழுவி - அவ்வவருண நிலைகட்கேற்ற ஒழுக்கமுந்தழுவி (யதுசான்றோர்கவி) என்பதாம்

புவி ஈண்டு ஆகுபெயராய் மக்களை யுணர்த்திற்று அணி யென்றது ஐவகை இலக்கணத்து ளொன்றாகிய அணி என்பதனை, இனி, சான்றோர் கவியை மேற் கோளாக எடுத்துரைப்பார் சொற்கழகாய என்றலுமாம், அணி-அழகு, “நூற்கியைந்த சொல்லின் வனப்பே வனப்பு” என்றார் ஆன்றோரும் ‘ஆன்ற’ ஈண்டு அமைந்த என்னும் பொருட்டு. “ஆன்ற பெரியாரகத்து” என நாயனாரும், “மரங்கள் - ஆன் றபருவத்தாற் பூத்து” என இந்நூலாசிரியரும் அமைந்த வென்னும் பொருளிலுரைத் தமையறிக ‘ஆன்ற பொருள் - சதுர்வித புருஷார்த்தம் “அறம்பொரு ளின்பம் வீடென நான்கும் - திறம்படு பொருளெனச் செப்பினர் புலவர்” என்பவாக லின். சான்றோர் தாம் கற்றுங்கேட்டும் பெற்ற பல அரிய பெரிய விஷயங்களுங் கற்பித்த கற்பனைகளும் அக்கவியினகண்டடங்கி ஆக்கியோர் பேராற்றலைக் குறிக்கு மென்பார் ‘புலத்திற்றாகி’ என்றார் நூல்வழிப் பட்டதெனினு மமையும். புலம் நூலாதலை, “புலந் தொகுத்தோன்” என்னும் தொல்காப்பியப் பாயிரத்தாற் கண்டு தெளிக. அகப்பொருட்டுறைகள் இன்பப் பாலனவாகலின் அத்துறைகட்குத் தேவருணவாகிய அமிர்தத்தை யுவமைகூறினார். ஐவகைத் திணைகளும் திணைமயக்கங்களும் விரவி நடத்தலின் ‘ஐந்திணை நெறியளாவி’ என்றார். கற்போர்தாம் —மை நீங்கி அறிவா மொளியைப் பெறுதற்கு அக்கவியே காரணமாக விருத்த ‘சவியுற’ என்றார். தெளிவு குன்றக்கூறன் முதலிய குற்றங்களி னீங்கிய இனி, ‘ஐந்திணை’ என்பதற்கு ஐந்தின் இணையாகிய பத்து எனக்கொ ண்டுச் சொல்லல விளங்கவைத்தல் முதலிய பத்துவிதத்திற் கலந்து அழ ந்த தெளிவடைந்து என்றலுமாம். உலகம் இருள் தரும் ஞாலத்து வழி உழன்று பின் எரிவாய் நரகிற்கிரையாகாமே நன்னெறிச் செலுத்தி ரிக்கும் தண்ணளி பூண்டுள்ளதாகலின் ‘தண்ணென்று’ என்ற

[illegible]- தண்ணளியென்றார் பரிமேலழகியாரும். நான்குவருணத்தாரும் தத்தம் வருணத்திற் பிறழாது நிலைபெறப் பாதுகாத்தல் அறநிலை அறமாகலின் இன்றியமையாத அவ்வறத்தையும் விளக்கிக் காட்டுவதென்பார் 'ஒழுக்கமுந் தழுவி' என்றார். "வருணக் காப்பிற் பிறழா நெறிநிலை - பெறுதற் குரித்தாயப் பேணும் பெற்றி - அறநிலை யறமென் றறைந்தனார் புலவர்" இது பிங்கலந்தை 'கிடந்து' என்ற சொல்லாற்றலான் ஆசங்கியோர் பூசவுடம்பு பொன்றினும் புகழுடம்பு பொன்றாது நிலைத்திருக்குமென்பது விளங்குதலறிக. (௪)

வண்டுறை கமலச் செவ்வி வாண்முகம் பொலிய வாச
முண்டுறை குவளை யொண்க ணொருங்குற நோக்கி யூழின்
றெண்டிரைக் கரத்தின் வாரித் திருமலர் தூவிச் செல்வர்
கண்டடி பணிவ தென்னப் பொலிந்தது கடவுள் யாறு.

இ - ள். கடவுள் யாறு - தெய்வத்தன்மை பொருந்திய அக்கோதாவரி நதியானது, வண்டு உறை கமலம் - வண்டுகள் வசிக்கின்ற தாமரை மலர்களாகிய, செவ்வி - அழகினையுடைய, வாள் முகம் பொலிய - ஒளிபொருந்திய முகம் மலர்ச்சியையடைய, வாசம் உண்டு உறை - மணம் தங்கப்பெற்ற, குவளை - நீலோற்பலங்களாகிய, ஒள் கண் - பிரகாசமுடைய கண்கள், ஒருங்கு உற நோக்கி - ஒரு வழிப்படப்பார்த்து, ஊழின் - முறைமையாக, திருமலர் - அழகிய மலர்களை, தெள் திரை கரத்தின் - தெளிவுபொருந்திய அலைகளாகிய கைகளினால், வாரித்தூவி - எடுத்து அருச்சித்து, செல்வர் கண்டு - செல்வர்களைப் பார்த்து, அடிபணிவது என்ன - அவர்களுடைய பாதங்களை வணங்குவதுபோல, பொலிந்தது - விளங்கியது.

கருத்து — தாமரையுங் குவளையும் பொலிந்து விளங்கப்பெற்ற கோதாவரி நதியானது உதிர்ந்துகிடக்கும் மலர்களை அலைகளால் ஸ்ரீராம லக்ஷ்மணர்களும் சீதாபிராட்டியும் நின்ற கரையருகே ஒதுக்குந் தோற்றம் அந்நதி அவர்களை மலர்கொண்டு அருச்சித்துப் பணிவது போன்றிருந்தது என்பதாம்.

குறிப்பு — இந்நதி சத்ததீர்த்தத்து ளொன்றாயினமைபற்றி 'கடவுள் யாறு' என்றார், சத்த நதிகளாவன — கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி என இவை. 'கடவுள் யாறு' "தனிநெறி மெய்ம்மூன்" என்னுஞ் சூத்திரத்தில் துணிந்து முளரே யென்றமையால் இகரம்பெற்று வந்தது. வண்டுறை கமலம் எனவே மதுப்பெருக்குற்ற நாண்மலராயிற்று. வண்டுகள் தாம் உணவுவேண்டிப் பிரிந்து சென்று எறியும் இழிந்தும் சுழன்றும் மெய்வருந்தாது போதியவளவு உணவுகிடைத்தலால் உறைகின்ற எனினுமாம் "சுரும்புண்க கிடந்த நறும்பூஞ் [illegible]கை" என்னுமிடத்து அடியார்க்குநல்லாரு மிவ்வாறே பொருளுரைக் காண்பாரு[illegible]டுறைக் கமலம்" என்பது பாடமாயின் வளம்பொருந்திய துறைக்கட்டோன்று[illegible]ரையென்பப் பொருள்செய்க. இவரைக் காண்டலு மெய்திய புது[illegible]மலர்ச்சி யுற்றமை விளங்க 'செவ்வி வாண்முகம்பொலிய' என்றார். [illegible]திருமகாகளது திருத்தோளிலோ திருவடியிலோ திருமா[illegible]பிலோ எதி[illegible]வீழ்த[illegible]வ்வைவத் தழுகிலேயே ஈடுபட்டுக் கி[illegible]ப்பி[illegible]மென மீள இசையாதாகலான் [illegible]த்து[illegible]சில் பமேபடி நோக்கியென்பதூஉம், [illegible]யும் பிர[illegible]ருமானையும் ஒருங்கே நோக்கியென்று

குறிப்பு — உத்தமன், உழையள் என்னும் சொல்லாற்றலான் ஸ்ரீராமபிரான் ஏகபத்நீ விரதன் என்னும் பொருள் தோன்றுதல் காண்க. உழையள் — ஸஹதாமசாரிணி. இனி, உழையளாகு மென்பதற்கு மானபோன்றவளாகிய என்பொருள் கூறலியலுமாயினு மப்பொருள் ஈண்டுச் சிறவாமையறிக. சிறிய முறுவல் — மந்தஹாஸம். போதகம் — பத்துவயது சென்ற யானைக்குட்டி. போதம் என்னும் வடமொழிப் பெயர் சிறுமைப் பொருளில் வந்த கப்பிரத்தியயம் பெற்றுப் போதகம் என வந்தது. இன்னும் இக் கப்பிரத்தியயம் சூத்திரகன் என்பப் பெயர்ப் பொருளிலும், புத்திரகன் என அனுகம்பைப் பொருளிலும், தைலகம் என அற்பப் பொருளிலும், விருக்ஷகம் எனச் சிறுமைப் பொருளிலும் வரும். (௫)

வில்லிய றடக்கை வீரன் வீங்குநீ ராற்றின் பாங்கர்
வல்லிக ணுடங்கக் கண்டான் மங்கைதன் மருங்குன் னோக்க
வெல்லியங் குவளைக் கானத் திடையிடை மலர்ந்து நின்ற
வல்லியங் கமலங் கண்டா ளண்ணறன் வடிவு கண்டாள்.

இ - ள். வில் இயல் தட கை வீரன் - கோதண்டம் பொருந்திய பெருமை தங்கிய கையினையுடைய வீரனாகிய ஸ்ரீராமபிரான், வீங்கு நீர் - மிகுந்த ஜலப்பெருக்கினையுடைய, ஆற்றின் பாங்கர் - கோதாவரி நதியின் பக்கத்தில், வல்லிகள் நுடங்கக் கண்டான் - கொடிகள் அசைவதைப் பார்த்து, மங்கை தன் - சீதாபிராட்டியினுடைய, மருங்குல் நோக்க - இடையைப் பார்க்கவும், (சீதாபிராட்டி), அண்ணல் தன் வடிவு கண்டாள் - பெருமையிற் சிறந்த ஸ்ரீராமபிரானது திருமேனியைப் பார்த்து, எல்லி குவளை கானத்து - இருள் நிறத்தினையுடைய நீலோற்பலக் காட்டில், இடை இடை - நடுநடுவே, மலர்ந்து நின்ற - பூத்திருக்கின்ற, அல்லி அம் கமலம் கண்டாள் - இதழ்களையுடைய அழகிய தாமரை மலர்களைக் கண்டாள்.

குறிப்பு — கண்டான் கண்டாள் - முற்றெச்சங்கள். அம் - சாரியை. வல்லிகள் பிராட்டியின் மருங்குலுக்கும், குவளைக் கானம் பெருமாளின் நிறத்துக்கும், கமலம் பெருமாளின் கண், கை, கால் முதலிய பத்துத் திருவவயவங்களுக்கும் உவமை. (௬)

அனையதோர் தன்மை யாலவ் வருவிநீ ராற்றின் பாங்கர்ப்
பனிதரு படிவப் பஞ்ச வடியெனும் பருவச் சோலைத்
தனியிட மதனை நண்ணித் தம்பியாற் சமைக்கப் பட்ட
வினியபூஞ் சாலை யெய்தி யிருந்தன னிராம னிப்பால்.

இ - ள். இராமன் - ஸ்ரீராமபிரான், அனையது ஓர் தன்மையால் - (அந்தி) அப்படிப்பட்டதாகிய ஒப்பற்ற நிலைமையைப் பெற்றிருப்பதினாலே, அ அருவி நீர் ஆற்றின் பாங்கர் - மலையின் வீழாறுகளாற் பெருகிய அக்கோதாவரி நதியின் பக்கத்திலிருக்கிற, பனிதரு - குளிர்ச்சியைத் தருகின்ற, படிவம் - அழகாகிய, பஞ்சவடியெனும் - பஞ்சவடியென்று சொல்லப்பட்ட, பருவம் சோலை - இளஞ் சோலை சூழ்ந்த, தனி இடம் அதனை நண்ணி - ஒப்பற்ற இடத்தை யடைந்து, (அங்கே) தம்பியால் அமைக்கப்பட்ட - இளையபெருமாளால் செய்து முடிக்கப்பட்ட, இனிய - இனிமையாகிய, பூ சாலை எய்தி - அழகிய பன்னசாலையை யடைந்து, [illegible] (அதில்) வசித்துக்கொண்டிருந்தான், இப்பால் - [illegible],

குறிப்பு — இனி, அனைய தோர் தன்மையால் என்பதனை நண்ணி என்பதனோடு கூட்டி யுரைத்து, அப்படிப்பட்டதாகிய ஒப்பற்ற (விநோதங்களை நோக்கும்) தன்மையோடு சேர்ந்து என்னலுமொன்று சூரிய வெப்பம் உள்ளே நுழைதற்கிடமின்றி இலைகளடர்ந்திருத்தலின் 'பனிதரு படிவம்' என்றார் இனி, விசேடமாக ஜன சஞ்சாரமின்மைபற்றியும் அரக்கர் வசிக்கின்ற இடத்திற்குச் சமீபமாக இருக்கின்றதுபற்றியும், ஏனையோர் வசித்தற்கு அச்சத்தைத் தருகின்ற பஞ்சவடியென்னலுமாம் பனிதரு என்பதனால் ஸ்ரீராமபிரான் பஞ்சவடி தீர்த்தத்தை யடைந்தகாலம் பனிக்காலம் என முதனூலாகிய வான்மீகத்திற் கூறிய விடயம் குறிப்பிக்கப்பட்டது "பாவஜ்ஞேந க்ருதஜ்ஞேந தர்மஜ்ஞேந சலக்ஷ்மண॥ த்வயம் புத்ரேண தர்மாத்மா நஸம்வ்ருத்த பிதாமம॥" என எம்பெருமான் மனமுவந்து பாராட்டுமபடியாய் நியமனமில்லாதிருக்கவேயும் பெருமானும் பிராட்டியும் ஏகாந்தமாயிருக்கத்தக்க இடத்தையு மமைப்பித்தார் என முதனூலுட் கூறிய விசேடத்தை 'இனிய பூஞ்சாலை'யென்று கூறிப் பெறவைத்தார். (எ)

வேறு

நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கு மொய்ம்பினாள்
மேலநா ளுயிரொடும் பிறந்து தானவிளை
காலமோர்ந் துடனுறை கடிய நோயனாள்

இ - ள். மேலைநாள் - ஆதியில், உயிரொடும் பிறந்து - உயிரோடு உற்பவித்து [உடலில் உயிர் தோன்றிய காலத்தில் தானுந்தோன்றி], தான் விளைகாலம் ஓர்ந்து - தான் (கெடுதியைச் செய்வதற்கு) விருத்தியாகின்ற காலத்தை அறிந்து, உடன் உறை - (உடலில் உயிர்) உடனே வசிக்கின்ற, கடிய நோய் அனாள் - கொடிய வியாதியையொத்தவளாகி, நீலம் அம் மணி நிறம் - நீலநிறத்தினையுடையதாகிய மரகதமென்னும் இரத்தினம் போலும் நிறத்தினையுடைய, நிருதர் வேந்தனை - அரக்கர்களுக்கு அரசனாகிய இராவணனை மூலம் நாசம் பெற - அடியோடு அழியும்படி, முடிக்கும் - அழிக்கும், மொய்ம்பினாள் - வலிமையையுடையாளும்.

குறிப்பு — நாசம் - தொழிற்பெயர், நசி - பகுதி, வாசம், பாடம் என்பன போல் விகாரம் பெற்றுவந்தது இவ்வரக்கி இராவணனுடன் பிறந்து வளர்ந்தும் அவன் மடிவதற்கு இவளே காரணமாக ஏற்படுகின்றாளாகலின் இவளுக்கு உயிருடன் பிறந்து உடன் உறை கடியநோயை உவமை கூறினார் "உடன்பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்க வேண்டா, முடன்பிறந்தே கொல்லும் வியாதி" என்றார் பிறரும் மேலை என்பதில் 'ஐ' சாரியை. உயிரொடும் பிறந்த நோய் - கன்மநோய் மூலம் மூலபிலத்தையுங் குறிப்பி னுணர்த்துமாற்றிக. (அ)

செம்பரா கம்படச் செறிந்த கூந்தலாள்
வெம்பரா குத்தனி விளைந்த மெய்யினா
ளும்பரா னவாக்குமொண் டவாக்கு மோதநீ
ரிம்பரா னவாக்குமோ ரிறுதி யீட்டுவாள்.

இ - ள். செம்பு அராகம்பட - செம்பினது செந்நிறம் பொருந்திய, செறிந்த - [illegible], கூந்தலாள் - கூந்தலையுடையாளும், வெம்பு அராகு - சினங்கொண்ட

ராகு வென்னுங் கரும்பாம்பையொத்து, தனிவிளைந்த மெய்யினான் [illegible] டாய வுடலினையுடையானும், உம்பர் ஆனவர்கட்கும் - தேவலோகத்திலுள்ளவர்க்கு ம், தூர் தவர்க்கும் - ஒளிரிய தவத்தினையுடைய முனிவர்கட்கும், ஓதம் [illegible] ஆனவர்க்கும் - கடல்சூழ்ந்த இவ்வுலகத்திலுள்ளவர்களுக்கும், ஓர் இறுதி [illegible] ள் - ஒருமுடிவைத் தேடுவோனும்

குறிப்பு—அராகம் - சிவப்பு, "முடுகியல் செந்நிறம் பாலை யாழ்த்திற - மாற்ற கந் தக்க ராக மராகம்" என்பது பிங்கலந்தை இனி, செம்+பராகம் எனக் கண்ணழித்து, சிவந்த மகரந்தம் எனப்பொருள் கூறுவாருமுளர் அராகு - அராகமென் பதுபோல வந்தது. இது கரியநிறமும் கொடிய செயலு முடைமைக்கு உவமை. தலை மாத்திரமேயுள்ள அராகுவா லுள்ளதாந்தீமையினும் உடன் முழுதுமுள்ள அரா குவா லுள்ளதாந்தீங்கு இறப்பப் பெரிதென்னுங் கருத்தானிவ்வாறு கூறினார் இறு தி - தொழிற்பெயர். அமரரென்றிருப்பார்க்கும், கூற்றுங் குதித்தலுங் கைகூடு மென்றிருப்பார்க்கும் காயசித்தி யடைந்திருப்பார்க்கும் இறுதி யிடுவோனென்வே சூர்ப்பநகையின் வன்மை கூறினார் இனி, இராவணனுதி இராக்ஷஸ கணங்களால் மிக்க கஷ்டத்தை யனுபவிக்கும் தேவருக்கும், தண்ட காரணிய வாசிகளாகிய மக ருஷிகளுக்கும், மற்றுமுள்ள நிலவுலகத்தார்க்கும் அக்கஷ்ட நிவிர்த்தி யுண்டாம்படி யான வழிதேடுவோன் எனினுமாம். (௯)

வெய்யதோர் காரண முண்மை மேயினாள்
வய்கலுந் தமியளவ் வனத்து வைகுவாள்
நொய்தினிவ் வுலகெலா நுழையு நோன்மையள்
எய்தினா ளிராகவ னிருந்த சூழல்வாய்

இ - ள் வெய்யது ஓர் காரணம் உண்மை - (பின்னிகழ்) தீயகாரியத்திற் கெல்லாம் ஓர் காரணமாயிருத்தலை, மேயினாள் - பொருந்தினவளும், வய்கலும் - நா ளும், தமியள் - ஒன்றியாய், அவ்வனத்து வைகுவாள் - அந்தவனத்தில் வசிப்பவளும், நொய்தின் - சீக்கிரத்தில், இ உலகு எலாம் - இந்தவுலகமெல்லாம், நுழையும் - புகு கின்ற [புகுந்து சுற்றிவரத்தக்க], நோன்மையள் - வலிமையையுடையவளுமாகிய சூர்ப்பநகை, இராகவன் இருந்த சூழல்வாய் - ஸ்ரீராமபிரானிருந்த இடத்திற்கு, எய்தினாள் - (போய்ச்) சேர்ந்தாள்.

குறிப்பு—முதலடிக்குத் தீங்கு தேடுங்காரணமாக முன்னேயூழை யடைந்துள் ளாள் என்றலு மொன்று - இவள் ஊழானே பிறர்க்குந் தனக்குந் தீங்குதேடுந்தக மைந்தாள் என்பது கருத்து - ஈண்டு, உண்மை - ஊழ், "உண்மையறிவே மிகும்" எனப்புழிப்போல, உண்மை - ஊழ் என்பதை, ஊழெனினும் அதிகாரமுகத்துப் பரி மேலழகருரைத்த வாற்றானுமுணர்க இனி, சூர்ப்பநகைதன் மகனிறந்த கொடிய காரணத்தின் மெய்ம்மையையறிய விரும்பினவளாய் அவ்வனத்தில் வசிக்கின்றாளெ ன்று பொருள் கூறுவாருமுளர். வய்கல் - போலி நொய்தின் -இலேசாகவென்றலு மாம் இராகவன் -ரகுவம்சத்திற்பிறந்தவன்; தத்திதாந்தம். வாய் -ஏழனுருபு (௧௦)

எண்டகு மிமையவ ரரக்க ரெங்கண்மேல்
விண்டனர் விலக்குதி யென்ன மேலைநாள்

[அண்]டசத் தருந்துயி லுறந்த வையனைக்
கண்டனன் டன்கிளைக் கிறுதி காட்டுவாள்.

இ - ள். தன் கிளைக்கு - தனது சுற்றத்தார்களுக்கு, இறுதிகாட்டுவாள் - முடிவு காட்டுகின்ற சூர்ப்பநகை, மேலைநாள் - ஆதிகாலத்தில், எண் தகும் இமையவர் - மதிக்கத்தகுந்த தேவர்கள், அரக்கர் - இராக்ஷதர்கள், எங்கள்மேல் - எங்கண் மீது, விண்டனர் - பகைகொண்டார்கள், விலக்குதி என்ன - (அவர்களால் எங்களுக்கு நேரிடும் துன்பத்தை) விலக்கியருள்வாயென்று வேண்ட, அண்டசத்து - சேஷசயனத்தினின்றும் அருந்துயில் துறந்த - அரிய நித்திரையை யொழித்து ஸ்ரீராமபிரானாகத் திருவவதரித்தருளிய, ஐயனை - ஸ்ரீமந்நாராயணனை, கண்டனள் - பார்த்தாள்.

குறிப்பு — விண்டனர், விள் - பகுதி. விள்ளல் - வேறுபடுதல். அண்டஜம் - முட்டையிற் பிறப்பதென்பது பொருள். இங்குச் சிறப்புவகையால் ஆதிசேஷனென்னும் பாம்பை யுணர்த்திற்று. யோகநித்திரை யாதலால், 'அருந்துயில்' என்றார். இது அறிதுயிலெனவும், பொய்த்துயிலெனவும் சொல்லப்படும். ஐயன் - ஸ்வாமி, அழகனுமாம். கிளை - உவமவாகுபெயர். (சக)

சிந்தையி னுறைபவற் குருவந் தீர்ந்ததா
லிந்திரற் காயிர நயன மீசற்கு
முந்திய மலர்க்கணோர் மூன்று நான்குதோ
ளுந்தியி னுலகளித் தாற்கென் றுன்னுவாள்

இ - ள் (அச்சூர்ப்பநகை), சிந்தையின் உறைபவற்கு - மன்மதனுக்கு, உருவம் தீர்ந்தது - வடிவம் (சிவபிரானது நெற்றிக்கண்ணால் எரிபட்டு) ஒழிந்தது; இந்திரற்கு ஆயிரம் நயனம் - தேவேந்திரனுக்கு ஆயிரங் கண்கள் (உண்டு), ஈசற்கு - சிவபிரானுக்கு, முந்திய - முற்பட்ட, மலர்க் கண் ஓர் மூன்று - மலர்போலுங் கண்கள் மூன்று (உண்டு), உந்தியின் - (தனது) திருவுந்திக் கமலத்தினின்றும், உலகு - எல்லா வுலகங்களையும், அளித்தாற்கு - அளித்த நாராயணனுக்கு, நான்குதோள் - சதுர் புஜங்கள் (உண்டு), என்று - என்றுகூறி, உன்னுவாள் - (பின்னை இப்புருஷோத்தமன் யாவன் என) ஆலோசிப்பாளாயினள்.

குறிப்பு — ஸ்திரீ புருஷர்களுடைய மனத்தின்கண்ணே நிகழ்தலாய காம வேட்கை யெழுச்சிக்குக் காமனே காரணகர்த்தாவாக விருத்தல்பற்றி, 'சிந்தையி னுறைபவன்' என்றாள். இதுபற்றியே மன்மதனுக்குச் சித்தசன், மனோசன், மனோருபு, மனோத்பவன் என்னும் பெயர்கள் வாய்ந்தன. சோம சூரியாக்கினிகள் சிவபிரானது கண்களென்று சொல்லப்படுங் காரணம்பற்றி 'முந்தியகண்' என்றார். திருமால் தனது உந்தியினின்றுந் தோன்றிய நான்முகக் கடவுளைக்கொண்டு உலகைப் படைப்பித்தாராயினும், அப்படைப்புத் தொழிலும் அவனதே யெனக்குறிப்பித்தற்கு 'உந்தியி னுலகளித்தாற்கு' என்றாள். 'உலகமெலா முந்தியி[illegible]த்த வொருமுதலே' என்றார் பிறரும்.

- கட்டவிழ்ந்த தாமரை மலருக்
- ,.- லயிற் குவிதலுண்மையால் தாமரை நிகராவதில்லை) சுகி
[...]ம எனில் - கிரணங்களோடு கூடியசந்திரனோதான் தக்கவுவமையாமெனின்,
[க]லைகள் தேயும் - கலைகுறைந்து தேய்தலையடையும்; அம் மதியெனின் - (அது

னற்றவ மியற்றியவ் வநங்க னலனுருப்
பெற்றனன் றாமெனப் பெயர்த்து மெண்ணுவாள்.

இ - ள். கற்றை அம் சடையவன் - திரளான அழகிய சடாபாரத்தையுடைய சிவபிரான், கண்ணில் - (தன்) நெற்றிக்கண்ணினால், காய்தலால் - எரித்ததனால், இற்றவன் - (உடல்) இழந்தவனாகிய, அ அநங்கன் - அந்த மன்மதன், அன்று தொட்டு இன்று காறும் - (உடலிழந்த) அந்நாள் முதலிந்நாள்வரையிலும், நல் தவம் இயற்றி - நல்லதவத்தைச்செய்து, நல் உரு பெற்றனன் ஆம் என -(இந்த) நல்லுருவத்தையடைந்தான் போலும் என்று, பெயர்த்தும் - மீண்டும், எண்ணுவாள் - (அவள்) ஆலோசிப்பாளாயினாள்.

குறிப்பு — யோகத்தமர்ந்த பரமசிவன் என்பாள் 'கற்றையஞ்சடையவன்' என்றாள் அம் - நீரெனக் கங்கை தங்கியசடையுமாம். சடை - ஜடா என்னும் வடமொழித்திரிபு, ஆகாரம் ஐகாரமாயிற்று. இற்றவன், இறு - பகுதி. ஸ்ரீராமபிரானுடையவடிவம் மன்மதன் வடிவினும் அழகுடைத்து என்பாள் 'நற்றவம்' எனவும், 'நல்லுரு' எனவுங்கூறினாள். ஐம்புலன்வித்த அருந்தவரும் இவன்காடு புக்கஞான்று இவன்படிவத்தின் விழைந்தமை நோக்கியன்றே 'இராமன்' என்றார். முனிவர் விழைந்தமையை இவ்வாசிரியரும் கோசிகர் கூற்றாக "ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்" என்பர் "கண்டாரையழகாற் றுவக்குணவல்லான்" என்றார் பெரியாரும். அநங்கன் - அங்கமில்லாதவன். (௧௩)

தரங்களி னமைந்துதாழ்ந் தழகின் சாபின
மரங்களு நிகர்க்கில மலையும் புல்லிய
வுரங்களி னுயர்திசை யோம்பு மானையின்
கரங்களே யிவன்மணிக் கரமென் றுன்னுவாள்

இ - ள். தரங்களின் அமைந்து - உவமையோடு பொருந்தி, தாழ்ந்து - (முழந்தாளளவும்) தாழ்தலடைந்து, அழகின் சாபின - அழகிற்செல்லா இருப்பிடமாயுள்ள இவன் கரங்கட்கு, மரங்களும் - (கற்பக முதலாகிய) மரங்களும், மலையும் - (மேரு முதலாகிய) மலைகளும், புல்லிய - தாழ்ந்தன (ஆதலின்), நிகர்க்கில - இணையாகமாட்டா, (ஆகையால்), உரங்களின் - வலிமையோடு, உயர் - உயர்ந்திருக்கின்ற, திசை ஓம்பும் - திக்குக்களைக் காவல்செய்கின்ற, ஆனையின் கரங்களே - யானைகளின் துதிக்கைகளே, இவன் மணிகரம் என்று உன்னுவாள் - இவனது அழகிய கரங்களென்று நினைப்பாள்.

குறிப்பு — கரங்க ளொன்றுக்கொன்று உவமையாய உவமையிரண்டாதலின் தரங்களென்பன்மையாற் கூறினார். முழங்காலளவுந் தாழ்ந்த கரங்களெனவே, ஆசானுவாகு என்றதாயிற்று "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" என்னுந் தொல்காப்பிய வுவமவியற் சூத்திர விதிப்பற்றிக் கற்பகமும் மேருவுங்கொண்டாம். இவைபோன்ற அளவில் மரங்களையும் மலைகளையும் மற்றவற்றையும் பரிக்கும் பெருவலைத் தாங்கும் பொதுமைபற்றி யானையின் கரங்களென்றார். (௧௪)

மாம் இராகவன் —

ர் வீரத் தோளொடுங்
எண்டகு மிமையவ ரரக்க ரெங்கணமேல்
விண்டனா விலக்குறி யென்ன மேலொர

இ - ள். வில் மலை வல்லவன் - விற்போரில் வல்லவனாகிய இவனது, வீரத் தோளொடும் - வலிபொருந்திய புயங்களுக்கு, கனிந்த நீலத்தின் நன் மலை அல்லது - முதிர்ந்த நீலநிறத்தினையுடைய நல்லமலையேயல்லாமல், கல் மலை நிகர்க்கில - கல்லாலாகிய மலைகள் இணையாகமாட்டா, நாமமேருவும் - பெருமைபொருந்திய மகாமேருவும், பொன்மலை ஆதலால் - பொன்னினாலாய மலையாயிருக்கின்றதாகையால், பொருவலாது - ஒப்பாகாது, என்பாள் - என்று நினைப்பாள்.

குறிப்பு.—மலை - முதனிலைத் தொழிற்பெயர். கன்மலை தூரப்பார்வைக்கு நீலமானதாகக் காணப்படினும் அணித்து வந்து பார்க்கும்போது வெண்மைநிறத்ததாகக் காணப்படுமாதலால் 'கன்மலைநிகர்க்கில' என்றாள். கனிந்த நீலத்தின் நன்மலை- இல்பொருளுவமை. ஸ்ரீராமபிரானது தோளோடு உவமை கூறநிற்றலின் அந்நீல மலைக்கு 'நல்' என்னும் அடைதந்து கூறினள். (௩௫)

தாளுயர் தாமரைத் தளங்க டம்மொடுஞ்
சேருயர் நாட்டத்தரியின் றோற்றத்தான்
றோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
னீளிய வல்லநெ டியமார் பென்றாள்

இ - ள். தாள் உயர் தாமரை - நாளத்தினையுடைய உயர்ந்த தாமரைமலரினது தளங்கள் தம்மொடும் - இதழ்களுடனே, சேர் - உறவினைக்கொண்ட, உயர் நாட்டத்து - உயர்ந்த கண்களையுடைய, அரியின் தோற்றத்தான் - மலைபோலுந் தோற்றத்தினையுடைய இப்புருடனது, தோளொடு தோள் - இரண்டு புயங்களிலும், செல - (பார்த்து முடிந்திலாப் பகாரிய சேதியாம்படி) கழிய, தொடர்ந்து நோக்குறின் - இடைவிடாமற்பார்க்கும் பட்சத்து, நீளிய அல்ல - (கண்கள்) நீட்சியுள்ளனவல்ல, நெடியமார்பு - (மிகவும்) அகன்றமார்பாக இருக்கின்றது, என்றாள் - என்று நினைத்தாள்.

குறிப்பு.—இனி, உயர்தாள் தாமரை எனக்கொண்டு நீண்ட தண்டினையுடைய தாமரையென் றுரைத்தலுமாம்; தண்டிற்கு நீட்சிகூறவே ஜலசம்பந்தமின்மையால் பொலிவுற்றமை பெறப்படும். தாமரை - முதலாகுபெயர். மலர்ச்சியும், குளிர்ச்சியும், கண்டோரை மகிழ்விக்கலுமாகிய பொதுத்தன்மைபற்றித் தாமரை கண்களுக்கு உவமையாயின. நாட்டத்து, அத்து - சாரியை (௩௬)

அதிகம்நின் றொளிருமிவ் வழக னன்முகம்
பொதியவிழ் தாமரைப் பூவை யொப்பதோ
கதிர்மதி யாமெனிற் கலைக டேயுமம்
மதியெனின் மதிக்குமோ மறுவுண் டென்பால்

இ - ள். அதிகம் நின்று ஒளிரும் - அதிகமாக நின்று விளங்குகின்ற, இவ் அழகன் முகம் - இந்தச் சுந்தர புருஷனது வீரத்தன்மை விளங்கும் திருமுகமண்டலம், பொதி யவிழ் தாமரை பூவைஒப்பதோ - கட்டவிழ்ந்த தாமரை மலருக்கு ஒப்பாகுமோ, (மாலையிற் குவிதலுண்மையால் தாமரை நிகராவதில்லை) கதிர் மதி ஆம் எனில் - கிரணங்களோடு கூடியசந்திரனேதான் தக்கவுவமையாமெனின், கலைகள் தேயும் - கலைகுறைந்து தேயுந்தன்மையுடையும், அம் மதியெனின் - (அங்

னம் கலைகள் தேய்வடையாத) அழகியவுவாமதியோ வெனில், மதிக்கும் - அப்பூரணசந்திரனுக்கும், ஓர் மறு உண்டு என்பர் - ஒரு களங்கம் இருக்கின்றதென்று (உலகத்தார்) சொல்லுவார்கள்.

குறிப்பு — அதிகம் கினமொழிதல் - இனி அழகு தானிருப்பதற்கிடமில்லாருந்தல் 'த்வத்தன ஸௌந்தர்யலஹரீபரீ வாஹஸ்ரோதஸ் ஸரணிரிவஸீமந்தஸரணி' - என்றார் சங்கராசாரியசுவாமிகளும். ஆண்முகம் என்பதனை ஆள்முகம் எனக்கண்ணழித்து யாவரையும் ரக்ஷிக்குந்தன்மை விளங்கும் முகம் என்னலுமாம். பெரிய விழுத்தாமரை யென்று விசேடமிட்டது வந்திருந்தசமேலே குவிதலுண்மையையும் கட்டிநிற்குமென்றறிக. சோதி - முதனிலைத்தொழிற்பெயர். மதிக்கும் என்பது அதற்கும் என்சுட்டுமாத்திரத்தில் வந்தது. அம்மதி - அமிர்தம் நிறைந்த மதியும். "நீர் திபவர்" என்றதற்கு அடியார்க்குநல்லாருமிவ்வாறே பொருளுரைத்தார். (கஎ)

எவன்செய வினிய விவ்வழகை யெய்தினோ
னவஞ்செய திருவுடம் பலச நோற்கின்றா
னவஞ்செய் தகையவிந் நளின நாட்டத்தா
றவஞ்செய தவஞ்செய்த தவமென் னென்கின்றாள்

இ-ள் (இப்புருடோத்தமன்), எவன்செய - யாது செய்யக்கருதி, இனிய இவ்வழகை - (கண்ணுக்கு) இரமியமான இந்த அழகினை, எய்தினோன் - பெற்றான், அவம் செய - (இவ்வழகை) வீணசெய்ய, திரு உடம்பு அலச நோற்கின்றான் - திருமேனி வாட்டங்கொள்ளும்படி தவஞ்செய்கின்றான், நவம் செய் தகைய - (எவரையும்) உறவாக்குந்தக்க, இந்நளினம் நாட்டத்தான் - தாமரை மலர்போலுங்கண்களையுடைய இப்புருடன், தவம் செய - தவம்புரியும்படி, தவம் செய்த தவம் என் என்கின்றாள் - தவமென்பது புரிந்த தவம்யாதோ? என்று சொன்னாள்.

குறிப்பு — அவன், நவன், தவன் என்பனபோலிகள். இனி நவம் செய்தகைய என்பதற்குத் தோத்திரம் செய்யத்தக்க என்ற பொருளுரைத்தலும் கூடும். நவம் 'நு' என்னும் பகுதியடியாகப் பிறந்தபெயர் "நுஸ்துதௌ" என்பவாகலின். எவன் என்னும் வினாவினைக் குறிப்பு முற்று இடைக்குறைந்து என் என நின்றது. (கஅ)

உடுத்தநீ ராடைய ளுருவச் செவ்வியள்
பிடித்தரு நடையினள் பெண்மை நன்றிவ
னடித்தலந் தீண்டலி னவனிக் கம்மயிர்
பொடித்தன போலுமாற் புல்லென் றுன்னுவாள்.

இ-ள் உருவம் செவ்வியள் - ரூபலக்ஷணத்தையுடையவளும், பிடி தரு நடையினள் - பெண்யானைபோன்ற நடையினையுடையவளுமான, உடுத்த நீர் ஆடையள் - தரித்துக்கொண்ட கடலாடையையுடைய பூமிதேவியினது, பெண்மை நன்று - பெண்பிறவிநன்மையையுடையது, (என்னெனில்), இவன் அடி தலம் தீண்டலின் - இப்புருடோத்தமனது திருவடிகள் தீண்டப்படுவதால், அவனிக்கு - இப்பூமிக்கு, அம்மயிர் பொடித்தன - அழகிய உரோமங்கள் சிலிர்த்தவற்றை, புல் [illegible]லும் - புற்களேயாகும், என்று உன்னுவாள் - என்று நினைத்தாள்

கருத்து — இப்புருடோத்தமனது திருவடிகள் தீண்டிய மகிழ்வடைந்த பூமிதேவியின் அதிருஷ்டம் எனக்கும் மற்றைப்பெண்பிறவிகட்கும் கிடைத்ததில்லையே யென்றாளென்பதாம் —

குறிப்பு —'பிடித்தரு' என்பது - ''கிளைக்குரிது' என்பதுபோல விகற்பித்து வந்தது. எதுகைநோக்கி யிரட்டித்த தெனினுமிழுக்காது. க ந - உவமையுருபு. அவனி - காக்கப்படுவது, அவனம் - காத்தல், இ செயப்படு பொருள்விகுதி. பூமியி லுள்ளபாகவுள்ள புல்லை ஸ்ரீராமபிரானுடைய திருவடிஸ்பர்சத்தால் உண்டான மகிழ்ச்சியால் பூமிதேவிக்கு உரோமங்கள் சிலிர்த்தனவாகப் புனைந்துரையாயின இதை, குறிப்பேற்றவணி (௧௯)

வாணிலா மருங்குலாள் வயங்கு சோதியைக்
காணில னேகொலோ கதிரி னாயகன்
சேணெலாம் புலவொளி செலுத்திச் சிந்தையி
னாணலன் மீமிசை நடக்கின் றானரோ

இ - ள் வாள் நிலா மருங்குலாள் - ஒளியையுடைய நிலாப்போன்ற இடையையுடைய இப் புருடனது, வயங்குசோதியை - விளங்குகின்ற ஒளியை, கதிர் நாயகன் - சூரியன், காணிலனே - பார்க்கவில்லையோ? சேணெலாம் - ஆகாயமுழுவதும், புல ஒளி செலுத்தி - (அவனதனது) அற்பமான பிரகாசத்தைச்செலுத்தி, சிந்தையில் நாணலன் - மனத்தில் வெட்கமடையாதவனாய், மீமிசை நடக்கின்றான் - ஆகாயத்தில் நடந்து செல்லுகின்றான்

விசே — வாள் - ஒளியுமாம், இப்பொருட்கு ''வாளொளி யாகும்'' என்பது நிகண்டு. மருங்குலாள் - மிக உரியபுத்திரத்தானுமாக சூரியனொளியையு மடக்கவல்ல தன்மையுடைமையா லால 'வயங்குசோதி' என்றாள் 'வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறைய'' என்றார் அயோத்தியாகாண்டத்தும். சேண் - ஆகாயம், வட மொழித்திரிபு. இவ்வுலகமெலாம் பரவிய ஒளி ஸ்ரீராமபிரானுடைய திருமேனியின் ஒளியாதலானும், நாரதிருஷ்டிக்கு வானில் வெய்யவனொளி சிற்றொளியாய்க் காணப் படுதலானும் 'சேணெலாம் புலவொளி' என்றாள் நாணலன் - முற்றெச்சம். மீமி சை - ஒருபொருட் பன்மொழி. ஏ, கொல் - அசைகள் (௨௰)

கப்புறற் கரியமாக் குன்றை வென்றுய
ரிப்பெருந் தோளவ னிசைக்கு கேற்பதோ
ரொப்பென வுலகமே லுரைக்கி னுள்ளமே
துப்பெனிற் றுப்புடை யாதைச் சொல்லுகேன்

இ - ள் உள்ளமே - என்மனமே! கப்புறற்கு அரிய - கடப்பதற் கருமையான, மா குன்றை வென்று - பெரியமலைகளைச்செயித்து, உயர் - உயர்ந்த, இ பெரு தோளவன் - பெருத்த புயங்களையுடைய இப்புருடனது, இசைக்கு ஏற்பது - அழகுக்குப் பொருந்துவதாகிய, ஓர் ஒப்பு என உரைக்கின் - ஓர் உவமை யென்றுசொன்னால், (அதனை), துப்பு எனின் - (உலகத்தவர்கள்) துப்பு என்பார்களா யின், உலகமேல் - உலகினகண், துப்பு உடை யாதை - செவ்வுநிறமுடைய எப் பொருளை, சொல்லுகேன் - (அதற்கிணை) கூறுவேன்.

குறிப்பு — கடப்பதற்கரிய மலையையுவமை கூறவே இவன் புயங்களையும் வெல்லுதலருமை குறிப்பிக்கப்பட்டது. தப்பு - பழுது, உமிழ்தலென்னவுமாம். இழுக்குச் சிறந்தவுவமையாகக் கூறப்படுந்துப்பு என்பது உமிழ்தலென்னும் மற்றொரு பொருளுடைய பெயரையும் பெற்றிருத்தலான் அது உவமையாதற் பாற்றன்றாயின் மற்றை யாதை யுவமை கூறுவேன் என்பது எற்றடியாற் போதருங்கருத்து. இனி, மாகக் குன்று - கரியமலையுமாம். உள்ளமே துப்பெனின் என ஆற்றொழுக்கிலேயே கொண்டு என மனமே துப்பென இகழ்ந்துரைக்குமாயின் என்பதாருள் கூறலுமமையும். ஒரு அம்சத்திலேனும் பவளம் இதழுக்கு நிகராகாதென்பாள் 'ஓர் துப்பு' என்றாள்.

நற்கலை மதியுற வயங்கு நம்பிதன்
னெற்கலை திருவரை யெய்தி மெய்யுற
வற்கலை நோற்றன மாசி லாமணிப்
பொற்கலை நோற்றில போலு மாலென்றாள்.

இ - ள். நல் கலை மதி உற - நல்லகலைகளோடு கூடியசந்திரனையொப்பாக, வயங்கும் - விளங்குகின்ற, நம்பிதன் - இப்புருடோத்தமனது, எல் கலை - இருளை விலக்குகின்ற, திரு அரை - சிறப்புப்பொருந்திய இடையினைக்கண்ணே, எய்தி - அடைந்து, மெய் உற - இன்பம் அடையும்படி, வற்கலை - மரவுரி, நோற்றன - செய்த தவங்களை, மாசு இலா - குற்றமில்லாத, மணி - அழகிய, பொற்கலை - பீதாம்பரம், நோற்றிலபோலும் - செய்யவில்லைப்போலும், என்றாள் - என்று சொன்னாள்.

குறிப்பு — தேயவோடு களங்கமின்மைவிளங்க 'நல்' என்றாள். நல்லசாஸ்திர விசாரணைசெய்த அறிவுடையவருக்கு நம்பியென்றலுமாம். கலை - சந்திரன்பங்கு, கலையரை - வினைத்தொகை. "திருவென்ப கமலைச் செல்வம் சிறப்பொடு மும்மையோ" என்பவாகலின், ஈண்டுத்திருவைச்சிறப்பென்றாம். அரை - எண்ணலளவைப்பெயர் யாக்கையின் கூறுபாடுகளையுணர்த்திய ஆகுபெயர். எமம் என்னும் உடல்கொன்றோ சகுணப்பெயர் ஈறுபோய 'ஏ' என்கிறது. வற்கலை - வன்மையாகிய கலையென்பாரை இதுவடசொல்லென்று கூறிமறுக்க. (உஉ)

தொடையமை நெடுமழைத் தொங்க லாமெனக்
கடைகுழன் றிடைநெறி கரிய குஞ்சியைச்
சடையெனப் புனைந்தில னென்னிற் றையலா
ருடையுயிர் யாக்கையு முடையு மாலென்றாள்.

இ - ள். தொடை அமை - தொடுத்தலமைந்த, நெடுமழை - நீண்டமேகத்தினது, தொங்கல் ஆம் என - வரிசையாமென்னும்படி, (தொங்குதலுற்று) கடைகுழன்று - கடைப்பாகத்திற் சுருண்டு, இடைநெறி - மத்தியிலடர்த்தியுற்ற, கரியகுஞ்சியை - கருமைநிறங்கொண்ட குடுமியை, சடை என - சடையென்னும்படி, புனைந்திலன் என்னில் - அணியானாயின், தையலார் - பெண்களினுடைய, உடை - ஆடையும், உயிர் - உயிரும், யாக்கையும் - (அவர்க்குரியமற்றை) எவையும், உடையும் - நிலைகெட்டுப்போம், என்றாள் - என்று சொன்னாள்.

குறிப்பு — தொடை - தொடுக்கப்படுவது, "நீண்டு குழன்று நெய்த்திருண்டு நெரிந்து செறிந்து நெடுநீலம், பூண்டு புரிந்து சரிந்துகடை சுருண்டு புகையு நறும்பூவும், வேண்டுமல்ல வென்றுதெய்வ வெறிமேய கமழு நறுங்குஞ்சி, யீண்டிச் சடையா

யினதென்றுன மழையென றுரைத்த விழிபனரே'' என்னுந் திருவிருத்தத்தை யீண்டொப்பிடுக. உடை - உடுக்கப்படுவதென்னச் செயப்படுபொருள் விகுதிபுணர்ந்த பெயர், உடு - பகுதி, யாக்கையுடென்றதனால் - உயிரினுஞ்சிறந்தனவாகிய நாணுங்கற்புங்கொள்க. உயிரினு மிவை சிறந்தவாதலை "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று'' - என்னுந் தொல்காப்பியக் களவியற் சூத்திரத்தானுணர்க. (உ௩)

நாறிய நகையணி நல்ல புல்லினும்
ஏறிய செவ்வியி னியற்று மோவெனா
மாறகன் முழுமணிக் காசின் மாட்சிதான்
வேறொரு மணியினால் விளங்கு மோவென் பாள்

இ - ள், நாறிய - மணம்வீச, நகை அணி - நகைக்கின்ற மாலையும் (முல்லைமாலையும்), நல்ல (நகையணி)-(நகைக்கின்ற மாலையாகிய) நல்ல முத்துவடத்தையும், புல்லினால் - (இப்புருடோத்தமன்) அணிந்துகொண்டால், ஏறிய - (இவ்வழகைக்காட்டிலும்) அதிகமான, செவ்வி - அழகை, இயற்றுமோ - செய்யுமோ? [செய்யாது], எனா - என்று சொல்லி, (பின்பு) மாறு அகல் - (தன்னைப்போலப்) பிறிதொன்றில்லாத [இணையில்லாத], முழுமணிக்கு ஆசின்மாட்சி - குறைவுபடாத சிறந்த மாணிக்கத்தினது (இயற்கைப்) பெருமையானது, வேறு ஒருமணியினால் - மற்றொரு இரத்தினத்தினால், விளங்குமோ - (அதிக அழகினையுடையதாகக்) காணப்படுமோ? [காணப்படாது], என்பாள் - என்று சொல்லுவாள்.

குறிப்பு:—நாறிய-செய்யியவென்னும் வினையெச்சம், இது 'புல்லினால்' என்னும் வினைகொண்டு முடிந்தது. நகையணி-சிரிக்கின்ற மாலையாகிய முல்லைமாலை, முத்துவடமென்று கூறினும்- நகையணியென்பது இடைநிலைத்தீவகமாக நிற்றலின் நல்லவென்பதோடு கூட்டப்பட்டது. "நாமவென்றிவெண்ணகைகொண் மார்பினை'' என்புழி நகை - முத்துவடமென்று ஆசிரியர் நச்சினார்க்கினியரும் மேனியின் கருமைக்கேற்ப வெண்மையணிக ளிழுத்த லழகுடைத்தென்பா ராயினும், இப்புருடோத்தமனது இயற்கையழகு திருத்தக்க திருமேனிக்குமுன் அவைசிறவாவென்பா ளிங்ஙனங் கூறினளெனக. இனி நாறியநல்ல அணிநகைபுல்லினாலெனக் கொண்டு வாசனைவீசுகின்ற மாலையையும் நல்ல ஆபரணங்களையும் அணிந்துகொண்டாலென்பபொருள் கோடலுமொன்று. செவ்வியின், இன் - தவிர்வழிவந்தசாரியை. இனி அதனை ஐந்தனுருபு எல்லைப்பொருளாகக்கொண்டு ஏறிய இவ்வழகைக்காட்டினும் (அழகைச்) செய்யுமோ எனக்கூறலுமமையும். மாறு இல் மணி - விலையில்லாத மணியுமாம். (உ௪)

கரந்திலன் இலக்கண மெடுத்துக் காட்டிய
பரந்தரு நான்முகன் பழிப்புற் றானரோ
விரந்திவ னிணையடிப் பொடியு மேற்கிலாப்
புரந்தர னுலகெலாம் புரக்கின் றானென்றாள்.

இ - ள் கரந்திலன் - (சிறிதும்) ஒளியாதவனுடைய, இலக்கணம் - சாமுத்திரிகா லக்ஷணமனைத்தும், எடுத்து காட்டிய - (உலகத்தாருக்கு) எடுத்துக்காட்டும் பொருட்டாக, பரம் தரு - (இவனுக்குச்) சரீரத்தைத்தந்த, நான்முகம் - நான்குமுகங்களையு

டைய பிரமதேவன், பழிப்பு உற்றான் - நிந்திக்கப்பட்டவனானான்; இவன் இணையடி - இப்புருடோத்தமனது இரண்டு பாதங்களினின்று முதிராத, பொடியும் - தூளியையேனும், இரந்து எற்கிலா - யாசித்துப்பெற்றுக்கொள்ளாத, புரந்தரன் - இந்திரன், உலகு எலாம் - உலகமுழுவதையும், புரக்கின்றான் - ஆளுகைசெய்கின்றான் என்றாள் - என்று நினைத்தாள்.

கருத்து — சகலலக்ஷணமும் பொருந்தும்படி இப்புருடோத்தமனுக்கு உடலையளித்தபிரமதேவன், இவன்பாததூளிக்கும் நிகராகாத இந்திரனுக்குச்செல்வத்தைக் கொடுத்து இவனுக்குச்செல்வங்கொடாமற் போயினனாதலின் அவன் அபகீர்த்திக்கு ஆளானான் என்பதாம். (உரு)

நீத்தமும் பரவையுங் குறுக நெஞ்சிடைக்
கோத்தவன் புணர்விடைக் குளிப்ப மீக்கொள
ஏத்தவம் புரியவொன் றீக லான்பொருள்
காத்தவன் புகழெனத் தேயுங் கற்பினாள்

இ - ள். நீத்தமும் - வெள்ளமும், பரவையும் - கடலும், குறுக - சிறியனவாக, நெஞ்சிடைக்கோத்த - மனத்திற்பதிந்த, அன்பு - (ஸ்ரீராமபிரான் மிசைக்கொண்ட) பிரியமானது, உணர்வு - அறிவு, இடை குளிப்ப - தன்னுள் முழுகிப்போம்படி, மீ கொள - மேற்கொண்டுவிட்டதனால், ஏத்து அவம் புரிய - (ஏழைகள்) ஏத்தாதல் கேடுசெய்ய, ஒன்று (உம்) - ஒருபொருளையும், ஈகலான் - கொடாதவனுடைய, பொருள் காத்தவன் - திரவியத்தைக்காத்திருப்பவனது, புகழ் என - கீர்த்தியைப்போல, தேயும் - அழிகின்ற, கற்பினாள் - கற்பினையுடையவளும்.

குறிப்பு — குளிப்ப மீக்கொள என்னுஞ்செயவென்னெச்சங்கள் முறையேகாரியகாரணப் பொருளில் வந்தன. ஏத்து - முதனிலைத்தொழிற்பெயர். அவம் - கேடு, "அவஞ்செய்வாராசையுட்பட்டு" என்புழி அவம் - கேடு என்றார் பரிமேலழகரும். இல்லாமற்போதலின் கைக்கொண்டதல்லாற் பிறரைச்சந்தேகம் சூழ்ந்ததலாயிற்று. ஒன்றும் என்பதில் உம்மைவிகாரத்தாற்றொக்கது - இனி, ஏத்தவம் புரியவொன் றீகலான் என்பதற்கு, (இரப்பார்) பெருக்கமான தவம் புரியவும் ஒன்றும் ஈகலானெனினுமமையும், ஏண்டு என் என்னும் உரிச்சொல் பெருக்கமென்னுங் குறிப்பினையுணர்த்தும் "ஏகலடுக்கம்" என்புழிப்போல "டல்லல ளனே யேபெற்றும்" என்பதனுரையானுணர்க, [தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரியியல்] புரியவும் என்புழி உம்மை விகாரத்தாற்றொக்கது இனி "ஏத்தவும் புரியவொன்றீகலான்" என்ற பாடபேதத்திற்சேறப இரப்போர் தகாத வாழ்த்துக்களாற் றுதிப்பவும் அவற்றை மனங்கொள்ளாது, விரும்புமாறு ஒன்றையுந் தாராதானது என்பொருள் கூறலுஞ் சாலும். (உசு)

வான்றனில் வரைந்ததோர் மாத ரோவியம்
போன்றனள் புலர்ந்தனள் புழுங்கு நெஞ்சின
டோன்றல் சுடாமணித் தோளி னூடங்க
ஞூன்றினள் பறிக்கவோ ரூற்றம் பெற்றிலள்.

இ - ள். புலர்ந்தனள் - வாட்டங்கொண்டவளும், புழுங்குநெஞ்சினள் - (காமாக்கினியால்) கொதிக்கின்ற மனமுடையவளும், தோன்றல் - காணக்கிடையாதன

வாகிய, சுடர்மணி - பிரகாசம்பொருந்திய மரகதமணியின் நிறத்தினையுடைய, தோளில் - ஸ்ரீராமபிரானுடைய திருத்தோள்களில், நாட்டங்கள் ஊன்றினள் - தனது பார்வையை நிலைநிறுத்தினவளும், பறிக்க - (அங்ஙனம் நிலைநிறுத்தியபார்வையை அத்தோளினின்றும்) பெயர்த்தெடுக்க, ஓர் ஊற்றம் பெற்றிலள் - ஒருவலிமையில்லாதவளுமாகிய சூர்ப்பநகை, வான் தனில் - ஆகாயத்தில், வரைந்தது - எழுதப்பட்டதாகிய, ஓர் - ஒரு, மாதர் ஓவியம் போன்றனள் - பெண்சித்திரம்போல அசைவற்று நின்றாள்.

குறிப்பு கண்ணிமைத்தலுமின்றிப் பார்த்துக்கொண்டு சலியாது நின்றமையால் ஓவியத்தையுவமை கூறினார் 'மாதர் ஓவியம்' என்பதற்கு அழகுவாய்ந்துள்ள சித்திரம் என்பொருள் கொண்டாலுங் கூடுமாயினும் அது சண்டைக்கேலாமையறிக. மாதரென்னுஞ்சொல்லுக்கு அப்பொருளே சிறந்ததமேனும் ஈண்டுப்பெண் என்னுமளவே குறித்துவந்ததென்க. காமம் கைமிகுந்திளைத்தலால் 'புலர்ந்தனள்' என்றார். போல என்னும் உருவிறுவமச்சொல் செயலுவமத்திற்கு வந்தது. இடைச்சொல்லாய் மரீஇவந்த வினைப்பாற் பட்டதாயக்காரணம் கூறப்படாத 'போலும்' என்னும் உவமச்சொல் அன்னவென்பதுபோல மற்றை மூன்றுவமத்தும் பயின்றுவருமென்பதை எய்துவித்தற் பொருட்டன்றே பொருந்நடையவற்றையும் பின்னிறுத்திப் "போல மறுப்ப வொப்ப" எனச்சூத்திரஞ்செய்தாரென்பது. தோன்றல் - பலவின்பால்வினையாலணையும் பெயர் "தோன்றறன" என்பதூஉம்பாடம். ஊற்றம் முயற்சியுமாம் (உ௭)

நின்றன ளிருந்தவ னெடிய மார்பம்
ஒன்றுவெ னன்றெனி னமுத முண்கினும்
பொன்றுவென் போகவினி யரிது போமென்று
சென்றெதிர் நிற்பதோர் செய்கை தேடுவாள்

இ - ள். நின்றனள் - (அவ்வாறு சித்திரம்போல) நின்றசூர்ப்பநகை, இருந்தவன் - ஆங்கிருந்த ஸ்ரீராமபிரானது, நெடியமார்பகம் - விசாலமானமார்பை, ஒன்றுவென் - அணைவேன், அன்றெனின் - அல்லவென்றால், அமுதம் உண்கினும் பொன்றுவென் - அமுதத்தைச்சாப்பிட்டாலும் இறந்துபோவேன், இனி போகத் - இனி (திரும்பிப்) போதல், அரிது போம் என்று - முடியாது போலும் என்றுசொல்லி, சென்று - நடந்துபோய், எதிர் நிற்பது - (ஸ்ரீராமபிரானுக்கு) முன்னே நிற்பதாகிய, ஓர் செய்கைதேடுவாள் - ஒருசெயலை ஆராய்வாளாயினள்.

குறிப்பு —இருந்தவன் என்பதற்குப் பெரியதவசத்தினையுடையார் என்றலுமாம். அமுதம் - மரணத்தை யொழிப்பதெனக் காரணம் பற்றியபெயர் சாவாமருந்தென்பதும் அது போன்ம் - மகரகதறுக்கம் ஸ்ரீராமபிரானுடைய ஆலிங்கனம் இடையாவிடில் அமுதமுண்டாலும் பொன்றுவென் என்று ஸ்ரீராமபிரானுடைய ஆலிங்கனத்திற்குச் சமானமாகிய அமிர்தத்திற்குக் குறைகூறினமையால் இதுவியதிரேகாலங்காரத்தொனி ஸ்ரீராமபிரானுடைய எதிர்நின்றிடற்கும் இவளுக்குக்கூடாதென்பதையேயன்றிச் சேருந்திறன் மனத்தாலுஞ் சித்திக்கவில்லையென்பார் 'சென்றெதிர் நிற்பதோர் செய்கைதேடுவாள்' என்றார் (உ௮)

எயிறுடை யரக்கியெவ் வுயிரு மிட்டதோர்
வயிறுடை யாளென மறுக்கு மாதலால்

குயிறொடர் குதலையோர் கோவைச் செவ்விவாய்
மயிறொட ரியலியாய் மருவ னன்றென்று.

இ - ள் எயிறுடை அரக்கி - (இவள்) வக்கிரதந்தங்களையுடைய இராக்ஷஸி, எவ்வுயிரும் இட்டது - எந்த உயிரையும் வைத்ததாகிய, ஓர் வயிறுடையாள் - பெரிய வயிற்றினையுடையவள், என - என்று நினைத்து, மறுக்கும் - மறுத்துவிடுவான், ஆதலால் - ஆதலினால், குயில் - குயில்கள், தொடர் - (தம்மினமென்று கருதித்) தொடர்ந்து வரத்தக்க, குதலை - குதலைச்சொற்பயின்ற, ஓர் கோவைச்செவ்விவாய் - ஒப்பற்ற கோவைக்கனியை யொத்த சிவந்தவாயினையுடைய, மயில் தொடர் இயலியாய் - மயில்கள் பின்தொடர்ந்து வரத்தக்க சாயலையுடையவளாகி, மருவல் நன்று என்று - பொருந்துதல் நன்மையுடையது என்று நினைத்து

குறிப்பு — உடை - உடைய என்னும் குறிப்புப்பெயரெச்சத்தில் அகரம் விகாரத்தாற்றொக்கது. இட்டம் கருதி எயிறு வக்கிரதந்தம் என்றும் "பிறழ்பல்" என்ற தமிழில் வரும் ஆகாரத்தில் மாத்திரம் சம்பந்தமில்லாமல் ஜீவஹிம்சையில் தத்பரையாயிருந்து கொண்டு மகரிஷிகள் முதல் கண்டபட்ட பிராணிகளை எல்லாம் கொல்லுமவள் என்பது 'எவ்வுயிரும் இட்டதோர் வயிறுடையாள்' என்பதன் கருத்து. மறுக்கும் என்பதனை மறுத்தும் என்பதன் பிறவினையாகக்கொண்டு மனக்கலக்கஞ்செய்வான் என்பொருள் கூறலுமொன்று. இதனால் சர்வஜ்ஞனாகிய ஸ்ரீராமபிரானுக்குத் தான் முற்றுமொவ்வாதவளென்பதைத் தானே யறிந்தாள் என்பதாம். (௨௩)

பங்கயச் செல்வியை மனத்துப் பாவியா
வங்கையி னுயமந் திரத்தை யாய்ந்தன
டிங்களிற் சிறந்தொளிர் முகத்தள் செவ்வியள்
பொங்கொளி விசும்பினிற் பொலியத் தோன்றினாள்.

இ - ள். பங்கயச் செல்வியை - தாமரைமலரில் வீற்றிருக்கின்ற இலக்குமி தேவியை, மனத்து - மனத்திலே, பாவியா - தியானித்து, அங்கையின் ஆய - தன்னைக் கைச்சப்பட்டதாகிய [illegible], மந்திரத்தை—, ஆய்ந்தனள் - தியானித்தாள். (உடனே) திங்களில் சிறந்து ஒளிர் முகத்தள் - சந்திரனைக்காட்டிலும் மேன்மையுடையதாய் விளங்குகின்ற முகத்தையுடையவளும், செவ்வியள் - அழகையுடையவளுமாகி, பொங்கு ஒளி - தனது தேகத்தின் மிகுந்த பிரகாசம், விசும்பினில் பொலிய - ஆகாயத்தில் விளங்க, தோன்றினாள் - காணப்பட்டாள்

குறிப்பு — இமவானில் மரகதப்பாறையில் பதுமையென்னும் [illegible] பொற்றாமரையிற்றிருவெனப்பார் 'பங்கயச்செல்வியை' என்றார். செல்வி - செல்வத்தைத் தருபவள். மனத்து - இல் 'அத்து' சாரியை, "மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை" என்பதனால் எழனுருபின்கண் சாரியைபெற்று "அத்தே வற்றே யாயிரு மொழிமேல், ஒற்றுமெய் கெடுதல் தெற்றென்றற்றே" என்பதனால் மகரங்கெட்டு "அத்தி னகர மகரமுனை யில்லை" என்பதனால் அகரங்கெட்டு முடிந்தது. பாவியா பாவம் என்னும் வடசொல்லடியாகப்பிறந்து வந்த செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம், இஃது ஆய்ந்தனள் என்னும் தன் கருத்தாவின் வினைகொண்டு முடிந்தது. அகம் கை - அங்கையென்றாயிற்று. மந்திரம் - வடசொல், இதற்கு நினைப்பவனைக் காப்பதென்பது அவயவப்பொருள். திங்களில், 'இல்' ஐந்தாம் வேற்றுமையெல்லைப்பொருளது. செவ்வியள் என்பதற்குச் செவ்வியமேனியையுடையவளென

றுவது ஒதத பருவததையுடையவளெனறுவது பினனுமிருவகையாற பொருள கொளளவும படும செவவி - பருவமாதலை "செவவி யருமையும பாரார" என பதனுனுமுணாக. (௬௦)

வேறு.

பஞசியொளிர விஞசுகுளிர பலலவ மனுஙகச
செஞசெவிய கஞசநிமிர சீறடிய ளாகி
யஞசொலிள மஞஞையென வனனமென மினனும
வஞசியென நஞசமென வஞசமகள வநதாள.

இ-ள. ஒளிரபஞசி - சோதிமிருகினற செமபஞசும, குளிரவிஞசுபலலவமு - குளிாசசியிருநத தளிாகளும, அனுஙக - (ஒபபாகமாடடாமைப ல) வருநத, செம செவிய - சிவநத, கஞசம நிமிர - தாமரையைபபோலுமுயாநத, சீறடியள ஆகி - சிறிய பாதஙகளையுடையவளாகி, அஞசொல - அழகியவாாதைகளைபபேசும, இள மஞஞையென - இளமைபொருநதிய மயிலைபபோலவும, அனனமபோல - அனனப பேடையைபபோலவும மினனும வஞசியென - விளஙகுகினற கொடியைபபோல வும, நஞசமென - விஷததைபபோலவும, வஞசமகள வநதாள - வஞசவேடங கொணட சூாபபநகைவநதாள.

குறிபபு — தாமரையைபபோலச செமபஞசிககு எழிலினமைபறறியும, பலல வததிறகுச செமமை யிருநதும அமைபறறியும அவை ஒவவாவெனறாா. 'அனுஙக' என்றாா குளிா - முதனிலை தொழிறபெயா பலலவம - வடசொல தாமரை செமபஞசைபபோலும செமமையும பலலவமபோலும செவவியு முடையதெனபது விளஙக 'செஞசெவிய கஞசம' எனறாா. இனி, 'அனுஙக' எனபதறகியைய வருந் பிடைசசொலலாககொணடு பஞசியும பலலவமுமொதுஙககஞசமபோலு மடியை யுடையளாகி யெனறு கூறுதலுமொனறாம. இது "கயலொதுஙகுவிழி யொளகண ணாள" எனபதுபோலவநததொனறாம. அஞசொல - இனபொருளுடையது. இசசெயயுள மெலலினமொனறானவநதது மெலலெழுததுமிகுநதுவருவது மெ லலிசை வணணம, "மெலலிசை வணணம மெலலெழுததுமிகுமே" எனறாா தொ லகாபபியனாா (௬௧)

பொனனொழுகு பூவிலுறை பூவையெழில பூவைப
பினனெழிலகொள வாளிணை பிறழநதொளிர முகததாள
கனனியெழில கொணடது கலைததட மணிததோ
மினனிழிவ தனமையின விணணிழிவ தெனன

இ-ள. பொனனொழுகு - அழகு ஒழுகுகினற, பூவில உறை - தாமரைபபு ஷபததில வசிககினற, பூவையெழில - இலககுமிதேவியினது அழகையும, பூவைப பின - பூவைபபுளளினிடததுளள, எழில - அழகையும, கொள - தனனிடததுக கொணட, வாளிணை - இரணடுவாளாகிய கணகள, பிறழநது ஒளிர முகததாள - மா றுபடடுவிளஙகும முகததினையுடையாள, கனனி எழிலகொணடது - இளமபெண ணினவடிவைககொணடதாய, கலை - வஸதிரததினையுடைய, தட மணி தோ - பெரி யமணியணிநததேரொனறு, மின இழிவது - மினனோடிறஙகுவது, அனமை - அல லாமல, விண இழிவது - விணணோடிறஙகுவது, எனன - கணடாா சொலலாநிறப.

குறிப்பு — அல்குலாகிய தேரிழியுமிடத்து முதற்கட்டோன்றுவது இடையே யாகலின் மின்னோமுன்னரும் முடிவிற்றோன்றுவது கூந்தலாகலின் விண்ணைப்பின்னருங்கூறினார். இடையே சிறிதுகண்ணிறந்து புலனாதலானமின் என்றும் அச்சிறிதுந்தோன்றாது வெளிபோறலால் விண்ணென்றுங்கூறினாரென்றலு மிழுக்காது. பின் - எழனுருப்பு - பூவையைப்பின்னிய எழில் எனினுமமையும். அதன்கண் அழகு - சொல்லின்ழ்கெனக் - குளகமாதலின் அடுத்துவருஞ்செய்யுளில் வந்தாளென்னும் வினைகொண்டது. (௬௨)

கானினுயர் கற்பக முயிர்த்தகதிர் வல்லி
மேனிநனி பெற்றுவிளை காமநெறி வாசத்
தேனின்மொழி யுற்றினிய செவ்விநனி பெற்றோர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்.

இ - ள். கானின் உயர் - வாசனையினாலுயர்ந்த, கற்பகம் - கற்பகவிருக்ஷம், உயிர்த்த - பெற்ற, கதிர்வல்லி - பிரகாசமுடைய கொடியின்து, மேனி - வடிவத்தை, நனிபெற்று - மிக்ககொண்டு, விளை காமம் நெறி - உற்பத்தியாகும் காமவிச்சைக்குவழியாகிய, வாசம் தேனின் மொழியுற்று - வாசனையுள்ளதேன் போலும் சொற்களையடைந்து, இனிய செவ்விநனிபெற்று - கண்ணுக்கினிமையான அழகினை மிக்ககொண்டு, ஓர் மானின்விழிபெற்று - ஒப்பற்றமான் போலுங்கண்களையடைந்து, மயில்வந்தது - ஒருமயில்வந்ததென்னும்படி, வந்தாள் - வந்துசேர்ந்தாள்.

குறிப்பு — கான் - பூங்காவனமுமாம். கற்பகமுயிர்த்த கதிர்வல்லி-காமவல்லி, "கற்பகஞ் சேர்கொடி காமவல்லி" இது நிகண்டு. மேனி-நிறத்தினுக்கு ஆகுபெயர். விளைகாமம் - முற்றியகாமம்; விளைதல் - முற்றுதல். செவ்வி - எண்டுமேனோதய, நடுவுநிலைமையுமாம்; "செவ்வியானைக்கேடும்" என்றதிருக்குறளினும், "செவ்வியரல்லார்" என நாலடியாரினும் பயின்றுவருதலால் செவ்வி நடுவுநிலைமையாதறெளிது. அழகுகூறவந்தவிடத்து நடுவுநிலைமையும் உடன்கூறியதென்றுகொளின், குணமுமழகுமுள்ளவழியன்றே அவையுடையார்க்கு இவண்மாட்டுக் காமம் நிகழுமென்பது கருதிக்கொண்டது வெளிப்படுத்தற்கெனக் . நடையானுவமைதோன்றுமாறுங் கருதி 'மயில்வந்த தென்வந்தாள்' என்றார். "மயினமருஞ்சடைப்பூங்கொம்பே" எனவும் "நடைமயிலே" எனவும் சிரம்பிய இலக்கணத்தவாகிய சான்றோர்செய்யுட்களில் பயின்றுவருவதால் மயில் நடைக்குவமையாதலறிக. (௬௩)

நூபுரமு மேகலையு நூலுமற வோதிப்
பூமுரலும் வண்டுமிவை பூசலிடு மோசை
தாமுரைசெய் கின்றதொரு தையல்வரு மென்னாக்
கோமகனு மத்திசை குறித்தனன் விழித்தான்.

இ - ள். நூபுரமும் - சிலம்பும், மேகலையும் - அரைப்பட்டிகையும், நூலும் - ஆடையும், அறல் ஓதி - கருமணல்போலுங் கூந்தலிலணிந்த, பூ - புஷ்பத்தில், முரலும் - ஒலிசெய்கின்ற, வண்டும் இவை - வண்டுகளுமாகிய இவைகள், பூசல் இடும் - ஒன்றுடன் ஒன்றுதாக்கும், ஓசை - சப்தத்தினால், உரைசெய்கின்றது - பொருள் செய்யப்படுவதாகிய, ஒருதையல்வரும் என்னா - ஒருபெண்வருகின்றாளென்று, கோமகனும் - ஸ்ரீராமபிரானும், அத்திசை - (ஓசைவரும்) அந்தத்திசையை, குறித்தனன் விழித்தான் - குறித்துப்பார்த்தான்.

குறிப்பு.—நூபுரம், மேகலை - வடசொற்கள். மேகலை - பவளக்கோவை எட்டினாற்செய்தது. "எண்கோவை மேகலை காஞ்சி யெழுகோவை - பண்கொள் கலாபம் பதினாறு - கண்கொள், பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு, விரிசிகை யென் றுணரற் பாற்று" - என்பதனானுணர்க. நூல் - அதனாலாய ஆடைக்குக் கருவியாகு பெயர். இதுகண்கூடுவரி, கண்கூடாவது பரிசதரிசனம், அஃதாவது காட்சி, அஃது ஒருவர்கூட்டவன்றித் தானே வந்துநிற்குநிலைமை, என்னை? "கண்கூடாவது கருதுங் காலை, இசைப்ப வாராது தானே வந்து, தலைப்பெய்து நிற்குந் தன்மைத்தென்ப" என்றாராகலின். கோமகன் - சக்கரவர்த்தி திருமகன், வில்வல்லானுமாம். பரமபதநாதனென்றுரைப்பினுமிழுக்காது. குறித்தனன் விழித்தான் - முற்றெச்சங்கள்.

விண்ணருள வந்ததொரு மெல்லமுத மென்ன
வண்ணமுலை கொண்டிடை வணங்கவரு போழ்தத்
தெண்ணருளி யேழைமை துடைத்தெழுமெய்ஞ் ஞானக்
கண்ணருள்செய் கண்ணனிரு கண்ணினெதிர் கண்டான்.

இ - ள். ஒருமெல் அமுதம் - ஒருமென்மையான அமுதமென்பது, விண் அருள வந்தது என - ஆகாயந்தர (பூவிக்கு) வந்ததென்னும்படி, வண்ணமுலை கொண்டு - அழகியதனங்களைக்கொண்டு, (அதனால்) இடைவணங்க - மருங்குல் வளைந்துவளும்படி, வருபோழ்தத்து - (சூர்ப்பநகை) வரும்பொழுது, (அவளை), எண் அருளி - எண்ணினைத்தந்து, ஏழைமைதுடைத்து - (அதனால்) அறியாமையைநீக்கி, எழும் - பின்னுண்டாகின்ற, மெய் ஞானம் கண் - தத்துவஞானமாகிய கண்ணினை, அருள்செய் - கொடுத்தருளுகின்ற, கண்ணன் - ஸ்ரீராமபிரான், இருகண்ணின் - தனது உபயநேத்திரங்களாலும், கண்டான் - பார்த்தருளினான்.

குறிப்பு.—இவள் விண்ணினின்று மிழிந்ததன்மை விண்ணுலகத்துள்ள அமுதம் வந்ததை யொப்பாளென்றபடி. காட்சியின் உயிர்மயக்குறுதலிற் கொல்லியற் பாவை போன்றாள் அவ்வாறு அழியுமுயிரையிமைப்பிற்றருதலின் அமுதத்தையும் போன்றாள் என்பதாம். வண்ணம் - வர்ணம் என்பதன்றிரிபு. பொழுது - போழ்து என விகாரப்பட்டுவந்தது. அத்து சாரியை. எண் - கணிதம், அது கருவியும் செய்கையுமென இருவகைப்படும். அவை ஏரம்பமுதலிய நூல்களுட்காண்க. எண்ணென்றதனால் தன்னோடொற்றுமையுடையதாய இன்றியமையாத எழுத்துங்கொள்க. இவை அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின் அவற்றையருளி என்றார். அவைகருவியாதல் "ஆதி முதலொழிய வல்லா தன்வெண்ணி-னீதி வழுவா நிலைமையவான், மாதே - அறமார் பொருளின்பம் வீடென்றிவற்றின் - றிறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு," "எழுத்தறியத் தீருமிழிதகைமை தீர்ந்தான், மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு-மொழித்திறத்தின், முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து, கட்டறுத்து வீடு பெறும்" இவற்றானறிக. தேயமிடையிட்டவற்றையும் காலமிடை யிட்டவற்றையும் காணுதலின் ஞானத்தைக்கண்ணென்றார் "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங் - கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்னு மிவ்வருமைத் திருக்குறளையு மீண்டு நோக்குக. ஞகரமிரட்டித்தது "மிகலுமாம்" என்றதனால். கண்ணன் - கிருஷ்ணன் எனும் வடமொழித்திரிபு, அடியார்களது பாவங்களையொழிப்பவனென்பது பொருள். கருமைநிறமுடைமையிற் கிருஷ்ணனென்பாருமுளர் - இன்னும் வேறு வேறு பொருளுங்கூறுவர், அவையெல்லாம் வடமொழிவல்லார் வாய்க்கேட்டுணர்க. ஈண்டுரைப்பிற்பெருகும். இ

தனால், தன்னடியார்கட்கு எண்ணினவழி மெய்ஞ்ஞானத்தையளித்தருளும் அமலனாகிய பிரானாகிய எம்பெருமான் இவளது மெல்லமுதமாகிய பெண்டன்மைகண்டு பேதுற்றுப் பெருமைகுன்றானென்பது நன்கு குறிப்பிக்கப்பட்டமையறிக. (கரு)

பேருழைய நாகருல கிற்பிறிதின் வானின்
பாருழையி னில்லதொரு மெல்லுருவு பாரா
வாருழை யடங்குமழ கிற்கவதி யுண்டோ
நேரிழையர் யாவரிவர் நேரென நினைந்தான்

இ-ள். பேருழைய - அகன்ற இடத்தினையுடைய, நாகர் உலகில் - நாகலோகத்திலும், வானின் - தேவலோகத்திலும், பாருழையின் - புவியினும், இல்லது - இல்லாததாகிய, ஒரு - ஒப்பற்ற, மெல் - மென்மையான, உருவு - (சூர்ப்பநகையினது) உருவத்தை, பாரா - பார்த்து, ஆர்உழை அடங்கும் - யாவரிடத்தடங்கும், அழகிற்கு - அழகினுக்கு, அவதி உண்டோ - எல்லையுண்டோ? [இல்லை], இவர்நேர் - இவருக்கு நிகரானவர், நேரிழையார் யாவர் என - மாதர்களில் எவர்களிருக்கின்றாரென்று, நினைந்தான் - எண்ணினான்.

குறிப்பு — பெருமையென்னும் பண்பு திரிந்து பேர் என நின்றது. இதுவும் இது போன்ற அருமை - கருமை முதலிய பண்பின் திரிபுகளுமுயிர் முதன்மொழிகளோடேயே பெரும்பாலும் புணர்ந்துவருமென்க. உழைய குறிப்புப்பெயரெச்சம். வான் - ஆகுபெயர். பார் - பருமையையுடையதென்ப பண்பாகுபெயர். பார்க்கப்படுவதென்னும் பொருளில் வந்ததென்பாருமுளர். பாரா இச்செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் நினைந்தான் என்னும் தனக்குரித்தாவின வினைகொண்டது. ஆர் - யாவரென்பதன் மரூஉ. இவளிடத்துள்ள இவ்வழகு பிறரிடத்துள்ள அழகில் அடங்குவதில்லை என்றபடி. "யாநலத்துள்ளதூஉ மன்று" என்றிருத்தலுங்காண்க- "ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியு, மொன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும், வழக்கினாகிய வுயர்சொற்கிளவி, யிலக்கண மருங்கிற் சொல்லா றல்ல" என்றவழுவமைத்ததனான் 'இவர்' எனச்சுட்டினான். இதனால் ஸ்ரீராமன் பரஸ்திரீயைக் கனவிலும் நினையானென்பது குறிப்பிக்கப்பட்டமை யறியக்கிடத்தல் காண்க. (கசு)

அவ்வயின் வாசைத னகத்துடைய வன்னாள்
செவ்விமுக முன்னியடி செங்கையி னிறைஞ்சா
வெவ்விய நெடுங்கணயில் வீசியயல் பாரா
நவ்வியி னொதுங்கியிறை நாணியய னின்றாள்,

இ-ள். தன் அகத்து - தன்மனத்தின்கண்ணே, அ ஆசை உடைய - (ஸ்ரீராமபிரானைப் புணருவான் கொண்ட) அந்த ஆசையினையுடைய, அன்னாள் - அத்தகையளாகிய சூர்ப்பநகை, அவ்வயின் - அவ்விடத்தே, செவ்விமுகம் - (ஸ்ரீராமபிரானது) அழகிய முகத்தை, உன்னி - (மனத்தில்) நினைத்தவளாய், அடி - (அவனது) திருவடிகளை, செங்கையின் இறைஞ்சா - (தனது) சிவந்த கைகளினால் வணங்கி, நெடுங்கண் - நெடியகண்களாகிய, வெவ்விய அயில் வீசி - கொடியவேலை (ஸ்ரீராமபிரான் மேற்படும்படி சுழற்றி) எறிந்தும், [ஸ்ரீராமபிரானைக்காமத்தை விளைக்குங்கொடியபார்வையாற் பார்த்தும்], அயல்பாரா - (பின்னும் அவனைப்பாராதவள் போற்) பக்கத்திற்பார்த்தும், இறைநாணி - சிறிதுவெட்கப்பட்டு, நவ்வியின் ஒதுங்கி - மானைப்போல ஒதுங்கியும், அயல் நின்றாள் - (அவன்) பக்கத்தே நின்றாள்.

குறிப்பு:—அவ்வழின் - அப்பொழுது எனினுமாம். முகத்தையேறிட்டு நோக்காமை விளங்க 'உன்னி' என்றார். செங்கையினிறைஞ்சல் - குயபிடுதல். கண்ணையிலவிசி - விபரீதவுணர்ச்சி பெருங்காமிகள் நாணிலராயினும் தம்மைமதித்தற் பொருட்டு மாயவிச்சைபுரிவரென்பார் 'இறைநாணி' என்றார். நாணமாவது - காமக்குறிப்பு நிகழ்ந்தவழிப் படுவதோர் உள்ளவொடுக்கம் - இது மடவார் சுகுரியமுக குணங்களிலொன்று - மற்றையிரண்டு அச்சமும் மடனும் பயிர்ப்பும், பேதைமையும், நிறையுங்கூறுவர். (௧௭)

தீதில்வர வாகதிரு நின்வரவு சேயோய்
போதவுள தெம்முழையோர் புண்ணியம தன்றோ
வேதுபதி யேதுபெயர் யாவருற வென்றான்
வேதமுதல் பேதையவ டன்னிலை விரிப்பாள்.

இ-ள். வேதமுதல் - வேதத்தின் முதற்பொருளான ஸ்ரீராமபிரான், சேயோய் - சேய்மையிலுள்ளவரே! திருநின்வரவு - சிறப்பினையுடைய நும்முடைய வருகையானது, தீது இல்வரவு ஆக - நல்வரவாகக்கடவது, (நும்மைப்போலும் உயர்குலமடவார்), போத உளது - (எம்மை ஒருபொருட்டாய் நீ தேடி) வரப்போந்தது, எம் உழை ஓர் புண்ணியம் அது அன்றோ - எம்மிடத்திலிருக்கின்ற ஒருபுண்ணியத்தினாலல்லவா? ஏதுபதி - (நுமது) இருப்பிடம் யாது? ஏதுபெயர் - (நுமது) பெயர் யாது? யாவர் உறவு - (நுமது) பந்துக்கள் யாவர்? என்றான் - என்று வினவினான், (அவ்வினாக்கட்கு விடையாக), பேதை அவள் - அறிவிலியாகிய அச்சூர்ப்பநகை, தன் நிலை - தனது நிலைமையை, விரிப்பாள் - (பின்வருமாறு) விரித்துச்சொல்வாளாயினாள்.

குறிப்பு:—சேய்மை - தூரம். விண்ணினின்றிழிந்தமையால் 'சேயோய்' என்றார். இனி, இளையவளே எனவும், செம்மையென்னும் பண்பின் றிரிபாகக்கொண்டு செவ்வியோயெனவுங் கூறலாம். வேதமுதல் - அன்மொழித்தொகை. மாதர்க்கணிகலமாகிய பேதைமையைக் குறித்தறிவின் தக்காளல்லளாதலின் அறிவிலியென்னும் பொருளில் 'பேதையவள்' என்றார். (௧௮)

வேறு

பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்விமுப் புரங்கள் செற்ற
சேவலோன் றுணைவ னான செங்கையோன் றங்கை திக்கின்
மாவெலாந் தொலைத்து வெள்ளி மலையெடுத் துலக மூன்றுங்
காவலோன் பின்னை காம வல்லியாங் கன்னி யென்றாள்

இ-ள். பூவிலோன் - தாமரைமலரிலிருக்கின்ற பிரமதேவனது, புதல்வன் - புத்திரனாகிய புலஸ்தியப்பிரமமாவினுடைய, மைந்தன் - குமாரனாகிய விச்சிரவசுவினது, புதல்வி - மகள், முப்புரங்கள் செற்ற - திரிபுரங்களையும் தகித்தருளிய, சேவலோன் - ருஷபவாகனத்தையுடைய சிவபிரானது, துணைவன் ஆன - தோழனான, செங்கையோன் - குபேரனது, தங்கை—, திக்கின் மா எலாம் தொலைத்து - திக்கஜங்களை யெல்லாம் வென்று, வெள்ளிமலை எடுத்து - கைலாசமலையை (அடியோடு) தூக்கி, உலகம் மூன்றும் - திரிலோகங்களையும், கா - காவல்செய்கின்ற, வலோன் - வல்லவனான இராவணனுக்கு, பின்னை - தங்கை, காமவல்லியாம் கன்னி என்றாள் - (நான்) காமவல்லியென்று சொல்லப்படுகின்ற கன்னி என்று சொன்னாள்.

குறிப்பு —"எந்தப்பதி? எந்தப்பெயர்? எவருறவு?" என்ற கேள்விக்கு இன்னவூர், இன்னபெயர், இன்னார் உறவு என்று நேரே விடையளித்தலைவிட்டு 'பூவிலோன் புதல்வன்மைந்தன்' என்று தொடங்கிக் குலத்தின் ஏற்றத்தையே முதலில் எடுத்துக்காட்டினாள். ஏனெனில், நிலையில்லாத காமசாரிணியாய் எங்கும் சஞ்சரிப்பவளென்றால் குடியிருக்கவுமிடமில்லாது காலாடியாய்த் திரிபவளென்றும், சூர்ப்பநகை என்று நாமத்தைச் சொன்னால் முறம்போலொத்த நகத்தினையுடைய பயங்கரியான ராக்ஷஸியென்றும் நினைந்து உத்தேச காரியத்திற்கிசைபாது மறுத்துவிடுவான் என்று கருதியென்க. பூவிலோன் புதல்வன்மைந்தன் புதல்வி என்றாள் தன்னை அதாம குலகோத்திரையென்று நினையாமல் ஸத்குலப்ரஸூதையென்று நினைப்பதற்கென்க. பூவிலோன் - பூவை இல்லாக உடையவன், பிரசித்தனான விசிரவசு என்பவனுடைய புதல்வியென்றதனாலேயே குலத்தினேற்றந் தோன்றவிருக்கப் பிரமனைத் தொடுத்துச் சொன்னகாரணமென்னெனில், "வியாஸம் வஸிஷ்டநப்தாரம்" என்ற வியாசருடைய புகழ்பேச வந்தசுலோகத்தில், வசிட்டருடைய கொட்பேரன், சக்தியினுடைய பேரன், பராசரன் மைந்தன், சுகன் தந்தை என்று மஹரிஷிசந்ததியின் ஏற்றத்தை எடுத்துச்சொன்னதுபோலத் தன் குலத்தின் ஏற்றத்தை விவரிப்பதற்காகவென்க. 'முப்புரங்கள் செற்ற சேவகனார் துணைவனான செங்கையோன் தங்கை' நேரேதமையன்மார்களாகிய ராவணகும்பகர்ணாதிகளுடைய தங்கையென்று சொன்னால் தன் ராக்ஷஸ ஜன்மத்தையும் க்ரௌர்யத்தையும் காட்டுமென்றும் அது உத்தேசகாரியஹானியென்றும் கருதித் தனக்குத் தெய்வத்தன்மையும் தோன்றும்படி அண்டாதிகாரிகள் மூவரில் ஒருவனாகிய திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளின் தோழமை கொண்ட திக்பாலகனாகிய குபேரன் தங்கையென்றெடுத்துக்காட்டினாள். செங்கையோன்-செம்மையாகிய கையினன், சம்பத்தைக்கொடுக்கின்றவனாதலினாற் கைக்குச் செம்மை கொடையென்பது தெள்ளிது, இதனால் நீ வறுமை நீங்கிச் சுகிக்கலாமென்பதைத் தோற்றுவித்தாளென்க. 'திக்கின் மாவெலாந் தொலைத்து வெள்ளிமலையெடுத்து உலகம் மூன்றுங் காவலோன் பின்னை' இதனால் பிரமகுலோற்பந்நையும், வைசிரவணன் தங்கையும், சுந்தரியுமாகிய இவளைச் சகைப்பற்றும் விஷயத்தில் இராக்ஷஸர்களுடைய பீதியினும் அதிகமாகவன்றோ வளருமென்று சங்கைதட்டாதிருக்கும்படிக்குப் பின் தனக்குள்ள மெய்வலிமை கூறுகின்றாள். கதறச்செய்யுமவன் என்னும் பொருட்டாய 'இராவணன்' என்ற பெயர் குறிப்பால் அது கலக்கத்திற்கிடமாய்க் கைவிட்டதற்கு மேதுவாமென்று கருதியொழிந்து அத்த நக்ரமாய அப்பெயரைக் குறித்தாள், மாவெலாம் தொலைத்து என்பதனால் அழச்செய்கிறவன் என்பதும் வெள்ளிமலையெடுத்து என்பதனால் அழும்வன் என்பதும் பெறப்படுமாறிருத்தலறிக. பின்னை - ஆகுபெயர் வைதவ்விய மடைந்திருக்கு நிலைமையில் தன்னைக் கன்னியென்றாள் அதுவும் இராமன் தன்னை அங்கீகரித்தற்கோர் காரணமாகவென்கருதியென்க (௬௧)

அவ்வுரை கேட்ட வீர னையுறு மனத்தான் செய்கை
செவ்விதன் றறித லாகுஞ் சிறிதினென் றுணரச் செங்கண்
வெவ்வுரு வமைந்தோன் றங்கை யென்றது மெய்ம்மை யாயி
னிவ்வுரு வியைந்த தன்மை யியம்புதி யியல்பி னென்றான்.

இ-ள். அவ்வுரை கேட்ட வீரன் - அந்தச்சொற்களைக்கேட்ட ஸ்ரீராமபிரான், ஐயுறுமனத்தான் - சந்தேகங்கொண்ட மனத்தினையுடையவனாகி, செய்கை - (இவளது) நடக்கை, செவ்விது அன்று - அழகியது அல்ல, சிறிதின் அறியல

ஆகும் என்று - சற்றுநேரத்தில் தெரியலாம் என்று, உணர - (அதனை) அறியும் பொருட்டு, செங்கண் - சிவந்தகண்களும், வெவ்வுரு - வெவ்விய வுருவமும், அமைந்தோன் - பொருந்தினவனான இராவணனது, தங்கை என்றது - தங்கை என்று நீ கூறியது, மெய்ம்மை ஆயின் - உண்மையே ஆனால், இ உரு இயைந்த தன்மை - (உனக்கு) இவ்வுருவம் பொருந்திய தன்மையை, இயல்பின் இயம்புதி - உள்ளவாறே சொல்லாய், என்றான் - என்றருளிச்செய்தான்.

குறிப்பு —"பிரமாணவயமப்ரசந்து நாகோவா" என்ற சுலோகத்தில் இராமனால் கொல்லத் தீர்மானிக்கப்பட்டவனை பிரமருத்திரேந்திராதிகளாலும் காக்க முடியாதென்றும், "ஸபித்திராச" என்கிற சுலோகத்தில் அமூவருள்பட உலகத்திலுள்ளயாவராலும் காகாசுரன் கைவிடப்பட்டானென்றும், "பிசாசாந்தான வாநயக்ஷாந்" என்கிற சுலோகத்தில் கோடிராவணன் போன்றவர்கள் வந்தாலும் சுண்டுவிரனகத்தால் கொல்லுவேன் என்றும் கூறியிருப்பதும் தவிர திருவணை நிர்மாணித்ததையும் வாலியைவதைத்ததையும், கார்த்தவீரியனையும் கொன்ற பரசுராமனை வெற்றிகொண்டதையும், மேருசாரமான ஹரகோதண்டத்தைப்பங்கம் செய்ததையும், பின்னும் பலபராக்கிரமங்களையும் கவிதான ராமாயணமுகமாயக்கண்டவ ராகையால் சூர்ப்பநகை வியந்துபேசின இராவணன் விஷயத்தில் ஸ்ரீராமபிரான் சிறிதுமச்சமுறாமல் திரணப்பிராயமாக மதித்துப்பேசினான் என்பதைவிளக்க 'வீரன்' என்றார். மேல், வீரன் என்ற பதப்பிரயோகத்தால் சுண்டு ஐயுறுதல் ராவணன் மாட்டன்று, சூர்ப்பநகையின் பரஸ்பரவிரோதமான ஜாதிரூபங்களில் எனக் செவ்வித்து - செம்மையென்னும் பண்படியாகப்பிறந்த குறிப்புவினை 'சிறிதின் அறியலாகும்' என்பதற்கு, இவ்விஷயம் திரப்புகுந்து விசாரிக்கவேண்டுவது அநாவசியமேயாயினும் வந்தமட்டில் சிறிதுவிசாரிப்போம் என்று பொருள் கூறலுமாம். பொய்யே கூறுமவளாகலால் 'இயல்பின் இயம்புதி' என்றான். (௪௰)

தூயவன் பணியா முன்னஞ் சொல்லுவாள் சோர்வி லாளம்
மாயவல் லரக்க ரோடும் வாழ்வினை மதிக்க லாதே
னாய்வுறு மனத்தே னாகி யறந்தலை நிறப்ப தானேன்
றீவினை தீய நோற்றுத் தேவரிற் பெற்ற தென்றாள்.

இ - ள். தூயவன் பணியாமுன்னம் - பரிசுத்தனாகிய ஸ்ரீராமபிரான் அவ்வாறு பணித்தருளுவதன் முன்பு, சோர்விலாள் சொல்லுவாள் - சொற்சோர்வில்லாதவளாய அந்தச்சூர்ப்பநகை சொல்லத்தொடங்குவாள், அ மாயவல் அரக்கரோடு - மாயங்களில் வலிய அந்த இராக்ஷதர்களோடு, வாழ்வினை - வாழ்ந்திருத்தலை, மதிக்கலாதேன் - மதிக்காதவளாகிய நான், ஆய்வுறுமனத்தேன் ஆகி - நன்மையிது தீமையிது என்று ஆராய்ந்தறியத்தக்க மனத்தினையுடையவளாகி, அறந்தலை நிறப்பதானேன் - தருமத்தின்வழியே யொழுகுதலுற்றேன், (மற்றும்) தீவினை தீய - பாபகாமங்கள் நசித்துப்போம்படி, நோற்று - நோன்பியற்றி, தேவரிற் பெற்றதென்றாள் - (இவ்வுருவம்) தேவர்களாற் பெறப்பட்டது என்று சொன்னாள்.

குறிப்பு —தூயவன் - தூய்மையென்னும் பண்படியாகப்பிறந்த பெயர். பணித்தல் - அருளிச்செய்தல், "படையுளப்படுவோன் பணிமொழிகூறி" என்னுமிடத்தில் பணித்தல் - இசைச்சொல்லென்று கொண்டு "விண்டலை யாவாகும் வேந்தா வன் டில்லைமெல் லுகழிருழ, கண்டலையேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகன்

வா, கண்டிலே யேவரக் கங்குலெல்லாமங்குல் வாய்விளக்கு, மண்டல மேபணியாய்த் தமியேற்கொரு வாசகமே" என்றித்தொகைகாட்டாகக் காட்டிப் பணிவிடையென்னும் வழக்குமது என்றார் அடியார்க்கு நல்லார். சோர்வு - சொல்லவேண்டுவதனை மறப்பானொழிதல், இனி, பொய்ம்மொழி புகற்றக்கண் சிறிதும் சோர்விலளாகி யென்னலுமாம். மாயம் - மாயையின் காரியம் - தேவரிற்பெற்றது என்பதற்குத் தேவர்களைப்போலப்பெற்றது என்னலுமாம், இதில் 'இல்' ஐந்தன் ஒப்புப்பொருண்மைக்கண் வந்தது. தேவர்களைப்போலப் பெறுதலாவது - தேவர்களைப்போலப்புண்ணியத்தின் மிகுதிப்பாட்டான் நல்லுருப்பெறுதல். புண்ணியத்தின் மிகுதியால் மனிதர் நல்லுருப் பெற்றுத்தேவர்களாகின்றாரென்பது நூற்றுணிபு. (௪௧)

இமையவர் தலைவ னேயு மெளிமைபி னேவல் செய்யு
மமைதியி னுலக மூன்று மாளபவன் றங்கை யாயின
சுமையுறு செல்வத் தோடுந் தோன்றலை துணையு மின்றித்
தமியைநீ வருதற் கொத்த தன்மையென் றைய லென்றான்.

இ - ள் தையல் - பெண்ணே ! இமையவர் தலைவனேயும் - தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனும், எளிமையின் - எளியதன்மையில், ஏவல்செய்யும் - பணிவிடை செய்தற்குக் காரணமாகிய, அமைதியின் - மாட்சிமையுடனே, உலகம் மூன்றும் ஆளபவன் - திரிலோகங்களையும் ஆளுகின்ற இராவணனது, தங்கை ஆயின - தங்கையேயானால், சுமை உறு செல்வத்தோடும் - மிகுதியான செல்வப் பெருக்கத்தோடும், தோன்றலை - வந்தாயில்லை, துணையும் இன்றி - யாதொருதுணையுமில்லாமல், தமியை - ஒன்றியாய், நீ -, வருதற்கு - (நடந்து) வருதற்கு, ஒத்த தன்மை என - பொருந்திய நிலைமையாது? என்றான் - என்று வினவினான்.

குறிப்பு — இமையவர் தலைவனேயும் - உம்மை உயர்வு சிறப்பு. எளிமை - எளிதாந்தன்மை, பண்புப்பெயர். அமைதியின் ஆளுதல் - கலகமின்றி யாளுதலுமாம், அதாவது, பகைவரின்றி யாளுந்தன்மை. தங்கை - முறைப்பெயர். சுமையுறு செல்வம் - கோபிக்கின்ற செல்வமுமாம். அவை வாத்தியமும் யானை குதிரை முதலிய விருதுகளும் சுமையொலியாதலை, "கட்டலை சுமமை கலிலேய யழுங்க லென்றிவை நான்கு மரவப் பொருள்" என்னும் தொல்காப்பிய வுரியியற் சூத்திரத்தானுணர்க. இங்குச் சுமையென இடை குறைந்து வந்தது. (௪௨)

வீரனஃ துரைத்த லோடு மெய்யிலாள் விமல யானச்
சீரிய ரல்லார் மாட்டுச் சேர்கிலென் றேவர் பாலு
மாரிய முனிவர் பாலு மடைந்தனெ னிறைவ வீண்டோர்
காரிய முண்மை நின்னைக் காணிய வந்தே னென்றாள்.

இ - ள் வீரன் - ஸ்ரீராமபிரான், அஃது உரைத்தலோடும் - அம்மாற்றங் கூறியவுடனே, மெய் இலாள் - உண்மைபேசுதலில்லாத சூர்ப்பநகை, விமல - சுவாமீ! யான் - நான், அச்சீரியர் அல்லார் மாடு - அறிவுடையோரல்லாராகிய அவ்வரக்கர்பக்கத்தே, சேர்கிலென் - சேரவேயில்லேனாகி, தேவர்பாலும் - தேவர்கள் பக்கத்தும், ஆரியமுனிவர்பாலும் - ஆரியராகிய ருஷிகள்பக்கத்தும், அடைந்தனென் - சேர்ந்தேன், இறைவ - அரசே! ஈண்டு ஓர் காரியம் உண்மை - ஈங்கோர்காரியமிருக்கின்றதை உத்தேசித்து, நின்னை - நும்மை, காணிய வந்தேன் - காணுதற்காகவந்தேன், என்றாள் - என்று சொன்னாள்.

குறிப்பு —மெய்யிலான் என்பதற்கு - உண்மையான தேகமில்லாதவனென்றும் பொருளமையும். விமல - அண்மைவிளி, மலரகிதனே என்பது பொருள். ஆரியமுனிவர் - பூஜ்யர்களான முனிவர்கள், முனிவர் - பகவத்தியான முடையவர் இமயமலைக்கும் பொதியமலைக்கும் இடையிட்ட தேசம் ஆரியமெனப்படுதலால் ஆங்குள்ள முனிவரென்பார் 'ஆரியமுனிவர்' என்றார். இனி, ஆரியம் வடமொழியாதலின் அதனிலமைந்த வேதவேதாங்கங்களிற் றேர்ந்த அறிஞராகிய முனிவரெனினுமமையும். காணிய - செய்யியவென்னும் வாய்பாட்டுவினையெச்சம், அது வாழ்த்தென்னும் வினைகொண்டது (௫௩)

அன்னவ ளுரைத்த லோடு மையனு மறிதற் கொவ்வா
நன்னுதன் மகளிர் சிந்தை நன்னெறிப் பால வல்ல
பின்னிது தெரியு மென்னாப் பெய்வளைத் தோளி யென்பா
லென்னைகா ரியத்தைச் சொல்லஃ தியையுமே லிழைப்ப லென்றான்

இ-ள் அன்னவள் - அச்சூர்ப்பநகை, உரைத்தலோடும் - (அங்ஙனங்) கூறியவுடனே, ஐயனும் - ஸ்ரீராமபிரானும், நல் நுதல் மகளிர் சிந்தை - அழகிய நெற்றியையுடைய மாதர்களது எண்ணங்கள், அறிதற்கு ஒவ்வா - (இலேசில்) அறிந்துகொள்வதற்கு ஒவ்வமாட்டா, [முடிவனவல்ல], (மேலும்), நல் நெறிப்பால அல்ல - சன்மார்க்கத்தையடுத்தவையு மல்ல, இது - இவளெண்ணம், பின் தெரியும் என்னா - இனிமேல் (பேசப்பேச) அறியலாமென்று நினைந்து, பெய் வளை தோளி - வளையலணிந்த கைகளையுடையாய்! என்பால் - என்னிடத்தே, என்னை காரியத்தை - யாது காரியத்தினையுடையாய்? சொல் - உரைப்பாயாக, அஃது - அக்காரியம், இயையுமேல் - (மனத்துக்குப்) பொருந்துமே யாயின், இழைப்பல் - செய்வேன், என்றான் - .

குறிப்பு —அன்னவள் - அன்னம்போன்றவளுமாம் ஐயன் - ஆர்யன் என்னும் வடமொழிப்பாகதமாய் ஐயன் என வந்தது, அழகனும் சுவாமியும் மூத்தோனும் எனத் தமிழ்மொழியாகக்கொண்டு பொருள்கூறுதலுமாம் "அன்புநா லாக வின்சொ லலர்தொடுத் தமைத்த காதல், வின்பஞ்செய் காமச் சாந்திற் கைபுனைந் தேற்ற மாலை, நன்பகற் சூட்டி விள்ளா தொழுகினு நங்கை மார்க்குப், பின்செலும் பிறர்க ணுள்ளம் பிணையனார்க் கடிய தன்றே" எனவும் 'பெண்ணெனப் படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா, வுண்ணிறை வுடைய வல்ல வோராயிர மனத்த வாகும்" எனவும் சிந்தாமணியில் மகளிர்சிந்தையறிதற் கொவ்வாத்தன்மைய வெனக்கூறியிருத்தல் காண்க தோளி - அண்மைவிளி காரியத்தை - காரியத்தினையுடையை என முன்னிலைவினை. (௫௪)

தாழுறு காமத் தன்மை தாங்களே யுரைப்ப தென்ப
தாமென லாவ தன்றா லருங்குல மகளிர்க் கம்மா
வேமுறு முயிர்க்கு நோவே னென்செய்கேன் யாரு மில்லேன்
காமனென் றொருவன் செய்யும் வன்மையைக் காத்தி யென்றாள்.

இ-ள் தாம் உறு காமம் தன்மை - தாங்களடைந்த காமத்தினது நிலைமையை, தாங்களே உரைப்பது என்பது - தாமே (தமது வாயினின்று வெளியிற்) கூறுவதென்பது, அருங்குலமகளிர்க்கு - அரியகுலமாதருக்கு, ஆம் எனல் ஆவது அன்று (தகுதியுடையது) ஆகுமென்றுரைத்தல் (ஒருபோதும்) சம்பவிக்கக்கூடியது அன்று

(ஆயினும்), எம் உறு உயிர்க்கு நோவேன் - இன்பத்தையடையும் உயிரின் (நிலைத்தளராதிருக்கும்) பொருட்டு வருந்துகின்றயான், என்செய்கேன் - யாது செய்வேன், யாரும் இல்லேன் - (என்காமநோய்க்குப் பரிகாரந்தேடுபவர்) யாருமில்லாதிருக்கின்றேன், காமன் என்ற ஒருவன் செய்யும் - காமனென்னும் பெயரைக்கொண்ட ஒருவன் செய்கின்ற, வன்மையை காத்தி - கொடுமையை நீக்கி இரட்சிப்பீராக, என்றாள் - என்று சொன்னாள்.

குறிப்பு — "அச்சமு நாணு மடனுமுந் துறுத்த, நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப" என்பவாகலின் அருங்குலமகளிர்க் குரைத்தலாவதில்லையென்றான் "இறப்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச் செப்பமு நாணு மொருங்கு" என்றபடி இறப்பிறந்தார்க்கே சிறந்தபல்வாய குணங்கள் ஒருவர்க்கற்பிக்க வேண்டாமே யுள்வாந்தன்மைநோக்கி 'அருங்குலம்' என விசேடித்தாள் ஏம - வலிமையுமாம். தீராது இருந்து வருந்துகின்றமைநோக்கி இங்ஙனம் வெறுப்புமிக்கொண்டு கூறினாளென்க. நோவேன் - வினையாலணையும் பெயர். என் - எவன் என்பதன்விகாரம். ஒருவன் என அவனது வன்கண்மை கூறினாள் "தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால், தன்னையே கொல்லுஞ் சினம்" என்னும் இத்திருக்குறளிற் போல 'வன்மையைக்காத்தி' என்கின்றது, வன்மையில்லாமற்காக்க என்பதாம். (௬௫)

சேணுற நீண்டு மீண்டு செவ்வரி சிதறி வெவ்வே
றேணுற மிளிர்ந்து நாலு விதம்புரண் டிருண்ட வாட்கட்
பூணியல் கொங்கை யன்னா ளம்மொழி புகறலோடு
நாணில ளைய னொய்ய ளல்லளு மல்ல ளென்றான்

இ - ள். சேண் உற நீண்டு - (பார்வை) நெடுந்தூரத்தே சேரும்படி நீண்டு, மீண்டு - (அப்பார்வை) மீளுதலடைந்து, செவ்வரிசிதறி - சிவந்தவரிகள் பரவலுற்று, வெவ்வேறு - பலவிதமான, எண் உற - எண்ணம் (கண்டார்) அடையும்படி, மிளிர்ந்து - விளங்கி, நாலுவிதம் புரண்டு - வெவ்வேறு வகையாகப் புரளுதலுற்று, இருண்ட - கருமையுற்ற, வாள் கண் - ஒளிபொருந்திய கண்களையும், பூண் இயல் கொங்கை - ஆபரணம் பொருந்திய முலைகளையுமுடைய, அன்னாள் - அச்சூர்ப்பநகை, அம்மொழி புகறலோடும் - அவ்வார்த்தை சொன்னவுடனே, ஐயன் - ஸ்ரீராமபிரான், (இவள்), நாணிலள் - நாணமில்லாதவள், நொய்யள் - அற்பமானவள், நல்லளும் அல்லள் - நன்னடக்கையுடையாளு மல்லள், [கெட்டவள்,] என்றான் —,

குறிப்பு — வாட்கண் - வாள்போலுங் கண் என உவமைத்தொகையுமாம். நாணிலள் என்பது விதந்து என்சிலேடைப் பொருள் தந்து நிற்பதுமறிக. நொய்யள் - நொய்யின் தன்மைவாய்ந்தவள், அஃதாவது அற்பமெனக்கருதப்படுந்தன்மை. நாண்போன்று முறுக்குடையா திருத்தலின் 'நாண்' என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். அதனை "சிலைகொ ணாணிற் றீராத திருந்துகற்பின் னவாதம்" என்னும் செய்யுட்குறிப்புரை யுட்காண்க. (௬௬)

பேசல ரிருந்த வள்ள லுள்ளத்தின் பெற்றி யோரான்
பூசல்வண் டரற்றுங் கூந்தற் பொய்ம்மகள் புகன்ற வெங்க
ணாசைகண் டருளிற் றுண்டோ வன்றென லுண்டோ வென்னு
மூசலா லுலாவு கின்றான் மீட்டுமோ ருரையைச் சொல்வாள்.

இ-ள். பூசல் - போர்செய்தலையுடைய, வண்டு - வண்டுகள், ஆர்ப்பும் - ஒலிசெய்யாநின்ற, கூந்தல் - அளகபாரத்தினையுடைய, பொய் மகள் - (உருவத்தினும் மொழியினும்) பொய்ம்மையைக்கொண்ட சூர்ப்பணகை, பேசலன் இருந்த வள்ளல்-பேசாது (மௌனமாக) இருந்த ஸ்ரீராமபிரான்மீது, உள்ளத்தின் பெற்றி ஓரான் - மனத்தின்தன்மை யாராயாதவளாகி, புகன்ற - (உள்ளக்கருத்தை வெளியிட்டுச்) சொன்ன, என் கண் - என்னிடத்தே, ஆசைகண்டு - விருப்பத்தைக்கண்டு, அருளிற்று உண்டோ - அருள்செய்தது உள்ளதோ? அன்று எனல் உண்டோ - (அருள்செய்தது) அல்லதென்று கூறுதலுள்ளதோ? என்னும் - என்று சொல்லப்படுமே, கூசலால் - கலக்கத்தால், [ஐயத்தால்], உலாவுகின்றாள் - உலவிநிற்கின்றாளாகி, மீட்டும் - திரும்பவும், ஓர் உரையை சொல்வாள் - ஒருவார்த்தையைக் கூறுவாளாயினாள்.

குறிப்பு—"சுரும்பெழுந் திருந்தனூந் தொங்கல் வார்குழல்" "எழுந்திருந் திணை நறுந்தார் தூதும், தும்பிகை யாடு வட்டிற் றேன்றும்" என்றார் பிறரும். பொய்ம்மகள் - குறில்வழி யகரத்தின்முன் மெலிமிகுந்தது, "எண்மூவெழுத்தீற்றெ வ்வகை மொழிக்கும்" என்னுஞ் சூத்திரத்தால் கண்டருளல் - ஒருமொழி பேசலன், ஓரான், உலாவுகின்றாள் முற்றெச்சங்கள். (௪௭)

எழுதரு மேனி யாயீண் டெய்திய தறிந்தி லாதேன்
முழுதுணர் முனிவ ரேவல் செய்தொழின் முறையின் முற்றிப்
பழுதறு பெண்மை யோடு மிளமையும் பயனின் றேகப்
பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலு மென்றாள்.

இ-ள். எழுது அருமேனியாய் - (ஓவியத்துறை கைபோயவரானும்) தீட்டவொண்ணாத திருமேனியையுடையாய்! ஈண்டு - இங்கு, எய்தியது அறிந்திலாதேன் (நீர்) எழுந்தருளிய விஷயத்தை யறியாதயான், முழுது உணர் முனிவர் ஏவல் - முற்றும் உணர்ந்த முனிவர்களேவிய வேலையை, செய் - செய்கின்ற, தொழில் முறையில் - வேலையினது ஒழுங்கில், முற்றி - தேர்ச்சியடைந்து, பழுது அறுபெண்மையோடும் - குற்றமற்ற பெண்டன்மையுடனே, இளமையும் - வாலிபப்பருவமும், பயன் இன்று ஏக - பிரயோசனமில்லாமற் போகும்படி, பொழுதொடு நாளும் - இரவும்பகலும், வாளா கழிந்தன என்றாள் - வீணேகழிந்துபோயினவென்று கூறினாள்.

குறிப்பு—எழுதருமேனியாய் என்றற்கு (யாவர் மனத்தினும்) எழுச்சிதரும் மேனியாய் என்னலும், மேன்மேலும் வளர்ச்சியடைகின்ற திருமேனியாய் என்னலும் பொருந்தும். "சுருளிட்டாடிய மருள்படு பூங்குழல்-பவளச் செவ்வாய்த் தவள வெண்ணகை-யொள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக - கருங்கொடிப் புருவத்து மருங்குவளை திருநுதற் - காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை - யகன்ற வல்குலந் துண் மருங்குல்" என்றவாறு அவயவ இலக்கணம் பொருந்திய வழுவிய பெண்பிறவியென்பார் 'பழுதறுபெண்மை' என்றார். ஓடும் - உடனிகழ்ச்சிப்பொருட்டு. பொழுதும் நாளும் என்பன ஈண்டு இராப்பகல் மாத்திரையாய் நின்றன. ஒடு - எண்ணுப்பொருட்டு. போலும் - ஒப்பில்போலி. முழுது - எஞ்சாமையுணர்த்தும் உரிச்சொல், "முழுதென்கிளவி யெஞ்சாப்பொருட்டே" என்பது தொல்காப்பியம். (௪௮)

நிந்தனை யரக்கி நீதி நிலையிலாள் வினைமற் றெண்ணி
வந்தன ளாகு மென்றே வள்ளலு மனத்துட் கொண்டான்
சுந்தரீ மரபிற் கொத்த தொன்மையின் றுணிவிற் றன்றா
லந்தணர் பாவை நீயா னரசரில் வந்தே னென்றான்.

இ - ள். வள்ளலும் - ஸ்ரீராமபிரானும், நிந்தனை அரக்கி - (இவள்) அபகீர்த்தியையுடைய அரக்கி, நீதிநிலையிலாள் - நீதிமார்க்கத்தில் நிற்றல் இல்லாதவள், வினைமற்று எண்ணி - வேறுகாரியத்தை யுத்தேசித்து, வந்தனள் என்றே - வந்துள்ளா ளென்பதாகவே, மனத்துள் கொண்டான் - (தன்) மனத்திற்கருதினவனாகி, சுந்தரீ - அழகினையுடையாய்! நீ அந்தணர் பாவை - நீ பிராமணர்பெண் [பிரமகுலஸ்திரீ], யான் அரசரில் வந்தேன் - நான் அரசர்களில் வந்தேன் [க்ஷத்திரியன்], (ஆதலினால் நாமிருவரும் மணஞ்செய்துகொள்வது) மரபிற்கு ஒத்த - வமிசத்துக்குத் தகுதியான, தொன்மையின் துணிவிற்று - பழமையாகிய துணிபின் வழிப்பட்டது அன்று என்றான் - அன்றென்று கூறினான்.

குறிப்பு —வினைமற்றென்பது புணர்ச்சியை ஆகும் - அசை. பாவை - உவமவாகுபெயர். பூர்வகாலத்து அரசர்கள் க்ஷத்திரியர்களேயாகலின், அரசர் என்பது க்ஷத்திரிய வமிசமாத்திரையாய் நின்றது, "மறையோர் மன்னர் வணிகர்சூத்திரரெனு மிறையோர் தத்தமக் கெய்து மற்றதுவே .." என்புழியும் 'மன்னர்' என்றமையறிக. அந்தணர் குலப்பெண்ணை க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் மூவகை வருணத்தாரும் வேட்டற்கு விதியில்லையாதலின் 'மரபிற்கொத்த தொன்மையின் றுணிவிற்றன்று' என்றார், "இழிந்த புன்குலத் தாதற்ன் குலத்தினு மியல்புற மேம்படுக, கழிந்த நன்குலத் தாதலபொன் னனையவர் கவினுடை வடிவெல்லா, மொழிந்த நூல்வழி பிறழ்ந்தமெல் லுருவினர் முகிண்முலை முயக்குறார், லழிந்து போகுவ லுணர்வழ னிரயமு மாங்கவர்க் கணித்தாமால்" 'பின்னவர் தமது மரபின் வேட்டிடலாம் வணிகர்பின் னவருமைத் தமது, நன்மர பதனிற் கோட்லர் மரசர் தம் முறை நாயகர்தம் மரபின், மன்னுமவே ளாளர் மரபினிற் கொள்ளலர் மறையவர் வருணநான் கிடத்துக், கன்னியைக் கொள்ளலாம் பின்னவள் மறையோர்க் கருமகப் பெற்றகதி யடையாள்" என்றார் அதிவீரராமபாண்டியரும் [காசிகாண்டம்] தொன்மை-பழைய ஒழுக்கத்துக்குப் பண்பாகுபெயர் அரசர் - ராஜசப்தபவம் (௪௧)

ஆரண மறையோ னெந்தை யருந்ததிக் கற்பி னெம்மோய்
தாரணி புரந்த சாலக் கடங்கர் தமரபின் றையல்
போரணி பொலங்கொள் வேலாய் பொருந்தலை யிகழ்தற் கொத்த
காரண மிதுவே யாயி னென்னுயிர் காணபெ னென்றாள்

இ - ள். போர் அணி பொலங்கொள் வேலாய் - போர் செய்தலையே ஆபரணமாகக்கொண்ட அழகுள்ள வேலினையுடையாய்! எந்தை - எங்கள் தந்தை, ஆரணம் மறையோன் - வேதத்துக்குரிய அந்தணன்; அருந்ததி கற்பின் எம்மோய் - அருந்ததியைப்போலும் கற்பு நிலைமையையுடைய எங்கள் தாய், தாரணி புரந்த சாலகடங்கர் தம்மரபின் தையல் - பூமியை யரசாண்ட சாலகடங்கரென்னும் இராக்கதர்களது குலத்திற்பிறந்தபெண், (ஆதலால்) பொருந்தலை இகழ்தற்கு ஒத்த காரணம் இதுவே ஆயின் - (நீ என்னோடு) கூடுதலை இகழ்ந்து விடுதற்கு ஏற்றகார

ணம் இதுவேயாமாகில், என் உயிர் காண்பென் - (உடலை விட்டுப்பிரிந்துபோகும் நிலைமையிலிருக்கும் எனது உயிரை) அங்ஙனம் பிரிந்துபப் பார்ப்பேன், [இறந்துபடு வேன்] என்றான்—,

குறிப்பு —மறைகளை ஓதல் ஓதுவித்தல் என்னும் இருதொழிற்கும் உரியவர் அந்தணரேயாதலால் மறையோர் என்பது அவர்க்கே காரணப்பெயராம் இங்கே 'ஆரணம்' என்ற அடைமொழி வந்ததால், 'மறையோன்' என்றது காரணங்கருதாமல் வெறும் சாதிப்பெயர்மாத்திரமாய் நின்றது. அருந்ததி - வசிஷ்ட முனிவரது மனைவி. மேய - தாய, "வெவ்வமிலாயி மேயதாய ஈன்றவள் நாமம்" என்பது நிகண்டு. தாரணி - தரணி என்னும் வடசொல்லின் விகாரம்.

ராக்ஷச குலத்துப்பிறந்த ஹேதி யென்பவனது மகன் வித்யுத்கேச னென்பவன் சந்தியையின் மகளான சாலகடங்கடை யென்பவளை விவாகம் செய்துகொண்டு சுகேசனைப்பெற்றான் அச்சுகேசனது மக்கள் மாலியவான், சுமாலி, மாலி என்பவருள் சுமாலியின் மகள் கேகசி யென்பவள் விச்சிரவசு என்னும் பிரமகுலத் தோன்றலோடுகூடி இராவணாதியரை யீன்றாளென்றுணர்க. இங்குக்குறித்த சாலகடங்கடை பிள்ளையைப்பெற்றவுடன் அங்கேயே விட்டிட்டுக் கணவனுடன் சென்றிட யாருமில்லாமல் அழுதுகொண்டிருந்த அக்குழந்தையைப் பார்வதி பரமேசுவரர் கண்டெடுத்து அக்குழந்தைக்கு அப்பொழுதே தாய்க்குச் சமமான பருவமுண்டாம்படி அனுக்கிரகித்து நீண்ட ஆயுளையுந்தாமது வானத்திற்பறந்து செல்லத்தக்கதொரு நகரத்தையுங்கொடுத்து, இனி இராக்கத மகளிர்க்கு விரைவிற்கருவுறுதலும் உடனே மகப்பெறுதலும் பிறந்த மகவு உடனே தாயோடு ஒத்த பருவமடைதலுமாகிய வரத்தையும் அளித்துச்செல்ல, அவ்வரப்பயன்களைப் பிந்தின அரக்கர் யாவரும் பெற்றுச்சிறப்புற்றனராதலால், இங்கு இராக்கதகுலம் 'சாலகடங்கர் தம்மரபு' என அவள் பெயரால் குறித்துக் கூறப்பட்டது. சாலகடங்கடையின் வழித்தோன்றியவர், சாலகடங்கடர், அது, "சாலகடங்கர்' என விகாரப்பட்டது எனது தந்தை அந்தணனாயினும் தாய் அரசர் குலத்தவளாதலால் அவளிடத்துப்பிறந்த என்னை நீ மணஞ்செய்துகொள்ளாமல் என்னைச் சரியான பிராமணசாதிக் கன்னிகையென்று எண்ணி நீக்கிவிடக் கருதுதல் நியாயமன்று. ஏனென்றால் பிராமணனுக்கும் க்ஷத்திரிய ஸ்திரீக்கும் பிறந்தவர்கள் அநுலோம சாதியாருள் பிராமணரையொத்த க்ஷத்திரியரென்றும், இவர்கள் உயர்ந்த தந்தையின் சாதியைச் சேராதவர்களாய்த் தாயின் சாதியைக்காட்டிலும் சிறிது மேன்மையான தனிச்சாதியாராகின்றனரென்றும் இவர்கள் தாய்வமசத்துத் தருமங்களை அநுஷ்டிக்கத்தக்கவர்களாகையால் இவர்களை க்ஷத்திரியர் மணஞ் செய்துகொள்ளலாமென்றும் நூற்கொள்கையுளது. ஆதலின், நீ தடைசொல்லாமல் என்னை மணஞ்செய்வாயேயன்றி யிகழ்ந்தற்கேற்ற காரணமுறையன்று விரகதாபத்தாலாகும் மரணவேதனை யென்னை நிச்சயமாய் வந்தடையும் என்பது தோன்றப் 'பொருந்தலை யிகழ்ந்தற்கொத்த காரணமிதுவேயாயி னென்னுயிர் காண்பென்' என்றாளென்க. பொருந்தலை என்பதை - முன்னிலையொருமை யெதிர்மறைத் தெரிநிலை முற்றெச்சமாக்கொண்டு (நீ மணம்) இணங்காமல் என்பொருள் கோடலுமாம். (ரு௰)

அருந்ததிய ளனைய கூற வகத்துறு நகையின் வெள்ளைக்
குருத்தெழு கின்ற நீலக் கொண்டலுண் டாட்டங் கொண்டான்

வருத்தம் நீங்க அரக்கர் தம்மின் மானுடர் மணத்தல் நங்கை
பொருத்தம் அன்றென்று சாலப் புலமையோர் புகல்வர் என்றான்.

இ-ள். அருத்தியள் அனையகூற - ஆசையையுடையாளாகிய சூர்ப்பநகை அத்தகைய மொழிகளைக்கூறினதால், அகத்து உறு - தன் மனத்திற்பொருந்திய நகையின் - சிரிப்பினது, வெள்ளை குருத்து - வெண்மை நிறம்பொருந்திய இளவொளி, எழுகின்ற - வெளித்தோன்றப்பெற்ற, நீலக்கொண்டல் - நீலமேகம் போன்ற ஸ்ரீராமபிரான், உண்டாட்டங்கொண்டான் - விளையாடுதலைக்கொண்டவனாகி, நங்கை - பெண்ணே! வருத்தம் நீங்க அரக்கர் தம் மின் - துன்பம் நீங்கிய இராக்கதர் தமது பெண்ணை, மானுடர் - மனிதர், மணத்தல் - விவாகஞ்செய்து கொள்ளல், பொருத்தம் அன்று என்று - பொருத்தமல்லதென்று, சால - மிகவும், புலமையோர் - அறிவுடையோர்கள், புகல்வர் என்றான் - கூறுவார்கள் என்று கூறினான்.

குறிப்பு —அருத்தி - அர்த்தியென்னும் வடசொல்லின் திரிபு என்பர். அனைய-பெயர். நகை-முதனிலைத் தொழிற்பெயர். தன் மனத்திலுதித்த களிப்புமுழுதும் வெளியிற்றோன்றுவாறு தனது மேன்மைத்தன்மைக்கு உற்றபடி யடக்கிக்கொண்டு புன்னகைபுரிந்தமை தோன்ற 'அகத்துறு நகையின் வெள்ளைக்குருத்து எழுகின்ற' என்றார். குருத்து - இளங்கொழுந்து, இளவொளிக்கு இலக்கணை. நீலக்கொண்டல் - உவமவாகுபெயர். உண்டாட்டு - வீராமதுவையுண்டு மனங்களித்தல், ஈண்டு அச்செயலின்மையாலும், கொண்ட களிப்பின் தன்மை அச்செயல் போறலாலும், உடன்படுதல் மறுத்தல் என்னும் இருதன்மையையும் உடையவன் போல விநோதமாக வெவ்வேறு காரணங்களை ஒன்றன்பின் ஒன்றாகக்கூறிப் பேச்சைவளர்த்துச் சாந்தமானவழியில் மறுக்கின்றமை பற்றியும் 'உண்டாட்டங்கொண்டான்' என்றார். வருத்த நீங்கு என்றற்கு மனவருத்தப்படாதே எனப்பொருள் கொள்ளலும் அமையும். தம்மின் என்பதைத் தம்மில் எனக்கொண்டு இராக்கதர்களில் எனப்பொருள் கோடலாமாயினும் ஈண்டு ராக்ஷஸப்பெண்ணும் மானிடபுருஷனுமாகிய சிறப்புநோக்கி தம்+மின் எனக்கண்ணழித்து மின் பெண்ணெனக்கூறினும் மின் - ஆகுபெயர். மநுஷ்யராக்ஷசகணங்கள் ஒருவரோடொருவர் மணஞ்செய்து கொள்ளக்கூடாது என்பார் 'பொருத்தமன்று' என்றார் 'மானுயர்' என்னும் பாடம் சிறப்புடைத்தன்று. (௫௧)

பராவரும் சிரத்தை யாரும் பத்தியின் பயத்தை யோரா
திராவணன் றங்கை யென்ற தேழைமைப் பால தென்னா
வராவணை யமல னன்னா யறிவித்தேன் முன்னந் தேவர்
பராவினி னீங்கி னேனப் பழிபடு பிறவி யென்றாள்.

இ-ள். பராவரும் - புகழ்தற்கருமையான, சிரத்தை ஆரும் - ஊக்கம் மிகுகின்ற, பத்தியின் - பக்திகுணத்தினது, பயத்தை - பயனை, ஓராது - கருதாமல், இராவணன் தங்கையென்றது - இராவணனுக்குத் தங்கையென்று கூறியது, ஏழைமைப்பாலது - (என்) அறிவின்மையிடத்தது, என்னா - என்று நினைத்து, (அச்சூர்ப்பநகை), அரா அணை அமலன் அன்னாய் - சேஷசயனத்தையுடைய நிர்மலனாகிய ஸ்ரீமந்நாராயணனை யொப்பாய்! பழிபடு அப்பிறவி - குற்றம் பொருந்திய அவ்விராக்ஷசப்பிறப்பினை, தேவர் பராவினில் - தேவர்களைத் துதித்ததினால், நீங்கினேன் - ஒழியப்பெற்றேன், முன்னம் அறிவித்தேன் - (இவ்விஷயத்தை) முன்னமே தெரியப்படுத்தினேன், என்றாள் - என்று கூறினாள்.

குறிப்பு — சிரத்தை, பத்தி, இராவணன் - சரத்தா, பக்தி, ராவண என்ற வடமொழித் திரிபுகள். பத்தி - தன்னினும் மேம்பட்டோரிடத்துச் செய்யும் அன்பு. தான் அரக்கன் தங்கையென்று கூறாமல் முனிவர்பால் அன்பொடு வழிபட்டதையே பெரிதாக எடுத்துக் கூறியிருக்குமிடத்துத் தன்னை மணஞ்செய்ய மறுக்கானென்றும் அங்ஙனங் கூறியது தன் ஏழைமைப்பாலதென்றுங் கருதினளெனக். 'அறிவித்தேன் முன்னம்' என்றது, கீழ் 41, 43 கவிகளிற் கூறியவற்றைக் குறிக்கும்.

ஒருவனோ வுலக மூன்றிற் கோங்கொரு தலைவ னாங்கி
லொருவனோ குபேர னின்னோ டுடன்பிறந் தவர்க ளன்னார்
தருவரேற் கோடு மன்றேற் றமியையே யிடத்துச் சார
வெருவுவெ னங்கை யென்றான் வேதத்தி னறிவை வென்றான்.

இ - ள். வேதத்தின் அறிவை வென்றான் - வேதத்தி னறிவுக்குமெட்டாத ஸ்ரீ ராமபிரான், நங்கை - பெண்ணே! நின்னோடு உடன்பிறந்தவர்கள் - உன்னோடு கூடப்பிறந்தவர்களில், ஒருவனோ—? உலகம் மூன்றிற்கு - திரிலோகங்களுக்கும், ஓங்கு ஒருதலைவன் - உயர்ந்த ஒரு அரசன் [இராவணன்], ஆங்கில் ஒருவனோ - அவ்விடத்திலிருக்கிற ஒருவனோ? குபேரன்—, அன்னார் - அத்தகைய (அரசாட்சியுஞ் செல்வமுமுடைய) வர்கள், தருவரேல் - (மனமகிழ்ந்து) கொடுப்பார்களானால், கோடும் - (உன்னை யேற்றுக்) கொள்ளுவோம், அன்றேல் - அல்லதாயின், தமியை- (நீ) தனித்திருக்கின்றாய், (ஆதலினால்) வேறு இடத்துச்சார - (இவ்விடத்தைவிட்டு) வேறிடத்தைச்சாரும்படி, வெருவுவென் என்றான் - பயப்படுவே னென்று கூறினன்.

குறிப்பு — ஓகாரமிரண்டும் - பிரிநிலை. மூன்றிற்கும், 'உம்மை' விகாரத்தாற் றொக்கது. ஆங்கு - சுட்டுநீண்டது. கோடும் - தன்மைப்பன்மை எதிர்காலவினைமுற்று. நங்கை - பெண்ணிற் சிறந்தாள், விரும்பப்படுபவள். அண்மைவிளி, இயல்பாயிற்று. எம்பிரான் இராவணனுக்கும் குபேரனுக்கும் பயந்ததாக விளையாட்டாக்கூறி மறுக்கலுற்ற பேரறிவை வியந்து 'வேதத்தின் அறிவை வென்றான்' என்றார். (௫௧)

காந்தர்ப்ப மென்ப துண்டாற் காதலிற் கலந்த சிந்தை
மாந்தர்க்கு மடந்தை மார்க்கு மறைகளே வகுத்த கூட்ட
மேந்தற்பொற் றோளி யஃதி னியைந்தபி னெனக்கு மூத்த
வேந்தர்க்கும் விருப்பிற் றாகும் வேறுமோ ருரையுண் டென்றாள்

இ - ள். ஏந்தல் பொன்தோளினாய் - பெருமையிற் சிறந்தவராகிய அழகிய தோளினையுடையீர்! காதலில் - (ஒருவர்மேலொருவர் கொண்ட) வேட்கையினாலே, கலந்தசிந்தை - ஒன்றுபட்ட மனத்தினையுடைய, மாந்தர்க்கும் மடந்தை மார்க்கும்- ஆடவர்களுக்கும் பெண்களுக்கும், மறைகளே வகுத்த கூட்டம் - வேதங்களே வகுத்துக்காட்டிய விவாகத் தொகுதியுள், காந்தர்ப்பம் என்பது உண்டு - காந்தருவ விவாகம் என்னு மொருவிவாகமுள்ளது; இஃது இயைந்தபின் - இவ்விவாகம் பொருந்திய பிறகு, எனக்கு மூத்தவேந்தர்க்கும்-எனக்கு மூத்தவர்களாகிய குபேர ராவணர்களுக்கும், விருப்பிற்று ஆகும் - விருப்பினையுடையதாகும், வேறும் ஓர் உரை உண்டு என்றாள் - பின்னும் ஒருவார்த்தையுள்ளதென்று கூறுவாள்.

குறிப்பு — காந்தர்ப்பம் - மணமெட்டினுள் ஒன்றாகிய கந்தருவம், இது கந்தருவருமாதருங் கன்னியருந் தம்முளெதிர்ப்பட்டு இயைந்ததுபோலத் தலைவனுந் தலைவியு மெதிர்ப்பட்டுப் புணர்வது, "அதிர்ப்பில்லைமம் பூணுறு மாடவருந் தம்மு, ளெதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப - கதிர்ப்பொன்யாழ், முந்திருவர் கண்ட முனிவருந் தண்காட்சிக், கந்தருவர் கண்ட கலப்பு." பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என மணமெட்டாம் இவற்றுள் "முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே, பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே" என்றவாறு இது பெருந்திணைப்பாற்படும். இது களவொழுக்கமாம். களவொழுக்கம் பொதுவாகலின் நான்கு வருணத்தார்க்கும் ஆயர் முதலியோர்க்கு முரித்து. இக்களவொழுக்கம் வேதமுடிபென்பார் 'மறைகளே வகுத்த' என்றார், "அந்தண ரருமறை மன்ற லெட்டினுட் கந்தருவ வழக்க மென்மனார் புலவர்" என்பவாகலின் கந்தருவ வழக்கத்தோடொத்த வழக்கினைக் காந்தருவம் [காந்தர்ப்பம்] என்றது உபசார வழக்கு (௫௪)

முனிவரோ டுடையர் முன்னே முதிர்பகை முறைமை நோக்கார்
தனிமைநீ யாத லான்மற் றவரொடுந் தழுவற் கொத்த
வினையமீ தல்ல தில்லை விண்ணுநின் னாட்சி யாக்கி
யினியரா யன்னார் வந்துன் னேவலி னிற்ப ரென்றாள்.

இ - ள். முன்னே - தொன்று தொட்டு, முனிவரோடு - இருடிகளுடனே, முதிர்பகை உடையர் - முதிர்ந்த விரோதத்தினையுடைய ராவணாதியர்கள், முறைமை நோக்கார் - (நீவிரும் இருடியென்று பகையின்) முறைமையைக் கருதமாட்டார்கள், நீ - நீவிர், தனிமை ஆதலால் - தனித்திருக்கின்றீராதலால், அவரொடும் - அவ்விராவணாதியருடனே, தழுவற்கு ஒத்த - சேர்தற்குத் தகுதியான, வினையம் - தந்திரம், ஈது அல்லது இல்லை - இவ்விவாக மல்லாமல் வேறில்லை, அன்னார் - அவ்விராவணாதியர், விண்ணும் நின் ஆட்சி ஆக்கி - தேவலோகத்தையு முமக்கு உரிமையாக்கி, இனியராய் - மகிழ்ச்சியை யுடையாராய், வந்து—, உன் ஏவலில் நிற்பர் என்றாள் - நீவிரேவும் பணியில் நிற்பார்கள் என்று கூறினள்

குறிப்பு—மற்று - அசை. விண்ணும் உம்மை எச்சத்தோடு சிறப்புமாம். வந்து - உரையசையுமாம். (௫௫)

நிருதர்தம் மருளும் பெற்றே னின்னலம் பெற்றே னின்னோ
டொருவருஞ் செல்வத் தியாண்டு முறையவும் பெற்றே னொன்றோ
திருநகர் தீர்ந்த பின்னர்ச் செய்தவம் பயந்த தென்னா
வரிசிலை வடித்த தோளான் வாளெயி றிலங்க நக்கான்.

இ - ள். வரிசிலை வடித்த தோளான் - கட்டமைந்த வில்லினை வசமாக்கிய தோளினையுடைய ஸ்ரீராமபிரான், நிருதர்தம் அருளும்பெற்றேன் - அரக்கர்களுடைய கருணையையும் அடைந்தேன், நின்னலம் பெற்றேன் - நின்னின்பத்தையும் அடைந்தேன், ஒருவரும் செல்வத்து - நீங்குதற்கருமையான செல்வத்தில், யாண்டும் - எப்பொழுதும், நின்னோடு உறையவும் பெற்றேன் - உன்னோடு வசிக்கவும் பெற்றேன், திருநகர் தீர்ந்தபின்னர் - திருவயோத்தியைவிட்டு வந்தபின்பு, செய்தவம் பயந்தது - (யான்) செய்த தவங்கொடுத்தபயன், ஒன்றோ—? [அநேகம்]; என்று -

என்றுகூறி, வாள் எயிறு இலங்க நக்கான் - ஒளிபொருந்திய பற்கள் விளங்கும்படி சிரித்தான்.

குறிப்பு — ஒன்றோ, ஓ - எதிர்மறை. அருளைப்பெற்றேன் நலம்பெற்றேன் செல்வத்தியாணம் முறையவும் பெற்றேன் என்று எதிர்மறையிலக்கணையால் பரிகாசமாகக்கூறி யிகழ்ச்சிநகை செய்தனன் எனக். வடித்த என்றது கூர்செய்த எனப் பொருள் கூறலுமியையும். (௫௬)

விண்ணிடை யிம்பர் நாகர் விரிஞ்சனே முதலோர்க் கெல்லாங்
கண்ணிடை யொளியின் பாங்காகக் கடிகமழ் சாலை நின்றும்
பெண்ணிடை யரசி தேவர் பெற்றநல் வரத்தாற் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போலவாள் வந்தாள்.

இ - ள். இம்பர் - இவ்வுலகத்தவர்கள், நாகர் - சர்ப்பசாதியார், விண்ணிடை விரிஞ்சனே முதலோர்க்கு எல்லாம் - விண்ணிலிருக்கின்ற பிரம தேவனே முதலானவர்க்கெல்லாம், கண்ணிடை - கண்ணிலிருக்கின்ற, ஒளியின் - பிரகாசத்தினது, பாங்கர் - பக்கமாகிய, கடிகமழ் - புஷ்பமணங் கமழுகின்ற, சாலைநின்றும் - பன்னசாலையிலிருந்து, பெண்ணிடை அரசி - பெண்ணிற் சிறந்தாளும், தேவர்பெற்ற நல்வரத்தால் - (ஸ்ரீமந்நாராயணனால்) தேவர்கள் அடைந்த நல்லவரத்தினால், பின்னர் - பிறகு, மண்ணிடை - புவியில், மணியின்வந்த - இரத்தினம்போலத் திருவவதரித்தருளிய, வஞ்சியே போலவாள் - (சாமானிய மானிடப்) பெண்ணேயே யொப்பாளுமாகிய எம்பிராட்டி, வந்தாள் —,

குறிப்பு — இம்பர் - இடவாகுபெயர். விரிஞ்சன் - சிருஷ்டிக்கிறவன் ஏகாரம் - பிரிநிலையும் உயர்வு சிறப்புமாம் எம்பிராட்டியை இவ்வரக்கி பார்ப்பதுமுதல் ராக்ஷச சம்மாரத்துக்குக் காரணமேற்படுதலானும் அதற்குக் காலங்கிட்டியதானும் இனிநடக்குஞ் செயல்களைக் காண த் திரிலோகத்தவரு மொருங்குகூடிச் சாலையினக்கண் ஓயாது பார்த்துக்கொண்டிருந்தன ரென்பார் 'கண்ணிடையொளியின் பாங்கர்க்கடி கமழ் சாலை' என்றார். இனி, முதலிரண்டடிகட்கு விரிஞ்சனே முதலோர்க்கு எல்லாம் கண் இடைதற்குக் காரணமான [காணக்கண் கூசும்படியான] ஒளிவடிவுமுள்ள ஸ்ரீராமபிரானருகில் எனப்பொருள்கூறலுமமையும், இங்கே ஸ்ரீராமபிரானது திருமேனியின் திவ்யகாந்தியைச் சிறப்பித்து அவனுக்கு ஒளியென்று ஒருபெயர் கூறினார் எனக் 'கண்ணிடைதற்குக்' காரணமான ஒளியோடு இனிய பக்கத்திலுள்ள (கடிகமழ் சாலையினின்று பிராட்டிவந்தாள்) எனனுமாம் (௫௭)

ஊன்சுட வுணங்கு பேழ்வாய் புணர்விலி யுருவ நாறும்
வான்சுடர்ச் சோதி வெள்ளம் வந்திடை வயங்க நோக்கி
மீன்சுடர் விண்ணு மண்ணும் விரிந்தபோ ரரக்க ரென்னுங்
கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணிற் கண்டாள்.

இ - ள். ஊன்சுட - (சுட்ட) மாமிசஞ்சுட, (அதனால்), உணங்கு - வருந்துகின்ற, பேழ்வாய் - பெருவாயையுடைய, உணர்வு இலி - அறிவில்லா அசுரூர்ப்பநகை, உருவம் நாறும் - (பிராட்டியின்) திருவுருவத்தினின்றுண்டாகின்ற, வான் சுடர் சோதிவெள்ளம் - சூரியப்பிரகாசம்போன்ற ஒளியின் மிகுதியானது, வந்து—,

இடை - பக்கத்தே, வயங்கல் நோக்கி - விளங்குதலைப்பார்த்து, மீன்சுடர் - நட்சத்திரங்களையும் சூரிய சந்திரர்களையுமுடைய, விண்ணும் - ஆகாயத்தினும், மண்ணும் - புவியினும், விரிந்த - விரிவுபெற்ற, போர் அரக்கர் என்னும் கான் - போர்த்தொழிலையுடைய இராக்கதர்களென்றுகூறும் கானகத்தை, சுட - சுட்டெரிப்பதற்காக, முளைத்த - தோன்றிய, கற்பு கனலியை - கற்பாகிய நெருப்பினையுடைய பிராட்டியை, கண்ணில் - (தன்) கண்களால், கண்டான் - பார்த்தான்.

குறிப்பு — ஊ - தசை, னகரச்சாரியைபெற்று 'ஊன்' என்வந்தது, வான் - பெருமை, வான்சுடர் எனவே சூரியனென்றும் மீன் - மின்னுவது, முதனிலை திரிந்து காரணப்பெயராய நட்சத்திரத்தை யுணர்த்திற்று. இனிமேல் இலங்கை தீப்பட்டெரிதற்கும் அரக்கர் மடிதற்கும் எம்பிராட்டியினது அழியாத கற்பே காரணமென்பது தோன்றக் 'கற்பின்கனலி' என்றார். அரக்கரென்னுங் கான்சுடமுளைத்த கற்பின்கனலி - உருவகம். காணற்கரியவளைக் கண்டான் என்பார் 'கண்ணிற் கண்டான்' என்றார். இங்கே, கனலி என்பதில் இ - பெண்பால் விகுதி. (௫௮)

மருவொன்று கூந்த லாளை வனத்திவன் கொண்டு வாரா
னுருவிங்கி துடைய ராக மற்றையோர் யாரு மில்லை
யரவிந்த மலரு ணீங்கி யடியிணை படியிற் றோயத்
திருவிங்கு வருவாள் கொல்லோ வென்றகந் திகைத்து நின்றாள்.

இ - ள். மரு ஒன்று கூந்தலாளை - வாசனை பொருந்திய கூந்தலையுடைய இப்பெண்ணை, வனத்து - வனத்திற்கு, இவன் கொண்டு வாரான் - இவன் அழைத்து வரமாட்டான், இங்கு - இவ்வுலகத்தில், இது உருவு உடையார் ஆக - இவ்வுருவத்தை யுடையவராக, மற்றையோர் யாரும் இல்லை - மற்றப்பெண்கள் எவரும் இல்லை, திரு - இலக்குமிதேவி, அரவிந்த மலருள் நீங்கி - தாமரைமலரினின்றும் நீங்கி, அடியிணை - இரண்டுபாதங்களும், படியில் தோய - புவியிற்கலக்கும்படி, இங்கு - இவ்விடத்திற்கு, வருவாள்கொல்லோ - வருவாளோ? என்று - என்றுநினைத்து, அகம் திகைத்து நின்றாள் - மனம்பிரமித்துநின்றாள்.

குறிப்பு — கொல் - ஐயம், ஓ - வினா இங்கு - அசையுமாம். மலருள் - உருபுமயக்கம். பிராட்டியின் கூந்தல்மணம் இயற்கைமணமே யென்பான் 'மருவொன்று கூந்தல்' என்றாள். கூந்தற்கு இயற்கையாகவே மணமுண்டென்றலை, "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி, காமஞ் செப்பாது கண்டது மொழிமோ, பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற், செறியெயிற் றரிவை கூந்தலி, னறியவு முளவோநீ யறியும் பூவே." என்னுந் **திருப்பாசுரத்தாலறிக.** இனி, செயற்கை மணமுமாம். தெய்வ மங்கையாகிய திருமகள் அத்தன்மையைவிட்டு மானிடத்தன்மை பூண்டுவந்தாளென்பது தோன்ற 'அடியிணைபடியிற்றோய' என்றாள். (௫௯)

பண்புற நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமை யல்லா
லெண்பிறங் கழகிற் கெல்லை யில்லையா மென்று நின்றாள்
கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனி னஃதே கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றா லென்படு மிறருக் கென்றாள்.

இ - ள். பண்பு உற - குணமாயமையும்படி, நெடிது நோக்கி - மிகுதியாகவாலோசித்துப்பார்த்து, படைக்குநர் - சிருஷ்டிப்பவரது, சிறுமை அல்லால் - குறைவு

லலாமல், எண்பிறங்கு அழகிறகு-மதிப்புமிகுந்த அழகினுக்கு, எல்லை இல்லை என்று நின்றாள்-வரம்பில்லையென்றுகூறி (பிரமைகொண்டு) நின்றவச் சூர்ப்பநகை, கண்ட-(இப்பெண்ணைப்) பார்த்த, பெண் பிறந்தேனுக்கு-பெண்ணாய்ப்பிறந்த எனக்கு, கண் பிறபொருளில் செல்லா-கண்கள் வேறுவஸ்து வினிடத்திற் செல்லமாட்டா; கருத்து எனின்-(என்) மனமோ வென்றால், அஃதே-இவ்வாறே பிறபொருளிற் செல்லமாட்டாது, என்றால்—, பிறருக்கு-ஆடவருக்கு, என்பமே என்றால்-(கண்களுமமனமும்) யாது (நிலைமையை) அடையும் என்றுகூறினள் (௬௦)

பொருந்திறத் தானை நோக்கிப் பூவையை நோக்கி நின்றாள்
கருத்தமற் றினிவே றில்லை கமலத்துக் கடவு ளானே
யொருந்திறத் துணர நோக்கி யுருவினுக் குலகம் மூன்றி
னிருந்திறத் தாக்கு஢ஞ் செய்த வரம்பிவ ரிருவ ரென்றாள்.

இ-ள். பொருந்திறத்தானை நோக்கி-போர்செய்யும் வலிமையையுடைய ஸ்ரீராமபிரானைப்பார்த்தும், பூவையைநோக்கி-சீதாபிராட்டியைப் பார்த்தும், நின்றாள்-(வியப்படைந்து) நின்ற அச்சூர்ப்பநகை, கமலத்து கடவுள்தானே-தாமரைமலரிலிருக்கிற பிரமதேவனே, ஒருந்திறத்து உணர-ஒரு தன்மையிலறியுமாறு, நோக்கி-ஆலோசித்துப்பார்த்து, உருவினுக்கு-வடிவின்பொருட்டு, உலகம் மூன்றின்-(சுவர்க்கமத்திய பாதாளமென்னும்) திரிலோகங்களிலு மிருக்கிற, இருந்திறத்தாக்கும்-(ஆண்பெண் என்னும்) இருவகையாக்கும், செய்த—, வரம்பு-எல்லை, இவர் இருவர்-இவர்கள் இருவருமாயினார், இனி, கருத்துவேறு இல்லை-இனி ஆலோசிக்க வேறு (உவமை) இல்லை, என்றாள்—, (௬௧)

பொன்னைப்போற் பொருவின் மேனிப் பூவைப்பூ வண்ணத் தானிம்
மின்னைப்போ லிடையா ளோடு மேவுமெய் யுடைய னல்லன்
றன்னைப்போற் றகையோ ரில்லாத் தளிரைப்போ லடியி னாளு
மென்னைப்போ லிடையே வந்தா ளிகழ்விப்பே னிவளை யென்னா.

இ-ள். பொன்னைப்போல-பொன்னினைப்போல, பொருவு இல் மேனி-ஒப்பில்லாத திருமேனியையுடைய, பூவைப் பூவண்ணத்தான்-காயாமலர்போலுங் கரிய நிறத்தினையுடைய இப்புருஷோத்தமன், இம்மின்னைப்போல இடையாளோடு-மின்னலைப்போலு மிடையினையுடைய இப்பெண்ணுடனே, மேவும்-சேர்கின்ற, மெய் உடையன் அல்லன்-உடலையுடையவனல்லன், தன்னைப்போல தகையோர் இல்லா-தன்னைப்போலிருக்கிற அழகினையுடையா ரில்லாமலிருக்கப்பெற்ற, தளிரைப்போல அடி-(இளந்) தளிரைப்போன்ற (மிருதுவான) பாதத்தையுடைய, இன்னாளும்-இப்பெண்ணும், என்னைப்போல-என்னைப்போல, இடையேவந்தாள்-நடுவே வந்தவளாயிருக்கின்றாள், இவளை—, இகழ்விப்பேன் என்னா-(இப்புருஷோத்தமன்) இகழ்ந்துகூறுமாறு செய்வேன் என்று நினைத்து. (௬௨)

வரும்மிவண் மாயம் வல்லள் வஞ்சனை யாக்கி நெஞ்சந்
தெரிவிலே டேறுந் தன்மை தீரியோய செய்விற் றன்று
லுருவினு மெய்ய தன்று லூனுகா வாழ்க்கை யானை
வெருவினே னெய்தி டாமல் விலக்குதி வீர வென்றாள்.

இ - ள. சீரியோய் - நற்குண நறசெயகையுடையவனே ! வீர - ஆணமையை யுடையீா! வரும் இவள - (இஙகு) வருகினற இபபெண, மாயமவல்லள - மாயை யில் வலலவள, (மேலும), வஞசனை அரககி - வஞசகததையுடைய ராக்ஷஸி, நெஞ சம தெரிவு இலள - மனதை யறிதறகிலலாதவளா யிருககினருள, (ஆதலின) தேறு ம தனமை -(இவளை இனனுளெனத) தெளிதல், செயலிறறு அனறு - செயயததகக தனமையுளளதனறு, (அனறியும), உருவு இது மெயயது அனறு - இவவுருவம உணமையானதிலலை, ஊனநுகா வாழகையாளை வெருவினென - தசையை யுண ணுகினற வாழவினையுடைய இவளை அஞசினேன, எயதிடாமல - (இவள இஙகு வநது) சேராதபடி, விலககுதி எனருள - தடுததுவிடுவீராக எனறு கூறினுள

குறிபபு —சுநதர சொரூபியாய மாறுவேடங தரிதது வநதவளெனபான 'மாயம வலலள' எனருள நமமை உணணவோ? நுமமனமெனபாற செலலாவணணம செயயவோ? இததநதிர மெடுததாளெனபான 'வஞசனையரககி' எனருள இவள மேனியைககணடு மயஙகலாகாது யதாாததவாதியலலள் எனபான 'நெஞசநதெரிவி லள' எனருள. இனி, (எனககு வசமாகுமபடியிளகியவுமது) மனததின தனமை யை யறியாதவள எனறும, (எனபாலும அவள பாலும் இரஙகறகரியதானவுமது) மனததின தன்மையறியாதவளெனறும பொருளகோடலுமாம அனறு ஆல எனபன அசைகள இனி, வஞசனையறியாத சீரியோயாகிய வுனது செயலினது அனறு, மாயமவஞசனை இவறறையுடைய அரககியாகிய எனது செயலாம எனவோா உணமைப்பொருள விளஙகுமாறு கூறினுளெனனலுமாம. (௬௧)

ஒளளிது னுணாவு மினனே யுனனையா ரொளிககு மீடடாா
தெளளிய நலததி னுலுன சிநதனை தெரிநத தமமா
கள்ளவல லரககி போலா மிவளைநீ காணடி யெனறு
வெளளிய முறுவன முததம வெளிபபட வீர னககான.

இ - ள. வீரன - ஸ்ரீராமபிரான, மினனே - பெணணே! உன உணாவு - உன து அறிவு, ஒளளிது-பிரகாசமுடையது [தீக்ஷணயமுடையது], உனனை ஒளிககும ஈட்டாா - உனனை மறைததுவைககும வலியுளளவாகள, யாா-எவா? தெளளிய-தெ ளியும்படிசெயத, நலததினுல - நனமையினுல, அமமா—! உன சிநதனைதெரிநத து - உனது எணணம அறியலாயிறறு, களளம வல அரககி ஆம இவளை - திருட டுததனமுளளவலிய ராக்ஷஸியாகும இவளை, நீ—, காணடி - பாாபபாயாக, எனறு- எனறு கூறி, வெளளிய -வெணமை நிறம பொருநதிய, முததம முறுவல - முததுப போனற பறகள, வெளிபபட - வெளியேதோனறுமபடியாக, நககான - சிரிததான,

குறிப்பு —மின - உவமவாகுபெயா இவவரககிககுத தபபி நான பிழைபப தே யருமையாயிருகக நினனை யெவவாறு காபபேனெனபாா 'உனனையாரொளிககு மீடடாா' எனறு கூறினுா. இனி, இவள அரககியலல நீயேயரககி யெனபாா இங னஙகூறினு ரெனனலுமியையும "கடிசொல்லிலலை காலததுபபடினே" எனறத னுல, அமமாவெனபது. இசைசசொல்லாகிய விலாவனை, அனறி 'அமம' எனற அகரவீறறுரிசசொல "அமமகேட்பிககும" எனறதனுல யானெனனறு சொல்வேன கேளாயெனனும பொருணமையை யுணாததி உரையசையாயவிடதது "உரை பபொருட்கிளவி நீடடமும வரையாா" எனனும சூததிரபபடி நீணடு, பினபு "அமம வெனனு மசைசசொ னீட்டம, அமமுறைப பெயரொடு சிவணு தாயினும, விளியொ

ய கொளப்பெதெளியு மோரே” என்னுஞ் சூத்திரத்தால் அம்மாகொற்று என்ற வழிக் கொற்றனென்றது எதிர்முக மாக்குதற்குக் கேளாயென்னும் பொருட்டாது நின்றதாத விற பிரிந்து நின்றுவிளியேலா தென்றுணர்க. போல் - ஒப்பில் போலி, இப்பாட்டில் முதல் மூன்றடியில் வந்தனயாவும், எதிர்மறையிலக்கணையாகிய பிறகுறிப்பு வஞ்சப்புகழ்ச்சியணி (கசச)

ஆயிடை யமுதின் வந்த வருந்ததிக் கற்பி னஞ்சொல்
வேயிடைத் தோளி னாளும் வீரனைச் சேரும் வேலை
நீயிடை வந்த தென்னை நிருதர்தம் பாவை யென்னாக்
காயெரி யனைய கள்ள வுள்ளத்தாள் கதித்த லோடும்

இ - ள். ஆயிடை - ஆங்கு, அமுதின் வந்த - அமிர்தம்போலு மெழுந்தருளிய, அருந்ததி கற்பின் - அருந்ததியினது கற்பினையும், அம் சொல் - அழகிய வார்த்தையையுமுடைய, வேய் இடை தோளினாளும் - மூங்கில் (உவமைக்குத் தோல்வியுற்றுப்) பின்வாங்குகின்ற புயத்தினையுடைய சீதாபிராட்டியும், வீரனை சேரும் வேலை - ஸ்ரீராமபிரானைக் கிட்டுகின்ற சமயத்தில், காய் எரி அனைய - எரிகின்ற தீயினையொத்த, கள்ளம் உள்ளத்தாள் - வஞ்சகத்தன்மைபொருந்திய மனத்தினையுடையாளாகிய அச்சூர்ப்பநகை, (பிராட்டியை நோக்கி), நிருதர்தம்பாவை - அரக்கர்களுடைய பெண்ணே! நீ—, இடை வந்தது என்னை - (எங்களுக்கு இடையூறாக) நடுவே வந்தகாரணம் யாது? என்னா - என்றுகூறி, கதித்தலோடும் - கோபித்தவளவில்.

குறிப்பு—அ + இடை - ஆயிடை, சுட்டு நீண்டது “நீட வருதல் செய்யுளுளுரித்தே” என்பவாகலின் அமிர்தம் கட்கினிதாகிய மென்மையுந் தன்னைநுகர்ந்தார் பிறிது நுகராமற்றடுக்கு மென்மையுமுடைமையின் ‘அமுதின்வந்த’ என்றார். இதனால் அரக்கி விடமென வந்தவளென்பதாம். அமுதின், இன் - உவமவுருபு இனி, உருபு மயக்கமாகக்கொண்டு அமுதொடுவந்த வென்விரித்துப் பாற்கடலில் அமுதொடு பிறந்தவளென்னலுமியையும் மற்று, அமுதின்வந்த அஞ்சொல் எனக்கொண்டு “அஞ்சொற் களமுதி னள்ளிக்கொண்டவள்” என மேல்வரும் செய்யுட் கொப்பிட்டுக் கூறுதலுமாம் (கசரு)

அஞ்சின ளஞ்சி யன்ன மின்னிடை யலச வோடிப்
பஞ்சின்மெல் லடிகள் நோவப் பதைத்தனள் பருவக் கால
மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின் வல்லி யென்னக்
குஞ்சர மனைய வீரன் குவவுத்தோ டழுவிக் கொண்டாள்.

இ - ள் அஞ்சினள் - இயற்கையாகவே யச்சத்தினையுடைய சீதாபிராட்டி, அஞ்சி - பயந்து, அன்னம் - அன்னப்புட்போலும், மின் இடை அலச ஓடி - மின்னல் போன்ற இடை தளரும்படி ஓட்டங்கொண்டு, பஞ்சின் - பஞ்சியைப்போலும், மெல் அடிகள் - மென்மை பொருந்திய பாதங்கள், நோவ - நோகும்படி, பதைத்தனள் - பதறுதலுற்றவளாய்; பருவம் காலம் மஞ்சு இடை - காரப்பருவக்காலத்திலிருக்கிற மேகத்தின்கண், வயங்கி தோன்றும் - பிரகாசித்துக் காணப்படுகின்ற, பவளத்தின் வல்லி என்ன - மின்னலைப்போல, குஞ்சரம் அனைய வீரன் - யானையை

யொத்த ஸ்ரீராமபிரானது, குவவு தோள் - திரட்சிபொருந்திய புயங்களை, தழுவிக் கொண்டாள் - கட்டியணைத்துக் கொண்டனள்.

குறிப்பு —மகளிர்க்கே குணங்களிலொன்றாய அச்சத்தினையுடையாள் அஞ்சியது வியப்பன்றென்பார் 'அஞ்சினளஞ்சி' என்றார். விரைந்தோடும் வலியின்மை விளக்க அன்னத்தை உவமை கூறினார். அன்னம் மின் என்புழி உவமவுருபு தொக்கது. இனி அஞ்சினள் என்பதை, முற்றெச்சமாகக்கொண்டு அஞ்சி யஞ்சி என்னலுமாம். பதைத்தனள் - முற்றெச்சம். பருவக்காலமஞ்சு - ஆவணி புரட்டாதி மாதங்களில் தோன்றுமேகம். இம்மாதங்கள் கார்ப்பருவமாதலை "காரே கூதிர் முன்பனி பின்பனி, சீரிள வேனில் வேனி லென்றாங், கிருமூன் றிறத்தது பெரும்பொழு தவைதாம், மாவணி முதலா விரண்டிரண் டாக, வாடி யிறுதிய வாயுங் காலே" என்பதனுணர்க. கரியமேகமென்பார் இங்ஙனங் கூறினார். மஞ்சு - பிரானுக்கும், பவளத்தின் வல்லி - பிராட்டிக்கும் உவமை. பவளவல்லி - ஆகுபெயராய் மின்னலையுணர்த்திற்று. ஸ்ரீராமபிரானுக்கு யானையை உவமைகூறியதில் அவனது தோள் யானையினது துதிக்கைபோன்றதென்பதுங் குறிப்பாலமையும். (௬௬)

வளையெயிற் றவர்க ளோடு வரும்விளை யாட்டென் றாலும்
விளைவன தீமை யேயா மென்பதை யுணர்ந்து வீர
னுளைவன வியற்ற லொல்லை யுன்னிலை யுணரு மாயி
னிளையவன் முனியு நங்கை யேகுதி விரைவி னென்றான்

இ - ள். வீரன் - ஸ்ரீராமபிரான், வளை எயிற்றவர்களோடு வரும் - வளைந்த பற்களையுடைய அரக்கிகளுடனே சம்பவிக்கின்ற, விளையாட்டு என்றாலும் - விளையாட்டென்று கூறினாலும், விளைவன - விளையுஞ் செயல்கள், தீமையே ஆம் என்பதை - தீதேயாகுமென்பதை, உணர்ந்து - நினைத்து, நங்கை-பெண்ணே! உளைவன இயற்றல் - மனவருத்தப் படும்படியான செயல்களைச் செய்யாதே, இளையவன் - இலக்குமணன், ஒல்லை உன் நிலை உணரும் ஆயின்-சீக்கிரம் உன்றன்மையை யறிவானேயானால், முனியும் - கோபிப்பான், விரைவின் ஏகுதி என்றான் - விரைவாகப் போய்விடு என்று கூறினன். (௬௭)

பொற்புடை யரக்கி பூவிற் புனலினிற் பொருப்பில் வாழு
மற்புடை யுள்ளத் தாரு மநங்கனு மமரர் மற்று
மெற்பெறத் தவஞ்செய் கின்றா ரென்னைநீ யிகழ்வ தென்னே
நற்பொறை நெஞ்சி னில்லாக் களவியை நச்சி யென்றாள்.

இ - ள். பொற்பு உடை அரக்கி - அழகினையுடைய அவ்விராக்ஷசியானவள், பூவில் - பூமியிலும், புனலினில் - ஜலத்திலும், பொருப்பில் - மலையிலும், வாழும் - வாழ்கின்ற, அற்பு உடை உள்ளத்தாரும் - அன்பினையுடைய மனத்தினையுடையவர்களும், அநங்கனும் - மன்மதனும், அமரர் - தேவர்களும், மற்றும் - மற்றவர்களும், என் பெற - என்னையடையும்படி, தவம் செய்கின்றார் - தவஞ்செய்துவருகின்றார்கள், (இங்ஙனமிருக்க), நீ - நீவிர், நல் பொறை - நல்லபொறுமை, நெஞ்சின் இல்லா - (தன்) மனத்திலில்லாத, களவியை - கள்ளத்தனமுடைய இவளை, நச்சி - விரும்பி, என்னை இகழ்வது - என்னை இகழ்ச்சி செய்வது, என் - யாது? என்றாள்—;

4894. VII. 2. 2 (?)

குறிப்பு — உடை - உடைய என்பதன் விகாரம். அன்பு - அற்பென விகாரப்பட்டது. செய்யுளாதலின், புவியிலும் நீரிலும் மலையிலும் இருந்து தவமியற்றிக் கடவுளிடத்தி லன்பினையுடைய முனிவர் என்பார் 'பூவிற் புனலினிற் பொருப்பில் வாழு மற்புடையுள்ளத்தார்' என்றார். இனி, பூவிலும் புனலினும் பொருப்பிலும் வாழ்கின்ற அன்புடையுள்ளத்தாராகிய பிரமா விஷ்ணு ருத்திரன் என்னும் இவரும் எனப் பொருள்கோடலுமாம். (சுஅ)

தன்னொடுந் தொடர்வி லாதே மென்னவுந் தவிரா டாளிக்
கன்னெடு மனத்தி சொல்லுங் கள்ளவா சகங்க ளென்னா
மின்னொடு தொடர்ந்து செல்லு மேகம்போன் மிதிலை வேந்தன்
பொன்னொடும் புனிதன் போய்ப் பூம்பொழிற் சாலை புக்கான்

இ - ள். தன்னொடும் தொடர்வு இலாதேம் என்னவும் - நின்னுடனே உறவில்லாமலிருக்கிறேமென்று கூறவும், தவிராள் - ஒழியாதவளாகி, இ கல் நெடுமனத்தி - கல்லினும் பெரிய மனத்தினையுடைய இவள், கள்ளவாசகங்கள் - பொய்ம்மொழிகள், சொல்லும் - கூறுகின்றாள், என்னா - என்று நினைத்து, புனிதன் - ஸ்ரீ ராமபிரான், மின்னொடுதொடர்ந்து செல்லும் மேகம்போல - மின்னலுடனே தொடர்ந்து போகின்ற மேகத்தைப்போல, மிதிலை வேந்தன் பொன்னொடும் - ஜானகிப்பிராட்டியுடனே, போய்-சென்று, அ பூ பொழில் சாலைபுக்கான் - அவ்வழகிய சோலைசூழ்ந்த பன்னசாலையுட் புகுந்தான்.

குறிப்பு — "வைகலு நீருட் கிடப்பினுங் கல்லிறகு, மெல்லென்றல் சால வரிதாகு-மஃதேபோல், வைகலு நல்லறங் கேட்பினுங் கீழ்க்கட்கு, கல்லினும் வல்லென்னு நெஞ்சு" என்றபடி தான் எவ்வளவு சொல்லக்கேட்டும் அவள் மனந்தாழாததுபற்றி 'தன்னொடுந் தொடர்வி லாதே மென்னவுந் தவிரா டாளிக் கன்னெடு மனத்தி' என்றான். 'நெடுமனம்' என்றது, "எண்பதுகோடி நினைந்தெண்ணுவன" என்றபடி வரம்பில்லாது மேன்மேற் செல்லும் ஆசைக்கருத்து நீட்சியையுடைய மனமென்றபடி. மின்னல் பிராட்டிக்கும் மேகம் பெருமானுக்கும் உவமை. மிதிலை - நிமியென்னும் அரசனது குமாரனும் சனககுலத்தலைவனுமான மிதி என்னும் அரசனால் ஏற்படுத்தப்பட்ட நகரமென்று காரணப்பெயர். (சுக)

புக்கபின் போயதென்னு முணர்வினள் பொறையு ணீங்கி
யுக்கதா முயிர ளொன்று முயிர்த்தில ளொடுங்கி நின்றா
டக்கிலள் மனத்துள் யாதுந் தழுவிலள் சலமுங் கொண்டாண்
மைக்கருங் குழலி னுண்மாட் டன்பினில் வலிய னென்பாள்

இ - ள். புக்கபின் போயது என்னும் உணர்வினள் - (ஸ்ரீராமபிரான் பன்னசாலையுட்) புகுந்தபிறகு போய்விட்டதென்னும் அறிவினையுடையவளும், பொறையுள் நீங்கி உக்கது ஆம் உயிரள் - உடலினின்றும் நீங்கிவிட்டதாகிய உயிரினையுடையாளும், ஒன்றும் உயிர்த்திலள் ஒடுங்கி நின்றாள் - சிறிதும் சுவாசம் விடாமல் ஒடுங்கி நின்றவளும், தக்கிலள் மனத்துள் யாதும் தழுவிலள் - வசப்படாத மனத்தில் எவ்விஷயமும் ஏற்றுக்கொள்ளாதவளுமாகிய சூர்ப்பநகை, சலமும் கொண்டாள் - கோபத்தையும் அடைந்து, மை கருங்குழலினுள் மாட்டு - கரிய கூந்தலினை

புடையாள் (சீதாபிராட்டியின) இடதது, அன்பினில் வலியன் - அன்பில வலிமை யுளளவன [பேரனபுடையான], என்பான் - எனறுகூறுவான.

குறிப்பு:—பொறை - சுமககப்படுவதெனறு உடமபுககுக் காரணப்பெயா, பொறு - பகுதி, ஐ - செயபபடுபொருள விகுதி. காமவேதனை மிகக இவளுககு அப்பொழுது வலிமை யழிவால தன உடமபுந தாஙகமாட்டாததொரு பெரிய பாரமாகததோனறியது எனபது தோனற இஙகே உடமபை வேறுபெயராற குறியாமற 'பொறை' எனற சொலலாற குறிததாா பொறையுள - உருபுமயககம (எ0)

நினறில ளவனைச சேரு நெறியினை நினைநது போனா
ளினறிவ னாகம புலலே னெனினுயி ரிழபபெ னெனறுப
பொனறிணி சரளச சோலைப பளிககறைப பொதுமபா புககாள
சென்றது பரிதி மேலபாற செககாவந திறுதத தனறே.

இ - ள் நினறிலள - (அஙகு) நிலலாமல, அவனை - அநத ஸ்ரீராமபிரானை, சேரும - அடைகினற, நெறியினை நினைநது - வழியை நினைததுககொணடு, போனாள - சென்ற சூாபபநகை, இவன ஆகம - இவனது மாாபினை, இனறு புலலேன எனின - இறறை நாள அணையேனாயின, உயிா இழபபென எனறு - (என) உயிரினை இழநதுவிடுவேன எனறுகூறி, பொன திணி - பொறபொடிபோனற பூநதாதுககள அடாநத, சரளம சோலை-தோமைபொருநதிய சோலையிலுளள, பளிககு அறை பொதுமபா புககாள - (தனது) பளிஙகுமணடபததினது உளளிடததிலே நுழைநதிடடாள, (அபபொழுது), பரிதி - சூரியன, மேலபால சென்றது - மேற்குததிககிற போயச சோநதது [அஸ்தமிததது], செககாவநது இறுததது - (அததிசையிற) செவவானம வநது சோநதது

குறிபபு —பொன - உவமையாகுபெயா பளிககறை - ஸ்படிககலலினாலமைககபபடட சிறுவீடு. பளிககறை - வேறறுமையில மெனறொடாவனறொடராயிறறு 'மேலபால' எனபது மததிமதீபமாய 'பரிதிசென்றது செககாவநதிறுததது' எனற இரணடனோடு மியையும. (எக)

வேறு

அழிநத சிநதைய ளாயயா வாளவயின
மொழிநத காமக கடுஙகனன மூணடதால
வழிநத நாகததின வனறொளை வாளெயிற
றிழிநத காாவிட மேறுவ தெனனவே

இ - ள (அவவாநதிபபொழுதில்), அழிநத சிநதையளாய அயாவாள் வயின - அழிநத மனமுடையவளாயச சோரும அசசூாபபநகையினிடதது, மொழிநத - (முன) கூறிய, காமம கடுககனல - காமமாகிய கொடியதீயானது, வழிநத - ஒழுகுதலுறற, நாகததின - நாகசாப்பததினது, வல தொளை - கொடிய துவாரததினையுடைய, வாள எயிறு - வாளபோலுங் கூாமைபொருந்திய பறகளினினறும, இழிநத - இறஙகிய, காாவிடம - கரியவிஷம, ஏறுவது என்ன - (உடலில) ஏறுவது போல, மூண்டது - (அவள உடல் முறறும் வியாபித்து) எரிவதாயிறறு.

குறிப்பு—ஸ்ரீராமபிரான் தன்னை மறுத்தமையால் விளைச் செய்வதியாதெனப் பலவாறு சிந்தித்து ஒன்றுந்தோன்றாது உடைந்தமையிளக்க 'அழிந்தசிந்தை நயளாய்' என்றார். அயாவுள் - வினையாலணையும் பெயர். வயின் - ஏழனுருபு. கனல்- கனல் வது வினைமுதற்பொருள் விகுதி புணர்ந்து கெட்டது. காந்தோறுமிகும் பொழுது நஞ்சுகாலுதல் மிகுமாதலின் 'வழிந்த' என்றார் எயிற்றின் துளைவழியாய் இறங்கிய நஞ்சால் பாம்பின் உடல்வெந்து தோல் உரியுமெனபர் காா கருமையின்திரிபு "உள்ளினுஞ் சுட்டிடு முணருங் கேள்வியிற், கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத், தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினால், கள்ளினுங் கொடியது காமத் தீயதே," என்பவாகலின் 'காமக்கடுங்கனல்' லென்றார். (எ௨)

தாடகைக்கொடி யாட்ட மார்பிடை
யாடவாக்கர சன்னயி லம்புபோற்
பாடவத்தொழின் மன்மதன் பாயக்கணை
யோட வுட்கி யுயிருளைந் தாளரோ.

இ-ள். தாடகை கொடியாள் - தாடகையென்னுங் கொடியராக்ஷஸியின்து, தடமார்பிடை - பெரியமார்பினிடத்தே, ஆடவர்க்கு அரசன் - புருஷோத்தமனாகிய ஸ்ரீராமபிரானுடைய, அயில் அம்புபோல் - கூர்மைபொருந்திய பாணத்தைப்போல, பாடவம் தொழில் மன்மதன் - சாமர்த்தியமான போர்த்தொழிலையுடைய மன்மதனது, பாயக்கணை - பாய்கின்ற அம்புகள், ஓட - (தன்மனத்திற்பாய்ந்து) ஓடுவதால், உட்கி - (அவள்) அஞ்சி, உயிர் உளைந்தாள் - பிராணவஸ்தை யடைந்தாள்

குறிப்பு—கொடியாள் - கொடுமையென்னும் பண்படியாகப் பிறந்தபெயர் ஆண்மையுடையார் யாவரினுஞ் சிறந்தவனாதலபற்றி 'ஆடவாக்கரசன்' என்றார் அரசனனயில் - விரித்தல் கணை முதலியன கட்புலனுக்குத் தோன்றுவாறு கொண்டு தானும் அங்கனுய நின்று "திண்பரித் தென்றலுந் தேருந் தார்புனை, வண்பரிக் கிள்ளையு மாலை யானையுங், கண்கடைப் படுங்கொலைக் காமசேனையு மெண்படப் புகுந்தன னிரதி காந்தனே" என்றவாறு வீரபோக்குரியனவர்காச சேனையோடு சென்று எவரையும் வெல்லுந்திறமையுடையான் என்பதுபற்றிச் சாமர்த்தியமான போர்த்தொழிலையுடையானென்று கூறினார். பாடவம் என்றற்குக் களிப்பென்றேனும், சுகமென்றேனும் பொருள் கோடலமையுமாயினும் இப்போதினிறுதியில் இவள் இன்பம் பெற்று துன்பமே பெற்று மடிவாளென்னும் உறுதி நோக்கி அவை பொருந்தாவெனக் இது பற்றியே மன்மத னிவள்மேலேவிய கணைக்குத் தாடகையைக்கொன்ற அம்பினை யுவமைகூறினார். மன்மதன் கணை - தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பலமென் மலர்கள் ஐந்தாம், "அந்த ரவிந்த மாம்பூ வசோகப்பூப், பைந்தளிர் முல்லை பணிநீல - மைந்துமே, வீரவேண் மைந்தரையும் வேனெடுங்கண் மாதரையு, மாரவே ளெய்யு மலர்" இவை திரவியபாணம். இங்கிதம் மதனம், வசீகரணம், மோகனம், சந்தாபம் இவை பாவபாணமென் ஐங்கணை இருவகை என்ப இக்கணைகள் செயலில் வன்மையுடைமை பற்றிப 'பாயக்கணை' என்றார். அம்மலர்களின் செயலின் வன்மையை "நினைக்கு மரவிந்த நீளபசலை மாம்பூ, வனைத் துணவு நீக்கு மசோகு - வனத்திலுறு, முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங், கொல்லுமத னம்பின் குணம்" என்பதனாலறிக தாடகை- மலையிற் சஞ்சரிப்பவள், இவள் சுகேது என்னும் யக்ஷன்தமகள், சுந்த னென்பவனது மனைவி; ஆயிரமயானைவலிமை கொண்டவள், கணவன் அகஸ்தியரது கோபத்திற்கு இலக்காய்ச் சாம்பரானதை

யறிந்த இவள் தன் புத்திரர்களாகிய சுபாகு மாரீசன் என்னும் இவர்களுடனே அம்முனிவரை யெதிர்த்துச் சென்ற பொழுது அவர் இட்ட சாபத்தால் மூவரும் ராக்ஷஸர்களாயினர். ஸ்ரீராமபிரான் தாடகையைக் கொன்றது, விசுவாமித்திராச்சிரமத்துக்குச் செல்லும் வழியிடையிலென்க. (எக)

கலையு வாமதி யேகறி யாகவன
சிலையின் மாரனைத் தின்னு நினைப்பினள
மலைய மாருத மாநெடுங் காலவே
லுலைய மார்பிடை யூன்றிட வோயுமால.

இ - ள் (அசரூபபாகை), கலை உவாமதியே - (பதினாறு) கலைகளையுடைய பூரண சந்திரனே, கறியாக - கறியாகும்படி (கொண்டு), வன சிலையின் மாரனை - வலிய (கரும்பு) வில்லினையுடைய மன்மதனை, தின்னும் - தின்கின்ற, நினைப்பினள் - எண்ணத்தையுடையாளாகி, மலயமாருதம் மாநெடுங்காலவேல் - தென்றற்காற்றாகிய பெரிய கொடிய வேலானது, உலைய - (அவள்) வருந்தும்படி, மார்பிடை ஊன்றிட - (அவளுடைய) மார்பினிடத்தே தாக்கிட (அதனால்), ஓயும் - சோர்வடைவாளாயினள்

குறிப்பு.—கலை - சந்திரன்பங்கு. உவாமதி - பௌர்ணமிச் சந்திரன். ஏகாரம் - பிரிநிலை. கறி - கறிக்கப்படுவது செயப்படுபொருள் விகுதி புணராது கெட்டது, கறித்தல் - கடித்தல், புசித்தல் கரும்புவில் பிறவிற்களைப்போல் வளைவுபெறாது இலேசேயாயினும் மனோவேதனை பெரிதும் விளைக்கும் மாரனது கொடிய செயலை அவளின்மேலேற்றி 'வன்சிலை' என்றார். மதியும் மாரனும் இவளை வருத்துவதில் ஒரு தன்மையராயினும் கட்புலனுக்குத் தோன்று மதியின்மேற் சினமிக்கது தோன்ற மதியை உண்பபொருளினை யுட்செலுத்தற் கினறியமையாத கறியாகக் கருதினளென்க. மலயமாருதம் - பொதியமலையினின்றும்மிழியுங்காற்று. மலயம் - பொதியமலை, "தென்மலை மலயந் தென்றல் வருமலை" என்பது பிங்கலந்தை மாநெடு- ஒரு பொருட் பன்மொழி. இச்செய்யுளிற்குறித்த சந்திரன் மன்மதன் தென்றல் என்பனவும் அடுத்த கவிகளில் வருகிற கடல் அன்றில் முதலியனவும் காமோத்தீபகப் பொருள்களாதலை "தென்றறரும் வீணைகரும் சேமணிக்குயு கோகிலத்துக், கன்றிற் கமைக்காழிக் கமபுலிக்கு - நின்றரற்று, மன்னைக்கு மாரற் கயாநதாளென் றனன்மே, யென்னைக குமாரற் றியம்பு" என்பதனுனுணர்க (எச)

அலைகரு மாழி யடங்கிட வங்கையான
மலைகரு லங்களிற் றூங்கு மனத்தினா
ணிலைக்கும வானி னெடுமதி நீணிலா
மலைக்க நீங்கு மிடுக்கினள மாகதுவாள்,

இ - ள அலைகரும் ஆழி அடங்கிட - துன்பஞ்செய்கின்ற கடல் (கோஷியாது) அடங்கிப்போம்படி அங்கையால் - (தனது) உள்ளங்கையினாலே, மலைக்குலங்களில் - மலைக்கூட்டங்களால், தூங்கும் மனத்தினள் - (அதைத்) தூர்த்துவிடக்கொள்ளும் மனத்தினையுடையாளாகி, வானில் நிலைக்கும் நெடுமதி - ஆகாயத்தில் நிலைபெற்றிருக்கின்ற பூரண சந்திரன், நீள்நிலா - நெடிய நிலவினாலே, மலை

கக - (அலைகள்) நீங்கும்படி செய்ய, (அதனால்), நீங்கும் - (தான் செய்யக்கருதிய தொழிலினின்றும்) நீங்கி, இங்ஙனம் மாந்தர்வாள் - இடைஞ்சலையுடையாளாகி உள்ளழிந்தாள்.

கருத்து—கடலைத் தூக்கக் கருதியவுடனே, கடல் மதலையாகிய சந்திரன் தன் தாய்க்குத் தீங்கு நேரிடாவாறு தன்னிலவினால் அவளை வெருட்டி வெற்றிகொண்டதென்பதாம். "குரைகடல் மதிக்கு மதலையைக், குறுமுயலொளிக்கு மானனை, பிரவிருளகற்று நிலவனை, பிறையவன் முடித்த வணியனைக், கரியவன் மனத்தினுதையனைக், கயிரவ மலர்த்து மவுணனைப், பரவுநர் தமக்கு நின்றிரு, பதமலர் தப்பப வினையையே" என்பதனால் கடலுக்கு மதி மதலையாதல் காண்க.

குறிப்பு.—மயல்வினை செழிக்கவும், துயில்வினை யொழிக்கவும் இரைதலபற்றி 'அலைக்கும்' என்றார். இனி, அலைகளைக் கரையில் மோது மாழியென்றலுமாம். அங்கை - அகங்கை யென்பதன் விகாரம். அவல்கணமுடையாளாகலானும், அவள் உள்ளங்கையிற் பந்துபோல் மலைகிறக்குமென்னல் கைக்குப் பெருமையாகலானும் (அங்கை) - அழகியகையென வுரைகூறாது விட்டாம். குலங்களில், இல - உருப்புமயக்கம் மேகங்களாற்சிறிது மறைபடாத தன்மைதோன்ற 'நிலைக்கும்' என்றார். நிலா - சந்திரப்பிரபை மலைக்க - இப்பிறவினை யெச்சத்திற்கு மலைய என்பது தன்வினையாம். நீங்கும் - முற்றெச்சம். நீங்குமிடுங்கினள் மாந்தவாளென்பதற்கு வலி நீங்கினவளாய மரணாவஸ்தை யடைந்தாளென்ப பொருள்கோடலுமாம் (எரு)

பூவெ லாம்பொடி யாகவிப் பூமியுட
காவெ லாமொடிப் பென்னெனக் காந்துவாள்
சேவ லோடுறை சொந்தலை, யன்றிலி
னாவி னாலவலி யெஞ்ச நடுங்குவாள்.

இ - ள். பூ எலாம் பொடி ஆக - புஷ்பங்களெல்லாம் பொடியாகும்படி, இ பூமியுள் - இந்தப் பூமியிலிருக்கிற, கா எலாம் ஒடிப்பென் என - சோலைகள் எல்லாவற்றையும் ஒடித்தெறிவேனென்று, காந்துவாள் - கோபிப்புற்றவளாகி, சேவலோடு உறை - ஆண்பறவையோடு வசிக்கின்ற, செந்தலை அன்றிலின் - செய்ய தலையினையுடைய அன்றிற் பறவையினது, நாவினால் - தொனியினால், வலி எஞ்ச - (தனது) பலங்குறைய, நடுங்குவாள் - நடுக்கங்கொள்வாளாயினள்.

கருத்து.—புஷ்பங்களின் மேற்கொண்ட கோபத்தால் இவள் இச்சோலையை அழிக்கின், தனக்கு இருப்பிடமின்றி அவதிப்பட நேரிடுமென அன்றிலுணர்ந்து கூவி அவளை அச்செயலியற்றாவாறு தடுத்து வெற்றிகொண்டதென்பதாம்

குறிப்பு—மன்மதனுறைவிடமாகிய சோலையையும் அச்சோலையிலுள்ள மலர்களையும் நாசஞ்செய்தால் மன்மதனுக்கு வலிகுன்றுமென்று கருதிக் காவை யொடிக்கக் காந்தினளெனக. காவென்ற குறிப்பால் பூ - மாமலரும் அசோகமலருமாம். இனி, பூ வெலாம் என்றதற்குப் பூமிமுழுதும் எனப்பொருள்கொண்டு அவ்விருவகை மலரோடு தாமரை முல்லை நீலோற்பலம் என்னுமலர்களையும் நாசஞ்செய்யக் கருதினளென்னலு மேற்கும். ஒடிப்பென்னெனை - விரித்தல். சேவல் - ஆணன்றிலாதலை, "சேவற் பெயர்க்கொடை சிறைகொடு சிவணு, மாயிருந்தூவி மயிலலங் கடையே" என

னும் தொல்காப்பியச் சூத்திரத்தானுணர்க. அன்றிற்பறவை ஆண் பெண் பிரிதலில்லை; பிரியும்படி நேரின் இரவில் இரையின்பொருட்டு ஆண்பிரியும். அங்ஙனம் பிரிவதுஞ் சிறியநேரமே. அச்சிறியநேரத்திற் பெடையன்றில் கூவும். அங்ஙனங் கூவியவளவில் ஆண்வந்து சேரவேண்டும், அல்லது பிரதித்தொனியேனுஞ் செய்யவேண்டும், இல்லாவிடிற் பெடையிறந்துவிடும். இதுபற்றியே 'சேவலோடுறை' என்றார். அன்றில் ஆணும்பெண்ணும் தலையோடுதலை பிணைத்திருக்குஞ் சிறப்புநோக்கிச் 'செந்தலையன்றில்' என்றார். நா என்னுங் கருவி அதன் காரியமாகிய தொனியையுணர்த்துதலின் கருவியாகுபெயர். இவ்வன்றிலின் தொனி, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஏழுவகை யிசையினுள்ளொன்றாய விளரியாம். இது ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்னும் ஏழனுள் தைவதமாமென்றும் விளரியென்பதொருபண்ணின் பெயரென்றுங் கூறுப. மயில் பஞ்சமஸ்வரத்தைச் செய்வதுபோல, அன்றில் தைவதஸ்வரத்தைச் செய்யுமென்றறிக. இவ்வன்றிலின் விளரிஸ்வரங் கேட்டவுடனே சேவல்வந்து அதனை மகிழ்விக்குந் தன்மைபோலத் தானெப்பாடுபட்டேனும் தனக்குக் காமமூட்டிய கட்டழகன் கிட்டானேயென்னும் விசாரத்தால் வலியெஞ்ச நடுங்குவாளென்க. (எசு)

அணவி றிங்களை நுங்க வராவினைக்
கொணர்வெ னோடி யெனக்கொதித் துன்னுவாள்
பணையின் மென்முலை மேற்பனி மாருதம்
புணர வாருயிர் வெந்து புழுங்குமால்.

இ - ள். அணவு இல் திங்களை - கிட்டுதலில்லாத [சேய்மையிலுள்ள] சந்திரனை, நுங்க - விழுங்க, அராவினை - பாம்பினை, ஓடி - விரைந்து சென்று, கொணர்வென் என - கொண்டு வருவேனென்று, கொதித்து - கோபித்து, உன்னுவாள் - கருதுவாளாகி, பணை - பெரிய, மென்முலைமேல் - மெல்லிய தனங்களின்மீது, பனிமாருதம் - குளிர்ந்த வாடையானது, புணர - தோய்வதால், ஆருயிர்வெந்து - (தனது) அரிய உயிரும் வேவுதலுற்று, புழுங்கும் - வருந்துவாளாயினாள்.

கருத்து — திங்களை நுங்க அராவினைக் கொணர்வாளாகில் அவ்வரா தன்னை விழுங்கிவிடுமென அஞ்சிப் பனிமாருதம் அவள் முலைமேற்பாய்ந்து வருத்தி அவளை அச்செயலினின்றும் நீக்கி வெற்றிபெற்றதென்பதாம்.

குறிப்பு — அணவு - முதனிலைத் தொழிற்பெயர். திங்கள் - கலைநிறைந்த சந்திரன். பணையின் என்புழி இன் - தவிர்வழி வந்தசாரியை. இனி, பணையின் முலை என்றற்கு முரசுபோன்ற முலையென்னும் பொருந்தும். (எஎ)

கைக ளாற்றன் கதிரிளங் கொங்கைமே
லைய தண்பனி யள்ளின ளப்பினள்
மொய்கொ டீயிடை வெந்து முருங்கிய
வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால்.

இ - ள். தன் கதிர் இளங்கொங்கைமேல் - தனது ஒளி பொருந்திய இளமை வாய்ந்த முலைகளின்மீது, ஐய - வியக்கும்படியாக, தண்பனி - குளிர்ந்த பனிக்

கட்டிகளை, கைகளால் அள்ளினள் அப்பினள் - (தன்) கைகளால் அள்ளி அப்பிக் கொண்டாள், (அப்பனிக்கட்டிகள்), மொய்கொள் தீ இடை - மொய்த்தல் கொண்ட [மிகுதியான], அக்கினியில், வெந்து—, முருங்கிய - உருவழிந்த, வெய்யபாறையில்-வெப்பமான கல்லின்மேலிருக்கிற, வெண்ணெய் நிகர்க்கும் - வெண்ணெய்க்கட்டிகளை ஒத்தன.

குறிப்பு:—காமத்தாற் சூடுகொண்டது விளங்க அக்கினிச்சுவாலை பொருந்திய மூலையென்பார், 'கதிர்கொங்கை' என்றார். ஐ - வியப்பாதலை "ஐயிரு வட்டமொ டெஃகு வலந்திரிப்ப" என்னுந் திருமுருகாற்றுப்படையி னுரையானும், "தெருளுற வைய முடிப்பையின் றெனவே" என்னுங் கல்லாடத்தி னுரையானுமறிக. "ஐவியப்பாகும்" என்பது தொல்காப்பியம். இனி, ஐய - அசைநிலையாகக் கோடலும், அழகியவென்பொருள் கோடலும் பொருந்தும். அள்ளினள் - முற்றெச்சம். மொய்-முதனிலை. மொய்கொள் தீ - காமாக்கினிக்கும், வெந்துமுருங்கிய வெய்யபாறை - அவள் உடலுக்கும், வெண்ணெய் - பனிக்கும் உவமை. (௭௮)

அளிக்கு மெய்யுயிர் காண்றழ லஞ்சினள்
குளிக்கு நீருங் கொதித்தெழக் கூசுமால்
விளிக்கும் வேலையை வெங்கண் அனங்கனை
யொளிக்க லாமிட மியாதென வுன்னுமால்

இ - ள். விளிக்கும் வேலையை - கூவுகின்ற கடலையும், வெங்கண் அனங்கனை-கொடிய மன்மதனையும், ஒளிக்கல் ஆம் இடம் யாது என உன்னும் - (எடுத்துச் சென்று) ஒளிப்பதற்காகிய (தக்க) இடம் யாதென்று ஆலோசிப்பாளாய், அளிக்கும் - அன்போடு பாதுகாக்கப்படுகிற, மெய் - (தன்) உடம்பினின்று, உயிர்கான்று-உயிர் வெளிப்படும்படியான நிலைமையையடைந்து, அழல் அஞ்சினள் - காமாக்கினிக்கு அச்சங்கொண்டவளாய், (அவ்வெப்பந் தணியும்படி), குளிக்கும் - (தான்) முழுகுகிற, நீரும் - (சிறிய) தண்ணீரும், கொதித்து எழ கூசும் - கொதிப்புற்றுப் பொங்கியதால் நாணமடைவாளாயினள்.

குறிப்பு—உயிர் சோர்வடையாத நிலைமையிலும் காணுதற்கரிய மன்மதனை உயிர் சோர்ந்த இந்நிலைமையில் எங்குத் தேடிக் கண்டுபிடிப்பேனென்றும், தான் குளிக்கின்ற இச்சிறிய நீரே இங்ஙனங் கொதிக்குமாயின் வடவைத்தீயைத் தன்னிடத்தே கொண்டிருக்கிற பெரியகடலினது கொதிப்பை எவ்வாறு பொறுப்பேனென்றும் நாணங்கொண்டு கடலையும் மன்மதனையும் எடுத்துச் சென்று ஒளிக்கக் கருதிய எண்ணத்தை நீக்கினாளென்க. இனி, உயிர் என்றகுப் பெருமூச்சு என்பொருள்கொண்டு, தன் உடம்பிற் சரியாய் மூச்சுவரவொட்டாமற் பெருமூச்செறியும்படி தபிக்கிற காமதாபத்துக்கு அஞ்சி அதனைத் தணிக்கும்பொருட்டு அன்னலுக்கு எதிரிடையான குளிர்ந்த நீரிலேமூழ்க, உலகத்துத்தீயை அவிக்க வல்லதான அந்நீரும் இந்தத் தீயை அவிக்கமாட்டாமல் இதன் வெப்பத்தால் தான் கொதித்து மேலெழக்கண்டு யாதொன்றும் பரிகாரங்கிடைத்திடாமையால் மிக அஞ்சவாள், ஒலியால் வருத்துகிற கடலுக்கும் செயலால் வருத்துகிற மன்மதனுக்கும் வருந்து மிலக்காகாமல் மறையும்படியான இடமு முண்டோ வென்று சிந்திப்பாளாயினாளென்று கூறுதலும் அமையும்.

'அழலஞ்சினன் குளிக்குநீருங் கொதித்தெழக்கூசும்' என்ற இடத்து, "ஊருந் தொழுந்த வருதொழு செந்நீக்கு, நீருட்குளித்து முயலாகும் - நீருட், குளிப்பினுங் காமஞ் சுடுமே" என்றது அறியத்தக்கது. பின்னுரைக்கு வேலையை, அதனைக்கனை என்பன உருபுமயக்கம். விளிக்கும் - மடியச்செய்யும் எனப்பொருள் கோடலுமாம்.

வந்து கார்மழை தோன்றினு மாமணிக்
கந்து காணினுங் கைத்தலங் கூப்புமா
விந்து காந்தத்தி னீர நெடுங்கலும்
வெந்து காந்த வெதும்புறு மேனியாள்.

இ - ள். ஈரம் நெடும் இந்துகாந்தத்தின் கலும் - ஈரமாகிய பெரிய சந்திரகாந்தக்கல்லும், வெந்து—, காந்த - கொதிக்கும்படி, வெதும்பு உறு மேனியாள் - சூடு கொண்ட உடலினையுடையாளாகிய அசசூர்ப்பநகை, கார்மழைவந்து தோன்றினும்- (உருவெளித்தோற்றத்தில்) கரியமேகம்வந்து காணப்பட்டாலும், மாமணி கந்து காணினும் - நீலரத்தினத்தாலாகிய தூணைக்கண்டாலும், கைத்தலம் - கைகளை, கூப்பும் - குவிப்பாள் [கும்பிடுவாள்],

குறிப்பு —ஸ்ரீராமபிரானுடைய நிறத்துக்குக் கார்மழையும், புயத்துக்கு மாமணிக்கந்தும் உவமை. இந்துகாந்தம் - சந்திரனது பிரகாசம். இப்பிரகாசத்தினாலே நீர்கொளுங்கலுக்குச் சந்திரகாந்தக்கல் என்றுபெயர். (௮௦)

வாம மாமதி யும்பனி வாடையுங்
காம னுந்தனைக் கண்டுணர ராவகை
நாம வாளெயிற் றோர்கத நாகம்வாழ்
சேம மால்வரை யின்முழை சேருமால்.

இ - ள். வாம மா மதியும் - அழகிய மேன்மைபொருந்திய சந்திரனும், பனி வாடையும் - குளிர்ந்த காற்றும், காமனும் - மன்மதனும், தனைக்கண்டு உணராவகை- தன்னைக்கண்டறியாத விதமாக, நாம வாள் எயிறு - அச்சத்தைத் தருவதான வாள் போலும் (கூர்மைபொருந்திய) பற்களையுடைய, ஓர் கதம் நாகம்-ஒருசினங்கொண்ட நாகசர்ப்பம், வாழ் -வசிக்கின்ற, சேமம் -காவல்பொருந்திய, மால்வரையின்முழை- பெரியமலையினகண் உள்ள குகையினிடத்து, சேரும் - சேர்வாளாயினாள்;

குறிப்பு,—நெடியோன் முதலாத் தேவர் கூடி, வாங்கிக் கடைந்த தேம்படு கடலின், அமுதுடன் றோன்றிய வுரிமை யானும், மணக்க மனைத்து நிறைந்த பலவுயிர்கட்கு, காயா வமுத மீக லானும், காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்தக், காம வுததியைக் கரைவிடவுகையு, காவ யாக லானும் 'வாமமாமதி' என்றார். இத்தகைய மதியும், களிப்பை மிகுதியுங் கொடுக்கவல்ல குளிர்ந்தவாடையும் அவட்குப் பகையாயதைப் பின் மூன்றடிகளாலுங் குறிப்பித்தார். மதிக்கும் காற்றுக்கும் நாகம் பகையாதலானும் நாகம்வாழ்கின்ற முழைக்கட்சேரின் மதியும்வாடையும் வாராதொழிவதோடு மாரனும் வாரானென்று கருதி யாங்குச் சேர்ந்தாளெனக் "குன்றேறி யொளிப்பினுங் காமஞ் சுடுமே" என்பதைப் பேதைமையாலும் உணர்வழிவாலும் ஆராயாது இங்ஙனஞ் செயத்தொடங்கினளென்க. (௮௧)

அன்ன காலை யழன்மிகு தென்றலு
முன்னின மும்மடி யாய்முலை வெந்துக
வின்ன வாசெயவ தென்றறி யாதிளம
பொன்னின் வாரதளி ரிற்புரண் டாளரோ.

இ - ள். அன்னகாலை - அந்தநேரத்தில, அழல மிகுதென்றலும - வெப்ப மிகுந்த தென்றற்காற்றும, முன்னின் மும்மடியாய - முன்னிலு மூன்றுமடங்காகி, முலை வெந்து உக - முலைகள் வெந்துவிட்டதால, செயவது - செய்யத்தகுவது, இன்ன ஆ என்று அறியாது -இன்னவிதமென்று தெரியாமல், இளம பொன்னின இலேசான பொற்றகடுபோல, வாரதளிரில - நீண்டதளிர்களின்மேல், புரண்டாள - புரளுதலுற்றாள.

குறிப்பு—அன்ன - இஃதீண்டுச சுட்டளவாய்நின்றது. அழல் - அழல்வது, தளிர - தளிர்பபது, கருத்தாப்பொருள விகுதி புணர்ந்துகெட்டது. தென்றலும, உம்மை - எச்சம, மறியும மும்மடியாயிற்றெனக ஆ - ஆறெனபதின்விகாரம. முன்னின, இன - எல்லைப்பொருட்டு. பொன்னின், இன -ஒப்புப்பொருட்டு, இளம பொன எனவே பொற்றகடென்றும. (அஉ)

வீரன மேனி வெளிப்பட வெய்யவள
காரகொண்ட மேனியைக கண்டன ளாமெனச
சோரும வெள்கும துணுககெனு மவ்வுருப
பேருங காலவெம பிணியிடைப பேருமால.

இ - ள. வீரனமேனி வெளிப்பட - ஸ்ரீராமபிரானது திருமேனி உருவெளித் தோற்ற மாகக்காணப்பட்டதால, வெய்யவள - அசசூர்ப்பநகை, காரகொள மேனியை - மேகநிகொண்ட நிறத்தை, கண்டனள என - பார்த்தாளபோல, சோரும - சோர்வாள, வெள்கும - நாணுவாள, துணுககெனும - அச்சப்படுவாள, அ உரு பேருங்கால - அந்த உருவம மறைபட்டால, வெம்பிணியிடை - வெவ்விய (காம) நோயில, பேரும - மறுபடியுஞ சோர்வாள.

குறிப்பு—வெய்யவள் - வெம்மையென்னும் பண்படியாகப் பிறந்தபெயர், இது அவள தீயகுணத்தையும் காமவெப்பமுற்ற தன்மையையுங் குறிப்பித்து நின்றது. கார - குணவாகுபெயர். மேனி - ரூபமும நிறமுங் குறித்தபலபொருளொருசொல. உருவெளித்தோற்றமாய ஸ்ரீராமபிரானது கரியநிறத்தைக காரமேகமென்று கருதித்தளர்வடைந்து பின்னர் அஃதன்றெனவும பிரானுடைத்திருமேனியெனவு முணர்ந்து நாணியும், அவர்கரு மரியாதைபுரியாது அலங்கோலமாய்க்கிடந்தமை யுணர்ந்து அச்சப்பட்டாளெனபதும் விளங்க 'சோரும வெள்கும துணுககெனும்' என்றார். காரகாலங்கண்டாற்றுமையை "கடலகொண்டெழுந்தது வானமவ் வானத்தை யன்றிச்சென்று, கடல்கொண்டொழிந்த வதனுவிதனைன்ன மணனுமவினனுங, கடலகொண்டெழுந்தவக காலங்கொலோபுயற காலங்கொலோ, கடல்கொண்ட கண்ணீ ருருவிசெய் யாநிறுங் காரிகையே" என்னுந் திருவிருத்தத் தானும், "வினைகொண்ட மலைமீது விண்மாரி பொழிகின்ற விசைபோலவென, கணைகொண்ட முலைமீது கணமாரி பொழிகின்ற காரகாலமே" எனுந்திவவிய கவிப் பிள்ளைப்பெருமாளையங்கார் பாடலானும அறிக. பேருங்கால் - வினையெச்சம்

காமநோயால் வருந்துதலையே யுற்றதன்மையில் உருவெளித்தோற்றத்தைக்கண்டு இடையே சிறிது மகிழ்ந்தமைதோன்ற 'பிணியிடைப்பேரும்' என்றார். துணுக்கெனும் அச்சக்குறிப்புப்பொருளைத்தரும் இடைச்சொல்லடியாகப்பிறந்த செய்யும் எனமுற்று (௮௫)

ஆக்கக் கொங்கையி னையனென் றஞ்சன
மேகத் தைத்தழு வும்மவை வெந்தன
போகக் கண்டு புலம்பும்அப் புன்மையாள்
மோகத் துக்கோர் முடிவுமுண் டாங்கொலோ

இ-ள். அஞ்சனம் மேகத்தை - கரிய மேகங்களை, ஐயன் என்று - ஸ்ரீராமபிரானென்று, ஆக்கம் கொங்கையின் - (தன்) மார்பினது முலைகளினிடத்தே, (அழுந்தும்படி), தழுவும் - ஆலிங்கனஞ்செய்த, அவை - அம்மேகங்கள், வெந்தன போகக் கண்டு - வெந்து அழியப்பார்த்து, புலம்பும் - அழுகின்ற, அப்புன்மையாள் - அச்சிறுமையையுடைய சூர்ப்பநகையினது, மோகத்துக்கு - காமவிகாரத்துக்கு, ஓர் முடிவும் உண்டாங்கொல் - ஒரு முடிவுமுண்டாகுமோ?

குறிப்பு—தழுவுமம்மவை - மகரம் விரித்தல் (௮௬)

ஊழி வெங்கன லுற்றன ளொத்துமவ்
வேழை யாவி யிறந்தில ளென்பரா
லாழி யானை யடைந்தனள் பின்னையும்
வாழ லாமெனு மாசை மருந்தினே

இ-ள். அ ஏழை - அச்சூர்ப்பநகை, ஊழி வெங்கனல் உற்றனள் ஒத்தும் - யுகாந்த காலாக்கினியை யடைந்தவளை யொப்பாயும், பின்னையும் - மறுபடியும், ஆழியானை அடைந்தனள் - ஸ்ரீராமபிரானையடைந்து, வாழலாம் எனும் ஆசை மருந்தினை - வாழ்ந்திருக்கலாமென்கிற ஆசையாகிய மருந்தினாலே, ஆவி இறந்திலள் என்பர் - உயிர் நீங்கினாளில்லையெனக்(கண்டோர்) கூறுகிறார். (௮௭)

வஞ்ச னைக்கொடு மாயை வளர்க்குமென்
னெஞ்சு புக்கென தாவத்தை நீக்கெனு
மஞ்ச னக்கிரி யேயரு ளாயெனு
நஞ்ச நக்கினள் போல நடுங்குவாள்.

இ-ள். அஞ்சனம் கிரியே - மைம்மலைபோன்றவனே! வஞ்சனை கொடுமாயை - வஞ்சகமாகிய கொடியமாயத்தை, வளர்க்கும் - விருத்திசெய்கின்ற, என் நெஞ்சு புக்கு - என்மனத்தில் (நீ) பிரவேசித்து, என - என்னுடைய, தாவத்தை - துன்பங்களை நீக்கு எனும் - நீக்குவாயாக என்பாளும், அருளாய் எனும் - கருணைபுரிவாயாக என்பாளுமாகி, நஞ்சம் நக்கினள்போல - விஷத்தை நக்கினவளைப்போல, நடுங்குவாள் - நடுக்கமுறுவாளாயினள்.

குறிப்பு—எனது ஆவத்தை [ஆபத்தை] என்றும் பிரிக்கலாம். அருளாய, ஆய் - ஏவலொருமை விகுதி. ஸ்ரீராமபிரானது கரியதிருமேனி இவளை மிக வருத்

ஆதலால் அதனைக் காதலித்ததற்கே 'கஞ்சகத்தினைப்போல' என்று உவமை கூறினதாகவுங் கொள்ளலாம். (அசு)

காவி யோகய லோவெனுங் கண்ணிணைத்
தேவி யோதிரு மங்கையிற் செவ்வியாள்
பாவி யேனையும் பார்க்குங்கொ லோவெனு
மாவி யோயினு மாசையி னோய்விலாள்.

இ - ள். ஆவி ஓயினும் - உயிரொடுங்கினாலும், ஆசையின் ஓய்வு இலாள் - (எம்பிரானது திருப்புயங்களைப் புல்லுவானெண்ணங் கொண்ட) ஆசையினது ஒழிவில்லாதவளாகிய சூர்ப்பணகை, காவியோ - நீலோற்பலமோ? கயலோ - சேலோ? எனும் - என்று கூறும்படியான, கண் இணை - இரண்டு கண்களையுடைய, தேவியோ - (அவன்) மனைவியோ, திருமங்கையில் செவ்வியாள் - இலக்குமிதேவியைப் பார்க்கிலும் அழகினையுடையாளாயிருக்கின்றாள், (ஆதலினால்), பாவியேனையும் - பாவியாகிய என்னையும், பார்க்குங்கொல் (அவர்) கண்ணெடுத்துப் பார்ப்பாரோ? [பார்க்கமாட்டார்], எனும் - என்று சொல்வாள்.

குறிப்பு — காவியோகயலோ, ஓகாரமிரண்டும் - ஐயவினாப்பொருளன. காவி - கருமை நிறத்துக்கும், கயல் - பிறழுஞ் செயலுக்கும் உவமை. முதலடி ஐயவணி. தேவியோ, ஓ - தெரிநிலை. திருமங்கையில், இல் - எல்லைப்பொருட்டு. தன்னைப் பிராணமதியானென்பதுபற்றி விதியை நோவாள் 'பாவியேன்' என்றாள். உம்மை - இழிவு சிறப்பு. கொல் - அசை. ஓ - எதிர்மறை. (அஎ)

மாண்ட கற்புடை யாண்மலர் மாமக
ளீண்டி ருக்குநல் லாண்மக ளென்னுமால்
வேண்ட கிற்பினல் லான்வர மெய்யிடைத்
தீண்ட கிற்பதன் றேதெறுங் காமமே.

இ - ள் ஈண்டு - இவ்விடத்தில், இருக்கும் - இருக்கின்ற, நல்லாள் மகள் - அழகுடையவளான இப்பெண், மாண்டகற்பு உடையாள் - சிறந்த பதிவிரதாதருமத்தை யுடையவளான, மலர்மாமகள் - செந்தாமரை மலரில் வாழுந் திருமகளே யாவள், என்னும் - என்று எண்ணுவாள், வேண்டகிற்பின் - (காம ஆவேசம்) விரும்பியாசைப்பட்டாலும், [ஆசைப்பட்ட மாத்திரத்தில்], தெறும் காமம் - அழிப்பதாகிய ஆசைநோய், நல்லான் வரம் மெய் இடைதீண்டகிற்பது அன்றே - அவ்வழகனது சிறந்த உடம்பில் சேர்வதன்று போலும், (என்று எண்ணுவாள்,)

குறிப்பு — இலக்குமிதேவிக்கு இந்நல்லாள் மாண்ட கற்புடைமையோடு மிகுதியான அழகும் பெற்றிருப்பதால் மகளேயாவாள் என்று கூறினாளென்னலுமாம், இனி, மாண்டகற்புடையாளென்பதைச் சூர்ப்பணகையாக்கி அழிந்த கற்புடையாளென்று உரைத்து என்னும் என்னு முற்றுக்கு எழுவாயாகக்கொள்ளினும் அமையும். என்னை வருத்துகிற காமத்தீ வேண்டினாலும் அவனை வருத்தமாட்டாதோ என்று ஏங்கினளென்க. கற்பென்பது வில்லிற்பூட்டு நாண்போலும் உடைபடாத தன்மையை யுடைத்தாயிருப்பதாதலின் கற்பு உடையாள் என்றற்கு கற்பு உடையாதவள் [கெடாதவள்] என்றும் பொருள் கூறலாம், "சிலைகொணுணிறநீராததிரு

ந்து கற்பினவர்தம்” என்றார் சிந்தாமணியில். வேண்டுகிற்பின், நீண்டுகிற்பது என்பவற்றில், அ - சாரியை, கில் - ஆற்றலுணர்த்து மிடைநிலை, ப - முறையே யெழுத்துப்பேறும், எதிர்கால இடைநிலையுமாம். (அஅ)

ஆன்ற காத லஃதுற வெய்துழி
மூன்று லோகமு மூடு மரக்கரா
மேன்ற காரிரு ணீக்க விராகவன்
றோன்றி னானென வெய்யவன் றோன்றினான்

இ - ள். ஆன்றகாதல் அஃது - அமைந்த அக்காதலானது, உறவு எய்துழி - (ஸ்ரீராமபிரானது) உறவினை யடைகின்ற சமயத்தில், வெய்யவன் - சூரியன், இராகவன் - ஸ்ரீராமபிரான், மூன்றுலோகமும் - திரிலோகங்களையும், மூடும் - மூடிக்கொண்டிருக்கிற, அரக்கர் ஆம் - இராக்கதர்களாகிய, ஏன்றகார் இருள் - பொருந்திய கரிய இருளினை, நீக்க தோன்றினான் என - நீக்குதற்காகப் பிறந்திருக்கின்றானென்று சொல்வதற்காக, தோன்றினான் - (கீழ்த்திசையில்) உதயமாயினான்.

குறிப்பு — காதல் - எல்லாப்பொருளையும் நுகர்தற்குச் செல்லும்வேட்கை. காதலஃது, அஃது - பகுதிப்பொருள் விகுதி. உறவு - நட்பு, இது அவ்வரக்கியின் மனோராச்சியத்தில் நிகழ்வதாகத் தோன்றியசெயல். எம்பிரானது உறவை எண்ணத்தினும் இவள் அடையாவாறு தடுக்கும்படி சூரியன் உதயமானது கொடுமையென்பார் ‘வெய்யவன்’ என்றார். அரக்கர் உள்ளும் புறனும் இருளுடையார் என்பார் ‘ஏன்ற’ என்றார், “இருட்டரும்புரத் திழுதையர் பழுதுற்ற கெளிதே” என்பார். மேலும் இனி, உற எய்துழி எனக் கண்ணழித்து அக்காதல் மிகுதியாயுற்ற சமயத்தில் என்று பொருள்கோடலுமாம். இப்பொருட்கியைய இராக்கதரை நீக்க இராகவன் தோன்றினாற்போல இருளைநீக்கச் சூரியனுதயமாயினானெனக் சூரியன் உறவினைக்கெடுக்க இடையூறாய்த் தோன்றினமைக்கு உதாரணமாக “மன்மனுக்கம் விட்டதனித்தனி வள்ளலைப்புணர் கள்ளவன், கனவினுக்கிடை யூறடுக்க மயங்கினார் சில கன்னிமார்” என்னுஞ் செய்யுளை யீண்டுநோக்குக. (அக)

வேறு

விடியல் காண்டலி னீண்டுதன் னுயிர்கண்ட வெய்யாள்
படியி லாண்மருங் குள்ளள வெனையவன் பாரான்
கடிதி னோடியெ னெடுத்தொல்லைக் கரந்தவள் காதல்
வடிவி னானுடன் வாழ்வதே வாழ்வென மதியா

இ - ள். விடியல் காண்டலின் - விடியற்காலத்தைப் பார்த்ததினால், ஈண்டு இப்பொழுது, தன் உயிர் கண்ட வெய்யாள் - தனது உயிர் (உடலினின்றும் பிரியாது தங்கியிருத்தலைப்) பார்த்த சூர்ப்பநகை, படி இலாள் - ஒப்பில்லாதவளானதேவி, மருங்கு உள்ள அளவு - தன் பக்கத்திலிருக்கிற வரையும், அவன் எனை பாரான் - அவன் என்னை (சிறிதுங்கண்ணேறிட்டுப்) பார்க்கமாட்டான், (ஆதலினால்), கடிதின் ஓடியென் எடுத்து - (அவளை நான்) விரைவிலோடி யெடுத்து, ஒல்லை கரந்து - விரைவில் மறைத்து, அவள் காதல் வடிவினானுடன் - அவளது காதற்குரிய கட்டழகனுடனே, வாழ்வதே வாழ்வு என மதியா - வாழ்ந்திருப்பது தான் வாழ்க்கையென்று மதித்து.

குறிப்பு —விடியல் - நாள்வெயிற்காலை, "விடியல் வெங்கதிர் காயும் வேய்மல் கலறை" என்பவாகலின் "வைகுறு விடியல் மருதம்" என ஆசிரியர் தொல்காப்பியனாரோதிய வைகுறு விடியலென்பதற்கு, செவியறிவுறுத்தலைச் "செவியறிவுறூஉ" என்றார்போல வைகுறலை வைகுறுதலெனக்கொண்டு வைகுறுதலும் விடியலுமென்று உம்மைத்தொகையாகவும், "விடியல் வைகறையிடூஉ மூன்" என்றது விடியற்கு முன்னாததாகிய வைகறையென வுருபுதொக்கு முன்மொழி நிலையாலாயிற்று எனவும் பொருள் கூறி "மாலையாமம் வைகுறுவென்று காலைநண்பக லெற்பாடென்று அறுவகைத்தென்ப சிறுபொழுது" என்பாராகலின் வைகறைக்குப்பின்னிட்டது விடியல் என்று கூறுவர். சென்ற இரவில் மதிமுதலியவற்றால் மிகவுந்துன்புற்றதனால் நிலையுணராது தளர்ந்து கிடந்து தெளிந்தமைபயப்ப 'ஈண்டுதே னுயிர் கண்ட வெய்யாள்' என்றார். (௬௦)

வந்து நோக்கினள் வள்ளல்போ யொருமணித் தடத்தான்
சந்தி நோக்கின னிருந்தது கண்டன டம்பி
யிந்து நோக்கிய நுதலியைக் காத்தய லிருண்ட
கந்த நோக்கிய சோலையி லிருந்தது காணாள்.

இ - ள். வந்து நோக்கினள் - (பன்னசாலைக்கு அருகே) வந்து பார்த்தாள், (அங்கு ஸ்ரீராமபிரானைக்காணாததால் சுற்றிப்பார்த்து), வள்ளல்போய் - ஸ்ரீராமபிரான் சென்று, ஒருமணி தடத்தான்-ஒரு அழகிய துறையின்கட் சேர்ந்தவனாய், சந்திகாலை நியமத்தை, நோக்கினன் இருந்தது கண்டனள் - கருதியிருந்ததைப் பார்த்தாள், (பின்னர்த்திரும்பிப் பன்னசாலைக்கு அருகேவந்து), தம்பி - இளையபெருமாள், இந்து நோக்கிய நுதலியை - சந்திரனைப்போலும் அழகிய நெற்றியையுடைய சீதாபிராட்டியை, காத்து - காவல்செய்துகொண்டு, அயல் - பக்கத்திலிருக்கிற, இருண்ட கந்தம் நோக்கிய - இருள் சூழ்ந்ததும் வாசனைமிக்கதுமான, சோலையில் - சோலையினிடத்து, இருந்தது காணாள் - இருந்ததையறியாதவளாய்

குறிப்பு —சந்தி - ஸந்த்யா என்னும் வடசொல்லின் திரிபு இது, இங்கே சிறப்பாயக்காலைச் சந்தியையுணர்த்தி அது பின் காலவாகுபெயராய் அக்காலத்துக்குரிய கடமைகளைக் குறித்தது. இந்து என்புழி உவமவுருபு தொக்கது. சென்ற இரவில் அவளை வருத்திய சந்திரன் காலையிலும் தோன்றித்தனக்கு மனோவேதனை தரவந்தான் என்று அவ்வரக்கி சினங்கொள்ளுமாறு விளங்கிய மதிமுகமெனக் இங்ஙனங் கூறியது பிராட்டியின்பா லவட்குள்ள பகைத்திறமை விளங்குதற்கு (௬௧)

தனியி ருந்தனள் சமைந்ததென் சிந்தனை தாழ்வுற்
றினியி ருந்தெனக் கெண்ணுவ தில்லென வெண்ணாத்
துனியி ருந்தவன் மனத்தினட் டோகையைத் தொடர்ந்தாள்
கனியி ரும்பொழில் காத்தய லிருந்தவன் கண்டான்.

இ - ள். தனி இருந்தனள் - இவள் தனித்து இருந்திட்டாள், என் சிந்தனை - என்னது எண்ணம், சமைந்தது - பலித்தது; இனி தாழ்வு உற்று இருந்து - இனித் தாமதித்திருந்துகொண்டு, எனக்கு எண்ணுவது இல் என எண்ணா - நான் ஆலோசிக்கும் விஷயமில்லையென்று எண்ணி, துனியிருந்த வல் மனத்தினள் - அச்சமிருந்தவலிய மனத்தினையுடையவளாகி, தோகையை தொடர்ந்தாள் - பிராட்டியைப்

பின பறறிசசெனறுள, கனி - கனிகளையுடைய, இரும்பொழில் - பெரியசோலையி னகண, காதது - காவல்செயதுகொணடு, அயல இருநதவன- பககததிலிருநத இளை யபெருமாள, கணடான - பாாததான

குறிப்பு —சமைநதது - தெளிவினவநத காலவழுவமைதி. எனககு - உருபு மயக்கம இலலை எனபது இலலெனககடை குறைநது நினறது, “பழியஞசிப பாத தூ ணுடைததாயின வாழககை, வழியெஞச லெஞஞானறு மில” எனபதிறபோல தோகை இருமடியாகுபெயா தொடாநதாள எனறதனால பிராட்டி இவளைககணடு அஞசி ஓடினுள எனபது பெறறும. கனி - கனிவது: கருததாபபொருள விகுதி புணாநது கெடடது (கஉ)

நிலல டீஇயெனக கடுகினன பெணணென நினைநதான
விலலெ டாதவள வயஙகெரி யாமென விரிநத
சிலல லோதியைச செஙகையிற றிருகுறப பறறி
யொலவ யிறறுதைதத தொளிகிளா சுறறுவா ளுருவி.

இ - ள. (அசசெயலை நோககிய இளையபெருமான), நிலலடீஇ என கடுகின ன - அடீஇ நிலலாய எனறு விரைநதுவநது, பெண என நினைநதான - பெண ணெனறு நினைதது, வில் எடாது - விலலினை எடுககாமல, அவள-அவவரககியினது, வயஙகு எரி என விரிநத சில அல ஓதியை - பிரகாசிககினற நெருபபைபபோலப பரவிய வடடமலலாத கூநதலை, செஙகையில - (தனது) செயயகையில, திருகு உற பறறி - சுறறுதலுறுமபடி பிடிதது, ஒல வயிறு உதைதது- அடிவயிறறில (காலால) உதைதது, ஒளி கிளா - பிரகாசமிகுநத, சுறறுவாள உருவி - சுருளவாளை யுறையி னினறும எடுதது

குறிபபு —வீராகள, பசு பாாபபாா பாலா பேடி பெணகள முதலிய வீரமில லாரைககோறல புரிதல தமககுப்புகழுநதருமமலல வாகலின ‘பெணணென நினை நதான’ எனறாா. “தன்பான மனையா ளயலானறலைக கணடு பினனு, மினபா லடி சிற கிவாகினறகைப பேடி போலா, நனபால பசுவேதறநதாா பெணடிா பாலா பாாப்பா, ரெனபாரை யோமபே னெனினயா னவருக வெனறுன” எனனுஞ சிந்தா மணிச் செயயுளையும, “ஆவு மானியற பாாபபன மாககளும, பெணடிரும பிணியு டை யீருமபேணித, தெனபுல வாழாாக கருஙகட னிறுககும, பொனபோற புதல வாப பெறாஅ தீரு, மெமமமபு கடிவிடுது நுமமரண சோமின” எனனும புறபபா ட்டையும நோககி இதனுணமையை யுணாக எரி - எரிவது வினைமுதற பொரு ணமை விகுதி புணாநது கெடடது. ஆம - அசை அரககியரனைவாககும எரிபோ லவிரிநது வடடமாயப்பரவிய குடடைசசருடடை மயிரேயாயினும அது போலா து நீண்ட கூநதலையுடையாளெனபாா ‘சிலலல ஓதி’ எனறாா இதனுணமை இச செயயுளில ‘திருகுறபபறறி’எனறதனுலும மேலவருங கரனவதைபபடலதது “இரு நதமாககரன றுளிணைபினமிசைச, சொரிநத சோரியள கூநதலள” எனறதாலும் னகு புலப்படுதல் காணக. ஒல் - முடிவிடமாகவே அடிவயிறெனறும. (கங)

ஊககித தாஙகிவிண படாவெயமென் றுருததெழு வாளை
நூக்கி நொயதினின் வெய்திழை யேலென நுவலா

மூக்குங் காதுமவெம் முரணமுலைக் கணைகளு முறையாற
போக்கிப் போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்.

இ - ள் ஊக்கி - உற்சாகமடைந்து, தாங்கி - (இளையபெருமாளைச்) சுமந்து கொண்டு, விண்படா - ஆகாயத்திற்செல்ல, வெம்மென்று - வெம்மையென்னும் படி, உருத்து - கோபித்து, எழுவாளை - எழுகின்ற சூர்ப்பநகையை, (இளையபெருமாள்) நொய்தினின் - விரைவில், தூக்கி - (கீழேவிழத்) தள்ளி, வெய்து இழை யேல் என நவலா - கொடியசெயலைச் செய்யாதே என்று கூறி, மூக்கும் காதும் வெம்முரணமுலைக்கணைகளும் - (அவளது) மூக்கினையும் காதுகளையும் வெப்பம்பொருந்திய வலியமுலைகளினுடைய காம்புகளையும், முறையால் போக்கி - ஒழுங்கினாலே அறுத்துத்தள்ளி, போக்கிய சினத்தொடும் - நீக்கிவிட்டகோபத்துடன், புரிகுழல் விட்டான் - திருகுற்ற கூந்தலை விட்டுவிட்டான்

குறிப்பு — இளையபெருமாளின் கரஸ்பரிசம்பட்டதா லுளமகிழ்ந்தமைதோன்ற 'ஊக்கி' என்றார். பெரியநம்பிபோ லிளையநம்பியு மழகுடையாராதலின் அவரால் தனது காமநோய் நீக்கிக்கொள்ள அவரைத்தாங்கி விண்படரக்கருதினளெனக். படா - படர என்பதின் விகாரம் சேஷாம்சராகிய இளையபெருமாளிவளெண்ணம்போ லெடுத்துச்செல்லற்கு எளியராகாமையால் 'வெம்மென்றுருத்து' எழுவாளாயினளெனக் இனி, படாவெம் என்பதைத் தனித்தன்மைப் பன்மை யெதிர்கால வினைமுற்றாகக்கொண்டு, செல்லுவேம் என்று உருத்தெழுவாளையென்று கூறலுமியையும் இப்பொருளில் மகரப்புள்ளி, விரித்தல் இவள் முலைகள் இளையபெருமாளால் இச்சிக்கப்படாமையானும், காமவெப்பமிக்ககொண்மையானும் வெம்மை வெப்பமென்னலே சிறப்புடைத்து கொடியசெயலைப் புரிந்த தீயவளையுங் கொல்லலாகாதென்பதும் அத்தகையாளை யிவ்வாறு சிக்ஷைசெய்து அனுப்பலே நீதியென்பதுந்தோன்ற 'முறையாற்போக்கி' என்றார். "தொல்லிரு டகைக்கொலைத் தொடங்கின ருளையுங், கொல்லலை நாசியைக் கொய்து நீக்கினுய், வல்லைநீ மனுமுதன் மரபி னேயெனப், புலவின னுவகையிற் பொருமி விம்முவான்" என மேலவருஞ் செய்யுளையுங் கண்டு நோக்குக. இனி எம்பிரானையிச்சித்ததும், பிராட்டிக்குத் தீங் கிழைக்கப்போந்ததும், தன்னையெடுத்து விண்ணிற்செல்ல எழுந்ததுமாகிய குற்ற மூன்றுக்கு மூக்குங்காதும் முலையும் அறுத்து மூன்றுதண்டனை புரிந்தார் என்பார் 'முறையாற்போக்கி' என்றாரென்னலுமாம் முறையாற்போக்கி என்னும் பாடத் திற்கு முதலில் மூக்கினையும் கடைசியாக முலையையும் போக்கின வரிசையைக் கூறுக (சக)

அக்க ணத்தவள் வாய்திறந் தரற்றிய வமலை
திக்க னைத்தினுஞ் சென்றது தேவர்தஞ் செவியும்
புக்க துற்றது புகலவதென் மூக்கெனும் புழையூ
டுக்க சோரியி னீரமுற் றுருகிய துலகம்.

இ - ள் அக்கணத்து - அப்பொழுது, அவள் அவ்வரக்கி, வாய்திறந்து - (தன்) வாயைத்திறந்து, அரற்றிய - அழுத, அமலை - சப்தமானது, திக்கு அனைத் தினும் சென்றது - திசைகளெல்லாவற்றினும் சென்றது, தேவர்தம் செவியும் புக்கது - தேவர்களுடைய காதுகளினிடத்தும் பிரவேசித்தது; மூக்கு எனும்புழை ஊடு உக்கசோரியின் - மூக்கு என்கிற துவாரத்திலிருந்து சிந்திய அரத்தத்தால், உலகம்-

இப்பூமியானது, ஈரம் உற்று உருகியது - ஈரத்தையடைந்து கரைதலுற்றது, (என்றால்), உற்றது புகல்வது என் - (மூக்கு முதலியவை யறுபட்டதால் அவள்) அடைந்த துன்பத்தைச் சொல்வது என்? [அநாவசியமேயாம்.]

கொலைது மித்துயர் கொடுங்கதிர் வாளினிற் கொடியாள்
முலைது மித்துயர் மூக்கினை நீக்கிய முறைமை
மலைது மித்தென விராவணன் மணியுடை மகுடத்
தலைது மித்தற்கு நாட்கொண்ட தொத்ததோர் தன்மை.

இ - ள். கொலை துமித்து - கொலைத்தொழிலை நீக்கி, அக்கொடியாள் முலை - அந்தக்கொடிய அரக்கியினது முலைகளை, உயர் - உயர்ந்த, கொடுங்கதிர்வாளின் - பிரகாசம்பொருந்திய கொடியவாளினாலே, துமித்து - அறுத்து, உயர் மூக்கினை நீக்கிய முறைமை - உயர்ந்த மூக்கை அறுத்துத்தள்ளிய செய்கையானது, இராவணன் - இராவணனது, மணி உடை - இரத்தினங்களையுடைய, மகுடம் தலை - கிரீடங்களையணிந்த சிரங்களை, மலை துமித்தென - மலைகளைவெட்டி(த்தள்ளி)னாற்போல, துமித்தற்கு - வெட்டுதற்கு, நாள்கொண்டது ஓர் தன்மை - முகூர்த்தநாள் கொண்டதாகிய ஒருதன்மையை, ஒத்தது - ஒத்திருந்தது.

குறிப்பு —நீக்கிய மூத்தம் என்றபாடத்திற்கு - முகூர்த்தமெனக், மூத்தம் - வடசொற்சிதைவு. (கசு)

அதிர மாநிலத் தடிபதைத் தரற்றிய வரக்கி
கதிர்கொள் காலவேற் கரன்முத னிருதர்வெங் கதப்போ
ரெதிரி லாதவ ரிறுதியி னிமித்தமா வெழுந்தாண்
டுதிர மாரிபெய் கார்நிற மேகமொத் துயர்ந்தாள்.

இ - ள். அதிர - அதிர்ச்சியுண்டாகும்படி, மாநிலத்து - பெரிய நிலத்திலே கிடந்து, அடிபதைத்து - கால்களை உதறிக்கொண்டு, அரற்றிய - கதறிய, அரக்கி - சூர்ப்பநகையென்னும் அவ்விராட்சசி, கதிர்கொள் - பிரகாசத்தைக்கொண்ட, காலவேல் - யமன் போலக் கொடிய வேலாயுதத்தையுடைய, கரன்முதல் - கரன் முதலான, வெம் கதம் போர் எதிர் இலாதவர் - கொடிய உக்கிரத்தோடு கூடிய யுத்தத்தில் (தமக்கு) ஒப்பில்லாதவராகிய, நிருதர் - இராக்கதரது, இறுதியின் நிமித்தம் ஆ - நாசத்தின் பொருட்டாக, எழுந்து—, ஆண்டு - அவ்விடத்து, உதிரம் மாரிபெய் கார்நிறம் மேகம் ஒத்து - இரத்தமழையைப் பொழிகின்ற கரிய நிறமுள்ள மேகத்தைப்போன்று, உயர்ந்தாள் - உயர்ந்து தோன்றினாள்.

குறிப்பு —இளையபெருமானால் தள்ளப்பட்டுக் கீழ்விழுந்து உறுப்பறுப்புண்டு நோவையாற்றகில்லளாய் நிலம் அதிரும்படி கால்களை உதறிக்கொண்டு பேரிரைச்சலிட்ட சூர்ப்பநகை பின்பு எழுந்து இரத்தஞ்சொரிய உயர்ந்த தோற்றத்தோடு நின்றனளென்பதாம், கரியபெரிய வடிவத்தினின்றும் இரத்தம் மிக்குச் சொரிய நிற்றலின், 'உதிரமாரி பெய்கார்நிறமேகம்' உவமைகூறப்பட்டது. இனி இவ்வரக்கி சென்று கரனாதியரை யழைத்து வந்து இராமபாணத்துக்கு இரையாக்குவதைக் கருதி 'நிருதரிறுதியி னிமித்தமாவெழுந்து' என்றார். 'நிமித்தமா எழுந்து' என்றதற்கு இராக்கத நாசத்துக்கு அறிகுறியாய்த் தோன்றும் தீநிமித்தம்போ லெழுந்து

என்று கூறலுமாம் இப்பொருளுக்கு 'ஆ' என்பது உவமவுருபு, மேகம் இரத்தமழை பொழிதல் ஓர் உற்பாதம், உதிரம் - ருதிரம் என்னும் வடசொல்லின் விகாரம். (கஎ)

உயரும் விண்ணிடை மண்ணிடை விழுங்கிடந் துழைக்கும்
அயரும் கைகுலைத் தலமரு மாருயிர் சோரும்
பெயரும் பெண்பிறந் தேன்பட்ட பிழையெனப் பிதற்றும்
துயரு மஞ்சிமுன் றொடார்ந்திலாத் தொல்குடிப் பிறந்தாள்.

இ - ள் துயரும் - துன்பமென்கிற குணமும், அஞ்சி - பயந்து, முன் தொடாந்து இலா - இதற்குமுன் சோந்திலாத, தொல் குடி பிறந்தாள் - பழமையான (அரக்கர்) குலத்திற் பிறந்த அசசூர்ப்பநகை, விண்ணிடை உயரும் - வானத்தில் எழுவாள், மண்ணிடை விழும் - (அதற்சேற்ற வலியில்லாமையால்) தரையில் விழுவாள், கிடந்து உழைக்கும் - (கிடந்த இடத்தே) இருந்தபடியிருந்து மிகவருந்துவாள், அயரும் - தளர்வடைவாள், கைகுலைத்து அலமரும் - கைகளைப்பிசைந்து கொண்டு மனஞ்சுழல்வாள், ஆர் உயிர் சோரும் - அரிய உயிர் சோருவாள் [மூர்ச்சையடைவாள்], பெயரும் - (அம்மூர்ச்சை தெளிந்து) எழுவாள், பெண்பிறந்தேன் பட்ட பிழை என பிதற்றும் - பெண்ணாகப் பிறந்தயான் அடைந்தபரிபவம் (என்னே!) என்று பலமுறை கூறுவாள். (கஅ)

ஒற்று மூக்கினை யுலையுறு தீயென வுயிர்க்கும்
மெற்றுங் கையினை நிலத்தினி லிணைத்தடங் கொங்கை
பற்றும் பார்க்குமெய் வெயர்க்குந்தன் பருவலிக் காலாற்
சுற்று மோடிப்போய்ச் சோரிநீர் சொரிதரச் சோரும்

இ - ள். மூக்கினை ஒற்றும் - மூக்கை ஒற்றிக்கொள்வாள், உலை உறு தீ என உயிர்க்கும் - கொல்லுலையிலுற்ற தீயைப்போலப் பெருமூச்சுவிடுவாள், நிலத்தினில் கையினை எற்றும் - பூமியிலே கையையறைவாள், இணை தடம் கொங்கைபற்றும் பார்க்கும் - இரண்டு பெரியமுலைகளைப் பிடித்துப்பார்ப்பாள், மெய்வெயர்க்கும் - உடல்வேர்ப்பாள், தன் பருவலி காலால் - தனது பருத்தவலிய கால்களினால், சுற்றும் ஓடிப் போய் - சுற்றியோடிச்சென்று, சோரிநீர் சொரிதர - அரத்தநீர் சொரிவதால், சோரும் - தளர்வடைவாள். (கக)

ஊற்று மிக்கநீ ரருவியி னொழுகிய குருதிச்
சேற்று வெள்ளத்துட் டிரிபவ டேவரு மிரியக்
கூற்று முட்குந்தன் குலத்தினோர் பெயரெலாங் கூறி
யாற்று கிற்கிலள் பற்பல பன்னிநின் றழைத்தாள்.

இ - ள். ஊற்று மிக்க நீர் அருவியின் - ஊற்றினின்று மிக்குப் பெருகிய நீர் ப்பெருக்குப்போல, ஒழுகிய - (தன் உடம்பினின்று மிக்கு) வழிந்த, குருதி - இரத்தத்தாலாகிய, சேறு வெள்ளத்துள் - மிக்க சேற்றினிடையிலே, திரிபவள் - அலைபவளாகிய அவள், ஆற்றுகிற்கிலள் - துன்பம் பொறுக்கமாட்டாதவளாய், தேவரும் இரிய - தேவர்களும் அஞ்சியோடும்படி, கூற்றும் உட்கும் தன்குலத்தினோர் பெயர் எலாம் கூறி - யமனும் அஞ்சும்படியான தனது குலத்தாரது பெயர் எல்லாஞ்சொல

லி, பல்பலபனனி நின்று - (மற்றும்) பலபல பேச்சுக்களையும் எடுத்துச்சொல்லிக் கொண்டு, அழைத்தாள் - கூப்பிடுவாளாயினள்.

குறிப்பு—ஊறுவது - ஊற்று தேவரும் கூற்றும், உம்மை - உயர்வுசிறப்பு. 'ஆற்றுகிற்கிலன்' என்றதில் உள்ள 'கில்' என்ற இரண்டனுள் ஒன்றை - ஆற்றுணாத்து மிடைநிலையாகவும், மற்றொன்றை கு + இல் எனப்பிரித்துச் சாரியையும் எதிர்மறை யிடைச்சொல்லுமாகவுங்கொள்க. அறுபட்ட மூக்கு முலை செவிகளிலிருந்து வரிந்துவாரங்கட்கு ஊற்றும், அரத்தத்துக்கு மிக்க நீரும் அருவியென்றதால் அவளுடலுக்கு மலையும உவமை (௪௦௦)

நிலையெடுத்து நெடுநிலத்து நீயிருக்கத் தாபதர்கள்
சிலையெடுத்துத் திரியுமிது சிறிதன்றோ தேவரெதிர்
தலையெடுத்து விழியாமை சமைப்பதே தழலெடுத்தான்
மலையெடுத்த தனிமலையே யிவைகாண வாராயோ.

இ - ள். தழல் எடுத்தான் - அனலைக் கையிலேந்திய சிவபிரானது, மலை - வெள்ளியங்கிரியை, எடுத்த—, தனிமலையே - ஒப்பற்றமலைபோன்ற இராவணனே! நீ—, நெடுநிலத்து - பெரிய இப்பூலோகத்தில், நிலை எடுத்து இருக்க - வாழ்க்கை நிலைகொண்டிருக்கையில், தாபதர்கள் - முனிவேடங்கொண்டவர்கள், சிலை எடுத்து திரியும் இது - (அச்சமின்றிக்கையில்) வில்லையேந்திக்கொண்டு சஞ்சரிப்பது, சிறிது அன்றோ - (உன்பெருமைக்குக்) குறைவானதன்றோ? தேவர் எதிர்தலை எடுத்து விழியாமை சமைப்பதே - தேவர்களுக்கு முன்னே (நான்) தலை எடுத்துவிழிக்கமாட்டாமலிருத்தலை (இத்தாபதர்கள்) செய்யத்தகுவதோ? இவைகாணவாராயோ - (யான்பட்ட) இப்பாடுகளைப் பார்க்கவரமாட்டாயோ?

குறிப்பு—தாபதர் - தாபஸரென்ற வடசொல்லின்திரிபு, தவஞ்செய்பவரென்றுபொருள். மரவுரியும் சடைமுடியுமாகிய வேடமாத்திரத்தைக்கொண்டு 'தாபதர்கள்' என்றாள் தேவரெதிர்தலையெடுத்து விழியாமை சமைப்பதே என்றது - தேவர்கள் நின் எதிரே தலையெடுத்து விழியாமலிருக்குமாறு அடக்கிவிட்டமைமாத்திரமே அமைவதோ? (இப்படிப்பட்ட சிறுபகைகளையுங் கவனிக்கவேண்டாமோ) என்றபொருள் கோடலுமாம். தாருகாவனத்து முனிவர்கள் தன்னைக்கொல்ல ஏவிய பெருநெருப்பைத் தனது ஆற்றலால் வலியடக்கித் தனது கையொன்றில் ஏந்திய திவ்வியசக்தியுடைய சிவபிரானுக்கு அழலேந்தியென்பது பெயருள்ளதாதலின் 'தழலெடுத்தான்' என்றாள். மலை - இராவணனுக்கு உவமையாகுபெயர். (௪௦௧)

புலிதானே புறத்தாக்க் குட்டிகோட் படாதென்ன
வொலியாழி யுலகுரைக்கு முரைபொய்யோ வூழியினுஞ்
சலியாத மூவருக்கும் வானவர்க்குந் தானவர்க்கும்
வலியானே யான்பட்ட வலிகாண வாராயோ

இ - ள். ஊழியினும் - ஊழிக்காலத்தினும், சலியாத - இளைத்தோய்தலில்லாத, மூவருக்கும் - திரிமூர்த்திகளினும், வானவர்க்கும் - தேவர்களினும், தானவர்க்கும் - அசுரர்களினும், வலியானே - வலிமையையுடையானே! [இராவணனே!], புலி - வேங்கைப்புலியானது, புறத்து ஆக - சமீபமான மற்றொரு இடத்திலிருப்ப

நின்றால், குட்டி - (அதன்) குட்டியானது, கோள் படாது - (பிறரால்) பிடிக்கப்பட மாட்டாது, என்ன - என்பதாக, ஒலி ஆழி உலகு உரைக்கும் - ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்தினர் விருப்பவாக்ஙகள் சொல்லுகின்ற, உரை - சொல்லான்து, பொய்யோ - அப்பத்தமோ ? யான்பட்ட - நான் அடைந்த, வலிகாண் - துன்பத்தைப்பார்க்க, வாராய் - வருவாயாக.

குறிப்பு —குட்டி - இளமைப்பெயர், "குட்டியும் பறழுங் கூற்றவண் வரையார்" என்ற தோல்காப்பியத்தால் இது புலிக்கு உரியதாதல் உணர்க. கோள்- முதனிலைதிரிந்த தொழிற்பெயர் "புலிதானே புறத்ததாகக் குட்டி கோட்படாது" என்றவாக்கியம் உபமானத்தால் வலிய பெரியோர் புறத்தேயிருக்க அவரைச் சார்ந்தோர் எவராலும் துன்புறுத்தப்படார் என்ற உபமேயத்தை விளக்கியதால் பிறிதுமொழிதல் என்னும் அலங்காரமாம் "புலிபுறங் காக்குங் குருளை போல, மெலிவில் செங்கோ னீபுறங் காப்ப" என்றார் புறப்பாட்டிலும் புலிதானே, ஏகாரம் - பிரிநிலை உலகு - ஈண்டு இடவாகுபெயர் பொய்யோ, ஓகாரம் - எதிர்மறை மூவர் - தொகைக்குறிப்பு தந்தவர் - தந்தை பெயவருக்கு மக்கள், தத்திகாந்தம் - மூன்றுமடியில் நான்கனுருபு அனைத்தும் ஐந்தனுருபு எல்லைப்பொருளைப் பயத்தலின் உருபு மயக்கம். ஈற்றேகாரம் அசை (௪0௨)

ஆத்தானைக் கரசுந்தி யமராகணத் தொடுமேடந்த
போர்த்தானை யிந்திரனைப் பொருதவனைப் போர்தொலைத்து
வேர்த்தானை யுயிர்கொண்டு மீண்டானை வெரிநபண்டு
பார்த்தானே யான்பட்ட பழிவந்து பாராயோ.

இ - ள் ஆர்த்து - முழங்கி, ஆனைக்கு அரசு உந்தி - சிறந்த யானையாகிய ஐராவதத்தை நடத்தி, அமரர்க்கணத்தொடும் அடர்ந்த - தேவர் குழுவோடு மேற்சென்ற, போர் தானை இந்திரனை - போர்வல்ல சேனையினையுடைய இந்திரனை, பொருதவனை - எதிர்த்த சம்பராசுரனை, போர்தொலைத்து - போரினகண் அழித்து, வேர்த்தானை - வியர்த்த தசரதனை, உயிர் கொண்டு மீண்டானை - உயிர்கொண்டு போய யமனை, பண்டு - முன்னொருநாள் [திக்குவிசயகாலத்தில்], வெரிந பார்த்தானே - புறங்கண்டவனே! [இராவணனே!], யான் பட்டபழிவந்து பாராய - (அத்தயரதன் மக்களால்) நான் அடைந்த அபகீர்த்தியை வந்து காண்பாயாக.

குறிப்பு:—சிறந்ததை அரசென்னும் மரபுபற்றி 'ஆனைக்கரசு' எனப்பட்டது தயரதன் சம்பரனை வென்றதை "தயிருடைக்கு மத்தென்ன வலைக்கலி சம்பரனைத் தடிந்த வந்நாள்" என்றும், "குன்றளிக்குங் குலமணித்தோட் சம்பரனைக் குலத்தோடுந் தொலைத்து" என்றும் கீழ்க்கூறிய செய்யுட்களானுணர்க. இராவணன் கூற்றவனை வென்றதை 'கடுங்காலக் கூற்றினையும் பணிகோடற் காற்றினை' என மேலைக்கவியினும் விரித்துக்கூறினமைகாண்க. இராவணனே! நினக்குத் தோற்றவனுற் கொல்லப்பட்டவன் புதிரர்களால் யானிப்பழியடைந்தது நின் வலிமைக்கு இழுக்காகும் என்னுங் கருத்துடைமை விளங்கலின் இப்பொருளே சிறப்புடைத்து இனி, இக்கவிக்கு இரண்டினு மூன்றடிகளை யெல்லாம் இந்திரன் மேலேற்றி அவனிந்திரனைப் புறங்கண்டவனே எனப்பொருள் கூறுவாருமுளர். (௪0௩)

காற்றினையும் புனலினையுங் கனலினையுங் கடுங்காலக்
கூற்றினையும் விண்ணினையுங் கோள்களையும் பணிகோடற்

காற்றினை யிண்டிருவர் மானுடவர்க் காற்றா
மாற்றினையோ வுன்வலத்தைச் சிவன்றடக்கை வாள்கொண்டாய்.

இ - ள். சிவன் தடக்கைவாள் கொண்டாய் - சிவபிரானது பொருமைபொருந்திய கைத்தலத்து வாளினைப் பெற்றுக்கொண்டோனே! [இராவணனே!], காற்றினையும் - வாயுதேவனையும், புனலினையும் - வருணனையும், கனலினையும் - அக்கினிதேவனையும், கடுங்காலம் கூற்றினையும் - கொடிய யமனையும், விண்ணினையும் - விண்ணுலகத்தாரையும், கோளினையும் - நவக்கிரகங்களையும், பணிகோட்டற்கு ஆற்றினை நீ - ஏவல்கொள்ளுதற்கு (அடிமைகளாம்படி) செய்துகொண்ட நீ, ஈண்டு - இப்பொழுது, இருவர்மானுடவர்க்கு - இரண்டுமனிதர்களுக்கு, ஆற்றாமல் - எதிர்க்க முடியாமல், உன்வலத்தை - உனது வலிமையை, மாற்றினையோ - மாறும்படி செய்துகொண்டனையோ?

குறிப்பு —பணிகொண்டற காற்றினையெனவும் பாடபேதமுண்டு, கொண்டல- தொழிற்பெயர். சிவன் - மங்களத்தைச் செய்பவன், சிவம் - சுபம். சிவபிரானிடம் இராவணன் பெற்றவாளுக்குச் சந்திரஹாசமென்பெயர். (௪0௪)

உருப்படிவ மன்மதனை யொத்துளரே யாயினுமுன்
செருப்படியிற் பொடியொவ்வா மானுடரைச் சீறுதியோ
நெருப்படியிற் பொடிசிதற நிறைந்தமத்த திசையானை
மருப்பொடியப் பொருப்பிடியத் தோணிமிர்த்த வலியோனே

இ - ள் அடியின் நெருப்பு பொடி சிதற - (கோபத்தினாலே) பூமியில் அக்னிப்பொறிகள் சிந்தும்படி, நிறைந்த - மிகுந்த, மத்த திசையானை - மதத்தினைக் கொண்ட திக்கியானைகளினது, மருப்பு ஒடிய - கொம்புகள் முறிபடவும், பொருப்பு இடிய - மலைகள் தூளாகவும், தோள் நிமிர்த்த வலியோனே - புயங்களை உயர்த்தூக்கிய வலிமையை யுடையானே! [இராவணனே!], (இவர்கள்), உரு படிவம் மன்மதனை ஒத்து உளர் ஆயினும் - அழகில் ரூபமுள்ள மன்மதனை ஒத்திருக்கின்றார்களானாலும், உன் செரு படியில் - உனது யுத்தபூமியில், பொடி ஒவ்வா - தூசிக்கும் இணையாகாத, மானுடரை - இம்மனிதர்களை, சீறுதியோ - கோபிப்பாயோ?

குறிப்பு —அரக்கி கூறுதலின் செருப்பு அடியின் பொடியெனப் பிரித்துச் செருப்பினடியிலுள்ள தூகளென்று பொருள் படவும் சிலேடையாகக் கூறினர் ()

தேனுடைய நறுந்தெரியற் றேவரையுந் தெறுமாற்ற
லூனுடைய விராவணற்குந் தம்பியர்க்குந் தவிர்ந்ததோ
வூனுடைய வுடம்பினரா யெங்குலத்தோர்க் குணவாய
மானுடவர் மருங்கேயுக் கொடுங்கினதோ வலியம்மா

இ - ள். தேன் உடைய - தேனையுடைய, நறுந்தெரியல் - நல்லவாசனையுள்ள பூமாலையினையணிந்த, தேவரையும் - தேவர்களையும், தெறும் - அழிக்கும், ஆற்றல் உடைய - வலிமையையுடைய, இராவணற்கும் - இராவணனுக்கும், தம்பியர்க்கும் - (கும்பகருணன் கரன் முதலிய) தம்பிமார்களுக்கும், வலி தவிர்ந்ததோ - வலிமை நீங்கிப்போய் விட்டதோ? ஊன் உடைய உடம்பினராய - (மிகுந்த) மாமிச

முள்ள தேகத்தையுடையவர்களாய், எம் குலத்தோர்க்கு உணவு ஆய - எமது குலத்தார்களுக்கு உணுப்பொருளாகிய, மானுடவர் மருங்கே - இம்மனிதர்களிடத்திலேயே, புக்கு ஒடுங்கினரோ - (அவ்வலி) புகுந்து அடங்கிப் போய்விட்டதோ? அம்மா ஆச்சரியம்!

குறிப்பு—தேவரையும் உம்மை அமிர்த முண்பதனால் மரணமில்லாதவர் என்னுஞ் சிறப்பை விளக்க நிற்றலின் சிறப்பும், அசுரரையும் மற்றவர்களையுந் தெறும் என்பொருள் படநிற்றலின் எச்சமுமாம். தம்மினத்தார்க்கு உண்ணுந்தசையாதற்கே அமைந்த உடம்புடையவரென்பான் 'ஊனுடைய வுடம்பினராய்' என்றாள் ()

மரனேயு நெடுங்கானின் மறைந்துறையுந் தாபதர்க
ளுரனேயோ வடலரக்க ரோய்வேயோ வுற்றெதிர்ந்தா
ரரனேயோ வயனேயோ வரியேயோ வெனுமாற்ற
கரனேயோ யான்பட்ட கையறவு காணாயோ.

இ - ள். (எதிர்வந்து பொருதவர்கள்), அரனேயோ-(இவன்) சிவனேதானோ? அயனேயோ - பிரமனேதானோ? அரியேயோ - விஷ்ணுவேதானோ? எனும் - என்று கூறுதற்குக் காரணமான, ஆற்றல் - வலிமையையுடைய, கரனேயோ - ஓ கரனே! மரன் எயும் - மரங்கள் பொருந்திய, நெடுங்கானின் - பெரியகானகத்தில், மறைந்து உறையும் - மறைந்துவசிக்கின்ற, தாபதர்கள் - தவசிகளது, உரனேயோ - பலமே தானோ? அடல் அரக்கர் ஓய்வேயோ - வெற்றிபொருந்திய இராக்கதர்களது தளர்வேதானோ? [அறியேன்], உற்று எதிர்ந்தார் - (இத்தபசிகள் தைரியம்) அடைந்து (என்னை) எதிர்த்தார்கள், (அதனால்), யான்பட்ட கையறவு காணாய - யானடைந்த துன்பத்தை (வந்து) பாராய்.

குறிப்பு—மரன், உரன் - இறுதிப்போலி. இரண்டாம் அடியில் ஏகாரங்கள் அசையும் ஓகாரங்கள் ஐயமுமாம். மூன்றாமடியில் ஏகாரங்கள் உயர்வு சிறப்பும் ஓகாரங்கள் ஐயமும் என்க. நான்காமடியில் ஏ - விளியுருபு, ஓ விளிக்கு - அடையாய்வரும் இடைச்சொல், அன்றி, ஓ - புலம்பல் விளிக்கு உரிய உருபுமாம். கையறவு - செயலறுதல், அறவு - அறு என்னும் பகுதியின் தொழிற்பெயர். ஈற்றோகாரம் - அசை. (௪௦௭)

இந்திரனு மலரயனு மிமையவரும் பணிகேட்பச்
சுந்தரிபல் லாண்டிசைப்ப வுலகேழுந் தொழுதேத்தச்
சந்திரன்போற் றனிக்குடைக்கீழ் நீயிருக்குஞ் சவைநடுவே
வந்தடியே னுற்று முகங்காட்ட வல்லேனோ.

இ - ள். (கரனே!), இந்திரனும் - தேவேந்திரனும், மலர் அயனும் - தாமரைமலரிலிருக்கிற பிரமதேவனும், இமையவரும் - தேவர்களும், பணிகேட்ப-(நீ இடுங்) கட்டளைகளைக்கேட்டு அவற்றின்படியே குற்றேவல் செய்தொழுகவும், சுந்தரி - இந்திராணி, பல்லாண்டு இசைப்ப - வாழ்த்துப்பாட்டுப் பாடவும், உலகு எழும் - ஏழுலகங்களிலுள்ளாரும், தொழுது ஏத்த - வணங்கித் துதிசெய்யவும், சந்திரன் போல - சந்திரனைப்போல, தனி குடை கீழ் - ஒப்பற்ற (வெண்கொற்றக்) குடையின்கீழ், நீ இருக்கும் - நீ வீற்றிருக்கின்ற, சவை நடுவே - சபையின் மத்தியில்,

அடியேன்—, நாணாது - வெட்கமில்லாமல், வந்து—, மூக்கு காட்ட வல்லேனோ - முகங்காட்டுந் தகுதியுடையேனோ?

குறிப்பு — திருமால் இராவணனுக்கு இயார்க்குங் கீழ்ப்படிந்து நடந்திலனாதலால் அத் திருமாலையும், சிவபிரான் அரக்கர்க்கு வழிபடு கடவுளாயினராதலின் அச்சிவபிரானையும் ஒழித்து இங்கே 'இந்திரனு மலரயனு மிமையவரும் பணிகேட்ப' என்று கூறினள். சுந்தரி - இந்திராணி; "சுந்தரி சசியயி ராணி புலோமசை - யைந்தருச் செல்வி யிந்திரன் றேவிபெயர்" என்றார் பிங்கலந்தையில், சுந்தரி யென்பதைச் சாதியொருமைப் பெயராகக்கொண்டு தேவமாதரென்பொருள் கூறுவாரு முளர். பல்லாண்டு - அநேகவருஷகாலம் வாழவேண்டுமென்று வாழ்த்திப் பாடும் பாட்டுக்கு இலக்கணை. சந்திரன், சவை - வடசொற்றிரிபுகள். தன்னுடைய நிழலில் வாழ்வார் பலர்க்குங் குளிர்ந்த நிறைமதிபோலவும், பகைவர்க்கு வெவ்விய இரவிபோலவும் தனிக்குடைக்கீழ் வாழ்வாயென்பது தோன்றப் 'போல' என்பது வினையெச்சப் பொருள்படநின்றது. இனி, சந்திரன்போ றனிக்குடை யெனக்கொண்டு குடையினது வட்டவடிவுக்கும் வெண்மை நிறத்துக்குஞ் சந்திரனை யுவமையாக்கிப் பொருள் கூறுவாருமுளர். (கoஅ)

உரனெரிந்து விழவென்னை யுதைத்துருட்டி மூக்கரிந்த
நரனிருந்து தோள்பார்க்க நான்கிடந்து புலம்புவதோ
கரனிருந்த வனமன்றோ விவைபடவுங் கடவேனோ
வரனிருந்த மலையெடுத்த வண்ணாவோ வண்ணாவோ

இ - ள் அரன் இருந்த மலை எடுத்த - சிவபிரான் வீற்றிருக்கின்ற கைலைமலையை (பெயர்த்து) எடுத்த, அண்ணாவோ அண்ணாவோ—, [இராவணனே!] உரம் நெரிந்துவிழ - பலமழிந்து (கீழே) விழும்படி, என்னை உதைத்து - என்னை (தனது காலால்) உதைத்து, உருட்டி - புரட்டி, மூக்கு அரிந்த - (எனது) மூக்கினை அறுத்த, நரன் - மனிதன், இருந்து - (மகிழ்வோடு) இருந்து, தோள் பார்க்க - (தனது) புயங்களைப்பார்த்துக் கொண்டிருக்க, நான் கிடந்து புலம்புவதோ - நானிருந்தபடியிருந்தழத்தக்கதோ? கரன் இருந்த வனம் அன்றோ - (இது) கரனிருக்கின்ற வனமல்லவா? (இவ்வனத்தில்), இவைபடவும் கடவேனோ - (நான்) இத்துன்பங்களையடையவுங் கடமைப்பட்டவள்தானோ?

குறிப்பு — உரன் - இறுதிப்போலி. நரன் - வடசொல். இங்ஙனஞ் செய்தவனைத் தோளைத் துணித்துத் தண்டியாமலிருக்கின்றாய அவன் என்போலத் துன்பத்தூழ்ந்திப் புலம்பிலனன்றோ வென் றுயரொழியும் என்பாள் 'நரனிருந்து தோள்பார்க்க நான்கிடந்து புலம்புவதோ' என்றாள் எனது தமையனாகிய கரன் இவ்வனத்திருந்தும் நான் இத்துன்பமடைதற்கு யாது குற்றஞ்செய்தேன் என்பாள் 'கரனிருந்த வனமன்றோ விவைபடவுங் கடவேனோ' என்றாள் அண்ணன் - தமையன், ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டு ஓகாரமிக்கது, விளியுருபு "புலம்பின் ஓவுமாகும்" என்பது காண்க. அடுக்கு - புலம்பல் பற்றியது. (கoகூ)

நகையாலே மூக்கிழந்து நாணமிலா நான்பட்ட
வசையாலே நினதுபுகழ் மாசுண்ட தாகாதோ

திசையானை விசைகலங்கச் செருச்செய்து மருப்பொசித்த
விசையாலே நிறைந்தபுயத் திராவணனோ விராவணனோ.

இ - ள். திசையானை - திக்கியானைகளினது, விசைகலங்க - வேகம் ஒடுங்குமபடி, செரு செய்து - போர்புரிந்து, மருப்பு ஒசித்த - (அவற்றின்) கொம்புகளை ஒடித்த, இசையால - கீர்த்தியினால, நிறைந்தபுயத்து - பூரித்ததோளகளையுடைய, இராவணனோ இராவணனோ—, நசையால - ஆசையினால, மூக்கு இழந்து - மூக்கினையிழந்து, நாணம் இலா நாணபட்ட - வெட்கமில்லாத நான அடைந்த, வசையால் - பழியினால, நினதுபுகழ் - உன்னுடைய கீர்த்தி, மாசு உணடது ஆகாதோ - குற்றமடைந்ததாகமாட்டாதோ?

குறிப்பு — நசையாலே என்றதற்குக் கருத்து- "கண்டு கோக்கருங் காரிகை யாடனைக், கொண்டு போவ லிலங்கையர் கோக்கென்று, விண்டு மேலவிழுந் தேனை வெகுணடவா, துணட மாக்கினா மூக்கெனச் சொல்லினாள்" என மேலவருஞ் செய்யுட் கேறப இராவணனபொருட்டாகச் சீதையையெடுத்துக்கொண்டு போகவேண்டுமென்ற ஆசையினால என்று கோடலவேண்டும், இது, அவள பொய்யாகக் கூறுதல அன்றி, உள்ளபடி இராமனைச் சேரவேண்டுமென்ற ஆசையாலென்று கூறுதல சிறப்பன்று, உண்மைகூறித் தன்குற்றத்தைத் தன்னினத்தார்க்கு உணர்த்தாளாதலின

கானமதி னிடையிருவர் காதொடுமூக்கு குடனரிய
மானமதாற பாவியே னிவணமடியக் கடவேனோ
தானவரைக் கருவறுத்துச் சதமகனைத் தளையிலிட்டு
வானவரைப் பணிகொணட மருகாவோ மருகாவோ

இ - ள் தானவரை கரு அறுத்து - அசுரர்களை அடியோடு தொலைத்து, சதமகனை - இந்திரனை, தளையில இட்டு - விலங்கிலிட்டு, வானவரை பணிகொண்ட - தேவர்களை ஏவலகொண்ட, மருகாவோ மருகாவோ - ஓ மருமகனே! ஓ மருமகனே! [இந்திரசித்தே!], கானமதினிடை - கானகத்தில, இருவர் - இரண்டு மனிதர்கள், காதொடுமூக்கு - செவியையும மூக்கையும, உடன அரிய - ஒரே காலத்தில அறுக்க, மானமதால - மானத்தினால, பாவியேன - பாவியாகிய நான, இவண மடிய கடவேனோ - இவ்விடத்தி லிறந்துபோகக் கூடியவளானேனோ?

குறிப்பு — 'மானமதால மடிய' என்பதற்கு - மானமுள்ளவளாய வாழும நான மானக்கேடு நேர்ந்தபின வெளிப்படுப்படாமல வெட்கமுற்று இருந்த இடத்தேயிருந்து அழிய என்பது கருத்து. நான இத்துன்புற்றது துணைவலிமைக்குறைவாலன்று, முற்பிறப்பின தீவினையினால தான என்பாள 'பாவியேன' என்றாள். சதமகன - வடசொல, நூறு (அசுவமேத) யாகஞ்செய்தவன. 'கானமதினிடை' என்றதனால, சுமதாளுகைக்குட்பட்ட இடத்தி லென்றதையும், 'இருவர்' என்றதனால துணைவலிமையென்பதையுங் காட்டினாள் இவண, அண - இடப்பொருள காட்டும விகுதி தமபிசெய்த செய்கைக்குத் தமையனும உடன பட்டிருந்ததாகக் கருதினாளாதலின 'இருவர் அரிய' என்றாள். மருகன - மருமகன; இங்கே, உடனபிறந்தான மகன. ()

ஒருகாலத் துலகேழு முருகத்தெரியத் தனுவொன்றுற
இருகாத சினந்திருகித் திசையனைத்துஞ் செலதூறி

யிருகாலிற் புரந்தரனை யிருந்தளையி னிடுவித்த
மருகாவோ மானுடவர் வலிகாண வாராயோ.

இ - ள். ஒருகாலத்து - முன்னொருகாலத்திலே, உலகு எழும் - ஏழுலகங்களும், உருத்து எரிய - மிகவு எரியும்படி, தனு ஒன்றால் - ஒரு வில்லைக்கொண்டு, திருகாத சினம் திருகி - மாறுபடாத கோபம் திரும்பவும் அதிகரித்து, திசை அனைத்தும் செலநூறி - எல்லாத்திக்குகளையு முற்ற அழித்து, புரந்தரனை - இந்திரனை, இருகாலில் - இரண்டுகால்களிலும், இருந்தளை - பெரியவிலங்குகளை, இடுவித்த - பூட்டும்படி செய்த, மருகாவோ - மருமகனே! [இந்திரசித்தே!], மானுடவர் - இம்மனிதர்களுடைய, வலிகாண வாராய் - வலிமையைப் பார்க்க வருவாயாக.

குறிப்பு — தனு - தனுஸ் என்னும் வடசொல்லின் திரிபு. திசை - திக்கிலுள்ளாரைக் குறிக்க நிற்றலின் இடவாகுபெயர். தளையின், இன் - தவிர்வழிவந்த சாரியை. (௧௧௨)

கல்லீரும் படைத்தடக்கை யடற்கரதூ டணர்முதலா
வல்லிருள் சுடர்மணிப்பூ ணரக்கர்குலத் தவதரித்தீர்
கொல்லீரும் படைக்கும்ப கருணனைப்போற் குவலயத்
தெல்லீரு முறங்குதிரோ யானழைத்தல் கேளீரோ.

இ - ள். கல் ஈரும் - மலைகளைப் பிளக்கவல்ல, படை - ஆயுதங்களைக்கொண்ட, தடக்கை - பெரியகைகளையும், அடல் - வெற்றியையுமுடைய, கரதூடணர் முதல் ஆ - கரன்தூடணன் முதலாக, அல் ஈரும் - இருளை விலக்குகின்ற, சுடர் மணி பூண் - பிரகாசமுள்ள இரத்தினாபரணங்களையுடைய, அரக்கர்குலத்து அவதரித்தீர் - ராக்ஷஸகுலத்துப் பிறந்தவர்களே! எல்லீரும் - நீங்கள் எல்லோரும், கொல் ஈரும்படை - கொல்லனால் அராவப்பட்ட [கூர்மையான] படைகளையுடைய, கும்பகருணனைப்போல் - கும்பகருணனைப்போல, குவலயத்துள் - இப்புவியின்கண், உறங்குதிரோ - தூங்குகின்றீர்களோ? யான் அழைத்தல் கேளீரோ - நான் கூவுகின்ற சத்தத்தை (க் காதுகொடுத்துக்) கேட்கமாட்டீர்களோ?

குறிப்பு — கொல் - இரும்பைக்காய்ச்சியடிக்குந் தொழில், இது இங்கே, ஆகுபெயராய்க் கருமானைக்குறித்தது, அடிக்கடி போரியற்றி யொளியுங் கூர்மையு மழுங்காத ஆயுதங்களென்பது தோன்ற 'கொல்லீரும்படை' என்றார், இதனால் கும்பகருணனை யெதிர்ப்பார் இன்மையும் அவனாற்றலின் வன்மையுங் குறிப்பிக்கப்பட்டன. கும்பகருணன் என்ற வடசொல்லுக்கு - குடம்போன்ற காதினையுடையானென்று பொருள். (௧௧௩)

என்றின்ன பலபன்னி யிகலரக்கி யழுதிரங்கிப்
பொன்றுனனும் படியகத்துப் புரள்கின்ற பொழுதகத்து
நின்றந்த நதியகத்து நிறைதவத்தின் குறைமுடித்து
வன்றிணிகைச் சிலைநெடுந்தோண் மரகதத்தின் மலைவந்தான்.

இ - ள். என்று - என்றுசொல்லி, இன்னபலபன்னி - (பின்னும்) இத்தகைய பலவார்த்தைகளைச்சொல்லி, இகல் அரக்கி - பகைகொண்ட அச்சூர்ப்பநகை, அழு

துஇரங்கி - அழுது துக்கித்து, பொன் தனனும் படிஅகத்து - அழகுவிளங்கும் பூமியின்கண், புரண்டுஇன்றபொழுது - (வீழ்ந்து) புரளுகின்ற சமயத்தில், வல் திண் கைசிலை - வலியதான அலங்காரமுள்ள வில்லைத்தாங்கிய, நெடுந்தோள் - பெரியபுயத்தினையுடைய, மரகதத்தின்மலை - மரகதமலைபோன்ற ஸ்ரீராமபிரான், அந்தகி அகத்து - அந்தகோதாவரிநதியிடத்து, அகத்து நின்று - (ஒரேநிலையான) எண்ணத்துவிருந்து, நிறைதவத்தின - நிறைந்ததவத்தினது, குறைமுடித்து - சேடத்தைப் பூர்த்திசெய்து, வந்தான்—,

குறிப்பு —'பொன்தனனும்படி' என்றது - இலக்குமியாகிய பிராட்டியிருக்குமிடமென்று கூறலுமமையும். பொழுதகத்து என்புழி அகம் ஏழனுருபுமாம். குறைமுடித்து என்றதால் இவ்வரக்கி யழுகுரல்கேட்டுஉள்ளானென்பதும், நிறைதவம் என்றதால் அத்தவத்துக்கு அவ்வழுகுரலாற்பங்கம் நேரிடவில்லையென்பதும் பெறும். தவம் என்றது - இங்கே, வைதிகச் சடங்கென்ற மாத்திரமாய் நின்றது. மரகதம் - மாதகம், எழுத்துநிலை மாறுதல், இலக்கணப்போலி. மலை - உவமையாகுபெயர். ()

வந்தானை யிடைநோக்கி வயிறலைத்து மழைக்கண்ணீர்
செந்தாரைக் குருதியொடு செழுநிலத்தைச் சேறாக்கி
யந்தோவுன் திருமேனிக் கன்பிழைத்த வன்பிழையா
லெந்தாய்யான் பட்டபடி யிதுகாணென் றெதிர்விழுந்தாள்

இ - ள் வந்தானை - வந்த ஸ்ரீராமபிரானை, இடைநோக்கி - இடையேபார்த்து, வயிறு அலைத்து - வயிற்றைப்பிசைந்து கொண்டு, மழை கண் நீர் - மழைபோன்ற (தனது) கண்ணீரினால், செந்தாரை குருதியொடு - தாரை தாரையாய் ஒடியிருக்கின்றதாகிய செய்ய அரத்தத்தோடு, செழு நிலத்தை - நல்ல பூமியை, சேறு ஆக்கி - சேறும்படிசெய்து, (நெருங்கி), எந்தாய்—! அந்தோ—, உன் திருமேனிக்கு - உனது அழகிய திருமேனிக்கு, அன்பு இழைத்த - அன்பினைச்செய்த, வன்பிழையால் - வலியதப்பித்ததால், இது - இத்துன்பம், யான்பட்டபடி காண் என்று எதிர் விழுந்தாள் - நான் அடைந்த வாறுகாணென்று கூறி எதிரே விழுந்தாள்

குறிப்பு —அந்தோ - இரக்கப்பொருளுணர்த்தும் மோரிடைச்சொல் எந்தாய் - சிறப்புப்பற்றி வந்தமரபு வழுவமைதி. எந்தாய்+யான் - எந்தாயான், தனிக்குறிலைச் சாராதயகரம் யகரம்வரக்கெட்டது; "யாழுமன்னர்" என்னுஞ் சூத்திரத்து 'மேல்' என்றமிகையால் இது அமைக்கப்படுமே. (ககு)

விரிந்தாய கூந்தலாள் வெய்யவினை யாதானும்
புரிந்தாளென் பதுதனது பொருவரிய திருமனத்தாற்
றெரிந்தானின் றிளையானை யிவளைநெடுஞ் செவியொடுமூக்
கரிந்தானென் பதுமுணர்ந்தா னவளைநீ யாரென்றான்.

இ - ள். விரிந்து ஆய - விரிபட்டதாயுள்ள, கூந்தலாள் - கூந்தலையுடைய இவ்வரக்கி, வெய்யவினையாதானும் புரிந்தாள் என்பது - கொடிய செய்கையாதாவதொன்று செய்தாளென்பதை, பொருவு அரிய - ஒப்பில்லாத, தனது திருமனத்தால் தன்னுடைய சிறந்த மனத்தினாலே, தெரிந்தான் - அறிந்துகொண்ட ஸ்ரீராமபிரான், இளையானை - (தனது) தம்பியை, இன்று - இற்றைநாள், இவளை - இவ்வரக்கியை,

நெடுஞ்செவியொடு மூக்கு - பெரியகாதுகளையும் மூக்கையும், அரிந்தான் என்பதும் உணர்ந்தான் - அறுத்தானென்றவிஷயத்தையும் அறிந்துகொண்டானும், அவளை - அசுரூபப்பகையை, நீயார் என்றான் - நீயார்? என்று வினவினன்.

குறிப்பு —இவள் சேற்று வந்தபொழுது கொண்ட அழகிய வடிவத்திற்கும் இன்றைக்குக்காணப்படுகிற கோரவடிவத்துக்கும் சிறிதும் பொருத்தமில்லாமையால் இவளை முந்திவந்தவளென்று துணியாமல் வேறொருத்தியாகக்கருதி நீயாரென்று புதிதாக வினவினனென்க. (ககசு)

அவ்வுரைகேட் டடலரக்கி யறியாயோ நீயென்னைத்
தெவ்வுரையென் றோருலகு மில்லாத சீற்றத்தான்
வெவ்விலைவே லிராவணனும் விண்ணுலக முதலாக
வெவ்வுலகு முடையானுக் குடன்பிறந்தேன் யானென்றாள்.

இ - ள். அ உரை கேட்டு - அந்த மொழியைக்கேட்டு, அடல் அரக்கி - அக் கொடிய ராக்ஷசி, நீ என்னை அறியாயோ -நீ யென்னை அறிந்திலாயோ? தெவ் என்ற உரை ஓர் உலகும் இல்லாத - (தனக்குப்) பகைமையென்ற வார்த்தையும் உலகமொன்றினும் இல்லையாம் படிசெய்த, சீற்றத்தான் - கோபத்தினையுடையானும், வெம் இலை வேல் இராவணன் ஆம் -வெவ்விய இலைவடிவமைந்த வேலினையுடைய இராவணன் (எனும் பெயரினையுடையா)னும் ஆகிய, விண் உலகம் முதல் ஆக எ உலகும் உடையானுக்கு - சுவர்க்கலோகம் முதலாக எல்லாவுலகங்களையும் தனக்கு உரிமையாக வுடையானுக்கு, யான் உடன் பிறந்தேன் என்றாள் - நான் கூடப்பிறந்தவள் என்று கூறினாள்

குறிப்பு —தெவ் - பகையுணர்த்தும் உரிச்சொல், "தெவ்வுப்பகையாகும்" என்பது தொல்காப்பியம். என்றோருலகு - அகரம் தொகுத்தல் இராவணனது கொடுஞ்செய்கையால் எல்லாவுலகத்தவரும் உட்பகையுடையாரே யாயினும் வாய்ப்பேச்சிலும் பகைவரென்று காட்டிக்கொள்ளுதற்கு அஞ்சுதாகளாய அச்சத்தால் மௌனமாயிருப்பாரகளென்பது தோன்ற 'தெவ்வுரையென்று' என்று கூறினள். இராவணனது வீரதீரத்தை யெடுத்துக்காட்டி அத்தகையானுக்குத் தங்கையென்று கூறினால் இராமபிரான் அச்சமடைந்து கெஞ்சித்தனது தயவைத்தேடுவான் என்பது கருதி 'சீற்றத்தான் இராவணன் எவ்வுலகுமுடையான்' என்று தன் தமையனது பெருமையை யெடுத்துக்கூறினள். நான் சேற்று வந்தவளல்லவா என்பாள் 'அறியாயோ நீ யென்னை' என்றாள். (ககஎ)

தாமிருந்த தகையரக்கா புகலொழியத் தவமியற்ற
யாமிருந்த நெடுஞ்சூழற் கென்செய்வந் தீரென்னும்
வேமிருந்தை யனக்கனலும் வெங்காம வெம்பிணிக்கு
மாமருந்தே யருளினும் வந்திலனோ யானென்றாள்.

இ - ள். தகை அரக்கர் தாம் இருந்த புகல் ஒழிய - பெருமையையுடைய ராக்ஷஸர்கள் இருந்த இடம் நீங்க [அவ்விடத்தைவிட்டு என்றபடி], தவம் இயற்ற யாம் இருந்த நெடுஞ்சூழற்கு என்செய்வந்தீர் - தவஞ்செய்யும்பொருட்டு நாம் தங்கியிருந்த சேய்மையான இவ்விடத்துக்கு யாதுசெய்யும்பொருட்டு வந்தீர்? என்னும் -

என்று (ஸ்ரீராமபிரான்) வினவியவளவில், வேம் இருந்தை என் கனலும் - நெருப்பில் வேகின்ற கரிபோலத் தவிக்கின்ற, வெங்காமம் வெம்பிணிக்கு - வெய்யகாமமாகிய கொடியநோய்க்கு, மா மருந்தே - சிறந்தமருந்துபோன்றவனே! யான் நெருநலினும் வந்திலனோ - நான் நேற்றும் வந்தேனில்லையோ? என்றாள் - என்று (சூர்ப்பணகை) கூறினாள்.

குறிப்பு — புகல் என்னுந் தொழிற்பெயர், புக்கு உறையுமிடத்துக்கு ஆகுபெயராம். யான் இராவணன் தங்கையென்று இவள் சொல்லலும் உருவின்மாறுபாட்டால் நேற்றுச் சுந்தரியாய் வந்தவளோடு குரூபியாகிய இவளும் இராவணனுக்குத் தங்கையாயிருக்கலாமெனக்கருதி உபசாரமாக வுரையாடினரென்பது தோன்ற 'என் செய்வந்தீர்' என்பன்மையாகக்கூறினார். இருந்தினை என்னும் பாடத்திற்கு இருந்தையென்பது இருந்து என் ஈறு விகாரப்பட்டதென்றும் இன் சாரியையென்றுங் கூறுக. இனி, வேம் இருந்தினை எனக்கு அனலும் எனக்கொண்டு வேகின்றகரிபோல எனக்குத் தாபஞ்செய்கின்ற என்று கூறுதலும் இயையும். இனி, முதல் அடிக்கு இது வரையிலும் பெருமையோடிருந்த இராக்கதர்களது பிரவேசம் நீங்கும்படியாகவும் (முனிவர்கள் இடையூறின்றித்) தவம் இயற்றும்படியாகவும் என்பொருள்கோடலு மமையும், நெருநல் - நேற்று என்னும் பொருள் தரும் இடைச்சொல்.　　(கக௮)

செங்கயல்போற் கருநெடுங்கட் டேமருதா மரையுறையு
நங்கையிவ ரென்னெருந லடந்தவரோ நாமென்னக்
கொங்கைகளுங் குழைக்காதுங் கொடிமூக்குங் குறைத்தழித்தா
லங்கணர சேயொருவர்க் கழியாதோ வழகென்றாள்.

இ - ள். செம் கயல்போல் - சிவந்த கயல்மீன் போலப்பிறழ்கின்ற, கருநெடுங் கண் - கரிய நெடிய கண்களையுடைய, தேமரு தாமரை உறையும் - தேன் பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கின்ற, நங்கை இவர் என - பெண்ணிற் சிறந்தவளாகிய திருமகள் இவர் என்று (கண்டார்) கூறும்படி, நெருநல் - நேற்று, நடந்தவரோ - வந்தவர்தாமோ? நாம் என்ன - நீர் என்று (ஸ்ரீராமபிரான்) கூற, (அதற்கு அரக்கி), அம் கண் அரசே - அழகிய கண்களையுடைய அரசனே! கொங்கைகளும் - தனங்களையும், குழை காதும் - குழையை அணிந்த காதுகளையும், கொடிமூக்கும் - கொடி போன்ற மூக்கையும், குறைத்து அழித்தால் - அறுத்துப் போக்கிவிட்டால், ஒருவர்க்கு—, அழகு அழியாதோ - வனப்புக்கெடாதோ? என்றாள்—,

குறிப்பு.—நாமென்பது - இங்கே நீர் என்னும் பொருளில் வந்தது, இது, 'ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே" என்றவாறு வருவதோர் இடவழுவமைதி. "நாமரை யாமத்தென் னோவந்து வைகி நயந்ததுவே" எனத்திருக்கோவையாரிலும் வந்தமையறிக. "புலக்குண் டலப்புண் டரீகத்த போகக்கெண்டை வல்லியொன்றால், விலக்குண் டுலோவின்று வேல்விழிக்கின்றன" என்னும் பெரியார்பாசுரத்திலும் மூக்குக்குக்கொடி உவமையாதல் காண்க.　　(ககக)

மூன்முறு வலனிளைய மொய்ம்பினோன் முகநோக்கி
வீரவிரைந் தனையிவடன் விடுகாதுங் கொடிமூக்கு
மீரங்கினோந் திவளிழைத்த பிழையென்னென் றிறைவினவச்
சூர்நெடுந் தகையவனை யடிவணங்கிச் சொல்லுவான்.

இ - ள் இறை - ஸ்ரீராமபிரான், மூரல் முறுவலன் - பற்கள் சிறிது வெளிப்படக்கொண்ட புன்னகையுடையானாகி, இளையமொய்ம்பினை முகம்நோக்கி - இளையவீரனது முகத்தைப்பார்த்து, வீர - ஆண்மையையுடையாய்! (நீ), விரைந்தனை - விரைந்து, இவள் தன் - இவளாகிய இவளது, விடுகாதும் - அகன்ற செவியையும், கொடிமூக்கும் - கொடிபோல நீண்ட மூக்கினையும், ஈர - அறுக்கும்படி, இவள் நினைந்து இழைத்தபிழை என் - இவள் கருதிச்செய்த தப்பிதம் யாது? என்று வினவ - என்றுகேட்க, சூரம் மெய்ந்தகை - அச்சத்தை விளைவிக்கும் வீரத்தினையுடைய மிகுந்த கீர்த்திமானாகிய இளையபெருமாள், அவனை அடிவணங்கி - அவ்விராமபிரானைத் திருவடிதொழுது, சொல்லுவான் - (மேல்வருமாறு) கூறுவானாயினான். (௧௨௦)

தேட்டந்தான் வாளெயிற்றின் றின்னவோ தீவினையோர்
கூட்டந்தான் புறத்துளதோ குறித்தபொரு ளறிந்திலமால்
ஓட்டந்தா னெரியுமிழ நல்லாண்மேற் பொல்லாதாள்
ஓட்டந்தா ளரிதினிவ ளுடன்றெழுந்தா ளெனவுரைத்தான்

இ - ள் தேட்டம் - (இவள்) விருப்பமானது, வாள் எயிற்றில் தின்னவோ - கூரிய (கொடிய) பற்களால் (கடித்துமென்று) தின்னுதற்கோ? (அல்லது), தீவினையோர் கூட்டம்புறத்து உளதோ - தீயசெயலைப்புரியும் அரக்கர்கூட்டம் வெளியே யிருக்கின்றதோ? (என்னும் இவ்விரண்டு விஷயத்துள்), குறித்தபொருள் அறிந்திலம் - (இவள் செய்யக்) குறித்த விஷயம் (இன்னதென்று துணிவாக) அறிந்தேமில்லை, பொல்லாதாள் இவள் - தீயவளான இவள், நாட்டம் எரி உமிழ - கண்கள் நெருப்புப்பொறியைச்சொரிய, அரிதின் - பிறர்க்கு அருமையானவகையில் [விரைவாக], ஓட்டந்தாள் - ஓடிவந்து, நல்லாள்மேல் - நற்குணமுடையாளாகிய சானகியின்மேல், உடன்று - கோபித்து, எழுந்தாள் - (சானகியை எடுக்க) கிளம்பினாள்.

குறிப்பு — பிராட்டியைத் தின்னவோ அல்லது பிராட்டியை யெடுத்துவரும்படி இவளை யேவிவிட்டு அரக்கர் போர்க்கோலங்கொண்டு புறத்திருக்கின்றார்களோ யாதோ அறியேன் விரைந்தோடிவந்து சினங்கொண்டு பிராட்டியை எடுக்க யத்தனித்தாள் என்று கூறினனென்பதாம். ஓட்டந்தாள் என்பது - ஓட்டந்தாளென விகாரப்பட்டது 'ஓட்டந்து பாய்ந்திடுகின்றான்' என்த் திவ்வியப்பிரபந்தத்தினும் வந்தமைகாண்க. (௧௨௧)

ஏற்றவளை வரிசிலையோ னியம்பாமு னிகலரக்கி
சேற்றவளை தன்கணவ னருகிருப்பச் சினந்திருகிச்
சூற்றவளை நீருழக்குந் துறைகெழுநீர் வளநாடா
மாற்றவளைக் கண்டக்கா லழலாதோ மனமென்றான்

இ - ள். ஏற்ற - கையிலேந்திய, வளைவரிசிலையோன் - வளைந்த கட்டமைந்த வில்லையுடைய இளையபெருமாள், இயம்பாமுன் - (நடந்தசங்கதியைச்) சொல்லிப் பூர்த்தி செய்தற்கு முன்னமே, இகல் அரக்கி - அவ்வலியராக்ஷஸியானவள், சேற்றவளை - சேற்றிலுள்ள (பெண்பாலாகிய) சங்கு, தன் கணவன் அருகு இருப்ப - தனது கணவனாகிய ஆண் சங்கினின் அருகிலிருந்தனால், சூல் தவளை - கருக்கொண்ட பெண்சங்கை, சினம் திருகி - கோபத்தால் மாறுபாடுகொண்டு, நீர் உழக்கும் - நீரை

கலங்கச்செய்கின்ற, துறைகெழு நீர்வளம் நாடா - இறங்கு துறைகள் பொருந்திய நீர்வளப்பம் மிக்க நாட்டையுடையவனே! மாற்றவளை கண்டால் - சக்களத்தியைப் பார்த்தால், மனம் அழலாதோ என்றாள் - (என்து) மனங்கொதியாதோ என்று கூறினாள்.

குறிப்பு — கொடிய விலங்குகளும் இராக்கதர்களும் வசிக்கும் வனமாதலால் எச்சமயத்து எவ்வுயிரால் பெருமானுக்கும் பிராட்டிக்கும் ஏது தீங்கு நேருமோ என்று சங்கைகொண்டு அதனைப் பரிகரித்தற்காக இளையபெருமாள் எப்பொழுதும் வில்லுங்கையுமாய் நின்று பார்த்துக் காவல்செய்து கொண்டிருக்குஞ் செயலைநோக்கி 'வளை சிலை' என்னும் வினைத்தொகையை இறந்த காலத்து விரித்து ஏற்ற என்றற்குக் கையில் ஏந்திய என்பொருள் கோடல் சிறப்புடைத்து. இனி, அரக்கியைநோக்கி நீயேன் ஓடியுடன்று வந்தாய் என்று ஸ்ரீராமபிரான் உரையாடுதற்கு முன் என்று முதல் அடிக்குப்பொருள் கூறலுமமையும். இப்பொருள் கொள்ளுங்கால் 'ஏற்றவளை' என்றற்குப் போர் நேரிடாத காலத்து எம்பிரான் வில்வளைவுற்று நீண்டேயிருக்கும் ஆதலின் நாண் ஏற்றவளையும் என்று பொருள் கூறுக. 'நீளங்கொள் சிலையோன்' எனக்கீழ்க்கூறிய செய்யுளை யீண்டுநோக்குக. சேற்ற - சேறு என்னும் பெயரின் மேற்பிறந்த குறிப்புப்பெயரெச்சம். இச்செய்யுள் திரிபு என்னும் சொல்லணியா யமைந்ததாதலானும், ஓரடியிற் கூறியவாறு மற்றோரடியிலும்பொருள் கூறுதல் மரபன்றென்றும், அங்ஙனங்கூறினால் கவிசமத்காரங்கெடுமென்றுங் கூறுவாராதலானும், சேல்+தவளை எனப்பிரித்து மூன்றும் அடியில் வந்த தவளையென்பதற்குள்ள பொருளையே கூறுதல் சிறப்பன்றெனக்கொள்க. "பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்து" ஆதலால் தன் கணவனருகில் தன் இனத்தினுந்தாழ்ந்த ஈரறிவுயிரான சங்கு இயலப்பிலிருத்தலை நோக்கியும் பெண் தவளை மனம்பொறாது இங்ஙனம் சினந்ததெனக். "நந்து முரளு மீரறி வினவே, பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே" "நண்டுந் தும்பியு நான்கறி வினவே, பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரங்களின்படி (நந்து) சங்கு மெய்யுணர்வோடு நாவுணர்வுமாகிய ஈரறிவுடைத்தா யிருத்தலும், நண்டுந் தும்பியும் என்னும் சூத்திரத்துப் பிறவு முளவேயென்றதனால் தவளை மெய்யுணர்வு நாவுணர்வு மூக்குணர்வு கண்ணுணர்வு என்னும் நான் கறிவினையுடைத்தா யிருத்தலு மறிக. பகுத்தறிவிற் குறைவுபட்டதானதோர் அஃறிணையுயிராகிய தவளையானது தான் சூல்கொண்டு கலவிக்குரியதல்லாத நிலைமையிலிருந்தும் தன் கணவன்பால் அயற்பெண்பா லிருத்தலை நோக்கிப் பிணங்கும் நாட்டிலுள்ளவனான நீ, என் போன்ற விவேகிகள் கலவிக்குரிய பருவத்தில் கணவனருகில் மாற்றாளிருத்தலை நோக்கி மனம்பொறாது அம்மாற்றாளுக்குக் கேடு சூழக்கருதுதல் இயல்பே என்பதை அறிதற்குரியாய் என்பாள், இங்ஙனம் சந்தாப்பத்துக்கு ஏற்ற நாட்டினைக் கூறி ஸ்ரீராமபிரானை விளித்தாள். நேற்றைப்பொழுது எம்பிரான் உண்டாட்டங்கொண்டவன்போல நடித்து இராவணாதியர்க்கு அஞ்சுகின்றேன் அவர்கள் விவாகஞ்செய்து கொடுத்தால் நின்னைக்கைப்பற்றுவேன் என்று கூறியதோடு இத்தகைய பலமொழிகளைக் கூறினதினாலேயே தன்னை இவன் மணஞ்செய்யத் தடையில்லையென்றும் இப்பெண் இடையூறா யிருந்தால் நேற்றே காந்தருவவிவாக முடிந்திருக்குமென்றும் அவன் கொண்டகருத்தினாலேயோ அல்லது இவனை எவ்விதத்திலும் கைவசமாக்கிக்கொள்ளலாமென்று கருதற்கமைந்த செல்வச்செருக்கினாலேயோ எம்பிரானைக் கணவனென்றும் எம்பிராட்டியை மாற்றாளென்றும் வாய் கூசாது துணிந்து கூறினாள் போலும். (கஉஉ)

பேடிப்போர் வல்லரக்கர் பெருங்குலத்தை யொருங்கவிப்பான்
றேடிப்போந் தனமின்று நீமாற்றஞ் சிலவிளம்பி
வீடிப்போ காதேயிம் மெய்யவனத்தை விட்டகல
வோடிப்போ வென்றுரைத்த வுரைகடந்தாற் கவளுரைப்பாள்

இ - ள். பேடிப்போர்வல் அரக்கர் - பேடித்தனமாகிய போரில் வலியராகிய அரக்கர்களினது, பெருங்குலத்தை - பெரியகூட்டத்தை, ஒருங்கு அவிப்பான் - அடியோடு கொல்லும்பொருட்டு, தேடி போந்தனம் - (யாம்) தேடிவந்திருக்கின்றோம், (ஆதலால்), இன்று - இப்பொழுது, நீ மாற்றம் சில விளம்பி - கொடியவார்த்தைகள் சிலவற்றைச்சொல்லி, வீடிப்போகாது - (வீணே) இறந்துபோகாமல், இ மெய்வனத்தைவிட்டு அகல ஓடிப்போ - இந்தச் சத்தியவனத்தைவிட்டுத் தூரமாக ஓடிப்போ, என்று உரைத்த - என்றுசொன்ன, உரை கடந்தாற்கு - சொல்லின் அளவினின்று மீறிய ஸ்ரீராமபிரானுக்கு, அவள் உரைப்பாள் - அவ்வரக்கி (மேல்வருமாறு) கூறுவாளாயினள்.

குறிப்பு — போரிலிளைக்குங்கால் ஓடிமறைந்து மாயைப்போரையியற்றும் அரக்கரது போரின் தன்மை ஆண்மையுமன்று பெண்மையுமன்றென்பார் 'பேடிப்போர்வல்லரக்கர்' என்றார். அவிப்பான் — பானீற்று எதிர்கால வினையெச்சம். மெய்யுணர்ந்து வீடுபெறச்செய்யாநின்ற வேதமந்திரங்களைப் பாராயணஞ்செய்யும் முனிவர் வசிக்குமிடமெல்லாம் ஒழிய நெடுந்தூரத்தே செல்லென்பார் 'இம்மெய்வனத்தைவிட்டகல' என்றார். 'இம்மெய்' என்பதை 'வீடிப்போகாதே' என்பதோடுகூட்டி யுரைப்பினும் அமையும், ஈண்டு மெய் - உடல். இதுகாறுஞ் சினங்கொண்டு கடினவார்த்தைகளைக் கூறாது இப்போது 'ஓடிப்போ' என்று கடிந்து கூறியதால் 'உரைகடந்தான்' என்றார். இனி, வேதங்களுக்கு எட்டாதவனென்றும், சொல்லுக்கடங்காத கீர்த்திமானென்றும், உரைகள் + தந்தானெனக்கொண்டு வேதங்களை யளித்தானென்றும் பொருள்கோடலாம். (௧௨௩)

நரைதிரையென் றில்லாத நான்முகனே முதலமரர்
கரையிறந்தோ ரிராவணற்குக் கரனிறுக்குங் குடியென்றால்
விரையுமிது நன்றன்று வேறாக யானுரைக்கு
முரையுளது நுமக்குறுதி யுணர்வுளதே லென்றுரைப்பாள்.

இ - ள். நரை திரை என்று இல்லாத - நரையென்றுந் திரையென்றும் இல்லாமலிருக்கப்பெற்ற, நான் முகனே முதல - நான்கு முகத்தையுடைய பிரமதேவனே முதலாகிய, அமரர் கரை இறந்தோர் - அளவற்ற தேவர்கள், இராவணற்கு - இராவணனுக்கு, கரம் இறுக்கும் குடி என்றால் - இறை செலுத்துங் குடிகளாயினரென்றால், விரையும் இது நன்று அன்று - அவசரப்படுகின்ற இச்செய்கை நன்மையுடையதன்று, நுமக்கு உறுதி உணர்வு உளதேல் - உமக்குத் திடமாகிய தெளிவிருக்குமாகில் [சந்தேகமில்லாமலிருப்பீராகில்], யான் - நான், வேறு ஆக உரைக்கும் உரை உளது - தனியாகக் கூறும் வார்த்தை (ஒன்று) இருக்கின்றது, என்று - என்று சொல்லி, உரைப்பாள் - (அதனைச்) சொல்லத்தொடங்கினள். (௧௨௪)

ஆக்கரிய மூக்குங்கை யரியுண்டா ளென்றுரை
நாக்கரியுந் தயமுகனார் நாகரிக ரல்லாமை

மூக்கரிந்து நுங்குலத்தை முதலரிந்தீ ரினியுமக்குப்
போக்கரிதிவ் வழகையெலாம் புலவிடையே யுகுத்திரே

இ - ள் உங்கை - உமது தங்கை, ஆக்கரிய மூக்கு அரியலுற்றாள் என்றுரை- (சிருஷ்டி கர்த்தாவாலும்) இயற்றுதற் கருமையான (பெரிய) மூக்கற்று பட்டாளென்று சொன்னவளை, நாக்கு அரியும் - நாவினை யறுக்கின்ற, தயமுகனார் பத்து முகங்களையுடைய இராவணனுருக்கு, நாகரிகர் அல்லாமை - (நீங்கள்) நாகரீகத்தையுடையவர்கள் அல்லாதிருத்தலால், மூக்கு அரிந்து - (எனது) மூக்கையறுத்து, நும் குலத்தை முதல் அரிந்தீர் - உங்கள் வம்சத்தை அடியோடு கெடுத்தீர்கள், இனி உமக்கு போக்கு அரிது - (பிழைப்பதற்கு) இனிமேல் உங்களுக்கு வழியில்லை, இ அழகை எலாம் புல இடையே உகுத்தீர் - (மேலான) இவ்வழகினை முற்றும் புலவினிடத்தே சிந்தி விட்டீர்கள்

குறிப்பு—நாகரிகம் - கண்ணோட்டம், "பெய்க்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்" என்புழி நாகரிகம் - கண்ணோட்டம் என்றார் பரி மேலழகியாரும் பெறுதற்கரிய அமிருதம் பெற்றதைப் புலவிலே சொரிந்து வீணாக்கினறுபோல உங்களுடைய நிறைந்த அழகை நீங்கள் வீணேயிழந்திட்டீர் என்றனளெனக் அழகை யெல்லாம் - அழகாகிய அமிருதம் முழுவதையு மெனக் தனது வேட்கை விளங்க 'அழகையுகுத்தீர்' என்று கூறினள். (சஉரு)

வானகாப்போர் மண்காப்போர் மாநாகர் வாழுலகந்
தானகாப்போ ரினித்தங்க டலைகாத்து நின்றுங்க
ளூனகாக்க வுரியாரா ரெனையுயிர் நீர்காக்கின்
யானகாப்பெ னலலாலவ் விராவணனு ருளரென்றாள்

இ - ள் வான் காப்போர் - விண்ணுலகைப்புரப்பவர் தமயினும், மண்காப்போர்-மண்ணுலகைப்புரப்பவர் தமயினும், மாநாகர் வாழ் உலகம் காப்போர் - பெரியசர்ப்ப சாதியார் வசிக்கின்ற உலகைப்புரப்பவர் தமயினும், யார் -எவர், இனி- இனிமேல், தங்கள் தலைகாத்து நின்று - (முதலில்) தமது தலையைக் காப்பாற்றி (இறவாமல்) நின்று, உங்கள் ஊன் காக்க உரியார் - (பின்) உங்களுடைய உடலை இரட்சிக்கத்தக்கவர்கள், (ஒருவருமில்லை), எனை உயிர் நீர் காக்கின் - எனது உயிரை நீங்கள் காப்பீர்களாயின், யான் காப்பேன் - நான் (உங்களைக்) காப்பேன், அல்லால் - அதுவன்றி மலவாவிட்டால், அ இராவணனார் உளர் என்றாள் - (உங்களை அழிக்க) அந்த இராவணனாரிருக்கின்றாரென்று கூறினள். (சஉசு)

காவற்றிண் கற்பமைந்தார் தம்பெருமை தாங்கழறார்
ராவற்பே ரன்பினு லறைகின்றே னுமன்றோ
தேவர்க்கும் வலியானறன் றிருத்தங்கை யாளிவளெண்
டேவர்க்கும் வலியாளென் றிளையானுக் கியம்பிரோ

இ - ள் காவல் திண் கற்பு அமைந்தார் - (தமமனமாகிய) காவலினையுடைய வலிய கற்பிலக்கணம் பொருந்திய பெண்கள், தம்பெருமை தாம் கழறார் - தமது பெருமையைத்தாமே சொல்லிக்கொள்ள மாட்டார்கள், ஆவல் பேர் அன்பினால் -(உமது புயங்களைத் தழுவும்பொருட்டுக் கொண்ட) ஆசையினாலாகிய மிகுந்த அன்பி

ளாலே, அறைகின்றேன் அன்றோ - (நீங்கள் உய்தற்குரியவழியைச்) சொல்லுகின்றேனல்லவா? இவள் - இப்பெண், தேவர்கட்கும் வலியான் திரு தங்கையாள் - தேவர்களைக்காட்டிலும் வலிமையையுடைய இராவணனது சிறப்புப்பொருந்திய தங்கை, ஈண்டு - இவ்வுலகத்தில், ஏவர்க்கும் - யாவரினும், வலியாள் - வலிமையையுடையவள், என்று-என்பதாக, இளையானுக்கு இயம்பீர்-(உமது) தம்பிக்குச் சொல்வீராக.

குறிப்பு — கற்புடை மகளிர் தம்பெருமையைத் தாமே கூறுதற்குரியரல்லர், அத்தகையாருள் யானும் ஒருத்தியேயாயினும், யான், உம் மேற்கொண்ட காதலை நிறைவேற்றிக்கொள்ளுதற்கு இன்றியமையாமைபற்றி வேற்றுமை கருதாது உமது முன்னிலையில் மாத்திரம் எனது சிறப்பை இப்பொழுது கூறுகின்றேன் இங்ஙனம் உமது தம்பியினெதிரிலுங் கூறவேனல்லேன், ஆகையால், எனது சிறப்பை யான் சொல்லக் கேட்டிருந்த நீர்தாமே 'இளங்கன்று பயமறியாது' என்றபடி அதனையறியாமல் என்னை இங்ஙனஞ் செய்த உமது தம்பிக்கு அனைத்துலகையும் வென்றவனது தங்கையான இவள் யாவரினும் ஆற்றலுடையாள் என்று சொல்லி என் சிறப்பை அவனுக்கு உணர்த்தி அவனை அடக்கி அவனுக்கு என்னிடம் நன்குமதிப்பை உண்டாக்குவீர் என்பதாம். காவல் நிறை கற்பு—"சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை", "கற்பெனுந் திண்மை" என்பன காண்க. (கஉஎ)

மாப்போரிற் புறங்காப்பேன் வான்சுமந்து செல்வல்லேன்
தூப்போலக் கனிபலவுஞ் சுவையுடைய தரவல்லேன்
காப்போரைக் கைத்தென்னீர் கருதியது தருவேனிப்
பூப்போலு மெல்லியலாற் பொருளென்னோ புகல்வீரால்.

இ - ள். மா போரில் புறம் காப்பேன்- பெரியயுத்தத்தில் (உங்களைக்) காப்பேன், வான்சுமந்து செல்வல்லேன் - (உங்களுக்கு வாகனமாக இருந்து) ஆகாயத்தில் (உங்களைச்) சுமந்துகொண்டுபோக வல்லவளாயிருக்கின்றேன், தூ போல சுவையுடைய கனிபலவும் தரவல்லேன் - மாமிசம்போல உருசியுள்ளனவாய கனிகள் பலவற்றையும் (கொணர்ந்து) கொடுக்கவல்லவளாயிருக்கின்றேன், (அன்றியும்), நீர் கருதியது தருவேன் - நீங்கள் நினைத்தபொருள் (எத்தகைத்தாயினும் அப்பொருளைக்) கொடுப்பேன், காப்போரை கைத்து என் - (பலவிதத்தினும்) இரட்சிக்குந்தன்மையுடையவரை வெறுத்தாலென்னபயன்? இ பூ போலும் மெல்லியலால் - பூவைப்போலும் மென்மைத்தன்மைவாய்ந்த இப்பெண்ணினால் [சீதையால்], பொருள் என் - பிரயோசனம் யாது? புகல்வீர் - சொல்லுவீராக.

குறிப்பு,—ஊன் உண்ணும் அரக்கியாதலால் அவ்வூன்சுவை யெல்லாவற்றினுஞ் சிறந்ததெனக் கருதி அவ்வூனைக் கனியின் சுவைக்கு உவமைகூறினாள். புறங்காத்தல் என்பதில் புறம் என்பது - தமிழுபசருக்கமாதலால், 'புறங்காப்பேன்' என்பதற்குப் பின் நின்று காப்பேனென்பது பொருந்தாது. தூ - தசை, "தூய்தூ றம்பகை தசையுந் தூவே" என்பது பிங்கலந்தை. (கஉஅ)

குலத்தாலு நலத்தாலுங் குறித்தனவே கொணர்தக்க
வலத்தாலு மதியாலும் வடிவாலு மடத்தாலு
நிலத்தாரும் விசும்பாரு நேரிழையா ரெனைப்போற
சொலத்தானிங் குரியாரைச் சொல்லீரோ வல்லீரேல்.

இ - ள். வல்லீரேல் - (நீங்கள்) சாமாத்தியமுடையவர்களானால், நிலத்தாரும் விசும்பாரும் - புவியிலிருப்பவர்களும் விண்ணிலிருப்பவர்களுமாகிய, நேரிழையார் - பெண்களுக்குள்ளே, என்னை போல சொல் - என்னை ஒப்பாகச் சொல்லும்படி, குலத்தாலும் - சாதியினாலும், நலத்தாலும் - சுகத்தாலும், குறித்தனவே கொணர்தக்க வலத்தாலும் - குறித்த பொருள்களையே கொண்டுவரத்தகுந்த சாமாத்தியத்தாலும், மதியாலும் - புத்தியாலும், வடிவாலும் - உருவத்தாலும், மடத்தாலும் - இளமையாலும், உரியாரை - தகுதியுடையவர்களை, சொல்லீர் - சொல்வீர்களாக. (௧௨௯)

போக்கினீ ரென்னாசி போயதென்னீர் பொறுக்குவிரே
லாக்குவெனோர் நொடிவரையி னழகமைவெ னருள்கூரும்
பாக்கியமுண் டெனின்றன்ற பெண்மைக்கோர் பழுதுண்டோ
மேக்குயரு நெடுமூக்கு மடந்தையர்க்கு மிகையன்றோ.

இ - ள். என் நாசிபோக்கினீர் - எனது மூக்கை யறுத்துவிட்டீர்கள், போயது என் - (அதனால்) போனது என்ன? நீர் பொறுக்குவிரேல் - நீர் என்னை ஏற்றுக்கொள்வீரானால், ஓர் நொடிவரையின் ஆக்குவென் - ஒரு நொடிப் பொழுதில் (அம்மூக்கினை) உண்டாக்கிக் கொள்வேன், அழகு அமைவென் - அழகும் நிரம்பப் பெறுவேன், அருள் கூரும் பாக்கியம் உண்டு எனின் - நீர் கருணைசெய்யும் அதிருஷ்டமுண்டாகுமேயாயின், அதனால் பெண்மைக்கு ஓர் பழுது உண்டோ - மூக்கில்லாமையால் பெண் தன்மைக்கு ஒரு குற்றமுண்டோ? மேக்கு உயரும் நெடுமூக்கும் மடந்தையர்க்கு மிகை அன்றோ - மேலே உயர்ந்திருக்கிற [அதிகமாக உயர்ந்திருக்கிற] நீண்ட மூக்கும் பெண்களுக்குக் குற்றமன்றோ?

குறிப்பு — போயது - இறந்தகால வொன்றன்பால் வினையாலணையும்பெயர், இது அசைச்சாரியை பெறுகையில், போயது என்றுவரும். (௧௩௦)

விண்டாரே யல்லாரோ வேண்டாதார் நான்வேண்டி
னுண்டாய காதலினென் னுயிரென்ப துமதன்றோ
கண்டாரே காதலிக்குங் கட்டழகும் விடமன்றோ
கொண்டாரே கொண்டாடு முருப்பெற்றாற் கொள்ளீரோ.

இ - ள். விண்டாரே அல்லாரோ - மனம் வேறுபட்டவரல்லரோ, வேண்டாதார் - விரும்பப்படாதவர்? [அவனன்றி], உண்டாய காதலின் நான் வேண்டின் - (உமது மனத்தில்) உண்டான அன்போடு நான் (உம்மால்) விரும்பப்பட்டால், என் உயிர் என்பது உமது அன்றோ - எனது உயிர் உமக்கே உரியதாமன்றோ? கண்டாரே காதலிக்கும் கட்டழகும் - பார்த்தவர் யாவரும் இச்சிக்கும்படியான பேரழகும், விடம் அன்றோ - விஷம்போலக் கொடியதல்லவோ? கொண்டாரே கொண்டாடும் உரு பெற்றால் - விவாகஞ் செய்துகொண்டவர் மாத்திரமே கொண்டாடத்தக்க வடிவத்தை (நான்) அடைந்தால், கொள்ளீரோ - அங்கீகரிக்கமாட்டீரோ?

குறிப்பு — மனம் வேறுபட்டால் எத்தகைய அழகினையுடையாரும் விரும்பப்படாதவரே யாவர், மனமிருந்தால் அழகிலிகளாயினும் உரியதாகக் கொள்ளப்படும் என்பது முதலிரண்டடிகளின் கருத்து, இனி, வேண்டாதார் - பகைவர்கள், யான் வேண்டின் - நான் விரும்பினால், விண்டாரே அல்லாரோ - உயிர்நீங்கியவரே யாவ

ரல்லரோ? என்றும், நான் வேண்டின - நான் (பார்த்து) விரும்புவேனேயானால், வேண்டாதார் - (பெண்களுறவே யாகாதென்று வைராக்கியங்கொண்டு) விரும்பாதவர்களும், விண்டாரே அல்லாரோ (அவ்வைராக்கியத்தினின்றும் மனம்) வேறுபட்டவரல்லரோ? என்றும் தன் ஆற்றலைக்காட்டியதாகவுரைத்தல் இங்குள்ள முனிபின் சந்தர்ப்பத்திற்கு ஏற்றதன்றும். (௧௩௧)

சிவனுமலர்த் திசைமுகனுந் திருமாலுந் தெறுகுலிசத்
தவனுமடுத் தொன்றாகி நின்றன்ன வுருவோனே
புவனமனைத் தையுமொருத்தன் பூங்கணையா லுயிர்வாங்கு
மவனுமுனக் கிளையானோ விவனேபோ லருளிலனால்

இ-ள் சிவனும் - சிவபிரானும், மலர் திசைமுகனும் - தாமரைமலரிலிருக்கிற பிரமதேவனும், திருமாலும் - ஸ்ரீ மஹாவிஷ்ணுவும், தெறு குலிசத்தவனும் - (எதிர்த்தவரைக்) கொல்லுகின்ற வச்சிராயுதத்தையுடைய இந்திரனும், அடுத்து - சேர்ந்து, ஒன்று ஆகி நின்றன்ன - ஓருருவாகி நின்றாற்போன்ற, உருவோனே - (ஒப்பற்ற) திருமேனியையுடையாய்! புவனம் அனைத்தையும் - எல்லாவுலகத்தவர்களையும், ஒருத்தன் - ஒப்பற்ற, பூ கணையால் - தனது புஷ்பபாணங்களால், உயிர்வாங்கும் - கொல்லுகின்ற, அவனும் - அந்த மன்மதனும், உனக்கு இளையானோ - உமக்குத் தம்பியோ? இவனேபோல அருள் இலன் - (அம்மன்மதனும்) இவ்விளையபெருமானைப்போல அருளில்லாதவனாக இருக்கின்றான். (௧௩௨)

வேறு

பொன்னுருவப் பொருகழலீர் புழைகாண மூக்கரிவான் பொருளவே
றுண்டோ, வின்னுருவ மிதுகொண்டிங் கிருந்தொழியு நம்மருங்கே யேகா
ளப்பால், பின்னிவனை யயலொருவர் பாராரென் றேயரிந்தீர் பிழைசெய்
தீரோ, வன்னதனை யறிந்தன்றோ வன்பிரட்டி பூண்டதுநா னறிவி லேனோ

இ-ள் பொன் உருவம் பொருகழலீர் - பொன்மயமான அழகிய போருக்குரிய வீரக்கழலை யுடையீர்! இன் உருவம் இது கொண்டு - (கண்ணுக்கு) இனிய இவ்வுருவத்தைக்கொண்டு, இங்கு - இவ்விடத்தில், நம்மருங்கே - நமது பக்கத்திலேயே, இருந்து ஒழியும் - இருந்து விடுவாள், அப்பால் ஏகாள் - அப்புறம் (நம்மைவிட்டுச்) செல்லமாட்டாள், பின் - (அங்கபங்கமான) பிறகு, அயல் ஒருவர் - வேறு புருஷர் எவரும், இவனை பாரார் என்றே அரிந்தீர் - இவளை (ஏறிட்டும்) பார்க்கமாட்டார்களென்றெண்ணி (என் மூக்கை) அறுத்து விட்டீர்கள், (இதுவேயல்லாமல்), மூக்கு புழைகாண அரிவான் - என் மூக்கைத் துவாரம் காணும்படி யறுப்பதற்கு, வேறுபொருள் உண்டோ - வேறு கருத்து உள்ளதோ? இல்லை, (ஆதலினால்), பிழை செய்தீரோ - (நீங்கள்) குற்றஞ்செய்தீர்களோ? இல்லை, அன்னதனை அறிந்து அன்றோ - அந்த உட்கருத்தை நுட்பமாக அறிந்தன்றோ? நான் —, அன்பு இரட்டி பூண்டது - முன்னினும் இருமடங்காக அன்பு கொண்டது, அறிவு இலேனோ - (இல்லாவிட்டால்) என் மூக்கு முதலியவற்றை அறுத்தொழித்த உம்மிடம் முன்னினும் இருமடங்கன்புகொள்ளுதற்கு (நான்) அறிவில்லாதவளோ? (௧௩௩)

வெப்பழியா நெடுவெகுளி வேலரக்க ரீதறிந்து வெகுண்டு நோக்கி,
னப்பழியா லுலகனைத்து நும்பொருட்டா லழிந்தனவா மறத்தை நோக்கி,

லொப்பழியச் செய்கிலா ருயர்குலத்துத் தோன்றினீ ருணர்ந்து நோக்கி, யிப்பழியைத் துடைத்துதவி யினிதிருந்தி ரென்னொடுமென் றிறைஞ்சி நின்றாள்.

இ - ள். வெப்பு அழியா - கொதிப்படங்காத, வெகுளி - பெருங்கோபத்தோடு கூடிய, வேல் அரக்கர் - வேலினையுடைய இராக்கதர்கள், ஈது அறிந்து - இதனையறிந்து, வெகுண்டு நோக்கின் - கோபித்துப்பார்ப்பா ராயின், அப் பழியால் - அந்தப் பொல்லாங்கினால், உலகு அனைத்தும் - உலகங்கள் முழுதும், நும்பொருட்டால் அழிந்தன ஆம் - உங்கள் நிமித்தமாக அழிந்துபோயின வாகும், உயர்குலத்துத் தோன்றினீர் - உயர்ந்த குலத்திற் பிறந்தவர்கள், அறத்தை நோக்கில் - தருமத்தைக் கருதினால், ஒப்பு அழியச் செய்கிலார் - (தம்மனச்) சம்மதம் அழியும்படி (ஒன்றையும்) செய்ய மாட்டார்கள், உணர்ந்து நோக்கி - (நீங்கள்) நன்றாய் ஆலோசித்துப் பார்த்து, உதவி - (என்னைத் துன்புறுத்தும் மன்மதனை வெல்லத்) துணைபுரிந்து, இப் பழியைத் துடைத்து - (எனது மூக்கையறுத்த) இக்குற்றத்தை நீக்கிக்கொண்டு, என்னொடும் இனிது இருந்திர் என்று - என்னோடு கூடி மகிழ்வாக வாழ்ந்திருங்களென்று சொல்லி, இறைஞ்சி நின்றாள் - வணங்கி நின்றாள். (௧௧௪)

நாடறியத் துயரிழைத்த நவையரக்கி நின்னன்னை தன்னை நல்கும்
தாடகையை யுயிர்கவர்ந்த சரமிருந்த தன்றியுநான் றவமேற் கொண்டேன்
தோடகையத் துறுமலர்த்தா ரிகலரக்கர் குலந்தொலைப்பான் றோன்றி நின்றேன்
போடகல்ப் புலவொழுக்கை வல்லரக்கி யென்றிறைவன் புகலும் பின்னும்.

இ - ள். இறைவன் - ஸ்ரீராமபிரான், வல் அரக்கி - வலியராக்ஷஸியே! நாடு அறிய துயர் இழைத்த - நாட்டிலுள்ளோர் அறியும்படி (பலர்க்குந்) துன்பத்தையே செய்துவந்த, நவை அரக்கி - குற்றத்தினையுடைய ராக்ஷஸியாகிய, நின் அன்னை தன்னை நல்கும் தாடகையை - உன்னுடைய தாயாகிய கைகேசியையளித்த தாடகையென்பவளை, உயிர்கவர்ந்த சரம் இருந்தது - உயிர்வாங்கிய அம்பு உள்ளது, அன்றியும் - அல்லாமலும், நான் - யான், தவம் மேற்கொண்டு - தவத்தொழிலை மிகுதியாகக்கொண்டு, தோடு - இதழ்கள், அகைய - ஒடியும்படி, துறும் - (ஒன்றின்மேலொன்று) நெருங்குகின்ற, மலர் தார் - பூமாலைகளையுடைய, இகல் அரக்கர் குலம் - போரினைச்செய்கின்ற இராக்கதர் கூட்டத்தை, தொலைப்பான் - தொலைப்பதற்காக, தோன்றி நின்றேன் - வெளிப்பட்டிருக்கின்றேன், (ஆனதால்), புல ஒழுக்கை அகல போடு என்று - (உனது) கெட்ட நடத்தையைத் தூரமாக வைப்பாய்கவென்று கூறி, பின்னும் புகலும் - பின்னுஞ் சொல்லுவான்.

குறிப்பு — சுகேதுவின் மகளும் சுந்தனது மனைவியுமான தாடகை கணவனையிழந்தபின் மைந்தரான சுபாகுமாரீசரோடு ராக்ஷஸரூபத்தையடைந்து இராவணனது தாயைப்பெற்ற பாட்டனும் மாலியவான் தம்பியுமான சுமாலியைச்சார்கையில் சுபாகுமாரீசர் அவனுக்கு அபிமான புத்திரராய்ப் பிற்காலத்தில் இராவணனுக்கு மாதுலமுறைமைபூண்டனர் என்ற வரலாறுபற்றி, இங்கே, சுபாகுமாரீசரது தாயான தாடகையை இராவணனது தாயான கைகேசியின் தாயென்று அன்பு மிகுதியைக்காட்டும் ஒற்றுமை நயம்படக்கூறியதென்க. "நீங்கினர் சுமாலியை நோக்கு நீங்கியார், ஓங்கிய புதல்வரென் றுறவு கூர்ந்தனர்" "அவனொடுமே யாதலத் தரக்க நாட்செலீஇத், தவனுறு தசமுகன் றனக்கு மாதுலர், சிவனெனப் புடைத்தழித் தலக மெங்கணு

ம, பவனனிற றிரிகுநா பதகி லைமநதாகள" எனற பாலகாண்டச செயயுளகள அறி யததககன தெயவததனமையுளள அமபுகள குறிதத இலககையழிததுப பின யெதானிடம மீணடுவநதடைதல இயலபாதலால 'தாடகையை யுயிாகவாநத தாமி ருநதது' எனப்பட்டது (கசுரு)

தரையளிதத தனிநேமித தயரதனறன புதலவரியாந தாயசொற றாஙகி
விரையளிதத கானபுகுநதேம வேதியரு மாதவரும வேணட நீணடு [டை
கரையளிததற கரியபடைக கடலரககா குலநதொலைததுக கணடாய பண
வரையளிதத குலமாட நகாபுகுவே மிவைதெரிய மனககொ ளெனறான

இ - ள. யாம - நாஙகள, தரை அளிதத - புவியினை யரசாணட, தனிநேமி - ஒபபறற ஆஞஞாசககரததையுடைய, தயரதன தன புதலவா - தசரதச சககரவாத்தியி னுடைய குமாராகள, தாய சொல தாஙகி - அனனையின உததரவை மேறகொணடு, விரை அளிதத கானபுகுநதேம - (பலவகை மலாகளின) வாசனையைததராநினற இககானகததுட பிரவேசிததோம, வேதியரும மாதவரும வேணட - அநதணரும முனிவாகளும (எமமை) வேணடிககொணடதால, நீணடு - பினனுஞ சிலநாளிவ விடததிலிருநது, கரை அளிததறகு அரிய - எலலை அமைததறகு அருமையான [எலலையிலலாத], படை கடல - சேனா சமுததிரததையுடைய, அரககா குலம தொலைதது - ராக்ஷஸா கூட்டததை நாசஞசெயது, (பினனா), வரை அளிதத குலம மாடம - சிததிரந தீட்டியிருககினற சிறநத மாளிகைகளையுடைய, பணடைநகாபு குவேம - பழமையாகிய அயோததியா நகரததுட பிரவேசிபபோம, இவை - இவவி ஷயஙகளை, தெரிய மனம கொள எனறான - விளஙக மனததிற் கொளவாயென்று கூறினான

குறிபபு — தயரதன - தசரதன எனனும ஆரியச சொறசிதைவு, இநதிரன வேணடுகோளாற சமபரனெனனும அசுரனைச செயிதத காலததுப் பததுததிககி னுந தேரினைச செலுததிய தகைமைபறறி இபபெயா வநததெனபா 'நீணடு' எனபதை, 'கரையளிததறகரிய' எனபதொடுங கூட்டலாம. கணடாய — அசை நிலை. வரைதல — எழுததல இனி, வரை — மலையெனக கொணடு மலைபோனற குலமாடமெனனலுமமையும. (கசுசு)

நெறித்தாரை செலலாத நிருதரெதிா நிலலாதே நெடிய தேவா
மறிததாரீண டிவரிருவா மானுடவ ரெனனாது வலலை யாகின
வெறிததாரை வேலரககா விறலியககா முதலினாநீ மிடலோ ரெனறு
குறிததாரை யாவரையுங கொணருதியே லினனெதிரே கோறுமெனறான

இ - ள நெடிய தேவா - பெரிய தேவாகள, நெறி தாரை செலலாத - சனமாா ககவழியில நடவாத, நிருதா எதிா - அரககாகளுககு முனனே, நில்லாது - (எதிா தது) நிறக வலியிலலாமல், மறிததாா - சிறைபபட்டாாகள, ஈணடு - இவவிடததி லிருககிற, இவா இருவா - இவாகளிருவரும, மானுடவா - மனிதாகள, எனனாது - எனறு சொல்லாமல, வலலையாகின - (நீ) வலலவனானால, வெறி தாரை வேல அரககா - கோபாவேசததையும கூாமைபொருநதிய வேலாயுததையு முடைய அரக்கருள்ளும, விறல இயககா முதலினா - வலிமையையுடைய யக்ஷா முதலியோ ரிலும, மிடலோா எனறு நீ குறிததாரை யாவரையும - வலியுடையோ ரெனறு உன

றை குறிக்கப்பட்டவ ரெல்லோரையும் கொணருதியேல் - அழைத்துக்கொண்டு வருவாயானால், நின் எதிரே கோறும் என்றான் - உனது முன்னிலையிலே கொன் றிடுவோம் என்று கூறினான்

குறிப்பு —குபேரன் இவனுக்குத் தமையனும் யக்ஷர்களுக்கு அரசனுமாயிருப் பதால் இயக்கர் முதலினரையும் சேரக்கூறினார் வெறி+தார்+ஐ+ வேலர்கள் எனப்பிரித்து வாசனை பொருந்திய வெற்றிமாலையயணிந்த அழகிய வேலினையு டையாரெனப் பொருள் கோடலுமாம். (௩௬௭)

கொல்லலா மாயங்கள் குறித்தனவே கொள்ளலாங் கொற்ற முற்ற
வெல்லலா மற்றியற்றும் வினையெலாங் கடக்கலா மேலவாய நீங்கிப்
பல்லெலா முற்றத்தோன்றும் பகுவாய ளென்னாது பாரதத்தி யாயி
னெல்லெல்லாஞ் சுரந்தளிக்கு நீர்நாட கேளென்று நிருதி கூறும்.

இ - ள் நிருதி- அவ்வரக்கி, நெல் எலாம் சுரந்து அளிக்கும் - நெல் முதலி ய தானியங்களையெல்லாம் மேல் மேல் மிகுதியாக விளைவிக்கிற, நீர்நாட - நீர்வளம் பொருந்திய (கோசல) நாட்டையுடையாய், கேள் - (யான் சொல்வதைக்) கேட்பா யாக, மேலவாய நீங்கி - மேலவாயானது (மூக்கோடு) கழிந்து, பல் எலாம் உற தோன்றும் - பற்கள் முழுதும் வெளிப்படத் தோன்றுகின்ற, பகுவாயள் என் னாது - பிளவுபட்ட வாயினையுடையாள் (இவள்) என்று சொல்லாமல், பாரதத்தியா யின் - (கருணையோடு) பார்ப்பாயாயின், கொல்லலாம்- (என்னுதவியினால் இராக்கத ரையெல்லாம்) கொன்றுவிடலாம், மாயங்கள் குறித்தனவே கொள்ளலாம் - (அர க்கர்கள்) வஞ்சனையால் கருதினவற்றை (உள்ளபடியே அறிந்து) கொள்ளலாம், கொற்றம் முற்றவெல்லலாம் - (அவர்களது) வெற்றியைப் பூர்த்தியாக வெற்றிகொ ள்ளலாம், மற்று இயற்றும் வினை எலாம் கடக்கலாம் - (அவர்கள்) செய்கின்ற வே றுசெயல்கள் எல்லாவற்றையும் (வென்று) மேற்செல்லலாம், என்று - என்றுசொல் லி, கூறும் - (பின்னும்) கூறுவாள் (௩௬௮)

காம்பறியுந் தோளாளைக் கைவிடா ரெனினுமியான் மிகையோ களவ
ராம்பொறியி லடலரக்க ரவரோடே செருச்செய்வா னமைந்தி ராயிற்
றாம்பொறியில் பலமாயந் தரும்பொறிக ளறிந்தவற்றைத் தடுப்பெ னன்றே
பாம்பறியும் பாம்பின்கா லெனமொழியும் பழமொழியும் பார்த்தி லீரோ

இ - ள் காம்பு அறியும் தோளாளை - மூங்கிலையொத்த தோள்களையுடைய இப்பெண்ணை, [சீதையை], கைவிடார் எனினும்- (நீங்கள்) கைவிட மாட்டீர்களென் றாலும், யான் மிகையோ - நானு மிருத்தலதிகமோ? களவு ஆம் பொறி இல் அடல் அரக்கர் அவரோடு - வஞ்சகத்தையுடையவர்களாகிய அறிவில்லாத வலிய அவ்வி ராக்கதரோடு, செரு செய்வான் அமைந்தீர் ஆயின் - போர் செய்யும் பொருட்டுச் சம்மதித்தீர்களானால், தாம் - அவ்வரக்கர்கள், பொறி இல - இலாஞ்சனையில்லாத [அடையாளமில்லாத], பலமாயம் தரும் - பலமாயங்களை யுண்டாக்குகின்ற, பொறி கள் அறிந்து - அடையாளங்களை [குறிப்புகளை] அறிந்து, அவற்றை தடுப்பென் - அம்மாயச்செயல்களை விலக்குவேன், பாம்பின்கால் - பாம்பின்து காலை, பாம்பு அறி யும் என - பாம்புதானறியும் என்று, மொழியும் - (உலகத்தார்) சொல்லுகி ன்ற, பழமொழியும் பார்த்திலீரோ - பழமையான வார்த்தையையும் கேட்டிலீரோ?

குறிப்பு — அறியும் - உவமவுருபு "பொறிமரக் கலமே செல்வம் பூமகளொத்திர ளக, ளறிவிலாஞ் சனைபெழுத்தோ டைம்பொறி வலியொன் பானபோ" என்ற நிகண்டினுல் பொறி யென்ற சொல்லின் பலபொருள்களை யறிக. கேள்வியும் உண ரப்படுதலிற் காட்சியேயாம்; ஆதலால் 'மொழியும் பார்த்திலீரோ' என்றாள், "நமபி தந்த தீதமே நயந்து காண வோடினா" என்றார். சிந்தாமணியினும். (௧௩௯)

உளங்கோட லுனையிழைத்தா ளுள்ளொருத்தி யென்னுதியே லிருத்த ரோடுங், களங்கோடற் குரியசெருக் கணியக்கா லொருமூவேங் கலந்த காலை, குளங்கோடு மென்றிதுவு முறுகோளே யென்றுணருங் குறிக்கோ ளில்லா, விளங்கோவோ டெனையிருத்தி யிருகோளுஞ் சிறைவைத்தாற் கிளையே னென்றாள்.

இ - ள். உனை உளம் கோடல் இழைத்தாள் ஒருத்தி உள்ள என்னுதியேல் - நும்முள்ளம் (என்கட் பற்றாது) மாறுபடுதலைச் செய்தவளொருத்தி (உமக்கு) உள்ளாள் என்று கூறுவீராயின், இருத்தரோடும் களம் கோடற்கு உரிய செருக்கணியக்கால் - அரக்கரோடு களங்கொள்ளுதற்குரிய போரினைக் கருதியவிடத்து, ஒருமூவேம் கலந்த காலை - (நாம்) மூவரும் கலந்தபோது, குளம் கோடும் என்று - (அவ்வரக்கரது) தலை கொள்ளுவோமென்றும், இதுவும் உறுகோளே என்று - இதுவும் பொருந்தியகொள்கையேயென்றும், உணரும் குறிக்கோள் இல்லா - தெரியும் அறிவில்லாத, இளங்கோவோடு எனை யிருத்தில் - இவ்விளவரசுடனே என்னை யிருக்கும்படி செய்வீராயின், இருகோளும் சிறைவைத்தாற்கு இளையேன் என்றாள் - சந்திரசூரியரென்னும் இரண்டு கிரகங்களையுஞ் சிறைவைத்த இராவணனுக்கு (போரில்) இளைக்கமாட்டேனென்று கூறினாள்.

குறிப்பு — பிராட்டியை மாற்றவளென்பது கருதி 'உளங்கோடலிழைத்தாள்' என்றாள். கீழ்க்கூறிய "ஏற்றவளை வரிசிலையோன்" என்னுங் கவியில் 'மாற்றவளைக் கண்டக்கா லழலாதோ மனம்' என்றதை ஈண்டுநோக்குக. தாடகைவதை விராதவதை முதலியன களப்போரன்மையாகலான் களங்கொள்ளுதற்குரிய போரென்று கூறுமிடத்து அஞ்சுவாரெனக்கருதி அங்ஙனங்கூறினள்போலும். குளம் - நெற்றி, இஃது ஆகுபெயராய்த் தலையை யுணர்த்திற்று. [ஒருமூவேங்கலந்தகாலை] - உடலானமூவராய உளத்தாலொருவராய்க் கலந்தபோது என்றவாறு. உறுகோள் - சமபவம், இவ்வனுமானப் பிரமாணம் அசம்பாவிதமன்று என்றபடி. குறிக்கோள் - மக்களறிவு, "குறிக்கொள் ஞானங்களால்" என்ற திருவழுதிநாடரும், "கொன்றேனை பலவுயிரைக் குறிக்கோளொன் றிலாமையினால்" என்ற திருவாலிநாடரும் பணித்தருளிய வாற்றானுணர்க. "குறித்தது கூறுமைக் கொள்வாரோ டேனை, யுறுப்போ ரனையரால் வேறு" என்பதனால் மக்களறிவாதல் தெளிக. கோக்குமாரில் இளையோரை இளங்கோ என்பது தொன்மைவழக்கு. இராவணனைக் கொல்லுதற்கு நான் ஒருத்தியே அமைவேன், நீவிர் வருந்தவேண்டியதில்லையென்பாள், 'இளையேன்' என்றாள். இளைத்தல் - தளர்தல். (௧௪௦)

பெருங்குலா வுறுங்காக்கே யெகுநாள் வேண்டுமுருப் பிடிப்பே னன்றே லருங்கலா முற்றிருந்தா னென்னினுமீங் கிளையவன்றா னரிந்த நாசி யொருங்கிலா விவளோடு முறைவேனோ வென்பானே விறைவ வொன்று மருங்கிலா தவளோடு மன்றோநீ நெடுங்கால மாழ்ந்த தென்பாய்.

இ - ள். பெருகுலாவு உறு நகாகத்தே எகும் நாள் - பெரிய கொண்டாட்ட மிக்க நகரத்திற்கு (நீங்கள்) மீண்டு செல்லுங்காலத்தில், வேண்டும் உரு பிடிப்பேன் - (என்து மாயா சக்தியால்) வேண்டிய வடிவத்தைக் கொள்ளுவேன், அன்றேல் - அங்ஙனம் அல்லாவிடின், ஈண்டு - இப்பொழுது, இளையவன் - (உனது) தம்பி, அருங்கலாம் உற்றிருந்தான் என்னினும் - நீங்கிய கோபத்தையுடையவனாயிருந்தானாயினும், அரிந்த நாசி ஒருங்கு இலா இவளோடும் உறைவேனோ என்பானேல் - அறுபட்ட மூக்கு முழுவது மில்லாத இவளுடன் நான் கூடி வாழ்வேனோ என்று குறை கூறுவானாயின், இறைவ - தலைவனே! மருங்கு ஒன்றும் இல்லாதவளோடும் அன்றோ நெடுங்காலம் வாழ்ந்தது என்பாய் நீ - இடை சிறிதும் இல்லாதவளோடன்றோ வெகுகாலமாய (நான்) கூடிவாழ்ந்து வருவது என்று நீ (அவனுக்கு மறுசமாதானம்) கூறுவாய்.

குறிப்பு — அருங்கலாம், அருமை - இங்கே, இன்மை மேலது. அருங்கலாமுற்றிருந்தான் என்றது கீழ் 'வீதராகன்' என்றாற்போல வடமொழி நடைபெற்றது. கலாம் - கலஹம் என்னும் வடசொல்லின் திரிபு. இப்பொழுது உன் தம்பி நீ கூறுதலால் கோபம் நீங்கி என்னை மணஞ்செய்தற்கு ஒருசார் உடன்படினும், மூக்கிலாதவளோடு எப்படி மனம் பொறுத்து வாழ்வேனென்று தடை கூறுவானாயின், நான் இடையில்லாதவளோடு வாழ்கின்றேனே, நீ மூக்கில்லாதவளோடு வாழ்தற்கு என்னை? என்று தக்க விடையளித்து அவனை உடன்படுத்துவாய் என்றனள் என்பது 2,3,4 அடிகளின் கருத்து. பிராட்டியாரை இடையில்லாளென்று இகழ்வைத்துக் கவியானவர் அரக்கியின் வாக்கினாலேயே அவரது அழகைச் சிறப்பித்தனர். (கஅக)

என்றவண்மே லிளையவனன் றிலங்கிலைவேல் கடைக்கணியா விவளை
யீண்டுகொன் றுகளை யேமாயி னெடிதலைக்கு மருளென்கொல் கோவே
யென்ன, நன்றதுவே யாமன்றோ போகாளே லாகவென நாதன்கூற, வொ
ன்றுமிவ ரெனக்கிரங்கா ருயிரிழப்பெ னிறக்கிலென வரக்கி யுன்னு

இ - ள். என்றவள்மேல் - என்று கூறிய சூர்ப்பநகையின் மீது, (பிரயோகிக்க), இளையவன் - இளையபெருமாள், இலங்கு இலைவேல் - பிரகாசம்பொருந்திய அரசிலைபோலும் வடிவினையுடைய வேலினை, கடைக்கணியா - கடைக்கண்ணாற் பார்த்து, கோவே - அரசே! ஈண்டு - இப்பொழுது, இவளை கொன்று களையேம் ஆயின் - இவ்வரக்கியைக் கொன்று தொலைக்கா திருப்போமானால், நெடிது அலைக்கும் - மிகவும் வருத்தப்படுத்துவாள், அருள் என் கொல் - (நமது) கட்டளை யாதோ? என்ன - என்று சொல்ல, நாதன் - ஸ்ரீராமபிரான், அதுவே நன்று ஆம் - அப்படிச்செய்வதே நலமாகும், போகாளேல் ஆக என கூற - (இவள்) போகாமலிருப்பாளேயானால் (அச்செயல்) ஆகக்கடவது என்று கூற, (அதுகேட்டு), அரக்கி - சூர்ப்பநகை, இவர் - இவர்கள், எனக்கு - என்மேல், ஒன்றும் இரங்கார் - சிறிதும் இரக்கங்கொள்ளார்கள், இறக்கில் - (இனி) இறப்பேனாகில், உயிர் இழப்பென் என உன்னு - உயிரை யிழந்து விடுவேன் என்று நினைத்து. (கஅஉ)

ஏற்றநெடுங் கொடிமூக்கு மிருகாது முலையிரண்டு மிழந்தும் வாழ
வாற்றுவனே வஞ்சனையா லுமையுள்ள பரிசறிவா னமைந்த தன்றோ
காற்றினிலுங் கனலினிலுங் கடியானைக் கொடியானைக் கரனை யுங்கள்
கூற்றுவனை யிப்பொழுதே கொணர்கின்றே னென்றுசலங் கொண்டுபோனாள்

இ-ள். ஏற்றம் நெடுங்கொடிமூக்கும் - உயர்ச்சியும் கொடிபோலும் நீட்சியுமுள்ள மூக்கினையும், இருகாதும் - காதுகளிரண்டையும், முலையிரண்டும் - தனங்களிரண்டையும், இழந்தும் - இழந்துபோயும், வாழ ஆற்றுவேனே - (நான் உங்களோடு) வாழ்ந்திருக்கச் சகிப்பேனோ? [சகிக்கமாட்டேன்], உம்மை உள்ளபரிசு - உங்களிடத்திலுள்ள குணாதிசயங்களை, அறிவான் - அறியும்பொருட்டு, வஞ்சனையால் அமைந்தது அன்றோ - நான் நீண்டுவந்து கூறியது முழுதும் வஞ்சிக்குந் தன்மையால் அமைந்ததல்லவோ? காற்றினிலும் கடியானை - காற்றைக் காட்டிலும் வேகமுள்ளவனும், கனலினிலும் கொடியானை - நெருப்பைக்காட்டிலுங் கொடுமையுள்ளவனும், கரனை - கரனென்னும் பேருள்ளவனுமாகிய, உங்கள் கூற்றுவனை - உங்களைக்கொல்லும் யமனை, இப்பொழுதே—, கொணர்கின்றேன் என்று - கொண்டுவருகின்றேன் என்றுசொல்லி, சலம் கொண்டுபோனாள் - கோபத்தோடு சென்றாள் (௧௬௯)

ஐந்தாவது : சூர்ப்பநகைப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௫-க்கு விருத்தம் ௧௬௬

ஆறாவது கரன்வதைப் படலம்.

இருந்த மாக்கரன் றாளிணை யின்மிசைச்
சொரிந்த சோரியள் கூந்தல டூமமெனத்
தெரிந்த மூக்கினள் வாயினள் செக்கர்மேல்
விரிந்த மேக மெனவிழுந் தாளரோ

இ-ள். (சலங்கொண்டு சென்ற சூர்ப்பநகை), இருந்த - (ஜநஸ்தானத்தில்) இருந்த, மா கரன் - பெருமையையுடைய கரனென்னும் ராக்ஷஸத்தலைவனது, தாளிணையின் மிசை - இரண்டு பாதங்களின் மேலும், சொரிந்த சோரியள் - சொரிந்த் அரத்தத்தை யுடையவளும், (சொரிந்த) கூந்தலள் - சொரிந்த கூந்தலையுடையவளும், தூமம் என தெரிந்த மூக்கினள் வாயினள் - ஜலதாரைபோலக் காணப்பட்ட மூக்கினையுடையாளும் வாயினையுடையாளுமாகி, செக்கர்மேல் விரிந்த மேகம் என விழுந்தாள் - செவ்வானம் மேலேபடர்ந்துள்ள மேகத்தைப்போல வீழ்ந்தனள்

குறிப்பு—அரக்கியின் செம்பட்ட மயிர்க்கும் அரத்தத்துக்கும் செவ்வானமும், அவள் கரிய மேனிக்கு மேகமும் உவமை சொரிந்த என்பதைக் கூந்தலொடும், தூமமெனத் தெரிந்த என்பதை வாயொடுங் கூட்டுக (௧)

அழுங்கு நாளிதென் றந்தக னாணையாற்
றழங்கு பேரி யெனத்தனித் தேங்குவாண்
முழங்கு மேக முடித்தவெந் தீயினாற்
புழுங்கு நாக மெனப்புரண் டாளரோ.

இ-ள். அழுங்குநாள் இது என்று - (அரக்கர்கள்) அழிகின்ற காலம் இதுதான் என்று, அந்தகன் ஆணையால் - யமனுடைய ஏவலினாலே, தழங்கு பேரி என - ஒலிசெய்யப்படுகின்ற முரசுபோல, (பேரொலிகாட்டி), தனித்து ஏங்குவாள் - ஒன்றியாயிருந்து அழுகின்ற சூர்ப்பநகை, முழங்கு மேகம் முடித்த - பேரொலி செய்கின்ற மேகங்களை (தம்மிடத்தே) கொண்டிருக்கிற, வெந்தீயினால் - கொடிய (இடியாகிய) நெருப்பினால், புழுங்கு நாகம் என - வெந்து வருந்தப்படுகின்ற நாகசர்ப்பத்தைப்போல, புரண்டாள் - புரண்டனள்.

குறிப்பு—சூர்ப்பநகையழல் இராக்கதர் குலம் வேரோடழிதற்குக் காரணமாதலின், அவளழுகைக்கு அந்தகனாணையாற்றழங்குபேரியை உவமைகூறினார். அழுங்குநாளிது என்றமையினால் இதுகாறும் அரக்கர்மாட்டு அந்தகன் ஆணைசெல்லாதேயிருந்ததென்பது தெள்ளிது. இடிவிழுந்ததாக எவ்வாறு துன்புறுமோ அவ்வாறு துன்புற்றாளென்பது ஈற்றிரண்டடியாலும் போதருங்கருத்து. "அருமைமாமணி நாகமழுங்கவோ, குருமுவீழ்ந்தென வுடைந்தார்" என்றார் சிந்தாமணியினும்.

வாக்கிற் கொக்கப் புகைமூந்து வாயினா
னோக்கிக் கூசலர் நுன்னையித் தன்மையை
யாக்கிப் போனவ ரார்கொலென் றானவன்
மூக்கிற் சோரி மூழ்கிக்கொண்ட கண்ணினாள்

இ-ள். அவன் - அரக்கன், வாக்கிற்கு ஒக்க - (தனது) சொல்லையொப்பாக, புகை மூந்து வாயினன் - (கோபாக்கினியாலுண்டாகும்) புகையானது விரைந்து வெளிப்படுகின்ற வாயினையுடையானாகி, நுன்னை நோக்கி (உம்) கூசலர் - உன்னைப் பார்த்தும் அஞ்சாதவர்களாய், இத்தன்மையை ஆக்கிப்போனவர் - இந்நிலைமையினைச் செய்து சென்றவர்கள், ஆர் என்றான் - யாவர்? என்று வினவினான், மூக்கின் சோரி - மூக்கினின்று அரத்தத்தினாலே, மூழ்கிக் கொண்ட கண்ணினாள் - மூழ்கும்படி கொண்ட கண்களையுடைய அச்சூர்ப்பநகை, (மேல்வருமாறு கூறத்தொடங்கினாள்.)

குறிப்பு—வாக்கிற்கு - உருபு மயக்கம், உரத்தசத்தமும் மிக்க சினமுங்கொண்டு கேட்டானென்பார் 'வாக்கிற் கொக்கப் புகைமூந்து வாயினன்' என்றார். நின்னைக்கண்டாலும் இராவணன் தங்கையென்றஞ்சி யெவரும் வணங்குவரேயன்றி, இங்ஙன மியற்ற அஞ்சாத நெஞ்சினருமுளரோ வென்பான் 'நோக்கிக்கூசலர்' என்றான், "என்னையே யிராவணன் றங்கை யென்றபின், னன்னையே யென்றடி வணங்க லன்றியே, யுன்னவே யொண்ணுமோ வொருவரால்" என மேல்வரும் செய்யுளினீண்டு நோக்குக. நோக்கியும், உம்மை - விகாரத்தாற்றொக்கது. இனி, இவளைக் கான நோக்கி யென்னலுமாம். (௫)

இருவர் மானிடர் தாபத ரேந்திய
வரிவில் வாட்கையர் மன்மதன் மேனியர்
தரும நீரர் தயரதன் காதலர்
செருவி னேரு நிருதரைத் தேடுவார்

இ-ள். இருவர் மானிடர் - இரண்டு மனிதர்கள், தாபதர் - தபவேடங்கொண்டவர்கள்; வரிவில் வாள் கையர் - கட்டமைந்த வில் வாள் இவற்றைக்கொண்ட

கையையுடையவர்கள், மன்மதன் மேனியர் - மன்மதனைப்போலும் (அழகிய) மேனியையுடையவர்கள், தருமத்தர் - தருமகுணமுள்ளவர்கள்; தயரதன் காதலர் - தசரதசக்கரவர்த்தியினுடைய குமாரர்கள், செருவில் சேரும் - போரில் எதிர்ப்படுகின்ற, நிருதரைத்தேடுவார் - அரக்கர்களைத் தேடித்திரிபவர்கள்.

குறிப்பு—செரு+வில் என்றும் பிரிக்கலாம். (ச)

ஒன்று நோக்கல ருன்வலி யோங்கற
னின்று நோக்கி நிறுத்து நினைப்பினர்
வென்றி வேற்கை நிருதரை வேரறக்
கொன்று நீக்குது மென்றுணர் கொள்கையர்

இ - ள். ஓங்கு அறம் நின்று - உயர்ந்த தருமமார்க்கத்தில் (தாம்) ஒழுகுபவராய் இருந்துகொண்டு, நோக்கி - (அத்தருமமில்லா விடங்களை) ஆராய்ச்சிசெய்து, நிறுத்தும் நினைப்பினர் - (அவ்வவ்விடங்களில் அசத்தருமத்தை) நிலைபெறச்செய்வான் கொண்ட எண்ண முடையவர்கள், வென்றி வேல் கை நிருதரை - வெற்றிபொருந்திய வேலினையேந்திய கரங்களையுடைய அரக்கர்களை, கொன்று வேர் அற நீக்குதும் என்று உணர் கொள்கையர் - கொலைசெய்து அடியோடு தொலைத்துவிடுவோம் என்பதாகக் கருதிய கோட்பாடுடையவர்கள், (அவர்கள்), உன் வலி ஒன்றும் நோக்கலர் - உனது (வரம் ஆயுதம்படை முதலிய) பலங்களி லொன்றையும் மதியாதவர்களாக இருக்கின்றார்கள். (ரு)

மண்ணி னோக்கரு வானினின் மற்றினி
லெண்ணி நோக்குறின் யாவர்க்கு நோக்கலப்
பெண்ணி னோக்குடை யாளொரு பேதையென்
கண்ணி னோக்கி யுரைப்பருங் காட்சியாள்.

இ - ள். (அவர்களோடு), ஒருபேதை - ஒருபெண், மண்ணில் - புவியிலும், நோக்கரு வானினின் - காண்டற்கரிய விண்ணுலகத்திலும், மற்றினில் - மற்றையுலகங்களிலும், எண்ணி நோக்குறின் - (இவ்விடங்களையாவருளரோவென்று ஆலோசித்துப்பார்க்குமிடத்து' யாவர்க்கும் நோக்கலா - எவருக்குங் காணக்கிட்டாத, பெண்ணின் நோக்கு உடையாள் - பெண்ணினது அழகினைத்து முடையாளாகி, என்கண்ணின் நோக்கி - என் (இரண்டு) கண்களாலும் பார்த்து, உரைப்பரும் காட்சியாள் - புகழ்தற்கருமையான தோற்றமுடையவளாக இருக்கின்றாள்.

குறிப்பு—நோக்கருவான என்றது திருவைகுந்த மாநாமே அடங்குதற்கு இவள் எல்லாவுலகத்தினுஞ் சென்று சஞ்சரித்தவளாதலின் 'எண்ணிநோக்குறின்' என்றாள் பெண்ணினோக்கு என்றதற்குக் கற்புடைமை முதலியன் அடங்கினும் இவளகருத்து அழகையேநோக்குதலபற்றி அழகையேகூறுதல சிறப்புடைத்து ஒரு அவயவத்தை நோக்கியகண் அவ்வவயவத்திலேழுகிலேயே யீடுபட்டுப் பிறிதொன்றையும் நோக்கவமையாதாகலின அழகினைத்துநும நோக்கப்பலகண்களும், அவ்வழகினைவியந்துகூறப் பலநாவும வேண்டுமெனபுாள 'என்கண்ணினோக்கி யுரைப்பருங் காட்சியாள' என்றாள். (சு)

கணடு நோககருங காரிகை யாடனைக
கொணடு போவ லிலஙகையா கோககெனு
விணடு மேலவிழுந தேனை வெகுணடவா
துணட மாககினா மூககெனச சொலலினுள.

இ - ள. கணடு - (அவளைநான) பாாதது, இலஙகையா கோககு - இலஙகைநக ரவாசிகளின அரச(ணுகிய நமமுனனே) னுககுக கொடுதததற பொருட்டு, நோககரு ஙகாரிகையாள தனை - காணுதறகரிய அபபெணமணியை, கொணடு போவல எனு- (எடுததுக) கொணடு போவேன எனறு கூறி, விணடு - (மனம) மாறுபடடு, மேல விழுநதேனை - அபபெண மேறபாயநத எனனை, வெகுணடு அவா - கோபிதது அமமனிதாகள, மூககு -(எனது) மூககினை, துணடம ஆககினா என சொலலினுள - துணடு படசசெயதாாகள எனறு கூறினுள (எ)

கேட்ட னனனுரை கணடிலன கேடினா
தோடட நுஙகிற ெறுளையுறு மூககினைக
காட்டெ னுவெழுந தானெதிா கணடவா
நாடடந தீய வுலகை நடுககுவான.

இ - ள எதிாகணடவா- (தனனை) எதிரிற பாாததவாகளது, நாடடம தீய - கணகள கருகிப்போக, உலகை - உலகததிலுளளவாகளை, நடுககுவான - நடுஙகசசெய யுங கரன, கேடடனன - (சூாபபநகையினது வாாததையைக)கேடடு, உரைகண டிலன- (அரககரிலஙஙனந துனபுறறுபெள ரிதுவரையும) சொறபிறநததைக கேள வியுறறேனிலலை, மூககினை தொளையுறு நுஙகில தோடட - நாசியைத துவாரம பொருநதிய நுஙகைபபோலத தோணடிய, கேடினா - கேடடினையுடைய அமமனி தாகளை, காடடு எனு - காடடுவாயாகவெனறு, எழுநதான—,

குறிபபு—கேடடனன - முறறெசசம கணடிலன கேடடிலன எனனும பொரு ளில வநதது. கேளவியும உணரபபடுதலிற காடசியேயாம "நமபிதநத கீதமே, நயநதுகாண வோடினா" சிநதாமணி தன மனங கலஙகியதால இனனது கூறுவ தெனறு ஒருவாாதைையுங காணுதவனுய எனனறுமமையும. மூககினை காடடெனு எனனும பாடடததிறகு, கேடினா தோடட நுஙகைபபோலத துவாரமுறற மூககினை யுடையாய (நினககுக கேடுசெயதோரைக) காடடெனு எனக கூடடியுரைகக. (அ)

எழுநது நினறுல கேழு மெரிநதுகப
பொழிநத கோபக கனலுகப பொஙகுவான
கழிநது போயினா மானிட ரெனனுஙகா
லழிநத தோவிவ வருமபழி யெனனுமால

இ - ள. எழுநதுநினறு - (அஙஙனஙகூறி) எழுநது நினறுகொணடு, உலகு ஏழும எரிநது உக - ஏழுலகஙகளும வெநது பொடியாகுமபடி, பொழிநத - (தன கணகள) சொரிநத, கோபம கனல - கோபததீயானது, உக - (புலியிற) சிநதுமா று, பொஙகுவான - உளளகொதிபபுறற கரன, மானிடா கழிநதுபோயினா என னும காலை - (எனனுல அம) மனிதாகள இறநதுபோனாாகள எனறு சொறபிறககுங காலததில, இ அருமபழி - இநத அரிய அபகீாததியானது, அழிநததோ - நீஙகி விடடதோ? [இலலை], எனனும -எனறு சொலலுவான. (கூ)

வருக தேரென்னு மாத்திரை மாடுளோர்
இருகை மால்வரை யேழிரண் டேழனார்
ஒருகை யாலுல கேந்து முரத்தினார்
தருக விப்பணி யெம்வயி னென்றனர்

இ-ள். தேர் வருக எனும் மாத்திரை - (எனது) இரதம் வரக்கடவது என்று (கரன்) கூறியவளவில், மாடு உளோர் - (அவன்) பக்கத்திலிருப்பவர்களும், இருகை மால்வரை ஏழிரண்டு ஏழ் அனார் - இரண்டு கைகளையுடைய கரிய பெரிய மலைகள் பதினான்கையொத்தவர்களும், ஒரு கையால் உலகு ஏந்தும் உரத்தினார் - (தமது) ஒரு கையினாலேயே உலகத்தை எடுத்துத்தாங்கும் வலிமையுள்ளவர்களும், எம்வயின் இப்பணி தருக என்றார் - எம்மிடத்தே இப்போர்த்தொழிலை யருளக் கடவையென்று கேட்டவர்களும்

குறிப்பு—இருகைமால்வரை - இல்பொருளுவமை. மால் - இரட்டுற மொழிதல் (௧௦)

சூலம் வாண்மழு தோமரஞ் சக்கரங்
கால பாசங் கதைபொருங் கையினார்
வேலை ஞாலம் வெருவுறு மார்ப்பினார்
ஆல காலந் திரண்டன்ன வாக்கையார்.

இ-ள். சூலம், வாள், மழு, தோமரம், சக்கரம், காலபாசம், கதை—, (என்னும் இவ்வாயுதங்களால்), பொரும் கையினார்-போர்செய்கின்ற கரமுடையவர்களும், வேலை ஞாலம் வெருவு உறும் ஆர்ப்பினார் - கடலுடைசூழ்ந்த இவ்வுலகத்தவர்கள் அச்சத்தை யடைதற்குக் காரணமான சப்தமுடையவர்களும், ஆலகாலம் திரண்டன்ன ஆக்கையார் - ஆலாகலம் என்னும் விஷந் திரண்டாற்போன்ற தேகத்தையுடையவர்களும்

குறிப்பு—வேலை ஞாலம் - உம்மைத்தொகையுமாம். ஆலகாலம் - நிறத்துக்கும் கொடிய செயலுக்கும் உவமை (௧௧)

வெம்பு கோபக் கனலர் விலக்கினார்
நம்பி யெம்மடி மைத்தொழி னன்றென
வும்பர் மேலின் றுருத்தனை போதியோ
இம்பர் மேலினி யாமுளே மோவென்றார்.

இ-ள். நம்பி - அரசே! இன்று உம்பர்மேல் உருத்தனை போதியோ - இந்தப்பொழுது தேவர்கள் மேற்கோபித்துச் செல்கின்றாயோ? இனி - இப்பால், இம்பர்மேல் - இவ்வுலகத்தில், யாம் உளேமோ - நாங்களிருப்பேமோ? என்றார் - என்று கூறியவர்களுமாகிய அரக்கர் பதினால்வரும், எம் அடிமை தொழில் நன்று என - (நும்மைப்போர்க்கு அனுப்பிய யாம் வாளாவிருப்பேமானால்) எமது அடிமைவேலை நன்றாயிருக்கின்றது என்று, வெம்பு - கொதிக்கின்ற, கோபக்கனலர் - கோபத்தீயையுடையவர்களாய், விலக்கினார் - (கரன்போர்க்குச் செல்லாவாறு) தடுத்தார்கள்.

குறிப்பு:—வரையேழிரண் டேழனார் என்று கீழ்க்கூறியபடியால் விலக்கினார் பதினால்வ ராதலறிக். (௧௨)

நனறு சொலலினிா நானிச சிறுாகணமேற
சென று போாசெயிற றேவா சிரிபபாாற
கொனறு சோரி குடிததவா கொளகையை
வெனறு மீளுதி மெலலிய லோடென்றுன

இ - ள (ஈரன), நனறு சொலலினிா - (நீஙகள) நலலதையே சொனனீா கள, நான இசசிறுாகள மேல சென று போாசெயின - யானிநதச சிறிய மனிதாகள பேரில சென று போாசெயதால, தேவா சிரிபபா - தேவாகள நகைப்பாாகள, கொ னறு - (அவாகளைக) கொனறு, சோரிகுடிதது - (அவாகளது) அரததததைபபருகி, அவா கொளகையை வெனறு - அவாகள (அரககரைக கொனறு தருமததை நிலை நிறுததுவான கொணட) கோடபாடடைச செயிதது, மெலலியலோடு மீளுதி என்றுள - (அவா தமமாடடுளள) பெணமணி யுடனே திருமபி வமமின என று கூறினன.

குறிபபு — மெலலியல - பணபுதொகைப புறததுப்பிறநத அனமொழித தொகை (௧௫)

எனன லோடும விருமபி யிறைஞசினா
சொனன நாணிலி யநதகன றுாதென
வனனள பிறபடா வாரென வாயினா
மனனன காதலா வைகிட நணணினா.

இ - ள எனனலோடும - அவவாறு கான கூறியவளவில, விருமபி இறைஞ சினா - (அபபதிலுலவரும) விருபபஙகொணடு (அவனை) வணஙகி, சொனன நா ணிலி - (கீழக) கூறிய நாணம இலலாதவளாகிய, அநதகன தூது என அவ்வனள- யமனது தூதெனபதறகொதத சூாபபநகைககு, பினபடாவாா என ஆயினா - பின செலகினறவரெனனுமபடி யானவாகளாய, மனனன காதலா - சககரவாாததி திரு ககுமாராகள, வைகு இடம நணணினா-தஙகியிருககினற இடததைச சோநதாாகள.

குறிபபு —நாணம - நாண என நினறது, "நாணில ளைய னுயய லலளு மல்லள" என று கீழககூறினராகலின, 'சொனன நாணிலி' என்றுா இனி, சொன னம நாண இலி எனககொணடு, பொறருவியிலலாதவ ளெனனலுமாம, "தனனு டைய தலைகையாந தடவரைததோட சூாபபநகை தனனைக கொணட,மினனனைய சு டரிலைவேல விததுருசின கனறனைவெஙகளததுவீழததான" எனனும உத்தரகாண டசசெயயுளை நோககிச சூாபபகைவிதவையானமையறிக. அரககா குலமுழுதும அழிதறகு இசசூாபபநகையே காரணமாக இருததல பறறி 'அநதகன றுாதெனவன னள' என்றுா அவவீரேழரககரு மிறபபரெனனுந துணிபுபறறிக கொலைககளஙகொடுபோகப படடாா னையார் 'அனனள பிறபடாவா ரெனவாயினா' என்றுா. 'காதலா' எனனுஞ சொலலாறறலாற சககரவாாததிககுப பிரியமிலலாத புததிரனுமு ளனெனபது பெறறும அபபுததிரன பரதாழவானே "மனனே யாவான வருமப பர தன றனையும மகனென, றனனேன் முனிவா வவனும மாகா னுரிமைக கென்றுன" எனனும அயோத்தியாகாணடச செயயுளாலும, "பொனபெறறு ரெழிலவேதப் புதல வனையுந தம்பியையும பூவைபோலு, மினபறறு நுணமருஙகுல மெல்லியலென

மருகியையும் வனத்திற் போக்கி, நின்பற்றா நின்மகன்மேற் பழிவிளைத்திட் டென்னையுநீள் வானிற் போக்க, என்பெற்றாய் கைகேசி யிருநிலத்தி னினிதாக விருக்கின்றாயே" என்று திருக்கோழியர்கோ னருளிச்செய்த திருப்பாசுரத் தானுமறிக. மன்+கன்காதலர் என்றும் பிரிக்கலாம். (௧௪)

தமிலப் போர்வல் லரக்கர்க்குச் சுட்டின
ளமலத் தொல்பெய ராயிரத் தாழியா
னிமலப் பாத நினைவி னிருந்தவக்
கமலக் கண்ணனைக் கையினிற் காட்டினள்.

இ-ள் (அச்சூர்ப்பநகை), அமலம் - மலம் நீங்கியிருக்குந் தன்மையையும், தொல்பெயர் ஆயிரத்து - பழமையாகிய ஸஹஸ்ர திருநாமங்களையுமுடைய, ஆழியான் - பாற்கடலிலிருப்பானாகிய ஸ்ரீமந்நாராயணனது, நிமலம் பாதம் நினைவின் இருந்த - குற்றமற்ற திருவடித்தியானத்திலிருந்த, அ - அந்த, கமலம் கண்ணனை - அம்புஜநேத்திரனாகிய ஸ்ரீராமபிரானை, தமிலம் போர்வல் அரக்கர்க்கு - பேரொலி பொருந்திய போரில் வல்லவராகிய அவ்வரக்கருக்கு, கையினில் சுட்டினள் காட்டி - தன் கையாற் சுட்டிக்காட்டினள்.

குறிப்பு — தமிலப் போர்வல்லரக்கர் என்பது - வாயில் வல்லவரேயொழியப் போரில்வல்லவரல்லரென்பதுங் குறிக்குமாறு நிற்றலறிக. ஸ்ரீராமபிரான் தனது பழமையான நாமங்களைத் தியானித்துக்கொண்டு தானே ஸ்ரீமந்நாராயணனென்பதை யுணர்கிலா திருந்தானென்பது தோன்றத் 'தொல்பெயர்' என்றார். இனி, சூரியகுலத்தோன்றலாகிய இட்சுவாகு காலந்தொட்டு அயோத்தியிலிருக்கும் விமானத்தரங்கநாதன் என்பது தோன்றத் 'தொல்' என்றாரென்னலுமாம். "பிணியரங்க வினையகலப் பெருங்காலந் தவம்பேணி, மணியரங்க நெடுமுடியாய் மலரயனை வழிபட்டுப், பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண, வணியரங்கந் தந்தானை யறியாதா ரறியாதார்" எனக் கீழ்க்கூறிய குலமுறை கிளத்துபடலச் செய்யுளால் இட்சுவாகு மகாராஜன் பிரமதேவனைநோக்கிப் பலகாலம் அரும் பெருந் தவம்புரிந்து அத்தேவனருளால் அவ்வெம்பிரானைத் தான் பெற்றுத் திருவயோத்திக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து பிரதிஷ்டைசெய்து ஆராதனம் பண்ணிவந்ததும் அன்றுதொட்டுச் சூரியவம்சத்தரசர் அவ்வெம்பிரானை வழிபட்டுவருதலும் அறிக. அயோத்தியிலிருக்கும் அரங்கநாதனைக் கானகத்திருக்கும் இராகவன் வணங்கினனென்பதை 'நினைவினிருந்த' என்பது மிகவும் வற்புறுத்துகின்றது. இருந்தவக் என்பதை, இரு+தவம் எனப் பிரித்துப் பெரியதவத்தினையுடைய (கமலக்கண்ணன்) என்று பொருள்கோடலுமாம். (௧௫)

ஏற்று வாம்பிடித் தேந்துது மென்குநர்
பற்று வார்நெடும் பாசத்தி னென்குநர்
முற்று வாம்நிறை சொன்முறை யாலெனச்
சுற்றி னாவரைச் சூழ்ந்தனன் தோற்றத்தார்.

இ-ள் பிடித்து எற்றுவாம் - (இம்மனிதரைப்) பிடித்து (மேலே செல்ல) எறிவோம்; (பிடித்து) ஏந்துதும் - (கீழேவிழாதபடி) பிடித்து ஏந்துவோம், என்கு

நா - என்பவர்களும், நெடும்பாசத்தின் பற்றுவாம - பெரியகயிற்றால் வளைத்துப்பிடிப்போம், என்றுநா - என்பவர்களும், இறைசொல் முறையால் - (எமது) அரசன் சொல்லிய ஒழுங்குப்படி, முற்றுவாம என்று - முடிப்போம் என்று கூறி, வரைசூழ்ந்தன்ன தோற்றத்தார் - மலைகள் சூழ்ந்தாற்போன்ற தோற்றமுடையவர்களாய், சுற்றினா - (ஸ்ரீராமபிரானது பன்னசாலையைச்) சூழ்ந்துகொண்டார்கள்.

குறிப்பு:—பிடித்து - இடைநிலைத்தீவகம். (௧௬)

ஏத்து வாய்மை யிராம னிளவலைக்
காத்தி தையலை யென்றுதன் கற்பகம்
பூத்த தன்ன பொருவி றடக்கையா
லாத்த நாணி னருவரை வாங்கினான்.

இ - ள். ஏத்துவாய்மை இராமன் - (யாவராலும்) துதிக்கப்படுகின்ற சத்தியத்தையுடைய ஸ்ரீராமபிரான், இளவலை - இளையபெருமாளை, (நோக்கி), தையலை காத்தி என்று - ஜானகியைக் காத்துக்கொண்டிருவென்று கட்டளையிட்டு, கற்பகம் பூத்தது அன்ன பொருவு இல் தன் தட கையால் - கற்பகம் பூத்தது போன்ற ஒப்பில்லாத தனது பெருமைபொருந்திய கரத்தினாலே, ஆத்த நாணின் அருவரை - கட்டப்பட்ட நாணினைக்கொண்ட அருமையான வில்லை, வாங்கினான் - (இளையபெருமாள் எடுத்துக்கொடுக்கப்) பெற்றுக்கொண்டான்.

குறிப்பு —ஆத்த என்பதைநோக்கி ஆத்த என நின்றது. கற்பகம் பூத்தன்ன கை - பயனுவமம், கற்பகம்போற் கொடுக்குங்கையெனக. வரை என்றகு - மூங்கிலாலாகிய வில்லென்றாவது மலைபோலுந் தோற்றமுடைய வில்லென்றாவது பொருள் கொள்க (௧௭)

வாங்கி வாளொடு வாளிபெய் புட்டிலுந்
தாங்கித் தாமரைக் கண்ணனச் சாலையை
நீங்கி யிவ்வழி நோமி னடாவென
வீங்கு தோளன் மலைதலை மேயினான்.

இ - ள். தாமரை கண்ணன் - தாமரை மலர்போலுந் திருநேத்திரங்களையுடைய ஸ்ரீராமபிரான், (அங்ஙனங் கைக்கொண்ட வில்லை), வாங்கி - வளைத்து, வாளொடு வாளிபெய் புட்டிலும் தாங்கி - ஒளியோடு கூடிய அம்புகள் வைத்திருக்கிற தூணீரத்தையுஞ் சுமந்துகொண்டு, அச்சாலையை நீங்கி - அந்தப் பன்னசாலையை விட்டு அப்பாற் சென்று, (அவ்வரக்கர்களை நோக்கி), இவ்வழி நோமின் அடா என்று - இவ்விடத்திற்கு வாருங்களடாவென்று கூறி, வீங்கு தோளன் - பூரித்த புயங்களையுடையவனாகி, மலைதலைமேயினான் - போர் செய்யத் தொடங்கினான்.

குறிப்பு —இதுகாறுந் தக்கபோர் நேரிடாமையாற் போர் புரிந்து அரத்தந்தோயாது நிறமாறாத அம்புகளென்பார் 'வாளொடுவாளி' என்றார். இனி, வாளை இடையிலும், அம்புப்புட்டிலை முதுகிலுந்தாங்கி என்று பொருள்கோடலுமாம். தாமரைக்கண்ணன் (அரக்கரைநோக்கி) அடா அச்சாலையை (விட்டு) நீங்கி இவ்வழிநோமின் என்று கூறினானென்னலுமமையும். (௧௮)

மழுவும் வாளீ வயங்கொளி முச்சிகைக்
கழுவுங் காலவெந் தீயனன காட்சியா
ரெழுவி னீட்டக் கையெழு நான்கையுந்
தழுவும் வாளிக ளாற்றலஞ் சாத்தினான்.

இ - ள். (ஸ்ரீராமபிரான்), காலம்வெந்தீ அனனகாட்சியார் - ஊழிகாலத்துக் கொடியநெருப்பையொத்த தோற்றமுடைய அவ்வரக்கர்களது, மழுவும் - பரசாயுதங்களையும், வாளீ - கணைகளையும், வயங்கு ஒளிமுச்சிகை கழுவும் - ஒளிசெய்கின்ற பிரகாசம் பொருந்திய மூன்று நுனிகளையுடைய சூலப்படைகளையும், எழுவின் நீள் தடக்கை எழுநான்கையும் - ஸ்தம்பங்களைப்போலும் நீண்டிருக்கிற பெரிய கரங்கள் இருபத்தெட்டையும், தழுவும் வாளிகளால் - (அவற்றோடு) தாக்கிச்சென்ற கணைகளால், தலம் சாத்தினான் - (துணித்து) நிலத்தில் வீழ்த்தினான். (கக)

மரங்கள் போனெடு வாளொடு தோள்விழ
வுரங்க ளாண்டார்ந் தாரக்கு ரோன்விடுஞ்
சரங்க ளோடின தைக்க வவர்கடஞ்
சிரங்க ளோடின தீயவ ளோடினாள்.

இ - ள். மரங்கள்போல - மரங்கள் (வெட்டுப்பட்டு வீழ்வது) போல, நெடு வாளொடு தோள்விழ - பெரியவாளாயுதங்களும் புயங்களும் (அறுபட்டு) வீழ, (அதனால்), உரங்களான அடர்ந்தார்க்கு - (தமது) மார்பின் வலியாலே போர்செய்ய நெருங்கிவந்த அவ்வரக்கரு(யிர்கோடலு)க்காக, உரவோன் விடும் சரங்கள் - ஸ்ரீராமபிரான் விடுகின்ற அம்புகள், ஓடின தைக்க - சென்று பாய்ந்ததால், அவர்கள் தம் சிரங்கள் ஓடின - அவர்களுடைய தலைகள் (அறுபட்டுப்) போயின, தீயவள் ஓடினாள் - கொடியவளாகிய சூர்ப்பணகை ஓட்டங்கொண்டாள்.

குறிப்பு—உரம் - ஊக்கம், மார்பு, வலி, என்ப பலபொருள் குறிக்கும் ஒரு சொல். உரவோன் - வலிமையையுடையோன், "ஒருதாமாகிய வுரவோர்" என்னும் புறப்பாட்டினும் இப்பொருட்டாதல் காண்க. (உ0)

ஒளிறு வேற்கரற் குற்ற துணர்த்தினாள்
குளிறு கோபவெங் கோளரி மாவடக்
களிறெ லாம்படக் கைத்தலை மேலுறப்
பிளிறி யோடும் பிடியனன பெற்றியாள்.

இ - ள். கோபம் வெங்கோள் குளிறு அரிமா அட - கோபத்தோடு வெவ்விய கொலைத்தொழிலினையுடைய கர்ச்சிக்கின்ற (ஒரு) சிங்கம் கொன்றதினால், களிறு எலாம்பட - யானைகளெல்லாம் இறந்து வீழ, (அதுகண்டு), கைத்தலைமேல் உற பிளிறி ஓடும் பிடி அன்ன பெற்றியாள் - கையைத் தலைமேல் வைத்துக்கொண்டு வீறிட்டு ஓடுகின்ற பெண்யானையை யொத்த நிலைமையடைந்த சூர்ப்பணகை, உற்றது - நடந்த செய்கையை, ஒளிறுவேல் கரற்கு உணர்த்தினாள் - பிரகாசிக்கின்ற வேற்படையையேந்திய கரத்தினையுடைய கரனுக்குத் தெரிவித்தாள்.

குறிப்பு—கரன் - இரட்டுறு மொழிதல. கோளரிமா - ஸ்ரீராமபிரானுக்கும், களிறு - அரக்கருக்கும், பிடி - சூர்ப்பநகைக்கும், துதிக்கை - சூர்ப்பநகையின் கைக்கும் உவமை (உக)

அஙக ரகக ரவிநதழிந தாரெனப
பொஙக ரததம விழிவழி போநதுக
வெஙக ரபபெய ரோனவெகுண டான்விடைச
சஙக ரறகுந தடுபபருந தனமையான.

இ - ள் விடை சஙகரறகும தடுபபருநதனமையான - ருஷபவாகனததையு டைய சிவபிரானாலும தடுததறகு அருமையான நிலைமையை யுடையானாகிய, வெங கரபபெயரோன -கொடிய கரனெனனும விஷப்பெயரினையுடையோன, அஙகு (உம) (மானிடனோடு போர்புரிநத) அவவிடததும, அரககா - இராககதாகள, அவிநது அழிநதாா (ஆ) என - வருநதி யிறநது போனாாகளா? எனறு, பொஙகு அரததம விழி வழி போநது உக வெகுணடான - கொதிததுக கிளாகினற அரததம கணகள வழியாகவநது சிநதுமபடி கோபிததான.

குறிபபு—அஙகும, உமமை - தொகுததல அழிநதாா எனபுழி வினாவுருபு தொகுததல இனி, முதலடிககு அஙகு அரககாகள அவிநது அழிநது போனாாகள எனறு சூாபபநகை சொல்ல எனறு பொருள கோடலாமாயினும கீழககவியில உறறது உணாததினாள எனறு கூறிவிடடபடியால அபபொருள சிறபபுடைததாகாமை யுணாக. சஙகரறகும, உமமை - உயர்வு சிறப்பு. ஆலகாலமெனனும விஷமானது சிவபிரானால தடுககபபட்டுமே உணணபபடடு மிருககிறது நிறததிலும செயலிலும ஆலகாலவிஷததை ஒப்பவனாயிருபபதால அவவிஷததினது கரன எனனும பெயரைத தனபெயராகக கொணடிருககிற இவவரககன எனனும விஷம அசசிவபிரானாலும தடுககப்படமாடடாது எனபது ஈறறிரணடடியின கருதது. இதனால அககரன ஆலகால விஷததினும கொடியான எனபது விளககமாயிறறு (உஉ)

அழைமெயன றேரெனக காககுவென் போாபடை
யுழைய ரோடி யொருகொடி யோஙகனமேன
மழைமென மாமுர செறறுதிா வலலெனறுன
முழையின வாளரி யஞ்ச முழஙகுவான.

இ - ள் முழையினவாள அரி அஞசமுழஙகுவான - குகையினிடததிலாகிய ஒளிய சிஙகஙகள அஞசுமபடி பேரொலிசெயகினற கரன, (அரககனொருவனை நோககி), வன தோ அழை - (நீ) எனது இரததததை அழைபபாய, வென போாபடை எனககு ஆககு - வெறறிபொருநதிய போாசசேனையை எனககு ஆககுவாய, உழையா - உழையாகாள! ஒருகொடி - ஒருகணததுககுள, ஓடி - விரைநது சென்று, ஓங கலமேல - யானைகளினமேல, மழை என - மேககாசசனையெனனும, மாமுரசு - பெரியமுரசினை, எறறுதி - அடிதது முழககுஙகள, வல் எனறான - சீககிரம எனறான.

குறிப்பு:—வென - வெறறி, "வினைசெயன செயதியும் வெனவேல வேநதன" என மணிமேகலையிற காதிறபாலைவருவதுரைதத காதையினும, "ஒனறுதா

முனைகெடவிறந்த, வெனவே லாடவன் விறன்மிகுத தன்று" எனவும், "விணணி ன,வகைததாய வளனெறு வைகின்று வெனவே, னகைததாரான ருனவிருமபு நாடு" எனவும புறப்பொருள்வெண்பாமாலையினும பயினறுவநதமைகாணக உழை யா - ஏவல் செயவோா, உழைததலையுடையாா (உக)

பேரி யோசை பிறததலும பெடபுறு
மாரி மேகம வரமபில வநதெனத
தேரின சேனை திரணடன தேவாதம
மூரு நாக ருலகு முலைநதவே

இ - ள பேரி ஓசை பிறததலும - முரசினசப்தம பிறநத வளவில, வரமபு இல - அளவறறவையாகிய, மாரிமேகம - மழையைப பொழிகினற மேகஙகள, வந தென - வநதாறபோல, பெடபு உறு - (போரில) விருபபமுளள, தேரின சேனை - தோப்படைகள, திரணடன - ஒனறு சேர்நது வநதன, (அததோகளவநத அதிரசசி யினல), தேவாதம ஊரும - தேவலோகமும, நாகா உலகும - பாதாள லோகமும, உலைநத - நடுஙகின.

குறிபபு —மாரிமேகம் - தேரொலிககு உவமை தேவருரும நாகருலகும உலை நத வெனவே இடையுறற இவவுலகு முலைநத தெனபது உபலககணததாற பெறறும (உ௪)

போாபபெ ருமபணை பொமமென முழககமா
நீாதத ரஙக நெடுநதடந தோளகளா
வாாதெ ழுநத திறுதியி னாகலிக
காாகக ருஙகடல காலகிளாந தெனனவே.

இ - ள (அப்படைதான), பெருமபோா பணை - பெரியயுதத முரசததொனி யானது, பொம என முழககம் ஆ - பொமமெனகிற சபதமாகவும, நெடுநதடம தோ ளகள - நீணட பெரிய புயஙகள, நீாததரஙகம ஆ - அலைகளாகவும, (கொணடு), இறு தியின - யுகாநத காலததில, ஆாகலி காா கருஙகடல - நிறைநத ஒலியினையுடைய கரிய கடல, கால கிளாநதெனன - காறறைபபோல எழுநத தெனனுமபடி, ஆாதது எழுநதது - ஒலிததெழுநதது

குறிபபு —பொமமெனல - அனுகரணவோசை காாககரும் - ஒருபொருடபன மொழி. போாமுரசுககு கடலினது பொமமென முழககமும, அரககா புயஙகளு ககு அலைகளும, அரககருக்கு கடலும உவமை "காலகிளாநதனனவேழுமேல" எனனுந திருமுருகாற்றுப்படை யுரையினும் 'காலகிளாநதனன' இபபொருட்டாதல காணக. இனி, கால - உபசருககமுமாம (உ௫)

காரி துனறி விசுமபு கரந்தென
நீடி யெஙகு நிமிாநத நெடுஙகொடி
யோடு மெஙகள பசியென றுவநதெழுந
தாடு கினற வலகையி னாடவே.

இ - ள். எஙகளபசி - எஙகளுடைய பசியானது, ஒடும எனறு - இவிடுமெனறு, உவநது - மகிழநது, எழுநது ஆடுகினற - எழுநது கூததாடுகினற, அலகையின - பசாசுகளைபபோல, காடுதுனறி - மிகுதியாக நெருஙகி, விசுமபு கரநதென - ஆகாயததை மறைததாறபோல, நீடி - விளஙகி, எஙகும நிமிாநத நெடுஙகொடி - எவவிடததும உயாநதோஙகிய பெரியதுவசஙகள, ஆட - அசையவும (உசு)

தறியி னீஙகிய தாழதடக கைததுணைக
குறிகொ ளாமத வேழக குழுவனா
செறியும வாளொடு வாளிடை தேயததுகும
பொறியிற கானெஙகும வெஙகனல பொஙகவே.

இ - ள தறியின நீஙகிய - கடடுததறியினினறும விடுபடட, குறிகொளா - (எவரையும) மதியாத, தாழ தடம கைததுணை - தொஙகுகினற பெரியகரஙகளிரண டினையுடைய, மதம வேழம குழு அனா - மதம பொருநதிய யானைககூடடததை யொதத அரககாகள, செறியும - (தஙகளுடைய கரஙகளிற) பொருநதியிருககினற, வாளொடு - வாளாயுதததுடன, வாள - (மறறொரு) வாளாயுதததை, இடை - (அவ றறின) நடுவில, தேயதது - தேயபபதால, உகும - சிநதுகினற, பொறியில - தீப பொறியினால, கான எஙகும - அடவியெலலாம, வெஙகனல - கொடிய நெருபபு, பொஙக - மிகுதியாகவும

குறிபபு —கைததுணைவேழம - இலபொருளுவமை (உஎ)

முருடி ரணடு முழஙகுறத தாககொலி
யுருடி ரணடெழுந தேரொலி யுடபுக
வருடி ரணட வருககனறன மேலவழங
கிருடி ரணடுவந தீணடிய தெனனவே

இ - ள முருடு இரணடு முழஙகு உற தாககு ஒலி - முருடு எனறு கூறபபடு கினற இரணடு வாசசியஙகளும பேரொலியுணடாகுமபடி தாககபபடுகினற சபதமா னது, உருள திரணடு எழும தோ ஒலியுளபுக - சககரஙகள ஒனறு சோநது புறப படுகினற தோகளினது (போ) ஒலியினுளளே ஐககியமாயப போகவும, அருள திர ணட அருககன தனமேல வழஙகு - கருணை மிகுநத சூரியனமேல (போசெயவத றகு) விடுதத, இருள திரணடு வநது ஈணடியது எனன - இருளானது ஒனறு சோ நது வநது நெருஙகியது போலவும

குறிபபு —முருடு - பததல், மததளமுமாம பிங்கலமுனிவர் முருடு எனப தை வாசசியபபொதுப பெயருளடககி னாராகலின முருடிரணடு எனறது - இரட டையாயுளள மததளமெனறேனும, இரடடையாயுளள மறறைததோற கருவிகளெ னறேனும பொருள கூறுக உருளவது - உருள, கருவிபபொருள விகுதி புணா நது கெடடது இவவரககாகள சூரியனைககணட இருளபோலத தொலைவாாகள எனபது தோனற ஸ்ரீராமபிரானுககுச சூரியனையும அரககாககு இருளையும உவ மை கூறினா (உஅ)

தலையின மாசுணந தாஙகிய தாரணி
நிலைநி லாது முதுகை நெளிபபுற

வுலைவி லேழுல கத்தினு மோங்கிய
மலையெ லாமொரு மாடுதொக் கென்னவே.

இ-ள். மாசுணம் தலையின் தாங்கிய தாரணி - ஆதிசேஷன் தன் தலையினிடத்தே சுமந்துகொண்டிருக்கின்ற இப்பூமியானது, நிலைநிலாது - தன் நிலையில் நிற்கமுடியாமல், (மிகுதியான பாரத்தினால்), முதுகை நெளிப்பு உற - முதுகினை நெளிக்கும்படி, உலைவு இல் ஏழ் உலகத்தினும் - அழிவில்லாத ஏழுலகங்களிலும், ஓங்கிய - உயர்ந்து விளங்கிய, மலை எலாம் - எல்லாமலைகளும், ஒருமாடு தொக்க என்ன - ஒரு பக்கத்தில்வந்து சேர்ந்தனவென்று கூறவும். (உக)

வேறு

வல்லியக் குழாங்களோ மழையி னீட்டமோ
வொல்லிபத் தொகுதியோ வோங்கு மோங்கலோ
வல்லமற் றரிகளி னனிக மேயெனப்
பல்பதி னாயிரம் படைக்கை வீரரே.

இ-ள். வல்லியம் குழாங்களோ - புலிகளின் கூட்டமோ? மழையின் ஈட்டமோ - மேகங்களின் கூட்டமோ? ஒல் இபம் தொகுதியோ - பொருந்திய யானைகளின் கூட்டமோ? ஓங்கும் ஓங்கலோ - உயர்ந்த மலைகளோ? அல்ல - (அவையெல்லாம்) அல்ல, அரிகளின் அனிகமே என - சிங்கங்களின் கூட்டமேதான் என்று கூறவும், படை கை பல்பதினாயிரம் வீரர் - ஆயுதங்களையேந்திய கைகளையுடைய அநேக வீரர்கள் சேர்ந்தார்கள். (௩௰)

ஆளிகள் பூண்டன வரிகள் பூண்டன
மீளிகள் பூண்டன வேங்கை பூண்டன
ஞாளிகள் பூண்டன நரிகள் பூண்டன
கூளிகள் பூண்டன குதிரை பூண்டன.

ஏற்றின மாத்தன வேன மாத்தன
காற்றின மாத்தன கழுதை யாத்தன
தோற்றின மாத்திரத் துலகு சூழ்வரும்
பாற்றின மாத்தன பணில மாத்தன.

தேரினந் துவன்றின சிறுகட் செம்முகக்
காரினந் துவன்றின காலிற் காலவரு
தாரினங் குழுமின தடையில் கூற்றனன்
பேரினங் கடலெனப் பெயருங் காலையே.

இ-ள். தடையில் கூற்று அன்னபோர் இனம் - தடுக்கப்படாத யமனையொத்த (முற்கூறிய பல்பதினாயிரம் வீரராகிய) காலாட்படையின் கூட்டம், கடல் என பெயரும் காலை - கடல் புரண்டு வந்தாற்போல வந்தகாலத்தில், ஆளிகள் பூண்டன - யாளிகள் பூட்டப்பட்டனவும், அரிகள் பூண்டன - சிங்கங்கள் பூட்டப்பட்டனவும், மீளிகள் பூண்டன - யானை எருமைக்கடா முதலிய வலிய பெரிய மிருகங்கள் பூட்

டப்பட்டனவும், வேங்கை பூண்டன - வேங்கைப்புலிகள் பூட்டப்பட்டனவும், ஞாளிகள் பூண்டன - நாய்கள் பூட்டப்பட்டனவும், நரிகள் பூண்டன - நரிகள் பூட்டப்பட்டனவும், கூளிகள் பூண்டன - பூதங்கள் பூட்டப்பட்டனவும், குதிரை பூண்டன - குதிரைகள் பூட்டப்பட்டனவும், ஏறு இனம் ஆர்த்தன - ருஷபங்கள் கட்டப்பட்டனவும், ஏனம் ஆர்த்தன - பன்றிகள் கட்டப்பட்டனவும், காற்று இனம் ஆர்த்தன - பசாசுகள் கட்டப்பட்டனவும், கழுதை ஆர்த்தன - கழுதைகள் கட்டப்பட்டனவும், தோற்றின மாத்திரத்து உலகு சூழ்வரும் பாறு இனம் ஆர்த்தன - கண்ணுக்கெட்டின தூரவரையில் (மேலே பறந்துபோய்) உலகத்தைச்சுற்றிக்கொண்டு வரும் பருந்துக்கூட்டங்கள் போர்புரியார் கிறகப்பெற்றனவும், பணிலம் ஆர்த்தன - வெற்றிச்சங்கங்கள் ஒலிசெய்யாநிறகப் பெற்றனவுமாகிய, தேர் இனம் துவன்றின - தேர்ப்படைகள் நெருங்கின, சிறுகண் செம்முகம் கார் இனம் நெருங்கின - சிறிய கண்களும் புகர் முகத்தையுமுடைய யானைப்படைகள் கிட்டின, காலின் கால் வரு தார் இனம் குழுமின - காற்றைப்போலும் (வேகமுள்ள நடையினையுடைய) கால்களைப்பெற்றிருக்கின்ற குதிரைப்படைகள் கூடின

கருத்து — இரதகஜதுரக பதாதிகளாகிய நால்வகைப்படையும் ஒன்று சேர்ந்தன வென்பதாம். (௬௧-௬௨-௬௩)

மழுக்களு மயிற்களும் வயிர வாட்களு
மெழுக்களுந் தோமரத் தொகையு மீட்டியு
முழுக்களு முசுண்டியுந் தண்டு முத்தலைக்
கழுக்களு முலக்கையுங் கால பாசமும்.

இ - ள். மழுக்களும்—, அயிற்களும்—, வயிரம் வாட்களும் - வலிபொருந்திய வாள்களும், எழுக்களும்—, தோமரம் தொகையும் - தோமரக்கூட்டமும், ஈட்டியும் - ஈட்டிகளும், முழுக்க அளும் - முற்றிலும் அளுக்களும், முசுண்டியும்—, தண்டும் - தண்டாயுதங்களும், முத்தலை கழுக்களும் - மூன்றுதலைகளையுடைய கழுப்படைகளும், உலக்கையும் - உலக்கைகளும், கால பாசமும் - காலபாசங்களும்

குறிப்பு —மழு—பரசு, "பரசு கணிச்சி நவியமு மழுவே". அயில் - வேல், "உடம்பிடி யெஃகம் அயில்வேல் சத்தி, விட்டே றரண ஞாங்கரும் வேலே" எழு - கணையம் [வளைதடி], "எழுவும் பரிகமுங் கணைய மென்ப" தோமரம்—பெருஞ்சவளம், "குந்தந் தோமரம் பீலி பெருஞ்சவளம்," இனி, கைவேலுமாம். "கைவேல் விகற்பங் கப்பணந் தோமரம்" அள—பற்றிரும்பு, "கற்பொறி யளவலி பற்றிரும் பாகும்" முழுக்க, அகரம் - தொகுத்தல். முசுண்டி - சம்மட்டி வடிவினதோராயுதம் இதற்குத் தானை, படை, முற்கரம் என்று பெயர், தானை படையே முற்கர முசுண்டி," இனி, சிறுவாளுமாம், "முசுண்டி சிறுவாள்" முத்தலைக்கழு - சூலப்படை, "காள நலவசி சூலங் கழுமுண, மூவிலை வேலே முத்தலைக் கழுவெனல்" உலக்கை - இருப்புலக்கை காலபாசம் - நமனுயுதம் ஈவ்குக்குறித்த சூத்திரங்கள் பிங்கலநிகண்டிற் கண்டவை

குந்தமுங் குலிசமுங் கோலும் பாலமு
மந்தமில் சாபமுஞ் சரமு மாழியும்
வெந்தொழில் வலயமும் விளங்கு சங்கனு
பந்தமுங் கப்பணப் படையும் பாசமும்.

இ - ள. குநதமும - சிறு சவளஙகளும, குலிசமும - வச்சிராயுதஙகளும, கோலும - வளைநதிருககினற, பாலமும - (ஓாவகை) மழுககளும, அநதம இல - முடிவிலலாத [அளவறற], சாபமும - விறகளும, சரமும - அமபுகளும, ஆழியும - சககராயுதஙகளும, வெநதொழில வலையமும - கொடிநதொழிலை யுடைய வலலையங களும, விளஙகு - ஒளி செயகினற, சஙகு - சஙகுகளும, அனுபநதமும - அசசஙகு களின இனஙகளும, கபபணபபடையும - கைவேறபடைகளும, பாசமும—,

குறிபபு —குநதம - சிறிய ஈடடி கோலுதல - வளைதல, முககதளுதல இனி, கோல - தடிகளுமாம. பாலம - மழுவாயுததகில ஒருவகை. வலலையம வலையமென விகாரம். பாசம - ஓா வகையாயுதம, இனி, கயிறுமாம. (கரு)

ஆதியி னருககனு மனலு மஞசுறுஞ
சோதிய சோரியுந தூவுந துனனிய
வேதிகண மிடைநதன விமைய வாககெலாம
வேதனை கொடுததன வாகை வேயநதன

இ - ள ஆதியின அருககனும - முதனமையான சூரியனும அனலும - அக கினியும, அஞசு உறும சோதிய - அசசததையடைதறகுக காரணமான பிரகாசமு ளளவைகளும, சோதியும தூவும துனனிய - அரததமும மாமிசமும விளஙகக கொணடுளளனவும, இமையவாககு எலாம வேதனைகொடுததன - தேவாகளுககெல லாம துனபததைத தநதனவும, வாகை வேயநதன - வெறறிமாலையை அணியபபெ றறனவுமாகிய, எதிகள மிடைநதன - ஆயுதஙகளும நெருஙகின

குறிபபு —விளககாயச சிறபபினைககொடுதது, கணணுய எலலாப பொருளுந தெரியபபணணி, கருவாய எலலாபபொருளையு முணடாககி, சானறாய அவரவா செ யத நலவினை தீவினை தவறாதுணமையாய நினறு, தாமரையாயக கணடோாக குவ கையும விருபபமுமுணடாககி, வழியாயக கதியிறசெலுததி, அருளும பொருளு மாய இஙககணதாதது உலகைககாககு முதனமைபறறி 'ஆதியினருககன' எனறா "அருளும பொருளுமாகித திருவுலகளிககும பரிதிவானவனே" எனறா கல்லாட ரும. எதி - ஆயுதஙகளின பொதுபபெயா (கசு)

ஆயிர மாயிரங களிறறி னாறறலா
மாயிரு ஞாலததை விழுஙகும வாயினா
தீயெரி விழியினா நிருதா சேனையி
னாயகா பதின்மரோ டடுதத நாலவரே.

இ - ள நிருதா சேனையின நாயகா - (அஙஙனம புறபபடட) ராக்ஷஸ சேனை ககுத தலைவாகள, ஆயிரம ஆயிரம களிறறின ஆறறலா - (ஒவவொருவரும தனித தனியே) ஆயிரம ஆயிரம யானைகளின பலமுளளவாகளும, மா இருஞாலததை விழுஙகும வாயினா - பெரிதான இபபூமியை விழுஙகததககு வாயினையுடையவாக ளும, தீ எரிவிழியினா - கொடிய நெருபபைபொதத கணகளையுடையவாகளுமாகிய, பதினமமாாடு அடுததநாலவா - பதினனகுபேரகள (கஎ)

ஆறிரெணு டாயிர மமைநத வாயிரங
கூறின வொருபடை குறிதத வபபடை

யேறின வேழின திரட்டியெனபரா
லூறின சேனையின றொகுதி யுனனுவாா

இ - ள. ஊறின சேனையின தொகுதி உனனுவாா - இவவாறு திரணடுவநத சேனையினது அளவை யெணணுவோாகள, கூறு இனம ஒருபடை - (ரதகஜதுரக பதாதி எனறு) கூறபபடுகிற கூட்டமாகிய ஒருபடையானது, ஆறிஞெடு ஆயிரம அமைநத ஆயிரம- ஆறுயிரமாக அமைநத ஆயிரம [ஆறுயிரததை ஆயிரததால பெருக கிய தொகை அறுபதுலடசம], குறிதத - அஙஙனம அறுபது லடசம எனறு மதிப பிடட, அ படை - அமமாதிரியான படைகள, ஏழினது இரட்டி ஏறின எனபா - பதினனகுககு மேறபட்டன எனபாாகள.

குறிபபு,—படைததலைவா பதினலவருள ஒவவொருவரும அறுபதுலடசம சேனைககுத தலைவாகள அபபதினனகுபோகளுடைய சேனையின ஒட்டுமொத தம எட்டுககோடியே நாறபது லடசம அறுபது லட்சமெனறு ஒரேகணககாகக கூறுது ஆறிஞெடாயிரமமைநத வாயிரஙகூறின வொருபடையெனறு கூறியதால, ரதஜகதுரகபதாதியெனனும வகுபபில ஒவவோரினமும ஆயிரமாயிரம [பதது லட சம] எனறுகொணடு நானகினததுக்கும நாறபது லடசமெனறும அநநாணகினதில டதாதிககுக கூடுகிற கணககுபபடி, இரணடு குதிரை நானகு காலாளகள வீதம அதி கபபடுததி ஆயிரமாயிரததுககூடுகிற தொகை அறுபது லடசம எனறும ஆக ஒரு படைககு ஒருகோடி சேனைவீதம பதினனகு படைககுப பதினனகு கோடியெ னறு கூறலும அமையும. இபபடிப பொருளகொளளுமபொருட்டே ஆறிஞெடு இனவொருபடையெனறு கூறினரெனக. தோ-1 யானை-1 குதிரை-3 காலாள-5 ஆகபபததுககொணடது பதாதியாம கடிகை மூனறிறகொன்ற பெருமைககேற பச சேனைததொகையை அதிகபபடுததிக கூறுதலே சிறப்புடைத்து (கஅ)

உரததின ருருமென வுரறும வாயினா
கரததெறி படையினா கமலத தோனறரும
வரததினா மலையென மழைது யினறெழு
சிரததினா தருககினா செருககுஞ் சிநதையாா.

இ - ள உரததினா - (மிகுநத) பலமுளளவாகள, உரும் என உரறும வாயினா - இடியைப்போலப பேரொலிசெயகினற வாயினையுடையவாகள, கரதது எறி படையினா - கரஙகளினிடததே எறியததகக ஆயுதஙகளையுடையவாகள, கமலத தோன தரும வரததினர் - பிரமதேவன கொடுதத வரததினையுடையவாகள, மழை மலை என துயினறு எழுசிரததினா - மேகஙகள மலைகளெனறு நினைததுத தூஙகி யெழுகினற தலைகளையுடையவாகள, தருககினா - அகஙகாரமுடையவாகள, செருக கும சிநதையாா - (தமமினுஞ் சிறநதோரிலலையெனறு நினைததுக) களிககினற மன ததினையுடையவாகள. (கக)

விணணள விடமிமிாந துயாநத மேனியா
கணணள விடவரு மாாபா காலினன்
மணணள விடுநெடு வலததா வானவ
ரெணணள விடவருஞ செருவென றேறினா.

இ - ள். விண் அளவு இட நிமிர்ந்து உயர்ந்த மேனியர் - ஆகாயத்தினை அளவிடுதற்காக உயர்ந்து வளர்ந்த தேகத்தினையுடையவர்கள், கண் அளவு இட அருமரபர் - (பிறருடைய) கண்களால் (இவ்வளவு தூரமுடையது என்று) அளவிடுதற்கு அருமையான (அகன்ற) மார்பினையுடையவர்கள், காலினால் மண் அளவு இடு நெடு வலத்தர் - (தமது) கால்களினாலே (அகலம் நீளம் இவ்வளவினதென்று இப்) பூதலத்தை அளவிடுகின்ற மிகுந்த பலத்தினையுடையவர்கள், வானவர் எண் அளவு இட வரும் செரு என்று எறினர் - தேவர்களுடைய மதிப்பினை அளவிடுதற்காக வருகின்ற போரென்று கருதி (வீராவேசம் மிகுதியாக) எற்பெற்றவர்கள். (௬௦)

இந்திரன் முதலினோ ரெறிந்த மாப்படை
சிந்தின தெறித்துகச் செறிந்த தோளின
ரந்தக னடிதொழு தடங்கு மாணையார்
வெந்தழ லுருவுகொண் டனைய மேனியார்.

இ - ள். இந்திரன் முதலினோர் எறிந்த மா படை - இந்திராதி தேவர்கள் ஏவிய (வச்சிராயுத முதலிய) பெருமை பொருந்திய ஆயுதங்கள், தெறித்து - (தம்மேற்பட்டு) முறிபட்டு, சிந்தின உக - சிதறி (நிலத்திற்) பொடியாய் விழும்படி, செறிந்த தோளினர் - வன்மை பொருந்திய புயங்களையுடையவர்கள், அந்தகன் அடிதொழுது அடங்கும் ஆணையார் - யமன் (தமது) பாதங்களைத் துதிசெய்து (தன் தொழிலினை நடத்தற்கு வலியில்லாதவனாய்) அடங்கியிருத்தற்குக் காரணமான வெற்றியையுடையவர்கள், வெந்தழல் உருவு கொண்டனைய மேனியார் - கொடிய நெருப்பே (இராக்கத) வடிவங்கொண்டாற் போன்ற தேகத்தையுடையவர்கள்

குறிப்பு — செறிந்த தோளினர் என்றற்கு மிகுந்த தோள்களையுடையவர்கள் என்னலுமாம். (௬௧)

சூலமும் பாசமுந் தொடர்ந்த செம்மயிர்ச்
சாலமுந் தறுகணு மெயிறுந் தாங்கின
ராலமும் வெளிதென நிறத்த ராற்றலாற்
காலனுங் காலனென் றயிர்க்குங் காட்சியார்.

இ - ள். சூலமும் - சூலத்தையும், பாசமும் - பாசமென்னும் ஆயுதத்தையும், தொடர்ந்த செம்மயிர் சாலமும் - கட்டப்பட்ட சிவந்த மயிர்த் திரளையும், தறுகணும் - குரூரத்தன்மையையும், எயிறும் - வக்கிரதந்தங்களையும், தாங்கினர் - தாங்கிக்கொண்டிருப்பவர்கள், ஆலமும் வெளிது எனும் நிறத்தர் - விஷமும் வெண்மையதென்று சொல்லுதற்குக் காரணமான கரியநிறத்தையுடையவர்கள், ஆற்றலால் - (தமது) வலிமையினாலே, காலனும் - யமனும், காலன் என்று - (தன்னைக் கொல்லும்) யமன் (இவரானார்) என்று, அயிர்க்கும் - ஐயங்கொள்ளும் (படிவாய்ந்த), காட்சியார் - தோற்றத்தையுடையவர்கள்.

குறிப்பு — காலனுங் காலனென்று என்றற்கு இவ்வரக்கர்கட்கு ஆயுள்நாள் முடியினும் அச்சத்தால் இன்னும் நெடுங்காலமிருக்கத்தக்கவனென்று எனக் கூறலுமாம். (௬௨)

கழலினர் தாரினர் கவச மார்பினர்
நிழலுறு பூணினர் நெறித்த நெற்றிய
ரழலுறு குஞ்சிய ரமரை வேட்டுவந்
தெழலுறு மனத்தின ரொருமை யெய்தினார்.

இ-ள். கழலினர் - வீரகண்டையைத் தரித்தவர்கள், தாரினர் - பூமாலையணிந்தவர்கள்; கவசம் மார்பினர் - கவசத்தையணிந்த மார்பினையுடையவர்கள்; நிழல் உறு பூணினர் - பிரகாசம்பொருந்திய ஆபரணங்களையுடையவர்கள்; நெறித்தநெற்றியர் - நெறிப்புற்ற நெற்றியையுடையவர்கள், அழல் உறு குஞ்சியர் - நெருப்பைப்போன்ற தலைமயிருள்ளவர்கள், அமரைவேட்டு வந்து எழல் உறு மனத்தினர் - போரினை விரும்பி யெழுச்சியுற்ற மனத்தினையுடையவர்களுமாய், ஒருமை எய்தினார் - ஒரேதன்மை(யாகப் படைக்கல தார முதலியன) அடைந்தவர்கள்.

குறிப்பு — அழலுறு, உறு - உவமவாசகம், "செப்புற்றகொங்கை" என்று மேற்கூறியதுகாண்க. வந்து - உரையசை. கவசம் - இருப்புச்சட்டை. (௪௩)

மருப்பிரு மதக்களிற் றமரர் மன்னனும்
விருப்புறு முகத்தெதிர் விழிக்கில் வெந்நிடு
முருப்பொரு வுலைவுறு முலக மூன்றினுஞ்
செருப்பெறு தினவுறு சிகரத் தோளினார்.

இ-ள். மருப்பு - (நான்கு) கொம்புகளையும், இருமதம் - அருந்த மதத்தினையுமுடைய, களிறு அமரர் மன்னனும் - (ஐராவதமென்னும்) யானையை நடத்துகின்ற தேவராஜனாகிய இந்திரனும், விருப்பு உறு முகத்து எதிர் விழிக்கில் - (அவர்களுடைய) சந்தோஷம் பொருந்தாத முகத்துக்கெதிரே பார்த்தால், வெந் இடும் - புறங்காட்டுவான், உரு பொரு உலைவு உறும் - (அவர்களுடைய) உடற்சுமையைத் தாங்கமாட்டாமல் துன்புறுகின்ற, உலகம் மூன்றினும் - திரிலோகங்களினும், செரு பெறு - போரினைப்பெறாமல், தினவு உறு - சொறியுறுகின்ற, சிகரம் தோளினார் - மலைபோன்ற தோளினையுடையவர்கள். (௪௪)

குஞ்சரங் குதிரைபேய் குரங்கு கோளரி
வெஞ்சினக் கரடிநாய் வேங்கை யாளியென்
றஞ்சுறக் கனல்புரை முகத்த ராகலி
னஞ்சுதொக் கெனப்புரை நயனத் தார்களும்.

இ-ள். யானை யென்றும், குதிரை யென்றும், பேயென்றும், குரங்கென்றும், கொலைத்தொழிலையுடைய சிங்கமென்றும், வெவ்விய கோபத்தையுடைய கரடியென்றும், நாயென்றும், வேங்கைப்புலி யென்றும், யாளி யென்றும், அஞ்சும்படி நெருப்புப்போன்ற முகத்தினையுடையவர்கள் கடலிற் பிறந்த விஷமானது சேர்ந்தாற்போல வெளிப்படுகின்ற கண்களையுடையவர்கள்.

குறிப்பு.—அரக்கர்கள் முகங்கள் குஞ்சரங்குதிரை முதலியன போல விருந்தன வென்பதாம். உம்மை - இசை நிறை. (௪௫)

எணகைய ரெழுகைய ரேழு மெட்டுமொய்க
கணகனல சொரிதரு முகததர் காலினா
வணகையில வளைததுயிா வாரி வாயிலிட்
டுணகையி னுவகைய ருலபபி லாாகளும.

இ - ள எணகையா - எட்டுகைகளையுடையவாகள், எழுகையா் - ஏழுகைக ளை யுடையவாகள், ஏழும எட்டும ஆய கண கனல் சொரிதரு முகததா காலினா - ஏழும எட்டும ஆகிககணகள நெருப்பைபபொழிகின்ற முகஙகளையுங காலகளையுமு டையவாகள, உயிா - பிராணிகளை, வணகையில வளைதது வாரி - அழகியகையால தடுதது எடுதது, வாயில இட்டு உணகையில - வாயில வைதது உணணுதலில், உவகையா - மகிழசசியையுடையவாகள, உலபபிலாாகள - கேடிலலாதவாகள

குறிபபு — எட்டுகைகளும எழுகைகளும ஏழு முகஙகளும எட்டு முகஙகளும ஏழுகால்களும எட்டுககாலகளும் உடையவரெனக. இனி, எணகையா - மதிபபு டையவாகளாய, எழுகையா - புறப்படுகிறவாகள, ஏழு எட்டும ஆய - ஏழுலகஙக ளும எட்டுமெபடியாய, கணகள கனலைசசொரிகினற முகததையுடையவாகள, காலி னா - காறறின தனமையுடையவாகள எனறும பொருள கோடலாம (சகூ)

இயககரிற பறிததன வவுண ரிட்டன
மயககுறுத தமரரை வலியில வாஙகின
துயககிலகந தாபபரைத தூரநது வாரின
நயபபுறு சிததரை நலிநது வவவின

இ - ள (அததகையா) இயககரில பறிததன - இயககாகளிடததில பறிதத வைகளும, அவுணா இட்டன - (அவாகளுககு) அசுராகள கொடுததவைகளும, அம ரரை மயககு உறுதது வலியில வாஙகின - (அவாகள) தேவாகளை மயககி வலிமை யால பெறறுககொணட வைகளும, துயககில கநதாபபரை - தளாவிலலாத கநத ருவாகளை, தூரநது வாரின - பின தொடாநது எடுததுககொணடவைகளும, நயப புறு சிததரை - மதிபபினைப்பெற்ற சிததாகளை, நலிநது வவவின - துனபுறுததிக் கொளளை கொணடவைகளுமாகிய.

குறிப்பு — மயககுறுததல - மாயைப்போா புரிநது மயஙகச செயதல. (சஎ)

கொடிதழை கவிகைவான றொஙகல குஞசரம
படியுறு பதாகைமீ விதானம பலவகை
யிடையிலா தெஙகணு மிசைய மீமிசை
மிடைதலி னுலகெலாம வெயிலி ழுபபவே.

இ - ள கொடி - கொடிகளும, தழை - பீலிககுஞசக குடைகளும, கவிகை - (வெண) குடைகளும, வான் தொஙகல் - உயாநத பீலிககுஞசக குடைகளும, குஞ சரமபடியுறுபதாகை - யானைகளினமேல அமையபபடுகிற பெருஙகொடிகளும, பலவகை மீவிதானம - பலவிதமான உயாநத மேற்கட்டிகளும, இடை இலாது எங கணும இசைய - சநதிலலாமல் எவவிடததும பொருநதியிருககுமபடி, மீமிசை மிடைதலின - ஆகாயததில நெருஙகுவதால, உலகு எலாம வெயில இழபப - உலக முழுதும சூரியப்பிரகாசம இலலாமற போகுமபடி. (சஅ)

எழுவரோ டெழுவரு லகமே ழொடேழ்
தழுவிய வென்றியர் தலைவர் தானையர்
மழுவினர் வாளினர் வயங்கு சூலத்தர்
உழுவையோ டரியென வுடற்றுஞ் சீற்றத்தர்.

இ - ள். உலகம் ஏழொடு ஏழ் தழுவிய வென்றியர் - பதினான்கு உலகங்களிலுங் கலந்த வெற்றியையுடையவர்கள், தலைவர் ஆம் எழுவரோடு எழுவர் - படைத்தலைவர்களாகிய பதினான்குபேர்களும், தானையர் - (அப்பதினால்வருடைய) சேனைவீரர்களாகிய, மழுவினர் - பரசாயுதங்களையுடையவர்களும், வாளினர் - வாளாயுதமுடையவர்களும், வயங்கு சூலத்தர் - பிரகாசிக்கின்ற சூலாயுதத்தையுடையவர்களும், உழுவையோடு அரி என உடற்றும் சீற்றத்தர் - புலிபோலவும் சிங்கம்போலவும் சினப்படுத்துகின்ற கோபத்தினையுடையவர்களும்

குறிப்பு —39-முதல் 48-ஈறுயுள்ள கவிகளெல்லாம் படைத்தலைவர் பதினால்வருடைய சிறப்பைக் குறிப்பனவாம். இச்செய்யுளிற் பின்னிரண்டடிகளும் 50-வது கவியின் முன்னிரண்டடிகளும் அத்தகைய படைத்தலைவரது சேனைவீரர்களின் சிறப்பைக் குறிக்கின்றன. (௪௯)

வில்லினர் வாளின ரிதழின் மீதிடும்
பல்லினர் மேருவைப் பறிக்கு மாற்றலர்
புல்லினர் திசைதொறும் புரவித் தேரினர்
சொல்லின முடிக்குறுந் துணிவி னெஞ்சினர்

இ - ள். வில்லினர் - வில்லையுடையவர்களும், வாளினர் - வாளினையுடையவர்களும், இதழின் மீது இடும் பல்லினர் - உதட்டின்மேல் வைக்கும் பற்களையுடையவர்களும், மேருவைப் பறிக்கும் ஆற்றலர் - மகாமேருமலையைப் பறித்தெடுக்கும் வலிமையையுடையவர்களும், புல்லினர் - வந்து சூழ்ந்துகொண்டார்கள், திசை தொறும் புரவித் தேரினர் - திக்குகள் தோறும் (காணப்படுகின்ற) குதிரைகள் பூட்டிய தேர்களையுடையவர்களும், சொல்லின முடிக்க உறும் துணிவின் நெஞ்சினர் - சொன்னவற்றைச் செய்து முடிக்கும்படி கொள்ளுகின்ற துணிவு பொருந்திய மனத்தினையுடையவர்களுமாகிய. (௫௰)

தூடணன் றிரிசிரத் தோன்ற லாதியர்
கோடணை முரசினங் குளிறு சேனைய
ராடவ ருயிர்கவ ரலங்கல் வேலினர்
பாடவ நிலையினர் பலருஞ் சுற்றினர்

இ - ள். தூடணன் திரிசிரத் தோன்றல் ஆதியர் - தூஷணன் பெருமையிற் சிறந்த திரிசிரன் முதலானவர்களும், ஆடவர் உயிர் கவர் அலங்கல் வேலினர் - ஆண்மையுள்ளவர்களுடைய உயிரைக் கொள்ளையிடுகின்ற (வாகை) மாலையினைச் சூடிய வேலாயுதத்தை யுடையவர்களும், பாடவம் நிலையினர் - களிக்கின்ற தன்மையுள்ளவர்களுமாகிய, கோடணை முரசு இனம் குளிறு சேனையர் - பேரொலிபொருந்திய முரசு வகைகளை முழக்குகின்ற சேனைகளும், பலரும் - (மற்றும்) பலரும், சுற்றினர் - சூழ்ந்தார்கள்

குறிப்பு—தூஷணன - கரனுடைய தமபி. திரிசிரா - மூன்றுதலைகளையுடையவன, 136-வது செயயுளின உரையை ஈண்டுநோககுக கோடனை - கோடிகளை முரசு, நிசாளம, துடுமை, திமிலை யெனனும வீர முழவுகளைககூறுவார 'முரசினம' என்றார். (௫௧)

ஆனறமை யெறிபடை யழுவத தாரகலி
வானறொடா மேருவை வளைதத தாமென
வூனறின தேரின னுயாநத தோளினன
றோனறினன யாவருந துணுகக மெயதவே,

இ - ள. ஆனறமை எறிபடை - மிகுதியாகிய கைவிடு படைகளையும், அழுவம - முரசுகளையுமுடைய, ஆரகலி - கடலானது, வானதொடா மேருவை வளைததது என - ஆகாயததையளாவிய பொனமலையை வளைததுககொணடதுபோல, ஊனறின தேரினன - (சேனைககடலின நடுவே) நிலைநிறுததிய தேரினையுடையவனாகிய, உயாநத தோளினன-பருததபுயஙகளையுடைய கரன, யாவரும துணுககமெயத- எலலோரும அசசததையடையுமபடி, தோனறினன - காணபபடடான

குறிபபு—ஆரகலி அரககருககும, மேரு கரனது பொறறேருககும உவமை. தோனறினன யாவரும துணுககமெயத எனறமையால அவவரககா எலலோருககும அரசனாகிய கரன எனறும (௫௨)

அசுமபுறு மதகரி புரவி யாடகத
தசுமபுறு சயநதன மரககா தாடர
விசுமபுறு தூளியால வெணமை மேயின
பசுமபரி பகலவன பைமபொற றோமோ

இ - ள உறுமதகரி - மிகுநத மதததினையுடைய யானைகளும, புரவி - குதிரைகளும, ஆடகம தசுமபு உறு சயநதனம (உசசியிற) பொறகுடஙகள பொருநதிய இரதஙகளும, அரககா - இராககதாகளும், அசுமபு தாளதர-வழுககு நிலஙகளில அடிபெயாததுவைகக, (அதனால), விசுமபு உறுதூளியால - ஆகாயததையடைநத புழுதியினால, பகலவன - சூரியனது, பசுமபரிபைமபொனதோ - பசசைககுதிரைகளும பசுமபொனனாறசெயத இரதமும, வெணமை மேயின - வெணணிறததையடைநதன (௫௩)

வனநதுகள படடன மலையின வானுயா
கனநதுகள படடன கடலக டூநதன
வினநதொகு தூளியா லிடைசபப தெனனினி
சினநதொகு நெடுஙகடற் சேனை செலலவே

இ - ள சினம தொகு நெடுஙகடல சேனைசெலல - கோபஞசோநத பெரிய கடல்போனற காலாடபடை நடநதுசெல்வதால, வனம துகளபடடன - காடுகள புழுதியடைநதன, மலையின வான உயாகனம துகளபடடன - மலையினமேல ஆகாயததினும ஏறிய மேகஙகள புழுதியடைந்தன, கடல்கள தூாநதன - சமுததிரஙகள மூடிப்போயவிட்டன, (எனறால்), இனம் தொகுதூளியால - (மறைததோ

கரிபரி முதலிய) கூட்டங்களாற் சேர்ந்த புழுதியினால், இனி இசைப்பது என - இனிச்சொல்வது யாது?

குறிப்பு.—சேனை - நால்வகைப் படைக்கும் பொதுப்பெயராயினும் ஈண்டுச் சினைமிகுதிபற்றிக் காலாட்படை மாத்திரையாய் நின்றது. (௫௪)

நிலமிசை விசும்பிடை நெருக்க லானெடு
மலைமிசை மலையினம் வருவ போன்மலைத்
தலைமிசைத் தலைமிசைத் தாவிச் சென்றனர்
கொலைமிசை நஞ்செனக் கொதிக்கு நெஞ்சினார்.

இ - ள். நிலமிசை - புவியின்மீதும், விசும்பிடை - ஆகாயத்தினும், நெருக்கலான் - நெருக்குஞ்செயலால், நெடு மலைமிசை மலை இனம் வருவபோல - பெரிய மலைகளின்மீது (வேறு) மலைக்கூட்டங்கள் (ஏறி) வருவனபோல, கொதிக்கும் - கொதிக்கின்ற, நஞ்சு என - விஷத்தைப்போல, கொலைமிசை நெஞ்சினார் - கொலைத்தொழின்மேல் மனமுள்ள அரக்கர்கள், மலை - யானைகளினது, தலைமிசை தலைமிசை - தலைகடோறும், தாவிச்சென்றனர் - தாண்டிச்சென்றார்கள்.

குறிப்பு.—மலை - உவமவாகுபெயராய் யானையை யுணர்த்திற்று. இனி, மலைத்தலை - மலையினது சிகரமுமாம். ஏற்றடியை ஆறனுருபுக்காகக்கொண்டு கொலைத்தொழில்மேல் விஷம்போலக் கொதிக்கு மனமுடையார் என்று பொருள் கூறுங்கால், கொலைத்தொழில் நீங்கிய நல்லவர் எனப் பொருள்பயத்தலின் அது சிறப்பன்மையாதல் காண்க. நிலை நிற்றலின் புவியப் பெயர்பெற்றது. (௫௫)

வேறு.

வந்தது சேனை வெள்ளம் வள்ளியோன் மருங்கு மாய
பந்தமா வினையை மாளப் பற்றறு பெற்றி யோர்க்கு
முந்துறு நிலைய தாகி யுடனுறைந் துயிர்க டம்மை
யந்தகற் களிக்கு நோய்போ லரக்கிமுன் னாக வம்மா.

இ - ள். மாயபந்தம் மா வினையை - மாயம்பொருந்திய கட்டாகிய பெரிய வினையையும், மாள பற்று - முற்றும் நீங்கும்படியாகப் பற்றினையும், அறு - அற்ற, பெற்றியோர்க்கும் - தன்மையையுடைய பெரியோர்களுக்கும், உந்துறு நிலையது ஆகி - நீக்கற்கரிய நிலையினையுடையதாகி, உடன் உறைந்து - (உடலின் கண் உயிர்) உடனே வசித்து, உயிர்கள் தம்மை - உயிர்களை, அந்தகற்கு அளிக்கும் நோய் போல - யமனுக்குக்கொடுக்கின்ற நோயைப்போல, அரக்கி முன் ஆக - சூர்ப்பநகை முன்னேவர, சேனை வெள்ளம் - சேனைக்கடலானது, வள்ளியோன் மருங்கு - ஸ்ரீராமபிரானுக்குப் பக்கத்தே, வந்தது—,

குறிப்பு.—வள்ளியோன் - வண்மையென்னும் பண்படியாகப் பிறந்தபெயர், அழகினன் என்றேனும், கொடையாளனென்றேனும் பொருள்கொள்க. மாயபந்த மாவினை என்றது உணர்தற்கரிதாயும் பிறப்பிறப்புக்கு ஏதுவாயும் விடாது தொடர்ந்து பற்றுகின்ற பூர்வ கர்மத்தை. பற்றறுதலாவது - புறமாகிய செல்வத்தினும் அகமாகிய உடம்பினு முண்டாகிய அவாவினை நீக்குதல். "அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந், தவாஅப் பிறப்பீனும் வித்து" என்பவாகலின் சிறிது பற

றும் பிறவியைத் தருமென்பது விளக்க 'மாளப்பற்று' என்றார். பழவினையும் புது வினையுந் துடைத்தோர் என்பது இரண்டாம் அடியின் கருத்துப் பெற்றியோர்களும், உம்மை - உயர்வு சிறப்பு. "அவாவில்லார்க்கு இல்லாகுந் துன்பம் அஃதுண்டேல், தவா அது மேன்மேல் வரும்" என்றவாறு அவாவற்றார்க்குத் துன்பமேயில்லையென்பதே றப்பட்டும் அவராலும் உந்தருநிலையதாய் என்றது நோயின் வன்மை விளக்கற்கு. இவ்வரக்கர் அடியோடு தொலைவார்களென்பது விளங்க அவ்வலிய நோயை அரக்கர்க்கு உவமை கூறினார். "மேலைநாளுயிரோடும் பிறந்து தானவினை, காலமோர்ந் துடனுறை கடிய நோயனாள்" என்றார் சூர்ப்பணகைப் படலத்தும். 'மாயப்பாசமாவினை' என்னும் பாடத்திற்கு வள்ளியோன் மருங்கு மாயும்படி சேனை வெள்ளம் வந்தது என்று பொருள் கூறுக. அம்மா - வியப்பிடைச் சொல். (ருசு)

தூரியக் குரலின் வானின் முகிற்கணந் துணுக்கங் கொள்ள
வார்சிலை யொலியி னஞ்சி யுருமெலா மறுக்கங் கொள்ள
வார்கலி யார்ப்பி னுட்கி யசைவுற வரக்கர் சேனை
போர்வனத் திருந்த வீர ருறைவிடம் புக்க தன்றே

இ - ள். தூரியம் குரலின் - முரசத்தொனியினாலே, வானின் முகில் கணம் துணுக்கம் கொள்ள - ஆகாயத்திலிருக்கிற மேகக் கூட்டங்கள் அச்சமடையவும், வார் சிலை ஒலியின் அஞ்சி - நீண்ட வில்லுகளினுடைய குணத்தொனியாற் பயந்து உரும் எலாம் மறுக்கம் கொள்ள - இடிகளெல்லாம் துன்பமடையவும், ஆர்ப்பின் உட்கி ஆர்கலி அசைவு உற - (அரக்கர் செய்யும்) பேரோசையால் வெட்கப்பட்டுக் கடலானது தளர்வினையடையவும், அரக்கர் சேனை - இராக்கதர்களின் சேனையானது, வனத்திருந்த - (அந்த) வனத்திலிருந்த, போர்வீரர் - போரில் வல்ல ஸ்ரீராம லக்ஷ்மணர்கள், உறைவு இடம் புக்கது - வாசஞ் செய்வதாகிய இடத்திற் புகுந்தது.

வாய்புலர்ந் தழிந்த மெய்யின் வருத்தத்த வழியில் யாண்டு
மோய்வில நிமிர்ந்து வீங்கு முயிர்ப்பின வுலந்த கண்ண
தீயவர் சேனை வந்து சேர்ந்தமை தெரியச் சென்று
வேய்தெரிந் துரைப்ப போன்ற புள்ளொடும் விலங்கு மம்மா

இ - ள். (சேனைவரும் ஆரவாரத்திற்கு அஞ்சி) புள்ளொடும் விலங்கும் - பறவைகளும் மிருகங்களும், வாய் புலர்ந்து அழிந்த - வாய் வறண்டு (மனநிலை) கெட்டுப்போயினவையும், மெய்யின் வருத்தத்த - சரீரத்துன்பமுற்றவைகளும், வழியில் யாண்டும் ஓய்வு இல - மார்க்கத்தில் சிறிதும் சோர்ந்து தங்காதவைகளும், நிமிர்ந்து வீங்கும் உயிர்ப்பின - வளர்ந்து பெருகுகின்ற சுவாசமுள்ளவைகளும், உலந்த கண்ண - பார்வைமங்கிய கண்களுற்றவையுமாகி, தீயவர் சேனை வந்து சேர்ந்தமை - கொடியராக்ஷசர்களின் சேனைவந்து சேர்ந்த சங்கதியை, தெரிந்து - அறிந்து, தெரிய - ஸ்ரீராமபிரான் அறியும்படியாக, சென்று - போய், வேய் உரைப்ப போன்ற - ஒற்று சொல்வனபோலிருந்தன. (ருஎ)

தூளியின் படலை வந்து தொடர்வுற மரமுந் தூறுந்
தாளிடை யொடியு மோசை சடசட வொலிப்பக் கானத்

தாளியு மரியு மஞ்சி யிரிதரு மலக்க ணோக்கி
மீளிமொய்ம் பினருஞ் சேனை மேல்வந்த துளதென் றுன்னா.

இ-ள் மீளி மொய்ம்பினரும் - வலிபொருந்திய புயங்களையுடைய ஸ்ரீராம லக்ஷ்மணரிருவரும், தூளியின் படலை வந்து தொடர்வுற - புழுதியின் பரந்த வடிவு தொடர்ந்து வருதலாலும், மரமும் தூறும் - மரங்களும் புதர்களும், தாளிடை ஒடியும் ஓசை - (ராக்ஷஸருடைய) பாதங்களுக்கு நடுவே (அகப்பட்டு) ஒடிகின்ற சத்தமானது, சடசட ஒலிப்ப - சடசடவென்றொலிப்பதாலும், ஆளியும் அரியும் அஞ்சி - யாளிகளுஞ் சிங்கங்களும் பயந்து, கானத்து - அடவியில், இரிதரும் - ஓடுகின்ற, அலக்கண் நோக்கி - துன்பத்தைப்பார்த்து, சேனை - (ராக்ஷஸப்) படையானது, மேல்வந்தது உளது என்று உன்னா - பின்னும் வந்திருக்கின்றதென்று நினைத்து. (ருக)

மின்னின்ற சிலையன் வீரக் கவசத்தன் விசித்த வாளன்
பொன்னின்ற வடிம்பின் வாளிப் புட்டிலன் புகையு நெஞ்ச
னில்லின்று காண்டி யான்செய் நிலையென விரும்பி நேரா
முன்னின்று பின்வந் தோனை நோக்கினன் மொழிய லுற்றான்.

இ-ள் மின் நின்ற சிலையன் - ஒளிதங்கிய வில்லினையுடையானும், வீரம் கவசத்தன் - வலிபொருந்திய கவசத்தையுடையானும், விசித்த வாளன் - (அரையிற்) கட்டிய வாளினையுடையானும், வடிம்பின் வாளி - கூர்மை பொருந்திய பாணங்களையுடைய, பொன் நின்ற புட்டிலன் - அழகு தங்கிய தூணீரத்தை யுடையானும், புகையும் நெஞ்சன் - கோபத்தீப்பற்றி யெரிகின்ற மனத்தினையுடையானுமாகி, (ஸ்ரீராமபிரானைப்பார்த்து), நில் - (நீ) நிற்பீராக, விரும்பி - விருப்பங்கொண்டு, நேரா - ஒழுங்காக, யான் செய் நிலை - நான்செய்கின்ற (போரின்) தன்மையை, இன்று காண்டி என - (இவ்விடத்தே) இன்று பார்ப்பீராகவென்று, முன் நின்று - (போர்க்குச்செல்ல) முன்னே (ஆயத்தமாக) நின்று, (தமையன் தடையை மறுக்கமாட்டாமையாலும் தமையனைத்தனியே அனுப்ப மனமில்லாமையாலும்), பின் வந்தோனை - (தன்) பின்னே தொடர்ந்து வந்த இளையபெருமாளை, நோக்கினன் - பார்த்த ஸ்ரீராமபிரான், மொழியல் உற்றான் - (மேல் வருமாறு) கூறுவானாயினன் —

குறிப்பு—மின்னின்ற என்றற்கு மின்னல் போலும் தோன்றி மறையுந்தன்மையோடு நின்ற என்பொருள் கூறி "வடக்கதோ தெற்கதோவென் றுணர்ந்திலன் மனிதன் வல்வில்" என மேல்வருஞ் செய்யுளோ டொப்பிட் டுரைத்தலுமாம் பிறர் கணையாற் பெயர்க்கப்படாத கவசம் என்பார் 'வீரக்கவசம்' என்றார். இனி, போர்க்குரியகவசமுமாம். பொன் நின்ற என்றற்கு இலக்குமி தங்கிய என்று பொருள் கூறி அம்புகள் எடுக்க எடுக்கக்குறைவுபடாம லிருப்பதாகிய புட்டி லென்னலுமாம் [அம்பறாத்தூணி என்றபடி]. இச்செய்யுளுக்கு ஸ்ரீராமபிரான் சிலையன் கவசத்தன் வாளன் புட்டிலன் நெஞ்சன் ஆகி (இளையபெருமாளை நோக்கி) நில், இன்று யான் செய்நிலை காண்டி என்று கூறி (போரை) விரும்பி நேரா முன்னின்று (பின்பு தன்னைத்தனியே அனுப்ப மனமில்லாமல்) பின் வந்த இளையவனை நோக்கி மொழியலுற்றான் என்று பொருள் கோடலாமாயினும் மேல்வரும் 62-வது செய்யுளில் "கருங்கற்கமலக் கண்ணன், சரண்படாப் புட்டில் கட்டிச் சாபமுந் தரித்தான் றள்ளா, வரண்படா தோளின் மீளாக் கவசமிட் டுடைவா ளார்த்தான்" என்று கூறியிருப்பதால் அது

பொருந்தாமையாதல் காண்க. பின்வந்தோன் என்றற்கு இளையவனென்றும் பொருள் கொள்ளலாம். (௬0)

நெறிக்கொண்மா தவர்க்கு முன்னே நேர்ந்தனன் நிருத ராவி
பறிக்குவெ னியானே யென்ற பழமொழி பழுது றாமே
வெறிக்கொள்பூங் குழலி னாளை வீரநீ வேண்டி னேனியான்
குறிக்கொடு காத்தி யின்னே கொல்வெனிக் குழுவை யென்னா.

இ-ள். வீர - வீரனே! நெறி கொள் - வேதநெறியைக் கைக்கொண்டொழுகும், மாதவர்க்கு முன்னே - மாட்சிமைதங்கிய தவமுனிவர்களுக்கு முன்பு, நேர்ந்தனன் - (என் முன்னர்) எதிர்ப்படுகின்றனவாகிய, நிருதர் ஆவி - அரக்கர்களுயிர்களை, யானே - நானே, பறிக்குவென் என்ற - கொய்வேன் என்று கூறிய, பழமொழி - (என்து) முன்னைய வார்த்தை, பழுது உறாமே - வீணாகாமல், இக் குழுவை - இவ் (அரக்கர்) கூட்டத்தை, இன்னே கொல்வென் - இப்பொழுதே கொல்லுகின்றேன், நீ —, வெறி கொள் - (இயற்கை) மணத்தைப்பெற்றிருக்கின்ற, பூ குழலினாளை - அழகிய கூந்தலினையுடைய சீதையை, குறிக்கொடு - (காக்குந்தொழிலிலேயே) எண்ணங்கொண்டு, காத்தி - காவல்செய், (இதன்பொருட்டு), யான் - நான், வேண்டினேன் - (உன்னை மிகவும்) கேட்டுக்கொள்ளுகிறேன், என்னா - என்று கூறி (௬௧)

மரன்படர் கான மெங்கு மதர்பட வந்த சேனை
கரன்படை யென்ப தெண்ணிக் கருநிறக் கமலக் கண்ணன்
சரன்படர் புட்டில் கட்டிச் சாபமுந் தரித்தான் றள்ளா
வுரன்படர் தோளின் மீளாக் கவசமிட் டுடைவா ளார்த்தான்.

இ-ள். (பிறகு), கருநிறம் - (திருமேனியிற்) கரியநிறத்தினையுடைய, கமலம் கண்ணன் - தாமரைமலர்போன்ற கண்களையுடைய ஸ்ரீராமபிரான், மரம் படர் கானம் எங்கும் - மரங்கள் நிறைந்த அடவிமுழுவதும், அதர்பட - புழுதிபடும்படி, வந்த சேனை - வந்த படை, கரன்படை என்பது எண்ணி - கரனுடைய சேனையென்பதாக நினைத்து, சரம் படர் புட்டில் கட்டி - (முதுகில்) அம்புகள் நிறைந்த தூணீரத்தைக்கட்டி, தள்ளா - நீக்கிவிடமுடியாத, உரம் படர் - வலிபொருந்திய, தோளின் - புயங்களினிடத்தே, மீளா கவசம் இட்டு - நீங்காத கவசத்தையணிந்து, உடைவாள் ஆர்த்தான் - உடைவாளை (அரையிற்) கட்டி, சாபமும் தரித்தான் - கோதண்டத்தையும் (கரத்திற்) பிடித்தான்.

குறிப்பு—மரன், சரன், உரன் - போலி. தள்ளா உரம் என்பது - எவராலும் வெல்லமுடியாத வலிமை. மீளாக் கவசமென்பது—ஸ்ரீராமபிரானுடலினின்றும் பிறர்கணையாற் பெயர்த்துவிடமுடியாத வலியகவசம். உடைவாள்-அரையில் வரிந்துகட்டுமுடையோடு பிணைத்துக்கட்டுமே வாளாயுதம். (௬௨)

மீளருஞ் செருவின் விண்ணு மண்ணுமென் மேல்வந் தாலு
நாளுலந் தழியு மென்றே நானுனக் குரைப்ப தென்னே
யாளியின் றுப்பி னையவ் வமரெனக் கருளி னின்றென்
றோளினைத் தின்னு கின்ற சோம்பினைத் துடைத்தி யென்றான்.

இ - ள். (ஸ்ரீராமபிரான், இளையபெருமாளை நோக்கி), ஆளியின் துப்பினாய் - சிங்கத்தைப்போலும் வலிமையுடையாய்! மீள அருஞ்செருவின் - (வென்று) திரும்பி வருதற்கருமையான போரில், விண்ணும் - விண்ணுலகத்தாரும், மண்ணும் - மண்ணுலகத்தாரும், என்மேல் வந்தாலும் - என்மேல் (விரோதித்துப் போர்செய்ய) வந்த போதிலும், (அவர்களெல்லாரும்), நாள் உலந்து - ஆயுள் நாள் ஒழியப்பெற்று, அழியும் என்றே - அழிவார்களென்றே, உனக்கு நான் உரைப்பது என் - உனக்கு நான் சொல்லவேண்டிய விஷயம் யாது? நின்று - (நீபோக்கு) வருதலொழிந்து, இ அமர் எனக்கு அருளி - இந்தப் போர்த்தொழிலை எனக்குக் கொடுத்து, என் தோளினை - எனது புயங்களை, தின்னுகின்ற - மெல்லுகின்ற, சோம்பினை - சோம்பலை [தினவை], துடைத்தி என்றான் - நீக்கி விடு என்று கூறினான்.

குறிப்பு — அரக்கரது போர்த்தொழில் வன்மை விளங்கற்கு 'மீளருஞ் செருவின்' என்றார். விண், மண் - இடவாகுபெயர்கள். 'என்மேல்' என்னுஞ் சொல்லாற்றலால் என்னையே சரணாகதியாக நம்பியிருக்கின்ற விண்ணவர் மண்ணவர்களைவரும் இவ்வரக்கருக்கு உபலமாக ஒருகால் ஒருங்கு திரண்டு வரினும் இவ்வரக்கரோடழிவரென்பதாம் இனி, மென்மேலெனக்கொண்டு, என்னால் இறந்து பட்டவர் அவர் பெற்றவரத்தின் மாண்பால் அடிக்கடி யுயிர்கொண்டெழினு மென்னுமாம், மென்மேலென்பது மேன்மேலென்பதன் விகாரம் காலுலந்தழிதலாவது - அவ்வண்ணந்தேவர்களிவ்வரத்தின் மாண்பால் நீடியவாயுளும், பிரமதேவன் விதித்தவாயுளும் சிரமபுதற்கு முன்னரே யிறந்து படுதல், "சூரி நீர் வண்ணன் - முதலாய, பல்லா ரருளல்லால் நாமநீர் வையகத்துப், பல்லா ரருளும் பழுது" என்றார் பெரியாரும். (௬௧)

என்றன னிளைய வீர னிசைந்திலன் ராம னேந்துங்
குன்றன தோளி னாற்ற லுள்ளத்தி னுணரக் கொண்டான்
அன்றியு மண்ண லாணை மறுக்கிலன் அங்கை கூப்பி
நின்றன னிருந்தான் கண்ணீர் நிலனுறப் புலாகின் றாள்பால்.

இ - ள். இளையவீரன் —, இசைந்திலன் என்றனன் - (நும்மைத்தனியேபோதற்கு அனுப்பச்) சம்மதிக்கமாட்டேன் என்று கூறி, (பின்பு), இராமன் ஏந்தும் குன்று அன தோளின் ஆற்றல் உள்ளத்தின் உணர கொண்டான் - ஸ்ரீராமபிரான் தாங்குகின்ற மலைபோன்ற புயங்களினுடைய வலிமையைத் தன்மனத்தினிடத்தே ஆராய்ந்தறிந்துகொண்டான், அன்றியும் - அல்லாமலும், அண்ணல் ஆணை மறுக்கிலன் - தமையனது கட்டளையை மறுக்காதவனாகி, அம் கைகூப்பி நின்றனன் - தனது அழகிய கைகளைக்குவித்து [கும்பிட்டுக்கொண்டு] நின்று, கண் நீர் நிலம் உற புலாகின்றாள் பால் - கண்ணீரானது நிலத்தே விழும்படி அழுகின்ற பிராட்டியின் பக்கத்து, இருந்தான் - (காவலாக) இருந்தான்.

குறிப்பு — எம்பிரான் கூறியமொழிக்கு இளையபெருமாள் இசையேன் என்று கூறியது, அவரன்னையாராகிய சுமத்திராதேவி "மகனேயிவன் பின்செல்லம்பி, யென்னுமபடியன் றடியாரினி லேவல் செய்தி, மன்னுநகர்க்கே யிவன்வந்திடின் வாவ தன்றேல், முன்னம்முடி" என்று கூறியிருத்தலால் வெற்றியேனும் இறப்பேனுந்தானே முன்சென்றடைதல் நலனும் மாதாவாக்கிய பரிபாலனமுமாமென்று கருதியதாலெனக் எம்பிரானது புயத்தின் பருமையைக்கண்டு எவருமெல்லப்பாரென்பது தோன்ற 'ஏந்தும்' என்ற வினைத்தொகை கூறினார். இவ்வாறு திரண்டுவந்த ராக்ஷஸப் படையை

யென்றும் பார்த்திலளாதலாலும், ஸ்ரீராமபிரானது பேராற்றலை யறியாப்பேதைமையாலும், அவ்வரக்கரால் தன் நாயகற்கு யாது தீங்கு நேருமோவெனப் பிராட்டியஞ்சினமை விளங்க 'கண்ணீர் சிலனுறப் புலர்கின்றாள்' என்றார். (௬௪)

குழையுறு மதியம் பூத்த கொம்பனாள் குழைந்து சோரத்
தழையுறு சாலை நின்றுந் தனிச்சிலை தரித்த மேரு
மழையென முழங்கு கின்ற வாளெயிற் றரக்கர் காண
முழையினின் றெழுந்து செல்லு மடங்கலின் முனிந்து சென்றான்.

இ-ள். தனி சிலை தரித்த மேரு - ஒப்பற்ற வில்லைத் தாங்கிய மேருப்போன்ற ஸ்ரீ ராமபிரான், முழையினின்று எழுந்து செல்லும் மடங்கலின் - குகையிலிருந்து எழுந்து செல்லுகின்ற சிங்கத்தைப்போல, தழை உறு சாலை நின்றும் - பன்னசாலையிலிருந்து, குழை உறு மதியம் பூத்த - குண்டலங்களை யணியப்பெற்ற பூரண சந்திரனைப் பூத்திருக்கிற, கொம்பு அனாள் - (பூங்) கொம்பையொத்த பிராட்டி, குழைந்து சோர - வாடித் தளர்வடையவும், மழை என - மேகங்களைப்போல, முழங்குகின்ற - பேரொலி செய்கின்ற, வாள் எயிறு அரக்கர் காண - ஒளிபொருந்திய வக்கிரதந்தங்களையுடைய அரக்கர்கள் பார்க்கவும், முனிந்து சென்றான் - கோபித்து நடந்தான்.

குறிப்பு — 'குழையுறு மதியம்பூத்த கொம்பு,' - இல்பொருளுவமை. தழையுறு சாலை - தழைகளால் வேய்ந்தவீடு, இனி, கண்ணுக்கினிமை பயக்கு மழகினையுடைத்தாதல் பற்றிச் செழிப்புற்ற சாலை யெனலுமாம். அரக்கர்கள் பேசு மொலி மேககர்ச்சனைபோலிருந்தமைபற்றி 'மழையென முழங்குகின்ற அரக்கர்' என்றார். இனி, அரக்கர்கள் தம் பற்களை நறநறவென்றத் திருக்குதலாற் கிளம்பு மொலிக்கு மழை முழக்கத்தை உவமையாக்கலுமொன்று. விழியினின்றும் அனற்பொறி பறக்கச் சீற்றமிக்கொண்டு எவ்வினையுங் கருதாது நிமிர்ந்து வீராவேசங்கொண்டு சென்றமைபற்றி 'முழையினின் றெழுந்து செல்லு மடங்கலின் முனிந்து சென்றான்' என்றார், "மாரி மலைமுழைஞ்சின் மன்னிக்கிடந்துறங்குஞ், சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து, வேரிமயிர் பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி, மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப், போதருமாபோலே" என்றார் பெரியாரும். (௬௫)

தோன்றிய தோன்ற றன்னைச் சுட்டினள் காட்டிச் சொன்னாள்
வான்றொடர் மூங்கி றந்த வயங்குவெந் தீயி தென்னத்
தான்றொடர் குலத்தை யெல்லாந் தொலைக்குமா சமைந்து நின்றா
ளேன்றுவந் தெதிர்த்த வீர னிவனிக லிராம னென்ன

இ-ள். வான் தொடர் - ஆகாயத்தை யளாவியிருக்கிற, மூங்கில் தந்த - மூங்கில்கள் (ஒன்றோடொன்று உராய்வதால்) பிறந்த, வயங்கு - பிரகாசிக்கின்ற, வெந் தீ இது என்ன - கொடிய நெருப்பு இதுவென்றுகூற, தான் தொடர் - தான் பிறந்த, குலத்தை எல்லாம் - சாதியாரனைவரையும், தொலைக்கும் ஆறு சமைந்து நின்றாள் - அழிக்குமவகையிற் பொருந்தி நின்ற சூர்ப்பணகை, ஏன்று வந்து எதிர்த்த - (போர்க்கோலம்) அமைந்து வந்து எதிர்ந்து நிற்கின்ற, வீரன் இவன் - வீரனாகிய இம்மனிதன், இகல் இராமன் என்ன - பகைமையைக்கொண்ட இராமனென்னும் பெயருடையோனென்று, தோன்றிய (அரக்கர்முன் சிங்கம்போலக்) காணப்பட்ட, தோன்றல்

தன்னை - ஸ்ரீராமபிரானை, சுட்டினன் காட்டி சொன்னாள் - சுட்டிக் காட்டிச்சொன்னாள்.

குறிப்பு —தோன்றல் - பெருமையிற் சிறந்தோன். சுட்டினள் - முற்றெச்சம். மூங்கிலினிடத்தே பிறந்த தீயானது அம்மூங்கிற் காட்டைத்தும் நாசஞ்செய்வதுபோல அரக்கர் குலத்தில் தோன்றிய இவளால் அவ்வரக்கர் குலமழியும் என்பது கருத்து. ஆறு - ஈறுகுறைந்து ஆவென்னின்றது. இனி, தொலைக்கும் மாசு அமைந்து எனக் கொண்டு, தொலைப்பதற்குக் காரணமான குற்றத்தைப் பொருந்தி நின்றுள்ளனளு மாம். (௬௬)

கண்டனன் கனகத் தேர்மேற் கதிரவன் கலங்கி நீங்க
விண்டனி னின்ற வென்றிக் கரனெனும் விலங்கற் றோளான்
மண்டமர் யானே செய்திம் மானிடன் வலிமை நீக்கிக்
கொண்டனன் வாகை யென்று படைஞரைக் குறித்துச் சொன்னான்

இ - ள். கதிரவன் கலங்கி நீங்க - சூரியன் பயந்துவிலக, விண்தனில் - ஆகாயத்தில், கனகம் தேர்மேல் நின்ற-பொன்னினாலாகிய தேரின்மீது நின்ற, வென்றி கரன் எனும் விலங்கல் தோளான் - வெற்றியையுடைய கரன் என்னும் மலையைப் போலும் புயங்களையுடையான், கண்டனன் - (ஸ்ரீராமபிரானைப்) பார்த்து, யானே மண்டு அமர்செய்து - நானே நெருங்கிய (இப்) போரைப்புரிந்து, இ மானிடன் வலிமை நீக்கி - இந்தமனிதனது வலிமையையொழித்து, வாகைகொண்டனன் என்று - வாகை மாலையை யணிந்தேனென்று, படைஞரை குறித்து சொன்னான் -சேனாவீரர்களைப்பார்த்துச் சொன்னான்.

குறிப்பு —கண்டனன் - முற்றெச்சம். கனகத்தேர் -கதிரவன்தேருமாம். இவன் தேர் விண்ணை யடைந்தலும் வானுலகு அழியுமே யென்று சூரியன் கலங்கியதாம். இனி, சூரியன் ஒளி மழுங்கி மறையும்படியாக மேகம்போல நின்றவனென்னலுமாம். விண்டு விண் - மேகம். விண்டனினின்ற வென்றி என்பது - இவன் வெற்றி வானுலகில் நின்றது மண்ணுலகிலில்லை ஆதலின் அபஜயமடைவான் என மற்றுமோர் பொருள் கொள்ளுமாறு நிற்றலறிக. ஸ்ரீராமபிரான் தனித்து நிற்கும் போராற்றலைப் பார்த்து மற்றையோரால் இவனை வெல்லுதலரிதெனக்கருதி 'அமர்யானே செய்து' என்றான். ஏகாரம் - பிரிநிலை. கொண்டனன் - துணிபுபற்றிவந்த காலவழுவமைதி. வாகை -வாகைப்பூமாலை, இது பசிலையோடு விரவித்தொடுக்கப்பட்டுப் பகைவரை வெற்றிகொண்டதற் கறிகுறியாகப் புனையப்படுவது, "இலைபுனை வாகை சூடி யிகன் மலைந், தலைக்கடற் றானை யரசட் டார்த்தன்று" என்னுஞ் சூத்திரத்தானுணர்க. இனி, யானே என்பதன் ஏகாரத்தை எதிர் மறையாகக்கொண்டு யானோ வாகைகொண்டனன் இல்லை என்று அறமாகக் கூறினானெனலுமாம். (௬௭)

மானிட னொருவன் வந்த வலிகெழு சேனைக் கம்மா
கானிட மில்லை யென்னுங் கட்டுரை கலந்த காலை
யானுடை வென்றி யென்னே மியாவருங் கண்டு நிற்றி
ரூனுடை யிவனை யானே யுண்குவே னுயிரை யென்றான்

இ - ள். மானிடன் ஒருவன் - (எதிர்த்துநிற்பவன்) மனிதனொருவன், வந்த வலிகெழு சேனைக்கு - (அவனோடு போர்புரிய) வந்தவலி மிகுந்த (ராக்ஷஸ) சேனைக்

கு, கான இடம் இல்லை - காணகததில (நிறக) இடம இலலை, அம்மா - ஆசசரியம, எனனுமா - எனறு சொலலும, கடலுரை - உறுதிசசொல, கலநத காலை - சேரநத பொழுது, யான உடைவெனறி எனஆம - நானகொணட வெறறியாது பயனுடையதாகும்? யாவரும கணடு நிறறிர - (நீஙகள) யாவரும பாாததுககொணடு நிலலுஙகள, யானே - நானே, ஊன உடை இவனை உயிரை உணகுவென எனறுன - (நமககுணவாகிய) மாமிசததையுடைய இவனை யுயிரோடுணபேன எனறு கூறினுன.

அவவுரை கேடடு வநதா னகமபனெனன றமைநத கலவிச
செவவியா னொருவ னைய செபபுவென செருவிற சால
வெவவிய ராத னனறே வீரரி லாணமை வீர
விவவயி னுளவாந தீய நிமித்தமென றியமப லுறறுன

இ - ள அவ்வுரைகேடடு வநதான - அநத வாாததையைச் கேடடுவநதோனும, அகமபன எனறு அமைநத - அகமபன எனறு (பேர) பொருநதிய, கலவி செவவியான - கலவி யழகினையுடையானுமாகிய, ஒருவன - ஓரரககன, வீரரில ஆணமை வீர - வீரருககுளளே சிறநத வீரனே! செபபுவென - (ஒனறு) சொலலுவேன, செருவில சால வெவவியா ஆதல நனறே - போரில மிகவும கோபமுளளவாகள ஆதல நனமையுடையதுதான, (ஆயினும), இ வயின - இவவிடததில, தீயநிமிததம - அவசகுனஙகள, உள எனறு - இருககினறன எனறு, இயமபல உறறுன - சொலலததொடஙகினுன.

குறிப்பு — ஐய - அசை நிலை, அணமைவிளியுமாம (௬௯)

வேறு

குருதி மாமழை சொரிநதன மேகஙகள குமுறிப
பருதி வானவ னூாவலைப புணடது பாராய
கருது வீரநின கொடிமிசைக காகதையின கணஙகள
பொருது வீழவன புலமபுவ நிலமபடப புரளவ

இ - ள கருதவீர - மதிககததககுநத வீரனே! மேகஙகள குமுறி - முகிலகள முழஙகி, குருதி மாமழை சொரிநதன - இரததமாகிய பெரியமழையைப பெயதன, பருதிவானவன - சூரியனை, ஊாவலைபபு உணடது - பரிவேடஞ் சூழநதிருககினறது; பாராய - பாாபபாயாக, நினகொடிமிசை - உனனுடைய துவசததினமேல, காகதையின கணஙகள - காகததின கூடடஙகள, பொருது - சணடைசெயது, வீழவன - (கீழே) விழுகினறன, புலமபுவ - (சில) அழுகினறன, நிலமபட புரளவ (சில) நிலததில வீழநது புரளகினறன, (௭0)

வாளின வாயகளை யீவளைக கினறன வயவா
தோளு நாடடமு மிடநதுடிக கினறன தூஙகி
மீளி மொய்மபரி னிவுளிவீழ கினறன விரவி
ஞாளி யோடுகின றுளைககினற நரிககுலம பலவால.

இ - ள. வாளின் வாயகளை ஈ வளைககின்றன-வாளகளினது வாயகளை ஈககள சூழநதிருககினறன, வயவா தோளும நாடடமும இடம துடிககினறன - படைவீரரகளுடைய புயஙகளும கணகளும இடதுபககததில துடிககின்றன, மீளிமொயம

பரிய இவுளி தூங்கிவீழ்கின்றன - வலிபொருந்திய தோள்களையுடைய சேனாதிபதிகளின் குதிரைகள் (நின்ற நிலையிலேயே) நித்திரைசெய்து (அறிவுமயங்கி கீழே) விழுகின்றன, ஞாளி ஓடு நரி குலம் பல - நாய்களுடன் நரிக்கூட்டங்கள் அநேகம், விரவி நின்று கலந்து நின்று, உளைக்கின்ற - ஊளையிடுகின்றன (எக)

பிடியெ லாம்மதம் பெய்திடப் பெருங்கவுள் வேழ
மொடியு மான்மருப் புலகமுங் கம்பிக்கு முயர்வா
னிடியும் வீழ்ந்திடு மெரிந்திடும் பெருந்திசை யெவர்க்கு
முடியின் மாலைகள் புலாலொடு முழுமுடை நாறும்

இ - ள். பிடி எலாம் மதம் பெய்திட - பெண் யானைகள் எல்லாம் மதசலத்தைப் பொழிய, (அதனால்), பெரும் கவுள் வேழம் - பெரிதாகிய கதுப்பினையுடைய ஆண் யானைகளினது, மால் மருப்பு ஒடியும் - பெரிய கொம்புகள் ஒடிகின்றன, உலகமும் கம்பிக்கும் - பூமியையும் அசையும்படி செய்கின்ற, உயர் வான் இடியும் வீழ்ந்திடும் - உயர்ந்த மேகத்திலிருந்து இடிகளும் வீழ்கின்றன, பெருந்திசை எரிந்திடும் - பெரிதாகிய திக்குகள் தீப்பற்றி எரிகின்றன, எவர்க்கும் - யாவருக்கும், முடியின் மாலைகள் - சிரங்களில் புனைந்த பூமாலைகள், புலால் ஒடு முழுமுடை நாறும் - புலால் நாற்றத்தோடு மிகவும் கெட்ட வாசனை வீசுகின்றன (எஉ)

இனைய வாகலின் மானுட னொருவனென் றிவனை
நினைய லாவதொன் றன்றது நீதியா நின்ற
வினையெ லாஞ்செய்து வெல்லலாந் தன்மைய னல்லன்
புனையும் வாகையாய் பொறுத்தியென் னுரையெனப் புகன்றான்

இ - ள். புனையும் வாகையாய் - (பகைவரைக் கொன்று) அணிகின்ற வாகை மாலையினையுடையவனே! இனைய ஆகலின் - இத்தகைய அவசகுனங்கள் ஆகின்றபடியால், இவனை —, மானுடன் ஒருவன் என்று நினையல் - மனிதனென்றும் ஒருவனென்றும் நினையாதே, ஆவது ஒன்று அன்று - (இனி) ஆகப்பட்ட காரியங்களொன்றல்ல, அது நீதி - அது உண்மை, யாம் நின்ற வினை எலாம் செய்து - நாம் (இதுவரை செய்து காட்டாமல்) ஒழிந்த வஞ்சனைத் தொழில் முழுதுஞ் செய்தும், வெல்லல் ஆம் தன்மையன் அல்லன் - வெற்றிகொள்ளுதற்காகிய தன்மையையுடையவன் அல்லாதவனாக இருக்கின்றான், என் உரை பொறுத்தி என புகன்றான் - (இவ்வாறு கூறிய) என்னது வார்த்தைகளைப் பொறுத்துக்கொள்வாயாக வென்று கூறினான்

குறிப்பு — இனி, நினையலாவதொன்றன்று நினைப்பது ஒன்று அன்று, இவன் விஷ்ணுவோ? சிவனோ? பிரமனோ? என்று பலவாறு நினைக்கும்படியாயிருக்கிறான், இது நீதி ஆம் - இது நீதியாக முடியும், என்று பொருள் கோடலுமாம் (எ௩)

உரைத்த வாசகங் கேட்டலு முலகெலா முலையச்
சிரித்து நின்றவன் சேவகந் தேவரைத் தேய
வரைத்த வம்மியா மலங்கெழிற் றோளமா வேண்டி
யிரைத்து வீங்குவ மானுடற் கெளியவோ வென்றான்.

இ-ள். உரைத்த வாசகம் கேட்டலும் - (அகம்பன்) கூறிய வார்த்தைகளைக் கேட்டவளவில், உலகு எலாம் உலைய - உலகங்களெல்லாம் நடுங்கும்படி, சிரித்து-நகைத்து, தேவரை தேய அரைத்த - தேவர்களைத் தேயும்படி அரைத்துத்தள்ளிய, அம்மி ஆம் அலங்கு எழில் தோள் - அம்மியாகிய அசைகின்ற அழகிய (எனது) புயங்கள், அமர் வேண்டி இரைத்து வீங்குவ - போரை விரும்பிப்பருத்துப் பூரிப்புடையவாயிருக்கின்றன, (ஆதலின்), நின்ற என் சேவகம் - நிலைபெற்ற எனது ஆண்மைத் தொழில்கள், மானுடற்கு - மனிதனுக்கு, எளியவோ - இலேசானவையோ? என்றான்—, (௭௪)

என்னு மாத்திரத் தெறிபடை யிடியென விடியா
மன்னர் மன்னவன் மதலையை வளைந்தன வளைத்த
மின்னும் வாலுளை மடங்கலை முனிந்தன வேழந்
துன்னி னாலெனச் சுடுசினத் தரக்கர்தந் தொகுதி.

இ-ள். என்னும் மாத்திரத்து - என்று சொல்லுமளவில், வளைந்து மின்னும் வால் உளை மடங்கலை - வளைந்து பிரகாசிக்கின்ற வாலினிடத்தே மயிர்க்குஞ்சத்தையுடைய சிங்கத்தை, முனிந்தன வேழம் துன்னினால் என - கோபித்த யானைகள் நெருங்கினாற்போல, சுடுசினத்து அரக்கர்தம் தொகுதி - சுடுகின்ற கோபத்தையுடைய இராக்கதர்களின் கூட்டம், மன்னர் மன்னவன் மதலையை - அரசர்க்கரசனாகிய தசரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரனை, எறிபடை - கைவிடுபடைகளை, இடி என இடியா - இடியைப்போல் (ஒன்றோடொன்று தாக்கி முழங்கும்படி) இடித்து, வளைந்தன - சூழ்ந்துகொண்டன (௭௫)

வளைந்த காலையில் வளைந்தன விராமன்கை வரிவில்
விளைந்த போரையு மாவதும் விளம்புது மிசையாற்
புளைந்த பாய்பரி புரண்டன புகர்முகப் பூட்கை
யுளைந்த மால்வரை யுருமிடி பட்டொடிந் தென்ன

இ-ள். வளைந்த காலையில் - (அவ்வாறு அரக்கர்) சூழ்ந்துகொண்ட காலத்தில், வளைந்தன - (விற்களெல்லாம்) வளைவுற்றன, (அவற்றுள்), இராமன் கைவரிவில் - ஸ்ரீராமபிரானது கையிலிருக்கிற கட்டமைந்த கோதண்டத்தால், விளைந்த போரையும் ஆவதும் - உண்டான போர்த்தொழிலையும் (அதனால்) விளையும் செயல்களையும், விளம்புதும் - கூறுவாம், விசையால் - வேகத்தினால், புள் பாய் ஐந்தபரி புரண்டன - பறவைபோலும் பாய்தல் [கதிகள்] ஐந்தினையுடைய குதிரைகள் (கால்கள் அறுபட்டுவீழ்ந்து) புரளலுற்றன, புகர்முகம் பூட்கை - கருமைகலந்த பொன்மை நிறத்துப் புள்ளிகள் பொருந்திய முகத்தையுடைய யானைகள், உரும் இடிபட - பேரிடிவிழ (அதனால்), மால்வரை ஒடிந்த என்ன - பெரியமலைகள் முறிபட்டு வீழ்ந்தனபோல, உளைந்த - (துதிக்கையறுபட்டு வீழ்ந்து) வருத்தத்தை யடைந்தன

குறிப்பு.—குதிரைகள் புள்ளைப்போல நிலந்தீண்டாது செல்லுந்திறமைபற்றி 'விசையாற்புள்' என்றார்; "புள்ளியற் கலிமா வுடைமையான" என்பவாகலின். "பாய்ந்தது கலினமாவோ பறவையோ வென்ன வட்கி" என்றார் சிந்தாமணியினும். பாய்புரவியெனவே கால்கள் அறுபட்டமையும், பூட்கையெனவே துதிக்கை யறுபட்டமையும் குறிப்பிற் கோடலாயிற்று. (௭௬)

சூல மற்றன வற்றன சுடர்மழுத் தொகைவாள்
மூல மற்றன வற்றன முரட்டண்டு பிண்டி
பால மற்றன வற்றன பகழிவெம் பகுவாய்
வேலு மற்றன வற்றன வில்லொடு பல்லம்

இ - ள் சூலம் அற்றன - சூலங்கள் அறுபட்டன, சுடர் மழுத்தொகை அற்றன - நெருப்புச் சுவாலையுள்ள மழுத்தொகுதிகள் அறுபட்டன, வாள் மூலம் அற்றன - வாள்கள் அடியோடு அறுபட்டன, முரண் தண்டு அற்றன - வலிய தண்டாயுதங்கள் அறுபட்டன, பிண்டிபாலம் அற்றன - பிண்டிபாலங்கள் அறுபட்டன பகழி அற்றன - அம்புக்குதைகள் அறுபட்டன, வெம்பகுவாய் வேலும் அற்றன - பிளந்த வாயினையுடைய வெவ்விய வேல்களும் அறுபட்டன, வில்லொடு பல்லம் அற்றன - விற்களும் அம்புகளும் அறுபட்டன

குறிப்பு —பிண்டிபாலம் – பீலித்தண்டு, எஃகம் எனப்படுவதாம், "பீலித்தண் டெஃகம் பிண்டி பாலம்" என்பது பிங்கலந்தை. வாள்மூலம் - வாளினது அடிப்பாகமுமாம். (எஎ)

தொடித்து ணிந்தன தோளொடு தோமரந் துணிந்த
வடித்து ணிந்தன கடக்களி றச்சொடு நெடுந்தோ
கொடித்து ணிந்தன குரக்கதந் துணிந்தன குலமா
முடித்து ணிந்தன முளையொடு துணிந்தன முசலம்.

இ - ள். தொடி துணிந்தன - கைவளைகள் அறுபட்டன, தோளொடு தோமரம் துணிந்த - புயங்களுடனே கைவேல்கள் அறுபட்டன, கடம் களிறு அடி துணிந்தன - மதம் பொருந்திய யானைகளின் பாதங்கள் அறுபட்டன, அச்சொடு நெடுந்தோ - அச்சுகளோடு பெரிய தோகளும், கொடி - துவசங்களும், துணிந்தன - அறுபட்டன, குரக்கதம் துணிந்தன - குதிரைகள் அறுபட்டன, குலம் மா முடி துணிந்தன - கூட்டமாகிய (மற்றை) மிருகங்களினது தலைகள் அறுபட்டன, முளையொடு முசலம் துணிந்தன - தண்டாயுதங்களும் இருப்புலக்கைகளும் அறுபட்டன (எஅ)

கருவி மாவொடு காமதக் கைம்மலைக் கணத்தோ
டுருவி மாதிரத் தோடின சுடுசர முதிர
மருவி மாரியிற் றேங்கின தவனியி லரக்கர்
திருவின் மார்பகந் திறந்தன துறந்தன சிரங்கள்

இ - ள். கருவிமாவொடு - கலனை பூண்ட குதிரைகளோடு, காமதம் கைம்மலை கணத்தோடு - கரிய மதம் பொருந்திய யானைக்கூட்டங்களை, உருவி மாதிரத்து ஓடின சுடுசரம் - தைத்து வெளிப்பட்டுத் திசைகளிலோடிய (ஸ்ரீராமபிரானது) கொடிய பாணங்களால், அரக்கர் திரு இல் மார்பகம் திறந்தன -(சில) இராக்கதரது வீரலட்சுமிக்கு வீடாகிய மார்புகள் பிளவுபட்டன; சிரங்கள் துறந்தன - (சில அரக்கரது) தலைகள் அறுபட்டுப்போயின, (அதனால்), உதிரம் - அரத்தம், அருவிமாரியில் - அருவி நீரைப்போல, அவனியில் தேங்கினது - பூமியில் நிறைந்தது. (எகூ)

ஒனறு பததுநூ றுயிரங கோடியென றுணராத
துனறு பததிய விராகவன சுடுசரந தூரபபச
செனறு பததிரத தலையென மலைதிரண டெனனக
கொனறு பததியிற குவிததன பிணபபெருங குனறம

இ - ள். இராகவன - ஸ்ரீராமபிரான, சுடுசரம தூரப்ப - (சில) கொடிய பாண ஙகளை யெயய,(அவைகள), ஒனறு பதது நூறு ஆயிரம கோடி என்று உணரா துனறு பததியசெனறு - ஒனறென்றும பததென்றும நூறென்றும ஆயிரமென்றும கோடி யென்றும அறிநது கொளளாதபட நெருங்கிய வரிசையையுடையவைகளாகிச செ னறு, பததிரம தலை என - மலைகளின சிகரஙகளென்னவும, மலை திரணடென்ன - மலைகள ஒனறு சேரநதன என்னவும், கொனறு - (அரககாகளைக) கொனறு, பிணம பெருஙகுனறம - பிரேதஙகளாகிய பெரியமலைகளை, பததியில குவிததன - வரிசை யிறகுவியும படிசெயதன

குறிப்பு —தலைகளை ஒருபுறமும உடலகளை 'ஒருபுறமுமாகக குவிததமைதோ னற, 'பததியில' என்றார (௮௰)

காடு கொணடகா ருலவைகள கதழெரி கதுவச
சூடு கொணடன வெனததொடா குருதிமீத தோனற
வாடு கினறன வறுகுறை யயிலமபு விணமே
லோடு கினறன வுயிரையுந தொடாவன வொதத.

இ - ள காடுகொணட கார உலவைகள - நெருக்கமடைநத பெரிய மரககொ மபுகள, கதழ எரி கதுவ -விரைகினற நெருபபுபபறற, சூடுகொணடன என - (அவ வை) வெபபமுற்றன என்னுமபடி, அறு குறை - (தலை) அறற உடற குறை முண டஙகள, தொடா குருதி மீ தோனற ஆகினறன - நெருங்கிய அரததம மேறபடத துளளுகினறன, விணமேல ஓடுகினறன - ஆகாயத்தின மீது விரைநது செலகின றன ஆகிய, அயில அமபு-(ஸ்ரீராமபிரானது) கூரியபாணஙகள, உயிரையும தொட ாவன ஒதத - (உடலைததுணடபபடுததிய மாததிரததிலமையாது) சீவனையுந்தொடா நது செலவதை யொததிருநதன. (௮௧)

கைகள வாளொடு களமபடக கழுததறக கவச
மெயகள போழ்படத் தாளவிழ வெருவிட நிருதா
செயய மாததலை சிநதின திசையுறச சென்ற
தைய லாரநெடு விழியெனக கொடியன சரஙகள.

இ - ள தையலார நெடுவிழி என - பெணகளது பெரியகணகளைபபோல, கொடியன - கொடிய செயலினையுடையனவாகிய, சரஙகள - (ஸ்ரீராமபிரானது) அமபுகள, நிருதா - அரககாகளது, கைகள வாளொடு களமபட - கைகள வாளுடன ரணகளததில (அறபட்டு) வீழுமபடியாகவும், கழுதது அற -கணடம அறுமபடியா கவும், கவசம மெயகள போழபட - கவசததினையணிநத உடலகள பிளவுபடுமபடி யாகவும், தாளவிழ - கால்கள (அறறு) வீழுமபடியாகவும், வெருவிட - (கணடார)

அஞ்சும்படி, செய்யமா தலை - (அவ்வரக்கரது) சிவந்த பெரியதலைகள், சிந்தின - சிதறி, திசை உற - திக்குகளையடையும்படியாகவும், சென்றன - சென்றன

குறிப்பு —செம்மயிர்த்தலையென்பது தோன்றச் 'செய்யமாத்தலை' என்றார். இனி, மாவென்றதுக் கருமையென்ப பொருள்கொண்டு சிவந்தகரியதலை யென்னலுமியையும், "விரிந்த செம்மயிரக் கருந்தலை மலையென வீழ்ந்தான்" என்பர் மேலும் (அஉ)

மாரி யாக்கிய வடிக்கணை வரைபுரை நிருதர்
பேரி யாக்கையின் பெருங்கரை வயின்றொறும் பிறங்க
வேரி யாக்கின யாறுக ளியற்றின நிறையச்
சோரி யாக்கின போக்கின வனமெனுந் தொன்மை.

இ - ள் மாரி ஆக்கிய வடி கணை - மழைபோலும் எவிய கூரிய (ஸ்ரீராமபிரானது) அம்புகள், வரைபுரை நிருதர்போ யாக்கையின் பெருங்கரை - மலையையொத்த அரக்கர்களின்து பெரிய உடல்களாலாகிய பெரியகரைகள், வயின் தொறும் பிறங்க - பக்கங்கள்தோறும் விளங்கும்படி, எரி ஆக்கின - குளங்களைச் செய்தன, யாறுகள் இயற்றின - நதிகளைச் செய்தன, சோரி நிறைய ஆக்கின - (அக்குளங்களினும் நதிகளினும்) இரத்தம் நிறையும்படி செய்தன, வனம் எனும் தொன்மைபோக்கின - காடென்னும் பழைய நிலைமையை நீக்கிவிட்டன (அ௩)

அலைமி தந்தன குருதியின் பெருங்கட லரக்கர்
தலைமி தந்தன நெடுந்தடி மிதந்தன தடக்கை
மலைமி தந்தன வாம்பரி மிதந்தன வயப்போர்ச்
சிலைமி தந்தன கொடியொடு மிதந்தன தேர்கள்.

இ - ள் குருதியின் பெருங்கடல் - பெரிய அரத்தக்கடலில், அலை மிதந்தன - திரைகள் மிதந்துகொண்டிருந்தன, அரக்கர் தலை மிதந்தன - இராக்கதர்களுடைய தலைகள் மிதந்துகொண்டிருந்தன, நெடுந்தடிமிதந்தன - பெரிய தண்டாயுதங்கள் மிதந்து கொண்டிருந்தன, தடம் கை மலைமிதந்தன - மலைபோன்ற பெரிய கைகள் மிதந்துகொண்டிருந்தன வாம்பரி மிதந்தன - தாண்டுகின்ற குதிரைகள் மிதந்து கொண்டிருந்தன, வயம் போர் சிலை மிதந்தன வலியபோர்க்குரிய விற்களும் மிதந்து கொண்டிருந்தன, கொடியொடு தேர்கள் மிதந்தன - துவசங்களுடனே இரதங்கள் மிதந்துகொண்டிருந்தன (அச)

ஆய காலையி னனலவிழித் தார்த்திக லரக்கர்
தீய வாளிகணை முதலிய வடுசினப் படைகள்
மேய தாலவரை யொன்றினை வளைத்தன மேகந்
தூய தாரைகள் சொரிவன வாமெனச் சொரிந்தார்

இ - ள். ஆயகாலையின் - (அங்ஙனம்) ஆகிய காலத்தில், இகல் அரக்கர் - வலிமையையுடைய (சில) அரக்கர்கள், அனல் விழித்து - நெருப்பைப்போலப்பார்த்து, ஆர்த்து - பேரொலி யெழ வீரவார்த்தைகளைப்பேசி, மால் மேய்வரை ஒன்றினை - பெருமை பொருந்திய ஒருமலையை, வளைத்தனமேகம் - சூழ்ந்து கொண்ட மேகங்கள், தூயதாரைகள் சொரிவன என - வெண்மையான நீர்த்தாரைகளைப் பொழிந்தன போல, தீயவாளிகணை முதலிய - கொடிய கெடிய அம்புகள் முதலாகிய, அடுசினம்

படைகள் - கொல்லுங் கோபத்தினையுடைய ஆயுதங்களை, சொரிந்தார் - பொழிந்தார்கள்

குறிப்பு — அனல் எனபுழி உவமவுருப தொக்கதல. மாலவரை - ஸ்ரீராமபிரானுக்கும், மேகம் - அரக்கருக்கும், தாரைகள் - அம்புகளுக்கும் உவமை. மலைமேல் வீழ்ந்ததாரைகளால் மலைக்கு யாதுந் தீங்குநேரிடாது அதுபோல அரக்கர் சொரியுஞ் சரமாரியால் பிரானுக்குச் சிறிதுந் துன்பமில்லை யென்பதாம் (௮௫)

சொரிந்த பலபடை துணிபடத் துணிபடச் சரத்தா
லரிந்து போந்தன சிந்திடத் திசைதிசை யகற்றி
நெரிந்து பார்மகண் முதுகிற வனமுற்று நிறைய
விரிந்த செம்மயிர்க் கருந்தலை மலையென வீழ்ந்தான்.

இ - ள். சரத்தால் - (ஸ்ரீராமபிரான் தனது) அம்புகளால், சொரிந்த பலபடை (அரக்கர்கள் மழையெனப்) பொழிந்த பல ஆயுதங்களும், துணிபட துணிபட - அறுபட அறுபட, அரிந்து - அறுத்துத்தள்ளியும், போந்தன - (மற்றும்) வந்த கணைகளை, திசை திசை சிந்திட அகற்றி - திசைகள் தோறுஞ் சிதறி விழும்படி விலக்கியும், பார்மகள் முதுகு நெரிந்து இற - பூமிதேவியின் முதுகு நொருங்கி யொடியவும், வனம் முற்றும் நிறைய - அடவிமுழுதும் நிறையவும், மலையென (சிரக்குவியல்கள்) மலைகளென்று கூறுமாறு, விரிந்த செம்மயிர் கருந்தலை - (அரக்கரது) பரந்த சிவந்த மயிரினையுடைய கரியதலைகளை, வீழ்த்தான் - அறுத்துத் தள்ளினன். (௮௬)

கவந்த பந்தங்கள் களித்தன குளித்தகைம் மலைகள்
சிவந்து பாய்ந்தவெங் குருதியிற் றிருகிய சினத்தா
னிவந்த வெந்தொழி னிருதர்தந் நெடுநிணந் தெவிட்டி
யுவந்த வன்கழு துயிர்சுமந் துளுக்கிய தும்பர்.

இ - ள் சிவந்து பாய்ந்த - செந்நிறமாயோடிய, வெங்குருதியில் - வெவ்விய அரத்தத்தில், கவந்தம் பந்தங்கள் - உடற்குறை நிரைகள், களித்தன - கூத்தாடின, கைம்மலைகள் குளித்த - யானைகள் மூழ்கிப்போயின, திருகிய சினத்தால் - திருமிய கோபத்தினாலே, நிவந்த - உயர்ந்த, வெந்தொழில் - வெவ்விய (போர்த்)தொழிலைப் புரிந்த, நிருதர்தம் - அரக்கரது, நெடு நிணம் தெவிட்டி - மிகுதியான கொழுப்பினிடத்தில் வெறுப்பினையடைந்து, உவந்த - மகிழ்ந்த, வல் கழுது - வலியபசாசுகள், உம்பர் - ஆகாயத்தில், உயிர் சுமந்து உளுக்கியது - பிராணனைச்சுமந்து கொண்டு கோணி நடந்தன

குறிப்பு — கழுது வயிறு நிறைந்து உடலைச் சுமக்கமாட்டாமல் ஆயாசத்தோடு மெள்ள மெள்ள நடந்ததெனபது தோன்ற உயிர் சுமந்துளுக்கிய தென்றார் (௮௭)

மருட்ட ருங்களி வருசனை வளையெயிற் றரக்கர்
கருட்ட னருசுறு கணமணி காகமுங் கவர்ந்த
விருட்ட ருமபுரத் திழுதையர் பழுதுறப் கெளிதே
யருட்ட ருந்திறந் தறனெனறி வலியதுண் டாமோ

இ - ள். கருடன் (உம்) அஞ்சுறும் - கருடனும் (பறித்தற்கு) அச்சத்தையடைதற்குக் காரணமாகிய, மருள் தரும் களி வஞ்சனை வளை எயிறு அரக்கர் கண்மணி - மயக்கத்தைத் தருகின்ற மதுவுண்ணலுங் களிப்பினையும் வஞ்சகச்செயலையும் வக்கிரதந்தங்களையுமுடைய அரக்கரது கண்ணின் மணிகளை, காகமும் கவர்ந்த - காகங்களுங் கொள்ளையிட்டன, (என்றால்), அருள் தரும் - கருணையைப்புரிகின்ற, திறத்து - மேன்மையையுடைய, அறம் அன்றி - தருமமென்பதல்லாமல், வலியது - வலிமையுள்ளது, உண்டோ - (வேறு) உளதோ? [இல்லை], (ஆதலின்), இருள் தரும் [illegible]ாத்து இழுதையார் - இருளைப்போன்ற உடலையுடைய அறிவீனராகிய அவ்வரக்கர்களிடத்தில், பழுது உற்றது எளிதே - கெடுதிசம்பவித்தற்கு இலேசானதேயாம்.

குறிப்பு — களி - முதனிலை. மருடருங்களி என்னவே கள்ளுண்ணுங் களிப்பாயிற்று. வளை எயிறு - வளைந்த பற்கள், வக்கிரதந்தங்கள். கருடன் என்புழி உயர்வுசிறப்பு உம்மை விகாரத்தால் தொக்கது. காகமும், உம்மை - இழிவுசிறப்பு. ஆம் - அசைநிலை. உண்டாமோ, ஓகாரம் - எதிர்மறை. இருள்தரும், தரும் - உவமவாசகம். (அஅ)

வேறு

பல்லாயிர மிருணீறிய பகலோனென வொளிரும்
வில்லாளனை முனியாவெயி லயிலாமென விழியாக்
கல்லாமழை கணமாமுகில் கடைநாள்விடு வனபோ
லெல்லாமொரு தொடையாவுட னெய்தார்வினை செய்தார்.

இ - ள். பல ஆயிரம் இருள் நீறிய - அநேகவாயிரமாகிய இருட்கூட்டங்களை நீக்கிய, பகலோன் என ஒளிரும் வில்லாளனை - சூரியனைப்போல விளங்குகின்ற வில்வீரனாகிய ஸ்ரீராமபிரானை, (மற்றையரக்கர்களெல்லாரும்), முனியா - வெகுண்டு, வெயில் அயில் என விழியா - பிரகாசம்பொருந்திய வேலாயுதமென்னும்படி (கண்களை உருட்டிப்) பார்த்து), கணம் மா முகில் - கூட்டமாகிய கரிய பெரிய மேகங்கள், கடைநாள் - இறுதிகாலத்தில், ஆர் கல் மழைவிடுவனபோல - அரிய கன்மாரியைச் சொரிவனபோல, எல்லாம் ஒருதொடை ஆ - (கணைகள்) எல்லாவற்றையும் ஒரேதொடர்ச்சியாக, உடன் - ஒரேநேரத்தில் எய்தார் வினைசெய்தார் - எய்துபோர் செய்தார்கள்.

குறிப்பு — பல்லாயிரம் இருள் - இப்போரிலிறந்த பல்லாயிரம் அரக்கர்களுக்கும், பகலோன் - ஸ்ரீராமபிரானுக்கும் உவமை. கல்லார் எல்லாம் என்றுகொண்டு மடையர்களாகிய அரக்கர்களெல்லாரும் என்று பொருள்கூறலும் அமையும். (அகூ)

எறிந்தாரென வெய்தாரென நினைந்தாரென வெறிய
வறிந்தாரென வறியாவகை யயில்வாளியி னறுத்தான்
செறிந்தாரையும் பிறிந்தாரையுஞ் செறுத்தாரையுஞ் சினத்தான்
மறிந்தாரையும் வலித்தாரையு மடித்தான்சிலை பிடித்தான்.

இ - ள். சிலை பிடித்தான் - கோதண்டத்தைப்பிடித்த ஸ்ரீராமபிரான், எறிந்தார் என - (இவர்கள் ஆயுதங்களை) எறிந்தவர்களென்றும், எய்தார் என - (இவர்கள் அம்புகளை) எய்தவர்களென்றும், நினைந்தார் என - (இவர்கள் அம்புகளை எய்ய)

நினைத்தவர்களென்றும், எறிய அறிந்தார் என - (இவர்கள் ஆயுதங்களை) எறியத்தெரிந்தவர்களென்றும், அறியாவகை - (எவரும்) அறியாதவிதமாக, செறிந்தாரையும்- ஒன்று சேர்ந்த கூட்டத்தாரையும், பிரிந்தாரையும் - (தனித்துப் போர்செய்யப்) பிரிந்தவர்களையும், செறுத்தாரையும் - கோபித்தவர்களையும், சினத்தால் மறிந்தாரையும் - (ஓடுகிறவர்களைக்) கோபத்தினாலே தடுத்தவர்களையும், வலித்தாரையும் - (பயந்தவர்களைப் போர்க்கு வரும்படி பிடித்து) இழுத்தவர்களையும், அயில் வாளியின் - (தனது) கூர்மைபொருந்திய பாணங்களினாலே, அறுத்தான் மடித்தான் - அறுத்துக்கொன்றான். (௯0)

வானத்தன கடலின்புற வலயத்தன மதிசூழ்
மீனத்தன மிளிர்குண்டல மிதுனத்தன மிடல்வெங்
கானத்தன மலையத்தன திசைசுற்றிய கரியின்
றானத்தன காகுத்தன சரமுந்திய சிரமே

இ - ள் காகுத்தன் சரம் உந்தியசிரம் - ஸ்ரீராமபிரானுடைய கணைகள் அறுத்துத் தள்ளிய தலைகள், வானத்தன - மேகமண்டலத்தைச் சார்ந்தனவும், கடலின் புறவலயத்தன - கடலினது வெளி வட்டத்தைச்சார்ந்தனவும், மதிசூழ் மீனத்தன- சந்திரனைச் சூழ்ந்திருக்கிற நக்ஷத்திர மண்டலத்தைச் சார்ந்தனவும், மிளிர்குண்டலம் மிதுனத்தன - ஒளிசெய்கின்ற குண்டலத்தையணிந்த மிதுனராசியைச் சார்ந்தனவும், மிடல் வெங்கானத்தன - வலிதான கொடிய கானகத்தைச் சார்ந்தனவும், மலையத்தன - மலைகளைச் சார்ந்தனவும், சுற்றியதிசை கரியின் தானத்தன - (உலகைச்) சூழ்ந்திருக்கிற திக்கு யானைகளினது இடத்தைச் சார்ந்தனவுமாயின (௯௧)

மண்மேலன மலைமேலன மழைமேலன மதிதோய்
விண்மேலன நெடுவேலையின் மேல்கீழன மிடலோர்
புண்மேலன குருதிப்பொழி திரையாறுகள் பொங்கத்
திண்மேருவை நகுமார்பினை யுருவித்திரி சரமே

இ - ள் பொழி குருதி திரையாறுகள் பொங்க - சொரிகின்ற அரத்தமாகிய அலைகளையுடைய நதிகள் மிகும்படி, திண்மேருவை நகுமார்பினை - (அரக்கரது,) வலிய மலைகளை யிகழும் மார்புகளை, உருவி திரிசரம் - உருவிச்சென்று திரிகின்ற (ஸ்ரீராம பிரானது) அம்புகள், மண்மேலன - புவிமேலலையாநிற்பனவும், மலைமேலன - மலைகளின் மேலலையாநிற்பனவும், மழைமேலன - மேகத்தின் மேலலையாநிற்பனவும், மதிதோய்விண் மேலன - சந்திரனுறைகின்ற ஆகாயத்திலலையாநிற்பனவும், நெடுவேலையின் மேல்கீழன - பெரிய கடலினது மேற் புறத்திலும் உட்புறத்திலும் அலையாநிற்பனவும், மிடலோர் புண்மேலன - வலிய அரக்கரது இரணத்தின்மேல் நிற்பனவுமாயின (௯௨)

பொலந்தாரின னலினசிகை பொதிகண்ணின ரெவரும்
வலந்தாங்கிய வடிவெம்படை விடுவார்சர மழையா
லுலந்தாருடல் கடலோடுற வுலவாவுட னூற்று
ரலந்தார்கிசி சராமென விமையோரொடு மாத்தர்.

இ-ள். பொலம் தாரினர் - அழகிய மாலையையுடையவர்களும், அனலின் சிகை பொதி கணையினர் - அக்கினிச்சுவாலை திணிக்கப்பட்டிருக்கிற கணைகளையுடையவர்களும், எவரும் - யாவரும், வலம் தாங்கிய - வலது கரத்திற் பிடித்திருந்த, வடிவெம் படை விடுவார் - கூர்மைபொருந்திய வெவ்விய ஆயுதங்களை எறிபவர்களுமாகி, சரமழையால் - (ஸ்ரீராமபிரானது) பாண வருஷத்தால், உலந்தார் - இறந்தார்கள், உடல் கடலோடு உற - (அவர்கள்) உடல்கள் கடலையடைந்ததால், உலவா உடல் உற்றார் - காயசித்திபெற்ற முனிவர்களும், இமையோரொடும் - தேவர்களும், நிசிசரர் - இராக்கதர்கள், அலந்தார் என - துன்பத்தையடைந்தார்களென்று, ஆர்த்தார் - ஆரவாரஞ்செய்தார்கள். (௧௫)

ஈரற்செறி கமலத்தன விரதத்திரள் புளினம்
வீரக்கரி முதலைக்குல மிதக்கின்றன வுதிக்கும்
பாரக்குடர் மிடைபாசடை படர்கின்றன பலவான
மூரித்திரை யுதிரக்கடல் முழுகிக்கழு தெழலே

இ-ள். மூரி திரை உதிரம் கடல் - வலிய அலைகளையுடைய அரத்தக்கடல்கள், கழுது முழுகி எழ - பசாசுகள் (அவற்றுள்) மூழ்கி கிளம்புவதால், ஈரல் செறி கமலத்தன - ஈரல்களாகிய நெருங்கிய தாமரைமலர்களையுடையனவாகவும், இரதம் திரள் புளினம் - இரதங்களாகிய திரண்ட மணற்குன்றுகளும், வீரம் கரி முதலை குலம் - வலியயானைகளாகிய முதலைக்கூட்டங்களும், மிதக்கின்றன - மிதக்கப்படுகின்றனவாகவும், பாரம் குடர் மிடைபாசடை பல - கனமான குடல்களாகிய நெருங்கிய பசிலைகளநேகம், படர்கின்றன - பரவியிருக்கப்படுகின்றனவாகவும், உதிக்கும் - தோன்றுகின்றன. (௧௬)

அழைத்தார்சில ரயர்ந்தார்சில ரழிந்தார்சிலர் கழிந்தார்
ருழைத்தார்சில ருயிர்த்தார்சில ருருண்டார்சிலர் புரண்டார்
குழைத்தாழ்திரைக் குருதிக்கடல் குளித்தார்சிலர் கொலைவாய்
மழைத்தாரைகள் படப்பாரிடை மடிந்தார்சில ருடைந்தார்

இ-ள். கொலைவாய் மழைத்தாரைகள் பட - கொலைத்தொழில் வாய்ந்த மழைத்தாரைகள் [ஸ்ரீராமபிரானது கணைகள்] வீழ்வதனால், அழைத்தார் - (சில அரக்கர் துன்பஞ் சகியாமல் அய்யா! அப்பா! என்று) அழைத்தும், சிலர் அயர்ந்தார் - சிலர் சோர்வடைந்தும், சிலர் அழிந்தார் - சிலர் (உருத்தெரியாவாறு சித்திரவதை செய்யப்பட்டு) நாசமாகியும், சிலர் கழிந்தார் - சிலர் (வயிறு பேதிக்கப்பட்டு மலமூத்திராதிகள்) கழிதலுற்றும், உழைத்தார் - (சிலர் கைகால்முதலியன இழந்தும் தைரியம் விடாது போர் புரிந்து) பாடுபட்டும், சிலர் உயிர்த்தார் - சிலர் பெருமூச்சு விட்டும், சிலர் உருண்டார் - சிலர் (அரத்தப்பிரவாகத்தில்) உருளலுற்றும், சிலர் புண்டார் - சிலர் (நிலத்தில் வீழ்ந்து பிராணாவஸ்தையோடு) புரளுதலுற்றும், குழைத்து - (பிணமுதலியவை) ஒன்றாய்க்கலக்கப்பட்டு ஆழ் - ஆழ்ந்திருக்கிற, திரை குருதி கடல் - அலைகளையுடைய அரத்தக்கடலிலே, சிலர் குளித்தார் - சிலர் மூழ்கியும், பாரிடை மடிந்தார் - புவியினிடத்தே யிறந்தார்கள்; சிலர் உடைந்தார் - சிலர் ஓட்டங்கொண்டார்கள். (௧௭)

உடைந்தார்களை நகைசெய்தன ருருடேரின ருடனுற்
யடைந்தார்படைத் தலைவீரர்கள் பதினாலவரு மயில்வாளர்

உடைந்தார்நெடுங் கடற்றானையர் மிடல்விலினர் விரிநீர்
கடைந்தார்வெரு வுறமீதெழு கடுவாமெனக் கொடியார்

இ-ள். உடைந்தார்களை நகை செய்தனர் - (அவ்வாறு) ஓட்டங்கொண்ட வரக்கர்களை (நோக்கிச்) சிரித்தவர்களும், உருள் தேரினர் - உருண்டு செல்கின்ற தேரினையுடையவர்களுமாகிய, படைத்தலை வீரர்கள் பதின்மரும் - சேனாதிபதிகளாகிய பதின்மர்களும், அயில் வாள் மிடைந்தார் - கூர்மை பொருந்திய வாளாயுதங்களை நெருங்கக்கொண்டவர்கள், மிடல் விலினர் - வலிய விற்களையுடையவர்கள், விரி நீர் கடைந்தார் - விரிந்த பாற்கடலைக் கடைந்த தேவாசுரர்கள், வெருவு உற - அச்சமடையும்படி, மீது எழு கடு என கொடியார் - மேலே யெழுந்த விஷத்தைப்போன்ற கொடியவர்களாகிய, நெடும் கடல் தானையர் - பெரிய கடல் போன்ற சேனைவீரர்களும், உடன் ஆய அடைந்தார் - (சற்றுந்தாமசியாமல்) உடனே வந்து சேர்ந்தவர்களாய். (௮௯)

நாகத்தனி யொருவில்லியை நளிர்முப்புரர் முன்னாள்
மாகத்திடை வளைவுற்றன ரெனவள்ளலை மதியா
ராகத்தெழு கனல்கண்வழி யுகவுற்றெதி ரழன்றார்
மேகத்தினை நிகர்வில்லியை வளைத்தார்செரு விளைத்தார்

இ-ள். முன் நாள் - ஆதிகாலத்தில், நாகம் தனி ஒரு வில்லியை - மலையாகிய ஒப்பற்ற ஒரு வில்லினையுடைய சிவபெருமானை, மாகத்து இடை - ஆகாயத்தின் கண், வளைவு உற்றனர் நளிர் முப்புரர் என - வளைத்துக்கொண்டவர்களாகிய பெருமையையுடைய திரிபுரத்தவர்களைப்போல, வள்ளலை மதியார் - ஸ்ரீராமபிரானை மதியாதவர்களாகியும், ஆகத்திடை எழு கனல் - (தனது) மனத்தினின்றெழுந்த நெருப்பு, கண் வழி உக - கண்ணின் வழியாகச் சிந்தும்படி, எதிர் உற்று - எதிர் வந்து, அழன்றார் - கோபித்தவர்களாகியும், மேகத்தினை நிகர் வில்லியை - மேகத்தை யொத்த வில்லினையுடைய ஸ்ரீராமபிரானை, வளைத்தார் செரு விளைத்தார் - வளைத்துப் போர் செய்தார்கள். (௯௰)

எய்தார்பல ரெறிந்தார்பலர் மழுவோச்சின ரெழுவாற்
பொய்தார்பலர் புடைத்தார்பலர் கிடைத்தார்பலர் பொருப்பாய்ப்
பெய்தார்மழை பிடித்தாரெரி பிறைவாளெயிற் றரக்கர்
வைதார்பலர் தெழித்தார்பலர் மலையாமென வளைத்தார்.

இ-ள் எரி பிறை வாள் எயிறு அரக்கர் - பிரகாசிக்கின்ற இளஞ்சந்திரனைப்போலும் ஒளிதங்கிய வக்கிரதந்தங்களையுடைய அரக்கர்களில், எய்தார் (பலர் அஸ்திரங்களை) எய்தார்கள், பலர் எறிந்தார் - பலர் (சஸ்திரங்களை) வீசினார்கள், பலர் மழு ஓச்சினர் - பலர் மழுவாயுதங்களைச் செலுத்தினார்கள், எழுவால் பொய்தார் - (பலர்) வளைதடிகளால் விளையாடினார்கள், பலர் புடைத்தார் - பலர் அடித்தார்கள், பலர் கிடைத்தார் - பலர் எதிர்த்தார்கள், பலர் பொருப்பு ஆய் பெய்தார் - பலர் மலைகளாகப் பொழிந்தார்கள், மழைபிடித்தார் - (பலர் மேகங்களைப் பிடித்துப் பிசைந்து) மழைசொரியச் செய்தார்கள், வைதார் - (பலர்) வைதார்கள், பலர் தெழித்தார் - பலர் அதட்டினார்கள், பலர் மலை என வளைத்தார் - பலர் மலைகளைப்போலச் சூழ்ந்துகொண்டார்கள்.

குறிப்பு — எய்தார் என்னும் வினையின் உரிமைபற்றி அஸ்திரங்களையும், எறிந்தார் என்னும் வினையின் உரிமைபற்றிச் சஸ்திரங்களையும் கூறினர், "அஸ்திரம் விடுபடை", "சஸ்திரம் விடாப்படை" என்பவாகலின். பொய்த்தல் - மகளிர் விளையாட்டின் பெயர், வளைதடிகள் வீசியெறிந்ததில் யாதும் பெருமையில்லையென்பார் 'பொய்த்தார்' என்றார். இடைத்தல் - இடுதலுமாம். ஆ - ஆக என்பதன் விகாரம். எயிற்றுக்குப் பிறையை உவமைகூறவே பிறைபோலும் வளைவினையுடைய வக்கிரதந்தங்களாயிற்று. (௧௮)

தோட்பூண்டன விலங்கியாவையுஞ் சிலைபூண்டெழு கொலைபாற்
பார்பூண்டன மதமாகரி பலிபூண்டன பரிமாத்
தார்பூண்டன வுடல்பூண்டில தலைவெங்கதிர் தழீஇவந்
தூர்பூண்டன பிரிந்தாலென விரிந்தாருயி ருலந்தார்

இ - ள். சிலைபூண்டு எழு கொலைபால் - (ஸ்ரீராமபிரானது) வில்லிற் பொருந்தி யெழுந்த கொலைத்தொழிற் கணைகளால், தோள்பூண்டன - தோள்கள் கொண்டனவாகிய, விலங்கு யாவையும் - மிருகங்களனைத்தும், பார்பூண்டன - புவி பூண்டனவாகிய, மதமாகரி - மதம் பொருந்திய பெரியயானைகளும், பலிபூண்டன - கொல்லப்பட்டன, தார் பூண்டன பரிமா - அணி வகுக்கப்பட்டனவாகிய குதிரைகளினது, உடல் - உடல்கள், தலை பூண்டில - சிரங்கள் பெற்றிருக்கவில்லை, வெங்கதிர் தழீஇவந்து - சூரியனை நெருங்கிவந்து, ஊர் பூண்டன - பரிவேடங்கள் சூழ்ந்தவை, பிரிந்தால் என - விலகினாற்போல, விரிந்தார் - அகன்ற அரக்கர்கள், உயிர் உலந்தார் - உயிர் நீங்கினார்கள்.

குறிப்பு — தோள் பூண்டன விலங்கியாவையும் என்றது - தோள்களிற் கட்டப்பட்ட யானை, குதிரை, சிங்கம், யாளி, நாய், நரி முதலியவற்றை. இவற்றுள் யானையும் குதிரையும் அடங்கியிருப்பதால் அவ்வனம் தேரிற் பூட்டப்படாத யானைகளென்பதும் குதிரைகளென்பதும் விளங்க 'பார் பூண்டன' 'தார் பூண்டன' என்று கூறினர். கொலை - கொல்வது, ஐ - கருவிப்பொருள் விகுதி. இது தொழிலாகு பெயராய் அம்பினை யுணர்த்தி நின்றது. இக்கொலையென்னும் சொல் கருவிப்பொருள் விகுதிகெட்டு முதனீண்டு 'கோல்' என நின்று அம்பின் பெயராய் வருதலுமுண்டு. விரிந்தாருயிருலந்தார் என்றதை இரிந்து ஆருயிர் உலந்தார் என்று பிரித்துப்பொருள் கோடலுமாம், இரிதல் - ஓடுதல் தழுவி - தழீஇயென விகாரப்பட்டது.

மால்பொத்தின மறவோருடன் மழைபொத்தின வழிசெம்
பால்பொத்தின நதியிற்கிளர் படிபொத்தின படர்வான்
மேல்பொத்தின குழுவிண்ணவர் விழிபொத்தினர் விரைவெங்
கால்பொத்தினர் நமன்றூதுவர் கடிதுற்றுயிர் கவர்வார்

இ - ள். மால்பொத்தின - மயக்கம் நிரம்பிய, மறவோர் உடல் - வீரராகிய அரக்கர்களின் உடலில், மழைபொத்தின வழி - சரமாரி துளைத்த துவாரங்களை, செம்பால்பொத்தின - அரத்தங்கள் மூடினவாய், நதியில் - நதியைப்போல, கிளர் - நிறைந்து, படிபொத்தின - புவியைமறைத்தன, படர்வான்மேல் பொத்தின குழுவிண்ணவர் - அகன்ற ஆகாயத்தின்மேல் நிறைந்த கூட்டமாகிய தேவர்கள், விழிபொத்தினர் - கண்களை மூடினார்கள், நமன்தூதுவர் கடிது உற்று உயிர் கவர்வார் - யமன

து தூதுவர்கள் விரைவிற் சார்ந்து உயிர்களைப்பிடித்து, விரை வெங்கால் பொதி னார் - விரைந்தோமே (தமது) வெவ்விய கால்களை (வலிந்கப்) பிடித்தார்கள்

குறிப்பு—மால் - தப்பிப்பிழைக்க வழிகாணாது கொண்டமயக்கம். பொதுதல் - மூடுதல், புரைதல், பொருள் எனும் மருங்கி லுரை வேறுபட்டது. மழை - உவமவாகுபெயராய் மழைபோலுமேவிய கணைகளையுணர்த்தியது. இளா - இளாந்து என்பதன் விகாரம். அரக்கர் இறந்து வீழ்ந்த கோரத்தைப்பார்க்க அஞ்சினவராய் விண்ணவர் விழிபொத்தினர் எனக. நமன் தூதுவர் கால் பொத்தியதால் இறந்தவர ளவிறந்தோரென்பது பெறப்படும். செம்பால் - அரத்தம், "செந்நீர் சோரி நெய்த்தோர் செம்பால், புண்ணீர் சுவேல புலானீர் சோணித, மூதிரம் குருதி கறையிரத்தப் பெயர்" இது பிங்கலந்தை (௬00)

பேயேறின செருவேட்டெழு பித்தேறினர் பிலவாய்
நாயேறின தலைமேனெடு நரியேறின வெரிகால்
வாயேறின வடிவாளியின் வானேறினர் வந்தார்
தீயேறிக லரியேறென முகிலேறெனச் செறிந்தார்.

இ - ள் பேய் ஏறின - பசாசுகள் மிகுந்துள்ள, செருவேட்டு - போரினை விரும்பி, எழு பித்து ஏறினர் - பிறந்த பைத்தியமிகுந்த (சில) ராக்ஷஸர்களுடைய, பிலவாய் - குகைபோன்ற வாய்களில், நாய் ஏறின - நாய்களேறின, தலைமேல் - (அவர்களினது) சிரங்களின்மேல், நெடுநரி ஏறின - பெருநரிகள் ஏறின, எரிகால் வாய் ஏறினவடி - நெருப்பைக் கக்குகின்ற வாயினிடத்தே யேறிய கூர்மையையுடைய, வாளியின் (ஸ்ரீராமபிரானது) அம்புகளால், வான் ஏறினர் - (அச்சத்தையடைந்து ஒளிதற்பொருட்டு) மேகத்தின்மேலேறினின்ற (சில) அரக்கர்கள், (மறுபடியும் போர்செய்யத்துணிந்து), தீ ஏறு - பெருநெருப்பைப் போலவும், இகல் அரி ஏறு என - பகைத்த ஆண்சிங்கம்போலவும், முகில் ஏறு என - மேகத்தின் இடியைப்போலவும், வந்தார் செறிந்தார் - வந்து நெருங்கினார்கள்

குறிப்பு—பேயேறின, வாயேறின - பெயரெச்சங்கள். வந்தார் - முற்றெச்சம். பேயேறின செரு என்றது - எதிர்த்தோரனைவரும் வென்று மீளவலியில்லராய் இறந்ததுபோல எதிர்ப்போரனைவரும் இறப்பரென்பது விளங்கற்கு. இப்போரினைக் கண்டு சென்றோரனைவரு மிறந்ததுணர்ந்தும் மறவாமையோர் போர்க்கிச்சைகொண்டது அறிவீன மென்பார் 'பித்தேறினர்' என்றார். வாளியின் வானேறினர் தலைமேல் நரியேறின என்று கூட்டிப் பொருள்கோடலுமாம், ஈண்டு, வானேறினர் - இறந்தோர். இப்பொருட்கேற்பச் செறிந்தார் வந்தார் என்று முடிக்க, ஈண்டு செறிந்தார் - பெயர். வந்தார் - வினைமுற்று (௬0௪)

தலைசிந்தின விழிசிந்தின தழல்சிந்தின தரைமேல்
மலைசிந்தின படிசிந்தின வரிசிந்துர மழைபோற்
சிலைசிந்தின கணைசிந்தின திசைசிந்தின திசையோ
டுலைசிந்தின பொறிசிந்தின வுயிர்சிந்தின வுடலம்

இ - ள் (அவ்வாறு வந்து செறிந்த அரக்கர்களது), தலை சிந்தின - தலைகள் சிதறின, விழிசிந்தின - கண்கள் சிதறின, தழல் சிந்தின - (அக்கண்களினின்றும்)

அககினி சிதறின, தரைமேல மலைசிநதினபடி - புவிமேல மலைகள் சிதறியபடி, வரி சிநதுரம சிநதின - கலலணை கட்டிய யானைகள சிதறின, மழைபோல சிலைசிநதின கணை சிநதின - மேகஙகளைபபோல விலலுகள சிநதிய அமபுகள சிதறின, திசைசிநதின - திககுககளிடிநது சிதறின, திசையோடு - அததிககுககளுடனே, உலை சிநதின - கொலலுலையிற சிதறினபோல, பொறிசிநதின - அககினிபபொறிகள சிதறின, உடலம உயிா சிநதின - உடலகள உயிரை நீஙகின (௪0௨)

வேறு

படைபபெருந தலைவரும படைதத தோகளு
முடைததடம படைகளு மொழிய வுறறெதிா
விடைததடாந தெதிாநதவா வீரன வாளியான
முடைததவெங குருதியின கடலின மூழகினா

இ - ள படை பெருநதலைவரும - பெரிய சேனாதிபதிகளாகிய பதினைகு பேரும, படைதத தோகளும - அவாகள கொணட இரதஙகளும, உடை தடம படைகளும - அவாகளுடைய பெரிய ஆயுதஙகளும், ஒழிய - நீஙகலாக, எதிா உறறு - (ஸ்ரீராமபிரானுககு) எதிரேவநது, விடைதது - கோபிதது, அடாநது - நெருஙகி, எதிாநதவா - எதிாதத அரககாகள, (மேறகூறியவாறு), வீரன வாளியால - ஸ்ரீராமபிரானது அமபுகளால, (இறநது), முடைதத - புலால நாறறம வீசாநினற, வெங குருதியின கடலில - வெவவிய அரததககடலில, மூழகினா - ஆழநதபோனாாகள ()

சுறறுற நோககினா தொடாநத சேனையி
லறறில தலையெனு மாககைக கணடிலா
தெறறின ரெயிறுக டிருகி னாசின
முறறின ரிராமனை முடுகு தேரினா.

இ - ள சுறறநோக்கினா - (படைததலைவா பதினாலவரும) எடடுததிசைடனு சேரபபாாதது, தொடாநத சேனையில - தொடாநதுவநத (தமது) சேனைகளில, தலை அறறில எனும ஆககைககணடிலா - தலை யறுபடவிலலையென்று சொலலும உடலைக கணடாாகளிலலை, (அதனால), தெறறினா - (மனநிலை) மாறுபடடவாகளாய, எயிறுகள திருகினா - பறகளை நெறுநெறெனக கடிதது, சினம முறறினா கோபமுதிரககொணடு, இராமனை முடுகுதேரினா - ஸ்ரீராமபிரானைககிட்டிய தோனையுடையவராறுாாகள

குறிபபு—சுறறுறநோககல - கணபாாவை எலலாததிககுககளிலுஞ செலலும படி திருமபிததிருமபிப பாாததல சுறறு - முதனிலை தலையோடுகூடிய உடல அவாகள கணகளுககுப புலப்படவில்லை, முறறுஙகவநதமாயிறறு எனறபடி பறகளைக கடிததுத திருகுதலால எழுமோசையை நோககி நெறுநெறெனககடிதது எனறு கூறினும ஆககை - யாககை யெனபதன மரூஉ (௪0௪)

எழிரு தேருமவந திமைபபின் முனபிடைச
சூழவன கணைகளிற றுணிய நூறினு
னாழியும புரவியு மாளு மறறவை
யூழிவெங காலெறி யோஙக லொததவே.

இ-ள். வந்து இடை சூழ்வன - வந்து பக்கத்தே சூழ்ந்துகொண்டனவாகிய, ஏழ் இருதேரும் - (அச்சேனாதிபதிகளுடைய) பதினான்கு தேர்களும், இமைப்பின் முன்பு - கண்மூடித் திறப்பதற்கு முன்னே, துணியநூறினன் - சின்னபின்னமாம்படி (ஸ்ரீராமபிரான் தனது கணைகளால்) அழித்தான், (அக்கணைகளின் செயலால்), ஆழியும் - (அத்தேர்களினது) சக்கரங்களும், புரவியும் - குதிரைகளும், ஆளும் - தேர்ப்பாகர்களும், மற்றவை - (கொடி கொடிஞ்சி முதலிய) மற்றவைகளும், ஊழி வெங்கால் - ஊழி காலத்திற் பிறக்கும் கொடிய காற்றானது, எறி - (எடுத்து) வீசுகின்ற, ஓங்கல் ஒத்த - மலைகளை ஒத்திருந்தன (௪0௫)

அழிந்தன தேர்வ ரவனி கீண்டுக
விழிந்தனர் வரிசிலை யெடுத்த கையின
ரொழிந்திலர் சரங்களை யுருமி னேறெனப்
பொழிந்தனர் பொழிகனல் பொடிக்குங் கண்ணினார்

இ-ள். அழிந்தன தேரவர் - (அவ்வாறு) அழிந்த தேரினையுடையாராகிய சேனாதிபதிகள் பதினால்வரும், அவனி கீண்டு உக இழிந்தனர் - புவி பிளந்து விடும்படி இறங்கி, வரிசிலை எடுத்தகையினர் - கட்டமைந்த வில்லினை யெடுத்த கையினையுடையவராய், ஒழிந்திலர் - ஓயாமல், சரங்களை - அம்புகளை, உருமின் ஏறு என - பேரிடி யென்னும்படி, பொழிந்தனர் - பெய்து, பொழி கனல் பொடிக்கும் கண்ணினார் - சொரிகின்ற நெருப்பினாலே (எதிர்ப்பட்டனவற்றைத்) தூளாக்குகின்ற கண்களையுடையவர்களானார்கள் (௪0௬)

நூறிய சரமெலா நுறுங்க வாளியா
லீறுசெய் தவர்சிலை யேழொ டேழையு
மாறினொ டாறுமோ ரிரண்டு மம்பினாற்
கூறுசெய் தமர்த்தொழிற் கொதிப்பை நீக்கினான்.

இ-ள். நூறிய சரம் எலாம் - (திசைகளை) நாசப்படுத்திய (அவ்வரக்கர்களுடைய) கணைகளெல்லாம், நுறுங்க - பொடியாகும்படி, வாளியால் - (ஸ்ரீராமபிரான் தனது) கணைகளால், ஈறுசெய்து - தொலைத்து, அவர் சிலை ஏழொடு ஏழையும் - அவ்வரக்கர்களுடைய விற்கள் பதினான்கையும், ஆறினோடு ஆறும் ஓர் இரண்டும் அம்பினால் - பதினான்கு சரங்களால், கூறுசெய்து - துண்டித்து, அமர் தொழில் - போர்ச் செயலினது, கொதிப்பை நீக்கினான் - கொதிப்பை மாற்றினான் (௪0௭)

வில்லிழந் தனைவரும் வெகுளி மீக்கொளக்
கல்லுயர் நெடுவரை கடிதி னேந்தினா
ரொல்லையி லுருத்துயர் விசும்பி னோங்கினின்
றெல்லுயர் பொறியுக வெறிந்தன மேயினார்

இ-ள். அனைவரும் - (அப்படைத்தலைவர்) எல்லாரும், வில் இழந்து - விற்களை யிழந்து, வெகுளி மீக்கொள - கோபம் அதிகரிக்க, (அதனால்), கல் உயர் நெடுவரை - மலைகளிலுயர்ந்த பெரியமலைகளை, கடிதின் - விரைவில், ஏந்தினார் - (கையிற்) பிடித்தவர்களாய், ஒல்லையில் - விரைவில், விசும்பின் நின்று - ஆகாயத்

திலை சீறிக்கொண்டு, எல் உயர் பொறி உக - சூரியனது உயர்ந்த இரதம் பொடியாகும்படி, ஓங்கி - (மலைகளையேந்திய கைகளை) உயர்த்தி, உருத்து எறிதல் மேயினார் - கோபித்து (அம்மலைகளை) வீசி எறிந்தார்கள் (௧௦௮)

கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியா
னிலைகொள்வெம் பகழியே யிரண்டு வாங்கினான்
கொலைகொள்வெஞ் சிலையொடு புருவங் கோட்டினான்
மலைகளுந் தலைகளும் விழுந்த மண்ணினே.

இ - ள் கலைகளின் பெருங்கடல் - சாஸ்திரங்களாகிய பெரியகடலை, கடந்த - தாண்டிய, [கற்றுத்தேர்ந்த] கல்வியான் - படிப்பாளியாகிய ஸ்ரீராமபிரான், கொலைகொள்வெஞ்சிலை யொடு புருவம் கோட்டினான் - கொல்லுந் தொழிலைக் கொண்டிருக்கிற வெவ்விய வில்லையும் புருவத்தையும் வளைத்து, நிலைகொள் - நிலை வடிவினைக்கொண்டிருக்கின்ற, வெம் பகழி எழு இரண்டு - வெவ்விய பாணங்கள் பதினான்கை, வாங்கினான் -(தூணீரத்திலிருந்து) எடுத்தான், (அவ்வளவில்), மலைகளும் (அசரேந்திபதிகள் கைக்கொண்ட) மலைகளும், தலைகளும் -(அவர்கள்) சிரங்களும், மண்ணின் விழுந்த - புவியில்விழுந்தன

குறிப்பு —கலைகள் - தநுர்வேத முதலிய நூல்கள். நிலை - அரசிலையும் வெப்பிலையுமாம் கணைகள் எடுக்கவே மலைகளும் தலைகளும் விழுந்தன என்றது—கரவேகமுஞ் சரவேகமும் விளங்கற்கு 'கோபத்தோடு ஆகாயத்தை நோக்கினானென்பார் புருவங் கோட்டினான்' என்றார் (௧௦௯)

படைத்தலைத் தலைவர்கள் படலும் பல்படை
புடைத்தடர்ந் தெதிரழல் புரையுங் கண்ணினர்
கிடைத்தனர் ரக்கர்கள் கீழு மேலுமா
யடைத்தனர் திசைகளை யமரர் அஞ்சினார்.

இ - ள். படை தலை தலைவர்கள் படலும் -சேனைக்கு முதன்மையான தலைவர்கள் பதினாலவரும் இறந்த அளவில், அரக்கர்கள் - (மற்றும்) இராக்கதர்கள், பல படை புடைத்து - பல ஆயுதங்களைவீசி, அடர்ந்து - நெருங்கி, எதிர - (ஸ்ரீராமபிரானுக்கு, முன்னே, அழல் புரையும் கண்ணினர் -நெருப்பு வெளிப்படுகின்ற கண்களையுடையவர்களாயும், கீழும் மேலும் ஆய - புவியிலும் ஆகாயத்திலும் (நிறைந்தவர்கள்) ஆகி, திசைகளை அடைத்தனர்- திக்குக்களெல்லாவற்றையும் மூடிவிட்டவர்களாயும், கிடைத்தனர் - கிட்டினார்கள், (அதுகண்டு), அமரர் அஞ்சினார் - தேவர்கள் பயந்தார்கள் (௧௧௦)

முழங்கின பெரும்பணை மூரி மால்கரி
முழங்கின வரிசிலை முடுகு நாணொலி
முழங்கின சங்கொடு புரவி முற்றுற
முழங்கின வரக்கர்த முகிலி னாப்பரோ.

இ - ள். பெரும்பணை மூரிமால் கரி முழங்கின - பெரிய முரசுகளும் பெரிய யானைகளும் பேரொலி செய்தன; வரிசிலை முடுகு நாண் ஒலி முழங்கின - கட்டமை

ந்த விற்களினிடத்தே விரைந்து பூட்டப்படுகின்ற நாண்களின் ஓசைகள் முழங்கா நின்றன, சங்கொடு புரவி முழங்கின - (வீரர்கள் கைக்கொண்ட) சங்குகளுங் குதிரைகளும் முழங்காநின்றன, அரக்கர்தம் முகிலின் ஆர்ப்பு - இராக்கதர்களுடைய மேகக்கர்ச்சனைபோன்ற பேரொலிகள், முந்து உற முழங்கின - குறைவில்லாவாறு முழங்காநின்றன

குறிப்பு — பணை - மற்றை வாச்சியங்கட்கு உபலக்கணம். பணைகரி முழங்கின வென்வே பணை, யானைமேல் ஏற்றப்பட்டதென்பதாம், 'ஓங்கனமேன மழையென மார்பு செற்றதிர்'' எனக்கீழ்க்கூறியது கண்டுணர்க. சங்கொடு புரவி எனவே குதிரைமேலேறிய வீரர்களைக்குறிப்பித்தது. ஆர்ப்பு-மாத்திரை யிறந்த சப்தம். முழங்கல்-பலவகையான சப்தங்களுமொன்று சேர்ந்து கிளம்பும் ஒலி. வீரர்தமது ஆண்மையையும் தமதே வெற்றியென்பதையும் விளக்கவும் சேனைகள் பின்னிடாது முன்னின்று போர்புரிதற்கு உற்சாக முண்டாக்கவும் சங்கநாதம் புரிவரென்பதுணர்க. சங்கநாதம் உத்தமமான விசையோடு கூட்டப்படுவது, ''துயமொழி மென்குயிலுஞ் சோலைவரி வண்டினமும், கையமுழங்கும் வலம்புரியுங் - கையுத்தத-, தும்புருவு நாரதரும் பாடியழு வோசைபெண் நம்பீர நாலவேதத் தன்'' என்று இசை மரபுடையார் கூறினாராகலின். மூரிமால் -ஒருபொருட்பன்மொழி, ''முன்னா முரசிரங்க மூரிக் கடற்றானை'' என்புழி மூரி - பெருமையாதல்காண்க. இனி, பெரியகரியயானை யென்னுமாம், மால் - கருமை. (ககக)

வேறு

வெம்படை நிருதர் வீச விண்ணிடை மிடைந்த வீர
னம்பிடை யறுக்கச் சிந்தி யற்றன படுமென் றஞ்சி
யும்பரு மிரியல் போனா ருலகெலா முலைந்து சாய்ந்த
கம்பமி றிசையி னின்ற களிறுங்க ணிமைத்த வன்றே.

இ - ள். வெம்படை - கொடிய ஆயுதங்களை, நிருதர்வீச - இராக்கதர்கள் வீசி எறிந்ததால், விண் இடைமிடைந்த - (அவைகள்) ஆகாயத்தில் நெருங்கின, வீரன் அம்பு - ஸ்ரீராமபிரானது கணைகள், இடை அறுக்க - நடுவே (புகுந்து) அறுப்பதால், சிந்தி அற்றன - சிதறி அறுபட்ட அவ்வாயுதங்கள், படும் என்று அஞ்சி (தம்மேல்) வீழும் என்று பயந்து, உம்பரும் - தேவர்களும், இரியல்போனார் -ஓடிப்போனார்கள், உலகு எல்லாம் உலைந்து சாய்ந்த - உலகமுழுதும் அழிந்து சரிவுற்றன, கம்பம் இல - அசைதலில்லாத, திசையில் நின்ற களிறும் - திக்குக்களில் நின்ற (அஷ்ட) கஜங்களும், கண் இமைத்த - கண்களை மூடித்திறந்தன (ககஉ)

வேறு.

அத்தலைத் தானைய னளவி லாற்றலன்
முத்தலைக் குரிசில்பொன் முடியன் முக்கணன்
கைத்தலைச் சூலமே யனைய காட்சியான்
வைத்தலைப் பகழியான் மழைசெய் வில்லினன்.

இ - ள். அத்தலை தானையன் - முதன்மையான அச்சேனையையுடையவனும், அளவில் ஆற்றலன் - அளவில்லாத வலிமையையுடையவனும், பொன்முடியன் -

பொன்னினாலாகிய மகுடத்தையுடையவனுமாகிய, மூ தலை குரிசில் - மூன்று சிரங்களையுடைய பெருமையிற் சிறந்த திரிசிரனென்பவன், முக்கணான் கைத்தலை சூலமே அனைய காட்சியான் - மூன்று கண்களையுடைய சிவபிரானது கையினிடத்தேயுள்ள திரிசூலத்தையே ஒத்த தோற்றத்தையுடையவன், (மற்றும்), வை தலை பகழியால் - கூர்மைபொருந்திய நுனியினையுடைய அம்புகளால், மழைசெய் - மழையைச் செய்கின்ற, வில்லினான் - வில்லினையுடையவன் (௧௧௩)

அன்னவ னடுவுற வாழி யூழியி
தென்னவந் தெங்கணு மிரைத்த சேனையுட
டன்னிகா் வீரனுந் தம்பியன் வில்லினன
றுன்னிரு ளிடையதோா் விளக்கிற் றோன்றினான்

இ - ள். அன்னவன் நடு உற - அத்தகைய திரிசிரன் நடுவேவர, ஊழி ஆழி சது என்ன - பிரளயகாலசமுத்திரம் இதுவென்று சொல்லும்படி, வந்து, எங்கணும் - எவ்விடத்தும், இரைத்த - பேரொலிசெய்த, சேனை உள் - சேனைக்கு நடுவே, தன் நிகா் வீரனும் - தன்னைத்தானே ஒத்த வீரனாகிய ஸ்ரீராமபிரானும், தம்பியன் - தனித்த வனாகவும், வில்லினன் - ஒரே வில்லினையுடையவனாகவும், (நின்று), துன் இருள் இடையது ஓா் விளக்கில் தோன்றினான் - நெருங்கிய இருளுக்கு மத்தியிலிருப்பதாகிய ஒரு விளக்கைப்போலக்காணப்பட்டான் (௧௧௪)

ஓங்கொளி வாளின னுருமி னாா்ப்பினன்
வீங்கிய கவசத்தன் வெய்ய கண்ணினன்
ஆங்கவ னணிக்கெதி ரணிக ளாகநோ
தாங்கினன் இராமனுஞ் சரத்தின் றானையால்

இ - ள். ஆங்கு - அவ்விடத்தில், இராமனும் - ஸ்ரீராமபிரானும், ஓங்கு ஒளி வாளினன் - மிகுந்த பிரகாசமுள்ள வாளாயுதத்தையுடையவனும், உருமின் ஆா்ப்பினன் - இடியைப்போலும் பேரொலியையுடையவனும், வீங்கிய கவசத்தன் - பருத்த கவசத்தையுடையவனும், வெய்ய கண்ணினன் - கொடியகண்களையுடையவனுமாகிய, அவன் - அத்திரிசிரனது, அணிக்கு - படைவகுப்புகளுக்கு, எதிா் - முன்னே, அணிகள் ஆக - படைவகுப்புகளாக, சரத்தின் தானையால் - அம்புகளாகிய சேனையினாலே, நோ் தாங்கினன் - உவமைதாங்கினன் [சமத்துவமுடைமைகாட்டினான்], (௧௧௫)

தாளிடை யற்றன தலையு மற்றன
தோளிடை யற்றன தொடையு மற்றன
வாளிடை யற்றன மழுவு மற்றன
கோளிடை யற்றன குடையு மற்றன

இ - ள். (அவ்வாறு நிறுத்திய சரத்தானையால்), தாள் இடை அற்றன - கால்கள் நடுவே யறுபட்டன, தலையும் அற்றன - சிரங்களும் அறுபட்டன, தோள் இடை அற்றன - புயங்கள் நடுவேயறுபட்டன, தொடையும் அற்றன - சரங்களு மறுபட்டன; வாள் இடை அற்றன - வாளாயுதங்கள் நடுவே யறுபட்டன, மழு

வும் அற்றன - பாசாயுதங்களும் அறுபட்டன, கோள் இடை அற்றன - வலிய இடைகள் அறுபட்டன, குடையும் அற்றன - கவிகைகளும் அறுபட்டன.

குறிப்பு — கோளிடையற்றன என்றது - அரக்கரது வலியதிமைகளிடையே யறுபட்டன என்னலும் பொருந்தும், ஸ்ரீ ராமபிரானது கணைகள் அரக்கர் உயிர்களையும் அவர் பாவங்களையும் நீக்குந் தகைமையையுடையனவென்னுந் துணிப்புபற்றி இங்ஙனங் கூறினரென்க; "தெரிகணை மூழ்கலிற் றிறந்த மார்பின, ரிருவினைகடந்துபோய" என மேல்வருஞ் செய்யுளை யீண்டுநோக்குக. கோள்+இடை+அறு+அன்ன+குடையம் எனக் கண்ணழித்து, சந்திரன் (இருகூறாய்) இடையே யற்று வீழ்ந்தாற்போலக் குடைகளும் அற்றன என்று பொருள்கோடலுமாம், குடைக்குவமை நோக்கிக் கோளினைச் சந்திரனென்று கூறினும். (௧௧௬)

கொடியொடு கொடுஞ்சினப் புரவி கூட்டறப்
படியிடைப் படிந்தன பருத்த தேர்பணை
நெடியவன் கட்கரி புரண்ட நெற்றியி
னிடியொடு முறிந்துவீழ் சிகர மென்னவே

இ - ள். பருத்ததேர் - பெரிய இரதங்கள், கொடியொடு - கொடிகளுடனே கொடுஞ்சினம் புரவி - கொடிய கோபத்தையுடைய குதிரைகளினது, கூட்டு அற - கூட்டங்கள் அற்று, படியிடை - புவியில், படிந்தன - வீழ்ந்தன, பணை - முரசுகளையுடைய, நெடிய வல் கடம் கரி - பெரிய வலிய மதம் பொருந்திய யானைகள், நெற்றியில் - உச்சியில், இடியொடு - இடியினோடு, முறிந்து வீழ் சிகரம் என்ன - ஒடிந்து விழுகின்ற மலைகளைப்போல, புரண்ட - (துதிக்கை யறுபட்டு வீழ்ந்து) புரண்டன.

அற்றன சிரமென வறிதற் றேற்றலர்
கொற்றவெஞ் சிலைச்சரங் கோத்து வாங்குவா
ரிற்றவ ரிருந்தவ ரெழுந்து விண்ணினைப்
பற்றின மழையெனப் படைவ ழங்குவார்

இ - ள். இற்றவர் - (தலை) யறுபட்ட அரக்கர்கள், சிரம் அற்றன என அறிதல் தேற்றலர் - (தம்) தலைகள் அறுபட்டனவென்று அறியாமல், சரம் கோத்து - அம்புகளைப்பூட்டி, கொற்ற வெஞ்சிலை - வெற்றி பொருந்திய வெவ்விய வில்லை, வாங்குவார் - வளைப்பார், இருந்தவர் எழுந்து - தலைகள் அறுபடாதவர்களெழுந்து, விண்ணினைப் பற்றின மழை என - ஆகாயத்தைப்பற்றிய மேகதாரைகளை வழங்குதல்போல, படை வழங்குவார் - ஆயுதங்களை எறிந்தார்கள். (௧௧௮)

கேடகத் தடக்கையர் கிரியின் றோற்றத்த
ராடகக் கவசத்தர் கவந்த மாடுவ
பாடகத் தரம்பையர் மருளப் பல்வித
நாடகத் தொழிலினை நடிப்ப வொத்தவே

இ - ள். கேடகம் தடம் கையர் - கேடகத்தையுடைய பெரியகையினையுடையவர்களும், கிரியின் தோற்றத்தர் - மலைபோலுங் காட்சியையுடையவர்களுமாகிய, ஆடகம் கவசத்தர் - பொற்கவசத்தையணிந்த வீரர்களுடைய, கவந்தம் ஆடுவ - கவ

நந்தகன ஆடுவன, (எந்தனமையாயிருந்ததென்னில்), பாடகத்து அரமடையா - (காலிற்) பாடகத்தையணிந்த தேவமாதர்களும, மருள - மயஙகுமபடி, பலவிதம - பலவகையாகிய, நாடகம தொழிலினை - நடனத்தொழிலோடு, நடிப்ப ஒத்த - கூத்தாடுவனபோனறன (கக௯)

கவரிவெண குடையெனு நுரைய கைமமலே
சுவறரு சுறவமாழ சுழிய தணடுறைப
பவரினப படுமணி குவிககும பணணைய
வுவரியைப புதுககின வுதிர யாறரோ.

இ - ள கவரிவெண குடை எனும நுரைய-வெணசாமரஙகள வெண் குடைகள என்று கூறும நுரைகளையுடையனவும, கைமமலே - யானைகளும, சுவல - (அரககாகளின அறுபட்ட) தோளகளும, சுறவம தரு - சுறாமீனகளைப்போல, ஆழ-ஆழகினற, சுழிய - நீாசசுழிகளையுடையனவும, தண துறை - குளிாநத இறஙகு துறைகளில, இனபபடும - குலஙகுலமாக வகுககபபடுகினற, மணி - இரததினஙகளை, குவிககும - (கொணாநது) குவிககினற, பவா பணணைய - கொடிகளாகிய படகுகளை யுடையனவுமாகிய, உவரியை - உபபுககடலகளை, உதிரம யாறு - அரததநதிகள, புதுககின - நூதனமாகச செயதன

குறிபபு —கவரி - சமரீயெனனும வடசொற சிதைவெனபா, இது ஒருவகைப பெண மானின பெயா இபபெயா அம்மானினது வான மயிரை யுணாததிப பினனா அவவான மயிராற செயயபபடுஞ சாமரததையுணாததுதலின இருமடியாகுபெயா. இககவரி வெணமை நிறமுடைததாதல பறறி இடைநிலைககுணததீவகமாகி நிற வெண எனபதைக கவரியோடு கூட்டி வெணசாமரஙகளெனறும சுவல தரு மேடுதருகினற [பெரிய] எனவும, சுவறு அரு - வறறாத எனவும பொருளகொணடு நீாசசுழிககு அடையாககிக கூறலாமாயினும, கைமமலே + சுவறரு சுறவம எனபது பணபுததொகையாக நிலலாது உமமைத தொகையாக நிறறலின அது பொருநதாதெனக, பணபுததொகையா மிடததுக கைமமலேச சுவறரு என வலிமிககு நிறகும பறபபாட்டில, "சுவலழுநதபபலகாய" எனபுழியும, சுவறபூண ஞாணமிசைப பொலிய என புழியும சுவல-தோளாதலும, "உழிஞைப பவரொடு மிடைநது' எனபுழிப பவரெனபது கொடியாதலுஙகாணக. தரு - உவமவாசகம. நுரை,—முதனிலைததொழிலாகு பெயா சுழி - சுழிபபது, வினை முதற பொருணமை விகுதி பணாநது கெட்டது தணடுறை - ஆயுதவுறை யெனவும, பவா - நெருஙக லெனவும பொருள கொணடு தணடுறையாகிய நெருஙகலுறற இனமணிகளைககுவிககும பணணைய என்று கூட்டியுரைததலுமாம உவரி - உவாபபுடைமை பறறிக கடலுககு இபபெயா போநதது, உவா - பகுதி, இ - வினைமுதற பொருணமை விகுதி (கஉ0)

சணடவெஞ கடுஙகணை தடியத தானசில
திணடிறல வளையெயிற றரககா தேவராய
வணடுழல புரிகுழன மடநதை மாரொடுங
கணடனா தமமுடைக கவநத நாடகம.

இ - ள். சண்டம் வெங்கடுங்கணை - வேகம்பொருந்திய கொடியபாணங்கள், தடிய - கொல்லுவதால், திண் திறல் வளை எயிறு அரக்கர் - வலிய வக்கிரதந்தங்களையுடைய இராக்கதர்கள், தேவராய் - தேவர் உருவத்தை யடைந்தவராய், வண்டு உழல் புரி குழல் மடந்தை மாரொடும் - வண்டுகள் உழுகின்ற (பாரிசாத முதலிய புஷ்பங்களையணிந்த) சுருட்டிமுடித்த கூந்தலினையுடைய பெண்களோடும், தம் உடைக் கவந்தம் நாடகம் - தங்களுடைய கவந்தங்களினது நாடகத்தொழிலை, கண்டனர் - பார்த்தார்கள்.

குறிப்பு—சண்ட வெங்கடுங்கணை - நமன்போன்ற கொடியக்கணைகளுமாய வெங்கடு, திண்டிறல் என்பன - ஒருபொருட் பன்மொழிகள். இராக்கத வுருவ மொழிந்து வீரசுவர்க்கமடைந்து தேவர்போலும் இன்பம் நுகர்வாராயின் தன்மை பற்றி 'தேவராய்' என்றார். இறந்து தேவராய அரக்கர்கள் போக பூமியின்கண் இன்பம் அடையுந் தன்மைவிளங்க 'வண்டுழல் புரிகுழன் மடந்தை மாரொடுங், கண்டனர்' என்றார். போகபூமியிலே 'பதினாறாட்டைக் குமரனும் சிறந்த, பன்னீராட்டைக் குமரியு மாகி, யொத்த மரபினு மொத்த வன்பினுங், கற்பகநன்மரந் நல்கிய துதவ, வாங்கிய செய்தவத் தளவு மவ்வுழிப், போக நுகர்வது போக பூமி'' என்பதனலறிக. வண்டுழலு செயலைநோக்கியும், தேவமாதரென்பது நோக்கியும் பாரிசாத முதலிய விண்ணுலகு மலர்களைக் கூறினும். கூந்தலை உச்சியின்முடித்தல் முடியும், சுருட்டிமுடித்தல் குழலும், மயிரை முடிந்துவிடுதல் தொங்கலும், பின்னிவிடுதல் பனிச்சையும், பின்னே செருகல் சுருளுமாதலின், குழல் - சுருட்டிமுடித்த கூந்தலென்றும் உடை - உடைய என்பதன் விகாரம். (கஉச)

ஆயவளை மகளிரோ டமரரீட்டத்தார்
தூயவெங் கடுங்கணை துணித்த தங்கடோள்
பேயொரு தலைகொளப் பிணங்கி வாய்களி
னாயொரு தலைகொள நகையுற் றார்சிலர்.

இ - ள். ஆயவளை மகளிரோடு - ஆராய்ந்தெடுத்த வளையல்களையுடைய தேவமாதருடனே, அமரர் ஈட்டத்தார் - தேவர்கூட்டத்தைச்சேர்ந்த அரக்கர்களில், சிலர்—, தூய - பரிசுத்தம்பொருந்திய, வெங்கடுங்கணை - விரும்பத்தகுந்த வேகம்பொருந்திய (ஸ்ரீராமபிரானது) அம்புகள், துணித்த - அறுத்த, தங்கள்தோள் - தமது புயங்களை, பேய் ஒருதலைகொள - பேய்கள் ஒருபக்கத்திற் பற்றுவதாலும், நாய் - நாய்கள், பிணங்கி - சண்டைசெய்து, வாய்களின் - வாய்களினால், ஒருதலைகொள - மற்றொருபக்கத்திற் பற்றுவதாலும், நகை உற்றார் - சிரித்தார்கள்.

குறிப்பு—பாவிகளாகிய அரக்கர்கள் தேவர்களானது ஸ்ரீராமபிரானது கணைகளின் மகிமையாலென்பார் 'தூயவெங்கடுங்கணை' என்றார். ''செஞ்சரந் தூய்மையாற் றேவ ராக்கினன்'' என மேலுங் கூறுவர். (கஉஉ)

தெரிகணை மழைகளிற் றிறந்த மாரின
ரிருவினை கடந்துபோ யும்ப ரெய்தினார்
நிருதர்தம் பெரும்படை நெடிது நின்றவ
னொருவனென் றுள்ளத்தி னுலைவுற் றாரரோ.

இ - ள் தெரிகணை மூழ்கலின் - ஞாணாஸ்திரங்கள் பாய்ந்ததினால், திறந்த மார்பினர் - பிளவுபட்ட மார்பினையுடைய அரக்கர்கள், இருவினை கடந்துபோய் - பெரிய பாவத்தைத் தாண்டிச்சென்று, உம்பர் எய்தினார் - விண்ணுலகை யடைந்தவர்களாய், நிருதர்தம் பெரும்படை - அரக்கருடைய பெரியசேனையின் கண், நெடிது நின்றவன் - நெடுநேரமாக நிற்கின்ற ஸ்ரீராமபிரானை, ஒருவன் என்று - ஒப்பற்றவனாகிய பரம்பொருளென்று கூறி, உள்ளத்தின் - (தமது) மனத்தில், உலைவு உற்றார் - அச்சத்தை யடைந்தார்கள் (௪௨௩)

கைக்கரி யன்னவன் பகழி கண்டவர்
மெய்க்குலம் வேரொடுந் துணித்து வீழ்த்தின
மைக்கரு மனத்தொரு வஞ்சன் மாண்பிலன்
பொய்க்கரி கூறிய கொடுஞ்சொல் போன்றவே.

இ - ள். கைக்கரி அன்னவன் - துதிக்கையினையுடைய யானையை யொத்த ஸ்ரீராமபிரானது, பகழி - அம்புகள், கண்டவர் மெய்க்குலம் - பார்த்த அரக்கர்களின் உடற் கூட்டங்களை, வேரொடும் துணித்து வீழ்த்தின - அடியோடு அறுத்துத்தள்ளின, (அக்கணைகள்), மை கருமனத்து ஒரு வஞ்சன் - குற்றம் பொருந்திய அஞ்ஞான விருள் சூழ்ந்த மனத்தினையுடையானாகிய ஒரு பொய்யன், மாண்பு இலன் - பெருமையில்லாதவனாகி, பொய் கரி கூறிய - (நியாயசபையிற்) பொய்ச்சாட்சி சொன்ன, கொடுஞ்சொல்போன்ற - கொடிய வார்த்தைகளை ஒத்திருந்தன. (௪௨௪)

அஞ்சிறை யறுபத மடைந்த கீடத்தைத்
தஞ்செனத் தன்மய மாக்குந் தன்மைபோல்
வஞ்சகத் தரக்கரை வளைத்து வள்ளறான்
செஞ்சரத் தூய்மையாற் றேவ ராக்கினான்

இ - ள் அம் சிறை அறுபதம் - அழகிய இறகுகளையுடைய வண்டு, அடைந்த - (தான்) கொண்ட, கீடத்தை - புழுக்களை தஞ்சு என - தஞ்சமென்று, தன்மயம் ஆக்கும் தன்மைபோல - (அவற்றிற்குத்) தனது உருவைச் செய்கின்ற தன்மையைப் போல, வள்ளல் - ஸ்ரீராமபிரான், வஞ்சகத்து அரக்கரை வளைத்து - மாயச்செயலினையுடைய இராக்கதரை வளைத்துக்கொண்டு, செஞ்சரத்தூய்மையால் - தனது நல்லம்புகளினுடைய பரிசுத்தத்தினாலே, தேவர் ஆக்கினான் - (அவ்வரக்கர்கள்) தேவர்களாகும்படி செய்தான்

குறிப்பு — அறுபதம் - சினையாகுபெயராய் ஆறுகாற்பறவையை யுணர்த்திற்று. இப்பறவை வண்டுகளுள் ஓர்வகையாகிய குளவியாம். இக்குளவி வெண்ணிறங் கொண்ட புழுக்களைக் கொண்டுபோய் அடைகாத்துத் தன்னுருவை அதனுக்கு அளித்துத் தன் இனமாக்குந் தன்மையையுடையதாம். இத்தன்மை பாகவதத்தில் "பொன்னிற மாமெனப் புவனம் படைத்துக் காத்து" என்வருஞ் செய்யுளால் நன்கு விளங்குதலறிக. தஞ்சு - தஞ்சம் என்பதன் விகாரம். இனி, தன்குஞ்சு என்பதன் விகாரமுமாம். தன்னைப்போல் சதுர்புஜங்கள் முதலியன கொண்டு விளங்கும் நித்தியசூரிகளாகும்படி செய்து இவ்வரக்கருக்கு மோட்சத்தைக் கொடுத்தான் என்பார் 'தன்மைபோல் செஞ்சரத்தூய்மையால் தேவராக்கினான்' என்றார் (௪௨௫)

வலங்கொள்போர் மானுடன் வலிந்து கொன்றமை
யலங்கல்வே லிராவணற் கறிவிப் பாமெனச்
சலங்கொள்போ ரரக்கர்த முருக்க டாங்கின
விலங்கையி னுற்றவக் குருதி யாறரோ

இ-ள். வலம் கொள் போர் மானுடன் வலிந்து கொன்றமை - வலிகொண்ட போரில் ஒருமனிதன் துணிந்து (அரக்கரைக்) கொன்ற விஷயத்தை, அலங்கல் வேல் இராவணற்கு - வெற்றி மாலையைப்புனைந்த வேலினையுடைய இராவணனுக்கு, அறிவிப்பு ஆம் என - அறிவித்தலாகும் என்னும்படி, சலம் கொள் போர் அரக்கர் தம் - கோபங்கொண்ட போரினையுடைய அரக்கர்களினது, உருக்கள் தாங்கின - உருவங்களைத்தாங்கிக் கொண்டு, அ குருதி யாறு - அவ்வரத்தநதிகள், இலங்கையின் உற்ற - இலங்கையினைக் அடைந்தன.

குறிப்பு — 'அறிவிப்பாம்' என்பது தன்மைப் பன்மை முற்றுமாம். (௧௨௬)

சூழ்ந்ததார் நெடும்படை பகழி சுற்றுறப்
போழ்ந்துயிர் குடித்தலிற் புரளப் பொங்கினான்
றாழ்ந்திலன் முத்தலைத் தலைவன் சோரியி
னாழ்ந்ததே ரம்பரத் தோட்டி யார்க்கினான்

இ-ள். சூழ்ந்த - வளைந்த, தார் - அணிவகுப்பினையுடைய, நெடும்படை - (தனது) பெரிய சேனையை, பகழி - (ஸ்ரீராமபிரானது) அம்புகள், சுற்று உற போழ்ந்து - ஒருங்கு சேரப்பிளந்து, உயிர் குடித்தலின் - உயிர்களை யுண்பதால், முத்தலைத்தலைவன் - திரிசிரன், புரள பொங்கினான் - (கண்டார் நிலைமை) மாறும்படி கோபித்து, தாழ்ந்திலன் - தாமதியாதவனாகி, சோரியின் - அரத்தத்தில், ஆழ்ந்த புதைந்த, தேர் - (தனது) இரதத்தை, அம்பரத்து ஓட்டி - ஆகாயத்திற் செலுத்தி, ஆர்க்கினான் - பேரொலிசெய்கின்றான். (௧௨௭)

ஊன்றிய தேரின னுருமின் வெங்கணை
வான்றொடர் மழையென வாய்மை யாவர்க்குஞ்
சான்றென நின்றவத் தரும மன்னவன்
றோன்றறன் றிருவுரு மறைப்பத் தூவினான்

இ-ள். ஊன்றிய தேரினன் - (வானத்தினின்றும் இறக்கிப் புவியில்) நிறுத்திய தேரினையுடைய திரிசிரன், யாவர்க்கும் - எவர்க்கும், வாய்மைசான்று என - சத்தியத்திற்குச் சாட்சிபோல, நின்ற - நிற்கின்ற, அ தருமம் மன்னவன் - புண்ணியத்தையுடைய அத்தசரதச்சக்கரவர்த்தியினது, தோன்றல் தன் - குமாரனாகிய ஸ்ரீராமபிரானுடைய, திரு உருமறைய - திருமேனி மறையும்படி, உருமின் வெங்கணை - இடியைப்போலுங் கொடியபாணங்களை, வான் தொடர் மழை என - விண்ணைப்பற்றிய மேகம்போல, தூவினான் - பொழிந்தான்.

குறிப்பு — "உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா, ருள்ளத்து ளெல்லா முளன்" என்றவாறு தான் கைகேசிக்குக் கொடுத்த வரத்தின்படி நடந்து சத்தியத்தை நிலைநாட்டி யெவரும் நன்கு மதித்துத் துதிக்க நின்றவனென்பது விளங்க 'யாவர்க்குஞ் சான்றென' என்றார். "ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்றாது

நிறப்பெரோன் றில்" என்றவாறு தான் இறந்தாந்தன் புகழ்நிலைத்திருக்கப்பெற்றமையா ல் நின்ற என்னும் இறந்தகாலப் பெயரெச்சத்திற்கு நிற்கின்றவென் நிகழ்காலத்துப் பொருள்கூறினும் இங்ஙனநின்றது தெளிவுபற்றியாத காலவழுவமைதி. அத்த ரும மன்னன் தோன்றல் எனவே எம்பிரானும் மாதாபிதா வாக்கிய பரிபாலனத் தின் பொருட்டுக் கானடைந்து சத்தியத்தை நிலைநிறுத்திய தன்மை குறிப்பிக்கப் பட்டது (௧௨௮)

தூவிய சரமெலாந் துணிய வெங்கணை
யேவின னிராமனு மேவி யேழிரு
பூவியல் வாளியாற் பொலங்கொ டேரழித்
தாவிவெம் பாகனை யழித்து மாற்றினான்.

இ - ள் தூவிய சரம் எலாம் - (திரிசிரன்) பொழிந்த கணைகளெல்லாம். துணி ய - அறுபடும்படி, வெங்கணை ஏவினன் இராமனும் - வெவ்விய சரங்களை யேவிய ஸ்ரீராமபிரானும், மேவி - விரும்பி, பூ இயல் - பொலிவு பொருந்திய, ஏழ் இரு வா ளியால் - பதினான்கு கணைகளால், பொலம் கொள் தேர் அழித்து - பொன் கொண்ட தேரினை நாசப்படுத்தி, ஆவி வெம்பாகனை அழித்து - (அவனுக்கு) உயிர்போலும் பிரியமான ரதசாரதியைக்கொன்று, மாற்றினான் - (அவன் நிலையை) மாறுபடும் படி செய்தான். (௧௨௯)

அன்றியு மக்கணத் தமர ரார்த்தெழப்
பொன்றெரி வடிம்புடைப் பொருவில் வாளியால்
வன்றொழிற் றீயவன் மகுட மாத்தலை
யொன்றொழித் திரண்டையு முருட்டி னானரோ

இ - ள் அன்றியும் - அல்லாமலும், அ கணத்து - அப்பொழுதில், அமரர் ஆர்த்து எழ - தேவர்கள் ஆரவாரஞ்செய்து கிளம்புமாறு, (ஸ்ரீராமபிரான்), பொன் தெரி வடிம்பு உடை - பொன் காணப்படுகிற நுதியினையுடைய, பொருவு இல் வாளி யால் (தன்) ஒப்பில்லாத கணைகளால், வல் தொழில் தீயவன் - கொடியசெயல்க ளையுடைய பாவியாகிய திரிசிரனது, மகுடம் மா தலை - கிரீடம்பொருந்திய பெரிய தலைகளில், ஒன்று ஒழித்து - ஒன்றினைநீக்கி, இரண்டையும் - மற்றைய விரண்டு தலைகளையும், உருட்டினான் - உருளும்படி செய்தான் (௧௩௦)

தேரழிந் தவ்வழித் திரிசி ராவெனும்
பேரழிந் ததனினு மறம்பி ழைத்திலன்
வாரழிந் துமிழ்சிலை வான நாட்டுழிக்
காரழிந் தாலெனக் கணைகள் சிந்தினான்.

இ - ள் தேர் அழிந்து - இரதம் நாசமாகிய, அ வழி - அவ்விடத்து, திரிசிரா எனும் - திரிசிரனே என்று கூறும், பேர் அழிந்ததனினும் - பெயர் அழிந்த தன்மை யினும், மறம் பிழைத்திலன் - வலிமை நீங்காதவனாகிய திரிசிரன், வார் அழிந்து - நீளங்கெட்டு [வளைந்து], உமிழ் - (கணைகள்) சிந்துகின்ற, சிலை - வில்லினாலே, வான நாட்டுழி - விண்ணாட்டினின்றும், கார் இழிந்தாலென - மழை யிறங்கினது போல, கணைகள் சிந்தினான் - பாணங்களை யெய்தான்.

குறிப்பு — மூன்று சிரங்களில் இரண்டு சிரமொழிந்து ஒருசிரத்தோடு நின்றானென்பார் 'திரிசிராவெனும் பேரழிந்து' என்றார். இவன் ஆகாயத்தினின்று சரமாரி பொழிந்தமை விளங்க 'வானநாட்டுழிக் காரிழிந்தாலென' என்றார். இவன் கரிய மேனிக்கும் சரவருஷத்துக்கும் மேகம் உவமையாகக்கப்பட்டது (௧௬௧)

ஏற்றிய நுதலின னிருண்ட கார்மழை
தோற்றிய வில்லொடுந் தொடர மீமிசைக்
காற்றிடை யழிந்தெனக் கார்மு கத்தையு
மாற்றரும் பகழியா லறுத்து மாற்றினான்

இ - ள். ஏற்றிய நுதலினன் - (அத்திரிசிரன் நெற்றியின்மேல்) ஏற்றிய புருவத்தையுடையானாகி, இருண்ட கார்மழை தோற்றிய - இருள் சூழ்ந்த கார்ப்பருவத்து மேகத்தைப்போலக் காணப்பட்ட, வில்லொடும் தொடர - வில்லுடனே வர, மீமிசை காற்றிடை அழிந்தென - வானத்தின்கண் காற்றினால் (அம்மேகம்) அழிந்தது போல, (அழியும்படி), கார்முகத்தையும் - வில்லினையும், (ஸ்ரீராமபிரான்), மாற்றரும் பகழியால் - (யாவராலும்) விலக்க முடியாத (தனது) பாணங்களால், அறுத்து மாற்றினான் - துணித்து வேறாக்கினான் (௧௬௨)

வேறு

வில்லி ழந்தன னெனினும் விழித்தவாண் முகத்தி
னெல்லி ழந்தில னிழந்திலன் வெங்கத மிடிக்குஞ்
சொல்லி ழந்திலன் றோள்வலி யிழந்திலன் சொரியுங்
கல்லி ழந்தில னிழந்திலன் கறங்கெனத் திரிதல்

இ - ள். வில் இழந்தனன் எனினும் - (அவன்) வில்லினையிழந்தானென்றாலும், விழித்த வாள்முகத்தின் - (கண்களை யிமையாது) பார்த்த ஆண்மைவிளங்கிய முகத்தினது, எல் - பிரகாசத்தை, இழந்திலன் இழந்திலன் - (சிறிதும்) இழக்கவேயில்லை, வெங்கதம் இடிக்கும் - கொடிய கோபத்தோடு சொல்லுகின்ற சொல் இழந்திலன் - வார்த்தைகளை யிழந்தானில்லை, தோள்வலி இழந்திலன் - புயவலி யிழந்தானில்லை, சொரியும் கல் இழந்திலன் - (பறித்துப்பறித்து மழைபோலப்) பொழிகின்ற மலைகளை இழந்தானில்லை, கறங்கென திரிதல் இழந்திலன் - காற்றாடியைப்போல(ச்சுழன்று) திரியுஞ் செயலை இழந்தானில்லை

குறிப்பு — அகேகு - துணிவு. கோபத்தோடு கூறிய மொழிகள் கேட்பார் மனத்தைப் புண்ணாக்குந் தன்மையனவாகலின் 'இடிக்குஞ்சொல்' என்றார். இவ்வரக்கன் கையுங்காலும் ஓயாதவனாய்ப் பறித்துப்பறித்தெறியும் பருவதங்களனைத்தையும் ஸ்ரீராமபிரான் தன் கணைகளால் தூளாக்கிக்கொண்டேயிருந்தானென்பது ஈற்றிரண்டடியானும் போதரும் கருத்து (௧௬௩)

ஆளி ரண்டொன்றா னதென வந்ததொருவன்
மூளி ரும்பெரு மாயவெஞ் செருமுயல் வானைத்
தாளி ரண்டையு மிரண்டுவெங் கணைகளாற் றடிந்து
தோளி ரண்டையு மிரண்டுவெங் கணைகளாற் றுணித்தான்

இ - ள் (ஸ்ரீராமபிரான்) அந்தரத்து - ஆகாயத்தில், ஒருவன்—, இரண்டு நூறு ஆள் உள் என - இருநூறுபேரிருக்கின்றாகளென்னும்படி, மூள் - கூடுகின்ற, இருபெரு மாயம் - பெரிய மாயமாகிய, வெஞ்செரு முயல்வானை - கொடிய போரைச்செய்கின்ற திரிசிரனது, தாள் இரண்டையும் - இரண்டுகால்களையும், இரண்டு வெங்கணைகளால் தடிந்து - இரண்டு கொடிய பாணங்களால் துணித்து, தோள் இரண்டையும் - இரண்டு புயங்களையும், இரண்டு வெங்கணைகளால் - இரண்டு கொடிய பாணங்களால், துணித்தான் - அறுத்தான்.

குறிப்பு —உள்ளென்றபாலது உள்ளென நின்றது, நீணை வழுவமைதி சிரனைப்போலவே இருநூறுதிரிசிராகள் ஆகாயத்தினின்று போர்செய்வதாகத் தோன்றும்படி மாயவெஞ்செரு முயன்றான் எனக. இருபெரு - ஒருபொருட்பன்மொழி - நானூறு கால்களையும், நானூறு கைகளையுந் துணித்தான் என்றுரை இரண்டு தாள் இரண்டு தோளென்றசனுல ஞானமூர்த்தியாகிய அவன் மாயையை விலக்கிப் பின்னர் அவன் கால் கைகளைத் துணித்தமை பெற்றாம் (௧௩௪)

அற்ற தாளொடு தோளின னயிலெயி றிலங்கப்
பொற்றை மாமுழைப் புலானுடை வாயினன் புகுந்து
பற்ற வாசரிப் பாணற்றனை நோக்கினன் பரியான்
கொற்ற வார்சிலைச் சரங்கொடு தலையையுங் குறைத்தான்.

இ - ள் அற்றதாளொடு தோளினன் - அறுபட்ட கால்களோடு புயங்களையுடையானும், அயில் எயிறு இலங்க - கூர்மைபொருந்திய பற்கள் விளங்கும்படி, பொற்றை மா முழை-மலையிலுள்ள பெரியகுகையாகிய, புலால் உடை வாயினன் - புலால் நாற்றத்தையுடைய வாயினையுடையானுமாகி, புகுந்து - பிரவேசித்து, பற்ற (தன்னைக்) கவ்வும்படி, ஆசரிப்பான் தனை - விருப்பங்கொள்வானாகிய திரிசிரனை, நோக்கினன் - பார்த்த ஸ்ரீராமபிரான், பரியான் - இரக்கமில்லாதவனாய், கொற்ற வார் சிலை சரங்கொடு - வெற்றிபொருந்திய நெடியவில்லிற்கோத்த கணையினால், தலையையும் குறைத்தான் - (அறுபடாத ஒற்றைத்) தலையையும் அறுத்தான்.

குறிப்பு —கால்கை யறுபட்டுப் போர்புரியச் சக்தியில்லாத நிலைமையிலும் வாயாற்கவ்விக் கொன்றுவிட நினைத்தமையால் அவ்வரக்கன்மேல் எம்பிரானுக்கு இரக்கமில்லாமற்போயிற்று (௧௩௫)

திரிசி ராவெனுஞ் சிகரமண் சோதலுஞ் செறிந்த
நிருத ரோடினா் தூட்ணன விலக்கவு மிலரா
பரிதி வாளினா் கேடகத் தடக்கையா் பரந்த
குருதி நீரிடை வாசுழற் கொழுங்குடா் தொடக்க.

இ - ள் திரிசிரா எனும் சிகரம் - திரிசிரா என்றுகூறு மலைபானது, மண் சோதலும் - மண்ணில் வீழ்ந்த வளவில், தூட்ணன விலக்கவும் இலரா - தூஷணன் தடுக்கவும் இல்லாதவர்களாகி, செறிந்த நிருதர் - நெருங்கிய அரக்கர்கள் பரிதி வாளினர் - சூரியனைப்போலும் ஒளிரிய வாளினையுடையவர்களும், கேடகம் தடம் கையர் - கேடகத்தைப்பிடித்த பெரிய கையினையுடையவர்களாய், பரந்த குருதி நீரிடை - பரவிய அரத்த நீரில், வாசுழல் - நெடிய வீரக்கணடைகளில், கொழுங்குடர் - கொழுப்புள்ள குடல்கள், தொடக்க - மாட்டிக்கொள்ளும்படி, ஓடினர் - ஓடினார்கள்.

குறிப்பு — திரிசிரா - திரிசிரனது பெயர் திரிசிரனே என விளியுறக் கூறலுமாம். மையும், மூன்று தலையுடைமை பற்றி இப்பெயர் போந்தது. திரிசிரன் படைத்தலைவர் யாவரினும் வலியனும் முதன்மையானு மாதல்பற்றி 'சிகரம்' என்றார். சிகரம் - மலையினுச்சி. தூஷணன் - தூஷணம் என்னும் வடசொல்லடியாகப்பிறந்த பெயர். இவன் அநேக கொடிய செய்கைகள் புரிந்து நிந்தனைக்குள்ளாவோ னாதல்பற்றி இவனுக்கு இப்பெயர் போந்தது. இத்தூஷணனும், விஷம்போலும் உருவமுஞ் செயலும் பொருந்திய கரனும் சகோதரர்கள். இவர்கள் இராவணனது அன்னையாகிய கைகேசிக்கு உடன் பிறந்தாள் மக்களாதலின், இராவணனுக்குத் தம்பிமார்களானமை யறிக. "என்று தங்கை மனமுவப்ப வெல்லாப் பூசை களுமியற்றி, யொன்று குணத்தி னுந்தாய ருடனே பிறந்தாள் வயிறுதித்த, வென்றி வீரர் கரனுமவன் விரிந்த படைக்குத் தலைவனுந், துன்று விறகைத் தூடணனுந் தோலா வலிமுச் சிரத்தோனும்" எனமேல்வரும் உத்தரகாண்டச் செய்யுளை யீண்டு நோக்குக. ஓடினவர்களும் தக்க வீரர்களேயென்பார் 'பரிதிவாளினர் கேட்கத்தக்கையர்' என்றார். கழல் - வீரர்கா லில் அணிகின்ற அணி, இதனை "வீரத்தில் வீக்கிய கழலே யாடவர், கானமிசை யணிவடம்" என்பதனாலுணர்க. வார்தல் - அளருதலும், தடவுதலுமாம். இனி வார் என்பதைக் கொழுங்குடரோடு கூட்டலாம். கொழுங்குடல் - மணிக்குடல், இது மற்றைக் குடல்களைப்போலாது கொழுப்போடு கூடியிருப்பதாம். தொடக்குதல் - கட்டுதல், பொருத்துதல். (௧௬௬)

> கணத்தின் மேனின்ற வானவர் கைபுடைத் தார்த்தார்
> பணத்தின் மேனிலங் குழியுறக் கால்கொடு பதைத்தார்
> நிணத்தின் மேல்விழுந் தழுந்தினார் சிலர்சிலர் நிவந்த
> பிணத்தின் மேல்விழுந் துருண்டன ருயிர்கொடு பிழைப்பார்

இ - ள் (அவ்வாறு ஓடிய அரக்கர்களைக் கண்டு), கணத்தில் - அந்நேரத்தில், மேல் நின்ற வானவர் - ஆகாயத்தில் நின்ற தேவர்கள், கைபுடைத்து ஆர்த்தார் - கைகொட்டி ஆரவாரம் செய்தார்கள், சிலர் பணத்தின் மேல் நிலம் குழி உற - சில அரக்கர்கள் ஆதி சேஷனது பணமுடி மேலிருக்கிற பூமியானது குழிபடும்படி, கால் கொடு பதைத்தார் - கால்களால் (மிதித்து) விரைந்தோடினவர்களாய், நிணத்தின் மேல் விழுந்து அழுந்தினர் - கொழுப்பின்மேல் (வழுக்கி)விழுந்து (அந்நிணச்சேற்றில்) ஆழ்ந்துவிட்டார்கள், சிலர் நிவந்த பிணத்தின்மேல் - சிலர் உயர்ந்த பிணங்களின்மேல், விழுந்து - (இடறி) வீழ்ந்து, உருண்டனர் - புரண்டவர்களாய், உயிர் கொடு பிழைப்பார் - (அப்பிணக் குவியலுள் மறைந்து) உயிரைக் (காப்பாற்றிக்) கொண்டு பிழைத்திருப்பவரானார்கள்.

குறிப்பு — கணம் - க்ஷணம் என்னும் வடமொழித்திரிபு, இனி, மேல் கணத்தின் நின்ற வானவர் எனக்கொண்டு, ஆகாயத்தில் பதினெண் கணத்தோடு நின்ற தேவர் என்று கூறலுமாம். ஈண்டு, கணத்தின், இன் - உருபுமயக்கம். வானவர் - நால் வகைத் தேவரும் மற்றைத் தேவருங் கூடிய கூட்டத்தைக் குறித்த பொதுப் பெயர், "நால்வகைத் தேவரு மூவறு கணங்களும், பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து, வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்" என்றார் இளங்கோவடிகள். "அமரர் சித்த ரசுரர் தைத்தியர், கருடர் கின்னரர் நிருதர் கிம்புருடர், காந்தருவ ரியக்கர் விஞ்சையர் பூதர், பசாச ரந்தரர் முனிவருரகர், ஆகாய வாசியர் போகபூமியரெனப், பாருபட்டன பதினெண் கணமே" என்பதனாற் கணவகையறிக. நால்வகை

த்தேவரென்றது முப்பத்து மூவரை “ஆதித்தர் பன்னிருவ ரச்சுவினிக ளிருவர், ஈசர் பதினொருவ ரெண்மர் வசுக்க, ளாக முப்பத்து மூவர்தம் பெயரே” என்றதைத் தேவ ரென்றது இந்திராதி திக்குப்பாலகர் முதலியவர்களை. பணம் - பாம்பின்படம். நிணச் சேற்றில் வழுக்காவண்ணம் கால்களை ஊன்றி யூன்றிவைத்து ஓடினரென்பார். ‘நிலங்குழியுறக் கால்கொடு பதைத்தார்’ என்றார். பதைத்தல் - பதறுதல், நடுங்கல், விரைதல். நிணம் - தசைச்சேறுமாம். உருண்டனர், உருள் - பகுதி, இனி, உருண்டனர் - இறந்தார்களென்னுமாம், இப்பொருளில் உயிர்கொடு பிழைக்கக் கருதியவர்கள் இறந்தார்களென்று கூறிமுடிக்க. (௧௩௭)

வேய்ந்த வாளொடு வேலிடை மிடைந்தன வெட்ட
வோய்ந்து ளார்சில ருலந்தன ருதிரநீர் யாற்றிற்
பாய்ந்து கால்பறித் தழுந்தினர் சிலர்சிலர் பயத்தா
னீந்தி னார்நெடுங் குருதியங் கடல்புக்கு நிலையார்

இ - ள். சிலர் வேய்ந்த வாளொடு வேல் இடைமிடைந்தன வெட்ட - சில அரக்கர்கள் அலங்கரித்த வாளாயுதங்களும் வேல்களும் நடுவழியில் நெருங்கினவை களாய்(த் தமது கால்களை) வெட்ட, (அதனால்), ஓய்ந்து உளார் உலந்தனர் - (ஓட வலியற்றுச்) சோர்ந்தவர்களாயிறந்தார்கள், சிலர் - சில அரக்கர்கள், உதிரம் நீர்யாற்றில் - அரத்த நீர் நதியில், பாய்ந்து - குதித்து, கால்பறித்து - (நிணச்சேற்றிற் பதிந்த தமது) கால்களைப் பிடுங்கி, அழுந்தினர் - (எடுக்கமுடியாமல் அச்சேற்றிலே யே) மூழ்கிப்போனார்கள், சிலர் - சில அரக்கர்கள், பயத்தால் - அச்சத்தினாலே, நெடுங்குருதிக் கடல்புக்கு - பெரிய அரத்தக்கடலிற்புகுந்து, நீந்தினர் - நீந்தி, நிலையார் - நிலையாதவர்களானார்கள் [இறந்தார்கள்]

குறிப்பு — வேய்ந்த - (இலத்தலை) மூடிய வென்னுமாம். அம் - சாரியை. நீந்த முடியாமற் கால்கையோய்ந்து அக்கடலில் மூழ்கி யிறந்தாரென்பார் ‘நிலையார்’ என்றார் (௧௩௮)

கச்சும் வாளுந்தங் கான்றொடர்ந் தீர்வன காணா
ரச்ச மென்பதொன் றுருவுகொண் டாலென வழிவா
ருச்ச வீரன்கைச் சுடுசர நிருதர்நெஞ் சுருவத்
தச்சு நின்றன கண்டன ரவ்வழித் தவிர்ந்தார்.

இ - ள். கச்சும் வாளும் - அரைக்கச்சைகளும் வாள்களும், தம் கால் தொடர்ந்து - தமது கால்களில் (நழுவிவீழ்ந்து) பற்றி, ஈர்வன - இழுப்பனவும் பிளப்பனவுமாகிய செயல்களை, காணார் - பாராமல், அச்சம் என்பது ஒன்று - பயமென்று சொல்வதாகிய ஒருகுணம், உருவுகொண்டால் என - உருவத்தையடைந்தாற்போல, அழிவார் - (மனநிலை) கெட்டோடு மரக்கர்கள், உச்சவீரன் - உயர்ந்தவீரனாகிய ஸ்ரீராமபிரானது, கை சுடு சரம் - கையினின்றும் விடுபட்ட கொடியபாணங்கள், நிருதர் நெஞ்சு - அரக்கர்களது மார்பினை, உருவ - உருவிச்செல்வதற்காக, தச்சு நின்றன - தைத்து நிற்பனவற்றை, கண்டனர் - பார்த்து, அவ்வழி தவிர்ந்தார் - (தாம் செல்லும்) அந்தமார்க்கத்தினின்றும் நீங்கினார்கள்

குறிப்பு — கச்சும் ஈர்வன வாளும் ஈர்வன என நிரனிறையாகக் கூட்டிமுடிக்க. ஈர்தல் - இழுத்தலும் பிளத்தலுமாம். ஈர்வன இரட்டுறமொழிதல், மிகுந்த பயத்தோ

டும் ஓடினரென்பார் 'அச்சமென்பதோர் உருவுகொண்டாலென வழிவார்' என்றார் எல்லாம் வல்ல கடவுள் என்பார் 'உச்சவீரன்' என்றார். உச்சம் - உயர்ச்சி. இனி, யுத்தவீரனெனக்கொண்டு யுத்தம் - உத்தமென மரூஉவாய் எதுகை நயநோக்கி உச்சமெனத் திரிந்து நின்றதென்றேனும், பித்து - பிச்சு என வருதல்போலப் போலியாயிற்றென்றேனுங் கூறலாம். மற்றும், ஏகாதசா நாலவரோடு இரண்டாம் வீட்டிற்பொருந்திய ரவியும் உச்சம் பெற்று ஒருவரையொருவர் நோக்கியதால் வலியிழந்தார் என்று கிடமின்றித் தான்பல மேறியிருக்குங்கால் ஜனித்த மஹானுபவன் என்பார் 'உச்சவீரன்' எனக்கூறி அவர் பலாபலமனைத்தும் அம்மொழிகளைத் தொகுத்துச் சுருக்கச்சொல்லி விளங்கவைத்தாரென்பாருமுளர். தைத்து - தச்சு என்பபோலி. அளவற்ற சரங்கள் ஒன்றோடொன்று தொடுக்கப்பட்டுச் சரக்கூடமாய் அரக்கர் ஓடுதற்கு வழியில்லாது மறிக்கமை விளங்கத் 'தச்சுநின்றன' என்றார். (௪௩௯)

மண்டி யோடினர் சிலர்நெடுங் கடகரி வயிற்றிற்
புண்டி றந்தமா முழையிடை வாளொடும் புகுவார்
தொண்டை நீங்கிய கவந்தத்தைத் துணைவநீ யெம்மைக்
கண்டி லேனெனப் புகலெனக் கைத்தலைக் கொள்வார்

இ - ள். மண்டி ஓடினர் சிலர் - நெருங்கி ஓடிய சில அரக்கர்கள், நெடிய கடம் கரி வயிற்றில் - பெரிய மதம் பொருந்திய யானையின் வயிற்றில், திறந்த புண் - விரிந்த புண்ணாகிய, மா முழையிடை - பெரிய குகையில், வாளொடும் புகுவார் - வாளாயுதத்துடன் பிரவேசித்து, தொண்டை நீங்கிய கவந்தத்தை - தொண்டை யறுபட்டுத் தோன்றிய உடற்குறையை (கண்டு), துணைவ - சிநேகிதனே! நீ—, எம்மை - எங்களை, கண்டிலேன் என - (நான்) பார்க்கவில்லையென்று, புகல் என - சொல்வாயாகவென்று, கை - (தமது) கைகளை, தலை கொள்வார் - சிரசிற் கொள்வாராயினார் [நமஸ்கரித்தார்கள்],

கருத்து — ஒருவர்மே லொருவர் வீழ்ந்து ஓடி யானையின் பிளவுபட்ட வயிற்றி லொளிந்து கொண்ட அரக்கர் தொண்டை யறுபட்டு எதிரே நின்ற கவந்தத்தை நோக்கி ராமபாணத்தால் நேர்ந்த அச்சத்தால் சித்த சுவாதீனமற்றவராய்ச் சிநேகனே நீ எம்மைக் காணவில்லையென்று கூறுவாயாகவென நமஸ்கரித்தார் என்பதாம்.

குறிப்பு — ஓடினர் - முற்றுத்திரிந்த பெயரெச்சம். பேடகளென்பார் 'வாளொடும் புகுவார்' என்றார். தலையறுபட்டும் அது உடலைவிட்டு நீங்காது ஓட்டிக்கொண்டிருந்த தென்பார் 'தொண்டை நீங்கிய கவந்தம்' என்றார். துணைவ - அண்மை விளி. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கவந்தத்தைக்கண்டு நமஸ்கரித்தார்களென்பது ஈற்றிரண்டடியின் கருத்து. (௪௪௦)

அனைய ராகிய வரக்கரை யாண்டொழிற் கமைந்த
வினைய நீங்கிய மனித்தரை வெருவன்மி னென்ன
நினையு நாணுமக் குரைப்பது முண்டென நின்றே
தனையும் வார்பரித் தேரினன் றூண்டினன் சொன்னான்

இ - ள். அனையர் ஆகிய அரக்கரை - அவ்வாறு அஞ்சி யோடி யொளித்தவராகிய அரக்கரை, தனையும் வார் பரி தேரினன் தூண்டினன் - விரைந்து செல்கின்ற

உயர்ந்த குதிரைகளைப் பூண்ட தேரினையுடைய தாருணன் (சோகசு), நின்றே - (கம்பீரமாக) நின்று கொண்டே, ஆண் தொழிற்கு அமைந்த வினையம் நீங்கிய - ஆண்மைச்செயலுக்குப் பொருந்திய செயல்கள் ஒழிந்த, மனிதரை வெருவல் மின் - மனிதர்க்கு அஞ்சாதீர்கள், அன்ன நினையும் - அத்தன்மையாக [மனிதரைக்கண்டு அஞ்சத்தக்கதென்] நினைக்கின்ற, நான் - யான், உமக்கு - உங்களுக்கு, உரைப்பதும் - சொல்லவேண்டிய விஷயமும், உண்டு என் உளது என்று, சொன்னான்— ()

வச்சை யாமெனும் பயமனத் துண்டென வாழுங்
கொச்சை மாந்தரைக் கோலவளை மகளிருங் கூசார்
நிச்ச யம்மெனுங் கவசந்தா னிலைநிற்ப தன்றி
யச்ச மென்னுமீ தாருயிர்க் கருந்துணை யாமோ

இ - ள் வச்சை எனும் - பழியென்பதற்குக் காரணமான, பயம் - அச்சமென்பது, மனத்து உண்டு என்ன வாழும் - தம்மனத்தினிடத்தே யுள்ளதென்னும்படி வாழுகின்ற, கொச்சை மாந்தரை - தாழ்வுள்ள மனிதர்களை, கோலவளைமகளிரும் - வளைந்த வளையல்களை யணிந்த பெண்களும், கூசார் - அஞ்சார்கள், நிச்சயம் எனும் - இறக்கமாட்டோம் என்கிற, கவசம் தான் - கவசமென்பதே, நிலைநிற்பது அன்றி - நிலைநிற்கக்கூடியதல்லாமல், அச்சம் என்னும் ஈது - பயமென்று சொல்லுகிற இக்குணம், ஆர் உயிர்க்கு - அரிய உயிருக்கு, அருந்துணையாமோ - அரிய துணையாகுமோ? [ஆகாது]

குறிப்பு—வச்சை - வசை, விரித்தல் விகாரம்; ஆம் - அசை. இனி, வச்சை - பெண்பிள்ளை, யாம் எனும் - நாங்கள் என்கின்ற என்னலுமாம்; இப்பொருளில் வச்சை - வத்ஸெ என்னும் வடமொழித்தற்பவம். கோலவளை - வினைத்தொகை; இடையிடையே வளைவுபொருந்திய வளையலென்னும் பொருளது. இனி, அழகியவளையலென்னலுமாம்; இப்பொருளில் அழகென்னும் பொருட்பேறுடைய கோலம் என்னுஞ்சொல் ஈறுகுறைந்து நின்றது. மகளிரும், உம்மை - இழிவுசிறப்பு. நிச்சயம் - நிஸ்சயம் என்னும் ஆரியச் சொற்றிரிபு; குறைவில்லை யென்னும்பொருட்டு. இறக்கமாட்டோம் என்னும் தைரியத்தோடு நின்று போர்புரியின் பகையை வெல்லலாம் என்பான் 'நிச்சயம் மெனுங் கவசந்தானிலைநிற்பது' என்றான்; "கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு, மாற்ற லதுவே படை" "சிறுமையுள் சொல்லாத துணியும் வறுமையு, மில்லாயின் வெல்லும் படை" என்றார் நாயனாரும். கவசம் உடலைக்காப்பதுபோல நிச்சயமென்பது மனம்பேதியாவாறு காக்குமாதலின், 'நிச்சயமெனுங் கவசம்' என்றான். ஈது - சுட்டுநீண்டது. ஆர் - அருமையின்திரிபு. அதைரியத்தால் விரைவில் இறந்துபோகக்கூடிய நீங்கள் மறைந்தோடிச்சென்று பிழைக்க நேரிடினும் எமதாக்கினையா லிறப்பீர்க ளென்பான் துணையென்னுஞ் சொற்கு அருமையென்னும் அடைமொழிதந்து கூறினான். ஓகாரம் - எதிர்மறை (௧௪௨)

பூவ ராவுவேற் புரந்தர னோடுதான் பொன்று
மூவ ரோடுதான் முன்னின்று முட்டிய முனையி
லேவ ரோடின ரிராக்கதர் நுமக்கிடைந் தோடுந்
தேவ ரோடுகற் றறிந்துளீ ராமெனத் திகைத்தீர்.

இ - ள். பூ அராவு வேல் - இலை போலும் அராவிய வேலினையுடைய, புரந்தரனொடு - தேவேந்திரனுடனேயும், பொன்றா மூவரோடு - இறவாத திரிமூர்த்திகளுடனேயும், முனை நின்று முட்டிய முனையில் - எதிர் நின்று தாக்கிய போரில், இராக்கதர் எவர் ஓடினர் - அரக்கர்களுக்குள் எவர்கள் ஓடினவர்கள்? நமக்கு இடைந்து ஒடும் - (நீங்கள்) உங்களுக்குத் தோற்றோடுகின்ற, தேவரோடு - தேவர்களிடத்தில், கற்று அறிந்து உளிர் என - கற்றுத்தெரிந்திருக்கின்றீர்களென்று கூறும்படி, திகைத்தீர் - பிரமை கொண்டீர்கள்.

குறிப்பு — பூவராவுவேல் - பொலிவுற்ற அராவிய வச்சிராயுதமுமாம், ததீசிமகாருஷியினுடைய முதுகெலும்பினை யராவி யாயுதமாகப் பட்டமையான 'அராவுவேல்' எனப்பட்டது. புரந்தரன் - சத்துருக்களுடைய பட்டினங்களை யழிக்கிறவனென்னும் பொருட்டு. திரிமூர்த்திகளும் ஒரு மூர்த்தியே என்பது விளங்க 'பொன்றா மூவர்' எனப்பட்டது. மூவர் - பிரம விஷ்ணு ருத்திரர்க்குத்தொகைக் குறிப்பு. தான், தான் - அசைகள். இராக்கதர் - வருத்துகிறவரென்னும் பொருட்டு.

இங்கொர் மானிடற் கித்தனை வீரர்க ளிடைந்தீ
ருங்கை வாளொடு போய்விழுந் தூர்புக லுற்றீர்
கொங்கை மார்பிடைக் குளிப்புறக் களிப்புறுங் கொழுங்க
ணங்கை மார்களைப் புலலுதி ரோநல நுகர்வீர்.

இ - ள். நலம் நுகர்வீர் - இன்பத்தை யனுபவிக்கின்ற அரக்கர்களே! (நீங்கள்), இங்கு ஓர் மானிடற்கு - இங்கு ஒரு மனிதனுக்கு, இத்தனை வீரர்கள் இடைந்தீர் - இவ்வளவு வீரர்களும் தோல்வியடைந்து, உம் கை வாளொடு போய் - உமது கையிலிருக்கிற வாளுடனே சென்று, விழுந்து - ஒருவர்மேலொருவர் முட்டிக்கொண்டு, ஊர் புகல் உற்றீர் - ஊரிற் புகக்கொண்டீர்கள், கொழுங்கண் நங்கைமார்களை - செழிப்புப்பொருந்திய கண்களையுடைய (உமது) பெண்சாதிகளை, கொங்கை - (அவர்கள்) முலைகள், மார்பிடை - (உங்கள்) மார்பினிடத்து, குளிப்புற அழுந்தும்படியாக, களிப்பு உறும் - (இனிச்) சந்தோஷத்தை யடைந்தும், புலலுதிரோ - அணைவீர்களோ? (௧௪௪)

செம்பு காட்டிய கண்ணிணை பாலெனத் தெளிந்தீர்
வெம்பு காட்டிடை நுழைதொறும் வெரிநுறப் பாய்ந்த
கொம்பு காட்டுதி ரோதட மார்பிடைக் குளித்த
வம்பு காட்டுதி ரோகுல மங்கையர்க் கம்மா.

இ - ள். செம்பு காட்டிய - (கோபத்தால்) செம்பினது நிறத்தைக்காட்டிய, கண் இணை - கண்களிரண்டும், பால் என தெளிந்தீர் - பால்போல (வெளுத்து) தெளிவடையப் பெற்றவர்களே! குலமங்கையர்க்கு - கற்புடைய மாதருக்கு, வெம்பு காட்டிடை - கொடிய கானகத்தினகண், நுழைதொறும் - பிரவேசிக்கும்போதெல்லாம், வெரிந் உற பாய்ந்த - முதுகிற்பதியத்தாக்கிய, கொம்பு காட்டுதிரோ - மரக்கொம்புகளைக் காட்டுவீர்களோ? தடம் மார்பிடை - அகன்ற மார்பினகண், குளித்த - முழுகிய, அம்பு காட்டுதிரோ - சரங்களைக் காட்டுவீர்களோ? [எதைக் காட்டுவீர்கள்.]

குறிப்பு — கோபப்பார்வை செந்நிறமுடைத்தாதலைப்பற்றி அதற்குச் செம்பினையும், கோபமுற்றுவிட்டத்தக்க கணைகள் இயற்கைவடிவாய் வெளுத்தலைப்பற்றிய பாலினையும் உவமைகூறினர் (௧௪௫)

ஏக்கமிங் கிதன் மேலுமுண் டேயிகன் மனித்த
னாக்கும் வெஞ்சமத் தாண்மையவ் வமரர்க்கு மரிதாத்
தாக்க ருட்புயத் துங்குலத் தலைமகன் றங்கை
மூக்கொ டன்றியு முதுகொடும் போம்பழி முயன்றீர்.

இ - ள், தாக்கரும் புயத்து உம் குலம் தலைமகன் - (யாவராலும்) எதிர்த்தற்கரிய உமது குலோத்துங்கனாகிய இராவணனது, தங்கை - தங்கையாகிய சூர்ப்பநகையினுடைய, மூக்கொடு அன்றியும் - மூக்கறுபட்ட பழியோடல்லாமல், முதுகொடும் போம்பழி - (நீங்கள்) முதுகுடனே செல்கின்ற [முதுகுகாட்டியோடு கின்ற] அபகீர்த்திக்கு, முயன்றீர் - முயற்சியடைந்தீர்கள், இகல் மனிதன் - பகைத்த மனிதன், அவ் அமரர்க்கும் அரிது ஆ - அந்தத்தேவர்களுக்கும் அரியதெனப்படுவதாக, வெஞ்சமத்து ஆண்மை - வெவ்விய போரின் ஆண்மையை, ஆக்கும் - செய்வான், ஏக்கம் இதன்மேலும் உண்டே - விசாரம் இதற்குமேலு முள்ளதோ? [இல்லை] ()

ஆர வாழ்க்கையின் வணிகரா யமைதிரோ வயில்வேல்
வீர வாட்கொடு வேன்மடுத் துழுதிரோ வெறிபோர்த்
தீர வாழ்க்கையிற் றெவ்வரைச் செருவிடைப் பறித்த
வீர வாட்கையி ரெங்ஙனம் வாழ்திரோ விளம்பீர்

இ - ள் வெறி போர்த் தீரம் வாழ்க்கையில் - வீராவேசத்தையுடைய போர்வல்லமை பொருந்திய வாழ்வினுள்ளே, செருவிடை - போரில், தெவ்வரை பறித்த - பகைவரிடத்திலிருந்து பறித்துக்கொண்ட, வீரம் வாள் கையிர் - வலிய வாளினைப் பிடித்த கையினை யுடையீர்! ஆரம் வாழ்க்கையின் வணிகராய் அமைதிரோ - முத்துக்களை விற்கும் ஜீவனத்தையுடைய வர்த்தகர்களாய் அமைவீர்களோ? அயில் வேல் வீரம் வாள்கொடு - கூர்மை பொருந்திய வேலையும் வலிய வாளினையுங் கொண்டு, வேல் மடுத்து - (அவற்றைக் கொழுவாக மற்றைய) வேலைகளிற் பொருத்தி, உழுதிரோ - (பயிர் செய்நிலத்தை) உழுவீர்களோ? எங்ஙனம் வாழ்திரோ - (வேறு) எவ்வாறாக வாழ்வீர்களோ? விளம்பீர் - சொல்வீர்களாக (௧௪௭)

என்று தானுந்தன் னெறிகடற் சேனையு மிறைநீர்
நின்று காண்டிரென் னெடுஞ்சிலை வலியென நேர்ச்
சென்று தாக்கினன் றேவரு மருள்கொண்டு திகைத்தார்
நன்று காத்தியென் றிராமனு மெதிர்செல நடந்தான்.

இ - ள் என்று - என்று கூறியும், நீர் - நீங்கள், என் நெடுஞ்சிலை வலி - எனது பெரிய வில்லினது வலிமையை, இறை நின்று - சிறிது நின்று, காண்டிர் என - பார்ப்பீர்களாக வென்று கூறியும், தானும் - அத்தூஷணனும், தன் - அவனுடைய எறிகடல் சேனையும் - (ஆயுதங்களை) எறி கடல்போன்ற சேனையும், நேர் சென்று - ஒழுங்காகச் சென்று, தாக்கினன் - (ஸ்ரீ ராமபிரானை) எதிர்த்தான், (அதுகண்டு) தேவரு

ம் மருள்கொண்டு திகைத்தார் - தேவர்களும் மயக்கமடைந்து பிரமித்தார்கள், இராமனும் - ஸ்ரீ ராமபிரானும், நன்று காத்தி என்று - (இச்சேனையை) நன்றாகக் காத்துக்கொள் என்று கூறி, எதிர் செல நடந்தான் - (அவனுக்கு) நேராக நடந்து சென்றான். ()

ஊட்டறுப்புண்ட மொய்ப்படைக் கையொடு முயர்ந்த
கோட்டறுப்புண்ட குஞ்சரங் கொடிஞ்சொடு கொடியின்
காட்டறுப்புண்ட காலியற் றேர்க்கதிர்ச் சாலி
சூட்டறுப்புண்ட வெனக்கழுத் தறுப்புண்ட துரகம்.

இ - ள். ஊடு அறுப்புண்ட - இடையே அறுபட்ட, மொய்ப்படை - நெருங்கிய ஆயுதங்களையுடைய, கையொடும் உயர்ந்த கோடு - துதிக்கைகளும் வளர்ந்த கொம்புகளும், குஞ்சரம் அறுப்புண்ட - யானைகள் அறுபடப்பெற்றன, கால் இயல் தேர் - காற்றைப்போலும் (வேகம்) பொருந்திய இரதங்கள், கொடிஞ்சு ஒடு கொடியின் காடு - சிகரங்களும் துவசக்காடுகளும், அறுப்புண்ட - அறுபடப்பெற்றன, கதிர் சாலி சூடு அறுப்புண்ட என - கதிர்களாகிய நெற்பயிரின் தலைப்புறங்கள் அறுபட்டனபோல, துரகம் கழுத்து அறுப்புண்ட - குதிரைகள் கண்டங்கள் அறுபடப்பெற்றன (௧௪௯)

துருவி யோடின வுயிர்நிலை சுடுசரந் துரந்த
கருவி யோடின கச்சையுங் கவசமுங் கழல
வருவி யோடின வெனவழி குருதியா றொழுக
வுருவி யோடின கேடகத் தடமொடு முடலம்.

இ - ள். துரந்த - (ஸ்ரீராமபிரானது வில்லிலிருந்து) விடுபட்டனவும், உயிர் நிலை துருவி ஓடின - உயிரிருக்கும் இடத்தை ஆராய்ந்து சென்றனவுமாகிய, சுடுசரம் - கொடிய பாணங்கள், கருவி ஓடின - ஆயுதங்களின்மேல் வரிந்த, கச்சையும் - அரைக்கச்சுகளும், கவசமும் - இருப்புச்சட்டைகளும், கழல - நெகிழும்படியாகவும், அருவி ஓடின என - மலையின் வீழ் ஆறுகள் சென்றனபோல, அழி குருதி யாறு ஒழுக - அழிந்த அரத்த நதிபோகும்படியாகவும், கேடகம் தடமொடும் உடலம் - கேடகமென்னும் பெயரினையுடையதாகிய இருப்புத்தட்டுகளிலும் (அவர்களுடைய) உடல்களிலும், உருவி ஓடின - உருவிச்சென்றன (௧௫௦)

ஆய்ந்த கங்கபத் திரங்கள்புக் கரக்கர்தா வி
தோய்ந்த தோய்விலாப் பிறைமுகச் சரஞ்சிரந் துமித்த
காய்ந்த வெஞ்சர நிருதர்தங் கவசமார் புருவப்
பாய்ந்த வஞ்சக ரிதயமும் பிளந்தன பலவும்.

இ - ள். ஆய்ந்த - (ஸ்ரீராமபிரானால்) ஆராய்ந்தெடுக்கப்பட்ட, கங்கபத்திரங்கள் - (சில) பாணங்கள், புக்கு - புகுந்து, அரக்கர்து ஆவி தோய்ந்த - அரக்கர்து உயிர்நிலையிற் கலந்தன, தோய்வு இலா - (அவ்வாறு உயிர் நிலையிற்) கலவாத, பிறைமுகச்சரம் - அர்த்த சந்திர பாணங்கள், சிரம் துமித்த - தலைகளை அறுத்துத்தள்ளின, காய்ந்த வெஞ்சரம் - (சில) சினந்த கொடிய பாணங்கள், நிருதர்தம் - அரக்கர்களுடைய, கவசம் மார்பு உருவ - கவசத்தையணிந்த மார்பினைக் உருவிச் செல்ல

லும்படி, பாய்ந்த - தாக்கின, பல்லம் - (சில) அம்புகள், வஞ்சகர் இதயமும் பிளந்தன - (மாயைப் போர்புரியும்) வஞ்சகர்களாகிய (சில) அரக்கர்களினது (கெட்ட எண்ணங்கொண்ட) நெஞ்சினையும் பிளந்துவிட்டன (௪௫௧)

தூடணன்விடு சுடுசரம் யாவையுந் துணிய
மாடு நின்றவர் வழங்கிய படைகளு மற்ற
வாடல் கொண்டன னளப்பரும் பெருவலி யரக்கர்
கூடி நின்றவக் குரைகடல் வறள்படக் குறைத்தான்.

இ - ள். தூடணன் விடு சுடுசரம் யாவையும் துணிய - தூஷணன் ஏவிய கொடிய பாணங்களையும் அறுபடவும், மாடு நின்றவர் - (அவன்) பக்கத்தே நின்றவர்கள், வழங்கிய - செலுத்திய படைகளும் மற்ற - ஆயுதங்களும் மாறுபடவும், ஆடல் கொண்டனன் - (ஸ்ரீராமபிரான்) திருவிளையாடல் புரிபவனாய், அளப்பரும் - அளவிடமுடியாத, பெருவலி அரக்கர் - மிக்க வலிமையுடைய இராக்கதர்கள் கூடி நின்ற - சேர்ந்து நின்ற, அக் குரைகடல் - சப்திக்கின்ற அந்த (சேனை)க்கடல், வறள் பட - வறண்டுபோம்படி, குறைத்தான் - சங்கரித்தான் (௪௫௨)

ஆர்த்தெ ழுந்தனர் வானவ ரருவரை மரத்தோ
டீர்த்தெ ழுந்தன குருதியின் பெருநதி யிராமன்
றூர்த்த செஞ்சரந் திசைதொறுந் திசைதொறுந் தொடர்ந்து
போர்த்த வெஞ்சினத் தரக்கரைப் புரட்டின புவியில்

இ - ள். (அதுகண்டு) வானவர் ஆர்த்து எழுந்தனர் - தேவர்கள் பேரொலி செய்து எழுந்தார்கள், குருதியின் பெருநதி - இரத்தத்தாலாகிய பெரிய நதிகள், அருவரை மரத்தோடு - அரிய மலைகளையும் மரங்களையும், ஈர்த்து எழுந்தன - இழுத்துக்கொண்டு சென்றன, இராமன் தூர்த்த செஞ்சரம் - ஸ்ரீராமபிரான் [illegible] நல்ல கணைகள், திசைதொறும் திசைதொறும் தொடர்ந்து - திக்குகள் தோறும் தொடர்ந்து சென்று, போர்த்த - (அத்திசைகளை) மூடிய, வெஞ்சினத்து அரக்கரை - வெவ்விய கோபத்தினையுடைய இராக்கதர்களை, புவியில் புரட்டின - பூமியிற் புரளும்படி செய்தன (௪௫௩)

தோன்று மால்வரைத் தொகையெனத் துவன்றிய பிணச்சே
றான்ற பாழ்வயிற் றலகையைப் புகல்வதே னமர்வேட்
டூன்றி னோரெலா முலந்தன ரொல்லையி லொழிந்தார்
கான்ற வின்னுயிர் காலனுங் கவர்ந்துமெய் மறந்தான்

இ - ள். அமர் வேட்டு - போரினைவிரும்பி, ஊன்றினோர் எலாம் - நிலைநின்ற அரக்கர் முழுவதும், ஒல்லையில் - விரைவில், உலந்தனர் ஒழிந்தார் - கெட்டொழிந்தார்கள், கான்ற இன் உயிர் - (உடலினின்றும்) வெளிப்பட்ட (அவர்களுடைய) இனிய உயிர்களை, கவர்ந்து - கைப்பற்றி, காலனும் மெய் மறந்தான் - யமனும் (சிரமத்தால்) தேகத்தை மறந்தான், (என்றால்), தோன்று - காணப்படுகின்ற, மால் வரை தொகை என - கரிய பெரிய மலைக்கூட்டங்களைப்போல, துவன்றிய - நெருங்கிய, பிணம் சேறு - (பிணங்களினது) கொழுப்பின் குழம்பு, ஆன்ற - நிறைந்த

பாழ்வயிறு - பாழ்த்தவயிற்றினையுடைய, அலகையை - பசாசுகளை, புகலவது என் - சொல்வது யாது ? (க௫௪)

களிறு தேர்பரி கடுத்தவர் முடித்தலை கவந்த
மொளிறு பல்படைத் தங்குலத் தரக்கர்தம் முடலம்
வெளிறு சோர்நிணம் பிறங்கிய வடுக்கலின் மீதாகக்
குளிறு தேர்கடி தோட்டினன் றூட்டணன் கொதித்தான்.

இ - ள் களிறு - யானைகளும், தேர் - இரதங்களும், பரி - குதிரைகளும், கடுத்தவர் முடி தலை கவந்தம் - கோபித்த வீரர்களது குடுமிச் சிரங்களும் தலையற்ற முண்டங்களும், ஒளிறு பல்படை - பிரகாசிக்கின்ற பல ஆயுதங்களையுடைய, தம் குலத்து அரக்கர்தம் உடலம் - அவர்கள் கூட்டத்தைச்சேர்ந்த இராக்கதர்களுடைய உடல்களுமாகிய வெளிறு சோர் - வெண்ணிறஞ்சோர்ந்த, நிணம்பிறங்கிய - கொழுப்பு விளங்கிய, அடுக்கலின்மீது ஆ - மலைகளின்மேலாக, குளிறுதேர் - பேரொலி செய்கின்ற இரதத்தை, தூண்டணன் - தூண்டினன், கடிது - விரைவில், ஓட்டினன் கொதித்தான் - ஓட்டிக் கொதிப்புற்றான்

குறிப்பு — முடித்தலை கவந்தம் என்பனவற்றைக் களிறு தேர் பரி கடுத்தவர் என்னும் நால்வகைத்தானையொடுங் கூட்டுக எதிர்த்துப் போர்புரிந்தோரென்பார் 'கடுத்தவர்' என்றார் அங்ஙனங் கடுத்தவரோடு சேர்ந்து எதிர்க்கவந்து புறங்காட்டினவர் என்பதும் அவ்வேற்றாயுதங்களைச் சிறிதும் உபயோகிக்காமல் வீணே சுமந்தனர் என்பதும் அவர் இராமபாணங்கள் அறுக்கருதிப்பாராதிருந்தும் அச்சத்தால் இறந்தார் என்பதும் தோன்ற 'ஒளிறு பல்படைத் தங்குலத் தரக்கர்தம் முடலம்' என்றார் ஒளிறல் - அரத்தக்கறை தோயாது பிரகாசித்தல் உடலம் - உறுப்புகளறு படாமல் வீழ்ந்திறந்த சரீரம் (க௫௫)

அறங்கொ ளாதவ ராக்கைக ளடுக்கிய வடுக்கல்
பிறங்கி நீண்டன கணிப்பில பெருங்கடு விசையால்
கறங்கு போன்றுள தாயினும் பிணப்பெருங் கட்டத்
திறங்கு மேறுமத் தேர்பட்ட தியாதென வுரைப்பாம்

இ - ள் அறம் கொள்ளாதவர் ஆக்கைகள் - தருமத்தைப்பெறாத அரக்கர்களின் உடல்கள், அடுக்கிய - அடுக்கின, அடுக்கல் - மலைகள், பிறங்கி நீண்டன - விளங்கி யுயர்ந்தன, கணிப்பு இல - எண்ணிக்கையற்ற அம்மலைகள், பெருங்கடுவிசையால் - (தேரினது) மிக்க வேகத்தினாலுண்டாகிய காற்றினால், கறங்கு போன்று உளது ஆயினும் - காற்றாடிபோல உள்ளனவாயினும், பிணம் பெருங்கட்டத்து - பிணங்களாகிய பெரிய கட்டத்தில், இறங்கும் ஏறும் - இறங்கி யேறுகின்ற, அத்தேர் - அந்த இரதம், பட்டது - அடைந்த கஷ்டம், யாது என உரைப்பாம் - யாதென்று கூறுவாம். (க௫௬)

அரிதி னெய்தின னையந்து கொய்யுளைப் பரிமா
வுருளு மாழிய தொருதனித் தேரின னுலகத்
திருளை நீக்கிய விந்துவிற் பொலிகின்ற விராமன்
றெருளும் வார்கணைக் கூற்றெதி ராகிச்சென் றெனன.

இ-ள். உலகத்து இருளை நீக்கிய - புவியினது இருட்டை விலக்கிய, இந்து வில் - சந்திரனைப்போல், பொலிகின்ற இராமன் - விளங்குகின்ற ஸ்ரீராமபிரானது, தெருளும் - ஆராய்கிற, வாளிகளை - நீண்ட பாணமாகிய, கூற்று எதிர் - யமனுக்கு முன்னே, ஆவி சென்றென்ன - உயிர் (தானே எதிர்) சென்றாற்போல, கொய் உளை - கொய்த பிடர்மயிரினையுடைய, ஐயைந்து பரிமா - இருபத்தைந்து குதிரைகளைப் பூட்டிய, உருளும் ஆழி பற்று - உருண்டு செல்கின்ற சக்கரத்தினையுடையதாகிய, தனி - ஒப்பற்ற, ஒரு தேரினன் - ஒரு இரதத்தினையுடைய தூஷணன், அரிதின் எய்தினன் - (ஸ்ரீராமபிரானுக்குச்) சமீபத்திற் சேர்ந்தான். (சநஎ)

சென்ற தேரையுஞ் சிலையுடை மலையெனத் தேர்மே
னின்ற தூடணன் றன்னையு நோக்கிய நிமல
னன்று நன்றுநின் னிலையெனா வருளிறை நயந்தா
னென்ற காலத்தவ் வெய்யவன் பகழிமூன் றெய்தான்

இ-ள். சென்ற தேரையும் - (அவ்வாறு) சென்ற இரதத்தையும், சிலை உடை மலை என - வில்லினையுடைய மலையைப்போல, தேர்மேல் - அவ்விரதத்தின் மீது, நின்ற—, தூடணன் தன்னையும் - தூஷணனையும், நோக்கிய - பார்த்த, நிமலன் - ஸ்ரீராமபிரான், நின் நிலை - நினது நிலைமை, நன்று நன்று என - மிகவும் நன்றாயிருக்கின்றதென்று, அருள் - கருணையோடு, இறை நயந்தான் என்ற காலத்து - சிறிது மதித்தானென்றபொழுது, அ வெய்யவன் - அந்தக் கொடிய தூஷணன், மூன்று பகழி எய்தான் - மூன்றுகணைகளை எய்தான்.

குறிப்பு—நிமலன் - மலரகிதன். நன்று நன்றென்னும் அடுக்கு உவகைப்பொருட்டு. நிலை - இத்தனை வீரர்களும் சேனைகளும் இறந்தும் சிறிதும் அஞ்சாமல் அவன் தனியே போர்க்குவந்த தன்மை. இனி, நிலை - யுத்தநிலையுமாம். விற்றொடுத்தம்பினையெய்வார்க்குரிய நிலை - நால்வகைப்படும்; அவையாவன: பைசாசம், மண்டிலம், ஆலீடம், பிரத்தியாலீடம் என்பன. "நவையறு பைசாச நிலையு மண்டிலமு, மாலீட நிலையும் பிரத்தியா லீடமு, மெனக்கொரு நிலையு மொருநால் வகையே" அவற்றுள் "ஒருகா னிலத்தின் மற்றொருகா ளுடக்குய, பரிசாய நிலையது பைசாச நிலையே" "இருகான் மண்டிலித் திருத்தன் மண்டில நிலை" "வலக்கான் மண்டிலித் திடக்கான் முற்றுறீஇ, லதற்பெய ராலீட நிலைய தாகும்" "வலக்கான் முந்துற நிடக்கான் மண்டிலித்த, லிடற்பெயர் பிரத்தியா லீட நிலையே" என்றார் பிங்கலந்தையில். (சநஅ)

தூர வட்டவெண் டிசைகளைத் தனித்தனி சுமக்கும்
பார வெட்டினோ டிரண்டினி லொன்றுபார் புரக்கப்
போவிட்டவ னுதலணி யோடையிற் பிறழும்
வீர பட்டிகை பட்டன விண்ணவர் வெருவ

இ-ள். தூரவட்டம் எண் திசைகளை - சேய்மையிலுள்ள வட்டமாகிய எட்டுத் திக்குகளையும், தனி தனி சுமக்கும் - தனித்தனியாகச் சுமக்கின்ற, பாரம் எட்டினோடு - சுமையையுடைய அஷ்டகஜங்களோடு, இரண்டினில் - (புவிச்சுமையையுடைய) ஆதிசேஷன் கூர்மமென்னும் இரண்டினில், ஒன்று - ஒன்றாகிய ஆதிசேஷனை [பாதுகையை], பார் புரக்க - புவியை இரட்சிக்கும்படி, போவிட்டவன் - (தனது திருவடியினின்றும்) பிரிந்து போம்படி விட்ட ஸ்ரீராமபிரானது, நுதல் - நெ

றதியில், அணி - பூணுகின்ற, ஓடையில் - நெற்றிப்பட்டம்போல், பிறழும் - விளங்குகின்ற, வீரபட்டிகை - வீரபட்டிகையில், விண்ணவர் வெருவ - தேவர்கள் அச்சங்கொள்ளும்படி, பட்டன - (அம்மூன்று கணைகளும்) தாக்கின.

குறிப்பு — தூர - தூரம், வடமொழித் தற்சமம் "தூரவிடல்" (நாலடி) திசைகளைச் சுமக்கும் எட்டெனவே அஷ்டகஜங்களையும், எட்டிரேடிரண்டெனவே சேடனையுங் கூர்மத்தையும், இரண்டினிலொன்று பாரபுரக்கவெனவே ஆதிசேடனையும், பேரவிட்டவன் எனவே பாதுகையையுங் குறிப்பிற்கோடலாயிற்று. ஆதிசேடன் எம்பிரானுக்கு நடக்கும்பொழுது குடையாகவும், வீற்றிருக்கும் பொழுது சிங்காசனமாகவும், நிற்கும் பொழுது மரவடியாகவும், பின்னும் புணை, மணிவிளக்கு, பூம்பட்டு அணையென்பனவாகவும் இருந்து கைங்கரியம் புரிவானாகலின் எண்டிசை சேடனைப் பாதுகையென்று கூறலாயிற்று. "சென்றாற் குடையா மிருந்தாற் சிங்காசனமாம், நின்றான் மரவடியாம் நீள்கடலுள் —, என்றும், புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு, மணையாந் திருமாற் கரவு" என்றார் பொய்கைப்பிரானும். பேர - பெயரவென்பதன் விகாரம். இனி, தூரம் - ஆகாயம், வட்டம் - உலகம் எனவும், இரண்டினிலொன்பது தருவச்சக்கரத்தையும் சேடனையும் என்றி நிரனிறையாகக் குறிப்பதாகவுங்கொண்டு, ஒன்றென்பதை சகரவகாரமாகிய பாதம் பேலேற்றிக் கூறுதலும் பொருந்தும். வீரபட்டிகையை நுதலணியோடொக்க உவமித்தலின் ஸ்ரீராமனையும் யானையோடுவமித்தாராயிற்று. (கருகூ)

எய்த காலமும் வலியுநல் லெனநினைந் திராமன்
செய்த சேயொளி முறுவலன் கடுங்கணை தெரிந்தா
னொய்தி னங்கவ னொறிற்பரித் தேர்பட நூறிக்
கையின் வெஞ்சிலை யறுத்தொளிர் கவசமுங் கடிந்தான்

இ - ள். எய்த காலமும் வலியும் நல்ல என - (தூடணன் கணைகளை) எய்த நேரமும் (அவன்) வீரமும் நல்லவையென்று, நினைந்து - நினைத்து, இராமன் - ஸ்ரீராமபிரான், செய்த —, சேயொளி முறுவலன் - செய்ய ஒளிபொருந்திய புன்னகையுடையானாகி, கடுங்கணை தெரிந்தான் - கொடியபாணத்தையுணர்ந்து, நொய்தின் - விரைவில், அவன் - அசுரனுடைய, நொறில் - விரைவுள்ள, பரித்தேர் - குதிரைகளைப்பூண்ட இரதம், பட - நாசமாம்படி, நூறி - அழித்தும், கையின் வெஞ்சிலை அறுத்து - (அவன்) கையிலிருந்த கொடியவில்லைத் துணித்தும், ஒளிர் - பிரகாசிக்கின்ற, கவசமும் - கவசத்தையும், கடிந்தான் - அழித்தான்.

குறிப்பு — சல்லென, அகரம் - தொகுத்தல். பற்கள் வெளிப்படாமல் வாய் மூடியவண்ணம் புன்னகைபுரிந்தானென்பார் 'சேயொளி முறுவலன்' என்றார். சேயொளி - செம்மையொளி, இதழின் நிறம். தெரிந்தான் - முற்றெச்சம். கரவேக சரவேகம் விளங்க, 'தெரிந்தான், கடிந்தான்' என்றார். (கசு0)

தேவ ரார்த்தெழ முனிவர்க டிசைதொறுஞ் சிலம்பு
மோவில் வாழ்த்தொலி நாற்கடன் முழக்கென வோங்கக்
காவ டாவிது வலேயே னீயெனக் கணையோ
றேவி னனவ னெயிறுடை நெடுந்தலை யிழந்தான்.

இ - ள் தேவர் ஆர்த்து எழ - தேவர்கள் பேரொலி செய்தெழும்படிக்கும், முனிவர்கள் - இருடிகள், திசைதொறும் சிலம்ப - திக்குகள்தோறும் (சென்று) ஆசீர்வதிக்கின்ற, ஓவு இல் வாழ்த்து ஒலி-குறைவில்லாத ஆசீர்வாதத்தினது சப்தமானது, நால் கடல் முழக்கு என - நான்குகடலின் பேரொலிபோல, ஓங்க - விளங்கும்படிக்கும், (ஸ்ரீராமபிரான்), நீ வல்லையேல் - நீ வல்லமையுடையாயாகில், இது - இக்கணையை, கா அடா என - காத்துக்கொள் அடா! என்று, கணை ஒன்று - ஒரு பாணத்தை, ஏவினன் - செலுத்தினன், (அதனால்), அவன் - அத்தூஷணன், எயிறு உடை நெடுந்தலை இழந்தான் - பற்களையுடைய பெரியதலையை இழந்தான்.

குறிப்பு — முனிவர் நான்மறைச் சுருதிகளால் வாழ்த்தினமையால் அவ்வாழ்த்தொலிக்கு நான்குகடலை யுவமைகூறினர். பல்லிளித்துக்கொண்டு இறந்தானென்பார் 'எயிறுடை நெடுந்தலை யிழந்தான்' என்றார். (௧௩௧)

வேறு

தம்பிதலை யறப்படி யுந்தய ரதன்சே
யம்புபடை யைத்துணி படுத்தது மறிந்தான்
வெம்புபடை விறல்விச யக்கரன் வெகுண்டான்
கொம்புதலை கட்டிய குலக்கரி கடுப்பான்

இ - ள் கொம்பு - மருப்பு, தலைகட்டிய - தலையிறக்கட்டின [தலையிறப்படியப்பெற்ற], குலம் கரி கடுப்பான் - அஷ்டகஜங்களை ஒப்பானாகிய, வெம்புபடை வில் கை - கொதிக்கின்ற ஆயுதங்களோடு வில்லினைப்பற்றிய கையினையுடைய, விசயம் கரன் - வெற்றிபொருந்திய கரன், தம்பி தலை அறப்படியும் - தம்பியாகிய தூஷணனது தலையற்று விழவும், தயரதன் சேய - சக்கரவர்த்தி திருக்குமாரனது, அம்பு - கணைகள், படையை துணிபடுத்ததும் - (அத்தூஷணனது) சேனைகளை அறுத்துச்சளியத்தும், அறிந்தான் வெகுண்டான் - அறிந்து சினங்கொண்டான். (௧௩௨)

அந்தகனு முட்கிட வரக்கர்கட லோடுந்
சிந்துரம் வயப்புரவி தேர்திசை பரப்பி
யிந்துவை வளைக்குமெழி லிக்குல மெனத்தான்
வந்துவரி விற்கைமத யானையை வளைத்தான்

இ - ள் (அவ்வாறு வெகுண்டகரன்), அந்தகனும் உட்கிட - யமனும் பயப்படும்படி, அரக்கர் கடலோடும் - ராக்ஷஸசேனைசமுத்திரத்தினுடனே, சிந்துரம் - யானைகளையும், வயம் புரவி - வலிமையையுடைய குதிரைகளையும், தேர் - இரதங்களையும், திசைபரப்பி - திக்குக்களிற் பரவிவரும்படி செய்து, இந்துவை வளைக்கும் எழிலி குலம் என வந்து - சந்திரனைச் சூழ்ந்துகொள்கின்ற மேகக்கூட்டத்தைப்போல வந்து, வரி வில் கை - கட்டமைந்த வில்லினைப்பிடித்த கையினையுடைய, மதம் யானையை - மதம்பொருந்திய யானையையொத்த ஸ்ரீராமபிரானை, வளைத்தான் - வளைத்துக்கொண்டான். (௧௩௩)

அடங்கலில் கொடுந்தொழி லரக்கரவ வந்தன
படங்கிழி தரப்படி தனிற்பல விதப்போர்
கடங்கலுழ தடங்களிறு தேர்பரி கடாவித்
தொடங்கினர் நெடுந்தகையும் வெங்கணை துரந்தான்.

இ-ள் அடஙகல இல - அடஙகுதலிலலாத [மேலு மேலும விருததியா கினற], கொடுநதொழில - தீய செயலினையுடைய, அரககா - இராககதாகள, அநந தன படம கிழிதர - அநத ஆதிசேடனது படஙகிழியுமபடி, படிதனில - பூமி யில, கடம கலுழ தடம களிறு - மதம பொழிகினற பெரிய யானைகளையும, தோ - இரதஙகளையும, பரி - குதிரைகளையும, கடாவி - நடததி, பல விதம போா தொடங கினா - பலவிதமான யுததததைசசெயய ஆரமபிததாாகள, செஙநதகையும - ஸ்ரீராம பிரானும, வெஙகணை தூரநதான - கொடியபாணஙகளைப பிரயோகஞ செயதான

குறிபபு — இது காறும அரககாகளின தீயசெயலை யடககினாரிலலை யெனபாா 'அடஙகலில கொடுநதொழில' எனறாா அநநதன—அநதமிலலாதவன, சேடன ஒவ வொருவரும ஒவவொருவிதமான ஆயுதஙகளை யேவிபபோாசெயதாா எனபாா 'பல விதபபோா' எனறாா மல யுததம முதலியன கோடறகு எமபிரான சேனையோடி லலாமையாலியலாமையறிக செஙநதகை - பணபுததொகைப புறததுப பிறநத அனமொழிததொகை (கசுச)

துடிததன கடககரி நுடிதத்தன பரிததோ
நுடிததன முடிததலை துடிததன தொடிததோ
டிடிநதன மணிககுடா துடிததன தசைததோ
றுடிததன கழறறுணை துடிததன விடததோள

இ-ள கடமகரி துடிததன - மதததினையுடைய யானைகள பதறிவிழநதன, பரிததோ றுடிததன - குதிரைகளைபபூடடிய இரதஙகள குதிததன [மூறபடடு நிலைகுலைநது விழநதன], முடிததலை துடிததன - கிரீடததினையுடைய தலைகள குதி ததன [அறுபடடு விழநதன], தொடிததோள துடிததன - வீரவளைகளையுடைய [தோ]ளகள அறுபடடு விழநதன, மணிககுடா துடிததன - மணிககுடலகள அறுபட டுவிழநதன, தசைததோல துடிததன - மாமிசததோடுகூடிய தோலகள அறுபடடு விழநதன, கழல துணை துடிததன - தாளிணைகள அறுபடடு விழநதன, இடததோள துடிததன - (பினனினறோா அனைவருககும) இடது பககள துடிததன

குறிபபு —முடி தோள குடல முதலியன அறுபடடுப பாணவேகததால தூரத தே விழநதன எனபாா 'துடிததன' எனறாா முடிததலை - குமிச சிரமுமாம தொடி - வீரவளை, "தொடிததோட டுபபிற றுழநத வல 'பின" எனனும புறப்பா ட்டில இபபொருடடாதல காணக (கசுரு)

வாளினவனம வேலினவனம வாசிலை வனநதிண
டோளினவன மெனறிவை துவனறிநிரு தபபே
ராளினவன நிறைதனை யமபினவன மெனனுங
கோளினவன வனகுழுவி னிறகுறை படுததான

இ-ள வாளின வனம - வாளாயுதககாடு, வேலின வனம - வேலாயுதக காடு, வாசிலை வனம - நெடிய விலலுககாடு, திண தோளின வனம - வலிய தோள களினகாடு, எனறு இவை துவனறி - எனறு இக்காடுகள நெருஙகி, நிருதா போ ஆளின வனம நிறைதனை - அரககாகளாகிய பெரிய ஆளகளின காடு (எதிாதது) நிறறலை, அமபினவனம எனனும - அமபுககாடு எனகிற, கோளின வனவனகு

மூவில் - கொல்லுந் தொழிலையுடைய அழகிய வலிய கூட்டத்தினாலே, குறை படுத்தான் குறையும்படி செய்தான் (௧௬௬)

தானுருவு கொண்ட தருமந் தெரி சரந்தான்
மீனுருவு மேருவை விலங்குருவு மேலாம்
வானுருவு மண்ணுருவும் வாளுருவி வந்தார்
ஊனுருவு மென்னுமி துணர்த்தவு முரித்தோ.

இ - ள் தான் உருவுகொண்ட தருமம் - தான் உருவமாகக்கொண்ட தருமத்தை, தெரி - அறிந்த, சரம் - ஸ்ரீராமபாணமானது, மீன் உருவும் - நட்சத்திரங்களை யுருவிச்செல்லும், மேருவை - பொன்மலையை, விலங்க உருவும் - (இடம்விட்டுப் பெயர்ந்து) விலகும்படி உருவிச்செல்லும், மேல் ஆம் வான் உருவும் - உயர்வாகிய ஆகாயத்தை யுருவிச்செல்லும், மண் உருவும்-பூமியை யுருவிச்செல்லும், (என்றால்), வாள் உருவி வந்தார் - வாளாயுதத்தை யுருவிக்கொண்டுவந்த அரக்கர்களினுடைய, ஊன் - உடலை, உருவும் என்னும் இது உணர்த்தவும் உரித்தோ - உருவிச்செல்லும் என்கிற இவ்விஷயம் தெரியப்படுத்தவும் தகுதியுடையதோ? [அன்று]

குறிப்பு—ஸ்ரீராமபிரானது தருமகுணத்தை அவர் அம்பின்மேலேற்றி 'தானுருவுகொண்ட தருமந் தெரிசரந்தான்' என்றார், எனவே இராமபாணங்கள் புறமுதுகிட்டோரைக் கோறல் புரியாது விட்டனவென்பது பெறலாம் (௧௬௭)

அன்றிடை வளைந்தவர் குலங்களொ டடங்கச்
சென்றுலை வுறும்படி தெரிந்துகணை சிந்த
மன்றிடை நலிந்துவலி யோர்களெளி யோரைக்
கொன்றனர் நுகர்ந்தபொரு ளிற்கடிது கொன்ற

இ - ள் அன்று இடைவளைந்தவர் - அறமைப்பொழுதிற் சூழ்ந்துகொண்ட அரக்கர்கள், குலங்களொடு- தமது கூட்டங்களோடு, அடங்க - நிறைவாய், சென்று- போய், உலைவு உறும்படி - அழிந்துபோம்படி, தெரிந்து - அறிந்து, கணை சிந்த - (ஸ்ரீராமபிரான்) பாணப்பிரயோகஞ்செய்ய, (அக்கணைகள்), வலியோர்கள் - செல்வமுடையவர்கள், மன்று இடை - நியாயசபையில், நலிந்து - வருந்தி, எளியோரைக் கொன்றனர் - எளியவர்களைக்கெடுத்து, நுகர்ந்த - (அபகரித்து) அனுபவித்த, பொருளில் - பொருளைப்போல, கடிது கொன்ற - விரைவாகக் கொன்றன

குறிப்பு—அவ்வரவரேவிய கணைகட்கெதிர் கணையேவினானென்பார் 'தெரிந்து கணை சிந்த' என்றார் தாம் கூறுமொழியை நியாயாதிபதி மெய்யென்று கருதுமாறு நடித்துக் காட்டினரென்பார் 'நலிந்து' என்றார். பொருளுடையார் எச்செயலுமியற்ற வல்லுநராகலின் 'வலியோர்' என்றார், "கல்லானே யானாலுங் கைப்பொருளொன்றுண்டாயி, னெல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்" என்பவாகலின். இனி வாயில் வல்லவரென்னுமாம், "சொல்லவல்லன் சோர்விலனஞ்சா னவனை, யிகல்வெல்லல் யார்க்கு மரிது" "பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால், மெய்போலும்மே மெய்போலும்மே" என்பவற்றாலுணர்க. வலியோர்களெளியோரைக் கொன்றனர் நுகர்ந்த பொருள் எனவே பொருட் பற்றுடையோர் தீவினையியற்றச்சிறிதுமஞ்சாரென்பதாம் என்னை? "உயிர்க்கொலை புரிதலுண்ணு மூணவுயார் முட்டு

செய்த, வயிர்ப்பிலா நண்பர் மாட்டு மமைத்தற் குய்யஞ் செய்தல், பயிர்ப்புமிக் குறங்ல் லோரைப் பழித்தல், பொய்க் கரியு ரைத்தல், செயிர்ப்பிலா லயத்தி டத்துஞ் சென்று பட் டிமையி யற்றல்" "இவைமுதற் பலவு மாந்தரியற்றினார் கழியா நிற்ப, ரவையெ லாம் பொருணி மித்த மாகும்ப பொருளைப் பெற்றோர், குவையுறப் புதைத்து வைத்துக் குத்துப் படைந்து காத்து, நவையுறு பண்பே யென்னும் நாமமும் பெறுவா யா தோ" என்பவாகலின், கொன்றனர்- முற்றெச்சம், "பொச்சாப் புண்டு பொருளுரை யாளர், நச்சுக்கொன் றேற்கு நன்னெறி யுண்டோ" என்புழிக்கொன்றே னென்றற்குக் கெடுத்தே னென்றுபொருள் கூறினார் அடியார்க்கு நல்லார் "பொருளில்லார்க், கிவ் வுலக மில்லாகி யாங்கு" என்றவாறு இவ்வுலகவின்பத்திற் கின்றியமையாத பொரு ளில்லையேல் "வாழ்வில்லாச் சங்கடத்திற் சாவதே நன்று" என்றவாறு இறப்பது நன்றாகுமாகலின் எளியார் தம் மிடத்திலுள்ள சிறிது பொருளும் இழந்தபின் இறந்த வரேயாவார் என்பார் 'கொன்றனர்' என்றார் என்னலுமாம் மன்றோரஞ் சொல் லிக்கவர்ந்தபொருள் அங்ஙனங் கவர்ந்தனுபவிப்போரை நாசஞ்செய்யும் என்பதை "யோதாளுஞ் சேருமே வெவ்வொருக்குப் பூக்குமே, பாதாள மூலி படருமே,—மூதே வி, சென்றிருந்து வாழ்வளே சேட்டன் குடிபுகுமே, மன்றோரஞ் சொன்னோர் மனை" என்பதனாலுணர்க. (௧௬௮)

கடுங்கர னென்பபெயர் படைத்தகழல் வீர
னடங்கலு மரக்கரழி வுற்றிட வழன்று
னொடுங்கலி னிணக்குருதி யோதமக முள்ளா
னெடுங்கடலின் மந்தர மெனத்தமிய னின்றான்

இ - ள். கடுங்கரன் என் - கொடியகரன் என்று, பெயர்படைத்த - நாமத்தைப் படைத்த, கழல்வீரன் - வீரக்கழலைத்தரித்த ஆண்மையையுடையான், அரக்கர் அடங்கலும் - இராக்கதர் முழுவதும், அழிவு உற்றிட - நாசமடைந்ததால், அழன்று - கோபமுற்றவனாகி, ஒடுங்கல் இல் - சுருங்குதலில்லாத, நிணம் குருதி ஓதம் அகத்து உள்ளான் - கொழுப்போடுகூடிய இரத்தக்கடலிலிருக்குமவன், நெடுங்கடலில் - பெரியசமுத்திரத்தில், மந்தரம் என - மந்தரமலை யென்னும்படி, தமியன் நின்றான் - தனித்தவனாய் நின்றான். (௧௬௯)

செங்கணெரி சிந்தவரி விற்பகழி சிந்தப்
பொங்குகுருதிப்புணரி யுட்புகையு நெஞ்சன்
கங்கமொடு காகமிடை யக்கடலி னோடும்
வங்கமென லாயதொரு தேரின்மிசை வந்தான்

இ - ள். புகையும் நெஞ்சன் - எரிகின்ற மனத்தினையுடையானாகிய அக்கரன், பொங்குகுருதி புணரியுள் - மிகுகின்ற இரத்தக்கடலில், கடலின் ஓடும் - சமுத்திரத்திற் செல்லுகின்ற, வங்கம் எனல் ஆயது ஒரு தேரின்மிசை - கப்பல் என்று சொல்லும்படியானதாகிய ஒரு இரதத்தின்மேல், செங்கண் எரிசிந்த - (தனது) சிவந்த கண்களினின்றும் அக்கினி சிந்தும்படியாகவும், வரிவில் - கட்டமைந்த வில்லினின்றும், பகழிசிந்த - பாணங்கள் சிந்தும்படியாகவும், கங்கம் ஒடுகாகம் மிடைய - (தனது தேர்மேல்) பருந்துகளும் காக்கைகளும் நெருங்கும்படியாகவும், வந்தான்.—

செறுத்திறுதி யிற்புவனி தீயவெழு தீயின்
மறத்தின்வயி ரத்தொருவன் வந்தணுகு முந்தைக்
கறுத்தமணி கண்டர்கட வுட்சிலை கரத்தா
லிறுத்தவனும் வெங்கணை தெரிந்தன னெதிர்ந்தான்

இ-ள். இறுதியில் - யுகாந்தகாலத்தில், புவனிதீய - உலகம் எரிந்துபோம்படி, எழுதீயில் - புறப்படுகின்ற நெருப்பைப்போல, மறத்தின் வயிரத்து ஒருவன் - கோபத்தையுஞ் சலஞ்சாதித்தலையுமுடைய ஒருவனாகியகரன், வந்து அணுகு முந்தை - வந்து நெருங்குமுன்பு, கறுத்த மணிகண்டர் - கரியநிறங்கொண்ட அழகிய கழுத்தினையுடைய சிவபிரானது, கடவுள் சிலை - தெய்வத்தன்மைபொருந்திய வில்லை, கரத்தால் - (தனது) கையினால், இறுத்தவனும் - ஒடித்த ஸ்ரீராமபிரானும், வெங்கணை தெரிந்தனன் - கொடிய சரங்களைத் தெரிந்தெடுத்தவனாகி, எதிர்ந்தான் - (கரனை) எதிர்சென்றான். (௧௭௧)

தீயுருவ காலவிசைய செவ்வியன வெவ்வா
யாயிரம் வடிக்கணை யரக்கர்பதி யெய்தான்
தீயுருவ காலவிசைய செவ்வியன வெவ்வா
யாயிரம் வடிக்கணை யிராமனு மறுத்தான்

இ-ள். தீ உருவ - தீப்போலும் உருவமுள்ளனவும், காலவிசைய - காற்றைப்போலும் வேகமுள்ளனவும், செவ்வியன - அழகுள்ளனவுமாகிய, வெவ்வாய - கொடியவாயினையுடைய, வடி - கூர்மைபொருந்திய, ஆயிரம் கணை - ஆயிரம்பாணங்களை, அரக்கர்பதி - கரன், எய்தான் —, தீ உருவ காலவிசைய செவ்வியன வெவ்வாய ஆயிரம் வடிக்கணை - அத்தகைய ஆயிரம் பாணங்களால், இராமனும் - ஸ்ரீராமபிரானும், அறுத்தான் - (கரன்கணை ஆயிரத்தையும்) துணித்தான். (௧௭௨)

ஊழியெரி யிற்கொடிய பாய்பகழி யொன்பா
னேழுலகி னுக்குமொரு நாயகனு மெய்தான்
சூழ்சுடர் வடிக்கணை யவற்றெதிர் தொடுத்தே
யாழிவரி விற்கர னனைவை யறுத்தான்.

இ-ள். ஏழ் உலகினுக்கும் - ஏழுலகங்களுக்கும், ஒருநாயகனும் - ஒப்பற்ற தலைவனாகிய ஸ்ரீராமபிரானும், ஊழி எரியில் கொடிய - ஊழித்தீயைப்பார்க்கிலுங் கொடியவையான, பாய்பகழி ஒன்பான் - (மார்பில்) ஊடுருவிச்செல்லும் ஒன்பது கணைகளை, எய்தான் —, ஆழிவரிவில் கரனும் - கடல்போன்ற கட்டமைந்த வில்லை ஏந்திய கையினையுடைய கரனும், சூழ்சுடர் - சூழ்ந்த சுவாலையையுடைய, வடி கணை அவற்று எதிர் தொடுத்து - கூர்மைபொருந்திய அக்கணைகளுக்கு எதிராக (ஒன்பது கணைகளைச்) செலுத்தி, அனைவை அறுத்தான் - (ஸ்ரீராமபிரான் ஏவிய) அவ்வொன்பது கணைகளையும் அறுத்தான். (௧௭௩)

கள்ளவமர் மாயவினை கல்வியின் விளைத்தான்
வள்ளலுரு வைப்பகழி மாரியின் மறைத்தா

னுள்ளமுலை வுறறமர ரோடின ரொளிததா
வெளளெயி றிதழபபவள வீரனும வெகுணடான

இ - ள (அரககன), கலவியின - (தனது) படிபபினுலே, களளம அமா - திருடடுததனமான போரையும, மாயவினை - மாயசசெயலகளையும, விளைததான - செயது, பகழி மாரியின - சரவருஷததால, வளளல உருவை மறைததான - ஸ்ரீராம பிரானது திருமேனியை மறையுமபடிசெயதான, அமரா - தேவாகள, உளளம உலைவு உறறு - மனமழிநதவாகளாய, ஒடினா ஒளிததாா - ஓடி யொளிததுககொணடாாகள, (அதனுல), வெள எயிறு - வெணமைநிறம பொருநதிய பறகளையும, இதழ பவளம- இதழாகிய பவளததினையுமுடைய, வீரனும - ஸ்ரீராமபிரானும, வெகுணடான - கோபிததாளுகி

குறிபபு —களளவமா - உருமறைநது நினறு செயயுமபோா மாயவினை - பலரூபமாகவும பலவகைபபடட வேறு வேறு ரூபமாகவும நினறு போாவிளைபபது இமமாயவினை கலைஞானம அறுபததுநானகுள இநதிரசாலம, மகேநதிரசால முதலியவறறுளடஙகுமாகலின 'கலவியின விளைததான' எனருா ஒடினா - முறறெசசம (கஎச)

வேறு

முடிபபெ னினறொரு மொயகணை யாலெனுத
தொடுதது நினறுயா தோளுற வாஙகினுன
பிடிதத திணசிலை பேரகல வானிடை
யிடிபபி னுைசை படககடி திறறதே.

இ - ள (ஸ்ரீராமபிரான), இனறு - இறறைப்பொழுது, ஒருமொய - ஒரு போரை, (ஒரு) கணையால - ஒருபாணததினுல, முடிபபென எனு - முடிததுவிடுகிறேன எனறு கூறி, நினறு - நினறுகொணடு, தொடுதது - (ஓாமபினை விலலிற) பூடடி, உயாதோள உறவாஙகினுன - (அவவமபின அடிபபுறமானது தனது) உயாநத புயததிற பொருநதுமபடி யிழுததான, (அப்போழ்து), பிடிதத திணசிலை - (அவன கையிற) பிடிததிருநத வலியவிலலானது, அகலவான இடை போ இடிபபின ஓசைபட - அகனற ஆகாயததில உணடாகும பேரிடியினது ஓசையுணடாகுமபடி, கடிது இறறது - விரைவாக முறிபபடடது (கஎரு)

வெறறி கூறிய வானவா வீரனவி
லிற்ற போது துணுககமுறா றேஙகினுா
மறறெருா வெஞசிலை யினமை மனககொளா
வறற தாலெம வலியென வஞசினுா

இ - ள. வெறறி கூறிய வானவர் - சயததைக கூறிய தேவாகள, வீரனவில இறறபோது - ஸ்ரீராமபிரானது வில்லொடிநதபொழுது, துணுககம உறறு எஙகினுா - அசசமடைநது விசாரஙகொணடவாகளாய, மறறு ஓா வெஞ்சிலை இனமை- (ஸ்ரீராமபிரானுககு) வேறொரு கொடியவில்லிலலாம லிருப்பதை, மனககொளா - மனததிறகொணடு, எம வலி - எஙகளுடைய தாஷடீகம அறறது என அஞ்சினுா- அறறுபபோயிற றெனறு பயநதாாகள. (கஎசு)

என்னு மாத்திரத தேநதிய காரமுகத
தின்ன மென்றுந தனிமையுஞ சிநதியான
மன்னர மன்னவன செமமல மரபினற
பின்னு றததன பெருஙகர நீட்டினன.

இ - ள என்னும மாததிரதது - (தேவாகள எமவலியறறது) என்று கூறு மளவில, எநதிய காரமுகம - தாஙகிய விலலினல, சின்னம என்றும - சிறுமையா யிறறென்றும, தனிமையும - தனிததிருபபதையும, சிநதியான - கருதாதவனுகி, மன்னா மன்னவன செமமல - அரசாகளுககு அரசனுகிய தசரதச சககரவாததியின திருககுமாரனுகிய ஸ்ரீராமபிரான, மரபினல - (க்ஷததிரியதருமம) வொழுஙகினல, (புறஙகாட்டாமல), தன பெரும கரம -தனது பெரியகரததை, பின உற நீட்டினன - பினபககததிற சேர நீட்டினன (கஎஎ)

கண்டு நின்று கருததுணாந தானென
வணடா நாதன் றடககையி னததுணை
பணடு போரமழு வாளியைப பணபினற
கொணட விலலை வருணன கொடுததனன.

இ - ள வருணன - வருணதேவன, கணடு - (விலவிற்றதைப்) பாாதது, நின்று - (அருகில) நின்றுகொணடு, கருதது உணாநதான என - (ஸ்ரீராமனது) நினைபபை யறிநதவனபோல, பணடு - முறகாலததில, போரமழுவாளியை - போா ககுரிய பரசாயுததததினையுடையானை [பரசுராமனை], பணபினல் - தகுதியினல, (வென்று), கொணட - கைபபறறிய, விலலை - கோதணடததை, அ துணை - அநதசசமயததில, அணடா நாதன - தேவாகளுககு நாயகனுகிய ஸ்ரீராமபிரானது, தடம கையின -பெரிய கையில, கொடுததனன - கொடுததான.

குறிப்பு —பாசுராமன தநத விலலினை வளைதது அவனெடு போாபுரியாமல அவவிலலினைக்கைபபறறியதால் 'பணபினற கொணடவில' என்றா "பூமழைபொ ழிநதனா புகுநத தேவருள, வாமவேல வருணனை மான வெஞசிலை, சேமியென றுத விததன சேனை யாாததெழ, நாமநீரயோததி நகா நண்ணினன" எனககீழககூறிய வாறு பரசுராமனுற பெறறு வருணனிடததுககொடுதது வைததிருநத விலலினை அவன இததறிகொடுததானெனக சிவபிரானும ஸ்ரீமகாவிஷ்ணுவும பிரமதேவனது தநதிரததினலே போாசெயதகாலதது அவவிருவரும கைககொணட விறகளில சிவபிரானல முனனரே பழுதடைநதவில் ஜனகமகாராஜன வசமிருநதது ஸ்ரீ மகாவி ஷ்ணு தானகொணட விலலைத தவததிறசிறநத இரிசிகாககுததா அவா ஜமதககினி ககுததர அசசமதககினியால பரசுராமனடைநதான இவவிறகளில ஒன்று மிதிலையில முறிபடடது மறறென்று வருணனிடஙகொடுககப படடிருநத தென்றறிக. (கஎஅ)

கொடுதத விலலையக கொணட னிறததினு
னெடுதது வாஙகி வலஙகொண டிடககையிற
பிடிதத போது நெறிபிழைத தோாககெலாந
துடிதத வாவிடக கணணெடு தோளுமே.

இ-ள் அக்கொண்டல் நிறத்தினன் - அந்த மேகம்போன்ற நிறத்தினையுடைய ஸ்ரீராமபிரான், கொடுத்த வில்லை - வருணன் கொடுத்த வில்லினை, எடுத்து - தூக்கி, வலங்கொண்டு வாங்கி - வலதுகரங்கொண்டு வளைத்து, இடம் கையில் பிடித்தபோது - இடது கையிற் பிடித்தகாலத்தில், நெறி பிழைத்தோர்க்கு எலாம் - தருமமார்க்கந் தவறினவர்களுக்கெல்லாம், இடம் கண்ணொடு தோளும் - இடதுகண்ணும் இடதுதோள்களும், துடித்த - துடித்தன (௧௭௯)

ஏற்றி நாணிமை யாமு னெடுத்தது
கூற்றி னாருங் குனிக்கக் குனித்தெதி
ராற்றி னானவ னாழியந் தேர்சர
நூற்றி னானுண் பொடிபட நூறினான்.

இ-ள் (ஸ்ரீராமபிரான்), இமையாமுன் - கண்மூடித் திறப்பதற்குமுன்பு, நாண் ஏற்றி - நாரிபூட்டி, எடுத்தது - எடுத்த வில்லினை, கூற்றினாரும் - யமனையொத்தவர்களும், குனிக்க - மதிக்கும்படி, குனித்து - வளைத்து, எதிர் ஆற்றினான் அவன் - எதிர்த்தல்செய்த [எதிர்த்த] கரனுடைய, ஆழி அம் தேர் - சக்கரங்களையுடைய அழகிய இரதத்தை, சரம் நூற்றினான் - நூறுபாணங்களால், நுண்பொடிபட - சிறுதூளாய் அழியும்படி, நூறினான் - அழித்தான் (௧௮௦)

எந்தி ரத்தடந் தேரழிந் தானிழந்
தந்த ரத்திடை யார்த்தெழுந் தம்பெலாஞ்
சுந்த ரத்தனி வில்லிதன் றோளெனு
மந்த ரத்தின் மழையின் வழங்கினான்

இ-ள் எந்திரம் தடம் தேர் அழிந்தான் - சக்கரங்களையுடைய பெரிய இரதம் அழியப்பெற்றகரன், இழந்து - (சேமத்தேர்களையும்) இழந்தவனாகி, ஆர்த்து - பேரொலிசெய்து, அந்தரத்து இடை எழுந்து - ஆகாயத்திற் கிளம்பி, சுந்தரம் தனி வில்லிதன் - அழகுபொருந்திய ஒப்பற்ற வில்லினையுடைய ஸ்ரீராமபிரானது, தோள் எனும் மந்தரத்தின் - புயமென்கிற மலையின்மேல், மழையின் - மேகத்தைப்போல, அம்பு எலாம் வழங்கினான் - சரமுழுவதையும் எய்தான் (௧௮௧)

தாங்கி நின்ற தயரத ராமனுந்
தூங்கு தூணி யிடைச்சுடு செஞ்சரம்
வாங்கு கின்ற வலக்கையொ டோர் வாளியால்
வீங்கு தோளொடு பாரிசை வீழ்த்தினான்

இ-ள் தாங்கி நின்ற - (கரன்கணைகள் மீறாவாறு) காத்து நின்ற, தயரதராமனும் - தாசரதியும், தூங்கு - (அம்புகள் குறைந்து) தளர்ந்திருக்கின்ற, தூணி இடை - தூணீரத்தின் கண், சுடுசெஞ்சரம் - தகிக்கின்ற நல்ல பாணங்களை, வாங்குகின்ற - எடுக்கின்ற, வலக்கை - (கரனது) வலதுகையினை, வீங்கு தோள் ஒடு - பருத்த புயத்துடனே, பார் இசை - புவியின்மேல், ஓர் வாளியால் - ஒரு சரத்தினால், வீழ்த்தினான் - (அறுந்து) விழும்படிசெய்தான்.

குறிப்பு.—கரன் சொரிந்த சரவருஷத்தைத் தனக்கணைகளால் மாற்றினனென்பார் 'தாங்கி நின்ற' என்றார். தாக்கு, தாங்கென மெலித்தல் விகாரம் பெற்றதெனினுமாம். (கஉஉ)

வலக்கை வீழ்தலு மற்றைக்கை யால்வெற்றி
யுலக்கை வானத் துருமென வோச்சினா
னிலக்கு வற்குமுன் வந்த விராமனும்
விலக்கி னானொரு வெங்கதிர் வாளியால்.

இ-ள். (அக்கரன்), வலக்கைவீழ்தலும் - (தனது) வலதுகை வீழ்ந்தவுடனே, மற்றைக் கையால் - இடது கையினால், வெற்றி உலக்கை - வெற்றியையுடைய (இருப்பு) உலக்கையை, வானத்து உரும் என - மேகத்தினிடியைப்போல, ஓச்சினான் - வீசியெறிந்தான், இலக்குவற்குமுன் வந்த இராமனும் - இளையபெருமானுக்கு முன்னே (போர்செய்ய) வந்த ஸ்ரீராமபிரானும், ஒரு வெங்கதிர் வாளியால் - ஒரு கொடியபிரகாசமுள்ள அம்பினால், விலக்கினான் - (அவ்வுலக்கையைத் துணித்து) நீக்கினான்.

குறிப்பு.—போர்க்கோலங்கொண்ட இளையபெருமாளைத் தடுத்து நிறுத்திவிட்டு வந்தானென்பார் 'இலக்குவற்கு முன்வந்த' என்றார். இனி, இலக்குவற்கு முன்னே பிறந்தோனென்னலுமியையும். (கஉ௩)

விராவ ருங்கடு வெள்ளெயி றிற்றபின்
னராவ ழன்ற தனைய தன்னாற்றலான்
மராம ரங்கையில் வாங்கிவந் தெய்தினா
னிராம னங்கோர் தனிக்கணை யேவினான்.

இ-ள். விராவரும் - கலத்தற்கருமையான [நீண்ட முடியாத], கடு - விஷத்தினையுடைய, வெள் எயிறு - வெள்ளைப்பற்கள், இற்றபின் - முறிப்பட்டபின்பு, அரா - பாம்பு, அழன்றது அனைய - சீறியதையொத்த, தன் ஆற்றலான் - தனது வலிமையினாலே, (கரன்), மராமரம் - ஒரு மராமரத்தை, கையில் வாங்கிவந்து - கையில் எடுத்துவந்து, எய்தினான் - சேர்ந்தான், இராமன் - ஸ்ரீராமபிரான், ஓர் தனி கணை ஏவினான் - ஒப்பற்ற ஒரு பாணத்தைப் பிரயோகஞ்செய்தான். (கஉச)

குறிப்பு.—உலக்கையை விலக்கியபோது கரன் பற்களும் முறிபட்டனவென்பது இச்செய்யுளாற் றுணியக்கிடந்தது.

வரம ரக்கன் படைத்தலின் மாயையி
னுரமு டைத்தன்மை யாலுல கேழையும்
பரமு ருக்கிய பாவத்தி னாலவ்வக்
கரமெ னக்கரன் கண்டமுற் றன்றரோ.

இ-ள். அரக்கன் வரம் படைத்தலின் - ராக்ஷஸனாகிய அக்கரன் வரங்கள் பெற்றதினாலும், மாயையின் - மாயச்செயலினாலும், உரம் உடை தன்மையால் - பலமுடைய தன்மையினால், உலகு ஏழையும் - உலகங்கள் ஏழையும், பரம் - முற்காலத்

தில், உருக்கிய - அழச்செய்த, பாவத்தினால் - பாபத்தினாலே, கான் - அவன், வல்க்கரம் என - (தனது) வலதுகையைப்போல், கண்டம் உற்றான் - கழுத்து (அறுபட்டு) கொண்டான் (௧௮௫)

ஆர்த்தெழுந்தன ராடினர் பாடினர்
தூர்த்த மைந்தனர் வானவர் தூயமலர்
தீர்த்த னும்பொலிந் தான்கதி ரோன்றிசை
போர்த்த மென்பனி போக்கிய தென்னவே.

இ - ள். வானவர் - தேவர்கள், ஆர்த்து எழுந்தனர் ஆடினர் பாடினர் - ஆரவாரஞ்செய்து எழுந்து கூத்தாடிப் பாடி, தூயமலர் - பரிசுத்தமான புஷ்பங்களைக் கொண்டு, தூர்த்து அமைந்தனர் - (ஸ்ரீராமபிரானது திருமேனியை) மறையச்செய்து அடங்கினார்கள், கதிரோன் - சூரியன், திசைபோர்த்த - திக்குகளைமூடிய, மென்பனி - இலேசாகிய பனியை, போக்கியது என்ன - நீக்கிவிட்டதுபோல், தீர்த்தனும் - ஸ்ரீராமபிரானும், பொலிந்தான் - விளங்கினான்

குறிப்பு — தீர்த்தன் - பரிசுத்தன், ஆலோசனைக்காரன், நியமிப்பவன், மேன்மையுடையவன் கதிரோன் - ஸ்ரீராமபிரானுக்கும் மென்பனி அரக்கனுக்கும் உவமை.

முனிவர் வந்து முறைமுறை மொய்ப்புற
வினிய சிந்தை யிராமனு மேகினா
னனிக வெஞ்சமத் தாருயிர் போக்கத்தான்
றனியி ருந்த வுடலன்ன தையல்பால்.

இ - ள் முனிவர் வந்து - இருடிகள் வந்து, முறைமுறை - கிரமப்படி, மொய்ப்பு உற - சூழ்ந்து கொள்வதால், இனிய சிந்தை இராமனும் - மகிழ்ச்சிபொருந்திய மனத்தினையுடைய ஸ்ரீராமபிரானும், அனிகம் வெஞ்சமத்து - கூட்டமான கொடியபோருக்கு, ஆர் உயிர்போக - (தனது) அரிய உயிர் மாத்திரம் செல்ல, தனி இருந்த - (அதனோடு செல்லாமல்) தனித்திருந்த, உடல் அன்ன - உடலையொத்த, தையல்பால் - சீதாபிராட்டியின் பக்கத்தில், ஏகினான் - போயினான். (௧௮௭)

விண்ணி னீங்கிய வெய்யவர் மேனியின்
புண்ணி னீரும் பொடிகளும் போயுக
வண்ண லவீரனைத் தம்பியு மன்னமுங்
கண்ணி னீரினிற் பாதங் கழுவினார்

இ - ள். விண்ணில் நீங்கிய - ஆகாயத்தில் (மறைந்து கொள்ளும்பொருட்டு) விலகிய, வெய்யவர் - கொடிய ராக்ஷஸர்களுடைய, மேனியின் - உடலினது, புண்ணினீரும் - அரத்தமும், பொடிகளும் - தூசிகளும், போய் உக - நீங்க, தம்பியும் அன்னமும் - இளையபெருமாளும் சீதாபிராட்டியும், கண்ணின் நீரினால் - (தமது) கண்ணீரினால், அண்ணல் வீரனை - பெருமையிற் சிறந்த வீரனாகிய ஸ்ரீராமபிரானது, பாதம் கழுவினார் - திருவடிகளைச் சுத்தஞ்செய்தார்கள் (௧௮௮)

மூத்த மொன்றின் முடிந்தவர் மொய்புண்ணீர்
நீத்த மோடி நெடுந்திசை நேருறக்

கோத்த வேலைக் குரலென வானவ
ரேத்த வீர னினிதிருந் தானரோ.

இ - ள் மூத்தம் ஒன்றில் - ஓர் முகூர்த்தத்தில், முடிந்தவர் - இறந்த அரக்கர்களினது, மொய்ம்புணீர் நீத்தம் ஓடி - மிகுந்த அரத்தவெள்ளங்கள் விரைந்து சென்று, நெடுந்திசை - நெடிய திசைகளின் கண், நேர் உற கோத்த - ஒழுங்காகக் கோக்கப்பட்டன, வானவர் வேலைக்குரல் என ஏத்த - விண்ணவர்கள் சமுத்திரகோஷம் போலத் துதிசெய்ய, வீரன் - ஸ்ரீராமபிரான், இனிது இருந்தான் - மகிழ்வாக இருந்தான் (௧௮௯)

இங்கு நின்ற துரைத்து மிராவணன்
றங்கை தன்கை வயிறு தகர்த்தனள்
கங்கு லன்ன கரனைத் தழீஇநெடும்
பொங்கு வெங்குரு திப்புரண் டாளரோ

இ - ள் இங்கு - இவ்விடத்தில், நின்றது - (சொல்லாமல்) நின்ற மற்றைச் சங்கதிகளை, உரைத்தும் - கூறுவோம், இராவணன் தங்கை சூர்ப்பநகை, தன் கை - தனது கையினால், வயிறு தகர்த்தனள் - வயிற்றினைப் பிளந்தவளாகி [வயிற்றிலடித்துக்கொண்டு], கங்குல் அன்ன கரனை தழீஇ - (நிறத்தில்) இருளையொத்த கரனைத் தழுவி, நெடும் - நெடிய, பொங்கு வெங்குருதி - பொலிவுற்ற வெவ்விய அரத்தத்தில், புரண்டாள் - புரளுதலுற்றாள். (௧௯௦)

ஆக்கி னேன்மனத் தாசையவ் வாசையென்
மூக்கி னோடு முடிய முடிந்திலேன்
வாக்கி னாலுங்கள் வாழ்வையு நாளையும்
போக்கி னேன்கொடி யேனென்று போயினாள்

இ - ள் மனத்து ஆசை - மனத்தின்கண் ஆசையை, ஆக்கினேன் - (விளையச்) செய்தேன், அ ஆசை - அந்த ஆசையானது, என் மூக்கினோடு முடிய - எனது மூக்கு நட்டமே முடிவாக, முடிந்திலேன் - இறவாமலிருக்கிற நான், வாக்கினால் - (என்) வாய்மொழியினால், உங்கள் வாழ்வையும் - உங்களுடைய வாழ்க்கையையும், நாளையும் - ஆயுளையும், போக்கினேன் - அழித்து விட்டேன், கொடியேன் என்று - (நான் மிகவும்) பொல்லாதவள் என்று கூறி, போயினாள் - சென்றாள். (௧௯௧)

அலங்கல் வேற்கை யரக்கரை யாச்சறக்
குலங்கள் வேரறுப் பான்குறித் தாளுயிர்
கலங்கு சூறைவன் போர்நெடுங் காலென
விலங்கை மாநகர் நொய்திற்சென் றெய்தினாள்

இ - ள் அலங்கல் வேல் கை அரக்கரை - வெற்றி மாலையையணிந்த வேலினை யேந்திய கையினையுடைய இராக்கதர்களையும், குலங்களை - (அவர்கள்) கூட்டங்களையும், ஆச்சு அற - குற்றம் நீங்குமாறு, வேர் அறுப்பான் - அடியோடு தொலைக்கும் பொருட்டு, குறித்தாள் - கருதிய சூர்ப்பநகை, உயிர் கலங்கு - உயிர் கலங்கற்குக் காரண

ணமான, சூறை - சுழல் காற்றைப்போலவும், வன்போர் நெடுங்கால் என - (மேருவுடன்) வலிய போரினைச்செய்த பெரிய காற்றைப்போலவும், நொய்தில் சென்று - விரைவிற்சென்று, இலங்கைமா நகர் எய்தினள் - இலங்கையாகிய பெரிய நகரத்தையடைந்தாள்.

குறிப்பு—அரக்கரை பாவத்தைப்போக்கித் தேவராசருந் தன்மையையுடைய ராமபாணத்துக்கு இரையாக்கக் குறித்தாளென்பார் 'ஆசற' என்றார். இராமபாணந் தன்னைத்தொடருமோ என்னும் அச்சத்தாலும், அவர்மேற்கொண்ட காமவிச்சையாலும் அடிக்கடி திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டு சென்றனளென்பது தோன்றச் சூறைக்காற்றையும், மேருவைப்பறிக்கக் காற்றெழும்பியதுபோல் பாலங்கையைய றிக்க இவள் புறப்பட்டாளென்பது தோன்ற வன்போர் நெடுமான் புய்ம உவமை கூறினார்

ஈ(ய) மன், (கக௨)

ஆறாவது கரனவதைப் படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் சுகரு விருத்தம் ௫௫௮

ஏழாவது மாரசனவதைப் படலம்

இரைக்கும்நெடும் பணையரக்கர் இறந்ததனை மறந்தனள்போ லிராமன் றுங்க
வரைப்புயத்தி னிடைக்கிடந்த பேராசை மனங்கவற்ற வாற்று ளாகித்
திரைப்பரவைப் பேரகழித் திண்ணகரிற் கடிதோடிச் சீதை தன்மை
யுரைப்பெனெனச் சூர்ப்பநகை வரவிருந்தா னிருந்தபரி சுரைத்து மன்றே

இ - ள் சூர்ப்பநகை—, இரைக்கும் நெடும்பணை அரக்கர் - ஒலிசெய்கின்ற பெரிய பேரிகைகளையுடைய இராக்கதர்கள், இறந்ததனை - இறந்துபோனதை, மறந்தனள் - மறந்தாளாகிய, இராமன் - ஸ்ரீராமபிரானது, துங்கம் - பெருமைபொருந்திய, வரை புயத்தின் இடை - மலைபோன்ற புயங்களினிடத்தில், கிடந்த - தங்கியிருந்த, பேராசை - பெரிய ஆசையானது, மனம் கவற்ற - (தனது) மனத்தை வருத்த, ஆற்றுள் ஆகி - சகியாதவளாகி, திரை பரவை போ அகழி - அலைகளையுடைய கடலாகிய பெரிய அகழிசூழ்ந்த, திண் நகரில் - வலிய (மதிலையுடைய) இலங்கைநகரத்தின்கண், கடிது ஓடி - விரைவாகச் சென்று, சீதை தன்மை - சீதாபிராட்டியினது நிலைமையை, உரைப்பென் என வர - சொல்லுவேன் என்று வந்ததால், இருந்தான் - (சபையைவிட்டுச் செல்லுதலினின்று மொழிந்து) வீற்றிருந்த இராவணன், இருந்த பரிசு - கொலுவீற்றிருந்த (பெருந்தன்மையின்) விதத்தை, உரைத்தும் - கூறுவாம்—

குறிப்பு—அரக்கர் கொடிய முரசொலியின் இரைச்சல் செவியைவிட்டு நீங்கா இச்சிறிய காலவரையறையுள் மறந்தது வியப்பெனபார் 'இரைக்கும்' என்றார். பணை - மற்றைத்தோற் கருவிகளுக்கு உபலக்கணம். அரக்கர் - கரதூஷண

தியா போல - ஒப்பிலபோலி இசசரித முழுதும எமபிரானது தோளாறறலாய முடிதலால 'துவகம்' எனறுா இதுபறறியே கீழககூறிய பாலகாணடததது, "இராமன றோளவலி கூறுவோாககே" எனறுா வரை - ஆகுபெயா. எவகோவும இளவகோவும இணவகாமையானும, மூககு முதலியன அறுபடடதானும், காதறிய ரிறநததானும மாறிய ஆசையெனபாா 'கிடநத' என இறநதகாலததுககூறினா. இப பொருடகியைபபோ எனறுப பெயாநத எனப் பொருளகூறுதலுமாம போ - பெருமையினறிரிபு மீணடும அவவாசையுடைமையுறறுத தடைகளைக கருதிவருநத மேயாததமைதோனற 'மனவகவறற' எனறுா பரவை - பரநதிருபபது, ஐ - கருததாபபொருள விகுதி அகழி - தோணடபபடுவது, இ - செயபபடுபொருள விகுதி அகழியை அடுத்தததினை எனறமையால மதிலெனறுா இனி, காவலபொருநதிய இலஙகையெனனுமாம தனககு மாறறவளாயச சீதாபிராடடி யிருநதனளெனவும், அதுபறறித தன எணணம நிறைவேறுமற போயிறறெனவும், அவளைப பிரிததலினே தான கருதியது முடியுமெனவும் எணணஙகொணடு, காதலாகூறு யாா இறநததனைத தெரிவிபபது அவசியமானதாயிருநதும அதனை யொழிததுச சீதைதனமை யுரைபபேனெனறு சென்றுளனக வா - இசசெயவெனெசசம காரணபபொருடடா யிறநதகாலந தழுவி இருநதான எனனும் வினைகொணடு முடிநதது இதனால அதிப்போது குறிபபிககபபடடது இருநதான - வினையாலணையும பெயா, மன ஓ - அசைகள். (௧)

நிலையிலா வுலகினிடை நிறபனவு நடபபனவு நெறியி னீநத
மலரினமே ஞனமுகறகும வகுபபரிது நுணிபபதொரு வரமபி லாறற
லுலைவிலா வகையுழநத தருமமென நினைநதவெலா முதவுந தசசன
புலமெலாந தெரிபபதொரு புனைமணிமண டபமதனிற பொலிய மனனோ.

இ - ள். நிலை இலா - நிலைபாயிருததலில்லாத, உலகினிடை - இவவுலகததினகண, நிறபனவும - அசரவஸதுககளையும, நடப்பனவும - சரவஸதுககளையும, நெறியின ஈநத - ஒழுஙகாகபபடைததது அளிதத, மலரினமேல நான முகறகும - தாமரைமலரின மேலிருககிற பிரமதேவனுககும, வகுப்பரிது - செயதறகருமையானதும, நுணிபபது ஒரு வரமபு இல ஆறறல - உறறுாாயவதாகிய எலலையிலலாத ஒபபறற அறிவினலே, உலைவு இலாவகை உழநத தருமம என - கெடுதலிலலாத விததில வருநதிசசெயத தருமததைபபோல, நினைநத எலாம - நினைதத பொருளகள எலலாவறறையும, உதவும - கொடுககினற, தசசன - (மயன எனனுநதேவ) தசசனது, புலம எலாம தெரிபபது - அறிவு முழுதுந தெரியககாடடுவதுமாகிய, ஒரு ஒபபறற, புனைமணி மணடபம அதனில பொலிய - அலஙகரிதத ரதநகசிதமான மணடபததிற சிறககுமபடி.

குறிபபு —வருணிததுக கூறுதறகியலாத மேனமைபொருநதிய இமமணடபமும இதில வீறறிருககும இராவணனது செலவமும அழியனவாக அலலவோவிருககினறவெனறு பினனா நிகழுஞ் செயலைககருதி யிரஙகுவாா உலகினியறகையாகிய நிலையினமையை முனனிடடு 'நிலையிலா' என்றுா. இனி, பிரமதேவனது கைததொழில வலலமையைப புகழுவாா உருவஙகளாவவொனறும வெவவேறு விதமாகவுளளனவெனனும பொருளில 'நிலையிலா' எனறுரெனனனுமாம, ஈணடு, (நிலை - ஒருதனமையில், இலா - இலலாத,) எனப்பொருள காணக. நிறபன நடப்பன - வினை

யாலனையும் பெயர்கள், சராசரமென்றவாறு ஈனமுகற்கும், உவமை - உயர்வுசிறப்பு. அறமானவை இன்னின்ன அறமல்லாதவை இன்னின்னவென்று அறிதற்குரிய நூல்கள் நன்காராய்ச்சிசெய்து ஒவ்வொரு விஷயத்திலும் நன்மை தீமைகள் கவனித்து இயற்றாத அறம் மறமாக முடியுமாதலின் 'நுனிப்பதொரு வரம்பிலாற்ற லூலவிலா வகையுழந்த தருமம்' என்றார். "மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தற, னாகுல நீர பிற" "அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கு, மிழுக்கா வியன்ற தறம்" என்பனவும் பிறவும் கண்டுதெளிக. "சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங் காக்க மெவனோ வுயிர்க்கு" என்றவாறு நினைத்தவெல்லாந் தரவல்ல தருமத்தைத் தச்சனுக்கு உவமை கூறவே அவன்தாற்றலின் மிகுதிக்கெல்லையில்லை யென்பதூஉம், மண்டபத்தின் சிறப்பை வருணித்தற்கியலா தென்பதூஉம் விளக்குவதாயிற்று. புலம் - புலனைப்போலி. மண்டபம் அதனில், அது-பகுதிப்பொருள் விகுதி. இனி, மண்டபம் மதனில் பொலிய எனக்கொண்டு, மண்டபம் அழகோடு விளங்க என்னலுமாம். நினைந்தவெலா முதவுந்தச்சனென்வே மயனைக் கூறினும், அம்மயனை அசுரதச்சனென்றுங் கூறுப. (௨)

பண்டலங்கு திசைக்களிற்றின் பணைமருப்பி னிணையொடியப் படர்ந்த பொ
விண்டலங்க ளுறவீங்கி யோங்குதய மால்வரையின் விளங்க மீதிற்
குண்டலங்கள் குலவரையை வலம்வருவா னிரவிகொழுங் கதிர்சூழ் சுற்றை
மண்டலங்கள் பன்னிரண்டு நாலைந்தாய்ப் பொலிந்தவென வயங்க மன்னோ

இ - ள். பண்டு - முற்காலத்தில், அலங்கு அல - அசைதலில்லாத, திசைக்களிற்றின் - திக்கியானைகளினுடைய, பணை - பருத்த, மருப்பின் இணை - கொம்புகளினிரட்டைகள், ஒடிய - முறியும்படி, படர்ந்த - விசாலித்த, பொன் தோள் - அழகிய புயங்கள், விண்தலங்கள் உறவீங்கி - விண்ணுலகங்களெல்லா மளாவும்படி பருத்து, ஓங்கு மால் உதயவரையின் விளங்க - உயர்ந்த பெருமைபொருந்திய உதயகிரியைப்போல விளங்க, குலவரையை வலம்வருவான் - மேருமலையையும் அதனைச் சூழ்ந்த ஏழுமலைகளையுஞ் சுற்றிவருகின்ற, கொழுங் கதிர் சுற்றைச்சூழ் - செழிப்புற்ற கிரணத்தொகுதி சூழ்ந்த, இரவிமண்டலங்கள் பன்னிரண்டும் - சூரிய மண்டலங்கள் பன்னிரண்டும், நாலைந்தாய் பொலிந்த என - இருபதாய் விளங்கின என்னும்படி, மீதில் - அத்தோள்களின்மேல், குண்டலங்கள் - காதிலணிந்த குண்டலங்கள், வயங்க - பிரகாசிக்கவும்.

குறிப்பு — திசைகளைத்தாங்கி யசையாது நிற்றலின் 'அலங்கல் திசைக்களிறு' என்றார். "கம்பித் திசையி னின்ற களிறும்" என்றார் கரன்வதைப் படலத்தும். இனிப் பிறராற்றலுக்கு இளைத்து அசையாத களிறு என்னலுமாம். அலங்கு திசைக்களிறு என்னும் பாடத்திற்கு இராவணனாற்றலுக் காற்றாமல் அசைகின்ற திசைகளிலுள்ள யானைகளென்க. உயர்ச்சியும் வெற்றியுந் தோன்ற 'விண்டலங்க ளுறவீங்கி' என்றார். குலவரை - கூடமாகிய மலையே, மேன்மைபொருந்திய மலையே யென்றாகலின், மேருவையும் அதனைச்சூழ்ந்த கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், எமகூடம், நீலகிரியென்னும் சப்தகுலாசலங்களையும் கூறினும். இங்ஙனங் கூறியது இராவணனது புயமிகுதிக்கு உவமைநோக்கி. வலம் வருதல் - பிரதட்சணம். வருவான் - முற்றுத்திரிந்த பெயரெச்சம். இனி, வரு+வான் இரவி யென்றும் பிரிக்கலாம். மண்டலம் - வட்டம். சூரியமண்டலம் பன்னிரண்டாதலை "வைகர்த்தன விவச்சுதன வாசன மார்த்தாண்டன், பாற்கர னிரவிபு லோகப்பிரகாச, லூலோ

கசாடசி திரிவிக்கிரம, ஞுதித்தன் றிவாகர னங்கிசமாலி, யாகச் சூரியர் பன்னிரண்டென்ப" என்பதனு னுணர்க. (௫)

புலியினதளுடையானும் பொன்னுடை புனைந்தானும் பூவி னானும்
நலியும்வலத் தாரல்லர் தேவரினிங் கியாவரினி நாட்ட லாவார்
மெலியுமிடைத் தடிக்குமுலை வேயிளந்தோட் சேயரிக்கண் வென்றி மாதர்
வலிய நெடும் புலவியினும் வணங்காத மகுடநிரை வயங்க மன்னோ.

இ-ள். புலியின் அதள் உடையானும் - புலியினது தோலாகிய ஆடையையுடைய சிவபிரானும், பொன் ஆடை புனைந்தானும் - பீதாம்பர மணிந்த ஸ்ரீ மகாவிஷ்ணுவும், பூவினானும் - தாமரை மலரிலிருப்பவனாகிய பிரமதேவனும், நலியும் - (இராவணனை) வருந்தச்செய்யும், வலத்தார் அல்லர் - பலமுடையாரல்லர், (என்றால்), இனி—, தேவரின் - தேவர்களில், யாவர் நாட்டல் ஆவார் - எவர்கள் (உவமை) கூறுதற்கு (உரியர்) ஆவார்கள்? மெலியும் இடை - மெலிகின்ற இடையையும், தடிக்கும் முலை - பருமனாகின்ற முலைகளையும், வேய் இளந்தோள் - மூங்கில் போலும் இளந்தன்மை பொருந்திய தோள்களையும், சேயரி கண் - சிவந்த வரிகளையுடைய கண்களையும், வென்றி - வெற்றியையுமுடைய, மாதர் - பெண்களினது, வலிய நெடும் புலவியினும் - தணித்தற்கருமையான நெடிய ஊடலினும், வணங்காத - தாழாத, மகுடம் நிரை - கிரீடங்களின் வரிசை, வயங்க - விளங்கவும்.

குறிப்பு.—நலியும் என்னுந் தன்வினை பிறவினைப்பொருள் பட்டின்றது இங்கு அசைநிலை. மெலிந்த தடித்த என்னாது மெலியும் தடிக்கும் என்றது: அழகின்றன்மையோடு சாமுடைமையும் விளங்கற்கு ஆடவரைத் தமக்கு அடிமையாக்கிக் கொள்ளும் பேரழகுடையார் என்பார் 'வென்றிமாதர்' என்றார். புலவி—தலைவனுந் தலைவியும் ஒரு படுக்கையிற் கூடியிருந்த விடத்து அவனிடத்து ஒருகாரணம்பற்றிப் பிணங்குதலும், பிணங்குதற்குக் காரணமில்லா திருக்கவும் ஆசையதிகப்படுதலா லுண்டாமாகிய ஒருகாரணம் இருக்கிறதாகவுட்கொண்டு அதனை அவன் மேலேற்றி அவள் பிணங்குதலுமாம். வி-தொழிற்பெயர் விகுதி. எத்துணைச்சமாதான மியம்பினும் இணங்காமைதோன்ற 'வலியநெடும்புலவி' என்றார். "புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு, நீரியைந் தன்னாரகத்து" என்றவாறு புலவியாற் பெரிதாய இன்பங்கிடைத்தலாயிருந்தும் அதனைப் பொருட்டாயெண்ணித் தன்பெருமை குன்றத்தாழான் என்பதூஉம், இவ்விடத்தே தாழாதவன் மறையோரைத் தாழுவதேயன்றென்பதூஉம் பயத்தலின் உம்மை சிறப்புமெச்சமுமாம். இனி, வென்றிமாதர் என்றது எதிரிடமாட்டாமற் சாய்ந்த [தோற்று] புணர்ச்சியினிடத்தே பேரின்பமடைதலால் வெற்றியையுடைய மாதரென்றுங் கூறலாம், "ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னும், கூடலிற் காணப்படும்" என்றாராகலின். இங்ஙனங்கூறுமிடத்துப் பிணங்கிய மாதர் இராவணனது பெருமைக்கஞ்சி அவன் சொற்படி யிணங்குதலாரன்றி யவன் சிறிதும் வணங்கானெனப்பொருள் படுதல்காண்க. (௬)

வாளுலா முழுமணிகள் வயங்கொளியின் றொகைவழங்க வயிரக் குன்றத்
தோளெலாம் படிசுமந்த விடவரவின் படநிரையிற் றோன்ற வான்ற
நாளெலாம் புடைதயங்க நாமநீ ரிலங்கையிற்றன் வாரி யிட்ட
கோளெலாங் கிடந்தநெடுஞ் சிறையன்ன நிறையாரங் குலவ மன்னோ.

இ - ள். வாள் உலாம் - ஒளியுலாவுகின்ற, முழுமணிகள் - பெரிய ரத்தினங்கள், வயங்கு ஒளியின் தொகை வழங்க - ஒளி வீசுகின்ற பிரகாசத்தினது கூட்டத்தை யளிக்கும்படி, படிசுமந்த விடம் அரவின் படம் நிரையில் - புவியைத்தாங்கிய விஷத்தினையுடைய ஆதிசேடனென்னும் பாம்பினது படங்களின் வரிசையைப்போல், வயிரம் குன்றம் தோள் எலாம் தோன்ற - வலிபொருந்திய மலைகளையொத்த புயங்கள் எல்லாம் விளங்கவும், ஆன்ற நாள் எலாம் - அமைந்த நட்சத்திரங்களெல்லாம், புடைதயங்க - பக்கத்திற் சூழ்ந்து பிரகாசிக்கும்படி, தான் - அவ்விராவணன், நாமநீர் இலங்கையில் - பெருமைபொருந்திய கடல்சூழ்ந்த இலங்கையின்கண், வாரி இட்ட - கவர்ந்து அடைத்துவைத்த, கோள் எலாம் - கிரகங்கள் முழுவதும் [நவக்கிரகங்கள்], கிடந்த - தங்கியிருந்த, நெடும் சிறை அனை பெரியசிறைச்சாலையையொத்த, நிறை ஆரம் - நிறைந்த இரத்தினமாலை, குலவ - விளங்கவும்.

குறிப்பு — உலாவும் என்பதன் ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங் கெட்டு 'உலாம்' என நின்றது. இவ்விராவணனது புயங்கள் புவியைத் தாங்குதலாலும், ஒன்றோடொன்றிணைக்கப்பட்டு வரிசையாகக் காணப்படுதலாலும், கண்டோர்க்கு அச்சத்தை விளைவித்தலாலும், அப்புயங்களின்மேலே இரத்தினமாலை கிடப்பதாலும் இவன் புயங்களுக்கு மணிகள்பொருந்திய படிசுமந்த விடவரவின்பட நிரையை யுவமை கூறினார். நாள் என்றது - இருபத்தேழு நட்சத்திரங்களை. இந்நட்சத்திரங்கள் உள்ள ராசிகளில் நவக்கிரக சஞ்சாரமுள்ளதாகலின், 'புடைதயங்க' என்றார். நாமம் - அச்சமுமாம். கோளெல்லாம் என்றற்கு நவக்கிரகங்களோடு குளிகன் முதலிய மற்றைக் கிரகங்களையுங் கூறலாம். இந்திரஜித்து ஜனித்தகாலத்து அவன் எல்லாரினுஞ் சிறந்தவனாதற்பொருட்டு நவக்கிரகங்களை ஓரிடத்து இராவணன் சிறைவைத்தானென்று கூறுவர். (ரு)

வேறு

ஆய்வரும் பெருவலி யரக்க ராதியோர்
நாயகர் நளிர்மணி மகுட நண்ணலாற்
றேய்வுறத் தேய்வுறப் பெயர்ந்து செஞ்சுட
ராய்மணிப் பொலன்கழ லடிநின் றார்ப்பவே.

இ - ள். ஆய்வு அரும் பெருவலி அரக்கர் ஆதியோர் நாயகர் - ஆராய்வதற்கருமையான மிக்க வலிமையையுடைய இராக்கதர் முதலினோரது தலைவர்களினுடைய, நளிர் - பெருமை பொருந்திய, மணிமகுடம் நண்ணலால் - ரத்நகிரீடங்கள் (அவர் வணங்குந்தோறுந் தன் கழல்மிசைச்) சேர்தலால், தேய்வு உற தேய்வு உற - தேயத்தேய, (அதனால்) பெயர்ந்து - வேறுபட்டு, செஞ்சுடர் ஆய - நல்லபிரகாசத்தை யுடையதாகி, மணி பொலன் கழல் - இரத்தினங்களை யழுத்திப் பொன்னினாற் செய்த வீரக்கண்டை, அடி நின்று - (தன்) பாதத்தின் கண்ணிருந்து, ஆர்ப்ப - பேரொலி செய்யவும்.

குறிப்பு — 'ஆய்வரும்' என்பதன் பொருளைக்கீழ் அகத்தியப்படலத்தின் ஐந்தாவது செய்யுளினுரையிற் காண்க. ஆதியோர் என்றது - வானவர் தானவர் முதலானவர்களை. அடுக்கு - மிகுதிப்பொருளின்கண் வந்தது. அரசர் காற்குப் பொன்னணி பூணுதற்குரியராகலின் பொன்னினாற்செய்த கழலென்றும் "பூங்கழலாக

சன வந்து பொலங்கழ லிலங்கை வேந்தை" என்றார் உயுத்தகாண்டத்தும் ஆயமணி-ஆராயந்தெடுத்த மணியுமாம (௬)

மூவகை யுலகினு முதலவா முந்தையோ
ரோவல ருதவிய பரிசி னோங்கலபோற
றேவரு மவுணரு முதலி னோா திசை
தூவிய நறுமலாக குப்பை துன்னவே

இ - ள் மூவகை உலகினும - திரிலோகங்களினும, முதலவா - முதன்மையாகிய, முந்தையோா - முற்காலத்திய வள்ளல்கள், ஓவலா - ஒழியாதவர்களாய், உதவிய - கொடுத்த, பரிசின் ஓங்கல்போல - கொடைத்திரவியத்தின் மலையைப போல, தேவரும் அவுணரும் முதலினோா - தேவாகளும் அசுராகளு முதலாகிய பேர்கள், திசை - திக்குகளில் தூவிய - சிந்திய, நறுமலா குப்பை - மணமுள்ள புஷ்பங்களின்குவியலகள், துன்ன - விளங்கவும். (௭)

இன்னபோ திவவழி நோக்கு மென்பதை
யுன்னலா கரதலஞ சுமந்த வுச்சியா
மின்னவிா மணிமுடி விஞ்சை வேந்தாக
டுன்னினா முறைமுறை துறையிற சுற்றவே.

இ - ள். இ வழி இன்னபோது நோக்கும் என்பதை உன்னலா -இன்ன இடத்தில இன்ன நேரத்தில (இராவணன்) பார்ப்பான் என்பதைத் தெரிந்து கொள்ளாதவாகளும், கரதலம் சுமந்த உச்சியா - கரங்களைச்சுமந்த சென்னியையுடையவாகளும [தலைமேற்கைகுவித்து நமஸ்கரிப்பவாகளும] ஆகிய, மின் அவிா மணி முடி - ஒளி வீசுகின்ற ரத்நகிரீடத்தையுடைய, விஞ்சை வேந்தாகள் - வித்தியாதரா்கள், முறைமுறை - வரிசைக்கிரமப்படி, துன்னினா - கிட்டினவா்களாய், துறையில சுற்ற - சபையினிடத்தே சுற்றிக்கொண்டிருக்கவும (௮)

மங்கையா திறத்தொரு மாற்றங் கூறினுந
தங்களை யாமெனத தாழுஞ சென்னிய
ரங்கையு முள்ளமுங் குவிந்த வாக்கையா
சிங்கவே றெனத்திறற சித்தா சேரவே.

இ - ள். மங்கையா திறத்து-பெண்கள் விஷயத்தில், ஒருமாற்றம் கூறினும-ஒருவார்த்தை சொன்னாலும், தங்களை என - (அம்மாற்றம்) தம்மை(க்குறித்துச் சொன்னது) என்று, தாழும் சென்னியா - வணங்குகின்ற தலையினையுடையவாகளும், அங்கையும உள்ளமும குவிந்த ஆக்கையா - அகங்கையும் மனமும் குவிந்த உடலை யுடையாருமாகிய, திறல சித்தா - வலிமையையுடைய சித்தாகள், சிங்கம ஏறு என சேர - ஆண்சிங்கங்களபோல வந்து கூடவும்.

குறிப்பு —பெருமபயங்கிடந்த நெஞ்சினா என்பது முதலிரண்டடிகளின் கருத்து ஆம - அசை அகம+கை - அங்கை, "அகமென கிளவிக்கு கைமுன வரினே,முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்,வரைநிலை யின்றே யாசிரியாக்க, மெல்லெழுத்து மிகுத லாவயி னான" என்றார் தொல்காப்பியனுர், அங்கை குவிதல-

சூழப்பிடித்தல் உள்ளங்குவித்தல்-பயபக்தி விசுவாசங் காட்டுதல். ஆக்கை யாக்கையென மருஉ. (௰)

அன்னவ னமைச்சரை நோக்கி யாண்டொரு
நன்மொழி பகரினு நடுங்குஞ் சிந்தைய
ரென்னைகொல் பணியென விறைஞ்சு கின்றனர்
கின்னரர் பெரும்பயங் கிடந்த நெஞ்சினர்

இ-ள். அன்னவன் - அத்தகைய இராவணன், அமைச்சரை நோக்கி - மந்திரிமார்களைப் பார்த்து, ஆண்டு - அவ்விடத்து, ஒரு நல் மொழி பகரினும் - ஒரு நல்வார்த்தை சொன்னாலும், (அவ்வார்த்தை தம்மைக்குறித்ததோ வென்னவையுற்றஞ்சி), நடுங்கும் சிந்தையர் - நடுங்குகின்ற எண்ணத்தினையுடையவர்களும், பணி - கட்டளை, என்னை கொல் என இறைஞ்சுகின்றனர் - யாதோ? என்று வணங்குகின்றவர்களும், பெரும் பயம் கிடந்த நெஞ்சினர் - பெரிதான அச்சம் தங்கியிருக்கின்ற மனத்தினையுடையவர்களுமாகிய, கின்னரர் - கின்னரர்களும்

குறிப்பு — ஆண்டு - சுட்டு நீண்டது. நடுங்குஞ் சிந்தையர் - பலவாறுகச் சிந்திய எண்ணத்தினை யுடையவர்கள். கொல் - ஐயம். தம்மேல் யாது குற்றங்கண்டெத்தண்டனை யியற்ற ஆலோசிக்கின்றானோ என்று அச்சங்கொண்டா ராகலின் 'பெரும்பயங்கிடந்த நெஞ்சினர்' என்றார். அமைச்சர் - மந்திரிகள், இஃது அமாத்தியரென்னும் வடமொழிச்சிதைவு, இவர்கள் அரசர்க்குரிய ஐம்பெருங்குழுக்களில் ஒருவகையினர், "அமைச்சர் புரோகிதர் சேனாபதியர், தவாத்தொழிற் றூதுவர் சாரண ரென்றிவர், பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே" என்றாராகலின்.

பிரசர நெடுந்திசைப் பெருந்தண் டேந்திய
கரதலத் தண்ணலைக் கண்ணி னோக்கிய
நரகின ரமென நடுங்கு நாவின
ருரகர்கட் டம்மன முலைந்து சூழவே.

இ-ள். பிரசரம் - மிகுந்த கொலைத்தொழிலையுடைய, நெடுந்திசை - நெடிய (தென்) திக்கிலிருக்கிற, பெருந்தண்டு ஏந்திய - பெரிய தண்டாயுதத்தை யேந்தியிருக்கின்ற, கரதலத்து - கையினையுடைய, அண்ணல் - பெருமையிற்சிறந்த நமனை, கண்ணில் நோக்கிய - கண்ணுற்பார்த்த, நரகினர் என - நரகத்திலுள்ளவர்கள்போல, நடுங்கு நாவினர் - நடுங்குகின்ற நாவினையுடையவர்களாகிய, உரகர் - நாகர்களும், தம் - தங்களுடைய, மனம் உலைந்து - மனநிலை மாறுபட்டவர்களாய், சூழ - சூழ்ந்து நிற்கவும்

குறிப்பு — பிரசர நெடுந்திசையெனவே தென்றிசையாயிற்று. தண்டதரனென்னும் நமனது பெயரைக் கூறுவார் 'பெருந்தண் டேந்திய கரதலத் தண்ணல்' என்றார். "இயமன் அரி யந்தகன் றென்றிசைக் கிழவன், சமனே சண்டன் சண்பன் றருமன், நமனே மறலி தண்ட தரனே." என்பதால் நமனப் பெயருடைமையறிக. அம் - அசை. நடுங்குநாவினர் - தடுமாறு மொழியினையுடையவர்கள். தென்னிலங்கை யிராவணனுக்குத் தென்றிசை நமனும், பயங்கரம் பயத்தலினால் ராஜசபைக்கு நரகும், நடுங்குநாவினர் சிந்தையராதலின் அச்சபையிலுள்ள உரகர்க்கு நரகினரும் உவமை. (௧௧)

திசையுறு கரிகளைச் செற்றுத் தேவனும்
வசையுறக் கைலையை மறித்து வானெலா
மசையுறப் புரந்தர னடாத்த தோள்களி
னிசையினைத் தும்புரு விசையி னேத்தவே.

இ - ள். திசை உறு கரிகளை செற்று - திக்கயங்களைச் சினந்து [வென்று] தேவனும் வசை உற - சிவபிரானும் பழியையடையும்படி, கைலையை மறித்து - வெள்ளியங் கிரியைக் கீழ்மேலாகும்படி தூக்கி, வான் எலாம் - விண்ணவரெல்லாரும், அசை உற - அஞ்சும்படி, புரந்தரன் - இந்திரனோடு, அடாத்த - போர்புரிந்த, தோள்களின் - (இருபது) புயங்களினது, இசையினை - கீர்த்தியை, தும்புரு - தும்புருவென்னும் பெயரினன் வீணையினது, இசையின் - இசைப்பாட்டினால், ஏத்த - துதி செய்யவும்.

குறிப்பு — தேவனும், உம்மை - உயர்வு சிறப்பு. மறித்தல் - கீழ்மேலாகச் செய்தல், இது இப்பொருட்டாதலை "மலைபுரை யானை மறிந்து" என்னும் புறப்பொருள் வெண்பாவின் உரையிற் கட்காண்க. வான் - இடவாகுபெயர். அசை - முதனிலை. தும்புரு - இரட்டுறமொழிதல், ஒரு கந்தருவன் பெயரையும், வீணையையும், வீணைப் பயிற்சியுள்ளவனையுங் குறிக்கும் பலபொருளொருசொல். பலவியற்பாக்களுடனே சிறந்ததையிசைத்தலாலிசை யென்றற்கு இசைப்பாட்டென்றும், "பாவோ டணைந்த விசையென்றா பண்ணென்றா, மேவார் பெருந்தான மெட்டானும் - பாவா—, யெடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப், படுத்தமையாற் பண்ணென்று பார்" என்பவாகலின். (௪௨)

சேணுயர் நெறிமுறை திறம்ப லின்றியே
பாணிகள் பணிசெயப் பழுதில் பண்ணிடை
வீணையி னரம்பிடை விளைத்த தேமறை
வாணியி னாரதன் செவியின் வார்க்கவே.

இ - ள். சேண் உயர் நெறி முறை திறம்பல் இன்றி - தேவலோகத்தி லியற்றும் உயர்ந்த விதியினது ஒழுங்கு தவிராமல், பழுது இல் பண்ணிடை - குற்றமில்லாத இசைப்பாட்டினிடையிடையே, பாணிகள் பணிசெய - கரங்கள் தாளங் கொட்டவும், நாரதன் - நாரதமாமுனிவன், வீணையின் நரம்பு இடை விளைத்த தேம் மறை - வீணையினது நரம்பிலுண்டாக்கிய இனிய வேதத்தை, வாணியின் - சரசுவதியைப்போல, செவியின் - காதுகளில், வார்க்க - பெய்யவும்.

குறிப்பு — நாரதாதியர் ஈண்டு மகிழ்வுறப் பணியியற்றினரென்பார் 'சேணுயர் நெறிமுறை திறம்ப லின்றியே' என்றார். இனி, நெடுங்காலமாயுள்ள உயர்ந்த சாஸ்திரவிதியினொழுங்கு தவிராமலெனலுமாம். பாணி - கை, இனி, பாணி - இருவகைத் தாளமுமாம், "ஆடல் பாட லிசையே தமிழே, பண்ணே பாணி தூக்கே முடமே" என்புழிப் பாணியை இருவகைத் தாளமென்றார் அடியார்க்குநல்லார். கீழ் எடுத்துக்காட்டிய "பாவோ டணைந்த விசையென்றா பண்ணென்றா" என்னும் வெண்பாவின்படி பெருந்தான மெட்டானும் கிரியைக ளெட்டானும் பண்ணிப் படுத்தலாற் பண்ணென்று பெயராயிற்று. அவற்றுள் பெருந்தான மெட்டாவன நெஞ்சும், மிடறும், நாக்கும், மூக்கும், அண்ணாக்கும், உதடும், பல்லும், தலையும்

மென் விசை. கிரியைகளெட்டாவன எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என. விசை வீணைவாயிலாக வேத சுருதிகளைப் பாடினாரென்பார் 'வீணையி னரம்பிடை விளைத்த தேமறை' என்றார். வாணியின், இன் - உவமவுருபு. வாணி - சொல்லப்படுபவளென்னும் பொருட்டு. (கங)

வேறு

மேகமென் றுருத்தி கொண்டு விண்ணவர் தருவும் விஞ்சை
நாகமுஞ் சுரந்த தீந்தேம் புனலொடு மளாவி நவ்வித்
தோகையர் துகிலிற் றோயு மெனப்பேரா தணுக்கத் தோடுஞ்
சீகர மகரவேலைக் காவலன் சிந்த மன்னோ.

இ-ள். மகரவேலைக் காவலன் - மீன்கள் நிறைந்த கடலுக்கு அரசனாகிய வருணதேவன், விண்ணவர் தருவும் - தேவர்களுடைய விருட்சங்களாகிய பாரிசாத முதலிய மரங்களிலும், விஞ்சை நாகமும் - விஞ்சைப்பதியிலிருக்கின்ற புன்னை மரங்களிலும், சுரந்த - ஊறிய, தீம் தேம் புனலொடு - இனிமையும் மணமும் பொருந்திய நீருடனே, அளாவி - (கடல் நீரைக்) கலந்து, நவ்வித் தோகையர் - மானையும் மயிலையும் போன்ற பெண்களினது, துகிலில் தோயும் என்பது ஓர் அணுக்கத் தோடும் - ஆடையிற் படியுமென்கிற ஒரு பயத்துடனே, மேகம் என் துருத்தி கொண்டு - மேகமென்று சொல்லுகின்ற துருத்தியினால், சீகரம் - மழைத்துளிகளை, சிந்த - சிந்தவும்.

குறிப்பு — விஞ்சை - விஞ்சைப்பதி, வித்தியாதரரிருப்பிடம். "சேணியும் விஞ்சைப் பதியுஞ் சேடியும், யாணர் நகரும் வித்தியாதரரிடம்" என்றார் பிங்கலமுனிவரும். தேனொடு பனிநீரென்பார் 'தீந்தேம் புனல்' என்றார். (கச)

நறைமலர்த் தாதுந் தேனு நளிர்நெடு மகுடக் கோடி
முறைமுறை யறையச் சிந்தி முரிந்துகு மணியு முத்துந்
தறையிடை யுகாத முன்னந் தாங்கினன் றழுவி வாங்கித்
துறைதொறுந் தொடர்ந்து நின்று சமீரணன் றுடைப்ப மன்னோ.

இ-ள். சமீரணன் - வாயுதேவன், நறை மலர்த் தாதும் - வாசனையையுடைய புஷ்பங்களின் மகரந்தப்பொடிகளும், தேனும் - மதுவும், நளிர் நெடுமகுடக்கோடி - பெருமைபொருந்திய பெரிய கிரீடமிகுதிகள், முறைமுறை - அடிக்கடி, அறைய - (ஒன்றோடொன்று) மோதப்படுவதால், முரிந்து சிந்தி உகுமணியும் முத்தும் - முரிபட்டுச் சிதறிச்சிந்துகின்ற (மாணிக்க முதலிய) இரத்தினங்களும் முத்துக்களும், தறை இடை உகாத முன்னம் - நிலத்தில் வீழாத முன்பு, தாங்கினன் தழுவி வாங்கி - தாங்கித்தழுவி யெடுத்து, துறைதொறும் தொடர்ந்து நின்று - (அரக்கர் வானவர் தானவர் முதலினோர் கூடிய) ஒவ்வொரு இடங்களிலும் தொடர்ந்து சென்று நின்று, துடைப்ப - சுத்தி செய்து கொண்டிருக்கவும்.

குறிப்பு — நறை - நறுமை யென்னும் பண்பின் ஈறு போயிடையுகரமையா யிற்று. கோடி - இவ்வெண்ணுப்பெயர் மிகுதி யென்னும் பொருள் மாத்திரையாய் நின்றது. முறைமுறை - பலதரமென்றாகலின் அடிக்கடி யென்றாம். தறை - தரை. தாங்கினன் - முற்றெச்சம். தாதுதேன் முதலியவற்றின் மிகுதியும் அவை நிலத்திற

சிறிதும் வீழ்ந்தில வென்பதும் தோன்ற 'தாங்கினன்றழுவி வாங்கி' என்றார். சமீரணன் - எல்லாப்பொருளையும் எடுத்து எறிவோன், சமீரணம் - எறிதல், வீசுதல். ()

வேறு

மின்னுடை வேத்திரக் கையர் மெய்புக்குத்
துன்னெடுங் கஞ்சுகத் துகிலர் சோர்விலர்
பொன்னொடு வெள்ளியும் புரந்த ராதியர்க்
கின்னியன் முறைமுறை யிருக்கை யீயவே

இ-ள். மின் உடை வேத்திரம் கையர் - பிரகாசத்தையுடைய பொற்பிரம்பேந்திய கையையுடையவர்களும், மெய்புக்க - உடல் முழுதும் புகும்படி, துன் - விளங்குகின்ற, நெடுங்கஞ்சுகம் துகிலர் - நீண்ட சட்டைத்துணியை யுடையவர்களுமாகிய, சோர்வு இலர் - தளர்வில்லாத வேத்திரபாணிகள், புரந்தராதியர்க்கு - இந்திரன் முதலினோர்க்கு, முறைமுறை - வரிசைக்கிரமப்படி, இன் இயல் - இனிமை பொருந்திய, பொன்னொடு வெள்ளியும் - பொன்னும் வெள்ளியுமாகிய, இருக்கை - ஆசனங்களை, ஈய - கொடுக்கவும்.

குறிப்பு—மின்னுடை வேத்திரமென்றே பொற்பிரம்பென்றும். புரந்தராதியர் - வடமொழிப் புணர்ச்சி. இன் - இனிமையின் றிரிபு. இன்னியல் என்றது - அவரவர் யோக்கியதைக்குத் தக்கபடி உபசாரஞ் செய்தமை விளங்குதற்கு. இருக்கை - தொழிற்பெயர், இங்கு ஆசனமாத்திரையாய் நின்றது. (சசு)

சூலமே முதலிய துறந்து சுற்றிய
சேலையாற் சிறியவாய் புதைத்துச் செங்கையின்
தோலுடை நெடும்பணை துவைக்குந் தோறெலாங்
காலன்வந் திசைக்குநாட் கடிகை கூறவே

இ-ள். தோல் உடை நெடும்பணை துவைக்கும் தோறு எலாம் - தோற்போர்வையையுடைய பெரிய முரசை முழக்கும்போதெல்லாம், காலன் - யமன், சூலமே முதலிய துறந்து - சூலாயுதமே முதலாகிய படைகளை நீக்கி, சுற்றிய சேலையால் - சுற்றிய உத்தரீயத்தாலும், செங்கையின் - சிவந்த கையினாலும், சிறியவாய் புதைத்து - (தனது) சிறிய வாயை மூடிக்கொண்டு, வந்து—, இசைக்கும் - (தான்) கூறுகின்ற, நாள் கடிகை - நாளினது நாழிகையை [நாழிகைக் கணக்கை], கூற - சொல்லவும்.

குறிப்பு—சூலமே, ஏகாரம் - பிரிநிலை. யமன் தனது செயலொழிந்தமை தோன்ற 'சூலமே முதலிய துறந்து' என்றும், அவன் அரக்கர் மாட்டுப் பயபக்தி விசுவாசத்தோடு அடங்கி யொடுங்கி நடக்கும் எளிமை தோன்ற 'சுற்றிய சேலையாற் சிறியவாய் புதைத்து' என்றுங் கூறினார். புலியைப் பொருது கொன்று நின்று சிலைத்துக் கோட்டுமண் கொண்ட ஏறு இறந்தழி அதன் உரிவையை யெடுத்து மயிர் சீவாமற் போர்த்த முரசு என்பார் 'தோலுடை' என்றார். 'உயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து, மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி' என இளங்கோவடிகளும், "புண்மருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற, கண்குரலு ருமுச் சீறக் கதழ்விடை யுரிவை போர்த்த, துண்குரன் முரசத் தானை" என்று திருத்தக்கதேவரும், "கொலலேற்றுப் பசுந்தோல் சீவாது போர்த்த, மயிர்க்கண்

முரச மோவல விரங்க" எனப் பிறரும் கூறியது காண்க. "எற்றுரி போர்த்த விடியுரு முழக்கிற், கூற்றுக்கண் விளிக்கும் குருதிவேட்கை முரசு" என்னும் மணிமேகலைச் செய்யுளான் எற்றுரி போர்த்த முரசு கூற்றினை யழைக்கு முரசாதல் அறிக. காலன் - காலத்தைக் கணக்கிடுகிறவன். கடிகை - வடமொழித் தற்பவம். நாழிகைக் கணக்கைக் கூறுவோர்க்குக் கடிகையார் என்பது பெயர். அவர் - அரசனுக்குச் சென்ற நாழிகைக்குக் கவி சொல்லுவார், "பூமன் கணையும் பொருசிலையுங் கைக் கொண்டு, காமனிரியுங் கருவூர் - யாமத்து, ஒன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையு, மொன்றுபோ யொன்றுபோ யொன்று" என நாழிகை வட்டி லிடுவாரு மென்ப "சூத ரேத்த மாகதர் நுவல, வேதாளிகரொடு நாழிகை யிசைப்ப" என்றார் பிறரும் என்ற அடியார்க்கு நல்லார் கூறியவாறு ஈண்டு நமன் இராவணனுக்கு நாழிகைக் கணக்கைக் கூறுவோனாதல் காண்க. அங்ஙனம் நாழிகைக் கணக்கைக் கூறுதலே யமனுக்கு உரிய தொழிலாதலை யுணர்த்த 'இசைக்கும்' என்றார். (கஎ)

நயங்கிளர் நானநெய் யளாவி நந்தலில்
வியங்கருப் பூரமென் பஞ்சின் மீக்கொளீஇக்
கயங்களின் மரைமலர்க் காடு பூத்தென
வயங்கெரிக் கடவுளும் விளக்க மாட்டவே

இ-ள். வயங்கு எரி கடவுளும் - பிரகாசிக்கின்ற அக்கினித்தேவனும், நயங்கிளர் - நன்மைமிகுந்த, நானம் நெய் - வாசனையையுடைய நெய்யும், நந்தல் இல - குறைவில்லாத, வியம் - பெருமைபொருந்திய, கருப்பூரம் - சூடனும், அளாவி - கலந்து, மென் பஞ்சின்மீ - மெல்லிய பஞ்சின்மேல், கொளீஇ - கொளுத்தி, கயங்களின் மரை மலர் காடுபூத்தென - குளங்களில் தாமரை மலர்க்காடு பூத்தாற்போல, விளக்கம் மாட்ட - விளக்குக்களை யேற்றவும்.

குறிப்பு — நானம் - நெய்யுமாம், ஈண்டு 'நானநெய்' — ஒருபொருட் பன்மொழி கருப்பூரமும் நெய்யுங் கலந்து அதிற் பஞ்சின் திரிபோட்டுக் கொளுத்திய தீபமென்பது கருத்து. இனி, கருப்பூர மென்கின்ற பஞ்சின்மேல் நெய் அளாவிக் கொளுத்தி என்று கூறலுமாம். ஈண்டுக் கருப்பூரம்-பஞ்சின் வெண்மை நிறத்துக்கும், பற்றியெரியும் மென்மைத்தன்மைக்கும் உவமை. கொளீஇ - கொளுத்தி. "பூநாற்றத்த புகை கொளீஇ" என்றார் புறப்பாட்டினும். கயங்கள்-அகல்களுக்கும், மரைமலர்க்காடு-மிகுதியான விளக்கின் சோதிகளுக்கும் உவமை. தாமரை - மரையெனல் விகாரம். விளக்கம், அம் - வினைமுதற் பொருண்மை விகுதி. (கஅ)

அதிசய மளிப்பதற் கருள றிந்துநற்
புதிதலர் கற்பகத் தருவும் பொய்யிலாக்
கதிர்நெடு மணிகளுங் கறவை யான்களு
நிதிகளு முறைமுறை நின்று நீட்டவே.

இ-ள். அதிசயம் அளிப்பதற்கு - நூதனமான பொருள்களைக் கொடுப்பதற்கு, அருள் அறிந்து - (இராவணனது) கட்டளையையறிந்து, புதிது அலர் நல் கற்பகம் தருவும் - அன்று பூத்த நல்ல கற்பக விருட்சங்களையும், பொய் இலா - பொய்த்தலில்லாத, கதிர்நெடுமணிகளும் - பிரகாசம் பொருந்திய சிந்தாமணி முதலிய மணிகளையும், கறவை ஆன்களும் - கறத்தலையுடைய காமதேனு முதலிய பசுக்களையும்,

நிதிகளும் - நிதிகளையும், முறைமுறை - அடிக்கடி, நின்று - (கொணர்ந்து) நின்று, நீட்ட - (அரக்கராகியோர்க்கு வல்லாளர்கள், கொடுத்துக்கொண்டிருக்கவும்.

குறிப்பு — அதிசயம்-அதிசயமான பொருள்களுக்கு ஆகுபெயர். கண்சாலை முதலி யன கண்டு என்பார் அறிந்து என்றார். திவ்விய சாரமாகிய நானாவித பானங்களை யுதவும் மத்தியாங்கம், நானாவித வாத்தியங்களை யுதவும் தூரியாங்கம், அநேகவித வாபரணங்களை யுதவும் பூஷணாங்கம், அநேகவித இரத்தின தீபங்களை யுதவுந் தீபாங்கம், பிராஸாத மண்டபாதிகளை யுதவுங் கிருகாங்கம், சந்திராதித்தர் ஒளி யினை யடக்கு மொளியினை யுதவுஞ் சோதிராங்கம், நானாவித ரசத்தன வாகிய நான் குவகை யுணவினையு முதவும் போசனாங்கம், வேண்டியகலங்களை யுதவும் பாச னாங்கம், விசித்திர வஸ்திரங்களை யுதவும் வஸ்திராங்கம் என்பெயர் பெற்ற கற்பகத்தருவின் வகைகளைக் கூறுவார் 'நல' என்றார். மாறுபட்டமில்லாத மணி யென்பார் 'பொய்யிலா' என்றார். மணிகள் என்றது தெய்வ மணிகளாகிய சிந்தா மணி, சூளாமணி, சிமந்தகமணி, சூடாமணி, கௌத்துவமணி யென்பவற்றோடு நவமணிகளை. மனத்தில் நினைத்தன வெல்லாந் தரற்பாலன வென்பார் 'கறவை யானைகள்' என்றார். 'மறவியொன் றானுமின்றி மனத்ததே சுரக்கும் பால், கற வையிற் சுரக்குந் தம்மாற் காமுறப் பட்ட வெல்லாம்" என்றார் திருத்தக்க தேவரும். நிதிகள் என்றது - கச்சபநிதி, கற்பநிதி, பதுமநிதி, நந்தநிதி, நீலநிதி, மகா நிதி, மகாபதுமநிதி, முகுந்தநிதி யென்னும் நவநிதிகளை. (௧௯)

குண்டல முதலிய குலங்கொள் பேரணி
மண்டிய பேரொளி வயங்க வீசலா
லுண்டுகொ லிரவினி யுலக மேழினு
மெண்டிசை மருங்கினு மிருளின் றென்னவே

இ - ள். குண்டலம் முதலிய-குண்டலங்கள் முதலாகிய, குலம் கொள்-மேன் மைபொருந்திய, பேர் அணி - பெரிய ஆபரணங்கள், மண்டிய - நெருங்கிய, பேர் ஒளிவயங்க வீசலால் - பெரிதான பிரகாசம் விளங்கும்படி வீசுதலால், இனி இரவு உண்டுகொல் - இனி இராத்திரி யென்பது உண்டோ? உலகம் ஏழினும் - ஏழுலக ங்களிலும், எண் திசை மருங்கினும் - எட்டுத் திக்குக்களின் பக்கத்திலும், இருள் இன்று என்ன - இருளென்பது இல்லையென்று கூறவும். (௨௦)

கங்கையே முதலிய தீர்த்தக் கன்னியர்
கொங்கைகள் சுமந்திடை கொடியி னொல்கிடச்
செங்கையி னரிசியு மலருஞ் சிந்தினர்
மங்கல முறைமுறை கூறி வாழ்த்தவே

இ - ள். கங்கையே முதலிய தீர்த்தக்கன்னியர் - கங்கையே முதலாகிய புண்ணி ய நதிகளாகிய பெண்கள், கொங்கைகள் சுமந்து - முலைகளைச் சுமப்பதால், இடை - (அவர்கள்) இடையானது, கொடியின் - கொடியைப்போல, ஒல்கிட - தளாவடை ய, செங்கையின் - (தமது) செய்ய கையினால், அரிசியும் - அட்சதைகளையும், மலரு ம் - புஷ்பங்களையும், சிந்தினர் - சிந்தி, முறைமுறை - அடிக்கடி, மங்கலம் கூறிவா ழ்த்த - சுபங் கூறி ஆசீர்வாதஞ் செய்யவும்.

குறிப்பு —சுமந்து என்னும் வினைத்தந்து - கொங்கையின் பாரமிகுதி வீராங் கற்கு சுமந்து - சுமக்கவென்னுஞ் செயவெனெச்சத்திரிபு சிரதினா-முற்றெச்சம்

ஊருவிற் றோன்றிய வுயிர்பெ யோவியங்
காரினிற் செருக்கிய கலாப மஞ்ஞைபோல்
வார்விசிக் கருவியோர் வகுத்த பாணியி
னாரிய ரருநட நடிப்ப நோக்கியே

இ-ள். ஊருவில் தோன்றிய உயிர் பெய் ஓவியம் - (பிரமதேவனது) துடையின் கட்பிறந்த உயிர் உள்ள சித்திரப்பாவைபோன்ற உருப்பசியானவள், காரினில் செருக்கிய கலாபம் மஞ்ஞைபோல் - கார்காலத்திற் களித்த தோகை மயிலைப்போல், வார் விசி கருவியோர் - தோல் வாரினாலே கட்டப்பட்ட தோற்கருவியையுடையவர்கள், வகுத்த—, பாணியில் - பாட்டின்படி, நாரியர் அருநடம் - பெண்கள் நடிக்கும் அக்கூத்தாகிய அரிய நடனத்தை, நடிப்ப - நடிப்பதை, நோக்கி - பார்த்து.

குறிப்பு—ஊருவிற் றோன்றிய வுயிர்பெய் யோவிய மெனவே யுருப்பசியென்றும் உயிர்பெய் ஓவியம் வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. கார் - மேகம், பண்பாகுபெயர். கார் - இராவணனுக்குச் சமம், மஞ்ஞை - களிப்போடு நடிக்கும் ஊர்வசிக்கும் உவமை. வார்விசிக்கருவியோர் என்றது,—எல்லாக்கூத்துக்களும், எல்லாப்பாட்டுக்களும், எல்லாவிசைகளும், எல்லாப்பண்களும், இருவகைத்தாளங்களும், எழுவகைத்தூக்குக்களும், இவற்றின் குற்றங்களும், இயற்சொன் முதலிய நால்வகைச்சொற்களுமென்று சொல்லப்பட்டன வற்றை நுண்ணிதாக வுணர்ந்து ஓரோருருவை யிரட்டிக்கிரட்டி சேர்த்த விடத்து வெசிழாதபடி நிரம்ப நிறுத்தவும், அவ்விடத்துப்பெறும் இரட்டியெய்யாயப் பாசவுருவானவழி நிறுத்துமான நிறுத்திக்கழிப்புமானங் கழிக்கவும், வல்லனாய், இப்படி நிகழ்ந்த வுருக்களில் யாழ்ப் பாட்டும் குழலின் பாட்டும் கண்டப்பாட்டும் இயைந்து நடக்கிறபடி கேட்போர் செவிக்கொள்ள அமைந்த காரணத்தாற் குறியறிந்து சேர்வாசித்து மற்றைக்கருவிக ளிற் குறை நிரப்புதலும் மிகுதியடக்குதலும் ஆக்கு மிடத்தும் அடக்கு மிடத்தும் இசையில் இரந்திரக்கோணுருதபடியே செய்தலும் செய்யு மிடத்துக்கைத்தொழில் அழகுபெறச்செய்து காட்டலும் வல்லுநயமைந்த தண்ணுமை யாசிரியன் முதலி னோரை வகுத்த என்றது - அத்தண்ணுமையாசிரியன் முதலினோர் தொடங் கிய பாட்டோடு தாளத்தின்படி யென்பது தோன்றற்கு "மாயோன் பாணியும்" என் புழிப்பாணியைப் பாட்டென்றார் அடியார்க்குநல்லார். பாணியின் அருநடமென்ன லும் பாட்டுக்கியைந்த அவிநயத்தோடு கூடிய நடனமாதல் காண்க. மற்றும், பாணி-தாளமுமாம், "கொட்டுமசையுந் தூக்கு மளவு, மொட்டப் படுவது பாணியாகும்" என்றாராகலின் இப்பொருள் கூறுமிடத்துப் பாணியின் என்புழி இன் என்பதைத் தவிர்வழி வந்தசாரியையென நீக்கிப் பாணியோடு கூடிய அருநடமெனக் கொள்க. ஆடவரும் ஆண்மை திரிந்த பெண்மைக்கோலத்தாரும் ஆடுகின்ற அல்லியம், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், முதலிய வற்றோடு பேடுமாகிய புறக் கூத்துக்களை நீக்க 'நாரியருநடம்' என்றார். நாரியர் என்பது - அக்கூத்தென்னும் பெயர் மாத்திரை யாய் நின்றது. இனி, நாரியர்கள் ஊர்வசியைப்போலவும் மயிலைப்போலவும் தண் ணுமை யாசிரியர்கள் வகுத்த பாணியில் அரு நடம் நடிப்ப எனப்பொருள் கோடலு மாம். இங்ஙனம் பொருள் கூறுகறியார் ஆற்றொழுக்கினமைந்த வேற்றுமை தோ

னற ஊருவிறறேனறிய நாரியா எனககொணடு பிரமதேவன றுடையினகட பிற நத மேனகைகளெனபபொருள கூறி யிடாபபடுவோராயினா (உஉ)

இருநதன னுலகஙக ளிரணடு மொனறுநதன
னருநதவ முடைமையி னளவி லாறறலிற
பொருநதிய விராவணன புருவக காமுகக
கருநதடங கணணியா கணணின வெளளததே.

இ - ள உலகஙகள இரணடும ஒனறும - திரிலோகைசுவரியஙகள அனைத தும, தன அருநதவம உடைமையின - தனது அரியதவததாலும, அளவு இல ஆறற லின - அளவிலலாத (தனது) வலிமையினாலும், பொருநதிய - பொருநதபபெறற இராவணன—, புருவம காமுகம - புருவமாகிய விலலினையுடைய, கருநதடம கண ணியா - கரிய பெரிய கணணினையுடைய மாதாகளினது, கணணின வெளளதது - பாரவையின மிகுதியில, இருநதனன - இருநதான (உங)

தஙகையு மவவழித தலையிற றாஙகிய
செஙகையள சோரியின றாரை சேநதிழி
கொஙகையண மூககினள குழையில காதினள
மஙகுலி னொலிபடத திறநத வாயினள.

இ - ள தஙகையும - அவன தஙகையாகிய சூாபபநகையும, அ வழி - அவவி டதது, தலையில தாஙகிய செஙகையள - தலைமேல வைதத செயய கையையுடைய வளும, சோரியின தாரை சேநது இழி கொஙகையள மூககினள குழை இல காதி னள - அரததவொழுககுச சிவநது வடிநத முலைகளையுடையவளும மூககினையு டையவளும குணடலமிலலாத காதினையுடையவளும, மஙகுலின ஒலிபட திறநத வாயினள - மேகமுழககம தோனறுமபடி திறநதவாயினையுடையவளும (உச)

முடிமிடை வாயிலின முறையிட டாாகலிக
கடையுகக கடலொலி காடடக காநதுவாள
குடதிசைச செககரிற சேநத கூநதலாள
வடதிசை வாயிலின வநது தோனறினாள

இ - ள முடிமிடை வாயிலின - கிரீடஙகள செருஙகிய அரணமனை வாசலின கண, கடையுகம ஆாகலிகடல ஒலிகாடட - யுகாநத காலததிய நிறைநத ஒலியினை யுடைய கடலபோனற பேரொலி காடடுமாறு, முறை இடடு காநதுவாள - குறை கூறிககோபிபபவளும, குடதிசை செககரில - மேறகுததிசையின கடடோனறுஞ செவவானமபோல, சேநத - சிவநத, கூநதலாள - கூநதலையுடையவளுமாக, வடதி சைவாயிலின வநது தோனறினாள - வடககுததிசைவாசலின கணவநது காணப படடாள (உரு)

தோனறலுந தொனனக ராககா தோகைய
ரேனறெதி வயிறலைத திரஙகி யேஙகினா
மூனறுல குடையவன றஙகை மூககில
டானறனி யவள்வரத தரிகக வலலரோ.

இ - ள் தோன்றலும் - (அவ்வாறு சூர்ப்பநகை) தோன்றிய வளவில், தொல் நகர் - பழமையாகிய இலங்கை நகரத்திலுள்ள, அரக்கர் தோகையர் - ராக்ஷசப்பெண்கள், மூன்று உலகு உடையவன் தங்கை - திரிலோகங்களையு முடையவனாகிய இராவணனது தங்கையானவள், மூக்கு இலள் - மூக்கில்லாதவளாய், அவள் —, தனி வர - தனித்து வந்ததால், தரிக்க வல்லரோ - (தாம் இருக்கும் இடத்தே) பிருக்கவல்லமையுடையவர்களோ? [வல்லவர் அல்லர்], (ஆகலின்), என்று - பொருந்தி, எதிர் - (அவள்) எதிரே, வயிறு அலைத்து - வயிற்றிலடித்துக்கொண்டு, இரங்கி - உருகி, ஏங்கினர் - அழுதார்கள்

குறிப்பு —சூர்ப்பநகையைப்போல் விரித்த கூந்தலும் அழுத கண்ணும் முறையிட்டுக் கூவும் வாயுமாக வந்தாகளென்பார் 'என்று' என்றார் ஓகாரம் - எதிர்மறை

பொருக்கென நோக்கினர் புகல்வ தோர்கிலர்
அரக்கரு மிரைத்தன ரசனி யாமெனக்
கரத்தொடு கரங்களைப் புடைத்துக் கண்களை
நெருப்பெழ விழித்துவாய் மடித்து நிற்கின்றார்

இ - ள் பொருக்கென நோக்கினர் - (அச்சூர்ப்பநகையை) விரைந்து பார்த்தவர்களும், புகல்வது ஓர்கிலர் - (தாம் அவளோடு) சொல்லவேண்டிய விஷயம் (இன்னதென்று) தெளிந்துகொள்ளாதவருமாகிய, அரக்கரும் —, அசனி என - இடியைப்போல, இரைத்தனர் - பேரொலிசெய்து, கரத்தொடு கரங்களை புடைத்து - கரங்களோடு கரங்களை மோதி, கண்களை —, நெருப்பு எழ விழித்து - அக்கினி புறப்படும்படி பார்த்து, வாய்மடித்து நிற்கின்றார் - வாயை மடித்துக்கொண்டு நின்றார்கள்.

குறிப்பு —பொருக்கென்ல - விரைவுக்குறிப் புணர்த்து மொரிடைச்சொல் அரக்கரும், உம்மை - இறந்தது தழீஇய எச்சம் (உஎ)

இந்திரன் மேலதோ வுலக மீன்றபே
ரந்தணன் மேலதோ வாழி யானதோ
சந்திர மௌலிபா றங்கு மேகொலோ
வந்தர மென்றுநின் றழுங்கி னாரசிலர்

இ - ள் சிலர் - சில ராக்ஷஸர்கள், அந்தரம் - (இந்த) தீமை, இந்திரன் மேலதோ - தேவேந்திரன் மேலுற்றதோ? உலகம் ஈன்றபேர் அந்தணன்மேலதோ - உலகத்தைப்பெற்ற [படைத்த] பெரிய அந்தணனாகிய பிரமதேவன் மேலுற்றதோ? ஆழியானதோ - சக்கரதாரனான விஷ்ணுவின் மேலுற்றதோ? சந்திர மௌலிபால் தங்குமேகொலோ - பிறையை யணிந்த தலைமுடியினையுடைய சிவனிடத்துச்சாருமோ? என்று - என்றுகூறி, நின்று - (ஒன்றுந் தோன்றாதவர்களாய்) நின்று, அழுங்கினார் - மனக்கொதிப்படைந்தார்கள்.

குறிப்பு —அந்தரம் - தீது, "மற்றுந் தீதின் பெயர் - ஆங்கது மாயமு மந்தரமு மென்ப" என்றார் பிங்கலமுனிவர். இனி, அம் + தரம் எனக் கண்ணழித்து அழகாயிருக்கின்றது என்று பொருள்கோடலுமாம், ஈண்டு அம் - அழகு, தரம் - தகுதி. ()

செபபுறற குரியவா தெவவா யாருளா
முபபுறத துலகமு மடஙக மூடிய
விபபுறத தணடததோாக கியைவ தனறிது
வபபுறத தணடததோ ராமெனா றாாசிலா.

இ - ள சிலா - சிலராக்ஷஸாகள, செபபு உறறு - சொலலலுறறதறகு [சொலவதறகு], உரியவா தெவவா - பொருநதியவராகிய பகைவா, யாா உளா - எவரிருககினறாாகள? மு புறதது உலகமும அடஙக மூடிய -(கீழமேல நடுவாகிய) மூனறு பககஙகளிலுளள திரிலோகஙகளும அடஙகுமபடி மூடியிருபபதான, இ புறதது அணடததோாககு -இப்பககததிலுளள அணட கோளததி லுளளாாககு, இது இயைவது அனறு - இசசெயகை பொருநதுவதனறு, (ஆதலால்),அ புறதது அணடததோா எனறாா - (செயதவா) இததிரிலோகததிறகும அபபாலிருககிற அணடததிலுளளவாகள எனறு கூறினாாகள (௨௯)

எனனேயே யிராவணன றஙகை யெனறபி
னனனையே யெனறடி வணஙக லனறியே
யுனனவே யொணணுமோ வொருவ ராலிவ
டனனையே யரிநதன டாளெனா றாாசிலா.

இ ள சிலா - சில ராக்ஷஸாகள, எனனேயே - ஈதெனன அதிசயம? இராவணன தஙகை எனறபின - இராவணனுககுத தஙகையெனறு இவள கூறியபினபு, அனனையே எனறு அடி வணஙகல அனறி - (எமது) தாயேயெனறு கூறி (இவள) பாதததில வணஙகுதலலலாமல, ஒருவரால - எவரொருவராலும, உனனவே ஒணணுமோ - வேறுவிதமாக நினைககவே முடியுமோ? இவள தனனையே அரிநதனள எனறாா - இவள தனனைததானே யறுததுககொணடாளெனறு கூறினாாகள (௩௦)

போரிலான புரநதர னேவல பூணடன
னருளா நேமியா னாறற றேறறுபபோய
நீரின னெருபபினன பொருபபி னனினி
யாரகொலா மீதெலா வறைகின றாாசிலா.

இ ள புரநதரன - இநதிரன, போரிலான -பேரொழிநதவனாகி, ஏவல பூணடனன - (இராவணனுககுப) பணிவிடைசெயயுந தொழிலை மேறகொணடிருககினறான, அா உலாம நேமியான - சோதிவிளஙகுகினற சககராயுதததினையுடைய விஷ்ணு, ஆறறல தோறறுபபோய - வலிமை யிழநதுபோய, நீரினன -கடலில் விருபபவனாயினன, நெருபபினன பொருபபினன - (நெறறிககணணிடததும மழுவிடததும) அககினியையுடைய சிவன மலையிலிருப்பவனாயினன, ஈது (செயதவா) - இசசெயகை செயதவாகள, இனி—, யாாகொல- எவாகளோ? என அறைகினறாா- எனறு சொனனாாகள. (௩௧)

சொறபிறந தாாககிது துணிய வொணணுமே
யிறபிறந தாாதமக கியைவ செய்திலள

கறபிறந தாளெனக கரனகொ லாமிவள
பொற்பிறந தாக்கினன புகனறென ஞாசிலா.

இ - ள். சிலா—, சொல பிறநதாாகு இது துணிய ஒணணுமே - இனனவ ளெனறு குறிப்பிடடுச சொல்லததகுநதவாககு இசசெயல துணிநது செயயககூடு மோ? [செயய மனமவராது.] இல பிறநதாா தமககு இயைவ செயதிலல - குடி யிற பிறநத பெணகளுககுப பொருநதிய நறசெயகைககளைச செயயாத இவள், கறபு இறநதாள என - கறபினை யிழநதாளெனறு, புகனறு - (கோபிதது இனிக கிரம மாக நடவெனறு) சொலலி, இவள - இவளது, பொறபு இறநத ஆககினன - அழக னைததும ஒழிநதனவாகசச செயதவன, கரனகொல எனறாா - கராாகூஸன தானே எனறு கூறினாாகள

குறிபபு —ஒணணுமே, ஏகாரம - எதிாமறை அநாமதேயா இசசெயலபுரிந திருப்பாாகள எனபாாகள 'சொறபிறந தாாககிது துணிய வொணணுமே' எனறாா கள. சொறபிறநதாா எனறது - இராவணனுககு மிகவும நெருஙகிய கரன முத லிய சுறறததாாலலாத மறறை ராகூஸ வீராகளை. இறநதாககினன - அகரந தொகு ததல (கஉ)

தததுறு சிநதையா தளருந தேவரிற
பிததுற வலலரே பிழைபபில சூழச்சியாா
மூதகிறத துலகைய முடிகக வெணணுவா
ரிதத்றம புணாததன ரெனகின றாாசிலா.

இ - ள தததது உறு சிநதையா - தததளிககினற மனததினையுடையாராகிய, தளரும தேவரில - சோாவடைகினற தேவாகளைபபோல, பிதது உற அலலா மயககம அடையாதவரும, பிழைபபு இல சூழசசியாா - தவறுதல இலலாத யோச னையையுடையவாகளுமாகிய, மூ திறதது உலகையும முடிகக எணணுவாரே - மூவ கையுலகததையும அழிகக நினைககபபடடவாகளே, இ திறம புணாததனா எனகின றாா - இககாரியம செயதாாகள எனறு கூறினாாகள.

குறிபபு —வலலுநாபோ லாககரோடு போாபுரிநது இளைதது அவாககடிமை களாகி வாழநது உடபகையும வெளியுறவுங கொணடிருககும தேவரைப்போலச சொறபமதியுடையாா அலலா எனபது முதலிரணடடிகளின கருதது ஏகாரம மாறுக, தேறறம (கூக)

இனியொரு கறபமுண டெனனி னனறியே
வனைகழல வயஙகுவாள வீரா வலலரோ
பனிவருங் கானிடைப பழிபபி ஞெனபுடை
முனிவாா வெகுளியின முடிபென றாாசிலா

இ - ள சிலா—, இனி ஒரு கற்பம் உணடு எனனின அன்றி - இனிமேல் மறறொரு கறபகாலம உணடெனறு சொன்னலலலாமல், வனைகழல வயஙகுவாள வீரர்வல்லரோ - அணிநத கழலையும பிரகாசிககினற வாளையுமுடைய வீராகள (இத தொழிலசெயய) வலலமையுடையவாகளோ? (இசசெயல), பனிவரும- அசசமுண

டாமின்ற, கான் இடை - கானகத்தில், பழிப்பு இல் நோன்பு உடை - குற்றமில்லாத தவத்தினையுடைய, முனிவர் வெகுளியின் முடிபு என்றார் - முனிசிரேஷ்டர்களுடைய கோபத்தினது முடிவாகும் என்று கூறினார்கள்

குறிப்பு — கற்பம் - கல்பம். முதலிரண்டடிகளில் இராவணனது நீடித்த ஆயுள் நாளும் அவனை வெல்லும் வீரனின்மையும் குறிப்பிக்கப்பட்டன. வல்லரோ, ஓகாரம் - வினா பனி - குளிர்ச்சியுமாம் (௬௪)

கரையறு திருநகர்க் கருங்க ணங்கைமார்
நிரைவளைத் தளிர்க்கைக ணெரித்து நோக்கினார்
பிரையுறு பாலென நிலையிற் பின்றிய
வுரையினர் ரொருவர்முன் னொருவ ரோடினார்

இ - ள் கரையறு திருநகர் கருங்கண் நங்கைமார் - அளவற்ற செல்வம் பொருந்திய இலங்கை நகரத்திலிருக்கிற கரியகண்களையுடைய பெண்கள், நிரைவளை தளிர் கைகள் - வரிசையாகிய வளையல்களை யணிந்த (இளந்) தளிர்போன்ற கைகளை, நெரித்து—, நோக்கினர் - பார்த்தவர்களும், பிரை உறு பால் என-உறைமோர் உற்றபாலைப்போல, நிலையில் பின்றிய - நிலைமையிற் பின்னடைந்த, உரையினர் - சொற்களையுடையவர்களுமாகி, ஒருவர்முன் ஒருவர் ஓடினர் - ஒருவருக்குமுன் ஒருவர் ஓடினார்கள். (௬௫)

முழவினில் வீணையின் முரளி யாழினிற்
றழுவிய குழலினிற் சங்கிற் றாரையி
லெழுகுர லின்றியே யென்று மில்லதோ
ரழுகுரல் பிறந்ததவ் விலங்கைக் கன்றரோ.

இ - ள். முழவினில் - முழவினிலும், வீணையின் - வீணையிலும், முரளி - முரளியிலும், யாழினில்-யாழிலும், தழுவிய குழலினில்-(அந்தயாழினிசையோடு) தழுவி வாசிக்கலுற்ற குழலிலும், சங்கில்-சங்கிலும், தாரையில் - சிறு சின்னத்திலும், எழு-எழும்புகின்ற, குரல் இன்றி - தொனியில்லாமல், என்றும் இல்லது - எக்காலத்திலுமில்லாததாகிய, ஓர் அழு குரல் - ஒரு அழுகைச்சப்தமானது, அன்று - அற்றைநாள், அ இலங்கைக்கு - அவ்விலங்கை நகரத்தின்கண், பிறந்தது - உண்டாயது.

குறிப்பு —முழவு எழுவகைப்படும் அவை, அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணமைமுழவு, நாண்முழவு, காலைமுழவு என்னும் இவை இவற்றுள் அகமுழவாவன - உத்தமமான மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழா என்பவை. அகப்புறமுழவாவன. மத்திமமான தண்ணுமை, தக்கை, தகுணிச்சமுதலாயின. புறமுழவாவன. அதமக்கருவியான கணப்பறை முதலியன புறப்புறமுழவாவன நெய்தற்பறைமுதலாயின பண்ணமை முழவாவன முரசு, நிசாளம், துடுமை, திமிலை யென்பவை நாண்முழவு. நாட்பறை, நாழிகைப்பறை. காலைமுழவு, துடி ["பேரிகை படக மிடக்கை யுடுக்கை, சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை, திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை, தமருகந் தண்ணுமை தாவி றடாரி, யந்தரி முழவொடு சந்திர வளைய, மொந்தை முரசே கண்விடு தூம்பு நிசாளந் துடுமை சிறுபறை யடக்க, மாசி றகுணிச்சம் விரலேறு பாகம், தொக்க வுபாங்

கந் துடிபெரும் பறையென, மிக்க நூலோர் விரித்துரைத் தனரே"] வீணை - ஓசை யாழ் முரளி - மூக்கால் வாசிக்கும் குழல் யாழ் நால்வகைப்படும், அவை பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழெனபன இவை நாலும் பெரும்பான்மை சிறுபான்மையான வருவனவுமுள, என்னை? "பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமு டன், சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினார், தாம்பொலிந்த, மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே, பின்னு முளவே பிற" என்றாராகலின். குழல் வங்கியம், இது-மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி யென்பவற்றாற் செய யப்படுவது என்னை? "ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே, பாங்குறு செங்காலி கருங்காலி—, பூங்குழலாய், கண்ணனு வந்த குழற்கிவைக ளாமென்றார், பண்ண மைந்த நூலவலோர் பார்த்து" என்றாராகலின் இவற்றுள் மூங்கிலிற் செய்வது உத்தமம் வெண்கலமத்திமம் ஏனைய அதமமாம். யாழுங் குழலும் ஒரு வழியாக வாசிக் கப்பட்டன என்பார் "யாழினிற்றழுவிய குழலினில்" என்றார். "கருவிகளெல் லாங், குழல்வழி நின்றது யாழே யாழ்வழித், தண்ணுமை நின்றது தகவே" என்றார் இளங்கோவடிகளும் எழு குரல் - முழவு, வீணை, முரளி, யாழ், குழல், சங்கு, தாரை யென்னும் எழுவகைக்கருவிகளின் எழுவகைக்குரல்களுமாம் இனி, சரிகமபதநி என்னும் ஏழ் எழுத்தினையும் மாத்திரைப்படுத்தித் தொழில் செய்யப்பிறக்கும் சட்சம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்னும் ஏழிசையுமாம். என்னை? "சரிக மபதநியென் றேழெழுத்தாற் றானம், வரிபரந்த கண்ணினாய் வைத் துத், தெரிவரிய—, வேழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்குஞ், சூழ்முத லாஞ் சுத்தத் துளை" என்றாராகலின் (௩௬)

களனுடை வள்ளமுங் களித்த தும்பியு
முள்ளமு மொருவழிக் கிடக்க வோடினார்
வெள்ளமு நாணுற விரிந்த கண்ணினார்
தள்ளுறு மருங்கினார் தழீஇக்கொண் டேகினார்

இ - ள் கள் உடை வள்ளமும் - மதுவினையுடைய கிண்ணங்களும், களித்த தும்பியும் - (அம்மதுவினால்) களிப்புற்ற வண்டுகளும், உள்ளமும் - (அம்மதுவின் கண் மிக்க விருப்பமுடைய தமது) மனமும், ஒருவழி கிடக்க - ஓரிடத்திற்றங்க, ஓடினார் - ஓடிவந்த பெண்கள், வெள்ளமும் நாண் உற - நீர்ப்பெருக்கும் வெட்கமுறும்படி, விரிந்த கண்ணினார் - (நீர்த்துளிகள்) பெருகிய கண்களையுடையவர்க ளும், தள்ளுறு மருங்கினார் - துவளுகின்ற இடையினையுடையவர்களுமாகி, தழீஇ கொண்டு ஏகினார் - (சூர்ப்பநகையைத்) தழுவிக்கொண்டு போனார்கள்

குறிப்பு—உடை - உடைய தாம் பருகும் மதுவினை விட்டேக மனம்வாராமை யும் சூர்ப்பநகைக்கெய்திய துன்பினை விசாரியாம் விருப்பத்தறியலாமையும் விள ங்க 'வள்ளமும் உள்ளமும் ஒருவழிக்கிடக்க' என்றார் களித்த தும்பியெனவே இப்பெண்கள் மதுவைப் பருகிக் களியாமை குறிப்பிக்கப்பட்டது. தும்பி - வண் டில் ஒருசாதி கண்ணீர் சோரவிட்டு அழுதமையும் விசனத்தால் இளைத்துச் சோர்வு ற்றமையும் விளங்க 'வெள்ளமு நாணுற விரிந்த கண்ணினார், தள்ளுறு மருங்கினார்' என்றார் இனி, கடலும் வெட்கமுறும்படி விசாலித்த கண்களையுடையவர்களாகிய துவளுகின்ற இடையினையுடைய பெண்கள் ஓடினார் ஆகித் தழீஇக்கொண் டேகி னர் என்று முடித்தலு மமையும். (௩௭)

நாந்தக வுழவரை நாட்டந் தண்டத்தார்
காந்திய மனத்தினர் புலவி கைம்மிகச்
சேந்தகண் ணதிகமுஞ் சிவந்து நீருக
வேந்தனுக் கிளையவ டாளின் வீழ்ந்தனர்.

இ - ள். நாந்தகம் உழவரை - வாள் வீரராகிய கணவரிடத்தில், நாட்டம் தண்டத்தார் - நடத்துகின்ற தண்டனையையுடையவராகி, காந்திய மனத்தினர் - வெதும்பிய மனத்தினையுடைய (ஊடல்கொண்ட) பெண்கள், புலவி கைம்மிக - ஊடல் மிகுதிப்பட்டதால், சேந்தகண் - சிவந்த கண்கள், அதிகமும் சிவந்து - மிகவும் சிவப்புற்று, நீர் உக - நீர்வடிய (அழுது), வேந்தனுக்கு இளையவள் - (தமது) அரசனாகிய இராவணனுக்குத் தங்கையாகிய சூர்ப்பநகையினுடைய, தாளின் வீழ்ந்தனர் - பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்கள்.

குறிப்பு — நாந்தகவுழவர் - பகைவராகிய நிலத்தை வாள்கொண்டு உழுபவர்கள், வில்லேருழவர் என்பது போன்றது. உழவரை - உருபுமயக்கம். புலவியின் பெருமை கூறுவார் 'நாந்தக வுழவரை நாட்டந் தண்டத்தார்' என்றார். கைம்மிக, கை - உபசருக்கம். மிக உக என்னும் செயவெனெச்சங்கள் முறையே காரண காரியப்பொருட்டில் நின்று சேந்தவென்னும் பெயரெச்சவினையையும் வீழ்ந்தனர் என்னும் வினைமுற்றையுங்கொண்டு முடிந்தன. புலவியிற்கொண்ட கோபத்தோடு சூர்ப்பநகைக்கு இக்கேடிழைத்தவர் யாவர் என்று கோபித்தாரென்பது தோன்ற 'அதிகமுஞ் சிவந்து' என்றார். (௫௮)

பொற்றலை மரகதப் பூக நேர்வுறச்
சுற்றிய மணிவடந் தூங்கு மூசலின்
முற்றிய வாடலின் முனிவுற் றேங்கினர்
சிற்றிடை யலமரத் தெருவு சேர்கின்றார்.

இ - ள். (சிலபெண்கள்), பொன்தலை - அழகிய தலையினிடத்து, மரகதம் - மரகதம்போலும் பச்சை நிறத்தினையுடைய, பூகம் - கமுகமரங்களுக்கு, நேர்வு உற - சமமாகும்படி, சுற்றிய மணி - சூழ்ந்திருக்குமாறு கட்டியிருக்கிற இரத்தினங்களையுமுடைய, வடம் தூங்கும் ஊசலின் - சங்கிலிகளிற் றொங்கப்பட்ட ஊசலிலிருந்து, முற்றிய ஆடலின் - (ஆடும்) அதிகமான விளையாட்டில், முனிவு உற்று ஏங்கினர் - வெறுப்படைந்து அழுதவர்களாகி, சிறு இடை அலமர - சிறிய இடையானது துவண்டுவருந்த, தெருவு சேர்கின்றார் - தெருவில் வந்து சேர்ந்தார்கள்.

குறிப்பு — மரகதம் - மற்றை நிறங்கட்கும் உபலக்கணம். பாளை குலைமுதலியன குஞ்சங்களோடு மணிகளுக்கும், பூகம் வடத்துக்கும் உவமை. சூர்ப்பநகைக்கு நேரிட்டதுன்பத்தைக் கேள்விப்பட்டதால் முனிவுற்றேங்கினரெனக். கீழ்க்கவியில் புலவியிற்சினந்தோர் சினந்தது வியப்பலாகலின் இக்கவியில் முற்றிய வாடலின் முனிவுற்றாரைக்கூறினர். (௫௯)

எழுவென மலையென வெழுந்த தோள்களைத்
தழுவிய வளைத்தளிர் நெகிழ்ந்த தாமரை

முழுமுகத் திருகயன் முத்தி ஞலிகள்
பொழிதரச சிலருளா பொருமி விமமுவாா.

இ-ள். எழு என மலை என எழுநத தோளகளை - தமபங்கள் போலும மலைகள்போலும தோனறிய (தமது கணவரின) புயஙகளை, தழுவிய—, வளை தளிர - வளையல்களையணிநத தளிா போனற கைகள, நெகிழ - விலக, தாமரை முழு முகதது இருகயல் - தாமரை மலா போனற முகமுழுதிலுமிருககிற இரணடு கெணடை மீனகள போனற கணகள, முததின - முததுககளைபபோல, ஆலிகள பொழிதர - நீரததுளிகள சிநதுமபடி, உளா சிலா - இருபபவாகளாகிய சில பெணகள, பொருமி விமமுவாா - தேமபி யழுதாா.

குறிப்பு —கயல - உவமவாகுபெயா. முழுமுகம - முகமுழுதும எனறு எணடு பொருள கூறியவாறே "முழுகீா வார முழுமெயும பனிதது" எனபுழி அடியார்க்குநல்லாரும மெய முழுதும எனப பொருள கூறினமை காணக இஙஙனங கூறியது கணகளின பெருமை விளஙகறகு. வளைததளிர் - அனமொழித தொகை. (௪0)

வேறு.

நெயநிலைய வேலரச னேருநரை யிலலா
னிநநிலை யுணாநதபொழு தெநநிலைய னெனறு
மைநநிலை நெடுஙகணமழை வானிலைய தாகப
பொயநிலை மருஙகினா புலமபினா புரணடாா.

இ-ள பொய நிலை மருஙகினா - பொயத தோறறமுறற இடையையுடைய சில பெணகள, நெய நிலைப வேல அரசன - (பகைவரது) நிணநதஙகிய வேலினை யேநதிய அரசனும, நேருநரை இல்லான - (தனனை) ஒபபாரை யிலலாதவனுமாகிய இராவணன, இ நிலை உணாநத பொழுது - (சூாப்ப நகைககு நோநத) இநத நிலைமையை யறிநதபொழுது, எ நிலையன என்று - எததனமையனுவானெனறு கூறி, மை நிலை நெடுஙகண - மை தோயநத (தமது) பெரிய கணகள, மழைவான நிலையது ஆக - மழையைச சொரிகினற மேகததினது தனமையை யுடையனவாகும படி, புலமபினா புரணடாா - புலமபி (பூமியில வீழநது) புாளுதலுறறாாகள, (௪௧)

மனநதலை வருஙகணவ ரினசுவை மறநதாா
கனநதலை வருஙகுழ லொசிநது கலைசோா
நனநதலைய கொஙகைகக டதுமபிட நடநதா
ரனநதரிள மஙகைய ரழுஙகியயா கினறாா

இ-ள். அனநதா இள மஙகையா - களளை யுணடமையா லுணடான செருககினையுடைய இளமை பொருநதிய பெணகள, மனம தலைவரும் கணவரின சுவை மறநதாா - (தமது) மனததில முதனமையாக (நினைகக) வருகினற நாயகாகளுடைய (சையோக) இனபததை மறநதும, கனம தலைவரும குழல் ஒசிநது - கிறைவாகிய தலையில உளள கூநதல (அவிழ்நது) அசைநதும, கலை சோர - உடை நெகிழவும், நனநதலைப கொஙகைகள - அகனற இடததினை யுடையதாகிய முலைகள, ததும்பிட - குலுஙகவும, நடநதாா - நடநதும, (வநது) அழுஙகி அயாகின்றாா் - அழுது சோர்வடைநதாாகள

குறிப்பு:—சமபோக இன்பத்திலே யாழ்ந்து அவ்வின்பத்திற்கயலான வேறு சிந்தனையை யறியாதவர்களென்பார் 'மனந்தலைவரும்' என்றார். மறந்தார், நடந்தார் என்பன முற்றெச்சங்கள். அரக்கியர் கூந்தல் செந்நிற முடைத்தாதலால் கனம் என்றற்கு மேகமென்று பொருள் கூறுதல் பொருந்தாமை காண்க. மனந்தலை ஒரு சொல், அகன்ற இடம். "பாழ் செய்தனை யவர் நனந்தலை நல்லெயில்", என்றார் புறப்பாட்டினில். அனந்தர் என்பது இப்பொருட்டாதலை "பழஞ்செருக்குற்ற அனந்தர்ப்பாணியும்" என்னும் மணிமேகலைச் செய்யுளுரையானும், "அனந்தர் நடுக்க மல்லதி யாவதும்" என்னும் பொருநராற்றுப்படையின் உரையானு முணர்க. (௬௨)

அங்கையி னரன்கையிலை கொண்டதிற லையன்
றங்கைநிலை யிங்கிதுகொ லென்றுதளர் கின்றார்
கொங்கையிணை செங்கையின் மலைந்துகுலை கோதை
மங்கையர்க ணங்கையெதிர் வந்துவிழு கின்றார்.

இ - ள். குலை கோதை மங்கையர்கள் - அவிழ்ந்த கூந்தலையுடைய (சில) பெண்கள், அரன் கையிலை அங்கையின் கொண்ட திறல் ஐயன் - சிவபிரானது வெள்ளி மலையை (தனது) அகங்கையில் எடுத்த வலிமையையுடைய இராவணனது, தங்கை நிலை இது கொல் என்று தளர்கின்றார் - தங்கையினுடைய நிலைமை இதுவோ? என்று கூறிச் சோர்வடைந்து, செங்கையின் இணை கொங்கை மலைந்து - (தமது) செய்யகைகளால் இரண்டு முலைகளைப்பொருது, நங்கை எதிர் வந்து விழுகின்றார் - சூர்ப்பநகைக்கு எதிரே வந்து வீழ்ந்தார்கள்,

குறிப்பு:—இங்கு அசை தளர்கின்றார் முற்றெச்சம். மாரடித்துக்கொண்டு வந்தார் என்பார் 'கொங்கையிணை செங்கையின் மலைந்து' என்றார். (௬௩)

இலங்கையில் விலங்குமிவை யெய்தலில வென்றும்
வலங்கையி லிலங்குமயில் மன்னனுள னென்ன
நலங்கையி லகன்றதுகொ னம்மினென்ன நைந்தார்
கலங்கலி னிலங்கணிணை வாரிகலுழ் கின்றார்

இ - ள். இலங்கையில் - இலங்கை நகரத்தில், விலங்கும் - மிருகங்களுங்கூட, இவை - இத்துன்பங்கள், எய்தல் இல - அடைதலில்லாமல் இருக்கின்றன, என்றும் - எக்காலத்தும், வலங்கையில் - வலதுகையில், இலங்கும் - விளங்குகின்ற, அயில் - வேலினையுடைய, மன்னன் - இராவணேசுவரன், உளன் - (அரசு புரிந்துகொண்டு) இருக்கின்றான், (இராவணனது பேரரசு விளங்கும் இக்காலத்திலும்), நலம் - இன்பமானது, நம்மின் - நமக்குள்ளே, கையில் அகன்றது - கைவிட்டு நீங்கியது, என்னென - யாது காரணம்? என்று, நைந்தார் - மெலிந்து, கலங்கலின் - மனங்கலங்குதலினாலே, இணை கண் வாரி - இணையாகிய கண்களினது நீர், நிலம் கலுழ்கின்றார் - நிலத்தில் வீழும்படி அழுதார்கள்,

குறிப்பு:—என்றும் வலங்கையில் இலங்கும் அயில் மன்னன் என்றற்கு, சூரியனும் (மதிலினது) வலதுபுறத்திலே பிரகாசிக்கின்ற மதிலையுடைய இராவணன் என்றும் பொருள் கோடலாம். இப்பொருள் கொள்ளுங்கால் இலங்கை நகரத்தின்

சூரியன் பிரகாசியாமல் ஒரு பக்கமாய் ஒதுங்கிச் செல்லுகின்றானென்று கூறுக. விலங்கும், உம்மை - இழிவு சிறப்பும்மை எச்சமுமாம். என்றும், உம்மை - உயர்வு சிறப்பு. திரிலோகைசுவரிய நலமனைத்தும் கைக்கொண்டு அனுபவிப்போராத லின் 'கையிலக்கனறது' என்றார்கள். கொல் - அசைநிலை நைந்தார் - முற்றெச்சம். (௫௪)

என்றினைய வன்றுய ரிலங்கைநக ரெய்த
நின்றவ ரிருந்தவரொ டோடுநெறி தேடக்
குன்றினடி வந்துபடி கொண்டலென மன்னன்
பொன்றிணி கருங்கழல் விழுந்தனள் புரண்டாள்

இ - ள் என்ற இனைய வல் துயர் இலங்கைநகர் எய்த - என்று கூறிய இத்தன்மையான வலியதுயரத்தை இலங்கைநகரத்திலுள்ளவர்கள் அடையவும், நின்றவர் இருந்தவர் ஓடி ஓடு நெறிதேட - (இராவணனது சபையிலுள்ள) நின்றவர்களும் இருந்தவர்களும் ஓடத்தொடங்கொள்ளும் வழியை ஆராயவும், குன்றின் அடி வந்துபடி கொண்டல் என - மலைக்குன்றின்கீழ் வந்து தங்குகின்ற மேகம்போல, (அச்சூர்ப்பநகை), மன்னன் - இராவணனது, பொன்திணி - அழகுதிணிந்த [அழகுபொருந்திய], கருங்கழல் - கரியநிறமுள்ள பாதத்தின்கீழ், விழுந்தனள் புரண்டாள் - விழுந்து புரண்டாள்.

குறிப்பு — என்றினைய, அகரந் தொக்கது. இலங்கைநகர் - இடவாகுபெயர். குன்று - இராவணனுக்கும், கொண்டல் சூர்ப்பநகைக்கும் உவமை. பொன்றிணி கருங்கழல் என்றது, பொன்னும் வலிமையும் பெருமையும் பொருந்திய வீரகண்டையென்று பொருள்கோடலுமாம். (௫௫)

மூடின திருட்படலை மூவுலகு முற்றச்
சேடனும் வெருக்கொடு சிரக்குலை நெளித்தா
னாடின குலக்கிரி யருக்கனு மயிர்த்தா
னோடின திசைக்கரிக ளும்பரு மொளித்தார்

இ - ள் மூவுலகும் முற்ற - திரிலோகங்களும் நிறையும்படி, இருள் படலை - இருளினது பரந்தவடிவானது, மூடினது - மூடிக்கொண்டது, சேடனும் வெருக்கொடு சிரம் குலை நெளித்தான் - ஆதிசேடனும் அச்சங்கொண்டு (தனது) தலைக்கூட்டத்தை நெளிக்கலுற்றான், குலம் கிரி ஆடின - சப்தகுலாசலங்கள் அசைவுற்றன, அருக்கனும் அயிர்த்தான் - சூரியனும் ஐயங்கொண்டான், திசை கரிகள் ஓடின - திக்கயங்கள் ஓடத்தொடங்கின, உம்பரும் ஒளித்தார் - தேவர்களும் மறைந்துகொண்டார்கள்.

குறிப்பு — இராவணனது கோபத்துக்கு அஞ்சிச் சந்திரன் நட்சத்திரம் அக்கினி என்பன மறைந்தமையால் இருட்படலை மூடினதென்றும், இராவணன் கோபித்து நிலத்திற் காலூன்றி யெழுந்த அதிர்ச்சியினால் சேடன் சிரக்குலை நெளிக்கவும் குலக்கிரி யாடவும் திசைக்கரிகள் ஓடவும் உம்பர் ஒளிக்கவும் நேரிட்டதென்றும் கூறுக. சூரியன் அஸ்தமித்து வேறுவகையடைந்தானாதலின் இவ்வதிர்ச்சியின் காரண மறியானாய்ச் சந்தேகிக்க நேரிட்டதென் றுணர்க. (௫௬)

விரிந்தவலை யங்கண்மிடை தோள்படர மீதிட
டெரிந்தநய னங்களெயி றின்புற மெரிப்ப
நெரிந்தபுரு வங்களிடை நெற்றியினை முற்றத்
திரிந்தபுவ னங்கள்வினை தேவரு மயிர்த்தார்.

இ - ள். விரிந்த வலயங்கள் மிடை - விசாலமான வாகுவலயங்கள் நெருங்கிய, தோள்படர - (இராவணனது) புயங்கள் பூரிக்க, மீது இட்டு எரிந்த நயனங்கள் - (அப்புயங்களின்) மேல் நோக்கித் (தீப்போலும்) எரிதலுற்ற (அவனிருபது) கண்களும், எயிறின் புறம் எரிப்ப - வக்கிர தந்தங்களின் பக்கத்தே சுவாலைவீச, நெரிந்த புருவங்கள் இடை நெற்றியினை முற்ற - நெரிதலுற்ற புருவங்கள் இடை நெற்றிவரைசெல்ல, (அதனால்) புவனங்கள் திரிந்த - எல்லாவுலகங்களும் சுழலலுற்றன, வினை தேவரும் அயிர்த்தார் - பணித்தொழிலையுடைய தேவர்களும் சந்தேகித்தார்கள்.

குறிப்பு —இராவணன் தனது ஆண்மையைக்கருதியது விளங்க 'தோள்படர மீதிட்டெரிந்த நயனங்கள்' என்றார். எயிற்றின், வினைத்தேவர் என்பன -எயிறின், வினைதேவரெனச் சந்தவின்பநோக்கி நின்றன. (சஎ)

தென்றிசை நமன்றனொடு தேவர்குல மெல்லா
மின்றிறுதி வந்தது நமக்கென விருந்த
நின்றுயிர் நடுங்கியுடல் விம்மிநிலை நில்லா
ரொன்றுமுரை யாடலில ரும்பரொ டிம்பர்.

இ - ள். தென்திசை நமன் தன் ஒடு - தெற்குத்திசையிலிருக்கிற யமனுடன், தேவர் குலம் எல்லாம் - தேவர்களுடைய வகுப்புகள் முழுதும், இன்று நமக்கு இறுதிவந்தது என - இன்று நமக்கு முடிவுகாலம் வந்து விட்டது என்று, இருந்த நின்ற உயிர் உடல் நடுங்கி - இருந்த நின்ற உயிரும் உடலும் நடுக்கமுற்று, விம்மி - ஏங்கி, நிலை நில்லார் - (ஓரிடத்தும்) நிலைத்து நிற்கமாட்டாதவர்களாயினார்கள், உம்பரொடு இம்பர் - (இராவணனது சபையிலிருந்த) தேவர்களும் இவ்வுலகத்தவர்களும், ஒன்றும் உரையாடல் இலர் - யாதொருவிஷயமும் பேசுதல் இல்லாதவராயினார்கள்.

குறிப்பு —குலம் எல்லாம் என்றது நால்வகைத்தேவர் மூவறு கணங்கள் முதலிய தேவர் வகுப்புகளை. நிரலே இருந்த உயிர் நின்ற உடல் என்று கூட்டிப்பொருள்காண்க. இருந்த நின்ற என இறந்த காலத்துக் கூறியது நிலை நில்லாமை நோக்கி. நின்றுயிர்- அகரந்தொகுத்தல் (சஅ)

மடித்தபில வாய்கடொறும் வந்துபுகை முந்தத்
துடித்ததொடர் மீசைகள் சுறுக்கொள வுயிர்ப்பக்
கடித்தகதிர் வாளெயிறு மின்கஞல மேகத்
திடித்தவுரு மொத்துரறி யார்செய வென்றான்.

இ - ள். மடித்தபிலம் வாய்கள்தொறும் - (இராவணனது) மடிப்புற்ற குகை போன்ற வாய்கள் எல்லாவற்றிலும், புகைவந்து முந்த - (கோபாக்கினியின்) புகை

வந்து முறபட, துடித்த தொட்டா மீசைகள சுறுக்கொள உயிர்ப்ப - துடிப்புற்ற தொடர்ச்சியுள்ள மீசை ரோமங்கள் கூர்மை கொள்ளும்படி சுவாசம் கிளம்ப, கடித்த கதிர்வாள எயிறு மின்களுல - (உதட்டினைக்) கடித்த பிரகாசம் பொருந்திய வாள போன்ற பற்களில மின்னல எழும்ப, மேகத்து இடித்த உரும் ஒத்து உரறி - மேகத்திலே இடித்த இடியைப்போலப் பேரொலி செய்து, யாவர் செயல என்றுன - (இது) எவருடைய செய்கை யென்று வினவினன்.

குறிப்பு —சுறு - சுறுக்கு என்பதன விகாரம். (௪௯)

கானிடை யடைந்துபுவி காவலபுரி கின்றார்
மீனுடை நெடுங்கொடியி னோனையா மேலகீ
ழூனுடை யுடம்புடைமை யோருவமை யொவ்வார்
மானுடா தடிந்தனாகள வாளுருவி யென்றுள.

இ-ள் புவி காவல புரிகின்றார் - புவியைக் காப்பவர்களும், மீன உடை நெடுங்கொடியினோன அனையார் - மீனுருவமெய்திய நீண்ட துவசத்தை யுடையா னாகிய மன்மதனை யொத்தவர்களும், மேல கீழ - மேலுலகத்திலும் கீழுலகத்திலு மிருக்கிற, ஊன உடை உடம்பு உடைமையோர் - மாமிசத்தையுடைய தேகத்தை யுடையவர்களில, உவமை - (குறிக்கப்படும்) உவமைக்கு, ஒவ்வார் - பொருந்தாத [தம க்குத்தாமே உவமையாயுள்ளா], மானுடா - மனிதாகள், கான இடை அடைந்து - காட்டில வந்து, வாள உருவி தடிந்தனாகள என்றுள - வாளையுருவி அறுத்தார் கள என்று கூறினுள்

குறிப்பு —மேல கீழ என்பன சுவாக்கலோகத்துக்கும் பாதாள லோகத்துக்கும் ஆகுபெயர் அன்றியும் இவ்வுலகத்துக்கும் உபலக்கணம் (௫௦)

செப்பதனாகண மானுட ரெனத்திசை யனைத்து
மெய்தநகை வந்தெரி சிந்தின க ணெல்லா
நொய்தவா வலிததொழி னுவனறமொழி யொன்றோ
பொய்தவிர பயத்தையொழி புக்கபுக லென்றுன

இ-ள். மானுடா செய்தனாகள என - (இச்செய்கை) மனிதாகள செய்தார் கள என்று (சூர்ப்பநகை) சொல்ல, திசை அனைத்தும் எய்த - எல்லாத் திக்குக்களி லும் அடையும்படி, நகை வந்தது - (இராவணனுக்குச்) சிரிப்புண்டாயிற்று, கண் எல்லாம் எரிசிந்தின - (அவனுடைய) கண்கள் எல்லாம் நெருப்பைக்கொட்டின, (அவ்விராவணன் சூர்ப்பநகையை நோக்கி), நொய்தவா - அற்பவலியை யுடையவா களது, வலி தொழில - வல்லமைச் செயல்களை, நுவன்ற மொழி ஒன்றோ - சொன்ன வார்த்தை ஒன்றோ? [நீ பலவார்த்தைகளைச் சொன்னுய], பொய்தவிர் - பொய் சொல்லுதலை ஒழி; பயத்தை ஒழி - அச்சத்தை நீக்கிவிடு, புக்கபுகல - நடந்த சங்கதி களைச் சொல, என்றுன்— (௫௧)

மன்மதனை யொப்பரமணி மேனிவட மேருத
தனனெழி லழிப்பாதிர டோளினவலி தன்னு
லென்னதனை யிப்பொழு திசைப்பதுல கேழின
னமத னழிப்பரொ ரிமைப்பினனி விலலான.

இ - ள் மணிமேனி - அழகிய திருமேனியால், மன்மதனை ஒப்பார் - மன்மதனை ஒப்பார்கள், திரள் தோளின் வலி தன்னால் - திரண்ட புஜங்களின் பலத்தால், வட மேரு தன் எழில் அழிப்பார் - மேருமலையினது அழகை நாசப்படுத்தி விடுவார்கள், இப்பொழுது அதனை இசைப்பது என் - இப்பொழுது அதைச்சொல்வதினால் என்ன பயன்? நனி வில்லால் - பெருமை பொருந்திய (தங்கள்) வில்லினாலே, ஓர் இமைப்பின் - ஒரு இமைப்பொழுதில், உலகு ஏழின் - ஏழுலகங்களின், நல் மதன் - நல்ல வலியை, அழிப்பார் - கெடுத்து விடுவார்கள்.

குறிப்பு — மதன் - வலிமை, அழகு, மாட்சிமை முதலியன குறிக்கும் பல பொருள் ஒரு சொல், "வலியு மழகு மலர்க்கணை வேளும், மாட்சிமைப் பெயரு மதனென லாகும்" என்பது பிங்கலந்தை. நனி - பெருமை, " நனியு மீளிய நன்றும் பாடும், நனியும் பணையும் விறலுஞ் சேரும், பீடுங் கதழ்வும் பெருமைப் பெயரே" என்பதனாலுணர்க. (௫௨)

வந்தனை முனித்தலைவர் பாலுடையர் வானத்
திந்துவின் முகத்தரெறி நீரிலெழு நாளக்
கந்தமலரைப் பொருவு கண்ணர் கழல் கையர்
அந்தமி றவத்தொழில ராரவரை யொப்பார்.

இ - ள் முனி தலைவர்பால் வந்தனை உடையார் - முனிசிரேஷ்டர்களிடத்து வணக்கமுடையவர்கள், வானத்து இந்துவின் முகத்தர் - ஆகாயத்திலுள்ள சந்திரனைப்போன்ற முகத்தையுடையவர்கள், எறி நீரில் - (அலைகளை) வீசுகின்ற ஜலத்தில், எழு - தோற்றுகின்ற, நாளம் - பூந்தண்டினையுடைய, கந்தம் மலரை - வாசனையுள்ள தாமரைமலரை, பொருவு - ஒப்பாகின்ற, கண்ணர் - கண்களையுடையவர்கள், கழல் கையர் - (அம்மலரை ஒப்பாகின்ற) பாதங்களையுங் கைகளையுமுடையவர்கள், அவரை - அம்மானிடர்களுக்கு, அந்தம் இல் தவம் தொழிலர் - முடிவில்லாத தவத்தொழிலையுடையவர்களில், ஆர் ஒப்பார் - எவர் உவமையாவார். (௫௩)

மறக்கலையர் வார்கழலர் மார்பினணி நூலர்
விறக்கலையர் வேதமுறை நாவர்நனி மெய்யர்
உறக்கலைய ருன்னையொர் துகட்டனையு முன்னார்
சொற்கலை யெனத்தொலைவி றூணிகள் சுமந்தார்.

இ - ள் மறக்கலையர் - மரவுரியை யுடையவர்கள், வார்கழலர் - நெடியவீரக் கழலையுடையவர்கள், மார்பின் அணிநூலர் - மார்பினிடத்தே அழகிய பூணூலையுடையவர்கள், வில் கலையர் - தநுர்வேத முணர்ந்தவர்கள், வேதம் உறை நாவர் - வேதங்கள் வசிக்கின்ற நாவினையுடையவர்கள், நனி மெய்யர் - மிகவும் சத்தியத்தையுடையவர்கள், உறகு அலையர் - உன்னால் துன்பமடையமாட்டார்கள், உன்னை ஓர் துகள் தனையும் உன்னார் - உன்னை ஒருதூள் அளவும் (மதிப்பாக) எண்ணமாட்டார்கள், சொல் கலை என - சொற்களாலாகும் சாஸ்திரங்களைப்போல, தொலைவு இல் - அழிவில்லாத, தூணிகள் சுமந்தார் - அம்புப் புட்டில்களைச் சுமந்திருக்கிறார்கள்.

குறிப்பு — அணிநூலர் - வினைத்தொகையுமாம், கலை - கலாசப்தபவம். வேதமுறை நாவர் - வேதங்களை யோதுகின்றவர். (௫௪)

ஆறுபுல னஞ்சின மரக்கரை யெனச்சென்
றேறுநெறி யந்தண ரியம்பவுல கெல்லாம்
வேறுமெனு நுங்கள்குலம் வேரொடு மடங்கக்
கோறுமென முந்தையொரு சூளுறவு கொண்டார்

இ - ள். ஏறு நெறி அந்தணர் - உயர்ந்த ஒழுக்கங்களையுடைய வேதியர்கள், சென்று - (அம்மானிடர்களைப்பார்த்து) போய், அரக்கரை - இராக்கதரால், ஆறுபுலன் - ஆறு அறிவும், அஞ்சினம் என - அஞ்சியிருக்கின்றோமென்று, இயம்ப - சொல்ல, (அவர்கள்), உலகு எல்லாம் வேறும் எனும் - உலகங்கள் எல்லாவற்றையும் வெல்லுவோம் என்று கூறுகின்ற, நுங்கள் குலம் - (இராக்கதர்களாகிய) உங்கள் குலத்தை, வேரொடும் அடங்க - முழுதும் அடங்கும்படி, கோறும் என - கொல்லுவேம் என்று, முந்தை - முற்காலத்தில், ஒரு சூள் உறவு கொண்டார் - ஒரு சபதஞ் செய்திருக்கிறார்கள்.

குறிப்பு —மக்களெனப்படுவோர் ஐம்பொறி யுணர்வேயன்றி மனம் எனப்படுதோர் அறிவும் உடையவர் ஆகலின் ஐம்புலனென்லை யொழித்து 'ஆறுபுலன்' என்றார் "மக்க டாமே யாறறி வுயிரே, பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே" என்றார் தொல்காப்பியனார் ஆறுபுலன் எனபுழி இனைத்தென வறியும் உம்மை விகாரத்தால் தொக்கது. இனி, ஆறுபுலன் - ஆறியபுலனுமாம் (௫௫)

மாரருள ரேயிருவ ரோருலகின் வாழ்வார்
வீரருள ரேயவரின் வில்லதனில் வல்லா
ராரொருவ ரன்னவரை யொப்பவர்க ளையா
வோரொருவ ரேயிறைவர் மூவரையு மொப்பார்.

இ - ள் ஐயா - ஐயனே! ஓர் உலகின் வாழ்வார் - ஒரு உலகத்தில் வாழ்பவர்களாகிய, இருவர் மாரர் உளரே - இரண்டு மன்மதர்கள் இருக்கின்றார்கள், அவரின் - அம்மனிதர்களைப் பார்க்கிலும், வில் அதனில் வல்லார் - வில்லில் வல்லவர்களாகிய, வீரர் உளரே - வீரர்களிருக்கின்றார்களோ? [இல்லை], அன்னவரை ஒப்பவர்கள் - அத்தன்மையானவரை ஒப்பாகும் பேர்களில், ஒருவர் ஆர் - ஒருவர் எவர்? ஓர் ஒருவரே - (அவர்களில்) ஒவ்வொருவருமே, இறைவர் மூவரையும் ஒப்பார் - திரிமூர்த்திகளையும் நிகர்ப்பார்கள்

குறிப்பு —மாரருளரே, ஏகாரம் - தேற்றம் வீரருளரே, ஏகாரம் - எதிர்மறை ஒருவரே, ஏகாரம் - பிரிநிலை இறைவர் - எப்பொருட்குந் தலைவராகிய கடவுளர். அவரின், இன் - எல்லைப்பொருட்டு. (௫௬)

தாரவலய நேமியுழ வன்றய ரதப்பேர்ப்
பாரவரு ளத்தொருவன் மைந்தர்பழி யில்லார்

விராவரு வனததவன விளமபவுரை கினறு
ரிராமனு மிலககுவனு மெனபாபெய ரெனறுள

இ-ள். தராவலயம - பூமி வட்டததை நேமி உழவன - ஆஞஞாசககரஞ செலுததி யாளுபவனுகிய, தயரதப்போ - தசரதன என்னும பெயரையுடைய, பராவரு நலதது ஒருவன - புகழதற கருமையான நனமையையுடைய ஒருவனுககு, மைநதா - குமாராகள, பழி இலலாா - குறறமறறவாகள, அவன விளமப - அதத யரதன (நீவிாகானடைநது வாழுதிா எனறு) சொனனதால, விராவரு வனதது உறைகினறா - கலததறகருமையான [வசிததற கியலாத பயஙகரததை விளை விபபதான] வனததில வசிககினறாகள, பெயா - (அவாகளுடைய) நாமததை, இராமனும இலககுவனும எனபா - இராம லடசுமணாகள எனறு கூறுவாாகள, எனறுள—, (௫௭)

மருநதனைய தஙகைமணி நாசிவடி வாளா
லரிநதவரு மானுட ரரிநதுமுயிா வாழவாா
விருநதனைய வாளொடும விழிததிறையும வெளகா
திருநதன னிராவணனு மினனுயிாகொ டினனும

இ-ள். மருநது அனைய தஙகை - அமிாததைபொதத (அருமையான) தங கையாகிய சூாபபநகையினது, மணிநாசி - அழகிய மூககை, வடிவாளால அரிநதவ ருமு - கூாமைபொருநதிய வாளினுல அறுததவாகளும, மானுடா - மனிதாகளா யிருககினறாகள, அரிநதும - அவவாறு மூககினையறுததும, உயிாவாழவாா - பிழை ததிருபபவாாஞாகள, இராவணனும - இராவணனுகிய நானும, விருநது அனைய வாளொடும - புதுமையைபொதத வாளாயுததததுடனே, விழிததது - பாாததுககொ ணடு, இறையும வெளகாது - சிறிதும வெடகமுறுமல, இனனும இன உயிாகொடு- இனனும இனிய உயிரை வைததுககொணடு, இருநதனன - இருககினறேன

குறிபபு —தஙகைமேல தனககுளள அனபுதோனற 'மருநதை' உவமைகூறி ஞன. அரிநதவரும, உமமை - இழிவுசிறபபு இருநதனன எனபது - தெளிவின வநத காலவழுவமைதி இருநதனன, அன என்னும தனமை யொருமை விகுதி, புதியன புகுதல இராவணன - இடவழுவமைதி. இராவணனும, உமமை - உய ாவு சிறபபு (௫௮)

கொறறமது முறறிவலி யாலரசு கொணடே
னுறறபயன மறறிதுவொல காவுரை யிறநதேன
முறறவுல கததுமுதல வீராமுடி யெலலா
மறறபொழு ததிது பொருநதுமென லாமே

இ-ள். வலியால - (எனனுடைய) பராககிரமததால், கொறறம அது முறறி- வெறறி யதிகரிததது, அரசுகொணடேன - ஆளுகையைபபெறறவனுகிய நான, உற றபயன இது - அடைநத பிரயோசனம இவவபகீாததியே, ஒலகா உரை இறநதேன- நீஙகாத புகழை இழநதேன, முறற - முழுவதும, உலகதது முதலவீரா - இவவுலக ததிலுளள முதனமைபொருநதிய வீராகளுடைய, முடி எலலாம - சிரஙகள எல லாம, அறறபொழுதததது - அறுபட்ட காலததில, இது - இசசெயகை, பொருந தும எனலாம - பொருததமுடையதாகும எனறு கூறலாம.

குறிப்பு — மற்று - அசை. உரை - புகழ், "வரைமார்பின் வேன்மூழ்க வாளழுவந் தாங்கி, யுரைமாலை சூடினு ணூர்" என்றார் ஐயனாரிதனாரும். இது பொருந்துமெனலாமே யென்பதற்கு - உலகத்திலுள்ள தலைமை வீரர்களது முடிகளை யெல்லா மொருங்கே, சூர்ப்பணகைபொருட்டு அறுப்பினும், இவள் மூக்குப் பழைய தன்மை யெய்தாதே யென்று இராவணன் துக்கித்தானென்று பொருள் கோடலும் பொருந்தும். முறையிறந்தேன் என்னும் பாடத்திற்கு ஒழுங்கையிழந்து என்று பொருள்கூறி இறந்தேன் என்பதை முற்றெச்சமாக்குக. பொழுத்தது, அத்து - சாரியை. (௫௯)

மூளுமுள் தாய்ப்பழி யென்வயின் முடித்தோ
ராளுமுள் வாமவர் தாருயிரு முண்டாம்
வாளுமுள் தோதவிட முண்டவன் வழங்கு
நாளுமுள் தோளுமுள் நானுமுளெ னன்றே.

இ-ள் உளது ஆய - (என்றும்) இருப்பதாகிய, மூளும்பழி - வளர்கின்ற இகழ்ச்சிச்சொல்லை, என் வயின் முடித்தோர் ஆளும் உள ஆம் - என் மாட்டுச்செய்த மனிதர்களு மிருக்கின்றார்களாம், அவரது ஆர் உயிரும் உண்டு ஆம் - அவர்களுடைய அரிய உயிரும் இருக்கின்றதாம், வாளும் உளது - (என்கரத்தில்) வாளாயுதமும் இருக்கின்றது, ஓத - (புகழ்ந்து) சொல்லும்படியாக, விடம் உண்டவன் வழங்கு நாளும் உள - விஷத்தையுண்டருளிய சிவபிரான் கொடுத்த (நெடிய ஆயுள்) நாட்களும் இருக்கின்றன, தோளும் உள - (எனக்கு இருபது) புயங்களும் இருக்கின்றன, நானும் உளன் - யானும் இருக்கின்றேன். (௬௦)

புத்துற வுறப்பழி புகுந்ததென நாணித்
தத்துறுவ தென்னைமன னேதளர லம்மா
வெத்துய ருனக்குள தினிப்பழி சுமக்கப்
பத்துள தலைப்பகுதி தோள்கள்பல வன்றே

இ-ள் மனனே - (என்) மனமே! புது உறவு - புதுமை யுறுதலாக, உற பழி - பழியானது மிகுதியாக, புகுந்தது என - (குற்றமற்ற நமது கொற்றத்துடன்) பிரவேசித்ததென்று, நாணி - வெட்கப்பட்டு, தத்து உறுவது என்னை - பாய்வது [பலவிதமாயாலோசிப்பது] எதன்பொருட்டு? இனி பழி சுமக்க - இனி பழி (யாகிய இப்பெருஞ்சுமையைச்) சுமத்தற்கு, தலை பகுதி - தலையின் பகுப்புகள், பத்து - பத்தும், தோள்கள் பல - புயங்க ளநேகமும், உள - இருக்கின்றன, (ஆதலால்), உனக்கு எ துயர் உளது - உனக்கு எக்கிலேச மிருக்கின்றது, தளரல் - தளர்ச்சியடையாதே. (௬௧)

என்றுரைசெ யாநகைசெ யாவெரி விழிப்பான்
வன்றுணையி லாவிருவர் மானுடரை வாளாற்
கொன்றிலர்க ளாநெடிய குன்றுடைய கானி
னின்றகர னேமுதலி னோரிருத ரென்றான்.

இ-ள் என்று உரை செயா - என்று கூறி, நகை செயா - நகைத்து, எரி விழிப்பான் - நெருப்பைப்போற் பார்ப்பவனாகிய இராவணன், வல் துணை இலா - வலிய சகாயம் இல்லாத, இருவர் மானுடரை - இரண்டு மனிதர்களை, நெடிய குன்று உடைய கானில் - பெரிய மலைகளை யுடைத்தாகிய கானகத்திலே, நின்ற -

இருந்த, கரனே முதலினோர் இருந்தார் - கரனை முதலாயினோராகிய இராக்கதர்கள், வாளால - (தங்கள்) வாள்களினாலே, கொன்று இலர்களா - கொல்லாமல் விட்டு விட்டார்களா? என்றான் - என்று வினவினான், (௬௨)

வேறு

அற்றவ னுரைத்த லோடு மழுதிழி யருவிக் கண்ணள்
ளெற்றிய வயிற்றள் பாரி னிடைவிழுந் தேங்கு கின்றா
ளுற்றுழந் தொலைந்த தைய நொய்தெனச் சுமந்த கைய
ளுற்றது தெரியும் வண்ண மொருவகை யுரைக்க லுற்றாள்

இ - ள் அவன் - அவ்விராவணன், அற்று - அத்தன்மைய மொழியை, உரைத்தலோடும் - கூறியவளவில், அழுது இழி அருவி கண்ணள் - அழுது சிந்திய அருவி போலும் நீரினை யுடையதாகிய கண்ணினை யுடையவளும், எற்றிய வயிற்றள் - (தன் கை கொண்டு) அடித்த வயிற்றினை யுடையவளுமாகி, பாரின் இடை விழுந்து ஏங்குகின்றாள் - நிலத்தின்கண் வீழ்ந்து அழுகின்ற சூர்ப்பணகை, சுமந்த கையள் - (தலையிற்) சுமந்த கையையுடையவளாய், நொய்து - விரைவில், ஐய - வியக்கும்படியாக, உற்றுழும் - உறவினர்களும், தொலைந்தது என - நாசமாய்விட்டார்கள் என்று, உற்றது - நடந்த சங்கதியை, தெரியும் வண்ணம் - (இராவணன்) அறிந்து கொள்ளுமாறு, ஒரு வகை உரைக்கல் உற்றாள் - ஒரு விதத்திற் கூறுவாளாயினாள் —

குறிப்பு — அற்று - அத்தன்மைத்து, சுட்டடியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர் அ என்னும் பகுதியும், று என்னும் ஒன்றன்பால் விகுதியும் பெற்று, விகுதி றகர வல்லொற்று மிகுந்து முடிந்தது (௬௩)

சொல்லென்றென் வாயிற் கேட்டார் தொடர்ந்தெழு சேனை யோடுங்
கல்லென்ற வொலியிற் சென்றார் கரன்முதற் காளை வீர
ரெல்லொன்று கமலச் செங்க ணிராமனென் றிசைத்த வேந்த
லில்லொன்றிற் கடிகை மூன்றி லேறினார் விண்ணி லென்றாள்.

இ - ள். சொல் என்று -(நினக்குக்கேடிழைத்தார் யாவர்) சொல்லாய் என்று கூறி, என் வாயில் கேட்டார் - என்வாய் மொழியாற் கேட்டறிந்தவர்களும், தொடர்ந்து எழு சேனையோடும் - பின்பற்றியெழுந்த சேனையுடனே, கல்லென்ற ஒலியில் சென்றார் - கல்லென்ற சப்தத்தோடு சென்றவர்களுமாகிய, கரன் முதல் காளை வீரர் - கரன் முதலிய ருஷபம்போன்ற வீரர்கள், எல் ஒன்று - ஒளிபொருந்திய, கமலம் - தாமரைமலர்போலவதாகிய, செங்கண் - செய்யகண்ணினையினையுடைய, இராமன் என்று இசைத்த ஏந்தல் - இராமன் என்று கூறிய பெருமையிற் சிறந்தோனது, வில் ஒன்றில் - ஒரேவில்லினால், கடிகை மூன்றில் - நாழிகை மூன்றுக்குள், விண்ணில் ஏறினார் என்றாள் - விண்ணுலகத்தின்கண் ஏறினார்கள் [இறந்தார்கள்] என்று கூறினாள்

குறிப்பு — கல்லென்ற ஒலிக்குறிப்புணர்த்து மோரிடைச்சொல் கோபமில்லாது விளையாட்டாயப் போர்புரிந்த தன்மையும், தன்னுள்ளாங்காந்த குறிப்புந் தோன்றச் செங்கண் என்றதுக்கமலம் என்ற அடைதந்து கூறினான். ஒலியில் — உருபு மயக்கம், ஓடும், உமமை - இசைநிறை, ஸ்ரீராமபிரான் செய்த போர்முனை

இவர்க்காச் செய்த போர் சிறப்பன்மையென்பது தோன்றக் கேட்டார் சென்றார் என்றவள் போர்புரிந்தார் என்பதைக் கூறுதொழிந்தாளெனக். (௯௪)

தாருடைத் தானை யோடுந் தம்பியர் தமியன் செய்த
போரிடை மடிந்தா ரென்ற வுரைசெவி புகாத முன்னங்
காரிடை யுருமின் மாரி கனலொடு பிறக்கு மாபோ
னீரொடு நெருப்புக் கான்ற நிறைநெடுங் கண்க ளெல்லாம்.

இ-ள். தார் உடைத் தானையோடும் - அணிவகுப்பினை யுடைய சேனையுடனே, தம்பியர் - (தன்து) தம்பிமார்களாகிய கரதூஷணர்கள், தமியன்செய்த போர் இடை - ஒருமனிதன் செய்த யுத்தத்தில், மடிந்தார் என்ற உரை - இறந்துபோனார்களென்று கூறியவார்த்தையானது, செவிபுகாத முன்னம் - (தன்து) காதுகளிற் பிரவேசியாததற்கு முன்பே, காரிடை - மேகத்தின்கண், உருமு மாரி கனல் ஒடு பிறக்கும் ஆ போல - இடியோடுகூடிய மழையானது நெருப்புடனே தோன்றுமாறுபோல, நிறை - (வரிசையாக) நிறைந்த, நெடுங்கண்கள் எல்லாம் - (அவனுடைய) பெரிய விழிகள் அனைத்தும், நீர் ஒடு நெருப்பு கான்ற - ஜலத்தையும் அக்கினியையுங் கொட்டின.

குறிப்பு — உருமின், இன் - தவிர் வழிவந்த சாரியை. கனலொடு, ஒடு - உடனிகழ்ச்சிப்பொருட்டு. ஆறு - ஆவென விகாரம். நீரொடு, ஒடு - எண்ணுப்பொருட்டு. வாய்விட்டுக்கதறிய ஒலிக்கு உருமும், அழுகைக்கு மாரியும், கோபத்திற்குக் கனலும், இராவணனுக்குக் காரும் உவமை. (௯௫)

ஆயிடை யெழுந்த சீற்றத் தழுந்திய துன்ப மாழித்
தீயிடை யுருக்கு நெய்யிற் சீற்றத்திற் கூற்றஞ் செய்ய
நீயிடை யிழைத்த குற்ற மென்னைகொ னின்னை யின்னே
வாயிடை யிதழு மூக்கும் வலிந்தவர் கொய்ய வென்றான்.

இ-ள். ஆயிடை - அவ்விடத்தில், எழுந்த சீற்றத்து - கிளம்பிய கோபத்தால், அழுந்திய துன்பம் - (மனத்தில்) பதிந்த துயரமானது, ஆழி தீயிடை உருக்கும் நெய்யில் - கடலிற்றோன்றும் வடவாமுகாக்கினியிற் கொட்டிய நெய்யைப்போல, சீற்றத்திற்கு ஊற்றம் செய்ய - (முன்னுற்ற) கோபத்துக்கு வலிமையைக் கொடுத்து நிற்க (கோபம் வளர), அவர் - இராமலக்ஷ்மணர்கள், நின்னை - உன்னுடைய, வாயிடை இதழும் - வாயிடத்திலுள்ள உதட்டையும், மூக்கும் - மூக்கையும், வலிந்து - வலிமைசெய்து, கொய்ய - இப்பொழுதே கொய்தற்கு, நீ இடை இழைத்த குற்றம் என்னை - நீ (அவர்கள்) இடத்துச்செய்த பிழையாது, என்றான் - என்று வினாவினான்.

குறிப்பு — நின்னை - வேற்றுமை மயக்கம். கொல் - அசை. (௯௬)

என்னவி னுற்ற குற்ற மியாவர்க்கு மெழுதொ ணாத
தன்மைய னிராம னோடுந் தாமரை தவிரப் போந்தாண் [டாள்
மின்னவின் மருங்குல் கொண்டாள் வேயவின் மென்றோள் கொண்
பொன்னவின் மேனி கொண்டாள் பொருட்டினாற் புகுந்த தென்றாள்.

இ - ள் என் வயின் உற்ற குற்றம் - என்னிடத்துச் சம்பவித்த குற்றமானது, யாவராகும் எழுத ஒண்ணுத - எவராலும் எழுத முடியாத, தன்மையன் - அழகின் தன்மையை யுடையானுகிய, இராமனேடும் - இராமனுடனே, தாமரை தவிரப் போந்தாள் - தாமரை மலராசனம் நீங்கும்படியாக வந்தவளும், மின் வயின் மருங்குல் கொண்டாள் - மின்னலினிடத்தே யிடையைப் பெற்றுக்கொண்டவளும், வேயவயின் மென் தோள் கொண்டாள் - மூங்கிலினிடத்தே மெல்லிய தோளைப் பெற்றுக் கொண்டவளுமாகிய, பொன் வயின் மேனி கொண்டாள் பொருட்டினுல் பொன்னினிடத்தே திருமேனியைக் கொண்டவள் நிமித்தத்தாலே, புகுந்தது என்றுன் - சம்பவித்தது என்று கூறினுன்

குறிப்பு —யாவராகும் - உருப்பு மயக்கம் எழுதொணுத அகரந்தொகுத்தல். எழுதல் - சித்திரந்தீட்டுதல் இராமனேடும், ஒடு - உடன் நிகழ்ச்சிப்பொருட்டு தாமரை தவிரப் போந்தாளென்றது - இவள் ஸ்ரீ மகா லட்சுமியேயாமென்பது விளங்குகிறது. மின்னலினது செயலும், வேயினது மெய்யும், பொன்னினது உருவும் உவமையாமே யன்றி மருங்குல் தோள் மேனி என்பவற்றின் தன்மை யனைத்துக்கும் அவை யுவமையாகா வென்பது தோன்ற 'மின் வயின் மருங்குல் கொண்டான் வேயவயின் மென்றேள் கொண்டாள் பொன்வயின் மேனி கொண்டாள்' என்றுன் (௬௭)

ஆரவ ளென்ன லோடு மரக்கியு மைய வாழ்ந்து
தேரவ டிரண்ட கொங்கை செம்பொன்செய் குலிகச் செப்பு
பாரவள் பாதந் தீண்டப் பாக்கியம் படைத்த தம்மா
பேரவள் சீதை யென்று வடிவெலாம் பேச லுற்றுள்.

இ - ள் அவள் - அப்பெண், ஆர் என்னலோடும் - யார்? என்று (இராவணன்) வினவிய வளவில், அரக்கியும் - சூர்ப்பநகையும், ஐய—! ஆழ்ந்து தேர் - செம்மையாக ஆலோசித்துப்பார்த்துத் தெளிந்துகொள், அவள் திரண்ட கொங்கை - அவளுடைய திரண்ட முலைகள், செம்பொன் செய் குலிகம் செப்பு - செம்பொன்னினுற்செய்த சாதிலிங்கச் சிமிழ்போன்றுள்ளன, அவள் பாதம் தீண்ட - அவளுடைய பாதங்களைத் தொடுதற்கு, பார் - பூமியானது, அம்மா—! பாக்கியம் படைத்தது - அதிர்ஷ்டமடைந்தது, அவள் பேர் சீதை என்று- அவளுடைய நாமம் சீதையென்று கூறி, வடிவு எலாம் பேசல் உற்றுள் - (அச்சீதாபிராட்டியினது) அழகனைத்தும் (எடுத்துச்) சொல்லத் தொடங்கினுள்

குறிப்பு —சீதையின் அழகு முழுவதுங் சொல்ல முடியாது என்பாள் ஆழ்ந்து தேர்,' என்றுள் தெய்வப்பெண்களின் பாதந்தீண்டுதல் பூமிக்கு இன்மையாகவும் இத்தெய்வப் பெண்களினும் மேம்பட்டவளாகிய சீதாபிராட்டியின் பாதந் தீண்டப் பெற்ற பூமியின் தவப்பலன் பெரிது என்பான் பாரவள் பாதந்தீண்டப் பாக்கியம் படைத்ததென்றுன் (௬௮)

காமரு முரலும் பாடல் களிளெனக் கனிந்த வின்சொற்
றேமலர் நிரந்த கூந்தற் றேவர்க்கு மணங்கா மென்னத்
தாமரை யிருந்த தையல் சேடியாந் தரமு மல்லள்
யாமுரை வழங்கு மென்பத் தேழைமைப் பால தன்றே

இ - ள். காமரம் முரலும் பாடல் கள் என - வண்டுகள் பாடுகின்ற பாடலும் தேனும் போல, கனிந்த இன்சொல் - முதிர்ந்த மாதுரியமான வார்த்தைகளையுடைய, தேம் மலர் நிரந்த கூந்தல் - வாசனை பொருந்திய (பாரிசாத முதலிய) மலர்கள் நிறைந்த கூந்தலையுடைய, தேவர்க்கும் - தேவர்களுக்கும், அணங்கு ஆம் என்ன - (அதிசயிக்கும்படியான மிக்க) அழகு (இது) ஆகும் என்று சொல்லும்படி, தாமரை இருந்த தையல் - தாமரை மலரில் வீற்றிருந்த இலக்குமிதேவி, சேடி ஆம் தரமும் அல்லள் - (அப்பெண்ணுக்கு) அடிமைக்காரி [தோழி] ஆகுந்தகுதியு முடையாளல்லள், (என்றால்) யாம் உரை வழங்கும் என்பது - நாம் (அவளுடைய அழகை எடுத்துக்) கூறுவோம் என்று கூறுவது, ஏழைமை பாலது அன்றே - அறிவின்மையிடத்தது அல்லவா?

குறிப்பு — உத்தமமான இசைகளுக்குள் வண்டினாதமும் ஒன்றாதலின் அவ்வண்டினாதத்தைச் சொற்கு உவமை கூறினன். நிரத்தல் - கலத்தல், நிறைதல். தேவர்க்கும், உம்மை - உயர்வு சிறப்பு. வழங்கும் வழங்குதும் என்பதன் விகாரம். (௬௯)

மஞ்சொக்கு மளக வோதி மழையொக்கும் வடித்த கூந்தல்
பஞ்சொக்கு மடிகள் செய்ய பவளத்தின் விரல்க ளைய
வஞ்சொற்க ளமுதி லள்ளிக் கொண்டவள் வதன மைதீர்
கஞ்சத்தி னளவிற் றேனுங் கடலினும் பெரிய கண்கள்.

இ - ள். அளகம் ஓதி - குழற்சியாகிய கூந்தல் - நீளமாக (அவிழ்த்து) விட்ட கூந்தல், மழை ஒக்கும் - மழைத்தாரைகளையொக்கும், அடிகள் பஞ்சு ஒக்கும் - பாதங்கள் பஞ்சை ஒக்கும், செய்ய பவளத்தின் விரல்கள் - சிவந்த பவளம்போலும் விரல்களுள்ளன, ஐய — ! அம் சொற்கள் - அழகிய வார்த்தைகளை, அமுதில் அள்ளிக்கொண்டவள் - தேவாமிர்தத்திலிருந்து வாரிக்கொண்ட அப்பெண்ணினது, வதனம் - முகமானது, மைதீர் - குற்றமற்ற, கஞ்சத்தின் அளவிற்றேனும் - தாமரை மலரினது அளவினையுடையதாயினும், கண்கள் கடலினும் பெரிய - விழிகள் கடலைப் பார்க்கிலும் பெரியனவாயிருக்கின்றன.

குறிப்பு — மஞ்சென்பது ஈண்டு கரிய மேகம் என்னும் பொருளில் நின்றது. அளகம் - மயிர்க் குழற்சிக்குப் பெயர், குழற்சி - சுருட்டி முடித்தல். பயனுவமப் பொருளாகிய மழையென்பது - ஈண்டு மெய்யுவமமாய் மழைத்தாரை மாத்திரையாய் நின்று அத்தாரையினது நீண்ட மெய்யோடு வடித்த கூந்தல் ஒப்பிடப்பட்டது. பவளத்தின், இன் - உவமவுருபு. தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமற்றடுக்கும் மென்மையும் உயர்ந்தவர்க்கே கிடைக்கும் உரிமையுமுடைய அமுதினின்றுஞ் சொற்களெடுத்துக்கொண்டவளெனவே அச்சொற்களைக் கேட்போர் செவிகள் பிற சொற்களைக் கேட்க விரும்பமாட்டா வென்பதும் அச்சொற்களின் இன்பத்தை அவ்விராமனே யடைதற்குரியானன்றி மற்றையோரடைதற் பாலரல்லரென்பதும் விளங்குதல் காண்க. (௭௦)

ஈசனார் கண்ணின் வெந்தா னென்னுமஃ திழுதைச் சொல்லிவ்
வாசநா றோதி யாளைக் கண்டனன் வல்ல வாறுற

பேசலாந தகைமைத தலலாப பெருமபிணி பிணிபப நீணட
வாசையா லழிநது தேயநதா னநஙகனவ வுருவ மமமா.

இ - ள். அநஙகன - மனமதன, இ வாசம நாறு ஓதியாளை - வாசம வீசுகினற கூநதலையுடைய இவளை, கணடனன - பாரததது, வலல ஆறறால - வலியவழியாலும, பேசல ஆம தகைமைதது அலலா - பேசுதறகாகிய தனமையையுடையது அலலாத, பெருமபிணி பிணிபப - பெரியநோய தொடருமபடி, நீணட - மிகுதலுறற, ஆசையால - (இவள மேறகொணட) ஆசையினாலே, அ உருவம - (அவனடைநதிருநத அழகிய) அநதவுருவம, அழிநது தேயநதான - தேயநது அழிநதுபோனான, (இஙஙனமிருகக) அமமா—! ஈசனார கணணின வெநதான எனனும இது - சிவபிரானுடைய (நெறறிக) கணணால வெநதுபோனான எனறு கூறுகினற இவவாரததை, இழுதை சொல - பொயவாரததையேயாம (௭௧)

தெவவுல கததுங காணடி சிரததினிற பணததி னோரக
ளவவுல கததுங காணடி யலைகட லுலகிற காணடி
வெவவுலை யுறற வேலை வாளினை வெனற கணணா
ளிவவுல கததா ளஙகம யாவரககு மெழுதொ ணாதாள

இ - ள். தெவ உலகததும காணடி - பகையுலகமாகிய தேவலோகததிலும பாரபபாயாக, சிரததினில பணததினோரகள அ உலகததும காணடி - தலையிலே படததையுடைய சாபபசாதியாருடைய அபபாதாள வுலகததும பாரபபாயாக, அலைகடல உலகில காணடி - அலையையுடைய சமுததிரஞ சூழநத இவவுலகததிலும பாரபபாயாக, (எவவுலகததினும இவளை ஒபபாகும பெணணைபபாரககமாடடாய), வெமமை உலை உறற வேலை - வெபபமபொருநதிய கொலலுலையையடைநத வேலாயுதததையும, வாளினை - வாளாயுதததையும, வெனற கணணாள - வெறறிகொணட கணகளையுடைய இபபெண, இ உலகததாள - இநத உலகததிலிருபபவள, அஙகம யாவரககும எழுதொணாதாள - (ஓவியததுறைககைபோயவர) எவராலும தீடடுதறகரிய திருமேனியையுடையவளா யிருககினறாள (௭௨)

தோளையே சொலலு கேனோ சுடரமுகத துலவு கினற
வாளையே சொலலு கேனோ வலலவை வழுததுகேனோ
மீளவுந திகைபப தலலாற றனிததனி விளமப லாறறேன
றாளையே காணடி யனறே நானுனக குரைபப தெனனோ

இ - ள். தோளையே சொல்லுகேனோ - (அவளுடைய) தோளகளையே (எடுததுச) சொல்லுவேனோ? சுடர முகதது உலவுகினற வாளையே சொலலுகேனோ - பிரகாசம பொருநதிய (அவளுடைய) முகததினகண உலாவுகினற வாளபோனற கணகளையே (எடுததுச) சொலலுவேனோ? வலல அவை வழுததுகேனோ - சொககடடான காயகள போனற முலைகளையே (எடுததுச) சொலலுவேனோ? (எது எடுததுச சொலவதறகு இலேசானது), மீளவும திகைப்பது அலலால - (வருணிபபதறகுச சகதி யிலலாமல மயஙகுகினற யான சொலலப புகுமிடததுத) திருமபவும மயஙகுமபடி நோவதலலாமல, தனி தனி விளமபல ஆறறேன - ஒவவொனறாய (வருணிததுச) சொலலுதல செயயேன் [சொலல வறியேன], நாளையே காணடி அனறே -

(நீ) நாளைக்கே (அவளைப் பார்ப்பாயல்லவா? (ஆதலால்), நான்—, உனக்கு—, உரைப்பது என் - சொல்வது யாது?

குறிப்பு —வாள் - கண்களுக்கும், வல் - முலைகளுக்கும் இலக்கணை வல்லவை, அவை - பகுதிப்பொருள் விகுதி இனி, வல்லவை என்பதை அல்லவை யெனக் கொண்டு மற்றைய அவயவங்களை யெனக் கோடலுமாம் (௭௯)

வில்லொக்கு நுதலென் றாலும் வேலொக்கும் விழியென் றாலும்
பல்லொக்கு முத்தென் றாலும் பவளத்தை யிதழென் றாலுஞ்
சொல்லொக்கும் பொருளொவ் வாவாற் சொல்லலா முவமை யுண்டோ
நெல்லொக்கும் புல்லென் றாலு நேருரைத் தாக வற்றே.

இ - ள். நுதல் வில் ஒக்கு மென்றாலும் - புருவமானது வில்லை யொக்குமென் றுகூறினும், விழி வேல் ஒக்கும்- கண்கள் வேலாயுதத்தை யொக்கும், என்றாலும் —, பல் முத்து ஒக்கும் - தந்தங்கள் முத்துக்களை ஒக்கும், என்றாலும்—, பவளத்தை இதழ் என்றாலும் - பவளத்தை அதரத்துக்கு உவமானப்பொருளென்றாலும், சொல் ஒக்கும் - (உவமை கூறும்) சொற்கள் ஒக்குமேயல்லாமல், பொருள் ஒவ்வா - (வில் முதலிய உவமானப்) பொருள்கள் ஒக்கும் தன்மையனவல்ல, (ஆதலால்) சொல்லலாம் உவமை உண்டோ - சொல்லத்தக்கவான உவமானங்கள் உண்டோ, இல்லை நெல்- நெல்லானது, புல் ஒக்கும் என்றாலும்- புல்லை ஒத்திருக்கு மென்னினும், நேர்- உரைத்து ஆக வற்று - ஒத்த வுரையையுடையதாக வலியுறற்றாகும்

குறிப்பு —வளையுந் தொழில்பற்றி வில் நுதலுக்கு உவமையென்பராயினும் அவ்வில் நுதல்போல் எப்போதும் வளைவுபெற்றிராமல் வளைக்கப்படும்போழ்து வளைவுறுதலால் வினைக்கும், வில்லுக்கு நாணமிகையாய் உள்ளதால் மெய்க்கும், நிற வேற்றுமையால் உருவுக்கும், வில்வளைவுறும்போழ்து கண்டார் அஞ்சுதலும் நுதல் வளைவுறும்போழ்து கண்டார் மகிழ்தலுமாகிய வேற்றுமையாற் பயனுக்கும் உவமையாகாமற் போயினமையாற் பொருள் ஒவ்வா வென்றான் இதைப்போல வேல் முத்து, பவளம் என்பவற்றிற்கும் பொருள் விரித்துக்கொள்க. இங்ஙனம் ஒவ்வா வில் முதலியனபோல உவமை கூறுதற்கு வேறுபொருளின்மையாலும், அவைதாம் கூறுதற்கு ஒருவாறு தகுதியுடையவெனக் கருதிப் பெரியோர்கள் அவற்றையே உவமையாகக் கொண்டதனாலும் ‘சொல்லொக்கும்’ என்றான் புல்லென்றது- அரிபட்ட நெல்லந்தாளை. நெல் ஓரறிவுயிரென்றும் புல் அத்தகைத்தது மன்றெனினும் பொருள்பட “நெல்லும் புல்லு நேரா ரண்டே” என்றார் ஆசிரியர் தோல்காப்பியனர் நெல்லைப்போல் புல்விளைவு தராததினாலும் நெல்லுக்கும் புல்லுக்கும் மெய்யும் உருவமும் வேறுபட்டிருத்தலானும் நெல் பலவகையான வுணவாய்ப் பயன்தருதல்போலப் புல் பயன்தராமையாலும் புல் நெல்லை ஒக்கும் என்பதியலாதாயினும் நெல்லிலிருந்து புல்லும் புல்லிலிருந்து நெல்லும் பிறந்த சம்பந்தம்பற்றி ஒருகால் ஒன்றற்கு ஒன்றை உவமைகூறினும் கூறலாம் அதுபோல வில் முதலியவற்றிற்கும் நுதல் முதலியவற்றிற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையாதலின் எங்ஙனம் உவமை கூறுவதென்பது ஈற்றடியின் கருத்து. இனி, “நெல்லொக்கும்.... . வற்றே” என புல்லென்னுமொருவகைத் தானியம் நெல்லையொக்குமென்று சொல்வார் சொல்லினும், அவை தம்முள் நேர் என்று கூறுதல் வலியுடைத்தாமோ? என்றும் பொருள் கோடலாம். கொண்டு, விலமுதலியபொருள்களை நுதல் முதலியவற்றிற் குவமை

கூறுதல் சொனமாததிரையேயன்றி பொருடபெறறியிலனறு னெறிபபாலது சொலலெலாகரும பொருளெனறகு, மறறையவறறிறகு ஒருவிதமா வுவமை கூறலா மாயினும, சொலலிறகுவமை கூறுதல கூடாதே யெனறுரைபபினும பொருநதும. மேலே சொறகளை அமுதி னளிககொணடவள எனறதும இககருததுபபறறியே

இநதிரன சசியைப பெறறா னிருமூனறு வதனத தோனறன
றநதையு முமையைப பெறறான றாமரைச செஙக ணனும
செநதிரு மகளைப பெறறான சீதையைப பெறறாய் நீயு
மநதரம பாரககி னனமை யவாககிலை யுனககே யையா

இ - ள் இநதிரன சசியை பெறறான - இநதிரன இநதிராணியை அடைநதான, இரு மூனறு வதனததோன தன தநதையும உமையை பெறறான - ஆறுமுக ககடவுளுடைய தநதையாகிய சிவபிரானும உமாதேவியை அடைநதான, தாமரை செஙகணணும செநதிருமகளை பெறறான - தாமரை மலரபோனற செயய கணகளை யுடைய விஷணுவும அழகிய இலககுமிதேவியை அடைநதான, நீயும சீதையை பெறறாய - (அவரகள நலல அழகுடைய பெணகளை அடைநததுபோல) நீயும சீதையை அடைநதாய, அநதரம பாரககின - (அவரகளுககும உனககும உளள) பேதததைப்பாரககு மிடதது, அவரககு - அவவிநதிரன முதலினோரககு, நனமை இலலை - சுகமிலலை, ஐயா—! உனககே - (சுகம) உனககேதான.

கருதது —அவவிநதிரன முதலிய போகள இசசீதையைப்போலும பேரழகுடைய பெணகளை அடையும பாககிய மிலலாதிருநதலால அவரகள அனுபவிககும இனபம ஓர இனபம அலல உனயோகமே யோகம எனபதாம.

குறிபபு —அநதரம—பேதம, விததியாசம. இனி, அம + தரம எனபிரிதது - அழகிய தகுதி எனபபொருள கோடலுமாம நனமையவரககு உனககு இலலை எனககொணடு அவரகள சசிமுதலிய பெணகளை நியாயவழியில தாமபததினிகளாககொணடிருபபதால அவரகளுககு நனமை யுணடு எனறும நீ அககிரமவழியிற சீதையைபபெறுவாயாதலால உனககு நனமையிலலை யெனறும உணமையாய நிகழும விஷயததை யெடுததுச சொனனானெனனலுமாம பினனும, நீயும சீதையைபபெறறாய ஆதலால அநதரம அவரகளுககு- தேவலோகததிலுளளவரகளுககும, பாரககு - பூமியிலுளளவரகளுககும இனலமை - இனனலும (துனபமும) மையும (குறறமும) இலலை அவவினனலுங குறறமும உனககே யாம எனறு கூறினுளெனனலுமாம சீதையைபபெறறாய - சீதையையடைநத அளவில நீயும அநதரம-நீயும் முடிவுபெறுவாய, எனககொணடு கூட்டிக கூறலுமாம. (௭௫)

பாகததி லொருவன வைததான பஙகயத திருநத பொனனை
யாகததி லொருவன வைததா னநதண னாவில வைததான
மேகததின மினனை முனனே வெனறநுண ணிடையை நீயு
மாகததோள வீர பெறறா லெஙஙனம வைதது வாழதி

இ - ள் மாகம தோள வீர - ஆகாயததை யளாவுமபடி பருததுயரநத தோளகளையுடைய வீரனே! ஒருவன பாகததில வைததான - ஒருவன (உமா தேவியைத தனது இடப) பாகததில வைததான, ஒருவன பஙகயதது இருநத பொனனை ஆகத

தில வைததான - ஒருவன தாமரை மலரினமேலிருநத இலககுமி தேவியைத (தனது) மாரபில வைததான, அநதணன நாவில வைததான - பிரமதேவன (சரஸ வதியைத தனது) நாவினகண வைததான, முனனே—, மேகததின மினனே - மேகததின கட்டோனற மினனலே, வெனற - (ஒளியினாலும தோனறி மறையுஞ செயலாலும) வெறறிகொணட, நுண இடையை - நுடபமாகிய இடையினையுடை-யாளாகிய அசசீதையை, நீயும பெறறால - நீயும அடைநதால, எஙஙனம வைதது வாழதி - எவவிடததில வைதது வாழவாய?

குறிபபு—ஆகம - அகம எனபதன விகாரம நுணணிடை - அனமொழித தொகை நுணணிடை எனபதைப பெணணெனனும பெயா மாததிரையாகக கொணடு - கரிய மேகமபோனற ஸ்ரீராமபிரானைச சீதாபிராடடியார தழுவத தோறறததால மேகததின மினனே வெனறவள எனறு பொருள கோடலும ஆம அததகைய தோறறததை இவள முனனே கணடுளளாளாதலின 'முனனே' எனக கூறினன எனக மாகததோள - ஆகாயததின கணணுளள புயம என விரிததுககொளக "பொறகோன விணடலஙக ளுறவீஙகி யோஙகுதய மால வரையின விளஙக" என றா ரேழும ஒருவன பாகததிலும ஒருவன மாரபிலும ஒருவன நாவிலுமாக மூா ததிகள மூவரும தமது மனைவிகளை வைததுககொணடாா அதுபோல அமமூவிடங களில ஒனறில இசசீதையை வைபபின இவளது பெருமைககுக குறைவாகும அமமூவருடைய தேவிகளிருககுந தானஙகளினும உயாநத தானமாகிய சிரசின கணதான வைககவேணடுமே எனனுங கருததோடு 'எஙஙனம வைதது வாழதி' எ னறு வினவினன இனி, (உனககு மடியுஙகாலஙகிடடிவிடடதால) எபபடி வைத து வாழவாய (வாழமாடடாய) எனனும ஓா அறவுரையும உளளடஙகியிருததலறிக

பிளளைபோல பேசசி ஞளைப பெறறபின பிழைகக லாறறாய
கொளளைபோ கினற செலவ மவளுககே கொடுததி யைய
வளளலே யுனககு நலலேன மறறுநின மனையில வாழுங
கிளளைபோன மொழியாாக கெலலாங கேடுசூழ கினறே னனறே

இ - ள ஐய வளளலே - அழகனே! கொடையாளனே! பிளளைபோல பேசசினளை - மகவுபோது மழலைசசொறகளையுடைய அபபெணணை, பெறறபின- (நீ) அடைநத பிறகு, பிழைககல ஆறறாய - (அவளைவிடடு) நீஙகியிருததறகுச சகி ககமாடடாய, கொளளை போகினற செலவம - கொளளை போகினற (நின) செலவ ததை, அவளுககே—, கொடுததி - கொடுபபாய, உனககு நலலேன - (நான) உன ககு நலலவளாயினனன, மறறு—, நினமனையில வாழும - நினவீடடில வாழகினற, கிளளைபோல மொழியாாககு எலலாம - கிளியைபபோனற சொறகளையுடைய, பெ ணகளுககெலலாம, கேடுசூழகினறேன அனறே - கெடுதிசெயகினறேனலலவா?

குறிப்பு—பறவை நாய முதலியவறறின இளமைககுரிய பிளளைபபெயா ஏணடு மககடகணவநதது மரபு வழுவமைதி "குழவியு மகவு மாயிரண டலலவை கிழவ வலல மககடகணணே" எனற சூததிரததால மககளிளமைககுப பிளளைப பெய ரிலலையெனபதாம, 'பெணணு மாணும பிளளையு மவையே" என மீஇ வ நது முடிநத மரபுணாததனு சூததிரததால அபபெயா கோடலாம எனபதும விள ககுதலறிக பிழைததல - தவறுதல- பூமணடலததும விணடலததும பாதலத தும வறினாாய ஆசைபபடடாா யாவரும தாமாசைபபடடபொருளகளைத தடைவி

னறிந் தாமே யெடுத்துக்கொள்ளுமாறு கட்டளையிட்டுத் திறந்துவைத்த பொக்கிஷத்தையுடையான் என்பது தோன்றக் 'கொள்ளைபோகின்ற செல்வம்' என்றான் "பூதலத்துள்ளவாப் பொருளும் வறியராயக், காதலித்தார் தாமே கவர்தலால் - நீதி—, யடுத்துயர்ந்த சீர்த்தி யநபாயா யார்க்குங், கொடுத்தியெனக் கொள்கின்றி லேம்" என்பதிண்டு நோக்கற்பாலது நீ சீதையைப்பெற்றபின்பு அவளைவிட்டுப் பிரியவும் மாட்டாய் உன் மனைவிகளை விரும்பவும் மாட்டாய் அதனால் அவர்களுக்கெல்லாம் நான் கேடு சூழ்பவளாய்க் கெட்டவளாகின்றேனென் என்றுள்ளங்க இனி, பிள்ளைபோல பேசினளைப்பெற்றபின்—, பிழைக்கல் ஆற்றாய்=உய்தல்செய்வாய் [பிழைக்கமாட்டாய், இறந்துபோவாய்], (பின்பு) கொள்ளைபோகின்ற செல்வம்= பகைவரால் கொள்ளைபோகப்படுகின்ற செல்வத்தை, அவளுக்கே கொடுத்தி - அவளுக்கு ஒப்பித்துவிடுவாய், நல்லேன்=விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் நல்லவளாகின்ற நான், உனக்கும் இன்னபோன்மொழியார்க்கும் கேடுசூழ்கின்றேன்—, என்வோ ரறவுரையுங் கொள்ளுதலுமாம். (எஎ)

தோர்ந்த வல்குற் சீதை தேவர்தம் முலகி னிம்பர்
வார்ந்த கொங்கை யார்தம் வயிறுதந் தாளு மல்ல
டார்ந்த கமலத் தாளைத் தருக்கினார் கடையச் சங்க
நீர்ந்த தத்தை வெல்வா னிலந்தந்து நிரம்பிற் றன்றே

இ - ள். தோர்ந்த அல்குல் சீதை - இரதம்போன்ற அல்குலையுடைய சீதையானவள், தேவர்தம் உலகின் - இம்பர் - தேவலோகத்திலும் இவ்வுலகத்திலுமிருக்கிற, வார்ந்த கொங்கையார்தம் - கச்சிட்ட முலையையுடைய பெண்களினது, வயிறுதந்தாளும் அல்லள் - வயிறுதர வந்தவளுமல்லள், தருக்கினார் கடைய - செருக்குற்ற தேவாசுரர்கள் கடைந்ததால், சங்கம் நீர் - பாற்கடலானது, தார்ந்த கமலத்தாளை - மலர்ந்த தாமரையிலிருப்பவளை [திருமகளை], தந்தது - கொடுத்தது, அதனை வெல்வான் - அக்கடலை வெல்லும்பொருட்டு, நிலம் - பூமியானது, (இச்சீதையை), தந்து - கொடுத்து, நிரம்பிற்று - நிறைவடைந்தது

குறிப்பு:—தோர்ந்த, நந்த - உவமவாசகம். சங்கநீர் என்றகு, யாறுகள் சங்கமமாகின்ற நீர் என்றேனும், சங்குகளை யெறியும் நீரென்றேனும், சங்கைப்போலும் வெண்மைத்தாகிய நீரென்றேனும் பொருள்கொள்க. தருக்கினார் சங்கம் கடைய நீர் தந்தது எனக்கொண்டு சங்கம் என்றதற்குக் கூட்டமென்றுபொருள் கோடலுமாம் நீர் திருமகளைத்தந்த களிப்பால் விருத்தியுற்றுப் பொங்கக்கண்டு பொறாமை யுற்றடைந்துயரார் கரைந்த நிலமானது அத்திருமகளினுஞ் சிறந்த இச்சீதையைத்தான் தந்து அத்துயரொழிந்து தனைப்போற் கடல்பொறாமையுற்று எய்தத்தால் தான் விருத்தி யுற்றது என்னுங்கருத்து விளங்க 'நிரம்பிற்று' என்றான் (எஅ)

மீன்கொண்டு டாடும் வேலை மேகலை யுலக மேத்தத்
தேன்கொண்டு டாடுங் கூந்தற் சிற்றிடைச் சீதை யென்னு
மான்கொண்டு டாடு நீயுன் வாள்வலி யுலகங் காண
யான்கொண்டு டாடும் வண்ண மிராமனைத் தருதி யென்பால.

இ - ள். மீன் - மச்சங்கள், கொண்டு - (தமக்கு இருப்பிடமாகக்) கொண்டு, ஊடாடும் - நடமாடுகின்ற, வேலை மேகலை - கடலாகிய மேகலையையுடைய, உலகம் ஏத்த-

உலகத்திலுள்ளவர்கள் துதிசெய்யுமாறு, தேன் - வண்டுகள், கொண்டு - (தமக்கிருப்பிடமாகக்) கொண்டு ஊடாடும் - நடமாடுகின்ற, கூந்தல் - கூந்தலையும், சிறு இடை - சிறிய இடையையுமுடைய, சீதை என்னும் மான் கொண்டு - சீதையென்கிற மானைக் கைக்கொண்டு, நீ —, ஊடாடு - (அதனோடு) பழகுவாயாக, ஊடு - இடையே, யான் கொண்டு நான் (இராமனைக் கைக்) கொண்டு, ஆடும் வண்ணம் - (என் சினந்தீருமபடி) விளையாடுமாறு, உன் வாள்வலி உலகம் காண - உனது வாளாயுதத்தினுடைய வலிமையை உலகத்திலுள்ளோர் காணும்படி, (வென்று), இராமனை —, என்பால் - என்னிடத்து, தருதி - (பிடித்துத்) தருவாயாக. (எகு)

தருவது விதியே யென்றா றவம்பெரி துடைய ரேனும்
வருவது வருநா ளன்றி வந்துகை கூட வற்றோ
வொருபது முகமுங் கண்ணு முருவமு மார்புந் தோள்க
ளிருபதும் படைத்த செல்வ மெய்துவ தினிநீ யெந்தாய்

இ - ள். எந்தாய் —, பெரிது தவம் உடையரேனும் - மிகுந்த தவமுடையராயினும், தருவது விதியே என்றால் - (அவர் விரும்பியதை யவர்க்குத்) தருவது ஊழே யென்றிருக்குமாயின், வருவது - வரத்தக்கது, வருநாள் அன்றி - வரப்பட்ட காலத்தில் அல்லாமல், வந்து கைகூட வற்றோ - (அகாலத்தில்) வந்து கைகூடும் வலிமையுடையதாமோ, ஒருபது முகமும் - பத்து முகங்களும், கண்ணும் - (இருபது) கண்களும், உருவமும் - (பெரிய) ரூபமும், மார்பும் - (திடம்பொருந்திய) நெஞ்சும், தோள்கள் இருபதும் - இருபது புயங்களும், படைத்த செல்வம் - பொருந்திய சிறப்பை, நீ எய்துவது - நீ அடைவது, இனி - இனிமேல்தான்.

குறிப்பு — இராவணன் முன்பு பெற்ற இன்பமெல்லாம் ஓரின்பமல்ல சீதையைப் பெற்றபின் எய்தும் இன்பமே இன்பம் என்பாள் 'எய்துவதினி,' என்றாள். (அ0)

இன்னவ டன்னை யுன்பா லுய்ப்பலென் றெடுக்க லுற்ற
வென்னையவ் விராமன் றம்பி யிடைபுகுந் திலங்கு வாளான்
முன்னைமூக் கரிந்து விட்டான் முடிந்ததென் வாழ்வு முன்னின்
சொன்னபி னுயிரை நீப்பான் றுணிந்தனென் னென்னச் சொன்னாள்.

இ - ள். இன்னவள் தன்னை - இத்தன்மையுடையவளை, உன்பால் - உன்னிடத்து, உய்ப்பல் என்று - சேர்ப்பேனென்று நினைத்து, எடுக்கல் உற்ற என்னை - எடுத்த என்னை, அ இராமன் தம்பி - அந்த இராமனுடைய தம்பி (இலக்குமணன்), இடை புகுந்து - மத்தியிற் புகுந்து, இலங்குவாளால் - பிரகாசிக்கின்ற வாளாயுதத்தால், முன்னை - முதலில், மூக்கு அரிந்து விட்டான் - (என்) மூக்கையறுத்து விட்டான், முன்னின் - யோசிக்குங்கால், (மூக்கறுபட்ட அன்றே), என் வாழ்வு முடிந்தது - என்னுடைய வாழ்க்கை முடிந்து போய் விட்டது, சொன்னபின் - (இச்சங்கதியை உன்னிடத்திற்) சொல்லிய பிறகு, உயிரை நீப்பான் - உயிரை நீக்கும் பொருட்டு, துணிந்தனென் - நிச்சயித்தேன், என்ன சொன்னாள் - என்று கூறினாள்

குறிப்பு — தமையன் முன்னிலையில் மூக்கரிந்தமை கூறுதலியலாதாதலின் அதனைச் சொல்லாமலே அவனறிந்து கொள்ளுமாறு 'முன்னை மூக்கரிந்து விட்டான்' என்றாள். முடிந்ததென் வாழ்வும் எனக்கொண்டு உன்னின் சொன்ன பின் என்றது உன்னிடத்திலிதைச் சொல்லிய பிறகு எனக்கொள்ளினுமமையும். ()

கோபமு மறனு மானக் கொதிப்புமென் றினைய வெல்லாம்
பாபநின் றிடத்து நில்லாப் பெற்றிபோற் பற்று விட்ட
தீபமொன் றொன்றை யுற்றா லென்னலாஞ் செயலிற் புக்க
தாபமுங் காம நோயு மாருயிர் கலந்த வன்றே

இ - ள். கோபமும்—, மறனும் - வீரமும், மானம் கொதிப்பும் - வெட்கத்தாலாகிய உள்ளக்கொதிப்பும், என்ற இனைய எல்லாம் - என்ற இத்தன்மையனவனைத்தும், பாபம் நின்ற இடத்து நில்லா பெற்றிபோல - பாபமானது நிலைத்திருந்த இடத்தில் நிற்காத செல்வம்போல, பற்றுவிட்ட - பற்றுச்சலவிட்டன, தீபம் ஒன்று ஒன்றை உற்றால் என்னல் ஆம் செயலில் - ஒருதீபம் மற்றொருதீபத்தை யடைந்தாலென்று கூறுதலிலாகின்ற செயல்போல, புக்க தாபமும் காமநோயும் - (தன்மனத்தில்) புகுந்ததாபமும் காமநோயும், ஆர் உயிர் கலந்த - அரிய உயிரிற்கலந்தன.

குறிப்பு:—பெற்றி - பேறு, மணிமேகலை மந்திரங்கொடுத்தகாதையில் "பிறவியாளாயினள் பெற்றியமைத்தென" எனவும், சிலப்பதிகாரம் அடைக்கலக்காதையில் "பிணிப்பறுத்தோர்தம் பெற்றி யெய்தவும்" எனவுங் கூறியவிடத்துப் பெற்றியென்பது பேறு என்னும்பொருளில் வந்தமையறிக. ஒரு தீபவொளியோடு மற்றொருதீபத்தின் ஒளியும் சேர்ந்தால் அத்தீபத்தினொளியீது இத்தீபத்தினொளி யதுவென்று பிரித்துக் கூறுதற்கு இயலாத்தன்மையாய் ஒரே ஒளியாய்த் தோன்றுவதுபோலத் தாபமுங் காமமும் பிரித்துக் கூறுதற்கியலாமல் ஒன்றாய் அவனுயிரிற்கலந்தன வென்பது ஈற்றிரண்டடியின் கருத்து. ஈண்டு உயிரென்றது - உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானமென்னும் பஞ்சஸ்கந்தக்கூட்டத்தை. "கவையொப்பன கைவிரலந்துகளு, மிவையிப்படி கைபிடி யென்றதுபோ, லவையப்படி கந்தங்களைந்துகளு, நவையைப்படு நல்லுயி ராமெனவும்" என்னும் நீலகேசித்திரட்டு, புத்தவாதச்சருக்கச் செய்யுளால் பஞ்சஸ்கந்தக்கூட்டம் உயிராதல் காண்க. அக்கந்தம் ஐந்தனுள் உருவம் என்பது - பூதவுரு உபாதாயவுருவென விருவகைப்படும். பூதவுரு - பிருதுவி, அப்பு, தேயு, வாயுவென்னு நான்குமாம். உபாதாயவுரு - வலி, கந்தம், இரதம், வன்னமென்னு நான்குமாம். வேதனை என்பது குசலவேதனை (சுகவறிவு), அகுசலவேதனை (துக்கவறிவு), குசலாகுசலவேதனை (சுகதுக்கவறிவு) என்னு மூன்றுமாம். குறிப்பு என்பது - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தும் மனமொன்றுமாகிய ஆறுமாம். பாவனையாவது மனோவாக்குக் காயங்களினுண்டாகும் நல்வினை பத்தும், தீவினை பத்துமாகிய இருபதுமாம். தீவினை பத்து - கொலை, களவு, காமம், பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல், வெஃகல், வெகுளல், பொல்லாக்காட்சி யென்பன. நல்வினை பத்து - பள்ளி வலம்புரிதல், தவஞ்செய்தல், தானஞ்செய்தல், மெய்யுரை, நல்வார்த்தை, இனியன கூறல், பயன்படு சொற்கூறல், அருணினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று என்பன. இவ்வுருவம், வேதனை, குறிப்பு, பாவனை என்னும் நால்வகையினும் எய்து ஐயமற வெண்ணும் எண்ணம் விஞ்ஞானமாம்.

'சுவரும் மரமும் ஆக்கையும் கற்றையுங்கூடின சமுதாயத்தை வீடென்று வழங்குமாறு போலவும், பல்லூருங்கூடின சமுதாயத்தை நாடென்று பற்றென்று வழங்குமாறுபோலவும், பஞ்சஸ்கந்தக்கூட்டத்தை ஆன்மாவென்று வழங்குமத்து கற்பனுகாமமெனக் கொள்க' என்றும், 'மரம் கற்றை முதலியவற்றைப் பிரித்தால் வீடில்லையானாற் போலவும் ஊர்களைப்பிரித்தாற் பற்றும் நாடில்லையானாற்போலவும் ஐந்

துஸ்கந்தங்களையும் பிரித்துணருங்கால் ஆன்மா இல்லையாமெனக் கொள்க' என்றும் விளக்க அதற்கு உதாரணங் காட்டினருமுளர். (சிவஞானசித்தியார், பரபக்கவுரையாசிரியர்) மேற்கூறிய ஐந்துஸ்கந்தங்களுடன் கூடிய மனோவாக்குக் காய முதலியன வெல்லாம் அக் காமதாபமயமாகவே இருந்தன என்பார் 'ஆருயிர்கலந்த' என்றார். (௮௨)

கரனையு மறந்தான் றங்கை மூக்கினைக் கடிந்து நின்றா
னுரனையு மறந்தா னுற்ற பழியையு மறந்தான் வெற்றி
யரனையுங் கொண்ட காம னம்பினான் முன்னைப் பெற்ற
வரனையு மறந்தான் கேட்ட மங்கையை மறந்தி லாதான்.

இ - ள். கேட்ட மங்கையை மறந்திலாதான் - (சூர்ப்பணகை சொல்லக்) கேள்வியுற்ற (சீதையென்னும்) பெண்ணை மறவாத இராவணன், கரனையும் மறந்தான் - கரன் இறந்துபோனதையும் மறந்துபோனான், தங்கை மூக்கினை கடிந்து நின்றான் உரனையும் மறந்தான் - (தனது) தங்கை சூர்ப்பணகையினது மூக்கையறுத்து நின்றவனுடைய வலிமையையும் மறந்துபோனான், உற்ற பழியையும் மறந்தான் - (தனக்குச்) சம்பவித்த அபகீர்த்தியையும் மறந்து போனான், வெற்றி கொண்ட அரனையும் காமன் அம்பினால் - ஜயங்கொண்ட சிவபிரானால் வருந்திய மன்மதனது (புஷ்ப) பாணத்தினாலே, முன்னை - பூர்வகாலத்தில், பெற்ற - அடைந்த, வரனையும் - தேவ வீகையையும் [சாபத்தையும்] மறந்தான்—,

குறிப்பு—உரன் - உரம், வரன் - வரம். காமனம்பினான் முன்னைப்பெற்ற வரமென்றது—அளகை நாயகன் றன்மகனாய நளகூபரனை விரும்பிவந்த அரம்பையைக்கண்டு காமுற்றுக் காமனம்பால் நொந்த இராவணன் அவ்வரம்பையை அவளெண்ணத்துக்கு விரோதமாக வலிந்து புணர்ந்தபோது அவள் சினந்து "வந்தி யாகநீ மாநில மாதர்களு, சிந்தை யாலன்றி யாவரைத் தீண்டினும், கந்த வார்குழலார் தங் கற்பினால், வெந்து வீழ்தி.... ." என்று அவள் கூறிய சாபத்தை (௮௩)

சிற்றிடைச் சீதை யென்னு நாமமுஞ் சிந்தை தானு
முற்றிரண் டொன்றாய் நின்றா லொன்றொழித் தொன்றையுன்ன
மற்றொரு மனமு முண்டோ மறக்கலாம் வழிமற் றியாதோ
கற்றனர் ஞான மின்றேற் காமத்தைக் கடக்க லாமோ.

இ - ள். சிறு இடை சீதை என்னும் நாமமும் - சிறிய இடையையுடைய சீதை யென்கின்றபெயரும், சிந்தைதானும் - (தன்) மனமும், உற்று - பொருந்தி, இரண்டு - (அவை) இரண்டும், ஒன்றாய் நின்றால் - ஒன்றேயாய் (பேதமில்லாமல்) நின்றனவாயின், ஒன்று ஒழித்து ஒன்றை உன்ன - (அவற்றுள்) ஒன்றை நீக்கி மற்றொன்றை நினைப்பதற்கு, மற்று ஒரு மனமும் உண்டோ - வேறு ஒருமனமும் இருக்கின்றதோ? [இல்லை], (ஆதலால்) மறக்கல் ஆம் வழி மற்று யாதோ - மறத்தற்காகிய மார்க்கம் வேறு எதுவோ? [எதுவும் இல்லை], கற்றனர் - படித்தோர்களுக்கு, ஞானம் இன்றேல் - அறிவில்லாமற்போனால், காமத்தை—, கடக்கல் ஆமோ - கடப்பதற்கு முடியுமோ? (௮௪)

மயிலுடைச் சாய லாளை வஞ்சியா முன்ன நீண்ட
வெயிலுடை யிலங்கை நாத னிதயமாஞ் சிறையில் வைத்தா

னயிலுடை யரக்க னுள்ள மவ்வழி மெல்ல மெல்ல
வெயிலுடை நாளி லுற்ற வெண்ணெயபோல வெதுமபிற் றனறே.

இ - ள் நீண்ட எயில் உடை இலங்கை நாதன் - நெடிய மதிலையுடைய இலங்கைக்கு அரசனாகிய இராவணனை, மயில் உடை சாயலாளை - மயிலினுடைய சாயலையுடையாளாகிய சீதாபிராட்டியை, வஞ்சியா முன்னம் - வஞ்சனைசெய்து கொணராத முன்னமே, இதயம் ஆம் சிறையில் வைத்தான் - (தன்) மனமாகிய சிறைச்சாலையினிடத்தே வைத்தான், அயில் உடை அரக்கன் உள்ளம் - வேலாயுதத்தையுடைய (இராவணனென்னும்) அவ்வரக்கனது மனமானது, அ வழி - அவ்விடத்து, வெயில் உடைநாளில் உற்ற வெண்ணெயபோல - வெயிலையுடைய காலத்தில் [சூரியகிரணவெப்பத்தில்] சேர்ந்த வெண்ணெயைப்போல, மெல்ல மெல்ல வெதும்பிற்று - மெள்ள மெள்ள வெப்பங்கொண்டு வாட்ட முற்றது. (௮௫)

விதியது வலியி னானு மேலுள விளைவி னானும்
பதியுறு கேடு வந்து குறுகிய பயத்தி னானும்
கதியுறு பொறியின் வெய்ய காமநோய் கலவி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல வளர்ந்த தன்றே

இ - ள் விதியது வலியினானும் - ஊழினது வலிமையினாலும், மேல் உள விளைவினானும் - இனிமேல் உள்ள சம்பவிப்புகளாலும், பதி உறு கேடுவந்து குறுகிய பயத்தினானும் - (தனது) பட்டினமாகிய இலங்கைக்குச் சம்பவிக்கின்ற பொல்லாங்கு கிட்டியபயனாலும், கதி உறு பொறியின் - விரைதலுற்ற அறிவினாலே, வெய்ய - கொடிய, காமநோய் - காமப்பிணியானது, கலவி நோக்கா - படிப்பைக் கருதாத, மதியிலி - அறிவீனன், மறைய செய்த - தோன்றாமற் போகும்படிசெய்த, தீமைபோல - பொல்லாங்கைப்போல, வளர்ந்தது - வளர்ந்ததற்றது.

குறிப்பு —இவ்விராவணனை மும்மூர்த்திகளையும் வென்ற வரத்தினும் பலத்தினும் சிறந்தவனாயினும் இவனும் அழிவது திண்ணம் என்பது தோன்ற 'விதியது வலியினானும்' என்றார் "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந்துறும்" என்றார் நாயனாரும் வேதவதியென்பவளுடைய கையை இராவணன் அக்கிரமமாய்த் தொட்டகாலத்து அவள் சினந்து "அடா உனக்கு மிலங்கைக்கு முன்னிலைக்குக் கேடாகத் தோன்றுவேன்" என்று கூறியபடி நடக்கப்போகிற செயல்களை விளக்க 'பதியுறு கேடு வந்து குறுகிய பயத்தினானும்' என்றார் மாரீசன் இறத்தலும் சடாயு மடிதலும் கவந்தன் ஒழிதலும் சவரி முத்தியடைதலும் வாலி மடிதலும் சுக்கிரீவன் அரசுகோடலும் முதலிய சம்பவங்கள் விளக்க 'மேலுள விளைவினானும்' என்றார் சீக்கிரத்திற் சீதையைக்கொணர்ந்து நினைத்தபடி முடிக்க ஆத்திரப்பட்ட அறிவினையுடையானென்பார் 'கதியுறு பொறியின்' என்றார். "ஆத்திரக்காரனுக்கு அறிவு மட்டு" என்பது பழமொழி. கல்வியறிவில்லாதவன் செய்யுந் தீமைகளுக்கும், அத்தீமைகளின் பயனாக அவன் அடையுந் துன்பங்களுக்கும் அளவில்லையென்பதுபோல இராவணன் அறிவழிந்தவனாய்க்கொண்ட காமத்துக்கும், அதனால் அவனுக்கு நேருந் துன்பங்களுக்கும் அளவில்லையென்பது ஈற்றிரண்டடியின் கருத்து. (௮௬)

பொன்மய மான நங்கை மனம்புகப் புன்மை பூண்ட
தன்மையோ வரக்கன் றன்னை யயர்த்ததோர் தகைமை யாலோ

மனமதன வாளி தூவி நலிவதோா வலதத ஞுனன்
வனமையை மாறறு மாறறல காமததே வநித தனறே

இ - ள. பொன மயமான நஙகை - பொனனின மயமான (சீதையெனனும) பெணணிற சிறநதாள, மனம புக - (தன) மனததிற புகுமபடி, பூணட - அடைநத, தனமையோ - தனமையினுலேயோ? அரககன - அவவிராவணன, தனனை அயாததது ஓா தகைமையாலோ - தனனை மறநதிருபபதாகிய ஒரு தனமையினுலேயோ? மனமதன—, வாளி தூவி - பாணபபிரயோகஞசெயது, நலிவது ஓா வலததன ஆஞன - (அவவிராவணனை) வருததபபடுததுவதில வலலமையையுடையவஞுன வனமையை - (இராவணனது) வலிமையை, மாறறும - வேறு படுததும, ஆறறல - வலிமையானது, காமததே - (அவன கொணட) காமததினுல, வநிதது - (மனமதன மாட்டுத) தஙகியது

குறிபபு —இனி, ஈறறடிக்கு (தததனனை வருததிய காமன மேற் சினஙகொளளாமல இராவணன தனது) வலிமையை வேறுபடுததும பொறுமையானது (அவன கொணட) காமததால (அவனிடததுத) தஙகியது எனறும பொருளகோடலாம. ()

எழுநதன னிருககை நினறுண டேழுல கததுளோரு
மொழிநதன ராசி யோசை முழஙகின சஙக மெஙகும
பொழிநதன பூவின மாரி போயினா புறததோ ரெலலா
மழிநதழி சிநதை யோடு மாடகக கோயில புககான.

இ - ள இருககை நினறு எழுநதனன - (இராவணன) தன இருபபிடததினினறு மெழுநதான, ஆணடு - அபபொழுது, எழ உலகதது உளோரும - எழுலகததிலிருபபவாகளும, ஆசி மொழிநதனா - வாழததுககூறினுாகள, எஙகும சஙகம ஓசை முழஙகின - எவவிடததுஞ சஙகநாதஙகள முழஙகின, பூவின மாரிபொழிநதன - பூமழைபெயதன, புறததோா எலலாம போயினா - பககததிலிருபபவாகளெலலாரும (அவாவாிருபபிடததிறகுச) சென்றூாகள, அழிநது அழி சிநதையோடும - (அவவிராவணன) அழிநது அழிகினற [கெட்டுததேறுத லிலலாது பினனுஙகெடுகினற] மனததுடனே, ஆடகம கோயில புககான - பொனனினுலாகிய ராஜமாளிகையிற புகுநதான (௮௮)

பூவினுல வேயநது செயத பொஙகுபே ரமளி கொஙகைத
தேவிமாா குழுவு நீஙகச சோநதனன சோத லோடு
நாவிநா றோதி நவவி நயனமுங குயமும புககுப
பாவியாக கொடுதத வெமமை பயபபயப பரநத தனறே

இ - ள பூவினுல வேயநது செயத பொஙகுபோ அமளி - புஷபஙகளினுல அலஙகரிததுச செயத உயாநத பெரிய படுககையினிடதது, கொஙகை தேவிமாா குழுவு நீஙக - முலைகளையுடைய (தன்) மனைவிகளின கூட்டம நீஙகலாக, சோநதனன - அடைநதான; சோதலோடும - (அஙஙனஞ) சோநதவளவில, பாவியா - (தனமனததில சீதாபிராட்டியின உருவைப) பாவனைசெயது, (அபபாவனையால்) நாவிநாறு ஓதி - கஸ்தூரிவாசஙகமழகினற கூநதலும, நவவிநயனமும - மானபோனற விழிகளும, குயமும - தனஙகளும், புக்கு - (தனமனததிற) புகுநது, கொடு

தந்த - (அவை) கொடுத்த, வெம்மை - வெப்பமானது, பையப்பையப் பரந்து - மெள்ள மெள்ள அதிகரித்தது,

குறிப்பு —பயப்பய - பையப் பைய (௮௧)

வேறு

தூக்கலாக லாதகாத னூறுநூறு கோடியாய்ப்
பூக்கவாச வாடைவீசு சீதநீர் பொதிந்தமென்
சேக்கைவீக ரிந்துதிக்க யங்களெட்டை வென்றதோ
ளாக்கைதீய வுள்ளமைய வாவிவேவ தாயினான்

இ - ள் தூக்கல் ஆகலாத காதல் - நீக்குவதற்காகாத ஆசையானது, நூறுநூறு கோடியாய்ப் பூக்க - நூறுநூறு கோடியாயுண்டாக, (அதனால்), வாசவாடை வீசு - வாசனைபொருந்திய காற்றை வீசுகின்ற, சீதம் நீர்பொதிந்த - குளிர்ச்சிபொருந்திய நீர்தங்கிய, மெல் சேக்கை - மிருதுவான படுக்கையினது, வீ - புஷ்பங்கள், கரிந்து - கருகி, திக்கயங்கள் எட்டை வென்ற தோள் - திக்கியானைகள் எட்டையும் வென்ற புயங்களும், ஆக்கை - யாக்கையும் [உடலும்], தீய - தீந்துபோகவும், உள்ளம் மைய - மனந்துக்கிக்கவும், ஆவி - (தனது) உயிர், வேவது ஆயினான் - வேகுவதானான்

தாதுகொண்ட சீதமேவு சந்துசந்த மென்றளிர்
போதுகொண்ட டுத்தபோது பொங்குதீ மருந்தினால்
வேதுகொண்ட தென்னமேனி வெந்துவெந்து விம்முதீ
யூதுவன் றுருத்திபோ லுயிர்த்துயிர்த் துயங்கினான்

இ - ள் சீதமேவுசந்து - குளிர்ச்சிபொருந்திய சந்தனத்தையும், சந்தம் மெல் தளிர் - அழகிய இளந்தளிர்களையும், தாதுகொண்டபோது - மகரந்தத்தைக்கொண்ட புஷ்பங்களையும், கொண்டு - (எடுத்துக்) கொண்டு, அடுத்தபோது - (பணிவிடைப்பெண்கள்) சமீபித்தபொழுது, பொங்கு - மிகுகின்ற, தீ - நெருப்பாகிய, மருந்தினால் —, வேது கொண்டது என்ன - வேதுகொண்டதுபோல, மேனி - உடல், வெந்து வெந்து - மிகவும் வேகுதலுற்று, தீ ஊது வல் விம்மு துருத்தி போல - நெருப்பை ஊதுகின்ற வலிய பருத்த துருத்திபோல, உயிர்த்து உயிர்த்து - அடிக்கடி பெருமூச்சுவிட்டு, உயங்கினான் - மனத்தளர்ச்சியடைந்தான், (௮௨)

தாவியாது தீதெனாது தையலாளை மெய்யுறப்
பாவியாத போதிலாத பாவிமாழை பானல்வேல்
காவியான கண்ணிமேனி காணமூளு மாசையா
லாவிசால நொந்துநொந் தழுங்குவானு மாயினான்

இ - ள். தையலாளை - சீதாபிராட்டியை, மெய் உற பாவியாதபோது - உண்மையாகத் (தன்மனத்துப்) பாவனை செய்யாத காலத்தில், இல்லாதபாவி - (அழுங்குதல்) இல்லாத பாவத்தையுடையராவணன், தாவு யாது-பகையெது, தீது (யாது)-குற்றம் எது, எனாது - என்றுநினையாமல், மாழை பானல் வேல் காவி ஆன - மாவடுவும் கடலும் வேலும் நீலோற்பலமுமாகிய, கண்ணி - கண்களையுடைய சீதாபிராட்டியினது, மேனி காண மூளும் ஆசையால் - திருமேனியைப்பார்க்க வேண்டுமென

று எழுகின்ற அவாவினால், ஆவி - உயிரானது, சால நொந்து நொந்து - மிகவும் வருந்தி வருந்தி, அழுங்குவானும் ஆயினான் - துன்பமடைவானுமானான் எ-று.

குறிப்பு.—தாவியாது, இ-சாரியை தாவியாத தீதெனாத கண்ணிமேனி காண மூளு மாசையாலெனவே அவ்வாசையே வேகத்தீயுமாமென்பதாயிற்று. நொந்து நொந்து - இவ்வடுக்கு மிகுதிபற்றி வந்தது. (௯௨)

பரங்கிடந்த மாதிரம் பரித்தபாழி யானையின்
கரங்கிடந்த கொம்பொடிந் திரங்கவென்ற காவலன்
மரங்குடைந்த தும்பிபோ லநங்கன்வாளி வந்துவந்
துரங்குடைந்து நொந்துநொந் துளைந்துளைந் தொதுங்கினன்.

இ-ள். பரங்கிடந்த - பாரந்தாங்கிய, மாதிரம் - திக்குகளை, பரித்த - சுமந்த, பாழி - வலிமையையுடைய, யானையின் - அஷ்டகஜங்களினது, கரம் - துதிக்கையினிடத்து, கிடந்த - தங்கியிருந்த, கொம்பு - கொம்புகள், ஒடிந்து - ஒடிதலுற்று, இரங்க - (அவ்யானைகள்) அழும்படியாக, வென்ற காவலன் - வெற்றிகொண்ட மன்னனாகிய இராவணன், மரங்குடைந்த தும்பிபோல - மரத்தைத் துளைத்த வண்டு போல, அநங்கன்வாளி - மன்மதனது பாணங்கள், வந்து வந்து - அடிக்கடி வந்து, உரம் குடைந்து - (தன்) மார்பைக்குடைய (அதனால்), நொந்து நொந்து - மிகவும் காமநோயுற்று, உளைந்து உளைந்து - மிகவும் உபாதியடைந்து, ஒதுங்கினன் - பதுங்கினன் [மன்மதன் காணாவாறு ஒளியலுற்றான்],

குறிப்பு.—குடைந்து - செயவெனெச்சத்திரிபு. (௯௩)

கொன்றைதுன்று கோதையோடொர் கொம்புவந்தெ னெஞ்சிடை
நின்றதுண்டு கண்டென் றழிந்தழுங்கு நீர்மையான்
மன்றலங்க லங்கன்மாரன் வாளிபோல மல்லிகைத்
தென்றல்வந்தெ திர்ந்தபோது சீறுவானு மாயினான்.

இ-ள். கொன்றை துன்று கோதையோடு ஓர் கொம்பு - கொன்றை மலர்கள் நெருங்கிய கூந்தலுடனே ஒரு கொம்புபோல்வாள், வந்து—, என் நெஞ்சிடை நின்றது கண்டு உண்டு என்று - என் நெஞ்சினிடத்து நிற்றலைக் கண்டதுண்டு என்று கூறி, அழிந்து - (தன் மனநிலை) கெட்டு, அழுங்கு நீர்மையான் - அழுகின்ற தன்மையையுடையானாகிய அவ்விராவணன், மன்றல் தங்கு அலங்கல் மாரன் வாளிபோல - வாசனை தங்கிய (மகிழம்பூ) மாலையையுடைய மன்மதனது பாணம் போல, மல்லிகைத் தென்றல் - மல்லிகை மலர் நாற்றத்தோடு கலந்த தென்றற்காற்று, வந்து—, எதிர்ந்தபோது - சந்தித்தபொழுது, சீறுவானும் ஆயினான் - கோபிப்பவனுமானான். (௯௪)

அன்னகாலை யங்குநின் றெழுந்தழுங்கு சிந்தையா
னின்னவாறு செய்வனென்றொ ரெண்ணிலா னிரங்குவான்
பன்னுகோடி தீபமாலை பாலையாழ் பழித்தசொற்
பொன்னனாரொ டெக்கலங்கொள் சோலையூடு போயினான்.

TU (4' VII ·6'6 (2).

இ - ள். அன்னகாலை - அப்பொழுது, அங்குநின்று எழுந்து - அவ்விடத்தினின்றெழுந்து, அழுங்குசிந்தையான் - வருந்திய மனத்தினையுடையானும், இன்ன ஆறு செய்வென் என்று ஓர் எண் இலான் - (தன் துன்பந் தணித்துக்கொள்ளப் பரிகாரம்) இன்னவிதம் செய்வேன் என்று எண்ணும் ஒரு எண்ணமில்லாதவனும், இரங்குவான் - அழுகின்றவனுமாகிய அவ்விராவணன், பன்னு - (புகழ்ந்து) சொல்லப்படுகின்ற, பாலையாழ் - பாலையாழை, பழித்த—, சொல் - சொற்களையுடைய, பொன் அனார் - பொன்போன்ற (மேனியையுடைய) பெண்கள், கோடிதீபமாலை எடுக்க - ஒருகோடி தீபங்கள் வரிசையாக எடுத்துவர, ஓர் சோலை ஊடுபோயினான் - ஒரு சோலையினகட் சென்றான்.

குறிப்பு —எண் - எண்ணுவது, கருத்தாப்பொருள் விகுதி புணர்ந்துகெட்டது. பாலையாழ் - பாலைநிலத்தியாழ், இப்பாலையாழுள்ளே ஏழு பாலையிசை பிறக்குமாதலின் சிறப்புடைத்தாயிற்று, [சிலப்பதிகாரம், ஆய்ச்சியர்குரவை, ௪௦௫-வது பக்கத்தைப்பார்த்து இப்பாலையாழின் தன்மையுணர்க] பழித்த - பயனிலையுவமவுருபு, "அன்ன பிறவுங் கூறுங் காலைப் பலகுறிப்பினவே" என்ற தொல்காப்பியச் சூத்திரவிதிப்படி போந்தது, ['என்ன' என்னும் உருபின் வேறுபாடு]. அனார், அன்ன என்னும் வினையுவமவுருபு, ஈண்டு உருவினுவமமாக நின்றது, "அன்னவென் கிளவி பிறவொடுஞ் சிவணும்" என்றாராகலின் [தொல்காப்பியம், உவமவியல் 2௯8] அங்கு - அசைநிலை. (௩௫)

வேறு.

மாணிக்கம் பனசம் வாழை மரகதம் வயிரந் தேமா
வாணிப்பொன் வேங்கை கோங்க மரவிந்த ராகம் பூகஞ்
சேணுயக்கு நீலஞ் சாலங் குருவிந்தந் தென்னம் வெள்ளி
பாணித்தென் பளிங்கு நாகம் பாடலம் பவள மன்றே

இ - ள். பனசம் மாணிக்கம் - பலாமரங்களுக்கு மாணிக்கத்தையும், வாழை மரகதம் - வாழை மரங்களுக்கு மரகதத்தையும், தேமா வயிரம் - மாமரங்களுக்கு வயிரத்தையும், வேங்கை ஆணிப்பொன் - வேங்கை மரங்களுக்கு ஆணிப்பொன்னையும், கோங்கம் அரவிந்தராகம் - கோங்கமரங்களுக்கு அரவிந்தராகத்தையும், பூகம் சேண் உய்க்கு நீலம் - கமுகமரங்களுக்கு நெடுந்தூரங்கதிரைச் செலுத்தும் நீலத்தையும், சாலம் குருவிந்தம் - ஆச்சாமரங்களுக்கு குருவிந்தத்தையும், தென்னம் வெள்ளி - தென்னை மரங்களுக்கு வெள்ளியையும், நாகம் பளிங்கு - புன்னை மரங்களுக்குப் பளிங்கினையும், பாடலம் பவளம் - பாதிரிமரங்களுக்குப் பவளத்தையும், பாணித்து - மதித்து [உவமை கூறி], என் - யாதுபயன் ?

கருத்து.—மரங்கள் இரத்தினங்களினுஞ் சிறப்புற்றிருந்தன வென்பதாம்.

குறிப்பு —மரகதம்—மரதகம். வயிரம்—வஜ்ரம் அரவிந்தராகம்—பதுமராகம், அசுவத்தாமாவைப் பரித்தாமாவென்று கூறுதல்போல இப்பதுமராகத்தைச் சாதுராங்கமென்றுங் கூறுவர் நீலம்—நீலகாந்தி; சௌகந்தியென்பதுமது. குருவிந்தம்—செம்மணி, இதனை இரத்தவிந்து என்றுங் கூறுவர். இம்மணிகளின் திறம் முதலியவற்றைச் சிலப்பதிகாரம், ஊர் காண்காதை 345, 346 பக்கங்களினும் கல்லாடம் 10௦-வது அகவற்பாவினுங்கண்டு தெளிக. (௩௬)

வானுற நிவந்த செஙகேழ மணிமரங துவன்றி வான
மீனொடு மலாக டமமின வேறறுமை தெரித றேறரு
தேனுகு சோலை நாபபட செமபொனமண டபததது ளாங்கோா
பானிற வமளி சோநதான பையுளுற் றுயஙகி னைவான.

இ - ள நிவநத - உயாநத, செஙகேழ்மணிமரம் - செநநிறமபொருநதிய இர ததினமபோனற மரஙகள, வான உறறுவனறி - ஆகாயததிறபொருநத நெருஙகி, வானம மீன ஒடு மலாகள - வானததிலுளள நடசததிரஙகளும (அஙகிததமரஙகளி லுளள) புஷபஙகளும, தமமின - அவறறுள, வேறறுமை தெரிதல தேறரு - (இவை மலாகள இவை நட்சததிரஙகள எனனும) விததியாசங தெரிநதுகொளளு தலை அறிவியாத, தேன உகு சோலை நாப்பண - தேனசொரிகினற சோலைககு நடு வேயுளள, செமபொனமணடபததுள ஓாபால நிற அமளி சோநதான - செமபொன னிலாகிய மணடபததிலிருககிற பாலபோலும வெணணிறமுளள ஒரு படுககை யிற சோநது, பையுள உறறு உயஙகினைவான - (அவவிராவணன) துனபமுறறு மனநதளாநது மெலிவானுயினன,

குறிபபு —ஆஙகு - அசை (௧௭)

கனிகளின மலரின வநத கள்ளுணடு களிக ளன்ன
வனிதையா மழலை யினசொற கிளளையுங குயிலும வணடு
மினியன மிழறறு கினற வியாவையு மிலஙகை வேநதன
முனியுமென றவிநத வாய மூஙகையா போனற வனறே.

இ - ள கனிகளின - பழவாககஙகளினும, மலரின - புஷபவாககஙகளினும, வநத - வநததான, கள - தேனை, உணடு - குடிதது, களிகள அனன - கடகுடிதது வெறியுறறவாகளையொதத, மழலையினசொல - மழலைசசொறபோனற இனிய சொ றகளையுடைய, வனிதையா - பெணகளும, கிளளையும - (மழலையின சொலலையு டைய) கிளிகளும, குயிலும - குயிலகளும, வணடும - வணடுகளும, இனியனமிழ றறுகினற யாவையும - இனியவாாததைகளைப பேசுகினற மறற எலலாபபறவை களும, இலஙகை வேநதன முனியும எனறு - இலஙகைககரசனுகிய இராவணன கோபிபபான எனறு, அவிநதவாய - பேசசொழிநத வாயினையுடையனவாகி, மூங கையா போனற - ஊமையாகளை ஒததிருநதன

குறிபபு —மழலையின சொல - மததிபதீபம் (௧௮)

பருவததால் வாடை வநத பசுமபனி யஙஙக பாண
முருவிபபுக கொளிதத புணணிற குளிததலு முளைநது விமமி
யிருததான யாத டாவென றியமபின னியமப லோடும
வெருவிப போயச சிசிர நீஙகி வேனிலவந திறுதத தனறே.

இ - ள. பருவததால - (சிசிரம எனனும) இப்பருவததால், வாடைவநத பசும பனி - வடகாற்றோடு வநத குளிாநத பனியானது, அஙஙகண பாணம - மனமதனது பாணமானது, உருவி புககு ஒளிததபுண்ணில் - உருவிப்புகுந்து மறைநத (மாாபின) புணணினிடததே, குளிததலும - படிநதவளவில், உளைநது விம்மி - கைகாலமுத

விய உளைதலுற்று அழுது, அடா—! இருதுதான் யாது என்று இயம்பினன - (இப்போதுற்ற) ருது எது? என்று சொன்னான்; இயம்பலோடும் - அங்ஙனம் சொன்ன அளவில், வெருவி - அச்சமடைந்து, சிசிரம் நீங்கி போய - சிசிரகாலம் நீங்கிப் போய், (உடனே) வேனில்வந்து இறத்தது - வேனிற்காலம்வந்து சேர்ந்தது,

குறிப்பு —இருது - பருவம் சிசிரம் - பின்பனிக்காலம் 'பருவத்தால் வாடை வந்த பசும்பனி, எனவே இக்காலம் பின்பனிக்காலத்துக்குரிய பங்குனிமாதமென்றல் காண்க, "வெங்கண்ணெடுவேள் விலவிழாக் காணும், பங்குனி முயக்கத்துப் பனியரசியாண்டுளன" என்றார் இளங்கோவடிகளும் (௯௯)

வன்பணை மரமுந் தீய மலைகளுங் குளிர வாழு
மென்பனி யெரிந்த தென்றல் வேனிலை விளம்ப லாமோ
வன்பெனும் விடமுண் டாரை யாற்றலா மருந்து முண்டோ
வின்பமுந் துன்பந் தானு முள்ளத்தோ டியைந்த வன்றே

இ - ள தீய வல் பணைமரமும் - (வெயிலின் கொடுமையால்) உஷ்ணத்தை யுடையவும் வலிய கிளைகளையுடையவுமாகிய மரங்களும், தீய மலைகளும் குளிர - (அவ்வெயிலாற் பெருஞ் சூடேறிய) மலைகளும் குளிர்ச்சியடையவும், வாழும் - வாழ்கின்ற, மென் பனி-மென்மையான (சிசிரகாலத்துள்ள) பனியும், எரிந்தது என்றால் - வெதும்பியதென்றால், வேனிலை விளம்பல் ஆமோ - வேனிற் காலத்தின் வெம்மையைச்சொல்ல முடியுமோ ? [முடியாது] அன்பு எனும் விடம் உண்டாரை ஆற்றல் ஆம் மருந்தும் உண்டோ - (கிடைத்தற்கரிய பெண்மேற் கொண்ட) ஆசையென்று கூறுகின்ற விஷத்தையுண்டவரைத் தணிப்பதற்காகிய மருந்தும் உண்டோ? [இல்லை], இன்பமும் துன்பந்தானும் - இன்பதுன்ப மென்னும் இவ்விரண்டும், உள்ளத்தோடு இயைந்த - (அவன்) உள்ளத்திற் பொருந்தின

குறிப்பு —தீய - மதிப்பு தீயம் தீயமரம்-கொடுமையையுடைய கள்ளி முதலியனவாம் "உருப்பமொண் டிறைக்குங் கள்ளி நீழல்" என்றார் பரஞ்சோதிமுனிவர். இன்பம் - வேனிலாற்சற்றே மகிழலாமென்று கொண்ட மகிழ்ச்சி. பணை -பருமையுமாம் வேனல் என்னும் பாடத்துக்கும் வேனில் என்றே பொருள் "வேனற்பாணிக் கலந்தாண் மென்பூந் திருமுகத்தைக், காணற்பா ணிக்கலந்தாய் காண்" என்புழி வேனல் வேனிலாதல் காண்க [சிலப்பதிகாரம், வேனிற்காதை 210-வது பக்கம்]
வேனில் - இளவேனில், வசந்தகாலம் (௬00)

மாதிரத் திறுதி காறுந் தன்மனத் தெழுந்த மையல்
வேதனை வெப்பஞ் செய்ய வேனிலும் வெதுப்புங் காலை
யாதிங் கிதனின் முன்னைச் சிசிரன் றிதனை நீக்கிக்
கூதிரம் பருவந் தன்னைக் கொணருதி விரைவி னென்றான்.

இ - ள. தன்மனத்து எழுந்தமையல் வேதனை வெப்பம் - (இராவணன்) தனது மனத்தின்கண் எழுந்த காமவெறியாற்கொண்ட வேதனையாலாகிய வெப்பமானது, மாதிரத்து இறுதி காறும் செய்ய - திசைகளின் முடிவுவரையிலும் (வெம்மையைச்) செய்துநிற்க, வேனிலும்-இளவேனிலும், வெதுப்பும் காலை-(அவன்மேனியை) வாட்டும்பொழுது, இது யாது - இந்த ருதுயாது? இங்கு - இவ்விடத்து, இத

னின் - இந்த ருதுவைக்காட்டிலும், முன்னை சிசிரம் அன்று - முந்திய பின்பனிப்பருவம் நன்மையையுடையது, இதனை நீக்கி - இந்த வசந்தருதுவை நீக்கி, கூதிர் ஆம் பருவந்தன்னை - (ஐப்பசி கார்த்திகைமாதங்களில் நிகழ்வதாகிய) குளிர்காலத்தை, விரைவின் தொண்டருதிர் என்றான் - விரைவிற் கொண்டுவாருங்கள் என்று கூறினான்.

கூதிர்வந் தடைந்த காலை கொதித்தனன் குலவுத் திண்டோள்
சீதமுஞ் சுடுமோ முன்னைச் சிசிரமே காணி தென்றா
னாதியா யஞ்சு மன்றே யருளல தியற்ற வென்ன
யாதுமிங் கிருது வாகா தியாவையு மகற்று மென்றான்

இ - ள் கூதிர்வந்து அடைந்த காலை - (அவனிட்ட கட்டளையின்படி) கூதிர்ப்பருவம் வந்து சேர்ந்தபொழுது, குலவு திண்தோள் கொதித்தனன் - (அவனுடைய) திரட்சிபொருந்திய வலியபுயங்கள் கொதிப்புற்றன, சீதமும் சுடுமோ - குளிர்ச்சியென்பதும் சுடுமோ? [சுடாது] இது முன்னை சிசிரமே காண் என்றான் - இது முன் வந்த சிசிரமே தான் என்று (அவ்விராவணன்) கூறினன், (அப்போது ஏவல் செய்வோர்கள்), ஆதியாய - முதல்வனே! அருள் அலது இயற்ற - கருணையல்லாததைச் செய்ய, அஞ்சும் அன்றே - இப்பருவங்கள் பயப்படுமல்லவா? என்ன-என்று கூற, இங்கு - இவ்விடத்து, இருது யாதும் ஆகாது - பருவம் எதுவும் (நன்மையைச் செய்யுமென்று கருதற்கு) ஆகாது, யாவையும் அகற்றும் என்றான் - பருவங்களெல்லாவற்றையும் நீக்கிவிடுங்களென்று (அவ்விராவணன்) கூறினன் (௪0௨)

என்னலு மிருது வெல்லா மேகின யாவுந் தத்தம்
பன்னரும் பருவஞ் செய்யா யோகிபோற் பற்று நீத்த
பின்னரு முலக மெல்லாம் பிணிமுதற் பாசம் வீசித்
துன்னருந் தவத்தி னெய்துந் துறக்கம்போற் றோன்றிற் றன்றே.

இ - ள் என்னலும் - என்று கூறியவளவில், இருது எல்லாம் ஏகின - ருதுக்களெல்லாம் சென்றன, (அன்றியும்), யாவும் - அவ் ருதுக்களனைத்தும், பன்னரும் - சொல்லுதற்கரிதான, தத்தம் பருவம் செய்யா - தத்தமக்குரிய பருவங்களினது செயல்களைச் செய்யாமல், யோகிபோல் - யோகிகளைப்போல், பற்றுநீத்த - பற்று நீத்தன, பின்னரும் - பின்னும், உலகம் எல்லாம் - உலகம் முழுதும், பிணிமுதல் பாசம்வீசி - நோய்முதலாகிய பந்தங்களை யறத்தொலைத்து, துன் - விளங்குகின்ற, அருந்தவத்தின் - அருமையான தவத்தினால், எய்தும் - அடைகின்ற, துறக்கம் போல - தேவலோகம்போல, தோன்றிற்று - காணப்பட்டது, அன்று, ஏ - அசைகள்

குறிப்பு—நாகக் தோலுரித்தாற்போல அகப்பற்றும் புறப்பற்றும் அறத்து இந்திரியவசமறுத்து முற்றத்துறந்து இருக்கும் யோகியர்கள்போலப் பொய் கொலை களவு காமம் பொருளாசை முதலிய வெல்லாச் செயலுமற்று அசைவற்றிருந்ததாக என்பது முன்னிரண்டடியின் கருத்து. யோகம் எண்வகைய, அவை - இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி யென்பன. அவற்றுள், "பொய்கொலை களவே காமம் பொருணசை, யிவ்வகை யைந்து மடக்கிய தியமம்" எனவும், "பெற்றதற் குவத்தல் பிழம்புகணி வெறுத்தல், கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை, பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு, பயனுடை மரபி னிய

மனைந்தே" எனவும், "நிற்ற விருத்தல கிடத்த னடத்தலென், றொத்த கானகி னெல்லா நிலைமையோ, டின்பம் பயக்குஞ் சமய முதலிய, வந்தமில சிறப்பி ஞசன மாகும்" எனவும, "உந்தியொடு புணாந்த விருவகை வளியுந், தந்த மியக்கந் தடுப்பது வளி நிலை" எனவும, "பொறியுணா வெல்லாம புலத்தின் வழாமை, யொருவகைப படுப்பது தொகைநிலை யாமே" எனவும, "மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை" எனவும, "நிறுத்திய வம்மன நிலைதிரியாமற, குறித்த பொருளொடு கொளுத்தல தியானமே" எனவும, "ஆங்ஙனங் குறித்த வம்முறற பொருளொடு, தானபிற னாகாத் தகையது சமாதி" எனவும வருவனவற்றாலறிக. அநித்தியமாயத தனபத்திறகிடமாய உயிரின வேறாயுள்ள உடமபுக்கு வருத்தமவருமென்று விடாமல தவத்தைச் செய்து அதனமுன அநாதியாயப பிறப்பு, பிணி, மூப்பு, இறப்பு எனபவறறால துனபபபடடுக்கொண்டு வருமுயிரானது ஞானம்பெற்று மோட்சத்தையடைதலபோல அங்ஙனம யோகநிலையடைந்தோா இராவணன எவவிலவிளைந்த செயலாற கடவுளைக்கருதித துதிக்கும ஞானத்தையடைந்து மோட்சம பெற்றாரகள போனறிருந்தமையால அவவிலங்கை வீடுபோனறிருந்ததெனபது பினனிரணடடியின கருத்து இக்கருத்துக்கியைய துறக்கம என்றற்கு வீடு என்றும துனனருந்தவம எனபதறகுத துன்னுதறகு அரியதவமென்றும பொருள்கூறுக "தவஞ்செயவாா தஙகருமஞ் செயவாாமற றலலா, ரவஞ்செயவா ராசையுட படடு" என்னுந் திருக்குறளானும, "நற்றுணை சில நடுவகாத தவமறிவா சிறபின் நானகு, மறறுஙகுச சொனன மனைவியரின் நாலவரவா வயிற்றுட டோனறி, யுற்ற ஞெருத்தனே மேறகதிககுக் கொணடுபோ மாறவோன" "இந்நாலவா துணைவியராகக காதனமக ணிவன வுடையாா போகிப, பொனனனா மாாபிற புரந்தாராயப பூமி முழுது மாணடு, மனனா முககுடைக கீழ்வாமன சிறப்பியறறி வரம்பிலினபம், பினனு விளைவித்துப் பிறவா வுலகெயதல பேசலாமே" என்னுஞ் சிந்தாமணிச செய்யுட்களானும தவத்தால வீடுபெறுதலுணாக இனி, தவமுயனறோா போக பூமியின இனபத்தைபபெறறுப பின்னா அதனை இழந்துவிடுதலபோல இவவிலங்கையாககுறற யோகநிலை யழிந்துவிடுமே என்னுங் கருத்துந்தோனறக் கூறினா ரெனனலுமாம இப்பொருட்குத துறக்கம தேவலோகமென்று பொருள் கூறுக "பொனனிலத் திட்ட வித்திற புறக்கென விளைந்து போகம, பினனெனத் துறக்கும" என்னுஞ் சிந்தாமணிச்செய்யுளான போகபூமியினபம நிலையிலலாமையாதல உணாக "தேனெய தோயந்தன தீவிய திருமணி யனைய, வானி னுயபபன வாகதி தருவன மதியோா" என்னுஞ் சிந்தாமணிச் செய்யுட்கு ஆசிரியா நச்சினார்க்கினியர் 'தேனுகாவாாககு, அதுபுளிச சுவையையுந் தருதலின, நிலையிலலாத துறக்கந்தருகின்ற அறத்திறகு உவமையாயிறறு துறக்கத்தையும, வீட்டையுந்தருகின்ற இருவகையறமுங் கூறுகின்றது" என்று கூறிய வுரையும ஈண்டு நோககறபாலது (௪0௩)

கூலத்தா ருலக மெல்லாங் குளிரப்பொடு வெதுப்பு நீங்க
நிலத்தா ரரக்கன மேனி நெய்யினறி யெரிந்த தன்றே
காலத்தால் வருவ தொன்றோ காமத்தாற கனலும வெந்தீச்
சீலத்தா லவிவ தன்றிச் செயயத்தா னுவ துண்டோ.

இ - ள். கூலத்து ஆா உலகம எல்லாம - கடறகரையின கண் தங்கிய உலக முழுதும, குளிரப்பொடு வெதுப்பு நீங்க - குளிர்ச்சியும வெப்பமும நீங்கினதால

நீலத்து ஆர் அரக்கன் மேனி - நீலத்தின் நிறத்தில் தங்கிய (இராவணன் என்னும்) அவ்வரக்கனுடைய உடலானது, நெய் இன்றி எரிந்தது - நெய்யில்லாமல் (நெருப்புப்பற்றி எரிவதுபோல்) எரிந்தது, காலத்தால் வருவது ஒன்றோ - காலத்தால் வரப்பட்டது ஒன்று தானோ? [ஒன்றல்லபல], காமத்தால் கனலும் வெந்தீ - காமத்தினாலே (உடலிற்பற்றி) எரிகின்ற கொடிய தீயானது, சீலத்தால் அவிவது அன்றி - நல்லறிவினால் அவியுந் தன்மையது அல்லாமல், செய்ய ஆவது உண்டோ - (இதர பரிகாரங்கள்) செய்வதால் (அவியுஞ்செயல்) உண்டாவது முண்டோ? [உண்டாக மாட்டாது]

குறிப்பு — ஒவ்வொரு பருவத்தினும் அவ்வப்பருவங்களுக்கு ஏற்றபடி நிகழுஞ் சுக துக்கங்களையும், மன நிலைக்குத் தக்கபடி காலங்கள் நல்லவை தீயவையாகத் தோன்றுவதையும் உள்ளப்படுத்தி 'காலத்தால் வருவதொன்றோ' என்றார். (௪௦௪)

நாரமுண் டெழுந்த மேகந் தாமரை வளைய நாறு
சாரமுண் டிருந்த சீத சந்தனத் தளிர்மென் றாதோ
டாரமுண் டிருந்துஞ் சிந்தை யயர்கின்றா னயனின் றாரை
யீரமுண் டென்ப ரோடி யிந்துவைக் கொணர்மி னென்றான்

இ - ள். நாரம் உண்டு எழுந்த மேகம் - நீரைப்பருகி எழுந்த மேகம்போன்ற இராவணன், தாமரை வளையம் - தாமரை வளையங்களும், நாறு சாரம் உண்டு இருந்த - பலவிதமான (வாசனைத்திரவியங்களுடைய) சாரங்களை யுண்டிருந்த, சீதம் சந்தனம் - குளிர்ச்சி பொருந்திய சந்தனத்தில் தோய்த்த, தளிர் - இளந்தளிர்களும், மெல் தாதோடு ஆரமும் - மெல்லிய பூந்தாதுகளும் பூமாலைகளும், உண்டு இருந்தும் - (தனது உடலில்) பொருந்தப்பெற்றிருந்தும், சிந்தை அயர்கின்றான் - மனந்தளர்கின்றவனாகி, அயல் நின்றாரை - பக்கத்தில் நின்ற சிலதர்களை (நோக்கி), ஈரம் உண்டு என்பர் ஓடி - (எம்மனத்தே) கருணையுண்டு என்று சொல்பவர் (உங்களில் யாரோ? அவர்கள்) விரைந்து சென்று, இந்துவை கொணர்மின் என்றான் - சந்திரனைக்கொண்டு வாருங்களென்று கூறினான்.

குறிப்பு — மேகம் - உவமவாகுபெயர். இவ்விராவணன் மேனியிற் குளிர்ந்த சந்தனாதிகள் சேர்ந்த தன்மைக்கும் அம்மேனியின் நிறத்துக்கும் நாரமுண்டெழுந்த மேகம் உவமை. தாமரை வளையம் - தாமரைப் பூச்சுருள், பீசமென்பதுமது. ஆரம் தனிச்சந்தனமுமாம். ஈரமுண்டென்பர் என்றது - இராவணன் தனது ஆணைவழியடங்கி ஏவல் செய்வோரைத் தன்பாற் கருணை புரியும்படி வேண்டி முகமன் கூறின தன்மை விளங்குகிறது. இனி, நெருப்பின் தன்மை பொருந்திய இச்சந்தனாதிகளிடத்துக் குளிர்ச்சியிருக்கிறதென்று சொல்லுங் கொடியோரெவரோ அவர்கள் என் கண்முன் நில்லாது ஓடிச் சந்திரனைக்கொண்டு வரக்கடவர் என்று கோபத்தோடு கட்டளையிட்டான் என்பது விளங்குகிறதென்று கூறலுமாம். அன்றியும் ஈரமுண்டு என்பர் - (சந்திரனிடம்) குளிர்ச்சியுண்டென்று (உலகத்தார்) சொல்வார்கள், (ஆதலால்), எனினுமமையும். (௪௦௫)

வெஞ்சினத் தரக்க னுண்ட வியன்கா மீது போது
நெஞ்சில னொதுங்கு கின்ற நிறைமதி யோனை நோக்கி
யஞ்சலை வருதி யின்னே யழைத்தன னரச னென்னச்
சஞ்சலந் துறந்து தானச் சந்திர னுதிக்க லுற்றான்.

இ - ள். வெஞ்சினத்து அரக்கன் ஆண்ட வியன் நகர் மீது போதும் நெஞ்சினன் ஒத்து ஓங்குகின்ற நிறைமதியோனை நோக்கி - வெவ்விய கோபத்தையுடைய (இராவணன் என்னும்) அரக்கன் அரசாட்சிசெய்த பெருமை பொருந்திய (இலங்கையென்னும்) நகர் மேற்செல்லும் மனமில்லாதவனைப்போல (அந்நகர்க்குப்புறத்தே) ஓங்கிச்செல்கின்ற பூரணசந்திரனை (அச்சிலதாகள்) பார்த்து, அரசன் நின்னை அழைத்தனன் அஞ்சலை வருதி என்ன - (நமது) அரசன் உன்னை அழைத்தான் பயப்படாமல் வருவாயாக வென்று கூற, அச்சந்திரன் சஞ்சலம் துறந்து உதிக்கலுற்றான் - அந்தச்சந்திரன் மனக்கலக்கமொழிந்து உதயஞ் செய்தான்.

குறிப்பு—போதும் - செய்யுமென்னெச்சம், போதுதல் - செல்லுதல். தான் - அசை. இனி, தானம் சந்திரனெனப்பிரித்துத் தானமென்றற்கு ஊன எனப் பொருள் கூறுதலுமாம். (௪௦௬)

அயிருறக் கலந்த நன்னீ ராழியின் றாழி நீத்துச்
செயிருறக் கலந்த தாண்டோர் தேய்வுவந் துற்ற போது
வயிரமுற் றுடைந்து சென்றோர் வலியவற் செல்லு மாபோ
லுயிர்தெறக் காலன் என்பா னொத்தன னுதயஞ் செய்தான்.

இ - ள். அயிர் உற கலந்த நல் நீர் ஆழியின்று ஆழி நீத்து செயிர் உற கலந்தது - ஐயம் உறும்படியாக (நிலவோடு) கலந்த நன்மைபொருந்திய நீர்நிறைந்த கடலின் மேல்நின்று வட்டவடிவை யொழித்துத் (தன்மனத்தில்) துன்பம் பொருந்தும்படி வந்து சோர்ந்ததாகிய அச்சந்திரன், ஆண்டு - அவ்விடத்து, உடைந்து வயிரம் உற்று சென்றோர் - (வலிய பகைவனால்) தளர்வுற்று வயிராக்கியத்தையடைந்து சென்றவர்கள், ஓர் தேய்வு வந்து உற்றபோது - (அப்பகைவனுக்கு) ஒரு மெலிவுவந்து சம்பவித்தபொழுது, வலியவன் செல்லும் ஆ போல - அவ்வலியவன்மேல் (அவர்கள் எதிர்த்துச்) செல்லுமாறுபோல, உயிர் தெற - (இராவணனது) உயிரை அழிக்க, காலன் என்பான் ஒத்தனன் - யமன் என்பவனை ஒத்தவனாகி, உதயம் செய்தான்.

குறிப்பு—நிலவின் ஒளியால் இத்தோற்றம் நிலவோ? கடல்நீரோ? என்று ஐயமுறுமாறு கடல்மேல் நிலவொளி பரந்ததென்பார் 'அயிருறக்கலந்த' என்றார். அயிர் - முதனிலைத்தொழிற்பெயர். அயிர் என்றதற்கு நுண்மணலென்று பொருள் கூறுதல் சிறப்பன்றாம். கடலால் உலகுக்குப் பலவகையான நன்மையுளவாதலானும், புவியையுண்ணுந் தன்மைத்தாயிருந்தும் அங்ஙனமியற்றாது வரம்புக்குட்பட்டுப் பொறுமையோடிருத்தலானும் 'நன்னீர்' என்றார். கீழ்க்கவியிற் கூறியவாறு பூரண வுருவோடிருந்த அச்சந்திரன் இராவணனால் எத்தீங்கு நேருமோ என்றுற்ற ஏக்கத்தால் உருவழிந்து இளைத்தான் என்பார் 'ஆழிநீத்து' என்றார். இக்கவியிற் செயிருற என்றவர் கீழ்க்கவியிற் 'சஞ்சலந்துறந்தான்' எனக்கூறியதென்னையோவெனின், தன்னுள்ளத்துக் கவலையிருப்பினும் அதனை வெளிப்படுத்தாது இருப்பின் நலமென்றும் அன்றேல் அதுவே ஓர் குற்றமாக முடியுமென்றும் கருதினமை விளங்கற்கென்க. இராவணனது நிலைமைநோக்கித் தான் அஞ்சவேண்டுவதில்லை யென்றும் தன்பகையைத் தீர்த்துக்கொள்வதற்கு இதுதான் தருணமென்றும் பெருமகிழ்ச்சியுற்றுப் பூரிப்புற்றுக் கோபித்துக் கோடிசூரியன்போல வெப்பங்கொண்டெழுந்தமை விளங்க அம்மதிக்கு மேற்கவியில் அராவணை துயிலும் அண்ணலின் திகிரியை உவமை கூறினார். (௪௦௭)

பராவரு கதிரக ளெங்கும பரபபிமீப் படாநது வானிற
றராதலத தெவரும பேண வவனையே சவிககு நீரா
லராவணை துயிலு மணணல காலமோாந தற்ற நோககி
யிராவண னுயிரமே லுயதத திகிரியு மெனன லானான.

இ - ள (அசசநதிரன) வானில மீபடாநது -(பூரிததுச செருககுறறு) ஆகா யததினமேல நடககலுறறு, பராவருகதிாகள எஙகும பரபபி - புகழதறகரிய (தன து) கிரணஙகளை எவவிடததும பரவசசெயது, தராதலதது எவரும - பூமியிலுளள எததகையாரும, பேண - விருமபி, அவனையே சவிககும நீரால - (காமநோயுறற காலதது) அசசநதிரனையே சவிததுககொளளும தனமையினால, அரா அணை துயி லும அணணல - சாபப சயனததில நிததிரைசெயதருளுகினற ஸ்ரீ மகாவிஷ்ணு, காலம ஓாநது - (கெடுதி சமபவிககும) காலததை யறிநதும, அறறம நோககி - (மெலிவுறற) சமயம பாாததும, இராவணன உயிாமேல—, உயதத - செலுததிய, திகிரியும எனனல ஆனான - சககராயுததததையும (ஒததான) எனறு கூறுதறகு (க கோடி சூரியபபிரகாசததை யுடையவனும) ஆயினான. (௪௦௮)

அருகுறு பாலின் வேலை யமுதெலா மளைநது வாரிப
பருகினன பாநது பாயநத நிலாசசுடாப பனிமென கறறை
நெரியுறு புருவச செஙக ணரககறகு நெருபபி னுபப
னுருகிய வெளளி யளளி வீசினு லொதத தனறே.

இ - ள பாலின வேலை - பாறகடலில, அருகு உறு அமுது எலாம - பககத திலுறற அமிாதம முழுவதையும, அளைநது வாரி - குழைதது எடுதது, பருகினன - பருகி (குடிதது), பாநது பாயநத-பரவிபபாயதலுறற, நிலா சுடா பனி மெல கறறை நிலாவினது பிரகாசம பொருநதிய குளிாசசியையுடைய மெலலிய திரளானது, நெரி உறு புருவம செஙகண அரககறகு - நெரிதலுறற புருவததினையும சிவநத கணணையுமுடைய இராவணனுககு, நெருபபின நாபபண உருகிய வெளளி அளளி வீசினால ஒததது - அககினியினிடையே உருகிய வெளளியை அளளி வீசினதை ஒததிருநதது

குறிபபு —சநதிரன பாறகடலிற பிறநத பொழுது அமுதும பிறநததாதலால 'அருகுறு' எனறாா. இனி, அருகுறு எனறகு - அருகுறலுறற [சுருஙகுதலுறற] எனறு பொருளகொணடு கடலுககு அடையாககிக கடைநது அககடலிலுளள சத துககளையெலலாங கவாநதுகொணடதால சுருஙகலுறற தெனறு கூறுதலும அமை யும், கோபிதது விழிததுப் பாாததமை விளஙக 'நெரியுறு புருவச செஙகண' என றாா (௪௦௯)

மினனிலந திரிநத தனன விழுநிலா மிதிலை சூழநத
செனனலங கழனி நாடன றிருமகன செவவி கேளா
நனனலந தொலைநது சோரு மரககனை நாளுந தோலாத
துனனல னொருவன பெறற புகழெனச சுடட தனறே.

இ - ள விழுநிலா - மேனமைபொருநதிய சநதிரன, மினனிலம திரிநதது அனன - மினனல நிலததினகண திரிநததையொதத, செனனலஞ்சூழநத அம கழனி மிதிலைநாடன திருமகன - செநநெலசூழநத அழகிய வயலகளையுடைய மிதி

லேநாடு வேந்தனாகிய ஜனகமகாராஜனது செல்வியாகிய சீதாபிராட்டியின் நாயக னாகிய ஸ்ரீராமபிரானது, செவ்வி - அழகினை, கேளா - கேள்வியுற்று, நல்ல நலம் தொ லைந்து சோரும் அரக்கனை - நல்ல மகிழ்ச்சியீங்கித் தளர்கின்ற இராவணனை, நாளுட - னென்றும், தோலா - தோல்வியடையாத, தன்னன்ன ஒருவனைப்பெற்ற - ஒருபகைவனை அடைந்த, புகழ் என - புகழைப்போல, சுட்டது—,

குறிப்பு —மகன் - கணவன். புகழ் சந்திரனுக்கு உவமை (௧௪௦)

கருங்கழற் கால னஞ்சுங் காவலன் கருத்து நோக்கித்
தருங்கதிர்ச் சீத யாக்கைச் சந்திரற் றருதி ரென்ன
முருங்கிய தணலின் மூரி விடத்தினை முக்கக் குஞ் சீற்றத்
தருங்கதி ரருக்கன் றன்னை யாரழைத் தீர்க ளென்றான்

இ - ள். கருங்கழல் காலன் அஞ்சும் காவலன் - பெருமை பொருந்திய கழலினை யணிந்த காலினையுடையானாகிய காலனும் அஞ்சுகின்ற அரசனாகிய இராவணன், கருத்து நோக்கி - (என்) உள்ளக்கருத்தை யறிந்து, தரும் கதிர் - தருகின்ற கிரணங்களையுடைய, சீத யாக்கை - குளிர்ச்சிபொருந்திய உடலினைய டைய, சந்திரன் தருதிர் என்ன - சந்திரனைக் கொடுப்பீர்கள் என்று (யான்) கூற, முருங்கிய தணலின் - கெட்ட நெருப்பைப்போன்ற, மூரி விடத்தினை -வலிய விஷ த்தை, முக்கும் - முக்கின்ற, சீற்றத்து - கோபத்தினையுடைய, அருங்கதிர் அருக் கன் தன்னை -அரிய கிரணங்களையுடைய சூரியனை, யார் அழைத்தீர்கள் என்றான் - யார் அழைத்துவந்தீர்கள்? என்று கூறினான்.

குறிப்பு —காலன் - யமன் முக்குதல் - மொள்ளல். (௧௪௧)

அவ்வழிச் சிலத ரஞ்சி யாதியா யுருளில் லாரை
யிவ்வழித் தருது மென்ப தியம்பலா மியல்பிற் றன்றால்
செவ்வழிக் கதிரோ னென்று நேரின்மே லன்றி வாரான்
வெவ்வழித் தெனினுந் திங்கள் விமானத்தின் மேலதென்றார்

இ - ள். அவ்வழி சிலதர் அஞ்சி - அவ்விடத்திய வேலைக்காரர்கள் பயந்து, ஆதியாய - முதல்வனே! அருள் இல்லாரை - கருணையில்லாதவர்களை, இவ்வழித்தரு தும் என்பது இயம்பல் ஆம் இயல்பிற்று அன்று - இவ்விடத்து (அழைத்துவந்து) தருவோம் என்று சொல்வதானது சொல்வதற்காகிய தன்மையையுடையதன்று, செவ்வழி கதிரோன் -நேர்வழியையுடைய சூரியன், என்றும் - எக்காலத்தும், தேரி ன் மேல் அன்றி வாரான் - இரதத்தின்மேல் அல்லாமல் வரமாட்டான், வெவ்வழி த்து எனினும் -வெவ்விய தன்மையையுடையதென்றாலும், விமானத்தின் மேலது - விமானத்தின்மேலிருப்பது, (ஆதலால்), திங்கள் -(காணப்படுவது) சந்திரனே, என்றார் - என்று வற்புறுத்தினார்கள்.

வேறு

பண்ணுந்தார் மூலகுற பனிமொழியாக் கன்பு பட்டார் பங்காமக்
குண்ணந்தான் முன்ன மறியாதான் கொதியா னின்றான் மதியாலே
தண்ணந்தா மரையின் றனிப்பகைஞ் னென்னுந் தன்மை யொருந்தானே
புணர்ந்தா னுணர்வுற் றவன்மேலிட் டியோதந் துயக்க வுரைசெய்வான்.

இ - ள். பணம் தாழ் அல்குல் பணிமொழியார்க்கு - பாம்பின்படம் போன்ற அல்குலையும் குளிர்ந்த சொல்லினையுமுடைய பெண்களுக்காக, அன்புபட்டார் - ஆசைப்பட்டவர்கள், படமே - அடைகின்ற, காமம் குணம் - காமத்தினது தன்மையை, முன்னம் அறியாதான் - (இதற்கு) முன் அறியாதவனும், மதியாலே—, கொதியா நின்றான் - கொதிக்கின்றவனுமாகிய இராவணன், தண் அம் தாமரையின் தனி பகைஞன் - குளிர்ச்சி பொருந்திய அழகிய தாமரைக்கு ஒருபகைவனாகிய சந்திரன், என்னும் - என்று கூறும், தன்மை - நிலைமை, ஒருதானே - ஒன்று மட்டுமே, உணர்ந்தான் - அறிந்து, (பின்னர் அதன் மூலமாக), உணர்வு உற்று - உணர்ச்சியடைந்து, அவன்மேல் இட்டு - அச்சந்திரன்மேல் (நாட்டம்) வைத்து, உயிர் தந்து உய்க்க - உயிரைக்கொடுத்து இரட்சிக்கும்படி, உரை செய்வான் - சிலசொற்களைக் கூறுவானாயினன்.

குறிப்பு —தாழ் - உவமவாசகம், மதி-சந்திரன், அறிவு, சந்திரனால் கொதிக்கின்றானெனவும், குளிர்ந்த சந்திரனால் மகிழவேண்டியிருக்க அதற்கு விரோதமாகக்கொதிப்பது அவன் புத்திமாறுபட்டதாலென்றும் இருவகையாகப் பொருள் படுமாறு 'கொதியா நின்றான் மதியாலே' என்றார். இனி, பணந்தாழ் . . .அறியாதான், என்வே இதுவரை எவ்வெம்மாதரை யிவணிச்சிப்பினு மவரையெல்லா மூறினறெய்தினன் காமத்தாலொருவிதவுிமையையு மநுபவித்திலன் என்பது குறிப்பிக்கப்பட்டது. சந்திரனை முதலிற் சூரியனென்று கருதிய ராவணன், தன்மேனியிற் கிடத்திய தாமரை மலர்கள் தன்னைச் சுடுதலை நோக்கி, இக்கதிர் சூரியனேயாயின் இத்தாமரைகள் மகிழ்ந்து குளிர்ச்சியைத்தரும் சந்திரனன்மையால் அவை வெருண்டு வெம்மை தருகின்றன என்று கருதிய ஒரு காரணத்தைக்கொண்டு தோன்றிய கதிரைச் சந்திரனென்று தீர்மானிக்க உணர்ச்சி பிறந்தது என்பது ஈற்றிரண்டடியின் கருத்து ஒருதானே - ஒப்பற்றதானே என்றும்பொருள்படும் (௧௧௩)

தேயா நின்றாய் மெய்வெளுத்தா யுள்ளங் கறுத்தாய் நிலைதிரிந்து
காயா நின்றாய் பொருநீயுங் கண்டார் சொல்லக் கேட்டாயோ
பாயா நின்ற மலர்வாளி பறியா நின்றா ரின்மையால்
ஓயா நின்றே னுயிர்காத்தற் குரியார் யாவ ருடுபதியே.

இ - ள் உடுபதியே - நட்சத்திரங்களுக்கு அரசனாகிய சந்திரனே! (மெய்) தேயாநின்றாய் - உடல் தேய்கின்றாய், மெய்வெளுத்தாய் - உடல் வெளுப்புற்றாய், உள்ளம் கறுத்தாய் - மனத்திற் கோபமடைந்தாய், நிலைதிரிந்து - (உன்) தன்மை வேறுபட்டு, காயாநின்றாய் - காய்கின்றாய், ஒரு நீயும் - (என்னைப்போல) ஒருவனாகிய நீயும், கண்டார்சொல்ல் கேட்டாயோ - (சீதையைக்) கண்டவர் (அவளழகை யெடுத்துச்) சொல்லக் கேள்வியுற்றாயோ? பாயாநின்ற மலர்வாளி - (மையலுற்றார் மேற்) பாய்கின்ற புஷ்பபாணங்களை, பறியாநின்றாரின்மையால் - பறிக்கின்ற பெண்மேற்கொண்ட காமவெறியினாலே, ஓயாநின்றேன் - தளர்கின்றேனுடைய, உயிர்காத்தற்கு - உயிரை இரட்சிப்பதற்கு, யாவர் உரியார் - எவர் உரிமையுடையவர்கள்.

குறிப்பு.—சந்திரனே! நீ என்னைப்போல் தேய்ந்தும் வெளுத்தும் உள்ளங் கறுத்தும் காய்கின்றதன்மையைப் பார்க்குமிடத்து நீயும் சீதையின் அழகைக்கேட்டு விரகமுற்றாய்போலும். நான் காமுற்ற தகைமையால் மன்மதன் பாணங்கள் என் மேற் பாய்கின்றன. நான் எவள்மேல் மையல்கொண்டேனோ அவள் என்போலும் மையல்கொள்ளாமையால் அம்மன்மதபாணங்களாகிய புஷ்பங்களைப்பறித்து வினை

யாமின்றான் அது எனக்குப் பொறுமையாயிருக்கின்றது என் உடல் எய்ந்த வெப்பத்தைக் குளிர்ந்த அமிர்தகிரணங்களையுடைய உன்னால் தணித்துக்கொள்ளலாமென்று உன்னை அழைத்தேன் நீயும் என்போல் வெப்பங்கொண்டிருப்பதால் இனி எவரால் என் வெப்பத்தைத் தணித்துக்கொண்டு பிழைப்பேனென்றானென்பதாம்

ஆற்றா ராகிற் றம்மைக்கொண் டடங்கா ரோவென் னாருயிர்க்குக்
கூற்றாய் நின்ற குலச்சனகி குவளை மலர்ந்த தாமரைக்குத்
தோற்றா யதனா னகங்கரிந்தாய் மெலிந்தாய் வெதும்பத் தொடங்கினாய்
மாற்றார் செல்வங் கண்டழிந்தால் வெற்றி யாக வற்றாமோ

இ-ள். ஆற்றார் ஆகில் - (தாங்கொண்ட விரகதாபத்தைத்) தணித்துக்கொள்ளாதாராயின், தம்மைக் கொண்டு அடங்காரோ - (அவர்) தமது அறிவைக்கொண்டு அடங்கியிருக்க மாட்டார்களோ? என் ஆர் உயிர்க்குக் கூற்றாய் நின்ற குலம் சனகி - எனது அரிய உயிருக்கு யமனாய் நின்ற மேன்மை பொருந்திய ஜானகியினுடைய, குவளை மலர்ந்த - குவளைப் புஷ்பங்கள் விரிந்துள்ள [குவளைபோன்ற கண்களையுடைய], தாமரைக்கு - (முகமாகிய) தாமரைமலர்க்கு, தோற்றாய் - தோல்வியடைந்தாய், அதனால் - அக்காரணத்தால், அகம் கரிந்தாய் - மனங்கருகுதலுற்றும், மெலிந்தாய் - (உடல்) தேய்தலுற்றும், வெதும்பத் தொடங்கினாய் - சினக்குறிப்புக்காட்டத் தொடங்கினாய், மாற்றார் - பகைவருடைய, செல்வம் கண்டு - செல்வத்தைப்பார்த்து, அழிந்தால் - மனநிலை வேறுபட்டால், வெற்றி ஆக அற்று ஆமோ - வெற்றி போலும் அத்தன்மைத்தாகுமோ?

கருத்து.—தாம் இச்சித்தபெண் தமக்குக்கிட்டி அவளைக்கொண்டு தமது விரகநோயை ஆற்றிக்கொள்ள முடியாதென்று ஏற்பட்டால் "கிட்டாதாயின் வெட்டென மற" என்றவாறு மறந்து தம்மறிவைக் கொண்டடங்கி விடுவார்கள் அதுபோல இராவணனால் இச்சிக்கப்பட்ட பெண்ணை விரும்புவதிற் பயனில்லையென்று நீயே உன் அறிவைக்கொண்டடங்கிவிடுவாய் ஆதலால் நீ விரகதாபத்தால் இளைத்தாய் என்று கூறுதற்கு நியாயமில்லை மற்றென்னையெனின், தாமரை மலர்கள் எல்லாம் நின்னைக்கண்டவுடன் வாட்டங்கொண்டு குவிதல்போலச், சீதையினுடைய முகமென்னுந் தாமரையானது நின்னைக்கண்டு வாடாமல் மலர்ந்திருக்குந் தன்மை நோக்கி, இதனை வெல்லுதற்கு வலியற்றேனே என்று நீகொண்ட விசனத்தால் இங்ஙனந் தேய்ந்து வெதும்பத் தொடங்கினாயேயல்லாமல் வேறல்ல என்பேன் மாற்றாருடைய செல்வங்கண்டு பொறாமைப்படுதல் வெற்றியாகமாட்டாது. உனக்கு வலியில்லையாயினும் உன் அரசனாகிய மன்மதனை அப்பெண்மேற் போர்செய்யச்செய்து யான் விரகதாபமுற்றதுபோல அவளுக்கும் விரகதாபத்தை யுண்டாக்கிய பின்னர் நீ செல்வாய் ஆகில் அவள் முகத்தாமரையைவெற்றி கொள்ளலாமென்று கூறினானென்பதாம் (௪௫)

என்னப் பன்னி யிடருழவா விரவோ டிவனைக் கொண்டகற்றி
முன்னைப் பகலும் பகலோனும் வருக வென்றான் மொழியாமுன்
னுன்னற் கரிய வுடுபதியு மிரவு மொழிந்த வொருகொடியிற்
பன்னற் கரிய பகலவனும் பகலும் வந்து பரந்தவால்.

இ-ள். என்ன பன்னி இடர் உழவா - என்று சொல்லித் துன்பத்திலே வருந்தி, இரவோடு இவனை கொண்டு அகற்றி - இராக்காலத்தையும் இச்சந்திரனையும்

நீக்கிவிட்டு, முன்னை பகலும் பகலோனும் வருக என்றான் - முந்திய பகற்காலமும் சூரியனும் வரக்கடவதென்று கூறினன், மொழியாமுன் - அங்ஙனங்கூறி முடிப்பதற்குமுன்னமே, உன்னற்கு அரிய உடுபதியும் இரவும் ஒழிந்த - நினைத்தற்கரிய சந்திரனும் இராக்காலமும் ஒழிந்துபோயின, ஒருநொடியில் - ஒருநொடிப்பொழுதுக்குள், பன்னற்கு அரிய பகலவனும் - சொல்லுதற்கரிய சூரியனும், பகலும் - பகற்காலமும், வந்து—, பரந்த - பரவுதலுற்றன.

குறிப்பு —இரவிற் காணப்படும் பொருள்களை இவை இன்னவையேயாமென நன்கு தெளிந்தறிதற்கியலாமையால் 'உன்னற்கரிய' என்றார். இனி, காமவிஷயங்களிலீடுபட்டு அடையும் அளவற்ற லீலைகளும் அவற்றிற்கு அநுசரணையாயிருக்கின்ற சந்திரன், தென்றல், மலர்கள், வாசனைத்திரவியங்கள், யாழ்ப்பாடல் முதலிய பாடல்கள், இன்சொற்கள், ஊடல் முதலியவைகளும் அளிக்கின்ற இன்பங்களனைத்தும் இத்தன்மையன வென ஒன்றொன்றாய்ப் பிரித்துக் கருதற்கரிய இரவு என்ப பொருள்கோடலுமாம். (௧௧௬)

இருக்கின் மொழியா ரெரிமுகத்தி னீந்த நெய்யி னவிர்செம்பொ
னுருக்கி யனைய கதிர்பாய வனல்போல் விரிந்த துயர்கமல
மருக்க னெய்த வமைந்தடங்கி வாழா வடாத பொருளெய்திச்
செருக்கி யிடையே திருவிழந்த சிறியோர் போன்ற சேதாம்பல்

இ - ள். (அருக்கன் எய்த—), இருக்கின்மொழியார் - இருக்கு என்னும் வேதத்தின் சுருதிகளைச்சொல்லி யாகஞ்செய்பவர், எரிமுகத்தின் ஈந்த - (யாககுண்டத்து) நெருப்பில் அளித்த [வார்த்த], நெய்யின் - நெய்யைப்போல, அவிர் செம்பொன் உருக்கி அனைய கதிர் - பிரகாசிக்கின்ற செம்பொன்னை உருக்கினாற்போன்ற (அச்சூரியனுடைய) கிரணங்கள், பாய—, (அதனால்), உயர்கமலம் - உயர்ந்த தாமரைமலர்கள், அனல்போல விரிந்தது - (அந்த யாககுண்ட) நெருப்பைப்போல மலர்ந்தன, அருக்கன் எய்த - சூரியன்வர, சேதாம்பல் - செய்ய ஆம்பல்மலர்கள், அடாத பொருள் எய்தி - (தாமடைதற்கு) தகாத (உயர்ந்த) பொருளை அடைந்து, அமைந்து அடங்கி வாழா - (அப்பொருளடைந்ததற்கேற்ப) பொருத்தமாய் அடங்கி வாழாமல், செருக்கி - அகங்கரித்து, இடையே - மத்தியகாலத்தில், திரு இழந்த - அப்பொருளை யிழந்துவிட்ட, சிறியோர்போன்ற - சிறியவர்களை ஒத்திருந்தன.

குறிப்பு—இருக்கின்மொழியார் - முனிவர். முகம் - ஏழனுருபு. நெய்யின்பாய என்று கூட்டுகை. யாககுண்டத்துப் பெய்யும் நெய் சூரியகிரணத்துக்கும், யாகாக்கினி தாமரைமலருக்கும், முனிவர் - சூரியனுக்கும், அடாத பொருள் - சந்திரனுக்கும் உவமை. அருக்கனெய்த - இடைநிலைத் தீவகம். சந்திரகிரணத்தால் மகிழ்ந்து மலர்ந்த சேதாம்பல்கள் சூரியனுதித்தலுங் குவிந்தன என்பது ஏற்றிரண்டடியின் கருத்து. இராக்கால முடிதற்கு முன்பு சூரியனுதயமாய்ச் சேதாம்பல்கள் குவிய நேரிட்டமையால், அவற்றிற்குத் திருவிழந்த சிறியோரை உவமை கூறினார். இருக்கின் மொழியார் வெங்கதிருடனே சூழவரும் விளங்கிய சடையினையுடையாராகலின், அவர் சூரியனுக்கு உவமையானாரெனக். "நிலமிசை வாழுந ரல்ல றீரத், தெறு கதிர்க் கனலி வெம்மை தாங்கிக், காலுண வாகச் சுடரொடு கொட்கு, மவிர்சடை முனிவரும்" என்றார் புறப்பாட்டினும். (௧௧௭)

நாணி நின்ற வொளி மழுங்கி நடுங்கா நின்ற வுடம்பினனாய்ச்
சேணி னின்று புறஞ்சாய்ந்து கங்குற் றாரம் பின்செல்லப்
பூணின் வெய்யோ னொருதிசையே புகுதப் போவான் புகழ்வேந்த
ராணை செல்ல நிலையழிந்த வரசர் போன்றா னல்லாண்டான்.

இ - ள். அல் ஆண்டான் - இராக்காலத்தை ஆண்ட சந்திரன், பூணின் வெய்யோன் ஒரு திசையே புகுத - ஆபரணங்களை யணிந்த சூரியன் ஒரு திக்கிலே பிரவேசிக்க, (அதனால்), நாணி நின்ற ஒளி மழுங்கி - நாணம் அடைந்து நின்ற (தன்) ஒளியானது (முற்றும்) மழுங்குதலுற்று, நடுங்கா நின்ற உடம்பினனாய் - நடுங்குகின்ற உடம்பினையுடையானாகி, சேணில் நின்று புறம் சாய்ந்து - வானிலிருந்து ஒருபக்கமாகச்சாய்தலுற்று, கங்குல் தாரம் பின்செல்ல - இரவாகிய மனைவி (தன்) பின்னே செல்லும்படி, போவான் - செல்லுவோனாகி, புகழ்வேந்தர் ஆணை செல்ல - புகழையுடைய அரசர்களது ஆணையானது நடக்க, (அதனால்), நிலை அழிந்த அரசர் போன்றான் - (தம்) நிலைமை கெட்ட அரசரை யொத்தானாயினான்,

குறிப்பு — ஆணை - ஆக்கினை, வெற்றி புகழ்வேந்தர் - சூரியனுக்கும், ஆணை - கிரணங்களுக்கும், நிலையழிந்த அரசர் - சந்திரனுக்கும் உவமை (௧௧௮)

வேறு

மணந்தபே ரன்பரை மலரின் சேக்கையுட்
புணர்ந்தவ ரிடையொரு வெகுளி பொங்கலால்
கணங்குழை மகளிர்கள் கங்கு னீங்கிட
வுணர்ந்திலர் கனவினு மூடறீர்ந்திலார்.

இ - ள். கணம் குழை மகளிர்கள் - கூட்டமாகிய குண்டலங்களை யணிந்த ராக்ஷஸப்பெண்கள், மணந்த - விவாகஞ்செய்து கொண்ட, பேர் அன்பரை - பெரிதான அன்பினையுடைய தங்கணவரை, மலரின் சேக்கையுள் - மலர்களால் வேய்ந்த படுக்கையினிடத்து, புணர்ந்தவர் - கலந்தவர்களாய், இடை ஒரு வெகுளி பொங்கலால் - மத்தியிலே ஒரு கோபம் மிகுந்ததால், ஊடல் - (கொண்ட) ஊடலானது, கனவினும் தீர்ந்திலர் - கனவினுங் கூட நீங்காமலிருந்தார்கள், (அத்தருணத்தில்) கங்குல் நீங்கிட - (இராவணன் ஏவலால்) இராக்காலம் ஒழிய, உணர்ந்திலர் (அதனை) யறியாதவர்களாயினார்கள்.

குறிப்பு — இரண்டு காதுகளிலும் பலகுழை அணிந்தாரென்பதும், அநேக முகங்களையுடைய பெண்கள் தமது அநேகமான காதுகள் தோறும் அநேககுண்டலங்களணிந்தாரென்பதுந்தோன்றக் 'கணங்குழை' என்றார். இனி, கணங்குழையெனக்கொள்ளுங்கால் எதுகைநோக்கி னகரம் ணகரமாகத் திரிந்ததெனக் (௧௧௯)

தள்ளுறு முயிரினர் தலைவர் நீங்கலர்
னள்ளிர விடையுறு நடுக்க நீங்கலர்
கொள்ளையி னலர்தரு குவளை நாண்மலர்
கள்ளுகு வனவெனக் கலுழுங் கண்ணினார்.

இ - ள். நள் இரவு இடை - (பகலெனமாறிய) அர்த்தராத்திரியில், தலைவர் - நாயகர்கள், தள் உறும் உயிரினர் - (தம்மைத்) தள்ளுதலுற்ற உயிரையுடையவர்க

ராகி, நீங்கலால் - (தம்மைவிட்டுப்) பிரிந்தகாரணத்தால், உற்ற நடுக்கம் நீங்கலர் - உற்ற நடுக்கமானது நீங்காத பெண்கள், கொள்ளையின் - (இரவு பகலாகிய) மிகுதியால், அலர்தருகுவளை நாண்மலர் - அன்றலர்ந்த நீலோற்பலமலர்கள், கள் உகுவன என - தேனைச் சிந்துவனபோல, கலுழும் - நீர்சிந்துகின்ற, கண்ணினார் - கண்களையுடையவர்களாயினார்கள்.

குறிப்பு — நாயகர் தமது நாயகிகளைப்பிரிய மனஞ் சிறிதுமில்லரேயாயினும் ராஜசமுகத்துக்குக் குறித்தகாலத்திற் செல்லாவிடின் அவர்கள் உயிர்க்குத் தீங்குநேரிடுமாதலின் அவர் உயிர் அவரை ராஜசமுகத்துக்குச் செல்லத்தள்ளிற்று என்னும் பொருள்படுமாறு 'தள்ளுறு முயிரினர்' என்றார். இனி, ஊடலாற் புணர்ச்சிக்கிடங்கொடாது மாதரால் தள்ளுதலுற்ற அம்மாதரின் உயிர்போன்றவர்கள் என்றும் பொருள் கோடலாம். ஊடலுக்கிடங்கொடுத்துப் பயன்பெறாது வீணே பொழுது விடிந்ததென்று சஞ்சலமுற்றுத் தளர்வடைந்ததால் நடுக்கமுற்றாரெனக். கொள்ளையின்கள் எனக்கொண்டு தேனின் மிகுதியைக் கூறுதலுமமையும். (௧௨௦)

அணைமலர்ச் சேக்கையு ளாடல் தீர்ந்தனர்
பணைகளைத் தழுவிய பவள வல்லிபோல்
இணைமலர்க் கைகளி னிறுகத் தன்னுயிர்த்
துணைவரைத் தழுவினர் துயில்கின் றார்சிலர்.

இ-ள். சிலர் அணைமலர் சேக்கையுள் - சிலபெண்கள் (தலையணை முதலிய) அணைகளையுடைய புஷ்பமெத்தையில், ஆடல் தீர்ந்தனர் - விளையாட்டொழிந்தவர்களாயும், பணைகளை தழுவிய பவளவல்லிபோல - மரக்கிளைகளைத்தழுவிய பவளக்கொடிபோல, துணைவரை - (தமது) நாயகர்களை, இணை மலர் கைகளின் - (தமது) மலர்போன்ற இரண்டுகைகளாலும், இறுக தழுவினர் - அழுந்தும்படியாக ஆலிங்கனஞ் செய்தவர்களாயும், துயில்கின்றார் - நித்திரை செய்தார்கள்

குறிப்பு — அணை - அணையப்படுவது; செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. இனி, வினைத்தொகையாகக்கொண்டு கலவிசெய்தற்குரிய படுக்கையென்றும் பொருள்கோடலாம். பணை - அரக்கர் புயங்கட்கும், பவளவல்லி - பெண்கட்கும் உவமை. மலர்க்கொடிகளுட் பவளவல்லி யென்றோர் கொடியின்மையால் இல்பொருளுவமை. (௧௨௧)

அளியினங் கடந்தொறு மார்ப்ப வாய்கதி
ரொளிபட வுணர்ந்தில வுறங்கு கின்றன
தெளிவில வின்றுயில் விளையுஞ் சேக்கையுட்
களிகளை நிகர்த்தன களிநல் யானையே

இ-ள். கடம் தொறும் ஆர்ப்ப - கடகுடங்கள்தோறும் ஒலிசெய்கின்றனவாகிய, அளி இனம் - வண்டுக்கூட்டங்கள், வாய்கதிர் - (அந்நள்ளிரவில்) வாய்ந்த சூரியனது, ஒளிபட - பிரகாசம் (தம்மேற்) பட, (அதனை), உணர்ந்தில - அறியாதவைகளாய், உறங்குகின்றன - தூங்கின, களிநல் யானை - செருக்குடைய நல்ல யானைகள், தெளிவு இல - (நித்திரைமயக்கந்) தெளியாதவைகளாய், இன் துயில் விளையும் சேக்கையுள் - இனிய நித்திரையுண்டாகும் படுக்கையின்கண், களிகளை நிகர்த்தன - கள்ளுண்டு வெறியேறினவர்களை ஒத்திருந்தன,

குறிப்பு—இன்றுயில் என்பதை இடைநிலைத் தீவகமாகக்கொண்டு தெளிவில வென்பதொடும் கூட்டலாம். (௧௨௪)

விரிந்துறை துறைதொறும் விளக்கம் யாவையு
மெரிந்திழு தஃகல வொளியி ழந்தன
வருந்துறை நிரம்பிய வுயிரி னன்பரைப்
பிரிந்துறை தருங்குலப் பேதை மாரினே

இ-ள். அருந்துறை நிரம்பிய - அரியதுறை நிரம்புதலுற்ற, உயிரின் அன்பரை - (தமது) உயிர்போன்ற நாயகர்களை, பிரிந்து உறைதரும் - பிரிந்து (தனித்துத்) தங்கியிருக்கிற, குலம் பேதைமாரின் - குலஸ்திரீகளைப்போல, விரிந்து உறை துறைதொறும் - விரிவாயிருக்கின்ற இடங்கடோறுமுள்ள, விளக்கம் யாவையும் - தீபங்கள் அனைத்தும், எரிந்து—, இழுது அஃகல - நெய்யிற்குறையாதனவாய், ஒளி இழந்தன - பிரகாசத்தை இழந்திருந்தன.

குறிப்பு—அருந்துறை நிரம்பிய என்றது - மணஞ்செய்து கொண்ட தலைவன் அறம்பொருளின்பங்களின் பொருட்டுத் தலைவியைப் பிரிதலுற்றதை இது அகப்பொருட்டுறைப் பாற்படும் பிரிதற்குச்சிறிது மனமில்லாத தலைவன் பிரிந்தானென்பதும், "இன்று நின்னிலனூர் வாழ்த லதனினு, மின்று நினியாரப் பிரிவு" என்றவாறு கற்புடைத் தலைவிக்குத் தலைவன் பிரிவு நனியின்னல் தருமாதலால் அப்பிரிவு அடிக்கடி நிகழ்தற்பாலதன்றென்பதுந் தோன்ற 'அருமை' என்னும் அடைமொழி தந்து கூறினார். "விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன், முயக்கற்றம் பார்க்கும் பசப்பு" என்றவாறு தலைவிக்குத் தலைவனது பிரிவாற்றாமையால் விளக்கம் என்னும் நாயகி மாங்கல்யஸ்திரீயென்னுந் தன்மைக்குக் குறைவில்லாமலிருந்தும் ஒளியிழந்தாள் என்பது கருத்து. வழக்கம்போல இராக்காலம் சென்று சூரியோதயமாயிருக்கும்பட்சத்தில் இக்கற்பனை கூறுரென்பதும் தலைவியைப் பிரிந்த தலைவன் தலைவி வருந்துவாளென்னும் எண்ணங்கொண்டு விரைந்து வந்து அவளைக்கூடுதல் போலப் பிரிந்த இரவு உடனே வந்து சேருமென்பதும் விளங்குதலறிக. (௧௨௫)

புனைந்தித ழுரிஞ்சுறு பொழுது புலவியும்
வனைந்தில வைகறை மலரு மாமலர்
நனந்தலை யமளியிற் றுயிலு நங்கைமா
ரனந்தரி னெடுங்கணோ டொத்த வாமரோ

இ-ள். வைகறைமலரும் மாமலர் - விடியற்காலத்தில் மலர்கின்ற சிறப்புப் பொருந்திய மலர்கள், இதழ் - இதழ்கள், புனைந்து உரிஞ்சு - அழகுசெய்து விரியும்படி, உறு - சேர்கின்ற, பொழுது - சூரியோதயகாலம், புலவியும் - புணர்ந்தும் [அடுத்தும்], வனைந்தில - மலர்தல் செய்யாதனவாய், நனந்தலை அமளியில் - அகன்ற இடத்தினையுடைய படுக்கையின்கண், துயிலும் நங்கைமார் - தூங்குகின்ற பெண்களினுடைய, அனந்தரின் நெடுங்கண் ஓடு ஒத்த - நித்திரையையுடைய நீண்ட கண்களோடொத்திருந்தன.

குறிப்பு—புனைதல் - அழகுசெய்தல், "பொன்னணியற்புனை தோட்டியால்" என்புழி இப்பொருட்டாதல் காண்க [புறநானூறு, 14-வது பாட்டு] உரிஞ்சு - உரிந்து என்பதன்போலி, உரிய என்னுஞ்செயவெனெச்சத்திரிபு உரிதல்-கழலுதல்.

ஆரணியகாண்டம்.

இச்சையிற் றுயிலவர்தற் கியாவர் கண்களு
நிச்சயம் பகலுந்த மிமைக ணீக்கலா
பிச்சையு மிடுதுமென் றுணர்வு பேணலா
வச்சையர் நெடுமனை வாயி லானவே

இ - ள். இச்சையில் - (தமது) விருப்பத்தினாலே, துயிலவதற்கு - தூங்கும் நிமித்தமாக, நிச்சயம் பகலும் — உண்மையான பகற்காலத்திலும், தம இமைகள் நீக்கலா - (யாவரும்) தங்களுடைய கண்ணிமைகளை நீக்கமாட்டார்கள் [பகற்காலத்திலும் செம்மையாகத் தூங்குவார்கள்], (ஆதலால்), யாவர்கண்களும் - எல்லாருடைய கண்களும், பிச்சையும் இடுதும் என்று உணர்வுபேணலா - பிச்சையும் இடுவோம் என்றறிதலை விரும்பாதவர்களாகிய, வச்சையர் நெடுமனைவாயில் ஆன - உலுத்தர்களுடைய பெரிய வீட்டின் வாசல் (போலடைபட்டிருப்பது) ஆயின

குறிப்பு — உண்மையான பகற்காலத்தில் தூங்கவேண்டும் என்னும் விருப்பங்கொண்டு தூங்குவோர்கள் தமக்கு எத்தனை வேலைகளிருந்தாலும் அவற்றை மதியாமலே தூங்குவார்கள், ஆதலின் தூக்கத்தி னின்பப்பெருக்கைச் சொல்ல முடியாது ஆகையால், தாம் தூங்கிக்கொண்டிருக்கும் இரவிற்றோன்றிய அசம்பாவிதமான இப் பகற்காலத்தில் யாரும் நித்திரை செய்யாதிரார் ஆதலால் எல்லாரும் தூங்கிக்கொண்டே யிருந்தார்கள் என்பதாம் (கஉரு)

நஞ்சுறு பிரிவினை நாளி னீளமோர்
தஞ்சுற விடுவதோர் தயாவு தாங்கலால்
வெஞ்சிறை நீங்கிய வினையி னூரென
நெஞ்சுறக் களித்தன நேமிப் புள்ளெலாம்.

இ - ள். ஓர் நாளின் நீளம் - ஒருபகல் முழுதும், தஞ்சு உற - இன்பமுண்டாக, நஞ்சு உறு பிரிவினை - விடம்போன்ற பிரிவினை, விடுவதோர் தயாவு தாங்கலால் - விடுவதாகிய ஒரு தயவைப்பெறுதலால், நேமிப்புள் எலாம் - சக்கரவாளப்பறவைகளெல்லாம், வெம் சிறை நீங்கிய வினையினூர் என - வெவ்விய சிறைச்சாலையினின்று நீங்கிய செயல்வினையுடையார் போல, நெஞ்சு உற களித்தன - மனம் மிகவுங்களிப்புற்றன

குறிப்பு — நாளிரவில் இராக்காலந் தொலைந்து பகற்கால முற்றமையால் பகற்காலத்தின் பிரிவை யாற்றிருந்த நேமிப்புட்கள் இரவெனுஞ் சிறைச்சாலையினின்றும் விடுபட்டு மகிழ்ந்தனவென்பது கருத்து பிரிவின்கொடுமையைக் குறிப்பிக்க நஞ்சைப் பிரிவுக்கு உவமை கூறினார் உறு - உவமவாசகம் இனி, நஞ்சு னைய இரவெலாம் நைந்து எனப்பொருள் கூறுதலுமாம் தஞ்சம் - துணை. துணையாகும் இன்பப்புட்களைக் காணப்புரியடைதல் மகிழ்ச்சியேயாதலின் ...மென்றுபொருள் கூறினும், தயாவு, உகரம் - சாரியை. (கஉசு)

நாணமுதிக் கல்லது நடுவ ணெய்திய
வாணையி னீக்கலா வலரிற் பாய்வன
மாணவினை பயன்படா மாந்தர் வாயில்சோ
பாணிசிற் றளர்ந்தன பாடற் றும்பியே.

இ - ள் பாடல் தும்பி - பாடுகின்ற வண்டுகள், நாள் அன்று, மதிக்கு அல்லது - சந்திரனுக்கல்லாமல், நடுவண் எய்திய ஆணையின் - மத்தியில் அடைந்த ஆக்கினையினாலே [இராவணன் ஆக்கினையால் நள்ளிரவிற்போந்த சூரியனால்] நீக்கு அலா - நீக்குதற்கல்லாத [மலராத], அலரில் பாய்வன - மது வுண்ணும்பொருட்டுப் புஷ்பங்களிற் பாய்வனவாகி, மாண்வினை - பெருமையைத்தருவனவாகிய செயல்கள், பயன்படா - பலன்படாத, மாந்தர்வாயில் சேர் - மனிதர்களுடைய வாசல் சேர்ந்த, பாணரில் - பாடகர்களைப்போல, தளர்ந்தன - தளர்ச்சியுற்றன

குறிப்பு — மாண்வினை - பாடலின்தன்மையை யுணர்ந்து கேட்டு மகிழ்தலும் பாணர்க்கு வேண்டியபடி கொடுத்துப் பெருமையையடைதலுமாகிய செயல்களாம்.

அருமணிச் சாளர மதனி னூடுபுக்
கெரிகதி ரின்றுயி லெழுப்பி யேற்றவு
மருளொடு தெருளுறு நிலையர் மங்கையர்
தெருளுற மெய்ப்பொரு டெளிந்தி லாரினே.

இ - ள் எரிகதிர் - பிரகாசிக்கின்ற சூரிய கிரணங்கள், அருமணி சாளரம் அதனின் ஊடுபுக்கு - அருமையான இரத்தினங்களாகிய பலகணிக்கிடையே பிரவேசித்து, இன் துயில் எழுப்பி - இனிய தூக்கத்தினின்றும் எழும்பச்செய்து, ஏற்றவும் - (சூரியோதயமாயிற்றென்பதை) உணர்த்தவும், மங்கையர் - பெண்கள், தெருள் உற மெய் பொருள் தெளிந்து இலாரின் - ஞானமுண்டாகும்படி உண்மைப் பொருளைத்தெளிவாய் அறியாதவர்களைப்போல, மருளொடு தெருள் உறு நிலையர் - மயக்கமும் தெளிவுமுற்ற நிலைமையை யுடையவர்களாயினார்கள். (௧௨௮)

ஏவலின் வன்மையை யெண்ணி தேற்றலா
நாவல ரியற்றிய நாளி னுமநூற்
காவலி னினிதுணர் கணித மாக்களுங்
கூவுறு கோழியுந் துயில்வு கொண்டவே

இ - ள் ஏவலின் வன்மையை - (இராவணனது) கட்டளையினது வலிமையை, எண்ணல் தேற்றலா - நினைத்தற்குத் தேறுதலடையாதவர்களாய், நாவலர் இயற்றிய - புலவர்கள் செய்த, நாளின் நாமம் நூல் - நாட்பலனைக் கூறுகின்ற பெருமை பொருந்திய கணித சாத்திரத்தால், காவலின் - காவற்றொழிலினது, இனித்தன்மையை, உணர் - அறிகின்ற, கணிதமாக்களும் - சோதிட நூல்வல்லோர்களும், கூவு உறு கோழியும் - கூவுகின்ற கோழிகளும், துயில்வுகொண்ட - தூக்கங் கொண்டன

குறிப்பு.—ஏவலின் வன்மையை யெண்ணி தேற்றலா என்றது -இராவணனது ஏவலால் இரவு பகலாகிய கொடுமையை அறியாதவர்களாய் எனப்பொருள் கோடலுமாம் (௧௨௯)

இனையன வுலகினி னிகழு மெல்லையிற்
கனைகழ லரக்கனுங் கண்ணி னேக்கினை
வினைவுறு மனத்தையு நெருப்பிற் றீக்குயா
லனையவத் திங்களே யாகுமா லென்றான.

இ - ள் இனையன - இத்தன்மையானவைகள், உலகினில் - உலகத்தில், நிகழும் - நடக்கின்ற, எல்லையில - அளவில, கனைகழல் அரக்கனும் - கனைகின்ற-ஒலிசெய்கின்ற வீரக்கழலையணிந்த இராவணனும் (அசுரியனைத்தன) கண்ணுறப்பாராதது, (இக்கதிர்), நினைவு உறு மனத்தையும் - (இதனை) நினைக்கின்ற மனத்தையும், நெருப்பில் - (தன்னிடத்துள்ள) அக்கினியினால், தீக்கும் - தீய்க்கச்செய்யும், அனைய-அத்தன்மையான, அதிங்களே-அச்சந்திரனே, ஆகும்—, என்றான்—,

திங்களோ வன்றிது செல்வ செங்கதிர்
பொங்குளைப் பசுமையம் புரவித் தேரதால்
வெங்கதிர் சுடுவதே யன்றி மெய்யுறத்
தங்குதண் கதிர்சுடத் தகாதென் றார்சிலர்

இ - ள் (இராவணன் அங்ஙனங்கூறியகாலையில்), சிலர் - சிலசிலதாதர், செல்வ - அரசே! இது திங்களோ அன்று-இக்கதிர் சந்திரனோ? இல்லை பொங்கு உளை பசுமையம் புரவி தேரது ஆல் - உயர்ந்த புறமயிரினையும் பசுமைநிறத்தையுமுடைய அழகிய குதிரைகள் பூட்டிய தேரினையுடைய தாதலால், செங்கதிர் - சூரியனேயாம், வெங்கதிர் சுடுவதே அன்றி - சூரியன் சுடுவதேயல்லாமல், மெய் உற தங்கு தண் கதிர் - உண்மையாகக்குளிர்ச்சி தங்கிய சந்திரன், சுட தகாது என்றார் - சுடுந்தன்மைத்தகுதியுடையதன்றென்று கூறினார்

குறிப்பு —செங்கதிர், வெங்கதிர், தண்கதிர் என்பன —அன்மொழித்தொகை மெய்யுற என்பதை மத்திமதீபமாகக்கொண்டு வெங்கதிர் சுடுவதே என்பதோடுங் கூட்டலாம் இனி, மெய்யுற - உடலில் (வெம்மை) யுறும்படி என்பொருள் கோடலுமாம். (௧௧௧)

வேறு

நீலச் சிகரக் கிரியன்னவ னின்ற வெய்யோ
னாலத்தினும் வெய்ய னகற்றி யரற்று கின்ற
வேலைக் குரலைத் தவிர்கென்று விலக்கி மேலை
மாலைப் பிறைப்பிள் ளையைக்கூவுதிர் வல்லை யென்றான்.

இ - ள் சிகரம் நீலம் கிரி அன்னவன் - சிகரங்களையுடைய நீலமலைபோன்ற அவ்விராவணன், நின்ற - (இங்கு) நின்ற, வெய்யோன் - சூரியனாகிய, ஆலத்தினும் வெய்யன் - விடத்தைப்பார்க்கிலுங் கொடுமையையுடையானை, அகற்றி - துரத்திவிட்டு, அரற்றுகின்ற - பேரொலிசெய்கின்ற, வேலை குரலை - சமுத்திரகோஷத்தை, தவிர்க என்று விலக்கி - நீக்கிவிடுக என்று கூறி (கடலை) அப்பாற்போகச்செய்து, மாலை மேலை பிறைப்பிள்ளையை - மாலைப்பொழுதில் மேற்றிசையிற்றோன்றுகின்ற இளம்பிறைச்சந்திரனை, கூவுதிர் - கூப்பிடுங்கள், வல்லை என்றான் - சீக்கிரம் என்று கூறினான்

குறிப்பு —தவிர்கென்று, அகரம் - தொகுத்தல் மேலை, ஐ - சாரியை இனி மேலையென்றற்கு - பின்பு என்றும் பொருள்கோடலாம், மாலை - அந்திக்கு முற்பட்டபொழுது செவ்வானத்து வெண்பிறையென்பது தோன்ற 'மேலை மாலைப் பிறைப் பிள்ளை' என்றான். (௧௧௨)

சொன்னானிரு தர்க்கிறை யம்மொழி சொல்ல லோடு
மந்நாளி னிரம்பிய வம்மதி யாண்டோர் வேலை
முந்நாளி னிளம்பிறை யாகி முளைத்த தென்றா
லெந்நாளு மருந்தவ மன்றி யியற்ற லாமோ.

இ - ள். சொன்னான் நிருதர்க்கு இறை - (அங்ஙனம்) கூறிய அரக்கர்க்கரசனாகிய இராவணன், அம்மொழி சொல்லலோடும் - அந்த வார்த்தையைச்சொல்லிய அளவில், அந்நாளில் - அற்றைப்பொழுது, நிரம்பிய - (சோடசகலைகளும்) நிரம்புதலுற்ற, அம்மதி - அந்தப்பூரண சந்திரன், ஆண்டு - அப்பொழுது, ஓர் வேலை - (இராவணன் கட்டளையிட்ட) ஒரு வேலையின் நிமித்தமாக முந்நாளின் இளம் பிறை ஆகி - மூன்றாம் பிறைச்சந்திரனாகி, முளைத்தது என்றால் - உதித்தது என்று சொன்னால், எந்நாளும் - எந்த நாளிலும், அருந்தவம் - அன்றி - அரியதவத்தையல்லாமல், இயற்றல் ஆமோ - (வேறு செயல்களைச்) செய்யலாமோ? [செய்யலாகாது].

குறிப்பு —சொன்னான் - முற்றுத்திரிந்த பெயரெச்சம்.

கருத்து —இராவணன் தான் தவமியற்றி யடைந்த வரத்தாலெய்திய உரத்தால் அற்றை நாள் உவாமதியை இனி ஒருபட்சத்துக்கு மேற்பட்டுவரும் மூன்றாம் பிறையினுருக்கொள்ளச்செய்தான் என்றால் தவப்பெருமை சாலவும் பெரிது ஆதலின் யாம் அத்தவத்தைப்புரியாது நாட்களை வீணாக்குதல் அறிவுடைமை யன்றென்பதாம்.

குடபாலின் முளைத்தது கண்டு குணங்க டீயோன்
வடவாவன லன்றெனின் மண்பிடர் வைத்த பாம்பின்
விடவாளெயி றன்றெனி னென்னை வெகுண்ட மாலை
யடவாளுரு விக்கொடு தோன்றிய தாகு மன்றே

இ - ள். குடபாலின் முளைத்ததுகண்டு - (அப்பிறை) மேற்குத்திசையி லுதித்ததைப்பார்த்த, குணங்கள் தீயோன் - கெட்ட குணங்களையுடைய இராவணன், (தன் சிலதர்களை நோக்கி), வடவா அனல் அன்று எனின் - (நீங்கள் இதனை) வடவாமுகாக்கினி அன்றென்றாலும், மண்பிடர்வைத்த பாம்பின் விடம் வாள் எயிறு அன்று எனின் - புவியைப் பிடரியில்வைத்துத்தாங்குகின்ற ஆதிசேடனது விஷம் பொருந்திய ஒளியுள்ள பல்லன்றென்றாலும், வெகுண்ட மாலை என்னை அட - (என் மேற்) கோபங்கொண்ட மாலைப்பொழுதானது என்னைக் கொல்வதற்காக, வாள் உருவி கொடு தோன்றியது ஆகும் அன்றே - வாளாயுதத்தை யுருவிக்கொண்டு தோன்றியதாகு மன்றோ?

குறிப்பு —மாலையிற்றோன்றிய பிறையானது - இராவணனைக்கொல்ல மாலைப்பொழுதுகொண்ட வாளாயுதம்போன்றிருந்ததெனக். கீழ்க்கூறியவாறு சந்திரன், தென்றல், கடல் முதலியனபோல மாலைப்பொழுதும் விரகநோய் தணித்தற்கு வகையன்றிக் காமத்தாற் கருத்தழிவோர்க்குக் கொடியதாகு மாதலின் 'வெகுண்ட மாலை' என்றான் "தாழ்துணை துறந்தோர் தனித்துயரெய்தக், காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்த... மாலைவந் திறுத்தென" என்னுஞ் சிலப்பதிகாரச் செய்யுளையும், "திங்களம் பிள்ளை புலம்பத்தன் செங்கோலரசுபட்ட, செங்களம் பற்றின்றென்குபுன் மாலைதென் பாலிலங்கை, வெங்களஞ் செய்தநம் விண்ணோர் பிரானா

துழாய்த்துணையாய், நங்களை மாமைகொள்ள வானவந்து தோன்றி நலிகின்றதே" என்ற திருவிருத்தத்தையும் ஈண்டு நோக்குக. (௧௩௪)

தாதுண்சடி லத்தலை வைத்தது தண்டரங்க
மோதுங்கட லிற்கிடை முந்து பிறந்த போதே
யோதுங்கடு வைத்தன மிடற்றி னொளித்த தக்கோ
னீதுங்கடு வாமென வெண்ணிய வெண்ண மன்றே

இ-ள். முந்து - முன்பாக, தண் தரங்கம் மோதும் கடலிற்கு இடை பிறந்தபோதே - குளிர்ச்சிபொருந்திய அலைகள் மோதுகின்ற (பாற்) கடலுக்கு மத்தியில் (இச்சந்திரன்) பிறந்தபொழுதே, ஓதும் - சொல்லப்படுகிற, கடுவை - ஆலாலத்தை, தன் மிடற்றின் ஒளித்த - தனது கண்டத்தில் (வைத்து) மறைத்த, தக்கோன் - சிவபிரான், ஈதும் - இச்சந்திரனையும், கடு என - விடமென்று, எண்ணிய எண்ணம் - நினைத்த நினைப்பினால், அன்றே—, தாது உண் - (கொன்றைமலர்களின்) மகரந்தத்தையுண்ட, சடிலம் தலை வைத்தது - சடாபாரத்தையுடைய (தன்) தலையின் கண் தரித்துக்கொண்டது.

கருத்து—பாற்கடலிற் பிறந்த கொடிய விஷத்தோடு பிறந்தவனாயினால் இச்சந்திரன் அவ்விஷத்தின் தன்மையை யடைந்திருக்கின்றானாதலின் இவன் சுடாதென் செய்வான், இவன் அவ்விஷத்திற்கு முன்பு பிறந்தோனாதலின் அவ்விஷத்தினும் இவன் கொடியனாயிருப்பானென்று கருதியன்றோ இவ்விஷயங்களை யெல்லாம் வைத்துத்தாங்குதற்குத் தகுதியுடைய சிவபெருமான் விஷத்தை மறைத்த கண்டத்தினும் உயர்ந்த தானமாகிய தலையில் வைத்தான் என்பதாம். (௧௩௫)

உருமொக்க வுலந்துயிர் நுங்கிய திங்க ளோடித்
திருமிச்சிறு மின்பிறை தீமை குறைந்த தில்லை
கருமைக்கறை நெஞ்சினி னஞ்சு கலந்த பாம்பின்
பெருமைச்சிறு மைக்கொரு பெற்றி குறைந்த துண்டோ.

இ-ள். கருமை கறை நெஞ்சினின் - கருமையாகிய (அஞ்ஞான) இருளினையுடைய மனத்தைப்போன்ற, நஞ்சுகலந்த பாம்பின் - (கரிய கொடிய) விஷம் பொருந்திய பாம்பினது, பெருமை சிறுமைக்கு - பெரிய ரூபத்தைப்பார்க்கிலும் சிறிய ரூபத்துக்கு, ஒரு பெற்றி குறைந்தது உண்டோ - (யாதேனும்) ஒருகுணங் குறைந்தது உண்டோ? [இல்லை], (அதுபோல), திருமி - திரும்பி [பூரணசந்திரன் தனது பெரிய வுருவத்தினின்றும் வேறுபட்டு], சிறுமின் இ பிறை - சிறுத்த (சிறிய) மின்னல்போன்ற இப்பிறையானது, உரும் ஒக்க உலந்து - இடியைப்போல அலைந்து, உயிர் நுங்கிய - (எனது) உயிரையுண்ட, திங்களோடு - பூரணசந்திரனைப்பார்க்கிலும், தீமைகுறைந்தது இல்லை - தீமையிற் குறைந்ததாயில்லை.

குறிப்பு—சிறுமின், சிறுபிறை எனக் கொள்க; இவை வினைத்தொகைகள், சிறு - சிறுமையென்னும் பண்படியாகப்பிறந்த சிறுத்தலென்னும் வினையின் பகுதி. சிறுகும் இன்பிறையெனக் கொண்டு சிறுகும் என்னும் செய்யுமென்னெச்சத்து ஈற்றுமிசை யுகரமெய்யொடுங் கெட்டுச் சிறும் என நின்றதென்று கூறுவாருமுளர். திங்களானது ஓடித் திரும்பிச் சிறுத்த மின்பிறை (அத்திங்களைப்போல) தீமை குறைந்ததில்லை என்றும் பொருள்கோடலாம். திங்களோடு - வேற்றுமைமயக்கம்.()

கன்னக்கனி யும்மிரு டன்னையுங் காண்டு மன்றே
முன்னைக்கதி ரன்றித் தகற்றுதிர் முன்பு சான்ற
வென்னைச்சுடு மென்னினிவ் வேழுல கத்தும் வாழ்வோர்
பின்னைச்சில ருய்வரென் றங்கொரு பேச்சு முண்டோ

இ - ள். சான்ற என்னை - (எல்லா விஷயத்தினும்) சிறந்தவனான என்னை, சுடும் என்னின் - (இப்பிறையானது) சுடும் என்று கூறினால், பின்னை - பிறகு, இவ் வேழு உலகத்தும் வாழ்வோர் - இந்த ஏழுலகங்களினும் வாழ்பவர்களில், சிலர் உய்வர் என்று ஒரு பேச்சும் உண்டோ - சிலர் பிழைப்பார்கள் என்று ஒரு வார்த்தையும் நிகழ்வதுண்டோ? [இல்லை], முன்னை கதிர் அன்று - (இதனைப்பார்க்கினும்) முன்பு வந்த சூரியன் தன்மையையுடையது, முன்பு - முன்னதாக, இது அகற்றுதிர் - இப்பிறையை நீக்கி விடுங்கள், (பின்பு), கன்னக்கனியும் - மிகவும் முதிர்ச்சியடையும், இருள் தன்னையும் - இருளையும், காண்டும் அன்றே - பார்ப்போம் (என்றான்) அன்று, ஏ, அங்கு - அசைகள்

குறிப்பு — கன்னக்கனியும் — கனியக்கனியும், "பண்ணப்பணைத்த" என்பது போல [நாலடி] அங்கு — அசை (௧௧௭)

ஆண்டப்பிறை நீங்கலு மெய்திய தந்த காரந்
தீண்டற்கெளி தாயப்பல தேயப்பன தேயக்க லாகி
வேண்டிற்கர பத்திரத் தீர்த்து விழுத்த லாகிக்
காண்டற்கினி தாயப்பல கந்து திரட்ட லாகி.

இ - ள். ஆண்டு - அப்பொழுது, அப்பிறை நீங்கலும் - அவ்விளஞ்சந்திரன் நீங்கிய அளவில், பல தேயப்பன - (இருளைத்) தேய்த்தொழிப்பனவாகிய தீபங்கள் அநேகம், தீண்டற்கு எளிது ஆய - (அவ்விருளால்) தீண்டப்படுதற்கு எளியனவாய், தேய்க்கல் ஆகி - (அதனால்) ஒளி குன்றுவிக்கப்படுதலுண்டாகவும், காண்டற்கு வேண்டின் - (ஒன்றைப்) பார்த்தற்கு விரும்பினால், கரபத்திரத்து - வாளாயுதத்தால், ஈர்த்து விழுத்தல் ஆகி - (விறகுகளை) பிளந்து வீழச் செய்யப்படுதலாகி, இனிது ஆய பல கந்து திரட்டல் ஆகி - (அப்பிள்ளைகளைத் தீவட்டியின் பொருட்டு) மகிழ்ச்சியாய பல தூண்களாக ஒன்றுசேர்த்தல் நிகழவும், அந்தகாரம் எய்தியது - இருள் வந்து சேர்ந்தது

கருத்து — இருளை விலக்கும் வல்லமையையுடைய தீபங்கள் அன்று தோன்றிய பேரிருளை விலக்க வல்லமையில்லாதவைகளாய் மழுங்கிப்போனதால் விறகுகளைப் பிளந்து அப்பிள்ளைகளைப் பல தூண்களென்னும்படி ஒன்றுசேர்த்துத் தீவட்டிகளைப் பிடித்துத் தாம் விரும்பியபொருளைத் தேடிப்பார்க்கும்படி நேரிட்டதென்பதாம். இச்செய்யுளுக்கு அந்தகாரம் (காரத்தால்) தீண்டற்கெளிதாய், தேயப்பனவாகிய பலவற்றையுந் தேய்க்கலாகி, வேண்டுமாயின் வாளாலறுத்து விழுத்தலாகி, பார்த்தலுக்கினிதாயப் பல தூண்கள் திரட்டலாகி, எய்தியது என்று பொருள் கூறினாருமுளர். ஆகியென்னு மெச்சங்கள் ஆகவென்னும் பொருட்டாய் நின்றன (௧௧௮)

முருகூரத் துருட்டற் கெளிதென்பதென முற்று முற்றிய
பொருகூங்கில கேள்விச் சுடர்புக்கு வழங்க வின்றிக்

குருடீங்கி தென்னக குறிக்கொண்டுகண ணோட்டங் குன்றி
யருடீாந்த நெஞ்சிற கரிதெனபதல வந்த காரம

இ - ள். முருடு - (கீழ்ககூறியபடி) விறகுகளை, ஈாநது - பிளநது, உருட்ட
றகு - (அவவிருளிற பலகாநதுசளாகத) திரடடுதறநத, முறறும முறறி - முழுதும
முறறுபபெறறு, தீங்கு இல - கெடுதலிலலாத பொருள கேளவி சுடா - பொருட
கேளவியாகிய ஒளி, புககு - புகுநது, வழுஙகல இனறி - (அறிவைத) தருதல் இல
லாமல, இது குருடு என்ன குறி கொண்டு - இது குருடு எனறு கூறும்படியாக
மதிததலையடைநது, கணணோட்டம குனறி - கணணோட்டமிலலாமல, அருள தீா
நதநெஞ்சில - அருள நீஙகிய மனததைககாட்டிலும, கரிது எனபது அ அநதகாரம-
கரியது எனபதாகிய அவவிருளில, எளிது எனபது என - எளிதெனறு சொலவது
யாது ?

குறிபபு — ஈஙகு - அசை கண்ணோட்டம - கணணால் நோககியறிதல என—
இசழசசிககுறிப்பு முருள தீாநது—முடககததை நீககி, உருட்டறகு எளிதெனறு
சொலவதெனனை என முதலடிககுப பொருள கூறினருமுளா (௧௩௯)

விளளாது செறிநதிடை மேலுறவோஙகி யெஙகு
நளளாதிரு ளநதகன ஞாலம விழுஙக லோடு
மெளளாதுல கியாவையும யாவரும வீயு மெனப
துளளா துமிழநதான விடமுணட வொருததனெனறான.

இ - ள இருள அநதகன - இருளாகிய யமன், விளளாது - வேறுபடாமல,
இடை செறிநது - புவியினிடததுப பொருநதி, மேல உற ஓஙகி- ஆகாயததையடை
ட வுயர்நது, எஙகும - எவவிடததையும, நளளாது - நேசியாமல, ஞாலம விழுஙக
லோடும் - பூமியை விழுஙகினவளவில, விடம உணட ஒருததன - விஷததையுண
ட ஒருவனகிய சிவபெருமான, எளளாது - இகழாமலும, உலகு - உலகிலுளள,
யாவையும - எலலாப்பொருளகளும, யாவரும - எலலாரும, வீயும எனபது - இற
நதுபோகுமெனபதை, உளளாது - நினையாமலும, உமிழநதான எனறான - (தான
உணட அவவிஷததை) உமிழநதான எனறு (இராவணன) கூறினன

குறிப்பு.—இருளினமுழுக கருமைககுச சிறிதுங குறைவிலலை யெனபது
விளளாதெனபதின பொருள உலகததில அவவிருளசேராத இடமேயிலலை யென
பான 'எஙகும நளளாது, எனறான காரணமிலலா துமிழநதானெனபது தோனற
எள்ளாதெனறான் இறபபவரில தன அடியாரும சோநதிருகக அதனைச சிறிதுங
கருதாமற போனனே யெனபான 'யாவரும வீயும எனபதுளளாது' எனறான (௧௪௦)

வேலைத்தலை வநதொருவனவலி யாலவிழுங்கு
மாலததி னடஙகுவ தனறி தறிநது ணாநதேன
ஞாலததொடு விணமுதல யாவையு நாவி னக்குங
காலககனல காாவிட முணடு கறுதத தனறே

இ - ள் ஒருவன - ஒபபறற சிவபிரான வேலைததலை வநது - கடலினிடதது
வநது, வலியால - (தனது) வலிமையினால், விழுங்கும - விழுங்குகின்ற, ஆலததின

விஷத்தில், இது - (அவ்விஷத்தினும் பெரிய கரிய கொடிய) இவ்வடிவம், அடங்குவது அன்று - அடங்குவதில்லை, ஞாலத்தொடு விண்முதல் யாவையும் - பூமியும் விண்ணுலகமும் முதலாகிய உலகங்களெல்லாவற்றையும், நாவில் கொளும் -(தனது) நாவினால் உண்கின்ற, காலம் கனல் - ஊழிகாலத்துத் தீயானது, கார் விடம் உண்டு கறுத்தது - கரிய விஷத்தையுண்டு கரிய நிறமுள்ளதென்பதை, அறிந்து உணர்ந்தேன் - அறிந்து தெளிவடைந்தேன்.

குறிப்பு—தலை - எழுனுருபு அன்று, ஏ—அசை. (௧௪௧)

அம்புமன் னுநுழை யாக்கண் வந்த காரந்
தும்பர்மழை கொண்டய லொப்பரி தாய துப்பின்
கொம்பர்குரும் பைக்குலங் கொண்டது திங்க டாங்கி
வெம்புந்தமி யென்முன் விளக்கெனத் தோன்று மன்றே

இ - ள் அம்பும் அனலும் நுழையா - அம்புகளும் நெருப்பும் நுழையாத கனம் அந்தகாரத்து - நிறைவான இருளில், வெம்பும் தமியேன்முன் - தனித்துக் கலங்குகின்ற என் முன்பு, உம்பர் மழைகொண்டு - மேலே மேகத்தைப்பெற்று, அயல் ஒப்பு அரிது ஆய - வேறு உவமையில்லாதது ஆகிய [தனக்குத்தானே உவமையாய] துப்பின் கொம்பர் - ஒரு பவளக்கொம்பானது, குரும்பை குலம் கொண்டது - தெங்கிளங்காயின் கூட்டத்தைக்கொண்டதாகி, திங்கள் தாங்கி - ஒரு சந்திரனைத்தாங்கிக்கொண்டு, விளக்கு என - (ஓர்) விளக்கைப்போல, தோன்றும் - தோன்றுகின்றது.

குறிப்பு—அம்பும் அனலும், மகரவொற்று - விரித்தல் விகாரம் பிரகாசம்பொருந்திய அக்கினிச்சுவாலைகளையுடைய உயர்ந்த தேவாஸ்திரங்களாலும் நீக்கரிய இருளென்பதும், உடைத்தற்கரிதான கனத்தமலை முதலியவற்றையெல்லாம் தகர்த்து ஊடுருவிச் செல்லவல்ல அம்பு கனத்த இவ்விருளை யூடுருவிச் செல்லற்குத் தக்க கூர்மையுள்ளதன்றென்பதும் தோன்ற 'அம்புமன னுநுழையா' என்றான் அம்பும் அதன் அனலும் எனக் கொள்க. அவ்விருளிலக்கு மோர் விளக்காக மழைபோலக் கூந்தலும் குரும்பைக் குலம்போல முலைகளும் திங்கள்போல முகமுங்கொண்ட பவளக்கொம்புபோன்ற சீதாபிராட்டியின் உருவமானது உருவெளித் தோற்றமாகக் காணப்பட்டது என்பது கருத்து. (௧௪௨)

மருளூடு வந்த மயக்கோமதி மற்று முண்டோ
தெருளாதி தென்னோ திண்மை யிழைத்தாலு மோவ்வார்
இருளூடிரு குண்டலங் கொண்டி ருண்ட நீலச்
சுருளோடும் வந்தோர் சுடர்மாமதி தோன்று மன்றே

இ - ள் திண்மை இழைத்தாலும் - வல்லமையைச் செய்து காட்டினாலும், ஒவ்வார் - (தான் புகுந்து வெளிச்சந்தருதற்கு) இயலாத, இருள் ஊடு - இவ்விருளில், இருகுண்டலம் கொண்டு - இருகுண்டலங்களைக் (காதில் அணிந்து) கொண்டு, இருண்ட நீலம் சுருளோடும் - இருண்ட நீலத்தினது சுருளுடனே, ஓர் சுடர்மாமதி வந்து தோன்றும் - ஒரு பிரகாசம்பொருந்திய அழகிய சந்திரன் வந்து தோன்றுகின்றது; (இது - இத்தோற்றம்), மருள் ஊடு வந்தமயக்கோ - என் மயக்கத்துக்கு

மதியிலே வந்த மற்றொரு மயக்கமோ? மதி மற்றும் உண்டோ - வேறொரு சந்திரனும் உண்டோ? தெருளாது இது என்னோ - தெளிந்து கொள்ளற்கரிதாகிய இந்தத் தோற்றம் யாதோ?

குறிப்பு:—தான் நினைத்துக்கொண்டிருந்த சீதையின் உருவோ என்பான் 'மருளூடு வந்த மயக்கோ' என்றான்; தான் தூரத்திவிட்ட சந்திரன் திரும்பிவரக்காணவில்லையே என்பான் 'மதிமற்று முண்டோ' என்றான். இருண்ட நீலச்சுருள்—சீதாபிராட்டியின் கூந்தலின் சுருளுக்கும், மதி—அவள் முகத்துக்கும் உவமை. (௧௪௩)

புடைகொண்டெழு கொங்கையு மல்குலும் புல்கி நிற்கு
மிடைகண்டில மல்லதெல் லாவுரு வுந்தெ ரிந்தாம்
விடந்துங்கிய கண்ணுடை யாரிவர் மெல்ல மெல்ல
மடமங்கைய ராயென மனத்தவ ராயி னாரே.

இ-ள் புடைகொண்டு எழு கொங்கையும்-பக்கத்திலுள்ள இடமுழுதும் தன்னதாகக்கொண்டு கிளம்பிய முலைகளும், அல்குலும்—, புல்கி நிற்கும் - புணர்ந்து நிற்கிற, இடை - இடத்தையும், (இடை) - (அவற்றினிடையே யுள்ள) இடையையும், கண்டிலம் அல்லது-பார்த்தேமில்லை யல்லாமல், எல்லாம் உருவும் தெரிந்தாம் - மற்றை யவயவங்களெல்லாவற்றையும் அறிந்தேம், விடம் துங்கிய கண் உடையார் இவர் - விஷம்போன்ற கண்களையுடையாராகிய இவர், மெல்லமெல்ல—, மடமங்கையராய் - மடமையையுடைய மங்கையராகி, என் மனத்தவர் ஆயினார் - என் மனத்திலிருப்பவராகிய ஜானகியாராயினார்.

குறிப்பு—புடை - திரட்சியுமாம். நிற்கும் என்றதைப் பட்டாக்கைப்பலவின் முற்றுக்கொண்டு கொங்கையும் அல்குலும் புல்கிநிற்கின்றன என்ப பொருள்கோடலாமாயினும், அவைகள் எம்பிரானல்லா மற்றவர்காணத் தகையனவல்லவாகலின் அதனை ஒழித்துச் செய்யுமென் னெச்சமாக்கக் கோடலே சிறப்புடைத்து. இடை - இரட்டுறமொழிதல். மழை கொம்பு திங்கள் முதலியனபோல ஒவ்வோரவயவமும் தனித்தனியாகக் காணப்பட்டுப் பின்னர் எல்லாஞ்சேர்ந்து பெண்ணுருவேயாகத் தோன்றினமையால், 'மெல்லமெல்ல மடமங்கையராய்' என்றான். துங்கிய - உண்ட, உவமவாசகம். "சேலுண்ட வொண்கணாரிற் றிரிகின்ற செங்காலன்னம்" என்றது காண்க [பாலகாண்டம், நாட்டுப்படலம்]. (௧௪௪)

பண்டேயுல கேழினு முள்ள படைக்கண் ணாரைக்
கண்டேனிவர் போலவொர் பெண்ணுருக் கண்டி லேனு
ளுண்டேயெனின் வேறினி யெங்கையு ணார்தி நின்ற
வண்டேறு கோதை மடவாரிவ ராகு மன்றே.

இ-ள் பண்டே - வெகு நாட்கு முன்னேயே, உலகு எழினும் உள்ள - ஏழுலகங்களிலுமிருக்கிற, படை கண்ணாரை - (வேல்) ஆயுதம் போன்ற கண்களையுடைய பெண்களை, கண்டேன் - பார்த்தேன், இவர்போலவது ஓர் பெண் உருக் கண்டிலேன் - இவரை ஒப்பதாகிய ஒரு பெண்ணினுடைய ரூபத்தைப்பார்த்தேனில்லை, உண்டே எனின் - (இத்தகைய உருவம்) இருக்கின்றதே என்று (தெளியாயக) கூறுவாயானால், இனி—, வேறு எங்கை-(இவ்வேழுலகல்லாத) மற்றெவ்விடத்தில்? (எவ்விடத்தும் இல்லை

ஆதலால) (எஙகை) - எனது தஙகை, உணாததி நினற - எனறுயறியுமபடியாகச சொலலி முடிதத, வணடு எறு கோதை - வணடுகள எறுகினற கூநதலையுடைய, மடவாா - மடமையையுடையாா, இவரே—,

குறிப்பு —உணடே, ஏகாரம - தேறறம எனகு எனனுமவிகு ஐ எனனும சாரியை பெறறு எஙகை யென நினறது ஆகும, அனறு அசைகள. எஙகையெனறு ஒரு சொல வருவிததுககூறுக (௧௪௫)

பூணடிபபிணி யானுறு கினறது தானபொருதா
டேணடிககொடு வநதனள செயவதொா மாறு முணடோ
காணடறகினி யாளுருக கணடவட கேடகு மாறரு
வீணடிபபொழு தேவிரைந தெஙகையைக கூவு கெனறுன

இ - ள யான இ பிணி பூணடு உறுகினறது பொருதாள - நான இநதக காம நோயடைநது அடைகினற துனபஙகளைச சகியாதவளாகிய, தேணடி கொடு வநதனள - (இபபெணணைத) தேடிககொணடுவநத சூாபபநகை, செயவது - செயயததகக, ஒா யாறும உணடோ - ஒரு வேறுபாடுமுளளதோ? ஆறருல - (அவள சொனன) ஒழுககததில, ஈணடு - நெருஙகுகினற, காணடறகு இனியாள - காணபதறகினியவளாகிய இபபெணணினது, உரு - உருவததை, கணடவள - பாாததிருபபவளை, கேடகும - கேடபாம, இ பொழுதே விரைநது - இப்போதே வேகமாயச சென்று, எஙகையை - எனது தஙகையை, கூவுக எனறுன - கூபபிடுக என்று கூறினன

குறிபபு —தேடி - தேணடி என விகாரம ஆறருல எனறது நோவழியாக எனறேனும தலைககடைவாயில வழியாக எனறேனும பொருளகொணடு வழியாக இபபொழுதே விரைநது கூவுக என்று பொருள கூறலுமாம, ஆறு - வழி, ஆறறு - தலைககடைவாயில (௧௪௬)

எனறுசொனன லுஙகடி தேகினா கூவு மெலலை
வனறுணிரு தககுலம வேரற மாயததல செயவா
ளொனறுத காமக கனலுடடெற லோடு நாசி
பொனறுழகுழை தனனொடும போககினள போயபபு குநதாள.

இ - ள எனறுன எனலும - என்று சொனனானெனற அளவில, கடிது எகினா - விரைநது சென்ற சிலதாகள, கூவும எலலை - கூபபிடுகினற அளவில வல - வலிய, தாழ - தாழநத, நிருதா குலம - இராககதா கூட்டததை, வேரா அற மாயததல செயவாள - அடியோடு தொலைபபவளாகிய, ஒனறுத காமம கனலுள தெறலோடு - பொருநதாத காமமாகிய தீயில அழிதலுடனே, நாசி - மூககையும, பொன தாழ குழைதனனொடும பொனனுலாகிய தாழநத குணடலததையணிநத காதையும, போககினள - இழநத சூாபபநகை, போய புகுநதாள - (இராவணனிருகக மிடததிற) போயபபிரவேசிததாள.

குறிபபு —தாழ நிருதநகுலம-கனநடககையிற றுழவுறற நிருதககுலம. பொனறுழ, தாழ - கனததால தாழநத இனி, பொனபோனற குழை என்று கூறி உலோகஙகளில பொன சிறநததுபோலக குழைகளுள இககுழை சிறநத தெனபதுமாம. இப்பொருட்குத தாழ உவமவாசகம. தாழ குழை - அனமொழிததொகை. (௧௪௭)

பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள்புகுந் தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வா ளவனேறுற நோக்கு நங்காய்
மைந்நின்ற வாட்கண் மயினின்றென வந்தென் முன்ன
ரிந்நின்றவ ளாங்கொ லியம்பிய சீதை யென்றான்

இ - ள் நெய் நின்ற கூர்வாளவன் - (பகைவரது) நிணந்தோய்ந்த கூரிய வாளினையுடைய இராவணன், பொய் நின்ற நெஞ்சில் - பொய்யென்பது நிலைத்துள்ள மனத்தைப் பார்க்கிலும், கொடியாள் - கொடியவளாகி, புகுந்தாளை - (ஆங்குப்) புகுந்த சூர்ப்பநகையை, நோக்கி - பார்த்து, நங்காய் - நங்கையே! மை நின்ற வாள் கண் - அஞ்சனந்தீட்டியுள்ள வாள்போன்ற கண்ணினையுடைய, மயில் நின்றென - ஒரு மயில் நின்றாற்போல, வந்து—, என் முன்னர் - என் முன்னே, இ நின்றவள் கொல் - நின்றவளாகிய இவள்தானோ? இயம்பிய சீதை - (நீ) சொன்ன சீதையென்பவள், நோ உற நோக்கு என்றான் - நேராகப் பார்ப்பாயாக வென்றுகூறினன். ()

செந்தாமரைக் கண்ணொடுஞ் செங்கனி வாயி னோடுஞ்
சந்தார்தடந் தோளொடுந் தாழ்தடக் கைக ளோடு
மந்தாரக லத்தொடு மஞ்சனக் குன்ற மென்ன
வந்தானிவ னாகுமவ் வல்வி லிராம னென்றாள்

இ - ள் செந்தாமரை கண்ணொடும் - செந்தாமரை மலர்போன்ற கண்களுடனேயும், செங்கனி வாயினோடும் - செய்யகனியாகிய கோவைக்கனிபோன்ற வாயுடனேயும், சந்து ஆர் தடம் தோளொடும் - அழகு பொருந்திய பெரிய புயங்களுடனேயும், தாழ் தடம் கைகளோடும் - (முழந்தாளளவுந்) தாழ்ந்த பெரியகைகளுடனேயும், அம் தார் அகலத்தொடும் - அழகிய மாலையையணிந்த மார்பினுடனேயும், அஞ்சனம் குன்றம் என்ன வந்தான் இவன் - கரியமலைபோல வந்தவனாகிய இவன் தான், அ வல்வில் இராமன் என்றாள் - வலியவில்லினையுடைய அந்த இராமன் என்று கூறினள்

குறிப்பு — சந்தம்-சந்தென விகாரம். ஆகும் - அசை. (௧௪௧)

பெண்பாலுரு நானிது கண்டது பேதை நீயி
ணெண்பாலு மிலாததொ ராணுரு வென்றி யென்னே
கண்பாலுறு மாயை கவற்றுதல் கற்ற நம்மை
மண்பாலவ ரேகொல் விளைப்பவர் மாயை யென்றான்

இ - ள். நான் கண்டது இது பெண்பால் உரு - நான் பார்த்த இவ்வுருவம் பெண் உருவமாயிருக்கிறது, பேதை நீ - பேதையாகிய நீ, ஈண்டு - இப்பொழுது, எண்பாலும் இலாதது ஓர் ஆண் உரு என்றி என்னே - எட்டுத்திக்கிலு மில்லாததாகிய ஒரு ஆணினுடைய உருவம் என்று கூறினாய் என்ன ஆச்சரியம்? கண்பால் உறு மாயை கவற்றுதல் கற்ற நம்மை - கண்ணிடத்துற்ற [கண்ணுக்குத் தெரியும்படியான] மாயைச்செயலினாலே வருத்துஞ் செயலைக்கற்ற நம்மிடத்தில், மண்பாலவரே - மண்ணுலகத்தி லிருப்பவர்களாகிய மனிதர்கள்தாமா? மாயைவிளைப்பவர் - மாயையைச்செய்பவர்கள், என்றான் - என்று (அவ்விராவணன்) கூறினன்.

குறிப்பு — இராவணன் தான் கண்டது பெண்ணுருவாயிருக்கச் சூர்ப்பணகை ஆணுரு வென்றமையால் அவளைப் பேதையென்றான். எங்கு நோக்கினும் அப்பெண்ணுருவாகவே தோன்றக் கண்டமையால் 'எண்பாலு மிலாதது' என்றான். இனி, எங்குமில்லாத பேரழகினையுடைய ஒப்பற்ற ஆண் உரு என்று கோடலுமாம். நம்மை - உருபுமயக்கம். (௧௫௦)

ஊன்று முணர்வப் புறமொன்றினு மோட லின்றி
யான்று முள்ளதா நெடித்தாசை கன்றற நின்றாயக்
கேன்று னெதிரே விழிநோக்கு மிடங்க டோறுந்
தோன்று மனையா ளிதுதொன்னெறித் தாகு மென்றாள்.

இ-ள் ஊன்றும் உணர்வு - (சீதையினழகினிடத்தே) பதிந்திருக்கிற அறிவானது, அப்புறம் - அப்பால், ஒன்றினும் - வேறொன்றினும், ஓடல் இன்றி - செல்லுதலில்லாமலும், ஆன்றும் உள்ள நெடித்து ஆசை கன்றற - மிகுந்தும் இருக்கிற பெரிதாகிய ஆசையானது வருத்தவும், நின்றாயக்கு - நின்றவனுக்கு, விழிநோக்கும் இடங்கள் தோறும் - கண்ணுறப்பார்க்கும் இடங்கள் தோறும், அனையாள் - அவள், உன் எதிரே - உனக்குமுன்னே, என்று - பொருந்தி, தோன்றும் - காணப்படுவாள், இது - இப்படிக்காணப்படுதல், தொல் நெறித்து ஆகும் என்றாள் - பழைய முறைமையையுடையதாகும் என்று கூறினாள் [வழக்கம் என்று கூறினள்]

குறிப்பு — நீ கேள்வியுற்ற அழகிற் சிறிதுங்குறையாதபடி அழகு நிரம்பலுற்று என்பாள் 'என்று' என்றாள் இராவணன் மகிழுமாறு 'தோன்றும் மனையாள்' என்று கூறினாளென்னலுமாம் (௧௫௧)

அன்னாளது கூற வரக்கனு மன்ன தாக
நின்றாலவ் விராமனைக் காணுறு நீரென் னென்றா
னெந்நாளவ னென்னை யித்தீவரு மின்னல் செய்தா
னந்நாண்முதல் யானு மயர்த்தில னாகு மென்றாள்

இ-ள் அன்னாள் அது கூற - அச்சூர்ப்பணகை அம்மொழியைச் சொல்ல, அரக்கனும் - இராவணனும், அன்னது ஆக - அத்தன்மையதேயாக, நின்றால் - நீ, அவ் இராமனைக் காணுறும் - அந்த இராமனைக்காண்கின்ற, நீர் என் என்றான் - நீர்மை யாது? என்று கூறினான், அவன் என்னை இத் தீவரும் இன்னல் எந்நாள் செய்தான் - அவ்விராமன் எனக்கு நீங்காத இத்துன்பம் எந்தநாள் செய்தானோ, அந்நாள் முதல் - அந்த நாள் முதலாக, யானும் அயர்த்திலன் என்றாள் - நானும் (அவனை) மறந்தேனில்லையென்று கூறினாள்

குறிப்பு — அன்னதாக, ஆக என்பதை வியங்கோள் வினைமுற்றாக்கொண்டு அன்னது ஆகுக என்றும், மற்றும் உவமவுருபாகக்கொண்டு அன்னதுபோல என்றும் இருவகையானும் பொருள் கோடலாம் நின்றால் - வேற்றுமைமயக்கம். (௧௫௨)

ஆமாந் தடுக்குமெ னாக்கையொ டாவி நைய
வேமாலவினை யேற்கினி யென்விடி வாகு மென்னக்
கோமானுல குக்கொரு நீகுறை கின்ற தென்னே
பூமாண்குழ லாடனை வெளவுதி போதி யென்றான்.

இ-ள். ஆம் ஆம் —, அது அடுக்கும் —, என ஆக்கையொடு ஆவியை - எனது உடலும் உயிரும் மெலியும்படியாக, வெம் மால் வினையேற்கு - வேகின்ற வேட்கைச்செயல்வினை யுடையேனாகிய எனக்கு, இனி —, என் விடிவு ஆகும் என்ன - யாது அனுகூலமுண்டாகுமென்று சொல்ல, கோமான் - அரசனும், உலகுக்கு ஒரு நீ - உலகத்துக்கு ஒருவனுமாகிய நீ, குறைகின்றது என்னே - சிறுமையடைகின்றது என்ன ஆச்சரியம்? பூ - மலர்களையணிந்த, மாண்குழலாள் தன்னை - பெருமைபொருந்திய கூந்தலையுடைய அச்சீதையை, வௌவுதிபோதி என்றாள் - எடுத்துவரச்செல்வாய் என்று கூறினாள், (௧௫௩)

என்றா ளகன்றா ளரக்கனு மீடழிந்தா
னொன்று முணர்ந்தில னாகி யுலைந்து சோர்ந்தா
னின்றாரு நடுங்கினர் நின்றுள நாளினூடே
பொன்றாதுள னாயின னத்துணை போழ்து மன்றே.

இ-ள் என்றாள் - என்று சொன்ன சூர்ப்பநகை, அகன்றாள் - (அவ்விடத்தை விட்டு) நீங்கினாள், அரக்கனும் - இராவணனும், ஈடு அழிந்தான் - வலியிழந்து, ஒன்றும் உணர்ந்திலன் - யாதொன்றினும் உணர்ச்சியடையாதவனாய், ஆவி உலைந்து சோர்ந்தான் - உயிரழிந்து சோர்வடைந்தான் [மூர்ச்சித்துப் பிரேதம்போலிருந்தான்], நின்றாரும் நடுங்கினர் - (அதைக்கண்டு ஆங்கு) நின்ற சிலர்களும் நடுக்கங் கொண்டார்கள், அத்துணை - அவ்வளவில், நின்று உள நாளினூடே - (தான் வரத்தாற் பெற்ற ஆயுளிற்சென்ற நாள் போக) நின்றிருக்கிற நாட்களினாலே, பொன்றாது உளன் ஆயினன் - சாகாமலிருக்கின்றவனானான் (௧௫௪)

இறந்தார் பிறந்தாரென வின்னுயிர் பெற்ற மன்னன்
மறந்தா னுணர்ந்தா னவண்மாடுநின் றாரை நோக்கிக்
கறந்தாலென நீர்தரு சந்திர காந்தத் தாலே
சிறந்தாமணி மண்டபஞ் செய்கெனச் செப்பு கென்றான்

இ-ள் இறந்தார் பிறந்தாரென - இறந்துபோனவர் உயிர்கொண்டெழுந்தார் என்று சொல்லும்படி, இன் உயிர்பெற்ற மன்னன் - (தனது) இனிய உயிரையடைந்த மன்னனாகிய இராவணன், மறம் உணர்ந்தான் - (தனது) வலிமையையறிந்தானாகி, அவண் - அவ்விடத்தில், மாடு நின்றாரைநோக்கி - பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்து, கறந்தால் என - கறந்தாற்போல, நீர்தரு - நீரைத்தருகின்ற, சந்திர காந்தத்தாலே - சந்திரகாந்தக் கற்களினாலேயே, சிறந்து - சிறப்படைந்து, ஆர் மணி - நிறைந்த அழகுபொருந்திய, மண்டபம் - ஓர் மாடத்தை, செய்க என - செய்வாயாகவென்று, செப்புக என்றான் - சொல்லுக என்று சொல்லினான்.

குறிப்பு —மன்னனும் தன்னை மறந்தானுமாகிய இராவணன் உணர்ந்தானென்று பொருள் கோடலுமாம். கறத்தல் - பிதுக்குதல் தானே நீரையுமிழாது சந்திரப் பிரகாசத்தால் நீரையுமிழ்வது என்பான் 'கறந்தாலென' என்றான், "இந்து காந்தத்தி னீர் நெடுங்கலும்" என்க் கீழ்க்கூறியதை மீண்டு நோக்குக. மணி - இரத்தினங் களுமாம் (௧௫௫)

வந்தானொடு வானுறை தச்சன் மனத்து ணர்ந்தான்
சிந்தாவினை யறியுஞ் செய்வினை யாவுஞ் செய்தா

னந்தாம நெடுந்தறி யாயிரந் தால மைத்த
சந்தாமணி மண்டபந் தாமரை யோனு நாண

இ - ள் வந்தான் - (இராவணனது கட்டளையைக்கேள்வியுற்று) வந்தவனாகிய, நெடுவான் உறை தச்சன் - நெடியவானுலகில் வசிக்கின்ற தச்சனாகிய மயனென்பவன், தாமரையோனும் நாண - தாமரைமலரிலிருக்கிற பிரமதேவனும் வெட்குறும்படியாக, சிந்தாவினை - குறைவற்ற வேலையை, மனத்து உணர்ந்தான் - மனத்தில் நினைத்தான், அன்றியும் - அல்லாமலும், செயவினையானும் - கைசெய்வேலையானும், அம் தாமம் நெடுந்தறி ஆயிரத்தால் அமைத்த - அழகிய ஒளியினையுடைய நெடிய தூண்கள் ஆயிரத்தால் அமையச்செய்த, சந்து ஆர்மணி மண்டபம் - அழகு பொருந்திய இரத்தினமயமான மண்டபத்தை, செய்தான் —,

குறிப்பு — செய — கை. தாமம — ஒளிக்கும், மாலைமாலையாகச் சித்திரவேலை செய்யப்பட்டதென்பதுமாம். (௧௫௬)

காந்த மமுதின் றுளிகாலவன கால மீனின்
வேந்த னொளியன் றியு மேலொடு கீழ்வி ரித்தான்
பூந்தென்றல் புகுந்துறை சாளர மும்பு னைந்தா
னேந்து மணிக்கற் பகச்சீதளக் காவி ழைத்தான்.

இ - ள் காலம் - அக்காலத்துக்குரிய, மீனின் வேந்தன் - உடுபதியாகிய சந்திரனது, ஒளி அன்றியும் - பிரகாசம் அல்லாமலும், அமுதின் துளி காலவன - அமிர்த பிந்துக்களைப்போல் நீர்த்துளிகளைச் சிந்துவனவாகிய, காந்தம் - சந்திரகாந்தக் கற்களை, மேலொடு கீழ் விரித்தான் - (அம்மண்டபத்தின்) மேலுங்கீழும் பரப்பினான், பூந்தென்றல் - பூவின் மணத்தையுடைய தென்றற்காற்று, புகுந்து - பிரவேசித்து, உறை - தங்குகின்ற, சாளரமும் - பலகணிவாயில்களும், புனைந்தான் - செய்தான், ஏந்தும் மணி - (கேட்போர்க்கு நலங்கும்பொருட்டு) தாங்கிக்கொண்டிருக்கிற இரத்தினங்களையுடைய, கற்பகம் - கற்பகமாகிய, சீதளம் - குளிர்ச்சிபொருந்திய, கா - சோலையை, இழைத்தான் - செய்தான்

குறிப்பு — ஏந்து மணி - தாங்கிய அழகுமாம் (௧௫௭)

ஆணிக்கமை பொற்கம் மணிச்சுட ராவி ளக்கக்
சேணுற்றிருள் சீப்பவத் தெய்வ மடந்தை மார்கள்
பூணிற்பொலி வார்புடை யேந்திடப் பொங்கு தோளான்
மாணிக்க மானத் திடைமண்டபங் காண வந்தான்.

இ - ள் ஆணிக்கு அமை பொன் - உரையாணிக்காக அமைந்த (மாற்றுயர்ந்த) பொன்னாலாகிய, மணிசுடர் ஆர் - மாணிக்கமணியினது சுடர் பொருந்திய, கைவிளக்கம் - கைவிளக்குக்கள், சேண் உற்று இருள் சீப்ப - ஆகாயத்தையடைந்து இருளை நீக்கினதாலும், அத்தெய்வமடந்தை மார்கள் பூணில் - (விளக்கமேந்திய) அந்த அரம்பாஸ்திரிகளுடைய ஆபரணங்களால், ஆர் புடை - மிகுதியான பக்கத்தின் இடங்களெல்லாம், பொலிவு ஏந்திட - அழகினைத்தாங்கினதாலும், பொங்கு தோளான் - உயர்ந்த தோளினையுடையானாகி, (அவ்விராவணன்), மாணிக்கம் மானத்திடை -

மாணிக்க விமானத்தினமேல, மணடபம காண வநதான - அமமணடபத்தைபபார்க்க வநதான (௧௫௮)

அலலாயிர கோடி யடுக்கிய தொதத தேனு
நலலாரமுக மாநளிர வானில வீனற நாமப
பலலாயிர கோடி பனிசசுட ரீனற திஙக
ளெலலாமுட னாயிரு ளோடி யிரிநத தனறே.

இ-ள ஆயிரம கோடி அல அடுக்கியது ஒததேனும - (அனறி ராததிரியி னிருளானது) ஆயிரஙகோடி இருளை அடுக்கிவைததததை ஒபபாயிறறாயினும, வான-மசததுவமபொருநதிய, நளிர நிலவு ஈனற - குளிரநத சநதிரபபிரபையை அளிதத, நலலாரமுகம ஆம - பெணகளது முகஙகளாகிய, நாமம - பெருமைபொருநதிய, பனி சுடா ஈனற - குளிரசசியையுடைய பிரகாசததை அளிதத, பல ஆயிரம கோடி திஙகள எலலாம - அநேகவாயிரஙகோடி சநதிரனகள முழுதும, உடன ஆய - ஒனறுசேர, இருள ஓடி இரிநதது - அவவிருள ஓடி யழிநதது,

குறிபபு —'ஆய' எனனும எசசம 'ஆக' வெனனு மெசசததிரிபு. (௧௫௯)

பொறபுறறன மாமணி யொனபதும பூவி னினற
கறபததரு வினகதிர நாணிழற கறறை நூற
வறபறறழி யபபக லாககிய தால ருககன
னிறபததெளி கினறது நீளசுடா மேனமை யனறோ.

இ-ள பொறபு உறறனமாமணி ஒனபதும - அழகு பொருநதிய பெருமையையுடைய நவரததினஙகளும, பூவில நினற கறபம தருவின - பூமியில நினற கறபகவிருடசததினது, கதிர - பிரகாசமானது, நாண - வெடகபபடுகினற, நிழல கறறை - (தம) பிரகாசததிரளினால, அல பறறு அழிய - இருளின பறறுதலானது அழியவும, பகல நாற - பகறகாலம விளஙகவும, ஆககியதால - ஆககியகாரணத தால, அருககன நிறப - சூரியன ஒழிய, தெளிகினறது - தெளிவடைகினறன, நீள சுடா - மிகுநத அபபிரகாசமானது, மேனமை அனறோ - மேனமையையுடைய தனறோ?

குறிபபு —மயஙகலமைககபபடட அககாவெனபது தோனற 'பூவினினற' எனறாா, கறபகம—கறபமென விகாரம கறபததருவின கதிரெனறது - சநதிராதித தரொளியினையடககு மொளியினையுடைய சோதிராஙகமெனனும கறபகததருவின சோதியை இனி, கறபகம நீலககிரததிரளைக கழிபபதுபோல நவமணிகளின நிழறகறறை அறபறறை ஒழிததலால கறபகததருவின கதிாநாணிற றெனவுங கூற லாம. "நறுமபுகை நான நாவிக குழமபொடுமே பளிதச சுணண, மறிநதவ ராயநத மாலை யணிநதவைகு கூநதலாயபொனிறநதரு கொமபு நீலக கதிாககறறை யுமிழவ வே போற, செறிநதிருந துகுததுச செயபொற குணககொடி யாயி னாரோ" எனறா சிந்தாமணியினும அருககன நிறப எனறகு சூரியனைபபோல் விளஙக எனறும பொருள் கோடலாம. (௧௬௦)

ஊனறேசை முதறபொறி யாவையு மொனறி னனறு
தேனறுஙிலை யுறறதொா சிநதையன் செயகை யோரான

வேறாய பிறப்பிடை வேட்கை விசித்தத் தீரப்ப
மாறோருட லுற்றென மண்டபம் வந்து புக்கான்.

இ-ள். ஊறு - பரிசம், ஓசை - சப்தம், முதல - முதலாகிய, பொறியாவையும் - (மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும்) பொறிகளெல்லாம், ஒன்றின் ஒன்று - ஒன்றாலொன்றை, தேறாநிலை உற்றது ஓர் சிந்தையன் - தெளிந்து அறிந்துகொள்ளாத நிலைமையை யடைந்ததாகிய ஒரு மனத்தினையுடையானும், செய்கை ஓரான் - செயலை யுணர்ந்துகொள்ளாதவனுமாகிய இராவணன், வேறு ஆய பிறப்பிடை - வேறான பிறவியில், விசித்தது வேட்கை - கட்டுண்டிருந்ததாகிய அவாவானது, ஈர்ப்ப - இழுக்க, (அதனால்), மாறு ஓர் உடல் உற்றென - (ஒருயிரானது) மற்றோருடலை யடைந்தாற்போல், மண்டபம் வந்து புக்கான் - (அம்) மண்டபத்தில் வந்து புகுந்தான்.

கருத்து — ஐம்பொறிகளும் அதனதன் செயலை யுணராவாறு பிரேதம்போலிருந்து தன்னைச் சோலையிலிருந்து மண்டபத்திற்குக் கொண்டுவந்த செய்கையை யறியாத இராவணனைப், "அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந், தவாஅப் பிறப்பீனும் வித்து" என்றவாறு ஒருவன் அடைந்த அவாவினால் வேறு பிறவியை யடைந்து அவ்வவாவை நிறைவேற்றிக்கொள்வதுபோலப் புதியநிலைமையை யடைந்து தானு பழையநிலைமையில் விரும்பிய மண்டபத்தை யடைந்தான் என்பதாம். பழையநிலைமை - மூர்ச்சித்துப் பிரேதம்போலிருந்தது. புதியநிலைமை - அம்மூர்ச்சை தெளிவுற்றது. (௧௬௧)

வேறு

தண்டலி றவஞ்செய் வோர்தாம் வேண்டிய தரவே நல்கு
மண்டல மகர வேலை யமுதொடு வந்த தென்னப்
பண்டரு சுரும்பு சேரும் பசுமர முயிர்த்த பைம்பொற்
றண்டளிர் மலரிற் செய்த சீதளச் சேக்கை சார்ந்தான்.

இ-ள். தண்டல் இல் - கெடுதலில்லாத, தவம் செய்வோர் - தவத்தைச் செய்பவர்கள், வேண்டிய - விரும்பியவைகளை, தரவே - (அவர்களுக்குக்) கொடுப்பதற்காகவே, நல்கும் - (மழையைத்) தருகின்ற, மண்டலம் - மேகமண்டலமானது, மகரம் வேலை அமுதொடு வந்தது என்ன - மச்சங்கள்நிறைந்த கடலினது நீரோடு வந்தது போல், பண்தரு சுரும்பு சேரும் - இசைப்பாட்டினைத் தருகின்ற வண்டுகள்சேர்கின்ற, பசுமரம் உயிர்த்த - பசிய மரங்களீன்ற, பைம்பொன் தண்தளிர் - பசிய பொன்போன்ற (நிறத்தோடு) குளிர்ச்சிபொருந்திய தளிர்களாலும், மலரின் - புஷ்பங்களினாலும், செய்த—, சீதளம் சேக்கை சார்ந்தான் - குளிர்ச்சியையுடைய படுக்கையைக் கிட்டினன்.

குறிப்பு — அறம்பொருளின்பங்களை உலகுக்கு உள்ளவாறு உணர்த்தும் முனிவர் செய்யும் தவம் நிறைவேறுதற்கும், தானம் வழங்கற்கும் மழையேதுவாயிருப்பதாலும், அம்முனிவர்க்குத் தருந் தானமே சிறப்புடைத்தாதலாலும், தரவென்புழிப் பிரிநிலை யேகாரங்கொடுத்து 'தண்டலி றவஞ்செய் வோர்தாம் வேண்டிய தரவே நல்கு மண்டலம்' என்றார். "தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம், வானம் வழங்காதெனின்" என நாயனார் கூறியிருத்தலானும், வான் சிறப்பைக் கூறிய அதி

காரத்துக்குப் பின்னே முற்றத்துறந்த முனிவரது பெருமையை அவர் கூறியிருத்தலானும் மேகமண்டலமென்று கொள்ளப்பட்டது. அமிர்தமுண்டார் சாவாது நிலைபெறுதல்போல உயிர்களை நிலைபெறுடையச் செய்தலான் மேகங் கடலிலிருந்து கொணர்ந்த நீராகிய மழையை 'அமுது' என்றார். "வானின் றுலக மழங்கி வருதலால், றானமிழ்த மென்றுணரற் பாற்று" என்றார் நாயனாரும். மண்டலம் இராவணனுக்கும், மகர வேலையமுது - அவன் மேனியிற் சோர்ந்த குளிர்ச்சிக்கும் உவமை. (௧௬௨)

நேரிழை மகளிர் கூந்த னிறைநறை வாச நீந்தி
வேரியஞ் சரளச் சோலை வேனிலான் விருந்து செய்ய
வாரகலி யமுதந் தந்த மருந்தென வொருவ ராவி
தீரினு முதவற் கொத்த தென்றலவ் விறுத்த தன்றே

இ - ள். வேரி அம் சரளம் சோலை வேனிலான் - வாசனையையுடைய அழகிய பூந்தாதுக்களை அடர்ந்த சோலையிலிருக்கிற மன்மதன், விருந்து செய்ய (இராவணனை) விருந்து (உண்டற்குரிய பொருளாகத் தனக்குத்)தர, ஆர்கலி அமுதம் தந்த மருந்து என - நிறைந்த ஒலியினையுடைய கடலானது கொடுத்த அமுதத்தைப்போல, ஒருவர் ஆவி தீரினும் - ஒருவருடைய உயிரானது நீங்கினாலும், உதவற்கு ஒத்த - (அவ்வுயிரை மீட்டுத்) தருதற்குப் பொருந்தியதான, தென்றல் - மந்தமாருதமானது, நேர் இழை மகளிர் கூந்தல் நிறை நறை வாசம் நீந்தி - செவ்வையான ஆபரணங்களையுடைய பெண்களினது கூந்தலில் நிறைந்த தேனினது வாசனையைக்கடந்து, வந்து—, இறுத்தது - சேர்ந்தது. (௧௬௩)

சாளரத் தூடு வந்து தவழ்தலுந் தரித்தற் றேற்றா
னீளரத் தங்கள் சிந்தி நெருப்புக நோக்கு நீரான்
வாழ்மனை புகுந்த தூர் மாசுணம் வரக்கண் டன்ன
கோளுறக் கொதித்து விம்மி யுழையரைக் கூவிச் சொன்னான்

இ - ள். சாளரத்து ஊடு வந்து தவழ்தலும் - (அத்தென்றல்) பலகணிவாயிலினிடையே வந்து மெல்லெனவுலாவிய வளவில், தரித்தல் தேற்றான் - (அவ்விராவணன் அத்தென்றலை (ஆங்குத்) தங்குதற்குத்துணிவுகொள்ளச் செய்யானாகியும், நீள் அரத்தங்கள் - மிகுந்த அரத்தத்தை, சிந்தி—, நெருப்பு உக - (அதனோடு) அக்கினியுஞ்சிந்துமபடியாக, நோக்கும் நீரான் - (கோபித்துப்) பார்க்கின்ற குணத்தையுடையானாகியும், வாழ் மனை புகுந்தது ஓர் மாசுணம் - (தான்) வாழ்கின்ற வீட்டிற் புகுந்ததாகிய ஒரு பாம்பானது, வரக் கண்டன்ன - (தன் படுக்கையிருக்கும்) அவ்விடத்துக்கு வருவதைப்பார்த்தாற்போல, கோள் உற - கொலை சமயவிப்பதால் கொதித்து - கொதிப்புற்று [பதைபதைத்து], விம்மி - அழுதும், உழையரை - ஏவல் செய்வோரை, கூவி - அழைத்து, சொன்னான் - (தென்றலின் கொடுமையைக் கூறினான் (௧௬௪)

கூவலி னுயிர்த்த சின்னீ ருலகினைக் குப்புற் றென்னத்
தேவரி னொருவ னென்னை யின்னலுஞ் செய்யத் தக்கா
னேவலி னன்றி வந்திங் கிவ்வழி யெய்திற் றென்னுங்
காவலி னுழைபா தம்மைக் கொணருதிர் கடிதி னென்றான்

இ - ள். கூவலின் - கிணற்றில், உயிர்த்த - ஊறிய, சில் நீர் - கொஞ்ச நீரானது, உலகினை குப்புற்றென்ன - உலகத்தைக் கடந்து சென்றாற்போல, தேவரின் ஒருவன் - தேவர்களுள் (மிகவும் கேவலமாகிய) ஒருவன், என்னை—, இன்னவும் செய்யத் தக்கான்- தன்பமுஞ் செய்யத்தக்கவனுயினன், ஏவலின் அன்றி -(இதற்கெல்லாம் என்னுடைய) கட்டளையல்லாமல், வந்து—, இ வழி -இவ்விடத்தில், எய்திற்று - அடைந்தது, என்று - என்று சொல்லி, காவலின் உழைபாதமமை - காவற்றொழிலையுடைய ஏவலாளர்களை, (நோக்கி), கடிதின் கொணருதிர் என்றான் - (வாயுதேவனை) விரைவிற் கொண்டுவாருங்கள் என்று கூறினன் (௩௬௫)

அவ்வழி யுழைய ரோடி யாண்டவற் கொணர்த லோடும்
வெவ்வழி யமைந்த செங்கண் வெருவுற நோக்கி வெய்யோன்
செவ்வழி தென்ற லோற்குத் திருத்தினை நீகொ லென்ன
விவ்வழி யிருந்த காலைத் தடையவற் கில்லை யென்றான்.

இ - ள் அ வழி உழையா ஓடி -அவ்விடத்தின் ஏவலாளர்கள் விரைந்து சென்று, ஆண்டு - அவ்விடத்திற்கு அவன் கொணர்தலோடும் - அவ்வாயுதேவனைக் கொண்டு வந்தவளவில், வெய்யோன் - கொடியவனுகிய இராவணன், வெவ்வழி அமைந்த செங்கண் - வெய்யதன்மையிலடங்கிய சிவந்த கண்களினுலே, வெருவுற நோக்கி - (அவ்வாயுதேவன்) அச்சம் அடையும்படியாகப் பார்த்து, நீ—, தென்றலோற்கு - தென்றலுக்கு, செவ்வழி - செம்மைவழியை [சன்மார்க்கத்தை], திருத்தினைகொல - வேறுபடுத்தி விட்டாயோ? என்ன - என்றுசொல்ல, இ வழி இருந்த காலை - (நீவிர்) இவ்விடத்திலிருந்த பொழுது, அவற்கு - அத்தென்றற்குத் தடை இல்லை - (யாதொரு) தடையும் இல்லை [அஞ்சாமல் தாராளமாய் வரும்படியே சமுகத்தின் கட்டளை], என்றான்-என்று (அவ்வாயுதேவன்) கூறினன் (௩௬௬)

குறிப்பு —ஈனகாமடியில, நீ யிவவாறு காமமுற்றிருந்தபொழுது அத்தென்றலின் குணத்தை மாறுபடுத்தற்கு வேறொரு கருவிவேண்டா தானே தன் குணம் மாறிவரும் என்னுமோருரையும் அடங்கியிருத்தல் காண்க

காற்றினோ னன்னை வாளா முனிதவிற் கண்ட தில்லை
கூற்றுவந் தென்னை யின்னே குறுகுமாற் குறித்த வாற்றால்
வேற்றருங் கருங்கட் சீதை மெய்யருள் புனையே னென்று
லாற்றலா லடுத்த தெண்ணு மமைச்சரைக் கொணர்தி ரென்றான்

இ - ள் காற்றினோன்தன்னை - வாயுதேவனை, வாளா - வீணேயாக, முனிதலில் - (நான்) கோபிப்பதுபோல், கண்டது இல்லை -(கோபித்தோரைப்) பார்த்ததில்லை, குறித்த ஆற்றால - (இன்னவாறு செய்துகொண்டதல் வேண்டுமென முன்னமே தீர்மானித்தவழியால், வேலதரும கருங்கண் சீதை - வேல்போன்ற கரியகண்ணினையுடைய சீதையினது, மெய் அருள்புனையேன் என்றால் - உண்மையான அருளையணியேனென்றால், இன்னே - இப்பொழுதே, கூற்றுவந்து - யமன்வந்து, என்னை குறுகும் - என்னை யணுகுவான், ஆல் - ஆதலால், ஆற்றலால் - (தமது) அறிவினுலே, அடுத்தது எண்ணும் - (ஆகவேண்டிய காரியத்திற்குத்) தகுதியானதை நினைக்கும், அமைச்சரை கொணர்திர் என்றான் - மந்திரிகளை (அழைத்துக்) கொண்டுவாருங்கள் என்று (இராவணன்) கூறினன.

குறிப்பு—"குறில செறியாலள" என்னும் சூத்திரத்துப் 'பற' என்ற மிகையானே 'வேற்றரும்' என நின்றது கூற்றுவந்து குறுகும், மெய்யருள

புனையேன்; எனறு - என்று கூறி, ஆல ஆற்றலால் - அசைகினற ஞானததினாலே, அடுததது எணணும - அடுததுவருகினற கேகோலததுககு(த தககபடி) ஆலோசனை சொலலும) என மறறுமோ ரறவுரையும கூறலாம (௧௬௭)

ஏவின சிலதரோடி யேயெனுந துணையி னெஙகுங
கூவினா கூவ லோடுங குறுகினா கொடிததிண டேரா
மாவினா சிவிகை மேலா மும்மதக களிறறா வையத
தேவரும வானந தனனிற றேவருஞ சிநதை சிநத.

இ - ள். ஏவின சிலதா - (இராவணன) அனுப்பிய வேலாளாகள, ஏ எனும துணையின - ஏ யெனறு கூறுமளவில, எஙகும ஓடி - எலலா இடஙகளுககும விரைநது சென்று, கூவினா - (மநதிரிகளை அரசன அழைபபதாகச) கூவினாகள, கூவலோடும - (அஙஙனம அவாகள) கூவிய வளவில, வையம தேவரும - பூமியிலிருககிற தேவாகளும, வானம தனனில தேவரும - விணணுலகிலிருககிற தேவாகளும, சிநதை சிநத - மனநிலைமாறும்படியாக, (அமமநதிரிமாாகள), கொடி திண தேரா - துவசததினையுடைய வலிய தோமேலவரும, மாவினா - குதிரைமேலவரும, சிவிகைமேலா - தணடிகைமேலவரும, மும்மதம களிறறா - மும்மதமபொருநதிய யானைமேலவருமாக, குறுகினா - வநது சோநதாாகள (௧௬௮)

வநதமந திரிய ரோடு மாசற மனததி னெணணிச
சிநதையி னினைநத செயயுஞ செயகையன றெளிவி னெஞச
னநதரஞ செலவ தாணடோா விமானததி லாரு மினறி
யிநதிய மடககி நினற மாரீச னிருககை சோநதான

இ - ள். வநத மநதிரியரோடு -(அவ்வாறு) வநத மநதிரிமாாகளுடனே, மாசு அற - குறறம நீஙக, மனததின - மனததால, எணணி - ஆலோசனை செயது, சிநதையின நினைநத செயயும செயகையன - மனததில நினைததவைகளைச செயகினற செயலினையுடையவனும, தெளிவு இல நெஞசன - தெளிவிலலாத நெஞசினையுடையனுமாகிய இராவணன், அநதரம செலவது - ஆகாயததிறசெலவதாகிய, ஆணடு - அவவிடததிலிருககிற, ஓா விமானததில - ஒரு விமானததினமேல, ஆரும இனறி - யாருமிலலாமல [தான ஒனறியாக], இநதியம அடககிநினற - பஞசேநதிரியஙகளை அடககியிருநத, மாரீசன இருககை சோநதான - மாரீசனுடைய இருபபிடததைச சோநதான.

குறிபபு —இநதியம - இநதிரியம, பொறிகள, "கணமுத லிநதியஙகளையும பாாாததததிற சாதிதது" எனபது மணிமேகலை. (௧௬௯)

இருநதமா ரீச னநத விராவண னெய்த லோடும
பொருநதிய பயததன சிநதை பொருமுறறு வெருவு கினறுன
கருநதட மலையன னனை யெதிாகொணடு கடனகள் யாவுந
திருநதிய செய்து செவவித திருமுக நோககிச் செபபும.

இ - ள் இருந்த மாரீசன் - (ஆஙகு) இருந்த மாரீசன, அந்த இராவணன் எய்தலோடும - அநத இராவணன வந்தவளவில், சிந்தை பொருநதிய பயத்தன்-மனத

திறபொருந்திய பயத்தையடையவனும், பொருமுற்று - (சுவாசமிகுந்ததால்) வீங்குதலுற்று, வெருவுகின்றான் - அஞ்சுகின்றவனுமாகி, கரும் தடம் மலை அனானை - கரிய பெரியமலைபோன்ற அவ்விராவணனை, எதிர்கொண்டு - எதிர்கொண்டு (போய் அழைத்து வந்து), கடன்கள் யாவும் - (அவனுக்குச்செய்யவேண்டிய) மரியாதைகள் அனைத்தும், திருந்திய செய்து - செம்மையுற்றனவாகச்செய்து, செவ்வி திருமுகம் நோக்கி - அழகுபொருந்திய (அவ்விராவணனது) திருமுகத்தைப்பார்த்து, செப்பும் - கூறுவான். (௧௭0)

வேறு

சந்த மலர்த்தண் கற்பக நீழற் றலைவற்கு
மந்தக னுக்கு மஞ்ச வடுக்கு மரசாள்வா
யிந்த வனத்தென் னின்ன விருக்கைக் கெளியோரின்
வந்த கருத்தென் சொல்லுதி யென்றான் மருள்கின்றான்

இ - ள் மருள்கின்றான் - (இவன் வந்த காரணம் யாதோஎன்) மயங்குகின்ற மாரீசன், (இராவணனைநோக்கி), சந்தம் மலர் தண் கற்பகம் நீழல் தலைவற்கும் - அழகிய மலர்களையுடைய குளிர்ச்சி பொருந்திய கற்பகத்தின் நிழலில் வீற்றிருக்கின்ற (விண்ணவர்) தலைவனாகிய இந்திரனுக்கும், அந்தகனுக்கும் - யமனுக்கும், அஞ்ச - அச்சத்தைச்செய்யும்படி, அடுக்கும் - சேர்கின்ற, அரசு ஆள்வாய் - அரசாட்சிசெய்கின்றவனே! இந்தவனத்து - இந்த வனத்திலிருக்கிற, என் - எனது, இன்னல் இருக்கைக்கு - துன்பத்தைத்தருவதான இருப்பிடத்துக்கு, எளியோரின் வந்த - ஏழைகளைப்போல வந்த, கருத்து என் - எண்ணமியாது? சொல்லுதி என்றான்—;

குறிப்பு—நிழல் - நீழலெனவிகாரம் அஞ்ச எனபது பிறவினைப்பொருள்பட நின்றது. இனி, தலைவற்கும் அந்தகற்கும் நீ அஞ்சும்படி சேரும் அரசையாள்பவனே என ஓர் அறவுரையும் பொருந்தக் கூறினுன் என்னலுமாம் (௧௭௧)

ஆன தனைத்து மாவி தரித்தே னயாகின்றேன்
போனது பொற்பும் மேன்மையு மற்றென் புகழோடும்
யான துனக்கின் றெங்ங னுரைக்கே னினிதென்று
வானவ ருக்கு நாண் தடுக்கும் வசைமன்றோ

இ - ள் அனைத்தும் ஆனது - எல்லாம் ஆயின, ஆவி தரித்தேன் அயாகின்றேன் - உயிர் தங்கப்பெற்றுச் சோர்வடைகின்றேன், என் புகழோடும் - எனது புகழுடனே, பொற்பும் - அழகும், மேன்மையும் - மேலானதன்மையும், போனது - போயின, வானவருக்கு நாண் அது - தேவர்களுக்கு வெட்கப்படுவது, அடுக்கும் - சேர்கின்ற, வசை - இகழ்ச்சிச்சொல்லே, இனிது என்று - இனியது என்று, அது - அதனை, இன்று - இப்பொழுது, யான் - நான், உனக்கு—, எங்ஙன் உரைக்கேன் - எவ்வாறு கூறுவேன்.

குறிப்பு—அரக்கர்க்கு ஊனுகிய மனிதர் அரக்கரை யஞ்சாமையும், அவர்தம் பழியுங்கொலையும் தோன்றுமையு முளப்படுத்தி 'ஆன தனைத்தும்' என்றான். ஆன தனைத்தும் - ஒருமை பன்மைமயக்கம் எங்ஙனம் - எங்ஙன் என விகாரம், நாணது, நாண் - முதனிலை, அது - பகுதிப்பொருள் விகுதி. (௧௭௨)

வன்மை தரித்தோர் மானுடர் மற்றுங் கவர்வாளா
லின்மரு கிக்கு நாசி யிழக்கு நிலைநேர்ந்தா
னென்மர புக்கு நின்மர புக்கு மிதன்மேலோர்
புன்மை தெரிப்பின் வேறினி யென்றே புகல்வேலோய்.

இ - ள். வேலோய் - வேலினையுடையாய்! வன்மைதரித்தோர் மானுடர் அவர் வாளால் - வலிமையைப் பூண்டவர்களாகிய மனிதர்கள் அவர்களுடைய வாளினாலே, நின் மருகிக்கு - உன் மருமகளாகிய சூர்ப்பநகைக்கு, நாசி இழக்கும் நிலை நேர்ந்தார் - மூக்கினை இழந்து விடுகிற நிலைமையை யீந்தார்கள். இனி—, தெரிப்பின் - தெரியப்படுத்தினால், இதன் மேல் ஓர் புன்மை - இதற்குமேலாகிய ஒரு இழிவானது, என் மரபுக்கும் நின் மரபுக்கும் - எனது வம்சத்துக்கும் உனது வம்சத்துக்கும், வேறு என்றே - வேறு என்ன இருக்கிறது, புகல் - சொல்லுவாயாக.

குறிப்பு —என்றே - இரக்கக் குறிப்புப்பட மொழி மாற்று, அங்கு அசைகள. இயற்கைவலியில்லா மானிடர் புதிதாக வலிமையையுடைய ராயினா ரென்பான் 'தரித்தோர்' என்ற வினைதந்து கூறினன். (௧௭௫)

திருகு சினத்தார் முதிர மலைந்தார் சிறியோர்நாள்
பருகின ரென்றால் வென்ற நலத்தின் பழியன்றோ
விருகை சுமந்தா யினிதி னிருந்தா யிகல்வேலுன்
மருக ருலந்தா ரொருவன் மலைந்தான் வரிவில்லால்.

இ - ள். இருகை சுமந்தாய் இனிதின் இருந்தாய் - இரண்டு கைகளையும் (தலைமேற்) சுமந்துகொண்டு யோக நிஷ்டையிலிருந்தவனே? சிறியோர் - சிறியவர்கள் [மனிதர்கள்], திருகு சினத்தார் - திரும்புகின்ற [மேன்மேலும் மதிக்கின்ற] கோபத்தையுடையார்களாகி, முதிர மலைந்தார் - முற்றவும் போர்செய்த இராக்கதர்களுடைய, நாள் - ஆயுள் நாளை, பருகினா ரென்றால் - உண்டு விட்டார்கள் என்று கூறினால், வென்ற நலத்தின் - வென்றிகொண்ட (அவர்களுடைய) நன்மையினாலே, பழி அன்றோ - (நமக்குப்) பழியன்றோ? ஒருவன் - ஒருமானிடன், வரிவில்லால் - கட்டமைந்த வில்லினாலே, மலைந்தான் - போர்செய்தான், (அதனால்), இகல்வேல் - போர்க்குரிய வேலினையேந்திய, உன் மருகர் - உனது மருமக்களாகிய கரதூஷணர்கள், உலந்தார் - இறந்தார்கள்.

குறிப்பு —கீழே 'இந்திரிய மடக்கி நின்ற' என்றதாலும் ஈண்டு வாளா இனிதி னிருந்தாயென்றது 'இருகை சுமந்தா யினிதி னிருந்தாய்' என்றதாலும் இனிது என்றது யோக நிஷ்டையென்றும். (௧௭௬)

வெப்பழி யாதென் னெஞ்சு முலந்தேன் விளிகின்றே
னொப்பழி வென்றே போர்செய லொல்லே னுடன்வாழ்ந்
துப்பழி செவ்வாய் வஞ்சியை வெளவத் துணைகொண்டிட்
டிப்பழி நின்னாற் றீரிய வந்தே னிவணென்றான்.

இ - ள். வெப்பு அழியாது என் நெஞ்சும் உலந்தேன் - வெப்பம் அழியாமல் எனது மனமும் அழிந்துற்று, விளிகின்றேன் - சாகின்றேனாகிய நான், ஒப்பு அழிவு

என்றே - (அம்மனிதர்கள் எனக்கு) ஈடில்லையென்று எண்ணியே, போர்செயல் ஒல்லேன் - (அவரோடு) போர்செய்தற்குச் சம்மதிக்கமாட்டேன், உடன் வாழும் - அவர்களுடன் வாழ்கின்ற, துப்பு அழி செவ்வாய்வஞ்சியை - பவளம்போன்ற செய்ய வாயினையுடைய பெண்ணை, வெளவ - கவர்ந்து எடுத்துவர, துணைகொண்டு - (உன்னைத்) துணையாகக்கொண்டு, இ பழி - இந்தப்பழியை, நின்னால் - உன்னால், தீரிய - தீர்த்துக்கொள்ள, இவண் வந்தேன் என்றான் - இவ்விடத்திற்கு வந்தேன் என்று (அவ்விராவணன்) கூறினன்.

குறிப்பு — வெப்பம் - ஆசை, மனத்துயர், வெம்மை யென்ப பலபொருள் குறிக்கும் ஒருசொல்லாகலின், நேரிட்ட பழியால் மனத்துயரழியாதென்றேனும், சீதைமேற்கொண்ட ஆசை யழியாதென்றேனும் பொருள் கூறிக்கொள்க. துப்பழி, அழி - உவமவாசகம். கொண்டிட்டு, இட்டு - அசை. (௧௭௫)

இச்சொ லனைத்தும் சொல்லி யரக்க னெரிகின்ற
கிச்சி னுருக்கிட் டெய்த்தனன் னென்னக் கிளராமுன்
சிச்சி யெனத்தன் மெய்ச்செவி பொத்தித் திருமந்தா
னச்ச மகற்றிச் செற்ற மனத்தோ டறைகின்றான்.

இ - ள். அரக்கன் இ சொல் அனைத்தும் சொல்லி - அவ்விராவணன் இந்த வார்த்தைகள் முழுவதுஞ் சொல்லி, எரிகின்ற கிச்சின் - எரிகின்ற நெருப்பில், உருக்கு இட்டு - இரும்பைவைத்து, உய்த்தனன் என்ன - செலுத்தினனைப் போல [இரும்பைக்காய்ச்சிச் சூடு போட்டாற்போல்], கிளராமுன் - கிண்டாதமுன்பு [சொல்லத்தகாத அவ்வார்த்தைகள் குப்பையைக்கிளறித்தனக்கு வேதனையுண்டாக்காதமுன்பு], சிச்சி என - சீச்சீ என்று, தன் மெய் செவி பொத்தி - தனது உண்மையான காதுகளைமூடி, திருமந்தான் - (மனஞ்) சுழலுதலுற்று (பின்னர்), அச்சம் அகற்றி - பயத்தை விலக்கி, செற்ற - கோபித்த, மனத்தோடு - மனத்துடன், அறைகின்றான் - சொல்லுகின்றான்.

குறிப்பு — உருக்கு - உருக்கப்படுவது, செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. சிச்சி - சீச்சீ, இகழ்ச்சிக்குறிப்பு. உண்மையாகவே அந்தக்கொடுஞ்சொற்களைக் கேட்க மாரீசனுக்கு விருப்பமில்லையாதலின் 'மெய்ச்செவி' என்றார். இனி, மெய்ச்செவி - சரீரத்துள்ள செவியெனவே கொண்டு, இராவணனது தீயவுரைகளை மனத்தாற் கிரஹிக்காதிருப்பினும், அவை மெய்ச்செவிகளையுற்று ஆண்டுத் தங்குதல்கூடுமே, அதனையுந் தடுத்தலே நெறியென்றெண்ணித் தன் காதுகளைப் பொத்தினன் என்று பொருள் கோடலுஞ் சிறப்புடைத்து. "ஆங்கது கேட்டாங் கரும்புண் ணகவயிற், றீத்துறு செங்கோல் சென்றுசுட் டாங்குக், கொதித்த வுள்ளமொடு குரம்புகொண் டேறி, விதுப்புறு நெஞ்சினள் .." எனனும் (மணிமேகலை, உதயகுமரன் அம்பலம் புக்க காதை) செய்யுளை யிரண்டாமடியோ டொப்பு நோக்குக.

மன்னு நீநின் வாழ்வை முடித்தாய் மதியற்றா
யுன்னு னன்றீ தூழ்வினை யென்றே யுணர்கின்றே
னின்னு நெஞ்ச னேனு முரைப்ப விதமென்னுஞ்
சொன்னு னன்றே யன்னவ னுக்குத் துணிவெல்லாம்.

இ - ள். மன்னா - அரசனே! நீ —, நின் வாழ்வை முடித்தாய் - உனது வாழ்வை முடித்துவிட்டாய், மதி அற்றாய் - அறிவற்றுப்போயினாய், ஈது - இவ்வெண்ணம், உன்னான் அன்று - உன்னால் (உண்டானது) அன்று, ஊழ்வினை என்றே உணர்கின்றேன் - விதியின் செயலென்றே அறிகின்றேன், இன்னா நெஞ்சனேனும் - (நான்) கெட்ட மனத்தையுடையவனாயிருந்தாலும், இதம் உரைப்பல் என்னா - நன்மையைச் சொல்வேன் என்று, அன்னவனுக்கு - அவ்விராவணனுக்கு, துணிவு எல்லாம் சொன்னான் - நலவிஷயங்கள் முழுதும் கூறுவானாயினான்.

குறிப்பு — "விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில், தீமை புரிந்தொழுகுவார்" "எனைத்துணையராயினு மென்னாந் தினைத்துணையுந், தேரான் பிறனில் புகல்" என்றவாறு பிறன் மனைவியை விரும்பினோன் இறந்தவனும் பெருமையிழந்தவனுமாவானாதலின், 'நின்வாழ்வை முடித்தாய்' என்றான். நீ வேதங்களை நன்குணர்ந்த புத்திமானாதலின் இக்கொடிய நினைப்பைக் கொள்ளத்தக்கவனல்லை யென்பான் 'உன்னானன்று' என்றான், ஈண்டு 'ஆன்' மூன்றனுருபு. இனி, (இச்செயல் கொடியதென்று நீ) உன்னாதவனன்று என்னும் பொருள் கோடலாம். இன்னா - ஆகாமை, தீமை, துன்பம். துணிவு - ஆன்றோர்கள் துணிந்து செய்யத்தக்கதெனக் கொண்ட செயல், நலவிஷயமாம். (௯௭)

அற்ற கரத்தோ டுன்றலை தீயே யனன்முன்றிற்
பற்றினை யுய்த்தாய் பற்பல காலம் பசிகூர
வுற்றுயி ருள்ளே தேய வுலந்தா யுழையன்றோ
பெற்றனை செல்வம் பின்ன திகழ்ந்தாற் பெறலாமோ.

இ - ள். அற்ற (உன்) கரத்தோடு - அறுபட்ட உனது கரங்களையும், (அற்ற) உன் தலை - அறுபட்ட உனது தலைகளையும், பற்றினை - (அறுபடா மற்றைக் கரங்களால்) பிடித்து, தீ எய் அனல் இல் முன் உய்த்தாய் - அக்கினி பொருந்திய ஓமகுண்டத்தின் முன் செலுத்தி, பல் பலகாலம் - அநேககாலம், பசி கூர உற்று - பசி மிகுதியாகவடைந்து, உள்ளே - உடலுக்குள்ளே, உயிர் தேய - உயிர் தேயும்படி, உலந்தாய் - (உடல்வலி) அழிந்தாய், உழை அன்றோ - (அப்படி வலியழிந்த) இடத்தில் அன்றோ, செல்வம் பெற்றனை - செல்வத்தைப் பெற்றாய், இகழ்ந்தால் - (உலகத்தோர் நின்னை) இகழ்வார்களேயானால், பின் - அதன் பிறகு, அது - அச்செல்வத்தை, பெறல் ஆமோ - அடைதற்குக் கூடுமோ?

குறிப்பு — இல்முன் - முன்றில் என்பது மரூஉ, "முன்னென் கிளவி முன்னர்த் தோன்று, மில்லென் கிளவிமிசை றகர மொற்றல், றொல்லியல் மருங்கின் மரீஇய மரபே" என்றார் தொல்காப்பியத்தில். "ஓராயிரமாண் டுபவசித்துக் கழிந்தா லோரோர் தலையாகச், சீரார் சிரமொன் பதுந்தடிந்து செந்தீ யிடையோ மம்பண்ணப், போர் வுபவா சத்தினையப் பின்புமோரா யிரத்தாண்டிற், றூரார் மற்றைத் தலைதடிய லுற்றான் பற்றித் தசக்கிரீவன்" என்னும் உத்தரகாண்டச் செய்யுளால் இராவணன் செய்த தவநிலைமையறிக. நீ அரியதவஞ்செய்ததால் இப்பெருஞ்செல்வத்தை யடைந்தாயென்றான் "நற்றவஞ் செய்த வீர ருள்வழி நயந்து நாமே, பொற்றதா மரையி னாளில்." என்றார் திருத்தக்கதேவரும். பிறனில் விழைவார்க்குச் சேரும் பகை, பழி, பாவம், அச்சம் என்பவற்றுள் பழி யொன்றே இராவணனது நிலைமைக்கு முதன்மையாதல்பற்றி 'இகழ்ந்தால்' என்றான். "அறம்புகழ் கேண்மை பெருமை

யின்றானும், பிறன்றார நச்சுவார்ச் சேரா—, பிறன்றார, நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென், றச்சத்தோ டிந்நாற் பொருள்" என்றார் நாலடியாரிலும் அரிய பெரிய தவஞ்செய்து அடைந்த இப்பெருஞ்செல்வத்தைப் பிறனில்விழைந்து பழிகொண்டு வீணே இழக்கப்போகின்றாயே யென்பான் 'பின்னதிகழ்ந்தாற் பெறலாமோ' என்றான். பகையே பழியே பாவமே பயமே நான்கும் தினங்கொடுக்கும், தகையார் பெருமை முழுதழிக்குஞ் சாரத் பிறனில் விழைவொழிந்தோர், தொகையா றறமே பொருளின்பந் தோலாப் பெருமை யுடன்வாழ்வார், நகையா லதனைக் கனவிடத்து நவிற்றி யிடினுந் தீங்காமே" என்றார் விநாயகபுராணத்தும் (௧௬௮)

திறத்திற னாலோ செய்தவ முற்றுத் திருவுற்றாய்
மறத்திற னாலோ சொல்லுதி சொல்லாய் மறைவல்லோய்
அறத்திற னாலே யெய்தினை யன்றே வதுநீயும்
புறத்திற னாலே பின்னு மிழக்கப் புகுவாயோ

இ - ள் சொல் ஆய மறைவல்லோய் - மறையின் சொற்களையாய்கின்ற வல்லவனே! [இராவணனே!] திறம் திறனாலோ - மேலான குணத்தினாலேயோ, மறம் திறனாலே - பாபகுணத்தினாலேயோ, (இவ்விரண்டுகுணத்தில் எக்குணத்தால்), செய்தவம் முற்றி - செய்த்தவம் நிறைவேற்றி, திரு உற்றாய் - செல்வத்தையடைந்தாய், சொல்லுதி - சொல்லுவாய், அறம் திறனாலே யெய்தினை அன்றே - (இச்செல்வத்தை) தருமகுணத்தினாலே அடைந்தாயன்றே? நீயும் - (தருமகுணத்தினாலே அரியதவ முற்றிச் செல்வத்தையடைந்த சிலாக்கியவானாகிய) நீயும், புறம் திறனாலே - (உன்னிடத்தில்லாத) கெட்டகுணத்தினாலே, பின்னும் —, இழக்க புகுவாயோ - (அடைந்த செல்வத்தை) இழந்துவிட போதலுறுவாயோ? [இழந்துவிடமாட்டாய்]

குறிப்பு —திறன் - திறம். நீ யடைந்தபயன் அறத்தினாலென்றே உனக்கு நன்றாய்த் தெரியுமானதால் நீ சொல்ல மயங்கமாட்டாய் என்பான் 'சொல்லுதி சொல்லாய்' என்றான் இனி, சொல்லுதி சொல்லாயென்பதை அடுக்கென்பாருமுளர், மறையில் வல்லவனாதலானும், மறையோன்குலத்தில் வந்தவனாதலானும் 'மறைவல்லோய்' என விளித்தான். (௧௬௯)

நாரங் கொண்டார் நாடு கவர்ந்தா ரடையல்லார்
வாரங் கொண்டார் மற்றொரு வர்க்காய் மனைவாழுந்
தாரங் கொண்டா ரென்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈருங் கண்டாய் கண்டக ருய்ந்தா ரெவரையா

இ - ள் நாரம் கொண்டார் நாடு கவர்ந்தார் - அன்புகொண்ட நண்பர்களுடைய நாட்டைக் கொள்ளைகொண்டவர்கள், அடை அல்லார் வாரம் கொண்டார் - நட்பல்லாத உரிமைப்பொருளைக் கொண்டவர்கள், மற்று ஒருவர்க்காய் மனைவாழும் தாரம் கொண்டார் - வேறொருவர்க்காக (அவர்) மனையில் வாழ்கின்ற மனைவியை(த் தமவசப்படுத்திக்) கொண்டவர்கள், என்ற இவர் தம்மை - என்று சொல்லப்பட்ட இவர்களை, தருமம் ஈரும் கண்டாய் - தருமமென்பது கொன்றுவிடும், ஐயா—! கண்டகர் எவர் உய்ந்தார் - துஷ்டர்களில் யார் பிழைத்தவர்கள்? (௧௭௦)

குறிப்பு —மற்றொருவர்க்காய், ஆய - ஆகி யென்பதன்றிரிபு இனி, மற்றொருவர்க்காய் மனைவாழும் - மற்றொருவரைக்காய்ந்து அவரது மனையில்வாழும், எனப்

பொருள் கோடலுமாம் இப்பொருட்டு, காய் - காயாது என்பது 'வரிப்புனை பந்து' என்புழிப்போல நின்றது.

அந்தர முற்று னகலிகை பொற்பா லழிவுற்று
னிந்திர னொப்பா ரெத்தனை யோர்தா மிழிவுற்றார்
செந்திரு வொப்பா ரெத்தனை யோரின் றிருவுண்பார்
மந்திர மற்று றுற்ற துரைத்தாய மதியற்றாய்.

இ - ள் அந்தரம் உற்றான் - வானுலகிலிருக்கிற இந்திரன், அகலிகை பொற்பால் அழிவு உற்றான் - அகலிகையினுடைய அழகினாலே கெட்டடைந்தான், இந்திரன் ஒப்பார் - அவ்விந்திரனை யொத்தவர்கள், எத்தனையோர் தாம் - எவ்வளவுபேர்கள், இழிவு உற்றார் - (காமத்தால்) இழிவை அடைந்தார்கள், செந்திரு ஒப்பார் - இலக்குமிதேவியை யொத்தவர்கள், எத்தனையோர் - எவ்வளவு பேர்கள், நின் திரு உண்பார் - உனதுசெல்வத்தை யுண்கின்றார்கள், மந்திரம் அற்றார் உற்றது உரைத்தாய மதி அற்றாய் - ஆலோசனையற்றவர்களுக்குத் தோன்றுவதாகிய கெட்ட விஷயத்தைச் சொல்லிப் புத்தியற்றவனாயினாய். (௧௮௧)

செய்தா யேனுந் தீவினை யோடும் பழியல்லா
லெய்தா தெய்தா தெய்தி னிராம னுலகின்றான்
வைதா லன்ன வாளிகள் கொண்டும் வழியோடுங்
கொய்தா னன்றே கொற்ற முடித்துன் குழுவெல்லாம்

இ - ள் செய்தாயேனும் - (நீ நினைத்த காரியத்தைச்) செய்துவிட்டாயாயினும், (அச்செயலால்), தீவினையோடும் பழி அல்லால் எய்தாது எய்தாது - பாவமும் பழியு மல்லாமல் (நன்மை யாதும்) சேரவே சேராது, எய்தின் - (பயனொருகால்) அடைந்தால், உலகு ஈன்றான் இராமன் - உலகங்களையெல்லாம் படைத்தவனாகிய இராமன், வைதால் அன்ன வாளிகள் கொண்டும் - திட்டினாற்போல அம்புகளைக் கொண்டும், வழியோடும் - (நியாயமான) காரணத்தோடும், கொற்றம் முடித்து - (உனது) அரசியலைப்போக்கி, உன் குழு எல்லாம் - உனது கூட்டம் முழுவதையும், கொய்தான் - கொய்வான். (௧௮௨)

என்றா லென்னே யெண்ணிலை யேநீ கரனென்பா
னின்றா னைக்கு மேலுள னென்னு நிலையம்மா
தன்றா னைக்குத் தானொடு மாளத் தனுவொன்றாற்
கொன்றான் முற்றுங் கொல்ல மனத்திற் குறிகொண்டான்

இ - ள். என்றால் - என்று சொன்னால், என்னே - என்ன ஆச்சரியம், நீ எண்ணிலையே - (சற்றும் அவன் பெருமையை) நீ எண்ணுமலிருக்கின்றாய், அம்மா - ஐயோ, நின்தானைக்கும் மேல் உளன் என்னும் நிலை கரன் என்பான் - உனது சேனைக்கும் மேலான சேனையையுள்ளவன் என்று கூறும் நிலைமையையுடைய கரன் என்பவன், தன் தானைக்கு உற்று ஒரோடு மாள - தனது சேனைக்கு(த் தலைவர்களாய்)ச் சேர்ந்தவர்களோடும் இறக்கும்படி, தனு ஒன்றால் கொன்றான் - வில் ஒன்றினால் கொன்றவனாகிய இராமன், முற்றும் கொல்ல - (இராக்கதர் கூட்டம்) முழுவதையுங் கொல்லுவதற்காக, மனத்தில் குறிகொண்டான் - (தன்) மனத்தில் கருதியிருக்கிறான்.

குறிப்பு:—என்னே - அதிசய விரக்கச்சொல் அம்மா என்பது-ஈண்டு ஐயோ என்னும் இரக்கக் குறிப்புப்பொருளில் நின்றது, "வெறும்பொருள் தம்மா விதேதிடுமி னென்றாள்" என்புழி இரக்கக் குறிப்பாக நின்றதுபோல, [சிந்தாமணி, முத்தியிலம்பகம், 24]. (௧௮௫)

வெய்யோர் யாரே வீர விராதனைத் துணைவெய்யோ
ரையோ போனா னம்பொடு மும்பர்க் கவனென்று
லுய்வார் யாரே நம்மி னெனக்கொண் டுணர்தோறு
மையா நின்றே னீயி துரைத்து நலிவாயோ.

இ - ள். வீரன் விராதனை - வீரனாகிய விராதனைப்பார்க்கிலும், துணைவெய்யோர் - (உனது) சகோதரர்களாகிய கும்பகருணன் முதலிய கொடியவர்களுள், வெய்யோர் யாரே - கொடியவர்கள் எவர்கள்? அவன் - அவ்விராதன், உம்பர்க்கு - விண்ணுலகுக்கு, அம்பொடும் - (இராமனுடைய) அம்பினுடனே, ஐயோ போனான் என்றால் - ஐயோ போனான் என்று கூறினால், நம்மில் உய்வார்யாரே என கொண்டு உணர்தோறும் - நம்மில் பிழைப்பவர்கள் எவரோ? என்று (ஐயங்) கொண்டு ஆலோசிக்கும் பொழுதெல்லாம், மையா நின்றேன் - மைகின்றேன் [தளாவடைகின்றேன்]; நீ—, இது உரைத்து - இவ்வார்த்தையைச்சொல்லி, நலிவாயோ - கெடுவாயோ?

குறிப்பு—விராதன்றுணை வெய்யோர் என்றது, விராதனளவு கொடியவர்கள் என்பது மொன்று தூணை உவம உருபுமாம். (௧௮௬)

மாண்டார் மாண்டார் நீயினி மாள்வார் தொழில்செய்ய
வேண்டா வேண்டா செய்கெனி னுய்வான விதியுண்டோ
வாண்டா ராண்டா ரெத்தனை யென்கோ வறநோனா
ரீண்டா ரீண்டார் நின்றவ ரெல்லா மிலரன்றே.

இ - ள் மாண்டார் - (உன்னைவிட) மாட்சிமைப்பட்டவரும், மாண்டார் - (தீவினைசெய்தமையால்) இறந்தார்கள், மாள்வார்தொழில் - (அங்ஙனம்) இறப்பார்களுக்குரிய செய்கையை, நீ இனி செய்யவேண்டா - (நெடுங்காலம் வாழ்தற்குரிய) நீ இனிமேல் செய்யவேண்டாம், வேண்டா செய்கு எனின் - விரும்பத்தகாத காரியங்களைச் செய்வேன் என்பாயாயின், உய்வான விதி உண்டோ - பிழைத்தற்கு வழியுண்டோ? (இல்லை), ஆண்டார் - (பல) வருஷங்களையுடையாராக, ஆண்டார் - அரசுபுரிந்தவர்கள், எத்தனை என்கோ - எவ்வளவு என்று சொல்வேனோ? (சொல்லமுடியாது), அறம் நோனார் - (அவர்களில்) தருமவழியில் தவஞ்செய்யாராகிய, ஈண்டார் - இவ்விடத்திலுள்ள நம்மவரில், ஈண்டு - இப்பொழுது, ஆர் நின்றவர் - எவர் நிலையடைந்தார், எல்லாம் இலர் அன்றே - அவர் அனைவரும் இல்லாதவரே யன்றோ?

குறிப்பு—செய்கு என்கு' தன்மை யொருமை வினைமுற்றுகள் முறையே, செய்வேன், என்பேன் என்னும் பொருளன. தருமவழியிற் றவஞ்செய்தலாவது, "அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு, மிழுக்கா வியன்ற தறம்" என்றவாறு செய்தலாம். இங்ஙனமன்றிப் பொறுமை முதலிய கொண்டு செய்யுந் தருமம் பயனில்லையாம்; "தக்கனார் வேள்வித் தவத்தைமேற் கொண்டிருந்தும், தொக்கவற மாயிற்றே" என்பதனாலறிக. இதற்குமுன் கரன் விராதன் என்னும், இராவணனினுந் தாழ்ந்தோர்கள் தன்மையை யறிவித்து, இக்கவியில் மாண்டார் (மாட்சிமைப்பட்டார்) என இரணியன் சூரபதுமன் முதலிய மிக்கோர் தன்மையைக் கூறினான் எனக் காண்க. இனி, 'செய்கெனில்' செய்க எனின் எனப் பிரித்து செய என்று சொல்வாயாயின், எனப்பொருள்கூறுவாரு முளர். இப்பொருட்கு அகரம் தொகுத்தல். 'நோனார் ஈண்டார் ஈண்டார் நின்றவர் எல்லாம் இலர்' என்றற்கு நோனார் - தவஞ்செய்யாதவர்கள், ஈண்டார் - உயர்வடையார், ஈண்டு ஆர் நின்றவர்

எல்லாம் இலா, எனக்கூறுதலுமொன்று ஈண்டுதல் - ஒருங்குதல் என்னும் பொருள் தருதலை, புறநானூறு 25-வது கவியில், "ஈண்டுசெலன் மரபில்" என்பதற்கு வரைந்த வுரையாற் றறிக. (௧௬௫)

எம்பிக்கு மென்ன னன்னை தனக்கு மிறுதிக்கோ
ரம்புய்க்கும் போர்வில்லி தனக்கு மயனிற்குந்
தம்பிக்கு நம்மாண்மை தவிர்ந்தே சயநிற்குங்
கம்பிக்கு மென்னெஞ்சவ னென்றே கவல்கின்றேன்.

இ - ள். எம்பிக்கும் - எனது தம்பியாகிய சுபாகுவினுடையவும், என் அன்னை தனக்கும் - எனது தாயாகிய தாடகையினுடையவும், இறுதிக்கு - முடிவின் பொருட்டாக, ஓர் அம்பு உய்க்கும் - ஒரு அம்பைச் செலுத்தும், போர்வில்லி தனக்கும் - போரைச்செய்த வில்லிலேயுடைய இராமனுக்கும், அயல் நிற்கும் தம்பிக்கும் - அவன் பக்கத்தில் நிற்கின்ற (அவனுடைய) தம்பியாகிய இலக்குமணனுக்கும், நம் ஆண்மை தவிர்ந்து - நமது ஆண்மையானது நீங்க, சயம் நிற்கும் - (அவர்களபால்) வெற்றி நிற்கும், அவன் என்றே என்னெஞ்சு கம்பிக்கும் - அத்தன்மையுடைய இராமனென்றே என்னுடைய இருதயம் நடுங்கும், கவல்கின்றேன் - (ஆதலால்) துயருறுகின்றேன் ஏ - அசை.

குறிப்பு — தவிர்ந்து-'இருணீங்கி யின்பம் பயக்கும்' என்புழிப்போல நின்றது.

நின்றுஞ் சென்றும் வாழ்வன யாவு நிலையாவாற்
பொன்றும் மென்றும் மெய்ம்மை யுணர்ந்தாம் புலையாட்டற்
கொன்று முன்னா யென்னுரை கொள்ளா யுயர்செல்வத்
தென்றும் மென்றும் வைகுதி யையா வினியென்றான்

இ - ள். நின்றும் சென்றும் வாழ்வன யாவும் - (அசையாமல்) நின்றும் (அசைந்து) சென்றும் வாழ்பவை யெவையும் [சராசரங்களெல்லாம்], நிலையா - நிலைத்திருக்கமாட்டா, பொன்றும் என்று மெய்ம்மை உணர்ந்தாம் - (அவையனைத்தும்) இறந்துபோமென்று உண்மையை யறிந்துகொண்டாம், இனி —, ஐயா —, புலையாட்டற்கு ஒன்றும் உன்னாய - (நீ) பொல்லாங்குசெய்தற்கு ஒரு விஷயத்தையும் நினைக்கமாட்டாய, என்றும் உயர் செல்வத்து வைகுதி - எந்நாளும் உயர்ந்த செல்வத்தில் இருந்துவாழ்வாயாக, (ஆதலால்), என் உரை கொள்ளாய - எனது வார்த்தையை அங்கீகரித்துக்கொள், என்றான் —, (௧௬௭)

வேறு.

கங்கைச்சடை வைத்தவனொடுங்கைலை வெற்போ
ரங்கையி னெடுத்தவென தாடெழின் மணித்தோ
ளிங்கொர்மனி தற்கெளிய வென்றனை யெனத்தன்
வெங்கணெரி யப்புருவ மீதுற விடைத்தான்.

இ - ள். கங்கைச்சடை வைத்தவனொடும் - கங்கையைச் சடையில் வைத்த சிவபிரானோடே, கைலை வெற்பு - கைலாச மலையை, ஓர் அங்கையின் எடுத்த - ஒரு அங்கையினாலே யெடுத்த, எனது - என்னுடைய, ஆடு எழில் - வெற்றியாகிய அழகும், மணி - (இயற்கையாகிய) அழகும் பொருந்திய, தோள் - புயங்கள், இங்கு - இவ்விடத்தில், ஓர் மனிதற்கு - ஒரு மனிதனுக்கு, எளிய என்றனை - எளியன என்று கூறினை, என - என்று, வெங்கண் எரிய - (தனது) வெவ்விய கண்கள் (நெருப்பைப்போல்) எரியவும், புருவம் மீது உற - புருவமானது மேலே சேரவும், விடைத்தான் - (இராவணன்) கோபித்தான்.

குறிப்பு — ஆடு - அடுதல்; தொழிலாகுபெயராய் வெற்றிமேல் நின்றது, "ஆடு, கொளக் குழைந்த" என்றார் புறப்பாட்டினும். (௧௬௮)

நிகழ்ந்ததை நினைத்திலை யென் னெஞ்சினிலை யஞ்சா
திகழ்ந்தனை யெனக்கிளைய நங்கைமுக மெங்கு
மகழ்ந்தனைய தொப்புற வமைத்தவரை யையா
புகழ்ந்தனை தனிப்பிழை பொறுத்தனெ னிதென்றான்.

இ - ள். ஐயா! நிகழ்ந்ததை நினைத்திலை - நடந்த காரியத்தை நினைத்தாயில்லை; என் நெஞ்சின் நிலை அஞ்சாது இகழ்ந்தனை - எனது மனத்தினது நிலைமையை அஞ்சாமல் இகழ்ந்தாய்; எனக்கு இளைய நங்கை முகம் எங்கும் அகழ்ந்தனையது ஒப்பு உற அமைத்தவரை புகழ்ந்தனை - எனக்கு இளைய நங்கையாகிய சூர்ப்பநகையினது முகமுழுவதும் தோண்டுதல்செய்தது அத்தன்மையானது ஒப்பாகும்படி செய்தவர்களைப் புகழ்ந்தாய்; இது தனி பிழை பொறுத்தனென் என்றான் - இந்த ஒருகுற்றத்தைப் பொறுத்தேனென்று (அவ்விராவணன்) கூறினான். (௧௮௯)

தன்னைமுனி வுற்றதறு கட்டகவி லோனைப்
பின்னைமுனி வுற்றிடு மெனத்தவிர்தல் பேணு
துன்னைமுனி வுற்றுன குலத்தைமுனி வுற்றா
யென்னைமுனி வுற்றிலை யிதென்னென விசைத்தான்.

இ - ள். தன்னை முனிவு உற்ற - (மாரீசன்) தன்னைக் கோபித்த, தறுகண் தகவு இலோனை - அஞ்சாமையில் (தனக்கு) உவமையில்லாத இராவணனை, பின்னை - பின்னும், முனிவு உற்றிடும் என - கோபிப்பானென்று, தவிர்தல் பேணுது - (தான் நீதிசொல்லுவதினின்றும்) ஒழிதலை விரும்பாமல், என்னை முனிவு உற்றிலை - (நீ) என்னைக் கோபித்தாயில்லை, உன்னை முனிவு உற்று - (முதலில்) உன்னை (நீயே) கோபித்து, உன் குலத்தை முனிவு உற்றாய் - (பின்னர்) உன்னுடைய குலத்தையெல்லாங் கோபித்தாய், இது என் என இசைத்தான் - இப்படிக் கோபிப்பது யாது? என்று கூறினான். (௧௯௦)

எடுத்தமலை யேநினையி னீசனிகல் வில்லாய
வடித்தமலை யேயிது வலித்தியென வாரிப்
பிடித்தமலை நாணிடை பிடித்தொருவன் மேனா
ளொடித்தமலை யும்பர்முக டுற்றமலை யன்றே.

இ - ள். மேல் நாள் - முன்னாள், இது வலித்தி என - இவ்வில்லை வளைப்பாயாகவென்று (மிதிலையார்கோன்) கூற, ஒருவன் - ஒப்பற்ற இராமன், வாரி பிடித்த மலை - எடுத்துப் பிடித்தமலையும், நாண் இடைபிடித்து ஒடித்தமலை - நாணியின் நடுவே பிடித்து (இழுத்து வளைத்து) ஒடித்த மலையுமாகிய வில்லென்னும் மலையானது, நினையின் - நினைக்குமிடத்து, எடுத்தமலையே - (நீ) எடுத்த கைலை மலையோ? [அன்று] ஈசன் இகல் வில்லாய வடித்தமலையே - சிவபெருமான் போர்க்குரிய வில்லாய் வசப்படுத்திய(பொன்) மலையோ? [அன்று] (பின்னை யாதெனின்) உம்பர் முகடு உற்ற மலை அன்றோ - ஆகாயத்தின் முகட்டையடைந்த (விந்த) மலையன்றோ?

குறிபபு—வலிததி என வாரிப பிடிததமலை - பரசுராமன வலையென றுகூற யாரிபபிடிதத விலலெனப் பொருளகோடலுமாம். இபபொருள கொளளுஙகால பிடிதத விலலும ஒடிதத விலலுமாக விறகளிரணடும வெளளிமலை பொனமலையெனனும இரணடுமலையுமாமோ? ஆகாது அவவிரணடும இரணடு விநதமலைகளாகுமன றோ எனப பொருளவிரிததுக கொளக (௧௧௧)

யாதுமறி யாயுரைகொ ளாயிக லிராமன
கோதைபுனை யாமுனுயிர் கொளளைபடு மனறே
பேதைமதி யாலிஃதொர் பெணணுருவ மெனறாய
சீதையுரு வோநிருதர் தீவினைய தனறே

இ-ள யாதும அறியாய - (இராமனது ஆறறலை) யாதும (நீ) அறியாய, உரை கொளாய - (நான சொல்லும) வாரததைகளையும (ஏறறுக) கொளளமாட டாய, இகல இராமன கோதைபுனையாமுன - வலிமையையுடைய இராமன (போரக்குச செலலுமுன பூணும) மாலையை அணியாத முனபே, உயிர கொளளைபடும - உயிரகள கவரபபடும; பேதைமதியால - மடமைபொருநதிய புததியாலே, இஃது - இது, ஓர பெண உருவம எனறாய - (சாதாரணமான) ஒரு (மானிடப) பெணணி னது உருவம எனறு கூறினாய, சீதை உருவோ - சீதையினது உருவமோ, நிருதர தீவினையது அனறே - இராககதரகளுடைய பாவததினறேனறியது அனறோ.

உஞசுபிழை யாயுறவி னேமெனவு னனனா
நெஞசுபறை போதுமது நீநினைய கிலலா
யஞசுமென தாருயி ரறிநதருகு நினறார
நஞசுநுகர் வாரையிது நனறெனலு நனறே.

இ-ள உறவினேம - (நீ) சுறறததாரோம, உஞசு - ஈடேறுதலுறறு, பிழையாய என உனனா - பிழைககமாடடாய எனறு கருதி, நெஞசு பறைபோதும அது - (என) மனம பறைகொடடுதலபோல துடிககினறதை, நீ நினையகிலலாய - நீ (சிறிதும) அறியாய, எனது ஆர உயிர அஞசும - எனது அரிய உயிர அஞசுகினறது, நஞசுநுகர்வாரை அறிநது அருகுநினறார - விஷததையுணபவரகளை அறிநது (அவர) பககததே நினறவரகள, இது - (விஷததையுணணும) இசசெயல, நனறு எனலும நனறே - நலலது எனறு கூறுதலும நனமையுடையதோ? (௧௧௨)

ஈசனமுதன் மறறுமிமை யோருலகு மறறைத
தேசமுதன முறறுமொ ரிமைபபினுயிர் தினப
கோசிக னமைததகட வுடபடை கொதிபபோ
டாசில கணிபபில விராமனரு ளிறப

இ-ள கோசிகன அமைதத கடவுள படை - விசுவாமிததிரன (இராமனபால) அமையசசெயத தெயவததனமை பொருநதிய ஆயுதஙகளானவை, ஈசன

முதல் - சிவபிரான் முதலாயுள்ள, (முற்றும்) - (தேவாகூட்டம்) முழுவதையும், மற்றும் —, இமையோர் உலகும் மற்றை தேசம் முதல முற்றும் - தேவலோகமும் மற்றைத் தேசங்களாகிய பூமியும் பாதலமும் முதலாகிய உலகங்கள் முழுவதையும், ஓர் இமைப்பின் - ஓரிமைப்பொழுதில், தின்ப - தின்பன, கொதிப்போடு ஆசு இல் - கோபமும் குற்றமுமில்லாதன, இராமன் அருள் சிறப்ப - இராமனது கருணையால் சிறப்பன, கணிப்பு இல - அளவில்லாதனவாயின,

குறிப்பு —மற்று - வினைமாற்று. மற்றை - சுட்டியதற்கினம். கோசிகன் - கௌசிகன். இராமபிரான்பாலுள்ள கோபமின்மையையும் குற்றமற்ற தன்மையையும் அவன் படைமேலேற்றிக் கூறினன். உலகமனைத்தையும் அழிக்கும், தன் அம்புகளைத் தான் கருணைசெய்து தானே விலக்கினாலன்றிப் பிறாகணையால் விலக்கமுடியாதென்பான் 'அருள்சிறப்ப' என்றான். (௧௬௪)

ஆயிர மடற்கையுடை யானைமழு வாளா
லேயெனு மிமைப்பினுயிர் செற்றவெதி ரில்லோன்
மேயவிறன் முற்றுவரி வெஞ்சிலையி னோடுந்
தாயகன் வலித்தகையை யாமுறு தகைத்தோ

இ - ள் அடல் ஆயிரம் கையையுடையானை - வெற்றிபொருந்திய ஆயிரங் கைகளையுடைய கார்த்தவீரியார்ச்சுனனை, ஏ எனும் இமைப்பின் - ஏ என்று கூறும்பொழுதுக்குள், மழுவாளால் - மழுவாகிய வாளினாலே, உயிர் செற்ற - உயிரைக் கொன்ற, எதிர் இல்லோன் - இணையில்லாத பரசுராமன், மேய - மேவிய [விரும்பிய] விறல் முற்று - வெற்றிநிறைந்த, வரி - கட்டமைந்த, வெம் சிலையினோடும் - வெவ்விய வில்லினோடும், வலித்த - வளைத்த, தாயகன் கையை - ஸ்ரீராமனது கையின் வலிமை, யாம் உறு தகைத்தோ - நாம் அடையுந்தன்மையதோ?

குறிப்பு —ஒவ்வோர்கையும் ஒவ்வோர் வெற்றியையுடையது என்பது விளங்க 'அடல்' என்பதை ஆயிரங்கை என்பதற்கிடையே வைத்தான். இமைப்பென்றது - கணப்பொழுது மாத்திரையாய் நின்றது. மழுவினவாய வாள்போன்றிருந்தலபற்றி 'மழுவாள்' என்றான், "மன்மருங் கறுத்த மழுவா ணெடியோன்" என்றார் மணிமேகலையினும் [மணி, சிறைசெய், 25-வது வரி]. ஓடும், உம்மை - எச்சமாகலின் தவத்தையும் வளைத்த என்று வருவித்துக்கொள்க. தாயகன் - உலகுக்கோர் தாயவீடு போன்றவன். வலித்தகையை எனக்கொண்டு வலித்த என்பது வலியென விகாரப்பட்டதெனலு மமையும். (௧௬௫)

வேதனைசெய் காமவிட மேலிட மெலிந்தாய்
தீதுரைசெய் தாயினைய செய்கைசிதை வன்றோ
மாதுலனு மாயமரபின் முந்தையுற வந்தே
னீதுரைசெய் தேன்றனை யெந்தைதவி ரென்றான்

இ - ள் எந்தை - எந்தாய்! வேதனை செய காமம் விடம் மேலிட மெலிந்தாய் - துன்பத்தைச் செய்கின்ற காமமாகிய விஷமானது அதிகரிக்க (நீ) மெலிவடைந்து, தீது உரை செய்தாய் - கொடிய வார்த்தையைக் கூறினாய், இனைய செய்கை சிதைவு அன்றோ - இத்தகைய (தீய) செயல் கெடுதியன்றோ? மாதுலனுமாய் -

மானுமாகி, மரபின் முறைதை உற வந்தேன - (உனது) குலத்தில் முதன்மையுறு தல பொருந்த வந்தவனுகிய நான, ஈது உரை செய்தேன - இததடை மொழியைக கூறினேன, அதனை தவிர என்றன - (கொடிதாகிய) அவ்வெண்ணத்தை நீககி விடுக என்று கூறினன் (௧௧௬)

என்னவுரை யத்தனையு மெத்தனையு மெண்ணச
சொன்னவனை யேசின வரக்காபதி சொன்னு
னன்னையுயி செற்றவனை யஞ்சியுறை கின்ருய
யுன்னையொரு வற்கொருவ னென்றுணாகை நன்றே

இ - ள் என்ன-என்று, உரை - சொல்லிய, அத்தனையும் - கடவுளாகிய ஸ்ரீராமபிரானையும, எத்தனையும- (விஷயங்கள) எவ்வளவையும, எணணசசொன்னவனை- நினைக்குமபடி சொன்ன மாரீசனை, ஏசின - இகழ்ந்த, அரக்காபதி - இராவணன சொன்னுன - சொல்லலானுன — அன்னை உயிர் செற்றவனை அஞ்சி உறைகின்ருய - (தாடகையென்னும உனது) தாயினுடைய உயிரைக்கொன்றவனை அஞ்சி வாழ்கின்ருய, உன்னை —, ஒருவற்கு ஒருவன என்று உணாகை நன்றே - ஒருவனுக்கொருவன என்று நினைததல நன்மையுடையதோ?

குறிப்பு — ஒருவற கொருவன - அறிவு, வீரம, பெருமை முதலியன பொருந்தியவாகளில ஒருவன எனபதாம. (௧௧௭)

திககய மொளிப்பநிலை தேவாகெட வானம
புககவ ரிருக்கைபுகை வித்துலகம யாவுஞ
சககர நடத்துமெனை யோதயர தன்றன
மககணலி கிறபரிது நன்றுவலி யன்றே.

இ - ள் திககயம ஒளிபப - திக்கியானைகள ஒளிந்துகொள்ளவும, தேவா நிலை கெட - தேவாகளுடைய நிலையழியவும, வானம புககவா - விண்ணுலகிற புகுந்தவாகளாகிய தேவாகளது, இருக்கை புகைவிதது - இருப்பிடங்களை(க கொளுத்தி)ப புகையும்படி செய்து, உலகம யாவும - எலலா வுலகங்களிலும, சக்கரம நடத்தும எனையோ - ஆணை செலுத்துகின்ற என்னையுமோ? தயரதன தன மககள- தசரதனது குமாராகள, நலிகிறபா - நலியச செய்வாாகள, இது நன்றுவலி அன்றே - இது நலல சாமாததியமன்றே ? (௧௧௮)

மூவுல கினுககுமொரு நாயக முடிததேன
மேவலா கிடைககினிதன் மேலினிய துணடோ
யேவலசெய கிற்றியென தாணைவழி யெணணிக
காவலசெ யமைசசாகட னீகடவ துணடோ.

இ - ள். மூவுலகினுக்கும - திரிலோகங்களுக்கும, ஒரு நாயகம முடிததேன - ஒரு தலைமையைச்சூடினேன, மேவலா கிடைககின - பகைவாகள கிடைத்தால, இதனமேல இனியது உணடோ - இதறகுமேல் மகிழச்சியைததருவது முளதோ? எனது ஆணைவழி எணணி காவலசெய் அமைசசாகடன - எனது ஆக்கினையின்து மார்க்கத்தைக கருதிக் காததலைச்செய்கின்ற மந்திரிகளுடைய கடமையை, நீ கட

வது உண்டோ - நீ கடப்பது(கருச சுதநதிர மூனககு) உளதோ? [இல்லை], (ஆத லால்), ஏவல செய்கிற்றி - (நான) ஏவிய தொழிலைச செயவாயாக, (௧௯௯)

மறுததனை யெனபபெறினு நினனைவடி வாளா
லொறுததெென மனககுறை முடிபபதொழி கலலேன
வெறுபபன கிளததலுறு மிததொழிலை விடடென
குறிபபினவழி நிற்றியுயிர கொணடுழலி னெனறான.

இ-ள மறுததனை என பெறினும - (எனனேவலை) மறுததுவிடடாயென று சொலலப பெறறாலும, நினனை - உனனை, வடிவாளால - கூரமைபொருநதிய வாளினாலே, ஒறுததது குறைததது [வெட்டி], என - எனனுடைய, மனம குறை முடிபபது ஒழிகு அலலேன - மனததினது குறைகளை முடிபபதினினறும நீஙகு வேனலலேன, உயிரகொணடு உழலின - உயிரை (நிலைததிருககக) கொணடு திரிய வேணடுமானால, வெறுபபன கிளததல உறும இ தொழிலைவிடடு - வெறுககத தகக வாரததைகளைச சொலலுதலுறகினற இசசெயலை யொழிதது, என குறிபபின வழிநிறறி - எனது எணணததினபடி நிறபாயாக (௨00)

வேறு

அரககனஃ துரைதத லோடு மறிநதன னடஙகி நெஞசந
தருககினா கெடுவ ரனறே தததுவ நிலையிற றனறோ
செருககினிற றீாது மெனபாா தமமினுா செருகக ரெனறு
வுருககிய செயபி னுறற நீரென வுரைகக லுறறான

இ-ள அரககன அஃது உரைததலோடும - இராவணன அவவாாததை கூறியவளவில, அறிநதனன அடஙகி - (அமமாரீசன கேடுவருமெனபதை) அறிநது அடஙகி, நெஞசம தருககினா மனததில அகஙகாரததைககொணடவாகள, கெடுவா அனறே - கெடுவாாகளனறோ? தததுவம நிலையிறறு அனறோ - (இது) உணமை யிடததது அனறோ? தமமின ஆா செருககா - தமககுளளே நிறைநத அகஙகாரத தையுடையவாகள, செருககினில தீாதும எனபாா - (தமமுடைய) அகஙகாரததினா லே (மனககுறை) தீாவோமெனறு கூறுவாாகள, எனறு - எனறு கருதி, உருககிய செமபின உறற நீா என - உருககிய செமபினைகடசோநத நீரைபபோல, உரைககல உறறான - சொலலலுறறான

குறிபபு—உருககிய செமபு - வெமமைததனமைகொணட இராவணனுககும, நீா - தணமைத தனமையையுடைய மாரீசனுககும உவமையாகக கொளக. உருக கிய செமபினுறற நீா அசசெமபினுககுளளே சொதிபபுறறு அடஙகிவிடுவதுபோல மாரீசன தன நிலைமை வேறுபடடு இராவணனது கோபததால அடஙகிப பேசத ஒறறான எனபது ஈறறடியின கருதது (௨0௧)

உனவயி னுறுதி நோககி யுணமையி னுணாததி னேனமற
றெனவயி னுறுதி நோககி யசசததா லிசைததே னலலே
னனமையுந தீமை யனறோ நாசமவந துறற போது
புனமையி னுற்ற நீராய் செய்வது புகறி யென்றான.

இ - ள் உன் வயின் உறுதி நோக்கி - உன்னிடத்தினுற்ற காரியத்தைப் பார்த்து, உண்மையின் உணர்த்தினேன் - உள்ள தன்மையில் தெரியப்படுத்தினேன், என் வயின் உறுதி நோக்கி - என்னிடத்திலுற்ற காரியத்தைப் பார்த்து, அச்சத்தால் இசைத்தேன் அல்லேன் - பயத்தினால் கூறினேன் அல்லேன், நாசம் வந்து உற்றபோது - கேடுவந்து சம்பவித்தகாலத்தில், நன்மையும் தீமை அன்றோ - நல்லதும் கெட்டதன்றோ? புன்மையின் உற்ற நீராய - அற்பத்தன்மையிற் பொருந்திய குணத்தையுடையவனே! செய்வது புகறி என்றான் - (யான்) செய்யவேண்டிய செயலைச் சொல்வாயாகவென்று கூறினான்.

குறிப்பு—உறுதி-உற்றகாரியம், "தாமறிகுவர் தமக்குறுதி" என்புழிக் காண்க [புறநானூறு] இனி, வயின் என்னும் ஏழனுருபை ஆறனுருபின் மயக்கமாகக் கொண்டு உனது நன்மையை விரும்பி எனது நன்மையை விரும்பி எனப் பொருள் கூறிக் கோடலுமாம். (௨௦௨)

என்றலு மெழுந்து புல்லி யேறிய வெகுளி நீங்கிக்
குன்றெனக் குவிந்த தோளாய் மாரவேள் கொதிக்கு மம்பாற்
பொன்றலி னிராம னம்பாற் பொன்றலே புகழுண் டன்றோ
தென்றலைப் பகையைச் செய்த சீதையைத் தருதி யென்றான்

இ - ள் என்றலும் - என்று (மாரீசன்) கூறியவளவில், எழுந்து—, புல்லி - (இராவணன் அம்மாரீசனைத்) தழுவி, ஏறிய வெகுளி நீங்கி - அதிகரித்த கோபமானது நீங்கப்பெற்று, குன்று என குவிந்த தோளாய் - மலைபோலக் குவிந்த தோளினையுடையாய்! மாரன் வேள் - மன்மதனுடைய, கொதிக்கும் அம்பால் - கோபிக்கின்ற அம்புகளாலே, பொன்றலின் - இறந்தலைப்பார்க்கிலும், இராமன் அம்பால்—, பொன்றலே - இறப்பதுவே, புகழ் உண்டு அன்றோ - புகழுள்ளதன்றோ? தென்றலை பகையை செய்த-தென்றலினது பகையையுண்டாக்கிய, சீதையை தருதி என்றான்-சீதையைத் தருவாயாகவென்று கூறினான். (௨௦௩)

ஆண்டையா னனைய கூற வரக்கரோ ரிருவ ரோமே
பூண்டவென் மானந் தீரத் தவவனம் புக்க போழ்திற்
றூண்டிய சரங்கள் பாயத் துணைவர்பட் டுருள வஞ்சி
மீண்டயான் சென்று செய்யும் வினையென்கொல் விளம்பு கென்றான்.

இ - ள் ஆண்டையான் - எசமானாகிய இராவணன், அனைய கூற - அத்தகைய மொழிகளைச்சொல்ல, பூண்ட என் மானம் தீர - (மனத்திற்) பொருந்திய எனது வெட்கம் ஒழியும்படி, தவம் வனம் - (முனிவர்) தவத்தைச் செய்யும் வனத்தினக்கண், அரக்கர் ஓர் இருவரோமே - இராக்கதர் ஒருவரிருவருடனே, புக்க போழ்தில் - புகுந்த பொழுதில், தூண்டிய சரங்கள் பாய - (இராமன்) ஏவிய அம்புகள் பாய்ந்ததாலும், துணைவர் பட்டு உருள - துணைவர்கள் இறந்ததாலும், அஞ்சி - பயந்து, மீண்ட யான் - திரும்பி வந்த நான், சென்று - (மறுபடியும்) போய், செய்யும் வினை என்கொல் - செய்யும் தொழிலானது யாதோ? விளம்புக என்றான் - கூறுக என்று கூறினான்

குறிப்பு—சற்று நேரத்துக்கு முன் கோபத்தால் வீரமாகத் தோன்றியவன் இப்போது மகிழ்வுற்றமையால் வீரத்தோற்றம் நீங்கினான் என்பது விளங்குமாறு

'ஆண்டையான' என்றார் என்னலு மமையும. இங்கே ஆண்டையான் என்றது - அக்காலத்தானெனக. தன் சேனையின குறைவு தோனற 'ஓரிருவா' என்றான. மாரீசன எய்திய மானம தாடகை யிறந்ததால நோநததெனக தனது சகோதரனுகிய சுபாகுவையும தனக்குத் துணையாய வந்தவாகளையும உளபபடுத்தி 'துணைவா' எனப பனமையாகக கூறினன. (௨௦௪)

ஆயதாங கனைய கூற வரககாகோ னைய நொயதுன்
ருயையா ருயிருண டானை யானகொலச சமைநது நினறேன்
போயையா புணாபப தெனனே யெனபது பொருநதிற றனறோ
மாயையால வஞசித தனறோ வெளவுத லவளை யெனறான.

இ - ள. ஆயதாங்கு - (சுபாகுமுதலினோா மரணமும தன தோலவியும அப போது தான) ஆனறபோல, அனையகூற - அததகைய வாாததைகளை (மாரீசன) சொலல, அரககாகோன - (இராவணனன) ஐய - வியககுமபடி, நொயது - விரைவில, உன தாயை ஆா உயிா உணடானை - உனது தாயினது அரிய உயிரையுணடவனுகிய இராமனை, கொல - கொலல, யான சமைநது நினறேன - நான பககுவபபடடிருககினறேன, ஐயா—! போய புணாபபது எனனே - (நீ) போயப பொருநதச செயவது யாது? மாயையால - மாயைச செயலினுல, வஞசிதது - வஞசனைசெயது, அவளை - அசசீதையை, வெளவுதல என்பது அனறோ - திருடுதலென்று கூறுவதனறோ? பொருநதிறறு - பொருநதியதாயிறறு, எனறான - என்று (அவவிராவணன) கூறினன.

குறிப்பு —நினறு, அனறு ஓ,—அசைகள் புணாதல் - பொருநதுதல் (௨௦௫)

புறததினி யுரைபப தெனனே புரவலன றேவி தனனைத
திறததுழி யனறி வஞசித தெய்துதல சிறுமைத தாகு
மறததுள தொககு மனறே யமா ததலை வெனறு கொணடு
மறததுறை வளாததி மனன வெனனமா ரீசன சொனனன.

இ - ள மனன - அரசனே! இனி—, புறதது உரைப்பது எனனே - பின்பககததில சொலவது யாது? புரவலன தேவிதனனை - காவலனுகிய இராமனது மனைவியை, திறததுழி அனறி - வலிமையால (போர்புரிநது) அலலாமல், வஞசிதது எயதுதல் - வஞசனைசெய்து அடைதல, சிறுமைதது ஆகும- சிறுமையையுடையது ஆகும, அறதது உளது ஒககும அனறே - (அது) தருமததினகணுள்ள நியாயததை ஒககும அனறோ? அமா தலை வெனறு - போரில (அமமனிதாகளை) வெனறு, கொணடு - (அசசீதையைக கவாநது) கொணடு, உன மறம துறை வளாததி என்ன மாரீசன சொனனன - உனது வீரததுறைகளை வளாபபாயாகவெனறு மாரீசன கூறினன.

குறிப்பு —புறம - முதுகு. திறததுழி - உருபுமயககம, மறத்துறை - வாகைத துறை முதலிய துறைகள (௨௦௬)

ஆனவ னுரைகக நக்க வரககாகோ னவனை வெவவலத
தானையும வேணடு மோவென் றடக்கைவா டக்க தனறோ

ஏனைய ரிறக்கிற் றானுந் தமியளா யிறக்கு மன்றே
மானவ ளாத லாலே மாயையின் வலித்து மென்றான்.

இ - ள். ஆனவன் - ஆனவனாகிய மாரீசன், உரைக்க - கூற, நக்க - சிரித்த, அரக்கர்கோன் - இராவணன், அவரைவெல்ல - அம்மனிதரை வெல்லுதற்கு, தானையும் வேண்டுமோ-சேனையும் வேண்டுமோ? என் தடம் கைவாள் தக்கது அன்றோ - எனது பெரிய கைவாளானது தகுதியையுடையது அன்றோ? ஏனையர் இறக்கில்-மற்றவர்களிறந்தால், தானும் - அவளும், தமியளாய் - தனித்தவளாய், இறக்கும் அன்றோ - இறந்துபோவாளன்றோ? மானவள் ஆதலாலே - மானிடப்பெண் ஆகையாலே, மாயையின் - மாயையால், வலித்தும்-கைப்பற்றிக்கொள்ளுவோம் என்றான்.

குறிப்பு — ஆனவன் - (இராவணனது எண்ணப்படி நடத்தற்குத் தக்கவன்) ஆயினவன், ஆன போலும் சாதுத்தன்மையை யுடையவன், நல்லவன் (ஆன் - நன்மை), பொருந்தியவன், மிக்கோன் (ஆன்றல் - பொருந்தல், மிகுதி), நமது ராக்ஷஸ ரூபத்தைக்காட்டினால் பயப்படுவாள் என்பான் 'மானவளாதலாலே' என்றான், மானவள் - மநுவழித்தோன்றியவள் இனி, மானத்தையுடையவ ளெனவும் மான்போன்றவளெனவுங் கூறலாம். மான்போன்றவ ளென்னுங்கால் மானை மான் விரும்புமாதலின் மாயையால் மானுருக்கொண்டு வலித்தும் என்றா னென்பது விளங்கும் வலித்தல் - இழுத்தல் (௨௦௭)

தேவியைத் தீண்டா முன்ன மிவன்றலை சரத்திற் சிந்திப்
போம்வகை புணர்ப்பெ னென்று புந்தியாற் புகல்கின் றேற்கு
மாம்வகை யாயிற் றில்லை யார்விதி விளைவை யோர்வா
ரேவது செய்வ தல்லா லில்லைவே றொன்றென் றெண்ணா,

இ - ள். தேவியை தீண்டா முன்னம் - சீதாபிராட்டியை (இவன்) தீண்டாதமுன்பே, இவன் தலை - இவனுடைய தலைகள், சரத்தில் - (ஸ்ரீராமபிரான்) அம்பினாலே, சிந்தி போம் வகை-சிதறிப்போகும் விதத்தை, புணர்ப்பென் என்று - பொருந்தச் செய்வேனென்று, புந்தியால்-புத்தியால், புகல்கின்றேற்கும் - சொல்லுகின்ற எனக்கும், ஆம் வகை ஆயிற்று இல்லை - (பிழைப்பதற்கு) ஆகுங் காரணமானதில்லை, விதிவிளைவை - ஊழினது சம்பவிப்பை, யார் ஓர்வார் - யாரறிவார்கள்? ஏவது செய்வது அல்லால் - (இனி) ஏவலைச் செய்வதை யல்லாமல், வேறு ஒன்று இல்லை - வேறு (யோசனை) ஒன்றும் இல்லை, என்று எண்ணா - என்று நினைத்து ()

என்னமா மாயம் யான்மற் றியற்றுவ தியம்பு கென்றான்
பொன்னின்மா னாகிப் புக்குப் பொன்னைமால் புணர்த்து கென்ன
வன்னது செய்வெ னென்னா மாரீச னமைந்து போனான்
மின்னும்வே லரக்கர் கோனும் வேறொரு நெறியிற் போனான்.

இ - ள். யான் மாயம் இயற்றுவது என்ன இயம்புக என்றான் - நான் மாயஞ் செய்வது யாது? கூறுக என்று கூறினன், பொன்னின் மான் ஆகி புக்கு - பொன் போன்ற (நிறத்தினையுடைய) மான் (உருவம்) ஆகிப் புகுந்து, பொன்னை - இலக்குமிபோன்ற சீதையை, மால் புணர்த்துக என்ன - ஆசைபொருந்தச் செய்க என்று கூற, மாரீசன்—, அன்னது செய்வென் என்னா - அத்தன்மையானதைச் செய

வேண எனறு கூறி, அமைநது போனான - (மானுருவம) பொருநதிச சென்றான, மினனும வேல அரககாகோனும வேறு ஒரு நெறியில போனான - பிரகாசிககினற வேலினையுடைய ராக்ஷஸராஜனாகிய இராவணனும வேறொரு வழியிற சென்றான

குறிப்பு — மா, மறறு - அசைகள எனனமா மாயம - எததனமையான சிறநத மாயம எனக கோடலுமாம மறறு - வினைமாறறெனக கொளளுஙகாற போர வினை நீககினமைகொளக (௨௦௯)

வேறு

மேனாளவன விலவலி கணடமையாற
றானாக வமைநது சமைநதிலனான
மானாகுதி யெனறவன வாயமொழியாற
போனானமன முஞசெய லுமபுகலவாம.

இ - ள. மேல நாள - முனனாளில, அவன - அநத ஸ்ரீராமபிரானது, விலவலி கணடமையால - விலலினது வலலமையைபபாரததினாலே, தான ஆக அமைநது சமைநதிலன - தானாகச சமமதிதது (மானுருவம) உணடாககிக கொணடானிலலை, மான ஆகுதி எனறவன வாயமொழியால போனான - மானாகுவாய எனறு கூறிய இராவணனது வாயமொழியினபடி (அவவுருவஙகொணடு) சென்ற மாரீசனது, மனமும செயலும புகலவாம - மனததின நிலைமையையும செயகையையுங கூறுவாம

வெஞசுறற நினைநதுகும வீரரைவே
றஞசுறறு மறுககுறு மாழகுழிநீர
நஞசுறறுறு மீனி னடுககுறுமா
னெஞசுறறதோர பெறறி நினைபபரிதால

இ - ள. வெஞசுறறம - (தனது) விருபபமான சுறறததாரையும, உகும வீரரை - (இனி) இறககபபோகினற வீரர்களையும, நினைநது - நினைதது, வேறு அஞசு உறறு - வேறே அசசமொனறடைநது, மறுககுறும - மனஞ சுழலவானாகி ஆழகுழி நீர - ஆழநத குழியிலிருககிற நீரில, நஞசு உறறு உறுமீனின நடுககுறும - விஷம பொருநதி (அதிற) சோநத மீனைபபோல நடுககமுறுகினறான், நெஞசு உறறது ஓர பெறறி நினைபப அரிது - (அவன) மனமடைநததாகிய ஒரு தனமை நினைததற கரியதாயிறறு. (௨௧௧)

அககாலமும வேளவியி னனறிவனோ
டெககாலு நலிநதுமொா ரீறுபெறான
முககாலின முடிநதிடு வான முயலவான
புககானவ விராகவன வைகுபுனம.

இ - ள. இவன - இவவிராமபிரானால, அககாலமும - அநதக காலததிலும, வேளவியின அனறோடு எககாலும - (விசுவாமிததிரர) யாகஞசெயத அநநாளுடன எபபொழுதும், நலிநதும - வருநதியும, ஓா ஈறு பெறான - ஒருமுடிவு பெறாதானும, முககாலின - மூனறாம முறையில, முடிநதிடுவான முயலவான - இறநதுவிட

முயற்சிகொள்பவனுமாகி, அ இராகவன் வைகுபுனம் - அந்த ரகு மரபிற்றோன்றிய ஸ்ரீராமபிரான் தங்கியிருக்கின்ற வனத்தில், புக்கான் - புகுந்தான்.

குறிப்பு—ஸ்ரீராமனுக்குத் திருவவதரித்தருளிய எம்பிரானே இம்மாரீசனை முன் னுள்ளும் வருத்தினன் என்பது விளங்க நான்காமடியில் ராகவனை அகரச்சுட்டுத் தந்து கூறியவர் முதலடியில் இகரச்சுட்டிட்டுக் கூறினர் (உகஉ)

தன்மான மிலாத தயங்கொளிசால்
மின்வானமு மண்ணும் விளங்குவதோர்
பொன்மானுரு வங்கொடு போயினனு
னன்மானனை யாடனை நாடுறுவான்.

இ - ள் மின் வானமும் மண்ணும் விளங்குவது - மின்னலானது ஆகாயத்தி லும் புவியிலும் பிரகாசித்துத் தோன்றுவதுபோல், தன் மானம் இலாத - தனது அபிமானம் இல்லாத, தயங்கு ஒளி சால் - பிரகாசிக்கின்ற ஒளிமிகுந்த, ஓர் பொன் மான் உருவம் கொடு ஒரு பொன்போன்ற மானின் உருவத்தைக்கொண்டு, நல் மான் அனையாள் தனை - நல்ல மான்போன்றவளாகிய சீதாபிராட்டியை, நாடுறுவான் - தேடுவோனாகி, போயினன் - சென்றான்,

குறிப்பு—தனக்கு விருப்பமில்லாதிருந்தும் இராவணனது கொடுங்கோன் மைக்கஞ்சி மாரீசன் மானினுருவங்கொள்ள எண்ணமுற்றானென்பார் 'தன்மான மி லாத' என்றார் இனி, தான்கொண்ட மானுருவுக்கு ஏற்பத் தனக்கு இனமாகும் மான் கள் "கலைமான் முதலாயின கண்டவெலாம், அலைமானுறு மாசையின் வந்தனவா ல" என மேல்வருங் கவிக்கருத்தின்படி தன்னைத் தொடர்ந்துவந்தும் அவற்றை விரும்பிலான் என்பொருள்கொள்ளுமாறு கூறினர் னென்னலுமாம் விளங்குவது என்புழி உவமவுருபு தொக்கத்தல். மின்வானமு மண்ணும் விளங்குவது- இல்பொரு ளுவமை, இம்மான் வானிற்பாய்தலும் புவியில் இறங்கலுமாக வந்தமைபற்றி இவ்வு வமை கூறினர் (உகங)

கலைமானமுத லாயின கண்டவெலா
மலைமானுறு மாசையின் வந்தனவா
னிலையாமன வஞ்சனை நேயமிலா
விலைமாதர்கண் யாரும் விழுந்தெனவே

இ - ள். கலைமான் முதல் ஆயின கண்ட எலாம் - கலைமான் முதலாகிய மான் வகைகளில் (இப்பொன்மானைப்) பார்த்தவைகள் எல்லாம், அலைமான் உறும் ஆசை யின் - (பிராட்டியைத் தேடி) அலைகின்ற (பொன்) மானினுலே அடைகின்ற ஆசை யாலே, நிலையாமனம் - பற்றுதலில்லாத மனமும், வஞ்சனை - வஞ்சகமுமுடைய, நேயம் இலா - அன்பில்லாத, விலைமாதர்கண் - விலைமாதர்களுடைய பார்வையில், யாரும் - எவரும், விழுந்தென - விழுந்தாற்போல், வந்தன - (மால்கொண்டு அப் பொன்மானைப் பின்தொடர்ந்து) வந்தன

குறிப்பு—கலை - ஆண்மான் இப்பொன்மான் தன்னைத் தொடர்ந்து வந்த கலை மான்கள்மேல் சிறிதும் நேயம்வையாது பொன்னின்மேல் [இலக்குமிமேல்] நாட்ட மாகத் திரிந்தமையால், தம்மை விரும்பும் ஆடவர்மேல் நேயம் வையாது பொன்னை யே விரும்புகின்ற வேசையை அம்மானுக்கு உவமைகூறினர். நேயமில்லா விலை

மாதரின் தன்மையைப்பற்றி "உள்ளூற வில்லெவ்வி யுறவு செய்துதான், றெள்ளூறு மின்னாத திருவெல்லாங்கவா, தெள்ளூறு நரகினு மிடுவலாலவெறுங, கள்ளிற கொடியவர் கணிகை மாதரே" எனச் சீகாளத்திப் புராணத்தினும், "ஆணமி னெஞ்சத் தணிநீலக் கண்ணுர்க்குக், காணமில் லாதார் கசிவிலியார்— காணவே, செக்கூர்ந்து கொண்டாருஞ் செய்த பொருளுடையார், நக்கார மன்னூர் வாக்கு" என நாலடியாரினுங் கூறினமை காண்க (உ௧௪)

பொய்யாமென வோது புறஞ்சொலினு
ஐயாவிடை நோவ நடந்தனளால
வைதேகிதன வாலவளை மென்கையெனுங
கொய்யாமல ரானமலர் கொய்துறுவாள

இ - ள். புறம் - பக்கத்திலுள்ளவர்கள், பொய் ஆம் என ஓது சொலினால் - (இது) பொய்யேயாகும் என்று கூறுகின்ற சொல்லினாலே, இடை - இடையானது, ஐயா - மெலிந்து, நோவ - துன்புறும்படி, நடந்தனள் - நடந்து, வைதேகி - சீதாபிராட்டி, தன் - தனது, வால் - தூய்மைபொருந்திய, வளை - வளையல்களையுடைய, மெல் - மெல்லிய, கை எனும் - கைகளென்று கூறுகிற, கொய்யாமலரான - பறியாத மலர்களால், மலர் கொய்து உறுவாள் - மலர்களைப் பறித்துவருவாளாயினள்.

குறிப்பு—வைதேகி - விதேகராஜன்மகள், விதேகம் - மிதிலை புறம் - ஆகுபெயர் (உ௧௫)

உண்டாகிய கேடுடை யார்துயிலவர
யெண்டானு மியைந்திலை யாவுருவங
கண்டாரென லாமவகை கண்டனளால
பண்டாரு முறாவிடா பாடுறுவாள

இ - ள் உண்டாகிய - வளர்தலுற்ற, கேடு உடையார் - கெடுதியையுடையவராகிய இராவண மாரீசர்கள், துயில்வாய் - நித்திரையின்கண், எண்தானும் இயைந்து - எண்ணத்தில் எள்ளளவு அழகுமட்டும் பொருந்தி, இயையா - (மறைவுபடுகையினாலும்) பொருந்தாத, உருவம் - (சீதாபிராட்டியின்) உருவத்தை, கண்டார் எனல் ஆம் வகை - (கண்கொண்டு) தரிசித்தார்கள் என்று கூறத்தக்கதாகிய விதத்தில், பண்டு - பூர்வகாலத்தில், ஆரும் - எவரும், உறா - அடையாத, இடர் பாடு உறுவாள் - துன்பப்படுதலை யடைபவளாகிய சீதாபிராட்டி, கண்டனள் - (அப்பொன்மானைப்) பார்த்தாள்,

குறிப்பு—மாரீசன் குற்றமற்றவனாயினும், தனது எண்ணத்தில் பிராட்டியின் உருவெளித்தோற்றத்தைக் காமுற்றுக்கண்ட மகாபாதகனாகிய இராவணனோடு சேர்ந்தமைபற்றி அவனையும் உளப்படுத்திப் பன்மையாகக் கூறினார். துயில்வாய்த்தோன்றிய தோற்றம் நேரேகண்ட தோற்றத்துக்குச் சிறிதும் இணையன்று என்பது இரண்டாம் அடியின் கருத்து. எண் - எண்ணம், என் மாரீசன் மானுருக்கொண்டும் இராவணன் மாயையால் மறைந்துநின்றும் பிராட்டியைக் கண்டனரெனக் பிராட்டியின் அழகைச் சூர்ப்பநகை ஒருவாறு தெரிவித்தபடி உருவெளித்தோற்றங் காணப்பட்டமையால் சற்றே பொருந்தியிருந்ததெனப்பார் 'எண்டானு மியைந்து' என்றார். (உ௧௬)

காணாவிது கைதவ மென்றுணராள்
பேணாத நலங்கொடு பேணினளால்
வாணாளி ராவணன் மாளுதலால்
வீணாளி னறம்புவி மேவுதலால்

இ - ள். இராவணன் வாழ் நாள் மாளுதலால் - இராவணனும் (அவனது) செல்வமும் நாளை இறத்தலாலும், வீழ்நாளின் அறம் - விரும்பத்தகுந்த நாட்களிற் செய்யும் தருமமானது, புவி மேவுதலால் - புவியிற் பொருந்துதலாலும், காணா இது - (என்றும்) பார்த்திராத இம்மானுருவம், கைதவம் என்று உணராள் - வஞ்சனையென்று அறியாதவளாகிய சீதாபிராட்டி, பேணாத நலம்கொடு - விரும்பாத விருப்பங்கொண்டு, பேணினள் - விரும்பினள்.

குறிப்பு — வாழ் - முதனிலை. இனி, வாழ்நாளோடு இராவணன் மாளுதலால் எனும் பொருள்கொள்ளலாம். இப்பொருட்கு நாள் - உருபுமயக்கம். வீழ்நாளும் இன் அறமும் என உம்மைத்தொகையாக்கிக் கூறலுமாம். இன் - இனிமை. வீண் நாள் எனப் பிரித்து அறம் என்பதைத் தொழிற்பெயராக்கொண்டு வீண்நாளின் நீக்கம் எனப்பொருள் கோடலுமமையும். யாகாதி கிரத்தியங்களியற்றும் நாள் நன்னாளெனவும் மற்றைநாள் வீணாளெனவுங் கூறுக. (௨௧௭)

நெற்றிப்பிறை யாள்முன் நின்றிடலும்
முற்றிப்பொழி காதலின் முந்துறுவாள்
பற்றித்தருகென்பெ னெனப்பதையா
வெற்றிச்சிலை வீரனை மேவினளால்

இ - ள். நெற்றிப் பிறையாள் முனம் நின்றிடலும் - நெற்றியாகிய இளஞ்சந்திரனையுடைய [பிறைபோலும் நெற்றியினையுடைய] சீதாபிராட்டிக்கு முன்னே (அப்பொன்மான் வந்து) நின்றவளவில், முற்றி பொழிகாதலின் முந்துறுவாள் - முதிர்ந்து பொழிகின்ற ஆசையினாலே முற்பட்டுச் செல்பவளாய், பற்றி தருக என்பென் என பதையா - பிடித்துத் தருகவென்று கூறுவேன் என்று பதைத்து, வெற்றி சிலை வீரனை மேவினள் - (சீதாபிராட்டி) வெற்றிபொருந்திய வில்லினையுடைய வீரனாகிய ஸ்ரீராமபிரானைச் சேர்ந்தாள்.

குறிப்பு — பொழிதல் - ஈதல், பெய்தல். பதைத்தல் - பதறுதல், விரைதல். ()

ஆணிப்பொனி னாகிய தாயகதிராற்
சேணிற்சுடர் கின்றது திண்செவிகால்
மாணிக்க மயத்தொரு மானுளதால்
காணத்தகு மென்றனள் கைதொழுவாள்.

இ - ள். மாணிக்கம் மயத்து - மாணிக்கமெனும் இரத்தினத்தின் நிறத்தில், திண் செவி கால் - வலிய காதையும் காலையுமுடைய, ஒரு மான் உளது - ஒரு மானிருக்கிறது, ஆணி பொனின் ஆகியது - (அதன்மேனி) ஆணிப்பொன்னாலுண

டாகியது, ஆய கதிரால் - (இருளை) ஆராய்கின்ற பிரகாசத்தினால், சேணில் சுடா நின்றது - ஆகாயத்தில் ஒளிவீசுகின்றது, காண் தரும் என்றனள் - பார்க்கத் தகுதியானது என்று கூறி, கைதொழுவாள் -(அவனை) கைகுவித்துக் கும்பிடுவாளாயினாள்

இம்மானி நிலத்தினி லில்லையென்று
வெம்மானி தெனச்சிறி தெண்ணலசெய்யான்
செம்மானவள் சொற்கொடு தேமலரோ
னம்மானு மருத்திய னாயினனால்

இ - ள் செம்மானவள் சொல்கொடு - நல்ல மான்போன்ற சீதாபிராட்டியின்து சொல்லினால், தேம் மலரோன் அம்மானும் - வாசனைபொருந்திய தாமரைமலரி லிருப்பவனாகிய பிரமதேவனுக்குத் தகப்பனாகிய ஸ்ரீராமபிரானும், இ மான் இ நிலத்தினில் இல்லை என்று - இந்த மான் இந்தப் பூமியில் இல்லை என்றும், இது எ மான் என - இம்மான் எந்த (வஞ்சனைசேர்ந்த) மான் என்றும், சிறிது - சற்றே, எண்ணல் செய்யான் - ஆலோசனை செய்யாதவனாகி, அருத்தியன் ஆயினன் - (அம்மானைப்பார்க்க) ஆசையை யுடையவனாயினன்

குறிப்பு — அம்மானும், உம்மை - உயர்வு சிறப்பு. சராசரங்களையெல்லாம் படைத்த பிரமதேவனை யீன்றவனாகிய இவன் இம்மான் மெய்ம்மானென்றும் பொய்ம்மான் என்றும் உணராலாமற் போனது வியப்பே என்பார் 'தேமலரோ னம்மானும்' என்றார் ஒன்றை நிதானித்து யூகித்து அறிந்துகொள்ளுதற்கு மருண்ட பார்வையை யுடையாளுக்குச் சக்தியேது என்பது தோன்றச் 'செம்மானவள்' என்றார். எம்பிரான் பிராட்டிமேற்கொண்ட காதல் மிகுதியினாலே அவளுடைய இச்சையைப் பூர்த்திசெய்வதே பெரிதெனக்கருதி அருத்தியனாயினன் என்பதுதோன்றச் 'சொற்கொடு' என்றார் "வாம மேகலை மங்கைய ரால்வரும், காம மில்லை யெனிற்கடுங் கேடெனும். நாம மில்லை" [இராமாயணம்] "தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு மதியுண் டாமோ" [திருவிளையாடற்புராணம்], "இமையா ரினவாழினும் பாடிலரே யில்லாள், அமையார்தோ ளஞ்சு பவர்" [திருக்குறள்] என்பன ஈண்டு நோக்கற்குரியன (௨௨௦)

ஆண்டங்கிளை யோனுரை யாடினனால்
வேண்டும்மென லால்விளை வன்றிதென்னா
பூண்டுஞ்சு பொலங்கொடியோ யதுநாங்
காண்டுமெனும் வள்ளல் கருத்துணர்வான்.

இ - ள் ஆண்டு - அப்பொழுது, அங்கு - அவ்விடத்தில், இளையோன் - இளையபெருமாள், வேண்டும் என்லால் - (சீதாபிராட்டி அம்மான் தனக்கு) வேண்டுமென்று கூறுதலால், இது - இந்தமான், விளைவு அன்று என்னா - (எல்லாச் சீவராசிகளைப்போல) உற்பத்தியானது அல்லதென்று கூறுதவனும், பூண் துஞ்சும் - மேகலாபரணம் நிலைபெற்ற, பொலம் கொடியோய் - பொற்கொடிபோலும் இடையை யுடையவளே! அது - அம்மானை, நாம் காண்டும் எனும் - நாம் (போய்ப்) பார்ப்போமென்று கூறுவானுமாகிய, வள்ளல் - ஸ்ரீராமபிரானது, கருத்து உணர்வான் - கருத்தையறியும்பொருட்டு, உரையாடினன் - சில சொற்களைக் கூறுவானாயினான்:—,

குறிப்பு — தலைவனும் தலைவியும் உரையாடும் தனியிடம் என்பது தோன்ற 'அங்கு' என்ற ஓர் சொல்லுஞ் சேர்த்தனர் இனி, அங்கு - அசையுமாம். கொடி - இடைக்கு ஆகுபெயர். பூங்கொம்பு போலுங்கொடி போன்றவளாகிய ஸாமளியை யுடையவனே? அது நாம் காண்டும் என்று (தன்னைப்பார்த்துக்) கூறுகின்றவனுமாகிய என்ப பொருள்கோடலுமாம் இப்படி யிருவகையிற் பொருள் விளங்கற் காகவே 'கொடியே'என்னைவயொழித்துக 'கொடியோய்' என்று கூறினார். (உஉக)

காயங்கன கம்மணி கால்செவிவால
பாயுமுரு வோடிது பண்பெனலான
மாயமென லன்றி மனக்கொளவே
யேயுமிறை யையுற வென்றளவே

இ - ள். காயம் - உடலானது, கனகம் - பொன்போலவும், கால் செவி வால் - காலுங் காதும் வாலும், மணி - (மாணிக்கமென்னும்) இரத்தினம்போலவும், பாயும் - பாய்கின்ற [ஒளிவீசுகின்ற], உருவோடு - நிறத்துடன், இது பண்பு எனலால - இது குணமென்று கூறுதலால், மாயம் எனல் அன்றி - மாயம் என்று கூறுதலல்லாமல், இறை - சற்றே, ஐயுறவு என்று அளவே - சந்தேகமென்று மாத்திரமே, மனம் கொளவே - மனத்தால் (ஆராய்ச்சி) கொள்ளவே, ஏயும் - பொருந்தும், (உஉஉ)

நில்லாவுல கின்னிலை நேர்மையினால்
வல்லாரு முணர்ந்திலர் மன்னுயிர்தாம்
பல்லாயிர கோடி பரந்துளவால்
இல்லாதன வில்லை யிளங்குமரா.

இ - ள். இளங்குமரா - இளமைபொருந்திய இராசபுத்திரனே! உலகின் - உலகத்தினது, நில்லா நிலை - (ஓர் நிலையில்) நில்லாதநிலையினது, நேர்மையினால் இணக்கத்தினால் [சேர்மானத்தால்], வல்லாரும் - (கற்றுணர்ந்த) வல்லவர்களும், உணர்ந்திலர் - அறிந்தாரில்லை, மன்னுயிர்தாம் - நிலைபெற்ற உயிர்கள், பல் ஆயிரம் கோடி பரந்து உள - அநேகவாயிரங்கோடி பரவியிருக்கின்றன, ஆல் - ஆதலால், இல்லாதன இல்லை - இல்லாதவை இல்லை.

குறிப்பு —உலகிலுள்ள சராசரங்களெல்லாம் ஓர் நிலையில் இல்லாமற் பலவகையாயுள்ளன என்பது முதலடியின் கருத்து, "நிலையிலா வுலகினிடை நிற்பனவு நடப்பனவு நெறியி னீந்த" என்றார் பிறரும். உலகின்னிலை - விரித்தல் விகாரம் நிலை - நிற்பது, நிலைமை (உஉ௩)

என்னென்று நினைத்த திழைத்துளநங்
கன்னங்களின் வேறுள் காணுதுமால்
பொன்னின்னொளி மேனி பொருந்தியவே
முன்னங்கள் பிறந்த தறிந்திலையோ,

இ - ள். என் என்று நினைத்தது - (உன்மனம்) யாதென்று நினைத்துவிட்டது; இழைத்து உள - (ஒரேமாதிரியாய்ச்) செய்துள்ள, நம - நமது, கன்னங்க

னின் - கன்னங்களிலே, வேறு உள - மாறுபாடுள்ளவைகளை, காணுதும் - காணுவோம், பொன்னின் ஒளி மேனி பொருந்திய - பொன்னினைப்போலப் பிரகாசத்தையுடைய உடல் பொருந்திய, ஏழ் அன்னங்கள் பிறந்தது - ஏழன்னப்புட்கள் உற்பத்தியானதை, அறிந்திலையோ—,

குறிப்பு — கன்னம் - கதுப்பு. இரண்டாம் அடிக்கு (நமது) காதுகளால் வேறுளவற்றைக் கேட்குதும் எனப் பொருள்கூறினாரு முளர். (உ௨௪)

முறையும்முடி வும்மிலை மொய்யுயிரென்னா
றிறைவன்னிளை யானொ டியம்பினனாலோ
பறையுந்துணை யன்னது பன்னெறிபோய்
மறையும்மென வேழை வருந்தினளால்

இ - ள். மொய் உயிர் - நெருங்குதலுற்ற பிராணிகளுக்கு, முறையும் - ஒழுங்கும், முடிவும் - நாசம், இலை என்று - இல்லையென்று, இறைவன் - ஸ்ரீராமபிரான், இளையானொடு - இளையபெருமாளோடு, இயம்பினன் - கூறினன், ஏழை - சீதாபிராட்டி, அன்னது - அம்மான், பறையும் துணை - வார்த்தைசொல்லும் அளவில், பல நெறிபோய் மறையும் என வருந்தினள் - பலவழியிற் சென்று மறைந்துபோம் என்று வருத்தமுற்றாள். (உ௨௫)

வேறு

அனையவள் கருத்தை யுன்னா வஞ்சனக் குன்றமன்னான்
புனையிழை காட்டு டென்று போயினன் பொருத சிந்தைக்
கனைகழற் றம்பி பின்பு சென்றனன் கடக்க வொண்ணா
வினையென வந்து நின்ற மானெதிர் விழித்த தன்றே.

இ - ள். அனையவள் கருத்தை உன்னா - அவ்வண்ணம் வருந்திய சீதாபிராட்டியினது கருத்தை நினைந்து, அஞ்சனம் குன்றம் அன்னான் - மைம்மலைபோன்ற ஸ்ரீராமபிரான், புனை இழை - அலங்கரித்த ஆபரணங்களையுடையாய்! அது - அம்மானை, காட்டு என்று - காட்டுவாய் என்று கூறி, போயினன் - சென்றான், பொருத சிந்தை - தரியா மனத்தையுடையவனும், கனைகழல் - ஒலிசெய்கின்ற வீரக்கழலையுடையவனுமாகிய, தம்பி - இளையபெருமாள், பின்பு சென்றனன் - (அவர்களுக்குப்) பின்னேசென்றான், கடக்க ஒண்ணா - கடக்கமுடியாத, வினை என - ஊழ்வினையைப்போல, வந்து நின்ற—, மான் - அப்பொன்மானானது, எதிர் விழித்தது - எதிரே பார்த்தது

குறிப்பு — புனையிழை - அன்மொழித்தொகை. தீங்குநேருமென நினைத்தமையால் பிராட்டியையுந் தனியேயனுப்ப மனம்பொருதவனாய்ப் போகக்கோலங்கொண்டு பின்சென்றான் என்பார் 'பொருத சிந்தைக் கனைகழற் றம்பி பின்பு சென்றனன்' என்றார். கடக்க வொண்ணா வினையெனவே ஊழ்வினையாயிற்று; "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந் துறும்" என்பவாகலின். இவர்கள் அம்மானை ஏற இறங்கப்பார்த்ததுபோல அம்மானும் இவர்களைப் பார்த்த தென்பார் 'எதிர்விழித்தது' என்றார். (உ௨௬)

நோக்கிய மானை நோக்கி நுதியிழை மதியி னொன்றுந்
தூக்கில னன்றி தென்றா னதன்பொருள் சொல்ல லாகுஞ்
சேக்கையி னரவு நீங்கிப் பிறந்தது தேவர் செய்த
பாக்கிய முடைமை யன்றோ வன்னது பழுது போமோ.

இ - ள், நோக்கிய மானை நோக்கி - (அங்ஙனம்) பார்த்த மானைப் பார்த்து (தன்னைப்பார்த்த மான்போன்றவளைப் பார்த்து), நுதி இழை - முனைபொருந்திய ஆபரணங்களை யுடையாய்! மதியின் ஒன்றும் தூக்கிலன் - (என்) புத்தியிலொன்றுந் தூக்கினேனில்லை [இம்மான் சிருஷ்டிக்குள் அடங்கியதோ அல்லதோ என்று என் புத்திக்கு ஒன்றும் தோன்றவில்லை], இது நன்று என்றான் - இது நல்லது என்று (ஸ்ரீராமபிரான்) கூறினான், அதன்பொருள் சொல்லல் ஆகும் - (எல்லாம் வல்ல கடவுளாகிய எம்பிரான் தன் புத்திக்கு ஒன்றுந் தோன்றவில்லையென்று கூறிய) அச்சொல்லினது அர்த்தத்தைக் கூறுதற்கு முடியும், (அஃதென்னையெனின்) சேக்கையின் அரவு நீங்கி - சர்ப்பசயனத்தினின்றும் நீங்கி, பிறந்தது - (புவியில்) அவதரித்தருளியது, தேவர்செய்த பாக்கியம் உடைமை அன்றே - தேவர்கள்செய்த அதிர்ஷ்டமுடைய தன்மையாலன்றோ? அன்னது பழுதுபோமோ - (அரக்கரை யொழித்துச் சுரர்களைப் புரக்கப்பிறந்த) அப்பிறவியின் பயனானது பொய்யாய்ப் போகுமோ? [போகாது], (ஆனதால் மதியினொன்றுந் தூக்கிலனாய் இது நன்று என்று கூறும்படி நேரிட்டது) (௨௭)

என்னொக்கு மென்ன லாகு மிளையவ விதனை நோக்காய்
தன்னொக்கு முவமை யல்லாற் றனையொக்கு முவமை யுண்டோ
பன்னக்க தரள மொக்கும் பசும்புன்மேற் படரு மென்னா
மின்னொக்குஞ் செம்பொன் மேனி வெள்ளியின் விளங்கும் புள்ளி

இ - ள் இளையவ - இலக்குமணா! இதனை நோக்காய் - இம்மானைப் பார்ப்பாய், என் ஒக்கும் என்னல் ஆகும் - எதை யொப்பாகுமென்று சொல்லக்கூடும்? தன் ஒக்கும் உவமை அல்லால் - தன்னையொப்பாகும் உவமைப்பொருள் (தானே) அல்லாமல், தனை ஒக்கும் உவமை உண்டோ - தன்னையொப்பாகும் (பிறிதொரு) உவமைப்பொருளுண்டோ? (இல்லை), பல் - பற்களை, நக்க தரளம் ஒக்கும் - ஒளிவிடுகின்ற முத்துக்களையொப்பாகும், பசு புல் மேல் படரும் மெல் நா - பசிய புல்லின்மீது செல்லுகின்ற மெல்லிய நாக்கை, மின் ஒக்கும் - மின்னலானது ஒப்பாகும், மேனி - உடலை, செம்பொன் - செவ்வியபொன் (ஒப்பாகும்), புள்ளியின் - (அம்மேனியிலுள்ள) புள்ளியைப்போல, வெள்ளி விளங்கும் - வெள்ளிமீன் (சுக்கிரன்) பிரகாசிக்கும்

குறிப்பு —'தன்னொக்கு முவமையல்லாற் றனையொக்கு முவமை யுண்டோ' என்றமையால் பின்னிரண்டடிகளிலுள்ள உவமானப் பொருள்களையெல்லாம் உவமேயப்பொருள்களாக்கிக் கூறவேண்டியிருத்தலின், புள்ளியின், என் வேற்றுமை பிரித்துக் கூட்டியுரைத்தாம். உவமேயத்தினும் உவமானம் நூறுபங்கு உயர்ந்தது என்பது வடநூலார் கொள்கை. நக்கபல் - என்க் கூட்டியுரைப்பாரு முளர். 'என்னொக்கு மென்ன லாகு மிளையவ' என்றது என்னை யொப்பானென்று சொல்லற்கேற்ற இளையவனே என்பொருள்கோடலு மமையும், இங்ஙனம் கொள்ளுங்கால் ஸ்ரீராமபிரான் தானே தன்னை யொப்பாவானென்று கூறுதல் பொருந்துமோ எனின், பொருந்தும், என்னை? முனிவர் முதலிய பெரியோர்களும் அரசர்களும் ஒவ்வோரிடத்துத் தம்மைத்தாமே இவ்வாறு கூறுதல் மரபென்க. இதனை "என்னனைய முனிவரும்" என விசுவாமித்திரர் சக்கரவர்த்தியிடம் கூறியதாகவும்,

"காணி னன்றிகற் கரன்படை படுத்தவக் கரியோன்
றானு மிந்திரன் றனையோர் தனுவலந் தன்னால்
வானின் வென்றவென் மதலையும் வரிசிலை பிடித்த
யானு மல்லவர் யாருனக் கெதிரென்று மிசைத்தான்." என

இளையபெருமாளிடம் இராவணன் கூறியதாகவும் இந்நூலுள் பாலகாண்டத்தும் யுத்தகாண்டத்தும் வருதலாலறிக (௨௮)

வரிசிலை மறைவலோனே மானிதன் வடிவை யுற்ற
வரிவையா மைந்தா யாரே யாதரங் கூரகி லாதார்
ருருகிய மனத்த வாகி யூர்வன பறப்ப யாவும்
விரிசுடர் விளக்கங் கண்ட விட்டில்போல் வீழ்வ காணாய்.

இ - ள். வ சிலை மறைவலோனே - கட்டமைந்த தநுர்வேதத்தில் வல்ல வனாகிய இலக்குமணா! மான இதன வடிவை-இந்த மானினது வடிவத்தை, உற்ற- உற்று நோக்கிய, அரிவையா மைந்தா - பெண்கள் புருடர்களில், ஆதரம் கூரகிலா தார் யாரே - ஆசை மிகுதி கொள்ளாதவர்கள் எவர்? (ஒருவருமில்லை), ஊர்வன பறப்பயாவும் - நகர்ந்து செல்வனவும் பறந்து செல்வனவும் முதலாகிய எல்லாப்பி ராணிகளும், உருகிய மனத்த ஆகி - (இம்மானைக்கண்டளவில்) மனவுருக்கங்கொ ண்டனவாகி, விரிசுடர் விளக்கம் கண்ட - மிகுந்த ஒளியையுடைய விளக்கைப்பார் த்த, விட்டில்போல் வீழ்வ - விட்டிலைப்போல விரும்புவன, காணாய- (இதைநீ) பார்

குறிப்பு.—விட்டில் விளக்கைக்கண்டு இஃதோர் கனியெனக்கருதி விருப்பங் கொண்டு வருதல்போல எல்லாப்பிராணிகளும் விரும்பின என்பது கருத்து "தாம வீழ்வார் மென்றோள்" என்புழிப் பரிமேலழகர் வரைந்த உரையால் வீழ்தல்-விரு ம்புதல் என்னும் பொருள் தருதலறிக இனி, வீழ்சல் என்றகு விழுதல் என்ப பொருள்கோட லெண்டுப் பொருந்தாதேனும் விளக்கைக் கனியெனக்கருதி விழுந்த விட்டில் துன்புறுதல்போல இதனையும் மானெனக்கருதித் துன்புறுகின்றன என் றோர் அறவுரைதொனித்து நிற்றலுமறிக. (௨௨௧)

ஆரிய னனைய கூற வன்னது தன்னை நோக்கிச்
சீரிய தன்றி தென்று சிந்தையிற் றெளிந்த தம்பி
காரிய மென்னை யீண்டுக் கண்டது கனக மானுல்
வேரியந் தெரியல் வீர மீளவதே மேன்மை யென்றான்.

இ - ள் ஆரியன் - ஸ்ரீராமபிரான், அனைய கூற -அத்தகைய வார்த்தைகளைச் சொல்ல, அன்னது தன்னை நோக்கி - அத்தகைய மானைப்பார்த்து, இது சீரியது அன்று என்று - இம்மான் சிறந்தது அன்றென்று, சிந்தையில் -(தன்) மனத்தில், தெளிந்த - ஆராய்ந்தறிந்துகொண்ட, தம்பி - இளையபெருமான், வேரி அம் தெரி யல்வீர - வாசனைபொருந்திய அழகிய மாலையையணிந்த வீரத்தன்மையையுடை யீர்! ஈண்டு - இவ்விடத்தில், கண்டது - (நாம்) பார்த்ததாகிய, கனகம் மானுல் - பொன்மானினால், காரியம் என்னை - காரியம் யாது? [பயன் ஒன்றும் இல்லை], மீள வதே - திரும்பிச்செல்வதே, மேன்மை என்றான் - மேலானதன்மை யென்று கூறினான்.

குறிப்பு.—ஆரியன் - அறிவுடையோன், ஐயன் இனி, இமயமலைக்கும் பொ தியமலைக்கும் நடுத்தேசமாகிய ஆரிய தேசத்தானெனலும் பொருந்தும் (௨௯௦)

அற்றவன் பகரா முன்னம் மங்கையை யழகி யாளுங்
கொற்றவன் மைந்த மற்றைக் குழைவுடை யுழையை வல்லை
பற்றினை தருதி யாயிற் பதியிடை யவதி யெய்தப்
பெற்றுழி யினிதுண் டாடப் பெறற்கருந் தகைமைத் தென்றாள்.

இ - ள். அறறு - அத்தன்மைய வார்த்தையை, அவன் - அவ்விளையபெரு மான், பகராமுன்னம் - சொல்லாமுன்னமே, அங்கனை - ஸ்ரீராமபிரானை, அழகியா

ளும - அழகினையுடையாளாகிய சீதாபிராட்டியும், கொற்றவன்மைந்த - ராஜபுத்திரனே! மற்றை—, குழைவு உடை - உருக்கம் உடைய, உழையை - மானை, வல்லே பற்றினைதருதி ஆயின் - விரைவாய்ப் பிடித்துத் தருவீரானால், பதி இடை - (அயோத்தியா) புரியில், அவதி எய்த பெற்றுழி - வருத்தம் அடையப்பெற்ற காலத்தில், இனிது உண்டாட - சந்தோஷமாக விளையாட, பெறற்கு அரும தகைமைத்து - பெறுதற்கு அருமையான தன்மையையுடையது, என்றாள்—,

குறிப்பு —அநகன - பாவமில்லாதவன், மாசற்றவன், கடவுள் உண்டாடல்- மகளிர் விளையாட்டு அவதி - நாயகனை பிரிவாற்றாமையால் நிகழும் வருத்தம். இனி, அவதி-எல்லையெனக்கொண்டு அயோத்தியாபுரியிற் செல்லுங் காலவரையறை எய்தப் பெற்றவிடத்து என்றும் பொருள் கூறலாம் மற்றை - சுட்டியதற்றினம். மனைவியின் சொற்படி கேட்டு நடந்தவன் என்று குற்றங் கூறுதற்குப் பாத்திரனல்லன், தேவாக்கீத வரத்தின்படி ராக்ஷஸ சம்மாரஞ் செய்தற்குக் காரணமாதற் பொருட்டு அருத்தியுளனானவன் என்பது தோன்ற 'அநகன்' என்றார் பெண்டாட்டியின் சொற்படி நடந்த சக்கரவர்த்தியின் குமாரராதலின் நீ என் சொல்லைத் தடுக்கமாட்டீர் என்பாள் 'கொற்றவன் மைந்த' என்றாள். (௨௩௧)

ஐயநுண் மருங்குல் நங்கை யஃதுரை செய்ய வையன்
செய்வெனென் றமைய நோக்கித் தெளிவுடைச் செம்மல் செப்பும்
வெய்யவல் லரக்கர் வஞ்சம் விரும்பினர் வினையிற் செய்த
கைதவ மானென் றண்ணல் காணுதி கடையி னென்றான்

இ-ள். ஐய - வியக்கத்தக்க, நுண் - நுட்பமான, மருங்குல் - இடையினையுடைய, நங்கை - சீதாபிராட்டி, அஃது உரைசெய்ய - இவ்வார்த்தையைக் கூற, ஐயன் -ஸ்ரீராமபிரான், செய்வென் என்று அமைய நோக்கி - (அம்மானைப் பிடித்துத்தருஞ்செயலைச்) செய்வேன் என்று சம்மதிக்கப்பார்த்து, தெளிவு உடை செம்மல் செப்பும் - ஆராய்ந்து தேறுதலையுடைய பெருமையிற் சிறந்த இளையபெருமாள் கூறுவான், வெய்யவல் அரக்கர் - கொடிய வலிய இராக்கதர்களுக்குள், வஞ்சம் விரும்பினர் - வஞ்சித்தலை விரும்பினவர்கள், வினையில் செய்த- (அவர்களுக்குரிய) மாயச்செயலால் செய்த, கைதவம் மான் என்று - பொய்ம்மான் என்று, அண்ணல் - அண்ணலே! கடையின் - முடிவில், காணுதி என்றான் -காணுவீர் என்று கூறினான்.

குறிப்பு —ஐயம் - சந்தேகமுமாம் ஐயன் - அழகன். அண்ணல் - அண்மை விளி இயல்பாயிற்று. (௨௩௨)

மாயமேல் மடிவா மன்றே வாளியின் மடிந்த போது
காயசினத் தவரைக் கொன்று கடன்கழித் தோமு மாதும்
தூயதேற் பற்றிக் கோடுஞ் சொல்லிய விரண்டி னொன்றும்
நீயதே யுரைத்தி யென்றான் றேவரை யிடுக்கண் டீர்ப்பான்.

இ-ள். தேவரை இடுக்கண் தீர்ப்பான் - தேவர்களைத் துன்பத்தினின்றும் நீக்கும் ஸ்ரீராமபிரான், மாயமேல் மடிவு ஆம் அன்றே - (இம்மான்) மாயமானால் இறத்தலாகுமன்றோ? வாளியின் மடிந்தபோது (இது) அம்பினால் இறந்தகாலத்து, காய சினத்தவரை கொன்று-எரிகின்ற கோபத்தையுடைய அரக்கர்களைக்கொன்று, கடன் கழித்தோமும் ஆதும் - கடனைத் தீர்த்துவிட்டவர்களுமாவோம், தூயதேல் பற்றிக்கோடும் - பரிசுத்த முள்ளதானால் பிடித்துக்கொள்ளுவோம், சொல்லிய இரண்டின் - (கொல்லுதல் பிடித்துக்கொள்ளுதல் என்ற) கூறிய இரண்டு விஷயத்தில், ஒன்றும் - பொருந்திய, நீயது - நீர்மையை, உரைத்தி - கூறுவாய், என்றான் - என்று கூறினான். ஏ - அசை. (௨௩௩)

பின்னின்றா ரினைய ரென்று முணர்கிலம் பிடித்த மாயம்
மென்னென்றுந் தெளிந் தேற்றும் யாவதீ தென்று மோராம்
முன்னின்றார் முறையி னின்றார் முனிந்துள வேட்ட முற்றல்
பொன்னின்ற வயிரத் தோளாய் புகழுடைத் தாமன் றென்றான்.

இ-ள். பின் நின்றார் இனையர் என்றும் உணர்கிலம் - (இம்மானை முன்னே யேவிவிட்டுப்) பின்னே நின்றவர்கள் இத்தன்மையாரென்றும் அறிந்தோமில்லை, பிடித்த மாயம் என் என்றும் தெளிதல் தேற்றும் - பற்றிய மாயமானது யாதென்று தெரிந்துகொள்ளுந்தரத்து அறிவித்துக்கொள்ளமாட்டோம், ஈது யாவது என்றும் ஓராம் - இது யாது என்று கருதமாட்டோம், பொன் நின்ற வயிரம் தோளாய் - வீரலட்சுமி தங்கிய வலிபொருந்திய தோளினையுடையீர்! முறையில் நின்றார் - ஒழுங்கில் நின்றவர்களாகிய, முன் நின்றார் - முன்னேயிருந்த நம்பெரியோர்கள், முனிந்து உள - வெறுத்து (நீக்கி)யுள்ள, வேட்டம் முற்றல் - வேட்டையாடுதல், புகழ் உடைத்து அன்று என்றான் - புகழுடையது அன்றென்று கூறினான்.

குறிப்பு — பிடித்த மாயம் - நம்மனத்துக்குப் பிடித்தமான மாயமெனலுமாம். பொன் - அழகுமாம். ஆம் - அசை. (௨௩௪)

பகையுடை யரக்க ரென்றும் பலரென்றும் பயிலு மாயம்
மிகையுடைத் தென்றும் பூண்ட விரதத்தை விடுது மென்ற
னகையுடைத் தாகு மன்றே யாதலி னன்றீ தென்னாத்
தகையுடைத் தம்பிக் கந்நாட் சதுர்முகன் றாதை சொன்னான்.

இ-ள். பகை உடை அரக்கர் என்றும் - பகை உடைய ராக்ஷஸர்களென்றும், பலர் என்றும் - அநேகரென்றும், பயிலும் மாயம் மிகை உடைத்து என்றும் - பிடிக்கின்ற மாயம் மிகுதியாயுடையதென்றும் (கூறி), பூண்ட விரதத்தை விடுதும் என்றல் - (நாம்) கொண்ட விரதத்தை விடுவோம் என்று கூறல் நகை உடைத்து ஆகும் அன்றே - சிரிப்புடையதாகும் அன்றோ, ஆதலின் - ஆகையால், ஈது நன்று என்னா - இது நல்லது என்று, தகை உடை தம்பிக்கு - தகுதியுடைய தம்பிக்கு, அந்நாள் - அத்தினம், சதுர்முகன் தாதை சொன்னான் - நான்கு முகங்களையுடைய பிரமதேவனுக்குத் தகப்பனான ஸ்ரீராமபிரான் கூறினான்.

குறிப்பு — நன்று ஈது என்னா என்பதற்கு நல்லது இது என்று கூறாதென மற்றும் ஓர் பொருள் கூறித் தம்பியொடு கூட்டுக. (௨௩௫)

அடுத்தவு மெண்ணிச் செய்த லண்ணலே யமைதி யன்றோ
விடுத்திதன் பின்னின் றார்கள் பலருள ரெனினும் வில்லா
றொடுத்தவெம் பகழி தூவித் தொடர்ந்தென்ன விரைந்து சென்று
படுக்குவெ னதுவன் றாயிற் பற்றினென் கொணர்வெ னென்றான்.

இ-ள். அண்ணலே —, அடுத்தவும் - நெருங்கிய காரியங்களையும், எண்ணிச் செய்தல் - ஆலோசித்துச்செய்தல், அமைதி அன்றோ — பொருத்தமன்றோ? விடுத்து - (இம்மானை) அனுப்பி, இதன்பின் நின்றார்கள் - இம்மானின் பின்னே நின்றவர்கள், பலர் உளர் எனினும் - அநேகர் இருக்கின்றார்கள் என்றாலும்,

வில்லால் - வில்லினால், தொடுத்த - (ஒன்றன்பின் ஒன்றாய்ச்) சேர்க்கப்பட்ட, வெம் பகழி - கொடியபாணங்களை, தூவி - சிந்தி, தொடர்ந்தனென் விரைந்து சென்று - தொடர்ந்து விரைவாய்ச்சென்று, படுக்குவென்-கொல்லுவேன், அது அன்று ஆயின் - அப்படியில்லையானால், பற்றினென் கொணர்வென் என்றான் - பிடித்துக்கொண்டு வருவேனென்று (இளையவன்) கூறினான் (௨௩௬)

ஆயிடை யன்ன மன்னா ளமுதுகுத் தனைய செய்ய
வாயிடை மழலை யின்சொற் கிளியினிற் குழறி மாழ்கி
நாயக நீயே பற்றி நல்கலை போலு மென்னாச்
சேயரிக் குவளை முத்தஞ் சிந்துபு சிதறப் போனாள்.

இ - ள் ஆயிடை - அவ்விடத்தில், அன்னம் அன்னாள் - (நடையில்) அன்னப்புள்ளை ஒத்தாளாகிய சீதாபிராட்டி, அமுது உகுத்தனைய - அமிர்தத்தைச் சிந்தினாற்போல, செய்ய வாய் இடை - சிவந்த வாயினிடத்தே, மழலை - குதலைச் சொல்லாகிய, இன்சொல் - இனிய வார்த்தைகளையுடைய, கிளியினில் - கிளியைப்போல, குழறி - உளறி [தடுமாறிப்பேசி], மாழ்கி - மயங்கி, நாயக - தலைவரே! நீயே - நீரே, பற்றி - பிடித்து, நல்கலைபோலும் - தரமாட்டீர்போலும், என்னா - என்று கூறி, சே அரி - சிவந்த வரிகளையுடைய, குவளை - குவளைமலர்போலுங் கண்களிலிருந்து, முத்தம் - முத்துப்போலும் நீர்த்துளிகள், சிதற சிந்துபு போனாள் - சிதறச் சிந்தும்படி சென்றாள்.

குறிப்பு —கோபத்தாலும் துக்கத்தாலும் ஆங்கு நிற்கக் கால் தரிக்காது பிணங்கிச் செல்லத்தொடங்கினாளென்பது விளங்க 'அன்ன மன்னாள்' என்றார். குழறி - குளறி (௨௩௭)

போனவள் புலவி நோக்கிப் புரவலன் பொலன்கொ டாராய்
மானிது நானே பற்றி வல்லையின் வருவெ னன்றே
கானியன் மயிலன் னாளைக் காத்தனை யிருத்தி யென்னா
வேனகு சரமும் வில்லும் வாங்கினன் விரைய லுற்றான்

இ - ள் போனவள் புலவி நோக்கி - (அவ்வாறு) சென்ற சீதாபிராட்டியினது பிணக்கைப்பார்த்து, புரவலன் - காவலனாகிய ஸ்ரீராமபிரான், பொலன் கொள் தாராய - பொன்கொண்ட மாலையையுடையாய்! மான் இது - இம்மானை, நானே பற்றி வல்லையின் வருவென் - நானே (போய்ப்)பிடித்துச் சீக்கிரத்தில் வருவேன், கான இயல் மயில் அன்னாளை - கானகத்துப் பொருந்திய மயிலை ஒத்தவளாகிய சீதையை, காத்தனை இருத்தி என்னா - காத்துக்கொண்டிருப்பாயென்று கூறி, வேல் நகு சரமும் - வேல்போன்ற கணைகளும், வில்லும் - கோதண்டமும், வாங்கினன் - ஏற்றுக்கொண்டு, விரையல் உற்றான் - விரைந்து செல்லுதலை யடைந்தான்.

குறிப்பு.—கார்மேகம்போன்ற தன்னைக்கண்டபின் மகிழ்ந்தன்மையாள் எனபான் 'கானியன் மயிலன்னாள்' என்றான். நகு - உவமவாசகம். (௨௩௮)

முன்னமு மகவாய் வந்த மூவரி னொருவன் போனா
னன்னமா ரீச னென்றே யயிர்த்தனெ னிதனை யைய

பின்னமும் காண்டி வாழி யேயென விருகை கூப்பிப்
பொன்னனுள புக்க சாலை காத்தனன் புறத்து நின்றே.

இ - ள். முன்னமும் - முற்காலத்திலும், மகம் வாய்வந்த - வேள்வியின்கண் வந்த, மூவரின் - (தாடகையோடு சுபாகு மாரீசன் என்னும்) மூவருள், ஒருவன் போனான் - ஒருவன் (மடியாமல் ஓடிச்) சென்றான், அன்ன மாரீசன் என்றே - அப்படிச்சென்ற மாரீசன் எனவே, அயிர்த்தனென் - சந்தேகித்தேன், ஐய—! இதனை - இச்சந்தேகத்தை, இன்னமும் காண்டி - இன்னமும் பார்ப்பீர், ஏகு என - செல்லும் என்று, இருகைகூப்பி - இரண்டு கைகளையும் குவித்து, பொன் அனுள் - இலக்குமி தேவியை ஒத்த சீதாபிராட்டி, புக்கசாலை - புகுந்த பன்னசாலையை, புறத்துநின்று - வெளியே நின்றுகொண்டு, காத்தனன் - காவல் செய்தான்

குறிப்பு:—வாழி - முன்னிலையசை (௨௩௯)

மந்திரத் திளையோன் சொன்ன வாய்மொழி மனத்துக் கொள்ளான்
சந்திரற் குவமை சான்ற வதனத்தாள் சலத்தை நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய் முறுவலன் சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளி னனம் மானினைத் தொடர லுற்றான்.

இ - ள். மந்திரத்து இளையோன் சொன்ன -ஆலோசனையால் (அறிந்து) இளையபெருமான் கூறிய, வாய்மொழி - வாய்வார்த்தையை, மனத்துக்கொள்ளான் - மனத்தில் கொள்ளாதவனாகிய ஸ்ரீராமபிரான், சந்திரற்கு உவமை சான்ற வதனத்தாள் - சந்திரனுக்கு உவமானத்தில் மேலான முகத்தையுடைய சீதாபிராட்டியினது, சலத்தைநோக்கி - கோபத்தைப்பார்த்து, சிந்துரம் பவளம் செவ்வாய் முறுவலன் - சிவப்பான பவளம்போன்ற சிவந்தவாயோடு நகைப்பையுடையோனாகி [பற்கள் வெளியே தோன்றாது புன்னகை புரிந்தானாகி], சிகரம் - மலைச்சிகரம்போன்ற, செவ்வி சுந்தரம் தோளினன் -அழகிய புயங்களையுடைய ஸ்ரீராமபிரான், அ மானினை தொடரல் உற்றான் - அந்த மானைத் தொடர்ந்து சென்றான்

குறிப்பு —வாய்மொழி - வாயின் மொழி, வாய்மைமொழி, வாய்க்கும் மொழி செவ்வி சுந்தரம் - ஒருபொருட்பன் மொழி. (௨௪௦)

மிதித்தது மெல்ல மெல்ல வெறித்தது வெருவி மீதிற்
குதித்தது செவியை நீட்டிக் குரப்பத முரத்தைக் கூட்டி
யுதித்தெழு மூதை யுள்ள மென்றிவை யுருவச் செல்லுங்
கதிக்கொரு கல்வி வேறே காட்டிய தொத்த தன்றே.

இ - ள் மிதிச்சுது - (அம்மான நிலத்தில்) அடிவைத்தது, மெல்ல மெல்ல - மௌ்ள மௌ்ள, வெறித்தது - ஆவேசமுற்றது, வெருவி - அச்சமுற்று, மீதில் குதித்தது - மேலே குதித்தது, செவியை நீட்டி - காதுகளை நீட்டியும், குரம் பதம் - குளம்பினையுடைய பாதங்களில், உரத்தை கூட்டி - மார்பைச் சேர்த்தியும், உதித்து எழும் - பருத்துக் கிளம்புகின்ற, ஊதை - காற்று, உள்ளம் - மனம், என்ற இவை - என்று சொல்லிய இவைகள், உருவ செல்லும் கதிக்கு - உருவும்படி செல்கின்ற

வேகத்திற்கு, வேறே ஒரு கல்வி காட்டியது ஒத்தது - வேறே ஒரு (அதனமான) படிப்பைக் காட்டியதையும் போன்றது (௨௬௧)

நீட்டினா னுலக மூன்று நின்றெடுத் தளந்த பாத
மீட்டோர் முரைத்தற் கம்மா வேறுமோ ரண்ட முண்டோ
வோட்டினா ஞெட்டாந் தன்னை யொழிவற நிறைந்த தன்மை
காட்டினா னன்றி யன்றக் கடுமையார் கணிக்கற் பாலார்.

இ - ள். நீட்டினான் நின்று - நீட்டினவனாகி நின்று [நெடியோனாகி நின்று], எடுத்து - தூக்கி, உலகம் மூன்றும் - திரிலோகங்களையும், அளந்த பாதம் - அளவிட்ட திருவடிகளை, மீட்டும் நாம் உரைத்தற்கு - திரும்பவும் நாம் கூறுதற்கு, அம்மா—, வேறும் ஓர் அண்டம் உண்டோ - மற்றுமொரு அண்டம் இருக்கின்றதோ? ஓட்டினான் - (அம்மானைத்) துரத்தினான், தொடர்ந்த தன்னை - (அம்மானபின்) தொடர்ந்து சென்ற தன்னை, ஒழிவு அற நிறைந்த தன்மை - ஒழிவில்லாதபடி பூர்த்தியாய்த் தொடர்ந்த தன்மையில், காட்டினான்—, அன்றி - அல்லாமல், அன்று - அந்நாள் அக்கடுமை - அந்தவேகத்தை, யார் - எவர்? கணிக்கற்பாலார் - மதித்தற்குரியார்

குறிப்பு —அம்மா - வியப்பிடைச்சொல் (௨௬௨)

குன்றிடை யிவரு மேகக் குழுவிடைக் குதிக்குங் கூடச்
சென்றிடி னகலுந் தாழிற் றீண்டலாந் தகைமைத் தாகு
நின்றதே போல நீங்கு நிதிவழி நேய நீட்டு
மன்றலங் கோதை மாதர் மனமெனப் போயிற் றம்மா

இ - ள். குன்றிடை இவரும் - மலையின்கண் ஏறும், மேகம் குழுவிடை குதிக்கும் - மேகக்கூட்டத்தின்கண் பாயும், கூட சென்றிடின் அகலும் - அதனகூடவே தொடர்ந்துபோனால் பிரிந்துபோம், தாழின் - தாமதித்தால், தீண்டல் ஆம் தகைமைத்து ஆகும் - தீண்டத்தகாத தன்மையையுடையது ஆகும், நின்றதேபோல நீங்கும் - நின்றதைப்போலவேயிருந்து விலகிப்போம், நிதிவழி - திரவியத்தின்கண், நேயம் நீட்டும் - அன்பை நீளச்செய்கின்ற, மன்றல் அம் கோதை மாதர் - வாசனை பொருந்திய அழகிய கூந்தலையுடைய (விலை) மாதர்களது, மனம் என - மனத்தைப் போல, போயிற்று - போயினது

குறிப்பு —அம்மா - வியப்பிடைச்சொல் (௨௬௩)

காயமும் வேறாகிச் செய்யுங் கருமமும் வேறாகிற் றன்றே
யேயுமே யென்னின் முன்ன மெண்ணமே யிளவற் குண்டே
யாயுமே லுறுதல் செல்லா மரக்கரா னவர்கள் செய்த
மாயமே யாய தேனும் வருந்திய தென்றான் வள்ளல்.

இ - ள் வள்ளல் - ஸ்ரீராமபிரான், காயம் வேறு ஆகி - உடலானது (செயலுக்கு உதவத்தகாத) வேறு (விதத்தில்) ஆகி, செய்யும் கருமம் வேறு ஆகிற்று அன்றே - செய்கின்ற தொழில் (மானுருவத்துக்கு உரியதல்லாத) வேறு (விதத்தில்) ஆகி

னதன்றே? ஏயுமே என்னின் - (மாயச்செயலுக்கு இது) பொருந்துமே யென்றால், முன்மை—, இளவற்கு - இளையவனுக்கு, எண்ணமே - (அப்படிப் பொருந்தும் என்ற) நினைப்பே, உண்டே - உள்ளதே, உறுதல் - சம்பவிப்பதை, ஆயுமேல் - (நம் மனம்) ஆராயுமானால், செல்லாம - (இப்படிவருத்தமுறும்படி) செல்லமாட்டோம், நாம் வருந்தியது - நாம் வருந்தமுற்றது, அரக்கரானவர்கள் செய்த மாயமே ஆய தே - அரக்கர்கள்செய்த மாயத்தாலேயே யாயிற்றே, என்றான் - என்று கூறினான்

குறிப்பு—செல்லாவரக்கர் என்றும் நான் வருந்தியது என்றும் பாடபேதமு ண்டு அப்பாடத்திற்கு ஆயு - ஆயுள், மேல் உறுதல்செல்லா - நீடித்திருத்தற்காக லவழியிற் செல்லாத அரக்கர் என்று பொருள்கூறுக.   (உசச)

வேறு

பற்று வானினி யல்லன பகழியாற்
செற்று வானிற் செலுத்தலுற் றானென
மற்ற மாய வரக்கன் மனக்கொளா
வுற்ற வேகத்தி னும்பரி னோங்கினான்

இ - ள் இனி—, பற்றுவான் அல்லன் - பிடிப்பவனல்லன், பகழியால் செற்று - பாணத்தால் கொன்று, வானில் செலுத்துதல் உற்றான் என - விண்ணிற் செல்லச் செய்தற்குப் பொருந்தினான் என்று, மனம் கொளா - மனத்திற்கொண்டு, மற்ற மாயம் அரக்கன் - வேறான மாயம்பொருந்திய அவ்விராக்கதன், உற்றவேகத்தின் - மிகுந்த வேகத்தால், உம்பரின் ஓங்கினான் - ஆகாயத்தில் உயரச் சென்றான்.

அக்க ணத்தினி லையனும் வெய்யதன்
சக்க ரத்திற் றகைவரி தாயதோர்
செக்கர் மேனிப் பகழி செலுத்தினான்
புக்க தேயம்புக் கின்னுயிர் போகென.

இ - ள். ஐயனும் - ஸ்ரீராமபிரானும், அ கணத்தினில் - அந்த க்ஷணத்தில், வெய்ய - கொடிதாகிய, தன சக்கரத்தில் - தனது சக்கராயுதம்போல, தகைவு அரிது ஆயது - தடைபடுத்தற் கரியதாகிய, ஓர் - ஒரு, செக்கர்மேனி பகழி - செய்ய நிறத்தையுடைய பாணத்தை, புக்க தேயம்புக்கு - (இவ்வரக்கன்) புகுந்த தேசத்திற் புகுந்து, இன் உயிர் போகு என - (இவனது) இனிய உயிரைப்போக்குவாய் என்று கூறி, செலுத்தினான் - அனுப்பினான்,

குறிப்பு—செக்கர்மேனிப் பகழி - அக்கினிமுகாஸ்திரமாம்   (உசசு)

நெட்டி லைச்சரம் வஞ்சனை நெஞ்சுறப்
பட்ட தப்பொழு தேபகு வாயினு
லட்ட திக்கினு மப்புற முமபுக
விட்ட வைதநொரு குனறென வீழ்ந்தனன.

இ - ள். நெடு இலை சரம் - நெடிய இலை வடிவாயுள்ள அந்தப் பகழியானது, வஞ்சனை நெஞ்சு உற பட்டது - வஞ்சகம்பொருந்திய (அவ்வரக்கனது) நெஞ்சிற

பொருந்தத் தாக்கியது; அப்பொழுதே - அப்படித்தாக்கிய பொழுதிலேயே, பகுவாயினாலே - பிளந்த வாயினாலே, அட்டதிக்கினும் - எட்டுத் திசைகளினும், அப்புறமும் - (அத்திக்குக்களுக்கு) அப்பாலும், புக - பிரவேசிக்கும்படி, விட்டு அழைத்து - (சப்தத்தை) விடுத்துக் கூப்பிட்டு, ஒரு குன்று என வீழ்ந்தனன் - ஒரு மலைபோல வீழ்ந்தான்.

குறிப்பு — விட்டழைத்தல் - தன்னகத்து இயற்கையாயுள்ள தொனியை விடுத்து வேறுதொனிகொண்டு கூப்பிடுதலுமாம். (௨௪௭)

வெய்ய வன்ற னுருவொடு வீழ்தலுஞ்
செய்ய தன்றெனச் செப்பிய தம்பியை
யையன் வல்லனென் னாருயிர் வல்லனா
னுய்ய வந்தவன் வல்லனென் றுன்னினான்.

இ - ள். வெய்யவன் - கொடிய அவ்வரக்கன், தன் உருவொடு வீழ்தலும் - தனது (உண்மையான) உருவத்தோடு வீழ்ந்தவளவில், செய்யது அன்று என செப்பிய தம்பியை - நல்லது அன்றென்று கூறிய (தனது) தம்பியை, ஐயன் வல்லன் - (எனது) ஐயன் வல்லவனாயினான், என் ஆர் உயிர் வல்லன் - எனது அரிய உயிர் போன்றவன் வல்லவனாயினான், நான் உய்யவந்தவன் வல்லன் - நான் ஈடேறும்படி (என்பின்) வந்தவன் வல்லவனாயினான், என்று உன்னினான் - என்று நினைத்தான்.

குறிப்பு — ஐயன் - மூத்தோன், தந்தை ஈன்று மகிழ்வினால் இளையானை ஐயன் என்றது மரபுவழுவமைதி. ஆருயிர் - அன்மொழித்தொகை. (௨௪௮)

ஆசை நீளத் தரற்றினன் வீழ்ந்தவ
னீசன் மேனியை நின்றுட னோக்கினான்
மாசின் மாதவன் வேள்வியின் வந்தமா
ரீச னேயிவ னென்பது தேறினான்.

இ - ள். ஆசை நீளத்து அரற்றினன் - திசையினது நீளம் வரையில் (செல்லு மாறு) பேரொலிசெய்து, வீழ்ந்த - விழுந்த, அ நீசன் மேனியை - அந்தக் கீழ்மகனது உடலை, உடன் - உடனே, நின்று நோக்கினான் - நின்று பார்த்து, மாசில் - குற்றமில்லாத, மாதவன் - மகாதவத்தையுடைய விசுவாமித்திர முனிவரது, வேள்வியின் வந்த - வேள்வியின்கண்வந்த, மாரீசனே இவன் என்பதும் தேறினான் - மாரீசன் என்பவனே இவ்விராக்கதன் என்று சொல்வதிலுந் துணிவுகொண்டான். (௨௪௯)

உழைத்த வாளி யுரம்புகப் புலவியோ
னிழைத்த மாயையி னென்குர லாலிசைத்
தழைத்த துண்டது கேட்டயா வெய்துமான்
மழைக்க ணேழையென் றுள்ளம் வருந்தினான்.

இ - ள். உழைத்த - பிரயாசைப்பட்ட, வாளி - பாணமானது, உரம்புக - (தன்) மார்பிற் புகுந்ததால், புலவியோன் - அற்பனாகிய அவ்வரக்கன், இழைத்தமாயையின் - செய்த மாயையில், என் குரலால் இசைத்து அழைத்தது உண்டு - எனது

(குரல போல) குரலகொணடு பேசிக கூபபிடடது உணடு, அதுகேடடு - அககுரலை ககேடடு, மழைககண ஏழை - சீதை, அயாவு எயதும எனறு - தளாவடைவாளெ னறு, உளளம வருநதினன - மனம வருநதலுறறான

குறிபபு —மழைககண ஏழை - மேகமபோல நீாசொரியுங கணகளையுடைய பேதைபபெண தனது ஆறறலின தனமையை யறியாது வீணே யழுவாள என னுங குறிபபு விளஙக 'மழைககணேழை' எனறா. (௨௫௦)

மாறற மினனது மாயமா ரீசனென
றேறற முனனுணாந தானெனி னெனனுடை
யாறற றேரு மறிவின ளுதலாற
றேறறு மாலிளை யோனெனத தேறினன.

இ - ள இனனது மாறறம- இததனமைய வாாததையானது, மாயம (எனறு)- வஞசகம எனறும, மாரீசன எனறு - (இதைச சொனனவன) மாரீசனெனறும, ஏறறம - அதிகமாக, முன - முனனம, உணாநதான எனின - அறிநதானேயானா ல, என உடை ஆறறல தேரும அறிவினள ஆதலால - எனனுடைய வலிமையை யறியும அறிவினையுடையா ளுகையால, இளையோன - (எனது) தமபி, தேறறுய என தேறினன- (சீதையைத துயாததினினறுந) தேறசசெயவானெனறு தேறுதல டைநதான. (௨௫௧)

மாளவ தேபொரு ளாகவந தானலன
சூழவ தோாபொரு ளுணடிவன சொலலினன
மூளவ தேதம துமுடி யாமுன
மீளவ தேநல மெனறவன மீணடனன

இ - ள மாளவதே பொருள ஆகவநதான அலன - இறபபதே உணமையா குமபடி வநதவனலலன, இவன சொலலினன - (எனகுரலகொணடு பேசிய) இவ னுடைய வாாததையால, சூழவது ஓா பொருள உணடு - ஆலோசனை செய்வதா கிய ஒரு அாததமிருககினறது, மூளவது - (இனிக) கூடுவதாகிய, ஏதம அது - கெடுதியானது, முடியா முனம - (பகைவா செயது) முடிதது விடாத முனபு, மீளவதே நலன எனறு - திருமபிவிடுவதே நனமையானது எனறுகூறி, அவன மீண டனன - அவவிராமபிரான திருமபிவநதான (௨௫௨)

ஏழாவது· மாரீசனவதைப் படலம

முறறிறறு.

ஆகபபடலம எ-ககு விருததம ௮௧௦

எட்டாவது சடாயுவுயிர்நீத்த படலம்.

சஙக டுதத தனிககடன மேனியாற
கஙக டுதத நிலைமை யறைநதனம
கொஙக டுதத மலாககுழற கொமபனுட
கிஙக டுதத தகைமை யியமபுவாம

இ - ள. சஙகு - சஙகுகள, அடுதத - சோநத, தனி கடல - ஒபபறற கடல போனற, மேனியாறகு - திருமேனியையுடைய ஸ்ரீராமபிரானுககு, அஙகு அடுதத நிலைமை அறைநதனம - அவவிடததில சமபவிதத தனமையைக கூறிேனம, கொஙகு அடுதத மலா குழல கொமபு அனடகு வாசனைசோநத மலாகளையணிநத கூநதலையுடைய கொமபுபோனறவளாகிய சீதாபிராடடிககு, இஙகு அடுதத தகைமை இயமபுவாம - இவவிடததிற சமபவிதத தனமையை (இனிக) கூறுவாம.

குறிபபு—குழற கொமபு - இல்பொருளுவமை (௧)

எயிற லைததுு முழைதிறந தேஙகிய
செயிாத லைககொணட சொறசெவி சோதலுங
குயிற லததிடை யுறறதொா கொளகையாள
வயிற லைதது விழுநது மயஙகினள

இ - ள எயிறு அலைதது-பறகளை (நெறுநெறெனத) திருகி, முழை திறநது-குகைபோனற வாயைததிறநது, எஙகிய - அழுத, செயிாதலை கொணட - துனபத தினைக கொணட, சொல - வாாததையானது, செவி சோதலும - (தன) செவியைசசோநதவளவில, குயில தலததிடை உறறது ஓா கொளகையாள - (ஒரு) குயிலானது (மாததினினறுந தவறிவிழுநது) நிலததிறசோநததாகிய ஒரு செயலைகயை யுடையாளாய, வயிறு அலைதது - வயிறறிலடிததுககொணடு, விழுநது—, மயஙகினள - (சீதாபிராடடி) மயஙகுதலுறறாள.

குறிபபு—முழை - அதுபோனற வாய்ககு ஆகுபெயா தலை - ஏழனுருபு (௨)

பிடிதது நலகிவ வுழையெனப பேதையேன
முடிகத னெனமுதல வாழவென மொயகுழல
கொடிபப டிநத தெனநெடுங கோளரா
விடிககு டைநத தெனபபுரண டேஙகினள.

இ - ள. மொயகுழல - அடாநத கூநதலையுடையாளாகிய சீதாபிராடடியானவள, பேதையேன - அறிவிலலாத நான, இ உழை - இநத மானை, பிடிதது நலகு என - பறறிததருவீராகவெனறு கூறி, முதல வாழவு முடிததனென என - முதனமையான வாழககையைத தீாததுவிடடேன எனறு, கொடி படிநதது என-(கொழு கொம்பிழநத) பூஙகொடி (நிலததில) விழுநததுபோலவும, நெடுஙகோள அரா இடிககு உடைநதது என - நீணட கொலைததொழிலையுடைய பாமபானது இடியால

மனத்தளர்வடைந்தது போலவும், புரண்டு - (கீழேவிழுந்து) புரளுதலுற்று, ஏங்கினள் - அழுதாள்.

குறிப்பு — நாயகனோடு கூடிவாழும் வாழ்க்கையே சிறப்புடைத்தாதலின் அச்சிறப்பு விளங்க 'முதலவாழ்வு' என்றார். மொய்குழல் - அன்மொழித்தொகை. இடிக்கு - உருபுமயக்கம். தலைவிரிகோலமாய் அழுதனளென்பது தோன்ற 'மொய்குழல்' என்றார். (௩)

குற்றம் வீந்த குணத்தினெங் கோமகன்
மற்றை வாளரக் கன்புரி மாயையால்
இற்று வீந்தன னென்னவு மென்னய
னிற்றி யோவிளை யோயொரு நீயென்றாள்.

இ - ள். இளையோய் - இளையவனாகிய இலட்சுமணா! ஒரு நீ - ஒருவனாகிய நீ, குற்றம் வீந்த - குற்றமில்லாத, குணத்தின் - நற்குணங்களையுடைய, எம் கோமகன் - எமது நாயகன், மற்றை வாள் அரக்கன்புரி மாயையால் - மற்றை வாளாயுதத்தையுடைய (ஒரு) இராக்ஷதன் செய்த மாயையாலே, இற்று வீந்தனன் என்னவும் - அறுபட்டிறந்தானென்று கூறவும், என் அயல் நிற்றியோ - என்னது பக்கத்தே நிற்பாயோ? என்றாள் —,

குறிப்பு — கோமகன் - அரசனாகிய எமது கணவன் என்க. இனித் தன்னைப் புரப்பார் இல்லையென்பது தோன்ற 'கோமகன்' என்றாள். மற்றை - சுட்டியகற்றினமாகலின் வாட்போர் மகனெனக் கொள்க. போர்செய்தமை குறிப்பிக்க 'வாளரக்கன்' என்றும், 'இற்றுவீந்தனன்' என்றும் கூறினாள். ஒரு நீ என்றதற்கு - வீரர்க்குளொருவனாகிய நீயெனவும் தம்பிமார்களுள் ஒருவனாகிய நீ எனவும் வேறொரு தன்மையாயிருக்கிற நீயெனவும் கூறலாம். (௪)

வேறு

உண்மையா ருலகினி னிராமற் கேற்றமோ
திண்மையா ருளரெனச் செப்பற் பாலதோ
பெண்மையா லுரைசெயப் பெறுதி யாலென
வுண்மையா னிளையவ னுணரக் கூறினான்.

இ - ள். உண்மையான் - சத்தியவாசகனாகிய இளையபெருமாள், எண்மை ஆர் உலகினின் - எளிமைபொருந்திய இவ்வுலகத்தின்கண், இராமற்கு - ஸ்ரீராமபிரானைக்காட்டிலும், ஏற்றம் - மிகுதியான, ஓர் திண்மையார் - ஒப்பற்ற வலிமையையுடையவர்கள், உளர் என - இருக்கின்றாரென்று செப்பல் பாலதோ - (வார்த்தை) சொல்லுதற்குரியதோ? பெண்மையால் - பெண்தன்மையால், உரைசெயப் பெறுதி என - (இத்தகைய) வார்த்தைகூற (மனம்) பொருந்தினை என்று, உணர்க்கு - அசீதாபிராட்டிக்கு, உணரக் கூறினான் - அறியும்படியாகச் சொன்னான்.

குறிப்பு — ஸ்ரீராமபிரானது ஆற்றலினும் சிறந்த ஆற்றலையுடையது இவ்வுலகின்கண் யாதும் இல்லையாதலால் 'எண்மையா ருலகு' என்றான். இனி, எண்மை என்றது மதிப்பு எனப் பொருள்கொண்டும் அருமைகொண்டு ஆரும் உலகு என எதிர்காலத்

தை விரித்தும் அரககாதித்தொழிலான முனிவர் தீத்தொழின் மாறிய பெருமைக்கு
ணறிந்தற்கு மிவவுலகம இனி நனனிலைமை பெறுமென விரித்தலு மமையும உல
கம எனலை உயாதிணையாககொணடு மதிப்புத்தககிய உயாநதவாதமமில எனப
பொருளகோடலுங கூடும "நுணணுணா வுடையோா நூலொடு பழகினும, பெண
ணறி வெனபது பெருமபே ைதமைத்தே" எனபவாகலின 'பெணமையா லுரை
செயப பெறுதி' என்றுன உணமையான்—உணமையால எனப பொருளகோ
டலுமாம. (ரு)

ஏழுமே கடலுல கேழு மேழுமே
சூழுமேழ மலையவை தொடாந்த சூழலவாய
வாழுமே ைழயா சிறு வலிககு வாளமா
தாழுமே ராகவன றனிமை தையலீா.

இ - ள தையலீா - அழகுடையவரே! கடல ஏழுமே - கடலகள ஏழினு
டையவும, உலகு ஏழும ஏழுமே - உலகஙகள பதினானகினுடையவும, சூழும ஏழ
மலை - சூழநதிருககினற சப்தகுலாசலஙகளினுடையவும, அவை - அவறறை, தொட
ாநத - தொடாநதுள்ள, சூழலவாய - இடஙகளில, வாழும - வாழுகினற, ைழயா-
அறிவிலாகளுடையவும, சிறுவலிககு - அறப பலததுககும, வாள அமா - வாள
முதலியவறறுற செயயும போாககும, ராகவன தனிமை - ஸ்ரீராமபிரானது ஒபபற
றதனமையானது, தாழுமே - தாழவடையுமோ?

குறிப்பு.—ஏழுமே ஏழுமே, ஏகாரஙகள - எணணுபபொருளன தாழுமே,
ஏகாரம - எதிாமறை வாள - மறறை யாயுதஙகளுககும உபலககணம தனிமை -
தனித்து ஒருவனுயிருககுந தனமையுமாம (சு)

பாரெனக கனலெனப புனலெ னபபகா
பேரெனத திசையென முனியிற பெருமால
காரெனக கரியவக கமலக கணணனை
யாரெனக கருதியிவ விடரி னுழகினறீா.

இ - ள. பாா என - புவியெனறும, கனல என - நெருபபெனறும, புனல
என - நீரெனறும, பகா - (மறறும) சொலலபபடுகிற, போ என - பெயாகள என
றும, திசை என - திககுககளெனறும, முனியின - கோபிததால, பெரும -(அவை)
பெயாநதுபோம, (இஙஙனமிருகக) காா என கரிய - மேகமபோலக கரியநிறத்தை
யுடைய, அ கமலம கணணனை - அநதப புணடரீகாடசனை, யாா என கருதி - யாா
என்று நினைதது, இ இடரின ஆழ்கினறீா - இநதத துனபததி லழுநதுகினறீா?

குறிபபு —பாா கனல புனல எனக கூறிப பின பகாபே ரெனறமையால அப
போ பஞசபூதஙகளிற கூறுதொழிநத வாயுவும ஆகாயமுமாம எமபிரானை ஸ்ரீமகா
விஷ்ணுவெனறு கருதக கடவீா சாமானிய மானிடரூபமெனறு கருதனமின என
பது ஈறறிரணடடியின கருதது. (எ)

இடைநதுபோய நிசிசரற கிராம னெவவமவந
தடைநதபோ தழைககுமே யழைககு மாமெனின்

மிடைந்தபே ரண்டங்கள் மேல்கீழென
வுடைந்துபோ மயன்முத லுயிருந் தீயுமால்

இ-ள் இராமன் - ஸ்ரீராமபிரான், நிசிசரற்கு இடைந்துபோய் - இராக்கதனுக்குத் தோற்றுப்போய், எவ்வம் வந்து அடைந்தபோது - துன்பம் வந்துற்றகாலத்தில், அழைக்குமே - (பிறர்துணையைவிரும்பிக்) கூப்பிடுவாரோ? [கூப்பிடார்], அழைக்கும் எனின் - (அப்படிக்) கூப்பிடுவாரேயானால், மேல் கீழ் என - மேலுங்கீழும் உள்ளனவாகிய, மிடைந்த - நெருங்கிய, பேர் அண்டங்கள் - பெரிய வுலகங்கள் (பதினான்கும்), உடைந்துபோம் - தகர்ந்து அழிந்துபோகும், அயன்முதல் உயிரும் தீயும் - பிரமன் முதலாகிய ஜீவராசிகளும் நாசமடையும் (௮)

மாற்றமென் பகர்வது மண்ணும் வானும்
போற்றவன் றிரிபுர மெரித்த புங்கவ
னேற்றிநின் றெய்தவில் லிற்ற தெம்பிரா
னாற்றலி னமைவதோ ராற்ற லுண்மையோ

இ-ள் மாற்றம் பகர்வது என் - வார்த்தை சொல்வது யாது? மண்ணும் வானும் போற்ற - மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் போற்றும்படியாக, வல்திரிபுரம் எரித்தபுங்கவன் - வலிய முப்புரங்களை யெரித்தருளிய சிவபிரான், ஏற்றி நின்று எய்தவில் - (நாண்) ஏற்றி நின்று (அம்பினை) எய்த வில்லானது, இற்றது - முறிபட்டது, (ஆதலால்), எம்பிரான் ஆற்றலின் - எமது பெருமானுடைய வல்லமையைப்போல, அமைவது - பொருந்துவதாகிய, ஓர் ஆற்றல் உண்மையோ - ஒருவல்லமையும் உள்ளதோ?

குறிப்பு —மண், வான் - இடவாகுபெயர்கள். நின்று - அசையுமாம். பிரான் - எப்பொருட்கு மிறைவன், கடவுள் (௯)

காவல னீண்டுநீ கருதிற் றெய்துமேல்
மூவகை யுலகமு முடியு முந்துள
தேவரு முனிவரு முதல செவ்வியோ
ரேவரும் வீந்துளா ரறமு மெஞ்சுமால்.

இ-ள் காவலன் ஈண்டு - புரவலராகிய ஸ்ரீராமர் (யாதொரு தீங்குமின்றி விரைந்துவந்து) சேர்வார், நீ கருதிற்று எய்துமேல் - நீ எண்ணியது சம்பவிக்குமானால், மூவகை உலகமும் முடியும் - திரிலோகங்களும் நாசமடையும், முந்து உள - முற்பட்டுள்ள, தேவரும் —, முனிவரும் —, முதல - முதலாகிய, செவ்வியோர் எவரும் - சிறப்புப்பெற்றோர் எவர்களும், வீந்து உளார் - இறந்திருக்கிறார்கள், அறமும் எஞ்சும் - தருமமும் அற்றுப்போகும்

குறிப்பு —காவலன் - இரட்சிக்குந்தொழில் வல்லவன் காப்பவனாகிய அவனே இறப்பானாகில் மற்றையோர் காப்பவரின்றித் தாமே இறப்பார் என்பது கருத்து ஈண்டு - இப்பொழுது, நீ கருதிற்று - நீ கருதினதை, காவலன் எய்துமேல் - காவலன் அடைவானானால் என முதலடிக்குப் பொருள்கூறுதலும் அமையும். (௧௦)

பரக்கவென் பகர்வது பகழி பண்ணவன்
றுரக்கவங் கதுபட்டுத் தொலைந்து சோர்கின்ற
வரக்கனவ் வுரையெடுத் தரற்றி னானதற்
கிரக்கமுற் றிரங்கலி ரிருத்தி ரீண்டென்றான்.

இ-ள். பரக்க பகர்வது என் - விரித்துச்சொல்வது யாது? பண்ணவன் - ஸ்ரீராமபிரான், அங்கு - அவ்விடத்தில், பகழி துரக்க - அம்பினை எய்ய, அது பட்ட - அவ்வம்பு பட்டதால், தொலைந்து சோர்கின்ற அரக்கன் - அழிந்து தளர்வடைகின்ற இராக்கதன், அ உரை எடுத்து அரற்றினன் - அந்தவார்த்தையை யெடுத்துச்சொல்லிக் கூவினன், அதற்கு - அதன்பொருட்டு, ஈண்டு - இப்பொழுது, இரக்கம் உற்று - துன்பமடைந்து, இரங்கலிர் - வருந்தாமல், இருத்திர் என்றான் - இருப்பீராகவென்று கூறினன்.

குறிப்பு — பண்ணவன் - திண்ணியன், கடவுள். (௯௧)

என்றவ னியம்பலு மெடுத்த சீற்றத்தள்
கொன்றன வின்னலள் கொதிக்கு முள்ளத்த
ணின்றநின் னிலையிது நெறியிற் றன்றென
வன்றறு கண்ணினள் வயிர்த்துக் கூறுவாள்.

இ-ள். என்று - (இரங்கலிர் இருத்திர்) என்று, அவன் இயம்பலும் - அவ்விளையபெருமாள் கூறியவளவில், எடுத்த சீற்றத்தள் - அதிகரித்த கோபத்தையுடையவளும், கொன்றன இன்னலள் - கொன்றாற்போன்ற துன்பத்தையுடையவளும், கொதிக்கும் உள்ளத்தள் - (கோபத்தினாலே) கொதிக்கின்ற மனத்தினையுடையாளும், வல் தறு கண்ணினள் - கொடிய குரூரத்தன்மையை யுடையாளுமாகி, (சீதாபிராட்டி இளையபெருமாளைநோக்கி), நின்ற நின் நிலை இது - (பிரானைத் தேடிச்செல்லாமல் ஈங்கு) நின்ற உன்னுடைய இந்நிலைமையானது, நெறியிற்று அன்று என - நீதியின்பாலது அன்றென்று, வயிர்த்து கூறுவாள் - பகைசாதித்துக் கூறுவாளாயினள்.

குறிப்பு — வயிர்த்து - வயிரித்து என்பதன் விகாரம். (௯௨)

ஒருபகல் பழகினு முயிரை யீவரால்
பெருமக னுலைவுறு பெற்றி கேட்டுநீ
வெருவலை நின்றனை வேறென் யானினி
யெரியிடை வீழ்ந்துயி ரிறப்ப னீண்டெனா.

இ-ள். ஒருபகல் பழகினும் - ஒருநாள் பழகினவர்கள், உயிரை ஈவர் - (சிநேகித்தவர்க்கு ஓர் துன்பம் வந்தகாலத்துத் தமது) உயிரையுங் கொடுப்பார்கள், நீ - (உடன்பிறந்து வெகுநாள் பழகினவனாகிய) நீ, பெருமகன் உலைவு உறு பெற்றி கேட்டும் - (நமது) அரசன் அழிவுற்ற தன்மையைக் கேள்விப்பட்டும், வெருவலை நின்றனை - அஞ்சாமல் நின்றாய், வேறு என் - (எனக்குப் போக்கு) வேறு யாதோ? இனி—, யான் - நான், எரி இடை ஈண்டு வீழ்ந்து உயிர் இறப்பன் எனா - நெருப்பின்கண் இப்பொழுது வீழ்ந்து உயிரை மாய்ப்பேன் என்று கூறி. (௯௩)

தாமரை வனததிடை தாவு மனனமபோற
றூமவெங காடடெரி தொடாகின் ருடனைச
சேமவிற குமரனும விலககிச சிறடிப
பூமுக நெடுநிலம புலலிச சொலலுமால.

இ - ள் தாமரைவனதது இடை - செநதாமரைமலாக காடடினிடததில, தாவும அனனமபோல - தாவுகினற அனனபபுளளைபபோல, தூமம வெம காடு எரி தொடாகினறுள தனை - புகைபொருநதிய கொடிய காடடுததீயைத தேடிச செலகினற சீதாபிராடடியை, சேமம வில குமரனும - காததறகுரிய விலலினையுடைய இளையபெருமாளும, விலககி - தடுதது, சிறு அடி பூ முகம நெடு நிலம புலலி - (அவளுடைய) சிறியபாதஙகளாகிய (தாமரை) மலாகளினிடததுப பெரிய பூமியைத தழுவி [பெரிய பூமியினகண வீழநது குமபிடடு], சொலலும - கூறுவான.

குறிபபு — தாமரைவனம - காட்டுத்தீக்கும, அனனம - பிராட்டிக்கும உவமை. பூமுகம, முகம - ஏழனுருபு. சிறடிபபூவினகண நெடுநிலததில முகம புலலி எனக் கொணடு பொருளகோடலு மமையும. (கச)

துஞசுவ தெனனைநீ சொனன சொலலையா
னஞசுவேன மறுககிலே னவலந தீாநதினி
யிஞசிரு மடியனே னேகு கினறனன
வெஞசின விதியினை வெலல வலலமோ.

இ - ள் நீ துஞசுவது எனனை - நீ இறபபது எதனபொருடடு? யான (நீ) சொனன சொலலை அஞசுவேன - நான நீ சொனன வாாததையை அஞசுவேன, மறுககிலேன - (உமது உததரவை) மறுததுவிடேன, இனி—, அவலம தீாநது - துனபம ஒழிநது, இஞசு இரும - இஙகே இருககககடவீா, வெம சினம விதியினை - வெவவிய கோபம பொருநதிய ஊழவினையை, வெலலவலலமோ - வெனறு விடுதறகு (நாம) வலலமையுடையேமோ? [வலலமையுடையேம அலலம], (ஆதலால), அடியனேன - அடிமையாகிய நான, ஏகுகினறனன - செலலுகினறேன.

குறிபபு — சீதாபிராடடி கூறிய மொழியைத தன மனததில நினைககுமபோது தெலலாம அஞசுதலெயதும எனபது தோனற 'அஞசுவேன' என எதிாகாலததுக கூறினான. இஙகு-இஞசு என எதுகைநோககித திாநதது. "முதிாதரு தவமுடை முனிவ ராயினும, பொதுவறு திருவொடு பொலிவ ராயினு, மதியின ராயினும வலிய ராயினும, விதியினை யாவரே வெலலு நீரமையாா" [கந்தபுராணம்] எனபவாகலின 'விதியினை வெலல வலலமோ' எனறான. (கரு)

போகினறே னடியனேன பொருநதி வநதுகே
டாகினற தரசனற னுணை நீாமறுத
தேகெனறீ ரிருககினறீா தமிய ளென்றுபின
வேகினற சிநதையான விடைகொண டேகினான.

இ - ள் அடியனேன போகினறேன - அடிமையாகிய நான (இபபோது) செலகினறேன, பொருநதி வநது கேடு ஆகினறது - பொருததமாகிவநது கெடுதி உண

டாகின்றது, நீர் அரசன்றன் ஆணைமறந்து வந்து என்றீர் - நீர் (நமது) அரசனுடைய ஆக்கினையைத் தவிர்த்து (காவற்றொழிலைபுரியு மென்னைச்) செல்வாயென்று கூறி னீர், தமியள் இருக்கின்றீர் - தனித்தவராயிருக்கின்றீர், என்று - என்று கூறி, பின் - பிறகு, வேகின்ற சிந்தையான் - (துயரத்தால்) வெதுதலுறுகின்ற மனத்தினை யுடையானாகி, விடைகொண்டு ஏகினன் - (இளையபெருமாள்) விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

குறிப்பு — அழகியமான் வரக்கண்டு ஆசைகொண்ட பிராட்டியை மகிழ்விக்க அம்மானைப் பிடிக்கும்பொருட்டு இராமபிரான் பிரியவும் அம்மான் கூவிய மாயவொலியால் தன் நாதன் துன்புற்றானெனக் கருதிச் சீதாபிராட்டி இளையபெருமாளைச் சென்று பார்த்துவாவெனக் கட்டளையிட்டபடி செல்லாது மாறுத்தரங் கூறியதால் அவள் இறக்கத் துணிந்ததை யறிந்து காவற்றொழிலைவிடுத்து இளையோன் ஏகவும் நேரிட்ட காரணங்கள் பிராட்டி தனித்திருந்து கேட்டைத்தற்குப் பொருத்தமாயிருந்தலபற்றி 'பொருந்தி வந்துகே டாகின்றது' என்றான் (கரு)

இருப்பனே லெரியிடை யிறப்ப ராலிவர்
பொருப்பனை யானிடைப் போவ னேயெனி
லருப்பமில் கேடுவந் தடையு மாருயிர்
விருப்பனேற் கென்செய லென்று விம்மினான்

இ - ள். இருப்பனேல் - (யான் செல்லாம லீங்கு) இருப்பேனானால், இவர் - இச்சீதாபிராட்டியார், எரியிடை இறப்பர் - அக்கினியில் விழுந்து இறந்துபோவார், பொருப்பு அனையான் இடை போவனே எனில் - மலையை ஒத்தவனாகிய ஸ்ரீராம பிரானிடத்துச் செல்வேனே என்றால், அருப்பம் இல் கேடுவந்து அடையும் - அரண் (காவல்) இல்லாத கெடுதிவந்து சேரும், ஆர் உயிர் விருப்பனேற்கு - அரிய உயிரினிடத்து ஆசையையுடையேனாகிய எனக்கு, செயல் என் என்று விம்மினான் - (இனிச் செய்யவேண்டிய) தொழில் யாது? என்று கூறி அழுதான்.

குறிப்பு — அருப்பம்-அரண், "வீங்கு சிறை வியலருப்பம்" [புறநானூறு 17] இனி, அருப்பம் - அருமையுமாம், "அடிநிலை தளர்க்கு மருப்பமு முடைய" [மலைபடு கடாம் 222]. இங்ஙனந் துயருறுதலினும் உயிர்விடுதல் நன்மையாயிருந்தும் உயிரைமாய்த்துக்கொள்ளா திருக்கின்றேனென்பான் 'ஆருயிர் விருப்பனேன்' என்றான்.

அறந்தனா லழிவிலா தாகி னாக்கலா
மிறந்துபா டிவர்க்குறு மிதனி னிவ்வழி
துறந்துபோ மிதனையே துணிவ னென்றலவினைப்
பிறந்துபோந் திதுபடும் பேதை யேனென்றா,

இ - ள் அறம் தனால் ஆகின-தருமத்தினால் (இயலும்) ஆனால், அழிவு இலாது ஆக்கல் ஆம் - கேடில்லாமற் செய்தலாகும், இவர்க்கு - இப்பிராட்டியாருக்கு, இறந்துபாடு உறும் இதனின் - இறந்துபடுதல் சம்பவிக்கும் இதனைக் காணுறுதலினும், தொல்வினை - பூர்வகாமத்தால், பிறந்து - (புவியில்) உற்பவித்து, போந்து - (ஈங்கு) வந்து, இது படும் - இவ்விசாரத்தையடைகின்ற, பேதையேன் - அறிவிலியாகிய நான், இ வழி - இந்த இடத்தை, துறந்துபோம் - நீங்கிச் செல்லுகின்ற, இதனையே - இச்செய்கையே, துணிவன் என்று - துணிந்துசெய்வேனென்று கூறி.

குறிப்பு — யார் தடுப்பினும் இவர் இறவாதிரார், நாயக னுயிரோடிருக்கும் போழ்து மனைவி தீக்குளித்த லறமன்றாகலின், அவ்வறத்திறகுரிய தெய்வத்தான் இவரைக் காத்தல்வேண்டுமே எனபான 'அறத்தனு வழிவிலா தாகி னுககலாம்' என்றான். பாடு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர் (௧௮)

போவது புரிவனுன புகுந்த துணடெனிற
காவலசெய் யெருவைவின றலைவன் கணணுறு
மாவது காககுமென றறிவித தவவழித
தேவர்செய தவததினற செமமல லேகினுன.

இ - ள். செம்மல - பெருமையிற் சிறந்த இளையபெருமான, நான போவது புரிவன - யான செல்லுகினறேன, புகுந்தது உணடு எனின - (ஏதேனுந்கெடுதி) பிரவேசித்தது உணடு என்றால, காவலசெய - (எங்களைக) காக்குந் தொழில செய்கின்ற, எருவைவின தலைவன - கழுகுகளுக்கு அரசாகிய சடாயு என்பவர், கணணுறும - காணுவார், ஆவது காககும - ஆகும ஆபத்தை (நீக்கி) இரட்சிப்பார், என்று அறிவித்து - என்று தெரிவித்து, அ வழி - (ஸ்ரீராமர் சென்ற) அந்தமார்க்கமாக, தேவர்செய தவத்தினால ஏகினுன - தேவர்கள் செய்த தவத்தினாலே சென்றான்.

குறிப்பு — சடாயுகாண படலத்தில், "நீவிரு மனனுந் றுணுமிக, காட்டில வைகுதிர் காககுவென யானென்றான்" எனவும், "பார்ப்பைப் பார்க்கும் பறவைவிற பார்ககின்றான்" எனவுங் கூறியவாறு சடாயு இவர்களைக் காத்துவருவதால 'காவலசெய யெருவைவின றலைவன' என்றான். விடைகொண்டேகிய இளையபெருமான சற்றுத்தூரஞ் சென்று திருமபிப்பார்த்துச் சடாயு காப்பர் என்பதைப் பிராட்டிக்கு அறிவித்துச் சென்றானெனக. (௧௯)

இளையவ னேகலு மிறவு பார்க்கின்ற
வளையெயிற றிராவணன வஞ்ச முற்றுவான
முளைவரித தணடொரு மூன்று முப்பகைத
தளையரி தவததாதம வடிவுந தாங்கினுன.

இ - ள இறவுபார்க்கின்ற - சமயம் நோக்குகின்ற, வளை எயிறு இராவணன - வக்கிரதந்தங்களையுடைய இராவணன, இளையவன ஏகலும - இளையபெருமான சென்றவளவில, வஞ்சம் முற்றுவான - (தான்) வஞ்சிக்குஞ்செயல முடியும்பொருட்டு, முளை - ஆப்பிளையுடைய, வரி - கட்டமைந்த, தணடு ஒரு மூன்றும - ஒரு திரிதணடமும, முப்பகை தளை அரி தவத்தாதம வடிவும - மூன்றுபகையாகிய பந்தத்தை யறுத்தொழித்த தவத்தினையுடைய முனிவர்களினது உருவத்தையும், தாங்கினுன - சுமந்தான்

குறிப்பு — வஞ்சம் உற்று எனப் பிரித்து - மாயம் அடைந்து என்று பொருள் கூறி வான எனபதைத் தணடொடுகூட்டி வான எனறதுப் பெருமைபொருந்திய எனப் பொருள் கூறுதலு மமையும். அரசு, புரசு, மூங்கில என்னும் மூன்றுவகைக் கோல்களையும் ஒன்றாக முறுக்கிச் சேர்த்தது திரிதணடமாம், முப்பகை - காமம், வெகுளி, மயக்கம் என்பன. (௨0)

ஊணில னுமென வுலர்ந்த மேனியான்
சேணெறி வந்ததோர் வருத்தச் செய்கையான்
பாணியி னடத்திடைப் படிக்கின் றானென
வீணையி னிசைபட வேதம் பாடுவான்.

இ-ள் ஊண் இலன் என உலர்ந்த மேனியான் - உணவில்லாதவனைப்போல வற்றிய உடலையுடையானாகவும், சேண் நெறி வந்தது ஓர் வருத்தம் செய்கையான் - தூரமான வழியிலிருந்து வந்ததாலாகிய ஒரு துன்பத்தினது செயலினையுடையானாகவும், நடத்திடை - நடனத்தில், பாணியின் - தாளத்தோடு, படிக்கின்றான் என - (இசைப்பாட்டைப்) படிப்பவனைப்போல, வீணையின் இசைபட - வீணையினது நாதமுண்டாகும்படி, வேதம் பாடுவான் - (தன்குரலால்) வேதத்தைப் பாடுவோனாகவும்.

குறிப்பு — ஊண - உண்ணப்படுவது, செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டு முதல் நீண்டது. டாணியின் என்றது - பாட்டை எனப் பொருள்கூறினுமமையும். இசைபட என்றது - இசை தாழ்வடைய என்னலுமாம். (௨௧)

பூப்பொதி யவிழ்ந்தன நடையன் பூதலந்
தீப்பொதிந் தாமென மிதிக்குஞ் செய்கையன்
காப்பருந் நடுக்குறுங் காலன் கையினன்
மூப்பெனும் பருவமு முனிய முற்றினன்.

இ-ள். பூ பொதி அவிழ்ந்தன நடையன் - மலரின் இதழ் (மெல்லமெல்ல) விரிந்தாற்போல நடத்தலையுடையானாகவும், பூதலம் தீ பொதிந்து ஆம் என மிதிக்கும் செய்கையன் - பூமியானது நெருப்புத்திணித்ததாகுமென்று கருதிக் காலவைக்கின்ற செயலினையுடையானாகவும், காப்பரும் - காத்தற் கருமையான [தடுத்தற்கு முடியாத], நடுக்கு உறும் - நடுக்கமடைகின்ற, காலன் கையினன் - கால்களையுங் கைகளையு முடையவனாகவும், மூப்பு எனும் பருவமும் - முதுமையென்னும் பருவகாலமும், முனிய - வெறுக்கும்படியாக, முற்றினன் - முதிர்ச்சியடைந்தானாகவும்

தாமரைக் கண்ணொடோ தவத்தின் மாலைய
னாமையி னிருக்கையன் வளைந்த வாக்கைய
னாமநூன் மார்பின னணுகி னானரோ
தூமனத் தருந்ததி யிருந்த சூழலவாய்.

இ-ள். தாமரை கண்ணொடு - தாமரைமலர்போன்ற கண்களோடு, ஏர் தவத்தின் மாலையன் - அழகிய தவவொழுக்கை யுடையானாகவும், ஆமையின் இருக்கையன் - ஆமை(யானது ஐந்துறுப்பையும் உள்ளடக்கி யிருப்பது)போல (ஐம்புலன்களையும் அடக்கி) இருத்தலை யுடையானாகவும், வளைந்த ஆக்கையன் - வளைவுற்ற உடலையுடையானாகவும் [கூனனாகவும்], நாமம் நூல் மார்பினன் - பெருமைபொருந்திய (முப்புரி) நூலையணிந்த மார்பினையுடையானாகவும், தூமனத்து அருந்ததி இருந்த சூழல்வாய் - பரிசுத்தமான மனத்தினையுடைய அருந்ததிபோலுங் கற்பினையுடையாளாகிய சீதாபிராட்டியிருந்த இடத்தினகண், அணுகினன் - கிட்டினன்.

குறிப்பு—ஆமை தன் தலைமுதலிய உறுப்புக்களை ஓட்டுக்குள் அடக்கிக்கொள்வதுபோலத் தன் இருபதுகைகளையும் பத்துத்தலைகளையும் உள்ளடக்கி முனிவேடங்கொண்டானென்னலுமாம்; அருந்ததி - உவமவாகுபெயர். (௨௩)

தோமறு சாலையின் வாயிற் றுன்னினா
னாமுதற் குழறிட நடுங்குஞ் சொல்லினன்
யாவிர் இவ் விருக்கையு ளிருந்து ளீரென்றான்
றேவரு மருள்கொளத் தெரிந்த மேனியான்.

இ-ள் தேவரும் மருள்கொள தெரிந்தமேனியான் - தேவர்களும் மயக்கங்கொள்ளும்படி காணப்பட்ட (முனிவேடங்கொண்ட) உடலினையுடையானாகிய இராவணன், தோம் அறு சாலையின் வாயில் துன்னினான் - குற்றமற்ற பன்னசாலையின் வாசலில் நெருங்கினவனும், நா முதல் - நாக்குமுதலிய உறுப்புகள், குழறிட நடுங்கும் - குழறும்படி நடுங்குகின்ற, சொல்லினன் - சொல்லினை யுடையவனுமாகி, இ இருக்கையுள் இருந்து உள்ளீர் - இந்த இடத்தில் தங்கியிருக்கிற நீர், யாவிர் என்றான் - யார்? என்று வினவினான். (௨௪)

தோகையு மிவ்வழித் தோமில் சிந்தனைச்
சேக்அறு நோன்பின ரென்னுஞ் சிந்தையாள்
பாகியல் கிளவியாள் பவளக் கொம்பாபோன்
றேகுமி னீண்டென வெதிர்வந் தெய்தினாள்

இ-ள் தோகையும் - சீதாபிராட்டியும், இ வழி - இந்த இடத்திலிருக்கிற, சிந்தனை சேக்கு அறு - மனவயிரம் நீங்கிய, தோம் இல் - குற்றமில்லாத, நோன்பினர் - தவத்தினையுடையார், என்னும் - என்று கருதும், சிந்தையாள் - மனத்தினையுடையாளும், பாகு இயல் கிளவியாள் - தேம்பாகு போன்ற சொல்லினையுடையாளுமாகிய சீதாபிராட்டி, பவளம் கொம்பாபோன்று - பவளக்கொம்பை ஒத்து, ஏகும் - (விண்ணினகண்) செல்கின்ற, மின் - மின்னல், என - என்று கூறும்படி, ஈண்டு - இவ்விடத்தில், எதிர்வந்து எய்தினாள் - (அக்கள்ளத்தவவேட ராவணனுக்கு) எதிரில் வந்து அடைந்தாள்.

குறிப்பு—தோகை--மயிற்றோகை இது மயிலுக்கு ஆகுபெயராய மயில் பிராட்டிக்கு ஆகுபெயராயிற்று, இருமடியாகுபெயர். எதிர் வந்தெய்தினாள் என்றதற்கேற்ப மயில்போலும் நடையினையுடையாளென விரித்தல் சிறப்புடைத்தாம் மின் நீண்டென என்று பிரித்து மின்னல் படர்ந்ததெனக்கொளினு மமையும். (௨௫)

வெறபிடை மதமென வியர்க்கு மேனிய
னறபினிற் றிரைபுர ளாசை வேலையன்
பொறபினுக் கணியினைப் புகழின் சேக்கைபைக்
கறபினுக் கரசியைக் கண்ணி னோக்கினான்.

இ-ள். வெறபு இடை மதம் என-யானையினிடத்து மதம் ஒழுகுதல்போல, வியர்க்கும் மேனியன் - வியர்வையுண்டாகின்ற உடலினையுடையானும், அறபினில் - அன்பினில், திரை புரள் - அலை புரளுகின்ற, ஆசைவேலையன் - ஆசையா

கிய கடவினையுடையானுமாகிய இராவணன், பொற்பினுக்கு அணியினை - அழகுக்கு அழகானவளை, புகழின் சேக்கையை - புகழுக்கு இருப்பிடமானவளை, கற்பினுக்கு அரசியை - கற்புக்குத் தலைவியை [சீதாபிராட்டியை], கண்ணின் நோக்கினான் - (தன்) கண்களாற் கண்டான்.

குறிப்பு—வெற்பு - உவமவாகுபெயர். அன்பு - அற்பு எனவிகாரம். இராவணனது நிஜரூபத்துக்கு வியர்வையும் ஆசையும் அன்பும் பெருகிற்றென்பது தோன்ற 'வெற்பிடை மதமென' என்றார். அடிக்கடி அன்புண்டாதல் பற்றி அதனைத் திரையாகவும் அதிகரித்த ஆசைக்கு எல்லையில்லாமைபற்றி அதனைக் கடலாகவும் உருவகஞ்செய்தார். அன்பாவது-மனைவியர் கணவன் தாய் தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின் கண்ணும் மகிழ்ச்சி நிகழ்த்திப் பிணிப்பித்து நிற்கும் உள்ளநெகிழ்ச்சி. இவ்வழகுக்கு மேலான அழகு இல்லை யென்பதும் இவ்வழகைக்கண்டு காமுற்ற பாதகனால் தீண்டப்பட்டு மாசுபெறுத லில்லாததென்பதும் விளங்க 'பொற்பினுக்கணியினை' என்றார். இனிப்பிராட்டி சிறைவைக்கப் பட்டாலும் தன் உறுதியினால் கற்பு நிலைவழாமலிருந்து மரபுக்குப் புகழையுண்டாக்குவாளாதலின் 'புகழின் சேக்கையை' என்றார். இராவணன் குலமனைத்தும் நாசமாதற்குப் பிராட்டியின் கற்பே காரணமாயிருக்கின்றதென்பது தோன்ற 'கற்பினுக்கரசியை' என்றார். ஈண்டு, "அரக்க ரென்னுங், கானஞ்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணிற் கண்டான்" எனக்கீழ்க்கூறியது நோக்கற்பாலது. (உ௬)

தூங்கலி னுருவினைச் சொல்லி னும்பரு
மோங்கிய வழகினா ளுருவங் காண்டலு
மேங்கினன் மனநிலை யாதென் றுன்னுவாம்
வீங்கின மெலிந்தன வீரத் தோள்களே.

இ - ள். தூங்கலின் உருவினை சொல்லின் - சோம்பலையுடைய ரூபத்தைக் கூறினால், உம்பரும் ஓங்கிய அழகினாள் - தேவலோகப் பெண்களைப்பார்க்கிலும் சிறந்த அழகினையுடையாளாயினாளது, உருவம் காண்டலும் - ரூபத்தைக்கண்டவளவில், ஏங்கினன் - ஏக்கமுற்ற இராவணனது, மனம் நிலை யாது என்று உன்னுவாம் - மனத்தின் தன்மையானது எத்தன்மைத்தென்று நினைப்பாம், வீரம் தோள்கள் - (அவனுடைய) வலிமைபொருந்திய புயங்கள், வீங்கின - (முதலிற்) பருத்தன, மெலிந்தன - (பின்னர்) இளைத்தன.

குறிப்பு—விசனத்தால் பிராட்டியின்முகம் வாடியிருந்தமைபற்றி 'தூங்கலினுரு'வென்று கூறப்பட்டது. பிராட்டியினது காட்சிகண்ட சந்தோஷத்தாலும் தடையின்றி யெடுத்துச் செல்லுதற்குத் தனித்திருப்பதா லேய்ந்த மகிழ்ச்சியாலும் வீங்கினபுயங்கள் பின்னாகக் காமவிகாரத்தால் மெலிந்தன எனக் "ஒருக்கணத் திரண்டு கண்டே னொளிமணி யாழியானற், றிருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலுஞ் செல்வ நின்பால், விரகமென் பதன்கண் வந்த வெங்கொழுந் தீயினால்வெந், துருகி யதுடனே யாறி வலித்தது குளிர்ப்புளூற" என்னுஞ் சுந்தரகாண்டச் செய்யுளையீண்டு நோக்குக. (உ௭)

புனமயிற் சாயலி னெழிலிற் பூந்தைச்
சுனைமடுத் துண்டிசை முரலுந் தும்பியி

னினமெனக் களித்துள தெனப தென்னவன
மனமெனக களிததது கணணின மாலையே.

இ - ள். அவன கணணினமாலை - அநத இராவணனுடைய கண்களின் வரிசையானது, புனம மயில சாயலின எழிலில் - காட்டிலுள்ள மயிலபோனற சாயலாளாகிய சீதாபிராட்டியினது அழகினிடததே, பூநறை சுனைமடுதது உணடு - புஷ்பஙகளிலுள்ள தேனினது ஊறறினிடததே வாயவைதது உணடு, இசைமுரலும - இராகமபாடுகினற, தும்பியின இனம என - வணடுககூடடஙகளைபபோல, களிதது உளது எனபது என - சநதோஷிததிருககினறது என்று கூறுவதால யாதுபயன? அவன மனம என களிததது - அவனது மனங களிபபுறறதுபோலக களிபபினையடைநதது,

குறிபபு.—"சாயன மெனமை" என்த தொல்காப்பியனுர் பொருபபடச் சூத்திரஞ்செய்தது ஐமபொறியால நுகரு மெனமையெல்லா மடஙகறகு. "மயிலன்ன சாயல," "சாயன மாாபு" என ஒளிக்கும் ஊறறிறகும வநதன, பிறவுங்காணக சாயல ஆகுபெயராயப பிராட்டியை யுணாததியது, "ஏஙகொத திருநத முலையினனமிா தன்ன சாயல், வேஙகற கமுதாய விளையாடுதற கேது வாமே" எனனுஞ் சிந்தாமணியின பதிகசசெயயுளில சாயல் பெணணுககு ஆகுபெயரானமை காணக. சுனை-நீருறறு, நீாிருககுமிடம தேனின மிகுதிதோனற 'நறைசசுனை' எனப்பட்டது. இனி, சுனையிலுள்ள பூநறை மடுததுணடு எனக கோடலுமாம இராவணனுடைய மனமானது ஈணடு மிகவுங களிபபுறறுக களிததததனமையி லுயாநதமைபபறறியும எபபோதும அவவழகைகினைதது விடாது களிககுமெனபது பறறியும அமமனததை உவமைப்பொருளாககினறா. வண்டினஙகள மதுவுணகையினமடடுஞ சிறிது களிதது பினனா மலரைமறநதேகுஞ் செயலினவாகலின அவறறை யிகழநதாா இனி, சூாபபநகை பிராட்டியினழகை யெடுததுக கூறியகாலதது அவன மன மெவ்வாறு களிப்புறறதோ அதுபோலக காடசிகணட கணகளுங களிப்புறறன என விரிததலுமாம. (உ௮)

சேயிதழத தாமரைச சேககை தீாநதிவண
மேயவண மணிநிற மேனி காணுதற
கேயுமே யிருபதிங கிமைபபி ளுடடஙக
ளாயிர மிலலையென றலல லெய்தினன.

இ - ள் சே இதழ் தாமரை சேககை தீாநது - சிவநத இதழ்களையுடைய தாமரைமலராசனததை விட்டு, இவணமேயவள - இஙகு (வநது) சோநதவளது, மணி நிறம மேனிகாணுதறகு - (செய்ய மாணிககமெனனும) இரததினம போலும நிறததினையுடைய இததிரு மேனியைப்பாாப்பதறகு, இருபது எயுமே- (இமைபபுள்ள எனது கணகள்) இருபதும பொருநதுமோ? [பொருநதா], இமைப்பு இல காட்டஙகள ஆயிரம் இலலை என்று - இமைததலிலலாத கணகள ஆயிரம இல்லையே என்று, அலலல எயதினன - துனபததையடைந்தான

குறிப்பு —ஏயுமே, ஏகாரம - எதிாமறை. இஙகு - அசை. (உ௯)

அரைகடை யிடடமுக கோடி யாயுவும
புரைதபு தவததினயான் படைதத போதுமே

நிரைவளை முன்கையிற் நின்ற நங்கையின்
கரையறு நன்னலக் கடற்கென் றுன்னினான்.

இ - ள். நிரைவளை முன்கை - வரிசைபொருந்திய வளையல்களையணிந்த முன் கையினையுடையாளாகிய, இ நின்ற நங்கையின் - (இங்கே) நின்ற இச்சசிறப்புடைய பெண்ணினது, கரை அறு - எல்லை அற்ற, நல நலம் கடற்கு - நல்ல இன்பமாகிய கடலைக்கடக்கும் பொருட்டாக, புரைதபுதவத்தின் - குற்றமற்றதவத்தினாலே, யானபடைத்த - நான அடைந்த, அரைகடை இட்ட முக்கோடி ஆயுவும் - அரை என்னும் எண்ணைக்கடையிற் சேர்த்த மூன்றுகோடி (மூன்றரைக்கோடி) வயதும், போதுமே - போதுமோ? [போதாது], என்று உன்னினான் - என்று நினைத்தான்.

குறிப்பு — நிரைவளை முன்கை - அன்மொழித்தொகை முன்கை - முன்னங்கை, கெண்டைக்கை, முழங்கையின் கீழிருக்கும் கை (௩௦)

தேவரு மவுணருந் தேவி மாரொடுங்
கூவல்செய் தொழிலினா குடிமை செய்திட
மூவுல கமுமிவா முறையி னாளயா
னேவல்செ துயகுவெ னினியென றுன்னினான்.

இ - ள் தேவரும் - தேவர்களும், அவுணரும் - அசுரர்களும், தேவிமாரொடும் - (தம) மனைவிகளோடும், கூவல்செய் தொழிலினா - கூப்பிடப்படுகின்ற வேலைக்காரர்களாய், குடிமை செய்திட - குடிமக்களின் தொழிலைச்செய்து வாழும்படி, மூவுலகமும் - திரிலோகங்களையும், இவா—, முறையின் ஆள - நீதியாக அரசாட்சிசெய்ய, யான - நான, இனி—, ஏவல் செய்து உயகுவென - (இவர் எனக்கு) ஏவும் வேலையைச்செய்து வாழ்வேன, என்று உன்னினான் - என்று நினைத்தான. ()

உளைவுறு துயரமுகத் தொளியி தாமெனின
முளையெயி றிலங்கிடு முறுவ லெனபடுந
தளையவிழ் குழலிவட் கண்டு தந்தவெ
னிளையவட் களிப்பெனென னரசென றெண்ணினான.

இ - ள். உளைவு உறுதுயர முகத்து ஒளி இது ஆம எனின - மனோவாலுற்ற கிலேசம்பொருந்திய முகத்தினது பிரகாசமே இத்துணைச் சிறப்பினது ஆகும் என்று கூறினால், முளை எயிறு இலங்கிடும் முறுவல எனபடும் - தோன்றும் பற்கள் ஒளிசெய்கின்ற நகைப்பு எத்தன்மைத்தாகுமோ? தளை அவிழ குழல இவள கண்டு தந்த - கட்டவிழ்ந்த கூந்தலையுடைய இப்பெண்ணைப்பார்த்து (வந்து எனக்குக்) கொடுத்த, என இளையவட்கு - எனது தங்கையாகிய சூர்ப்பநகைக்கு, என அரசு - எனது அரசினை, அளிப்பென என்று எண்ணினான - கொடுப்பேன என்று நினைத்தான

குறிப்பு.—உறுதுயர் - மிக்க துயரமுமாம். உளைவால துயருறுமுகம் எனக்கொள்ளலுமமையும். முளை எயிறு - மகிழவுவந்தகாலத்து வெளிப்படும் பற்கள் இனிமுளைபோலச் சிறிது வெளிப்பட்ட பற்களென்று புன்னகைக் குறிப்பாகக்கொள்ளலுமமையும் தளையவிழகுழல என்றது நாயகன் பிரிவைக்குறித்தற்கு. இப்பெண்மணியைக்

கண்டுவந்து சொன்ன உபகாரத்துக்குப் பிரதியுபகாரமாகத் தன் அரசைத் தன் தங்கைக்குக் கொடுக்க நினைத்தானென்க. (௬௨)

ஆண்டையா னனையன வுன்னி யாசைமேன்
மூண்டெழு சிந்தனை முறையி லோன்றனைக்
காண்டலுங் கண்ணினீர் துடைத்த கற்பினா
ளீண்டெழுந் தருளுமென் றினைய கூறினாள்.

இ - ள். ஆண்டையான் - அவ்விடத்து முனிவேடங்கொண்டு நின்றவனாகி, அனையன உன்னி - அத்தன்மையான விஷயங்களை நினைத்து, ஆசைமேல் மூண்டு எழு சிந்தனை - ஆசையானது மேலே யதிகரித்து எழுகின்ற மனத்தினையுடைய, முறையிலோன்றனை - ஒழுக்கமற்ற ராவணனை, காண்டலும் - கண்டவளவில், கண்ணின் நீர் துடைத்த கற்பினாள் - (தன்) கண்களிலிருந்தொழுகும் நீரைத் துடைத்துக்கொண்ட கற்பினையுடைய சீதாபிராட்டியார், ஈண்டு எழுந்தருளும் என்று - இவ்விடத்தே (நீவிர்) எழுந்தருளுவீராக என்று, இனைய கூறினாள் - இத்தகைய உபசாரவார்த்தைகளைச் சொன்னாள்.

குறிப்பு — ஆண்டையான் - அவ்விடத்தான். (௬௩)

ஏத்தினா ளெய்தலு மிருத்தி ரீண்டென
வேத்திரத் தாசனம் விதியி னல்கினாள்
மாத்திரித் தண்டயல் வைத்த வஞ்சனும்
பூத்தொடா சாலையி னிருந்த போழ்தினே.

இ - ள். ஏத்தினாள் - இங்ஙனம் உபசாரமொழிகளைப் புகன்ற சீதாபிராட்டி, எய்தலும் - (கூடிய இடத்தை அவன்) அடைந்தவளவில், ஈண்டு இருத்திர் என - இவ்விடத்தில் வீற்றிருக்கக் கடவீர் என்று, வேத்திரத்து ஆசனம் - பிரம்பாற்செய்யப்பட்ட ஓராசனத்தை, விதியின் நல்கினாள் - (முனிவரை உபசரிக்கவேண்டிய) விதியின்படி யளித்தாள், மா திரி தண்டு - பெருமைபொருந்திய திரிதண்டத்தை, அயல் வைத்த - (தான் வீற்றிருந்த இடத்துக்குப்) பக்கத்தே வைத்த, வஞ்சனும் - பொய்வேடத்தானாகிய அவ்விராவணனும், பூ தொடா - மலர்களைத்தொடாத [புஷ்பங்களா லலங்கரித்துள்ள], சாலையின் இருந்த போழ்தின் - அந்தப் பன்னசாலையில் இருந்த பொழுதில். (௬௪)

நடுங்கின மலைகளு மரனு நாவவிந்
தடங்கின பறவையும் விலங்கு மஞ்சின
படங்குறைந் தொதுங்கின பாம்பும் பாதகக்
கடுந்தொழி லரக்கனைக் காணுங் கண்ணினே.

இ - ள். நடுங்கின மலைகளும் மரனும் - நடுங்கிய மலைகளும் மரங்களும், நா அவிந்து அடங்கின பறவையும் விலங்கும் - பேச்சொழிந்து அடங்கிய பறவைகளும் மிருகங்களும், அஞ்சின - பயந்தன, பாம்பும் - நாகங்களும், பாதகம் - கொடும் பாவமாகிய, கடுந்தொழில் - கொடிய செய்கையையுடைய, அரக்கனை - இரா

ககதனாகிய இராவணனை, காணும் கண்ணின - பார்க்கின்ற கண்ணினால், படம் குறைந்து - படத்தைச் சுருக்கிக்கொண்டு, ஒதுங்கின - விலகிப்போயின.

குறிப்பு — இவ்விராவணன் வரும்போது இவனது வேகத்துக்காற்றாமல் மலைகளும் மரங்களும் நடுங்கினவென்றும், காமுகனாய்ப் பட்சிகளின் தொனியில் வெறுப்புற்றதன்மையாலும், தன்னுயிர்போல் மன்னுயிரைப்பாவிக்குந் தயவில்லாத தறுகண்ணனாதலாலும் மாரீசனை மானுருக்கொள்ளச் செய்து மானினத்துக்கு ஓர் பழி யுண்டாக்கியதாலும் பறவையும் விலங்கும் நாவவிந்து அடங்கின என்றுங் கூறுக. இத்தன்மையாய் நடுங்கின மலைகளும்மரங்களும் அடங்கிய பறவையும் விலங்கும் இவ்விராவணனது வஞ்சகத்தால் என்னகேடு விளையுமோ வென்றஞ்சின வெனக் கட்செவியாகிய நாகங்கள் இக்கொடியோனைப்பார்த்து வருந்திய கண்களை மீண்டுங் காதெனக்கொண்டு இவன் கூறுங்கொடியவார்த்தைகளைக்கேட்டு இன்னலுறுதலினுங் கேளாதொழிதலே நன்றெனக்கருதிச் சென்றனவென்பது தோன்ற 'காணுங்கண்ணின் ஒதுங்கின' என்றார். முதலிரண்டடிகளிற் பெயரெச்சமாகக்கொண்ட நடுங்கின, அடங்கின என்பவற்றை வினைமுற்றாகக்கொண்டு கூறுதல் அமையும் எனினும் அது இத்துணைச்சிறப்பிற்றன்றாம். (௩௫)

இருந்தவன் யாவதிவ் விருக்கை யிங்குறை
யிருந்தவ னியாவனீ ராரை யென்றலும்
விருந்தின ரிவ்வழி விரகி லாரெனப்
பெருந்தடங் கண்ணவள் பேசன் மேயினாள்

இ - ள். இருந்தவன் - (வேத்திரத்தாசனத்து வீற்)றிருந்த கள்ளத்தவவேடராவணன், இ இருக்கையாவது - இந்த இருப்பிடம்யாது? இங்கு உறை இரும் தவன் யாவன் - இவ்விடத்து வசிக்கின்ற பெரிய தவத்தினையுடைய முனிவன் எவன்? நீர் யார் ஐ - நீர் எவருடைய அரசி? என்றலும் - என்று வினவியவளவில், இ வழி விருந்தினர் - இவ்விடத்திலிருக்கிற இப்புதியவர், விரகு இலார் என - அறிவில்லாதவரென்று, பெரும் தடம் கண்ணவள் - பெரிய விசாலமான கண்களையுடைய சீதாபிராட்டி, பேசல்மேயினள் - பேசத்தொடங்கினள்,

குறிப்பு — விரகு இலார் - (தம்மை இத்தன்மையார் என்று) அறிந்திலாதவர், விரகு - அறிவு, "விரகறியாளர்" [புறப்பாட்டு ௨௬௬] அறிவில்லாத மூடனென்பபொருள் கொள்ளுமாறும் நின்றது வியக்கற்பாலது. இனி, விரகு விரகம் என்பதன் விகாரமெனக்கொண்டு காமமுதலியவை யில்லாதவர் என்னலுமாம். நாணித் தலைவணங்கி நில்லாது அவனைச் செம்மையாய்ப் பார்த்துப் பேசினளென்பார் 'பெருந்தடங் கண்ணவள் பேசன் மேயினள்' என்றார். நீர் ஆரை என்பதற்கு நீவிர் எவரெனப் பொருள்கூறி ஐ சாரியை யென்றலுமொன்று. (௩௬)

தயரதன் றொல்குலத் தலைவன் றம்பியோ
டயோகுலத் தன்னைசொல லுச்சி யேந்தின
னயாவில திவ்வழி யுறையு மன்னவன்
பெயரினைத் தெரிகுதிர் பெருமை யீரென்றாள்.

இ - ள். பெருமையீர் - பெருமை பொருந்தியவரே! தயரதன் தொல்குலம் தலைவன் - தசரதச்சக்கரவர்த்தியினது பழமையான (சூரிய) குலத்துக்கு முதன

மையானவர், தம்பியோடு - (தனது) தம்பியாகிய இலட்சுமணனுடனே, உயர் குலத்து அன்னைசொல் - உயர்ந்த (கேகய) குலத்திற் பிறந்த (சிறிய) தாயாரின் வார்த்தையை, உச்சி ஏந்தினன் - தலையில் தாங்கினவர், அயர்வு இலது - சோர்வு இல்லாமல், இவ்வழி உறையும் - இவ்விடத்தில் தங்கியிருக்கின்ற, அன்னவன் பெயரினை - அத்தன்மையானவரது திருநாமத்தை, தெரிகுதிர் என்றனள் - அறிவீர் என்று கூறினாள்.

குறிப்பு — இவர் தம்மை யறியாதாராயினும் தம்மைச்சரணமடைந்த முனிவர் கூட்டத்தைச்சேர்ந்தவராதலால் தனது நாயகன் பெயரைக் கேள்விப்பட்டிருப்பார் என்னுந்துணிபினாலும், மனைவி தன் கணவன்பெயரை வாய் கூசாது எடுத்துக்கூறுத லபசாரமாகலானும் 'அன்னவன் பெயரினைத்தெரிகுதிர்' என்றனள். ()

கேட்டனன் கண்டில னெழுவு கங்கைநீர்
நாட்டிடை யொருமுறை நண்ணி னேன்மலர்
வாட்டடங் கண்ணினீர் யாவன் மாமகள்
காட்டிடை யரும்பகல் கழிக்கின் றீரென்றான்.

இ - ள் கேட்டனன் - (நீர் சொன்னவைகளைக்) கேள்வியுற்றேன், கண்டிலன் - பார்த்தேனில்லை, கெழுவு கங்கைநீர் நாடு இடை - நிறைந்த கங்கையாற்றினது நீர் சூழ்ந்த கோசலநாட்டின்கண், ஒருமுறை நண்ணினேன் - ஒருதரம் சேர்ந்தேன், மலர் வாள் தடம் கண்ணினீர் - குவளைமலரும் வாளாயுதமும் போன்ற விசாலமான கண்களையுடையவரே! காடு இடை - காட்டின்கண், அரும்பகல் கழிக்கின்றீர் - அருமையான நாள்களைக்கழித்து வருகின்றீர், நீர் யாவன் மாமகள் - நீர் எவனுடைய பெருமைபொருந்திய குமாரத்தி? என்றான் - என்று வினவினான்.

குறிப்பு — கீழ்க்கவியிற் பிராட்டி தன்னை ஸ்ரீராமபிரானது மனைவியென்று தன் வாய்கொண்டு கூறாததால் அவளை நீர் இவ்விருக்கையி லிருப்பவனது மனைவியோ? என்று துணிந்து வினவுதல் கூடாமைபற்றியும், அன்னியனுடைய மனைவியென்பதற்குத் தன்மனம் இடங்கொடாமை பற்றியும் அங்ஙனம் வினவுதலை யொழித்து நீர் யாவன்மாமகளென்று வினவினான். இவன் இராமாவதாரத்துக்கு முன்னிட்டகாலத்திற் கோசலைநாட்டைக் கண்டானென்பது தோன்றக் கேட்டனன் கண்டிலன் என்பவற்றின் பின்னே நண்ணினேன் என்பதைவைத்துக் கூறினான். ()

அனகமா நெறிபட ரடிக ளும்மலா
னினைவதோர் தெய்வமவே றிலாத நெஞ்சினான்
சனகன்மா மகள்பெயர் சனகி காகுத்தன்
மனைவியா னென்றனள் மறுவில் கற்பினாள்.

இ - ள் மறு இல் கற்பினாள் - குற்றமில்லாத கற்பினையுடைய சீதாபிராட்டி, அனகம் மா நெறிபடர் அடிகள் - பாவமில்லாத பெருமை பொருந்திய சன்மார்க்கத்தில் நடக்கின்ற முனிவர்களாகிய, நும் அலால் - உங்களையல்லாமல், நினைவது ஓர் தெய்வம் வேறு இலாத நெஞ்சினான் - நினைப்பதாகிய ஒப்பற்ற தெய்வம் வேறே இல்லாத மனத்தினையுடையானாகிய, சனகன் மாமகள் - ஜனகமகாராஜனுக்கு (நான்) பெரியமகள், பெயர் சனகி - (எனது) பெயர் ஜானகி, யான் காகுத்தன் மனைவி - நான் காகுத்தனுக்குப் பாரி, என்றனள் - என்று கூறினாள்.

குறிப்பு—அனகம்-அகமில்லாமை. அடிகள்-கடவுள், குரு, தலைவன், முனிவர், மூத்தோன். ஜனகமகாராஜனது பெண்மக்கள் நால்வருள் மூத்தாளாதல்பற்றி 'மாமகள்' என்றான். தன்னைப்புகழ்ந்து கூறுளாதலின் யான் என்றற்கு அழகு மேன்மை யென்னும் பொருள்களைக் கூறுதல் பொருந்தாது. காகுத்தன் - ககுஸ்தன் என்னும் சூரியகுலத்தரசன் மரபிற்றோன்றியவன், தத்திதாந்தம். (௧௧)

அவ்வழி யனையன வுரைத்த வாயிழை
வெவ்வழி வருந்தினிர் விளைந்த மூப்பினி
ரிவ்வழி யிருவினை கடக்க வெண்ணினி
ரெவ்வழி நின்றுமிங் கெய்தி னீரென்றாள்.

இ-ள். அவ்வழி- அந்த முறைமையில், அனையன உரைத்த - அத்தன்மையான மொழிகளைக் கூறிய, ஆயிழை - ஆராய்ந்த ஆபரணங்களையுடையாளாகிய சீதாபிராட்டி, வெவ்வழிவருந்தினிர்-வெவ்விய (காட்டு)வழியில் (நடந்து) வருத்தமுற்றீர், விளைந்த மூப்பினிர் - முதிர்ந்த மூப்புப் பருவமுடையவராயினீர், இவ்வழி இருவினை கடக்க எண்ணினீர் - இந்தத் தவமார்க்கத்தால் (நல்வினை தீவினை என்னும்) இரண்டு வினைகளையுங் கடப்பதற்கு எண்ணமுற்றீர், எவ்வழி நின்றும் இங்கு எய்தினீர் என்றாள் - நீர் எவ்விடத்திலிருந்து இவ்விடத்தையடைந்தீர் என்று கூறினாள்.

குறிப்பு—ஆயிழை- அன்மொழித்தொகை. இருவினை - பெரியதீவினையுமாம்.

இந்திரற் கிந்திர னெழுத லாகலாச்
சுந்தர னான்முகன் மரபிற் றோன்றினா
னந்தரத் தோடெவ் வுலகு மாள்கின்றான்
மந்திரத் தருமறை வைகு நாவினான்.

இ-ள். இந்திரற்கு இந்திரன் - இந்திரனுக்கு இந்திரனாயினவன்; எழுதல் ஆகலாச் சுந்தரன் - (ஓவியத்துறைகைபோயவராலும்) சித்திரித்தற்கியலாத அழகினையுடையான், நான்முகன் மரபில் தோன்றினான் - நான்கு முகங்களையுடைய பிரமதேவனது வமிசத்திற் பிறந்தவன், அந்தரத்தோடு எவ் உலகும் ஆள்கின்றான் - தேவலோகத்துடன் எந்தவுலகத்தையும் ஆண்டுவருகின்றவன், மந்திரத்து அருமறை வைகும் நாவினான் - மந்திரங்களோடுகூடிய அரிய வேதங்கள் தங்கியிருக்கின்ற நாவினையுடையான்.

குறிப்பு—"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க், கிவ்வுலக மில்லாகி யாங்கு" என நாயனார் கூறியவாறு பொருட்செல்வமே இவ்வுலகவின்பத்திற்கு முதன்மையாயிருப்பதாலும், "எண்ணிப்பத் தங்கை யிட்டா லிந்திரன் மகளு மாங்கே, வெண்ணெய்க்குன் றெரியுற் றாற்போன் மெலிந்துபின் னிற்கு மன்றே" என்ற திருத்தக்கதேவர் கூறியவாறு பெண்களின்மனம் பொருளை விரும்புமாதலாலும் பிராட்டிக்குப் பொருளாசை விளைவிக்க 'இந்திரற் கிந்திரன்' என்றான். "தந்தையாயினுந் தம்மிற் றகவுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனு, மைந்தராயினுமிகவும் வனப்புடையா ராமாயின் மடநல்லாதனு, சிந்தைகடந்திடுமே" என்றவாறு அயலான் வனப்பினனாயின் அவன்மேல் மடவார்க்குச் சிந்தைசெல்லுமென்று கருதி 'எழுதலாக

லாசகூதரன்' என்றான ராக்ஷஸனென்று இகழாது, தளளாத உயாகுலததானென்று கருதுமாறு 'நானமுகன மாபிற ஞனறினன்' என்றான உள்ளநாட்டைத் தமபிக குக கொடுததுவிட்டு வறியனாயக காட்டில முனிவேடங்கொண்டு திரியவனிலும எல்லாவுலகுககும அரசனாயிருப்பவன சிறப்புடையானாகு மெனபது தோனற 'அரந்தரத தோடுமெவ வுலகு மாளகினறான' என்றான. இததனை பெருமையோடு சிறநத கலவியழகுமுடையான எனபான 'அருமறை வைகு நாவினான' என்றான. (௪௧)

ஈசனாண் டிருந்தபே ரிலங்கு மாலவரை
யூசிவே ரொடும்பறித் தெடுக்கு மூற்றத்தா
னாசைகள் சுமந்தபே ரளவில யானைகள
பூசலசெய் மருப்பினைப பொடிசெய தோளினான.

இ-ள. ஆண்டு - அக்காலததில், ஈசன இருந்தபோ இலங்கு மாலவரை - சிவபிரான வீற்றிருந்த போ விளங்குகின்ற பெரிய கைலாசகிரியை, ஊசிவோ ஒடும - ஊசிபோலுள்ள கூரியவோகளோடும [அடியோடு], பறிதது எடுக்கும ஊற்றத்தான - பறிதது எடுக்கும வலிமையையுடையான, ஆசைகள சுமந்த - திசைகளைசசுமந்த, போ - பெருமையில், அளவு இல - அளவிலலாத, யானைகள - யானைகளினுடைய, பூசல செயமருப்பினை - போாசெயத கொமபுகளை, பொடிசெய தோளினான - தூளாகசசெயத புயங்களை யுடையான

குறிப்பு—ஈசனாணடிருந்த - சிவபிரான ஆட்சிசெயதிருந்த எனனுமமையும. போ—பெயா போ—பெருமையின திரிபு போளவில யானை - மிகபபெரிய யானை. (௪௨)

சிறப்பவா கடைததலை நிறைந்த தேவரே
சொற்படு மற்றவன பெருமை சொல்லுங்கால
கற்பக முதலிய நிதியங கையன
பொற்பக மானநீ ரிலங்கைப பொன்னகா

இ-ள. மற்று - மற்றும, அவன பெருமைசொல்லுங்கால - (முனனாககூறிய) அவனுடைய பெருமையைச சொல்லுமிடதது, சொல படும - வார்த்தைவிரியும, பொற்பு அகம ஆனநீா இலங்கை பொன நகா - அழகுககு இருபபிடமாகிய கடல சூழந்த இலங்கையாகிய செலவம பொருந்திய நகரததில, கடைததலை - (அவனுடைய) கடைவாசலில, நிறைந்து சிறப்பவா தேவரே - நிறைந்து சிறப்பவாகள தேவாகளேதாம, கற்பகம முதலிய நிதியம கையன - கற்பகமுதலாகிய நிதிகள (அவன) கைவசப்பட்டுளளன. (௪௩)

ஏனகை திலோததமை முதல வேழையா
வானகந துறந்துவந தவனறன மாட்சியா
லூனமி லடைபபைகால வருட லொணசெருப
பானவை முதற்றொழி லவர தாகுமே.

இ-ள. ஏனகை திலோததமை முதல ஏழையா - மேனகை திலோததமை முதலாகிய (தேவலோகநடனப்) பெண்கள, வானகம் துறந்து வந்து - விண்ணுல

கதகை நீககிவநது, அவன தனமாடசியால் - அவனுடைய மகத்துவததினாலே, ஊ னம இல - குறைபாடிலலாத, அடைப்பை - அடைபபை (யெநதிநிறறலும), கால பருடல - காலைததடவிப பிடிததலும, ஒண செருபபு ஆனவை - அழகிய செருப் பானவைகளைச சுமததலுமாகிய, முதல் தொழில - முதனமையாகிய வேலைகள, அவ ரது ஆகும - அவாகளுடையன ஆகும

குறிபபு.—ஏனகை—மேனகை, முதல ஏழையா எனறது - அரமபை உருப பசியெனனும இவரை "உருபபசி யுடைவா ளெடுததன டொடர மேனகை வெள ளடை யுதவச, செருபபினைத தாஙகித திலோததமை செலல வரமபையா குழாப புடை சுறற" எனனும சுந்தரகாண்டசசெயயுள ஈணடு நோககறபாலது. அடைப பை - வெறறிலைபபை, அடை - இலை அவரதாகும எனவே ஏனையோாக கெயதா எனபதாயிறறு. (௪௪)

சநதிர னிரவியென பவாக டாமவன
சிநதனை வழிநிலை திரிவா தேசுடை
யிநதிரன முதலிய வமர ரீணடவன
கநதடு கோயிலின காவ லாளரே.

இ - ள. சநதிரன இரவி எனபவாகள - சோமன சூரியன எனனும இவாகள, அவன சிந்தனைவழி - அநத ராவணனுடைய மன நினைபபினபிரகாரம, நிலை திரியா - தஙகள இயறகைநிலைமை மாறுவாாகள, தேசு உடை - அழகினையுடைய, இநதிரன முதலிய அமரா - இநதிராதி தேவாகள, ஈணடு - இநத இலஙகாபுரியில, அவன - அவனது, கம தடு கோயிலின காவல ஆளா - மேகமணடலததை மூடுகினற (உன னதமான) ராஜமாளிகையில காககும தொழிலைச செயயும ஆளகளாவாாகள

குறிபபு—கநது அடு கோயில எனககொணடு - கடடுததறியடுதத கோயில, எனனுமாம, [யானைகளைக கடடியிருககிற இடம]. கோ + இல - கோயில, இலக கணபபோலி (௪௫)

பொனனக ரததினும பொலஙகொ ணாகாதந
தொனனக ரததினுந தொடாநத மாநிலத
தெநநக ரததினு மினிய வீணடவ
னனனக ரததன நவையி லாதன.

இ - ள. பொன நகரததினும-பொனமயமான (தேவாவசிககும) நகரததிலும, பொலஙகொள நாகாதம தொல் நகரததினும - அழகுபொருநதிய சாபபசாதியாரு டைய பழமையாகிய நகரததிலும, மாநிலதது தொடாநத - பெரிய பூமியில தொட ாசசியாயுளள, எ நகரததினும - எநத நகரஙகளிலுமுள்ள, இனிய - இனிமையான வைகள [அபூாவமான பொருளகள], ஈணடு - இபபொழுது, அவன நல நகரததன- அவனுடைய நலல நகரமாகிய இலஙகையிலுளளன, நவை இலாதன - (அவைகள) குறறமிலலாதவைகள.

குறிபபு.—நகரம - பெரிதான படடினம், ராஜமாளிகையுமாம. (௪௬)

தாளுடை மலருளான றநத வநதமி
ஞளுடை வாழககைய ஞரி பாகததன
வாளுடைத தடககையன வாரி லைவததவெங
கோளுடைச சிறையினன் குணஙகண மேனமையான.

இ - ள. தாள உடை மலா உளான தநத - பூநதணடிஙீயுடைய தாமரைமல ரிலிருபபவனுகிய பிரமதேவன கொடுதத, அநதம இல நாள உடை வாழககையன- முடிவில்லாத ஆயுள நாளிஙீயுடைய வாழவிஙீயுடையவன, நாரிபாகததன வாள உடை தடம கையன - உமையவஙீ யிடபபாகததில வைததுளளவனுகிய சிவபிரா னது வாஙீயேநதிய பெரியகையிஙீ யுடையவன, வாரிவைதத - பிடிதது அடை ததுவைதத, கோள உடை - நவககிரகஙகஙீயுடைய, வெம சிறையினன - கொ டிய சிறைசசாலையையுடையவன, குணஙகள மேனமையான - சகலநறகுணஙகளா லும மேனமையையுடையவன

குறிபபு —நாரி - பெண (௪௭)

வெமமைதீ ரொழுக்கினன விரிநத கேளவியன
செமமையோன மனமதன றிகைககுஞ செவவிய
னெமமையோ ரஙீவரு மிறைவ ரெனறெணு
மும்மையோா பெருமையு முறறும பெறறியான.

இ - ள. வெமமைதீா ஒழுககினன - வெவவியதனமைநீஙகிய ஒழுககததையு டையவன [நலலொழுககமுடையவன], விரிநத கேளவியன - மிகுநத (தருமநூல களி னுடபஙகஙீயெலலாங) கேட்டுணாநதவன, செமமையோன - நடுவுநிஙீமையு டையவன, மனமதன திகைககும செவவியன - மனமதன மயஙகுகினற பருவத தையுடையவன, எமமையோா அஙீவரும - எமமனோாகளாகிய முனிவ ரஙீவரும, இறைவா எனறு எணணும - கடவுளாகளெனறு கருதுகினற, மும்மையோா - (படைததல, அளிததல, அழிததல எனனும) மூனறு தனமைகஙீயுடையாராகிய திரிமூாததிகளுடைய, பெருமையும—, முறறும-முடிவாகினற, பெறறியான -தன மையையுடையவன

குறிபபு.—செமமை - நடுவுநிஙீமை, "ஞெமனகோ லனன செமமை தாஙகி" [மதுரைக் காஞ்சி 491] அஙீவரும - எலலாரும இறைவா -எபபொருளினுந தங கியிருபபவா எமமையோா - எமது தனமையையுடையோா. சிவபிரானிடததுத தனது வலலமையைககாட்டி மனமத னுருவிழநதான, இவவிராவணன வரஙகஙீ யடைநதா ளுதலால் 'மனமதன றிகைககுஞ செவவியன' எனறுன. (௪௮)

அஙீததுல கினுமழ கமைநத நஙகைய
ரெஙீபபல ரவனறன தருளி னிசசையோா
நிஙீததவ ருருகவு முதவ நோகிலன
மனக்கினி யாளொரு மாதா நாடுவான

இ - ள அஙீதது உலகினும - எலலாவுலகஙகளிலும, அழகு அமைநத நங கையா - இலககணம பொருநதிய சிறநத பெணகளில, எஙீ பலா - எததன்மை

யான பலபோ, அவன தனது அருளின் இச்சையோா - அவனுடைய அருளின் மேல விருப்பததையுடையாராயினோகள, அவா - (அஙஙனம விருபபமுடைய) அந நஙகையா, நினைதது உருகவும - (தனனைக) கருதி மனஙகரையவும, உதவகோ லன - (அவாகளுககுத தனனுலாகும் சுகததைத) கொடுகக உடனபடாமலிருக கின்றான, மனககு இனியாள - (தன) மனததுககு இனியவளாகிய ஒரு பெண ணினது, ஒரு - ஒபபறற, மாதா - காதலை, நாவோன - விருமபுவான

குறிப்பு — மனககு - அததுசசாரியை யொழிநத நினறது, "மாடக்குச சித்திர மும்" எனபுழிபபோல அவன விருமபிய பெணணைபபாாததானாயினும அவளமேல தான காதலுறறது போல அவள தன மேறகாதலுறுதலை எதிாபாாததுககொணடி ருககினறான எனபான 'மனககினி யாளொரு மாதா நாவோன' எனறான. முதன மூனறடிகளில எலலாவுலகினுமுளள நஙகையிற சிறநதவரையெலலாம விருமபி லான எனறமையால மாதாகளுள ஒரு மனககினியாளை நாவோன என நானகாம அடிககுப் பொருள கூறுதல சிறபபனறும அஙஙனங கூறலாமெனினே சற்றே றககுறையபபிராட்டி போனு மழகினையுடையாா பலருளரெனறேறபடும். அதனுல பிராட்டியினழகு வியப்பிறறனறுகு மெனபதறிக. (௪௬)

ஆணடையா னரசுவீற றிருநத வநநகா
வேணடியான சிலபக லுறைய வேணடினே
னீணடனெ னிருநதவற பிரிநத நெஞசினேன
மீணடனெ னெனறனன் வினைய முனனுவான.

இ - ள ஆணடையான - எசமானுகிய அவன, அரசு வீறறு இருநத - இராச சியபாரததை வகிததுப பெருமையுறறிருநத, அநநகா - அநத இலஙகைபபடடினத தை, வேணடி - விருமபி, யான - நான, சில்பகல உறைய - (அவவிடததிற) சிலகா லம வசிபபதறகாக, வேணடினேன - யாசிததேனுகி, நீணடனென இருநது - (அ ஙகு) நெடுங்காலங கழிததேனுயிருநது, அவன பிரிநத நெஞசினேன மீணடனென எனறனன - அவனைபபிரிநத (வலிய) மனததினையுடையேனுய்த திருமபினேன என்று கூறி, வினையம உனனுவான - (பிராட்டியின) கருததைக கருதுவானுயி னுன. (௫௦)

வேதமும வேதிய ரருளும வெஃகலாச
சேதனை மனனுயிா தினனுந தீவினை
பாதக வரககாதம பதியில வைகுதற
கேதுவென னுடலமு மிகையென றெணணுவீா

இ - ள. உடலமும மிகை என்று எணணுவீா - (முறறததுறநது) சரீரமும மிகுதி எனறு நினைககும முனிவரரே! வேதமும - வேதஙகளும, வேதியா அருளும - அவவேதஙகளைக கறறுணாநத அநதணாகளுடைய கிருபையும, வெஃகு அலா - வி ருமபுதறகலலாத, சேதனை மன உயிா தினனும - அறிவினையுடைய நிலைபெறற உயிர்களைததின்னுகின்ற, தீவினை - கொடியசெயகையையுடைய, பாதகம் அரககா தம் பதியில - பாவஙகளிற பயிலும இராககதாகளுடைய ஊரில, வைகுதற்கு - தங குதற்கு, ஏது என - காரணம யாது?

குறிப்பு—முற்றத்துறந்த முனிவர்க்கு உடலும் மிகையென்பது "மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க, லுற்றார்க் குடம்பு மிகை" என்னுந் திருக்குறளாலுணர்க. (௫௧)

வனத்திடை மாதவ ரருகு வைகலிர்
புனத்திரு நாட்டிடைப் புனித ரூர்புக
நினைத்திலி ரறநெறி நினைக்கி லாதவ
ரினத்திடை வைகினி ரென்செய் தீரென்றாள்.

இ-ள். வனத்து இடை மாதவர் அருகு வைகலிர் - வனத்தின்கண் மாட்சிமைபொருந்திய தவத்தினையுடையார் பக்கத்தே தங்காதொழிந்தீர், புனம் திருநாடு இடை புனிதர் ஊர்புக நினைத்திலிர் - வயல்சூழ்ந்த சிறப்புப்பொருந்திய (கோசல முதலாகிய) நாடுகளினிடத்தே பரிசுத்தம்பொருந்தியவர்களுடைய ஊர்களினிடத்துப் பிரவேசிக்க நினையாமற்போயினீர், அறம் நெறி நினைக்கிலாதவர் - தருமமார்க்கத்தைக்கருதாதவர்களாகிய இராக்கதர்களுடைய, இனத்து இடை - கூட்டத்தில், வைகினீர் - தங்கினீர், என்செய்தீர் என்றாள் - யாதுகாரியத்தைச்செய்தீர்? என்று கூறினாள். (௫௨)

வேறு.

மங்கையஃ துரைத்தல் கேட்ட வரம்பிலான் மறுவிற் றீர்ந்தார்
வெங்கணவா ளரக்க ரென்ன வெருவலம் மெய்ம்மை நோக்கிற்
றிங்களவாண் முகத்தி னாய்த் தேவிற் றீய ரல்லர்
ரெங்களைப்போ லியார்க்கு நல்லர் நிருதரே போலு மென்றான்.

இ-ள். மங்கை அஃது உரைத்தல்கேட்ட வரம்பிலான் - சீதாபிராட்டி அவ்வார்த்தையைக் கூறுதலைக்கேட்ட ஒழுங்கில்லாத இராவணமுனிவன், திங்களவாள் முகத்தினாய் - சந்திரனைப்போலும் ஒளிபொருந்திய முகத்தினையுடையாய்! மறுவில் தீர்ந்தார் - குற்றமானவழியில் நடந்தவர்கள், வெங்கணவாள் அரக்கர் - வைராக்கியத்தையும் வாளையுமுடைய இராக்கதர்கள், என்ன வெருவலம் - என்று அஞ்சமாட்டோம், மெய்ம்மைநோக்கின் - உண்மையை ஆலோசித்தால், தேவரில் தீயர் அல்லர் - தேவர்களைப்போலக் கொடியவர்கள் அல்லர், எங்களைப்போலியார்க்கு - எங்களைப்போன்றவர்களுக்கு, நிருதரே - அவ்விராக்கதர்களே, நல்லர் என்றான் - நல்லவர்கள் என்று கூறினான்.

குறிப்பு—முனிவர் வார்த்தையாடும் ஒழுங்குக்கு விரோதமாகப் பேசப் புகுந்தமையால் 'வரம்பிலான்' என்றார். மறுவில் தீர்ந்தார் - (அரக்கர்) குற்றத்தினின்றும் நீங்கினார்கள் எனப் பொருள்கோடலுமமையும். நிருதரே, ஏகாரம் - பிரிநிலை. போலும் - ஒப்பில் போலி. (௫௩)

சேயிழை யன்ன சொல்லத் தீயவர்ச் சேர்தல் செய்தார்
தூயவ ரல்லர் சொல்லிற் றொன்னெறி தொடர்ந்தோ ரென்றாள்
மாயவல் லரக்கர் வல்லர் வேண்டுரு வரிக்க வென்பத்
தாயவ ளறிதற் றேற்றா ளாதலி னயலொன் றெண்ணாள்.

இ - ள். அன்னசொல்ல - (அவன்) அத்தகைய வார்த்தைகளைக்கூற, சேயிழை - செம்மையான ஆபரணங்களையுடையாளாகிய சீதாபிராட்டியானவள், சொல்லின - சொல்லுமிடத்து, தூயவர் - பரிசுத்தமுடையவர்களாகிய, தொல் நெறி தொடர்ந்தோர்-பழமையாகிய சனமார்க்கத்தில் நடப்பவர்கள், தீயவர் சேர்தல் செய்தார் அல்லர் என்றுள் - கொடியவர்களைச் சேர்வுற்றவர்கள் அல்லர் என்று கூறினள், அவள் - அச்சீதாபிராட்டி, மாயம் வல் அரக்கர் - மாயத்தொழிலில் வல்ல இராக்கதர்கள், வேண்டு உரு வரிக்கவல்லர் என்பதாய -(தாம்) விரும்புகின்ற ரூபத்தை நியமிக்கவல்லவர்கள் என்பதாக, அறிதல் - அறிந்து கொள்ளுதலை, தேறுள-தேறப்பண்ணிக்கொள்ளும் நுட்பமில்லாள், ஆதலின் - ஆகையால், அயல் ஒன்று எண்ணுள - வேறொன்றும் நினையாளாயினள்.

குறிப்பு —ஆய அவள் எனப்பிரித்து உலகமாதாவாகிய அவள் எனப்பொருள் கொள்ளுமமையும். (ருச)

அயிர்த்தன ளாகு மென்றோ ரையுற வகத்துட் கொண்டான்
பெயர்த்தது துடைக்க வெண்ணிப் பிறிதுறப் பேச லுற்றான்
மயக்கறு மூலக மூன்றின் வாழ்பவர்க் கனைய வல்லோ
ரியற்கையிற் றிரியி னல்லா லியற்றலா நெறியென் னென்றான்.

இ - ள் அயிர்த்தனள் என்று - சந்தேகமுற்றாளென்று, ஓர் ஐயுறவு அகத்துள் கொண்டான் - ஒரு சந்தேகத்தை மனத்திற்கொண்டானுகி, பெயர்த்து - மறுபடியும், அது துடைக்க எண்ணி - அச்சந்தேகத்தை நீக்கிவிடக்கருதி, பிறிது உறப்பேசல் உற்றான் - வேறுவிதமாகப் பேசத்தொடங்கினன், மயக்கு அறும் - மயக்கம் ஒழிவீராக, அனையவல்லோர் - அத்தகைய வல்லமையையுடைய அரக்கர்கள், இயற்கையின் திரியின் அல்லால் - (யாவரும் தத்தம்) இயல்பில் மாறுபட்டால் அல்லாமல், உலகம் மூன்றின் வாழ்பவர்க்கு - திரிலோகங்களிலும் வாழ்ந்துவருபவர்களுக்கு, இயற்றல் ஆம் நெறி என் என்றான் - (நீங்கு) செய்தற்காகிய வழி யாது? என்று கூறினன் (ருரு)

திறந்தெரி வஞ்ச னச்சொற் செப்பலுஞ் செப்ப மிக்கா
ளறந்தரு வள்ள லீண்டிங் கருந்தவ முயலு நாளுண்
மறந்தலை திரிந்த வாழ்க்கை யரக்கர்தம் வருக்கத் தோடு
மிறந்தனர் முடிவர் பின்ன ரிடரிலை யுலக மென்றாள்.

இ - ள் திறம் தெரிவஞ்சன - (பிராட்டியினமன) வலிமையை யறிகின்ற வஞ்சகனாகிய அவ்விராவண முனிவன், அ சொல் செப்பலும் - அந்த வார்த்தையைக் கூறிய வளவில், செப்பம் மிக்காள் - செவ்விய வழியில் அறிவுடையாளாகிய சீதாபிராட்டி, அறம் தரு வள்ளல் - (உலகோர்க்கு) தருமத்தை (நிலைபெறச்செய்து) தருகின்ற வள்ளன்மையுடையவர் [ஸ்ரீராமபிரான்], ஈண்டு - இவ்விடத்து, அருந்தவம் முயலும் நாளுள் - அரியதவத்தைச் செய்கின்ற நாள்களுக்குள்ளே, மறம் தலைதிரிந்த வாழ்க்கையர் - பாவத்தினகண் அலைந்த வாழ்வினையுடையாராகிய, அரக்கர் - இராக்கதர்கள், தம் வருக்கத்தோடும் இறந்தனர் முடிவர் - தமது கூட்டத்தோடும் இறந்தொழிவார்கள், பின்னர் - பின்பு, உலகம் - நம்மக்களுடைய ஒழுக்கத்துக்கு, இடர் இலை என்றாள் - இடையூறில்லையென்று கூறினள்.

குறிப்பு —செப்பம் - செவ்வழி, "சேந்த செயலைச் செப்பம் போகி" [மலைபடு கடாம் 160.] பாவத்தைத்தொலைத்துத் தருமத்தை நிலைபெறச்செய்யும் கோட்பாடு டையவர்களாதலின் 'அறந்தருவள்ளல்' என்றான். "ஒன்று நோக்கல் குணவலி யோ னைகறன், நின்று நோக்கி நிறுத்து நினைப்பினார்" என்னும் கரனவதைப்படலச் செய யுளை யிணடுநோக்குக இனி, தரு எனபதை உவமவாசகமாகக்கொண்டு தரும தேவதைபோன்ற வள்ளலென்னலுமாம். இங்கு - அசை மறந்தலை, தலை - ஏழ னுருபு உலகம் - நன்மக்கள் ஒழுக்கம், "உலகந் திரியா வோங்குயா விழுச்சீர்" [மணிமேகலை, விழாவறைகாதை, 1] இனி, உலகம் - நன்மக்களுமாம்; "உலகம புகழ்ந்த வோங்குயா விழுச்சீர்," [திருமுருகாற்றுப்படை 124] மற்றும், உலகம் எனலை இடவாகுபெயராகக்கொண்டு உலகிலுள்ளவர்களுக்கு என்னலுமமையும். ()

மானவ ளுரைத்த லோடு மானிட ராக்கா தம்மை
மீனென மிளிருங் கண்ணாய வேறற வெல்வ ரென்னின
யானையி னினத்தை யெல்லா மிளமுயல் கொல்லும் பின்னும்
கூனுகிர் மடங்கல் லேற்றைக் குருளைமான் கொல்லு மென்றான்.

இ - ள். மானவள் உரைத்தலோடும் - சீதாபிராட்டி (அவ்வாறு) கூறியவள் வில, மீன் என மிளிரும் கண்ணாய - மீன்போல விளங்குகின்ற கண்ணினையுடை யாய்! மானிடர் வேர் அற அரக்கர்தம்மை வெல்வர் எனின் - மனிதர்கள் அடி யோடு தொலையும்படியாக இராக்கதர்களை வெல்லுவார்கள் என்று கூறினால், இளம முயல் - முயற்குருளையானது, யானையின இனத்தை எல்லாம் கொல்லும் - யானை யினுடைய கூட்டத்தை முழுதும் கொல்லும், பின்னும்—, குருளைமான் - மான் கன் று, கூன் உகிர் மடங்கல் ஏற்றை - வளைவாகிய நகங்களையுடைய ஆண்சிங்கத்தை, கொல்லும் என்றான் - கொன்றுவிடும் என்று கூறினான்

குறிப்பு —மானவள் என்னும் பதத்திற்கு மாரீசன்வதைப் படலத்தி லுரைகூ றியுள்ளாம் மீன் - சேல் "மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற, பார்ப்பும் பறழுங் குட்டியுங் குருளையுங், கன்றும் பிள்ளையு மகவு மறியுமென், றொன்பதுங் குழவியோ டிளமைப் பெயரே" "நாயே பன்றி புலிமுய னான்கு, மாயுங் காலைக் குருளை யெனப" என்ற தொல்காப்பிய மரபியல் விதிகளின்படி 'இளமுயல்' என் றது முயற்குருளை என்று கூறினும் வலிமைபொருந்திய ஆண்சிங்கமென்பது விள ங்க 'மடங்கலேறு' எனப்பட்டது, "ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லா, மேற்றைக் கிளவி யுரித்தென மொழிப" என்றார் தொல்காப்பியனார். மேற்கூறிய 'நாயேபன்றி" என்னுஞ் சூத்திரத்து மானின் இளமைக்குக் குருளைப் பெயர்கொ டை கொடுத்திலரேனும் அச்சூத்திரத்துள் ஆயுங்காலை என்றமையானும், "நரியு மற் றே நாடினர் கொளலே" என்னுஞ் சூத்திரத்து நாடினர் கொளலே என்றமையானும், 'குருளைமான்' என்று கூறினார் "குருளையுங் கன்று மானிற் கொளலே" என்றார் பிங்கலந்தையில. (௫௭)

மின்றிரண் டனைய பங்கி விராதனும் வெகுளி பொங்கக்
கன்றிய மனத்து வென்றிக் கரன்முதற் கணக்கி லோரும்
பொன்றிய பூசலொன்றுங் கேட்டிலை போலு மென்று
னன்றவாக் கடுத்த துன்னி மழைக்கணீ ரருவி சோரவாள்.

இ - ள். மின்திரண்டனைய பங்கி விராதனும் - மின்னல் திரண்டாற்போன்ற செம்பட்டமயிரினையுடைய விராதனும், வெகுளி பொங்க - கோபமிகுந்ததால், கன

நியமனத்து - சுந்த மனத்தினையுடைய, வென்றி கரன்முதல் களைக்கு இலோரும் - வெற்றியையுடைய கரன்முதலாகிய அளவற்றபோகளும், பொன்றிய - இறந்து போன, பூசல் ஒன்றும் கேட்டிலீரபோலும் என்றுள் - யுத்தசமாசாரம் ஒன்றும் கேள்வியுற்றறிந்திலீர் போலும் என்று கூறி, அன்று - அற்றைநாள், அவர்க்கு - அவ்விராமபிரானுக்கு, அடுத்தது உன்னி - சமயவித்த துன்பத்தைநினைத்து, மழைக்கண் அருவிநீர் சோர்வாள் - (சீதாபிராட்டி தனது) மேகம்போன்ற கண்களிலிருந்து அருவிபோலும் நீரைச் சிந்துவாளாயினாள்.

குறிப்பு — அன்று என்றது - மான்பின்சென்ற அந்நாள் என்றும், கரனுதியரைக் கொன்ற அந்நாள் என்றும் இருவகையிற் பொருள்கொள்ளலாம். அவற்றுள் மான்பின் சென்றநாளென், இத்தனை வலிய அரக்கரைக் கொன்றவர் மானவடிவுற்று வந்த ஓரரக்கனால் துன்புறுதற்கு நியாயமில்லை யென்பது துணராது அவ்வரக்கனால் துன்பம் நேர்ந்ததை நினைத்துத் தன் நாயகனது பெருமை கூறும் இக்காலத்தும் அழ நேரிட்டது வியக்கத்தக்கது அவளது மடமையின் பாற்றும் கரனுதிய றிறந்த அற்றைஞான்றென், அன்றடைந்த அச்சம் இன்று முளதென விளக்கினதாம் (௬அ)

வாளரி வள்ள றன்னா லிலங்கைமா நிருத ரெல்லாங்
கேளொடு மரியு மாறும் வானவர் கிளரு மாறு
நாளையே காணடி ரன்றே நவையிலீ ருணர்கி லீரோ
மீளருந் தருமந் தன்னை வெல்லுமோ பாவ மென்றாள்

இ - ள் (பின்னும் அச்சீதாபிராட்டி), நவை இலீர் - குற்றமற்றவரே! வாள் அரிவள்ளல் தன்னால் - வாளாலரியுஞ்செயலில் வள்ளன்மையுடையவரால் (ஸ்ரீராமபிரானால்), இலங்கைமா நிருதர் எல்லாம் - இலங்கையிலுள்ள பெரிய இராக்கதர்களனைவரும், கேள் ஒடும் - (அவர்கள்) உறவினரோடும், மரியும் ஆறும் - இறக்கின்ற விதத்தையும், வானவர் கிளரும் ஆறும் - தேவர்கள் உயர்கின்ற விதத்தையும், நாளையே காண்டிர் அன்றே - நாளையதினமே பார்ப்பீரன்றே? பாவம் - பாவமானது, மீள அரும் தருமம் தன்னை - நீங்குதற்கருமையான தருமத்தை, வெல்லுமோ - வெற்றி பெறுமோ? உணர்கிலீரோ - (நீர் இதனை) அறியீரோ? என்றாள் - என்று கூறினாள்

குறிப்பு — வாள் — மற்றை வில் முதலியவற்றிற்கு உபலக்கணம் அரி - முதனிலை இனி, அரிவள்ளல் - வினைத்தொகையுமாம் கொலைத்தொழில் மிகுதிவிளங்க 'வாளரி வள்ளல்' என்றாள். அரி - ஸ்ரீமகாவிஷ்ணுவுமாம். கேள் - உறவினருக்கு ஆகுபெயர். உடலைவிட்டு உயிர் நீங்கிச்செல்லுங்காலத்தும் தருமமானது அவ்வுயிரை விடாது தொடர்கின்றமைபற்றி 'மீளருந்தருமம்' என்றாள். "அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது, பொன்றுங்காற் பொன்றாத்துணை" எனத்திருக்குறளினும், "தரும மேயிணை யிலபொரு டரையிடைத் தகைசா, லொருமை யினபிறை யுதவிவிண் ணுலகினு முடன்போ, யருமை யினபமுயத் தந்தகற் செற்மெனி லறமே, யிருமை யுந்துணை யாருவ தன்றிமற் றில்லை" எனத்திருக்கூவப்புராணத்திலுங் கூறினமை காண்க. (௬௯)

தேனிடை யமுத னாய வன்னமென் சிலசொன் மாலை
தானுடைச் செவிக ளூடு தவழுறத் தளிர்த்து வீங்கு

மூனுடை யுடம்பி னானு முருகெழு மான மூன்ற
மானுடர் வலிய ரென்ற மாற்றத்தாற் சீற்றம் வைத்தான்.

இ - ள். தேன் இடை அமுது அளாய அன்ன - தேனினிடத்தே அமிர்தத்தைக்கலந்ததைப்போல, மெல் - மென்மைபொருந்திய, சில்சொல்மாலை - (பிராட்டியினது) சில சொற்களின் வரிசையானது, தான் உடை செவிகள் ஊடு - தன்னுடைய செவிகளில், தவழ உற - தவழ்தல் உற [மெல்லமெல்ல நுழைய], (அதனால்) தளிர்த்து வீங்கும் ஊன் உடை உடம்பினானும் - தளிர்ப்புற்றுப் பருக்கின்ற மாமிசத்தையுடைய உடம்பினனாகிய இராவணமுனிவனும், மானுடர் வலியர் என்ற மாற்றத்தால் - மனிதர்கள் வலிமையை யுடையவரென்று கூறிய வார்த்தையினாலே, உரு கெழு மானம் - உருவம்பொருந்திய வெட்கமானது [குறைவில்லாது நிறைவுற்ற வெட்கமானது], ஊன்ற - (தன்மனத்தில்) பதிந்ததால், சீற்றம்வைத்தான் - (மனத்தில்) கோபத்தைவைத்தான்.

குறிப்பு — தேன் - வார்த்தையின் இனிமைக்கு உவமை அமிர்தம் கட்டினியதாகிய மென்மையுந் தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமற்றடுக்கு மென்மையுமுடைமையின் 'அமுதன்ன மென்மை' என்றார், "இன்னமிர் தன்ன சாயல்" என்றார் சிந்தாமணியினும். தவழ்தல் - நகருதல் தளிர்த்தல் - தளிர்த்தல். உருகெழு, கெழு - இடைச்சொல், "வேல்கெழு தடக்கை" என்றாற்போல. (௬௦)

சீறினா னுரைசெய் வானச் சில்வலிப் புல்லி யோர்கட்
கீதொரு மனிதன் செய்தா னென்றெடுத் தியம்பி னாயேற்
றேறுதி நாளை யேயவ் விருபது திண்டோள் வாடை
வீறிய பொழுது பூளை வீயென வீவ னன்றே.

இ - ள். சீறினன் உரைசெய்வான் - கோபங்கொண்ட அவ்விராவணமுனிவன் கூறுவான், அச் சில்வலி புல்லியோர்கட்கு - அந்த வில்வல்லமையிற் சிறுமையையுடைய இராக்கதர்களுக்கு, ஒரு மனிதன் —, ஈது செய்தான் என்று எடுத்து இயம்பினாயேல் - முடிவினைச்செய்தான் என்று எடுத்துக் கூறுவாயானால், அ இருபது திண் தோள் வாடை வீறிய பொழுது - இந்த (இராவணனுடைய) இருபது வலிய புயங்களினது காற்றானது இழுத்தபொழுது, பூளை வீ என வீவன் - பூளைப்பூப்போல (நீவீரனென்று கூறிய மனிதன்) இறப்பான்; நாளையே தேறுதி - (இதனை நீ) நாளையதினமே அறிவாய். (௬௧)

மேருவைப் பறிக்க வேண்டின் விண்ணினை யிடிக்க வேண்டி
னீரினைக் கலக்க வேண்டி னெருப்பினை யவிக்க வேண்டிற்
பாரினை யெடுக்க வேண்டிற் பல்வினைச் சில்சொல் லேழாய்
யாரெனக் கருதிச் சொன்னா யிராவணற் கரிதென் னென்றான்.

இ - ள். பலம் வினை - பலமான தொழில்களில், சில்சொல் ஏழாய் - சிலவற்றைக்கூறுகின்ற பெண்ணே! யார் என கருதி சொன்னாய் - (இராவணனை) யார் என்று நினைத்து (எளிதாகக்) கூறினாய், இராவணற்கு - அந்த இராவணனுக்கு, மேருவை பறிக்கவேண்டின் - மகாமேருவைப் பெயர்த்தெடுக்க விரும்பினாலும், விண்ணினை இடிக்கவேண்டின் - ஆகாயத்தை இடித்து விடவிரும்பினாலும், நீரினை கல

க்கவேண்டின் - கடலைக்கலக்கிவிட விரும்பினாலும், நெருப்பினை அவிக்கவேண்டின் - வடவாமுகாக்கினியை அவித்துவிட விரும்பினாலும், பாரினை எடுக்கவேண்டின் - புவியைத்தூக்கும்படி விரும்பினாலும், அரிது என - (அச்செயல்களில்) அருமையானது யாது? என்றான் - என்று கூறினான்

குறிப்பு — நீர் கடலுக்கு இலக்கணை. பலவினை - அநேக தொழிலுமாம். (௬௨)

அரண்டரு திரடோள் சால வுளவெனி னாற்ற லுண்டோ
கரண்டநீ ரிலங்கை வேந்தைச் சிறைவைத்த கழற்கால் வீரன்
றிரண்டதோள் வனத்தை யெல்லா‌ஞ் சிறியதோர் பருவந் தன்னி
லிரண்டுதோ ளொருவன் றானே மழுவினா லெறிந்தா னென்றாள்.

இ - ள். அரண் தரு திரள்தோள் சால உள எனின் - காவலைத்தருகின்ற திரண்ட புயங்கள் மிக வுள்ளன என்றால், ஆற்றல் உண்டோ - வலிமையுண்டோ? கரண்டம் நீர் இலங்கைவேந்தை - (மூனிவராற்றலுக்குக) கமண்டல நீர்போன்ற கடல் சூழ்ந்த இலங்கைக்கரசனாகிய இராவணனை, சிறைவைத்த - சிறையில்வைத்த, கழல் கால் வீரன்-வீரக்கழலை வீக்கிய காலினையுடைய ஆண்டன்மையிற் சிறந்த கார்த்தவீரியார்ச்சுனனது, திரண்ட - பருத்த, தோள்வனத்தை எல்லாம் - புயங்களாகிய காடு முழுவதையும், இரண்டுதோள் ஒருவன்தானே - இரண்டு புயங்களையுடைய ஒரு மனிதனாகிய பரசுராமன் தானே, சிறியது ஓர் பருவம் தன்னில் -(தனது) இளமைப் பிராயத்தில், மழுவினால் எறிந்தான் என்றாள் - மழுவாயுதத்தால் வெட்டித்தள்ளினான் என்று கூறினாள்

குறிப்பு — உடம்பின் பாதுகாப்புக்கு உபயோகப்படும் தோள்கள் என்பாள் 'அரண்டரு' என்றாள்; "மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற், கைசென்று தாங்குங் கடிது" என்பவாகலின். இச்செய்யுளிற்குறித்த கார்த்தவீரியன் இராவணன் நருமதையாற்றங்கரையிற் செய்த சிவபூசைக்கு இடையூறு வருமாறு அவ்வாற்றைத் தனது இரண்டாயிரங் கைகளாலும் அணைகட்டித் தடுத்ததுபோலத் தடுத்தகதை விளங்க 'அரண்டரு திரடோள்' என்றாளென்னலுமாம். கீழ்க்கவியிற் கடலைக்கலக்க வல்லவனென்று கூறிய பெருமைக்கோர் இழிவுகற்பிக்கவும், தவத்தினாற்றல் பெரிதென்பது தோன்றவும் 'கரண்டநீ ரிலங்கை' என்றாள். கார்த்தவீரியன் நருமதையாற்றைத் தடுத்து இராவணனோடு போர்புரிந்து அவனை வென்று சிறையில் வைத்துவிட, அதனையுணர்ந்த வீடணன் பிரமதேவனிடஞ்சென்று கூற, அப்பிரமன்வந்து கார்த்தவீரியனை வேண்டிச் சிறை நீக்கிவிட்டனன். இராவணனைச் சிறையிட்ட வீரனாகிய கார்த்தவீரியன் ஒருநாள் சமதக்கினிமுனிவர்பாற் செல்ல அவனுக்கு அம்முனிவர் காமதேனுவைக்கொண்டு ஓர் விருந்து செய்வித்தனர். அவ்விருந்துக்கு மகிழ்ந்த வீரியன் அக்காமதேனுவைக் கொண்டுசெல்லக் கருதியதற்கு முனிவர் இணங்காமையால் அவரைக் கொன்றனன். அதனை அறிந்த அம்முனிவர் புதல்வனாகிய பரசுராமன் சினந்து தன் மழுவாயுதத்தால் அக் கார்த்தவீரியனைக் கொன்றனன். இச்சரித்திரங்களைப் பாகவதத்திலும் இராமாயணத்தில் உத்தரகாண்டத்திலுங் கண்டு தெளிக. (௬௩)

என்றிவ ளுரைத்த லோடு மெரிந்தன னயனந் திக்கிற்
சென்றன திரடோள் வானந் தீண்டின மகுடந் திண்கை

யொனறொடொன றடிதத மேகத துருமென வெயிற்றி னொளி
மெனறன வெகுளி பொஙக விடடது மாய வேடம.

இ - ள. எனறு இவள உரைததலோடும - (மழுவினுலெறிநதான) எனறு இவள கூறிய வளவில, நயனம எரிநதன - கணகள தீப்பறறி எரியலுறறன, திரள தோள் திககிலசெனறன - திரணட புயஙகள திசைகளில செனறன, மகுடம வானம தீணடின - கிரீடஙகள ஆகாயததைத தொட்டன, இணகை ஒனறொடு ஒனறு அடிதத - வலியகைகள ஒனறோடு ஒனறு அடிததுககொண்டன, எயிறறின ஒளி - பறகளின வரிசையானவை, மேகதது உருமு என - மேகததினது இடியை பபோல, மெனறன - மெலலுதலுறறன, வெகுளிபொஙக - கோபமிகுநததால, மாயம வேடம - மாயததாறகொணட முனிவேடமானது, விட்டது - நீஙகியது ()

இருவினை துறநத மேலோ ரலலனகொ லிவனென றெணணி
யரிவையு மையு மெயதா வாரிவன றனென றொனறுந
தெரிவரு நிலைய ளாகத தீவிடத தரவந தானே
யுருகெழு சீறறம பொஙகிப பணமவிரித துயாநத தொததான

இ - ள அரிவை - (அவவுருவததைககணட) சீதாபிராட்டி, இவன - (முனிவேடமுறறிருநத) இவன, இருவினை துறநத மேலோர அலலன (நலவினை தீவினையெனனும) இரணடு வினைகளையும நீஙகிய உயாநதோாகளில ஒருவன அலலன, எனறு எணணி - எனறு நினைதது, ஐயம எயதா - சநதேகமடைநது, இவன ஆா எனறு ஒனறும தெரிவு அருநிலையள ஆக - இவன யாவன எனறு சிறிதும அறிநது கொளளுதற கருமையான நிலைமையினையுடையவளாகும்படி, தீவிடதது அரவம தானே - கொடிய விஷததினையுடைய சாபபமானதுவே, உருகெழுசீறறம பொஙகி - மிகுநதகோபமானது மேனமேலும வளாதலுறறு, பணம விரிதது - படஙகளை விரிததுககொணடு, உயாநதது ஒததான - மேலெழுநததை ஒததவனுயினன.

குறிபபு —கொல, தான—அசை. (௬௫)

ஆறறவெந துயரத தனனு ளாணடிற்ற வலககண னோககி
னேறறமென னினைகக லாகு மெதிரெடுத தியமப லாகு
மாற்றமொன் றிலலை செய்யும வினையிலலை வரிகக லாகாக்
கூறறமவந துறற காலத துயிரெனக குலைவு கொணடாள

இ - ள அன்னாள - அசசீதாபிராட்டி, ஆணடு - அபபொழுது, வெம துயரதது உறற - வெவவிய கிலேசததாலடைநத, அலககண னோககின - துனபததைக கருதினால, ஆறற - (தனககு) உதவிசெயய, ஏறறம என நினைககல் ஆகும - உயாநததாக யாது நினைததறகாகும்; எதிா எடுதது இயமபல ஆகும மாற்றம ஒனறு இலலை - (அவனுககு) முனனே (தைரியமாக) எடுததுபபேசுதற காகும வாாததை ஒனறும இலலை, செயயும வினை இலலை - (தான அவனை விட்டுததப்பிததுக கொளவதறகுச்) செய்கினற (தந்திரச) செய்கை (கபடமும) இலலை, வரிககல ஆகா - கடடுதறகாகாத [தடைபடாத], கூறறம வநது உற்ற காலதது - யமன வநதபோதத பொழுது, உயிா என - (நடுஙகுகினற) உயிாபோல, குலைவுகொணடாள - நடுககமுறறாள.

குறிப்பு—ஸ்ரீராம லட்சுமணர்கள் அவ்விடத்து இன்மையால் அவர்களைப் போல உதவுதற்குத் தக்கவீரர்கள் அவ்விடத்தில் யாரிருக்கிறார்கள் ஒருவருமில்லை யே என்பது தோன்ற 'ஆற்ற ஏற்றம் என்னினைக்கலாகும்' என்றார். ஆற்றுதல்- உதவிசெய்தல்; "ஒருவீரொருவீரகாற்றுதிர்" [புறப்பாட்டு 58] அல்லக்கண்ணினும் அதிகமானதென்று எதை நினைத்தல் கூடுமென்ப பொருள் கூறுவருவார் ஆற்ற என்பதை ஆன்ற என்பதின் விகாரமாகக் கோடல்வேண்டும், அங்ஙனங்கொள்ளு தல் சிறப்புடைத்தன்றும். (௬௬)

விண்ணவ ரேவல் செய்ய வென்றவென் வீரம் பாராய்
மண்ணிடைப் புழுவின் வாழு மானுடர் வலிய ரென்றாய்
பெண்ணெனப் பிழைத்தா யன்றே லுன்னையான் பிசைந்து தின்ன
வெண்ணுவெ னெண்ணிற் பின்னை யென்னுயி ரிழப்பெ னென்றான்.

இ - ள். விண்ணவர் ஏவல் செய்ய வென்ற என் வீரம் பாராய் - தேவர்கள் (எனக்கு) ஊழியம் செய்யும்படி வெற்றிகொண்ட என்னுடைய வீரத்தைப் பார்ப் பாயாக, மண் இடை புழுவின்வாழும் மானுடர் வலியர் என்றாய் - நிலத்தில் புழு வைப்போல வாழ்கின்ற மனிதர்களை வலிமையை யுடையவர்களென்று கூறினாய், பெண் என பிழைத்தாய் - (இங்ஙன மஞ்சாது கூறிய நீ சிலாக்கியமான) பெண் ணென்று சொல்வதால் பிழைத்தாய், அன்றேல் - அப்படி யல்லாதிருந்தால், உன் னையான் பிசைந்து தின்ன எண்ணுவென் - உன்னை நான் பிசைந்து தின்னுதற்கு நினைப்பேன், எண்ணில் - (அப்படி பிசைந்துதின்ன) நினைப்பேனானால், பின்னை - பின்பு, என் உயிர் இழப்பென் என்றான் - எனது உயிரை இழந்துவிடுவேன் என்று கூறினான்

குறிப்பு—தன்னை இராவணன் என்று தெரிவிக்க 'விண்ணவ ரேவல்செய்ய வென்றவென்' என்றான் பாராய் - எதிர்மறையுமாம் (௬௭)

குலவுற லன்ன முன்ன மியாரையுங் கும்பி டாவென்
றலைமிசை மகுட மென்னத் தனித்தனி யினிது தாங்கி
யலகில்பூ ணரம்பை மாத ரடிமுறை யேவல் செய்ய
வுலகமீ ரேழு மாளுஞ் செல்வத்து ளுறைதி யென்றான்

இ - ள். அன்னம் குலவு உறல் - அன்னம்போன்றவளே 'நடுக்கம் அடையா தே, முன்னம் - (இதற்கு) முன்பு, யாரையும் கும்பிடா - எவர்களையும் கும்பிடாத, என் தலைமிசை - எனது தலைகளின்மேலே, மகுடம் என்ன - கிரீடங்களைப்போல, தனி தனி இனிது தாங்கி - (உன்னை) ஒவ்வொருதலையிலும் மகிழ்வாகவைத்துச் சும ந்துகொண்டு, அலகு இல் பூண் அரம்பைமாதர் - எண்ணில்லாத ஆபரணங்களையு டைய தேவஸ்திரீகள், அடி முறை ஏவல் செய்ய - பாதத்தின் கீழ்நின்று தங்கள் தங்கட் கேற்பட்ட பணிவிடைகளைச் செய்யாநிற்ப, உலகம் ஈரேழும் ஆளும் - பதி னான்கு உலகங்களையும் அரசாட்சிசெய்கின்ற, செல்வத்துள் உறைதி என்றான் - (எனது) செல்வத்தின்கண் வசிப்பாயாகவென்று கூறினான்.

குறிப்பு:—அன்னம் - ஆகுபெயர். (௬௮)

செவிகளைத் தளிர்க்கை யாலே சிக்குறச் சேமஞ் செய்தாள
கவினும்வெஞ் சிலைக்கை வென்றிக் காகுத்தன கற்பி னேனைப
புவியிடை யொழுக்க நோக்காப பொங்கெரிப் புனித ரீயு
மவியைநாய வேட்ட தென்ன வென்சொன்ன யரக்க வென்ளு.

இ - ள (அதனைக்கேட்ட பிராட்டி), தளிர் கையால - மாந்தளிர்போன்ற தனது இரண்டுகைகளாலும், சிக்கு உற - மறைபடும்படியாக, செவிகளை சேமம் செய்தாள - (தனது) காதுகளைப்புதைத்தவளாகி, அரக்க - அரக்கனே! புவியிடை - பூமியினிடத்து, ஒழுக்கம் நோக்கா - ஒழுக்கத்தைக்கருதி, பொங்கு எரி புனிதர் ஈயும் அவியை - உயர்ந்த வேள்வித்தீயை வளர்க்கும் பரிசுத்தவான்களாகிய முனிவர்கள் ஈகின்ற அவிர்ப்பாகத்தை, நாய வேட்டது என்ன - நாய் விரும்பினதுபோல, கவினும் - அழகாயிருக்கின்ற, வெம் சிலை கை - கொடிய வில்லினையேந்திய கையினையுடைய, வென்றி - வெற்றி பொருந்திய, காகுத்தன கற்பினேனை - ககுஸ்தன மரபிற்றோன்றியவனுக்கு [ஸ்ரீராமபிரானுக்கு] கற்பினையுடைய மனைவியாகிய என்னை, என சொன்னய என்று - என்ன வார்த்தையைக் கூறினாய் என்று.

குறிப்பு—கவினல - அழகாயிருத்தல் ஒழுக்கம் - உயர்வு, மரியாதை (௬௯)

புன்னுனை நீரி னொய்தாயப போதலே புரிந்து நின்ற
வின்னுயி ரிழத்த லஞ்சி யிறப்பிறப பழித லுண்டே
மின்னுயிர்த் துருமிற சீறும வெங்கணை விரவா முன்ன
முன்னுயிர்க் குறுதி நோக்கி னொளித்தியா லோடி யென்றாள.

இ - ள புல நுனை நீரின - புல்லினது முனையிலிருக்கிற நீர்த்துளியைப்போல, நொய்தாய - விரைவாய, போதலே புரிந்து நின்ற - (ஒழிந்து)போஞ் செயலையே செய்து நின்றுள்ள, இன் உயிர் இழத்தல் அஞ்சி - இனிய உயிரை இழந்துவிடுதற்கு பயந்து, இல பிறப்பு அழிதல் உண்டே - குடிப்பிறப்பின மேன்மை கெடுதலுமுண்டோ? உன உயிர்க்கு உறுதி நோக்கின - உனது உயிருக்கு நன்மையைக்கருதினால, மின உயிர்த்து - மின்னலைவிடுத்து [மின்னலபோல ஒளி வீசி], உருமின சீறும - இடியைப்போலக் கோபிக்கின்ற, வெங்கணை - (ஸ்ரீராமபிரானது) கொடிய பாணங்கள், விரவாமுன்னம - (வந்து) கலவாதமுனபு, ஓடி ஒளித்தி என்றாள - ஓடி ஒளிப்பாயென்று கூறினாள. (௭௦)

என்றவ ளுரைக்க நின்ற விரக்கமி லரக்க னெய்த
வுன்றுணைக் கணவ னம்பவ வுயர்திசை சுமந்த வோங்கல
வன்றிறன மருப்பி னாற்றன மடித்தவென மார்பின வந்தாற
குன்றிடை தொடுத்து விட்ட பூங்கணை கொலல தென்றான.

இ - ள என்று அவள உரைக்க நின்ற - (ஓடி ஒளிப்பாய) என்று அசசீதாபிராட்டி சொல்ல(க்கேட்டு) நின்ற, இரக்கம் இல அரக்கன - கிருபையில்லாத அவ்விராக்கதன, அ உயர் திசை சுமந்த ஓங்கல - அந்த உயர்ந்த திக்குகளைச் சுமந்து நின்ற யானைகளினது, வல திறல மருப்பின ஆற்றல் மடித்த - வலிமைபொருந்திய கொம்புகளினது வலிமையை யொழியச்செய்த, என மார்பின - எனது மார்பினிடத்து, துணை - (உனக்கு) இணையாகிய, உன கணவன் எய்த அம்பு - உனது நாய

கன் எய்த பாணமானது, வந்தால் - (பாய்) வந்ததேயாயின், அது - அப்பாணம், குன்றிடை தொடுத்து விட்டபூ கணை என்றான் - மலையின்மேல் வில்வளைத்து விட்ட புஷ்பபாணமேயாம் என்று கூறினான்.

குறிப்பு.—உன்னைப்போலும் பெண்டன்மை யுடையாளென்பதும், உனக்கு உதவிசெய்பவனென்பதும், உன்னழகுக்கு இணையானவனென்பதும் விளங்குமாறு 'உன்றுணை' என்றான். உயர்திசை - நெடுந்தூரத்துள்ளதிசை. ஓங்கல் - மலை, இது யானைக்கு உவமவாகுபெயர். வன்றிறல் - ஒருபொருட்பன்மொழி. தொடுத்தல் - வில்விற்கோத்தலும், செலுத்தலுமாம். கோல் - அம்பை. மலைமேல் எய்த புஷ்பபாணத்தால் மலைக்குக் கேடில்லை யென்றுதல்போல இராமபாணத்தால் தன்னுடலுக்குக் கேடுசம்பவியாதென்று கூறினான் (௭௧)

அணங்கினுக் கணங்க னாயநின் னாசைநோ யகத்துட் பொங்க
வுணங்கிய வுடம்பி னேனுக் குயிரினை யுதவி யும்பர்க்
கணங்குழை மகளிர்க் கெல்லாம் பெரும்பதங் கைக்கொ ளென்னா
வணங்கினா னுலகந் தாங்கு மலையினும் வலிய தோளான்.

இ - ள் உலகம் தாங்கும் மலையினும் வலியதோளான் - உலகத்தைத் தாங்குகின்ற மலையைப்பார்க்கினும் வலிமைபொருந்திய தோள்களையுடைய ராவணன், அணங்கினுக்கு அணங்கு அனைய - அழகுக்கு அழகுபோன்றவளே! நின் ஆசைநோய் - உன்மேற்கொண்ட ஆசையாகிய பிணியானது, அகத்துள் பொங்க - (என்) மனத்தில் அதிகரிக்க, உணங்கிய உடம்பினேனுக்கு - வாடிய வுடலையுடையேனாகிய எனக்கு, உயிரினை உதவி - உயிரைக்கொடுத்து [நான் இறவாவாறு செய்து], உம்பர் - விண்ணுலகிலிருக்கிற, கணம் குழை மகளிர்க்கு எல்லாம் - வட்டமான காதணியையுடைய பெண்களுக்கு எல்லாம், பெரும்பதம் - (கிடைத்தற்கரிய) பெரியபதவியை கைக்கொள் என்னா - கைவசப்படுத்திக்கொள்வா யென்று கூறி, வணங்கினன் - வணங்கினான்.

குறிப்பு.—உம்பர் - உயர்வு, இது விண்ணுலகுக்கு ஆகுபெயர். கணங்குழை - கூட்டமான குழையெனவுமாம். இனி, கனங்குழையென்பது எதுகைநோக்கிக் கணங்குழை யென்றாயிற் றெனினுமாம். உலகந்தாங்கல் என்றது - அரசு புரிதலை. இனி, உலகந்தாங்கு மலை - மேருமலையுமாம். (௭௨)

வேறு

தறைவா யவன்வந் தடிதாழ் தலுங்
கறைவாள் படவா விகலங் கினள்போ
லிறைவா விலையோ யெனவேங் கினளாற்
பொறைதா னுயிர்போ வதுபோற் புகல்வாள்.

இ - ள். அவன் தறைவாய் வந்து - அவ்விராவணன் பூமியினிடத்து வந்து, அடிதாழ்தலும் - (அவளது) பாதங்களில் வணங்கிய வளவில், கறைவாள் பட - இரத்தக்கறை பொருந்திய வாளாயுதந்தாக்கினதால், ஆவிகலங்கினள் போல - உயிர் நிலை கலங்கப்பெற்றவள் போலவும், பொறை - உடலினின்றும், உயிர்போவதுபோல் - உயிர் (விலகிப்) போவதுபோலவும், புகல்வாள் - பேசுவாளாகி, இறை

வா இளையோய் என ஏங்கினள் - (எனது) தலைவரே! இளையவனே! என்று (அசோகவனத்தில் சீதாபிராட்டி) அழுதாள்.

குறிப்பு:—தறை - தரை. பன்னசாலையினின்று வெளியே வந்தான் என்பார் 'தறைவாயவந்து' என்றார் மிகவுந்துன்புற்றமை விளங்கக் கறைவாளபட வாவி கலங்கினவளை உவமைகூறினார். பேசுதற்குச்சிறிதும் சக்தியில்லாமல் ஈனசுரமாகப் பேசினளென்பார் 'பொறைதாங்குயிர்போவதுபோற புகல்வாள்' என்றார். பொறை - பொறுப்பது, ஐ - வினைமுதற்பொருண்மை விகுதி உயிரைத்தாங்குவதால் உடலுக்கு இப்பெயர்போந்தது. "பொறையுணீங்கி யுகக்தாமுயிரள்" என்றார் சூர்ப்பநகைப்படலத்தும் தனது கற்பின்மகிமையால் இவ்வரக்கனை நீறாக்கக்கருதாது பொறுமையோடிருந்தமையுமறிந்து இப்பிராட்டிக்குப் பொறை என ஒருபெயரைத்தந்து கூறினரென்னலுமாம். (எங)

ஆண்டா யிடைத்தீ யவனா யிழையைத்
தீண்டா லெனுமே லுரைசிந் தைசெயாத்
தூண்டா னெனலா முயர்தோள் வலியாற்
கீண்டா னிலமயோ சனைகீ ழொடுமேல்.

இ - ள். ஆண்டு - அப்பொழுது, ஆயிடை - அவ்விடத்தில், தீயவன் - கொடியவனாகிய அவ்விராவணன், ஆயிழையை தீண்டால் எனும்- பெண்ணைத்தொடாதே என்கிற, மேல் உரை சிந்தை செயா - முன்வார்த்தையை நினைத்து, தூணதான் எனல் ஆம் உயர்தோள் வலியால் - (இவை) தூண்களேதாம் என்று கூறுதற்காகும் உயர்ந்த புயங்களினுடைய வலிமையினால், நிலம் பூமியை, கீழ் ஒடு மேல் - கீழும் மேலும், யோசனை கீண்டான் - ஒரு யோசனை தூரத்தளவாகப் பெயர்த்தெடுத்தான்

குறிப்பு —ஆயிழை - அன்மொழித்தொகை. தீண்டால், ஆல் - அல்லென்னும் எதிர்மறை வியங்கோள்விகுதி சந்தநோக்கி நீட்டல் விகாரம் பெற்றது. மேலுரை - "வந்தி யாகநீ மாநில மாதரூ, சிந்தை யாலன்றி யாவரைத் தீண்டினும், கந்த வார்குழ லாளகற் பெரியினால், வெந்து வீழ்தி" என்று அரம்பை கூறிய சாபமொழி, அன்றியும் பிரமதேவன் இப்படியே கூறிய மற்றொரு சாபமுமாம். கீழ் ஒடு மே. என்றது - பூமியினது ஆழமும் அகலமும் விளங்குதற்கு (எச)

கொண்டா னுயர்தே மிசைகோல் வளையாள்
கண்டா டனதா ருயிர்கண் டிலளான்
மண்டா னுறுமின் னின்மயங் கினளால்
விண்டான் வழியா லெழுவான் விரைவான்

இ - ள். உயர் தேர்மிசை கொண்டான் - (பெயர்த்து எடுத்த நிலத்தைத்தன்னுடைய) உயர்ந்த தேரின்மேலேற்றிக்கொண்டான், கோல்வளையாள் கண்டாள் - (அச்செயலை) வளைந்தவளையலையுடையாள் பார்த்தாள், தனது ஆர் உயிர் கண்டிலள்- (பின்னர் அசீதாபிராட்டி) தனது அரிய உயிரைப்பார்த்தாளில்லை, மண் உறும் மின்னலில் மயங்கினள் - (அவள்) நிலத்தை அடைகின்ற மின்னலில் கலந்தாள், விண்தான்வழியூ எழுவான் - ஆகாயமே மார்க்கமாகக்கிளம்பிச் செல்லும் அவ்விராவணன், விரைவான் - விரைந்து செல்லும் பொருட்டே.

குறிப்பு—தான - அசை இராவணனுடைய உயாநத தேரினமேல் ஒரு யோச னையளவு உயாநத நிலமானது தேரொடு மேலெழலும அநநிலததை அடைகினற மின னலும அநநிலததிலுளள பிராட்டியும வேறறுமையினறி ஒரு தனமையாகக காணப படடமையால 'மஙகடானுறமினனின மயஙகினள' எனறாா. மயஙகல - கலததல. "தமிழ்தலை மயஙகிய தலையாலஙகானதது" புறப்பாட்டு 19] மினனல உருவுமத துககுத தோனறி மறையும வினை யுவமததுககு மடடுமே பொருநது மாகலானும, ஆருயிா கணடிலள எனற வுடனே மதிமயஙகினள எனனல சிறபபுடைத தனறாக லானும மயஙகினள எனறகு மதிமயஙகினள எனறு பொருள கூறுதலை மறுததாம ஐயோ இனிசசெயவது எனனே எனறேஙகித தனமாாபிற கைவைதது செரிததுக கொணடமை விளஙக 'கோலவளையாள' எனறாா (௭௫)

விடுதே ரெனவெங கனலவாந தழியுங
கொடிபோற புரளவாள் குலைவா ளயாவா
டிடியா விழுவா டுயரா லெழுவாள்
கடிதா வறனே யிதுகா வெனுமால.

இ - ள தோ விடு என - (சாரதியைநோககி விரைவாயத) தேரைசசெலுத துவாயென்று கூற, வெம கனல வநது அழியும கொடிபோல புரளவாள - கொடிய நெருபபில வநது அழிகினற பூஙகொடிபோலப புரளுவாள, குலைவாள - நடுஙகுவா ள, அயாவாள - சோாவடைவாள, துயரால துடியா விழுவாள எழுவாள - துன பததால துடிதது விழுநது எழுநதிருபபாள, அறனே - தருமமே, இது - இவவா பததினினறும, கடிது ஆ கா எனும - (எனனை) விரைவாகக காப்பாய எனறு கூறுவாள.

குறிபபு—ஆ—ஆக என்பதன விகாரம. அறம - அறனெனபபோலி (௭௬)

மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா வுயிரே நிலைதே றினாபோ
யுலையா வலியா ருழைநீ ருரையீா

இ - ள மலையே—! மரனே - மரமே! மயிலே—! குயிலே—! கலையே - ஆண மானே! பிணையே - பெணமானே! களிறே - ஆணயானையே! பிடியே - பெணயா னையே! நிலையா உயிரே - நிலைததிருததலிலலாத (என) உயிரே! நிலைதேறினா நீா போய - (எனது) நிலைமையை யறிநதவாகளாகிய நீஙகள சென்று, உலையா வலியாா உழை உரையீா - கெடாத வலிமையை யுடையாரிடததில [ஸ்ரீராமலடசுமணாக ளிடததில] சொலவீாகளாக

குறிபபு—அஃறிணைப பொருளகளை விளிதது உரையீா எனறது - "கேட்குந போலவுங கிளககுந போலவு, மியஙகுந போலவு மியறறுந போலவு, மஃறிணை மருஙகினு மறையப படுமே" எனனும விதியுளடஙகும. [நன்னூல் பொதுவியல்].

செஞசே வகனாா நிலைநீா தெரிவீா
மஞசே பொழிலே வனதே வதைகாா

எஞ்சே லென்னல குதிரே லடியே
னுஞ்சா லதுதா னிழிபோ வுரையீர்

இ - ள். மஞ்சே - மேகமே! பொழிலே - சோலையே! வனதேவதைகாள் - காட்டிலுறைகின்ற தெய்வங்களே! செம்மை சேவகனார் நிலை தெரிவீர் - நல்ல வீரத்தன்மை பொருந்திய வருடைய [ஸ்ரீராமபிரானுடைய] நிலைமையை நீங்களறிவீர்கள், (ஆதலினால்), அஞ்சேல் என்னல் குதிரேல் - பயப்படாதேயென்று (எனக்கோர் உறுதிமொழி) கொடுப்பீர்களாயின் (உய்ந்தேன்), அடியேன் - அடியாளாகிய நான், உஞ்சால் - பிழைத்திருத்தல் பெற்றால், அது - நான் அப்படிப்பிழைத்திருக்கப்பெறுவது, இழிபோ - (உங்கள் தன்மைக்கு) குறைவோ? உரையீர் - (அதை யாயினும்) கூறுவீராக.

குறிப்பு—நிலை - ஸ்ரீராமபிரான் தன்னைத்தேடித்தொடர்ந்து வருந்தன்மை. உய்ந்தேன் என ஒரு சொல்வருவித்துக்கூறுக. உஞ்சால் - உய்ந்தால், போலி. (எ௰)

நிருதா தியர்வே ரறநீண் முகில்போற்
சரதா ரைகள்வீ சினர்சா ரகிலீரோ
வரதா விளையோய் மறுவே துமிலாப்
பரதா விளையோய் பழிபூ ணுதிரோ

இ - ள். வரதா - (முனிவர் அரக்கரைக் கொன்று நாள் வேண்டுமென்று விரும்பிய) வரத்தைக் கொடுத்தவரே! [ஸ்ரீராமரே!], இளையோய் - இலட்சுமணனே! மறு ஏதும் இலா பரதா - குற்றம் சிறிதும் இல்லாத பரதனே! இளையோய் - சத்துருக்கனே! நிருதர் ஆதியர் - இராக்கதர் முதலானவர்கள், வேர் அற - அடியோடு தொலையும்படியாக, நீள் முகில்போல - பெரிய மேகங்களைப்போல, சரம் தாரைகள் - பாணவருஷங்களை, வீசினர் - எறிந்தவர்களாய், சார்கிலீரோ - (இங்குவந்து) சேரமாட்டீர்களோ?

குறிப்பு—நிருதர் ஆதியர் - நிருதரும் அவரைச்சேர்ந்த கொடியவரும் ஆம், நிருதர்களில் முதன்மையானவர்களுமாம். வீசினர் என முற்றைப் பெயரெச்சமாகக் கொண்டு வரதா என்பதொடு கூட்டிக் கரனாதியரைக் கொன்ற வரதனே என்னலுமாம். இராமபிரான் வனம்புகுந்ததால் மகிழ்ந்து தனக்குத் தாய் கொடுத்த இராச்சியத்தைப் பரிபாலனம் செய்வதை யொழித்துத் தான் தமையனைப்போலத் தவவேடமுற்றுத் தமையனை யழைத்துச் செல்லக் கானகம் வந்தமையானும் பின்னர் எம்பிரானது பாதுகையைக் கொடுபோய் அதனைச் சிம்மாசனம் ஏற்றித் தன் தம்பி பாலரசை ஒப்பித்துத் தான் தவம்புரிதலையே பெரிதாகக் கொண்டுள்ளமையானும் பரதாழ்வார் குற்றமற்றவராதலின் 'மறுவே துமிலா' என்றார். (எக)

கோதா வரியே குளிர்வாய் குழைவாய்
மாதா வனையாய் மனனே தெளிவாய்
யோதா துணர்வா ருழையோ டினைபோய்
நீதான் வினையே னிலைசொல் லலையோ.

இ - ள். கோதாவரியே - கோதாவரியென்னும் நதியே! குளிர்வாய் - விறைத்திருப்பாய் [பிரமித்திருப்பாய்], குழைவாய் - வாட்டங்கொள்வாய், மாதா அனை

யாய - அன்னையை ஒப்பாய் [சேயைப்பிரிந்த தாயைப்போலக் கதறி ஓலமிடுவோய்], (ஆதலினால்) மனனே - (உன்) மனத்தில் நினைத்திருப்பதையே, ஓதாது - (நீ) சொல்லாமலே, தெளிவாய உணர்வார் உழை - தெளிவாக அறிந்துகொள்ளுபவராகிய எனது நாயகரிடத்தே, நீ ஓடிப்போய் - நீ ஓடிச்சென்று, வினையேன நிலை - தீவினையையுடையேனாகிய என்னுடைய நிலைமையை, சொல்லலையோ - சொல்ல மாட்டாயோ?

குறிப்பு —கோதாவரியே! குளிர்தலும் வளர்தலும் ஆனமாக்களுக்குத் தாயபோன்று உணவுப்பொருள்களைத் தருதலுமாகிய உன இயற்கைச்செயலை விறைத்தலும வாடலும அழுதலுமாகிய செயகை யெனக்கொண்டு எனது நாயகா உன பக்கத்தே குடியிருந்த நான உன்னை விட்டுப் பிரிந்தமைக்காக நீ வருந்துகின்றாய் என்று நீ சொலலுதற்கு முன்னமே அறிந்து கொள்வார் என்று சிலேடைப்பொருள் வருமாறு கூறினாள் "குறிப்பிற் குறிப்புணா வாரை யுறுப்பினுள், யாது கொடுத்துங் கொளல்" என்பவாகலின ஓதாதுணா வாரெனச்சிறப்பித்துக் கூறினாள். இனி, கலவிகற்காமல உணர்பவர் எனக்கொள்ளுமிடத்துக் கடவுள் என்னுமாம (அ0)

முந்துறு சுனைகாள் முழைவா ழரிகாள்
எிந்தநில ஞேடு மெடுத்த கைநா
லைந்துந தலைபத் துமலைந் துலையச
சிந்தும படிகண டுசிரித திடுவீர

இ - ள முந்தும சுனைகாள் - முறபட்டுத்தோன்றுகின்ற சுனைகளே! முழைவாழ அரிகாள - மலைக்குகையிலே வாழ்கின்ற சிங்கங்களே! இந்த நிலமோடும எடுத்த - இந்தபபூமியோடும (என்னைத்) தூக்கிய, கை நால ஐந்தும தலைபத்தும - கைகள் இருபதும தலைகள் பத்தும, அலைந்து உலைய சிந்துமபடி - வருந்தித் துன்பமுற்றுச்சிதறி வீழுமபடி, கண்டு - பார்த்து, சிரித்திடுவீர - சிரிப்பீர்களாக.

குறிப்பு —இந்தநிலம—விரித்தல உலைய - உலைந்து, செயவெனனும் மெச்சத்திரிபு (அக)

வேறு.

என்றினன பலவும பன்னி யிரியலுற றரற்று வாளைப
பொன்றுன்னு புணாமென கொங்கைப பொலங்குழாய போரி லென்ன
கொன்றுன்னை மீட்பா கொல்லம மானுடா கொள்க வென்று [னைக
வனறிண்ணகை யெறிந்து நககான் வாழ்க்கைநாள வறிது வீழவான.

இ - ள. என்று இன்னபலவும பன்னி - என்றிப்படிப்பட்ட பலவார்த்தைகளையுஞ் சொல்லி, இரியல உற்று அரற்றுவாளை - அஞ்சுதலடைந்து அழுவாளாகிய பிராட்டியை (நோக்கி), வாழ்க்கைநாள வறிது வீழவான - (தனது) வாணாள் வீணாக ஆசைபபெருக்க முறுபவனாகிய அவ்விராவணன, பொன் துன்னு -பொன்னணி விளங்குகின்ற, புணா - நெருங்கிய, மெல் கொங்கை - மிருதுவான தனங்களையுடைய, பொலங்குழாய - பொன்னாற் செயயப்பட்ட காதணியை யுடையவளே! அ மானுடா - அந்த மனிதாகள, போரில -யுத்தத்தில, என்னை கொன்று—, உன்னை—, மீட்பா கொல் - திருப்பிக்கொள்வார்களோ? கொள்க என்று -(சமாத

தாகளாயின) திருப்பிககொளளக கடவா என்றுகூறி, வல் திண்கை எறிந்து கக கான - வலியகை (யோடு கையை) அறைநது சிரிததான.

குறிப்பு —இரிதல - ஓடுதலுமாம. பொன் - அழகுமாம. கொல - ஐயம். வன றிண - ஒருபொருட பனமொழி. வீழவான எனறகு - இறநது விழுபவன எனறு பொருள கோடலுமாம. (௮௨)

வாககினு லன்னுன சொலல மாயையால வஞ்ச மானுன
ருககினு யாககி யுனனை யாருயி ருணணுங கூறறைப
போககினுய புகுநது கொணடு போகின்ருய பொருது நினனைக
காககுமா காணடி யாயிற கடவலுன றேரை யெனருள.

இ-ள அனனன வாககினல சொலல - (வாழநாளை வீழநாளாககுகினற) அநதராவணன வாயினலே (மேறகணடபடி) சொலல, வஞசம் மான ஒனறு மாயை யால ஆககினுய - (அதுகேடட பிராடடி இராவணனை நீ) கபடததனமையையு டைய ஓா மானை உனது மாயாசகதியால உணடுபணணினை, ஆககி - அப்படிசசெ ய்து, உனனை ஆா உயிா உணணும கூறறை போககினுய - உனது அருமையா கிய உயிரை உணகினற யமனபோனற ஸ்ரீராமபிரானை (அநத மானபினபு) போ கசசெயதாய, புகுநதுகொணடு போகினருய - (அதனபினபு நான தனிததகாலம பாாதது நீ) நுழைநது (எனனை) எடுததுககொணடு செலகினறனை, பொருது நினனை காககு மாகாணடி ஆயின - (அவாகளோடு) யுதததுசெயது உனனைக காபபா றறிககொளளும விததையைககாணபாயானல், உன தேரை கடவல எனருள - உன னுடைய ரததைதச செலுததாதே யெனறு கூறினுள.

குறிபபு —வாககினலனனன சொலல - வாககினலததனமையனுகிக கூற எனலுமாம ஆறு - ஆவெனவிகாரம. (௮௩)

மீடடுமொன றுரைசெய வாளீ வீரனேல விரைவின மறறுன
கூடடரா மரககா தமமைக கொனறுஙகை கொஙகை மூககும
வாட்டினுா வனததி லுளளாா மானுட ரெனற வாாததை
கேடடிமிம மாயஞ செயத தசசததின கிளாசசி யனறே.

இ-ள மீட்டும ஒனறு உரை செயவாள - மறுபடியும் ஒரு சஙகதி சொல் லுகினருள, நீ வீரனேல - நீ யுததவீரனுக இருநதால, விரைவில - சீககிரததில, உன கூடடராம - உனனுடைய கூடடததவராகிய, அரககா தமமை கொனறு - (விராதன கரன முதலாகிய) ராக்ஷதாகளைக கொலைசெயது, உஙகை கொஙகை மூககும வாடடினுா - உன தஙகையாகிய (சூாபபநகை)யினது தனஙகளையும மூக கையும அறுததுத தளளியவாகளாகிய, மானுடா - மனிதாகள, வனததின உள ளாா எனற வாாததை கேடடுமே - காடடிலிருககிருாகள எனகினற சொலலை (நீ) கேளவியுறறும, இ மாயம செயதது - இநத வஞசனை செயததது, அசசததின கிளாசசி அனறோ - பயததினது மிகுதியாலனறோ? (௮௪)

மொழிதரு மளவி னஙகை கேளிது முாணி லியாககை
யிழிதரு மனித ரோடே யானசெரு வேறப லென்றல

விழிதரு நெற்றி யான்றன் வெள்ளிவெற் பெடுத்த தோட்குப்
பழிதரு மதனிற் சாலப் பயன்தரும் வஞ்ச மென்றான்.

இ - ள். மொழிதரும் அளவில் - (இப்படிச் சீதாபிராட்டி) சொல்லுமளவில், நங்கை இது கேள - (இராவணன்) பெண்களிற் சிறந்த ஜானகியே யான் கூறுமிதனை (நீ) கேட்பாயாக, யான் - (தேவர் முதலிய யாவரையும் வெற்றியடைந்த) நான், யாக்கை முரண் இல் இழிதரும் மனிதரோடு - சரீரவலிமையில்லாத கேவலத்தையுடைய மானிடர்களுடனே, செரு ஏற்பல் என்றால் - யுத்தத்தை யேற்றுக்கொள்வேனாகில், விழிதரும் நெற்றியான் வெள்ளி வெற்பு - அக்கினிக்கண்ணை யளிக்கும் நெற்றியை யுடைய சிவபெருமானது கயிலாச மலையை, எடுத்த தோட்கு பழிதரும் - தூக்கிய (எனது) புயங்களுக்கு மிகவும் பழிப்பினை அளிக்கும், அதனில் - அப்படி யெதிர்த்துப் பழிப்புப்பெறுவதைப் பார்க்கிலும் வஞ்சம் சால பயன்தரும் என்றான் - (இப்போது நான் செய்த) வஞ்சகமானது மிகவும் பிரயோசனத்தைக் கொடுக்கும் என்று கூறினான். (௮௫)

பாவையு மதனைக் கேளாத் தங்குலப் பகைஞர் தம்பாற்
போவது குற்றம் வாளிற் பொருவது நாணம் போலா
மாவது கற்பினாரை வஞ்சிக்கு மாற்ற லேயா
மேவமென் பழிதா னென்னை யிரக்கமி லரக்கர்க் கென்றாள்.

இ - ள். பாவையும் அதனை கேளா - சித்திரப்பாவை போல்வாளாகிய சீதாபிராட்டியும் அவ்வார்த்தையைக் கேட்டு இரக்கம் இல் அரக்கர்க்கு - இரக்கமில்லாத இராக்கதருக்கு, தம் குலம் பகைஞர் தம்பால் போவது குற்றம் - தமது குலத்துக் குப்பகைவராயினாரிடத்துச் செல்வது குற்றமும், வாளில் பொருவது நாணம் - வாளாற்போர்செய்வது வெட்கமும், போல ஆம் - போலவாகும், கற்பினாரைவஞ்சிக்கும் ஆற்றலே ஆவது ஆம் - கற்புடைப்பெண்டிரை வஞ்சனை செய்கின்ற வல்லமையே (தம்மாற்செய்து முடித்தற்கு) ஆகுவதாக ஆகும், ஏவம் என் - (இப்பாவிகளுக்கு) குற்றந்தான் யாது? பழிதான் என்னை - பழிதான் யாது? என்றாள் - என்று கூறினாள்.

குறிப்பு —வீரர்களில் இப்படிப்பேசு வாருமுளரோ? என்று வியப்புற்று அசைவற்று நின்றாளென்பார் 'பாவையும்' என்றார். பாவை - உவமவாகுபெயர். இக்காரியந்தவிர மற்றைக்காரியஞ்செய்ய முடியாது என்பாள் 'ஆவது' என்றாள். (௮௬)

என்னுமவ் வேலை யினைக்க ணெங்கடா போவ தென்று
நின்னில்லென் றிடித்த சொல்லன் னெருப்பிடைப் பரப்புங் கண்ணன்
மின்னென விளங்கும் வீரத் துண்டத்தன் மேரு வென்னும்
பொன்னெடுங் குன்றம் வானின் வருவதே போலு மெய்யான்.

இ - ள். என்னும் அ வேலையின்கண் - என்று கூறுகின்ற அவ்வேளையில், அடா—! போவது - (நீ) செல்வது, எங்கு என்று - எவ்விடத்திற்கு என்று, நில் நில் என்று இடித்த சொல்லன் - நில்லு நில்லு என்று இடிபோல் முழக்கிய சொற்களையுடையவன், நெருப்பு இடை பரப்பும் கண்ணன் - அக்கினியை இடையே பரவச்செய்கின்ற கண்களையுடையவன், மின் என விளங்கும் - மின்னல்போல்

ஒளிவிடுகின்ற, வீரம் துணைத்தன - வலிமைபொருந்திய மூக்கினையுடையவன், மேரு என்னும் - மகாமேரு என்கின்ற, நெடும் பொன்குன்றம் - பெரிய பொன் மலையானது, வானின் வருவதேபோலும் மெய்யான் - ஆகாயத்தின்கண் (பறந்து) வருகின்றதையே ஒப்பாகின்ற உடலையுடையவன். (௮௭)

பாழிவன் கிரிகளெல்லாம் பறித்தெழுந் தொன்றோ டொன்று
பூழியி னுதிர விண்ணிற் புடையுறக் கிளர்ந்து பொங்கி
யாழியு முலகு மொன்று யழிதர முழுதும் வீசு
மூழிவெங் காற்றி தென்ன விருசிறை யூதை மோத.

இ - ள். பாழி வல் கிரிகள் எல்லாம் - பெரியவலிய மலைகளெல்லாம், பறித்து எழுந்து - பறிக்கப்பட்டு எழுந்து, ஒன்றோடு ஒன்று - ஒரு மலையோடு மற்றொருமலை (தாக்கி), பூழியின் உதிர - புழுதிபோல் (பொடிபொடியாய்) சிந்தும்படியாகவும், விண்ணில் - ஆகாயத்தின்கண், புடை உற - புடைத்தல் சேர [பெரிதாக], கிளர்ந்து - எழுந்து, பொங்கி - உயர்தலுற்று, ஆழியும் - கடலும், உலகும் - உலகமும், ஒன்றாய் - ஒன்றுபட்டதாகி, அழிதர - அழியும்படியாகவும், முழுதும் வீசும் - முழுதும் வீசுகின்ற [ஓரிடமிதந்தவில்லையென்னுமாறு முற்ற வீசுகின்ற], வெம் ஊழி காற்று இது என்ன - கொடிய ஊழிக்காலத்துக்காற்று இதுவேயென்று கூறும்படியாகவும், இரு சிறை ஊதைமோத - (தனது) இரண்டு சிறகுகளின்ற காற்று வந்தடிக்கவும்

குறிப்பு —பறித்து - படுவிகுதி முதலியன குன்றி நின்றன தாக்கி என்று ஒரு சொல்வருவித்துக் கூறுக- கடல்நீரை மேலெழச்செய்து அந்நீரின் குளிர்ச்சியோடு கலந்துவந்தமைபற்றி 'ஊதை' என்றார் . ஊதை - குளிர் காற்று (௮௮)

வேறு.

சாகைவன் றலையொடு மரமுந் தாழமேன்
மேகமும் விண்ணின்மீச் செல்ல மீமிசை
மாகவெங் கலுழனும் வருகின் றானென
நாகமும் படமொளித் தொதுங்கி நையவே

இ - ள். மரமும் - மரங்களும், சாகைவல் தலையொடுதாழ - இலைகளையுடைய வலிய தலைப்புறத்தோடு கீழே விழவும், மேல் மேகமும் விண்ணின்மீ செல்ல - (வருகின்ற வழிக்கு) மேலேயுள்ள மேகங்களும் ஆகாயத்தின்மேற் போகவும், மீமிசை வருகின்றான் - மேலே (பறந்து) வருகின்றவன், மாகம் வெங்கலுழன் என - ஆகாயத்திற் பறக்கிற கொடிய கருடன் என்று, நாகமும் - நாகசாபங்களும், படம் ஒளித்து - படங்களை மறைத்துக்கொண்டு, ஒதுங்கி - (புற்றுக்களினிடத்தே) பதுங்கி, நைய - துன்புறவும். (௮௯)

யானையும் யாளியு முதல யாவையுங்
கானொடு மரத்தொடு தூறு கல்லிவை
மேனிறைந் திருசிறை வீச்சி னேறலால்
வானமுங் கானமு மாறு கொண்டவே.

இ - ள். இருசிறை வீசலின் - இரண்டு சிறகுகளினுடைய வீசலினாலே, ஏறலால் - மேலே செல்லுதலால், யானையும் யாளியும் முதலயாவையும் - யானைகளும் யாளிகளும் முதலான மிருகங்கள் எவையும், காவொடு மரத்தொடு தூறுகல் இவை - காடுகளும் மரங்களும் புதர்களும் கற்களுமாகிய இவைகளும், மேல் நிறைந்து - ஆகாயத்தில் நிறைதலுற்று, வானமும் கானமும் மாறுகொண்ட - ஆகாயமும் கானகமும் நிலை மாறுதலுற்றன. (௬௦)

உத்தமன் றேவியை யுலகொ டோங்குதோ
வைத்தனை யேகுவ தெங்கு வாளிநீ
யித்தனை திசையையு மறைப்பெ னீண்டெனப்
பத்திரச் சிறைகளை விரிக்கும் பண்பினான்.

இ - ள் ஓங்குதோ - உயர்ந்ததேரில, உலகு ஒடு உத்தமன் தேவியை வைத்தனை - நிலத்தையும் சற்குணராமபிரானது மனைவியாகிய சீதாபிராட்டியையும் வைத்து, ஏகுவது - (நீ) செல்வது, எங்கு - எவ்விடத்திற்கு? ஈண்டு - இப்பொழுது, (நீ செல்வதற்கு வழியில்லாமல்), வாளினோடு இத்தனை திசையையும் மறைப்பென் என - ஆகாயத்தோடு இவ்வளவு திக்குகளையும் மறைத்து விடுவேன் என்று கூறி, பத்திரம் சிறைகளை விரிக்கும் பண்பினான் - இறகுகளோடு கூடிய சிறகுகளை விரிக்கின்ற தன்மையை யுடையவனும்.

குறிப்பு —உலகு - ஈண்டுக் குறிஞ்சி, முல்லை முதலிய நிலவகுப்பைச் சேர்ந்த ஒரு நிலமென நின்றது, "மாயோன் மேய காடுறை யுலகமும், சேயோன் மேய மைவரை யுலகமும்-" என்னுந் தோல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரத்திலும், "நிலம் பிணிற சவியா நிலைமை யானும், பலவுல கெடுத்த வொருதிறத் தானும்" என்னுங் கல்லாடச்செய்யுளினும் உலகம் எனபது நிலவகுப்பைக் குறித்தது நின்றமைகாண்க. இனி, உலகொடோங்குதோ என்றற்கு பெரிதாகிய இவ்வுலகத்தோடொப்பாய் விளங்குகின்ற தோ என்னலுமாம் உலங்கொடோங்குதோ என்னும் பாடம் பிழையுடைத்து. (௬௧)

வந்தன னெருவையின் மன்னன் மாண்பிலா
னெந்திரத் தோசெல வொழிக்கு மெண்ணினன்
சிந்துரக் காலசிரஞ் செக்கர் சூடிய
கந்தரக் கைலையை நிகர்க்குங் காட்சியான்.

இ - ள். மாணபு இலான் - நல்லொழுக்கமில்லாத இராவணனுடைய, எந்திரம் தேர் செலவு ஒழிக்கும் எண்ணினன் - சக்கரங்களையுடைய தேரோடுதலை நீக்குகின்ற எண்ணத்தினையுடையவனும், சிந்துரம் கால சிரம் - சிவப்பு நிறத்தையுடைய கால்களையும் தலையையும், செக்கர் சூடிய கந்தம் - செந்நிறத்தைத்தரித்த கழுத்தினை யுமுடைய, கைலையை - வெள்ளிமலையை, நிகர்க்கும் காட்சியான் - ஒப்பாகின்ற தோற்றத்தையுடையவனுமாகிய, எருவையின் மன்னன் - கழுகுக்கு அரசனாகிய சடாயு, வந்தனன் - வந்தான்.

குறிப்பு —கழுகுக்குக் காலும் சிரமும் கழுத்தும் சிவந்தும் உடல்வெளுத்து மிருப்பதால் 'சிந்துரக் காலசிரஞ் செக்கர் சூடிய, கந்தரக் கைலையை' உவமை கூறினார்; இது - இல்பொருளுவமை. (௬௨)

வேறு.

ஆண்டுற்ற வணங்கினை யஞ்சலென்றத்
தீண்டுற்றில னென்றுணர் சிந்தையினான்
மூண்டுற்றெழு வெங்கத முற்றிலனாய்
மீண்டுற்றுரை யாடலை மேயினனால்.

இ - ள் ஆண்டு உற்ற அணங்கினை அஞ்சல் என்று - அவ்விடத்தில் வந்த சீதா பிராட்டியைப் பயப்படாதே என்று கூறி, தீண்டு உற்றிலன் என்று உணர் சிந்தையினான் - (இவளை இவ்வரக்கன்) தீண்டினானில்லையென்று அறிந்த மனத்தினாலே, மூண்டு உற்று எழு வெங்கதம் முற்றிலன் - (தீப்பற்றுதல்போல) மூளுதலுற்று அதிகரித்து எழுகின்ற வெவ்விய கோபமுதிர்தலில்லாதவனாகி, மீண்டு உற்று - திரும்பிவந்து, உரையாடலை மேயினன் - (இராவணனோடு) வார்த்தை சொல்வதை விரும்பினான். (௧௫)

கெட்டாய்கிளை யோடுநின் வாழ்வையெலாஞ்
சுட்டாயிது வென்ன தொடங்கினைநீ
பட்டாயென வேகொடு பத்தினியை
விட்டேகுதி யால்விளி கின்றிலையால்

இ - ள். நீ—, கெட்டாய் - கெட்டுப்போயினை, கிளையோடு நின் வாழ்வை எல்லாம் சுட்டாய் - (உன்) பந்துவர்க்கத்தோடு உனது வாழ்க்கையை முழுதும் சுட்டு விட்டாய், என்ன இது தொடங்கினை - ஏன் இச்செய்கை செய்ய ஆரம்பித்தாய்? பட்டாய் எனவே கொடு - இறந்தாயென்றே (யெண்ணிக்)கொண்டு, பத்தினியை விட்டு ஏகுதி - கற்புடையாளை விட்டுச் செல்வாயாக, விளிகின்றிலை - (அப்படி விட்டுச் செல்லுதியாயின்) இறக்கின்றாயில்லை

குறிப்பு—கெட்டாய், சுட்டாய், பட்டாய் என்பன - தெளிவின்கண் வந்த கால வழுவமைதி. (௧௬)

பேதாய் பிழைசெய்தனை பேருலகின்
மாதாவனை யாளை மனக்கொடுநீ
யாதாக நினைத்தனை யெண்ணமிலா
யாதார நினக்கினி யாருளரோ.

இ - ள் பேதாய் - அறிவில்லாதவனே! நீ பிழைசெய்தனை - நீ குற்றத்தைச் செய்துவிட்டாய், பேர் உலகின் மாதா அனையாளை - பெரிதான உலகங்களிலுள்ளவர்களுக்குத் தாயைப்போன்றவளாகிய சீதாபிராட்டியை, மனம் கொடு - மனங்கொண்டு, யாதாக நினைத்தனை - எக்காரியமாகும்படி கருதினாய்? எண்ணம் இலாய் - ஆலோசனையில்லாதவனே! இனி—, நினக்கு - உனக்கு, ஆதாரம் - ஆதரவாக, யார் உளர் - எவரிருக்கின்றார்கள்?

குறிப்பு—உலகு - இடவாகுபெயர். வேறொருவர் கோபித்தால் ஸ்ரீராமபிரானிடம் சரண்புகுந்து பிழைக்கலாம். அவ்விராமபிரானே கோபிப்பானாயின் இவ்வேழ் உலகத்திலுள்ள எவராலும் அக்கோபத்தைத் தடுத்துக் காக்கமுடியாது. ஆதலின்

அவனுக்கு அபகாரியாகிய நீ எவர் துணையைக்கொண்டு பிழைக்கப்போகின்றாய்? இறப்பாய் என்பது உறுதியேயென்பான் 'ஆதார் நினக்கினி யாருளர்' என்றான். ஓ - அசை. (௧௫)

உய்யாமன் மலைந்துமர் ராருயிரை
மெய்யாக விராமன் விருந்திடவே
கையார முகந்துகொ டந்தகனா
ரையாபுதி துண்ட தறிந்திலையோ

இ - ள். ஐயா - அரசனே! இராமன் - ஸ்ரீராமபிரான், உமர் ஆர் உயிரை - உம்மவர்களாகிய அரக்கர்களினுடைய [கரதூஷணாதியர்களுடைய] அரிய உயிரை, உய்யாமல் மலைந்து - (ஒருவருந்தப்பிப்) பிழைக்காதபடி போர்செய்து, மெய் ஆக - உண்மையாக, விருந்து இட - (நமனுக்கு) விருந்துவைக்க, அந்தகனார் - நமனார், கையார முகந்துகொண்டு - கைநிறையவாரிக்கொண்டு, புதிது உண்டது - நூதனமாகச் சாப்பிட்டதை, அறிந்திலையோ - அறிந்தாயில்லையோ?

குறிப்பு—இராவணனுக்கு அடங்கியிருக்கும் நமன் இராக்கதர் உயிரைக்கவர வந்தேது? என்று ஐயுறுவார் ஐயந்தெளியவும், இத்தனை பெருங்கூட்டமான அரக்கரைக்கொல்லுதற்குப் பன்னாள் வேண்டியிருக்கக் கடிகைமூன்றிற் கொன்றானென்பது மெய்யோ? வென்று ஐயுறுவார் ஐயந்தெளியவும் விருந்திட்டான் என்பான் 'மெய்யாக விருந்திட' என்றான். நமன் நினக்கு அடங்கினவனென்று நினையாதே நின்னுயிரையுங் கவரும் மேலோனே யாம் என்பான் அந்தகனார் என ஒருவரைக் கூறும் பன்மையிற் கூறினான். நமனுக்கு அரசே என்பான் அந்தகனார் என்ற சொல்லை யடுத்து ஐயாவென விளித்தான். (௧௬)

கொடுவெங்கரி கொல்லிய வந்தனன்மேல்
விடுமுண்டை கடாவ விரும்பினையே
யடுமென்ப துணர்ந்திலை யாயினுமவன்
கடுவுண்டுயி ரின்னிலை காணுதியோ

இ - ள். கொடுவெங்கரி கொல்லியவந்தனன்மேல் - கொடிய கோபமுள்ள யானையானது கொல்லவந்ததின்பிறகு, விடும் உண்டை கடாவ விரும்பினையே - விடுகின்ற கல்லுண்டைகளைச் செலுத்த விருப்பமுற்றனையோ? அடும் என்பது உணர்ந்திலை ஆயினும் - (இப்பறவை நின்னைக்) கொல்லும் என்பதை யறிந்தாயில்லையானாலும், வல் கடு உண்டு உயிர் இன் நிலை காணுதியோ - கொடிய விஷத்தையுண்டு (பின்னர்) உயிரினது நிலையை [உயிர் உடலைவிட்டுப் பிரியாது நிற்றலைப்] பார்ப்பாயோ?

குறிப்பு—உண்டை - உருண்டை. என்னைக் கேவலமான பறவையென்று நினைத்துக் கல்லுண்டைகளை யெறிந்து கொல்லுதற்கு நீ விரும்பினையோ? நான் பறவையாயினும் வலியில்லாதவனல்லன், உன்னைக் கொல்லவந்த யானையென்று நினைப்பாயாக என்பது முதலிரண்டடிகளின் கருத்து. விடும் உண்டை - பறவைகள் மேல் விடுகின்ற உண்டை என விரித்துக் கூறுக. இப்பறவை உன்னைக்கொல்லும் என்பதை அகங்காரத்தால் நீ நினைக்கமாட்டாயாயினும் ஸ்ரீராமபிரான் மனைவியை யெடுத்துவந்து விஷமுண்டதுபோலப் பாவத்தையடைந்தா யாதலின் அப்பாவமே

நினைக்கொன்றுவிடுமே என்பது பின்னிரண்டடிகளின் கருத்து. ஏகாரம் - வினா. ஓகாரம் - எதிர்மறை. (௧௭)

எல்லாவுல கங்களு மிந்திரனு
மல்லாதவர் மூவரு மந்தகனும்
புல்வாய்புலி கண்டது போல்வரலால்
வில்லாளரை வெல்லு மிடுக்குளரோ

இ - ள் எல்லாம் உலகங்களும் - எல்லாவுலகத்திலு மிருப்பவர்களும், இந்திரனும் - (திக்குப்பாலகர்களில் ஒருவனாகிய) இந்திரனும், அல்லாதவர் - ஒழிந்தோர்களும் [மற்றைத்திக்குப் பாலகர்களும்], மூவரும் - திரிமூர்த்திகளும், அந்தகனும் யமனும், புல்வாய் - மான், புலி கண்டதுபோல் - புலியைப்பார்த்ததுபோல, வரலால் - (ஸ்ரீராமலட்சுமணர்களைக் கண்டு அஞ்சி) வருதலினாலே, வில்லாளரை - வில்வீரர்களாகிய இவர்களை, வெல்லும் மிடுக்கு உளரோ - (அவர்கள்) வெல்லுகின்ற வலிமை யுடையவர்களோ? அல்லர், (௧௮)

இம்மைக்குற வோடு மிறந்தழியும்
வெம்மைத்தொழி லிங்கிதன் மேலில்லையா
லம்மைக்கரு மாநர கந்தருமா
லெம்மைக்கித மாகவி தெண்ணினை நீ

இ - ள் உறவோடும் இறந்து அழியும் - சுற்றத்தாரோடும் மடிந்து கெடுதற்குக் காரணமான, வெம்மை தொழில் - கொடியசெய்கை, இம்மைக்கு - இப்பிறவிக்கு, இதன்மேல் இல்லை - இதற்கு அதிகமாக (வேறொன்றும்) இல்லை, அம்மைக்கு அருமா நரகம் தரும் - அப்பிறப்பிறகு (இது) அரிய பெரிய நரகத்தைத்தரும், நீ இது எம்மைக்கு இதம் ஆக எண்ணினை - நீ இச்செயலை எப்பிறவிக்கு நன்மையாகும்படி நினைத்தாய்.

குறிப்பு — அம்மை - யாதனுசரீரம் அடையும் அப்பிறப்பு (௧௯)

முத்தேவரின் மூல முதற்பொருளா
மத்தேவரிம் மானிட ராதலினா
லெத்தேவரொ டெண்ணுவ தெண்ணமிலாப்
பித்தேறினை யாதல் பிழைத்தனையால்.

இ - ள் இம்மானிடர் - இந்த மனிதர்கள், முத்தேவரில் - திரிமூர்த்திகளுக்குள், மூலம் முதல் பொருள் ஆம் அத்தேவர் ஆதலினால் - தலைமையாகிய ஆதிவஸ்துவாகும் அந்தத் தேவரேயானபடியால், எத்தேவரொடு எண்ணுவது - (இவர்களை) எந்தத்தேவர்களோடு (ஒப்பிட்டு) நினைப்பது? எண்ணம் இலா - (இவர்களை ஆதிமூலப்பொருளென்று கருதும்) ஆலோசனையில்லாத, பித்து ஏறினை - மயக்கம் அதிகரிக்கப்பெற்றனை, ஆதல் - ஆதலின்; பிழைத்தனை - குற்றஞ் செய்தாய். (௨௦)

புரம்பற்றிய போர்விடை யோனருளால்
வரம்பெற்றவு மற்றுள வின்னசைகளு

முரம்பெற்றன் வாவன் வுண்மையினோன்
சரம்பற்றிய சாபம் விடுந்தனையே.

இ - ள். புரம்பற்றிய போர்விடையோன் அருளால் - திரிபுரங்களும் தீப்பற்றுத லடைந்த போரினைச்செய்த ருஷபவாகனத்தையுடைய சிவபிரானருளினாலே, வரம் பெற்றவும் - வரமாகவடைந்த ஆயுள் முதலியனவும், மற்று உள் வினைகளும் - மற்றும் உள்ள (மாயச்செயல்களை யியற்றவல்ல) மந்திரங்களும், உண்மையினோன் - என்றும் அழியாம லிருக்கிறவனான ஸ்ரீராமபிரான், சாபம்பற்றிய சரமவிடுந்தனை - வில்லிற்பிடித்த பாணத்தை விடுகின்ற காலம்வரையும், உரம் பெற்றன ஆவன - வலிமையை யடைந்தவைகளாகும்

குறிப்பு — உண்மையினோன் - சத்தியத்தை யுடையானுமாம். (௧௦௧)

வானுளபவன் மைந்தன் வளைத்தவிலான்
றானேவரி னின்று தடுப்பரிதா
ஞானேயவ னுய்ப்பனிந் நன்னுதலைப்
போநீகடி தென்று புகன்றிடலும்.

இ - ள் வான் ஆளபவன் மைந்தன் - வானவர்களை (அரக்கர் செய்யுந் துன் பத்தினின்றும் விலக்கி) ஆள்பவனாகிய வலிமையையுடையவனும், வளைத்த விலான் தானே - (அரக்கர் தம் போர்க்கென்றே) வளைத்த வில்லினையுடையவனுமாகிய இராமனே, வரின் - வந்தால், நின்று தடுப்பு அரிது - (அவனை நீ எதிர்த்து) நின்று தடுத்த லரிதாகும், இ நல்நுதலை - இந்த நல்ல நெற்றியை யுடையாளாகிய சீதாபிராட்டியை, அவண் - (இராமனிருக்கின்ற) அவ்விடத்தில், நானே உய்ப்பல் - நானே (கொண்டுபோய்ச்) சேர்ப்பேன், நீ கடிது போ என்று புகன்றிடலும் - நீ விரைவாக (ஓடிப்)போ என்று கூறியவளவில்

குறிப்பு — வான் - ஆகுபெயர். இனி, வானுளபவன் மைந்தன் - (இப்போது) வானை யாள்பவனாகிய தசரதச் சக்கரவர்த்திக்கு மகன் எனலுமாம். நன்னுதல் - அன்மொழித்தொகை (௧௦௨)

கேட்டானிரு தர்க்கிறை கேழ்கிளர்தன்
வாட்டாரை நெருப்புக வாய்மடியா
வோட்டாயினி நீயுரை செய்குநரைக்
காட்டாய்கடி தென்று கனன்றுரையா.

இ - ள். கேட்டான் நிருதர்க்கு இறை - (சடாயுகூறிய வார்த்தைகளைக்) கேட்ட அரக்கர்க்கு அரசனாகிய இராவணன், கேழ்கிளர் தன் வாள்தாரை நெருப்பு உக - ஒளிமிகுந்த தனது வாள்போன்ற கண்களிலிருந்து அக்கினிசிந்த, வாய்மடியா - (தனது) வாயைமடித்து [உதட்டைக்கடித்து], இனி—, ஓட்டாய் - (என்னை) ஓடும்படிசெய், (அப்படிச்செய்ய இஷ்டம் இல்லையாயின்), நீ உரைசெய்குநரை - நீ கூறுகின்றவர்களை, கடிது - விரைவில், காட்டாய் - காட்டுவாய், என்று—, கனன்று உரையா - கோபித்துக் கூறி,

குறிப்பு:—ஓட்டாய், காட்டாய் என்பன - முன்னிலையேவல் ஒருமைத் தெரிநிலை வினை முற்றுக்கள். இனி, ஓட்டாய் என்பதை முன்னிலை யொருமை யெதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றாகக்கொண்டு என் தேரை ஓடும்படிசெய்யாயோ என்று பொருள் கூறுதலு மமையும்; இப்பொருளில் வினாப்பொருளைப் பயக்கும் ஓகாரம் தொக்கதெனக். (௧௦௩)

வரும்புண்டரம் வாளியின் மார்புருவிப்
பெரும்புண்டிறவாவகை பேருதி நீ
யிரும்புண்டநீர் மீளினு மென்னுழைநின்
கரும்புண்டசொல் மீள்கிலள் காணுதியால்.

இ - ள். வரும் புண்டரம் - வருகின்ற கழுகே! வாளியின் - (என்னுடைய) கணையால், மார்பு உருவி - (உனது) மார்பு உருவுதலுற்று, பெரும் புண் திறவாவகை - பெரிய புண்ணாக விரிந்து போகாதபடி, நீ பேருதி - நீ (இவ்விடம் விட்டுப்) பெயர்வாயாக [நீங்குவாயாக], இரும்பு உண்ட நீர் மீளினும் - (நெருப்பிற்காய்ச்சிய) இரும்பானது உண்ட நீரானது (ஒருகால்) திரும்பி வந்தாலும், என் உழையில் - என்னிடத்திலிருக்கின்ற, கரும்பு உண்ட சொல் - கரும்புபோன்ற சொல்லினையுடையாளாகிய இவள், மீள்கிலள் - திரும்பி வரமாட்டாள், காணுதி - (பின்னர் இதனைப்) பார்ப்பாய்.

குறிப்பு —புண்டரம்-அண்மை விளி இயல்பாயிற்று. நீர் - நீர் என்விகாரம். கரும்புண்ட, உண்ட - உவமவாசகம். கரும்புண்ட சொல் - ஆகுபெயர். அன்மொழித்தொகையாகக் கொள்ளுமிடத்து 'உண்ட' என்னுஞ் சொல் எஞ்சி நிற்கும். (௧௦௪)

வேறு.

என்னுமளவிற்பய முன்னி னிரட்டி யெய்த
வன்னமய்யா கின்றது நோக்கி யரக்கன் யாக்கைச்
சின்னமுறு மிப்பொழு தேசிலை யேந்தி யெங்கண்
மன்னன்மகன் வந்திலனென்று வருந்த லன்னே

இ - ள். என்னும் அளவில் - இவ்வாறு இராவணன் கூறுகின்ற அளவில், பயம் - அச்சமானது முன்னின் இரட்டி எய்த - முன்னினும் இருமடங்காகச் சேர்ந்த கால், அன்னம் - அன்னம்போன்ற சீதாபிராட்டியார், அயாகின்றது நோக்கி - தளர்வடைகின்ற செயலை(சடாயு) பார்த்து, அன்னை தாயே! இப்பொழுதே—, அரக்கன் யாக்கை சின்னம் உறும் - இந்த ராக்ஷஸனுடைய உடலானது துண்டந்துண்டமாகப் படுதலையடையும், எங்கள் மன்னன்மகன் - எமது தசரதசக்கரவர்த்தியினுடைய குமாரர், சிலை ஏந்தி வந்திலன் என்று வருந்தல் - வில்லையேந்திக்கொண்டு வந்து சேர்ந்தாரில்லையே யென்று நினைத்து வருந்தாதே.

குறிப்பு —அன்னம் - ஆகுபெயர். முதல் மூன்றடிகளிலும் மகரவொற்றுக்கள் விரித்தல் விகாரமாய் நின்றன. (௧௦௫)

முத்துக்கள் போன்முகத் தாலி மூலைக்கண் வீழ்த்
தத்துற்றய ரேறலை தால பலத்தி னோலும்

கொத்தொப்பன கொண்டிவன் கொண்டன னென்ற வாசை
பத்திறக்குமின் றேபலி யீவது பார்த்தி யென்றான்

இ - ள் முத்து உக்கனபோல - முத்துக்களைச் சிந்தினபோல், முகத்து ஆலி - முகத்திலிருந்த நீர்த்துளிகள், முலைக்கண்வீழ - முலைகளின்மேல் வீழும்படி, தத்துற்று - தத்தத்தலையுற்று [மேலேகொண்டு குதித்து], அயரேல - தளர்வடையாதே, தாலம் பலத்தின் ஏலும் கொத்து ஒப்பன - பனம்பழத்திற் பொருந்துகின்ற கொத்தை ஒப்பனவையாகிய, தலைகொண்டு - (இவனது) தலைகளைக் கைக்கொண்டு, இவன் கொண்டனன் என்ற ஆசைபத்திறக்கும் - இவன் வசமாக்கிக்கொண்டவைகள் என்று கூறின திசைகள் பத்துக்கும், இன்றே - இறைப்பொழுதே, பலி ஈவது பார்த்தி என்றான் - (நான்) பலியாக ஈயுஞ்செயலைப் பார்ப்பாயாக என்று கூறினான்.

குறிப்பு.—மேனோக்கிப்பார்த்துத் தேவர்களைக் கூவி முறையிட்டமை விளங்க 'முகத்தாலி முலைக்கண் வீழத் தத்துற்று' என்றான் மேல்நோக்கியகாலத்துக் கண்ணீரானது முகத்தின்வழியாய் மார்பிற்பாயும் தத்துறு-மேலேகொண்டு குதித்த, "முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று," [திருமுருகாற்றுப்படை 305]. (௧0௬)

இடிப்பொத்த முழக்கி னிருஞ்சிறை வீசி யெற்றி
முடிப்பத்தி களைப்படி யிட்டு முழங்கு துண்டங்
கடிப்பக்கடி துற்றவன் காண்டகு நீண்ட வீணைக்
கொடிப்பற்றி யொடித்துயர் வானவ ராசி கொண்டான்.

இ - ள் இடிப்பு ஒத்த முழக்கின் இருஞ்சிறை வீசி எற்றி - இடி இடித்தாலொத்த பேரொலியுண்டாகும்படி பெரிய சிறகுகளை வீசியடித்து, முடி பத்திகளை படி இட்டு - (இராவணனது) தலைவரிசைகளைப் பூமியில் எறிந்து, முழங்கு துண்டம் - பேரொலிசெய்கின்ற (தனது) மூக்கினாலே, கடிப்ப - (அத்தலைகளைக்) கடிப்பதற்காக, கடிது உற்றவன் - விரைவாக வந்த சடாயு, காண் தகு - பார்த்தற்குத்தகுதியான, நீண்ட—, வீணைக்கொடி பற்றி - (இராவணனது தேரிற்கட்டியிருக்கிற) வீணைக்கொடியைப்பிடித்து, ஒடித்து—, உயர்வானவர் ஆசி கொண்டான் - உயர்ந்த தேவர்கள் வாழ்த்திக்கூறும் வாழ்த்துக்களைப் பெற்றான் (௧0௭)

அக்காலை யரக்க னரக்குருக் கன்ன கண்ண
னெக்காலமு மின்னதொ ரீடழி வுற்றி லாதா
னக்கானுல கேழு நடுங்கிட நாக மன்ன
கைக்கார்முகத் தோடு கடைப்புரு வங்கு னித்தான்.

இ - ள். அக்காலை - அப்பொழுது, எக்காலமும் இன்னது ஓர் ஈடு அழிவு உற்று இலாதான் அரக்கன் - எந்தக்காலத்திலும் இத்தன்மையாகிய ஒரு பெருமைக்கேடு அடைந்திலாதவனாகிய அவ்விராவண ராக்ஷஸன், அரக்கு உருக்கு அன்ன கண்ணன் - அரக்கை உருக்கி வார்த்தது போன்ற (சிவந்த) கண்களையுடையானாகி, உலகு ஏழும் நடுங்கிட நக்கான் - ஏழுலகங்களும் நடுங்கும்படியாகச் சிரித்து, நாகம் அன்ன - மலைபோன்ற, கை கார்முகத்தோடு - (தனது) கையிலிருக்கின்ற வில்லோடு, கடை புருவம் குனித்தான் - புருவத்தினடிப்புறத்தையும் வளைத்தான்.

குறிப்பு — பாணப்பிரயோகஞ் செய்யக்குறி பார்த்தான் என்பார் 'கடைப்புருவங்குனித்தான்' என்றார். கண்கள் கோபத்தாற் சிவந்தமையாலும் கொதிப்புற்றமையாலும் அரக்குருக்கை உவமைகூறினார். உருக்கு - உருக்கப்பட்டது, செய்யப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. (௧௦௮)

சண்டப்பிறை வாளெயிற் றான்சர தாரை மாரி
மண்டச்சிற காலடித் தான்சில வள்ளு கிரால்
கண்டப்படுத் தான்சில காலனுங் காண வுட்குந்
துண்டப்படை யாற்சில துண்டதுண் டங்கள் கண்டான்

இ - ள். பிறைவாள் எயிற்றான் - பிறைச்சந்திரனைப்போல ஒளிபொருந்திய வக்கிரதந்தங்களையுடைய இராவணனது, சண்டம் - வேகத்தையுடைய, தாரை சரம் மாரி - ஒழுங்காகிய பாணவருஷமானது, மண்ட - நெருங்க, சில - (அவற்றுட்) சிலபாணங்களை, சிறகால் அடித்தான் - சிறகுகளினாலே அடித்தான், சில வள் உகிரால் கண்டம் படுத்தான் - சிலபாணங்களைக் கூரிய நகங்களால் துண்டங்களாகச் செய்தான், சில - சிலபாணங்களை, காலனும் காண உட்கும் - யமனும் பார்ப்பதற்கு அஞ்சுகின்ற, துண்டம் படையால் - (தனது) நாசியாகிய ஆயுதத்தால், துண்டம் துண்டங்கள் கண்டான் - பலதுண்டங்களாக்கினான். உகிர் - சந்தநோக்கி உகிரென விகாரப்பட்டது. (௧௦௯)

மீட்டும்மணு காநெடு வெங்கண னந்த நாகம்
வாட்டுங்கலு ழன்னென வன்றலை பத்தின் மீது
நீட்டுந்நெடு மூக்கெனு நேமியன் சேம விற்கால்
கோட்டும்மள வின்மணிக் குண்டலங் கொண்டெ ழுந்தான்

இ - ள். மீட்டும் அணுகா - (அச்சடாயு) திரும்பவும் நெருங்கிவந்து, நெடுவெங்கண் - பெரிய கொடிய கண்களை யுடைய, அநந்தம் நாகம் - அநேக நாகங்களை, வாட்டும் - வாட்டச்செய்கின்ற, கலுழன் என - கருடனைப்போல, வன் தலை பத்தின் மீது நீட்டும் - (இராவணனது) வலியதலைகள் பத்தின்மேலும் நீட்டுகின்ற, நெடுமூக்கு எனும் நேமியன் - பெரிய மூக்கென்கின்ற சக்கராயுதத்தை யுடையானாகி, சேமம் வில் கால் - சேமித்து வைத்திருக்கும் வில்லினது காலை, கோட்டும் அளவில் - வளைக்கின்ற அளவில், மணி குண்டலம் கொண்டு எழுந்தான் - (அவனது) இரத்நகுண்டலங்களை(ப் பறித்து)க்கொண்டு கிளம்பினான்.

குறிப்பு — நாகம் - இராவணனது தலைகளுக்கும், கலுழன் - சடாயுவுக்கும் உவமை. அறுக்க அறுக்கத் தலைகள் உதித்துவருவதால் அநந்த நாகங்களை உவமை கூறியதோடு வன்றலையென்றுங் கூறினார். அறுத்துத்தள்ளிய செயல்விளங்க மூக்குக்கு நேமியை உவமைகூறினார். சேமவில் என்றதால் சரமாரியைப்பொழிந்த முன்னைய வில் ஒடிபட்டது குறிப்பிக்கலாயிற்று. சேமவில் - முன்னைய வில்லொடிந்த விடத்து உபயோகப்படுத்தற்கு வைத்திருக்கும் வில்லாம். வில்கால் - வில்லினது அடிப்புறம். இனி, வெங்கணனந்த என்றதை வெங்கணன் அநந்த எனப்பிரித்து வெங்கணன் என்றற்கு வெவ்விய கண்களையுடைய சடாயு என்று பொருள்கூறலும், அநந்த என்பதைக்கலுழனோடு கூட்டிப் பொருள்காணலு மமையும். (௧௧௦)

எழுந்தானறட மாரபினி னேழினொ டேழு வாளி
யழுந்தாது கழன்றிடப் பெய்தெடுத தாரத ரக்கன
பொழிந்தானபுகா வாளிகண மீளவும போரச்ச டாயு
விழுந்தானெனை வஞ்சினா விணணவா வெயது யிரத்தா.

இ-ள. எழுந்தான் தடம மாரபில் - (குண்டலத்தைப் பறித்துககொணடு) எழுந்த சடாயுவினது விசாலமானமாாபிலே, அரககன - இராவணன, அழுந்தாது கழன றிட - பதிநது போகாமல உருவி வெளிப்படுமபடியாக, எழினெடு எழுவாளி எடு தது பெயது ஆரதது - பதினனகு பாணஙகளை யெடுததுபபிரயோகஞசெயதும ஆர வாரஞசெயதும், மீளவும - திருமபவும், புகாவாளிகள பொழிநதான - நிறம பொ ருநதிய அமபுகளைப்பெயதான, போா சடாயுவிழுநதான என - போரைப்புரிநத சடாயு வீழநதுவிடடான எனறு, அஞசினா விணணவா - பயநததேவாகள, வெ யது உயிாததா - வெம்மையதாகப் பெருமூசசு விடடாாகள.

குறிபபு—புகா - நிறம, "புகரிணா வேஙகை வீகண்டன்ன" [பெரும்பா ணாற்றுப்படை 194]. (கருக)

புணணிறபுது நீாபொலி யபபொழி புள்ளின வேநதன
மணணிறகா னேமுத லோருதி ரததின வாரிக
கணணிறகட லெனறு நுகாநதது கானறு மீள
விணணிறபொலி கினறதொா வெணணிற மேக மெனன.

இ-ள. புணணில - (அமபுநுழைநத) புண்ணிலிருநது, புதுநீா - ஆறறி றினது புதுபபுனல போனற இரததமானது, பொலிய பொழி - மிகுதியாகசசொ ரிகினற, புளளின வேநதன - பறவைகளுககரசனுகிய சடாயு, காளே முதலோா உதிரததின வாரி கணணில - கரனே முதலாகிய அரககாகளுடைய இரததததாலா கிய கடலினிடததில, ஓா வெள நிறம மேகம-ஒருவெணமை நிறமபொருநதிய மேக மானது, கடல எனறு நுகாநதது - (அதனை யியறகையாயுளள) கடலெனறு கரு திககுடிதத அரதததை, மணணில் கானறு - பூமியில உமிழநது விடடு, விணணில பொலிகினறது எனன - ஆகாயததில விளஙகுகினறதெனறு கூறுமபடி

குறிபபு:—ஆறறிற புதிதாய வருமபுனல கலஙகலாயச செநநிறம பொருநதி மிகபபெருககுறறு வேகமாய வருநதனமைபோல அரததபபெருககுறறதெனக புதுநீா - அதுபோனற அரதததுககு ஆகுபெயா, வெணணிறமேகம - சடாயு வின உடலுககும, இடை யிரணடடிகளிற குறிததவை அரதததின மிகுதிக்கும சொரிநத செயலுககும உவமை. (கருஉ)

ஒததானுட னேயுயிாத தானுருத தான வன்றோள
பததோடெத தின்னெடுமே பததியிற றததி மூககாற
கொததாககத தாறகுடை யாசசிறை யாறபு டையா
மூததாா மாாபிற கவசததையு மூட்ட றுததான்.

இ-ள. ஒததான - (அவவாறு வெணமேகமெனனும்படி) ஒத்த சடாயு, உயி ராததான உருததான - பெருமூசசெறிநது கோபிததான; அவன் தோள பத்தோடெத

தின் நெடு பதநியில் - அவ்விராவணனது இருபது புயஙகளினுடைய நீணட வரி சையில், தததி - பாயநது, மூசகால கொததா - மூசகின்ற கொததியும், ககததால குடையா - நகஙகளாற குடைநதும, சிறையால புடையா - சிறகுகளா லடித்தும, முதது ஆரம மாாபில - முத துமாலையையணிநத (அவனுடைய) மாாபிலிருககிற, கவசததையும்—, மூட்டு அறததான - மூடடு அறுமபடிசெயதான

குறிப்பு'—மூட்டு - பொருதது. [தைப்பா லொனறோடொனறு பொருநதிய இடம]. (௧௧௩)

அறுததானை யரககனு மைமபதொ டைம்ப தமபு
செறிததானறட மாாபிற் செறிததலுந தேவ ரஞசி
வெறிததாவெறி யாமு னிராவணன விலலைப பலலாற
பறிததானபற வைககிறை விணணவா பணணை யாாபப.

இ - ள். அறுததானை - (அவ்வாறு கவசததை) அறுதத சடாயுவை, அரகக னும்- இராவணனும, ஐமபதொடு ஐ்மபது அமபு செறிததான் - நூறுபாணஙகளால் அடககினுன, தடம மாாபில் செறிததலும- (அபபாணஙகள அசசடாயுவின) பெரிய மாாபில மூழகியவளவில, தேவா அஞசி வெறிததாா - தேவாகள பயநது மயககுற ரூாகள, வெறியாமுன - (அபபடி அவாகள) மயஙகாததறகுமுன்பே, பறவைககு இறை - புளளின வேநதனுகிய சடாயு, விணணவா பணணை ஆாபப - தேவா துா துபி முழஙகுமபடியாக, இராவணன விலலை பலலால பறிததான -இராவணனுடை ய விலலைத (தனது) பலலினுற கடிததுப பிடுஙகினுன்.

குறிபபு —செறிததல - அடககல, ' செப்பல வணமையிற செறிததியான கட வலின" [குறிஞ்சிப்பாட்டு 12] பணணை - பறைபொது, பணனுடைமைபறறி இபபெயா போநதது பணையெனபதும அது இனி, பணணை - மகளிா கூடட முமாம (௧௧௪)

எலலிடடவெள் ளிககயி லைபபொருப் பீச னோடு
மலலிடடதோ ளாலெடுத தானசிலை வாயின வாஙகி
விலலிடடு யாநத நெடுமேக மெனபபொ லிநதான
சொலலிடட வனறோள் வலியாருளா சொலல வலலாா.

இ - ள. ஈசனோடும்-சிவபிரானுடனே, எல் இட்ட வெளளி கைலை பொருபபு ஒளி வீசிய வெணபொனனுகிய கைலாசகிரியை, மல இடட தோளால - வலிமிகக தோளகளால், எடுததான - எடுததராவணனது, சிலை - விலலை, வாயினவாஙகி - வா யாலிழுததுககொணடு, வில் இடடு உயாநத நெடுமேகம என - வானவிலலைககாட டிககொணடு மேலெழுநத பெரிய மேகமபோல, பொலிநதான - விளஙகினவனுகி, சொல இட்டவன - புகழைப்பூணடவனுகிய சடாயுவினது, தோளவலி சொலல வலலாா - புயவலியைசசொலலவலலவாகள, யாா உளா - யாவா இருக்கினறூாகள?

மீளாநிறத தாயிரக் கணணவன விணணி னோட
வாளாலொறுத் தானசிலை வாயிடை நின்றும வாஙகித

தாளாலிறுத் தான்றழல் வண்ணன் றடக்கை வில்லைத்
தோளாலிறுத் தானறுணைத் தாதைத னன்பிற் றோழன்

இ - ள் மீளா நிறத்தது - திரும்பாத மார்பினையுடைய, ஆயிரம் கண்ணவன் - ஆயிரங் கண்களையுடைய இந்திரன், விண்ணின் ஓட - ஆகாயத்தில் (புறங்காட்டி) ஓடும்படியாக, வாளால் ஒறுத்தான் - வாளினால் வருந்தச்செய்த இராவணனுடைய, சிலை - வில்லை, தழல்வண்ணன் தடம் கையில்லை - அக்கினிபோலுஞ் செய்யதிறத்தை யுடைய சிவபிரானது பெரியகையிலிருந்த வில்லினை, தோளால் இறுத்தான் - கையால் ஒடித்த ஸ்ரீராமபிரானுக்கு, துணைதாதை தன் - ஒப்புத்தகப்பன் [தகப்பனை ஒப்பவன்] ஆகிய தசரதச்சக்கரவர்த்தியினது, அன்பில் - அன்பினிடத்தில், தோழன் - நட்பினையுடைய சடாயு, வாயிடைநின்றும் வாங்கி - (தன்) வாயிலிருந்து எடுத்து, தாளால் இறுத்தான் - கால்களால் ஒடித்தான்.

குறிப்பு — மீளாநிறம் என்றது - புறங்காட்டாமையை. மூன்று நான்காமடிகளிற்குறித்த விஷயம் வில்லின்பெருமை விளக்கின்றது. ஸ்ரீராமபிரானுக்கு இச்சடாயு தான் தகப்பன் என்பதற்குத் தகுதியுடையவன், பெற்ற தகப்பனோ, இவனைப்போல அன்புகொண்டு உயிரையோம்பா துழைத்து உதவிசெய்தானல்லனாதலின் அவன்பேருக்குமட்டே தகப்பனாவான் என்பார் 'துணைத்தாதை' என்றார். துணை - ஒப்பு, "பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை, துணையுற வறுத்து" [திருமுருகாற்றுப்படை 236 237] (௧௧௬)

ஞாலம்படுப் பான்றன் றாற்றலுக் கேற்ற நல்வில்
மூலம்மொடிப் புண்டது கண்டு முனிந்த நெஞ்சன்
ஆலம்மிடற் றான்புர மட்டதோ ரம்பு போலுஞ்
சூலம்மெடுத் தானெறிந் தான்மறந் தோற்றி லாதான்.

இ - ள் ஞாலம்படுப்பான் - உலகத்தை அழிக்க விரும்புவோனாகிய இராவணன், தனது ஆற்றலுக்கு ஏற்ற - தன்னுடைய வல்லமைக்குத் தக்கவையான, நல்வில் - நல்ல வில்லுகள், மூலம் ஒடிப்புண்டது கண்டு - அடியோடு ஒடிபட்ட செயலைப்பார்த்து, முனிந்த நெஞ்சன் - கோபித்த மனத்தினை யுடையவனாகி, ஆலம் மிடற்றான் - நீலகண்டனாகிய சிவபிரானுடைய, புரம் அட்டது ஓர் அம்பு போலும் - திரிபுரத்தவரைக் கொன்ற ஒரு அம்பை ஒப்பாகின்ற, சூலம் எடுத்தான் எறிந்தான் - சூலாயுதத்தையெடுத்து வீசியெறிந்து, மறம் தோற்று இலாதான் - (தனது) வலிமையில் தோல்வியடைந்திலலாதவனாயினான். (௧௧௭)

ஆற்றானிவ னென்றுண ராதென தாற்றல் காணென்
றேற்றானொரு வைக்கிறை முத்தலை யெஃக மார்பின்
மேற்றானிது செய்பவர் யாரென விண்ணு ளோர்க
டோற்றாதுதின் றாதம் தோள்புடை கொட்டி யார்த்தார்.

இ - ள் எருவைக்கு இறை - கழுகுக்கரசனாகிய சடாயு, (இராவணனைப் பார்த்து), இவன் - இச்சடாயு, ஆற்றான் என்று உணராது - (இச்சூலத்திற்கு எதிர்நிற்க) வலியில்லானென்று நினையாமல், எனது ஆற்றல் காண் என்று - (நீ) எனது வலிமையைப் பாரென்று கூறி, முத்தலை எஃகம் - (அந்த மூன்றுதலையையுடைய

சூலத்தை, மார்பின்மேல் தான் ஏற்றான் - (தனது) மார்பின்மேற் கொண்டான், விண் உளோர்கள் - (அதனைப்பார்த்த) ஆகாயத்திலிருக்கிற தேவர்கள், இது செய்பவர் யார் என - இப்படிச் சூலத்தை மார்பிலேற்றுக்கொண்டு இச்செயலைச் செய்பவர் (இச்சடாயுவைத்தவிர மற்றையோர்) யாவர்? என்று, தோற்று நின்றார் - (தம் மனத்துப்) புலப்படாமல் (பிரமித்து) நின்று (தாங்கொண்ட மகிழ்ச்சியால்), தம் தோள் புடை கொட்டி ஆர்த்தார் - தங்களுடைய புயங்களினிடத்தே (கையால் பலமுறை) தட்டிக்கொண்டு பேரொலிசெய்தார்கள்.

குறிப்பு — ஆற்றான் - வலியில்லான், தோற்றான், "தார்தாங்குதலு மாற்றார்" [புறப்பாட்டு 93]. (௧௧௮)

பொன்னோக்கியர் தம்புல னோக்கிய புன்கணோரு
மின்னோக்கிய ரில்வழி யெய்திய நல்விருந்துந்
தன்னோக்கிய நெஞ்சுடை யோகியர் தன்மை சார்ந்த
மென்னோக்கியர் நோக்கமு மாமென மீண்ட தவ்வேல்.

இ - ள். அவ்வேல் - அந்த முத்தலைவேலானது, பொன் நோக்கியர் தம்புலன் நோக்கிய புன்கணோரும் - பொன்னின் மேலே விருப்பத்தையுடைய பெண்களாகிய விலைமாதர்களுடைய ஐம்புல னின்பத்தைவிரும்பிய தரித்திரர்களும், இன் நோக்கியர் இல் வழி எய்திய நல் விருந்தும் - இனிய பார்வையையுடைய (நற்குண) மனைவியரில்லாத இடத்தில் அடைந்த விருந்தினர்களும், தன் நோக்கிய நெஞ்சு உடை - தன்னிலைமையையே கருதிய மனத்தினையுடைய, யோகியர் தன்மைசார்ந்த - யோகத்தவர்களுடைய நிலைமையையடைந்த, மெல் நோக்கியர் - மென்மைத் தன்மைபொருந்திய பார்வையையுடைய கற்புடைப் பெண்களினது, நோக்கும் என - பார்வையும் (திரும்புதல்) போல், மீண்டது - திரும்பியது.

கருத்து — தன் மார்பைக்காட்டிக் காத்துக்கொண்டிருந்து தன்பால் வந்தோன் பொன்னுடையனாயிற் புணரும் விலைமாதைப் பொன்னில்லான் அடுத்துப் பொன்னில்லாக்குறையால் அவளைப்புலற்கிடமின்றித் திரும்பிப் போதல்போல் அவ்வேலானது சடாயுவின் மார்பிற் புணர்தற்கு வலியில்லாக்குறையால் ஊடுருவிப் பாயாமலும், விருந்துண்ண வந்த வீட்டில் தலைவி முகமலர்ச்சி காட்டியுபசரியாமற் போனால் விருந்தினர் உணவுகொள்ளாமற் றிரும்புதல்போல அவ்வேலானது தனக்கு விருந்தாகச் சடாயுவின் மார்பு கிடைத்தும் அச்சடாயுவின் முகம் அம்மார்பைப்போலத் தன்னெதிருறாமல் ஒருபாற் சாய்ப்பாக இருத்தலின் அம்முகத்தின் உபசரிப்பாகிய பேறுகிட்டாமலும் திரும்பியது தவிர, யோகியர் எண்ணம் பிறபொருளிற் செல்லாது ஈசனையே யடைதல் போலத் தன் நாயகனையே கருதியிருக்கிற கற்புடைப்பெண்களினுடைய பார்வையானது பிறரைப்பாராமல் நிலத்தைநோக்குதல் போலத் தலைகவிழ்ந்து நிலத்தில் வீழ்ந்ததென்பதாம்.

குறிப்பு — பொன்னில்லான் எத்தகையனாயினும் அவன்மேற் சிறிதும் மனங்கொள்ளாது பொன்னுள்ளானையே விலைமாது விரும்புவளென்பார் 'பொன்னோக்கிய' ரென்றார், பிரிநிலையேகாரந் தொக்குத்தல். "வீபொருளானை யகன்று பின்னுமோர் மாபொருளான் பக்க மாண நயத்தலின், மேய்புலம் புல்லற மற்றோர் புலம்புகு மாவும் புரைய மலரன்னவுண்கணார்" என்றார் வளையாபதியினும். புலம் - சுவை, ஒளி,

ஊறு, ஓசை, நாற்றம் என ஐந்து. "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள" என்றவாறு கண்ணுறகண்டுமே, காதாற்கேட்டுமே, நாவாலுண்டுமே, மூக்கால் மோந்தும், மெய்யாற் றீண்டியும் அனுபவிக்கும் இன்பங்களனைவை "பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி, லேதில் பிணந்தழீஇ யற்று" என்றவாறு பிணத்தை யொத்த விலைமாதர்பாற் கிடக்குமென்று விரும்பியது அவர் அறிவீனமேயாம் என்பது விளங்கத்தெரிந்திரா என்னும் பொருள் மாத்திரம் விளங்கும் ஓர் சொல்லைப்புணர்த்தார் 'புன்கணோர்' என்றார் இன்-இனிமையின் றிரிபு. விருந்தினரை வேறுபாடில்லாத அன்பையுடைய கணவனும் மனையாளுங்கூடி உபசரிக்கவேண்டு மாதலின் 'இல்வழி' என்றார். இது பற்றியே நாயனார் அன்புடைமையென்னும் அதிகாரத்துக்குப் பின்னர் விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தை வைத்து, "இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி, வேளாண்மை செய்தற் பொருட்டு" என்றார். மனைவிவேறுபாடற்ற அன்பினையுடையாளாயின் இல்லறம் நடந்தேறு தென்பதை "மருவிய காதன் மனையாளுந் தானும், மிருவரும் பூண்டுபபி னல்லா—லொருவரா, லில்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடு, செல்லாது தெற்றிற்று நின்று" என்பதனாலறிக. விருந்தினர் மகிழ முகமலர்ந்து இன்சொல் கூறி உபசரித்த வின்றியமையாதது என்பது தோன்ற 'இனைநோக்கியா' என்றார் "மோப்பக்குழையு மனிச்ச முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து" என்த் திருக்குறளினும், "இல்லாமை கந்தா விரவு துணிந்தொருவர், செல்லாரு மல்லா சிறுநெறி—புல்லா, வகம்புகுமி னுண்ணுமி னென்பாமாட டல்லான், முகம்புகுத லாற்றுமோ மேல்" என நாலடியாரினும் கூறினமைகாண்க தன்னோக்கிய நெஞ்சு தான் கொண்ட யோகநிலையிற் குறித்த பொருளையே கருதியமனம் [இந்தயோக நிலையை மாரீசன்வதைப் படலம் 103-வது செய்யுளின் உரையின் கட்காண்க] இவ்யோகியர் மனம் பிறபொருளிற் செல்லாது குறித்த கடவுளையே நாடுதல் போலக்கற்புடைப்பெண்டிர் தமது கணவனையே கருதுவாராதலின் 'யோகியர் தன்மைசார்ந்த' என்றார். (கககூ)

வேகமுடன வேலிழந் தானபடை வேறெ டாமுன
மாகமமறை யுமபடி நீணட வயங்கு மான்றோப
பாகனறலை யைபபறித துபபடா கறபி னுளபான
மோகமபடைத தானுளை வெயத முகத்தெ றிநதான.

இ - ள் வேல இழநதான - (அமமுத்தலை) வேலை யிழந்தராவணன், வேகம் உடன் - விரைவோடு, வேறு படை எடாமுன - மற்றொரு ஆயுதத்தை எடுக்காததற்குமுன்பு, மாகம் மறையும்படி நீணட - ஆகாயம் மறைந்துபோமபடியாக உயர்ந்து சென்ற, வயங்கு- பிரகாசிக்கின்ற, மான தோ பாகன- குதிரைகளைப்பூட்டிய தேரை நடத்துஞ் சாரதியினுடைய, தலையை—, பறித்து - கொய்து, படாகறபினுளபால மோகமபடைத்தான - மிகுந்த கற்பினையுடைய சீதாபிராட்டியிடத்து மோகத்தையடைந்த இராவணனை, உளைவு எய்த - வருத்தமடையும்படியாக, முகத்து எறிந்தான- (அவனுடைய) முகத்தின்மேல் வீசி யடித்தான.

குறிப்பு —வயங்கல - நடத்தலுமாம வேகமுடன் - அருகிய விதி (கஉ0)

எறிந்தானது நோக்கி யிராவண னெஞ்சி னுற்ற
லறிந்தானமுனிந் தாணடதொ ராடகத் தண்டு வாங்கிப

பொறிந்தாங்கெரி யின்சிகை பொங்கி யெழப்பு டைத்தான
மறிந்தானொரு வைகக்கிறை மாலவரை போல மண்மேல.

இ-ள் எறிந்தான அது - சடாயு வீசி எறிந்த அத்தலையை, இராவணன—, சோகஸி - பார்த்து, நெருங்கின ஆற்றல அறிந்தான முனிந்து - (அச்சடாயுவின) மனத்தினது தைரியத்தை அறிந்து கோபித்து, ஆண்டு - அப்பொழுது, ஒரு ஆட்கம் தண்டு வாங்கி - ஒரு பொனனுலாகிய தண்டாயுதத்தை யெடுத்து, பொறிந்தாங்கு - (நெருப்புபொறிகள்) பொறிந்தாற்போல, எரியின சிகை பொங்கி எழ - அக்கினிச் சுவாலை யதிகரித்து எழும்படி, புடைத்தான - (சடாயுவை அத்தண்டாயுதத்தால) அடித்தான, எருவைக்கு இறை - (அந்த அடிபட்டதால) கழுகுக்கு அரசனாகிய சடாயு, மண்மேல - பூமியில, மாலவரைபோல - பெரிய மலையைப்போல, மறிந்தான - கீழ்மேலாக(ச் சுழன்று) விழுந்தான

குறிப்பு —மறிதல - கீழ்மேலாதல; "மலைபுரையானை மறிந்து" [புறப்பொருள் வெண்பாமாலை, தும்பைப்படலம், தாரிலை] (௧௨௧)

மண்மேலவிழுந் தானவிழ லோடு வயங்கு மான்றோ
கண்மேலொளி யுந்தொட ராவகை தானக டாவி
விண்மேலெழுந் தானெழ மெலலிய லாளும வெந்தீய
புண்மேனுழை யததுடிக் கின்றனள போறபு ரண்டாள.

இ-ள். மண்மேல விழுந்தான விழலோடு - (அவ்வாறு) பூமியில்விழுந்த சடாயு விழுந்தவுடனே, தான-அவ்விராவணனே, கண்மேல ஒளியும் தொடராவகை- கண்ணிலுள்ள ஒளியாகிய திருஷ்டிப் பார்வையும் பின்பற்றிச்செல்லாவண்ணம் [அதிவேகமாக], வயங்குமான் தோ - பிரகாசிக்கின்ற குதிரைகளைப்பூட்டிய இரதத்தை, கடாவி - நடத்தி, விண்மேல எழுந்தான - ஆகாயத்திற கிளம்பினான, எழ - (அவ்வாறு அவன் ரதத்தைநடத்தி மேலே) எழுந்ததால, மெலலியலாளும்-மென்மைத்தன்மையை யுடையாளாகிய சீதாபிராட்டியும, வெந்தீ - கொடிய தீயானது, புண்மேல நுழைய - புண்ணினகண நுழைந்ததால, துடிக்கின்றனளபோல - துடிக்கின்றவளைப்போல, புரண்டாள - (மேன்மேலும் துன்பமவந்துற்றதால துடிதுடித்து நிலத்திலவீழ்ந்து) புரளுதலுற்றாள. (௧௨௨)

கொழுந்தேயனை யாள்குழைந் தேங்கிய கொள்கை கண்டா
னழுந்தேலவ லத்திடை யஞ்சலை யனன மென்று
வெழுந்தானுயிர்த் தானட வெங்கினிப் போவ தென்று
விழுந்தானவன் றேர்மிசை விண்ணவர் பண்ணை யார்ப்ப.

இ-ள் கொழுந்தே அனையாள - இளந்தளிரையேயொத்த சீதாபிராட்டி, குழைந்து ஏங்கிய கொள்கைகண்டான - உருகுலைந்து அழுதசெய்கையைப்பார்த்த சடாயு, ஐ அனனம - அழகிய அன்னப்புள் போன்றவளே! அவலத்து இடை அழுந்தேல - துயரத்தில முழுகாதே, அஞ்சல - அஞ்சாதே, என்று எழுந்தான - என்று சொல்லிக்கொண்டு எழுந்தான, உயிர்த்தான - பெருமூச்சுவிட்டான, அட - அடா! இனி, போவது எங்கு—? என்று - என்று கூறி, விண்ணோர் பண்ணை ஆர்ப்ப - தேவர் கூட்டம்பேரொலிசெய்யும்படி, அவன தேர்மிசை - அவனுடைய இரதத்தின்மேல், விழுந்தான - வீழ்ந்தான. (௧௨௩)

பாயநதானவன் பனமணித தணடு பறிததெ றிநதா
னேயநதாாகதித தோபபரி யெட்டினே டெடடு மெஞசித
தீநதாசற வீசிபத திணடிறற றுணட வாளாற
காயநதானகவாந தானுயிா காலனுங கைவி திாததான

இ - ள பாயநதான - (அவவாறு) பாயநத சடாயு, அவன பலமணித தணடு பறிதது எறிநதான - அவனுடைய பல ரததினஙகளபொருநதிய தணடாயுததைத [முறகூறிய பொறறணடினை]ப பிடுஙகி வீசியெறிநதான, எயநது ஆாகதி - பொருநதியிருககினற வேகததினையுடைய, தோ பரி எடடினேடு எடடும - தேரிறகடடிய குதிரைகள பதினாறும, எஞசி - வலிமைகுறைநது, தீநது - கருகுதலுறறு, ஆசு-சடுதியில, அற - அறபடடொழியுமபடி, திணதிறல - வலிமையையுடைய, அ துணடம வாளால வீசி - அநத ஒபபறற வாளாயுதததினாலே வீசி, காயநதான - கோபிததான, உயிாகவாநதான காலனும - (அககுதிரைகளின) உயிரைததிருடடுததனமாயக கொளளைகொணட யமனும, கைவிதிாததான - கை நடுககமுறறான. (கஉச)

திணடேரழித தாஙகவன றிணபுறஞ சோநத தூணி
விணடானமறைப பசசெறி கினறன விலவி லாமை
மணடாரமா தானவழங காமையில வசசை மாககள
பணடாரமொக கினறன வளளுகி ராறப றிததான

இ ள திணதோ அழிதது - வலிய இரததை நாசபபடுததி, அவன திணபுறம சோநத - அவனுடைய வலிய முதுகிற சோநதனவும, விணமறைபப செறிகினறன - ஆகாயததை மறைககுமபடி நெருஙகுகினறவைகளும, வில இலாமை - வில இலலாமல, மணடி ஆா அமா வழஙகாமையில - மிகுதியான அரிய போா நடவாமையால, வசசைமாககள பணடாரம ஒககினறன - உலோபிகளுடைய பொககிஷததை ஒககினறவைகளுமாகிய, தூணி - அமபுபபுடடிலகளை, வள உகிரால பறிததான - கூரிய நகஙகளாற பிடுஙகினான

குறிபபு — ஆஙகு, தான, தான - அசைகள. மணடுதல - நெருஙகுதலுமாம உலோபிகளிடததுள்ள திரவியப பொககிஷம நலலோருககு ஈதறபொருடடுக கை வைககபபடாமலிருககினறதுபோல அரியபோாககுதவியாகுமபொருடடு விலலில லாககுறையால அமபுபபுடடிலகள கைவைககபபடா திருககினறன எனபதும, அஙஙனம நலலோாககுதவியாகாத உலுததா திரவியம இழநதுவிடபபடுதலபோல அவவமபறாததூணிகளும இழககபபடடன எனபதும விளஙக 'வசசைமாககள பணடாரமொககினறன' எனறாா. "ஈததுவககு மினப மறியாாகொ லுமுடைமை, வைததிழககும வனக ணவா" என நாயனாரும, "மழுககு வாககே பயனபடுவாாவறிதும வறியாாகிடடா கயவா" என விநாயகபுராணததாருங கூறினமை காணக. (கஉரு)

மாசசிசசிரம பாயநதவன மாாபினுந தோளகண மேலு
மோசசிசசிற காறபுடைத தானகடித தானு லேயா
மூசசிறற விராவண னுமமுடி சாயநதி ருநதான
போசசிததனே போலுமின றுறற லெனபபு கன்றான.

இ - ள். அவன் சிரம் பாய்ந்து மாச்சி - அவ்விராவணனுடைய தலைகளின் மேற்பாய்ந்து வருந்தப்படுத்தி, மார்பினும் தோள்களின்மேலும் - (அவனுடைய) மார்பிலும் தோள்களிலும், ஓச்சி - செலுத்தி, சிறகால் புடைத்தான் - சிறகுகளால் அடித்து, கடித்தான் - (வாயால்) கடித்தான், (அதனால்), உலைபா - நிலை குலைந்து, மூச்சு இற்ற - சுவாசம் விடுதலற்றுப் போன, இராவணனும் —, முடிசாய்ந்து இருந்தான் - தலை சாய்ந்திருந்தான், (அதனைக்கண்ட சடாயு அவனை நோக்கி), நின் ஆற்றல் போச்சு - உன் வலிமை கெட்டுப் போயிற்று; இத்தனைபோலும் என் புகன்றான் - (உன் வலிமை) இவ்வளவு தான் போலிருக்கிறது என்று கூறினான்

குறிப்பு —மாய்த்து, போயிற்று என்பன - மாச்சி, போச்சு என மருஉ. (௧௨௩)

அவ்வேலையி னேமுனிந் தான்முனிந் தாற்ற லன்ன
வெவ்வேலரக் கன்விட லாம்படை வேறு காணா
னிவ்வேலையி னேயிவ னின்னுயி ருண்பெ னென்னாச்
செவ்வேபிழை யாநெடு வாளுறை தீர்த்தெ றிந்தான்.

இ - ள். அவ்வேலையினே முனிந்தான் - (அவ்வாறு சடாயு வார்த்தை சொல்லும்) அந்த வேளையிலேயே கோபித்தான், முனிந்து - (இதற்கு முன் இவ்வாறே) கோபித்து, ஆற்றல் அன்ன - (தனது) வல்லமையை யொத்திருந்த, வெவ்வேல் அரக்கன் - கொடிய (முத்தலை) வேலினையுடைய இராவணன், விடல் ஆம் படை வேறு காணான் - விடத்தக்கதாகும் ஆயுதம் வேறொன்றுங் காணாதவனாகியும், இவ்வேலையினே - இப்பொழுதே, இவன் இன் உயிர் உண்பென் என்னா - இச்சடாயுவினுடைய இனிய உயிரை உண்பேன் என்று கூறியும், செவ்வே - நடுநீதியாக, பிழையா - (எவர்மீது செலுத்தினாலும் அவரைக்கொல்லுந் தொழிலில்) தப்பிப் போகாத, நெடுவாள் - (சந்திரஹாசம் என்னும்) பெரிய வாளாயுதத்தை, உறை தீர்த்து - உறையினின்றும் எடுத்து, எறிந்தான் - வீசினான்.

குறிப்பு —சடாயுவின் ஆண்மையைக்கண்டு அவனை வெல்லத்தக்கதோர் ஆயுதம் ஒன்றுங்காணாமையால் முன்னர் முத்தலைச்சூலம் எவ்வாறு வெட்டுற்று நிலத்தை நோக்கியதோ அவ்வாறு தலைகவிழ்ந்து நிலத்தைநோக்கி ஆலோசனை செய்தான் என்பார் 'முனிந்தாற்றலன்ன வெவ்வேலரக்கன்' என்றார் (௧௨௪)

வலியின்றலை தோற்றிலன் மாற்றருந் தெய்வ வாளா
னலியுந்தலை யென்றது வன்றியும் வாழ்க்கை நாளு
மெலியுங்கடை சென்றுள தாகலின் விண்ணின் வேந்தன்
குலிசம்மெறி யச்சிறை யற்றதொர் குன்றின் வீழ்ந்தான்.

இ - ள். வலியின்தலை தோற்றிலன் - (தன்) வலிமையினிடத்துத் தோல்வி பெற்றிலாதவனாகிய அச்சடாயு, மாற்றரும் - தடுத்து வேறுபடுத்தற் கருமையான, தெய்வம் வாளால் - கடவுளினது வாளாயுதத்தால் [சிவபிரானுடைய வாளினாலே], நலியுந்தலை என்ற அது அன்றியும் - மெலிந்து வருந்துகின்ற இடம் என்று விதித்த அவ்விதியல்லாமலும், வாழ்க்கைநாளும் - வாழ்ந்திருத்தற்குரிய ஆயுள்நாட்களும், மெலியும் - குறைவுபடுகின்ற, கடைசென்று உளது ஆகலின் - அந்தியகாலம் வந்திருக்கிறதாதலாலும், விண்ணின்வேந்தன் - வானவர்க்கரசனாகிய இந்திரன், குலிசம்

எறிய - வச்சிராயுதத்தை வீச, (அதனால்), சிறை அற்றது ஓர் குன்றின் - சிறகு அறுப்போனதாகிய ஒரு மலையைப்போல் வீழ்ந்தான் - (சிறகுகள் அறுபட்டு) விழுந்தான். (௧௨௮)

விரிந்தார்சிறை கீழுற வீழ்ந்தனன் மண்ணின் விண்ணோ
ரிரிந்தாரிழந் தாடுணை யென்னமு னிக்க ணங்கள்
பரிந்தார்பட்டர் விண்டுவி னாட்டவர் பைம்பொன் மாரி
சொரிந்தாரது நோக்கிய சீதை துளக்க முற்றாள்

இ - ள். விரிந்த ஆர்சிறை கீழ் உற மண்ணின் வீழ்ந்தனன் - விரிவுற்று நிறைந்த சிறகுகள் (அறுபட்டுக்) கீழேயடைய (அச்சடாயு) பூமியில் வீழ்ந்தான், விண்ணோர் இரிந்தார் - வானவர்கள் ஓடினார்கள், துணை இழந்தாள் என்ன - (சீதாபிராட்டி) உதவி யற்றாளாயினாளென்று, முனி கணங்கள் பரிந்தார் - முனிவர் கூட்டத்தினர் இரக்க முற்றார்கள், விண்டுவின் நாட்டவர் பைம்பொன் மாரி சொரிந்தார் - ஸ்ரீமகாவிஷ்ணுவின் நாடாகிய திருவைகுந்த மா நாட்டிலுள்ளவர்கள் பசிய சுவர்ண புஷ்பமழையைப் பொழிந்தார்கள்; அது நோக்கிய சீதை துளக்கம் உற்றாள் - அச்செயலைக்கண்ட சீதாபிராட்டி நடுக்கமடைந்தாள். (௧௨௯)

வெள்குற்றரக்கன் னெடு விண்புக வார்த்து மிக்கான்
றொள்கின்றலை யெய்திய மானெனச் சோர்ந்து நைவா
ளுள்கும்முயிர்க் கும்முயங் கும்மொரு சார்பு காணாள்
கொள்கொம்பொடி யக்கொடி வீழ்ந்தது போற்கு லைந்தாள்

இ - ள். வெள்கும் அரக்கன் - (சடாயுவின் ஆற்றலுக்கிளைத்தமையால்) நாணமடையா நின்ற இராவணன், நெடு விண்புக ஆர்த்து மிக்கான் - (தனது சப்தமானது) பெரிய ஆகாயத்தினகண் நுழையும்படி பேரொலிசெய்து உயர்ந்தவனாயினான்; தொள்கின் தலை எய்திய மான் எனச் சோர்ந்து நைவாள் - வலையினகண் சேர்ந்த மான் போலத் தளர்வுற்று மெலிந்து வருந்தும் சீதாபிராட்டி, உள்கும் - (இனி யாது செய்வதென்று) நினைப்பாள், உயிர்க்கும் - பெருமூச்சுவிடுவாள், உயங்கும் - வருந்துவாள், ஒருசார்பு காணாள் - ஒருதவியுங் காணாதவளாய், கொள் கொம்பு ஒடிய கொடிவீழ்ந்தது போல் - (ஆதாரமாகப்) பற்றிய கொம்பானது ஒடிந்துபோனதால் கொடியானது (நிலைகுலைந்து) வீழ்ந்ததைப்போல், குலைந்தாள் - (சடாயுவின் உதவியை இழக்கப்பெற்றதால் கீழேவிழுந்து) உருமாறினாள். (௧௩௦)

வேறு

வன்றுணை யுள்ளென வந்த மன்னனும்
பொன்றினனெனக்கினிப் புகலென் னென்கின்றா
ளின்றுணை பிரிந்திரிந் தின்னல் லெய்திய
வன்றிலம் பெடையென வரற்றி னாளரோ,

இ - ள். வல் துணை உள்ள என வந்த மன்னனும் - வலிய துணையாக இருக்கின்றேனென் றெண்ணும்படி வந்த சடாயுவென்னும் அரசனும், பொன்றினன் - இறந்தான்; எனக்கு—, இனி—, புகல் என் என்கின்றாள் - தஞ்சம் யாது? என்று கூற

சென்ற சீதாபிராட்டி, இன் துணை பிரிந்து - (தனது) இனியதுணையாகிய சேவலைப் பிரிந்து, இரிந்து - அஞ்சி, இன்னல் எய்திய - துன்பத்தை யடைந்த அன்றில் பெடை என - அன்றிற் பேடுபோல, அரற்றினள் - கூவியழுதாள்.

குறிப்பு — அம் - சாரியை. சேவலை நீங்கிய அன்றிற் பேடு தன் றுணைச்சேவலின் வரவுக்காகக் கூவுதல்போல இப்பிராட்டியும் தனது நாயகனை விளித்துக்கதறினளென்க. (௱௰)

பின்னவ னுரையினை மறுத்துப் பேதையே
னன்னவன் றனைக்கடி தகற்றி னேன்பொரு
மன்னவன் சிறையற மயங்கி னேன்விதி
யின்னமு மெவ்வினை யியற்று மோவென்று

இ - ள். பேதையேன் - அறிவிலியாகிய நான், பின்னவன் உரையினை மறுத்து - இளையபெருமாளின் வார்த்தையை தடுத்து, அன்னவன்தனை - அவனை, கடிது அகற்றினேன் - விரைவில் என்னைவிட்டு நீங்கும்படி செய்தேன்; பொருமன்னவன் சிறை அற மயங்கினேன் - போர்செய்த சடாயுராஜனுடைய சிறகுகள் அறுபட்டதால் (இனித் துணையில்லையே யென்று) மயங்குதலுற்றேன், இன்னமும் - இனிமேலும், விதி - ஊழ்வினையானது, எ வினை இயற்றுமோ என்று - எச்செய்கைசெய்யுமோ? என்று கூறி (௧௧௨)

அல்லலுற் றேனைவந் தஞ்ச லென்றவிந்
நல்லவன் றோற்றதே நாகன் வெல்வதே
வெல்வதும் பாவமோ வேதம் பொய்க்குமோ
வில்லையோ வறமென விரங்கி யேங்கினாள்.

இ - ள். வந்து —, அல்லல் உற்றேனை - துன்பமடைந்த என்னை, அஞ்சல் என்ற இ நல்லவன் - பயப்படாதே யென்று கூறிய இந்த நன்மையாளன், தோற்றதே - தோற்றதோ? [தோல்வியடைதல் நியாயமோ?] நாகன் வெல்வதே - நாகினைக் கட்சேரு மிப்பாதகன் வெல்வதோ? [வெற்றிபெறுதல் நிகழ்த்தக்கதோ?] வெல்வதும் பாவமோ - வெற்றிபெறுவதும் பாவந்தானோ? வேதம் பொய்க்குமோ - வேதமும் பொய்யாய்ப்போகுமோ? அறம் இல்லையோ - தருமமும் இல்லாமற்போயிற்றோ? என - என்று, இரங்கி ஏங்கினாள் - துக்கித்து அழுதாள்.

குறிப்பு — ஏகாரங்களும் ஓகாரங்களும் வினாப்பொருளன. (௧௧௩)

நாணிலே னுரைகொடு நடந்த நம்பிமீர்
நீணிலை யறநெறி நின்று ளோர்க்கெலா
மாணியை யுந்தையாக் கமைந்த வன்பனைக்
காணிய வம்மெனக் கலங்கி விம்மினாள்.

இ - ள். நாணிலேன் - நாணங்கொள்ளாமலிருந்தேனாகிய என்னுடைய, உரைகொடு - வார்த்தையினால், நடந்த - (என்னைவிட்டுப் பிரிந்து) சென்ற, நம்பிமீர் - நம்பிமார்களே! நீணிலை அறம் நெறி நின்று உளோர்க்கு எலாம் ஆணியை - நீண்ட

புகழினையுடைய தருமமார்க்கத்தில் நிலைபெற்றிருக்கின்றவர்க ளனைவருக்கும் உரையாணி யாயினவனை, உந்தையாகக் அமைந்த அன்பனை - உங்கள் தகப்பனாருக்கும் பொருந்திய அன்பினையுடையவனை [சடாயுவை], காணியவம் என - காணவாருங்கள் என்று, கலங்கி விம்மினுள் - மனக்கலக்கமுற்று அழுதாள்.

குறிப்பு — மானை மாரீசனென்ற றறிந்திருப்பேனாயின் நாணியிருப்பேன் அஃதறியாது நாணாதிருந்தேனென்பதும், இளையபெருமான் நியாயம் எடுத்துக்கூறியபின் பொய்க்குரலை மெய்க்குரலென்று முன்னங்கருதிய மடமைக்காக நாணமற்போயினேனென்பதும் விளங்க 'நாணிலேன்' என்றாள். நம்பி - புருடரிற் சிறந்தோன். நிலை - நிலைமை, புகழுக்கு ஆகுபெயர். (௧௬௪)

கற்பழி யாமையென் கடமை யாயினும்
பொற்பழி யாவலம் பொருந்தும் போர்வலான்
விற்பழி யுண்டது வினையி னேன்வந்த
விற்பழி யுண்டதென் றிரங்கி யேங்கினுள்.

இ - ள். கற்பு அழியாமை என் கடமை ஆயினும் - கற்புநிலைமை கெடாமலிருப்பது என்கடனே யானாலும், பொற்பு அழியா - அழகுகெடாத, வலம் பொருந்தும் - வலிமையமையும், போர்வலான் - போரினகண் வல்லவராகிய எனது நாயகரது, வில் பழி உண்டது - கோதண்டம் பழியடைந்தது, வினையினேன் வந்த இல் பழி உண்டது - பாவியாகிய நான் புகுந்தவீட்டார் (சூரியகுலமன்னர்கள்) பழியடைந்தார்கள், என்று—, இரங்கி ஏங்கினுள் - துக்கித்து அழுதாள்.

குறிப்பு — பொற்பழியா - மிகுதிகெடாத [குறைவற்ற] என்னுமாம். இல் - ஆகுபெயர். (௧௬௫)

எல்லியல் விசும்பிடை யிருந்த நேமியாய்
சொல்லிய லாயநெறி தொடர்ந்த தோழமை
நல்லிய லருங்கடன் கழித்த நம்பியைப்
புல்லுதி யோவெனப் பொருமிப் பொங்கினுள்.

இ - ள். எல் இயல் விசும்பிடை இருந்த நேமியாய் - ஒளிபொருந்திய வானினகண் இருக்கின்ற ஆஞ்ஞாசக்கராதிபதியே! [தசரதச்சக்கரவர்த்தியே!], சொல் இயல் - புகழ்பொருந்திய, ஆய நெறி தொடர்ந்த - ஆராய்ந்த நல்லொழுக்கஞ்சேர்ந்த, தோழமை - நட்பினது, நல் இயல் - நன்மைபொருந்திய, அருங்கடன் கழித்த - அரியகடமையைச் செய்து முடித்த, நம்பியை - நம்பியாகிய சடாயுவை, புல்லுதியோ என - (இப்போது) தழுவிக்கொள்வாயோ? என்று, பொருமி பொங்கினுள் - அழுது உயர்ந்தாள் [மிகுதியாக வழுதாள்].

குறிப்பு:— எல்லியல் விசும்பு - திருவைகுந்தமாநாடு. எல்லா வுலகங்களினும் திருவைகுந்தமாநாடு சிறந்து விளங்குவதென்பது விளங்க 'எல்லியல்' என்றா இனி, கடவுளின் ஜோதிஸ்வரூபம் பொருந்திய விசும்பெனலுமாம். நட்பினருக்குச் செய்யவேண்டியதாக ஏற்படும் உதவிகளைச் செய்து முடிப்பது தோழமைக்கு

இன்றி யமையாதது என்பதை வற்புறுத்த 'அருங்கடன்' என்றார். கீழ்க்கூறியவாறு விண்ணுலகின் நாட்டவர் சுவர்ணபுஷ்பமாரி பெய்ததைக் கண்டதால் சடாயு இறந்தாரகவே பிராட்டி நினைத்துச் சக்கரவாகத்தினை விளித்து நம்பியைப் புலம்புதியோ என்று அழ நேரிட்டதெனக். எவ்வுயர் விசும்பு என்றும், எல்லையில் விசும்பு என்றும் பாடபேதமுண்டு. (௧௬௬)

ஏங்குவா டன்மையு மிறங்கி ழந்தவ
னோங்குறு தன்மையு மரக்க னோக்கினான்
வாங்கினன் றேரிடை வைத்த மண்ணொடும்
வீங்குதோண் மீக்கொடு விண்ணி னேகினான்

இ - ள். அரக்கன் - இராவணன், ஏங்குவாள் தன்மையும் - அழுகின்ற சீதாபிராட்டியினுடைய நிலைமையையும், ஆங்கு இறகு இழந்தவன் உறு தன்மையும் - அவ்விடத்தில் சிறகுகளை யிழந்த சடாயு அடைந்த நிலைமையையும், நோக்கினான் - பார்த்தான், தேரிடை வைத்த மண்ணொடும் வாங்கினன் - (அவன் சீதாபிராட்டியை) இரதத்தின்மேல் வைத்த நிலத்தோடும் எடுத்து, வீங்கு தோள் மீ கொடு - பருத்த புயங்களின்மேல் வைத்துக்கொண்டு, விண்ணின் ஏகினான் - ஆகாயமார்க்கத்திற் சென்றான். (௧௬௭)

விண்ணிடை வெய்யவ னேகும் வேகத்தாற்
கண்ணொடு மனமவை சுழன்ற கற்பினா
ளுண்ணிறை யுணர்வழிந் தொன்று மோர்ந்திலள்
மண்ணிடைத் தன்னையு மறந்து சாம்பினாள்.

இ - ள். வெய்யவன் விண்ணிடை ஏகும் வேகத்தால் - கொடியவனாகிய அவ்விராவணன் ஆகாயத்தின்கட் செல்கின்ற விரைவினாலே, கண்ணொடு மனம் அவை - கண்களும் மனமுமானவை, சுழன்ற - சுழலுதலுற்ற, கற்பினாள் - கற்பினையுடைய சீதாபிராட்டி, உள் நிறை உணர்வு அழிந்து - மனத்தை (ஒரு நிலையில்) நிறுத்தற்குத் தக்க அறிவானது கெட்டு, ஒன்றும் ஓர்ந்திலள் - ஒரு விஷயத்தையும் நினையாதவளாய், மண்ணிடை - நிலத்தில், தன்னையும் மறந்து - தன்னையும் மறந்தனளாய், சாம்பினாள் - ஒடுங்கியிருந்தாள்.

குறிப்பு — நிறை - நிறுத்தல், தொழிற்பெயர், "செழும்புனல் மிக்குழீஇ நிறையு முண்டோ" [மணிமேகலை. தெய்வம்வந்து தோன்றிய காதை 20]. உள்ளுணர்வும் நிறையு மழிந்து எனக்கொண்டு கற்பழிந்தாள் என்று பொருள்கூறி யபசாரப்படாமலிருத்தற் பொருட்டே கற்பினாள் என்னும் பதம்புணர்த்திக் கூறினார்.

ஏகின னரக்கனு மெருவை வேந்தனு
மோகவெந் துயர்சிறி தாறி மூர்ச்சியா
மாகமே னோக்கினன் வஞ்சன் வல்லையிற்
போகுதல் கண்டகம் புலர்ந்து சொல்லுவான்

இ - ள். அரக்கனும் ஏகினன் - (இவ்வாறாக) இராவணனும் சென்றான், எருவை வேந்தனும் - கழுகுக்கரசனாகிய சடாயுவும், மோகம் வெந்துயர் சிறிது ஆறி -

ம்பயங்கமான கொடியதுன்பத்தினின்றுஞ் சற்றே ஆறுதலடைந்து, ஆசரியா - (பி ராட்டியின் நிலைமையைக்கருதி) ஆச்சரியமடைந்து, (பின்னர்), மாகம் மேல் நோக்கி னன் - ஆகாயத்திற் பார்த்தான், வஞ்சன் - வஞ்சகனாகிய இராவணனை, வல்லையில் போகுதல்கண்டு - விரைவிற் செல்லுதலைப்பார்த்து, அகம் புலர்ந்து - மனம் தளர்ந் து, சொல்லுவான் - (மேல்வருமாறு) சொல்லுவானாயினான் (௧௬௬)

வந்திலர் மைந்தர்நம் மருங்கி னெய்திய
வெந்துயர் துடைத்தன ரென்னு மெய்ப்புகழ்
தந்திலர் விதியினார் தரும வேலியைச்
சிந்தினர் மேலினிச் செயலென் னுங்கொலோ.

இ - ள். மைந்தர் வந்திலர் - (நமது) மக்களாகிய ஸ்ரீராமலட்சுமணர்கள் வந் தாரில்லை, நம்மருங்கின் எய்திய வெந்துயர் துடைத்தனர் என்னும் மெய் புகழ் தந் திலர் - நமது மருமகளாகிய சீதாபிராட்டிக்கு வந்த கொடிய துன்பத்தை நீக்கினார் கள் என்று கூறும் உண்மையான புகழைத் தந்தார்களில்லை, விதியின் ஆர் - வேத விதிப்படி தங்கிய, தரும வேலியை சிந்தினர்மேல் - தருமத்தினது வேலியை [காவ லை] சிதறச்செய்த அரக்கர்கள்மேல், இனி—, செயல் என்கொல் - செய்வதியாதோ?

வெற்றியர் உளரெனின் மின்னி னுண்ணிடைப்
பொற்றொடிக் கிந்நிலை புகுதற் பாலதோ
வுற்றதை யின்னதென் றுணர் கிற்றிலென்
சிற்றவை வஞ்சனை முடியச் செய்ததோ.

இ - ள். வெற்றியர் உளர் எனின் - (அத்தருமத்துக்குப் பகைவரான அரக்க ரைக்கொல்ல) வெற்றியையுடையவர்களாகிய ஸ்ரீராமலட்சுமணர்கள் இருக்கின்றார் கள் என்றால், மின்னின் நுண் இடை - மின்னல்போன்ற நுட்பமான இடையினை யும், பொன் தொடிக்கு - பொன்னாலாகிய வளையலையுமுடையாளாகிய சீதாபிராட்டி க்கு, இ நிலை புகுதற் பாலதோ - இந்த நிலைமை சம்பவித்தற்குரியதோ? சிறு அவை வஞ்சனை - சிறியதாயாகிய கைகேசியினது வஞ்சகமானது, முடிய செய்ததோ - (இ த்தகைய காரியங்கள்) முடியுமாறு செய்துவிட்டதோ? உற்றதை இன்னது என்று உணர்கிற்றிலென் - சம்பவித்த தீங்கின்காரணத்தை இப்படிப்பட்டது என்று சிறி தும் அறிந்தேனில்லை. (௧௬௭)

பஞ்சணை பாம்பணை யாகப் பள்ளிசே
ரஞ்சன வண்ணனே யிராம னாதலால்
வெஞ்சின வரக்கனால் வெல்லற் பாலனோ
வஞ்சனை யிழைத்தனன் கள்ள மாயையால்.

இ - ள். பஞ்சு அணை பாம்பு அணை ஆக - பஞ்சு மெத்தையே ஆதிசேஷ சய னமான, பள்ளிசேர் - படுக்கைசேர்ந்த, அஞ்சனம் வண்ணனே - கரியநிறத்தினை யுடையானாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவே, இராமன் ஆதலால் - இராமனாக இருக்கின்றான் ஆதலால், வெஞ்சினம் அரக்கனால் வெல்லல் பாலனோ - வெவ்விய கோபத்தினை யுடைய இவ்விராக்கதனால் வெல்லப்படுதற்குரியவனோ? கள்ளம் மாயையால் - திரு

டடுத்தனமான மாயச்செயலினால், வஞ்சனை இழைத்தனன் - (அவ்வரக்கன்) வஞ்சனை செய்திருக்கின்றான் (௧௪௨)

வேரற வரக்கரை வென்று வெம்பழி
தீருமென் சிறுவனு நீண்ட வஞ்சுமா
லாரியன் றேவியை யரக்க னன்மலர்ப்
பேருல களித்தவன் பிழைப்பில் சாபத்தால்.

இ - ள். என் சிறுவனும் - எனது சிறுவனாகிய [மகனாகிய] ஸ்ரீராமனும், அரக்கரை வேர் அற வென்று வெம்பழிதீரும் - இராக்கதர்களை யடியோடு தொலையும்படியாக வெற்றிகொண்டு வெவ்வியபழியைத் தீர்த்துக்கொள்ளுவான், அரக்கன் - இராவணன், நல் மலர் - நல்ல தாமரைமலரில் வீற்றிருக்கிற, பேர் உலகு அளித்தவன் - பெரிய உலகங்களை யீன்றோனாகிய பிரமதேவனுடைய, பிழைப்பு இல் சாபத்தால் - தவறாத சாபத்தினால், ஆரியன் தேவியை நீண்ட அஞ்சும் - ஸ்ரீராமனுடைய மனைவியாகிய சீதாபிராட்டியைத் தீண்டுதற்கு அஞ்சுவான். (௧௪௩)

பருஞ்சிறை யின்னன பன்னி யுன்னுவா
னருஞ்சிறை யுற்றன ளாமெ னும்மனம்
பொருஞ்சிற கிறறதேற் பூவை கற்பெனு
மிருஞ்சிற கிறுதென விடரு நீங்கினான்.

இ - ள் பரு சிறை - பெரிய சிறகுகளையுடையானாகிய சடாயு, இன்னன பன்னி - இத்தகைய வார்த்தைகளைக் கூறி, அரு சிறை உற்றனள் என்று -(பிராட்டி) அரியசிறையை யடைந்தாளென்று, மனம் உன்னுவான் - (தன்) மனத்தில் நினைப்பானாகி, பொரும் சிறகு இற்றதேல் - போர்செய்கின்ற (எனது) சிறகு அற்றதானாலும், பூவை - சீதாபிராட்டியினுடைய, கற்பு எனும் இரு சிறகு - கற்பென்கிற பெரியசிறகானது, இறுது என - அற்றுப்போகமாட்டாது என்று, இடரும் நீங்கினான் - துயரும் ஒழிந்தான்.

குறிப்பு —பருஞ்சிறை - அன்மொழித்தொகை. பூவை - நாகணவாய்ப்புள்; ஆகுபெயர் (௧௪௪)

அஞ்சிறை குருதியா லழிந்து சோர்வுற
வஞ்சியை மீட்கிலே னென்னு மானமுஞ்
செஞ்செவே மக்கள்பாற் சென்ற காதலு
நெஞ்சுறத் துயின்றன னுணர்வு நீங்கலான்.

இ - ள். அம் சிறை -அழகிய சிறகுகளையுடையானாகிய சடாயு, குருதியால் - இரத்தத்தால், அழிந்து - (பலம்) கெட்டு, சோர்வு உற - தளர்ச்சியடைந்ததால், வஞ்சியை மீட்கிலேன் எனனும் மானமும் - வஞ்சிபோல்வாளை மீட்டேனில்லை யென்கிற வெட்கமும், செஞ்செவே - செவ்விதாகவே, மக்கள்பால் சென்ற காதலும் - (தனது) குமாரர்களாகிய ஸ்ரீராமலட்சுமணர்களிடத்துப் போயின காதலும், நெஞ்சு உற - (தன்) மனத்திற் பொருந்தியிருக்க, துயின்றனன் - நித்திரைசெய்தான்; (ஆயினும்), உணர்வுநீங்கலான் - அறிவுமட்டும் நீங்காதவனாயினான்.

குறிப்பு:—அஞ்சிறை - அன்மொழித்தொகை, வஞ்சி - ஆகுபெயர். (௧௪௫)

வஞ்சியை யரக்கனும வல்லே கொண்டுபோய்ச
செஞ்செவே திருவுருத தீண்ட வஞ்சுவா
னஞ்சிய லரக்கியா நடுவ ணாயிடைச
சிஞ்சுப வனததிடைச சிறைவைத தானரோ.

இ - ள். அரக்கனும - அவ்விராவணனும, வஞ்சியை - சீதாபிராட்டியை, வல்லே செஞ்செவே கொண்டுபோய - விரைவிற செவவிதாகவே கொண்டு சென்று, திரு உரு தீண்ட அஞ்சுவான - (பிராட்டியின) திருமேனியைத தொடுதறகு பயப்படுவானாகி, நஞ்சு இயல அரக்கியா நடுவண - விஷத்தின தன்மைபொருந்திய ராக்ஷஸஸதிரீகளுக்கு மததியில், ஆயிடை - அவ்விடத்தில [அந்த இலங்கையில] இருக்கிற, சிஞ்சுபம வனததிடை - அசோகவனததில, சிறைவைததான - (அவளைக) காவறபடுததிவைததான. (௧௪௬)

இங்கிலை யினையவன செயலி யமபினும
பொனனிலை மானினபின றொடாந்து போகிய
மனனிலை யறிகென மங்கை யேவிய
பினனிளை யவனிலை பேசு வாமரோ.

இ - ள். இனையவன செயல இ நிலை இயமபினும - இந்த ராவணனுடைய செயகையை இநதவிதமாகக கூறினும, மஙகை - சீதாபிராட்டி, பொன நிலை மானினபின தொடாந்துபோகிய - பொனனினது தனமைபொருந்திய மானுக்குப்பினனே தொடாந்துசென்ற, மன நிலை அறிக என ஏவியபின - மனனனது நிலைமையை அறியககடவதென்று கட்டளையிட்டபினனா, (அவவாறே சென்ற), இளையவன நிலைபேசுவாம - இளையபெருமாளுடைய நிலைமையைக கூறுவாம (௧௪௭)

ஒருமக டனிமையை யுனனி யுளளுறும
பருவரன மீதிடப பதைககு நெஞ்சினன
பெருமகன் றனைததனிப பிரிந்து பேதுறுந
திருநகா தீருமப பரதன செயகையான.

இ - ள ஒருமகள தனிமையை உனனி - ஒப்பறறவளாகிய சீதாபிராட்டி தனிததிருககுந்தனமையை நினைதது, உள உறும பருவரல மீதிட பதைககும நெஞ்சினன - உளளததினுட சோகினற துனபமானது மேலிடுவதால துடிககினற நெஞ்சினையுடையானும, பெருமகனதனை - பெருமையுடையானாகிய ஸ்ரீராமபிரானை, தனி பிரிந்து - தனிமையிற பிரிந்து, பேதுறும - நிலைமைமாறுதலுறற, திருநகா தீரும - அழகுபொருந்திய அயோததியாபுரியைவிட்டு நீஙகிய, அ பரதன செய்கையான - அந்தப் பரதனது செயலினையுடையானும.

கருதது —ஸ்ரீராமபிரான பிரிந்தமையால வாட்டமுறற அயோததியாபுரிககுக காவலனாக இராமல பரதன அவவயோததியைத தனிததிருககவிட்டு வனததைநாடி ஸ்ரீராமபிரானைத தேடிச சென்றதுபோல, இளையபெருமாளும பெரியபெருமாளின பிரிவாறறாது வாட்டமுறற பிராட்டியைக காவல்புரியாது தனிததிருககவிட்டு நீஙகி வனததைநாடி யணணலைத் தேடிசசென்றா என்க. (௧௪௮)

தெணடிரைக கலமெனை விரைவிற செலகினரூன
புணடரீ கததடங காடு பூததொரு
கொணடலவந திழிநதெனக கோலத தானறனைக
கணடனன மனமெனக களிககுங கணணினன.

இ - ள். தெள திரை கலம என - தெளிவாகிய அலைகளையுடைய கடலிற கப பலைபபோல, விரைவில செலகினருன - விரைவிறபோகினறவனுமாகி, புணடரீகம தடம காடுபூதது - செநதாமரைப பூவாகிய பெரியகாடு மலாநதிருககபபெறறு, ஒரு கொணடலவநது இழிநதெனை - ஒரு மேகமானது வநதிறஙகியது போனற, கோலத தானதனை - அழகினையுடையானுகிய ஸ்ரீராமபிரானை, கணடனன - பாாததது, மனம என - (தன) மனம (களிபபுறறது) போல, களிககும கணணினன - களிககினற கணகளையுடையானுயினன

குறிபபு —தெணடிரை - அனமொழிததொகை புணடரீகம - வெண்டாமரை, ஈணடுச செநதாமரையென நினறது. புணடரீகக காடுபூதத கொணடல - இலபொருளுவமை. தன மனததால எமபிரானுககு யாதொரு தீஙகும நேரிடாதெனக கருதியவாறே யாதொரு குறைவுமினறி வநத ஸ்ரீராமபிரானைக கணகளிககக கணடான எனபாா 'மனமெனக களிககுங கணணினன' எனருா (௧௪௯)

துணணெனு மவவுரை தொடரத தோகையும
பெணணெனும பேதைமை மயககப பேதிறு
லுணணிறை சோருமென றூச லாடுமக
கணணனு மிளவலைக கணணுற றனரோ

இ - ள். துணணெனும - திடுககெனறு பயபபடுதற்குக காரணமான, அ உரை - அநத (மாரீசன மாயததால எனகுரலகொணடு கூறிய) வாாததையானது, தொடர - சேர, (அதனுல), தோகையும - மயிலபோலவாளாகிய ஜானகியும, பெண எனும பேதைமைமயககம பேதிறுல - பெணமை எனகிற அறியாததனமையினது மயககமாகிய வேறுபாடடினுல, உள நிறைசோரும - உளளததின நிறைவு தளா வாள எனறு—, ஊசல ஆடும - சலனமடைகினற, அ கணணனும - கணணனுகிய அநத ஸ்ரீராமபிரானும, இளவலை கணணுறறுன - இளையபெருமானைப பாாததான.

குறிப்பு —துணணெனல -அசசககுறிப்புணாததுமோரிடைசசொல் தோகை- ஆகுபெயா. நிறை - முதனிலை; இனி, நிறததல எனத தொழிறபெயராககொணடு பலவிதமாக நினைபபாளெனனலுமாம பெருமூசசெறிநது கணகள சுழல ஆலோசனை செயததமைதோனற 'ஊசலாடுமக கணணன' எனருா. (௧௫௦)

வேறு

புனசொற கடநத பகுவா யாககை னுரைபொய் யெனுது புகலவாள
வனசொற் கடநது மடமஙகை யேவ நிலைதோ வநத மருளே
தனசொற் கடநது தளாகினற நெஞச முடையேன மருஙகு தனியே
யெனசொற கடநது மனமூந தளாநத விளவீரன் வநத வியலபே.

இ - ள் மனமும் தளர்ந்த இளவீரன் - (உடலோடு) மனமும் தளர்ச்சியடை யப்பெற்ற இவ்விளையோன், தன்சொல் கடந்து -(இது மாயமானென்றுகூறிய) தன து வார்த்தையைக்கடந்து வந்து, தளர்கின்ற நெஞ்சம் உடையேன் மருங்கு - சோர் வடைகின்ற மனத்தினையுடையேன் பக்கத்தில், என்சொல் கடந்து - (ஜானகியைக் காத்திருக்கும்படி கட்டளையிட்ட) என்துவார்த்தையை மீறி கடந்தவனுகி, தனி யேவந்த இயல்பு - தனிமையாகவே வந்த தன்மையானது, மடமங்கை-மடமைபொ ருந்திய ஜானகி, புன்சொற்கள் தந்த - புன்மையான சொற்களைத்தந்த, பகுவாய - பிளவுபட்ட வாயினையுடைய, அரக்கன் உரை - இராக்கதனது வார்த்தையை, பொய் என்று புகலவாள - பொய்யென்னுமல் (மெய்யேயென்று) கூறுவாளாய, வல் சொ ற்களதந்து ஏவ- கொடிய வார்த்தைகளைத்தந்து ஏவினதால், நிலைதேரவந்த மருளே- (என்து) நிலைமையைத் தெரிந்துகொள்ளும்படி வந்த மயக்கமேதான. (கருக)

என்றுன்னி யென்னை விதியார் முடிப்ப தென்வெண்ணி நின்ற விறையைப
பொன்றுன்னு விற்கை வயவீரன் வந்து புனைதா ளிறைஞ்சு பொழுதின்
மின்றுன்னு நூலின் மணிமார் பழுந்த விரைவோடு புல்லி யுருகா
நின்றுன்னி வந்த நிலையென்கொ லென்று நெடியோன் விளம்ப நொடிவான்

இ - ள் என்று உன்னி - (மருளே) என்று கருதியும், என்னை - என்னு டைய, விதி - ஊழ்வினையை, யார் முடிப்பது என எண்ணி - எவர் தீர்ப்பவர் என்று கருதியும், நின்ற - நின்றுகொண்டிருந்த, இறையை - ஸ்ரீராமபிரானை, பொன் துன்னு வில் கை வயவீரன் வந்து -பொற்பூண்கள் விளங்குகின்ற வில்லினைப்பிடித் த கையினையுடைய வெற்றிபொருந்திய வீரனுகிய இளையபெருமாள்வந்து, புனை தாள் இறைஞ்சுபொழுதின் - கழல்புனைந்த அடிகளின்கண் வணங்குகின்றகாலத் தில், நெடியோன் - ஸ்ரீராமபிரான், மின் துன்னும் நூலின் -மின்னலைப்போல விளங் குகின்ற பூணூலையுடைய, மணிமார்பு - (தன்) அழகிய மார்பினிடத்து, விரைவோ டு - விரைவுடனே, அழுந்த புல்லி - அழுந்துமபடியாக (அவ்விளையோனை யெடு த்து) அணைத்து, உருகாநின்று - மனவுருக்கங்கொண்டு நின்று, உன்னிவந்த நிலை என் என்று விளம்ப - (நீ) நினைத்துவந்ததன்மை யாது? என்று கூற, நொடிவான் - (இளையபெருமாள் மேல்வருமாறு) கூறுவானுயினன் (கருஉ)

இல்லா நிலத்தி னிசையாத வெஞ்சொ லெழவஞ்சி யேவ முறையால
வல்வா யரக்க னுரையாகு மென்ன மதியாண மறுக்க முறுவா
ளில்லாது மற்றி தறிபோதி யென்ன நெடியோய புயத்தின் வலியென
சொல்லான மனத்தி னடையாள் சினத்தின் முனிவோடு நின்று துவள்வாள்.

இ - ள். நிலத்தின் இல்லா இசையாத வெஞ்சொல் எழ - பூமியிலில்லாததும பொருந்தாததுமான கொடியசொல் எழுந்ததால், வஞ்சி ஏவ - (அதனையறிந்து) வரு மபடி) வஞ்சிபோலவாள் (எனக்குக்) கட்டளையிட, முறையால் - (அச்சமயம நியா யம எடுத்துக்கூறவேண்டியதான) கிரமத்தால, வல் வாய் அரக்கன் உரை ஆகும் என் ன - (இது) கொடியவாயினையுடைய இராக்கதனது சொல்லேயாகும் என்று (நான) கூற, மதியாள் - (அதனை) மதியாதாள் (ஆயின) புத்தியையுடையாள், மறுக்கம் உறுவாள் - கலக்கத்தை அடைவாளாகி, இது - இதனை, அறி - அறிவாய, நில்லாது போதி - நிற்காமற் செல்லுவாய், என்ன - என்றுசொல்ல, என் சொல்லால -(அவள் சொல்லை மறுத்து உமது புயவலியை எடுத்துக்கூறிய) எனது வார்த்தையினுல்,

கொடியோய் புயததின்வலி - உயாநதவரே! உமது புயததினது வலிமையை, மனத தின அடையான் - (தன) மனததிறகொளளாதவளாய, சினததின் முனிவோடு நினறுதவளவாள - பெருஙகோபததாறகோபிபபதோடு நினறு அசைநது செலவா ளாயினள. (கஉ௲)

ஏகாது இறறி யெனினயா னெருபபி னிடைவீழவெ னெனறு முடுகா
மாகான கததி னிடையோட லோடு மனமஞ்சி வஞச வினையேன
போகா திருககி னிறவா திருககை புணரா ளெனகொ டுணரா
வாகா திறககை யறனன றெனக்கொ டிவணவநத தெனன வமலன்

இ - ள, ஏகாது இறறி எனின - (நீ) போகாமல் இறபாயேயானால, யான நெருபபின இடை வீழவென எனறு - நான அககினியில் விழுவேன எனறு கூறி, முடு கா - முடுகி [விரைவாய்], மா கானகததின இடை ஒடலோடும் - பெரிய காட்டினகண (தான) ஓடததொடஙகினவுடனே, மனம அஞசி - (என) மனம பயமடைந்து, வஞ சம வினையேன - வஞசகமான செயகையையுடையேனாகிய நான, போகாது இருக கின - போகாமலிருநதால், இறவாது இருககை புணராள என கொடு உணரா - இற வாமலிருததலை யடையாளென்று (மனததிற) கொணடு அறிநது, இறககை ஆகா து - இறபபது நியாயமாகமாட்டாது, அறன அனறு - (அது) தருமம அனறு, என கொடு - எனறு (நினைததுக)கொணடு, இவண வநதது என்ன - (நான்) இவவிடத திறகு வநத காரியமெனறு கூற, அமலன - (அதனைககேட்ட) மலாகிதனாகிய ஸ்ரீராமபிரான, (கஉ௬)

சாவா திருதத லிலளான துறற தைையோ தடுகக முடியா
வாவா வலகக ணுறுவா ளுரைதத பொருளோ வகததி னடையா
காவா நிலததின வருமேத மறற தொழியாது கைக்கொ டகலப
போவா பிரிகக முயலவா புணாதத பொருளா மிதெனறு தெருளா.

இ - ள சாவாது இருததல இலள ஆனது - இறவாமலிருககுஞ செயலிலலா தவளானதும, உறறது அது - சமபவிதத கெடுதியும, ஐயோ—, தடுககமுடியா - தடைசெயதறகு முடிவாகமாட்டா, ஆவா—ஆ ஆ!! அலககண உறுவாள - துனப மடைநத அவள, உரைதத பொருளோ - சொலலிய சொறகளின பொருளகளோ, அகததின அடையா - (அவளுடைய) மனததிற சேரமாட்டா; காவா நிலததின ஏத மவரும - பாதுகாவாத இடததில துனபம வநதுசேரும, அது ஒழியாது - அபபடி வருந துனபம (இலேசில) நீஙகமாட்டாது, கை கொடு அகல போவா - (அவளைக) கைபபறறிககொணடு தூரமாகச செலலுபவாகள, பிரிகக முயல்வா - (நாம அவளை விடடுப) பிரியுமபடி செய்ய முயறசிகொளவாராய, புணாதத பொருள - பொருநதச செய்த தநதிரம, இது ஆம என்று தெருளா - இது ஆகும எனறு அறிநது (கஉ௭)

வநதாய திறதது னுளதனறு குறற மடவாள மறுகக முறுவாள
சிநதா குலததொ டுரைசெயத செய்கை யதுதீரு மெனறு தெளியாய்
முநதே தடுக்க வொழியா தெடுதத வினையேன முடிதத முடிவா
லந்தோ கெடுதத தெனவுன்னி யுனனி யழியாத வுள்ள மழிவான

இ - ள். வந்தாய் நிறத்தினைக் குற்றம் உளது அன்று - வந்தவனே! உன்னுடைய தன்மையிற் குற்றமிருக்கிறது அன்று, மடவாள் மறுக்கம் உற்றவாள் - மடமையையுடையவள் மனக்குழப்பம் அடைவாளாகி, சிந்தை ஆகுலத்தொடு உரைசெய்த - மனக்கவலையோடு கூறிய, செய்கை அது தீரும் என்று - (மானைப் பிடிக்கத்தொடரும்) செயலினின்று நீங்குகைக்கு என்று, தெளிவாய் - (மாயமானென்று மனத்தில் ஐயம் அறத்) தெளிந்துகொள்ளலாகி, முந்தே தடுக்க - முன்னமே (நீ என்னைத்) தடைசெய்ததால், ஒழியாது - நீங்காமல், எடுத்த வினையேன் - கைக்கொண்ட (அச்) செயலையுடையேனாகிய நான், முடித்த - செய்து தீர்த்த, முடிவால் - தீர்மானத்தினாலே, அந்தோ —, கெடுத்தது என் - (அச்செயல் என்னைக்) கெடுத்துவிட்டது என்று, உன்னி உன்னி - நினைத்து நினைத்து, அழியாத உள்ளம் அழிவான் - கெடாத (தனது) மனம் கெடுவானாயினான். (௧௫௬)

பாணிக்கின்று பயனாவ தென்னை பயில்பூவை யன்ன குயிலைக்
காணிற் கலந்த துயர்தீரு மன்றி யயலில்லை யென்று கடுகிச்
சேணுற் றகன்ற நெறியூடு சென்று சிலைவாளி யன்ன விசைபோ
யாணிப் பசும்பொ னனையா ளிருந்த வவிர்சோலை வல்லை யணுகா

இ - ள். பாணிக்கின்று - பொழுது நீடிக்கின்று, பயன் ஆவது என்னை - பிரயோசனப்படுவது யாது? பயில் பூவை அன்ன குயிலை - (இனியமொழிகளைச் சொல்லப்) பழகுகின்ற நாகணவாய்ப்புள்ளையொத்த குயில்போன்றவளை, காணின் - கண்டால், கலந்த துயர்தீரும் அன்றி அயல் இல்லை என்று - (நம்மனத்துடன்) சேர்ந்த கவலையானது நீங்கும் அல்லாமல் வேறில்லை என்று கூறி, கடுகி - துரிதப்பட்டு, சேண் உற்று அகன்ற நெறி ஊடுசென்று - நெடுந்தூரமாகப் பொருந்தி விசாலித்த வழியில் நடந்து, சிலைவாளி அன்ன விசைபோய் - வில்லினின்று விடுபட்ட அம்பு போன்ற வேகத்தோடு சென்று, பசும்பொன் ஆணி அனையாள் இருந்த - பசியபொன்னாலாகிய உரையாணியை ஒத்தவள் இருந்த, அவிர்சோலை - விளங்குகின்ற சோலையை, வல்லை அணுகா - விரைவிற்கிட்டி.

குறிப்பு — பூமியிற் பிறந்தவள் தன்னை வளர்த்தவனாகிய என்னைவிட்டு, நீங்கிப் பூமியோடு சென்றாள் என்பார் 'குயிலை' என்றார். குயிலின் முட்டையைக் காக்கை யடைகாத்துக் குஞ்சுபொறித்து அக்குஞ்சு வளர்ச்சியடைந்தபின் அது காக்கையை விட்டு நீங்கித் தன்னினமாகிய குயிலினத்தைச் சேருமென்பதறிக. (௧௫௭)

வேறு.

ஓடி வந்தனன் சாலையின் சோலையி னுதவுந்
தோடி வர்ந்தபூஞ் சுரிகுழ லாட்டனைக் காணான்
கூடு தன்னுடை யதுபிறிந் தாருயிர் குறியா
நேடி வந்தது கண்டில தாமென நின்றான்.

இ - ள். ஓடி வந்தனன் - (இவ்வாறு விரைந்து) ஓடிவந்த ஸ்ரீராமபிரான், சாலையின் - பன்னசாலையிலும், சோலையின் - பூஞ்சோலையிலும், உதவும் - (காட்சி) தருகின்ற, தோடு இவர்ந்த பூ சுரி குழலாள் தனை காணான் - இதழ்கள்விரிந்த மலர்களையணிந்த அளகத்தினையுடையாளாகிய சீதாபிராட்டியைப் பாராதவனாகி, கூடு -

சரீரமானது, தன்னுடையது - தன்னுடைய உயிரை, பிரிந்து - பிரிதலுற்று, ஆர் உயிர் - (மீண்டும்) அந்த அரிய உயிரை, குறியா - நினைத்து, நேடிவந்தது - தேடிவந்ததாகி, கண்டிலது என - காணாமலிருந்ததுபோல, நின்றன—,

குறிப்பு —இவர்தல்- பரத்தல், "தூவற கலித்த இவர்நனை வளர்கொடி" [மலைபடுகடாம் 514] (௧௫௮)

கைத்த சிந்தையன் கனங்குழை யணங்கினைக் காணா
துய்த்து வாழ்தர வேறொரு பொருளிலா னுதவ
வைத்த மாநிதி மண்ணொடு மறைந்தென வாங்கிப்
பொய்த்துளோர்கொளத் திகைத்துநின் றாரையும் போன்றான்

இ - ள் கைத்த சிந்தையன் - (தன் வாழ்க்கையில்) வெறுப்படைந்த ஸ்ரீராமபிரான், கனங்குழை அணங்கினை காணாது - கனமான குண்டலங்களையுடைய பெண்ணை (சீதாபிராட்டியை)க் காணாமல், உய்த்து வாழ்தர - கைத்துக்கொண்டு வாழ்வதற்கு, வேறு ஒரு பொருள் இலான் - வேறே ஒரு சொத்தில்லாதவன், உதவ - (தனக்கு) உதவியாவதற்காக, வைத்த - (புதைத்து) வைத்த, மாநிதி - பெரிய நிதியும், மண்ணொடும் - (இந்நிதியை வைத்த) நிலமும், மறைந்தென - மறைபட்டனவாகும்படி, பொய்த்துளோர் - பொய்யான செயலையுடையவர்கள், வாங்கி கொள - எடுத்துக்கொண்டதால், திகைத்து நின்றாரையும் போன்றான் - பிரமித்து நின்றவரையும் ஒத்தான். (௧௫௯)

மண்சுழன் றது மால்வரை சுழன்றது மதியோ
ரெண்சுழன் றது சுழன்றதவ் வெறிகட லேழும்
விண்சுழன் றது வேதமுஞ் சுழன்றது விரிஞ்சன்
கண்சுழன் றது சுழன்றது கதிரொடு மதியும்

இ - ள் மண்சுழன்றது - பூமி சுற்றுதலுற்றது, மால்வரை சுழன்றது - பெரியமலைகள் சுற்றுதலுற்றன, மதியோர் எண் சுழன்றது - புத்திமான்களுடைய எண்ணமும் சுற்றுதலுற்றன, எறி அக்கடல் ஏழும் சுழன்றது - அலைகளை வீசுகின்ற அந்தச்சமுத்திரம் ஏழும் சுற்றுதலுற்றன, விண் சுழன்றது - ஆகாயம் சுற்றுதலுற்றது, ம் சுழன்றது - வேதங்களுஞ் சுற்றுதலுற்றன, விரிஞ்சன் கண் சுழன்றது - பிரமதேவனது கண்கள் சுற்றுதலுற்றன, கதிரொடு மதியும் சுழன்றது - சூரியனும் சந்திரனும் சுற்றுதலுற்றன.

குறிப்பு —யாவையும் எவருந் தானாய நின்ற எம்பிரானது மனஞ் சுழலுதலும் மண்வரை விண் முதலியன சுழன்றன என்க. மால் வரை - திருமால்போலுங் குவடுகளோங்கிய வெற்பென்றலுமாம், "மாயோ னன்ன மால்வரைக் கவான்" என்றார் பிறரும் [திருமுருகாற்றுப்படையின் உரையிற் காண்க] எட்டுத்திசையும் சுற்றினமையால் விரிஞ்சனுடைய கண்கள் எட்டுஞ் சுழன்றனவென்க. கதிர் - ஆகுபெயர்

அறத்தைச் சீறுங்கொ லருளையே சீறுங்கொ லமரர்
திறத்தைச் சீறுங்கொன் முனிவரைச் சீறுங்கொ றீயோர்
மறத்தைச் சீறுங்கொ லென்கொலோ முடிவென்று மறையின்
னிறத்தைச் சீறுங்கொ னெடுந்தகை யோனென நடுங்கா.

இ - ள். நெடுந்தகையோன் - பெருந்தன்மையையுடையானாகிய ஸ்ரீராமபிரான், அறத்தை சீறுங்கொல் - தருமத்தையே கோபிப்பானோ? அருளையே சீறுங்கொல் - (தனது) கிருபையையே கோபிப்பானோ? அமரர் திறத்தை சீறுங்கொல் - தேவர்களுடைய தன்மையைக் கோபிப்பானோ? முனிவரை சீறுங்கொல் - முனிவர்களைக் கோபிப்பானோ? தீயோர் மறத்தை சீறுங்கொல் - கொடியவர்களின் பாபத்தைக் கோபிப்பானோ? மறையின் திறத்தை சீறுங்கொல் - வேதத்தின் தன்மையைக் கோபிப்பானோ? முடிவு என்கொலோ என்று நடுங்கா - முடிவு யாதோ? என்று நடுக்கங்கொண்டு.

குறிப்பு — திருவும் இன்பமும் சிறப்பும் புகழும் பெறச்செய்யும் தருமத்தைக் கைக்கொண்ட இவர்க்குத் துன்பமும் அவமானமும் நிகழும்படி அத்தருமந் துணையாகாமற் போயினமையால் 'அறத்தைச் சீறுங்கொல்' என்றார். "திருவு மின்புஞ் சிறப்பும் புகழுமற், றொருவ ராக்கலு நீக்கலு முள்ளவோ, மருவும் புண்ணிய மாந்தர்க் கவையெலாந், தரும மின்றெனிற் றூமே சிதையுமால்" என்றார் சேதுபுராணத்தில். முனிவர்க்கு அபயாஸ்தங்கொடுத்த காலந்தொடங்கியே அரக்கர் என்னுங் குலத்தோரனைவரையும் ஒருங்கு மடித்தொழிக்காமல் அவர்களுள் செருக்கொண்டு வந்தெதிர்ப்போரைமட்டுங் கொல்வது நியாயமென்று கருதற்குக் காரணமான தன்னருளால் இத்தீங்கு நேர்ந்ததாதலின் 'அருளையே சீறுங்கொல்' என்றார். "செருக்கடை யரக்கர்புரி தீமைசிதை வெய்தித், தருக்கழி தரக்கடிது கொல்வது சமைந்தேன்" என அகத்தியப்படலத்தும், "நேர்ந்தன நிருதராவி பறிக்குவென்" எனக் கரன்வதைப்படலத்தும் செருக்குற்று எதிர்த்தவரையே கொல்வேன் என்றமை காண்க. விண்ணவர்தம் பொருட்டாக இவ்விராமபிரான் திருவவதரித்தது அரக்கரைக் கொல்வதற்காகவே இவ்வனத்தின்கண் வந்ததையும் இவனது வல்லமை யெல்லாவற்றையும் நன்குணர்ந்தவரா யிருந்தும் அரக்கர்க்குப் பின்னும் அஞ்சி ஒன்றுமறியாதவர்போலிருந்து பிராட்டிக்கு நேர்ந்த ஆபத்தைத் தீர்ப்பதற்கு யாதொரு உதவியுஞ் செய்யாமற்போயினராதலின் 'அமரர் திறத்தைச் சீறுங்கொல்' என்றார்.

> "வேண்டின வேண்டினர்க் களிக்கு மெய்த்தவம்
> பூண்டுளா ராயினும் பொறையி னாற்றலான்
> மூண்டெழு வெகுளியை முதலி னீங்கினா
> ராண்டுறை யரக்கரா லலைப்புண் டாரரோ."

எனக் கீழ்க்கூறியவாறு முனிவர் பொறுமையினால் அரக்கரின் கொடுமையைச் சகித்துக்கொண்டிருக்கின்ற தன்மையராயினும் தமக்குதவியாய் நின்ற பேரருளாளனுக்கு நேர்ந்த கெடுதியைக்கண்டும் தம்பொறுமையையே பெரிதாக நினைத்து உதவிசெய்யாமற் போனது பெருங்குற்றம் என்னுங் காரணத்தால் 'முனிவரைச் சீறுங்கொல்' என்றார். தேவரும் முனிவரும் அரக்கரை வெல்ல வல்லுநரல்லராமாறு அரக்கர் பற்பல வரங்களைப் பெற்றுக் கொடுந்தொழில் புரிவதால் அத்தேவராதியர் மேற் கோபிப்பதை யொழிந்து அரக்கருடைய வல்லமைமீதும் பாவத்தின்மீதும் கோபிப்பானோ என்பார் 'தீயோர் மறத்தைச் சீறுங்கொல்' என்றார். மறம் - பாவம், வலிமை. (௯௬௧)

> நீல மேனிநன் னெடியவன் மனநிலை திரிய
> மூல காரணத் தவனொடு முடிவுற முற்றும்

காலமாமெனக் கடையிடு கணிககரும பொருள்கண்
மேல கீழுறக் கீழன மேலுறும வேலை.

இ-ள். கடை இடு - முடிவையிட்ட [ஒன்றுமிருந்ததென்னுமா றில்லாத], கணிகக அரு பொருள்கள் - கணக்கிட்டுக் கூறுதற் கருமையான பொருள்கள் அனைத்தும், நீலம் மேனி நல நெடியவன் - நீலரத்தினநிறம்போலுந் திருமேனியையுடைய நன்மையின் மிக்கோனாகிய பெரியவமெம்பியினுடைய, மனம் நிலைதிரிய - மனத்தினது நிலைமை மாறுபட்டதால், மூலம் காரணத்தவனொடு முடிவு உற - (எவைகளும்) முதற் காரணப்பொருளாகிய பகவானிடத்தில் (ஐக்கியமாகும்படி) அந்தியம அடையும்படி, முற்றும் - முற்றுப்பெறுகின்ற, காலம் ஆம் என - ஊழிக்காலமே யிதுவாகும் என்று கூறும்படி, மேல - மேலே யுள்ளவையெல்லாம், கீழ் உற - கீழாகவும், கீழன மேல் உறும் வேலை - கீழே யுள்ளவையெல்லாம் மேலாகவும் அடைகின்ற வேளையில், (௧௧௨)

தேரி னாழியுந் தெரிந்தனந் தீண்டுத லஞ்சிப்
பாரி னோடுகொண் டகழ்ந்ததும் பார்த்தனம் பயனின்
றோருந் தன்மையீ தென்னென்ப தூரனிலா தவர்போற்
றூரம் போதன்முன் றொடாதுமென் றிளையவன் றொழுதும்.

இ-ள் இளையவன் - இளையபெருமாள், தேரின் ஆழியும் தெரிந்தனம் - (இவ்விடத்தில்) இரதத்தின் சக்கரங்கள் பதிந்திருப்பதையும் தெரிந்துகொண்டோம், தீண்டுதல் அஞ்சி - (பிராட்டியைத்) தொடுவதற்குப் பயந்து, பாரினோடு கொண்டு அகழ்ந்ததும் பார்த்தனம் - பூமியினோடு (பிராட்டியை எடுத்துக்) கொண்டு தோண்டியிருப்பதையும் பார்த்தோம், உரம் இலாதவர்போல - ஞானமில்லாதவர்களைப்போல, ஓரும் தன்மை ஈது என் என்பது - ஆலோசிப்பதற்குக் காரணமான தன்மையையுடைய இச்செய்கை யாது? என்று கூறுவது, பயன் இன்று - பிரயோசனமில்லாததேயாம், தூரம்போதல் முன் தொடாதும் என்று தொழுதும் - (பிராட்டியை நிலத்தோடு எடுத்துச்செல்பவன்) தூரமாகப் போவதற்குமுன்பு (அவனைத்) தேடிச்செல்வோம் என்று கூறி வணங்கியவளவில். (௧௧௩)

ஆம தேயினி யமைவதென் றமலனு மெய்யிற்
றூம வாரகணைப் புட்டிலு முதலிய தாங்கி
வாம மாலவரை மரனிவை மடிதர வயவர்
பூமி மேலவன் றேர்சென்ற நெடுநெறி போனார்

இ-ள். அமலனும் - மலரகிதனாகிய ஸ்ரீராமபிரானும், இனி—, அமைவது - செய்யத்தக்கது, அதே ஆம என்று - (தூரம்போமுன் தொடரும்) அச்செயலே (நன்மை)யாகும் என்று கூறி, (பின்னர்), வயவர் - யுத்தவீரர்களாகிய அவ்விராமலட்சுமணர்கள், மெய்யில் - (தமது) உடம்பில், தூமம் - (கண்டார்) அஞ்சத்தக்கதான, வாரகணை புட்டிலும் முதலிய தாங்கி - நெடிய அம்பறாத்தூணீர முதலியவைகளைச் சுமந்துகொண்டு, வாமம் மால்வரை மரம் இவை மடிதர - அழகிய பெரிய மலைகளும் மரங்களுமாகிய இவைகள் நாசமாகும்படி, பூமிமேல - பூமியினிடத்து, அவன் தேர் சென்ற நெடு நெறி போனார் - அவ்விராவணனுடைய இரதம் நடந்த தூரமான வழியிற் சென்றார்கள்

குறிப்பு — தாமம் - அருசத்தக்கது, ஒளி, பெருமை, போர்க்களம், விருப்பம்.

மண்ணின் மேல்வன் றோசென்ற சுவடெலா மாய்ந்து
விண்ணி னோங்கிய தொருநிலை மெய்யுற வெந்த
புண்ணி னூடுறு வேலென மனமிகப் புழுங்கி
யெண்ணி நாமினிச் செய்வதென் னிளவலே யென்றான்.

இ - ள். அவன் தேர் - அவ்விராவணனுடைய இரதமானது, மண்ணின்மேல் சென்ற சுவடு எலாம் மாய்ந்து - பூமியின்மேற் போன சக்கரத்தாரைகள் முழுதும் மறைபட்டு, விண்ணின் ஓங்கியது ஒருநிலை மெய் உற - ஆகாயத்தி லுயர்ந்து சென்றதாகிய ஒரு செயலானது உண்மையிலுற்றதால், (மெய் உற) - உடலில் மிகுதியாக, வெந்த —, புண்ணினூடு - புண்ணில், உறுவேல் என - உற்றவேலைப்போல [வேலாயுதம் நுழைந்தாற்போல], மனம் மிக புழுங்கி - மனம் மிகவும் வருத்தத்தையடைந்து, இளவலே - இளையவனே! எண்ணி - ஆலோசனைசெய்து, இனி —, நாம் —, செய்வது —, என் - யாது? என்றான் - என்று (ஸ்ரீராமபிரான்) கூறினன் ()

தெற்கு நோக்கிய தெனும்பொரு டெரிந்ததித் திண்டேர்
மற்கு நோக்கிய திரள்புயத் தண்ணலே வானம்
விற்கு நோக்கிய பகழியி னெடிதன்று விம்மி
நிற்கு நோக்கிதென் பயத்ததென் றிளையவ னேர்ந்தான்.

இ - ள். இளையவன் —, மற்கு நோக்கிய திரள்புயத்து அண்ணலே - மல்யுத்தத்திற்கு எதிர்பார்த்துள்ள திரண்டபுயங்களையுடைய பெருமையிற்சிறந்தவரே! இத் திண் தேர் - இவ்வலிய இரதமானது, தெற்கு நோக்கியது எனும் பொருள் தெரிந்தது - தென்றிசையைநோக்கிச் சென்றது என்கின்ற உண்மை தெரிதலாயிற்று, வானம் - இந்த ஆகாயமானது, விற்கு நோக்கிய பகழியின் நெடிது அன்று - (உமது) வில்லுக்குக் கருதிய [வில்லுக்கேற்ற] பாணத்தைப்பார்க்கிலும் நீண்டதன்று, விம்மிநிற்கும் - அழுதுநிற்கிற, நோக்கு இது - இப்பார்வையானது, என் பயத்தது என்று நேர்ந்தான் - யாதுபிரயோசனத்தை யுடையது? என்று எதிர்த்துக் கூறினன் (௧௬௬)

ஆகு மன்னதே கருமமென் றத்திசை நோக்கி
யேகி யோசனை யிரண்டுசென் றாரிடை யெதிர்ந்தார்
மாக மால்வரை கால்பொர மறிந்தது மானப்
பாக வீணையின் கொடியொன்று கிடந்தது பார்மேல்

இ - ள். ஆகும் அன்னதே கருமம் என்று - ஆம் அதுவே (சரியான) செய்கையென்று கூறி, அ திசைநோக்கி ஏகி - அந்தத் (தென்) திசையைநோக்கிப்போய், இரண்டுயோசனைதூரம் சென்றார் - இரண்டுயோசனைதூரம் நடந்த அவ்விராமலட்சுமணர்கள், இடை - நடுவழியில், மாகம் மால்வரை - வானத்தை யளாவிய பெரிய மலையானது, கால் பொர - பிரசண்டமாருதம் போர்செய்ததால், மறிந்தது மான - கீழ்மேலாய் விழுந்ததையொப்ப, பாகம் வீணையின் கொடி ஒன்று - பாகமான வீணைத்துவசம் ஒன்று, பார்மேல் கிடந்தது - பூமியிற் கிடந்ததை, எதிர்ந்தார் - சந்தித்தார்கள்

குறிப்பு.—பாகம் - அச்சம், நான்குமுழங்கொண்ட அளவு, பக்குவம், பங்கு. ()

கண்டு கண்டக ரோடுமக் காரிகை பொருட்டா
லண்ட ராதியாக் காரமா விளைந்ததென் றயிர்த்தார்
துண்ட வாளினிற் சுடர்க்கொடி துணிந்ததென் றுணராப்
புண்ட ரீகக்கண் புனல்வரப் புரவலன் புகல்வான்

இ - ள் கண்டு - (அக்கொடியைப்) பார்த்து, அ காரிகை பொருட்டால் - அந்தப் பெண்ணின் நிமித்தத்தால், கண்டகரோடும் - துட்டர்களோடு, அண்டர் ஆதியர்க்கு - தேவர் முதலானவர்களுக்கு, ஆர் அமர் விளைந்தது என்று அயிர்த்தார் - அரியபோர் உண்டாயினதுபோலும் என்று ஐயுற்றார்கள், சுடர் கொடி - பிரகாசத்தையுடைய அத்துவசமானது, துண்டம் வாளினால் - மூக்காகிய வாளினாலே, துணிந்தது என்று புரவலன் உணரா - துணிபட்டது என்று காவலனாகிய ஸ்ரீராமபிரான் அறிந்து, புண்டரீகம் கண் புனல்வர புகல்வான் - தாமரை மலர்போலுங் கண்களிலிருந்து நீர்வரும்படி கூறுவானாயினன் (௧௬அ)

சோகத் தாலைய நொய்தினெய் திய நுந்தை
மூக்கி னாலிது முறிந்தமை முடிந்ததன் மொய்ம்பிற்
றாக்கி னாடு வடுத்தது தெரிகிலந் தமியன்
யாக்கை தேம்பிடு மெண்ணரும் பருவங்க ளிறந்தான்.

இ - ள் ஐய - ஐயா இளையவனே! சோகத்தால் - (இக்கொடி முறிந்ததைப்) பார்த்தால், இவண் - இங்கு, நொய்து எய்திய நுந்தை - விரைவில்வந்து சேர்ந்த உங்கள் தந்தையாகிய சடாயுவினுடைய, மூக்கினால்—, இது - இக்கொடி, முறிந்தமை முடிந்தது - முறிபட்டதாக முடிவுற்றது, மொய்ம்பில் தாக்கினான் நடு அடுத்தது தெரிகிலம் - (தனது தேக) வலிமையினாலே எதிர்த்தவராகிய அவருக்கு மத்தியில் சமபவித்தது (யாதோ? அதனை) அறிந்தோமில்லை, தமியன் - தனித்தவராகிய அவர், யாக்கை தேம்பிடும் - உடல் மெலிகின்ற, எண் அரு பருவங்கள் இறந்தான் - கணக்கிடற் கருமையான காலங்களைக் கழியப்பெற்றவர் (என்றான்). (௧௬௯)

நன்று சாலவு நடுக்கரு மிடுக்கின னுமுனு
சென்று கூடலாம் பொழுதெலாந் தடுப்பது திடனால்
வென்று மீட்கினு மீட்குமால் வேறுற வெண்ணி
நின்று தாழ்ந்தொரு பயனிலை யென்றலு நெடியோன்

இ - ள் சாலவும் நன்று - மிகவும் நல்லாயிற்று, நடுக்கரு மிடுக்கினன் - (அவர் எவராலும்) நடுக்கஞ்செய்தற் கருமையான பலத்தினையுடையவர், நாமும் சென்று கூடலாம் - (போர் முடிதற்கு முன்பு) நாமும்போய் (அவரைச்) சேர்ந்துகொள்ளலாம், பொழுது எலாம் தடுப்பது திடன் - இற்றைப்பொழுது முழுவதும் (அவர் அத்தீயோனைச் செல்லவிடாமல்) தடைசெய்வது உறுதியே, வென்று மீட்கினும் மீட்கும் - (ஒருகால்) வெற்றியையடைந்து (பிராட்டியைத்) திருப்பினாலுந் திருப்புவார், வேறு உற எண்ணி நின்று தாழ்ந்து ஒருபயன் இலை என்றலும் - வேறுவிதமாக நினைத்துக்கொண்டு நின்று காலதாமதஞ்செய்து ஒரு பிரயோசனமும் இல்லையென்று (இளையபெருமாள்) கூறியவளவில், நெடியோன் - ஸ்ரீராமபிரான் (௧௭௦)

தொடர்வதே நல மாமெனப் படிமிசைச் சுற்றிப்
படருங் காலெனக் கறங்கெனச் செல்லுவார் பாரின்
மிடல்கொள் வெஞ்சிலை விண்ணிடு வின்முறிந் தென்னக்
கடலின் மாடுயர் திரையெனக் கிடந்தது கண்டார்.

இ - ள். தொடர்வதே நலம் ஆம் என - தொடர்ந்துசெல்வதே நன்மையாகும் என்று, படிமிசை சுற்றி படரும் கால் என - பூமிமேல் சுற்றி நடக்கின்ற காற்றைப்போலவும், கறங்கு என - காற்றாடி போலவும், செல்லுவார் - செல்லும் அவர்கள், விண்ணிடு வில் முறிந்தென்ன - வானத்தில் வைத்த இந்திரதனுசு முறிந்தது போலவும், கடலின் மாடு உயர் திரை என - சமுத்திரத்தில் உயர்ந்த அலையைப்போலவும், மிடல் கொள் வெஞ்சிலை - வலிமையைப்பெற்ற வெவ்விய (இராவணனுடைய) வில்லானது, பாரின் கிடந்தது கண்டார் - பூமியிற்கிடந்ததைப் பார்த்தார்கள்.

குறிப்பு —கால் - வேகத்துக்கும், கறங்கு - இருவரும் வேற்றுமையுறாது ஒரு தன்மையராய்ச் சென்ற தன்மைக்கும், இருவரும் எல்லாத் திசைகளையும் நோக்கியவாறே சென்றமைக்கும் உவமை. ஆகாயத்திலிருந்து கீழேவிழுந்ததால் அவ்வில்லுக்கு வானவில்லை உவமைகூறினார். மற்றும், இராவணனொடு சடாயு செய்த போரிற் பெருகிய அரத்தப்பெருக்கில் அவ்வில் வீழ்ந்திருந்தமைபற்றி அதற்குத் திரையை உவமை கூறினார். (௧௭௧)

சிலைகிடந் ததனா லிலக்குவ தேவர்நீர் கடைந்த
மலைகிடந் தென்ன வலியதே வடிவினன் மதியின்
கலைகிடந் தென்னக் காட்சியா னிதுகடித் தெடுத்தா
னிலைகிடந் தவா நோக்கென நோக்கின னின்றான்.

இ - ள். இலக்குவ - இலட்சுமணா! சிலை கிடந்ததால் - இவ்வில் (அரத்தந் தோய்ந்து) இருந்தபடியிருந்த தன்மையாலே, தேவர் - தேவர்கள், நீர்கடைந்த - கடலைக்கடைந்த, மலைகிடந்தென்ன - மந்தரகிரி கிடந்ததுபோல, வலியதே வடிவினன் - வலிமையையுடையதேயாகிய உருவத்தையுடையாரும், மதியின் கலை கிடந்தென்ன காட்சியான் - சந்திரனது கலையிருந்தாற்போன்ற தோற்றத்தை யுடையாருமாகி, இது - இவ்வில்லை, கடித்து எடுத்தான் - கடித்து எடுத்தவருடைய [சடாயுவினுடைய], நிலை கிடந்தவா - யுத்தநிலை யிருந்தவிதத்தை, நோக்கு என - பாராயென்று கூறி, நோக்கினன் நின்றான் - (பின்னும் அவ்வில்லைப்) பார்த்தானாகி நின்றான்.

குறிப்பு —கிடத்தல் - இருந்தபடியிருத்தல். நீர் - இராவணனது மேனியின் அரத்தத்துக்கும், கடைந்தசெயல் - சடாயு தன் மூக்கால் கொத்தியும் நகத்தாற் குடைந்தும் சிறையாற் புடைத்தும் அவ்வரத்தத்திற் சுழன்றமைக்கும், மலை - சடாயுவுக்கும் உவமை. இப்படலத்து 113-வது செய்யுளிற் கூறியவாறு இராவணன் பட்டபாட்டைக் குறிப்பிக்க 'தேவர் நீர் கடைந்த மலைகிடந்தென்ன வலியதே வடிவினன்' என்றார். அவ்வாறு வருத்திய சடாயுவை இராவணன் அம்புகள் மிகுதியும் புண்ணாக்கவில்லை யென்பதும் சடாயுவின் சிறகு அறுபட்டதென்பதும் விளங்க அவன்வெண்மேனியின் காட்சிக்கு மதியின்கலையை உவமைகூறினார். ஆறு - ஆவென விகாரம். இனி, இச்செய்யுளுக்கு - இலக்குவ! தேவர் நீர் கடைந்த மலைகிடந்தென்ன கிட

நதது (ஆகிய) சிலை வலியதே; வடிவினால மதியினகலை கிடநதெனக் காடசியன எனககொணடு பொருள் கூறுகரு முனா ஈணடு ஆல - அசை பாறகடல சடாயுவுக கும மலை விலலுககும உவமை. (௧௭௨)

நினறு பினனரு நெடுநெறி கடநதுற நிமிரச
சென்று நோககினா திரிசிகைத திருநெடுஞ சூல
மொனறு பலகணை மழையுறு புடடிலோ ரிரணடு
குனறு போலவண கிடநதகண டதிசயங கொணடாா

இ - ள நினறு - (அவவாறு நோககினவனுக) நினறு, பினனருமபினனும, நெடு நெறி கடநது உற நிமிர சென்று நோககினா - நீணடவழியில நடநது (குறித்த இடததைச) சேரத தூரமாகப்போயப (இருவரும) பாாததாாகள, அவண அவவிடததில, திரிசிகை திருநெடு சூலம ஒனறு மூனறு தலைகளையுடைய சிறபபுப் பொருநதிய பெரிய சூலாயுதம ஒனறும, பலகணை அநேகபாணஙகளையுடைய, மழை உறு - மேகமபோனற, புடடில ஓா இரணடு - தூணீரஙகள இரணடும, குனறுபோல கிடநத கணடு - மலைகளைப்போலக கிடநதவைகளைப பாாதது, அதிசயம கொணடாா - ஆசசரியமடைநதாாகள

குறிபபு—உறு - உவமவாசகம. மழை - ஈணடுச சூறகொணட மேகம சூறகொணட மேகம மழை பெயவதறகு நீா நிரமபப பெறறுளளதுபோலப போா செயவதறகு கணைநிரமபப பெறறுளளமையால அமபுப புடடிலுககு மேகம உவமை கூறபபட்டது (௧௭௩)

மறிததுஞ சென்றனா வானிடை வயஙகுற வழஙகி
யெறிககுஞ சோதிகள யாவையுந தொககன வெனலா
நெறிககொள கானக மறைதர நிருதாகோ னெஞசிற
பறிதது வீசிய கவசமுங கிடநதது பாாததாா.

இ - ள மறிததும சென்றனா - பினனும அப்பாறசென்ற ஸ்ரீராமலடசுமணாகள, வான இடை வயஙகுற வழஙகி எறிககும - ஆகாயததில விளஙகுமபடி புலாவி ஒளிவீசுகினற, சோதிகள யாவையும - சூரிய சந்திராதிகளையும, தொககன எனல ஆம - ஒனறுசோநதன எனறு கூறுதறகு (ஏறறது) ஆகிய, நிருதாகோன நெஞசில பறிதது-அரககருக கரசனுகிய இராவணனுடைய மாாபிலிருநது (சடாயு) பிடுஙகி, நெறி கொள கானகம மறைதர -(நடககினற) பாதையைககொணட காடு மறைபடுமபடி, வீசிய - எறிநத, கவசமும கிடநதது பாாததாா - கவசமும கிடநததைப பாாததாாகள

குறிபபு—சோதிகள் - தனியே, துவாதசாதிததருமாம (௧௭௪)

கானகி டநதது மறைதரக காலவயக் கவிமாத
தாளகி டநதுழிச சாரதி கிடநதுழிச சாா்ந்தா
ரூனகி டநதெரளி ருதிரமுங கிடநதுள துலகின
வான்கி டந்தது போலபவன கிடநதுழி வநதாா,

இ - ள் கான மறைதர கிடநதது - கானக மறைபடும்படி கிடந்ததாகிய, கால் வயம கலி மா கிடநதுழி - காறறை ஒததவலிபொருநதிய கேடடையடைநத குதிரை விழுநதுகிடநத இடததிலும, சாரதி கிடநதுழி - தோபபாகன கிடநத இடததிலும, சாரநதாா - சோநதவாகளாகி, (பினனா), ஊன கிடநது - தசைகிடநதும, ஒளிா உதிரமும கிடநது - விளஙகுகினற இரததமுங கிடநதும, உளது - இருககிறதாகிய, உலகின - நிலததில், வானகிடநததுபோலபவன - மேகம கிடநததை ஒபபவனுகிய இராவணன, கிடநதுழி வநதாா - (மூசசிறறவனுய மூடிசாயநது) கிடநதிருநத இடததிறகு வநதாாகள

குறிபபு — கான கிடநதது - கானமாககிடநத இடமுமாம் கலி - ஒலியும போருமாம இனி, கலினமா வெனபதன விகாரமுமாம. ஒளி + ருதிரம எனறும பிரிககலாம, ருதிரம - இரததம. ஈரமபுலராதிருநதது எனபது விளஙக 'ஒளிருதிரம' எனறா (கஎரு)

கணட லஙகுதங கைததலம விதிாததனா கவினா
விணட லநதுறந திறுதியின விரிகதிா வெயயோன
மணட லமபல மணணிடைக கிடநதன மணியின
குணட லமபல குலமணிப பூணகளின குவியல.

இ - ள் இறுதியின - யுகாநத காலததில, விரிகதிா - மிகுகினற ஒளியினையுடைய, வெயயோன மணடலம பல - சூரியமணடலஙகள அநேகம, கவின ஆா விண தலம நீ றந்து - அழகுபொருநதிய ஆகாயததினினறு நீஙகி, மண இடைகிடநதன - பூமியிற கிடநதிருநதாறபோனற, மணியின குணடலம பல - இரததின குணடலஙகள அநேகததையும, குலம மணி பூணகளின குவியல - கூடடமான இரததினஙகள பதிதத ஆபரணஙகளினுடைய குவியலையும, கணடு - பாாதது, அலஙகுநம கைததலம - (ஊனும உதிரமும இருந்த இடததைககணடு ஆசசரியமுறறு) அசைதத தமது கைகளை, விதிாததனா - (பினனும ஆசசரியமுறறு) அசைததாாகள ()

தோள ணிககுலம பலவுள குணடலத தொகுதி
வாளி மையபன பலவுள மணிமுடி பலவா
ளுள னைததையுங கடநதனன றமிய னநதாதை
யாளி போலபவா பலருளா பொருதன ரிளையோய

இ - ள். இளையோய் - இளையவனே! தோளணி குலம பல உள - வாகுவலயததினது கூட்டம அநேகம இருககினறன, வாள இமைபபன குணடலம தொகுதி பல உள - ஒளி வீசுவனவாகிய குணடலததினது கூடடம அநேகம இருககினறன, மணிமுடி பல ஆல - இரததினகிரீடஙகள அநேகம ஆதலால, தமியன நம தாதை - தனிததவராகிய நமது தநதையாா, நாள அனைததையும கடநதனன - (தமககு விதிதத ஆயுள) நாள முழுதுந தளளினவா, பொருதனா யாளிபோலபவா பலா உளா - (அவரோடு) போாசெயதவராகிய யாளியானையை ஒபபவாகள அநேகராக இருககினறாாகள,

கச

ண குறிபபு:—தோளணி- தோளில அணியப்படுவது நாளனைததையுங கடநதவனா் னவே மிகவிருநத திசையையுடையவ ரெனபது குறிககப்பட்டது. (கஎஎ)

திருவி னாயக னுரைசெயச் சுமித்திரை சிங்கந்
தருவி னீளிய தோள்பல தலைபல வென்றாற்
பொருது தாதையை யித்தனை நெறிகொடு போனா
னொருவ னேயவ னிராவண னாமென வுரைத்தான்.

இ - ள். திருவின் நாயகன் உரைசெய - (கீழ்க்கூறியவாறு) ஸ்ரீ மஹாலட்சுமிக்குத் தலைவனாகிய ஸ்ரீராமபிரான் சொல்ல, சுமித்திரை சிங்கம் - சுமித்திராதேவியினது (புத்திரனாகிய) சிங்கம்போல்வான [இளையபெருமாள்], தருவின் - விருட்சங்களைப் பார்க்கிலும், நீளியதோள் பல - நீண்டனவாய புயங்கள் அநேகம், தலை பல என்றால் - தலைகள் அநேகம் என்று கூறினால், பொருது - போர்செய்து, தாதையை - (நமது) தந்தையை, இத்தனை நெறி கொடு போனான் ஒருவனே - இவ்வளவு தூரமான வழியிற்கொண்டு சென்றவன் ஒருவனேதான், அவன் இராவணன் ஆம் என உரைத்தான் - அவ்வாறு செய்தவன் இராவணனாவான் என்று கூறினான்.

குறிப்பு.—மனைவியைப் பறிகொடுத்துத் தேடிச் செல்லுமிவன் தன்மனக்கலக்கத்தால் ஐயமற உணர்தற்கு இயலாததாலும் மனைவியை மீட்பதிலேயே கருத்துச் சென்றிருந்தமையாலும் கீழ்க்கவியிற் கூறியவாறு தலைகள் ஆபரணங்களைக்கண்டு தனக்குதவியாயவந்த சடாயு வெற்றிகொண்டானென்றும் பொருதவர் அநேகவீரர்களென்றுங் கூறித் தன்மனைவி மீட்கப்பட்டிருப்பாள் என்று சிறிது மகிழ்வடைந்தான் என்பார் 'திருவினாயகன்' என்றார். தமையனுக்குவந்த குறைவு தன்னதெனக் கருதியும், பகைவனைக் கொல்லவும் அல்லது அவனாற் கொல்லப்படவும் தன்தாயின் சொற்படி தான் முன் நின்றும், விரைந்து சென்று பகைவனைக்கண்டு சிங்கம்போலப் பாய்வேன் என்று கூறினானென்பது தோன்றச் 'சுமித்திரை சிங்கம்' என்றும், சடாயுவைக் கதறச்செய்திருப்பான் என்பது தோன்ற 'இராவணன்' என்றுங் கூறினார். தோள்பல தலைபல வென்றதோடு கால்பலவென்று கூறாமையால் ஒருவனேயென்பது தெளிந்து. (௧௭௮)

மடலு ணாட்டிய தாரிளை யோன்றனை மதியா
மிடலு ணாட்டங்க டீயுக நோக்கினன் விரைவா
னுடலு ணாட்டிய குருதியம் பரவையி னும்பர்க்
கடலு ணாட்டிய வரையெனத் தாதையைக் கண்டான்.

இ - ள். மடல் - இதழ்கள், உள - உள்ளே, நாட்டிய - நடப்பட்டுள்ள, தார் - மாலையையுடைய, இளையோன்தனை - இளையபெருமாளை, மதியா - மதித்து, (பின்னர்), மிடல் உள - வலியமனமும், நாட்டங்கள் - விழிகளும், தீ உக - நெருப்பைச் சிந்தும்படி, நோக்கினன் விரைவான் - பார்த்தானாகி விரைந்துசெல்லும் அவ்விராமபிரான், உடலுள் நாட்டிய - உடலில் இருந்திய, குருதி பரவையின் உம்பர் - இரத்தத்தாலாகிய கடலின்மேல், கடலுள் நாட்டிய வரை என - சமுத்திரத்தில் நட்ட மலை (இது) என்னும்படி, தாதையை கண்டான் - (தனது) தந்தையாகிய சடாயுவைப் பார்த்தான்.

குறிப்பு.—புறவிதழ் விரிந்தும் அகவிதழ் விரியாமலுமிருக்கிற மலர் என்பார் 'மடலுணாட்டிய' என்றார். தார் - போர்க்குரியமாலை. அம் - சாரியை. கடல் - இரத்தமிகுதிக்கும், வரை - சிறகுகளறுக்கக் காணப்படும் பெரிய உருவத்துக்கும் உவமை. ()

துள்ளி யோங்குசெந் தாமரை நயனங்கள் சொரியத்
தள்ளி யோங்கிய வமலன்றன் றனியுயிர்த் தந்தை
வள்ளி யோன்றிரு மேனியிற் றழனிற வண்ணன்,
வெள்ளி யோங்கலி லஞ்சன மலையென வீழ்ந்தான்.

இ - ள். துள்ளி - துடிதுடித்து, ஓங்கு - உயர்ந்த, செந்தாமரை நயனங்கள் - செந்தாமரை மலர்போன்ற கண்கள், சொரிய - (நீரைச்) சிந்தும்படி, தள்ளி ஓங்கிய அமலன் - தள்ளிவிட்டு (முன்வந்து) உயர்ந்த [நின்ற] மலரகிதனாகிய ஸ்ரீராமபிரான், தன் - தனது, தனி உயிர் தந்தை - ஒப்பற்ற உயிர்போன்ற பிதாவாகிய, வள்ளியோன் திருமேனியில் - வள்ளன்மையுடைய சடாயுவினுடைய சிறப்புற்ற உடலின்மேல், தழல் நிறம் வண்ணன் வெள்ளி ஓங்கலில் - நெருப்பினது நிறம்போன்ற நிறத்தினையுடைய சிவபிரானது வெள்ளிமலையின்மேல், அஞ்சனம் மலை என வீழ்ந்தான் - கரியமலை (வீழ்ந்தது) போல விழுந்தான்

குறிப்பு — தந்தைமேல் வீழ்ந்தழுதற்கு முன்னதாகவந்த இளையபெருமாளைத் தள்ளிவிட்டுத் தான் முந்திவந்து விழுந்த எம்பெருமான் மனித்தத்தன்மைக்கேற்ப அமலத்தன்மை நீங்கியது வியப்பின் பாற்றாம் என்பார் 'தள்ளி யோங்கிய அமலன்' என்றார் உயிரைக்கொடுத்த வள்ளன்மைபற்றிச் சடாயுவை 'வள்ளியோன்' என்றார் திரு என்றது - ஈண்டு அழகு என்னல் சிறப்புடைத்தன்று. தழல் நிறம் - அரத்தத்துக்கும், வெள்ளியோங்கல் - வெண்மையான பெரியசரீரத்துக்கும், அஞ்சனமலை - ஸ்ரீராமபிரானது திருமேனிக்கும் உவமை (௧௮௦)

உயிர்த்தி லனொருநாழிகை யுணர்விலன் கொல்லென்
றயிர்த்த தம்பிபுக் கங்கையி னெடுத்தன னருவிப்
புயற்க லந்தநீர் தெளித்தலும் புண்டரீ கக்கண்
பெயர்த்துப் பைப்பைய வயர்வுதீர்ந் தினையன பேசும்.

இ - ள் ஒருநாழிகை உயிர்த்திலன் - (அவ்வாறுவிழுந்த ஸ்ரீராமபிரான்) ஒருநாழிகைவரையிலும் சுவாசமில்லாதவனாயினன், உணர்விலன் கொல் என்று அயிர்த்த தம்பி - தெளிவில்லாதவனாயினனோ என்று (தன் தமையனைநோக்கிச்) சந்தேகமடைந்த இளையபெருமாள், அருவிபுக்கு - (ஒரு) மலையின்வீழ் யாற்றிற்புகுந்து, அங்கையின் எடுத்தனன் - (தனது) அகங்கையினிடத்து (அள்ளி) எடுத்து, புயல் - மேகம்போல, கலந்த நீர் - (தன் கண்ணீரோடு) கலப்புற்ற நீரை, தெளித்தலும் - (தமையன்மேல்) தெளித்தவளவில், புண்டரீகம் கண் பெயர்த்து - தாமரைமலர்போன்ற (தனது) கண்களைத்திறந்து, பைப்பைய - பையப்பைய [மெள்ளமெள்ள], அயர்வு தீர்ந்து - சோர்வுநீங்கி, இனையன - இத்தன்மையான மொழிகளை, பேசும் - (ஸ்ரீராமபிரான்) சொல்வானாயினன். (௧௮௧)

வேறு

தந்தா ரையுரைத்த தனையா கொலைநேர்ந்தார்
முந்தாரே யுள்ளார் முடிந்தான் முனையொருவ
னெந்தாயோ வெற்காக நீயு மிறந்தனையோ
வந்தோ வினையே னருங்கூற்ற மானேனே.

இ - ள. தம தாதையரை - தமது பிதாககளை, தனையா - புதலிராகள, கொலை கோநதார - கொலைசெய்தாாகளாகி, மூநது ஆரே - உளளாா (எமககு) முறகாலதது எவா இருககினறாா? ஒருவன முனைமுடிநதான - ஒரு தகபபன முனனமே இறந தபோனான, எநதாயோ - எனது தநதையே! [சடாயுவே!], எறகாக நீயும இறந தனையோ - எனபொருடடாக (சககரவாததி இறநதுபோனதுபோல) நீயும இறந துபோயினையோ? அநதோ—, வினையேன -பாவியாகிய நான, அரு கூறறம ஆனே ன - (உஙகளிருவருககும) அரியயமன ஆயினேன (௧௮௨)

பினனுறுவ தோராதே பேதுறுவேன பெணபாலா
டனனுறுவ றீாபபான றனியுறுவ தோராதே
யுனனுறவு றீாததா யோருறவு மிலலாதே
னெனனுறுவான வேணடி யிடருறுவே னெனறுயே.

இ - ள. என தாயே - எனது தாயபோனறவனே! பின உறுவது ஓராதே பேது உறுவேன - (நான) பினசமபவிபபதைக கருதாமலே மதிமயஙகுவேன, நீ—, பெணபாலாள தன - பெணமையினிடததவளாகிய ஜானகியினது, உறுவல றீாப பான - துனபததைத தீாககுமபொருடடு, தனி உறுவது ஓராதே - (ஒருதவியுமின றித) தனிதது அடையுந துனபததைக கருதாமலே, உன உறவுறீாததாய - உனது சிநேகபநதக கடமையைத தீாததுககொணடாய், ஓா உறவும இலலாதேன - ஒரு நடபும இலலாதவனாகிய நான, என உறுவான வேணடி - யாதுபயனை யடையும படி விருமபி, இடா உறுவேன - துனபததையடைவேன?

குறிபபு —தாய - சிறப்பினகண வநத பால வழுவமைதி (௧௮௩)

மாணடேனே யனறே மறையோா குறைமுடிபபான
பூணடேன விரத மதனா னுயிாபொறுபபே
னீணடேன மரமபோல நினறொழிநத புனறொழிலேன
வேணடேனிம மாமாயப புனபிறவி வேணடேனே.

இ - ள மாணடேனே அனறே - (இஙஙனம நிகழநத தீயசெயலகளால நான) இறநதுபோனவனே யனறோ? மறையோாகுறை முடிபபான விரதம பூண டேன - வேதியாகளுடைய குறைவைத தீாககும்பொருடடு ஒரு விரததைத மேற கொணடேன, அதனால உயிாபொறுபபேன நீணடேன - அவவிரததால உயிரை த்தாஙகினவனாகி (இறவாமல் இதுவரையும காலம) நீளவுறறேன; மரமபோல நின று - மரததைபபோல (நினற இடததே) நினறு, ஒழிநத - (நறசெயகையிற சோா து) நீஙகிய, புல தொழிலேன-அறபமான செயகையையுடைய யான, இ மாமாயம புல் பிறவி - இநதப் பெரிய பொயயாகிய தாழ்வுளள பிறப்பை, வேண்டேன வே ணடேன - முறறும விருமபமாடடேன (௧௮௪)

எனறாம பறறுணண வேனறுயைச சானறேனைக
கொனறானு நினறான கொலையுணடு நீஙகிடநதாய
வனறாட சிலையேநதி வாளிக கடலசுமநது
நினறேனு நினறே னெடுமரமபோ னினறேனே.

இ - ள். என்தாரம் பற்றுண்ண - எனது மனைவி பிடிபட, (அதனால்), ஆயை ஒன்று - பெற்றதாயையொத்து, சான்றோயை - (அவளினும் அன்பில்) மிக்கோனாகிய உன்னை, கொன்றானும் நின்றான் - கொன்றவனும் சாகாமல் இருக்கின்றான், கொலையுண்டு நீ கிடந்தாய் - கொலைபட்டு நீ கிடக்கின்றாய், வல் தாள் சிலை ஏந்தி - வலிய அடிப்பக்கங்களாகிய முனைகளையுடைய வில்லினைத்தாங்கியும், வாளி கடல் சுமந்து - பாணங்களாகிய கடலைச் சுமந்துகொண்டும், நின்றேனும் - நின்றவனாகிய நானும், நெடுமரம்போல் - பெரிய மரம்போல, நின்றேன் நின்றேன் - நின்றவனாய (ஒன்றுஞ்செய்யாமல்) ஒழிந்தேன்,

குறிப்பு —பிள்ளையைக்காணாத அன்னை பதறிக்கதறி அப்பிள்ளையைத் தேடியோடிச் செல்வதுபோலத் தேடியோடிவந்த செயல்விளங்க 'என்றாயை' என்றார். இனி, எற்றாய என்பது என்றாய என விகாரமுற்றுவந்ததெனக் கொண்டு, என்றாரம் பற்றுண்ணுமபடி உயர்ததாய [தடுத்து விடுதலையாகும் நிலைமையிற் செய்தாய] என்று பொருள்கூறலு மமையும். (கஅரு)

சொல்லுடையா ரென்போ லினியுளரோ தொல்வினையே
னில்லுடையாள் காண விறகுடையா யெண்ணிலாப
பல்லுடையா யுன்னைப் படையுடையான் கொன்றகல
வில்லுடையே னின்றேன் விறலுடையே னல்லேனோ.

இ - ள் இனி—, என்போல - என்னைப்போல், சொல் உடையார் உளரோ - புகழையுடையவராக விருக்கிறார்களோ? தொல்வினையேன் இல் உடையாள் காண - பூருவகருமத்தையுடையேனாகிய என்னுடைய மனைவி காணும்படியாக, இறகு உடையாய - சிறகுகளையுடையவனே! எண் இலா பல் உடையாய - கணக்கில்லாத பற்களையுடையவனே! உன்னை—, படை உடையான் - ஆயுதத்தையுடையவன், கொன்று அகல - கொலைசெய்து போமபடி, வில்லுடையேன் நின்றேன் - வில்லினையுடையேனாகி (வீணே) நின்றவனாகிய நான், விறல் உடையேன் அல்லேனோ - வலிமையையுடையேன் அல்லாதவனோ?

குறிப்பு.—என் மனைவி காணும்படி இராவணனோடு இறகாலடித்தும் பற்களாற் கடித்தும் யுத்தஞ்செய்தவனே என்பார் 'இல்லுடையாள் காண விறகுடையா யெண்ணிலாப் பல்லுடையாய' என்றார். எனவே, நான் காண இறகில்லாமலும் வாய்மூடிக்கொண்டிருக்கின்றாய என்பது பெறப்படும். படையுடையான - வில் முதலியன விழுந்து, வாளாயுதமொன்று மட்டுமுடைய ராவணன. (கஅசு)

அன்னா பலபலவும் பன்னி யழுமயங்கும்
தன்னே ரிலாதானுந் தம்பியுமத் தன்மையனா
யுன்னா வுணாவுசிறி துணாமுளைப்பப் புள்ளரசு
மின்னா வுயிர்ப்பா னிருவரையு நோக்கினான்.

இ - ள். தன் நேர் இலாதானும் - தனக்கு (தானே ஒப்பல்லாமல் வேறு) உவமையில்லாதவனாகிய ஸ்ரீராமபிரானும், அன்னா பலபலவும் பன்னி அழும் - அத்தன்மையாகப் பற்பலவாறானவைகளையுஞ் சொல்லி அழுவான்; மயங்கும் - மதிமயக்கம்

கொள்வான்; தம்பியும் அ தன்மையன் ஆ - இளையபெருமாளும் அந்த நிலைமையையு டையவனாக, (அதனால்), உன்னு - நினைப்புற்று, உள - மனத்தில், சிறிது உணர்வு முளைப்ப - சிறிது தெளிவு தோன்றியதால், புள் அரசும் - பறவைகட் கரசனாகிய சடாயுவும், இன்னு உயிர்ப்பான் - தன்பததோடு சுவாசம்விடுவோனாகி, இருவரையும் நோக்கினன் - (ஸ்ரீராம லட்சுமணர்களாகிய) இருவரையும் பார்த்தான் (௧௮எ)

உற்ற துணரா துயிருலைய வெய்துயிர்ப்பான்
கொற்றவரைக் கண்டானற்ற னுள்ளங் குளிர்ப்புற்று
னிற்ற விருசிறகு மின்னுயிரு மேழுலகும்
பெற்றனனே யொத்தான் பெயாததேன் பழியென்றான்.

இ - ள். உற்றது உணராது - (பின்பு பிராட்டிக்குச்) சம்பவித்தசெயலை (இன்னது என்று) அறியாமல், உயிர் உலைய- உயிர்சோர்கை, வெய்து உயிர்ப்பான்- வெம்மையதாகப் பெருமூச்செறிவானாகிய சடாயு, கொற்றவரை கண்டான் - வெற்றியாளராகிய ஸ்ரீராமலட்சுமணர்களைப் பார்த்தான், தன் உள்ளம் குளிர்ப்பு உற்றான் - தனது மனத்தில் (சந்தோஷத்தால்) குளிர்ச்சியடைந்தான், இற்ற இரு சிறகும் - அறுபட்ட இரண்டு சிறைகளையும், இன் உயிரும் - இனிய உயிரையும், எழ் உலகும் - ஏழுலகங்களையும், பெற்றனனே ஒத்தான் - அடைந்தவனையே ஒப்பானான்; பழி பெயாததேன் என்றான் - பழியை நீக்கிவிட்டேன் என்று கூறினான்.

குறிப்பு — கொற்றவரைக் கண்டவனுடைய உள்ளம் குளிர்ப்புறுவதுபோலக் குளிர்ப்புற்றான் என்னனும் மமையும் கொற்றவர் என்றது - தான் குறித்தகாரியத்தை முடிக்கச்சென்று வெற்றிபெற்றுவந்த வுதவியாளர் என்று விரித்துக்கூறுக. இவ்விராமலட்சுமணர்களைக் கண்டவுடனே தன்பகையைத் தீர்த்துவிட்டதாகக் கருதி மகிழ்ந்தானாகலின் 'கொற்றவரைக் கண்டானற்ற னுள்ளங் குளிர்ப்புற்றான்' என்றார். சடாயு தன்மக்களை அரசரெனக் கருதி அவர்க்குச் செய்யத்தகு மரியாதையைச் செய்யமாட்டானாகலின் கொற்றவர் என்றது - அரசர் என்று பொருள்கூறுதல் சிறப்பிற்றன்றாம். இவரிருவருமவந்து சேர்ந்தமையால் தனது சிறகுகளிரண்டையும் பெற்றவன்போலானான் என்பதும், இனி இவ்விருவரும் இராவணனைக்கொன்று உயிர்போன்ற பிராட்டியையும் அவன் ஆண்டுவரும் ஏழுலகின் அரசையுங் கைக்கொள்கராதலின் இன்னுயிரு மேழுலகும் பெற்றனன்போன்றானென்பதும் விளங்க 'இற்ற விருசிறகு மின்னுயிரு மேழுலகும் பெற்றனனே ஒத்தான்' என்றார். (௧௮௮)

பாக்கியத்தா லின்றென் பயனில பழியாக்கை
போக்குகின்றேன் கண்ணுற்றேன் புண்ணியரே வம்மினென்று
தாக்கி யரக்கன் மகுடத் தலைதுமித்த
மூக்கினு லுச்சி முறைமுறையே மோக்கின்றான்.

இ - ள். புண்ணியரே - தருமவான்களே! இன்று - இற்றைநாள், என் - எனது, பயன் இல - பிரயோசனமில்லாத, பழியாக்கை - பழிப்புக்குரிய சரீரத்தை, போக்குகின்றேன் - விட்டு நீக்குகின்றேனாகிய நான், பாக்கியத்தால் - (எனது) அதிர்ஷ்டத்தால், கண்ணுற்றேன் - (உங்களைப்) பார்த்தேன்; வம்மின் என்று - வாருங்கள் என்று கூறி, தாக்கி - எதிர்த்து, அரக்கன் மகுடம் தலை - இராக்கதனு

கிய இராவணனுடைய கிரீடங்களையுடைய தலைகளை, துமித்த - வெட்டித்தள்ளிய, மூக்கினல—, உசசி - (அவர்களுடைய) உச்சித்தலையை, முறை முறையே மோக கினறான - வரிசை வரிசையாகவே மோககின்றவனுயினன.

குறிப்பு—முறைமுறை - பலதரமுமாம. மோத்தல - முகத்தல். (கஅக)

வஞ்சனையால வந்த வரவெனப தெனனுடைய
நெஞ்சகமே முனனே நினைவித்த தானுலு
மஞ்சொன மயிலை யருந்ததியை நீங்கினிரோ
வெஞ்சலிலா வாறற லிருவீரு மெனறுரைத்தான்.

இ - ள வஞ்சனையால - (இராவணன செய்த) மாயத்தினல், வந்த வரவு என பது - (சீதாபிராட்டி) வரும்படி நேரிட்ட வருகை என்ற விஷயத்தை, முனனே - (இதற்கு) முன்னமே, என உடைய—, நெஞ்சகமே- மனமானதுவே, நினைவித்தது- நினைக்கும்படிசெய்தது, ஆனுலும - ஆயினும், அம சொல - அழகிய வார்த்தைகளைக கூறுகிற, மயிலை - மயிலபோன்றவளும, அருந்ததியை - (கறபினில்) அருந்ததிபோ ன்றவளுமாகிய ஜானகியை, எஞ்சல் இலா ஆற்றல இருவீரும - குறைவிலலாத வலிமையையுடைய நீஙகள இருவீரும, நீங்கினிரோ - (தனித்திருக்கவிட்டுப) பிரி ந்துபோயினீர்களோ? என்று—, உரைத்தான - கூறினன. (ககo)

வேறு

என்றவ னியமபலு மிளைய கோமக
னென்றுமாண டுறுபொரு ளொழிவு றுவகை
வனறிறன மாயமான வந்த தாதியா
னின்றது நிகழ்ந்தது நிரபபி னனரோ.

இ - ள. என்று அவன இயமபலும - (இருவீரும நீங்கினிரோ) என்று அசச டாயு கூறியவளவில, இளைய கோமகன - ராஜபுத்திரரில இளையவன [இலட்சுமண ப்பெருமான], ஆண்டு உறுபொருள - அவவிடத்து உற்ற உணமைகளில, ஒன்றும ஒழிவு உறுவகை - ஒனறேனும குறைவடையாவிதமாக, வன்திறல மாயம மான வந்தது ஆதி ஆ நின்றது - வலிய பகையையுடைய பொய்மமான வந்ததுமுதலாக நின்ற காரணங்களையும, நிகழ்ந்தது - சமபவித்த காரியங்களையும, நிரபபினன - சொல்லி முடித்தான

குறிப்பு —வன்திறல - ஒருபொருட் பனமொழியுமாம நிரபபல - நிரமபச்செ யதல், திருத்தியாக்கல (ககக)

ஆற்றலோ னவவுரை யறைய வானையா
லேற்றுணர்ந் தெண்ணியவ வெருவை வேந்தனு
மாற்றருந் துயரவா மனக்கொ ளாவகை
தேற்றுத னனறென வினைய செப்புவான.

இ - ள ஆற்றலோன அ உரை அறைய - அறிவினையுடையோனுகிய இளை யபெருமாள் அந்த வார்த்தைகளைக்கூற, (பினனர்), அ எருவை வேந்தனும - கழு

குகளுக்கு அரசனாகிய அந்தச் சடாயுவும், ஆணையால் - (ஸ்ரீராமபிரானிட்ட) கட்டளையால், எற்று - (இலைபோன்சொற்களைச் செவியில்) ஏறும்படி செய்ததலை, உணர்ந்து - அறிந்து, எண்ணி - நினைத்து, அவர் - அவ்விராம லட்சுமணர்கள், மாற்றரு துயர மனம் கொள்வகை - நீக்கற் கருமையான துயரத்தை மனத்திற்கொள்ளாத விதமாக, தேற்றுதல் நன்று என - அறிவித்தல் நன்மையானது என்று கருதி, இனைய செப்புவான் - இத்தன்மையான மொழிகளைக் கூறுவானாயினான்.

குறிப்பு — தன் தமையன்மனத்துக்கு வருத்தம் நேரிடாதபடி தமையனது குற்றங்களை மறைத்தும் சுருக்கியும் உரைசெய்தமையாலும், முன்னமே இது மாயச்செய்கையென்று அறிந்து இதனால் தீங்கு நேரிடுமென உரைத்த ஞானவானாதலாலும் 'ஆற்றலோன்' என்றார். ஈண்டு, ஆற்றல் என்றது வலிமையென்னல் சிறப்பன்றும் எற்று - முதனிலைத் தொழிற்பெயர். கூறுகிறமொழிகளைச் சடாயு கேட்டுணர்தற்குச் சக்தியற்றவனாய்ச் சோர்வுற்றதலை யுணர்ந்து சொன்னசொற்களையே பலதரம் சொல்லுமபடி ஸ்ரீராமபிரான் கட்டளையிட்டவாறு இளையபெருமான் சொல்லிச் சடாயுவின் செவியில் அச்சொற்களை ஏறும்படிசெய்தான் என்பார் 'ஆணையால் எற்று' என்றார். (௧௧௨)

அதிசய மொருவரா லமைக்க லாகுமோ
துதியறு பிறவியி னின்ப துன்பந்தாம்
விதிவச மென்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யால்விதி வெல்ல வல்லமோ

இ - ள். ஒருவரால் —, அதிசயம் அமைக்கல் ஆகுமோ - புதுமையைச் செய்தல் ஆகுமோ? [ஆகமாட்டாது], துதி அறு பிறவியின் இன்பம் துன்பம் தாம் - புகழ் அற்ற பிறப்பினது சுகதுக்கங்கள், விதிவசம் என்பதை - ஊழினால் தோன்றுதல் என்னும் விஷயத்தை, மேல் கொள்ளாவிடின் - தலைமையாகக்கொள்ளாது விட்டால், மதிவலியால் - புத்தியினது வலிமையினாலே விதி - ஊழை, வெல்லவல்லமோ - வெல்வதற்கு வல்லமையுடையேமோ? (௧௧௩)

தெரிவுறு துன்பம்வந் தூன்றச் சிந்தையை
யெரிவுசெய் தொழியும திழுதை நீர்தாற்
பிரிவுசெய் தலைகெலாம் பெறுவிப் பான்றலை
யரிவுசெய் விதியினாக் கரிது ண்டாகுமோ.

இ - ள். தெரிவு உறு துன்பம் வந்து ஊன்ற - (தெய்வசங்கற்பத்தால் வந்தது என்று தெளிவாய்) அறிதலுற்ற கஷ்டம் வந்து சார்ந்ததால், சிந்தையை எரிவுசெய்து - மனத்தைத் தீப்பற்றுதல் செய்து, ஒழியும் *அது இழுதை நீர்து - (தாம் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாமல்) விடுகின்ற அத்தன்மையானது மூடத்தன்மையதாகும், பிரிவசெய்து,- (இது தேவருலகு இது நாகருலகு இது மனிதருலகு என்று) வகுத்து, உலகு எலாம் - உலகங்கள் முழுவதையும், பெறுவிப்பான் - (சிருஷ்டித்து) (ஜனமாக்கள்) அடையுமாறு செய்பவனாகிய பிரமதேவனது, தலை -(தலைகளில் ஒரு) தலையை, அரிவுசெய - அறுத்தல் செய்த, விதியினாக்கு - ஊழ் என்பவனுக்கு, அரிது உண்டாகுமோ - அருமையானது ஒன்று உளது ஆகுமோ?

குறிப்பு —பின்னிரண்டடிக்கு வேறுபொருள் செய்தலுங் கூடும். அதாவது — பிரிவுசெய்து - (நீங்கள் பிராட்டியை விட்டுப்) பிரிதலைச்செய்து, உலகு எலாம் பெறு விப்பான் - (தேவருளும்) உலகமுழுவதையும் (தான் போர்முகத்திறந்து உங்களை) அடையும்படி செய்பவனாகிய இராவணனது, தலை அரிவுசெய் - தலைகளை அறுத் துத்தள்ளுதல் செய்கின்ற, விதியினோர்க்கு -விதியையுடையவர்களாகிய உங்களுக்கு, அரிது உண்டாகுமோ - அருமையானது ஒன்று உளதாகுமோ? என்பது. முன்பொ ருட்கு விதியினோர் - உயர்வினை வாய்ந்த திணைவழுவமைதி. (சகூச)

அலக்கணு மின்பமு மணுகு காலவை
விலக்குவ மென்பது மெய்யிற் றாகுமோ
விலக்கமுப் புரங்களை யெய்த வில்லியார்
தலைக்கலத் திரந்தது தவத்தின் பாலதோ

இ - ள் அலக்கணும் - துன்பமும், இன்பமும்—, அணுகும் காலை - கிட்டு கின்றகாலத்தில், அவை - அவ்வின்பதுன்பங்களை, விலக்குவம் என்பது - விலக்கி விடுவோம் என்று கூறுவது, மெய்யிற்று ஆகுமோ- உண்மையை யுடையதாகுமோ? [ஆகாது], முப்புரங்களை விலக்க - திரிபுரங்களை யொழிக்க, எய்த - (கணை) எவிய, வில்லியார் - வில்லினையுடைய சிவபெருமானார், தலை கலத்து - பிரமகபாலமாகிய பி க்ஷாபாத்திரத்தில், இரந்தது - யாசித்தது, தவத்தின்பாலதோ - தவத்தினிடத்ததோ? [தவம்புரிவோர் இரக்கும் மேன்மையான யாசகத்தொழிலோடு சேர்ந்ததாகுமோ],

பொங்குவெங் கோளரா விசும்பு பூத்தன
வெங்கதிரச் செல்வனை விழுங்கி நீங்குமா
லங்கண்மா ஞாலத்தை விளக்கு மாய்கதிர்த்
திங்களு மொருமுறை வளருந் தேயுமால்

இ - ள் பொங்கு வெம் கோள் அரா - கோபிக்கின்ற வெவ்விய கொலைத்தொ ழிலையுடைய (ராகு என்னும்) பாம்பானது, விசும்பு பூத்தன- ஆகாயத்தின்கண் உண் டாயினவாகிய,வெங்கதிர் செல்வனை-வெவ்விய கிரணங்களென்னுஞ் செல்வத்தினை யுடையானாகிய சூரியனை, விழுங்கிநீங்கும்- விழுங்கி விட்டகலும், அங்கண்மாஞால த்தை - இடமகன்ற பெரிய பூமியை, விளக்கும் - (இருளைவிலக்கி) விளங்கச்செய் கின்ற, ஆய்கதிர் திங்களும் - ஆய்ந்த (மேலான) கிரணங்களையுடைய பூரணசந்திர னும், ஒருமுறை வளரும் தேயும் - ஒருதரம் வளர்தலையும், (மற்றொருதரம்) தே ய்தலையும். (சகூரு)

அந்தரம் வருதலு மனைய தீர்தலுஞ்
சுந்தரத் தோளினிர் தொன்மை நீர்தான்
மந்திர விமையவர் குருவின் வாய்மொழி
யிந்திர னுற்றன வெண்ண வொண்ணுமோ.

இ - ள். சுந்தரம் தோளினிர் - அழகிய புயங்களையுடையவர்களே! அந்தரம் வருதலும் - தீமைகள்வந்து சேர்தலும், அனைய தீர்தலும் - அப்படிவந்த தீமைகள் நீங்குதலும் தொன்மை நீரது - தொன்றுதொட்டு வருவதான தன்மையதாகும், மந் திரம் - வேதமந்திரங்களை யுணர்ந்த, இமையவர் குருவின் வாய்மொழி - தேவர்கள்

குருவாகிய வியாழபகவானுடைய வாயிலிருந்து வந்த சாபகாரணத்தையாலே, இந்திரன் உற்றன - இந்திரனடைந்த துன்பங்களை, எண்ண ஒண்ணுமோ - கணக்கிட முடியுமோ? [முடியாது] (௧௧எ)

தடைக்கரும் பெருவலிச் சம்ப ரப்பெயர்க்
கடைத்தொழி லவுணனுற் குலிசக் கையினன்
படைத்தனன் பழியது பகழி வில்லவாய்
துடைத்தன னுந்தைதன் குவவுத் தோளினால்.

இ - ள் பகழிவில்லவலாய - அம்பினையேவும் விற்றொழிலில் வல்லவனே! தடைக்கு அரு பெருவலி - தடுத்தற்கு அருமையான பெரியவலிமை பொருந்திய, சம்பரன்பெயர் - சம்பரன் என்னும் பேரையுடைய, கடைத்தொழில் - தாழ்வான (தீய) செயலையையுமுடைய, அவுணனால் - அசுரனால், குலிசம் கையினன் - வச்சிராயுதத்தைத் தாங்கிய கையினையுடையானாகிய இந்திரன், பழிபடைத்தனன் - பழிக்கப்படுதலையுடையவனாயினன், அது - அப்பழியை, உந்தை தன் குவவு தோளினால் - உனது தந்தையாகிய தசரதச் சக்கரவர்த்தி தன்னுடைய திரட்சிபொருந்திய புயங்களினாலே, துடைத்தனன் - நீக்கினன். (௧௧அ)

வேறு.

பிள்ளைச்சொற் கிளிய னாளைப் பிரிவுற லுற்ற பெற்றி
தள்ளுற்ற வறமுந் தேவர் துயரமுந் தந்த தேயாற்
கள்ளப்போ ரரக்க ரென்னுங் களையினைக் களைந்து வாழ்தி
புள்ளிறக்கும் புலனில் பேய்க்குந் தாயனை புலவு வேலோய்.

இ - ள் புள்ளிறக்கும் - பட்சிகளுக்கும், புலன் இல் பேய்க்கும் - அறிவில்லாத பேய்களுக்கும், தாய் அனை - (உணவூட்டுஞ்செயலில்) தாயைபொத்த, புலவு வேலோய் - புலாலமணங் கமழ்கின்ற வேலினையுடையாய்! பிள்ளைசொல் கிளி அனாள் - மழலைச்சொற்களையுடைய கிளியையொத்த ஜானகியை, பிரிவு உறல் உற்ற பெற்றி - பிரிதலுற்ற பேற்றை [சம்பவிப்பை], தள்ளுற்ற அறமும் - (அரக்கர்களின் கொடுஞ்செயலையாலே) தள்ளிவிடப்படுதலையடைந்த தருமமும், தேவர் துயரமும் - தேவர்களுடைய துன்பமும், தந்தது - தந்தன, ஆல் - ஆதலால், கள்ளம் போர் அரக்கர் என்னும் - திருட்டுத்தனமான போரினைச்செய்கின்ற இராக்கதர்கள் என்று கூறுகின்ற, களையினை - களையை, களைந்து - நீக்கிவிட்டு, வாழ்தி - வாழ்வாயாக

குறிப்பு — அறமுதலியன வோங்குதற்கு இடையூறாயிருக்கும் அரக்கரைக்கொன்று நீக்கி இவ்வுலகத்தைக் கைக்கொண்டு அரசுபுரிந்து வாழ்வாய் என்பார் 'களையினைக் களைந்துவாழ்தி' என்றார் (௧௧௯)

வடுக்கணவார் கூந்த லாளை யிராவணன் மண்ணி னோடு
மெடுத்தன னேகு வானை யெதிர்ந்தென தாற்றல் கொண்டு
தடுத்தனெ னுவ தெல்லாந் தவத்தரன் றந்த வாளாற்
படுத்தன னிங்கு வீழ்ந்தே னிதுவின்று பட்ட தென்றான்.

இ - ள் இராவணன் - (அழிசெய்கின்றவனாகிய) இராவணன், வடுகண் வார் கூந்தலாளை - மாவடுவைப்போன்ற கண்களையும் (அக்கண்கள் மறையும்படி அவிழ்ந்து ஒழுகலுற்றுப் புரளுகின்ற) நீண்ட கூந்தலையுமுடையவளாகிய ஜானகியை, மண்ணினோடும் எடுத்தனன் ஏகுவானை - மண்ணோடும் எடுத்தானாகிச் செல்லும் அவனை, எதிர்ந்து - எதிர்த்து, என்னது ஆற்றல் கொண்டு தடுத்தனென் - என்னுடைய பலத்தைக்கொண்டு தடுத்தேன்; (அதனால்) ஆவது எல்லாம் - ஆகின்ற வெற்றிமுழுவதையும், தவத்து - அவன் செய்த தவத்தால், அர்ந்தகத்த - சிவபிரான் ஈந்த, வாளால் - வாளினாலே, படுத்தனன் - தோலையும்படி செய்தான், இங்கு வீழ்ந்தேன்- (இந்த நிலைமைபொருந்தி) இவ்விடத்தில் விழுந்தேன், இது - இம்மரணவேதனை, இன்று பட்டது என்றான் - இன்றுதான் உண்டாயிற்று என்று கூறினான். (௨௦௦)

கூறின மாற்றஞ் சென்று செவித்துளை குறுகா முன்னம்
ஊறின வுதிரஞ் செங்க ணுயிர்த்தன வுயிர்ப்புச் செந்தீ
யேறின புருவ மேன்மே லிரிந்தன சுடர்க ளெங்கு
கீறின தண்ட கோளங் கிழிந்தன கிரிக ளெல்லாம்

இ - ள் கூறின மாற்றம் செவித்துளை சென்று குறுகாமுன்னம் - (சடாயு) கூறிய அச்சொல்லானது (ஸ்ரீராமபிரானது) காதுகளினுடைய துவாரத்திற்போய்ச் சேராதமுன்பு, உதிரம் செங்கண் ஊறின - அரத்தம் செய்ய கண்களிற் சுரந்தன, உயிர்ப்பு செந்தீ உயிர்த்தன - பெருமூச்சானவை செய்ய நெருப்பை எறிந்தன, புருவம் ஏறின - புருவங்கள் (நெற்றிமேல்) ஏறுதலுற்றன; சுடர்கள் எங்கும் மேன்மேல் இரிந்தன - அக்கினிச்சுவாலைகள் எவ்விடத்தும் அதிகமாக ஓடின, அண்டகோளம் கீறினது - அண்டவுண்டை பிளப்புற்றது, கிரிகள் எல்லாம் கிழிந்தன - மலைகளெல்லாம் பிளவுற்றன (௨௦௧)

மண்ணகந் திரிய நின்ற மால்வரை திரிய மற்றைக்
கண்ணகன் புனலுங் காலுங் கதிரொடுந் திரியக் காவல்
விண்ணகந் திரிய மேலை விரிஞ்சனுந் திரிய வீர
னெண்ணருங் பொருள்க ளெல்லா மென்பது தெரிந்த தன்றே

இ - ள் மண் அகம் திரிய - பூமியானது சுற்றுவதாலும், நின்ற மால்வரை திரிய - (ஒரேயிடத்து நிலைத்து) நின்ற பெரியமலைகள் சுற்றுவதாலும், மற்றை—, கண் அகல் புனலும் - இடமகன்ற கடலும், காலும் - காற்றும், கதிரொடும் திரிய - சூரியனோடு சுற்றுவதாலும், காவல் - (தேவர்கள் வல்லமையால்) காக்கப்படுதலையுடைய, விண் அகம் திரிய - தேவலோகம் சுற்றுவதாலும், மேலை விரிஞ்சனும் திரிய - மேலான பிரமதேவனுஞ் சுற்றுவதாலும், எண் அருபொருள்கள் எல்லாம்- எண்ணிடற் கருமையான வஸ்துக்களெல்லாம், வீரன் என்பது தெரிந்தது - (இந்த ஸ்ரீராமபிரான் யாவரினும் மிக்க) வலிமையையுடையவன் என்னுஞ் சங்கதியை அறிந்துகொண்டன. (௨௦௨)

குறித்தவெங் கோபம் யார்மேற் கொள்ளுறுங் கொல்லென்ன றஞ்சி
வெறித்தன ருலகமெல்லாம் விம்முறு கின்ற வேலைப்
பொறிப்பிதிர்ப் படலைச் செந்தீப் புகையொடு பொடிப்பப் பொம்மென்
றெறிப்பதோ ருருவ ரோன்ற வீரமனு மியம்ப லுற்றான்.

இ - ள். குறித்த வெஙகோபம யாாமேல் கொளளுறும் கொல் எனறு அஞ்சி- சுட்டிய கொடிய கோபமானது [இககோபம] எவாமேல கொள்ளுதல சேருமோ? என்று பயநது, வெறிதது நின்று - மயஙகிநினறு, உலகம எலலாம - சகல லோக ஙகளும, விமமுறகினற வேலை - அழுகினற சமயததில, பொறி பிதிா - (தீப்) பொறிகளினது உதிாவாகிய, படலை செநதீ- பாநத வடிவினையுடைய செயய நெருப்பானது, புகையொடு -புகையுடனே, பொடிப்ப- மூளததுக கிளமப, பொம எனறு—, எறிப்பது ஓா முறுவல்'தோனற - ஒளிசெய்வதாகிய ஒரு சிரிப்பு உணடாக, இராமனும இயமபல் உறறுன - ஸ்ரீராமபிரானும சொலலததொடஙகினுன

குறிப்பு —பிதிா - முதனிலைத தொழிறபெயா பொடிததல் - (எதிருறற பொருளகளைப) பொடிசெய (தழித)தலுமாம. பொமமெனல் - அனுகரணவோசை ()

பெணடனி யொருததி தனனைப பேதைவா ளரககன பறறிக்
கொணடன னேக நீயிக கோளுறக் குலுஙகல செலலா
வெணடிசை யிறுதி யான வுலகஙக ளிவறறை யினனே
கணடவா னவாக ளோடுங கலையுமா றினறு காணடி.

இ - ள பேதைவாள அரககன - அறிவிலியாகிய வாளினையுடைய (ஒரு) இராககதன் [இராவணன], தனி பெண ஒருததி தனனை - தனிததிருப்பவளாகிய ஒருபெணணை, [ஜானகியை], பறறி கொணடனன ஏக - பிடிததுககொணடு செல்வதாலும, நீ இ கோள உற - நீ இநதக கொலையடைநததாலும, குலுஙகல - கடுஙகுதல செயலை, செலலா - வழஙகாத, எண திசை இறுதி ஆன - எட்டுததிககுககளுக முடிவாயுளள, உலகஙகள இவற்றை - (ஐநதிணையாகிய) இநத நிலஙகளை, கணட வானவாகளோடுமே - (இசசெயலகளைக)கண(டுமே மௌனஙகொண)ட தேவாகளோடுமே ,இனனே - இப்பொழுதே, கலையும ஆறு - (அழிதது) நீககுமவிததததை, இனறு காணடி - இறறைநாள பாாபபாய (உ0ச)

தாரகை யுதிரு மாறுந தனிககதிா பிதிரு மாறும
பேரகல வான மெஙகும பிறஙகெரி பிறககு மாறு
நீரொடு நிலனுங காலு நினறவுங கிடநத யாவும
வேரொடு மழியு மாறும விணணவா விளியு மாறும

இ - ள தாரகை உதிரும ஆறும- நக்ஷததிரஙகள (பொடிப்பொடியாக) உதிர்கின்ற விததததையும, தனி கதிா பிதிரும ஆறும - ஒபபறற கிரணததையுடைய சூரியன் சிதறுகினறவிதத்தையும், பேர் அகல் வானம எஙகும - பெரிய விசாலமான ஆகாயமெல்லாம, பிறஙகு எரி பிறககும ஆறும - விளஙகிய அககினி உணடாகும விததததையும, நீா ஒடு நிலனும காலும் - அபபுவினுடனே பிருதுவியும வாயுவும், நின்றவும் கிடந்த யாவும் - நின்றனவும் கிடநதனவுமாகிய சராசரம எவையும், வோ ஒடுமே அழியும் ஆறும - அடியோடு கெடுகின்ற விததததையும், விணணவா விளியும ஆறும - தேவாகள இறககினற விததததையும (உ0ரு)

இககண மொன்றி னின்ற வேழிரே டேழு சானற
மிககன போனறு தோனறு மூலகஙகள விளியு மாறுந
திக்குடை யணட கோளப புறததவுந தீநது நீரின
மொககுளி னுடையு மாறுங காணெனை முனியும வேலை.

இ-ள். இ கணம் ஒன்றின் - இந்த ஒரு நிமிஷத்திலே, நின்ற - நிலைபெற்று நின்றனவான, மிக்கனபோன்று தோன்றும் - மிகவும் பெரியனபோலத் தோன்றுகின்ற, ஏழிரண்டு ஏழ் சான்ற உலகங்கள் - பதினான்காக அதிகரித்த உலகங்களும், விளியும் ஆறும் - கெடுதியடைகின்ற விதத்தையும், திக்கு உடை-அஷ்டதிக்குகளையும் (எல்லையாக) உடைய, அண்டம் கோளம் - (இந்த) அண்டமாகிய உருண்டையின், புறத்தவும் தீந்து - வெளிப்பக்கத்துள்ளவையுங்கூட நாசமடைந்து, நீரின் மொக்குளின் - சலத்திற்றோன்றுகின்ற குமிழியைப்போல, உடையும் ஆறும் - அழிபடுகின்ற விதத்தையும், காண் என - பார்ப்பாயாக என்று, முனியும் வேலை - கோபங்கொண்ட சமயத்தில் (உ0சு)

வெஞ்சுடர்க் கடவுண் மீண்டு மேருவின் மறைய லுற்றா
னெஞ்சலி றிசையி னின்ற யானையு மிரியல் போன
துஞ்சின வுலக மெல்லா மென்பதென் றுணிந்த நெஞ்சி
னஞ்சின னிளைய கோவு மயலுளோர்க் கவதி யுண்டோ.

இ-ள். வெம் சுடர் கடவுள் - வெப்பமான கிரணத்தையுடைய சூரியன், மீண்டு - மீளலுற்று [தப்பித்துக்கொண்டு], மேருவின் மறையல் உற்றான் - மஹா மேருபர்வதத்தில் ஒளித்துக்கொண்டான், எஞ்சல் இல் - குறைபாடு இல்லாத, திசையின் நின்ற யானையும் - அஷ்டதிசைகளிலும் நின்ற அஷ்டகஜங்களும், இரியல் போன - (பயந்து) ஓடிப்போயின, உலகம் எல்லாம் துஞ்சின என்பது என் - உலகமுழுதும் வருத்தமடைந்தன என்று சொல்லுவதால் யாதுபெருமை? துணிந்த நெஞ்சின் - திருந்த தைரியத்தையடைந்த மனத்தினையுடைய, இளைய கோவும் அஞ்சினன் - இளையபெருமாளும் பயந்தினன், (இளையபெருமாளே பயப்படும்பொழுது), அயல் உளோர்க்கு அவதி உண்டோ - (பயந்த) மற்றையோர்க்குக் கணக்கும் உண்டோ? [இல்லை] (உ0எ)

இவ்வழி நிகழும் வேலை யெருவைகட் கிறைவன் யாதுஞ்
செவ்வியோய் முனியல் வாழி தேவரு முனிவர் தாமும்
வெவ்வலி வீர நின்னால் வேறுமென் றேமுற் றுயவா
ரெவ்வலி கொண்டு வெல்வா ரிராவணன் செயலை யென்றான்.

இ-ள் இ வழி நிகழும் வேலை - இவ்வாறு நடக்கின்றபொழுது, எருவை கட்கு இறைவன் - கழுகுகளுக்கு அரசனாகிய சடாயு, செவ்வியோய் யாதும் முனியல் - அழகனே! [ஸ்ரீராமபிரானே!] சிறிதும் கோபிக்காதே, வெவ்வலிவீர - வெவ்விய வலிமைபொருந்திய வீரனே! தேவரும் முனிவர் தாமும் - தேவர்களும் முனிவர்களும், நின்னால் - உன்னைக்கொண்டு, வேறும் என்று ஏமுற்று உயவார் - (தம் பகையை) வெல்வோம் என்று நினைத்து இன்பத்தையடைந்து வாழ்வாராயினார்கள், (அவர்கள்மேல் நீ கோபிப்பதால் இனி அவர்கள்), இராவணன் செயலை - இராவணனது கொடுஞ்செயல்களை, எ வலிகொண்டு - எந்த வலிமையைக்கொண்டு, வெல்வார் என்றான் - வெற்றியடைவார்களென்று கூறினான்.

குறிப்பு—இப்பொழுது நின்முகத்தைத் நோக்கப் பயமாக இருக்கின்றது. நீ யெப்பொழுதும் இத்தன்மையனல்லன், யாவரையும் ரஷிப்பிக்கச் செய்கின்ற இராமனே என்பான் 'செவ்வியோய்' என்றான். வாழி - முன்னிலையசை. ஏம் - ஏமம். (உ0அ)

நாட்செய்த கமலத் தண்ண ணல்கிய நவையி லாற்றற்
றோட்செய்த வீர மென்னிற் கண்டனை சொல்லு முண்டோ
தாட்செய்த கமலத் தானே முதலினோர் தலைபத் துள்ளாற்
காட்செய்கின் றார்க ளன்றி யறஞ்செய்கின் றார்கள் யாரே.

இ-ள். நாள் செய்த கமலத்து அண்ணல் - அன்று அலர்ந்த செந்தாமரை மலரிலிருக்கின்ற பிரமதேவர், நல்கிய நவை இல் ஆற்றல் - கொடுத்தருளிய குற்ற மில்லாத வலிமைபொருந்திய, தோள் செய்த வீரம் - தோள்களால் (இராவணன்) செய்த வீரச்செய்கையை, என்னில் கண்டனை - (சிறகற்றுப்படுகிடக்கின்ற) என் னிடத்திலேயே பார்த்துக்கொண்டாய், சொல்லும் உண்டோ - (இனி வேறொரு) பேச்சும் இருக்கிறதோ? [இல்லை], தாள் செய்த கமலத்தானே முதலினோர் - தண்டோ டுகூடிய தாமரை மலரிலிருப்பவனாகிய பிரமதேவனே முதலிய தேவர்கள் எல்லா ரும், பத்துத் தலை உள்ளாற்கு - பத்துச்சிரங்களையுடைய ராவணனுக்கு, ஆள் செய்கி ன்றார்கள் - அடிமைத்தொழிலைச் செய்துகொண் டிருக்கின்றார்கள், அன்றி - அல் லாமல், அறம் செய்கின்றாரும் உண்டோ - தருமத்தைச் செய்பவர்களும் இருக்கி றார்களோ? [இல்லை], (௨0௧)

தெண்டிரை யுலகந் தன்னிற் செறுநர்மாட் டேவல் செய்து
பெண்டிரின் வாழ்வ ரன்றே யிதுவன்றோ தேவர் பெற்றி
பண்டுல களந்தோ னல்கப் பாற்கட லமுத மந்நா
ளுண்டில ராயி னிந்நா ளன்னவர்க் குய்த லுண்டோ

இ-ள். தென் திரை உலகம் தன்னில் - தெளிந்த அலையையுடைய கடல் சூழ்ந்த வுலகத்திலே, செறுநர் மாட்டு ஏவல் செய்து - பகைவர்களிடத்திலே பணிவி டைசெய்து, பெண்டிரின் வாழ்வர் - பெண்களைப்போல வாழ்வார்கள், தேவர் பெற்றி இது அன்றோ - தேவர்களின் தன்மை இது அன்றோ, பண்டு உலகு அளந் தோன் - முன்பு பூமியை (யோரடியா)லளந்த மஹாவிஷ்ணு, அ நாள் - அந்நாளி லே, பால் கடல் அமுதம் நல்க - திருப்பாற்கடலிற் பிறந்த அமிர்தத்தைக் கொடுக்க, உண்டிலர் ஆயின் - உண்ணாதிருப்பார்களே ஆனால், அன்னவர்க்கு - அத்தேவர்க ளுக்கு, இ நாள் உய்தல் உண்டோ - இக்காலத்துப் பிழைத்திருத்தலும் உண்டாகு மோ? [இல்லை]. (௨௧0)

வம்பிழை கொங்கை வஞ்சி வனத்திடைத் தமியள் வைகக்
கொம்பிழை மானின் பின்போய்க் குலப்பழி கூட்டிக் கொண்டீ
ரம்பிழை வரிவிற் செங்கை யையன்மீ ராயுங் காலை
யும்பிழை யென்பதல்லா லுலகஞ்செய் பிழையு முண்டோ.

இ-ள். அம்பு இழை வரி வில் - கணைதொடுக்கப்பட்ட கட்டமைந்த தநுவை யேந்திய, செம் கை - சிவந்த கைகளையுடைய, ஐயன்மீர் - அழகர்களே! [இராமல க்ஷ்மணர்களே!], வனத்து இடை - காட்டினிடத்திலே, வம்பு இழை கொங்கை வஞ்சி - கச்சிட்டுக் கட்டியதனங்களையுடைய சீதாபிராட்டி, தமியள் வைக - தனி த்தவளாகியிருக்க, கொம்பு இழை மான் பின் போய் - கொம்புகள் பொருந்திய (மாய) மானுக்குப்பின்னே சென்று, குலம் பழி கூட்டிக்கொண்டீர் - உங்கள் குலத்துக்குப்

பழிப்பைச் சோத்துக்கொண்டீர்கள், ஆயும் காலை - இதை ஆராய்ந்து பார்க்குமிடத்து, உம்பிழை என்பது அல்லால் - உங்கள் தப்பிதம் என்று சொல்லவேண்டுமேயல்லாமல், உலகம் செய் பிழையும் உண்டோ - உலகத்தார்செய்த பிசகும் இருக்கிறதோ? இல்லை. (௨௧௧)

ஆதலான் முனிவா யல்லை யருந்ததி யனைய கற்பின்
காதலா டுயர நீக்கித் தேவர்தங் கருத்து முற்றி
வேதநூன் முறையின் யாவும் விதியுளி நிறுவி வேறுந்
தீதுள துடைத்தி யென்றான் சேவடிக் கமலஞ் சேர்வான்.

இ - ள். ஆதலால் - ஆகையால், முனிவாய் அல்லை - (நீ) கோபிக்கமாட்டாய், அருந்ததி அனைய கற்பின் காதலாள் துயரம் நீக்கி - அருந்ததியை யொத்த கற்பினையுடைய (உன்) மனைவியினது துயரத்தை நீக்கி, தேவர் தம் கருத்தும் முற்றி - தேவர்களுடைய எண்ணத்தையும் பூர்த்தியாகச்செய்து, வேதம் நூல் முறையின் - வேத சாஸ்திரங்களிற்கூறிய ஒழுங்கில், யாவும் - (யாகாதி கிருத்தியங்கள்) அனைத்தையும், விதி உளி நிறுவி - உண்மையின்கண் நிலைபெறச்செய்து, வேறும் தீது உள துடைத்தி - மற்றும் உள்ளனவான தீமைகளையும் நீக்குவாயாக, என்றான் - என்று கூறினனாகி, சேவடி கமலம் சேர்வான் - (அவ்வெம்பிரானது) செய்ய பாதங்களாகிய தாமரை மலர்களிடத்துச் சேருவானாயினன். [மோட்சத்தை யடைவானாயினன்]

புயனிற வண்ண னாண்டப் புண்ணியன் புகன்ற சொல்லைத்
தயரதன் பணியி தென்னச் சிந்தையிற் றழுவி நின்றா
னயலினி முனிவ தென்னை யரக்கரை வருக்க நீக்குஞ்
செயலினிச் செயலென் றெண்ணிக் கண்ணிய சீற்றந் தீர்ந்தான்.

இ - ள். புயல் நிறம் வண்ணன் - மேகத்தினது நிறம்போலும் நிறத்தினையுடைய ஸ்ரீராமபிரான், ஆண்டு - அப்பொழுது, அ புண்ணியன் புகன்ற சொல்லை - புண்ணியபுருஷனாகிய அந்தச் சடாயு கூறிய வார்த்தையை, இது - இவ்வார்த்தை, தயரதன்பணி என்ன - சக்கரவர்த்தியினது கட்டளையேயென்று, சிந்தையில் தழுவி நின்றான் - (தன்) மனத்தில் ஏற்றுக்கொண்டு நின்றானாகி, இனி—, அயல் முனிவது என்னை - அன்னியரைக் கோபிப்பதில் யாதுபயன்? அரக்கரை வருக்கம் நீக்கும் செயல் - ராக்ஷஸர்களை அவர்களினத்தோடு கொன்று முடிக்கும் தொழிலே, இனி செயல் என்று எண்ணி - (யாம்) இனிச்செய்யத்தக்கது என்று நினைத்து, கண்ணிய சீற்றம் தீர்ந்தான் - மதிக்கத்தக்கதான (தனது) கோபம் ஒழியப்பெற்றான். (௨௧௩)

ஆயபின் னமலன் றானு மையநீ யமைதி யென்ன
வாயிடை மொழிந்த தன்றி மற்றொரு செயலு முண்டோ
போயதவ் வரக்க னெங்கே புகலெனப் புள்ளின் வேந்த
னோயின னுணர்வுந் தேய வுரைத்தில னுயிருந் தீர்ந்தான்

இ - ள். ஆயபின் - இவ்வாறானபிறகு, அமலன் தானும் - மலரகிதனாகிய ஸ்ரீராமபிரானும், ஐய - என் பிதாவே! [சடாயுவே!] நீ - நீர், அமைதி என்ன - பொறுமையாயிரு என்று, வாய் இடை மொழிந்தது அன்றி - உமது வாயிலிருந்து சொல்லியபடி செய்தலே யல்லாமல், மற்று ஒரு செயலும் உண்டோ - வேறே ஒருதொ

ழிலும் (எனக்கு) இருக்கிறதோ? அ அரக்கன் போயது எங்கே புகல் என - அந்த விராக்கதன் போனது எவ்விடத்துக்கு (அதைச்) சொல்லுகவென்று கேட்க, புள்ளின் வேந்தன் - பக்ஷிகட்கரசனாகிய சடாயு, ஓய்வினன் - தளர்வினையுடையானாகி, உணர்வும் தேய - தெளிவுங் குறைவுற்றதால், உரைத்திலன் - (ஒருமொழியும்) கூறுதலில்லானாகி, உயிரும் தீர்ந்தான் - பிராணனும் நீங்கப்பெற்றான். (௨௧௪)

சீதங்கொண் மலருள் ளோனுந் தேவரு மென்ப தென்னே
வேதங்கள் காண்கி லாமை வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணிற் பார்த்தான் படிவங்கொ ணெடிய பஞ்ச
பூதங்கள் விளியு நாளும் போக்கிலா வுலகம் புக்கான்.

இ - ள். சீதம் கொள் மலர் உள்ளோனும் - குளிர்ச்சியைக்கொண்ட தாமரை மலரி லிருப்பவனாகிய பிரமதேவனும், தேவரும் —, என்பது என்னே - (காண்டற்கரியனாய் நின்றவன்) என்று கூறுவதால் யாது பயன்? வேதங்கள் காண்கிலாமை - வேதங்களும் கண்டறிதற்கில்லாமல், வெளிநின்றே - புறத்தில் நின்றே [அதீதனாக நின்றே], மறையும் - மறைந்து கொண்டிருக்கிற, வீரன் - (ஸ்ரீ மகாவிஷ்ணுவாகிய) இவ்வீரராகவனது, பாதங்கள் - திருவடிகளை, கண்ணில் பார்த்தான் - (தனது) கண்களாற் கண்டானாகி, நெடிய படிவம் கொள் - பெரிய உருவத்தைக்கொண்ட, பஞ்ச பூதங்கள் - (பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும்) ஐம்பூதங்களும், விளியும் நாளும் - அழிகின்ற காலத்திலும், போக்கு இலா - அழிந்து போதலில்லாத, உலகம் புக்கான் - பரமபதத்தை யடைந்தான். (௨௧௫)

வீட்டவ னெய்தும் வேலை விரிஞ்சனே முதல மேலோ
ராட்டவர்க் கரச னோடு தம்பியு மழுது சோரக்
காட்டமர் மரமு மாவுங் கற்களுங் கரைந்து சாய்ந்த
சேட்டரும் பாரி னோர்க்குங் கரஞ்சிரஞ் சேர்ந்த வன்றே.

இ - ள். அவன் வீடு எய்தும் வேலை - அந்தச் சடாயு மோட்சமடையுங் காலத்தில், விரிஞ்சனே முதல மேலோர் - பிரமதேவனே முதலாகிய தேவர்களும், ஆட்டவர்க்கு அரசனோடு தம்பியும் - புருஷோத்தமனாகிய ஸ்ரீராமபிரானும் இளையபெருமாளும், அழுது சோர - அழுது சோர்வுற்றதால், காடு அமர் மரமும் - காட்டிற் பொருந்திய மரங்களும், மாவும் - மிருகங்களும், கற்களும் - மலைகளும், கரைந்து சாய்ந்த - அழுது விழுந்தன, சேட்டரும் பாரினோர்க்கும் - நித்திய சூரிகளுக்கும் புவியிலுள்ளவர்களுக்கும், கரம் சிரம் சேர்ந்த - கரங்கள் தலையிற்சேர்ந்தன.

குறிப்பு — தமக்கு இப்பெரும்பேறு கிடைத்தற்கில்லையேயென்று கருதி விரிஞ்சனாதியரும், தந்தையையிழந்த துயரத்தால் அண்ணலுந் தம்பியும் அழுதனரெனக. சேட்டர் - அழியாயலிருப்பவராகவே நித்தியசூரிகள் என்றும். சடாயு வீடுபெற்றதும் ஆங்குள்ளவரனைவரும் வந்தனம் புரிந்து மரியாதைசெய்தாரென்பதும், இந்நிலத்திலுள்ள ஸ்ரீராமபிரானது திருவருளால் சடாயு மோட்சத்தையடைந்ததை யறிந்த இந்நிலத்தார் இனி, யாமும் மோட்சத்தை யடையலாமெனனும் மகிழ்ச்சியால் தலையிற் கைகுவித்துக் கூத்தாடினாரென்பதும் விளங்கச் 'சேட்டரும் பாரினோர்க்குங் கரஞ்சிரஞ் சேர்ந்த' என்றார். இனி, ஆதிசேடனாதியரும் புவியிலுள்ளவரும் தலையிற் கைவைத்து அழுதார் என்பது தோன்ற இங்ஙனங் கூறினாரென்பாருமுளர்.

அறந்தலை நின்றி லாத வரக்கனி னாண்மை தீர்ந்தேன்
றுறந்தென்ன றவஞ்செய் வேனோ துறப்பெனோ வுயிரைச் சொல்லாய்
பிறந்தென்ன பெற்று நின்ற பெற்றியாற் பெற்ற தாதை
யிறந்தன னிருந்து ளேனியா னென்செய்கே னிளவ லென்றான்

இ - ள். இளவல் - இளையோனே! யான் - நான், அறம் தலை நின்றிலாத அரக்கனின் - தருமத்தின்கண் நிலைலாத ராக்ஷஸனாலே, ஆண்மை தீர்ந்தேன் - (எனது) ஆண்மையை இழந்தேன், துறந்து என்ன தவம் செய்வேனோ - (முற்றத்) துறந்தேனாகித் தவத்தைச் செய்வேனோ? உயிரைத் துறப்பெனோ - உயிரைவிட்டு விடுவேனோ? சொல்லாய் - (இவ்விரண்டில் மேலானது யாது) கூறுவாயாக, பிறந்து என்ன பெற்று நின்ற பெற்றியால் - (யான் புவியிற்) பிறந்தேனாகியடைந்து நின்ற இலாபத்தாலே, பெற்ற தாதை இறந்தனன் - (என்னை) ஈன்ற தந்தை இறந்துபோனான், இருந்து உளேன் - (இறவாமல்) இருந்துகொண்டிருக்கிறேன், என் செய்கேன் - (இனி) யாது செய்யக்கடவேன், என்றான் - என்று கூறினான்

என்றலு மிளைய கோவவ் விறையினை யிறைஞ்சி யாண்டும்
வென்றியாய் விதியின் றன்மை பழியல விளைந்த தொன்றோ
நின்றினி நினைவ தென்னை நெருக்கியவ் வரக்கர் தம்மைக்
கொன்றபி னன்றோ வெய்ய கொடுந்துயர் குளிப்ப தென்றான்.

இ - ள். என்றலும் - (ஸ்ரீராமபிரான் என் செய்கேன்) என்று கூறியவளவில், இளைய கோ - இளையபெருமாள், அ இறையினை - எப்பொருட்குந் தலைவனாகிய அவ்விராமபிரானை, இறைஞ்சி - வணங்கி, யாண்டும் வென்றியாய் - எப்பொழுதும் வெற்றியையுடையவரே! விதியின் தன்மை பழி அல - ஊழ்வினையினது தன்மையானது பழிக்கப்படுவது அன்று, விளைந்தது ஒன்றோ - உண்டாகிய கெடுதி ஒன்றுதானோ? [அநேகமான கேடு சம்பவித்தன], இனி நின்று நினைவது என்னை - இனி (தாமதித்து) நின்று ஆலோசிப்பதால் யாதுபயன்? அ அரக்கர் தம்மை - அந்த ராக்ஷஸர்களை, நெருக்கி - (போர்க்குக்) கிட்டும்படிசெய்து, கொன்றபின் - (அவர்களை) கொலைசெய்தபின்பு, வெய்ய கொடு துயர் குளிப்பது - கொடிய துயரத்தில் மூழ்குவது, அன்றோ - (நியாயம்) அன்றோ? என்றான் - என்று கூறினான் (உகஅ)

எந்தைநீ யியம்பிற் றென்னை யெளிமைய னாகி யேழைச்
சந்தவார் குழலி னாளைத் துறந்தனை தணிதி யேனு
முந்தையை யுயிர்கொண் டானை யுயிருணு மூற்ற மில்லாச்
சிந்தையை யாகி நின்று செய்தவஞ் செய்கை யென்றான்

இ - ள். எந்தை - எந்தாய்! நீ - நீர், எளிமையன் ஆகி - எளியதன்மையையுடையராகி, ஏழை - மடமைக்குணத்தையுடையாளாகிய, சந்தம் - அழகிய, வார் - நீண்ட, குழலினாளை - கூந்தலையுடைய சீதாபிராட்டியை, துறந்தனை - வெறுத்துவிட்டீராகி, தணிதியேனும் - (கோபம்) தணிவீராயினும், உந்தையை - உமது தந்தையை, உயிர்கொண்டானை - கொன்றவனை, உயிர் உணும் ஊற்றம் இல்லா - கொல்கின்ற முயற்சியில்லாத, சிந்தையை ஆகி நின்று - மனத்தையுடையீராகி நின்று, செய்தவம் செய்கை - செய்யப்பட்ட தவத்தை (மீண்டும்) செய்தலை, இயம்பிற்று - கூறினது, என்னை - யாது? என்றான் - என்று கூறினான்

குறிப்பு—நீ மாதவனாகி இது காறும் செய்தவருகின்றது தவமன்றோ? இதனை மறந்து கூறுவது மயக்கோ என்பான் 'செய்தவஞ் செப்பதை யியம்பிற றென்னை' என்றான் (௨௧௯)

அவ்வழி யிளவல் கூற வறிவனு மயாவு நீங்கி
யிவ்வழி யினைய வெண்ணி னேழைமைப் பால தென்னா
வெவ்வழி பொழியுங் கண்ணீர் விலக்கினன் விளிந்த தாதை
செவ்வழி யுரிமை யாவுந் திருத்துவஞ் சிறுவ வென்றான்.

இ-ள். இளவல் அவ்வழி கூற - இளையபெருமாள் அவ்வாறுகூற, அறிவனும் அயாவு நீங்கி - அறிவுடையானாகிய ஸ்ரீராமபிரானும் சோர்வு நீங்கி, இவ்வழி இனைய எண்ணின் - இவ்வாறாக இத்தன்மையான விஷயங்களை சிந்தித்திருந்தால், ஏழைமை பாலது என்னா - அறிவின்மையின்பாற்பட்டதாகும் என்று கருதி, வெவ்வழி பொழியும் கண்ணீர் விலக்கினன் - துன்பங்காரணமாகச் சொரிகின்ற கண்ணீரை நீக்கினானாகி, சிறுவ - இளையவனே! விளிந்ததாதை - இறந்த தந்தையாகிய சடாயுவுக்கு, உரிமையாவும் - (செய்யவேண்டிய) கடமைகள் எல்லாவற்றையும், செவ்வழி திருத்துவம் என்றான் - செம்மையான முறைமையில் திருந்தச்செய்வோம் என்று கூறினான் (௨௨௦)

இந்தன மாக வேண்டுங் காரகி லீட்டத் தோடுஞ்
சந்தனங் குவித்து வேண்டுந் தருப்பையுந் திருத்திப் பூவுஞ்
சிந்தின னரணி தன்னிற் றீக்கடைந் தியற்றித் தெண்ணீர்
தந்தனன் றாதை தன்னைத் தடக்கையி னெடுத்துச் சார்வான்.

இ-ள் இந்தனம் ஆக - விறகுகளாக, வேண்டும் - (போதுமானமட்டும்) வாங்குகின்ற கார் அகில் ஈட்டத்தோடும் - கரிய அகிற்கட்டைகளின் கூட்டத்துடனே, சந்தனம் - சந்தனமரத்துக்கட்டைகளை, குவித்து - குவியலாகவைத்து, வேண்டும் தருப்பையும் திருத்தி - (போதுமானமட்டும்) வாங்குகின்ற தருப்பைப்புற்களையுங்கொண்டு திருந்தச்செய்து, பூவும் சிந்தினன் - (அதன்மேல்) மலர்களையுந்தூவி, அரணி தன்னில் - தீக்கடை கோலினாலே, கடைந்து தீ இயற்றி - கடைந்து நெருப்பையுண்டாக்கிக்கொண்டு, தெள் நீர் தந்தனன் - தெளிந்தநீரைத்தந்து [தெளிந்தநீரினால் பிணத்தைச் சுத்தஞ்செய்து], தாதை தன்னை - (ஸ்ரீராமபிரான் தனது) தந்தையாகிய சடாயுவை, தடம் கையின் எடுத்து சார்வான் - (தனது) பெரிய கைகளாலே எடுத்துக்கொண்டு (விறகுகளடுக்கிய இடத்தில்) சேர்வானாயினான் (௨௨௧)

ஏந்தின னிருகை தன்னா லேற்றின னீமந் தன்மேற்
சாந்தொடு மலருநீருஞ் சொரிந்தனன் றலையிற் சாரற்
காந்தெரி கஞல மூட்டிக் கடன்முறை கடவா வண்ண
நேர்ந்தன னிரம்பு நன்னூன் மந்திர நெறியின் வல்லான்.

இ-ள் நிரம்பும் - நிறைவுறுகின்ற, நல் நூல் மந்திரம் நெறியில் - நல்ல வேதமந்திரமுறைமையில், வல்லான் - வல்லவனான ஸ்ரீராமபிரான், இருகை தன்னால் ஏந்தினன் - (தனது) இரண்டு கைகளாலும் (அப்பிணத்தைத்) தாங்கி, ஈமம் தன

மேல் ஏற்றினன் - (அதை) அவவிறகுகளினமேல் ஏறச்செய்து சாந்தோடேமலரும் நீரும சொரிந்தனன்-சந்தனத்தோடு புஷ்பங்களையும சலத்தையும உகுத்தான், (பின்னர்), தலையின் சாரல் - தலைமாட்டில, காந்து எரி - எரிகின்ற நெருப்பை [கொள்ளியை வைத்து,] கனலமூட்டி - மிகுதியாகத் தீப்பற்றுமபடிசெய்து, கடனமுறை கடவாவண்ணம - (அப்பொழுது செய்யவேண்டிய) கடனகளினது ஒழுங்கு தவறுவித்ததில, நோந்தனன - உடன்பட்டான்.

குறிப்பு —சாந்து - ஈமத்தின்மேற பூசும மண்ணினது குழைவுமாம (உஉஉ)

கிளித்தன களித்த மேனி தாமரைக கெழுவு செமபூத
துளித்தன வனைய வென்னத் துளளிசோா வெளளக கணணன
குளித்தனன கொணட லாறறுக குளித்தபின கொணட நனனீ
ரளித்தன னரககாச செறற சீறறத்தா னவலந் தீர்ந்தான.

இ - ள. கிளித்து அன - கிளிச்சிறைப பொனனைஒத்த, களித்த - மத்தவூறற [கொழுப்பேறிய], மேனி - (தனது) திருமேனியில, தாமரை கெழுவு செமபூ - தாமரையிறபொருந்திய செய்யமலாகள, துளித்தன அனைய என்ன - நீர்த்துளிகளைச சிந்தினசெயலை ஒத்தன என்று கூறுமபடி, துளளிசோா - நீாத்துளிகள விழுகின்ற, வெளளம கணணன - நீாபபெருக்கினையுற்ற கணகளையுடையானுகிய ஸ்ரீராமபிரான, கொணடல - மேகமபோல, ஆறு - நதியில, குளித்தனன - நீராடினன, குளித்தபின - நீராடியெழுந்தபிறகு, கொணட நல நீர் - (தனகையிற) கொணட நலலசலத்தை, அளித்தனன - (இறந்த பிதாவுக்குத் தருப்பணமாகத்) கொடுத்தான, (பினனா), அரககா செறற சீறறத்தான அவலம தீர்ந்தான - இராககதாகளைக கொனறு தொலைத்த கோபத்தையுடையானுகித் துயரத்தினினறும நீங்கினன

குறிப்பு —கிளித்து- ஸ்ரீராமபிரானது பசிய நிறத்துககும பளபளப்புககும உவமை துளளி-துளளி வீழவது, இ - வினை முதறபொருணமை விகுதி களித்த எனற கு-மகிழ்ந்த எனப பொருளகூறி உடலினது அழகிய தோறறத்தை விளககலுமொனறு. களித்தமேனி எனறது-உளளக களிபபினமையை விளககற்கு உடனேசெனறு அரககரைககொனறு தொலைகக ஆத்திரபபட்டது தோனற 'செறற சீறறத்தான' என இறந்தகாலத்துக கூறினுா (உஉங)

மீட்டினி யுரைபப தெனனே விரிஞசனே முதல மேலகீழ
காட்டிய வுயிரக ளெலலா மருந்தின களித்த போலாம
பூட்டிய கைக ளாலப புளளினுக கரசைக கொளகென
றூட்டிய நனனீ ரைய னுணடநீ ரொத்த தனறே

இ - ள. பூட்டியகைகளால - சேரப்பிடித்த தனது கைகளினுலே, புளளினுக்கு அரசை - சடாயுவை, கொளக எனறு - ஏறறுககொளளக் கடவாயெனறு, நல நீா - (தருப்பணஞசெய்த) அந்த நலல மந்திரநீரை, ஊட்டிய - உணணசசெய்த, ஐயன - ஸ்ரீராமபிரான, உணடநீா ஒத்தது - (உணவுககேற்ற திருத்தியாய) உணடதனமைபோலிருந்ததால, விரிஞசனே முதல மேல்கீழ காட்டிய உயிாகள எல்லாம அருந்தின களித்தபோல ஆம-பிரமதேவனே முதலாகிய உயாவாகவும தாழ்வாகவும காட்டிய உயிாகளனைத்தும உணடு களிப்புற்றன போலவாயின; (ஆதலின), இனி

மீட்டு உரைப்பது என்னே - இனி (ஸ்ரீராமபிரானது பெருமையைத்) திருப்பவும் உரைப்பதால் யாது பயன்?

குறிப்பு — ஸ்ரீராமபிரான் தான் சிறிது சலத்தை உட்கொண்டவுடன் திருத்தியாய பல உணவுகளை உண்டவனைப்போலக் களிப்பினை யடைதலும் உலகமனைத்தும் உண்டு களித்தனபோலாயின, ஆதலின் ஸ்ரீராமபிரானே யாவையும் எவருந் தானாய் நின்றானென்று விரித்துக் கூறாமலே அறிந்துகொள்ளலாம் என்பது கருத்து.

பல்வகைத் துறையும் வேதப் பலிக்கடன் பலவு முற்றி
வெல்வகைக் குமர னின்ற வேலையின் வேலை சார்ந்தான்
றொல்வகைக் குலத்தின் வந்தான் றுன்பத்தாற் புனலுந் தோய்ந்து
செல்வகைக் குரிய வெல்லாஞ் செய்குவா னென்ன வெய்யோன்.

இ - ள் வெல்வகை குமரன் - வெற்றிபெறுகின்ற காரணத்தையறிந்த இளமைப் பருவம்பொருந்திய ஸ்ரீராமபிரான், பல்வகை துறையும் -(இறந்தோர்க்குச்செய்யுங் கிரியைகளில்) பலவிதமான காரியங்களையும், வேதம் பலி கடன் பலவும் - வேதமுறைப்படி (தேவபூசைசெய்து அளிக்கும்) தேவவுணவாகிய கடன்கள் பலவற்றையும், முற்றி - முற்றுப்பெறச்செய்து, நின்ற வேலையின் - நின்றவேளையில், வெய்யோன் - சூரியன், தொல்வகை குலத்தின் வந்தான் - (தனது) இனமாகிய பழமை பொருந்திய வமிசத்திற்பிறந்த ஸ்ரீராமபிரானது, துன்பத்தால் - துயரத்தால், புனலும் தோய்ந்து - நீரிலும் படிதலுற்று, செல்வகைக்கு உரிய எல்லாம் செய்குவான் என - தான் (திரும்பிப்)போகின்ற விதத்துக்கு உரிமையான காரியங்களெல்லாஞ் செய்வதற்காக என்று கூறுமாறு, வேலை சார்ந்தான் - மேல் சமுத்திரத்தை யடைந்தான்.

குறிப்பு — செய்குவான் என்ன - செய்பவன்போல் என்னுமாம். (௨௨௫)

எட்டாவது சடாயுவுயிர்நீத்த படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௮க்கு விருத்தம் ௧௦௯௫

MAHAMAHO
LI

ஒன்பதாவது அயோமுகிப் படலம்.

அந்திவந் தணுகும் வேலை யவ்வழி யவரு நீங்கிச்
சிந்துரச் செந்தீக் காட்டோர் மைவரைச் சேக்கைச் சேர்ந்தா
ரிந்திரற் கடங்கல் செல்லா விராக்கத ரெழுந்த தென்ன
வெந்துயர்க் கூற்ற மாய விரியிருள் வீங்கிற் றன்றே.

இ - ள். அவரும் - அந்த ஸ்ரீராம லட்சுமணர்களும், அந்திவந்து அணுகும் வேலை - மாலைப்பொழுது வந்து சேரும்வேளையில், அ வழி நீங்கி - அந்த இடத்தினின்றும் நீங்கி, சிந்துரம் - திலதம்போன்ற, செந்தீ - செய்ய நெருப்பானது, காட்டு - காட்டுகின்ற, ஓர் மைவரை - ஒரு கரியமலையாகிய, சேக்கை சேர்ந்தார் - படுக்கையினிடத்துச் சேர்ந்தார்கள், இந்திரற்கு - இந்திரனுக்கு, அடங்கல் செல்லா - அடங்கியிருக்கும் செயலை வழங்காத, இராக்கதர் எழுந்தது என்ன - (கரியநிறமும் வருத்தும் செயலுமுடைய) ராக்ஷஸர்கள் எழும்பிய செயலைப்போல, வெந்துயர்க்கு - கொடிய கிலேசத்துக்கு, ஊற்றம் ஆய - பற்றுக்கோடாகிய [உபபலமாகிய], விரி இருள் - பரவிய இருளானது, வீங்கிற்று - மிகுதலுற்றது.

குறிப்பு — அவரும், உம்மை - சூரியன் நீங்கிய செயலைத் தழுவும்படி நின்ற எச்சம். மலை வெகுதூரத்திலிருக்கிறது என்பது தோன்ற அம்மலையில் மூங்கில்களைத் தீப்பற்றியெரியும் பெரு நெருப்புக்குத் திலதத்தை உவமை கூறினார். அவ்விருளினது நிறத்தோடு கலந்து தோன்றிருந்த அம்மலையை அத்தீயின் வெளிச்சத்தால் காணலாயிற்று என்பதுதோன்ற 'தீக்காட்டு' என்றார். சிந்து - (எரித்துக்) கெடுக்கின்ற, உரம் - வலிமைபொருந்திய, செந்தீ - செய்ய நெருப்பினையுடைய, காடு - காட்டின்கணிருக்கிற, ஓர் மைவரைச்சேக்கை சேர்ந்தார் என்பொருள் கூறுவாருமுளர். மூன்றும் அடியிற்குறித்த உவமையால் இருளின் மிகுதியும், கொடுமையும், ஆயிரங்கண்கொண்டு நோக்கினும் ஒன்றும் புலப்படாத்தன்மையும் விளங்குதல் காண்க. (௧)

தேனுக வருவி சிந்தித் தெருமர லுறுவ போலக்
கானமு மலையு மெல்லாங் கண்ணினீ ருகுக்குங் கங்குன்
மானமுஞ் சினமுந் தாதை மரணமு மைந்தர் சிந்தை
ஞானமுந் துயருந் தம்முன் மலையென நலிந்த வன்றே.

இ - ள். கங்குல் - அந்த இருளிலே, கானமும் மலையும் எல்லாம் - காடுகளும் மலைகளும் மற்றவையனைத்தும், தேன் உக - தேனைச்சிந்தியும், அருவி சிந்தி - அருவிகளைச்சிந்தியும், தெருமரல் உறுவபோல - (இவர்களுடைய துன்பத்தைக்கண்டு தாமும்) துன்பமடைவனபோல, கண்ணின் நீர் உகுக்கும் - அழுதன; மைந்தர் சிந்தை - ஸ்ரீராம லட்சுமணர்களுடைய மனத்தில், மானமும் - வெட்கமும், சினமும் - கோபமும், தாதை மரணமும் - தந்தையாகிய சடாயுவினுடைய மரணமும், ஞானமும் - அறிவும், துயரும் - கிலேசமும், தம்முன் - தமது முன்னிலையில், மலை என - மலைபோல, (வளர்ந்து) நலிந்த - வருந்தச்செய்தன.

குறிபபு —உக- உகரு எனனும பொருளில்வினறது. நிரலே கானம தேனையும மலை அருவியையும சிநதின வெனக. கணணி னீருகுகரும - கணணீரைசசிநதின, இது - அழுதன வெனனும ஒரு சொலலளவாய நினறது மைநதா எனறகு மயக கமுடையார, வலியுடையார, குமாரா எனககொணடு நிரலே மானம, சினம, தாதை எனபவறறோடு கூடடிப பொருளகாணக கணணினீ ருகுகரும எனபதை யெச சமாககிப பொருள்கொணடு ஒருமுடிவு கொடுபபினுமிழுககாது. (உ)

மெயயுற வுணாதல செலலா வறிவினன வினையி னூககும
பொயயுறு பிறவி போலப போககரும பொஙகு கஙகு
னெயயுறு நெருபபின வீஙகி நிமிாதர வுயிாபபு நீளக
கையற வுறுகினறாாற காணலாங கரையிற றனறே.

இ - ள. மெய உற - உணமைபொருநத, உணாதல் - அறிதல், செலலா- வழ ஙகாத, அறிவினன - அறிவினையுடையானுகிய ஒரு மூடன, வினையின - கருமத தாலே, ஊககும - முயனறுகொளகினற, பொய் உறு - பொய்யாதலுறற [தோனறி மறையுஞ செயலபொருநதிய], பிறவிபோல - பிறப்பினைப்போல, போககரு - நீக கறகருமையான, பொஙகு கஙகுல - அதிகரிககினற அவவிரவில, உயிாபபு - பெரு மூசசானது, நெய உறு நெருபபின வீஙகி நிமிாதர - நெயயை யடைநத நெருப பைபபோல மிகுநது ஓஙகுமபடி, நீள - அதிகமாக, கையறவு உறுகினறா - செய லறுதல அடைகினறாாயினாகள, காணல ஆம கரையிறறு அனறு - (அவவிரவா னது) காணுதறகேறற எலலையயுடையதனறயிறறு

குறிபபு —மெயயுறவு எனறும பிரிககலாம, இது உணமைபபொருளாகிய கட வுளைககுறிககினறது. நெய எனறகு - (பிராடடியின பாலும சடாயுவின பாலும வைதத) நேயததால எனறுகூறி, உறு நெருப்பின எனறகு - மிகுதியான நெருப பைபபோல எனப் பொருளகூறலுமமையும நெய - நேயம எனபதன விகாரம, "மைபொதி. ....நெயபொதி நெஞசின மனனா நிலமபிறக கிடுவ போலும. .. " எனறா சிந்தாமணியினும. [சி - முததியிலமபகம் 451-வது செயயுள]. விடியா மல நீணடுகொணடே யிருபபதாகததோனறும அவவிரவில தூககம வராது பல ஆலோசனைசெயது பெருமூசசுவிடடுக கொணடிருநதாாகள எனபது கருதது தூககம ஒழிநதமைதோனற 'கையறவுறுகினறா' எனறா ஆல, ஏ - அசைகள கை யறவுறுகினறாால எனககொணடு கூட்டிச செயலறறிருககுமிவாகளால முடிவுகா ணுந தனமையதனறெனவுஙகூறலாம. மெயயுறவு - தேகசமபநததததை, உணாதல செல்லா - அறிதல இலலாத, எனபாருமுளா. இருவினையொப்பு வநதாலமடடும பிறப்பறுமேயனறி நலவினையும தீவினையும பொன விலஙகு மிருமபுவிலஙகுமொ தது பிறவியிறபடுதததுமெனபாா 'வினையினூககும' எனப பொதுபபடககூறினா.

யாமது தெரித றேற்று மினனகைச சனகி யென்னுங
காமரு திருவை நீததோ முகமதி காணகி லாதோ
தேமரு தெரியல வீரன கணணோனத தெரிநத செயய
தாமரை கஙகுற போதுங குவியலாத தனமை யெனனே.

இ - ள, தேம மரு தெரியல் வீரன — மணமபொருநதிய மாலையயணிநத ஸ்ரீராமபிரானது, கண எனத தெரிநத - நேததிரமெனனுமபடி வெளிபபடட, செ

ய்யதாமரை - செந்தாமரைமலர்கள், கங்குல்போதும் - இராக்காலத்தும், குவியலாத தன்மை - குவிதலில்லாத விஷயம், இனநகை - (மனத்துக்கு) இன்பத்தைத்தரும் மந்தகாசத்தினையுடைய, சனகியென்னும் - சீதாபிராட்டியென்கிற, காமர் திருவை நீத்தோ - அழகிய இலக்குமியைப்பிரிந்த தன்மையாலோ, (அல்லது) முகமதி கண்கிலாதோ - (அப்பிராட்டியின்) முகமென்கிற சந்திரனைக் காணப்பெறாமையாலோ, அது - அக்காரணம் இன்னதென்று, யாம் - நாம், தெரிதல் தேற்றும் - தெரிந்து கோடலில் தெளிவுபெற்றோமில்லை.

குறிப்பு — காமரு - உ சாரியை. இலக்குமி வசித்தற்கிடமாகிய செந்தாமரை மலரானது அவ்விலக்குமியை யிழந்தவழிப் பொலிவிழந்து குவியும், அல்லதூஉம் சந்திரனைக்கண்டு குவியும், அதுபோல ஸ்ரீஇராமபிரானது நேத்திரமாகிய செந்தாமரை மலர்களும் நித்திரைசெய்தலாற் குவிவுறாமை பிராட்டியை யிழந்ததாலோ அன்றி அவள் முகச்சந்திரனைக் காணாமையாலோ யாமின்னதென் றறிந்துகொண்டேமில்லை என்பது கருத்து. பிராட்டி இலக்குமியினுஞ் சிறந்த பேரழகுடையாளென்பார் 'காமருதிருவை' என்றார். (௪)

பெண்ணியற் றீப மன்ன பேரெழி லாட்டி மாட்டு
நண்ணிய பிரிவு செய்த நவையிலா நவையி னுள்ளத்
தெண்ணிய தறித றேற்றா மிமைத்தில விராம னென்னும்
புண்ணியன் கண்ணும் வன்றோட் டம்பிகண் போன்ற வன்றே

இ - ள். பெண் இயல் தீபம் அன்ன - பெண்ணினது சாயலையுடைய ஒரு விளக்கையொத்த, பேர் எழில் ஆட்டி மாட்டு - பெரிய அழகினையுடைய தலைவியினிடத்து, நண்ணிய - பொருந்திய, பிரிவுசெய்த - பிரிதலானது செய்த, நவை இலா நவையின் - களங்கமில்லாத இகழ்ச்சியால், உள்ளத்து எண்ணியது - (ஸ்ரீராமபிரானுடைய) மனத்தில் நினைத்ததை, அறிதல் தேற்றும் - அறிதலை வெளிப்படுத்தும் வன்மையுடையேமல்லேம், இராமன் என்னும் புண்ணியன் கண்ணும் இமைத்தில - ஸ்ரீராமபிரானென்கிற தருமமூர்த்தியின் கண்களும் இமைத்தல் செய்தில, வல் தோள் - வலிய புயங்களையுடைய, தம்பி கண் போன்ற - இளையபெருமாளின் கண்களையொத்து இமை தட்டாதிருந்தன.

குறிப்பு — அன்று. ஏ - அசைகள். பெண்ணியற்றீபம் - இல்பொருளுவமை, அவ்விருள் விலகும்படி யுருவெளித்தோற்றமாகத் தோன்றிய பிராட்டியின் திருமேனியொளியைக் குறிப்பிப்பான இவ்வுவமைகூறினார். ஆரணியத்துக்குப் புறப்பட்ட காலந்தொட்டு இளையபெருமாள் உறக்கமின்றிப் பாதுகாப்பாளியாக இருந்துவருதலின் 'தம்பிகண் போன்ற' என்றார். "அல்லைபாண் டமைந்த மேனி யழகனு மவளுந் துஞ்ச, வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன், கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சொரியக் கங்குல், எல்லைகாண் பளவு நின்றா னிமைப்பில னயன மென்றான்", என்னும், குகப்படலச் செய்யுளீண்டு நோக்கற்பாலது. (௫)

வண்டுளர் கோதைச் சீதை வாண்முகம் பொலிய வானிற்
கண்டனெ னென்று வீறக் காங்கொரு காதல் காட்டத்
தண்டமிழ்த் தென்றலென்னுங் கோளராத் தவழுஞ் சாரல்
விண்டலம் விளங்குஞ் செவ்வி வெண்மதி விரிந்த தன்றே.

இ - ள் ஆங்கு - அப்பொழுது, வண்டு உளர் கோதை சீதை - வண்டுகள் சுற்றுகின்ற குழலினையுடைய சீதாபிராட்டியினது, வாள்முகம் - ஒளிபொருந்திய முகமானது, வானில் பொலிய - ஆகாயத்தில் விளங்க, கண்டனென் என்று - பார்த்தேன் என்று, வீரற்கு - வீரனாகிய ஸ்ரீராமபிரானுக்கு, ஒருகாதல் காட்ட - ஒரு காதலைக்காண்பிக்க, தண் தமிழ் தென்றல் என்னும் - தண்மையாகிய நீர்மைபொருந்திய தென்றிசைக்காற்று என்கின்ற, கோள் அரா - கொலைத்தொழிலையுடைய பாம்பானது, தவழும் - நகர்கின்ற, சாரல் - அம்மலைப்பக்கத்தில், விண்தலம் விளங்கும் செவ்வி வெள்மதி - ஆகாயத்தில் ஒளிசெய்கின்ற அழகினையுடைய வெண்ணிறம் பொருந்திய மதியமானது, விரிந்தது - ஒளிசெய்தது

குறிப்பு —உரு வெளித் தோற்றத்திற் கண்டபழந்தன்மை பொருந்திய ஜானகி என்பது தோன்ற 'வண்டுளர் கோதைச் சீதை வாண்முகம்' என்றார். ஸ்ரீராமபிரான் தனது அருகிற்றோன்றிய ஜானகியினுருவம் மறைபடுதலும் எண்டிசையினும் நோக்கிக்காணாமல் வானைநோக்கி ஆங்குத்தோன்றிய சந்திரனை அவளுடைய முகமேயாம் என்று கருதி மகிழ்ந்து தன் தலைக்கு மேலே கிட்ட இருக்கின்றாளென்று நினைக்கும்படி ஒரு ஆசையைக் காட்டச் சந்திரனுதயமாயினன் என்பது கருத்து. 'சாரல் விண்டலம் விளங்கும்' என்றதால் மலையின் உயர்வாற் சந்திரன் சமீபமாக இருப்பதை யுணர்க. ஜானகியினுடைய முகத்தின் அழகால் நாணமுற்று மழுங்கிப் போந்தன்மையனன சந்திரன் அவள் ஆங்கில்லை யென்பதைத் தன்னொளியைக் கொண்டு தெரிவிக்க நின்றான் என்பார் 'செவ்வி வெண்மதி விரிந்தது' என்றார். இத்தோற்றம் ஜானகியின் முகம் அன்று மதியமே தான் என்று அதன் ஒளியைக் கொண்டும் கொடிய செயலைக் கொண்டும் அறிந்து ஸ்ரீராமபிரான் சீதையின் பிரிவாற்றுந் துன்பத்தை யடைதலும் ஜானகியின் முகமே யெனக் கருதிய காலத்துத் தண்டமிழுற்றதாயிருந்த தென்றல் கோளராவாய்க் கொடுமைபுரிய வந்த தென்பது தோன்ற 'தண்டமிழ்த் தென்ற லென்னுங் கோளரா' என்றார். இனி, முதலிரண்டடிக்கு—வண்டுளர் கோதை - (இயற்கை மணத்தைச் செயற்கை மணமென்று கருதிச் சூழ்ந்து உணவு கிட்டாமல் வீணாக) வண்டுகள் சுற்றுகின்ற (அவிழ்ந்த) கூந்தலையுடைய, சீதை - நிலத்திற்பிறந்த(வள் போல் இராவணன் பறித்து எடுத்துச் செல்லும் நிலத்திற் சுருண்டு கிடந்த) வளை, முகமவாள் பொலிய - (என்) முகத்தில் ஒளிவிளங்கும்படி,வானில் கண்டனென் என்று—, வீரற்கு-(வீராவேச முண்டாக்கியதால் என் பகைவனை இன்னே கொன்று பெண்ணை மீட்கின்றேன் என்று) வீரமுற்றவனுக்கு, ஒரு காதல்காட்ட-ஒரு கொலைத் தொழிலைக் காட்டுதற்காக,என்று பொருள் கூறலுமமையும். இனி தமிழ் என்றற்கு - இனிமை யென்று பொருள் கோடலுமாம், "தமிழ் தழிய சாயலவர்" என்னும் சிந்தாமணிச் செய்யுளானும், "தமிழ்மென் சாயலவளோடும்" என்னும் வாயுசங்கிதையினானும், "வண்டு தமிழ்ப்பாட் டிசைக்குந் தாமரையே" என்னும் இந்நூலாசிரியர் வாக்கானும் உணர்க "தமிழ் தழிய சாயலவர்" என்றற்கு, இனிமை தழுவிய சாயலை யுடையவர்" என ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருள் விரித்தமையுங் காண்க, [சி - சுரமஞ்சரி 32.]   (௬)

களியுடை யநங்கக் கள்வன் கரந்துறை கங்குற் காலம்
வெளிபடுத் துலகமெங்கும் விளக்கிய நிலவின் வெள்ளங்
களியிருட் பிழம்பென் றீண்டு நஞ்சொடு கலந்த நாகந்
துளையெயிற் றூன்ற லுற்ற தாமெனச் சுடடதன்றே

இ-ள். களி உடை - களிப்பினையுடைய, அரக்கன் கள்வன் - உருவமில்லாதாகிய திருட்டு மன்மதன், கரந்து உறை கங்குல் காலம் - மறைந்து வசிக்கின்ற இருட்காலத்தை, வெளிப்படுத்து - அப்புறப்படச்செய்து, உலகம் எங்கும் - உலகமுழுவதையும், விளக்கிய - தெளிவாய்த் தெரியும்படி செய்த, நிலவின் வெள்ளம் - நிலாப்பெருக்கமானது, களி இருள் பிழம்பு என்று ஈண்டு - பெரிய இருளினது திரட்சியென்று கூடுகிற, நஞ்சொடு கலந்த நாகம் - விஷத்தோடுசேர்ந்த நாகசர்ப்பமானது, துளை எயிறு ஊன்றல் உற்றது என - துவாரம்பொருந்திய பற்களால் கடித்தலுற்றது என்னும்படி, சுட்டது - தகிக்கலுற்றது.

குறிப்பு — ஸ்ரீராமபிரானை அழகிலும் போரிலும் வெல்லற்குற்ற சமயம் பெற்றாக களித்தான் என்பார் 'களியுடை' என்றார். இச்சமயம் மன்மதன் திருடன்போல ஒளிந்திருக்க நேரிட்டது உருவில்லாமையால் தான் என்பார் 'அநங்கக் கள்வன்' என்றார். அநங்கன் எப்போதும் மறைந்திருத்தல் இயல்பென்று நன்குதெரிந்த அவனை அநங்கக்கள்வன் என்ற பின்னரும் கரந்துறை என்றது - தந்தையொடு நேர்நின்று போர்செய்யச் சங்கோசமுற்றானென்பதும், காமாதிகளை நீக்கியும் பெரிய பெருமாளைக் காத்தற்கு வீரத்தோடு வில்லேந்தி விழித்துக்கொண்டுமிருக்கிற இளையபெருமாளுக்கு அஞ்சினானென்பதும் விளங்கற்கு. கங்குற்காலம் நிலவால் அப்புறப்படவே கரந்துறைதற்கு வழியில்லாமல் வெளிப்பட்டுப் போக நின்றான் என்க. பாம்பு சந்திரனுக்கும், பாம்பின் பற்கள் நிலவுக்கும், விஷம் இருளுக்கும் உவமை. இருளை நீக்கி ஒரு உதவியைச்செய்த சந்திரன் மன்மதனை நோக்கின்று போர்செய்யச் செய்தும் தானுந் தன் கிரணங்களாற் சுட்டும் வருத்தியது என்பது கருத்து. ஆம் - சாரியை. (எ)

இடம்படு மானத் துன்ப மிருட்டர வெண்ணில தீர்ந்தான்
விடம்பரந் தனைய தாய வெண்ணிலா வெதுப்ப வீரன்
படம்பரந் தனைய வல்குற் பால்பரந் தனைய வின்சொற்
றடம்படு கண்ணி னாடன் றனிமையை நினைய லுற்றான்

இ-ள். வீரன் - ஸ்ரீ ராமபிரான், இடம்படு - பெரிதாகிய, மானம் துன்பம் - (சீதாபிராட்டி சிறையுற்றமையால் எய்திய) மானத்தினால் வந்த துயரமானது, இருள் தர - (மனத்தில் மயக்கமாகிய) இருட்டைக் கொடுக்கவும், விடம் பரந்தனையது ஆய - விஷம் பரவினாற்போன்றதாகிய, வெள் நிலா - வெண்ணிறம்பொருந்திய சந்திரன், வெதுப்ப - சுடவும், (இவற்றால்), எண்ணில தீர்ந்தான் - சிந்தனையற்றவனாகி, படம் பரந்தனைய அல்குல் - பாம்பின் படம் விரிந்தாற்போன்ற அல்குலையும், பால் பரந்தனைய இன்சொல் - பால்பரவினாற் போன்ற இனியசொல்லையும் தடம்படு கண்ணினாள் தன் - விசாலமான கண்களையுமுடைய சீதாபிராட்டியினது, தனிமையை நினையல் உற்றான் - தனித்திருக்குந் தன்மையை எண்ணுவானாயினான்.

குறிப்பு — தீர்ந்தான் - முற்றெச்சம். மானத்துன்பத்தால் நேரிட்ட தெளிவின்மையை இருள் என்றார். துன்பம் இருள் தர நிலாவெதுப்ப எனவே அவ்விரவிற் சிறிதும் இருளில்லாவாறு நிலவு விளங்கிற்றென்பதாம். சீதாபிராட்டி யருகிருந்தால் இந்நிலவு தன்னை வருத்தாமல் அஞ்சியேனும் விசுவாசங்கொண்டேனும் வெட்கமுற்றேனும் அகலும் என்றும் குறிப்பிடற்கு படம் பால் கண் (முகம்) என்பவற்றைக்

கூறினார். நிலவு பாம்பால் கொள்ளப்படலின் அச்சமும், பாற்கடலிற் றோன்றலின் நட்பும், முகத்துக் கோவ்வாமையின் நாணமும் கொள்ளுமெனக் கொள்க. (அ)

வேறு.

மடித்த வாயன் வயங்கு முயிர்ப்பினன்
றுடித்து வீங்கி யொடுங்குறுந் தோளினன்
பொடித்த தண்டளிர்ப் பூவொடு மால்கரி
யொடித்த கொம்பனை யாடிறத் துன்னுவான்.

இ - ள். மடித்தவாயன் - இதழ்களை மடக்கிய வாயினையுடையானும், வயங்கும் உயிர்ப்பினன் - உலாவுகின்ற பெருமூச்சினையுடையானும், துடித்து - துடித்தலுற்று, வீங்கி - பருத்து, ஒடுங்கு உறும் - ஒடுங்குதலடைகின்ற, தோளினன் - புயங்களை யுடையானுமாகிய ஸ்ரீராமபிரான், மால்கரி - கரிய யானையானது, பொடித்த - முளைத்த, தண் தளிர் பூவொடு ஒடித்த - குளிர்ச்சி பொருந்திய தளிர்கள் மலர்களுடனே ஒடித்துவிட்ட, கொம்பு அனையாள் திறத்து உன்னுவான் - கொம்பை யொப்பாளுடைய தன்மையைக் கருதுவானாயினான்.

குறிப்பு — மதியைக் காய வீங்கிய தோள்கள் அம்மதி காய இளைத்தன வென்பது இரண்டாம் அடியின் கருத்து. மால் கரியை இராவணனுக்கும், கொம்பினைச் சீதா பிராட்டிக்கும், உவமையாகக்கிப் பொருள் காண்க. (௯)

வாங்கும் வில்லன் வரும்வரு மென்றிரு
பாங்கு நீணெறி பார்த்தன ளோவெனும்
வீங்கும் வேலை விரிதிரை யாமென
வோங்கி யோங்கி யொடுங்கு முயிர்ப்பினான்

இ - ள். வாங்கும் வில்லன் - வளைக்கின்ற வில்லினையுடையானாகி, வரும் வரும் என்று - வருவான் வருவான் என்று, இரு பாங்கும் - இரண்டுபக்கத்திலும், நீள் நெறி பார்த்தனளோ எனும் - (நான் வரும்) நீண்ட வழியைப் பார்த்தாளோ? என்பான், (அங்ஙனங்கூறியவளவில), வீங்கும் வேலை விரிதிரை ஆம் என - மிகுகின்ற கடலில் விரிந்த அலைகள் ஆகுமே என்று, ஓங்கி ஓங்கி - உயர்ந்து உயர்ந்து, ஒடுங்கும் உயிர்ப்பினான் - அடங்குகின்ற பெருமூச்சினையுடையான் ஆயினான்.

குறிப்பு — அரக்கனைக் கொன்று தன்னை மீட்க வருவான் என்று கருதினள் என்பார் 'வாங்கும் வில்லன் வரும் வருமென்று' என்றார். வரும் வரும் என்னும் அடுக்கு - உவகைப்பொருட்டு. என்பாங்கும் என்னாது இருபாங்கும் என்றது - கவிழ்ந்த தலை நிமிராமற் கடைக்கணித்த தன்மை விளங்கற்கு. பார்த்தனளோ என்று யாம் ஐயுற்றதற்கேற்பப் பார்த்திருப்பாளாயின் இருபாலும் தோன்றுங் கடலில் அலைகள் மிகுந்து பேரொலியெழுமே, அப்போது அக்கடலொலிக் காற்றாளாய்ப் பேதை எப்பாடு படுவாளோ என்பதும், அங்ஙனம் பார்த்தபொழுது அவள் கண்களாகிய வீங்குகின்ற வேலையில் என் வருகையைக் காணாத துயரத்தால் விரிதிரையென நீர் ததும்புமே என்பதும் கருதிப் பெருமூச்செறிந்தான் என்பது ஈற்றிரண்டடிகளின் கருத்து. பின்னும், அவன் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த தோற்றம் கடல் போலிருந்த தென்பதுமாம். ஈண்டு, கடல் - ஸ்ரீராமபிரான் மேனிக்கும், விரிதிரை -

பெருமூச்சுக்கும், ஓங்கியோங்கி யொடுங்கும் அத்திரையின் செயல், ஓங்கியோங்கி யொடுங்கும் பெருமூச்சின் செயலுக்கும் உவமை ஓங்கியோங்கியென்னும் அடுக்கு - மிகுதிப்பொருட்டு. (௧௦)

தன்னி னைந்தில ளென்பது சாலுமோ
மின்னி னைந்த விலங்கு மெயிற்றினை
னின்னி லென்று நெருங்கிய போதவ
ளென்னி னைந்தன ளோவென வெண்ணுமால்.

இ - ள். அவன்—, தன் நினைந்திலள் என்பது - தன்னை மறந்தாள் என்பது, (தன்னில் நைந்திலள் என்பது - தனக்குள்ளே வருந்தினாளில்லை என்பது), சாலுமோ - மிகுதியா யிருக்குமோ? மின் நினைந்த - மின்னல் கருதிய, விலங்கும் - விலகியிருக்கின்ற, எயிற்றினன் - வக்கிரதந்தங்களையுடையானாகிய இராவணனை, நில் நில என்று நெருங்கியபோது - நில்லு நில்லு என்று கூறிச் சமீபித்தபொழுது, என் நினைந்தனளோ? என எண்ணும் - என்னை நினைத்தாளோ? என்று எண்ணுவான்.

குறிப்பு.—மின்னினைந்த - மின்னல்போலும் என்று கருதிய, விலங்கும் - மாறும், எயிற்றினன் - வக்கிர தந்தங்களையுடையானாகிய அரக்கனை, (மாரீசனை) நில நில என்று - (நீக்கானகந் தேடியோடாமல்) நில்லும் நில்லும் என்று, நெருங்கிய போது - இளையான் நெருங்கியபொழுது, என் நினைந்தனளோ - என்ன நினைத்தாளோ என்பபொருள் கூறலுமாம். (௧௧)

நஞ்சு காலு நகைநெடு நாகத்தின்
வஞ்ச வாயின் மதியென மட்குவாள்
வெஞ்சி னஞ்செ யரக்கர்தம் வெம்மையை
யஞ்சி னன்கொலென் றையுறு மாலென்பான்

இ - ள். நஞ்சுகாலும் - விஷத்தைக் கக்குகின்ற, நகை - பற்களையுடைய, நெடு - பெரிய, நாகத்தின் - பாம்பினது, வஞ்சம் வாயில் - கொடியவாயி லகப்பட்ட, மதி என - சந்திரனைப்போல, மட்குவாள் - ஒளிமழுங்குவாளாகிய சீதையானவள், வெம் சினம் செய் - கொடியகோபத்தைச் செய்கின்ற, அரக்கர் - ராக்ஷதர்களுடைய, வெம்மையை - கடுமையை, அஞ்சினன் கொல் என்று - (நமது கணவன்) பயந்தானோவென்று, ஐயுறும் என்பான் - சந்தேகிப்பாள் என்றுங் கூறுவான்

குறிப்பு:—நாகம் - இராவணனுக்கும், மதி - சீதைக்கும் உவமையெனக்கொண்டு பொருள்காண்க. (௧௨)

பூண்ட மானமும் போக்கருங் காதலுந்
தூண்ட நின்றிடை தோமுறு மாருயிர்
மீண்டு மீண்டு வெதுப்ப வெதுமபினான்
வேண்டு மோவெனக் கின்னமும் வில்லென்பான்.

இ - ள். பூண்ட மானமும் - மேற்கொண்ட வெட்கமும், போக்கரு - நீக்குதற் கருமையாகிய, காதலும்—, தூண்ட - நினைப்பூட்ட, இடை நின்று - (அவ்விர

ளைடிற்கும்) இடையே நின்று, தோம உறும ஆா உயிா - பொல்லாங்கை யடைகி ன்ற அரிய உயிரானது, மீண்டு மீண்டு வெதுபப வெதுமபினுன - திரும்பித் திரு மபி வாடவெதால வாடடமடைநத ஸ்ரீராமபிரான, எனககு—, இன்னமும—, (போாசெயதற்கு) வில - வில்லானது வேண்டுமோ—, எனபான - என்று கூறுவான. (௧௩)

வில்லை நோககி நகுமிக வீஙகுதோட
கலலை நோககி நகுஙகடைக காலவருஞ
சொலலை நோககித துணுககுறுந தொனமறை
யெலலை நோககினா யாவரு நோககுவான.

இ - ள. தொல் - பழமையாகிய, மறை எல்லை நோககினா - வேதத்தின முடிவைப் பாாததவாகள, யாவரும நோககுவான - எல்லாரையும (அரககா செய துன பததினின்று நீககிக) காபபவனுகிய ஸ்ரீராமபிரான, வில்லை நோககி நகும - (தனது) தநுவைப பாாதது புனனகை கொள்வான, மிக வீஙகு - மிகவும பெருத்த, தோள கலலைநோககிநகும - தோளகளாகிய மலைகளைப்பாாதது நகைபபான, கடை கால் வரும - கடைசிக காலததில வரப்பட்ட, சொலலை நோககி - (பழிப்பாகிய)சொல்லை யெண்ணி, துணுககுறும - திகிலடைவான (௧௪)

கூதிா வாடைவெங கூற்றினை நோககினன
வேத வேளவி விதிமுறை மேவிய
சீதை யெனவயிற நீாநதன ளோவெனும
போத கமமெனப பொமமெ னுயிாபபினுன்.

இ - ள. கூதிாவாடை - குளிரைத்தருகினற வடகாற்ருகிய, வெஙகூற்றினை நோககினன - கொடியயமனைக கணடவனுகிய ஸ்ரீராமபிரான, வேதம வேளவி - வேதததிற கூறுகின்ற யாகததை, விதிமுறைமேவிய - (அவவேதம விதிதத) கட்டளையினது ஒழுஙகில அடைந்த, சீதை—, எனவயின நீாந்தனளோ - எனனிடததினின்று நீஙகினுளோ? எனும - என்று கூறுவானுகி, போதகம என - யானையைப போல, பொம என உயாபபினுன் - பொமமெனஞெலி செயகின்ற பெருமூசசினை யுடையானுயினுன.

குறிபபு.—கூதிாவாடையைக கணடு யமனைககணட உயிாபோல நடுஙகினவன என்பாா, 'கூதிாவாடை வெஙகூற்றினை நோககினன' என்றாா ஸ்ரீராமனையே நினைததுத தவஞ்செய்பவளாயிருப்பவள எனபாா 'வேதவேளவி விதிமுறை மேவிய சீதை' என்றாா. இனி, வேதவிதிப்படி ஸ்ரீராமபிரானை மணநதுகொணட சீதை எனனலுமாம. இவவாடை தெறகே செனறதனுல தென்றிசையிலுளளா ளிறந்திருப்பாளென நேககி 'எனவயிற நீாந்தனளோ' என்றான (௧௫)

நின்று பலவுயிா காததற்கு நோந்தயா
னென்று மணககுல மஙகையொ ரோநதிழை
தன்று யாககுத தகவிலெ னுயினே
னென்று நன்றென் வலியென நாணுமால.

இ - ள். நின்று - (வில்பிடித்து) நின்று, பல் உயிர் காத்தற்கு - பல உயிர்களையுங் காப்பதற்காக, தோன்றியான் - உடன்பட்ட நான், என் துணை - எனக்கொப்பாகிய [என் குலத்தை ஒப்பதாகிய], குலம் மங்கை - குலத்திற் பிறந்த பெண்ணாகிய, ஒரு ஏந்திழை தன் - ஒரு சுமந்த ஆபரணங்களை யுடையாளுடைய, துயர்க்கு - துன்பத்துக்கு, தகவிலென் ஆயினேன் - (உதவும்) தகுதியில்லேன் ஆயினேன், என்வலி நன்று நன்று என நாணும் - என்னது சாமர்த்தியம் நன்றாயிருக்கின்றது நன்றாயிருக்கின்றது என்று நாணுவானாயினன். (௧௬)

சாயுந் தம்பி திருத்திய தண்டளிர்
தீயு மங்கவை தீர்கெனுஞ் செவ்விருந்
தாயு மாவி புழுங்க வழுங்குமால்
வாயு நெஞ்சும புலர மயங்குவான்.

இ - ள் சாயும் - (அவ்விராமபிரான் படுக்கையிற்) சாயவான், (அங்ஙனஞ் சாய்ந்தவளவில்), தம்பி - இளையபெருமான், திருத்திய - திருந்தச்செய்த, தண் தளிர் தீயும் - (படுக்கையாகிய) குளிர்ச்சிபொருந்திய தளிர்கள் கருகிப்போம்; அங்கு - அப்பொழுது, அவை தீர்க எனும் - அத்தளிர்களை நீக்கிவிடுக என்பான், (அங்ஙனங் கூறியவளவில் இளையான்), செவ்விருந்து ஆயும் - செவ்வையான புதியதளிர்களைக் கொய்வான், (அங்ஙனங் கொய்த தளிர்களின்மேற்சாய்ந்து) ஆவி புழுங்க அழுங்கும் - உயிர் வெந்துபோம்படி துன்பத்தை யடைவானும், வாயும் நெஞ்சும புலர மயங்குவான் - வாயும் மனமும் காய்ந்துபோவதால் மதிமயக்கங்கொள்வானு மாயினன்.()

பிரிந்த வேதுகொல் பேரபி மானங்கொல்
தெரிந்த தில்லை திருமலர்க் கண்ணிமை
பொருந்த வாயிரங் கற்பங்கள் போக்குவா
னிருந்து கண்டிலன் கங்குலி னீற்றரோ

இ - ள். திருமலர் - அழகிய தாமரை மலர்கள்போன்ற, கண் இமைபொருந்த - கண்களினது இதழ்கள் ஒன்றோடு ஒன்று சேருதற்கு [கண்களை யிமைப்பதற்கு], ஆயிரம் கற்பங்கள் போக்குவான் இருந்து - ஆயிரங் கற்பகாலங்களைக் கழிக்கின்றவனாகியிருந்து, கங்குலின் ஈறு கண்டிலன் - அவ்விரவின் முடிவினைக் கண்டானில்லை, (இங்ஙனங் கண்மூடாது காலங்கழித்தது), பிரிந்த ஏதுகொல் - (திருவைப்) பிரிந்த காரணத்தாலோ? பேர் அபிமானம் கொல் - பெரிதான மதிப்பினாலோ? தெரிந்தது இல்லை - (காரணமின்னதென்று) அறிந்ததாக இல்லை.

குறிப்பு — ஸ்ரீராமபிரான் தனது கண்களி னிதழ்களாகிய தாமரை யிதழ்களை அத்தாமரையை வீடாகவுடைய திருமகளாகிய சீதை வருவாள் வருவாள் என்று கருதியோ அவள் வீட்டைப் பிறர்தம இஷ்டம்போல மூடித்திறப்பது யோக்கியதைக் கடுத்ததன்றென்பது கருதியோ திறந்தபடியே வைத்து விடிந்தபொழுது போக்கினன் என்பது, முதல் மூன்றடிகளின் கருத்து இங்ஙனங் கற்பித்தது இரவின் நீட்சியும் பிரிவாற்றாமையால் எய்திய தாழ்ச்சியும் விளக்குதற்கு. (௧அ)

வென்றி வேற்கை யிளவலை மேலெலா
மொன்று போல வுலப்பில நாளகடா

நின்று காண்டியன் றேநெடுங் கங்குற்
னின்று நீள்வதற் கேதுவெ னென்னுமால்.

இ - ள். வென்றி வேல் கை இளவலே - வெற்றிபொருந்திய வேலினையேந்திய கையினையும் இளமையையுமுடையாய், மேல் எலாம் - முந்தைக்காலமெல்லாம், நாள்கள் (பகலுமிரவுமென்றிருகூறுபட்ட) தினங்கள், ஒன்றுபோல - ஒருதன்மையனவாய், உலப்பு இல - கெடுதலில்லாதன (வாயிருந்தன), (என்பதை) நின்று - நிலைத்திருந்து, காண்டி அன்றே - பார்த்தாயல்லையோ? இன்று நெடு கங்குல் நீள்வதற்கு - இற்றைத்தினம் நெடிய இரவானது நீட்சிபெறுதற்கு, ஏது என் - காரணம் யாது, என்னும் - என்றுகூறுவான்.

குறிப்பு—இளவலே ஐ - முன்னிலை யுணர்த்தியது. நின்று என்பதற்கு - இரவெல்லாம் விழித்துக் காவல்புரிந்து நின்று எனினுமிழுக்காது. தான் - தாம், ஆல் - அசைகள். (௧௯)

நீண்ட மாலை மதியினை நித்தமும்
மீண்டு மீண்டு மெலிந்தனை வெள்குவாய்
பூண்ட பூணவள் வாண்முகம் போதர
வீண்டு சால விளங்கினை யென்னுமால்.

இ - ள். நீண்ட மாலை மதியினை - (விடியாது) நீளுதலுற்ற இரவிற்றோன்றிய சந்திரனை (நோக்கி), நித்தமும் - தினந்தோறும், மீண்டு மீண்டு - பலதரம் திரும்பிவந்தும், மெலிந்தனை வெள்குவாய் - (என்தலைவியின் முகவொளிக்கு இணையாகாத விசாரத்தால்) இளைப்புற்று [கலைகள் தேயதலுற்று] நாணம் அடைவாய், பூண்ட பூண் அவள் வாள்முகம் போதர - அணிந்த ஆபரணங்களையுடைய அந்தச் சீதையினது ஒளி பொருந்திய முகம் (என்னைவிட்டு விலகி) போய்விட்டதால், ஈண்டு - இப்பொழுது, சால் விளங்கினை என்னும் - மிகுதியாகப் பிரகாசிக்கின்றாய் என்று கூறுவான். (௨௦)

நீணி லாவி னிசைநிறை தன்குலத்
தாணி யாய பழிவர வன்னது
நாணி நாடு கடந்தன னாங்கொலோ
சேணு லாந்தனித் தேரவ னென்னுமால்.

இ - ள். சேண் உலாம் - ஆகாயத்தில் உலாவும், தனி தேரவன் - ஒப்பற்ற தேரினையுடைய சூரியன், நீள் நிலாவின் - இந்த நீண்ட நிலாவைப்போல், இசை நிறை - புகழ் நிறைந்த, தன் குலத்து ஆணி ஆய பழி வர - தன்னுடைய குலத்துக்கு உரையாணியாகிய பழியானது வந்துசேர, அன்னது நாணி - அந்தப் பழிக்கு நாணம் அடைந்து, நாடு கடந்தனன் கொலோ என்னும் - இந்நாட்டைவிட்டுத் தாண்டிப்போயினனோ? என்று கூறுவான். (௨௧)

சுட்ட கங்கு னெடிதெனச் சோர்கின்றான்
முட்ட மைந்த நெடுமுடக் கோணெடு

கட்டி வாளரக் கனகதி ரோனையு
மிட்ட னன்கொ லிருஞ்சிறை யெனனுமால.

இ - ள். கட்ட கஙகுல் செடிது என சோகின்றான் - (தன்னை) விசன மடையும்படி செயத இராவானது கால நீட்டிப்பையுடையது என்று தளாவடைகின்ற ஸ்ரீராமபிரான, அமைந்த - பொருந்திய, நெடு முட்டு - நீளமான கடிவாளத்தால், முடககோனொடு - தேரை வேகமாய இழுத்துச் செலலுங குதிரைகளைத திருப்பிக கொணாதறகுத தடை செயயாதவனாகிய அருணன என்னும் சாரதியோடு, கதிரோனையும் - சூரியனையும், வாள் அரககன - வாளினையுடைய ராவண ராக்ஷஸன, கட்டி—, இரு சிறை இட்டனன கொல என்னும் - பெரிய சிறையில வைத்தானோ? என்று கூறுவான

குறிப்பு —இனி, இரண்டாம அடிக்கு - முட்டு அமைந்த - (கரத்தில்) கடிவாளம பொருந்திய, நெடு - பெரிய, முடம கோன ஒடு - முடவாகளுக்குத் தலைவனாகிய அருணனோடு எனப பொருள கொளளலுமமையும். (௨௨)

துடியி னேரிடை தோனறல ளாமெனிற
கடிய காரிருட கஙகுலின கறபமபோய்
முடியு மாகின முடியு மிமமூரிநீா
நெடிய மாநில மெனன நினைககுமால.

இ - ள துடியின நோ இடை-உடுக்கையைப்போலப பொருந்துகின்ற இடையினையுடையாள [சீதை], தோனறலள எனின - காணப்படாதிருககுமபக்ஷத்தில, கடிய - கொடிய, காா இருள - கரிய இருளபொருந்திய, கஙகுலின - இவவிராககாலத்தினது, கறபமபோய முடியும ஆகில - கலபகாலமானது சென்று முற்றுபபெறுமானால் (விடிநதால),இ மூரி நீா நெடிய மாநிலம முடியும -இந்த வலியகடல சூழ்ந்த நெடிதான பெருமைபொருந்திய பூமியானது அழியும, என்ன - என்று, நினைககும-நினைபபான.

குறிப்பு —சீதாபிராட்டி தோனறாளாயின் விடிந்தவுடன இவவுலகத்தையெலலாம அழிததுவிடுவேனெனபது கருதது. (௨௩)

திறததி னுதன செயதவத தோருற
வொறுததது ஞாலத் துயிாதமை யுணடுழன
மறததி னாகள வலிநதனா வாழவரே
லறததி னுலினி யாவதெ னெனனுமால.

இ - ள். செய்தவததோா திறதது - செய்யபபட்ட தவததினையுடையோாபால், இனனன உற - தீயவைகள சேருமபடி, ஒறுதது - வருததப்படுத்தி, ஞாலத்து உயிாதமை உணடு உழல மறததினாகள - பூமியிலுள்ள பிராணிகளைத தின்று திரிகின்ற பாவததினை யுடையவாகள [அரககாகள], வலிநதனா வாழ்வரேல் - வலிமை யுடையவாகளாய் வாழ்ந்திருப்பாகளானால், இனி அறததினால் - இனிமேல தருமததினால, ஆவது என் என்னும - முடியுஞ் செயல யாது? என்று கூறுவான.

குறிப்பு — தவமுனிவர் போன்ற தம்மை வருத்தப்படுத்தி உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் கண்ணுக்குத் தெரியாவாறு மறைத்து வலித்து நிலைபெற்றிருக்கின்ற இருளின் தன்மையைக் கூறுவார் அத்தன்மை வாய்ந்த அரக்கரின் செயலை எடுத்துக் கூறினார். நிறத்து என்பதை இன்னுந்தன என்பதன் முன் வைத்து வலிய துன்பங்களை என்னினுமமையும், சகித்தற்கரிய துயரம் என்றபடி. (௨௪)

தேனின் றெய்வத திருநெடு நாட்சிலைப
பூநின் றெய்யும பொருகணை வீரனு
மேனின் றெய்ய விமலனை நோக்கினன
றானுந் தோகில னயததடு மாறுவான்.

இ - ள் தேனின் - வணங்கொள்ளாகிய, தெய்வம் - தெய்வத்தன்மைபொருந்திய, திரு - அழகிய, நெடுநாண் - நீளமான நாணியினையுடைய, சிலை - (கரும்பு) வில்லில், பூ நின்று - மலர்களை நிறகச்செய்து [தொடுத்து], எய்யும் - எய்கின்ற, பொரு கணை வீரனும் - போர்செய்கின்ற பாணத்தில் வீரனாகிய மன்மதனும், [போரில் கணைகள்தொடுக்குஞ் செயலில் வீரனாகிய மன்மதனும்], மேல் நின்று எய்ய - ஆகாயத்தில் நின்று (பாணத்தை) எய்ய, விமலனை நோக்கினன் - மலரகிதனாகிய ஸ்ரீராம பிரானைப் பார்த்தான்; தானும் - (விமலனாகிய) அவ்விராமபிரானும், தோகிலனாய - (காமமேலுற்று மனநிலைமாறித்) தெளிவில்லாதவனாகி, தடுமாறுவான் - கலங்குவானாயினன்

குறிப்பு — மன்மதன் விமலனைக் கலங்கச்செய்தானாகலின் அவன் வில்லுக்குத் தெய்வத்தன்மையளித்துக் கூறினார். எய்தான் என்னாது எய்ய நோக்கினன் என்றது - அவனது சரவேகமும் சரவேகமும் விளங்கற்கு. தோகிலனாய்த் தடுமாறுவான் என்றது - மன்மதன் செய்யுங் கொடுமையாற் கோபமெய்தி அவனைக் கொல்லவேண்டுமென்று எழுந்துநோக்க அவன் உருக் காணப்படாமல் அநங்கனாயிருந்தமையால் அவனைக் காணப்பெறாமையால் கலங்கினானென்று பொருள்கோடலுமாம். இனி, நோக்கினன் என்பதை முற்றெச்சமாக்கி, தானும் என்றது - அந்த மன்மதனும் என்று பொருள் கூறலுமமையும் இப்பொருள்கொள்ளுங்கால் அவ்விருளில் பிற வொற்றுமையால ஸ்ரீராமபிரானது திருமேனியைக் காணமாட்டாதவனாய்ப் போர்புரிதற்கிலலாமற் கலங்கினான் எனக். (௨௫)

உழந்த யோகத் தொருமுதல கோபத்தா
லிழந்த மேனியு மெண்ணி யிரங்கினன
கெழுந்த கைக்கொரு வனமை கிடைக்குமேற
பழந்து யாக்குப பரிவுறும பான்மையால

இ - ள். கெழுந்தகைக்கு - உரிமைக்கு, ஒருவு அன்மை - நீங்காத தன்மையானது, கிடைக்குமேல் - கிடைக்குமானால், பழந்துயாக்கு - பழைய துயரத்துக்கு, பரிவு உறும் பான்மையால் - துன்பம் அடைகின்ற தன்மையின்படி, உழந்த யோகத்து - பழகின [நன்றாய்ச் செய்தற்கறிந்த] யோகநிலையினையுடைய, ஒரு முதல் - ஒப்பற்ற முதற் பொருளாகிய சிவபிரானது, கோபத்தால் —, இழந்த மேனியும் - (தான்) இழந்துவிட்ட உடலையும், எண்ணி - நினைத்து, இரங்கினன் - (அம்மன்மதன்) துக்கித்தான்.

குறிப்பு—ஒரு சொத்தினிடத்தில் தனக்குள்ள உரிமையை இழந்துபோன ஒருவன் மீண்டும் அவ்வுரிமையைப் பெறுதற்கு வழியேற்பட்ட காலத்தில் அவ்வுரிமையை நிலைநிறுத்தற்குரியதும் தான் போக்கடித்ததுமான ஆதாரவிருந்தால் வெற்றி கொள்ளலாமே என்று கருதி இழந்துவிட்ட ஆதாரவை நினைத்திரங்குவதுபோல அழகுக்குரியன் எனனும் தனது பாத்தியதையை ஸ்ரீராமபிரானது திருமேனியானது வாட்டமுற்றிருப்பதால் ஊர்ச்சிதத்துக்குக் கொண்டுவர வழியேற்பட்டுமே அதனை உறுதிப்படுத்தற்குரியதான தன் உடலை இழந்துவிட்டதால் அதை நினைந்து மனம் தன் இரங்கினன் என்பது கருத்து. கெழுதகை - உரிமை "கிளைளி வளவனொடு கெழுதகை வேண்டி" [மணிமேகலை ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதை] ஒரு + வன்மை என்றும் பிரிக்கலாம், வன்மை - வலிமை. (௨௯)

நீல மாய நிறத்த னினைப்பிடைச்
சூல மாகத் தொலைவுறு வேலையின்
மூல மாமலர் முன்னவன் முற்றுறுங்
கால மாமெனக் கங்குல் கழிந்ததே

இ - ள். நீலம் ஆய நிறத்தன் நினைப்பிடை - நீலமாகிய நிறத்தினையுடைய ஸ்ரீராமபிரானுடைய எண்ணத்தினிடத்து, கங்குல் - அவ்விரவானது, சூலம் ஆக - சூலாயுதம்போல, தொலைவு உறு வேலையில் - (ஊடுருவி) நீங்குகின்ற வேளையில், மூலம் மாமலர் முன்னவன் - ஆதியாகிய (ஸ்ரீமகாவிஷ்ணுவின் உந்திக்) கமலத்திற் பிறந்த முதல்வனாகிய பிரமதேவன், முற்று உறும் காலம் ஆம் என - முடிவையடைகின்ற ஊழிக்காலமாகும் என்று கூறும்படி, கங்குல் கழிந்தது - இருள் நீங்கியது ()

வேறு

வெள்ளஞ் சிலம்பு பாற்கடலின் விரும்புந் துயிலை வெறுத்தளிபுங்
கள்ளுஞ் சிலம்பும் பூங்கோதைக் கற்பின் கடலிற் படிவாற்குப்
புள்ளுஞ் சிலம்பும் பொழில்சிலம்பும் புனலுஞ் சிலம்பும் புனைகோலம்
முள்ளுஞ் சிலம்புஞ் சிலம்பாவே லுயிருண் டாகும் வகையுண்டோ.

இ - ள். வெள்ளம் சிலம்பு பால் கடலின் விரும்பும் துயிலை வெறுத்து - மிகுதியாக ஒலிக்கின்ற திருப்பாற்கடலினிடத்து (தான்) விரும்புகின்ற நித்திரையை வெறுத்துவிட்டு, அளியும் கள்ளும் சிலம்பும் பூ கோதைக்கு அற்பின் கடலில் படிவாற்கு - வண்டுகளும் தேனும் ஒலிசெய்கின்ற பூவையணிந்த குழலினையுடையாளாகிய சீதாபிராட்டியின் நிமித்தமாக அன்பாகிய கடலில் மூழ்குவானாகிய ஸ்ரீராமபிரானுக்கு, புள்ளும் சிலம்பும் - பறவைகளும் ஒலிக்கின்றன, பொழில் சிலம்பும் - சோலை ஒலிசெய்கின்றது, புனலும் சிலம்பும் - நீரும் ஒலிசெய்கின்றது, (அவற்றோடு) புனை கோலம் - புனைந்த போர்க்கோலத்தை, உள்ளும் - கருதுகின்ற, சில அம்பும் சிலம்பாவேல் - சில்பாணங்களும் ஒலி செய்யாவிட்டால், உயிர் உண்டாகும்வகை உண்டோ - உயிர் உண்டாகின்ற காரணமும் இருக்கிறதோ? [இல்லை].

குறிப்பு:—நிலாப்பரப்பிற்செய்த அறிதுயில் ஒழித்ததுதோன்றப் 'பாற்கடலின் விரும்புந் துயிலை வெறுத்து' என்றார். பூங்கோதை - அன்மொழித்தொகை. மூன்றும் அடி விடியற்காலத்தை உணர்த்தினறது. படுக்கையைவிட் டெழுந்தபோது அவன் உடம்பின் அசைவால் அம்புகள் ஒன்றோடொன்று தாக்குற்று ஒலிசெய்தன

எனக அவன தானகொணட போககோலததை மறநதுகிடந்தமை தோனற 'புனே கோல முளளுஞ சிலமபும்' எனருா. கிலாபபரபபில அறிதுயில் செயவதில இன பம காணுமையால அதனை வெறுததுப் பிராடடியின அனபைககருதித துனபததி லாழநது உயிா நீஙகினுன்போல இருந்த ஸ்ரீராமபிரானுககுப புள முதலியன ஒலி செயது விடியறகாலததை யுணாததியும அமபுகள ஒலிசெயது போாநினைபபை உணடாககியும எழுபபியதால அவன உயிாபெறறவனபோன றெழுநதான எனபது கருதது. (௨௮)

மயிலும பெடையு முடனறிரிய மானுங கலையு மருவிவரப
பயிலும பிடியுங கடகரியும வருவ திரிவ பாாககினறுன
குயிலுங கருமபுஞ செழுநதேனுங குழலும யாழுங கொழுமபாகு
மயிலு மமுதுஞ சுவைதீதத மொழியைப பிரிநதா லழியானே.

இ - ள். மயிலும பெடையும உடனதிரிய - ஆணமயிலும பெணமயிலுங கூடித திரிவதையும, மானும கலையும மருவிவர - பெணமானும ஆணமானும புணாநது வருதலையும, பயிலும - பழகுகினற, பிடியும கடம கரியும - பெண யானையும மதம பொருநதிய ஆண யானையும, வருவ - (சோநது) வருவனவாகி, திரிவ - திரிகினறவைகளை, பாாககினறுன - பாாககினற ஸ்ரீராமபிரான, குயிலும்—, கருமபும—, செழு தேனும - வளமைபொருநதிய தேனும, குழலும - வஙகியமும, யாழும - வீணையும, கொழு பாகும - வளமைபொருநதிய தேமபாகும, அயிலும அமுதம - உணகினற தேவாமிாதமும, சுவைதீதத - சுவை நீஙகுமபடிசெயத, மொழியை - சொறகளையுடைய சீதாபிராடடியை, பிரிநதால - பிரிவுறறால, அழியானே - கெடடு வருநதாதிருபபானே?. [வருநதுவான] (௨௯)

முடிநாட டியகோட டுதயததது முறற முறறுன முதுகஙகுல
விடிநாட கணடுங கிளிமிழறறு மெனசொற கேளா வீரறகாண
டடிநாட செநதா மரையொதுஙகு மனன மிலளால யானடைதத
கடிநாட கமலத தெனவவிழததுக காட்டு வானபோற கதிாவெயயோன

இ - ள முது கஙகுல விடிநாள கணடும - பழைய இரவு விடிநத பொழுதைபபாாததும, கிளி - கிளிபோலவாளாங்ய சீதாபிராடடி, மிழறறும - (நிரமபாத சொறகொணடு) பேசுகினற, மெல சொல - மெனமைபொருநதிய வாாததைகளை, கேளா - கேடகபபெருத, வீரறகு - வீரனுகிய ஸ்ரீராமபிரானுககு, ஆணடு - அபபொழுது, கதிாவெய்யோன - கிரணஙகளையுடைய சூரியன, அடிநாள - முனனுளில், செநதாமரை ஒதுஙகும அன்னம - செயய தாமரைமலரில தஙகுகினற அனனமபோனற சீதாபிராடடியானவள, யான அடைதத - நான (சேறறு) மூடிய, கடி - வாசனைபொருநதிய, நாள கமலதது - அனறலாநத தாமரைமலரில, இலள என - இலலாதவளாயினளெனறு, அவிழததுககாடடுவானபோல - (அததாமரை மலரினிதழகளை) அவிழசசெயது காணபிபபவனைபபோல, முடிநாடடிய - (தன) சிரததை நிறுததிய, கோடு உதயதது - உசசியையுடைய உதயகிரியினது, முறறம உறறுன - முனறிலினகணை வநதான்.

கருத்து.—செநதாமரை மலாகள விரியுமபடி உதயகிரியின உச்சியில சறறே தனது தலை தெரியுமாறு சூரியன உதயஞ செயதான எனபதாம. (௩0)

பொழிலை நோக்கும் பொழிலுறையும் புள்ளை நோக்கும் பூங்கொம்பி
னெழிலை நோக்கு மிளமயிலி னியலை நோக்கு மியல்பாளுள்
குழலை நோக்கிக் கொங்கையிணைக் குவட்டை நோக்கி யக்குவட்டின்
றொழிலை நோக்கித் தன்னுடைய தோளை நோக்கி நாள்கழிப்பான்.

இ - ள். பொழிலை நோக்கும் - ஸ்ரீராமபிரான் சோலையைப் பார்ப்பான், பொழில் உறையும் - அச்சோலையில் வசிக்கின்ற, புள்ளை நோக்கும் - சக்கரவாகப் பட்சிகளைப் பார்ப்பான், பூ கொம்பின் எழிலை நோக்கும் - புஷ்பங்களையுடைய மரக்கொம்பினது அழகைப் பார்ப்பான், இளமயிலின் இயலை நோக்கும் - இளமை பொருந்திய மயிலினது சாயலைப் பார்ப்பான், இயல்பு ஆளுள் - அம்மயிலினது தன்மை பொருந்தியவளாகிய சீதாபிராட்டியினது, குழலைநோக்கி - கூந்தலைக்கருதியும், இணை கொங்கை குவட்டை நோக்கி - இரண்டு முலைகளாகிய மலைகளைக்கருதியும், அ குவட்டின் தொழிலைநோக்கி - அந்த முலைமலைகளினது செயலைக் கருதியும், தன்னுடைய—, தோளை - புயங்களை, நோக்கி - பார்த்தும், நாள் கழிப்பான் - பொழுது கழிப்பானாயினன்

குறிப்பு —பொழில்-பிராட்டியின் குழலையும், புள் (சக்கரவாகம்)-தனங்களையும், பூங்கொம்பின் எழில்-கண்ணையு மனத்தையுங் கவர்தல்போல, தனங்களும் தனது கண்ணையு மனத்தையும் கவர்தலையும், மயிலினியல் பூமியிற் படிதல்போல பிராட்டியின் திருமேனி தனது தோளிற் பொருந்தலையுங் குறிப்பிப்பான் முறையே கூறியவாறறிக. (௧௧)

அன்ன காலை யிளவீர னடியின் வணங்கி நெடியோய்ப்
பொன்னை நாடா தீண்டிருத்தல் பொருளோ வென்னப் புகழோனுஞ்
சொன்ன வரக்க னிருக்குமிடந் துருவி யறிதுந் தொடர்ந்தென்ன
மின்னுஞ் சிலையார் மலைதொடர்ந்த வெயில்வெங் கானம் போயினரால்.

இ - ள். அன்னகாலை - இப்படிப் பொழுதுகழிகின்றபொழுது, இளவீரன் - இளையபெருமாள், அடியின் வணங்கி - (ஸ்ரீராமபிரானது) திருவடிகளில் வணங்கி, நெடியோய—! அ பொன்னை - அந்த இலக்குமியை [சீதாபிராட்டியை], நாடாது - தேடாமல், ஈண்டு இருத்தல் - இவ்விடத்திலிருத்தல், பொருளோ என்ன - குணமோ? என்று கூற, புகழோனும் - கீர்த்திமானாகிய ஸ்ரீராமபிரானும், சொன்ன - (நமது தந்தை சடாயு) உரைத்த, அரக்கன் இருக்கும் இடம் - ராவண ராக்ஷஸன் இருக்கின்ற இடத்தை, தொடர்ந்து - தேடிச்சென்று, துருவி அறிதும் என்ன - ஆராய்ந்தறிவோம் என்று கூற, மின்னும் சிலையார் - ஒளிசெய்கின்ற வில்லினையுடைய ஸ்ரீராமலட்சுமணர்கள், வெயில் - வெயிலில், மலைதொடர்ந்த - மலைகள் தொடர்ச்சியாயுள்ள, வெம் கானம் போயினர் - வெவ்விய காட்டின்வழியாகச் சென்றார்கள். ()

வேறு.

ஆசை சுமந்த நெடுங்கரி யன்னார்
பாசிலை துன்று வனம்பல பின்னாக்
காசறு குன்றினொ டாறு கடந்தார்
யோசனை யொன்பதொ டொன்பது சென்றார்.

இ - ள். ஆசை சுமந்த - திக்குக்களைச் சுமந்துகொண்டிருக்கிற, நெடு கரி அன்னார் - பெரிய யானைகளை ஒத்த ஸ்ரீராமலட்சுமணர்கள், பாசு இலை துன்று - பசிய இலைகள் நெருங்கிய, பல்வனம் பின் ஆ - பலகாடுகள் பிற்பட, காசு அறு குன்றின் ஒடு ஆறு கடந்தார் - குற்றமற்ற மலைகளுடன் நதிகளைக் கடந்தவர்களாகி, ஒன்பது ஒடு ஒன்பது யோசனை சென்றார் - பதினெட்டு யோசனை தூரம் நடந்துபோனார்கள்.

குறிப்பு:—காலநோவ நடந்து திரியாது ஓரிடத்திலமைந்து கம்பீரமாய் இருக்கும் தன்மையையுடையார் என்பது விளங்க 'ஆசை சுமந்த நெடுங்கரி யன்னார்' என்றார். இனி, விரைவிற் சென்று காணவேண்டுமென்னும் ஆசையினையுடையாராயினும் நடையில் யானைபோல விரைவு குன்றி நடப்பவரென்னும் கருத்து விளங்கக் கூறினாரென்னலுமாம். (௬௩)

மட்படி செய்த தவத்தினில் வந்த
கட்படி கோதையை நாடினர் காணா
ருட்படி கோப முயிர்ப்பொடு பொங்கப்
புட்படி யுங்குளிர் கார்பொழில் புக்கார்.

இ - ள். மண்படி செய்த - மண்ணுலகம் புரிந்த, தவத்தினில் வந்த - தவத்தினால் அவதரித்தருளிய, கள்படி கோதையை - தேன்படிந்த கூந்தலையுடைய சீதாபிராட்டியை, நாடினர் காணார் - தேடிக் காணாதவர்களாகிய ஸ்ரீராமலட்சுமணர்கள், உள் படி கோபம் உயிர்ப்பொடு பொங்க - (தம்) மனத்திலடங்கிய சினமானது பெருமூச்சோடு அதிகரிக்க, புள் படியும் - பட்சிகள் தங்கியிருக்கின்ற, குளிர் - குளிர்ந்த, கார்பொழில் புக்கார் - கரிய [இருள்சூழ்ந்த] (ஒரு) சோலையிற் புகுந்தார்கள். (௬௪)

ஆரியர் சிந்தை யலக்க ணறிந்தா
னாரியை யெங்கணு நாடின னாடிப்
பேருல கெங்கு முழன்றனன் பின்னு
மேருவை வெங்கதிர் மீள மறைந்தான்.

இ - ள். வெங்கதிர் - சூரியன், ஆரியர் - ஸ்ரீராமலட்சுமணர்களுடைய, சிந்தை அலக்கண் - மனத்தின்கண் உள்ள துயரத்தை, அறிந்தான் - உணர்ந்தானாகி, நாரியை - சீதாபிராட்டியை, எங்கணும் - எவ்விடத்தும், நாடினன் நாடி - தேடித் தேடி, பேர் உலகு எங்கும் - பெயர்ந்த நிலத்தையுடைய எவ்விடத்தும், உழன்றனன் - அலைந்துதிரிந்தானாகி, பின்னு - கடைசியாக, மேருவை மீள மறைந்தான் - பொன்மலையை(ப் பார்த்து)த் திரும்பும்படி மறைதலுற்றான்.

குறிப்பு:—சீதாபிராட்டியைப் பெயர்த்தெடுக்கப்பட்டுக் கிடந்த இடங்கள்தோறும் மற்ற இடங்கள்தோறும் தேடிக் காணாமல் மேருவின்கண் தேடிப்பார்க்கச் சென்றான்போலச் சூரியன் அஸ்தமித்தான் என்பது கருத்து. எங்கணும் நாடினன் என்ற பின்னர், பேருலகெங்கும் என்றதைப் பெரியவுலகத்தில் எவ்விடத்தும் என்ப பொருள்கூறுதல் சிறப்பன்றாகலானும், பெரியவுலக முழுதும் தேடிக் காணப்படாமற் போயினள் என்னுங்கால் அவள் இவ்வுலகத்தின்கண்ணே யில்லாதவளாய் விடுவாள் ஆதலானும் அச்சூரியன் புகக்கூடாத இலங்கையில் அவளைத் தேடிப்பார்க்க

லிலலை யாதலானும பெரியவுலகம எங்கும எனபதை மறந்துபபெயாத நிலமுழு வதும எனப பொருளகூறினும. (௬௫)

அரணடரு குருசெறி யஞசன புஞச
முரணடன போலிரு ளெங்கணு மூநதத
தெருணடறி விலலவா சிநதையின மூநதி
யிருணடன மாதிர மெடடு மிரணடும.

இ - ள அரணதருகும - (எங்குந தாராளமாயச செலவதறகு இடமிலலாமல) காவலைததருகினற, செறி - நெருஙகிய, அஞசனம புஞசம - கருமைநிறக கூடடங கள, முரணடனபோல - எதிாததனபோல, இருள எஙகணும மூநத - இருளானது எவவிடததும முறபடடு நிறபதால, தெருணடு - தெளிவுறறு, அறிவு இலலவா - அறிதலிலலாதவாகளுடைய, சிநதையின - மனததைபபாாககிலும, மூநதி - (இருண டதனமையில) முறபடடதாகி, மாதிரம எடடும இரணடும - (கீழமேல உளபட) திசைகள பததும, இருணடன - இருள சூழநதுறறன.

குறிபபு —தருகும, கு சாரியை குமசெறி எனககொணடு கருஙகுமமென றிருந தல பொருநதிய எனபபொருள கூறுவாருமுளா தெருணடறி விலலவா எனறகு-ருதவாயும அறிவிலலாதவராகிய பெணகளெனறு கூறலுமாம இனி, அரணடு - (சீதாபிராடடியுடன கூடியிருககுமபோது ஸ்ரீராமபிரானது திருமேனியினழகைக கணடு) பயநது, அருகும - (தனனொளி) குறையும, அஞசனம புஞசம - மைககுழம பின திரடசி, முரணடனபோல - (சீதாபிராடடியைப பிரிநதிருககுஞ சமயநோககிச ஸ்ரீராமபிரானது திருமேனியை வெலவதறகு) மாறுபடடுவநதாறபோல எனறு பொருளகூறலுமமையும. எனவே பிராடடியைப பிரிநதகாலததுப பொலிவிழந திருநதானெனபது கருதது (௬௬)

இளிககறை யினசொ லியைநதன பூவை
கிளிககறை யுமபொழில கிஞசுக வேலி
யொளிககறை மணடில மொததுள தாஙகோா
பளிககறை கணடதில வைகல பயினறாா

இ - ள இளிககு அறை இனசொல இயைநதன பூவை - வீணை நரமபிறகுக கறபிககினற இனிய சொறகளைபபொருநதிய நாகணவாயபபுடகள, கிளிககு அறையும கிஞசுகமவேலி பொழில - கிளிகளுககு (இனியசொறகளை) ஓதுகினற முருககமரவேலியையுடைய சோலையில, ஒளி - பிரகாசததையுடைய, கறை - களஙகம பொருநதிய, மணடிலம - சநதிரமணடிலததை, ஒதத - ஒபபாய, ஆஙகு உளது - அவவிடததி லிருககிறதாகிய, ஓா பளிககறை - ஒரு பளிஙகுமணடபததை, கணடு - பாாதது, அதில - அமமணடபததில, வைகல பயினறாா - தஙகினாாகள

குறிபபு —இளி,—யாழின நரமபுகளில ஒனறினபெயா, இனி, அது - எலலாப பணணுககும அடிமணை யாதலின இசையுமாம, "மகர வீணையின கிளைநரமபு வடிதத, இளிபுணா றினசொ" எனறாா மணிமேகலை கிறைகமோடட மறககோடடமாக கிய காதையில இனிய சொறகளையுடைய சீதாபிராட்டி கிளிககு மொழிகளபயிற றுந தனமைபோலப பூவை கிளிக கறைதலைககணடு அவள நினைவுவநது வருததந

கொண்டு பளிககறை சந்திரமணடிலமபோல் வெபபநதா நிதிரைவாராமல தனபு றமாறு அமமணடபததில நுழைநது தஙகிஞா எனக (௯௭)

அவ்விடை யெய்திய வண்ண லிராமன
வெவவிடை போலிள வீரனை வீர
விவவிடை நாடினை நீகொணா கெனறுன்
றெவவிடை விலலவ னுநதனி செனறுன

இ - ள. அ இடை எயதிய - அநத இடததைசசோநத, அணணல் இராமன - பெருமையிறசிறநத ஸ்ரீராமபிரான, வெவவிடைபோல இளவீரனை - வெவ்விய ருஷபமபோனற இளையபெருமானை, வீர - வீரனே! இ இடை - இநத இடததில, நாடினை - தேடி, நீ கொணாக எனறுன - நீரினைககொணடு வரககடவாய எனறு கூறினை, தெவ - பகைவா, இடை - பினனிடுகினற, விலலவனும - விலலினையுடையாஞகிய இளையபெருமாஞம, தனி செனறுன - தனிததுப்போயிஞன (௯௮)

எஙகணு நாடின னீரிடை காஞன
சிஙக மெனததமி யனறிரி வானை
யஙகவ னததுள ளயோமுகி யான
வெஙக ணாககி விருமபினள கணடாள்.

இ - ள நீா இடை - சலமுளள இடததை, எஙகணும நாடினன - எவவிடததுநதேடி, காஞன - பாராதவஞகி, சிஙகம என - சிஙகமபோல, தமியன திரிவானை - தனிததவஞகத திரியும இளையபெருமானை, அஙகு - அபபொழுது, அ வனததுள - அநதககாடடில, அயோமுகி ஆன - ஆடடினமுகததினை யுடையாளான, வெம கண அரககி - கொடிய கணகளையுடைய ராக்ஷஸியானவள, விருமபினள கணடாள - விருபபததினை யுடையாளாயப பாாததாள. (௯௯)

நனமதி யோாபுகன் மநதிர நாமச
சொனமதி யாவா விறறொடா கிறபா
டனமத ஞேடுதன வெமமை தணிநதாண
மனமத ஞமிவ னெனனு மனததாள.

இ - ள நல மதியோா புகல - நல்ல புததியுளளவாகள சொலலுகினற, மநதிரம - மநதிரமாகிய, நாமம சொல - அசசததைததரும வாாததைகளை, மதியா அரவில - மதியாத பாமபைபபோல, தொடாகிறபாள - விடாது பினதொடாநதுவரும அவவரககி, தனமதம ஓடு - தனது செருககோடு, தன் வெமமை தணிகதாள - தனது கோபம தணியபபெறறவளாய, இவன—, மன்மதன ஆம எனனும - மனமதனே யாவான எனறு கருதும, மனததாள - மனததினை யுடையாளாயிஞள. (௱)

அழுநதிய சிநதை யாககி யலகக
ணெழுநதுயா காதலின வநதெதிா னினறுள்
புழுஙகுமென் ஞேெவாடு புலனுவ னனறி
விழுஙகுவெ ஞேவென விமம லுழன்றுள்.

இ - ள். அழுந்திய சிந்தை அரக்கி - வருந்திய மனத்தினையுடைய அந்த ராக்ஷஸியானவள், அலக்கண் எழுந்து உயர் காதலின் - துன்பங்கிளம்பி வளர்கின்ற ஆசையினாலே, வந்து—, எதிர் நின்றாள் - (இளைய பெருமாளுக்கு) எதிரில் நின்றாளாகி, புழுங்கும் என் நோயொடு புலலுவன் அன்றி - வெதும்புகின்ற எனது காம நோயோடு (இவனைத்) தழுவுவேனல்லாமல், விழுங்குவெனோ என - விழுங்கிவிடுவேனோ? [விழுங்கமாட்டேன்] என்று, விம்மல் உழன்றாள் - பூரிப்போடு ஆடினாள்

இராந்தனை யெய்திய போதிசை யாது
கரந்தன னென்னினி கொண்டு கடந்தென
முரஞ்சினின் மேவி முயங்குவெ னென்று
விரைந்தெதிர் வந்தன டீயெனும் வெய்யாள்.

இ - ள் தீ எனும் வெய்யாள் - அக்கினி என்று கூறுகின்ற வெம்மையையுடைய அவ்வரக்கி, இராந்தனை எய்தியபோது - (நான்) யாசித்தேனாய் அடைந்த காலத்தும், இசையாது - (என்வேண்டு கோளுக்குச்) சம்மதியாமல், கரந்தனனேல் - பதுங்குவானானால், இனிகொண்டு கடந்து - (இவனை) மிகவுந் தூரத்திற்கொண்டு சென்று, மேவி என் முரஞ்சினின் முயங்குவென் என்று - விருப்பங்கொண்டு என் முலைகளில் தழுவுவேன் என்று கூறி, விரைந்து - வேகமாய், எதிர் வந்தனள் - (இளையபெருமாளுக்கு) எதிரில் வந்தாள்

குறிப்பு.—முரஞ்சு - முதனிலைத் தொழிலாகு பெயராய முலையை யுணர்த்தி நின்றது முரஞ்சுதல் - முற்றுதல், "முரஞ்சு கொண் டிறைஞ்சின வலங்கு சினைப்பலவே" "கோடுபல முரஞ்சிய கோளியா லத்து" [மலைபடுகடாம் 144, 768] இனி, முரசு முரஞ்சென விகாரமுற்று அதுபோன்ற முலையை யுணர்த்து மென்று கூறுவாருமுளர். 'உரந்தனின் மேவி யுயங்குவென்' எனவும் பாட பேதமுண்டு, உரம் - மார்பு (சஉ)

உயிர்ப்பி னெருப்புமிழ் கின்றன ளொன்ற
வெயிற்றின் மலைக்குல மென்றினி துண்ணும்
வயிற்று வயங்கொடு மாசுணம் வீசு
கயிற்றி னிசைத்த முலைக்குழி கண்ணாள்.

இ - ள். உயிர்ப்பின் - பெருமூச்சிலிருந்து, நெருப்பு உமிழ்கின்றனள் - அக்கினியைச் சொரிகின்றவளாய், ஒன்ற - பொருந்த, எயிற்றின் - பற்களினாலே, மலைகுலம் - யானைக் கூட்டங்களை, மென்று—, இனிது உண்ணும் - மகிழ்வாக உண்ணுகின்ற, வயிற்றுவயம் - வயிற்றினிடத்து, கொடு - (சுற்றுதற்குக்) கொண்டு, வீசு - மேலோட்டுகின்ற, மாசுணம் கயிற்றின் - மலைப்பாம்பாகிய கயிற்றினாலே, இசைத்த - கட்டிய, முலை - முலைகளினிடத்து, குழி கண்ணாள் - குழிந்த கண்களையுடையாளாயினாள்.

குறிப்பு —மலை - ஆகுபெயர். காமத்தால் உட்சொருகிய கண்களின் பார்வையைத் தன் முலைமேல்வைத்து நின்றாள் என்பது ஈற்றடியின் கருத்தென்றலும் காணித் தலைகவிழ்ந்து நின்று தான் காமங் கொண்டிருப்பதைத் தெரிவிக்க முலைகளை நோக்கமுற்றாள் என்று தோன்றுதலறிக. (சங)

பற்றிய கோளரி யாளி பணிக்கட
டெற்றிய பாத சிலம்பு தரித்தா
ளிற்றுக யாவையு மீறுறு மந்நாண
முற்றிய ஞாயிறு போலு முகத்தாள

இ-ள். பற்றிய - பிடித்த, கோள அரி - கொலைத் தொழிலையுடைய சிங்கங்களையும், யாளி - யாளி யானைகளையும், பணிக்கண - பாம்பினிடத்து [பாம்பாகிய கயிற்றில்], தெற்றிய - இறுகிய, பாதம் சிலம்பு தரித்தாள - பாதச் சிலம்புகளை யணிந்து கொண்டவளாகிய அவள், யாவையும் - எப்பொருளும், இற்று உக - கெட்டு நாசமாகும்படி, ஈறு உறும் - முடிவு சேர்கின்ற, அ நாள - அந்த யுகாந்தகாலத்தில், முற்றிய - (கிரணங்கள் மிகவும்) முதிரப்பெற்ற, ஞாயிறுபோலும் முகத்தாள - சூரியனை ஒப்பாகின்ற முகத்தினையுடையாளாயினள்.

கருத்து —கீழ்க்கூறியவாறு மூலைக்கண் நோக்குற்றவளை இளையபெருமாள் வ ரிடப் பாராமலிருந்ததை அறிந்து தானொருத்தி இறப்பதாகத் தன பாதச்சிலம்பினொலியைக் கொண்டு அறிவித்தும் பாராமலிருந்ததால் தன முகத்தை நிமிர்த்துக் கோபத் தோடு பார்த்தாளென்பதாம் (சச)

ஆழி வறக்க முகக்க வமைந்த
மூழை யெனப்பொலி மொய்பில வாயாள
கூழை புறத்து விரிந்ததொர் கோட்பா
லூழி நெருப்பி னுருத்தனை யொப்பாள

இ-ள். ஆழி வறக்க - கடல்வற்றிப்போம்படி, முகக்க அமைந்த - மொள்ளுதற்குப் பொருந்திய, மூழை என பொலி - அகப்பையைப்போல விளங்குகின்ற, மொய - (பற்கள்) மொய்த்த, பிலம் வாயாள- பிலத்துவாரம்போன்ற வாயினையுடையாளாகிய அவள், கூழை - தலைமயிரானது, புறத்து - பின்பக்கத்தில், விரிந்தது ஓர் கோட்பால - விரிவுற்றதாகிய ஒரு செய்கையினால், ஊழிநெருப்பின உரு தனை ஒப்பாள - வடவாமுகாக்கினியினது உருவத்தை ஒப்பாளாயினள்.

குறிப்பு —அவள் இளையபெருமானுடைய முகத்தைப் பார்த்தபின்பும் அவன் அவளைப் பாராமலிருந்ததால் ஈதென்ன அதிசயமென்று வாயைத்திறந்து கூரிக கூழைபுறத்து விரியும்படி தலையை யசைத்தாள் என்பதாம் (சரு)

தடிதட வத்தலை பலதழு வத்தா
ணெடிதடை யகுடா கெழுமு நிணத்தூண
படிதட வப்பல பாவ மிசைக்குங
கடிதட வத்தின ளுருமு கறிப்பாள.

இ-ள். தடி - அளக்குங் கோல்போல, அ தலை பலதழுவ- அந்த இடத்தைப் போன்ற (விசாலமான) பல இடங்கள் (ஓரளவையிற) சேரும்படி, தடவு - அளக்கின்ற, தாள - பாதங்கள், நெடிது அடைய - நெடுந்தூரஞ் சேரவும், குடர் கெழுமு- குடல்களபொருந்திய, நிணத்த ஊண் - கொழுப்பினையுடைய புலாலுணவானது, படிதட்வ - பூமியிற சிந்திக்கிடக்கவும், பலபாவம் இசைக்கும் - பலபாவங்களைப்

பொருந்தச்செய்கின்ற, கடிதடவத்தினை - அல்குலையுடையாளாகிய அவள், உருமு கறிப்பாள - இடியைப்போல(ப பறகளைக) கடிப்பவளாயினள

கருத்து —இளையபெருமாள், தன்னை அறிந்துகொள்ளுமாறு அவன முனனே உலாவுகினறவளும காமமிகுநதவளுமாகியும் அவனுணராமையையறிநது பறகளைத திருகும பேரொலிகாட்டிக கோபிககததொடஙகினு ளெனபதாம. (சசு)

இவைபிறை யொபபன வெனன விழிப்பா
ளவைகுளி ரககடி தழலு மெயிறறுள்
குவைகுலை யககட்ல குவிய வலைபபா
ணவையில புவிததிரு நாண நடபபாள

இ - ள இவை - இககணகள், இறை ஒபபன எனன - ஊழிததீயை யொப பனவெனறு சொல்லுமபடி, விழிபபாள - (உருட்டிப) பாரப்பாள, அவை - அகக ணகள, குளிர - குளிாநதனவாகுமபடி, கடிது - விரைவில, அழலும - கனறலுறு கினற [கோபிததுக கடிககினற], எயிறறுள - பறகளையுடையாளும, குவைகுலைய - மலைகள நலைகவும, கடல குவிய - கடலகள ஒனறுசேரவும, அலைபபாள - வருதது வாளுமாகி, நவை இல - குறறமில்லாத, புவி திரு - பூதேவி, நாண - இவளும ஒருபெணணோ? எனறு வெட்கபபடுமபடி, நடபபாள - நடப்பவளும

குறிபபு —இனி, இவை - இப்பெரியபிராணிகள, இறை ஒபபன - அணுவை ஒபபாவன, எனன - எனறு, விழிப்பாள - பாரப்பாளாய, அவை - அப்பிராணிகள, குளிர - இறககுமபடி, கடிது - விரைவில, அழலும - கோபிததுக கடிககினற, எயி றறுள - பறகளையுடையாள எனலுமாம. (சஎ)

நீளர வசசரி தாழகை நிரைததா
ளாளர வபபுலி யார மணிநததாள
யாளியி னைபபல தாலி யிசைததாள்
கோளரி யையககொடு தாழகுழை யிட்டாள

இ - ள். தாழ்கை - முன்கையில, நீள் அரவம சரி நிரைத்தாள - நீணட பாம பாகிய வளையல்களை வரிசையாயிட்டவளும, ஆள அரவம புலி ஆரம அணிததாள - ஆட்களின சபதததைக கேட்கபபெறற புலிகளாகிய மாலையைத தழுவினவளும, யாளியினை - யாளியானைகளை, பலதாலி இசைததாள - பலதாலிகளாகக கட்டிககொ ணடவளும, கோள அரியை கொடு - கொலைததொழிலையுடைய சிஙகஙகளைககொ ணடு, தாழகுழை இட்டாள - தொஙகுகினற குணடலததையிட்டாளுமாகி (சஅ)

நின்றன ளாசையி னீரகலு ழுஙகண
குனறி நிகாபப குளிாபப விழிபபாண
மினறிரி கினற வெயிறறின விளககாற
கனறிரு ளிறறிரி கோளரி கணடான.

இ - ள். நினறனள - நினற அவ்வரக்கி, ஆசையின் - ஆசையினாலே, நீர்கலு ழும - ஆனந்தபாஷபபொழிகின்ற, குன்றிநிகர்ப்ப கண் - குன்றிமணியை ஒததன

வாகிய செய்ய கண்கள், குளிர்ப்ப - குளிர்ச்சியடைந்தனவாகி, விழிப்பாள் - பார்ப்ப வளாயினள், மின் திரிகின்ற - ஒளி யுலாவுகின்ற, எயிற்றின் விளக்கால் - (அவளு டைய) பற்களாகிய விளக்கினாலே, கன்று இருளில் - வருந்துகின்ற இருட்டில், திரி - அலைகின்ற, கோள் அரி - கொலைத்தொழிலையுடைய சிங்கம்போன்ற இளைய பெருமாள், கண்டான் - (அவளைப்) பார்த்தான்.

குறிப்பு —கோளரி - அன்மொழித்தொகை (௪௯)

பண்டையி னாசி யிழந்து பதைக்குந்
திண்டிற லாளொடு தாடகை சீராள்
கண்டக ராய வரக்கர் கணத்தோ
ரொண்டொடி யாமிவ ளென்ப துணர்ந்தான்.

இ-ள் பண்டையில் - முன்னாளில், நாசி இழந்து - மூக்கையிழந்து, பதைக்கும் - பதறுகின்ற, திண் திறலாள் (சீர்) ஒடு - வலிமையையுடையாளாகிய சூர்ப்பநகையினது குணத்தோடு, தாடகைசீராள் - தாடகையினது குணத்தையுமுடையாளாகிய, இவள் - இவ்வரக்கி, கண்டகர் ஆய - துஷ்டர்களாகிய, அரக்கர் கணத்து - ராக்ஷஸருடைய கூட்டத்தில், ஓர் ஒண்டொடி ஆம் என்பது - ஒரு பெண்ணாவாள் என்பதை, உணர்ந்தான் - அறிந்தான்

குறிப்பு —திண்டிறல் - ஒருபொருட் பன்மொழி, இனி, வலியபகையுமாம். ஒண்டொடி - அன்மொழித்தொகை. (௫௦)

பாவிய ராமிவர் பண்பில ரெம்பால்
மேவிய காரணம் வேறிலை யென்பான்
மாவியல் கானின் வயங்கிருள் வந்தாய்
யாவ ளடீயுரை செய்கடி தென்றான்.

இ-ள் பாவியர் ஆம் இவர் - பாவத்தை யுடையவர்களாகின்ற இவர்கள், பண்பு இலர் - குணமில்லாதவர்கள், எம்பால் மேவியகாரணம் - (இவள்) நமது பக்கத்து (வந்து) சேர்ந்தகாரணமானது, வேறு இலை என்பான் - (போகவிச்சையைத் தவிர) வேறேயில்லை என்று கூறும் அவ்விளையபெருமாள், மா இயல் - மிருகங்கள் பொருந்திய, கானின் - கானகத்தில், வயங்கு இருள் - விளங்குகின்ற இவ்விருளில், வந்தாய் - வந்தவளே, அடீ—, யாவள் கடிது உரைசெய் என்றான் - (நீ) யார் விரைவிற் கூறுவாய் என்று கூறினன்

குறிப்பு:—மூன்றும் அடிக்கு - மாவியல் கானைப்போலும் வயங்கிருள்போலும் வந்தனையென்று பொருள்கூறி மிருகங்களை ஆபரணமாகப் பூண்ட அவள் மேனிக்குக் காட்டையும், அவள் நிறத்துக்கு இருளையும் உவமையாக்கலு மமையும். (௫௧)

பேசின ளங்கவள் பேசுற நாணு
றாசை யுழன்றழி சிந்தைய ளாந்தா
னேசமி லன்பின ளாயினு நின்பா
லாசையின் வந்த வயோமுகி யென்றாள்.

இ - ள். பேசினன் - (இளையபெருமாள் கீழ்க்கூறியவாறு) பேசினன், பேசு நாணுள் - பேசுதற்கு வெட்கப்படாதவளும், ஊசல் உழன்று - ஊசலாடி, அழி - அழிகின்ற, சிந்தையளும் - மனத்தினையுடையாளுமாகிய, அவள் —, நேசம் இல் அன்பினள் ஆயினும் - (நான்) நேயமில்லாத அன்பினையுடையவளானாலும், ஆசையின் - ஆசையாலே, நின்பால் - நின்னிடத்து, வந்த—, அயோமுகி என்றாள் - ஆடுமுகத்தினையுடையாள் என்று கூறினள்.

குறிப்பு — நேசமும் அன்பும் ஒருபொருளனவேனும், அன்பு - பற்றுமாத்திரையாய்த் தோன்றும் உள்ளநெகிழ்ச்சியும், நேசம் - அந்நெகிழ்ச்சி கொண்டப்பின்று வந்ததன் அமைவுமாகலின் வேற்றுமைகாண்க. (ருஉ)

பின்னு முரைப்பவள் பேரெழில் வீரா
முன்ன மொருத்தர் தொடாமுலை யோடும்
பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்தென்
னின்னுயி ரைக்கடி தீத்தி யென்றாள்.

இ - ள். பின்னும் உரைப்பவள் - பின்னுங் கூறுவாளாய, பேர் எழில் வீரா - பெரிய அழகினையுடைய வீரனே! முன்னம் ஒருத்தர் தொடா முலையோடும் - (இதற்கு) முன் ஒருவருந்தொடாத (எனது) முலைகளினுடனே, பொன்னின்மணி தட மார்பு - பொன்னைப்பார்க்கினும் அழகினையுடைய விசாலமான (எனது) மார்பை, புணர்ந்து - சேர்ந்து, கடிது - விரைவில், என் இன் உயிரை ஈத்தி என்றாள் - எனது இனிய உயிரை ஈவாய் என்று கூறினள். (ருங)

ஆறிய சிந்தைய ளஃதுரை செய்யச்
சீறிய கோளரி கண்கள் சிவந்தான்
மாறில வாளிக்ணை யிவ்வுரை வாயிற்
கூறிடி னின்னுடல் கூறிடு மென்றான்

இ - ள். ஆறியசிந்தையள் - தணிந்த மனத்தினையுடைய அவ்வயோமுகியானவள், அஃது உரைசெய்ய - அந்த மொழியைக் கூறியதால், சீறிய - கோபித்த, கோள் அரி - கொலைத்தொழிலையுடைய சிங்கம்போன்ற இளையபெருமாள், கண்கள் சிவந்தான் - கண்கள் சிவப்புறப் பெற்றானாகி, இ உரை வாயில் கூறிடின் - (இனி) இந்த மொழியை வாயாற் கூறுவாயானால், மாறு இல் வாளிகணை - (கொல்லாமல்) வேறுபடுதல் இல்லாத நீண்ட (என்) பாணமானது, நின் உடல் - உனது உடலை, கூறு இடும் என்றான் - துண்டாக்கிவிடும் என்று கூறினன். (ருச)

மற்றவ ளவ்வுரை செப்ப மனத்தாற்
செற்றில ளகைத்துணை சென்னியின் வைத்தாள்
கொற்றவ நீயெனை வந்துயிர் கொள்ளப்
பெற்றிடி னின்று பிறந்தென னென்றாள்

இ - ள். அவன் அ உரை செப்ப - அந்த இளையபெருமாள் அந்த வார்த்தையைக் கூற, மனத்தால் செற்றிலள் - மனத்தால் கோபியாத அவ்வயோமுகியானவள் கைத்துணை - (தனது) கைக ளிரண்டையும், சென்னியின் வைத்தாள் - தலையில் வைத்தாளாகி [கும்பிட்டு] கொற்றவ - அரசனே! நீ—, வந்து—, உயிர்கொள்ள - (நான்) உயிரையடையும்படி, எனை பெற்றிடின் - என்னை (உன் மனைவியாகக்) கொள்வாயா

யானல், இனறு - இறறைபபோழ்து, பிறநதனென என்றுள - பிறநதவளாயினேன எனறு கூறினள.

குறிபபு —மறறு - அசை (௬௫)

வெஙகத மிலலவள பினனரு மேலோ
யிஙகு நறுமபுன லூடேதி யேனுன
னஙகையி லுலென யஞசலே யெனறுற
கஙகையி னீாகொணா வெனகடி தெனறுள

இ - ள வெம கதம இலலவள - கொடிய கோபமிலலாத அவவயோமுகியான வள, பினனரும - பினனும, மேலோய - மேனமையையுடையாய! உன அஙகையி லுல என்னை அஞசலெ எனறுல - உனது அகஙகையினுலே என்னை அஞசாதே யெனறு கூறுவாயாளுல, கடிது - விரைவில, கஙகையின நீா கொணாவென - கங கையாறறினது சலததைக கொண்டுவருவேன, (பினனா), இஙகு - இவவிடதது, நறு புனல் - நலலசலததை, என நாடுதி - என தேடுவாய? எனறுள—

குறிப்பு —அஞசேலெனனுஙகால அசைவுறற உளளஙகை காணபபடுமாதலின அஙகை எனலை அகஙகை என விரிததலே சிறப்புடைததது. இனி, அம+கை எனககொணடு அழகிய கையெனினுங குறறமாகாது. (௬௬)

சுமிததிரை சேயவள சொனனசொ லனன
கமிததில னினனிரு காதொடு நாசி
துமிபபதன முனபக லெனபது சொலல
விமைததில ணினறன ளினன நினைநதாள.

இ - ள. சுமிததிரைசேய - சுமிததிராதேவிககு மகனுகிய இளையபெருமாள், அவள சொனன அனனசொல - அவள கூறிய அநதவாரததையை, கமிததிலன - க்ஷமிததிலனுய [மனனிததல செயயாதவனுகி], நின - உனது, இருகாதொடு - இர ணடு காதுகளுடன, நாசி - மூககை, துமிபபதன முனபு - அறுபபதறகு முனனா, அகல எனபது சொலல - நீஙகுவாய [ஓடிபபோ] எனனுமொழியைக கூற, இமை ததிலள நினறனள - (கணகளை) இமையாதவளாய நினற அவவயோமுகியானவள, இனன நினைநதாள - இததனமையாகக கருதினள.

குறிபபு —அயோமுகி கூறிய அவவாரததைக கேணஙகினவனபோல மறுமொ ழிகூறி, ஸ்ரீராமபிரான சூாபபநகையினிடததது உரையாடி விளையாடினதுபோலப பொழுதுபோககி அவவிராமபிரானுககுச செயகையில தமபியாகாமல "மகனேயிவன பினசெறமபி, யெனனுமபடியன றடியாரினி லேவலசெயதி" எனறு தன தாயகூறிய மொழிபபடி இராமபிரான ஏவிய ஏவலைச செயவதிற கருததுறறுன எனபாா 'சுமிததிரைசேய்' எனறுா. (௬எ)

எடுததனெ னேகினெ னென்முழை தனனு
ளடைததிவன வெமமை யகறறிய பினனே
யுடறபடு மாலுட னேயுறு நனலம
திடததிது வேல லெனறயல சென்றுள.

இ - ள எடுததனென ஏகினென - (நான் இவனை) எடுததுச்சென்று, என முழை தனனுள் அடைதது - எனது குகைககுளளே அடைததுவைதது, வெமமை

அகற்றியபின்னே - (இவனது) கோபத்தை நீக்கியபிறகு, மால - காமமயக்கமானது, உடல்படுமே - (இவனது) உடலினகட சேரும், உடனே - (அங்ஙனம மாலசோநத) உடனே, நன்மை உறும - நன்மையானது வநதுசேரும், திடதது இதுவே - உறுதியையுடையதாகிய இச்செய்கையே, நலன என்று - நன்மையானது என்று கருதி, அயல சென்றுள - பககததிற போயினுள

குறிப்பு — தன்னைப புணாதறகு மனங்கொள்ளானாயினும் தான செய்யும அங்கசேஷ்டைகளால முதலில அவன உடலில காமசசின்னங்கள தோனறலுற்றப பின்னா மருவி யின்பந்தருவான எனபாள 'உடறபடுமாலுடனேயுறு நன்மை' என்றுள இனி, உடனபடுமே ஆல, எனக்கொண்டு சநதவினபகோககி உடறபடுமென்னிறதென்று கூறி ஆல எனபதை யசையாக கோடலு மமையும. உடனபடுமே - உடனபடுவான. (ருஅ)

மோகனை யெனபது மூநதி முயனறுண
மாக நெடுஙகிரி போலியை வெளவா
வேகின ளுமபரி னிநதுவொ டேகு
மேக மெனுமபடி நொய்தினின வெய்யாள

இ - ள. மூநதி - முதலில, மோகனை எனபது - (மயககததை விளைவிபபதான) மோகனம எனனும மநதிரததில, முயனறுள - பிரயாசைபபடடவளாய, இந்து ஒடு ஏகும - சநதிரனோடு போகின்ற, மேகம எனுமபடி - மேகம (இது) என்று சொல்லுமபடி, மாகம நெடு கிரிபோலியை - உயாவான பெரியமலைபோன்ற இளைய பெருமாளை, வெளவா - வாரியெடுததுககொண்டு, உமபரின ஏகினள - ஆகாயததிற சென்றுள், நொயதினின - விரைவினில, வெய்யாள - வெமமையையுடையாளாகிய அயோமுகியானவள.

குறிப்பு —மேகம - அரககிககும, இந்து - இளையபெருமாளுககும உவமை. சநதிரனிலலா அவவிரவில இளையபெருமாளெனனுஞ் சநதிரனுல வெமமையையடைந்தாளென்பது ஈற்றடியின கருதது. (ருக)

மநதரம வேலையில வநததும வானத
திநதிர னூாபிடி யெனன லு மானுள
வெநதிறல வேலகொடு சூரடும வீரச
சுநதர னூா தரு தோகையு மொததாள.

இ - ள வேலையில் மநதரம வநததும - பாறகடலில மநதரமலைபோல வநதவளவில, வானதது - சுவாககலோகததிலிருககிற, இநதிரன—, ஊா - ஏறிச செலுததுகின்ற, பிடி என்னலும ஆனுள-பெண்யானை என்று கூறுதலும் ஆயினுள்; (பின்னா) வெநதிறல் வேலகொடு - வெவ்விய வலியினையுடைய வேலாயுததைககொண்டு, சூா அடுமே - சூரபதமாவைககொலலும, வீரம சுநதரன - ஆணமையையுடைய அழகனுகிய சுபபிரமணியககடவுள, ஊாதரு தோகையும ஒததாள - ஏறிச செலுததுகின்ற மயிலையும் போன்றுள.

குறிப்பு —மநதரம - அரககியின தலைககும, வேலை - இளஙகோவின மாாபுககும, இநதிரன் - இளஙகோவுககும, பிடி - அரக்கிககும, சுநதரன் - இளஙகோவுககும, மயில - அரககிக்கும உவமை.

கருத்து.—அரக்கி தன்கையிற் பாறகடல்போலிருந்த இளையபெருமாளின் மார்பில் மந்தரம்போன்ற தன் தலையைவைத்து அசைத்து இன்பமுறுங்காலத்தில் இளையவன் மயக்கந்தெளிந்து அவள் முதுகின்மேலேறினவுடனே அவள் இந்திரனைச் சுமக்கும் பிடியைப்போலச் சுமந்து கம்பீரமாக நடந்து பின்னர் அங்குசங்கொண்டு யானையைக் குத்துதல்போலத் தன் ஆயுதத்தாற் குத்துதற்கு ஆறுமுகனாய சுப்பிரமணியக் கடவுளோடு சூரன் போர்செய்ததுபோற் பெரும்போர்செய்து அவனை வெல்லற்கு முடியாமல் பின்பு சூரன் மயில்வாகனமாகிக் குமாரதேவரைச் சுமந்து உலகமுழுமையுஞ் சுற்றிவந்ததுபோல அவள் அவனைச் சுமந்துகொண்டு வேகமாய் ஓடினள் என்பது கருத்து (கo)

ஆங்கவண் மாரொடு கையி னடங்கிப
பூங்கழல வாரசிலை மீளி பொலிந்தான
வீங்கிய வெஞசின வீழ்மத வெமபோ
ரோங்க லுரிககு ளுருத்திர னொததான.

இ - ள் பூ கழல் வார்சிலை மீளி - அழகிய வீரக்கழலையும் நெடியவில்லையுமுடைய திண்ணியனாகிய இளையபெருமாள், ஆங்கு - அப்பொழுது, அவள் மார்பொடு கையின் அடங்கி பொலிந்தான - அவளுடைய மார்பினுங் கையினும் அடங்கி விளங்கி, வீங்கிய வெம் சினம் வீழ்மதம் வெம்போர் ஓங்கல் உரிக்குள் - மிகுந்த கொடியகோபமும் மிகுந்த மதமும் பொருந்திய கொடிய போரினைச்செய்த யானையினது உரிபட்ட தோலினுள், உருத்திரன் ஒத்தான் - உருத்திரமூர்த்தியை ஒப்பாயினன்.

குறிப்பு —உருத்திரன் - இளையபெருமாளுக்கும், ஓங்கலுரி - அரக்கிக்கும் உவமை. தனனைச் சுமந்து ஓடுவாளை வென்று மீண்டான் என்பார் 'வார்சிலை மீளி' என்றார் மீண்டும் அவளோடு பெரும்போர்செய்து வென்றும் அவளுடைய மோகனையென்னும் மந்திரத்தினது சக்தியால் மதிமயக்கம் அடைதலுற்று அவளுடைய கைக்குள் அடங்கிக் கரியவுடலிற் சாய்ந்திருந்த அவனது செம்மேனியின் தோற்றம் ஓங்கலுரிக்குள் உருத்திரமூர்த்தியிருந்ததை ஒத்திருந்ததென்க. (கக)

இப்படி யேகின ளன்னவ ளிப்பா
லப்பிடை தேடி நடந்தவெ னாவித
துப்புடை மாலவரை தோனறல னென்னா
வெப்புடை மெய்யுடை வீரன் விரைந்தான.

இ - ள் அன்னவள் இப்படி ஏகினள் - அத்தன்மையானவள் இவ்வாறு (இளையபெருமானை எடுத்துக்கொண்டு) சென்றாள், இப்பால் - இதன்பிறகு, வெப்புடை மெய்யுடை வீரன் - வெப்பத்தையுடைய உடலினையுடைய வீரனாகிய ஸ்ரீராமபிரான், அப்பு இடை தேடி நடந்த என் ஆவி-நீருள்ள இடத்தைத் தேடிச்சென்ற எனது உயிராகிய, துப்பு உடை - செந்நிறத்தினையுடைய, மாலவரை தோன்றலன் என்னா- பெரிய மலையையொத்தவன் [இலக்குமணன்] காணப்படவில்லையேயென்று கூறி, விரைந்தான் -(அவனைத் தேடும்பொருட்டு) வேகமாய்ச் சென்றான்

குறிப்பு.—துப்பு - வலிமையுமாம். சாகாப்பிணம் என்பார் 'வெப்புடை மெய்யுடை' என்றார். இலக்குமணனாகிய ஆவி நீங்கினதால் இவ்விராமபிரானது உடல் பி

ரேததளைத ஒபபாயிறறு எஙக ஈண்டு மெய என்றருச சததியமென்று பொருளகோ டல் சிறபபனறும (கஉ)

வேறு

வெயதாகிய கானிடை மேவருநீ
ரயதாதலி னுவைய லொனறுளதோ
நொயதாயவர வேகமு நொயதிலனு
லெயதாதொழி யானிது வெனனைகொலாம.

இ - ள. வெயது ஆகிய கான இடை - கொடிதாகிய கானகததில, மேவருநீா - கிடடுதற கருமையான நீராணது, அயது [ஐது] ஆதலினே - அறபமானதினுலே யோ? அயல ஒனறு உளதோ - பககததில (தடையேதாவது) ஒனறு இருககிறதோ? நொயதாய வர வேகமும நொயதிலன - சீககிரமாக வருதறகு வேகத்திலும(அவன) மெலிவிலலாதவன, எயதாது ஒழியான - வாராமற போகவுமாட்டான, இது எனனைகொல - இபபடிவாராமலிருபபதறகுக காரணம யாதோ? (கங)

நீாகணடனை யிவ்வழி நேடினைபோயச
சாாகொணடென விததுணை சாாகிலனுல
வாாகொணடணி கொஙகையைய வெளவினாபாற
போாகொணடன னோபொரு ளுணடிதென.

இ - ள இ வழி நேடினைபோய - இநத மாாககததில தேடிசசென்று, நீாகண டனை கொணடு சாா என - நீரைககணடு எடுததுககொணடு வாவென்று கூற, இது ணை சாாகிலன - இநநேரமவரையும வநதானிலலை, வாாகொணடு அணி கொஙகை யை - கசசினைககொண டலஙகரிதத முலையினையுடையாளை [சீதையை], வெளவி னாபால - அபகரிததவாகளிடததில, இது பொருள உணடு என - இதில குணமிருக கிறதெனறு கருதி, போாகொணடனனே - போாதொழிலைப பெறறுனே? (ககூ)

குறிபபு — அணிகொஙகை - அனமொழிததொகை (கச)

அஞசொறகிளி யனன வணஙகினைமுன
வஞசிதத விராவணன வெளவினனே
நஞசிறகொடி யானட லைததொழிலாற
றுஞசுறறன னோவிதி யினறுணிவால.

இ - ள அம சொல் - அழகிய சொறகளையுடைய, கிளி அனன - கிளியை ஒதத, அணஙகினை - பெணணை [சீதையை], முன - முனபு, வஞசிதத - அபகரி தத, இராவணன—, வெளவினனே - (இவனையும) அபகரிததுககொணடானே? விதியின துணிவால - ஊழவினையினது திடததாலும, நஞசில கொடியான நடலை தொழிலால - விஷததைப பாாககிலும கொடியவனாகிய அவவிராவணனது வஞச னைச் செயகையாலும, துஞசு உறறனனே - இறநதானே? (கரு)

வரிவிறகையெ னுருயிா வநதிலனுல
தருசொறகரு தேனெரு தையலையான

பிரிவுற்றனெ னென்பதோர் பீழைபெருத்து
தெரிவுற்றிட வாவி யிழந்தனனோ

இ-ள். வரிவில் கை என் ஆர் உயிர் வந்திலன் - கட்டமைந்த வில்லினை யேந்திய கையினையுடைய எனது அரிய உயிர் போன்றவன் [இலக்குமணன்] வந்தானில்லை, தரு சொல் கருதேன் - (அவன்) தந்த [சொன்ன] வார்த்தையை நினையேனாகி, யான் - நான், ஒருதையலை பிரிவு உற்றனென் என்பது - ஒப்பற்ற பெண்ணைப்பிரிந்தேன் என்பதாகிய, ஓர் பீழை பெருத்து - ஒரு துன்பம் அதிகரித்து, எரிவு உற்றிட - (என்மனத்தில்) அழற்சி யெய்தியதால், ஆவி இழந்தனனோ - உயிரை யிழந்து விட்டானோ?

குறிப்பு — ஆருயிர் - அன்மொழித்தொகை (௬௬)

உண்டாகிய காரிரு ளோடொருவென்
கண்டானயல் வேறொரு கண்ணிலனுற்
புண்டானுறு நெஞ்சு புழுங்குறுவெ
னெண்டானிலெ னெங்ஙன நாடுகெனோ.

இ-ள். உண்டாகிய - உள்ளதாகிய (அதிகரித்த), கார் இருளோடு ஒருவு என் கண் - கரிய இருளுடனே (இருளாய்) நீங்கிய எனது கண்களால், வேறு ஒரு அயல் தான் கண்ணிலன் - மற்றொரு பக்கத்தைக் குறித்தேனில்லை, புண் தான் உறு - புண் சேர்ந்த, நெஞ்சு - (எனது) மனத்தில், புழுங்கு உறுவென் - வெப்ப முறுதலை அடைவேன், எண் தான் இலென் - ஆலோசிப்பதில்லேனாயினேன், எங்ஙனம் நாடுகெனோ - எவ்வாறு தேடுவேனோ.

குறிப்பு — இனி, இரண்டாம் அடிக்கு - (ஒருவுகின்ற எனது) கண்களுக்குப் பக்கத்தில் வேறொரு கண்ணிருக்கப் பெற்றேனில்லை யென்பொருள் கூறலுமாயினும், எத்தனை கோடி கண்களிருப்பினும் அவ்விருளில் ஒளியிலதாய் விடுமென்பது தெளிதாதலின் அப்பொருள் சிறப்பிற்றன்று, ஊனவிழி ஒளியும், ஆலோசனை செய்து இன்னது செய்யலாமென்று நிர்மாணிக்கும் அறிவும் இல்லாதாகிய நான் நின்னை யெவ்வாறு தேடிக்கண்டு பிடிப்பேன் என்பது கருத்து. (௬௭)

தள்ளாவினை யேன்ற னியாருயிரா
யுள்ளாயொரு நீயு மொளித்தனையோ
பிள்ளாய்பெரி யாய்பிழை செய்தனையால்
கொள்ளாவுல குன்னை யிதோகொடிதே.

இ-ள். தள்ளா வினையேன் - விலக்கிவிட முடியாத (போத) தொழிலையுடையேனுடைய, தனி ஆர் உயிராய் உள்ளாய் ஒரு நீயும் ஒளித்தனையோ - ஒப்பற்ற அரிய உயிராகியிருக்கிற ஒருவனாகிய நீயும் ஒளித்துக்கொண்டாயோ? பிள்ளாய் - (வயதில்) இளையவனே! பெரியாய் - (அறிவில்) பெரியவனே! பிழை செய்தனை - (நீ) குற்றம் செய்தாய், இதோ கொடிது - இக்குற்றமோ கொடியது, ஆல் - ஆதலால், உன்னை —, உலகு - ஜனங்கள், கொள்ளா - அங்கீகரிக்கமாட்டார்கள்.

குறிப்பு —முனிவர்க்குக் கொடுத்தவரத்தின்படி அரக்கரைக் கொல்வது பெருங் கடனாக இருப்பதால் 'தன்னா வினையேன்' என்றார். (௬௮)

பேராவிடர் வந்தன போக்கவல்லாய்
தீராவிடர் தந்தனை தெவ்வர்தொழும்
வீராவென்னை யிங்ஙன் வெறுத்தனையோ
வாராயபுற மித்துணை வைகுதியோ.

இ - ள். பேரா - விலகாத, இடர் வந்தன - ஆபத்தாக வந்தவைகளை, போக்கவல்லாய் - விலக்கவல்லவனே! தீரா இடர் தந்தனை - (எனக்கு) நீங்காத துன்பத்தைக்கொடுத்தாய், தெவ்வர்தொழும் வீரா - பகைவர்தொழுகின்ற வீரனே! என்னை - என்னை, இங்ஙன் வெறுத்தனையோ - இவ்வாறு வெறுத்துவிட்டாயோ? இத்துணை புறம் வைகுதியோ - இந்நேரம் வரையும் வெளிப்பக்கத்தே தங்குவாயோ? [தங்கமாட்டாய்], (ஆதலின்), வாராய் - வருவாயாக. (௬௯)

என்னைத்தரு மெந்தையை யென்னையரைப்
பொன்னைப்பொரு கின்ற பொலன்குழையா
டன்னைப்பிரி வேனுள னாவதுதா
னுன்னைப்பிரி யாத வுயிர்ப்பலவோ

இ - ள். என்னை தரும் எந்தையை - என்னை யீன்றளித்த தகப்பனையும், என்னையரை - எனது அன்னையர்களையும், பொன்னை பொருகின்ற - இலக்குமிதேவியை ஒப்பாகின்ற, பொலன் குழையாள் தன்னை - அழகிய குண்டலத்தை யுடையாளையும் [சீதாதேவியையும்], பிரிவேன் - பிரிந்தேனாகிய நான், உளன் ஆவது - (உயிருடன்) இருக்கின்றேனாக முடிவது, உன்னை—, பிரியாத - நீங்காத, உயிர்ப்பு அலவோ - உயிருடைமையா லன்றோ?

குறிப்பு:—என்னை - என் அன்னை என்பதன் மரூஉ. பொன்னைப் பொருகின்ற என்றற்கு - பொன்னோடு போர் செய்கின்ற எனப் பொருள் கூறிக் குழையோடு கூட்டலுமாம். பிரிவேன் - கால வழுவமைதி. உன்னைப்பிரியாத காரணத்தால் தங்கிய உயிர்ப்பாலன்றோ என விரித்துக் கூறுக. (௭0)

பொற்றோடிவர் கின்ற பொலங்குழையா
டற்றேடி வருந்து தவம்புரிவே
னிற்றேடி வருந்த நிரப்பினையோ
வெற்றேடினை வந்த விளங்களிறே.

இ - ள். என் தேடினை வந்த இளங்களிறே- (மானின்பின்னே) என்னைத் தேடி வந்த இளமைபொருந்திய யானையையொத்தவனே! [இளையவனே!], பொன்தோடு இவர்கின்ற - பொன்னாலாகிய தோட்டினோடு காதணியானது விரும்புகின்ற, பொலம் குழையாள்தன் - அழகிய குண்டலத்தையுடையாள் தன்னை [சீதையை], தேடி—, வருந்து - துன்பமுறுகின்ற, தவம்புரிவேன் - தவத்தைச்செய்வேனாகிய நான், நின் தேடிவருந்த நிரப்பினையோ - உன்னையுந்தேடித் துன்புறும்படி (துன்பத்தை) நிறையச்செய்தாயோ?

குறிப்பு—இவர்தல் - ஏறுதலுமாம். நான் மானின்பின்னே சென்று என்னை நீ தேடிவருமாறு செய்த குற்றத்துக்குப் பதிலாக நான் உன்னைத் தேடிவரும்படி செய்தாயோ என்பது கூற்றிரண்டடியின் கருத்து. (௭௧)

இன்றேயிறவா தொழி யேனெமரோ
பொன்றுதொழி யார்புகல் வாருளரோ
வொன்றாகிய வுன்கிளை யோரையெலாங்
கொன்றாய்கொடி யாயிது வுங்குணமோ.

இ - ள். கொடியாய் - கொடியவனே! [இலக்குமணா!] புகல்வார் உளரோ - (நீயிருக்கும் இடத்தைச்) சொல்லுவார்கள் இருக்கின்றார்களோ? [இல்லை], இன்றே இறவாது ஒழியேன் - (நீ வாராவிட்டால்) இற்றைப்பொழுதே இறவாமற் போக மாட்டேன், எமரோ பொன்றுது ஒழியார் - எம்முடைய சுற்றத்தார்களோ சாகாமற் போகமாட்டார்கள், ஒன்று ஆகிய—, உன்கிளையோரை எலாம் கொன்றாய் - உனது சுற்றத்தாரை முழுதுங்கொன்றாய், இதுவும் குணமோ - இப்படிச்செய்வதும் இலட்சணமோ?

குறிப்பு—ஒன்றுதல் - ஒன்றுதலாதல், இரண்டும் ஒன்றே என்வாதல் உன் கிளை என்றது - இளையானது தாயவமிசத்தாரை. கொன்றாய் - தெளிவினையத்த கால வழுவமைதி. (௭௨)

மாந்தாமுதன் மன்னவர் தம்வழியில்
வேந்தாகை துறந்தபின் மெய்யுறவோர்
தாந்தாமொழி யத்தமி யேனுடனே
போந்தாயெனை விட்டனை போயினையோ.

இ - ள் மாந்தாமுதல் மன்னவர்தம் வழியில் - மாந்தாதா முதலான அரசர்களுடைய மரபில், வேந்து ஆகை துறந்தபின் - அரசனாதலை நீக்கியபிறகு, மெய் உறவோர் - உண்மையான சிநேகிதர்கள், தாம் தாம் மொழிய - (தனித்தனியே) அவரவர் (தடுத்துக்) கூற, (அம்மொழிகளை அங்கீகரியாமல்), தமியேனுடனே போந்தாய் - தனித்தவனான என்னோடு வந்தவனே! [இலட்சுமணா!], எனை விட்டனை போயினையோ - என்னை விட்டுப்பிரிந்து சென்றாயோ? (௭௩)

என்னாவுரை யாவெழும் வீழுமிருந்
துன்னாவுணர் வோய்வுறு மொன்றலவான்
மின்னாதிடி யாதிருள் வாய்விளைவீ
தென்னாவெனு மென்றனி நாயகனே.

இ - ள் என் தனி நாயகன் - எனது ஒப்பற்ற தலைவனாகிய ஸ்ரீராமபிரான், என்னா உரையா எழும் - (எனைவிட்டனை போயினையோ) என்று கூறி எழுவான், வீழும் - (கீழே) விழுவான், இருந்து உன்னா உணர்வு ஓய்வு உறும் - (வீழ்ந்து கிடந்த இடத்தில்) இருந்துகொண்டு நினைத்து அறிவு சோர்தலடைவான், ஒன்று அல - (அவன் நினைத்தது) ஒன்று அல்ல [அநேகம்], மின்னாது இடியாது - மின்னுதலும் ஒலித்தலில்லாமலும், இருள் வாய் விளைவு - இருள் வாய்ந்த சம்பவம், ஈது என் ஆ எனும் - இது என்ன ஆச்சரியம் என்பான்.

எனப் பொருள்கூறுக. கொல் என்பதை யசையாக்கலு மமையும். பரல்கள் நிறைந்த கானகத்தில் அவ்வரக்கர் ஓடி வீழ்ந்தெழுந்து திரிதலில் எழுகின்ற சப்தமானது பல அரக்கர்கள் ஓடித் திரிந்து படைசோத்தல்போ லிருந்ததென்க. (௭௯)

அங்கியி னெடும்படை வாங்கி யங்கது
செங்கையிற் கரியவன் றிரிக்கு மெல்லையிற்
பொங்கிரு ளப்புறத் துலகம் புக்கது
கங்குலும் பகலெனப் பொலிந்து காட்டிற்றே

இ - ள். கரியவன் - கரிய நிறத்தினையுடைய ஸ்ரீராமபிரான், அங்கு - அப்பொழுது, அங்கியின் நெடு படைவாங்கி - நெருப்பினையுடைய (ஒரு) பெரிய ஆயுதத்தை எடுத்து, அது - அவ்வாயுதத்தை, செம் கையில் - (தனது) சிவந்த கையினால், திரிக்கும் எல்லையில் - சுழற்றுகின்ற அளவில், பொங்கு இருள் - மிகுகின்ற இருளானது, அப்புறத்து உலகம் புக்கது - (இவ்வுலகத்துக்கு) அந்தப்பக்கத்திலிருக்கிற உலகத்தின்கண் புகுந்தது, கங்குலும் - இரவும், பகல் என - பகற்காலம் போல, பொலிந்து - விளங்கி, காட்டிற்று - (எதிருற்ற பொருள்களை) காண்பித்தது.

குறிப்பு — அக்கினியினது ஒளிசாரப் பெற்ற கையென்பார் 'செங்கை' என்றார். இனி, இயல்பாய செம்மைநிறம் பொருந்தியுள்ள கையென்னலுமாம். அவ்வக்கினிப்படையால் இருந்த இருள் நீங்கலும் இவனது திருமேனியின் இருளொன்றல்லாமல் வேறு இருளில்லை யென்பார் 'கரியவன்' என்றார். (௮0)

நெடுவரை பொடிபட நிவந்த மாமர
மொடிவுற நிலமக ளுலைய வூங்கெலாஞ்
சடசட வெனுமொலி தழைப்பத் தாக்குமா
முடுகினன் னிராமன்வெங் காலின் மும்மையான்.

இ - ள். இராமன் - ஸ்ரீராமபிரான், நெடுவரை பொடிபட - பெரிய மலைகள் தூளாகவும், நிவந்த மாமரம் ஒடிவு உற - உயர்ந்த பெரிய மரங்கள் ஒடிபடவும், நிலமகள் உலைய - பூமி தேவி கலங்கவும், ஊங்கு எலாம் - உவ்விடங்களெல்லாம், சடசட எனும் ஒலி தழைப்ப - சடசட என்கிற சப்தமானது அதிகரிக்கவும், வெம் காலின் மும்மையான் - கொடிய காற்றினும் மும்மடங்கு வேகத்தையுடையானாய், தாக்கும் ஆ - (பகைவரை) எதிர்க்கு மாறு, முடுகினன் - விரைந்து சென்றான்.

குறிப்பு — ஆறு - ஆ வென விகாரம் (௮௧)

ஒருங்குயர்ந் துலகின்மே லூழிப் போசியுட்
கருங்கடல் வருவதே யனைய காட்சித்தன்
பெருந்துணைத் தம்முனை நோக்கிப் பின்னவன்
வருந்தலை வருந்தலை வள்ளி யோயென்று.

இ - ள். ஊழிபோசி உள் - இறுதிநாள் எழுச்சியில், உலகின்மேல் - உலகத்தின்மேல், கரும் கடல் - கரிய நிறமுள்ள சமுத்திரம், ஒருங்கு உயர்ந்து - ஒருமிக்க வளர்ந்து, வருவதே அனையகாட்சி - வருகின்றதையே ஒத்த தோற்றத்தையுடைய,

தன் பெருந்துணை தம்முனை - தனக்குப் பெரிய உதவியான தமையனாகிய ஸ்ரீராமபி ரானை, பின்னவன் நோக்கி - இளையபெருமாள் பார்த்து, வள்ளியோய் - வள்ளலே! வருந்தலை வருந்தலை என்று - வருந்தாதீர் வருந்தாதீர் என்று கூறி, (௮௨)

வந்தனெ னடியனேன் வருந்தல் வாழிநின்
னந்தமி லுள்ளமென் றறியக் கூறுவான்
சந்தமென் றளிர்புரை சரணஞ் சார்ந்தனன்
சிந்தின நயனமவ் வந்தனைய செய்கையான்.

இ - ள். நின் அந்தம் இல் உள்ளம் - உமது முடிவில்லாத திருவுள்ளப்பாங்கி னால், அடியனேன் வந்தனென் - அடிமையாகிய நான் வந்தேன், வருந்தல் - வருந்தாதீர், என்று—, அறிய கூறுவான் - அறியும்படி கூறுவானாகி, சந்தம் - அழகுபொருந்திய, மென் தளிர் புரை - மெல்லிய தளிர்போன்ற, சரணம் - ஸ்ரீராம பிரானது திருவடிகளினிடத்து, சார்ந்தனன் - அடைந்து, சிந்தின நயனம்-(ஸ்ரீராம பிரானது) சிந்திய கண்கள், வந்தனைய - வந்தாற்போன்ற, செய்கையான் - செய லினையுடையானாயினன்

குறிப்பு—வாழி - முன்னிலையசை. (௮௩)

ஊற்றுறு கண்ணினீ ரொழுக நின்றவ
னேற்றிளங் கன்றினைப் பிரிவுற் றெங்கணு
மாற்றலி னுற்றுவ தரிதி னெய்திய
பாற்றிளம் பான்முலை யாவின் பான்மையான்.

இ - ள். ஊற்று உறு - நீரூறுவதுற்ற, கண்ணின் - கண்களினின்றும், நீர் ஒழுக நின்றவன் - சலம் வடியும்படி நின்ற ஸ்ரீராமபிரான், ஏறு இள கன்றினை - ஆ ண்மையும் இளமையும்பொருந்திய கன்றை, பிரிவு உற்று - பிரிந்து, எங்கணும் - எவ்விடத்தும், ஆற்றலின் - தேட முயல்வதில், ஆற்றுவது - உதவுவது, அரிதின் - அருமையானகாலத்தில், எய்திய - (அக்கன்றை) அடைந்த, பால் து - குணமுள்ளதா கிய, இள பால் முலை ஆவின் பான்மையான் - முற்றாத பாலுள்ள முலைகளையுடைய பசுவினது தன்மையை யுடையானாயினன்

குறிப்பு—தடைக்கத்தடைக்க நீர்பெருகுதலால் 'ஊற்றுறுகண்' என்றார். பசுவானது கன்றை யீன்றவுடன் தன் நாவினால் அக்கன்றினது உடல் முழுவதை யும் நக்கி நிற்பதுபோல ஸ்ரீராமபிரான் இளையபெருமாளுடைய உடல் முழுவதை யும் தடவினன் என்பார் 'பாற்றிளம் பான்முலை யாவின் பான்மையான்' என்றார்.

தழுவினன் பன்முறை தாரைக் கண்ணினீர்
கழுவினா னண்டவன் கனக மேனியை
வழுவினே யாமென மனக்கொ டேங்கினே
னெழுவென மலையென வியைந்த தோளினய,

இ - ள். ஆண்டு - அப்பொழுது, அவன் கனகம் மேனியை - அவ்விளைய பெருமாளுடைய பொன்போன்ற திருமேனியை, பலமுறை தழுவினன் - பலதரம்

ஆலிங்கனஞ்செய்தானுகி, தாரை - தாரைதாரையாய் வடிதலாகிய, கண்ணின் நீர் - கண்களினின்றொழுகு நீரினாலே, கழுவினன் - கழுவிய ஸ்ரீராமபிரானை, எழு என்னும் மலை என்னவும், மலை என - மலை என்று கூறவும், இயைந்த தோளினாய் - பொருந்திய புயங்களையுடையவனே! வழுவினை என - (நீ) தவறினாய் [காணாமற் போயினாய்] என்று, மனம் கொடு ஏங்கினேன் - மனத்தில் நினைத்து ஏக்கமுற்றேன்.

குறிப்பு — ஆண்டவன் என்றது - அரசனென்றேனும் கடவுளென்றேனும் பொருள்கொண்டு, கழுவின ஆண்டவனாகிய ஸ்ரீராமபிரானை, தோளினாய்! (நின்) கனகமேனியை வழுவவிட்டாய் என்மனங்கொண்டேங்கினேன் என்று சொன்னான் என்றும் கும்பிட்டு நின்றதில் புயங்களிருந்த தன்மையை நோக்கி 'எழுவென் மலையெனவியைந்த தோளினாய்' என்றான். (அரு)

என்னையங் கெய்திய தியம்பு வாயென
வன்னவ னஃதெலா மறியக் கூறலு
மின்னலு முவகையு மிரண்டு மெய்தினா
னன்னலா தொருபொரு டனக்கு மேலிலான்.

இ - ள். அங்கு எய்தியது என்னை - அவ்விடத்தில் சம்பவித்தது யாது? இயம்புவாய் - சொல்லுவாய், என - என்று (ஸ்ரீராமபிரான்) கூற, அன்னவன் - அப்படி பிரிவுற்றுநின்ற இளையபெருமாள், அஃது எலாம் - தான் ஜலத்துக்குச்சென்றது முதல் வந்து சேர்ந்ததுவரையுள்ள சங்கதி முழுவதும், அறிய கூறலும் - தெரியும்படி சொன்னவுடனே, தனக்கு தன் அலாது - தனக்குத் தன்னையல்லாமல், மேல் ஒரு பொருள் இலான் - மேலான வேறு ஒரு வஸ்துவும் இல்லாமலிருக்கிற ஸ்ரீராமபிரான், இன்னலும் உவகையும் - துன்பமும் சந்தோஷமுமாகிய, இரண்டும் - இரண்டுதன்மையும், எய்தினான் - அடைந்தான்.

குறிப்பு:—அஃது எலாம் என்றது - அரக்கியைக் கண்டதும், அவள் (தன்னை) எடுத்துச்சென்றதும், அவளை வென்றதுமாகிய விஷயங்களை. மேல்வரும் 90-வது செய்யுளால் அரக்கியின் மூக்கை யறுத்தவிஷயத்தைத் தெரிவிக்கவில்லையென்பது விளங்கல் ஆங்குக் கண்டறிக. (அசு)

ஆயவுறு பெருங்கட லகத்து ளாயவன்
பாயதிரை வருதொறும் பரிதற பாலனாந்
தீவினைப் பிறவிவெஞ் சிறையிற் பட்டயா
நோயுறு துயரென நுடங்க னோன்மையோ.

இ - ள். பெரு கடல் அகத்து - பெரிய கடலினிடத்து, ஆயவு உறு அவன் - ஆராய்தலுற்ற அம்மானுமியானவன், பாயதிரை வருதொறும் - பாய்கின்ற அலைகள் வருகின்ற பொழுதெல்லாம், பரிதல பாலன் ஆம் - பரிந்து பேசத்தகுரியனாவான்; தீவினை பிறவி - கொடிய கருமத்தால் வந்த பிறப்பாகிய, வெம் சிறையில் பட்டயாம் - கொடியசிறையிலகப்பட்ட நாம், நோய் உறு - துன்பம் சேர்கின்ற, துயர் என - கிலேசம் என்று, நினைந்து, நுடங்கல் நோன்மையோ - ஆடுதல் பெருமையோ?

குறிப்பு.—ஆய்வுறு பெருங்கடலகத்துளே யவன் எனவே மாலுமியென்றும், (பெருங்கடலகத்து) ஆயவுறு உள ஏய அவன் எனப்பிரித்து ஆராய்கின்ற மனம் பொருந்தியவனாகிய மாலுமி எனினுமாம். பரிதல - அன்போடு பேசல், இரங்கல், பரிந்து பேசல் பரிந்து பேசும்பொழுது அங்கங்களை அசையப்படும் ஆதலின் 'நடங்கல்' என்றான் நடங்கல - ஆடல், துவளல், முடங்கல மரக்கலத்திலுள்ளார் திரைகண்டஞ்சும் பொழுதெல்லாம் அவர்களை இனிய வார்த்தைகூறி, மாலுமி தேற்றுதல்போல, துணைமானுழை புலமுடையாரும் துயரெனினும் அலை ஹற்ற மாய வரும் பிறவிக் கடலகத்து எனக்கூறிக் சோழைகளை வருந்தாமற் றேற்றற் பாலரே யன்றித் தாமும் அவரோடு மனமழியற்பாலரல்லரென்பது உவமையாலுணரக்கிடந்தது (அஎ)

மூவகை யமரரு மூலக மும்மையு
மேவரும் பகையெனக் காக மேலவரி
னேவரே கடப்பவ ரெம்பி நீயுளை
யாவதே வலியினி யரணும் வேண்டுமோ

இ - ள் எம்பி - எனது தம்பியே! மூவகை அமரரும் - ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் மூன்றுகாரியங்களுக்கும் காரண தேவர்களாகிய திரிமூர்த்திகளும், உலகம் மும்மையும் - திரிலோகங்களிலுமுள்ளவர்களும், எனக்கு—, மேவரு பகை ஆக - கிட்டுதற் கருமையான பகையாக, மேலவரின் - இனிமேல் வருவாரேயானால், கடப்பவர் ஏவரே - என்னைவென்று மீள்பவர் (அவருள்) எவர்? நீ உளை ஆவதே வலி - நீ (பக்கத்தில்) இருக்கின்றாயாக முடிவதே வலிமையாகும், இனி—, அரணும் - காவலும், வேண்டுமோ—,

குறிப்பு —உலகு - ஆகுபெயர் (அஅ)

பிரிபவர் யாவரும் பிரிக பேரிடர்
வருவன யாவையும் வருக வார்கழற்
செருவலி வீரநிற் றிரு மலலது
பருவர லெனவயிற் பயிலற் பாலதோ

இ - ள. வார்கழல் செருவலிவீர - நீண்ட கழலிணையுடைய போரில வலிமை பொருந்திய வீரனே! [இளையானே!] பிரிபவர் யாவரும் பிரிக - நீங்குவார் யாவரும் நீங்கக்கடவர், பேர் இடர் வருவனயாவையும் வருக - பெரிய ஆபத்தாக வருபவை எவையும் வரக்கடவன; பருவரல - துன்பமானது, நின் நீரும் அல்லது - உன்னால நீங்கும் அலலாமல், என் வயின் - என்னிடத்தில், பயிலல் பாலதோ - பழகுதலுக்கு உரியதோ? (அகூ)

வன்றொழில வீரபோர் வலிய ரக்கியை
வென்றுபோர் மீண்டுநின் னெனவி ளம்பினை
புன்றொழி லவையவள் புகன்ற சீற்றத்தாற்
கொன்றிலே போலுமாற் கூறு வாயென்றான்.

இ - ள. வல தொழில வீர - வலிய (போர்த்) தொழிலையுடைய வீரனே! [இளையானே!] போர் வலி அரக்கியை - போர்செய்தலில் வலிமைபொருந்திய ராக்ஷஸி

யை, யென்று—, போர் மீண்டனென் என விளம்பினும் - யுத்தத்திலிருந்து மீளு தலுற்றேன் என்று கூறினும், புல் தொழில் - அற்பமான செய்கையையுடைய, அனையவன் புகன்ற சீற்றத்தால் - அத்தன்மையானவன் கூறிய கோபமொழிகளால், கொன்றிலைபோலும் - (அவனைக்) கொன்றாயில்லைபோலும், கூறுவாய் என்றான் - சொல்லாய் என்று கூறினான்

குறிப்பு—போர்வலி அரக்கி - போர்செய்தற்கு வலித்த [இழுத்த] அரக்கியு மாம். புன்றொழி லனையவன் - புன்றொழிலுக்குத் தாயாகிய அவன் எனினுமாம். ஆல் - அசை. (௬௦)

தொளைபடு மூக்கொடு செவி துமித்துக்க
தளைவயி னகிலொடு தடிந்து நீக்கிய
வளைவயிற் பூசலிட் டரற்றி னாளென
விளையவன் விளம்பினன் றிருகை கூப்பினான்.

இ - ள். இளையவன் - இளையபெருமான், தளைவயின் நகிலொடு - கட்டினிடத்திலிருக்கிற முலைகளோடு, தொளைபடு மூக்கொடு செவி - துளைபட்ட மூக்கையும் காதுகளையும், தடிந்து துமித்து உக நீக்கிய அளவையில் - அறுத்தும் வெட்டியும் சிதறி வீசும்படி நீக்கிய அளவில், பூசல் இட்டு - பெருங்கூக்குரலிட்டு, அரற்றினாள் என - அழுதாள் என்று, விளம்பினன் - சொல்லி முடித்து, இருகை கூப்பினான் - இரண்டுகரங்களையுங் குவித்து நமஸ்கரித்தான்

குறிப்பு—தளை - இளையபெருமானை அவ்வரக்கி தன்கையால் இறுகப்பிடித்த தாகியகட்டு. இனி, "கயிற்று வயக்கொடு மாசுணம் வீசு, கயிற்றினி சைத்த முலை" எனக்கீழ்க்கூறியவாறு முலைகளைப் பாம்பாகிய கயிற்றைக்கொண்டு கட்டிய கட்டு மாம். (௬௧)

தொல்லிரு டனைக்கொல்லத் தொடர்கின் றாளையுங்
கொல்லலை நாசியைக் கொய்து நீக்கினாய்
வல்லைநீ மனுமுதன் மரபி னோயெனப்
புல்லின னுவகையிற் பொருமி விம்முவான்.

இ - ள். மனுமுதல் மரபினோய் - மனு முதலாகின்ற வம்சத்திற் பிறந்தவனே! தொல் இருள் தனை கொல்ல - பழைய இருளைக் கெடுக்கும்படி, தொடர்கின்றாளையும் - (கோபாக்கினியைக் கொட்டிக்கொண்டு உன்னைத்) தொடர்ந்து வருகின்றவளையும் [அயோமுகியையும்], கொல்லலை - கொல்லாமல், நாசியை கொய்து நீக்கினாய் - மூக்கை யறுத்துத்தள்ளினாய், நீ வல்லை என - நீ வல்லமையையுடையாய் என்று கூறி, புல்லினன் - (இளையபெருமானைத்) தழுவிய ஸ்ரீராமபிரான், உவகையில் பொருமி விம்மினான் - சந்தோஷத்தால் அழுது வீங்கினான் [ஆனந்தபாஷ்பம் பொழியநின்று பூரிப்படைந்தான்]

குறிப்பு—பழைய இருளைக்கெடுக்கத் தொடர்கின்றவள் எனினும் அவள் அவ்விருளினும் மேலான புது இருள்போல்வாள் என்பதும் போதரும். தொடர்கின்றாளை யும், உம்மை - சூர்ப்பணகையைக் கொல்லாமல் நாசியைக்கொய்தது விளக்குகிறதின்

இறந்தது தழீஇய எச்சம். கொல்லலை - முற்றெச்சம். மனு - சுவாயம்புமனு. சூரியவம்சத்தரசர் கைக்கொண்ட மனுநீதியின்படி பெண்கொலை செய்யாது விட்டவனே என்பான் 'மனுமுதல் மரபினோய்' என்றான். (௧௨)

பேருந் துயரப் போந்துளோரென
வீரனுந் தம்பியும் விடிவு நோக்குவார்,
வாருண நினைந்தனர் வான நீருண்டு
தாரணித் தங்கொரு கிரியிற் றங்கினார்.

இ - ள். பேரும் - பெயர்தற்கருமையான, துயர் - துயரமானது, அற போந்துளோர் என - முற்றும் நீங்கியிருக்கின்றார்கள் *என்னும்படி, வீரனும் தம்பியும் விடிவு நோக்குவார் - ஸ்ரீராமபிரானும் இளையபெருமாளும் விடியற்காலத்தை எதிர்பார்ப்பவர்களாகியும், வாருணம் நினைந்தனர் - வருண மந்திரத்தை நினைத்து ஜெபித்தவர்களாய், வானம் நீர் - ஆகாய கங்கைப்புனலை, அங்கு தாரணித்து - அவ்விடத்தில் நிலைபெற அமைத்து, உண்டு - பருகியும், ஒரு கிரியில் தங்கினார் - ஒரு மலையில் தங்கியிருந்தார்கள்.

குறிப்பு — தாரணித்து - தாரணஞ்செய்து. வார் உண் நினைந்தனர் எனக்கொண்டு நீரையுண்ண நினைத்தவர்கள் என்றும், தார் அணி தங்கு என்றுகொண்டு பூவரும்புகள் நெருங்குதலுற்றுத் தங்கிய என்றும் பொருள்கோடலுமாம். (௧௩)

கல்லகல் வெள்ளிடைக் கானகத் துள
பல்லவ மலர்கொடு படுத்த பாயலின்
னெல்லையி றுயரினோ டிருந்து சாய்ந்தனன்
மெல்லடி யிளையவன் வருட வீரனே.

இ - ள். கல் அகல் - கற்கள் மிகுந்திருக்கின்ற, வெள்ளிடை - வெளியிலுள்ள, கானகத்து உள - காடுகளிலிருக்கிற, பல்லவம் மலர்கொடு - தளிர்களையும் புஷ்பங்களையுங்கொண்டு, படுத்த - செய்த, பாயலின் - படுக்கையில், வீரன் - ஸ்ரீராமபிரான், எல்லை இல் துயரினோடு இருந்து - அளவில்லாத கவலையுடனிருந்து, இளையவன் மெல் அடி வருட - இளையபெருமாள் (தனது) மெல்லிய திருவடிகளைத் தடவிப்பிடிக்க, சாய்ந்தனன் - படுத்துக்கொண்டான். (௧௪)

மயிலியல் பிரிந்தபின் மான நோயினா
லயில்வில் லொருபொரு ளவல மெய்தலாற்
றுயில்வில னென்பது சொல்லற் பாலதோ
வுயிர்நெடி துயிர்ப்பிடை யூசலாடுவான்.

இ - ள். மயில் இயல் - மயில்போலுஞ் சாயலையுடையாள் [சீதாபிராட்டி], பிரிந்த பின் - பிரிவுற்ற பிறகு, மானம் நோயினால் - வெட்கமாகிய பிணியினாலே, ஒரு பொருள் - ஒரு வஸ்துவையும், அயில்விலன் - உண்ணாதவனாகிய ஸ்ரீராமபிரான், அவலம் எய்தலால் - துன்பத்தை யடைவதால், துயில்விலன் என்பது சொல்லற்பாலதோ - தூக்கமில்லாதவனென்று கூறுவது சொல்லுதற்குரியதோ? நெடிது உயிர்ப்பு இடை - பெருமூச்சுக்கு மத்தியில், உயிர் ஊசல் ஆடுவான் - உயிரானது ஊசலாடப் பெறுவானாயினன்.

குறிப்பு —மயிலியல் - அன்மொழித்தொகை. உயிர்போவதும் வருவதுமாக இருந்ததால் 'ஊசலாடுவான்' என்றார் (கரு)

மானவள் மெய்யிறை மறக்க லாமையி
னானதோ வன்றெனி னரக்கர் மாயமோ
கானக முழுவதுங் கண்ணி னோக்குங்கால்
சானகி யுருவெனத் தோன்றுந் தன்மையே

இ - ள் கண்ணின் நோக்குங்கால் - கண்களால் பார்க்கும் பொழுது, கானகம் முழுவதும் - இந்தக்காடு முழுவதும், சானகி உரு என தோன்றும் தன்மை - ஜனக மகாராஜனது புத்திரியினுடைய் உருவம் போலக்காணப்படுகின்ற தன்மையானது, மானவள் மெய் - நேசமுள்ளவளது திருமேனியை, இறை - சிறிதும், மறக்கலாமையின் ஆனதோ - மறவாததன்மையினு லாயினதோ? அன்று எனில் - அல்லவென்றால், அரக்கர் மாயமோ - ராக்ஷஸர்களுடைய வஞ்சகமோ ? (கசு)

கருங்குழற் சேயரிக் கண்ணிற் கற்பினாக்
கருங்கல மருங்குவந் திருப்ப வாசையா
லொருங்குறத் தழுவுவா னொன்றுங் காண்கிலென்
மருங்குல்போ லானதோ வடிவு மெல்லவே

இ - ள். கருங்குழல் - கரியகூந்தலையுடைய, சே அரி கண்ணில் - சிவந்தவரிகள் பொருந்திய கண்களையுடையாரில், கற்பினோக்கு - கற்புடைய பெண்களுக்கு, அரு கலம் - அரிய ஆபரணம்போன்றவளாகிய சானகியானவள், மருங்குவந்து இருப்ப - பக்கத்தில் வந்திருக்க, ஆசையால்—, ஒருங்கு உற - முழுதும் பொருந்தும்படி, தழுவுவான் - ஆலிங்கனஞ்செய்ய, ஒன்றும் காண்கிலென் - ஒருசுகமும் கண்டேனில்லை, வடிவு - (அச்சானகியின்) உருவமானது, மெல்ல-சிறிது சிறிதாக, மருங்குல்போல ஆனதோ - (அவளுடைய) இடையைப்போல (இல்லையெனனும் படி) ஆயிற்றோ ?

குறிப்பு —அரிக்கண், அருங்கலம் - அன்மொழித் தொகைகள். (கஎ)

புண்டரீ கப்புது மலரிற் றேன்பொதி
தொண்டையஞ் சேயொளித் துவர்த்த வாயமு
துண்டனெ னீண்டவ ளுழைய ளல்லளாற்
கண்டுயி லன்றியுங் கனவுண் டாகுமோ.

இ - ள் புண்டரீகம் - தாமரையினது, புது மலரில் -புதிய மலர்போன்ற முகத்தில், தேன்பொதி - தேன் பொதிந்த, தொண்டை - கொவ்வைக்கனி போன்ற, அம் - அழகிய, சே ஒளி - சிவந்த ஒளியினையுடைய, துவர்த்த - பவளத்தின் தன்மையதாகிய, வாய - வாயினிடத்து, அமுது உண்டனென் - அமிர்தத்தை உண்டேன், ஈண்டு - இப்பொழுது, அவள் —, உழையள் அல்லள் - (என து) பக்கத்திலிருக்கிறவள் அல்லளாயினுள், ஆல் - ஆதலால், கண்துயில் அன்றியும் - கண்களின் நித்திரையில் அல்லாமலும், கனவு உண்டாகுமோ - கனுக்காணப்படுண்டாகுமோ ?

குறிப்பு:—புதுமலர் - அன்மொழித்தொகை. (கஅ)

மணணினும வானினு மற்றை மூனறினு
மெணணினும பெரியதோ ரிடாவந தெயதினற
றணணறுங கருஙகுழற சனகன மாமகள
கணணினு நெடியதோ கொடிய கஙகுலே.

இ-ள மணணினும வானினும மறறை மூனறினும - பூமியைபபாககிலும ஆகாயததைப்பாககிலும மறறை அபபு தேயு வாயு எனனும் மூனறு பூதஙகளைப பாககிலும, எணணினும - நினைபபைக காட்டிலும, பெரியது ஓா இடாவநது எயதினல - பெரிதாகிய ஒரு துனபம (இககஙகுலில) வநதுசேருமேயானல, தண நறு கரு குழல - குளிாசசியும மணமும கருமையும பொருநதிய கூநதலையுடைய, சனகன மாமகள - சனகமகாராஜனது அழகிய புததிரியினுடைய, கணணினும - கணகளைபபாககிலும, கொடியககுல - கொடிய இவவிரவானது, நெடியதோ - பெரியதோ?

குறிபபு —நினைபபில எவவளவு பெரிய உருவததையும நினைககமுடியுமாயினும இநத இரவு நினைததவுருவுககும மேலாயிருககுமெனபான 'எணணினும' எனறுன.

அப்புடை யலஙகுமீ னமரு மாகலி
யுபபுடை யிநதுவென றுதித்த வூழித்தீ
வெபபுடை விரிகதி விரிபப மெயயெலாங
கொபபுளம பொடிததேதா கொதிககும வானமே

இ-ள அபபு உடை அலஙகும மீன அமரும ஆகலி - சலததை உடைததுஅசைகினற மீனகள தஙகியிருககிற கடலில, உபபு உடை இநது எனறு உதிதத ஊழி தீ - உபபுதல [வீஙகுதல] உடைய சநதிரன எனறு தோனறிய வடவைககனலானது, வெபபு உடை - வெபபததையுடைய, விரிகதிா - விரிநத கிரணஙகளை, விரிப்ப - பரவசசெயவதால, கொதிககும வானம - கொதிககினற ஆகாயததில, மெய எலாம - அதன உடல முழுவதும, கொபபுளம பொடிததேதா - கொபபுளம தோனறலுறறதோ?

குறிப்பு —ஆகாயததில நடசததிரஙகள விளஙகுந தோறறததை நோககித தனககு வடவைததீப்போல விளஙகுஞ சநதிரனது வெபபததால அவவானததின உடல முழுதும கொபபுளம உறபபெறறதோ எனககருதினுா எனக. "செப்பிளங கொஙகைநீா திவகட சுடாபட்டுக, கொபபுளங கொணட குளிாவானை—எபபொழுதும, மீன பொதிநது நினற விசும்பெனப தெனகொலோ" எனறுா புகழேந்திப்புலவரும. இனி, முதலடிககு, புடை - (சநதிரனுககுப) பககததில, அலஙகு - ஒளிசெயகினற, அ மீன - அநத நடசததிரஙகள, அமரும - தஙகியிருககினறன எனறு கூறுதலும அமையும ஆகலி - அனமொழிததொகை (௬00)

இனனன வின்னன பனனி யீடழி
மனனவா மனனவன மதிம யங்கினு
னனனது கணடன னலகி னுனெனத
துனனிய செஙகதிாச செலவன ரோன்றினுன.

இ - ள். இன்னன இன்னன பன்னி ஈடு அழி - இத்தன்மையான பலவார்த்தைகளைச் சொல்லி வலிகெடுகின்ற, மன்னவர் மன்னவன் மதிமயங்கினன் - அரசர்களுக்கரசனாகிய ஸ்ரீராமபிரான் புத்திமயக்கமுற்றான், துன்னிய - நெருக்கமுற்ற, செங்கதிர் செல்வன் - செய்ய கிரணங்களையுடைய சூரியன், அன்னது கண்டனன் - (ஸ்ரீராமபிரான்) அத்தன்மையானதைக் கண்டு, அல்கினன் என - ஒளி சுருக்கமுற்றான் என்று (இரங்கி), தோன்றினன் - உதயஞ்செய்தான். (௧௦௪)

ஒன்பதாவது: அயோமுகிப் படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௯க்கு விருத்தம் ௧௧௧௬

பத்தாவது: கவந்தன் படலம்.

நிலம்பொறை யிலதென நிமிர்ந்த கற்பினா
ணலம்பொறை கூர்தரு மயிலை நாடிய
வலம்புறு பறவையு மழுவ வாமெனப்
புலம்புறு விடியலிற் கடிது போயினார்

இ - ள். நிலம் பொறை இலது என - பூமியானது பொறுமையில்லாதது என்னும்படி, நிமிர்ந்த கற்பினாள் - உயர்ந்த கற்பினையுடையாளாகி, நலம் பொறை கூர்தரு மயிலை - நன்மையும் பொறுமையும் மிகுந்திருக்கின்ற சீதாபிராட்டியை, நாடிய - தேட, அலம்பு உறு பறவையும் - மேலே எழுதலுற்ற பக்ஷிகளும், அழுவ என - அழுதலைச் செய்வனபோல, புலம்பு உறு விடியலில் - சத்தஞ்செய்கின்ற விடியற்காலத்தில், கடிதுபோயினார் - விரைவாகச் சென்றார்கள்.

குறிப்பு — ஆம் - அசை. வெட்டுதல் முதலிய கெடுதியைச் செய்வார்க்குந் தான் யாதொரு கெடுதியும் செய்யாதிருத்தலால் பூமி பொறையிற் சிறந்ததெனினும் அத்தகைய பூமியானது தனக்குக் கேடுசெய்வார்க்குத்தானும் கெடுதிசெய்ய இயலாதாகவே வலிமையில்லாதது என்றும் இச்சீதாபிராட்டியோ தனக்குக் கெடுதிசெய்தவர்க்குத் தனது கற்பின் மகிமையால் கேடுவிளைவிக்க வலிமையுடையவளாயிருந்தும் பொறை மிகுதியால் அங்ஙனமியற்றாதிருந்தாளாதலின் அப்பூமியின் பொறையினும் பிராட்டியார் பொறுமையே சிறந்தது என்பதை விளக்கவேண்டி 'நிமிர்ந்த கற்பினாள்' என்ற வாக்கியத்தை யிடைபெய்திருத்த லறிக. இனி 'பொறை' என்றற்குச் சுமையெனப் பொருள்கொண்டு அரக்கர் அழிதற் கேதுவாய் நிற்றலின் பூமிக்குச் சுமையில்லையென்னும்படி விளங்கிய கற்பினையுடையா ளென்னலுமாம்.

வேறு.

ஐயைந் தடுத்த போசனையி னிரட்டி யடவி புடைபடுத்த
வையந் திரிந்தார் கதிரவனும் வானி னுப்பண வந்துற்றான்

னெய்யுஞ் சிலைக்கை யிருவருஞ்சென் றிருந்தே நீட்டி யெவ்வுயிருங்
கையின வளைதது வயிறறடககுங் கவநதன வனததின கணணுறறா

இ - ள. எயயும சிலை கை இருவரும -(அமபுகளை) எயகினற விலலையேநதிய கரஙகளையுடைய (இராமலக்ஷமணாகள) இரணடுபேரும, ஐ ஐநது அடுதத யோசனையின இரட்டி - இருபததைநது சோநத யோசனையின இரணடு பஙகு (ஐமபது யோசனை தூரம), அடவி புடைபடுதத வையம செனறு திரிநதா - காடாகப்பக்கததிலமைநத நிலததில நடநதலைநதாாகள , கதிரவனும - சூரியனும, வானின காப பண வநது உறறன - ஆகாயததின நடுவில வநது சோநதான, இருநதே - (ஓரிடததில) இருநதுகொணடே, நீட்டி - (தன நுகைகளை) நீட்டி, எ உயிரும - எநதப்பிராணிகளையும, கையின வளைதது - (நீட்டிய அநதக)கைகளால தடுதது, வயிறறு அடககும - (தன) வயிறறில அடஙகசசெயயும, கவநதன வனததின கண உறறா - கவநதராக்ஷசனது காட்டினிடததில சோநதாாகள. (உ)

வேறு

எறுபபினங கடையுற யானையேமுத
லுறுபபுடை யுயிரெலா முலைநது சாயநதன
வெறிபபுறு நோககின வெருவு கினறன
பறிபபரு வலையிடைப பட்ட பானமைய

இ - ள. எறுப்பு இனம கடை உற - எறுமபுககூட்டஙகள ஈறாக, யானையே முதல - யானைகளே முதலாகிய, உறுபபு உடை உயிா எலாம - அஙகததையுடைய பிராணிகள அனைததும, உலைநது சாயநதன - அலைநது இளைததன, வெறிபபு உறு நோககின - மயஙகலுறற பாாவையையுடையன, வெருவுகினறன - அஞசுகினறன, பறிபபு அரு வலையிடைப்பட்ட பானமைய - பெயாததறகு முடியாத வலையினுள அகபபட்ட தனமையையுடையன

குறிபபு —எறுப்பு - வலிததல விகாரம. சாய்தல - இளைததல, "மருநதில கூறறத தருநதொழில சாயா" எனப புறப்பாட்டிலும (3) "மயினமயிற களிககுஞ சாயற சாஅய" எனச சிறுபாணாற்றுப்படை (16) வரியிலும கூறியது காணக. உலைநது சாயநதன - கெட்டு வீழநதனவுமாம. (ங)

மரபுளி நிறுததிலன புரககு மாணபில
னுரனிலா னொருவனாட டுயிாகள் போலவன
வெருவுவ சிநதுவ குவிவ விமமலோ
டிரிவன மயஙகுவ வியலபு நோககினா

இ - ள. மரபுளி நிறுததிலன் - குலமுறைமையில (பிரஜைகளை) நிலைபெறச செயயாதவனும, புரககும மாணபு இலன - (பிரஜைகளை) ரக்ஷிககும பெருமையிலலாதவனும, உரம இலான - பலமில்லாதவனுமாகிய, ஒருவன நாட்டு உயிாகள போலவன - ஒரு அரசனது தேசததில வாழும பிரஜைகளை யொபபனவாகி, வெருவுவ - பயப்படுவனவும, சிநதுவ - சிதறுவனவும, குவிவ - ஒனறாயத திரளவனவும, விமமலோடு இரிவன - ஏககததுடன ஓடுவன, மயஙகுவ - சிததஙகலஙகுவன, இயலபு - அவறறின் தனமையை, நோககினா - பாாததாாகள.

குறிபபு—மரபு - முறைமை. "பொருபுன றருஉம போக்கரு மரபில்" (சிறு பாணாற்றுப்படை 118) ஒவவொரு வருணததாரும அவரவா வருணததிறகுரிய ஒழுஙகினபடி நிறகசசெயயாதவன எனபாா 'மரபுளி நிறததிலன' எனறாா. அரசன மரபுளி நிறததாத செயலைபபோல இவன மிருகஙகளையெலலாம வெவவேறாகப பிரிககாமல ஒனறு சோததமையால புலி முதலிய கொடியமிருகஙகளைககணடு பசு முதலிய சாதுவான மிருகஙகள அஞசின எனபாா 'வெருவுவ' எனறாா. அரசன புரககு மாணபிலனாகின அவன குடிகள அவனாணையை மீறி மூலைககொருவராகச செலவதுபோல அமமிருகஙகள சென றன எனபாா 'சிநதுவ' எனறாா அரசன பலவானலலன ஆயின அவனைப பகைவா சூழவதுபோல மிருகஙகள சூழநதன எனபாா 'குவிவ' எனறாா. மரபுளி நிறததிலன புரககு மாணபில, னூரனிலா னொருவன எனபவறறோடு முறையே வெருவுவ சிநதுவ குவிவ எனபவறறைக கூட்டிப பொருளகாணக (௪)

மாலவரை யுருணடன வருவ மாமரங
காலபறிந திடுவன கான யாறுகள
மேலுள திசையொடு வெளிக ரபபன
சூலமுதிா மேகஙகள சுருணடு வீழவன.

இ-ள மால வரை உருணடனவருவ - பெரிய மலைகள உருணடு வருகின றன, மா மரம கால பறிநதிடுவன - பெரிய மரஙகள வேரோடு பறிககபபடுவன, கான யாறுகள - காட்டு நதிகள, மேல உள திசையொடு - மேலேயிருககினற திககாகிய ஆகாயததோடு, வெளி கரபபன - வெறறிடததை மறைப்பன, சூல் முதிா மேகஙகள - கருபபம முறறுதலுறற (காா) மேகஙகள, சுருணடு வீழவன - சுழனறு வீழ்கின்றன.

குறிப்பு —இனி, மால்வரை யுருணடனபோலும வருவனவாகிய மாமரஙகளைக காலபறிததிடுவனவாகிய கானயாறுகளும, மேலுள திசையொடு வெளி கரபபனவாகிய சூன முதிாமேகஙகளும சுருணடு வீழவனவாயின எனறு பொருளகோடலுமொனறு கீழககவியிற கூறிய பிராணிகளை உணவாகவும கானயாறுகளையும மேகஙகளையும உடகொளளும நீராகவும கொளக. சூலமுதிா - எதுகைநோககி யியலபாயிறறு.

நாறறிசைப பரவையு மிறுதி நாளுறக
காறறிசைத தெழவெழுந துலகைக காலபரந
தேறறிசைத துரநதுவந திடுங்கு கினறன
போறறிசை சுறறிய கரததுப புககுளாா

இ-ள். இறுதி நாள உற - யுகமுடிவு காலமடையுமபடி, நால திசை பரவையும - நானகு திசையிலு மிருககிற கடலகளும, காறறு - (கையை வீசுவதாலெழுநத) காறறினாலே, இசைதது எழ - ஒலிதது எழுமபுமபடி, எழுநது - எழுதலுறறு, கால பரநது - பரவுதலுறறு, உலகை எறறு - உலகிலுள்ள பிராணிகளைப பெறறுககொணடு, இசை துரநது வநது - அப்பிராணிகள கூடி நிறறலினினறும ஓட்டிவநது, இடுஙகுகினறனபோல - ஒடுஙகுகினறனபோல, திசைசுறறிய - திககுககளை வளைதத, கரதது - (கவநதராககூஸனது) கைகளில, புககுளாா - (ஸ்ரீராமலக்ஷமணாகள) புகுநதிருககிறாாகள.

குறிப்பு — உலகு - ஆகுபெயர். கால் - உபசருக்கம். இசை - முதனிலைத் தொழிற்பெயர்.

கருத்து — இது ஊழிக்காலமே என்னும்படி கடல்கள் எல்லாம் தன் கையை வீசுவதால் எழுங்காற்றால் எழும்பும்படி தனது கைகளைப் பரவலாக எழும்பச்செய்து உலகிலுள்ள பிராணிகளெல்லாம் தன் கைக்குள் அடங்கும்படி கை நீட்டிக் கோத்துப்பெற்றுக்கொண்டு கைகளை மடக்கி அக்கைகளின் இசைப்பினின்றும் அப்பிராணிகளை ஓட்டிவந்து வாய்க்கு அருகே நெருங்கச்செய்கின்ற கவந்தனது கைக்கோவைக்குள் புகுந்தார் என்பது கருத்து. (௬)

தேமொழி திறத்தினா லரக்கர் சேனைவந்
தேமுற வளைந்ததென் றுவகை யெய்தினார்
நேமிமால் வரைவர நெருக்கு கின்றதே
யாமென லாயகைம் மதிட்கு ளாயினார்.

இ - ள். தேம் மொழி - தித்திக்குஞ் சொல்லவளாகிய சீதாபிராட்டியினது, திறத்தினால் - காரணத்தினால், அரக்கர்சேனை - இராக்கதர் படையானது, ஏமுற - (கண்டவர்) மயங்கும்படி, வந்து வளைந்தது என்று - வந்து சுற்றியது என நினைத்து, உவகை எய்தினார் - மகிழ்ச்சியடைந்த ஸ்ரீராமலக்ஷ்மணாகள், நேமிமால்வரை - சக்கரவாளமாகிய பெரியமலையானது, வர நெருக்குகின்றது - வரவர நெருங்கச்செய்கின்றது, ஆம் - ஆகும், எனல் ஆய - என்று கூறுதற்காகிய, கைம்மதிட்குள் ஆயினார் - (கவந்தனது) கைகளாகிய (சுற்றுச்) சுவர்க்குள்ளானார்கள்.

குறிப்பு — "ஏமுறல் - மயங்குறல்" "ஏமுறு ஞாலந் தன்னிற் றோன்றி" (திருமுருகாற்றுப்படை 163) (௭)

இளவலை நோக்கின னிராம னேழையை
யுளைவுசெ யிராவண னுறையு மூருமிவ்
வளவைய தாகுத லறிதி யையநங்
கிளர்பெருந் துயரமுங் கீண்ட தாமென

இ - ள். இராமன் —, இளவலை நோக்கினன் - இளையபெருமாளைப் பார்த்து, ஐய - ஐயனே, ஏழையை - ஜானகியை, உளைவுசெய் - துன்பம் செய்த இராவணன் —, உறையும் ஊரும் - வசிக்கின்ற நகரமும், இ அளவையது ஆகுதல் அறிதி - இந்த எல்லையையுடையது ஆதலை யறிவாயாக, (ஆதலின்) நம - நம்முடைய, கிளர் பெருந்துயரமும் - பெருகுகின்ற பெரிய துன்பமும், கீண்டது ஆம் என - கிழிந்தது (ஒழிந்தது) ஆகும் என்று கூற (௮)

முற்றிய வரக்கர்த முழங்கு தானையே
யெற்றிய முரசொலி யேயங் கீங்கிசை
பெற்றில தாகலிற் பிறிதொன் றாமெனச்
சொற்றன னிளையவன் றொழுது முன்னினன்.

இ - ள். இளையவன் - (அதுகேட்ட) இளையபெருமான், முற்றிய அரக்கர்தம் முழங்கு தானையேல் - வளர்ந்த ராக்ஷதர்களது காச்சனையிடுகின்ற சேனையாயின், முரசு எற்றிய ஒலி - பேரிகைகளையடித்த சப்தமும், எங்கும் சங்கு இசை - ஒலிக்கின்ற சங்கநாதமும், பெற்றிலது - அடைந்திருக்கவில்லை, ஆகலின் - ஆகையினாலே, பிறிது ஒன்றும் என் - வேறு (யாதாயினும்) ஓர் பொருளாக விருக்கலாமென்று, தொழுது சொற்றனன் - (ஸ்ரீராமபிரானை) வணங்கிச்சொல்லி, முன்னினன் - (இது யாதாயிருக்கலாமென்று) கருதினானென்க. (௯)

தெள்ளிய வமுதெழத் தேவர் வாங்கிய
வெள்ளெயிற் றரவுந்தான் வேறோர் நாகந்தான்
றள்ளரு வாலொடு தலையி னுலவளைத்
துள்ளுறக் கவர்வதே யொக்கு மூழியாய்

இ - ள். ஊழியாய் - யுகமுடிவிலும் அழியாமலிருப்பவனே! தெள்ளிய - தெளிவான, அமுது எழ - அமிர்தம் எழும்படி, தேவர் வாங்கிய - தேவர்கள் இழுத்த, வெள் எயிற்று அரவும் - வெண்மையான பற்களையுடைய (வாசுகி என்னும்) பாம்பு, (அல்லது) வேறு ஓர் நாகம் - பிறிதொரு பாம்பு, தன் அருவாலொடு தலையினால் வளைத்து - நீங்குதற்கரிய வாலினோடு தலையினாலே வளைத்துக்கொண்டு, உள் உறக் கவர்வதே ஒக்கும் - (தன்) உள்ளே (எல்லாப்பொருள்களும்) அடையும்படியாகக் கொள்ளைகொள்ளுதலையே யொத்திருக்கின்றது. (௪0)

குறிப்பு — தான் தான் - அசைகள்

என்றிவை விளம்பிய விளவல் வாசகந்
நன்றென நினைந்தன னடந்த நாயகன்
ஒன்றிரண் டியோசனை யுள்புக் கோங்கல்
னின்றென விருந்தவக் கவந்த னோர்சென்றார்.

இ - ள். என்று - என்பதாக, இவை விளம்பிய - இச்சொற்களைக் கூறிய, இளவல் வாசகம் - இளையோனது வாக்கியத்தை, நடந்த நாயகன் - நடந்துவந்த ஸ்ரீராமபிரான், நன்று என நினைந்தனன் - நல்லதென்று நினைத்தான், ஒன்று இரண்டு யோசனை உள் புக்கு - (பிறகு இருவரும்) மூன்று யோசனை தூரம் (அக்காட்டினுள்) நுழைந்துபோய், ஓங்கல் நின்றென இருந்த - மலை நின்றதுபோல இருந்த, அக்கவந்தன் நேர் சென்றார் - அந்தக்கவந்த ராக்ஷஸனுக்கு எதிரில் போயினார்கள்.

வெயிற்சுட ரிரண்டினை மேரு மால்வரை
குயிற்றிய வாமெனக் கொதிக்குங் கண்ணினன்
எயிற்றிடைக் கிடையிரு காத மீட்டிய
வயிற்றிடை வாயெனு மகர வேலையான்.

இ - ள். வெயில் சுடர் இரண்டினை - பிரகாசமுள்ள சூரியனிரண்டை, மேரு மால் வரை - மகமேருவாகிய பெரிய மலையில், குயிற்றிய என - பதித்தனபோல, கொதிக்கும் கண்ணினன் - வெப்பத்தைத்தரும் கண்களையுடையான், வயிற்றிடை - உதரமத்தியில், எயிற்று இடைக்கிடை இருகாதம் ஈட்டிய - பற்களுக்கு மத்தியில

மத்தியில் இரண்டுகோத் தூரந் தொகுத்திருக்கிற, வாய் எனும் - வாய் என்கிற, மகர வேலையான - சுறாமீன்களையுடைய சமுத்திரத்தை யுடையவன்.

குறிப்பு —இவனது தந்தங்கள் சுறாமீன்களைப்போலப் பருத்து நீண்டிருப்பதாலும், வாய் சமுத்திரம்போல அகன்றிருப்பதாலும், 'வாயெனும் மகர வேலையான்' என்றார். (௧௨)

ஈண்டிய புலவரோ டவுண ரிந்துவைத்
தீண்டிய நெடுவரைத் தெய்வ மத்தினைப்
பூண்டியா வடமிரு புடையும் வாங்கலி
னீண்டெனக் கிடந்தன நிமிர்ந்த கையினான்.

இ - ள் ஈண்டிய - கூட்டமான, புலவரோடு அவுணர் - தேவர்களோடு அசுரர்கள், இந்துவை தீண்டிய - சந்திரனைத்தொட்ட, நெடுவரை - பெரியமலையாகிய, தெய்வ மத்தினை - தெய்வத்தன்மை பொருந்திய (மந்தரமாகிய) மத்தினிடத்தில், பூண்டு - பொருந்தலுற்று, உயா வடம் - நீண்டகயிறாகிய வாசுகி என்னும் பாம்பை, இரு புடையும் வாங்கலின் - இரண்டு பக்கத்தும் இழுத்தலால், நீண்டென - (அப்பாம்பு) நீட்சியுற்றதுபோல, கிடந்தன - இருந்தனவாகிய, நிமிர்ந்த கையினான் - வளர்ந்த கைகளையுடையவன்.

குறிப்பு —மத்தினை - வேற்றுமைமயக்கம். மந்தரமத்தில் பொருந்தப்பட்ட வடம் எனவே வாசுகி எனப்பது போதரும். மந்தரமாகிய மத்துக்கு ஆதாரமாகச் சந்திரனைத் தம்பமாக நிறுத்தியதால் 'இந்துவைத் தீண்டிய' என்றனர். "உம்பரானவர் தானவருடனக் கடைந்திடவே, தம்ப மானது மன்றி .. " என வரும் பாரதச் செய்யுளானு முணர்க. (௧௩)

தொகைக்கனற் கருமகன் றுருத்தித் தூம்பெனப்
புகைக்கொடிக் கனலொடு பொடிக்கு மூக்கினான்
பகைத்தகை நெடுங்கடற் பருகும் பாவகன்
சிகைக்கொழுந் திதுவெனத் திருகு நாவினான்.

இ - ள் தொகை கனல் - கூட்டமான அக்கினியில், கருமகன் துருத்தி தூம்பு என - கொல்லனது உலைத்துருத்தியினது துவாரம்போல, கொடி கனலொடு - நீண்ட நெருப்புடன், புகை - புகையை, பொடிக்கும் மூக்கினான் - பிறப்பிக்கின்ற மூக்கினையுடையான், பகை தகை - விரோதத்தன்மையையுடைய, நெடு கடல் - பெரிய சமுத்திர நீரை, பருகும் பாவகன் - குடிக்கின்ற ஊழித்தீயினது, சிகை கொழுந்து இது என - சுவாலையினது இளங்கிளை இஃதென்று (சுட்டி) யுரைக்கும்படி, திருகு நாவினான் - திருப்புகின்ற நாக்கையுடையான்.

குறிப்பு —கருமகன் - கருமான். நீரும் தீயுமொன்றற்கொன்று இயற்கை விரோதத்தன்மையுடையன ஆதலின் 'பகைத்தகை நெடுங்கடல்' என்றார். (௧௪)

புரண்டுபோம் பிறைவர வெருவிப் புக்குறை
யரண்டனை நாடியோ ரருவி மால்வரை

முரணடொகு முழைநுழை முழுவெண டிஙகளை
யிரணடுகூ றிடடென விலஙகெ யிறறினை

இ - ள புரணடு - புரளுதலுறற, பாயபு -(இராகுவெனனும) சாபபமானது, இடை வர - பககததில வர, (அதனால), வெருவி - பயநது, புககு உறை அரண தனை நாடி - புகுநது வசிககுங கோடடையைததேடி, ஓர - ஒபபறறதும, அருவி - அருவி நீரொழுககபபெறறதும, மால-கருமையையுடையதும (ஆகிய), வரை-மலையில, முரண தொகு - (ஒருதனமையில) அமையாமை சோநத, முழை நுழை - குகையில செலகினற, முழுவெள திஙகளை - வெளளிய பூரணசநதிரனை, இரணடு கூறு இடட என - இரணடுபாகம செயததுபோல, இலஙகு - பிரகாசிககினற, எயிறறினை - வசுகிரதநதஙகளையுடையான

குறிபபு —வளைநதுவரும கரததுககுக கரிய இராகுவையும, உடலுககுக கரிய மலையையும, வாயககுக குகையையும, அவவாயிலிருநதுவரும சலததுககு அருவியையும, உவமிததுக குமபபால அசுரவநதனது கை உடல வாய முதலியவறறை வருணிததார எனக. வாயானது குகைபோனறு ஒரே நிலையிலிராமல மூடியும, திறநதும, சுருஙகியும, அகனறும இருததலால 'முரணடொகு' எனனும அடைதநதாரெனக 'முழுவெணடிஙகளை' எனறகு, முழுதும வெணணிறமமைநத அதாவது களஙகமிலலாத சநதிரனையெனககூறி இலபொருளுவமை எனனினு மமையும

ஓதநீர மணணிவை முதல வோதிய
பூதமோ ரைநதினிற பொருநதிற றனறியே
வேதநூல வரனமுறை விதிககு மபபெரும
பாதகந திரணடுயிர படைதத பணபினான

இ - ள ஓதம நீர - குளிரசசிபொருநதிய கடலும, மண - பூமியுமாகிய, இவை முதல - இவைகள முதலாயுளள, ஓதிய - சொலலிய, பூதம ஓர ஐநதினில - பூதஙகள ஒரு ஐநதினிலும, பொருநதிறறு அனறி - பொருநதினது அலலாமல, வேதம நூல - வேதசாஸதிரஙகள, வரனமுறை - ஒழுஙகாக, விதிககும - கூறுகினற, அ பெரு பாதகம - அநதபபெரிய கொடுமபாவஙகளானவை, திரணடு - திரளுதலுறறு [ஒருருககொணடு], உயிர படைதத - உயிரையடைநத, பணபினான - தனமையையுடையான

குறிபபு —ஓதம - திரையுமாம உடலின பெருமை விளஙகப் பஞ்சபூதஙகள ஒனறு படடுத தோனறுங காடசியையும, அவவுடலின கருமையும கொடுஞசெயகையும விளஙகப பாதகஙகளின திரடசியையும கூறினார வரனமுறை - வரலாறு.

வெயயவெங கதிரகளை விழுஙகு வெவவராச
செயதொழி லிலதுயில செவியின றொளளையான
பொயகிளர வனமையிற புரியும புனமையோர
வயகுறு நரகையு நகுமவ யிறறினான

இ - ள. வெயய வெஙகதிரகளை - கொடிய வெமமை பொருந்திய கிரணஙகளையுடைய சூரியரகளை, விழுஙகு - விழுஙகுகினற, வெம அரா - கொடிய பாம்பா

னது, செய்தொழில் இலை - (தான்) செய்கின்ற தொழில் இல்லாமல், துயில - தூங்குகின்ற, செவியின் தொளையான் - செவித் துவாரத்தையுடையவன், இளாவன்மையில - மிகுந்த வல்லமையில், பொய்புரியும் - பொய் சொல்லுதலை விரும்புகின்ற, புன்மையோர் - அற்பர்கள், வய்கு உறு - வைகலுறுகின்ற [தங்குகின்ற], நரகையும் - நரகத்தையும், நகும் வயிற்றினன் - இகழ்ச்சிசெய்கின்ற வயிற்றினையுடையான்

குறிப்பு —வெய்ய வெங்கதிர்கள் என்றகு - வெய்யகதிரையுடைய சூரியனும் விரும்பத்தக்கதான கதிரையுடைய சந்திரனுமாகிய இருசுடர் என்னலுமமையும் அரா - ராகு கேது வென்னும் பாம்புகள் இவ்வரக்கனது கண்கள் கோபமுற்ற காலத்துக் கொதிக்கின்ற சூரியர்களைப் போலவும், கோபமற்ற காலத்துக் கண்களும் தூய்மையும் பொருந்திய சந்திரனைப்போலவும் விளங்கு மென்பதும், அக்கண்களை மூடித்திறக்கின்ற இமைகளில் மயிருள்ள பாகம் செந்நிறம் பொருந்திய கேது போலவும், மற்றைப்பாகம் கரிய நிறம்பொருந்திய ராகு போலவும் காணப்படுமென்பதும் அக்கண்களைச் சூரிய சந்திரர் என்று கருதிவந்த ராகு கேது வென்னும் பாம்புகள் இமைகள் மூடித்திறக்கும் செயலைக்கண்டு முன்னரே தம் போன்ற வேறு பாம்புகள் வந்திருப்பதால் அவை நீங்கிய பின்பு தம் தொழிலைச்செய்யலாமெனக் கருதிக் காதுகளில் படுத்துத்தூங்கிக் கொண்டிருந்தன வென்பதும், அக்காதுகளின் துவார மிகப்பெரி தென்பதும் விளங்க 'வெய்யவெங் கதிர்களை விழுங்கு வெவ்வராச், செய் தொழி லிலதுயில் செவியின் றொளையான்' என்றார் மெய்யென நினைக்குமாறு சாமர்த்திய மாகப் பேசுவார் என்பார், 'இளாவன்மையில' என்றார் "பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால், மெய்போ லும்மே மெய்போ லும்மே" என்பதனை நோக்கற்பாலது இக்கொடிய அரக்கனது வயிறுக்குப்பொய் பேசுதலை விரும்புவார் அடையும் நரகத்தை உவமை கூறவே பொய் பேசுதலால் அடையும் நரகத்தின் கொடுமை யளவற்றதென்பதுணர்க "இம்மை நலனழிக்கு மெச்சங் குறைபடுக்கு, மம்மை யருநரகத் தாழ்விக்கு—மெய்ம்மை, யறந்தேயும் பின்னு மலாமகளை நீக்கு, மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய்" என்றார். "சிறுபஞ்சமூலத்தில்." (௧௭)

முற்றிய வுயிரெலா முருங்க வாரித்தன்
பற்றிய கரத்தினன் பணைத்த பண்ணையிற்
றுற்றிய புகுதரு தோற்றத் தாலயமன்
கொற்றவாய் தற்செயல் குறித்த வாயினன்.

இ - ள் முற்றிய உயிர் எலாம் - முடிவான பிராணிகள் எல்லாவற்றையும், முருங்க - அழியும்படி, வாரி - அள்ளி எடுத்து, பணைத்த பண்ணையில - பருத்த படகைப்போல, பற்றிய - பிடித்த, கரத்தினன் - கரங்களையுடையானாகி, துற்றிய - உண்ண, புகுதரும் தோற்றத்தால் - (அவைகள்) புகுகின்ற காட்சியால், யமன் - நமனது, கொற்றம் வாய்தல் - வெற்றிபொருந்திய வாசலினிடத்து, செயல் - செய்யப்படுஞ் செய்கையில், குறித்த - மதித்த, வாயினன் - வாயினையுடையவன்

குறிப்பு —இவ்வரக்கன்கரத்தில் அகப்பட்ட பிராணிகட்கு முடிவுகாலமல்லது பிறிதில்லையென்பார் 'முற்றிய வுயிரெலாம்' எனவும், 'யமன் கொற்றவாய் தற்செயல்' எனவுங் கூறினார். (௧௮)

ஓலமா கடலென முழங்கு மோதையா
ஞாலமே யெனவிருண் டழன்ற வாக்கையா
னீலமா னேமியிற் றலையை நீக்கிய
காலநே மியிற்பெருங் கவந்தக் காட்சியான்.

இ - ள் ஓலம் ஆர் கடல் என முழங்கும் ஓதையான் - ஒலிநிறைந்த கடல் போலப் பேரொலி செய்கின்ற ஓசையையுடையவன், ஞாலமே என இருண்டு அழன்ற ஆக்கையான் - (இது) விடமேதான் என்று கூறும்படி இருள்நிறங்கொண்டு வெப்பங்கொண்ட உடலையுடையவன், நீலம் மால் - நீலநிறத்தினையுடைய திருமால், நேமியில் - சக்கராயுதத்தால், தலையை நீக்கிய - சென்னியை வெட்டி நீக்கப்பட்ட, காலநேமியில் - காலநேமி என்னும் பெயரினையுடையானைப்போல, பெரு - பெரிய, கவந்தம் காட்சியான் - உடற்குறையின் தோற்றத்தையுடையவன்

குறிப்பு — திருமால் சக்கரத்தால் தலை யறுபட்ட காலநேமி யென்பானது சரித்தம் பாகவதத்தாற் றெளிக. கவந்தம் - தலையற்ற உடல் (௧௬)

தாக்கிய தண்டப்பிலாக் காலெறியத் தன்னுடை
மேக்குயர் கொடுமுடி யிழந்த மேருநே
ராக்கையி னிருந்தவன் றன்னை யவ்வழி
நோக்கின ரிருவரு நுண்ணங்கு கேள்வியார்.

இ - ள் தாக்கிய - போர்செய்த, தண்டப்பு இல் - நீங்காத, கால் - வாயுதேவன், எறிய - (பறித்து) வீசியதால், தன் உடை - தன்னுடைய, மேக்கு உயர் கொடுமுடி இழந்த - மேலே உயர்ந்திருக்கிற சிகரத்தை இழந்துவிட்ட, மேரு நேர் ஆக்கையின் இருந்தவன் தன்னை - மேருமலையை ஒப்பாகின்ற உடலையுடையவனாக இருந்த கவந்த ராக்ஷஸனை, அ வழி - அவ்விடத்தில், நுண்ணங்கு கேள்வியார் இருவரும் நோக்கினார் - நுட்பமான கேள்விகளையுடையவர்களாகிய (ஸ்ரீராமலட்சுமணர்கள்) இருவரும் பார்த்தார்கள்

குறிப்பு — வாயுதேவனும் ஆதிசேஷனும் தத்தம் பலாபலம் அறிதற்குச் சூழ்ற்ற ஆதிசேஷன் மேருமலைமேலே படத்தை விரித்துமூட வாயுதேவன் விசையாயடித்துமலையின் சிகரங்களைப் பறித்தெறிந்தான் என்பது வாயுசங்கிதையிற்காண்க.

நீர்புகு நெடுங்கட லடங்கு நேமிசூழ்
பார்புகு நெடும்பகு வாயைப் பார்த்தனர்
சூர்புக லரியதோ ரரக்கர் தோன்மதி
யூர்புகு வாயிலோ விதுவென் றுன்னினார்

இ - ள் நீர் புகு - யாறுகள் (வந்து) புகுகின்ற, நெடு கடல் - பெரியகடலானது, அடங்கு - (தன்னுள்) அடங்கியிருக்கிற, நேமி சூழ் - வட்டவடிவு சூழ்ந்திருக்கிற, பார் புகு - பூமிமுழுதும் புகுகின்றதற்கேற்ற, நெடு பகு வாயை பார்த்தனர் - பெரிய பிளவுற்ற (கவந்தனது) வாயைப்பார்த்த ஸ்ரீராமலட்சுமணர்கள், இது—, சூர்புகல் அரியது - அச்சமென்பது புகுதற்கருமையானதாகிய, அரக்கர் - ராக்ஷஸர்

களுடைய, தொல் ஓர் மதில - பழமையான ஒப்பறற மதிலையுடைய, ஊர் புகு வா யிலோ என்று-ஊருக்குட் போகிற வாசலோ என்று, உன்னினார் - நினைத்தார்கள்

குறிப்பு—புகுதல - உடசெலலுதல. நேமி - சககரவாளகிரி எனனுமாம (உக)

அவவழி யிளையவ னமாநது நோககிய
வெவவிய தொருபெரும பூதம விலவலாய
வவவிய தனகையின வளைதது வாயபபெயுஞ
செயவதெ னிவணெனச செமமல சொலலுவான.

இ - ள. அ வழி - (வாயிலோ என்று உன்னிய) அநத வழியை, இளையவன- இலட்சுமணப்பெருமான, அமாநது நோககிய - கூாநது பாாகக, விலவலாய் - வில வில வலலவரே! வெவவியது - கொடியதாகிய, ஒரு பெருமபூதம - ஒரு பெரிய பூத மானது, தனகையின வளைதது - தனது கரததினால தடுதது, வவவிய - வாரிய பிரா ணிகளை, வாய பெயும - (தனது) வாயிலிடுகின்றது, இவண - இவவிடததில, செயவது என் என - செயயவேணடிய காரியம யாது? என்று வினவ, செமமல - எபபொருட்கு மிறைவனாகிய ஸ்ரீராமபிரான, சொலலுவான - கூறுவான

குறிப்பு—அமாநது நோககிய இளையவன, எனக கூட்டி யுரைபபினு மமையும

பாரிட மேயிது பரவை சுறறுறும
பாரிட மரிதெனப பரநத மெயயது
பாரிடம வலமவரப பரநத கையது
பாரிடந தெடுததமா வனைய பாழியாய

இ - ள பாா இடநது எடுதத - புவியைததோணடி யெடுதத, மா அனைய - வராகமூாததியை ஒதத, பாழியாய - பெருமையுடைய இலககுமணா, இது பாரிட மே - இது பூதததான, பரவை சுறறு உறும - கடலசூழநத, பாா இடம அரிது என- வியில இடம இலலை என்று சொலலுமபடி, பரநத மெயயது - பெரியதேகததை யுடையது, இடம வலம வர பரநதகையது - உலகததை வலம வருமபடியாக நீண டகைகளையுடையது, பாா - பாாபபாயாக.

குறிப்பு—இடம எனபது - உலகம எனனும பெயரளவாய நினறது வலம வரல - பிரதட்சணம. இனி, மூன்றாம அடியிலகண உளள பாா எனபதைப பூமி எனவும, இடம எனபதை இடதுபகக மெனவும கொணடு பாரினை அபபிரதட்ச ணமாகவும பிரதட்சணமாகவும சுறறிவருகினற பரநதகையது எனனலுமாம (உரு)

தோகையும பிரிநதன ளெந்தை துஞசினன
வேகவெம பழிசுமந துழல வேணடலே
ளுகலின யானினி யிதனுககாமிட
மேகுதி யீணடுநின றிளவ லேயெனறான்.

இ - ள இளவலே - இளையவனே ! தோகையும பிரிநதனள - மயிலபோல் வாளும [சீதையும] பிரிநது போனாள, எநதை துஞசினன - எனது தநதையாகிய

சடாயுவும் இறந்து போனான், வேக - (மனம்) வேகும்படி, வெம்பழி சுமந்து - கொடிய பழியைச் சுமந்துகொண்டு, உழல வேண்டலேனாயான் - அலைந்து திரிதற்கு விரும்பினேன் அல்லேனாகிய நான், இனி—, இதனுக்கு - இப்பூதத்துக்கு, ஆகலின் - (இரை) ஆதலால், ஈண்டு நின்று - இவ்விடத்திலிருந்து, ஆம் இடம் ஏகுதி என்றான் -(உய்தற்குத்தக்கது) ஆகிய இடத்தினைச் செல்வாயாக என்று கூறினான்.

குறிப்பு —தோகை - ஆகுபெயர், உம்மை - இறந்தது தழீஇய எச்சவும்மை உயர்வு சிறப்புமாம். வேக என்பதை - வேகம் எனக்கொண்டு பழிக்கு அடைமொழியாக்கிப் புவியிற் பரவுதலில் வேகமான என்று பொருள் கோடலுமமையும் (௨௪)

என்றவ ரிடர்ப்பட வெம்பி துன்புறச்
சான்றவர் துயருறப் பழிக்குஞ் சார்வுமாய்த்
தோன்றலி னென்னுயிர் துறந்த போதலா
லூன்றிய பெரும்பழி துடைக்க வொண்ணுமோ

இ - ள் என்றவர் இடர்ப்பட - பெற்றோர்கள் துன்பப்படவும், எம்பி துன்புற - எனது தம்பியாகிய பரதன் துன்பத்தையடையவும், சான்றவர் துயர் உற - அறிவின் மிக்கோர்கள் விசாரத்தை யடையவும், பழிக்கும் சார்வும் ஆய - பழிக்கும் இடமுமாகி, தோன்றலின் -(நான்) பிறந்ததால், என் உயிர் துறந்த போது அலால் - எனது உயிர் நீங்கிய பொழுதிலல்லாமல், ஊன்றிய பெரு பழி - நிலைபெற்ற பெரிய அப்பழியை, துடைக்க ஒண்ணுமோ - நீக்குதற்கு முடியுமோ? ()

இல்லியல் புடையநீ ரளித்த வின்சொலாம்
வல்லிய வரக்கர்தம் மனையு ளாளெனச்
சொல்லினன் மலையெனச் சுமந்த தூணியென்
வில்லினென் செல்வெனோ மிதிலை வேந்தன்பால்

இ - ள் இல் இயல்பு உடைய நீ அளித்த இன்சொல் ஆம் வல்லி - இல்லறத்துக்குத் தகுதியுடைய குணங்களைக் காத்த இனிய சொல்லினையுடையாளாகிய கொடிபோல்வாள், அவ் அரக்கர் தம் மனை உளாள் என சொல்லி - அந்த ராக்ஷஸர்களுடைய வீட்டிலிருக்கிறாள் என்று சொல்லிக்கொண்டு நல மலை என சுமந்த - நல்ல மலைகள் என்று சொல்லும்படி தாங்கிய, தூணி என் வில்லினென் - தூணீரங்களையுடையேனும் வில்லினையுடையேனுமாகி, மிதிலை வேந்தன்பால் - மிதிலாபுரிக்கு அரசனாகிய ஜனகமகாராஜனிடத்து, செல்வெனோ - போவேனோ?

குறிப்பு —சீதாபிராட்டி தன்னிடத்துள்ள இல்லறத்துக்குரிய மேலான குணங்களைப் பிறர்க்குக் கற்பித்து அக்குணங்கள் எங்கும் விருத்தியுறச்செய்யும்படி பாதுகாக்கும் அரசி என்பார் 'அளித்த இன்சொல்', என்றார் இனி, இல் - என்மனைவியான இயல்புடைய நீ -(பிறர் கற்பியாமற் பிறவிதொட்டு) இயல்பாகவுடைய குணங்களையும், அளித்த இன்சொல் - இனிமையைக்கொடுத்த சொற்களையுமுடையாள் எனலுமாம். பின்னும், நீ அளித்த என்றது - நீ (எனக்குத் தாரை வார்த்துத் தத்தஞ்செய்து) கொடுத்த என்றும், வல்லியவரக்கர் என்றது - புலிகளாகிய ராக்ஷஸர்கள் என்றும் பொருள்கொண்டு ஆம் என்பதை யசையாக்கலுமமையும். இன்சொல் - அன்மொழித்தொகை. வல்லி - ஆகுபெயர். இனி, வல்லி

என்றற்கு-பிரிவு என்பது பொருள்கொண்டு பிரிவினையுடையாளென அன்மொழித்தொகையாக்கலுமமையும் "ஒருவுதல் துறத்தல் வலவி நீங்கல்" [நிகண்டு]. ()

தளையவிழ் கோதையைத் தாங்க லாற்றலன்
இளைபுரிந் தளித்தனமே லிவர்ந்த காதல
னுளனென வுரைத்தலி னும்ப ரானென
விளைதன னன்றுகொல் விளித னன்றெனா.

இ-ள் தளை அவிழ் கோதையை - கட்டவிழ்ந்த கூந்தலையுடையாளை [சீதையை], தாங்கல் ஆற்றலன் - காப்பதற்கு உதவாத ராமன், இளை - இளையவன், புரிந்து - விருப்பங்கொண்டு, அளித்தல் மேல் - காப்பாற்றிய பின்பு, இவர்ந்த காதலன் உளன் என - அதிகரித்த காதலையுடையானாக இருக்கின்றானென்று, உரைத்தலின் - (உலகோர்) சொல்வதைப் பார்க்கிலும், உம்பரான் என விளிதல் நன்று ஆகலின் - வானுலகத்தான் [இறந்து போனான்] என்று (சொற்கள்) உண்டாவது நல்லதாகையால், விளிதல் நன்று என்றான் - (நான்) இறந்து போதலே நன்மையானது என்று கூறினான்

குறிப்பு —தளையவிழ் கோதை - அன்மொழித்தொகை பிரிவாற்றாமையால் எய்திய அலங்கோலத்தாள் என்பார் 'தளையவிழ் கோதை' என்றார் தாங்கல் ஆற்றலன் - காத்தல் செய்யாதவன் என்னுமாம். இளை - இளமை, இளையோனுக்கு ஆகுபெயர் (உஎ)

வேறு

ஆண்டா னின்னன பன்னிட வைப்பற கிளைவீர
னீண்டியா னுன்பின் னேகிய பின்னிவ ணிடாவாறு
பூண்டான் முன்னே யாருயி ரோடு முடியாதே
மீண்டே போதற் காமெனி னன்றோ வினையென்றான்

இ-ள் ஆண்டான் இன்னன பன்னிட - ஆண்டவனாகிய ஸ்ரீராமபிரான் இத்தகைய சொற்களைச் சொல்ல, ஐயற்கு இளை வீரன் - அந்த அரசனாகிய ஸ்ரீராமபிரானுக்கு இளையவனாகிய ஆண்மையுள்ள இலட்சுமணப்பெருமான், ஈண்டு யான் - இவ்விடத்துக்கு நான், உன் பின் ஏகிய பின் - உமது பின்னே வந்தபிறகு, இடர் வந்து பூண்டால் - இந்தத் துன்பம் வந்து சேர்ந்தால், முன் - முதலில், ஆர் உயிரோடு - (என்) அருமையான உயிருடன், முடியாது - (நான்) இறவாமல், மீண்டு போதற்கு ஆம் எனில் - திரும்பிப்போவதற்கு (என்னால்) ஆகும் என்று சொன்னால், வினை - என்து தொழில், நன்று - நன்மையுடையது, என்றான் - என்று சொன்னான்.

குறிப்பு —இளையபெருமாள் தன்னை ஆட்கொண்ட ஐயன் கூறிய கட்டளையின்படி நடக்கக் கடமைப்பட்டானாயினும் அவ்விடத்திய நிலைமையையும் ஐயன் இறக்குமபடி கொண்ட துணிவையும் அறிந்தபின்னர் அக்கட்டளையின்படி நடப்பதை மறுத்தது குற்றமாகாது என்பது விளக்கற்கு 'ஆண்டா னின்னன பன்னிட' என்றார் (உஅ)

என்றான் முன்னம் பின்னு மிசைப்பா னிடர்தன்னை
வென்றா ரன்றே வீரர்க ளாவார் விரவாரின்

நன்றாய தந்தை தம்மு னென்னுந் தன்மையா முன்னே
பொன்றா னென்றா னீங்கும் தன்றோ புகழம்மா.

இ - ள். என்றான் - (என்று எனவினை) என்றுகூறிய இளையபெருமான், இடர் தன்னை வென்றார் அன்றே வீரர்கள் ஆவார் என்று பின்னும் இசைப்பான் - துன்பத்தை வென்றவர்கள் அன்றோ வீரர்கள் ஆவார்கள் என்றுகூறிப் பின்னும் கூறுவான், விரவாரின் - கலந்து உறவாடாதவரைப்போல, தன் தாயத்தந்தை தம்முன் எனும் தன்மையர் முன்னே தனது மாதாபிதா தமையன் என்கிற குணம் பொருந்தியவர்க்கு முன்னமே, பொன்றான் என்றால் - இறக்கமாட்டான் என்று கூறினால், அம்மா —, புகழ் நீங்குவது அன்றோ - (அவனுடைய) புகழானது விலக்கக்கூடியது அன்றோ ? (௨௧)

மானே யன்னா டன்னொடு தம்முன் வரையாருங்
கானே வைகக் கண்டுயில் கொள்ளா தயல்காத்தற்
கானா னென்னே யென்றவர் முன்னே யவரின்றித்
தானே வந்தா னென்றலின் வேறோர் தவறுண்டோ

இ - ள். மானே அன்னாள் தன்னொடு தம்முன் - மானையே ஒத்தவளாகிய சீதாபிராட்டியுடன் தனது தமையன், வரை ஆரும் - மலைகள் நிறைந்திருக்கிற, கானே வைக - கானகத்திலேயே தங்கியிருக்க, கண்துயில் கொள்ளாது - தூக்கம் கொள்ளாமல், அயல் காத்தற்கு ஆனான் - பக்கத்திலிருந்து காவல் புரிதற்கு ஆயினான், என்னே என்றவர் முன்னே - என்ன ஆச்சரியம் என்று கூறிய பேர்களுக்குமுன்னே, அவர் இன்றி - அந்தத் தமையனும் தமையன் மனைவியு மில்லாமல், தானே வந்தான் என்றலின் - தான் ஒருவனாகவே வந்தான் என்று மற்றையோர் கூறுதலினும், வேறு ஓர் தவறு உண்டோ - பிறிதொரு குற்றமிருக்கிறதோ?

குறிப்பு —வரை மூங்கிலுமாம் இனி, வரையாரும் என்றற்கு - நீக்காரும் என்னலுமாம், இப்பொருள் கொள்ளுங்கால் உடல்கொண்டு ஒருவரை ஒருவர் விலக்காதவராகவன்றும் பிரிவுற்ற காலத்தும் ஒருவரை ஒருவர் எண்ணத்தில் அவரவர் ரூபகுணங்களை வருவிப்பதன்றிச் சிறிதும் மறவாராக வென்றும், இளையானை வெறுத்து நீக்காதவர் என்றும் விரித்துப் பொருள்காண்க இதற்கேற்ப முதலடிக்கு— கானே யன்னாளுந் தம்முனுமாகிய வரையாராக விருவரும் என்று பொருள்கூறுக ()

என்றா யுன்முன் னேவிய யாவு மிசையின்னல்
பின்றா தெய்தப் பேரிசை யாளற் கழிவுண்டேல்
பொன்றா முன்னம் பொன்றுதி யென்றா ளுரைபொய்யா
நின்றா லன்றோ நிற்பது வாய்மை நிலையம்மா.

இ - ள். உன்முன் - உனது தமையன், ஏவிய யாவும் இசை - கட்டளையிட்டவை செய்யுதற்கும் சம்மதிப்பாடாக, இன்னல் பின்றாது எய்தி - துன்பத்தைப் பின்னிடாமல் அடைந்து, பேர் இசையாளற்கு அழிவு உண்டேல் - பெரிய புகழினையுடைய வீரனாகிய ஸ்ரீராமபிரானுக்குக் கேடு சம்பவிக்குமானால், பொன்றாமுன்னம் பொன்றுதி - (அவன்) இறவாத முன்பு இறப்பாயாக, என்றாள் என்தாய் - என்று கூறினாளாகிய எனது அன்னையினது, உரை - வார்த்தையானது, பொய்ய ஆகின

ன்றல் அன்றே - பொய்யாக இருந்தாலன்றோ? நிற்பது வாய்மை நிலை - (நான் உமக்கு முன் இறவாமல்) இருப்பது சத்தியத்தினது தன்மையாகும், அம்மா —, (௬௧)

எற்பெற் றாளு மியானு மெனைத்தோர் வகையானு
நிற்பெற் றார்க்கு நிற்கு நினைப்புப் பிழையாம
னற்பொற் றோளாய் நல்லவர் பேண நனிநிற்குஞ்
சொற்பெற் றாலா ருயிர்பேணித் துறவேமால்.

இ - ள். நல் பொன் தோளாய் - நல்ல அழகுள்ள புயங்களை யுடையவரே! என் பெற்றாளும் - என்னை யீன்ற சுமத்திராதேவியாரும், யானும் - நானும், நின் பெற்றார்க்கும் - உம்மை யீன்ற கௌசலா தேவியாருக்கும், நிற்கும் - உமக்கும், எனைத்து ஓர் வகையாலும் - எத்தன்மையதாகிய ஒரு ஏதுவினாலும், நினைப்பு பிழையாமல் - எண்ணம் மாறுபடாமல், நல்லவர் - நல்லகுணத்தை யுடையவர்கள், நனி பேண - மிகவும் விரும்பும்படி, நிற்கும் - நிலைபெற்றிருக்கின்ற, சொல் பெற்றால் - கீர்த்தியை அடைந்தால், ஆர் உயிர் பேணி - அருமையான உயிரை விரும்பி, துறவேம் - (நாங்கள் உங்களை விட்டு) நீங்கமாட்டோம், (௬௨)

ஓதுங் காலப் பல்பொருண் முற்றுற் றொருவாத
வேதஞ் சொல்லுந் தேவரும் வீயுங் கடைவீயாய்
மாதங் கந்தின் றுய்ந்தி வனத்தின் றலைவாழும்
பூதங் கொல்லப் பொன்றுதி போலும் பொருளுண்டோ.

இ - ள். ஓதுங்கால் - சொல்லுமிடத்து, பல்பொருள் முற்று உற்று - பல பொருளும் [சராசரங்களனைத்தும்] முடிவை யடைந்து, ஒருவாத - (அக்காலத்திலும் இறந்து) நீங்காம லிருக்கிற, வேதம் சொல்லும் - வேதங்கள் கூறுகிற, தேவரும் - தேவர்களும், வீயும் - மடிகின்ற, கடை - முடிவுகாலத்திலும், வீயாய் - இறவாதவரே! மாதங்கம் தின்று - யானைகளை (க்கொன்று) தின்று, உய்ந்து - பிழைத்து, இ வனத்தின் தலைவாழும் - இந்த வனத்தினிடம் வாழ்ந்திருக்கிற, பூதம் கொல்ல பொன்றுதி போலும் - (ஒரு) பூதமானது கொல்ல (அதனால்) இறப்பாய் போலும், பொருள் உண்டோ - (இங்ஙனம் இறப்பாய் என்பதில்) உண்மை யிருக்கிறதோ? [சிறிதும் இல்லை], (௬௩)

கேட்டார் கொள்ளார் கண்டவர் பேணார் கிளர்போரிற்
றோட்டார் கோதைச் சோர்குழ றன்னைத் துவளாமன்
மீட்டா னென்னும் பேரிசை கொள்ளான் செருவெல்ல
மாட்டான் மாண்டா னென்றபின் மேலும் வசையுண்டோ.

இ - ள். கேட்டார் கொள்ளார் - (இச்செய்கையைக்) கேட்டவர்கள் (சரி யென்று) ஒப்புக்கொள்ள மாட்டார்கள், கண்டவர் பேணார் - பார்த்தவர்கள் விரும்ப மாட்டார்கள், தோடு ஆர் கோதை - பூவிதழ்கள் நிறைந்த கட்டிய மாலையையுடைய, சோர்குழல் தன்னை - தளர்ந்த கூந்தலையுடை யாளாகிய சீதாபிராட்டியை, துவளாமல் மீட்டான் என்னும் - அசையாமல் திருப்பிக்கொண்டு வந்தான் என்கிற, பேர் இசை கொள்ளான் - பெரியபுகழை யடையாதவனும், செரு வெல்ல மாட்டான் -

போரினை வெல்லமாட்டாதவனுமாகி, மாண்டான் என்றபின் - இறந்துபோனான் என்று கூறியபிறகு, வசைமேலும் உண்டோ - (இதைக்காட்டிலும் பெரிதான மற்றொரு) இழுக்குச்சொல் பின்னுமிருக்கிறதோ? [இல்லை] (௫௪)

தணிக்குந் தன்மைத் தன்றெனி னன்றித் தகைவாளாற்
கணிக்குந் தன்மைத் தல்ல விடத்திற் கனல்பூதம்
பிணிக்குங் கையும் பெய்பில வாயும் பிழையாமற்
றுணிக்கும் வண்ணங் காணுதி துன்பந் துறவென்றான்

இ - ள். விடத்தில் கனல் பூதம் - விஷம்போல் வெம்புகின்ற இப்பூதமானது, கணிக்கும் தன்மைத்து அல்ல - ஆராயுந் தன்மை பொருந்தியது அல்ல, இத்தகை வாளால் - தகைமை பொருந்திய இந்த வாளினால், தணிக்கும் தன்மைத்து அன்று - குறைக்கும் [வெட்டும்] தன்மை பொருந்தியது அன்று, எனின் - என்று கூறினால், அன்று - (அவ்வாறு) அல்ல [கணித்தற்கும் தணித்தற்கும் பொருந்தியதேயாம்], பிணிக்கும் கையும் - (பிராணிகளை வளைத்துக்) கட்டுகின்ற (இப்பூதத்தினது) கைகளையும், பெய்பிலம் வாயும் - (அப்பிராணிகளை எடுத்து உட்செல்லும்படி) விடுகிற பிலம்போன்ற வாயையும், பிழையாமல் - தவறாமல், துணிக்கும் வண்ணம் காணுதி - (நான்) அறுக்கின்ற விதத்தைப் பார்ப்பீர், துன்பம் துற - துன்பத்தை நீக்கிவிடும், என்றான் - என்று கூறினான் (௫௫)

என்று முன்னே சொல்லு மிளங்கோ விறையோற்கு
முன்னே செல்ல முன்னவ னன்னா னினுமுந்தத்
தன்னே ரில்லாத் தம்பி தப்பான் பிறிதில்லை
யன்றே கண்டா ரும்பரும் வெய்துற் றழுதாரால்

இ - ள். என்று - (நான் துணிப்பதைப் பாரும்) என்று, முன்சொல்லும் - முந்திக்கூறிய, இளம் கோ - இளையபெருமாள், இறையோற்கு - கடவுளாகிய ஸ்ரீராமபிரானுக்கு, முன்செல்ல - முன்புபோக, முன்னவன் - முதல்வனாகிய ஸ்ரீராமபிரான், அன்னானினும் - அப்படி முன்சென்ற இளையபெருமாளிலும், முந்த - முந்திச் செல்ல, தன் நேர் இல்லா - தனக்குச் சமானமில்லாத, தம்பி - இளையபெருமாள், தப்பான் - (தமையனை முன்செல்லாவண்ணம்) தடைசெய்வான், பிறர் இல்லை (இவர்கள் வழக்கைத் தீர்த்தற்கு) அன்னியரில்லை, கண்டார் - (அதைப்) பார்த்தவர்களாகிய, உம்பரும் - தேவர்களும், வெய்து உற்று - அச்சமடைந்து, அன்றே - அப்போது, அழுதார் - அழுதார்கள். (௫௬)

வேறு

இனைய ராகிய விருவரு முகத்திரு கண்போற்
கனையும் வார்கழல் வீரர்சென் றணுகலுங் கவந்தன்
வினையி னெய்திய வீரநீ ராவர்கொ லென்னா
நினையு நெஞ்சின ரிமைத்தில ருருத்தனர் நின்றார்

இ - ள். இனையர் ஆகிய - இத்தன்மையர்களாகிய, கனையும் வார்கழல் வீரர் இருவரும் - ஒலிசெய்கின்ற நீண்ட வீரகண்டையைத் தரித்த ஆண்மையையுடைய

ஸ்ரீராமலக்ஷ்மணர் இருவரும், முகத்து - முகத்திலிருக்கிற, இருகண்போல் சென்று - இரண்டு கண்களைப்போலப் போய், அணுகலும் - நெருங்கினவுடன், கவந்தன் - கவந்த ராக்ஷஸனுடைய, வினையின் எய்திய வீரர் நீர் - போர்செய்தற்கு அடைந்த ஆண்மையுடையவர்களாகிய நீங்கள், யாவர் சொல் என்ன - யார்? என்று வினவ, நினையும் நெஞ்சினர் - ஆலோசிக்கும் மனமுடையவர்களாகியும், இமைத்திலர் - இமைகொட்டாதவர்களாகியும், உருத்தனர் - கோபித்தவர்களாகியும், நின்றார் - (அவர்கள் அவன் முன்பு) நின்றார்கள்.

குறிப்பு —"நோக்கன்றன், கண்ணிரண்டு மொன்றையொன்று காண" என்றபடி இருவரும் வேறுபார்வையை யொழித்து அக்கவந்தராக்ஷஸனொருவனையே பார்த்துச் சென்றனரென்பதை விளக்கற்கு 'முகத்திரு கண்போல்' என்றார். வினையின்-உருபுமயக்கம். "செயல்வினைக் கெதிராத்" எனவும், "விளக்கும் வினையின்றி" எனவும் வரும் புறப்பாட்டு (6 - 63) கவிகளின் உரையால் வினை, போர் என்பதை யறிக. இனி 'வினையின் எய்திய' என்றற்கு இறத்தற்குரிய ஊழ்வினையால் இங்கு வந்த, என்ப் பொருள்கொள்ளலும் பொருந்தும். (௬௭)

அழிந்து ளாரல ரிகழ்ந்தன ரென்னையென் றழன்றுன்
பொழிந்த கோபத்தள் புதுப்பொறி மயிர்ப்புறம் பொடிப்ப
விழுங்கு வேனென்ன வீங்கலும் விண்ணுற வீரர்
ரெழுந்த தோள்களை வாள்களா லரிந்தன ரிட்டார்

இ - ள் அழிந்து உளார் அலர் - (தைரியம்) கெட்டு இருக்கிறவர்கள் அல்லாத இவர்கள் [தைரியம் கெடாத இவர்கள்], என்னை இகழ்ந்தனர் என்று அழன்றுன் - என்னை அவமதித்தார்கள் என்று வெப்பங்கொண்ட கவந்தன், தன் கோபம் பொழிந்த புது பொறி - தனது கோபத்தில் உண்டாகிய புதிய தீப்பொறிகள், மயிர் புறம் பொடிப்ப - உரோமங்களின் பக்கத்தைக் கருக்க, விழுங்குவேன் என - (இவர்களை எடுத்து) விழுங்குகின்றேன் என்று, வீங்கலும் - பருத்தவுடன் (பெருத்தவுடன்), விண் உற எழுந்த தோள்களை - ஆகாயத்திற் பொருந்தும்படி ஓங்கிய (அவனுடைய) புயங்களை, வீரர் - ஸ்ரீராமலக்ஷ்மணர், வாள்களால் - வாள்களினால், அரிந்தனர் இட்டார் - அறுத்தெறிந்தார்கள்.

குறிப்பு —இக்கவந்தன் இதுவரை பிறரால் அவமதிப்புறாதவனாதலின் இப்பொழுது எய்திய துன்பத்தால் பெருங்கோபங்கொண்டான் என்பது தோன்ற 'புதுப்பொறி' என்றார். (௬௮)

கைகள் அற்றுகு குருதியா றொழுகிய கவந்தன்
மெய்யின் மேற்கொடு கிழக்குறப் பெருநதி விரவுஞ்
சைய மாநெடுந் தாழ்வரைத் தனிவரை தன்னோ
டைய நீங்கிய பேரெழி லுவமைய னானான்

இ - ள் கைகள் அற்று - கரங்கள் அறுபட்டு, உகு - சிந்துகிற, குருதி ஆறு ஒழுகிய - இரத்த நதி ஒழுகப்பெற்ற கவந்தன், மெய்யின் - தனது உடலில், மேற்கொடு கிழக்கு உற - மேற்குக்கிழக்கு என்னும் திருப்பக்கமும் பொருந்த, பெரு நதி விரவும் - பெரிய ஆறுகள் கலப்புற்ற, சையம் மா - செல்வமும் அழகும் பொருந்திய,

நெடு தாழ் வரை - மிகவும் நீண்ட மூங்கில்களையுடைய, தனி வரை தன்னொடு - ஒப்பற்ற (பெரிய) மலையுடன், ஐயம் நீங்கிய - சந்தேக மில்லாத, பேர் எழில் உவமையன் ஆனான் - பெரிய அழகுள்ள ஒப்பானவனாயினான்.

குறிப்பு — சையம் - செல்வம் "வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே" என்ப ஆகலின் இப்பொருள் கூறப்பட்டது. சையம் இப்பெயரியமலையுமாம், அன்றி, கற்களுமாம். தெற்கு நோக்கிச்சென்ற ஸ்ரீராமலக்குமணர்கள் கவந்தனுடைய கைகளுக்கிடையே புகுந்து வாயினிடத்துச் சென்றார்கள் என்று மேற் கூறியிருத்தலால் அக்கவந்தன் வடக்கே கால்நீட்டிக் கிடந்தானென்பதும் ஆகவே இரண்டு கைகளையும் அறுத்தவழியிற் பெருகிய இரத்தம் கிழக்கு மேற்காகப் பெருக்கெடுக்கு மென்பது தெளிக, ஆனதால் 'மேற்கொடு கிழக்குறப் பெருகும்' என்றார் (௬௯)

ஆளு நாயக னங்கையிற் றீண்டிய வதனான்
மூளுஞ் சாபத்தின் முற்றிய தீவினை முடித்தான்
றோளும் வாங்கிய தோமுடை யாக்கையைத் துறவா
நீள் நீங்கிய பறவையின் விண்ணுற நிமிர்ந்தான்.

இ - ள். ஆளும் நாயகன் - இரட்சிக்கின்ற தலைவனாகிய ஸ்ரீராமபிரான் அம் கையில் தீண்டிய அதனால் - (தனது) அழகிய கரத்தினால் தொட்ட அக்காரணத்தினால், மூளும் சாபத்தில் - (பூர்வத்தில்) சேர்ந்த சாபத்தினால், முற்றிய - முதிர்ந்த தீவினை - பாவத்தை, முடித்தான் - தீர்த்துக்கொண்ட தனுவென்பவன், தோள்வாங்கிய - புயங்களைநீக்கிய, தோம் உடை - குற்றமுடைய, யாக்கையை - (கவந்த ராட்சதரூபமான) உடலை, துறவா - நீங்கி, நீளம் - தூரத்தில், நீங்கிய - அகன்றுபோன, பறவையின் - பட்சியைப்போல, விண் உற நிமிர்ந்தான் - ஆகாயத்தைச்சேர உயர்ந்து நின்றான்.

குறிப்பு — தோளும், உம்-சாரியை (௭௦)

விண்ணி னின்றவன் விரிஞ்சனே முதலினா ராக்கும்
கண்ணி னின்றவ னிவனெனக் கருத்துற வுணர்வா
னெண்ணி லன்னவன் குணங்களை வாய்திறந் திசைத்தான்
புண்ணி யம்பயக் கின்றுழி யரியதெப் பொருளே.

இ - ள். விண்ணில் நின்றவன் - வானத்தில் நின்றவனாகிய அவன், விரிஞ்சனே முதலினார் யார்க்கும் - பிரமதேவன் முதலானவர் எவர்களுக்கும், கண்ணில் நின்றவன் - (ஞானக்) கண்ணில் தங்கின கடவுள், இவன் என - இப்புருஷன் தான் என்று, கருத்து உற உணர்வான் - மனத்துக்குப் பொருந்த அறிவானாகி, அன்னவன் - அத்தன்மையனாகிய ஸ்ரீராமபிரானது, எண் இல் - கணக்கில்லாத, குணங்களை - சிறப்புகளை, வாய்திறந்து இசைத்தான் - வாய்திறந்து (எடுத்துப்) பேசினான், (ஆகலால்), புண்ணியம் பயக்கின்ற உழி - புண்ணியமானது தருகின்றகாலத்தில், எ பொருள் - எந்த வஸ்து, அரியது - கிடையாதது.

குறிப்பு — புண்ணியம் பயக்கின் றுழியரிய தெப்பொருளே, என்றமையால் புண்ணியத்தால் அடைதற்கரிய பொருளில்லை யென்பது பெற்றாம். இதனை "சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூங், காக்க மெவனோ வுயிர்க்கு" என்னுந் திருக்குற

ளானும, "மிகக வறமே விழுத்துணை யாவது" எனனும மணிமேகலை யானும, "திருநதிய நலலறச செமபொற கறபகம, பொருநதிய பொருளொடு போகம பூததலால வருநதினு மறததிற மறதத லோமபுமின." எனனும சீவகசிந்தாமணி யானும, "தேவருவினை போகமுஞ சிறநத முததியு, மீஙகுறு மாககமு மினிது நலகலா, லோஙகிய வறததினை யுளமுன மூனறினும, பாஙகுற நிததலும பரிநது செய்தியால" எனவும "அனபுறு மறததினு லடுககு மினபமே, யினபெனத தககதால " எனவும வரும விநாயகபுராணததானும, "தருமமென றொருபொரு ளுளது தாவிலா, விருமையி னினபமு மெளிதி னுககும." எனவருவ கந்தபுராணததானும தெளிக (சக)

வே று.

ஈனறவனோ வெபபொருளு மெலலைதீர நலலறததின
சானறவனோ தேவா தவததின றனிபபயனோ
மூனறு கவடாய முளைததெழுநத மூலமோ
தோனறி யிருவினையேன சாபத திடாதுடைததாய.

இ - ள. தோனறி - ஸ்ரீராமனுக அவதரிதது இருவினையேன - மிகுநத பாவமுடைய எனது, சாபதது இடா - சாபததினுலாகிய துன்பததை, துடைததாய - நீககினவனே! எ பொருளும ஈனறவனோ - நீ எநதவஸ்துவையும பெறறவனோ? எலலைதீர நல அறததின சானறவனோ - அளவிலலாத நலல தருமததுககுச சாட்சியா யிருபபவனோ? தேவா - தேவாகளுடைய, தவததின - தவததினது, தனி பயனோ - ஒபபறற பிரயோசனமோ? மூனறு கவடு ஆய - (மும்மூாததிகள எனனும) மூனறு கிளையாகி, முளைதது எழுநத - உதிததுக கிளமபிய, மூலமோ - ஆதிவஸதுவோ?

குறிபபு — சானறவன என ஒருசொலலாககொணடு உயாநதோன (அறககடவுள) எனவும, இரு என றகு இரணடெனப பொருளகொணடு ராக்ஷஸஜனமததைக கோடலால உளள தீவினையும, உனனைத தரிசிததுப பரிசிககபபெறற நலவினையும ஆகிய வினை யிரணடையும உடையேன எனவும, சாபம இடா எனக கணணழிதது சாபததின பெருககததை எனவும கூறுவாரு முளா. (சஉ)

மூலமே யிலலா முதலவனே நீமுயலுங
கோலமே யாாககுந தெரிவரிய கொளகைத்தா
லாலமோ வாலி னடையோ வடைகிடநத
பாலனோ வாதிப பரனோ பகாாயே

இ - ள. மூலமே - (உனககு மேறபட்ட) ஆதிவஸது எனபதே, இலலா - இலலாத, முதலவனே - முதனமையாகிய தெயவமே! நீ முயலும - நீ முயனறுகொளளும, கோலம - வேஷமானது, யாாககும தெரிவு அரிய - எவாகளுககும அறிவதற கருமையான, கொளகைதது ஆல - செயகையுடைய தாதலால, ஆலமோ - (நீ) ஆலமரமோ? ஆலின அடையோ - ஆலிலையோ? அடைகிடநத - (அநத ஆல்) இலையி லிருநத, பாலனோ - சிறுபிளளையோ? ஆதி பரனோ - முதனமையாகிய மோடசததுக குடையவனோ? பகாாய - சொலவாய ஏ, ஏ,—அசைகள. (சங)

காணபாாககுங காணப படுபொருடகுங கணணுகிப
பூணபாயபோ னிறறியால யாதொனறும பூணுதாய

மாணபா லுலகை வயிறறொளிதது வாஙகுதியா
லாணபாலோ பெணபாலோ வபபாலோ வெபபாலோ.

இ - ள. காணபாரககும- பாரபபவரகளுககும, காணபபடு பொருட்கும- (அவ ரால) பாரககபபடுகினற வஸதுககளுககும, கண ஆகி - கணகளாகி, பூணபாய போல-பொருநதுகினறவனைபபோல, நிறறி-நிறகினறாய, யாதொனறும-யாதொனறிலும (எபபொருளகளிலும), பூணடாய - பொருநதாம விருபபவனே! மாண பால - மாடசிமைத தனமையை யுடைய, உலகை - உலகஙகளை, வயிறு ஒளிதது - (நினது) வயிறறில மறைதது, வாஙகுதி - (பிறகு அவறறை) வெளிபபடுததுகினறாய, ஆண பாலோ - நீ ஆணோ? பெண பாலோ - பெணணோ? அ பாலோ - (ஆணும பெணணும அலலாத அலியெனனும) அநதபபகுபபுடையவனோ? எ பாலோ - எநதப பகுபபுடையவனோ? (அறியேன) ஆல, ஆல - அசைகள.

குறிப்பு—இககவியின விசேடாரததஙகளைச சரபஙகா பிறபபுநீஙகு படலதது 27-வது கவியுரையானும விராதன வதைபபடலதது 58-வது கவியுரையானுந தெளிக. (௪௪)

ஆதிப பிரமனுநீ யாதிப பரமனுநீ
யோதி யுறுபொருளுக கபபா லுண டாயினுநீ
சோதிச சுடரபபிழமபு நீயெனறு சொலலுகினற
வேதமுறை செயதால வெளகாரோ வேறுளளார.

இ - ள ஆதி பிரமனும நீ - ஆதியாகிய பிரமதேவனும நீதான, ஆதி பரமனும நீ - ஆதியாகிய சிவபிரானும நீதான, ஓதி உறு பொருளுககு - (வேதஙகளை) யாசிதது அடைகினற (முடிவான உணமை) வஸதுவுககு, அபபால உணடு ஆயினும நீ- அப்புறததிலிருககிறசாலும, (அபபுறததிலிருககிற அவவஸதுவும) நீதான, சோதி சுடர பிழமபு நீ எனறு - பிரகாசமுளள தீபததிரடசி நீதான எனறு, சொலலுகினற - (விசேஷிததுச) சொலலபபடுகினற, வேதம உரைசெயதால - வேதஙகள சொனனால, வேறு உளளார - மறறைத தேவரகள, வெளகாரோ - வெடகததை யடையமாடடாரகளோ?

குறிப்பு—இககவியின விசேடாரததஙகளை விராதன வதைபபடலம 52-வது கவியுரையிற காணக. (௪௫)

எணடிசையுந திணசுவரா வேழேழு நிலைவகுதத
வணடப பெருஙகோயிற கெலலா மழகுடைய
மணடலஙகண மூனறினமே லெனறு மலராத
புணடரிக மொடடின பொகுடடே புரையமமா

இ - ள. எண திசையும திண சுவர ஆ - எடடுததிககுககளும வலிய சுவரக ளாக, ஏழ ஏழ நிலை - பதினானகு நிலை (மேடையாக) வகுதத-பிரிதத, அணடம பெரும கோயிறகு - அணடஙகளாகிய பெரிய கோயிலினகண, எலலாம அழகு உடைய - முழுதும அழகினையுடையதும, மணடலஙகள மூனறினமேல - வடட மான உலகஙகண மூனறில, எனறும - எககாலும, மலராத - மலாதல இலலாதது

மாகிய, புண்டரீகம் மொட்டின - தாமரை முகிழிலிருக்கிற, பொகுட்டே - கருணி கையே (கொட்டையே), புலர்-தின வீடாயிருக்கிறது.

குறிப்பு — அழகுடையதும் மண்டலங்கள் மூன்றினமேலென்றுமலராதது மாகிய புண்டரீகம் என்றது இருதய தாமரையை இதற்கு அழகுடைமையாவது பிரணவந்தோன்றற இடமான அழகு. இதனை "வேதமூலம் வெளிப்படுமே, பூதம யாவையி னுள்ளலர் போது" எனவரும் பெரியபுராணத் திருவாக்கானறிக. "மலர் மிசை ஏகினான்" என்றதூறளு மிககருததுககிணஙகினமை காணக அமமா-வியப பிடைசசொல (௪௯)

மணபா லமரா வரமபாருங காணுத
வெணபா லுயாநத வெரியோஙகு நலவேளவி
யுணபாயநீ யூட்டுவாய நீயிரணடு மொககினற
பணபா ரறிவார பகராய பரமேட்டி

இ - ள பரமேட்டி - மகாமேனமையான அனபுடையவராகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவே! மணபால - புவியினிடதது, வரமபு - எலலையை, ஆரும காணுத - எவரும பாராத, எணபால - எட்டுததிககுகளிலும, உயாநத எரி - வளாநத (யாக) அககினி யில, ஓஙகு - உயாநத, அமரா நல வேளவி - தேவாகளுககுரிய நலல யாகததில, நீ உணபாய - (அவிசை) நீ சாபபிடுவாய, நீ ஊட்டுவாய - (அநத அவிசை அததேவா களுககு) நீ உணபிபபாய, இரணடுமே - இவவிருதொழிலும, ஒககினற பணபு - ஒததி ருககினற விததததை, ஆா அறிவாா - எவா அறிபவாகள? பகராய - சொலலுவாய

குறிபபு — எலலாந தானுய நிறகு நினனிலைமை எவராலு மறியததகாததனறு எனபது கருதது (௫௦)

நிறகு நெடுநீதத நீரின முளைததெழுநத
மொககுளே போல முரணிறற வணடஙக
ளொககவுயாந துனனுளே தோனறி யொளிககினற
பககம மறிதற கெளிதோ பரமபரனே

இ - ள பரமபரனே - பழமையான கடவுளே! நிறகும - (பிரளய காலததில ஏகமாயபபரவி) நிறகினற, நெடு நீததம நீரின - பெரிய சமுததிர ஜலததில, முளைதது எழுநத - உதிததுக கிளமபிய, மொககுள போல - நீாககுமிழிகளைப்போல, முரணிறற - வலிமையமிநததாகிய, அணடஙகள - முட்டைவடிவான உலகஙகள, ஒகக உயாநது - சமததுவமாக வளாநது, உன உள தோனறி - உனனிடததில காணப்பட்டு, ஒளிககினற - (அவறறை) மறைககினற, பககம - இடததை, அறிதறகு - (பிறா) அறிநதுகொளவதறகு, எளிதோ - இலேசானதோ? ஏ, ஏ, அசைகள (௫௧)

நினசெய்கை கணடு நினைநதனவோ நீணமறைக
ளுனசெயகை யனனவைதாம சொன்ன வொழுககினவோ
வென்செயதேன முனனை மறஞசெய்கை யெய்தினா
பினசெலவ தினலாப பெருஞ்செலவ நீதநதாய.

இ - ள். நீள் மறைகள் - நெடிய வேதங்கள், நின் செய்கை - உனது நடக்கையை, கண்டு - பார்த்து, நினைந்தனவோ - (அந்நடக்கையை) மனத்தில் வைத்துக்கொண்டனவோ? உன் செய்கை - உனது நடக்கைகளானவை, அன்னவை சொன்ன - அத்தகைய வேதங்கள் உரைத்த, ஒழுக்கினவோ - நடையினை யுடையவைகளோ? அறம் செய்கை எய்தினார் - தருமஞ்செய்வதை யடைந்தவர்களுக்கும், பின் செல்வது இல்லா - பின்தொடர்வதில்லாத, பெரும் செல்வம் - (புண்ணியம் என்னும்) பெரிய செல்வத்தை, நீ தந்தாய் - (எனக்கு) நீ அருள்செய்தாய், முன்னம் - பூர்வத்தில், என் செய்தேன் - (நின் கருணையைப் பெறுதற்கு நான்) யாது (தவத்தைச்) செய்தேன். தான் - அசை (௪௯)

மாயப் பிறவி மயனீக்கி மாசிலாக
காயத்தை நல்கித் துயரின் கரையேற்றிப்
பேயொத்தேன் பேதைப் பிணக்கறுத்த வெம்பெருமா
னாயொத்தே னென்ன நலனிழைத்தே னென்றான்.

இ - ள். மாயம் பிறவி - வஞ்சனையான பிறப்பினது, மயல் நீக்கி - மயக்கத்தைத் தவிர்த்து, மாசு இலா காயத்தை - குற்றமற்ற தேகத்தை, நல்கி - (எனக்குக்) கொடுத்து, துயரின் கரை ஏற்றி - துக்கசாகரத்தினின்றுங் கடந்து இன்பக்கரையிலேறச்செய்து, பேய் ஒத்தேன் - பசாசை ஒத்தவனாகிய எனது, பேதை பிணக்கு அறுத்த - அறிவின்மையான மனப்பேதத்தைத் தொலைத்த, எம்பெருமான் - கடவுளே! நாய் ஒத்தேன் நான் - நாயினையொத்தவனாகிய நான், என்ன நலம் இழைத்தேன் என்றான் - (இப்பயனையடைய) யாது நன்மையைச் செய்தேன் என்று கூறினான். நலம் - நலன் என வந்தது ஈற்றுப்போலி.

குறிப்பு — 'துயரின் கரையேற்றி' என்றமையால் துயரத்தைக் கடலாகவும் கரையை இன்பமாகவும் கூறினும். (௫௦)

என்றாங் கினிதியம்பி யின்றறியக் கூறுவனே
லொன்றாது தேவ ருறுதிக் கெனவுன்னுத்
தன்றாயைக் கண்ணுற்ற கன்றனைய தன்மையனாய்
நின்றானைக் கண்டா னெறிநின்றார் நோக்கின்றான்.

இ - ள். என்றாங்கு - மேற்கூறியதுபோல், இனிது - இனிய துதிகளை, இயம்பி - சொல்லி, இன்று - இப்பொழுது, அறிய கூறுவனேல் - (இவரது பூர்வ சொரூபநிலைமையை இவர்) அறியும்படி சொல்லுவேனேயானால், தேவர் உறுதிக்கு - தேவர்களுடைய திடத்துக்கு, ஒன்றாது என உன்னு - பொருந்தாது என்று நினைத்து, தன் தாயை - தனது தாயாகிய பசுவை, கண் உற்ற - பார்த்த, கன்று அனைய - கன்றை ஒத்த, தன்மையன் ஆய் - சுபாவமுடையவனாகி, நின்றானை - நின்ற அந்தத் தநுவென்பவனை, நெறி நின்றார் - (தரும) வழியில் நின்றவர்களுக்கு, நோக்கின்றான் - முன்னின்ற ஸ்ரீராமபிரான், கண்டான் - பார்த்தான்.

குறிப்பு — தேவர் உறுதி - ஸ்ரீராமர் இராட்சதர்களைக் கொன்று ஜெயம்பெறச் செய்வர் என்று தேவர்கள் கொண்ட திடம் என்க. (௫௧)

பாரா யிளையவனே பட்டவிவன வேறேயோா
பேராளன ரூறை யொளியோஙகும பெற்றியனாய
நேராகா யததினமிசை நிறகினறா னீயிவனை
யாரா யெனவவனு மாரகொலோ நீயெனறான.

இ - ள இளையவனே பாராய-தமபியேபாாப்பாயாக, பட்ட இவன - இறநது போன இவ்வாககன, வேறு ஓா போ ஆளன ஆய-வேறு ஒரு பெரிய ஆளாகியும், ஒளி ஓஙகும பெறறியனாய - பிரகாசம விளஙகும தனமையுடையவனாகியும, நோ - (நம ககு) முன, ஆகாயததின மிசை - ஆகாயததின மீது, நிறகினறான -நினறு கொண டிருககிறனாவகிய, இவனை - இநதப்புருஷனை, நீ ஆராய என - (யாா எனறு) நீவி சாரியெனறு (ஸ்ரீராமபிரான) சொலல, அவனும -அவவிளையவனும, நீ ஆரகொலோ எனறான - நீ யாவனோ? எனறு கேடடான. ஏ, தான - அசைகள். (௫௨)

வே று.

சந்தபபூ ணலஙகல வீர தனுவெனு நாமத தேனோ
கநதாபபன சாபத தாலிக கடைபபடு பிறவிகணடேன
வநதுறறீா மலாககை தீணட முனனுடை வடிவம பெறறே
னெநதைககு மெநதை நீரே யிசைபபது கேணமி னெனறான.

இ - ள. சநதம பூண அலஙகல வீர - அழகிய ஆபரணமாகிய மாலையையு டைய வீரனே! தனு எனும நாமததேன - (நான) தனு எனறு கூறும பேருடைய வன, ஓா கநதாபபன சாபததால - ஒரு கநதருவனுடைய சாபததினாலே, இ கடைப படு பிறவிகணடேன - இநதககீழான ஜனமததைபபாாததேன [அடைநதேன], வநது உறறீா - (இஙகு) வநது சோநத உஙகளுடைய, மலா கை - மலாபோனற காஙகள, தீணட - தொட, முன உடைவடிவம பெறறேன - (அதனால என புதிய வடிவம ஒழிநது) பழமையுடைய ரூபததையடைநதேன, எநதைககும எநதை - என தநதைககும தநதையாகிய, நீா - நீஙகள, இசைபபது கேணமின - (நான) சொலவதைககேளுஙகள, எனறான - எனறு கூறினான. (௫௩)

கணையுலாஞ சிலையி னீாைக காககுந ரிலலை யேனு
மிணையிலா டனனை நாடற கேயன செயதற கேறறும
புணையிலா தவாககு வேலை போககரி தனன தேபோற்
றுணையிலா தவாககு மினறு பகைபபுலந தொலைதது நீககல.

இ - ள. கணை உலாம சிலையினீாை-அமபுகள உலாவுகினற விலலினையுடைய உஙகளை, காககுநா இலலையேனும-(புறததுணையாகி) இரட்சிபபவா இல்லையானாலும, ஏறறும புணை இலாதவாககு - கரையேறசசெயகினற தாவாய இலலாதவாககட்கு, வேலை போககு அரிது - கடலைக கடநதுபோதல முடியாது, அனனதேபோல - அஃதேபோல, இணையிலாள தனனை நாடறகு - (தனககு) ஒபபிலலாத சீதாபிராட் டியைத தேடுதறகு, ஏயன செயதறகு - பொருநதிய காரியததைச செயதறகாக, துணையிலாதவாககும - புறததுணையில்லாத உஙகளுககும, பகை புலம தொலைதது நீக்கல் - பகையிடததைக கொனறு களைதல், இனறு - துனபமாகும.

குறிப்பு — ஸ்ரீராமலக்ஷ்மணர்களை யாவரையுங் காக்கத்தக்கவர்கள் என்பது தோன்ற 'களையுலாஞ் சிலையினீர்' எனவும் 'காக்குந் சிலலே' எனவும் கூறினன். (௫௪)

பழிப்பறு நிலைமை யாண்மை பகர்வதென் பதுமப் பீடத்
துழிப்பெருந் தகைமை சான்ற வந்தண னுயிர்த்த வெல்லா
மழிப்பதற் கொருவ னண்ணலு மறிதி ரன்றே
யொழிப்பருந் திறற்பல் பூதக் கணத்தொடு முறையு முண்மை

இ - ள். பழிப்பு அறும் - இகழ்ச்சியற்ற, நிலைமை ஆண்மை - (உங்கள்) தன்மையையும் வீரத்தையும், பகர்வது என் - சொல்லுவது என்னே, பதுமப் பீடத்து உழி - தாமரையாகிய ஆசனத்திலிருக்கிற, பெரும் தகைமை சான்ற - மிகுந்த பெருமை பொருந்திய, அந்தணன் உயிர்த்த எல்லாம் - பிரமதேவன் படைத்த எல்லாப் பொருள்களையும், அழிப்பதற்கு - கெடுப்பதற்கு, ஒருவனே - ஏகனாகிய, அண்ணலும் - சிவபிரானுங்கூட, ஒழிப்பு அரும் திறல் - நீக்கற்கரிய வலிமையையுடைய, பல்பூதம் கணத்து ஒடும் - அநேக பூதங்களின் கூட்டத்துடனும், உறையும் உண்மை - வசிக்கும் மெய்ம்மையை, அறிதிர் - தெரிந்து கொள்ளுங்கள்

குறிப்பு — அண்ணலும், உம்மை - உயர்வு சிறப்பு. (௫௫)

ஆயது செய்கை யென்ப தறத்துறை நெறியி னெண்ணித்
தீயவர்ச் சேர்க்கிலாது செவ்வியோர்ச் சேர்த்துச் செய்த
றாயினு முயிர்க்கு நல்குஞ் சவரியைத் தலைப்பட் டன்னா
ளேய்தோர் நெறியி னெய்தி யிரலையின் குன்ற மேறி.

இ - ள். தீயவர் சேர்க்கிலாது - கொடியவர்களைச் சேர்க்காமல், செவ்வியோர் சேர்த்து - நற்குணமுடையவர்களை (துணை) சேர்த்துக்கொண்டு, செய்தல் ஆயது - (ஓர் காரியத்தை) முடித்தலானது, செய்கை என்பது - செய்யத்தகுந்த கருமமென்பதை, அறம் துறை நெறியின் எண்ணி - தருமநூல்வழியில் ஆலோசித்து, உயிர்க்கு - ஜீவராசிக்கு, தாயினும் நல்கும் - தாயைப்பார்க்கிலும் (மிகுந்த கருணை) அளிக்கின்ற, சவரியை தலைப்பட்டு - சவரியென்பவளைச் சந்தித்து, அன்னாள் - அச்சவரியென்பவள், ஏய்த ஓர் நெறியின் எய்தி - ஏவியதாகிய ஒரேவழியில் (சென்) றடைந்து, இரலையின் குன்றம் ஏறி - ருசியமுக பருவதத்தில் ஏறிச்சென்று.

குறிப்பு — ருசியம் - எருமைபோன்ற மான் அதன் முகம் போற்றோன்றும் மலைக்கு அப்பெயர் வந்தது (௫௬)

கதிரவன் சிறுவ னாய கனகவா ணிறத்தி னானை
யெதிரெதிர் தழுவி நட்பி னினிதமர்ந் தவனி னீண்ட
வெதிர்பொருந் தோளி னாளை நாடுதல் விழுமி தென்றா
னதிர்கழல் வீரர் தாமு மன்னதே யமைவ தானார்.

இ - ள். கதிரவன் சிறுவன் ஆய - சூரியகுமாரனாகிய, கனகம் வாள் நிறத்தினானை - பொன்போலும் பிரகாசமுள்ள நிறமுடைய சுக்கிரீவனை, எதிர் எதிர் தழுவி - ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து, நட்பின் இனிது அமர்ந்து - சிநேகத்துடன் மகிழ்வாக இருந்து, அவனில் - அவனால், நீண்ட வெதிர் பொரும் தோளினாளை - நீட்சியான மூங்கிலைப்போலும் தோள்களுடைய சீதாபிராட்டியை, நாடுதல் - தேடுதல்,

விழுமித்து என்றான் - சிறப்புடையதென்று (தநுவென்பவன்) சொன்னான், அதி கழல வீரர் தாமும் -ஒலிசெய்கின்ற வீரகண்டையைத் தரித்த வீரர்களாகிய ஸ்ரீராம லக்ஷ்மணர்களும், அன்னதே அமைவது ஆனார்-அப்படியே சம்மதிப்பதானார்கள் ()

ஆனவன் றொழுது வாழ்த்தி யந்தர மெழுந்து போனான்
மானவக் குமரர் தாமு மத்திசை வழிக்கொண் டேகிக்
கானமு மலையு நீங்கிக் கங்குல்வந் திறுக்குங் காலை
யானையி னிரட்டை யென்ன மதங்கன திருக்கை சேர்ந்தார்

இ - ள். ஆனவன் -(கவந்தரூபமாறி வேறுருபமான) தநுவென்பவன், தொழுது வாழ்த்தி - (ஸ்ரீராமலக்ஷ்மணர்களை) வணங்கித் துதித்து, அந்தரம் எழுந்துபோனான் - ஆகாயத்தில் கிளம்பிச் சென்றான், மானவ குமரர் தாமும் - பெருமைபொருந்திய அந்த (ஸ்ரீராமலக்ஷ்மணர்களென்னும்) வாலிபரிருவரும், அ திசைவழி கொண்டு ஏகி - (தநுவென்பவனுரைத்த) அந்தத் திக்கின்வழியைப்பற்றிச் சென்று, கானமும் மலையும் நீங்கி - காடுகளையும் மலைகளையும் கடந்து, கங்குல்வந்து இறுக்கும் காலை - இரவுவந்து சேரும் (மாலை) நேரத்தில், யானையின் இரட்டை என்ன-இரண்டு யானைகளைப்போல, மதங்கனது இருக்கை சேர்ந்தார் - மதங்க மகாரிஷியினது ஆசிரமத்தை யடைந்தார்கள்.

குறிப்பு —மானவக் குமரர் - ஆண்டன்மை யுள்ள வாலிபரெனலுமமையும்.

பத்தாவது: கவந்தன் படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௧௦-க்கு விருத்தம் ௧௧௧௪.

பதினோராவது: சவரிபிறப்புநீங்கு படலம்.

கண்ணிய தருதற் கொத்த கற்பகத் தருவு மென்ன
வுண்ணிய நல்குஞ் செல்வ முறுநறுஞ் சோலை ஞால
மெண்ணிய வின்ப மன்றித் துன்பங்க ளில்லை யான
புண்ணியம் புரிந்தோர் வைகுந் துறக்கமே போன்ற தன்றே.

இ - ள் கண்ணிய தருதற்கு ஒத்த -(யாவர்க்கும்) கருதப்பட்ட பொருள்களையெல்லாம் கொடுத்தற்கு உடம்பட்டுள்ள, கற்பகம் தருவும் என்ன - கற்பகவிருக்ஷமும் (இணையவும் ஒக்கும்) என்று சொல்லும்படி, உண்ணிய - (யாவரும்) புசிக்கும்படியாக, நல்கும் செல்வம் உறும் - கொடுத்தற்கேற்ற (கனிமுதலிய) சம்பத்தைப் பொருந்திய, நறு சோலை - மணங்நிறைந்த (அந்தமதங்காசிரமத்தின்) பூஞ்சோலையானது, ஞாலம் எண்ணிய இன்பம் அன்றி - பூவுலகத்தவர் கருதிய சுகமே யல்லாமல், துன்பங்கள் இல்லை ஆன - துக்கங்களில்லையென்று சொல்லுதற்காகிய, புண்ணியம் புரிந்தோர் வைகும் - தருமத்தைச்செய்தவர்கள் வசிக்கின்ற, துறக்கமே போன்றது - மோக்ஷசாம்பிராச்சியத்தையே யொத்திருந்தது.

குறிப்பு — தருவும் - என்பதன் உம் எச்சப்பொருளது; இதனால் சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம் என்பவற்றையுங் கொள்க. செல்வத்தின் பயன் கொடையே என்பார் 'நல்குஞ் செல்வம்' என்றார். இதனை "ஈதற்குச் செய்க பொருளை" என்னுந் தீர்க்கதரிசனமும் அறிக. (௧)

அன்னதா மிருக்கை நண்ணி யாண்டுநின் றளவில் காலந்
தன்னையே நினைந்து நோற்குஞ் சவரியைத் தலைப்பட் டன்னாட்
கின்னுரை யருளித் தீதின் றிருந்தனை போலு மென்றான்
முன்னிவற் கிதுவென் றெண்ண லாவதோர் மூல மில்லான்.

இ - ள். இவற்கு - இவனுக்கு, இது என்று எண்ணல் ஆவது - இஃதென்று நினைத்தற்கு ஆவதான, ஓர் முன் மூலம் இல்லான் - ஒரு பழமையான ஆதியில்லாத வனாகிய ஸ்ரீராமபிரான், அன்னது ஆம் இருக்கை நண்ணி - அத்தன்மைத்தான ஆசிரமத்தை யடைந்து, அளவு இல் காலம் - அளவற்றகாலமாக, ஆண்டு நின்று - அவ்விடத்திலிருந்து, தன்னையே நினைந்து நோற்கும் - (அநாதிவஸ்துவாகிய) தன்னையே சிந்தித்துத் தவஞ்செய்துகொண்டிருக்கின்ற, சவரியை தலைப்பட்டு - சவரி என்னும் பெயரையுடையாளைச் சந்தித்து, அன்னாட்கு - அந்தச் சவரிக்கு, இன் உரை அருளி - இனிமையான வார்த்தைகளை அருளிச்செய்து, தீது இன்று - தீங்கு இல்லாமல் (க்ஷேமமாக), இருந்தனை என்றான் - இருந்தாயா என்று கூறினான்.

குறிப்பு — போலும்-அசை. இன்று இன்றி என்னும் பொருளது, 'அன்றி யின்றி யென வினையெஞ் சிகரந், தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே' என்பது சூத்திரம். (௨)

ஆண்டவ ளன்பி னேத்தி யழுதிழி யருவிக் கண்ணள்
மாண்டதென் மாயப் பாசம் வந்தது வரம்பில் காலம்
பூண்டமா தவத்தின் செல்வம் போயது பிறவி யென்பாள்
வேண்டிய கொணர்ந்து நல்க விருந்துசெய் திருந்த வேலை.

இ - ள். ஆண்டு - (குசலம் வினவிய) அப்பொழுது, அவள் - அந்தச்சவரி, அன்பின் ஏத்தி - அன்பினால் துதித்து, அழுது அருவி இழி கண்ணள் - (ஆனந்த மேலீட்டால்) அழுது நீர்ப்பெருக்கு வடியுங் கண்களையுடையளாகி, என் மாயம் பாசம் மாண்டது - எனது மாயைக்கட்டு தொலைந்தது, வரம்பு இல் காலம் - அளவில்லாத காலமாக, பூண்ட - (யான்) மேற்கொண்ட, மாதவத்தின் செல்வம் வந்தது - சிறந்த தவத்தின் பயன் வந்தடைந்தது, பிறவி போயது - ஜன்மம் ஒழிந்தது, என்பாள் - என்று கூறி, வேண்டிய - (உணவுக்கு) வேண்டிய பொருள்களை, கொணர்ந்து நல்க - கொண்டுவந்து கொடுக்க, விருந்து செய்து இருந்த வேலை - (ஸ்ரீராமலக்ஷ்மணர்கள்) அவ்வுணவுப் பொருள்களை அருந்தியிருந்த சமயத்தில்.

குறிப்பு — என்பாள்-முற்றெச்சம். விருந்து வருதலால் தூரத்தே நோக்கிய பொழுது முகமலர்ச்சி காட்டலும், அதுகண்டு நெருங்கி வந்தவிடத்து இன்சொற் கூறலும், அதுகேட்டு உடன் பட்டபோது நன்றாற்றலும் ஆகிய விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் 'அழுதிழி யருவிக் கண்ணள்' என்பதால் முகமலர்ச்சியையும் 'பாசம் மாண்டது செல்வம் வந்தது பிறவி போயது' என்பவற்றால்

இன சொற் கூறுதலையும, 'வேண்டிய கொணாநது கல்க' என்றமையால நனறுற றுதலையும விளககினமையறிக. இககருததை "மோபபக குழையு மனிசச முகநதிரி ந்து, சோககக குழையும விருநது" என்ற திருக்குறளுரையாற றெளிக. (க)

ஈசனுங கமலத தோனு மிமையவா யாரு மெந்தை
வாசவன றானு மீணடு வநதனா மகிழ்நது நோககி
யாசறு தவததிற கெலலே யணுகிய திராமற் காய
பூசனை விருமபி யெமபாற போதுதி யென்று போனா.

இ-ள் ஈசனும் - சிவபிரானும, கமலததோனும - தாமரைமலரிலிருககிற பிரமனும, இமையவா யாரும - எலலாத தேவாகளும, எநதை - விஷ்ணுமூாததியும, வாசவன தானும - இநதிரனும, ஈண்டு வநதனா - இவவிடததுககு வநது, மகிழ்நது நோககி - மகிழச்சியுற்று (என்னைப) பாாதது, ஆசு அறு தவததிற்கு - (நீ செயத) குற்றமற்ற தவசசுக்கு, எலலை அணுகியது - முடிவுகிட்டியது, இராமற்கு ஆய பூச னைவிருமபி - ஸ்ரீராமபிரானுககு ஏற்றதாகிய பூசையை விருபபுற்றுச்செயது, எம பால போதுதி என்று - எமமிடததுககு வருவாயாக எனககூறி, போனா - (தத்த மிடததுககுச) சென்றாாகள

குறிப்பு — வநதனா - முறறெச்சம. இராமற காயபூசனை - என்பதை இரா மன காயபூசனை எனபபிரிதது ஸ்ரீராமபிரானுககு காயிக பூசை எனக கூட்டிப் பொருள்சொலலலுமாம ஆகவே மானதம வாசிகம ஆகிய பூசைகளை முனனரே செயது முடிததாளெனபது பெறறாம இனி, இராமல காயபூசனை எனககொணடு இராமல என்றகு தாமதியாமல எனும பொருள கூறலும பொருநதும. (௪)

இருநதனெ னெநதை நீயிணை டெயதுதி யெனனுந தனமை
பொருநதிட வினறு தானென புணணியம பூதத தெனன
வருநதவத் தரசி தன்னை யனபுற நோக்கி நஙகள்
வருநதுறு துயரந் தீாததா யமமனை வாழி யெனறாா.

இ-ள். (கடவுளரால அருளப்பட்ட சவரியானவள) எநதை - என்து தந தையாகிய ஸ்ரீராமபிரானே! நீ—, ஈணடு எயதுதி எனனும தனமை - இஙகுவரு வாய என்ற விஷயம், பொருநதிட - (எனககு)த தெரிய (அதனால), இருநதனன - (இதுவரை உயிாகொணடு இஙகு) இருநதேன, என புணணியம - எனது தவம், இனறு தான பூததது - (அவவணணமே எழுநதருளிககாட்சி கொடுததமையால) இற்றைப பொழுதுதான பலன தநததாயிற்று, என்ன - என்று கூற, (அதுகேட்ட ஸ்ரீராமலககுமணாகள) அரு தவதது அரசி தனனை - அரியதவததின தலைவியாகிய சவரியை, அனபு உற நோககி - அனபுமிகுமபடி பாாதது, அமமனை - தாயே! நங கள - எஙகளது, வருநதுறு துயரம தீாததாய - வருதத முறுகினற துனபததை நீககிவிட்டாய, (ஆதலால) வாழி என்றா (நீ) வாழககடவாயென்று கூறினா.

குறிப்பு —வருநதுறு துயரம - வரும துறு துயரம எனப்பிரிதது மேலும மே லும் வருவனவாகிய மிகுதியான துயரததை, எனப்பொருள் கோடலுஞ சாலும். ()

அனகனு மிளைய கோவு மன்றவ ணுறைந்த பின்றை
வினையறு நோன்பி னாளு மெய்ம்மையி னோக்கி வெய்ய
கனைபரித் தேரோன் மைந்த னிருந்தவத் துளக்கில் குன்றம்
நினைவரி தாயற் கொத்த நெறியெலா நினைந்து சொன்னாள்.

இ - ள். அனகனும் இளையகோவும்-பாபமில்லாதவனாகிய ஸ்ரீராமபிரானும் இளையபெருமாளும், அன்று அவண் உறைந்தபின்றை - அன்றையத்தினம் அவ்விடத்தில் வசித்தபிறகு, வினை அறு நோன்பினாள் - பாபம் நீங்கிய தவத்தினையுடைய சவரியானவள், மெய்ம்மையின் நோக்கி - உண்மையறிவால் கருதிப்பார்த்து, வெய்ய - வெவ்விய கிரணங்களையுடைய, கனைபரி தேரோன் மைந்தன் - நெருங்கிய குதிரைகளைப் பூட்டிய தேரினையுடைய சூரியனது புத்திரனாகிய சுக்கிரீவன், இருந்த - வசித்துக்கொண்டிருக்கின்ற, அ துளக்கில் குன்றம்-அந்த அசைவில்லாத ருசியமூக பர்வதத்துக்கு, நினைவு அரிது - நினைத்தற்கு அரியதும், ஆயற்கு ஒத்த - ஆராய்ந்தறிதற்குத்தக்கதுமாகிய, நெறி எலாம் - வழிகளையெல்லாம், நினைந்து சொன்னாள் - ஆலோசித்துக் கூறினாள்.

குறிப்பு—சூரியனுடைய ரதசாரதியாகிய அருணன் என்பவன் ஓரழகிய பெண்ணுருக்கொண்டு வானவர்கோன்மாட்டணுகலும் அவ்வானவர்கோன் அப்பெண்ணுருவைக்கண்டு காமுற்றுப் புணர்ந்தான். அப்போது வாலி என்னும் ஒரு பிள்ளை பிறந்தது அப்பிள்ளையை எடுத்துக்கொண்டு அந்த அருணன் சூரியனிடத்து வந்தான் சூரியன் இப்பிள்ளை யாது என்வினவ, அருணன் யான் ஓர் பெண்ணுருக்கொண்டு இந்திரனைப் புணர்ந்துபெற்றேன் என்றான். அதுகேட்ட சூரியன், தானும் அப்பெண்ணுருவைப்பார்க்க விரும்பியவளவில் அருணன் பெண்ணுருவாகலும் அப்பெண்ணுருவைக்கண்டு காமுற்றுப் புணரச் சுக்கிரீவன் பிறந்தான். இச்சரித்திரம் விளங்கப் 'பரித்தேரோன் மைந்தன்' என்றார் பரித்தேரோன் என்றற்கு அருணன் என்றும், சூரியன் என்றும் பொருள்கொள்ளலமையும். சுக்கிரீவன், மகாபலசாலியாகிய வாலிக்குப்பயந்து தனது பிராணனைக் காத்துக்கொள்ளுதற்கு அமைந்ததும் ஒருசாபத்தால் வாலி நெருங்குதற்குக் கூடாததுமான மலை என்பார் 'துளக்கில் குன்றம்' என்றார் "வன்னி தானிடு சாப வரமுடைப், பொன்ம லைக்கவன் அணைவிற போகலை" எனனும் கிஷ்கிந்தாகாண்டச் செய்யுளிண்டு நோக்கற்பாலது

வீட்டினுக் கமைவ தான மெய்ந்நெறி வெளியிற் றாக்கக்
காட்டுறு மறிஞ ரென்ன வன்னவள் கழறிற் றெல்லாங்
கேட்டன னென்ப மன்னோ கேள்வியாற் செவிகண் முற்றுந்
தோட்டவ ருணர்வி னுண்ணு மமுதத்தின் சுவையாய் நின்றான்.

இ - ள். வீட்டினுக்கு - மோக்ஷத்துக்கு, அமைவதான மெய் நெறி -பொருந்தியதான உண்மை மார்க்கத்தை, வெளியிற்று ஆகக் காட்டுறும் அறிஞர் என்ன- வெளிப்படையாக விளக்குதலுற்ற ஞானவான்களைப்போல, அன்னவள் கழறிற்று எல்லாம் - அந்தச்சவரி சொல்லிய எல்லாவற்றையும், கேள்வியால் - (அறநூற்) கேள்வியினால், செவிகள் முற்றும் தோட்டவர் - காதுகள் முழுதும் தொளைப்படுத்திய பெரியோர்கள், உணர்வின் உண்ணும் - அறிவால் புசிக்கின்ற, அமுதத்தின் சுவையாய் நின்றான் - ஞானாமிர்தத்தினது ருசியாக விளங்கிய ஸ்ரீராமபிரான், கேட்டனன் என்ப - கேட்டருளினான் என்பார் (அறிவுடையார்). மன், ஓ - அசைகள்.

பினனவ ளுழனறு பெறற யோகததின பெறறி யாலே
தனனுட றுறநது தானத தனிமையி னினிது சாாநதா
ளனனது கணட வீர ரதிசய மளவின றெயதிப
பொனனடிக கழலக ளாாபபப புகனறமா நெறியிற போனூா

இ - ள பின - அதனபிறகு, அவள - அசசவரி, உழனறுபெறற - (தான) வருநதியடைநத, யோகததின பெறறியாலே - யோகநிலையின தனமையினூலே, தன உடல துறநது - தனது பூத உடமபைவிடடு, தான அ தனிமையின இனிது சாாந தாள - அசசவரி உணமைஞானியா பெறுதறகுரியதான மோக்ஷததில மகிழசசி யுடன சென றடைநதாள, அனனது கணட வீரா - அதைபபாாதத ஸ்ரீராமலக்ஷு மணாகள, அளவு இனறு அதிசயம எயதி - அளவறற ஆசசரியததை யடைநது, புகனற மா நெறியில - (அநதச சவரி) கூறிய பெரியவழியில, பொன அடி கழல கள ஆாபப போனூா - சிறநத பாததலில அணிநத வீரகணடை ஒலிசெயய (நடநது) சென றாாகள (அ)

தணடெனடுங கானுங குனறு நதிகளுந தவிரப போனூா
மணணிடை வைக றோறும வரமபிலா மாகக ளாடக
கணணிய வினைக ளெனனுங கடடழல கதுவ லாலே
புணணிய முருகிற றனன பமபையாம பொயகை புககாா.

இ - ள தண நெடு கானும - குளிாநத பெரியவனஙகளும, குனறும நதிக ளும - மலைகளும ஆறுகளும, தவிர போனூா - பிறபடுமபடி கடநதுசென று, மண இடை - பூமியினிடதது வைகல தோறும - தினநதோறும, வரமபு இலா மாககள ஆட - அளவறற மனிதாகள குளிகக, (அதனுல) கணணிய - நெருஙகிய, வினை கள எனனும - கருமஙகளெனகிற, கடடு அழல கதுவலாலே - கொடிய நெருபபு பறறுதலால புணணியம உருகிறறு அனன - தருமமானது உருகிபபரவினூறபோ னற, பமபையாம பொயகைபுககாா - பமபைநதியை யடைநதாாகள.

குறிபபு —பொயகை எனபது நீா நிறைநத தடாகததுககே பெயராயிருபபவும இஙகு நதியைப பொயகையெனறது நீாபபெருககையும விசாலததையும குறிததற கெனக (௯)

பதினொராவது: சவரிபிறபபுநீஙகு படலம

முறறிறறு

ஆககபபடலம கக-கரு விருததம கஉ0௩

ஆரணியகாணடம

முறறிறறு.

பிழை திருத்தம்.

பககம	வரி.	பிழை	திருததம
2	8	மைமையயும	மையும
8	40	நாயனு	நாலடியாரிலும
10	4	யானைகளுகளும	யானைகளும
12	31	கொணடு	கொணடு
13	19	பகியோடே	பகியொடே
,,	20	மலைகள,	மலைகள போல,
,,	40	ராகுகேது	கேது
14	2	யேழு	யெட்டு
15	10	யோடப	யோடைப
25	17	விழுவது	விழுவ
26	36	ஓா மரா	ஓா மாமரா
,,	41	ஓம	ஓம
29	38	னவரோ	னவரொ
30	39	விழுகினற	விழுகினற
31	3	அலமரல	அலமா
,,	17	மயில்லங	மயிலலங
,,	26	இனறதுணை	இனறதுணை
,,	30	யனைய அற	யனைய அனபின அற
33	5	யுனது	யினது,
39	21	மைமபுலு	மைபபுலு
49	36	இ-	இ - ள,
50	18	முனனே	முனனே
55	13	தன	தணை
65	7	வீழுநதரு	வீநெதரு
87	7	டனறி	டனறி
89	4	யாகததி	யகததி
92	35	கரமாக	கிரமாக
,,	39	எனனும	எனனும
93	3	சிறநத	இறநத
,,	28	திரிநதது	திரிநதது எனபாரும
95	5	சிராதத	சிராதத
,,	27	மாதலால	மாதல
106	27	போல	போன
118	8	தாமிரை தாமிரை	தாமபிரை தாமபிரை
123	7	மாதரால	மாதரால
,,	19	தமபிக	தமபிக
124	7	மனனனே	மனனே
126	6	அ தோம	தோம
131	5	மணம	மணம
,,	12	பொரிய	பெரிய
,,	33	பூததான	பூததாள
,,	34	விலஙகு	விலகு
,,	36	சிதர	சிதா
133	24	நிற	நிற
134	26	சிகரா	சிகிர
143	35	எனது	என்று
144	8	செவ்வியாய்	செவவிவாய்

பககம	வரி	பிழை	திருததம
144	18	சாவ	சாவ
,,	28	கைடைய	கையுடைய
149	6	மகருறி	மகருறி
,,	17	புணணி	புணணி
151	11	சுரன	சுரன
,,	30	பணிதத	பணிதத
160	4	மெதிரககபபடடு	மெதிரபபடடு
168	11	பளிககறை	பளிககறை
172	15	தனமை	தனமை
180	30	ஏனனும	எனனுய
182	5	வாளினைககொடியான	வாளினககொடியாண
188	38	நகையாலே	கசையாலே
191	4, 5	அநதநதி அகதது	அநதநதி
195	9	ருககுஞ	ருசகுஞ
220	17	சோதியும	சோரியும
223	11	வாகளுமாய	வாகளாய
227	27	யாபப	யாகப
237	22	யாளை	யானை
239	6	வீழ்நதான	வீழததான
,	32	தாலவணை	மாலவரை
242	17	மணடலததைச	மணடலததைசச
247	3	கலலணை	இலகடம
253	24	சுவறரு	சுயறரு
,,	26	சுவறரு	சுவறரு
257	33	காரழிந	காரிழிந
265	36	எறிகடல	எறிகினறகடல
268	31	(தேரினது)	தோரானது
269	27	பரிசாய	பரிசாய
280	12	அடககினறா	அடஙகினறா
282	23	தாளாகிய	தாளாகி
287	12	விளஙகவும	சேரவும
289	16	இரடடுறமொழிதல,	
291	11	விளஙகுகினற	சேருகினற
293	19	கிதியென	கிதி, சஙககிதியென
296	14	கரததொரு	காததொடு
312	31	இபபொழுதேகொய	கொய
320	13	மாாபு	மாாபு
325	11	வாரச	வாச
327	16	எனன	எனன
330	29	விளஙகுகினற	கிறைகினற
326	25	மலாகள	காயபோலும
336	27	பரியா	பறியா
344	13	இலலை	அனறு
346	15	கொணடது	கொணடது
,	19	விஷயஙகளை	விஷஙகளை
348	30	மிலவா	மில்லாம
349	6	கிறமுளள	கிறமுறற

பிழைதிருத்தம்.

பக்கம்	வரி.	பிழை	திருத்தம்
350	15	இடத்தையும் ..	இடத்தை
,,	,,	இடையையும் .	இடையை
,,	33	வாயானுல .	வாரானுல
,	39	விடத்து .	விடத்தும
356	22	நாண ..	நாண
357	15	இராவணனப	இராவணன
365	10	மூறறு .	மூறறி
366	2	பொருட்டு	பொருட்கு
373	2	நீ தடபபது(கது ..	நீ செயவதற(கு
386	40	பொ[illegible]ிய	பொருநதுகினற
409	13	மலா[illegible]	மலா
424	9	தொகுத[illegible] ...	தொடுததல
474	25,26	ஆகாயததினகண உண டாயினவாஙிய	ஆகாயம புஷபிததாலொதத
476	34	தெரிநதது ..	தெரிநத
488	21	வளமை	வலிமை
493	35	நோநத	நோகத
495	8	பாாததர	பாாததா
513	9	எனமன	தனமன
516	23	அலைதிருககினற	அலைகினற
518	2	கூறுக ..	கூறிக
522	17	வீசுமபடி	வீழுமபடி
525	15	இரவு	இடா
526	25	எனறும இசசீ ..	இசசீ
,,	29	யிடைபெய	யிடைபபெய
529	23	உலைவு	உளைவு
533	2	நனறுய	தனறுய
,,	3	னீஙகும .	னிஙகுவ
,,	29	கானே	மானே
546	37	ஜெபம	ஐயம
547	10	கிறனுவகிய, ...	கிறவனுகிய

விளம்பரம்.

இப்புததகம வேணடியவாகள திருநெலவேலி - தெறகுப புதுததெரு சரஸவதி விலாசம ம-ா-ா-ஸ்ரீ, பாலவணண முதலியாரவாகளிடததிலும, மதுரை - புதுமணடபம ம-ா-ா-ஸ்ரீ, கருபபண பிளளையவாகளிடததிலும, உடுமலைபபேடடையில எஙகளிடததிலும, தேவகோடடை - கருதாவூரண தெனகரை திருவாரூா அயயா அவாகள மடததில ம-ா-ா-ஸ்ரீ, ச[illegible] அயயா தேசிகரவாகளிடததிலும, காரைககுடி - அறுபததுமூவா ம[illegible] ம-ா-ா-ஸ்ரீ, விததுவான ராம - கு. சொககலிஙகஞ செட்டியாரவாகளி[illegible]தி லும பெறறுககொளளலாம

இஙஙனம,

எம். ஆர். கந்தசாமிக் கவிராயன.

எஸ். வெங்கடராயலு நாயுடு.